# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்

*1981 ஏப்ரல் 10, 14, 15 மற்றும் 16-ம் நாட்கள்*

(தொகுதி XIX எண்கள் 1 முதல் 4 வரை)

©
தமிழ் நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009

விலை ரூ. 2]

V2ll,31 N81
N83-19
122194

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்.

1981 ஏப்ரல் 10, 14, 15 மற்றும் 16 ஆம் நாட்கள்.

(தொகுதி 19—எண்கள் 1 முதல் 4 வரை).

## உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i–iv |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | v–vi |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (தொகுதிகள் உள்பட—அகர வரிசையில்) | vii–xiv |
| அரசினர் சட்ட முன்வடிவங்கள்— | |
| (அ) குறைந்த அளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு | 180—181 |
| (ஆ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 58—127 |
| அரசினர் தீர்மானம்— | |
| பேரவை அலுவலில் மாற்றம் | 918 |
| அறிக்கை அளித்தல்— | |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் | 826—828 |
| அறிவிப்புகள்— | |
| (அ) உறுப்பினரது உரையில் நீக்கப்பெற்ற பகுதிகள் | 230 |
| (ஆ) உறுப்பினர் திரு. இராஜசேகரன் கைது | 730 |

பக்கங்கள்

அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) உறுப்பினர் திரு. இராஜசேகரன் விடுதலை செய்யப் பெற்றது 847

(ஈ) ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளாதது 736

(உ) பேரவை அலுவல் 485—486

இரங்கல் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் டாக்டர் எஸ். சுப்பிரமணியன் மறைவு 143

உரிமைப் பிரச்சினை—

(அ) உறுப்பினர் திரு. ரகுமான்கான் மீது 165—172

(ஆ) மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மீது 412—425

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை 425—448

(ஆ) சைதாப்பேட்டையில் அரசு ஊழியரின் மனைவி கொலை 173—175

(இ) பள்ளிக் கட்டிட நிதி கொடுக்க இயலாத குழந்தைகளை தேர்வு எழுத அனுமதிக்காதது 40—46

கவன ஈர்ப்புகள்—

(அ) இராணிப்பேட்டையில் குடிநீர் பற்றாக்குறை 177—180

(ஆ) கேலவாரப்பள்ளி அணையைக் கட்டும் பணி நிறுத்தப் பட்டுள்ளது 458—461

(இ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நெசவாளர் சங்கங்களில் இருந்து துணிகள் கொள்முதல் செய்யாதது 732—742

(ஈ) தஞ்சை சோதனைச் சாவடிகளில் பணியாற்றும் ஊழியர்கள் சம்பளம் 175—177

பக்கங்கள்

கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

(உ) தாம்பரம் அஜந்தா சிட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை 46—53

(ஊ) பெரியார் மாவட்டம், பூச்சநாயக்கன்பாளையத்தில் தீ விபத்து 457—458

(எ) வேலூர் நகராட்சியில் கழிவு நீர், குடிநீருடன் கலத்தல் 736—738

தகவல் கோரல்—

(அ) அரசாங்க விழாக்களில் தொகுதி உறுப்பினர் கலந்து கொள்வது 37—38

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை 38—40

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 730—731

(ஈ) எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்துள்ள அறிவிக்கை 172—173

(உ) கேள்விகள் கட்சிவாரியாக எடுத்துக் கொள்வது 36—37

தன்னிலை விளக்கம்—

மதுராந்தகம் தொகுதி உறுப்பினர் அளித்தது 448—457

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 127, 269—355 486 918—919

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு

கோரிக்கை எண் 30—சமூக நலன் 224—269

| | பக்கங்கள் |
|---|---|
| வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—தொடர்ச்சி. | |
| கோரிக்கை என் 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும் | |
| கோரிக்கை என் 27—கதர் தொழில் | |
| கோரிக்கை என் 37—பொதுப் பணிகள், கட்டிடங்கள் | |
| கோரிக்கை என் 38—பொதுப்பணிகள், பணியாளர் அமைப்பும், கருவிகளும், தளவாடங்களும் | |
| கோரிக்கை என் 51—பொதுப்பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு | 829—918 |
| கோரிக்கை என் 24—தொழில்கள் | |
| கோரிக்கை என் 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 451—463 |
| கோரிக்கை என் 6—பத்திரப் பதிவு | 742—826 |
| கோரிக்கை என் 10—பால் வழங்குத் திட்டங்கள் | 181—224 |
| வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—36 |
| | 144—165 |
| | 357—412 |
| | 703—730 |

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன. துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப் பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க. ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ. தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக் களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளி வாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(ங்கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப்பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின் கீழ் வரிசைப் படுத்தப் பெறுகின்றன.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமி தானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் திரு. எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. எஸ். முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கைத்தறி, கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மதுவிலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத் துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலை வாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

THIRU SADIQ ALI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. HON. THIRU M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating to Public Works Department.

2. HON. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official language.

8. HON. THIRU K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. HON THIRU C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures. Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. HON. THIRU P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum-Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. HON. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. HON. THIRU K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. HON. THIRU S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. HON. THIRU S. N. RAJENDRAN (Minister for Handlooms and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits and Passports.

17. HON. THIRU M. VIJAYASARATHI (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வி. வி. சுவாமிநாதன்,
2. திரு. ஜெ. எஸ். இராசு,
3. திரு. என். எஸ். வி. சித்தன்,
4. திரு. எஸ். சிவசாமி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்,

திரு. த. இராதாகிருஷ்ணன்,

திரு.இரா. பாலகுரு, பி.ஏ.

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி. ஏ., பி.ஜி. எல்.,

குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்).

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.,

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.,

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.,

திரு. டெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.,

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,

திரு. ஜெ. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (எஸ்டேட் அதிகாரி),

திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

---

* 21–6–1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

† 23–1–1981 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது:—

அ. — அறிக்கை.

அறிவி. — அறிவிப்பு.

அ. வி. — அரை மணி நேர விவாதம்.

கு. வி. — குறுகிய கால விவாதம்.

பொ. வி. — பொது விவாதம்.

ஆ. உ. — ஆளுநர் உரை.

உ. பி. — உரிமைப் பிரச்சினை.

ஒ. பி. — ஒழுங்குப் பிரச்சினை.

க. ஈ. — கவன ஈர்ப்பு.

க. ஈ. அ. — கவன ஈர்ப்பு அறிக்கை.

அ. நி. — சட்ட முன்வடிவின் அறிமுக நிலை.

ஆ. நி. — சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—
இந்நிலையில்,

(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம்.

(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்.

(3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்.

(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம்.

(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.



பிரி. ஆ. — சட்ட முன்வடிவு—பிரிவுவாரியாக ஆய்தல்

ச. பே. — சட்டமன்றப் பேரவை.

ச. மே. — சட்டமன்ற மேலவை.

த. கோ. — தகவல் கோரல்.

த. வி. — தன்னிலை விளக்கம்.

தீ. — தீர்மானம்

உ. தீ. — உரிமைத் தீர்மானம்.

ஒ. தீ. — ஒத்திவைப்புத் தீர்மானம்.

த. தீ. — தனித் தீர்மானம்.

து. மா. கோ. — துணை மானியக் கோரிக்கை.

மி. மா. கோ. — மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.

பே. அ. — பேரவையின் அலுவல்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்

தலைமை நிருபர்

திரு. மா. சந்திரசேகரன்.

விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன். பி.லிட்.



தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அங்குசாமி, திரு. ச. .. | திருவாடானை |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 3 | அப்பாதுரை, திரு. மு. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 4 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி |
| 5 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 6 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ. வ.) |
| 7 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 8 | அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 9 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ. வ.) |
| 10 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 11 | அன்பழகன். திரு. க. .. | புரசைவாக்கம் |
| 12 | அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி |
| 13 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 15 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 16 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ. வ.) |
| 17 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 18 | ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 19 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 20 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 21 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 22 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 23 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.) |
| 24 | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 25 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 26 | இராசு. திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ. |
| 27 | இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி |
| 28 | இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு) |
| 29 | இராமச்சந்திரன், திரு. கே.கே. | சாத்தூர் |
| 30 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 31 | இராமச்சந்திரன், திரு. ந. செஞ்சி. | செஞ்சி |
| 32 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|---|
| 105 | சின்னராசு, திரு. க. இரா. | .. | கிருஷ்ணகிரி |
| 106 | சின்னராஜ், திரு. எம். | .. | தொண்டமுத்தூர் |
| 107 | சுந்தரம், திரு. கே. ஆர். | .. | குடியாத்தம் |
| 108 | சுந்தரம், திரு. ப. | .. | திருப்பத்தூர் |
| 109 | சுந்தரம், திரு. மு. | .. | ரிஷிவந்தியம் |
| 110 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | .. | முகையூர் |
| 111 | சுந்தரராஜ், திரு. நா. | .. | திருமயம் |
| 112 | சுந்தரராஜன், திரு. மு. | .. | விருதுநகர் |
| 113 | சுப்பிரமணியன், திரு. உ. | .. | சிவகங்கை |
| 114 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | .. | போடிநாயக்கனூர் |
| 115 | சுப்பிரமணியன், திரு. மா. | .. | திருவையாறு |
| 116 | சுப்பிரமணியன், திரு. வி. | .. | திருநாவலூர் |
| 117 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | .. | பவானிசாகர் |
| 118 | சுவாமிநாதன், திரு. வி. வி. | .. | புவனகிரி |
| 119 | செங்கோட்டையன், திரு. கு. அ. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 120 | செம்மலை, திரு. செ | .. | தாரமங்கலம் |
| 121 | செல்லமுத்து, திரு. எம். | .. | திருவாரூர் (செ. வ.) |
| 122 | செல்வராசன், திரு. அ. | .. | துறைமுகம் |
| 123 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ. | .. | அரவக்குறிச்சி |
| 124 | சேதுராமன், திரு. ஏ. எம். | .. | ஆற்காடு |
| 125 | சொக்கலிங்கம், திரு. கே. | .. | திருப்போரூர் |
| 126 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | .. | பட்டுக்கோட்டை |
| 127 | சோமு, திரு. என். வி. என். | .. | பூங்கா நகர் |
| 128 | சௌந்திரராசன், திரு. கே. | .. | திருச்சி—2 |
| 129 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | .. | தி. நகர் |
| 130 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | .. | திண்டிவனம் |
| 131 | தங்கராசு, திரு. ஏ. | .. | குறிஞ்சிப்பாடி |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ) |
| 133 | தங்கவேலு, திரு. பி. | .. | செயங்கொண்டான் |
| 134 | தவசி, திரு. ஆர். | .. | பரமக்குடி (செ. வ.) |
| 135 | தனபால், திரு. ப. | .. | சங்கரி (செ. வ.) |
| 136 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | .. | முதுகளத்தூர் |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. | .. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138 | தியாகராசன், திரு. ஆர். | .. | விருத்தாசலம் |
| 139 | திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | .. | ஸ்ரீரங்கம் |



| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|---|
| 140 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | .. | அறந்தாங்கி |
| 141 | திருமாறன், திரு. பெ. | .. | ஆலங்குடி |
| 142 | திருமான், திரு. | .. | ஏற்காடு (செ.வ.) |
| 143 | திருவேங்கடம், திரு. பெ. சு. | .. | கலசப்பாக்கம் |
| 144 | தீர்த்தராமன், திரு. ப. | .. | பென்னகரம் |
| 145 | துரைசாமி, திரு. பி. எஸ். | .. | பர்கூர் |
| 146 | துரைமுருகன், திரு. | .. | ராணிப்பேட்டை |
| 147 | துரைராமசாமி, திரு. | .. | வெள்ளக்கோவில் |
| 148 | துரைராஜ், திரு. பி. | .. | சங்கரநாயினார் கோவில் (செ.வ.) |
| 149 | தேவராஜ், திரு. வி. எம். | .. | வேலூர் |
| 150 | நடராசன், திரு. எஸ். | .. | தஞ்சாவூர் |
| 151 | நரசிம்மன், திரு. பூ. மு. | .. | பள்ளிப்பட்டு |
| 152 | நல்லப்பன், திரு. தி. கா. | .. | பெருந்துறை |
| 153 | நவநீத கிருஷ்ணபாண்டியன், திரு. | .. | ஆலங்குளம் |
| 154 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | .. | மேட்டூர் |
| 155 | நாராயணசாமி, திரு. கே. | .. | திருவண்ணாமலை |
| 156 | நாராயணன், திரு. பி. ஜி. | .. | பவானி |
| 157 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா | .. | திருநெல்வேலி |
| 158 | நெடுமாறன், திரு. ப. | .. | மதுரை (மத்திய) |
| 159 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். | .. | கும்பகோணம் |
| 160 | பட்டாபிராமன், திரு. செ. | .. | திருவள்ளூர் |
| 161 | பம்மல் நல்லதம்பி, திரு. | .. | தாம்பரம் |
| 162 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | .. | பல்லடம் |
| 163 | பலராமன், திரு. இல. | .. | போளூர் |
| 164 | பழனிசாமி, திரு. சு. | .. | மேட்டுப்பாளையம் |
| 165 | பழனிமுத்து, திரு. சி. | .. | ஆத்தூர் |
| 166 | பழனியப்பன், திரு. கு. ப. | .. | விழுப்புரம் |
| 167 | பழனிவேல், திரு. என். | .. | பழனி (செ. வ.) |
| 168 | பாண்டியன், திரு. பி. எச். | .. | சேரன்மாதேவி |
| 169 | பாபு கோவிந்தராஜன், திரு. | .. | கடலூர் |
| 170 | பாபு ஜனார்த்தனன், திரு. | .. | செய்யாறு |
| 171 | பாரமலை, திரு. க. | .. | மானாமதுரை (செ. வ.) |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. ச. | .. | மொடக்குறிச்சி |
| 173 | பாலகிருஷ்ணன், திரு. | .. | சிவகாசி |
| 174 | பாலசுப்பிரமணியன், திரு க. | .. | சீர்காழி (செ. வ.) |
| 175 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | .. | வேடசந்தூர் |
| 176 | பாலன், திரு. சு. | .. | பெரம்பூர் (செ. வ |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 33 | இராமசுப்பிரமணியம், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 34 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ. வ.) |
| 35 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 36 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 37 | இராஜசேகரன், திரு. வெ. | இராதாகிருஷ்ண நகர் |
| 38 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 39 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 40 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ. வ.) |
| 41 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 42 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 43 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 44 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| 45 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 46 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 47 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 48 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 49 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 50 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 51 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 52 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 53 | கருணாநிதி, டாக்டர், மு. | அண்ணாநகர் |
| 54 | கருப்பசாமிப் பாண்டியன் திரு. வி. | பாளையங்கோட்டை |
| 55 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 56 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை (செ. வ.) |
| 57 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 58 | கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 59 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 60 | நன்னிலம் கலையரசன், திரு. ஆ. | நன்னிலம் (செ. வ.) |
| 61 | காளிமுத்து, திரு. கா. | திருப்பரங்குன்றம் |
| 62 | கிட்டப்பா, திரு. என். | மாயவரம் |
| 63 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 64 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 65 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 66 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 67 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 68 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 69 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 70 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 71 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ. வ.) |
| 72 | குமரிஅனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 73 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ. வ.) |
| 74 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 75 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 76 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 78 | கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர் |
| 79 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 80 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 81 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 82 | கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கை (செ. வ.) |
| 83 | கோவேந்தன் திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 84 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 85 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 86 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 87 | சட்டநாத கரையாளர் திரு. கி. | தென்காசி |
| 88 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 89 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 90 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 91 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 92 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ. வ.) |
| 93 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டணம் |
| 94 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 95 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 96 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 97 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 98 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 99 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 100 | சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 101 | சிவபெருமான், திரு. மு. | ஓமலூர் |
| 102 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 103 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 104 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |

| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 177 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ. வ.) |
| 178 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 179 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 180 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 181 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 182 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ. வ.) |
| 183 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ) |
| 184 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 185 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 186 | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ. வ.) |
| 187 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 188 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 189 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 190 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 191 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 192 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ. வ.) |
| 193 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 194 | முசிறிப்புத்தன், திரு. ம. | திருச்சி–11 |
| 195 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 196 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 197 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 198 | முந்துவேல், திரு. என். | வானூர் (செ. வ.) |
| 199 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 200 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிபூண்டி |
| 201 | முனுசாமி, திரு. மு. ப | பாலக்கோடு |
| 202 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ. வ.) |
| 203 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ. வ.) |
| 204 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 205 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 206 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 207 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 208 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 209 | ராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 210 | ராஜமாணிக்கம், திரு. எஸ். கே | முசிறி |
| 211 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 212 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 213 | (வெற்றிடம்) | |



| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 214 | விசயலட்சுமி, செல்வி. வி. | விரபாண்டி |
| 215 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 216 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ. வ) |
| 217 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 218 | விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 219 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 220 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 221 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 222 | வீரானம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 223 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி |
| 224 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 225 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 226 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 227 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 228 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 229 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 230 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி |
| 231 | ஜெகதீசன் ஆனூர், திரு. பு. கோ | செங்கல்பட்டு |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 | ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 | மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். — அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். — அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. — அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. — அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி —தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சாதிக் அலி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப் பணித்துறை (நிறுவனம்) சம்பந்தப் பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்.

*1981 ஏப்ரல் 10, 14 , 15 மற்றும் 16-ம் நாட்கள்.*

*(தொகுதி 19—எண்கள் 1 முதல் 4 வரை)*

## அ.


**பக்கங்கள்**

அப்பாதுரை, திரு. மு.—

சைதாப்பேட்டையில் அரசு ஊழியரின் மனைவி கொலை (ஒ. தீ.) ... **178**

தாம்பரம் அஜந்தா சிட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க.ஈ.) ... **46**

கால்நடை வளர்ப்பு

சமூக நலம் ... **226**

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர் தொழில்

பொதுப்பணிகள் கட்டிடங்கள்

பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ... **830, 859—862**

அ—தொடர்ச்சி.

அன்பழகன், திரு. கி.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

தொழில்கள்

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு — 479—483

ஆ

ஆசிரியர்கள்—

தொடக்கப்பள்ளி, போராட்டம் (அறி.) — 826—828

நடுநிலைப்பள்ளி, தொழிலாசிரியர்கள் சம்பளம் உயர்த்துதல் — 1—5

ஆண்டித் தேவர், திரு. எஸ்.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவரச் சூழ்நிலை (ஒ. கீ.) — 425, 434, 435, 436

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 — 88—92

ஆதி திராவிடர் நலன்—

"அரிசனங்கள்" என்ற பெயர் மாற்றம் — 35—36

இட ஒதுக்கீடு அரசுத் துறையில், நிறைவேற்றல் — 29—34

நீலகிரி மலைவாழ் மக்களின் கோரிக்கைகள் — 409—412

ஆலயங்கள்—

சென்னை கோயில் கேரள அரசு அதிகாரிகள் கையகப்படுத்த முயற்சி — 53—58



ஆ—தொடர்ச்சி.

ஆறுமுகம், திரு. எம்.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவரச் சூழ்நிலை (ஒ. கீ.) — 425

தாம்பரம் அஜந்தா சிட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க. ஈ.) — 46

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர் தொழில் — 829

பொதுப்பணிகள் கட்டிடங்கள்

பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு

தொழில்கள் — 463

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு — 756—760

பத்திரப் பதிவு

பால் வழங்கும் திட்டம் — 181

வேலை வாய்ப்பு, தமிழ்நாடு பணியாளர் தேர்வுக் குழுவினால் தேர்வு செய்யப்பெற்றோர் — 357—359

ஆறுமுகம், திரு. த.—

டால்மியா சிமெண்ட் ஆலைக்கு சுண்ணாம்பு — 405—406

டால்மியா சிமெண்ட் ஆலை தரவேண்டிய உரிமத் தொகை பாக்கி — 406—408

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.


அம்பிகாபதி, திரு. மு.—

- இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) — 425
- தாம்பரம் அஜந்தா சீட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க. ஈ.) — 46
- மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 — 58, 59, 94—99

அரங்கநாதன், திரு. மு.—

- குன்னூர் இரயில்வே கேட் அருகில் பாலம் — 706—707

அரங்கநாயகம், திரு. செ.—

- தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (அறி.) — 826—828
- பள்ளிக் கட்டிட நிதி கொடுக்க இயலாத குழந்தைகள் தேர்வு எழுத அனுமதிக்காதது (ஒ.தீ.) — 45—46

அலுவலகங்கள்—

- சார்-பதிவாளர் அலுவலகம் அமைத்தல், கொல்லிமலை — 705

அலுவலர்கள்—

- மருத்துவர்கள், புதிதாக தேர்வு செய்யப் பெற்றவர்கள் பணியில் சேராமை — 717—721

அழகர்சாமி, திரு. சோ.—

- இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) — 425




பக்கங்கள்

அ—தொடர்ச்சி.


அழகர்சாமி, திரு. சோ.—தொடர்ச்சி.

- தாம்பரம் அஜந்தா சீட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க.ஈ.) — 46
- வரவு-செலவுத் திட்டம், 1981-82—வாக்கெடுப்பு:
  - கைத்தறியும் நெசவுத் தொழிலும்
  - கதர் தொழில்
  - பொதுப் பணிகள் கட்டிடங்கள் — 854
  - பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்
  - பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு

அன்பழகன், திரு. க.—

- உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த. கோ.) — 731
- உறுப்பினர் திரு. ஏ. ரகுமான்கான் மீது (உ.பி.) — 167—168, 171, 172
- மதுராந்தகம் தொகுதி உறுப்பினர் அளித்தது (த.வி.) — 450, 451, 452, 453, 454
- மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 — 68
- வரவு-செலவுத் திட்டம், 1981-82—வாக்கெடுப்பு:
  - கைத்தறியும் நெசவுத் தொழிலும்
  - கதர் தொழில்
  - பொதுப்பணிகள் கட்டிடங்கள்
  - பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்
  - பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு — 886—903

பக்கங்கள்

இ.

இரங்கற் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் டாக்டர் எஸ். சுப்பிரமணியம் மறைவு ... 148

இராகவானந்தம், திரு. எஸ்.—

இராணிப்பேட்டையில் குடிநீர் பற்றாக்குறை (க. ஈ. அ.) ... 177—180

குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 ... 180—181

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது (உ.பி.) ... 421—424

வேலூர் நகராட்சியில் கழிவு நீர் குடிநீருடன் கலத்தல் (க. ஈ. அ.) ... 736—737

இராசகுமார் திரு. மே. அ—

மணப்பாறை, கல்லூரிகள் அமைத்தல் ... 6

இராசமாணிக்கம், திரு. இரா.—

பெரியார் அணையில் நீர்கசிவு ... 18—22

இராசாம்பாள், திருமதி தா.—

அரசாங்க விழாக்களில் தொகுதி உறுப்பினர்கள் கலந்து கொள்வது (த. கோ.) ... 37—38

இராசாராமன், திரு. எஸ்.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவரச் சூழ் நிலை (ஒ. தீ.) ... 25

மருத்துவர்கள், புதிதாக தேர்வு செய்யப்பெற்றவர்கள் பணியில் சேராமை ... 717—721

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு

சமூக நலம் ... 226

தொழில்கள்

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ... 463



பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

இராசேந்திரன், திரு. எஸ். என்.—

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நெசவாளர் சங்கங்களிலிருந்து துணி கொள்முதல் செய்யாதது (க. ஈ. அ.) ... 738—741

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு.

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர் தொழில்

பொதுப்பணிகள் கட்டிடங்கள்

பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ... 829, 830, 831, 903—915

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) ... 443—448

இராமச்சந்திரன், திரு. ச.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த. கோ.) ... 731, 732

தாம்பரம் அஜந்தா சீட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க. ஈ. அ.) ... 47—49

பேரவை அலுவலில் மாற்றம் (தீ.) ... 918

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

தொழில்கள்

தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ... 821—822

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

**இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந.—**

கீழ்மேட்டூர் நீர் மின் திட்ட சிற்றணைத் தடுப்புச் சுவர்களில் இடிபாடுகள் — 147—148

**இராமசாமி, திரு. எஸ். என்.—**

பள்ளிகள் கட்டிட நிதி கொடுக்க இயலாத குழந்தைகள் தேர்வு எழுத அனுமதிக்காதது (ஒ. நீ.) — 40

மின்சார பல்பு தயாரித்தல் — 408—409

**இராஜா முகமது, திரு. கே.—**

கேலவரப்பள்ளி அணை கட்டும் பணி நிறுத்தம் (க. ஈ. அ.) — 459—460, 461

**இளையபெருமாள், திரு. எல்.—**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ.நீ.) — 435, 448

தஞ்சை மாவட்டத்தில் உள்ள பினாமி நிலங்கள் — 375—381

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 — 104—112

ஈ.

**ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.**

அம்பாசமுத்திரம் தொகுதியில் குடிநீர் வழங்கும் திட்டம் — 13

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. நீ.) — 425

கிராமத் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை — 393—394

கோவை—பாபநாசம், விரைவு பேருந்து வசதி — 721—723



பக்கங்கள்

ஈ—தொடர்ச்சி.

**ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—தொடர்ச்சி—**

சைதாப்பேட்டையில் அரசு ஊழியரின் மனைவி கொலை (ஒ. நீ.) — 173

தாம்பரம் அஜந்தா சிட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க.ஈ.) — 46

பள்ளிக் கட்டிட நிதி கொடுக்க இயலாத குழந்தைகள் தேர்வு எழுத அனுமதிக்காதது (ஒ. நீ.) — 44

பெண் நீதிபதிகள், நியமனம் — 6—9

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு /

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர்த் தொழில்

பொதுப் பணிகள் கட்டிடங்கள் — 865—871, 915

பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் வாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு

பத்திரப் பதிவு

பால் வழங்கு திட்டம் — 182

உ.

**உத்தம்சந்த், திரு. எஸ். டி.—**

விதி 105-ன் கீழ் தன்னிலை விளக்கம் — 448—451

வையாவூர் பிர்காவில் காலரா — 157

பக்கங்கள்

உ—தொடர்ச்சி.

**உச்சி, திரு. கே.—**

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

தொழில்கள்

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு — 753—756

**உத்திராபதி, திரு. பொ.—**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) — 425

கோட்டூர் ஒன்றியம், மின் வசதி — 703

**மாநாத், திரு. ரா.—**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) — 425

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த. கோ.) — 732—733

தாம்பரம் அஜந்தா சீட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க.ஈ.) — 46

தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மீது (உ. பி.) — 412—421, 424—425

**உரிமைப் பிரச்சினை—**

பார்க்க—தலைவர்.

**உள்ளாட்சிகள்—**

இராமநாதபுரம் மாவட்ட ஒன்றியங்கள், தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளுதல் — 703—710





பக்கங்கள்

ஏ

**ஙிகள்—**

பேரவை முன் வைக்கப்பெற்றவை — 137, 269—355, 486, 918—919

ஒ

**ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—**

பார்க்க—தலைவர்.

க

**கடன்கள்—**

ஆயுள் காப்பீட்டுக் கழகம் வழங்கியுள்ளது — 369—375

**கணபதி, திரு. கே. ஆர்.—**

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு

சமூக நலம் — 244—246

**கருணாநிதி, டாக்டர் மு.—**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவரச் சூழ்நிலை (ஒ. தீ.) — 425—429, 436

மதுராந்தகம் தொகுதி உறுப்பினர் அளித்தது (த. வி.) — 455, 456, 775—790, 808—809, 810, 812, 813, 814, 815, 816, 821, 822, 823

கிருஷ்ணசாமி திரு. கே. வ—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

பத்திரப் பதிவு

பால் வழங்கும் திட்டம் 181, 182, 183, 205—223

கிருஷ்ணன், திரு. ரா.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) 425

சைதாப்பேட்டையில் அரசு ஊழியரின் மனைவி கொலை (ஒ.தீ.) 174

மேல்நிலைக் கல்வி (பிளஸ் 2) தேர்வு தனியே எழுதுதல் 5

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

தொழில்கள்

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 748—753

குடிநீர்—

அம்பாசமுத்திரம், வழங்கல் 13

இராணிப்பேட்டையில் பிரச்சினை (க. ஈ.) 177—180

மின்சார மோட்டார்களைப் பழுது பார்ப்பதில் குடிநீர் வாரியம் செய்யும் காலதாமதம் 394—398

வேலூர் நகராட்சியில் கழிவுநீர் கலத்தல் (க. ஈ.) 736—738

குமரி அனந்தன், திரு.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவரச் சூழ்நிலை (ஒ. தீ.) 425, 430—431







குமரி அனந்தன், திரு.—தொடர்ச்சி.

கடன்கள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் வழங்கியுள்ளது 369—375

செங்கற்பட்டு கூட்டுறவு அர்பன் வங்கி பற்றிய புகார் 386

பள்ளிக் கட்டிட நிதி கொடுக்க இயலாத குழந்தைகள் தேர்வு எழுத அனுமதிக்காதது (ஒ. தீ.) 40—44

மணலி பகுதியில் தொழிற்சாலைகள் அமைக்க, நில ஆர்ஜிதம் 27—29

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 78—85

வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர் தொழில்

பொதுப் பணிகள் கட்டிடங்கள்

பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு 838—847

பத்திரப் பதிவு

பால் வழங்கும் திட்டம் 204—205

குலசேகர பாண்டியன், திரு. ந.—

ஆம்பூர், கால்நடை மருத்துவ மனைக்கு கட்டிடம் 729—730

ஆம்பூர்—அத்திப்பட்டு, பாலாற்றின் குறுக்கே பாலம் 151

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு

சமூக நலம் 235—238

பக்கங்கள்

க—தொடர்ச்சி.


குலசேகர், திரு. ஏ. டி.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு

சமூக நலம் 226—239

குற்றங்கள்—

சைதாப்பேட்டையில் அரசு ஊழியரின் மனைவி கொலை (ஒ. தீ.) 173—175

தாம்பரம் அஜந்தா சீட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க. ஈ.) 46—53

பதுக்கல் மருந்துப் பொருட்கள், அரிசிப்பாளையம் (சேலம்) 713—715

கூட்டுறவு—

உரமூட்டைகள் முன் தேதியிட்டு கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை— 383—386

செங்கற்பட்டு கூட்டுறவு அர்பன் வங்கி பற்றிய புகார் 386

சேலம், பொன்னி கூட்டுறவு சிறப்பு அங்காடி செலுத்தும் வாடகை 9—10

தேனி, சர்க்கரை ஆலை அமைத்தல் 408

பால் உற்பத்தியாளர் சங்கம் அமைத்தல், ஈரோடு, பெருந்துறை வட்டங்கள் 704

புகளூரில் நதி நீரேற்றும் பாசன கூட்டுறவு சங்கம் ஆரம்பித்தல் 387—389




பக்கங்கள்

க—தொடர்ச்சி.


கைத்தறி—

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நெசவாளர் சங்கங்களிலிருந்து துணி கொள்முதல் செய்யாதது (க. ஈ.) 738—742

நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்கு தொழிற் கருவிகள் தருதல் 161—163

கோபால், திரு. சி.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

பத்திரப்பதிவு

பால் வழங்கும் திட்டம் 198—201

கோபாலன், திரு. ஆர். டி.—

கண்ணகி கோயிலை கேரள அரசு அதிகாரிகள் கையகப் படுத்த முயற்சி (க. ஈ.) 53

கோமதி சீனிவாசன், திருமதி.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு

சமூக நலம் 224, 225, 226, 256—268

ச.

சங்கரய்யா, திரு. என்.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவரச் சூழ்நிலை (ஒ. தீ.) 425

438—441

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சங்கரய்யா திரு. என். தொடர்ச்சி—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த. கோ.) 734, 735

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 99—104

சட்ட முன்வடிவுகள்—

குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 :

அ. நி. 180—181

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 :

ஆ. நி. 58—121

பிரி. ஆ. 121—127

நிறைவேற்றுதல் 127

சண்முகம், திரு. ஏ. சி.—

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக தொழில் நுட்பப் பிரிவு தொழிலாளர்களுக்கு ஊக்க ஊதியம் 158—159

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர் தொழில்

பொதுப் பணிகள் கட்டிடங்கள்

பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு 882—886



பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சண்முகம், திரு. ஏ. சி.—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 181-82, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

தொழில்கள்

தொழில் குறித்த மூலதனச் செலவு 468—474

சமரசம், டாக்டர் கே.—

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 69

சமூக நலன்—

குழந்தைகள் காப்பகம் அமைத்தல் (குளத்தூர் தொகுதி) 727—728

சாகுல் ஹமீது, திரு. ஏ.—

வடகரை கிராம கால்வாய் 398—399

சாலைகள்—

வத்தலகுண்டு யூனியனில் வசதிகள் 152—153

சித்தன், திரு. என். எஸ். வி.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ.நி.) 425—434

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த. கோ.) 730—731, 732

மதுராந்தகம் தொகுதி உறுப்பினர் அளித்தது (த. வி.) 456, 457

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 220

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சித்தன், திரு. என். எஸ். வி.—தொடர்ச்சி

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :
தொழில்கள்
தொழில்கள் குறித்த மூலதனச் செலவு 742—748, 814, 825

வினா-விடை நேரத்தில் கட்சிவாரியாக வினாக்கள் எடுத்துக் கொள்ளுதல் (த. கோ.) 36—37

சிவசாமி, திரு. செ.—

இளையான்குடி மருத்துவமனை கட்டிடம் 155

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தி.) 429—430

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :
பத்திரப் பதிவு
பால் வழங்கு திட்டம் 182

சிவஞானம், திரு. ந.—

தஞ்சை சோதனைச் சாவடிகள் ஊழியர்கள் சம்பளம் (க.ஈ.) 125

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :
பத்திரப்பதிவு
பால் வழங்கு திட்டம் 181



பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சிவப்பிரகாசம், திரு. சீ—

கொல்லிமலை, சார்பதிவாளர் அலுவலகம் அமைத்தல் 705

சிவராமன், திரு. எஸ்.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :
கால்நடை வளர்ப்பு
சமூக நலம் 232—235

சிறு சேமிப்பு—

திட்டத்தினை ஊக்கப்படுத்துதல் 366—369

சிறைச்சாலைகள்—

சென்னை மத்திய சிறை செங்குன்றத்திற்கு மாற்றுதல் 381—383

சின்னசாமி, திரு. எம்.—

"ஆதி திராவிடர்" பெயர் மாற்றம்" 35—36

குடிநீர் வாரியம் மின்சார மோட்டார்களை பழுது பார்ப்பதில் காலதாமதம் 394—398

கோ-ஆப்டெக்ஸ், நெசவாளர் சங்கங்களிலிருந்து நூல் கொள்முதல் செய்யாமை (க. ஈ) 738

புகளூரில் நதி நீரேற்றுப் பாசன கூட்டுறவு சங்கம் ஆரம்பித்தல் 387—389

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :
கைத்தறியும் நெசவுத் தொழிலும்
கதர் தொழில்

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

பொதுப் பணிகள் கட்டிடங்கள்

பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும்

பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு 856—859

சின்னராசு, திரு. மா.—

கிருஷ்ணகிரி அணை பூங்கா, நவீனப்படுத்துதல் 148

சின்னராசு, திரு. மா.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

பத்திரப்பதிவு

பால் வழங்கும் திட்டம் 187—193

சுந்தரம், திரு. கே. ஆர்.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு

சமூக நலம் 238

241—244

பத்திரப்பதிவு

பால் வழங்கும் திட்டம் 193—198





பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுந்தரம், திரு. ப.—

ஆலங்காயம் நெடுஞ்சாலை (வ. ஆ), பாம்பாற்றில் பாலம் கட்டுதல் 710—711

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 462—463

சுந்தரராஜ், திரு. நா.—

மதுராந்தகம் தொகுதி உறுப்பினர் அளித்தது (த. வி.) 454—455

சுப்பிரமணியன், திரு. உ.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ) 425,

436—438

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

பத்திரப்பதிவு

பால் வழங்கும் திட்டம் 182

சுற்றுலா—

கிருஷ்ணகிரி அணை பூங்கா, நவீனப்படுத்துதல் 148—149

வைகை ஆறு மைய மண்டபம் (மதுரை) புதுப்பித்தல் 149—150

செங்கோட்டையன், திரு. கு. அ.—

கீழ்பவானி பாலம் (குருமந்தூர் மேடு—அலிங்கியம் சாலையில்) விரிவுபடுத்துதல் 23—24

தீ விபத்து; புச்சநாயக்கன்பாளையம் (க. ஈ.) 457—458

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

தொழில்கள்

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 767—769

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

**செம்மலை, திரு. செ.—**

சேலம், பொன்னி கூட்டுறவு சிறப்பு அங்காடி செலுத்தும் வாடகை ... 9—10

தொப்பையாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல் ... 150

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர் தொழில்

பொதுப் பணிகள் கட்டிடங்கள்

பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ... 875—878

**சேதுராமன், திரு. ஏ. எம்.—**

ஆற்காடு நகரில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்டும் திட்டம் ... 16—17

**சொக்கலிங்கம், திரு கெ.—**

கோளம்பாக்கம்—கோவளம் பாதையில் மேம்பாலம் ... 133

**சோமசுந்தரம், திரு. எஸ். டி.—**

தீ விபத்து, பூச்சநாயக்கன்பாளையம் (க. ஈ. அ.) ... 458

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 ... 68
113—119

**சோமு, திரு. என். வி. என்.—**

'நவமணி' தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பாக்கிப் பணம் ... 391—393

**சௌரிராஜன், டாக்டர் கே.—**

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 ... 120



பக்கங்கள்

த

**தகவல் கோரல்—**

அரசாங்க விழாக்களில் தொகுதி உறுப்பினர்கள் கலந்து கொள்வது ... 37—38

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை ... 38—40

வினா-விடை நேரத்தில் கட்சிவாரியாக வினாக்கள் எடுத்துக் கொள்ளுதல் ... 36—37

**தங்கமணி, திரு. கே. எம்.—**

தாம்பரம் அஜந்தா சிட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க. ஈ.) ... 46

**தங்கவேலு, திரு. பி.—**

உடையார்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை ... 164

**தலைவர்—**

அறிவிப்புகள்—

உறுப்பினரது உரையில் நீக்கப் பெற்ற பகுதிகள் ... 239

உறுப்பினர் திரு. வெ. இராஜசேகரன் கைது ... 730

உறுப்பினர் திரு. வெ. இராஜசேகரன் விடுதலை செய்யப்பெற்றது

ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளாதது ... 736

பேரவை அலுவல் ... 435—436

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

அரசினர் சட்ட முன்வடிவுகள்—

திருத்தம் பொருளுக்குப் பொருத்தமானதாகவும், நோக்கத்தையொட்டியதாகவும் இருத்தல் வேண்டும் ... 58—59

அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள்—

“ வெங்காயத் தோல் ”—பேரவையின் கண்ணியத்திற்கு உகந்த வகையில் பேச வேண்டும் என்று குறிப்புரைக்கப் பெற்று அனுமதிக்கப் பெற்றது (அ. ச. மு.) ... 108

த—தொடர்ச்சி.

(தலைவர் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்) தொடர்ச்சி.

**உரிமைப் பிரச்சினை—**

**உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் மீது—**

தேர்தல் அறிக்கையில் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னதை முதலமைச்சர் மறுத்த பின்னரும், அதற்கான ஆதாரம் இருக்கிறது என்று உறுப்பினர் திரு. ரகுமான்கான் தம் கருத்தை வலியுறுத்திக் கூறியுள்ளது அவை உரிமை மீறிய செயலாகும் என 14—4—1981 அன்று திரு. ரகுமான்கான் மீது ஓர் உரிமைப் பிரச்சினை எழுப்பப் பெற்றது. இது குறித்து சம்பந்தப்பட்ட உறுப்பினரிடமிருந்து விளக்கம் கோரப்பட்டு இருப்பதாகவும், அவரிடமிருந்து விளக்கம் வந்தவுடன் இது பற்றி பரிசீலித்து தம் தீர்ப்பை வழங்குவதாகவும் பேரவைத் தலைவர் குறிப்புரைத்தார் — 165—172

தொழிலாளர் நல அமைச்சர் மீது—

தொழிலாளர் சம்பந்தமாக மேற்கு வங்க அரசால் நிறைவேற்றப்படாத ஒரு சட்டத்தை அங்கு நிறைவேற்றப்பட்டுள்ளது என இப்பேரவையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தெரிவித்த தகவல் அவையின் கவனத்தைத் திசை திருப்பும் வகையில் உள்ளது என்றும், அவை உரிமை மீறிய பிரச்சினை என்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது ஒரு உரிமைப் பிரச்சினை 15—4—1981 அன்று எழுப்பப் பெற்றது.

மேற்கு வங்க அரசிடமிருந்து வந்த சுற்றறிக்கையை ஆதாரமாகக் கொண்டு அத்தகவல் அவையில் அளித்ததாகவும், பேரவைக்குக் கொடுத்த தகவலில் எந்தவிதமான தவறோ அல்லது தெரிந்தே, வேண்டுமென்றே தவறான தகவல் எதுவும் கொடுக்கவில்லையென்றும், பேரவையின் உரிமையை நான் எந்தவிதத்திலும் மீறவில்லை என்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் விளக்கம் அளித்தார். இது குறித்து பின்னர் * தீர்ப்பளிப்பதாக தலைவர் அறிவித்தார் — 412—425





த—தொடர்ச்சி.

(தலைவர் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்) தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

**ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—**

“கடந்த சில நாட்களாக இராமநாதபுரத்திலும், சுற்றியுள்ள கிராமங்களிலும் உருவாகியுள்ள கலவரச் சூழ்நிலை குறித்து” முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. — 425—448

“சென்னை நகர பள்ளிகளில் கட்டிட நிதி கொடுக்க இயலாத பெற்றோரின் குழந்தைகளைத் தேர்வு எழுத அனுமதி மறுப்பது குறித்து” கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது — 40—46

கவன ஈர்ப்பு—

விவாதம் மாதிரி பேச முடியாது. ஒன்றிரண்டு கேள்விகள் கேட்கலாம் — 50—51

**குறுக்கீடு—**

அவையில் உரையாற்றிக் கொண்டிருக்கின்ற உறுப்பினர் இசையவில்லையென்றால், குறுக்கிடக்கூடாது (அ. ச. மு.) — 102

**தன்னிலை விளக்கம்—**

எழுதிக் கொடுத்ததை மட்டும் படிக்க வேண்டும். அதில் இல்லாததை எல்லாம் சேர்த்துச் சேர்த்துப் படித்தால் அந்தப் பகுதிகள் நீக்கப்பெறும். — 451

---

* 4—5—1982 அன்று தீர்ப்பளிக்கப்பெற்றது.

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

(தலைவர் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்) தொடர்ச்சி.

**நடைமுறை—**

ஒரு கூட்டத்தொடரில் ஒரு பொருள் பற்றி ஒரு முறைக்கு மேல் அனுமதிப்பது நம்முடைய சட்டப் பேரவை மரபு அல்ல (அறி.) 731

ஓர் உறுப்பினர் மீது கொடுக்கப்பட்டுள்ள உரிமைப் பிரச்சினையை அவ்வுறுப்பினரே அவையில் எடுத்துக் கொள்ளலாம் என்று கூறியபோது, தலைவர் அளித்த குறிப்புரையாவது :—

"இது பற்றி அவ்வுறுப்பினரின் கருத்தை எழுதியனுப்புமாறு கேட்டு இருக்கிறேன். அவ்வுறுப்பினரிடமிருந்து பதில் வரவில்லை. எழுத்து மூலம் பதில் அவரிடமிருந்து வந்தபின், அதை எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலித்து, அப்பிரச்சினை எடுத்துக் கொள்வதுபற்றி முடிவு செய்யப்பெறும்" (த.கோ.) 38—39

**பேச அனுமதித்தல்—**

பேசுவதற்காக அழைக்கப்பட்ட நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் இருக்கையில் இல்லாததால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதில் அளிக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்த நேரத்தில் பேசுவதற்கு அனுமதி கேட்பது சரியல்ல (வ. செ. தி.) 205—206

**பேசும் முறை—**

அவையின் மதிப்பிற்கு உகந்ததாகப் பேச வேண்டும். தரம் தாழ்ந்து விடக்கூடாது (அ. ச. மு.) 74

வரம்பு மீறிப் பேசக்கூடாது. தலைவருக்கு உள் நோக்கம் கற்பிக்கும் வகையில் பேசக்கூடாது (அ. ச. மு.) 74

**வினாக்கள்-விடைகள்—**

அமைச்சரவை நீதித் துறையிலே தலையிடக் கூடாது (அ.வி.) 8



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

(தலைவர் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்) தொடர்ச்சி.

வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி.

கட்சி சார்பற்ற வினாக்கள் அனுமதிக்கப்படுவது இல்லை. உறுப்பினரது கேள்விகள் துறைக்கு அனுப்பப்பெற்று, துறைகளிடமிருந்து விடைகள் வரப் பெற்றுள்ள வினாக்கள் அவையில் முறையாக எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன (த. கோ.) 36—37

மூலக் கேள்வியையொட்டி இருத்தல் வேண்டும் (அ.வி.) 147, 382

**தன்னிலை விளக்கம்—**

மதுராந்தகம் தொகுதி உறுப்பினர் (திரு. எஸ். டி. உகம்சந்த்) அளித்தது 448—457

**தாமரைக்கனி, திரு. இரா.—**

அரிசிப்பாளையம் (சேலம்), பழுக்கல் மருந்துப் பொருட்கள் 713—715

கண்ணகி கோயிலை கேரள அரசு அதிகாரிகள் கையகப் படுத்த முயற்சி (க.ஈ.) 54

கோ-ஆப் டெக்ஸ் நிறுவனம் நெசவாளர் சங்கங்களிலிருந்து துணி கொள்முதல் செய்யாதது (க.ஈ.) 738—741

சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்கப்படுத்தல் 366—369

செங்குன்றத்திற்கு சென்னை மத்திய சிறையை மாற்றுதல் 381—383

நடுநிலைப்பள்ளி தொழில் ஆசிரியர்கள் சம்பளம் உயர்த்துதல் 1—3

நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்கு தொழில் கருவிகள் தருதல் 161

**தியாகராசன், திரு. ஆர்.—**

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு:

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர் தொழில்

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

(தலைவர் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்) தொடர்ச்சி.

**தியாகராஜன், திரு. ஆர்.—தொடர்ச்சி.**

பொதுப்பணிகள் கட்டிடங்கள்

பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்.

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ... 851—856

**திருநாவுக்கரசு, திரு. எஸ்.—**

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

தொழில்கள் ... 461, 462, 463

தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ... 800—825

**திருமான், திரு. இரா.—**

ஆனைமடுவு, அணைத் திட்டம் ... 22—23

**திருவேங்கடம், திரு. பெ. சு.—**

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர் தொழில்

பொதுப் பணிகள் கட்டிடங்கள்

பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ... 829, 830

தொழில்கள் ... 461

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு



பக்கங்கள்

'த' தொடர்ச்சி

தொழிலாளர்கள்—தொடர்ச்சி

**தீர்த்தராமன், திரு. ப.—**

பள்ளிக் கட்டிட நிதி கொடுக்க இயலாத குழந்தைகள் தேர்வு எழுத அனுமதிக்காதது (ஒ. தீ.) ... 40

**தீர்மானங்கள்—**

பேரவை அலுவலில் மாற்றம் ... 918

**துரைமுருகன், திரு.—**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) ... 425

இராணிப்பேட்டையில் குடி-நீர் பற்றாக்குறை (க. ஈ.) ... 177—180

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 ... 119—120, 121 126

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

தொழில்கள்

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ... 799, 811

**தொல்பொருள்—**

பூம்புகார் பகுதியில் அகழ்வாராய்ச்சிப் பணி ... 3—5

**தொழிலாளர்கள்—**

கட்டிடத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி ... 10—13

கிராமத் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை. ... 393—394

[illegible] வெளியிடப்பட்ட முடிவுகள் ... 14—16

டால்மியா சிமெண்ட் ஆலைக்கு சுண்ணாம்பு ... 405—406

டால்மியா சிமெண்ட் ஆலை தரவேண்டிய உரிமத் தொகை பாக்கி ... 406—408

'நவமணி' தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய பாக்கிப் பணம் ... 391—393

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தொழிலாளர்கள்—தொடர்ச்சி.

மனைவி பகுதியில் நில ஆர்ஜிதம் 27, 29

மின்சார பல்பு தயாரித்தல் 408—409

## ந.

நரசிம்மன் திரு. பூ. மு.—

வரவு—செலவுத் திட்டம், 1981—82 வாக்கெடுப்பு :

தொழில்கள்

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 477—479

நல்லப்பன், திரு. இ. கா.—

ஈரோடு, பெருந்துறை வட்டங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைத்தல் 704

சைதாப்பேட்டையில் அரசு ஊழியரின் மனைவி கொலை (ஒ. தீ.) 173

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு 225

சமூக நலம் 246—248

வேலூர் நகராட்சியில் கழிவுநீர் குடிநீருடன் கலத்தல் (க. ஈ.) 736

நிதி அலுவல்கள்—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு

சமூக நலம் 234—269



பக்கங்கள்

ந—தொடர்ச்சி.

கைத்தறியும் நெசவுத் தொழிலும்—

கதர் தொழில்

பொதுப் பணிகள் கட்டிடங்கள் 829—918

பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு

தொழில்கள் 461—485

தொழில்கள் குறித்த மூலதனச் செலவு 742—826

பத்திரப் பதிவு

பால் வழங்கு திட்டங்கள் 181—224

நிலங்கள்—

பினாமி, தஞ்சை மாவட்டத்தில் உள்ளவை 375—381

376—381

நீக்கம்— 168, 169, 171, 172, 730, 731, 733, 733, 734, 854, 853

நீதிமன்றங்கள்—

பெண் நீதிபதிகள், நியமனம் 6—8

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (ந. கே.) 734—735

பக்கங்கள்

ந—தொடர்ச்சி.

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—தொடர்ச்சி.

சைதாப்பேட்டையில் அரசு ஊழியரின் மனைவி கொலை (ஒ. நீ.) 174—175

தஞ்சைச் சோதனைச் சாவடிகள் ஊழியர்கள் சம்பளம் (க. ஈ. ஆ.) 176—177

மதுராந்தகம் தொகுதி உறுப்பினர் அளித்தது (த. பி.) 455, 457

நெடுமாறன், திரு. ப.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. நீ.) 425, 431—434

கண்ணகி கோயிலை கேரள அரசு அதிகாரிகள் கைப்பற்ற முயற்சி (க. ஈ.) 53

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

தொழில்கள்

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 760—765

வைகை ஆறு மைய மண்டபம் (மதுரை) புதுப்பித்தல் 149

நோய்கள்—

காலரா, வையாவுர் பிர்க்கா 157—158

ப.

பம்மல் நல்லதம்பி, திரு.—

தாம்பரம் அஜந்தா சிட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க. ஈ.) 46

பம்மல் பகுதியில் பாதாள சாக்கடை அமைத்தல் 389—391



பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பழனிசாமி, திரு. சு.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர் தொழில்

பொதுப் பணிகள் கட்டிடங்கள்

பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு 833—866

பழனிமுத்து, திரு. சி.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. நீ.) 425

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு

சமூக நலம் 225

தொழில்கள் 461

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு

பத்திரப் பதிவு

பால் வழங்கும் திட்டம் 192—195

பழனியப்பன், திரு. கு. பா.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

தொழில்கள் 464—468

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

**பழனிவேல், திரு. என்.—**

சைதாப்பேட்டையில் அரசு ஊழியரின் மனைவி கொலை (ஒ.தீ.) 173

**பாசனம்—**

ஆனைமடுவுத் திட்டம் 22—23
உலக வங்கி உதவியுடன் குளங்களை நவீனப்படுத்துதல் 399—404
பொன்னாபுரம் கிராமத்திற்கு ஆளியார் பாசன வசதி 404—405
பெரியாறு, நீட்சுகிவு 18—22
பொன்னாபுரம் கிராமத்திற்கு ஆளியார் பாசன வசதி 404—405
வடகரை கிராம கால்வாய் 398—399
வாட்டாற்றின் குறுக்கே கட்டுதல் 17—18

**பாபு ஜனார்த்தனன், திரு.—**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) 425

வரவு-செலவு திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

பத்திரப்பதிவு
183—187
பால் வழங்கும் திட்டம்

**பாரமலை, திரு. க.—**

ஆதி திராவிடர்களுக்கான இட ஒதுக்கீடு அரசுத் துறையில் நிறைவேற்றல் 29—34
இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) 425



பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

**பாரமலை, திரு. க.—தொடர்ச்சி.**

இராமநாதபுரம் மாவட்ட ஒன்றியங்கள், நல்லிணைவுத் திட்டத்திலிருந்து விலக்கிக் கொள்ளுதல் 708—710
மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 126

**பாலகிருஷ்ணன், திரு. ச.—**

வரவு-செலவு திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு
248—250
சமூக நலம்

**பாலங்கள்—**

ஆம்பூர்-அத்திப்பட்டி பாலாற்றின் குறுக்கே அமைத்தல் 151—152
கீழ்வாணியில் குருமந்தூர் மேடு—அலிங்கியம் சாலையில் விரிவுபடுத்துதல் 23—2.
குன்னூர் இரயில்வே கேட் அருகில் கட்டுதல் 706—70.
கேளம்பாக்கம்-கோவளம் பாதையில் மேம்பாலம் 153—15.
தொப்பையாற்றின் குறுக்கே அமைத்தல் 150—151
பாம்பாற்றில் கட்டுதல், ஆலங்காயம் நெடுஞ்சாலை (வ.ஆ.) 710—711
மருதையாற்றின் குறுக்கே அமைத்தல் 154—155

**பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி. பி.—**

கனிவள ஆராய்ச்சிப் பணி விவரம் 24—27
உர மூட்டைகள் முன்தேதியிட்டு விற்பனை 382—386
தந்தை பெரியார் போக்குவரத்து கழக தொழில் நுட்பப் பிரிவு தொழிலாளர்களுக்கு ஊக்க ஊதியம் 158—159
“நித்யகல்யாணி” மூலிகை, ஏற்றுமதி 715—717

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பாலன், திரு. சு.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) 425

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு 224, 225

சமூக நலம்

பத்திரப் பதிவு 182

பால் வழங்கு திட்டம்

புருஷோத்தமன், திரு. து.—

கட்டிடத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி 10—13

செங்குன்றத்திற்கு சென்னை மத்திய சிறையை மாற்றுதல் 381—383

நகரில் இரைச்சல் தொல்லைகளை அகற்றுதல் 360—365

பூம்புகார் பகுதியில் அகழ்வாராய்ச்சிப் பணி 3—5

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர் தொழில்

பொதுப்பணிகள் கட்டிடங்கள்

பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு 831—836



பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பூங்காவனம், திரு. என். ஏ.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) 425

காட்பாடியில் கால்நடை பராமரிப்பு நிலையம் 162

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

பத்திரப்பதிவு 201—204

பால் வழங்கும் திட்டம்

வேலூர் நகராட்சியில் கழிவுநீர் குடிநீருடன் கலத்தல் (க.ஈ.) 736, 737

வேலூர் பேருந்து நிலையம், விரிவுபடுத்துதல் 707—708

பெருமாள், திரு. என்.—

மருதையாற்றின் குறுக்கே பாலம் 154

பெருமாள், திரு. ரா. கு.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

தொழில்கள் 474—477

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.—

ஆதி திராவிடர்களுக்கான இட ஒதுக்கீடு, அரசுத் துறையில் நிறைவேற்றல் 29—34

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) 425

கொடைக்கானல்—சென்னை, சொகுசு பேருந்துப் பணி 725—727

சென்னை—கொல்லம் மற்றும் அரூர்—தூத்துக்குடி இருப்புப் பாதை 723—725

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

**பொன்னம்மாள், திரு. ஏ. எஸ்—தொடர்ச்சி.**

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 — 92—94

வத்தலகுண்டு யூனியனில் சாலை வசதிகள் — 132

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு

சமூக நலம் — 251—253

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர் தொழில்

பொதுப்பணிகள் கட்டிடங்கள் — 915

பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு

**பொன்னுரங்கம், திரு. ப.—**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) — 425

தாம்பரம் அஜந்தா சீட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க. ஈ.) — 47

**போக்குவரத்து—**

இருப்புப் பாதை, சென்னை—கொல்லம் மற்றும் ஆரூர்—தூத்துக்குடி — 723—725

கோவை—பாபநாசம் இடையே விரைவு பேருந்து வசதி — 721—723

சொகுசு பேருந்துப் பணி, கொடைக்கானல்—சென்னை — 725—727





பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

போக்குவரத்து—தொடர்ச்சி.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக தொழில் நுட்பப் பிரிவு தொழிலாளர்களுக்கு ஊக்க ஊதியம் — 158—161

வேலூர் பேருந்து நிலையம் விரிவுபடுத்துதல் — 707—708

## ம

**மக்கள் நல்வாழ்வு—**

நகரில் இரைச்சல் தொல்லைகளை அகற்றுதல் — 360—365

பம்மல் பகுதியில் பாதாள சாக்கடை அமைத்தல் — 389—391

**மணி, திரு. டி.—**

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு — 225

சமூக நலம்

வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு :

தொழில்கள் — 482

**மணிமாறன், திரு. ஆர்.—**

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 — 78

**மருத்துவ மனைகள்—**

ஆம்பூர் கால்நடை மருத்துவமனைக்கு கட்டிடம் — 729—730

இளையான்குடியில் ஆரம்பித்தல் — 165—166

கோவை மருத்துவக் கல்லூரி, சுவக் கிடங்கு வசதி — 711—718

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

மாணிக்கம், திரு. எம். எஸ்.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர்த் தொழில்

பொதுப்பணிகள் கட்டிடங்கள் 916

பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு

கால்நடை வளர்ப்பு 239—241

சமூக நலம்

தொழில்கள் 765—767

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

மாரிமுத்து, திரு. த.—

குளத்தூர் தொகுதி, குழந்தைகள் காப்பகம் அமைத்தல் 727—728

மாவட்ட நிர்வாகம்—

தஞ்சைச் சோதனைச் சாவடிகள் ஊழியர்கள் சம்பளம் (க. ஈ. அ.) 175—177

மின்சாரம்—

கேரள, கர்நாடக மாநிலங்களிலிருந்து வாங்குதல் 144—147

மேட்டூர் நீர் மின்திட்ட சிற்றணைத் தடுப்புச் சுவர்களில் இடிபாடுகள் 147—148

கோட்டூர் ஒன்றியம் 703



ம—தொடர்ச்சி.

பக்கங்கள்

மூர்த்தி, திரு. ஜி.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. கி.) 425, 441—443

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 87—88

மூலிகைகள்—

‘திவ்யகல்யாணி’, ஏற்றுமதி 715—717

மொக்கையன், திரு. பி.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. கி.) 425

ய

யசோதா, திரு. டி.—

மதுராந்தகம் தொகுதி உறுப்பினர் அளித்தது (த. வி.) 449, 455, 456, 457

ர

ரகுமான்கான், திரு. அ.—

குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 180—181

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 59—68, 69

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு 253—256

சமூக நலம்

பக்கங்கள்

ர—தொடர்ச்சி.

ரங்கசாமி, திரு. ஆர்.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82 வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர்த் தொழில்

பொதுப்பணிகள் கட்டிடங்கள்

பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு 871—874

ரமணி, திரு. கு.—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை (ஒ. தீ.) 425

கேரள, கர்நாடக மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்குதல் 144

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சவக் கிடங்கு வசதி 711—713

தாம்பரம் அஜந்தா சிட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க. ஈ.) 46

தொழிலாளர் சேமநல வாரியக் கூட்ட முடிவுகள் 14—16

நீலகிரி மலைவாழ் மக்களின் கோரிக்கைகள் 409—41.

பொன்னாபுரம் கிராமத்திற்கு ஆளியார் பாசன வசதி 404—40.

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

பத்திரப்பதிவு

பால் வழங்கும் திட்டம் 183

ராஜமாணிக்கம், திரு. எம். கே.—

ஒருங்கிணைந்த ஆவின இனப்பெருக்கத் திட்டம் 72



பக்கங்கள்

வ

வரதராஜன், திரு. என்.—

சைதாப்பேட்டையில் அரசு ஊழியரின் மனைவி கொலை (ஒ. தீ.) 273

விசயலட்சுமி, செல்வி. வி.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு 230—232

சமூக நலம்

விபத்துகள்—

தி, பூச்சநாயக்கன்பாளையம் (க. ஈ.) 457—458

வின்சென்ட், திரு. மி.—

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை (த. கோ.) 93, 49

உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் மீது (உ. பி) 165—167

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 69, 70—75

விஜயராகவன், திரு. பொ.—

தாம்பரம் அஜந்தா சிட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க. ஈ.) 46

பாசனக் குளங்களை உலக வங்கி உதவியுடன் நவீனப் படுத்துதல் 399—404

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 85—86

127

வீட்டு வசதி—

ஆற்காடு நகரில், வாரியம் மூலம் வீடு கட்டுதல் 16—17

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வீரப்பன், திரு. ஆர். எம்.—

கண்ணகி கோயிலை கேரள அரசு அதிகாரிகள் கையகப் படுத்த முயற்சி (க. ஈ. அ.) 54—55

வெங்கடசுப்பிரமணியம், திரு. ப.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர்த் தொழில்

பொதுப் பணிகள்—கட்டிடங்கள்

பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு 847—851

வெங்கடா ரெட்டி, திரு. டி.—

கேலவரப்பள்ளி அணை கட்டும் பணி நிறுத்தம் (க. ஈ.) 458, 460—461

வெளிநடப்பு—

வேணுகோபால், திரு. த.—

சு. பாபம்பாடி ஆதித் திராவிடர் நலத்துறைப் பள்ளிக் கட்டிடம் 34—39

வரட்டாற்றின் குறுக்கே அணை 17—18

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

கதர் தொழில்



வ—தொடர்ச்சி.

பக்கங்கள்

வேணுகோபால், திரு. த.—தொடர்ச்சி.

பொதுப்பணிகள் கட்டிடங்கள்

பொதுப்பணிகள் — பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடங்களும்

பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு 829, 830, 878—881

வேலை வாய்ப்பு—

தமிழ்நாடு பணியாளர் தேர்வுக் குழுவினால் தேர்வு செய்யப் பெற்றோர் 357—359

ஜ

ஜெயராமன், திரு. வே. இரா—

தேனியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை 408

ஹ.

ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி.—

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 126

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

தொழில்கள்

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 769—774, 804, 811, 815

ஹேமச்சந்திரன், திரு ஜே.—

தாம்பரம் அஜந்தா சிட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை (க. ஈ.) 46

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1981 ஏப்ரல், 10

பங்குனி 28ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு"

செய்யும் செயல் வேறாகவும் சொல்வது வேறாகவும் இருப்பாரது நட்பு ஒருவருக்கு கனவினும் துன்பத்தைத் தரும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரியும் தொழிலாசிரியர்கள்.

*வினா எண். 728— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:-

நடுநிலைப் பள்ளியில் பணிபுரியும் தொழிலாசிரியர்களின் சம்பளத்தை உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் தொழிலாசிரியர்களின் சம்பளத்துக்கு சமமாக உயர்த்தும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: இப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். இந்தக் கல்வி மானியம் வருவதற்குள்ளாக இந்தப் பரிசீலனை முடிந்துவிடுமா? ஒரு மாதம் கழித்தாலும் அந்தப் பரிசீலனையில் ஒரு நல்ல முடிவாக எடுத்து விரைவிலே அதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதனுடைய முழு விவரத்தையும் பரிசீலித்ததற்குப் பிறகு பதில் சொல்லக்கூடிய நிலைமையிலேதான் நான் இருக்கிறேன். இப்போது திட்ட வட்டமாக ஒன்றும் சொல்வதற்கில்லை. இருந்தாலும் நாம் ஆசிரியர் பிரச்சினைகளை என்றைக்கும் அனுதாபத்தோடு கவனிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, எல்லா பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்களையும் முழு நேர ஆசிரியர்களாக மாற்றியமைத்து முழு ஊதியம் வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒரே தகுதியுள்ளவர்கள் நடுநிலைப் பள்ளிகளிலேயும் உயர்நிலைப் பள்ளிகளிலேயும் ஒரே மாதிரியான வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அந்தக் கோரிக்கையை அவர்கள் கிளப்பியிருக்கிறார்கள். அது எப்படி பொருந்தி வரும் என்று பார்த்து சரியாக இருக்குமானால் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக கொள்ளக்கூடிய நிலைமை இருக்கும். இல்லையென்றால் மறுக்க வேண்டியிருக்கும். அதுதான் பரிசீலனைக் கட்டத்திலே இருக்கிறது.

திரு. எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளிலே பார்ட் டைம் ஆசிரியர்களாக இருக்கின்றவர்களை முழு நேர ஆசிரியர்களாக வேலை செய்வதற்கு அனுமதியளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. அதைக் கொஞ்சம் கொஞ்சமாக பார்த்து முழு நேர ஆசிரியர்களாக மாற்றுகிற முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளிலே பகுதிநேர ஆசிரியர்களாக தமிழ்நாட்டிலே மொத்தம் எத்தனை பேர்கள் வேலை செய்கிறார்கள்? அவர்களுக்கு மாதச் சம்பளம் 100க்கும் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே, அதை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படி குடும்பம் நடத்தமுடியும்? ஆகவே உடனடியாக முழு நேர ஆசிரியர்களாக நியமித்து முழுச் சம்பளம் கொடுக்க அரசு உத்தர விடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: முழு விவரங்கள் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும். இருந்தாலும் பகுதி நேர ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர் களாக ஆக்குகிற முயற்சியை கொஞ்சம் கொஞ்சமாக நாம் எடுத்து வருகிறோம்.



திரு. எல். இளையபெருமாள்: கல்வி அமைச்சர் சொல்கிற போது தொழில் ஆசிரியர்கள் பள்ளிகளிலே வேலைசெய்கிறவர்கள் சில பேர்கள் வேலையை விட்டுவிட்டார்கள், காரணம் போதிய மாணவர்கள் இல்லை என்பது. அந்த ஒரே காரணத்தினால் வேலையை விட்டுவிட்ட ஆசிரியர்களைப்பற்றி பரிசிலனை செய்து அவர்களுக்கு வேறு இடத்தில் வேலை கொடுக்க முயற்சி செய்வார்களா? அது சம்பந்தமாக ஆசிரியர்கள் சங்கத்திட மிருந்து தகவல் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. அப்படி வேலையை யாராவது இழந்திருப் பார்களேயானால் தனிப்பட்டு கோரிக்கைகளை விண்ணப்பங்களை எழுதித் தந்தால் அதுகுறித்து பரிசீலித்துத் தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

## பூம்புகார் பகுதியில் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் ஆய்வு

*வினா எண்–729 திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் பகுதியில் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் அண்மையில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மத்திய தொல் பொருள்ஆய்வுத்துறை 1962–63ஆம் ஆண்டிலிருந்து அகழ்வா ராய்ச்சி நடத்தியுள்ளது. கடைசியாக 1978ல் இத்தகைய ஆய்வு நடத்தப்பட்டது. ஆனால் அண்மையில் எதுவும் நடத்தவில்லை.

(ஆ) அகழ்வாராய்ச்சியின் மூலம் புத்தவிகாரம், யூபலி படகுத்துறை, ரோமானிய பானை, ஏடுகள், பல வண்ண மணைகள், செங்கல் மேடை போன்ற பல தொல்பொருள்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பூம்புகார் அல்லாமல் வேறு எங்கேயாவது ஆய்வு செய்யப்பட்டதா? அவைகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பணிகள் என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பூம்புகார் பற்றி மட்டும் கேட்டிருப்பதால் அந்த விவரம் மட்டும் இருக்கிறது. அண்மையிலே கங்கைகொண்ட சோழபுரத்திலும், மதுரை மாவட்டத்தில் கோவலன் பொட்டலிலும் அகழ்வாராய்ச்சிப் பணி நடந்திருக்கிறது. இப்படிச் சிலயிடங்களிலே ஆய்வுகளை தொல்பொருள் ஆய்வுத் துறை மேற்கொண்டிருக்கிறது.

திரு. மு. அம்பலபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் பகுதியில் நடத்தப்பெற்ற அகழ்வாராய்ச்சிப் பணிகளில் பழங்காலப் பொருட்கள் கிடைத்ததாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்தத் தொல்பொருள்கள் தமிழர்களின் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், வாழ்க்கையையும் தெரிவிக்கும் முறையில் அமைந்திருக்கிறதா? மேலும் அகழ்வாரய்ச்சி நடத்துவதற்கு மத்திய அரசை மாநில அரசு கோருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே அகழ்வாராய்ச்சியிலிருந்து கிடைக்கப்பெற்ற பொருள்கள் நம்முடைய பழம் பெருமையையும், பழம் பெரும் வரலாற்றையும் தெளிவாக்கக் கூடிய அளவில்தான் இருக்கின்றன. அவைகளெல்லாம் காப்பாற்றப்பட வேண்டியவை தான். இதுகுறித்து மேற்கொண்டு விரிவாக ஆராய்ச்சியை நடத்த வேண்டுமென்ற விருப்பம் தமிழக அரசுக்கு இருக்கிறது. ஆகவே, கடலின் கீழே பூம்புகார் பகுதியிலே ஏதேனும் இருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில் கோவாவில் இருக்கின்ற National Institute of Oceanography என்ற நிறுவனத்தோடு நாம் தொடர்பு கொண்டு இது குறித்து என்ன செய்யலாம் என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்தபொழுது, அவர்கள் பயணப் படிக்கும், தங்குகின்ற செலவுக்குமான பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொண்டால் ஆராய்வதாகத் தெரிவித்தனர். அதற்காக 35,000 ரூபாய் ஒதுக்குவதென முடிவு செய்திருக்கிறோம். ஆகவே அவர்கள் விரைவிலே வந்து கடலின் கீழே என்ன இருக்கிறது என்பதைப்பற்றி ஆராய்கின்ற காரியத்தைச் செய்வார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆராய்ச்சியில் பண்டைத் தமிழர்களின் பெருமையை விளக்கும் வகையில் பல வண்ண மணிகள், படகுத் துறை, செங்கல் மேடை, ரோமானியப் பானைப் போன்று ரோமானியர்கள் பயன்படுத்திய பொருட்கள் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவைகள் எந்த நூற்றாண்டைச் சேர்ந்த பொருட்கள் என்பதை அகழ்வாராய்ச்சித் துறை அறிவித்திருக்கிறதா? இந்த ரோமானியப் பொருட்கள் சம்பந்தமாக



அந்த நாட்டோடு தொடர்பு கொண்டு அதைப்பற்றி விவரம் ஏதேனும் கிடைத்திருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நகரம் முற்காலச் சோழர் காலம் முதல் பிற்காலச் சோழர் காலம் வரை தொடர்பு கொண்டதாக இருக்கிறது என்பதை அங்கே கிடைத்திருக்கின்ற பொருட்களை வைத்துக் கொண்டும், இதுவரைக்கும் தெரிந்த ஆதாரங்களை வைத்துக்கொண்டும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மத்திய காலத்தில் இந்நகரம் கடலால் அழிக்கப்பட்டிருக்கலாம் என்ற ஒரு கருத்து இந்த ஆராய்ச்சியினிடத்தில் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலேதான் நாம் கடல் அகழ்வாராய்ச்சி செய்யலாம் என்ற ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம்.

## மேல்நிலைக்கல்வி (+2) தேர்வு

*வினா எண் 730. திரு. ஏ. கிருஷ்ணன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பள்ளியில் சேராமல் தனியாக படித்து மேல்நிலை கல்வி தேர்வு (+2) எழுத அரசு அனுமதித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம். 10ம் வகுப்பு அல்லது 11-ம் வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 35 சதவீதம் மதிப்பெண்கள் பெற்று வெற்றிபெற்ற 18 வயது கடந்தவர்கள் யாவரையும், செய்முறை தேவையில்லாத கலைப் பாடங்களில் பள்ளியில் படிக்காமல், நேரடியாகக் கல்வித் தேர்வு எழுத அரசு அனுமதித்துள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோமு: பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு எஸ். எஸ். எல். சி-யிலே ஏற்கனவே குறிப்பிட்ட வயதுக்கு மேல் இருந்தால், பள்ளிகளிலே படித்து இடைக்காலத்திலே விட்டிருந்தாலும் விசேஷ அனுமதி பெற்றுப் பரிட்சை எழுத அனுமதிக்கப்படுகிறதே, இதைப்போன்று பிளஸ் 2 தேர்வையும், பள்ளியிலே படிப்பை இடையிலே விட்டு விட்டிருந்தாலும் பரிட்சைக்குப் பணம் கட்டி பரிட்சை எழுதிப் பூர்த்தி செய்ய அனுமதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பத்தாம் வகுப்பில் அல்லது 11ஆம் வகுப்பில் தேறியிருக்க வேண்டும்; 18 வயது முடிந்திருக்க வேண்டும். அவர்கள் பரிசோதனை தேவைப்படாத கலைப் பாடங்களை எடுத்துக் கொண்டு, நேரடியாக எழுதி பாஸ் செய்யலாம்.

[1981 ஏப்ரல் 10

### மணப்பாறையில் தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் கலைக்கல்லூரி அமைக்கும் திட்டம்.

*வினா எண். 731—திரு. மே. அ. இராஜ்குமார் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மணப்பாறையில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியும், கலைக் கல்லூரியும் அமைக்க அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மணப்பாறையில் தொழில் நுட்பக் கல்லூரியோ, பயிலகமோ ஆரம்பிக்க கருத்துரு ஏதும் இல்லை. ஆனால், கலைக்கல்லூரி ஆரம்பிக்க கோரிக்கை ஒன்று பெறப்பட்டது.

(ஆ) புதிய கலைக்கல்லூரிகள் தற்சமயம் தொடங்கப்பட வேண்டாம் என்ற மைய அரசு மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவின் கருத்தினை ஏற்று இவ்வரசு அத்தகைய செயற் குறிப்புகளைத் தள்ளிப்போட்டுள்ளது.

[முற்பகல் 9.10]

**திரு. மே. அ. இராஜ்குமார் :** பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை மற்றும் சுற்றுப்புறத்திலேயுள்ள மாணவர்கள் ஏறத்தாழ 50 மைல் சென்று கல்லூரியில் படிக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால் இந்த அரசு மணப்பாறையில் கல்லூரி ஒன்று அமைக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் புதிய கல்லூரியைத் துவங்குவது என்ற முடிவை எடுப்போமானால் அப்பொழுது மணப்பாறையைப்பற்றி அரசு பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

### திருமண தாவாக்கள், கற்பழிப்பு வழக்குகளை விசாரிக்க பெண் நீதிபதிகள்.

*வினா எண் 732— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா

(அ) திருமண தாவாக்கள் கற்பழிப்பு வழக்குகள் போன்ற சில ரக வழக்குகளை விசாரிக்க பெண் நீதிபதிகளை நியமிப்பது பற்றி பரிசீலிக்குமாறு மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?



1981 ஏப்ரல் 10]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நீதித்துறைப் பணிகளில், பெண்களுக்கு மட்டும், திருமண தாவாக்கள், கற்பழிப்பு வழக்குகள் போன்ற சில ரக வழக்குகளை விசாரிப்பதற்கு என்று, இடங்களை ஒதுக்கி வைப்பது அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 16-ன்படி சாத்திய மாகாது என்று மைய அரசுக்கு உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையின் அடிப்படையில் கருத்து தெரிவிக்கப்பட்டிருக் கிறது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருமண தாவாக்கள் கற்பழிப்பு போன்ற சில வழக்குகளை விசாரிக்க பெண் நீதிபதிகளை நியமிப்பது குறித்து அரசியல் சட்டத்திலே ஆட்சேபணை இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அந்தத் திருமண தாவாக்கள், கற்பழிப்பு போன்ற வழக்குகளில் பெண் நீதிபதிகளிடம் மனம் திறந்து சொல்ல முடியும். இப்போது ஆண் நீதிபதிகளிடம் சொல்ல சில விஷயங்களை முடியாத நிலை ஏற்படுவதன் காரணமாக, அரசியல் சட்டத்திலே திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று அரசு வற்புறுத்தி, அதன் அடிப்படையிலே, பெண் நீதிபதிகளை நியமிப்பதற்கு நம்முடைய மாநில அரசாங்கம் வற்புறுத்துமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டப் பிரிவு 16-ன்கீழ் பெண்களுக்கு என தனி இடம் ஒதுக்கீடு செய்ய வழிவகை இல்லை. மைய அரசும் அதை ஆலோசித்துத்தான் மாநில அரசுகளுக்குப் பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்கத் தனியாக பெண்களை அமர்த்தலாமா எனக் கேட்டு, அதற்கு அந்தப் பதிலையும் அரசு சொல்லியிருக்கிறது. இன்னும் ஒரு பிரச்னை, பெண்கள் தகுதியுள்ளவர்களாக இருப்பார்களானால், நீதிபதிகளாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஏற்கனவே பெண்களும் நீதிபதி களாக இருந்து வருகிறார்கள். ஆனால், குறிப்பிட்ட பகுதியிலே இருக்கிற பெண்களுக்கு மட்டும் அந்த வழக்குகளை அனுப்புவது என்றால், அதிலே இருக்கிற பிரச்னை, ஒவ்வொரு மாஜிஸ்டிரேட் ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிற பகுதிகளில் எல்லாம் இத்தகைய பல தரப்பட்ட வழக்குகள் வருகின்றன. ஆனால் அங்கு பெண்களுக்கு என ஒரு மாஜிஸ்டிரேட்டும் மற்ற வழக்குகளுக்கு என ஒரு மாஜிஸ்ரேட்டும் அமர்த்துவது என்றால், தமிழகம் தழுவிய அளவிலே எல்லா மாஜிஸ்டிரேட் ஜூரிஸ்டிக்ஷன் பகுதிகளிலும் அமைக்க வேண்டிவரும். அது சாத்தியக்கூறாக இருக்காது. இந்தக் கருத்தை மாநில அரசு மைய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறது. மைய அரசு பரிசிலனை செய்து மேற்கொண்டு முடிவு எடுக்க வேண்டும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கென்று தனியாக இடம் ஒதுக்க முடியாது. ஆனால், ஏற்கனவே பல பெண்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த அடிப்படையிலே தமிழகம் பூராவும் எத்தனை பெண்கள் நீதிபதிகளாக இருக்கிறார்கள்? எத்தனை பெண்கள் நம்முடைய அரசாங்க வழக்குரைஞர்களாக இருக்கிறார்கள் என்ற விவரங்களை அரசு அறிவிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய முழு விபரம் தற்பொழுது இல்லை. ஆனால், நான் சொல்ல வந்தது, அப்படி எத்தனை பெண்கள் நீதிபதிகளாக இருந்தாலும்கூட, அந்தப் பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை எல்லாம் பெண் நீதிபதிகளே விசாரிக்க வேண்டுமென்ற பிரச்னை எழுமானால் ஒவ்வொரு மாஜிஸ்டிரேட் ஜூரிஸ்டிக்ஷனிலும் பெண் நீதிபதிகள் அமர்த்தப்பட்டாக வேண்டும், தமிழகம் பூராவும் அமர்த்தப்பட்டாக வேண்டும். அது சாத்தியக்கூறானது அல்ல. மைய அரசு வேறு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றி ஆலோசித்து முடிவு எடுக்கின்ற நிலைமையில் இருப்பதாக மாநில அரசுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கற்பழிப்பு போன்ற கேஸ்களில் பெண் நீதிபதிகள் விசாரிப்பது நன்றாக இருக்குமே, இவர்கள் மனம் திறந்து சொல்வார்களே என்பதுதான் கேள்வி. அதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் மைய அரசிடமிருந்து ஏதாவது தகவல் வந்த பிறகுதான் செய்யமுடியும் என்று சொன்னார்கள். அது வந்த பிறகு நடவடிக்கை எடுத்தாலும்கூட, இன்றைக்கு அது மாதிரி பல இடங்களிலே பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள், பலவந்தப்படுத்தப்படுகிறார்கள் என்று பத்திரிகைகளிலே செய்திகளைப்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படி வரும்போது அந்த நபருக்குக் கடுங்காவல் தண்டனையோ அல்லது 5 ஆண்டு, 10 ஆண்டு தண்டனையோ அல்லது முடிந்தால் தூக்கு தண்டனையோ கொடுப்பதற்கு இந்த அமைச்சரவை நீதிமன்றத்திற்கு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவை நீதித் துறையிலே தலையிடக் கூடாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு இழைக்கப்படும் அத்தகைய கொடுமைகளிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கிட்டும் அளவிற்குச் சட்டத்தைத் திருத்தி, மிகக் கடுமையான தண்டனை வழங்கக்கூடிய அளவுக்குச் சட்டங்களைத் திருத்த வேண்டுமென மைய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது ஒரு குறிப்பிட்ட ரகமான வழக்குகளை பெண் நீதிபதிகள் மட்டும் விசாரிக்க வேண்டும் என்று போடுவது





சாத்தியம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டிலே படித்த பெண் வக்கீல்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். பெண் நீதிபதிகள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். ஆகவே குறைந்தபட்சம் நமது உயர்நீதிமன்றத்திலும், ஒவ்வொரு மாவட்ட செஷன்ஸ் கோர்ட்டுகளிலும் ஒவ்வொரு பெண் நீதிபதியை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இதுகுறித்துத்தான் நான் ஏற்கனவே சொன்னேன். குறிப்பிட்ட வழக்குகளை பெண் நீதிபதிகள் விசாரிக்க இடம் இல்லை என்று நான் சொல்லவில்லை. பெண் நீதிபதிகள் எங்கேனும் இருப்பார்களேயானால், சில குறிப்பிட்ட வழக்குகளை டிரான்ஸ்பர்செய்து அந்தப் பெண்நீதிபதிகள் விசாரிக்கலாம் என்றுகூட உத்தரவிடலாம். ஆனால் நீதிபதிகளாகப் பெண்களை நியமிப்பதைப்பொறுத்தவரையிலும் அரசியல் சட்டத்திலே அதற்கு இடம் இல்லை. பெண்ணைத்தான் நீதிபதியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், அதற்காக ரிசர்வ் செய்யமுடியாது என்பதுதான் அரசியல் சட்டத்திலே இருக்கின்ற பிரச்னை. தகுதி உள்ள பெண் அந்தத் தேர்வுக்கு வருகின்றபோது, பெண்களுக்கு அந்தத் தகுதி இருக்குமானால், அந்தப் பெண்களைத் தேர்ந்தெடுக்க சட்டத்திலே இடம் இருக்கிறது. அந்த அடிப்படையில் ஏற்கனவே அது நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கற்பழிப்பு வழக்குகளை விசாரிக்கும்போது, பாதிக்கப்பட்ட பெண்கள், பப்ளிக் கோர்ட்டிலே, ஓப்பன் கோர்ட்டிலே சாட்சி சொல்லக் கூச்சப்படுகிறார்கள். அப்படிப் பட்ட வழக்குகளை தனி அறையில், அதாவது இன்கேமராவில் விசாரிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு அரசு ஒன்றும் ஏற்பாடு செய்ய வேண்டிய தேவையில்லை. காரணம் கிரிமினல் புரொசிஜர் கோடிலேயே இதுபோன்ற வழக்குகளை விசாரிப்பதற்கு இன்கேமராவில் நடத்த வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் விரும்புவார்களானால், அப்படி நடத்த நீதிமன்றத்திற்கே அந்த அதிகாரம் இருக்கின்றது. மனு கொடுத்தால் நீதிமன்றம் அதை மறுக்கக் கூட முடியாது. கண்டிப்பாக அப்படி நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## முன்னாள் ஜில்லா போர்டு கட்டிடம், சேலம்

*வினா எண் 733 திரு செ. செம்மலை: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

WS 128 76—2

[1981 ஏப்ரல் 10

(அ) சேலம் முன்னாள் ஜில்லா போர்டு கட்டிடத்தில் நடத்தப்பட்டுவரும் சேலம் பொன்னி கூட்டுறவு சிறப்பு அங்காடி வாடகை ஏதேனும் செலுத்தி வருகிறதா?

(ஆ) எந்தவகையான ஒப்பந்தத்தின் பேரில் ஒப்படைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது?

(இ) அக்கட்டிடத்தை சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் வசம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) முன்னாள் ஜில்லா போர்டு கட்டிடத்தில் இயங்கிவரும் சேலம் பொன்னி சிறப்பங்காடி மாதம் ரூ. 2,285 வாடகை செலுத்தி வருகிறது.

(ஆ) அவ்வப்போது புதுப்பிக்கப்படும் குத்தகை ஒப்பந்தத்தின் பேரில்.

(இ) ஆம்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அலுவலகத்தில் இடநெருக்கடி அதிகம் இருக்கின்ற காரணத்தாலும், பல்வேறு பிரிவுகள் வாடகைக் கட்டடங்களில் நடந்து கொண்டு வருகிற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலும், அந்தப் பழைய கட்டடத்தை அவர்களுக்கே திரும்பக் கொடுத்துவிட்டு, அந்தக் காம்பவுண்டிலே உள்ள காலி இடத்தை, கூட்டுறவுத் துறை விலைக்கு வாங்கி அங்கே பல மாடிக் கட்டிடம் கட்டி, இந்தக் கூட்டுறவுச் சிறப்பங்காடியை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது அலுவலகத்திற்கு இட நெருக்கடி இருக்கிற காரணத்தால், அந்தக் கட்டிடம் அவர்களுக்கு வேண்டும் என்று கேட்டு, அந்த அடிப்படையில் கொடுக்கவும் இசைவு தரப்பட்டுள்ளது. 10 இலட்சம் ரூபாய் செலவில் அந்தக் காலி இடத்தில் சிறப்பங்காடி கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கட்டிடம் கட்டும் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச கூலி நிர்ணயம்

*வினா என் 734. திரு து. புருஷோத்தமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கட்டிடம் கட்டும் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்ய அரசு எண்ணியுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கட்டிடம் கட்டும் தொழில்களுக்கு முதன்முதலாக 1952ஆம் ஆண்டில் குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டன. அவ்விகிதங்கள் பின்னர் அவ்வப்போது திருத்தப்பட்டு தற்போது 30-10-76ஆம் நாளிட்ட அரசாணை 984-ன்படி திருத்திய விகிதங்கள் அமுலில் உள்ளன.



1981 ஏப்ரல் 10]

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கட்டிடம் கட்டும் தொழிலாளர்கள் அந்தப் பணியில் ஈடுபடுகிறபோது விபத்து நேர்ந்தால், அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கும் திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, கேள்வி குறைந்த பட்ச ஊதியம் தருவதைப் பொறுத்தது. நீங்கள் கேட்பது நஷ்டஈடு கொடுப்பது பற்றி. அதற்கு Workmen's Compensation Act இருக்கிறது.

[முற்பகல் 9-20]

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடம் கட்டும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். என்ன விகிதத்தில் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதை இங்கே அறிவிப்பதோடு, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே கேட்டுக்கொண்டது போல், அந்தத் தொழிலாளர்கள் விபத்தில் பாதிக்கப்படுவார்களானால், அவர்களுக்கு ஏதாவது நஷ்டஈடு கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, கூலி நிர்ணயம் அளித்து இருப்பது நீண்ட பட்டியலாக இருக்கிறது. இங்கே அந்தப் பட்டியலைப் படிக்க நேரம் இருக்காது. இப்போது விபத்தில் பாதிக்கப்படும் தொழிலாளர்கள் 'Workmens Compensation Act' கீழ் நஷ்டஈடு பெறலாம். அது அன்னியில், மத்திய அரசு ஒரு 'Comprehensive legislation, கொண்டு வருவதற்கு முடிவு எடுத்து இருக்கிறது. அது விரைவில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள் நிரந்தரத் தொழிலாளியாக இல்லாமல் கான்ட்ராக்டர்கள் என்று சொல்லக்கூடியவர்களிடத்தில் பணியாற்றுகிறவர்களாகத்தான் இருக்கிறார்கள். அந்தக் கான்ட்ராக்டர்கள் பல்வேறு இடங்களில் அரசு அறிவித்துள்ள குறைந்தபட்ச கூலியை சரிவர கொடுப்பது இல்லை என்பதும், அப்படி அவர்கள் தங்களுடைய உரிமையை எடுத்து வைக்கிற நேரத்தில் அவர்கள் மறுதளிக்கப்படுகிறார்கள். உடனடியாக அவர்கள் 4-5 ஆண்டுகள் வேலை செய்து இருந்தாலும்கூட நிறுத்தப்படுகிறார்கள் என்பதை அரசு அறியுமா? ஆகவே, கான்ட்டிராக்டர்கள் எல்லாம் தீவிரமான முறையில் கண்டிப்பாக இந்தக் குறைந்த பட்சக்கூலியை அமல் படுத்தவேண்டும், இல்லாவிட்டால் அந்தக் கான்ட்ராக்டர்களுக்கு கொடுக்கப்பட்ட அந்த ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்படும் என்பதைப் போன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு துரிதமாகச் செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இவைகளையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு, இந்தியத் தொழிலாளர்கள் அமைச்சர்கள் மாநாட்டில் பேசி, மத்திய அரசே ஒரு சட்டம் கொண்டு வருவதாக இருக்கிறது. தமிழக அரசைப்பொறுத்தவரையில், பல்வேறு ஆலோசனைகளும் திருத்தங்களும் அந்தச் சட்டத்திற்குக் கொடுத்து இருக்கிறது. அந்தச் சட்டம் வந்த பிறகு கட்டிடத் தொழிலாளர்களுக்கு இருக்கும் பலன்கள் பூராவும் கொடுக்கப்படும். அப்படி ஏதாவது உகூனா அந்தச் சட்டத்தில் இருக்குமானால், அதிலே ஓட்டைகள், சந்துக்கள் இருக்குமானால் அவைகளை அடைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. இரா. கருப்பையா:** தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் கட்டும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக்கூலி 1976-ல் அறிவிக்கப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 5 ஆண்டு காலம் ஆகிவிட்டது. இந்த 5 ஆண்டு காலத்தில் விலைவாசி உயர்ந்து இருப்பதைக் கணக்கில்கொண்டு உடனடியாக அவர்களுக்கு அளிக்கப்படுகிற கூலியை உயர்த்திக் கொடுப்பதற்கு அல்லது அந்தக் கூலியை மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எப்போதுமே நீங்கள் எண்ணுவதுபோல், வேகமாகச் செயல்பட வேண்டும் என்கிற அடிப்படையில், ஏற்கனவே லேபர் கமிஷனர் அவர்களை இது குறித்து ப்ரபோசல் அனுப்பச் சொல்லி இருக்கிறேன். அவர்களிடத்தில் இருந்து அறிக்கை வந்த பிறகு குழு உடனடியாக அமைக்கப்படும்.

**திரு. எல். இளையபெருமாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்களின் நலனுக்காக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும், மாநில தொழிலாளர்கள் நல இயக்கம் அதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தும் என்றும் சொன்னார்கள். இந்த மாதிரி பல தடவைகள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது வரையில் என்னென்ன நலத் திட்டங்களை இந்த அரசு செய்து இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா? மத்திய அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் சொல்கிறார்கள். குறைந்தபட்ச கூலியைக்கொண்டு வந்துவிட்டு அதை அமல்படுத்தாத நிலையில் மாநில அரசு இருக்கிறதோ, அதை அமல்படுத்த மாநிலஅரசு அதிக கவனம் செலுத்தவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே, குறைந்தபட்ச கூலியைப் பொறுத்தவரையில் நான் பதில் சொல்லி அதோடு நிறுத்தி இருக்கக்கூடும். ஆனால் மாண்புமிகு



உறுப்பினர்கள் கேட்ட காரணததால் கட்டிடத் தொழிலாளர்கள் நலன் குறித்து மத்திய அரசு இந்தத் தொடர் கூட்டத்திலேயே ஒரு சட்டம் கொண்டு வரலாம் என்று குறிப்பிட்டேன். ஏனெனில் அப்படிக்கொண்டு வருவதாக ஏற்கனவே சொல்லி இருக்கிறார்கள். குறைந்தபட்ச ஊதியத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு பார்த்துக்கொள்ளும்.

### அம்பாசமுத்திரம் தொகுதியில் குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண் 735, **திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மன்னார்கோவில் வாகைக்குளம் கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்ட வேலையில் தாமதமேற்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) இல்லை. அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மன்னார் கோவில் வாகைக் குளம் குடிநீர் திட்டத்திற்கான எல்லா வேலைகளும் முடிந்து விட்டன. மின்வசதி இணைப்பு கிடைத்தவுடன் இத்திட்டம் செயல்படும்.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** தலைவர் அவர்களே, வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டது என்று சொன்னார்கள். நன்றி, ஆனால் இன்னும் எந்தவிதமான சப்ளையும் செய்யப் படவில்லை. அதற்குக் காரணம் மின்சார இணைப்பு இல்லை என்று சொல்கிறார்கள். மின்சாரம் சப்ளை செய்வதற்கான பணம் அந்த சம்பந்தப்பட்ட துறையிலிருந்து கொடுக்கப்பட்டுவிட்டது. அப்படி இருந்தும் காலதாமதம் ஆகிறது. உடனடியாக அரசு தலையிட்டு அதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவதோடு, அந்தக் குடிநீர் திட்டத்திற்காகஆகின்ற மொத்த மதிப்பீடு என்ன, அதன் அடிப்படையில் அந்தப் பஞ்சாயத்து எவ்வளவு நன்கொடை தரவேண்டும் என்பதைப் பற்றியும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, திட்ட மதிப்பீடு 1,86,000 ரூபாய். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது குடிக்க தகுதியற்ற நீர்நிலைகள் உள்ள சிற்றூர்கள் என்று கருதுகிறேன். அப்படியானால் அது 'டைப் 2'-ல் வரும். டைப் 2-ன் கீழ் செயல்படுத்தும் திட்டத்திற்கான செலவை அரசே ஏற்றுக்கொள்ளும். அதோடு அவர்களுடைய எண்ணத்தை மனதிலே கொண்டு விரைவிலே மின்விசை அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1981 ஏப்ரல் 1

### சென்னையில் நடைபெற்ற தொழிலாளர் சேமநல வாரியக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்.

*வினா எண் 736— திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழிலாளர் க்ஷேமநல வாரியத்தின் கூட்டம் சென்னையில் நடைபெற்றதில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?

(ஆ) வாரியத்தின் சார்பில் கோவை நகரத்தில் ஒரு தொழிலாளர் பொழுதுபோக்கு இல்லம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில் அது குறித்த விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 13வது கூட்டம் சென்னையில் 25—1—80ல் நடந்தது. அக்கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு சபைமுன் வைக்கப்படுகிறது*.

(ஆ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, கோவை நகர் மாநகராட்சியானதற்குப் பிறகு ஆயிரக்கணக்கில் அல்ல, இலட்சக்கணக்கில் கூட தொழிலாளர்கள் இருக்கக்கூடிய ஒரு பெரிய மையம் ஆகவுள்ளது. அங்கே தொழிலாளர்களின் பொழுதுபோக்கிற்காக ஒரு பெரிய அளவிலான கட்டிடம், நூல் நிலையம், மற்றுள்ள ஏற்பாடுகளையும் செய்ய அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே. அந்தக் குழுவிலே சி.ஐ.டி.யு. உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்கள் அதுபற்றிய தீர்மானத்தைக் கொண்டுவந்தால் அரசு அதுபற்றி பரிசீலனை செய்யும். நீங்கள் சொன்ன யோசனையை அங்கே நல்லமுறையில் பணியாற்றும் உறுப்பினர்கள் தெரிவிப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் வைத்தால் பரிசீலனை செய்யப்படும்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அந்தக் குழுவிலே சி.ஐ.டி.யு. பிரதிநிதிகள் இருப்பது உண்மை. ஆனால் அந்த பிரதிநிதிகள் சகலவிதமான காரியங்களையும் தெரிந்துகொண்டு, அவர்களே செய்து முடிப்பார்கள் என்று எண்ணிவிட முடியாது. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நான் ஞாபகப்படுத்தியிருக்கிறேன். உயர்மட்ட தொழிலாளர்கள் ஆலோசனைக் குழுக்

*128-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்



1981 ஏப்ரல் 10]

கூட்டத்தில்கூட சொல்லியிருக்கிறோம். அங்கே பொழுதுபோக்கு இடம், திருமண மண்டபம் ஆகியவை கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அவர்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வந்து, கேட்டது உண்டு. அப்படிப்பட்ட ஆலோசனையை அமைச்சரவர்கள் கோரிக்கையாக ஏற்று, இனிமேலாவது வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அமைச்சர் அந்தக் குழுவின் தலைவர். பொதுவாக அங்கே வருகின்ற தீர்மானங்களை ஒட்டி முடிவு செய்யப்படுகிறது. நான் மீண்டும் சொல்கிறேன். அந்தக் குழுவிலே மற்ற உறுப்பினர்கள் இருந்தாலும் திரு. உமாநாத், எம்.எல்.ஏ. அவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் அங்கே இப்படிப்பட்ட ஆலோசனையை வைத்தால், நீங்கள் சொன்னதையும் மனதிலே வைத்து, சாதகமான முடிவு எடுக்க நான் ஒத்துழைக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, அங்கே நகரசுத்தித் தொழிலாளர்கள் கடந்த 5 ஆண்டு காலமாக வீடு கட்டுவதற்காக நிதி கோரி மனுக்கள் அனுப்பியது உண்மையா? அது சம்பந்தமாக அமைச்சரவர்கள் உத்தரவு ஏதாவது பிறப்பித்திருக்கிறார்களா? (குறுக்கீடு). இதுவும் தொழிலாளர்கள் பற்றியது தான். நகரசுத்தித் தொழிலாளர்கள் பற்றிய முக்கியமான பிரச்சனை. இந்த நிதியிலிருந்து கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, கேள்வி தொழிலாளர் க்ஷேம நல வாரியத்தின் கூட்டம் சென்னையில் நடைபெற்றது பற்றியது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, இந்த தொழிலாளர்கள் க்ஷேம நலக் குழுவின் கூட்டம் கூட்டப்படுவதற்கான கால நிர்ணயம், 2 மாதத்திற்கு ஒரு முறை அல்லது 3 மாதத்திற்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டுமென்ற கால நிர்ணயம் உள்ளதா? அப்படி இருந்தால் அந்தக் கால நிர்ணயத்திற்குள் கூட்டப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, கேள்வியே தொழிலாளர் க்ஷேம நல வாரியத்தின் கூட்டம் சென்னையில் நடைபெற்றது பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இருந்தாலும் கூட்டங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. பாராட்டத்தக்க முறையில் நடைபெறுகின்றன; நல்லமுறையில் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, விவர அறிக்கையில் வேலூரிலுள்ள காசநோய் மருத்துவ மனையில் தொழிலாளர்களுக்கான பிரிவு ஒன்றைக் கட்டுவதற்கு வாரியம் ஒப்புதல் அளித்தது என்று இருக்கிறது. அந்த வேலை ஆரம்பிக்கப் பட்டுள்ளதா? பணியில் தாமதம் ஏற்பட்டிருக்கிறதா? தாமதம் ஏற்பட்டிருந்தால் துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அந்தக் கூட்டத்தில் 37 முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் பற்றிக் கேட்டால் பதில் சொல்ல முடியாது. ஆகவே அதற்காக தனிக் கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

## ஆற்காடு நகரத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம்

*** வினா எண் 737.** திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆற்காடு நகரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடு, கட்டித் தரும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

(ஆ) ஆற்காடு ஒன்றிய அதிகாரிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் நீண்டகால கடனில் வீடுகள் கட்டித் தரப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆற்காடு நகரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டித்தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். சேதுராமன்: தலைவரவர்களே, சென்ற 6 மாதங்களுக்கு முன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆற்காடு நகருக்கு வந்திருந்தபோது 750 வீடுகள் கட்டித் தரப்பட்டிருக் கின்றது என்பதையும் அதற்காக 68 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கின்றது என்றும் தெரிவித்தார்கள். அது எந்த அளவிலே இப்போது நடைமுறையில் இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, வேலூர் வீட்டுவசதி வாரிய செயற்பொறியாளர் அதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்.



திரு. ஏ. எம். சேதுராமன்: தலைவரவர்களே, அதேபோன்று இந்தத் திட்டத்தின் கீழாக தமிழகத்திலுள்ள ஒன்றியங்களிலுள்ள அதிகாரிகளுக்கும் மற்ற அலுவலர்களுக்கும் அரசு வீடு கட்டும் திட்டம் ஏதாவது பரிசீலனையில் இருக்கின்றதா என்பதையும் அந்தத் திட்டம் எந்த சம்பள அடிப்படையில் நிறைவேற்றப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இந்தத் தகவல்களுக்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள் கிறேன்.

## தானிப்பாடி கிராமத்தில் வரட்டாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை

*வினா எண். 738 திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தானிப்பாடி கிராமத்தில் வரட்டாற்றின் குறுக்கே பாசனத் திற்கு அணை கட்டப்பட்டு பாசனத்திற்கு தேவையான பிரதான கால்வாய் முழுமையாக வெட்டப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: வரட்டாற்றின் குறுக்கே தானிப்பாடி கிராமத்தின் அருகில் அணைக்கட்டு கட்டும் வேலை முடிக்கப்பட்டுவிட்டது. இதன் மூலம் 224.28 ஏக்கர் தற்போது பயனடையும். கிராம மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அக் கிராமத்தில் உள்ள பயிர் நிலங்கள் 294.98 ஏக்கர் முழுவதும் பயன் பெறும் வண்ணம் வரத்து வாய்க்காலை நீட்டித்து கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக கூடுதல் ஒதுக்கீடு செய்து தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. த. வேணுகோபால்: தலைவரவர்களே, தானிப்பாடி கிராமத்தில் வரட்டாற்றின் குறுக்கே பாசனத்திற்காக கட்டப் பட்டுள்ள அந்த அணையிலிருந்து பிரதான கால்வாய் வெட்டப் படவில்லை என்று அரசுக்கு மனுக்கள் அனுப்பப்பட்டு இருப்ப தாகவும், ஆகவே அக்கால்வாய் வெட்டப்பட இருப்பதாகவும் அமைச்சரவர்கள் கூறி இருக்கிறார்கள். அதனுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, 1.3 கிலோ மீட்டர் நீளம் கால்வாய் வேலையினை முடிக்க வேண்டி யுள்ளது. இதற்காக 1.20 இலட்சம் ரூபாய் கூடுதலாகத் தேவைப்படுகின்றது.

திரு. த. வேணுகோபால்: தலைவரவர்களே, அணை கட்டப் படும்போதே பிரதானக் கால்வாய்க்கான மதிப்பீடுகளையும் சேர்த்து திட்டம் தயாரிக்கப்படுகின்றதா? அல்லது அணைக்குத் தனியாகவும், பிரதானக் கால்வாய்க்குத் தனியாகவும் மதிப்பீடு கள் தயாரிக்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, இந்த இடத்திலே உள்ள அணை மிகவும் சிறிய அணைதான். ஆனால் அணை கட்டும்போதே போதுமான அளவுக்கு பிரதானக் கால்வாய் பற்றியும், கிளைக்கால்வாய்கள் பற்றியும் கவனத்திலே கொண்டுதான் மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் இந்த அணையைப் பொறுத்த வரையிலே ஆரம்பத்திலே 224 ஏக்கருக்கு மட்டுமே நீர் கொடுக்கக் கூடிய அளவுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. ஆனால் அங்கே 294 ஏக்கர் வரை பயன் பெறவேண்டும் என்று மற்றவர்களும் கேட்டுக்கொண்ட வேண்டு கோளின்படி திருத்திய மதிப்பீடும் அதற்குத் தகுந்தவாறு கால்வாய் வெட்டுவதற்கான திட்டங்களையும் அரசு தயாரித்திருக் கின்றது.

மதுரை மாவட்டத்திலுள்ள பெரியார் அணை.

*வினா எண் 739—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள பெரியார் அணையில், நீர்க்கசிவு ஏற்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அணையைப் பலப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(இ) அணையில் எவ்வளவு நீரைத் தேக்கிவைக்க இயலும்?

(ஈ) கேரள மாநில அரசுடன் தமிழக அரசு செய்துள்ள ஒப்பந்தம் எவ்வாண்டு முடிவடையும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:— (அ) ஆம்.

(ஆ) அணையில் மேல் பகுதியில் கான்கிரீட்டால் மூடி போன்ற (R.C.C. Capping) அமைப்பு ஏற்படுத்தி அதன் மூலம் அணையின் எடையை அதிகரிக்கச் செய்து அணையைப் பலப் படுத்துவதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அணையின் அடித் தளத்தில் உள்ள பாறையோடு சேர்த்து (Pre Stressed Cable anchors) முன் தகைவு செய்யப்பட்ட கம்பிகள் மூலம் இழுத்துக்கட்ட பூர்வாங்க வேலைகள் நடைபெறுகின்றன.

(இ) தற்போதுள்ள அணையின் நிலையைக் கருதி அணை யின் நீர்மட்டத்தை +136—அடியில் வைக்கப்பட்டுள்ளது.

(ஈ) கி.பி. 2885 ஆம் ஆண்டில் முடியும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்திலுள்ள பெரியார் அணையில் நீர்க் கசிவு ஏற்பட்டு அதைச் சீர்படுத்தி அணையை வலுப்படுத்தக்கூடிய வேலை இப் போது நடைபெற்று வருவதாக தெரிவித்தார்கள். அவ்வாறு



வலுப்படுத்தக் கூடிய வேலையின் மதிப்பீடு எவ்வளவு? அந்த அணை எந்த ஆண்டில் கட்டப்பட்டது? அதோடு அந்த அணைக்குப் பக்கத்திலே ஒரு அணை கட்டினால் அது இன்னும் சாதகமாக இருக்கும் என்று சொல்லப்படுகின்றதே, ஆகவே அப்படி பக்கத்திலேயும் அணை கட்டுவதற்குரிய திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அணையைப் பலப்படுத்துவதற்கா 3 விதமான நடவடிக்கைகளை நாம் எடுக்கவிருக்கிறோம். அதிலே ஒன்று, அணையின் நீர்மட்டத்தை, தற்போதுள்ள ரெகுலேட்டரின் கீழ்மட்ட அளவான 136.00 அடிக்குக் குறைக்க வேண்டும், அடுத்தது, அணையின் மேற்புறத்தில கான்கிரீட்டால் மூடி போன்ற ஆர்.சி.சி. கேப்பிங் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் அணையின் எடையை அதிகரிக்கவும், அணையை மேலும் வலுப் படுத்தவும் துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும். கடைசி யாக, அணையை அடித் தளத்தில் உள்ள பாறையோடு சேர்த்து, முன் தகைவு செய்யப்பட்ட (பிரீ-ஸ்ரெஸ்ட் கேபிள் ஆங்கர்ஸ்) கம்பிகளால் இழுத்துக் கட்ட வேண்டும்.

ஆர். சி. சி. கேப்பிங் போடுவதற்கு 131 லட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அடித்தளத்தில் உள்ள பாறையோடு சேர்த்து, முன் தகைவு செய்யப்பட்ட கம்பிகளால் கட்டுவதற்கு 48 லட்சம் ரூபாய் செல விற்கு மதிப்பீடு செய்யப்பட்டு, நிதி ஒதுக்கம் அளிக்கப்பெற்று வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த அணை முதலில் 1895 ஆம் ஆண்டில் கேரள மாநிலத் துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு கட்டப்பட்டது. அந்த ஒப்பந்தம் கி. பி. 2885 ஆம் ஆண்டில் முடிவடைகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, நான் கேட்டது அந்த அணையினுடைய பக்கத்தில் வேறு ஒரு அணையைக் கட்டினால் இன்னும் சாதகமாக இருக்கும் என்று சொல்கிறார்களே, அதுபற்றி அரசு ஆலோசித்ததா? அந்த அணையிலிருந்து தற்போது பாசனம் பெறும் நிலங்களினுடைய பரப்பளவு என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போட வேண்டும் ஏனென்றால் அந்த அணைக்கு பக்கத்திலே ஒரு அணையைப் போட வேண்டும் என்பது இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்னை. இதனால் நான் இது குறித்து நான் பதில் சொல்லவில்லை. அந்த அணை பலப்படுத்தப்படுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. அந்த அணைக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை. சாதாரண நீர்க் கசிவைப் பார்த்து ஆபத்து ஏற்பட்டுவிட்டது என்ற முறையில், தவறாக பிரச்சாரம் செய்த தினால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் உண்டாகியிருக் கின்றன.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணையின் உயரத்தைக் குறைப்பதற்கு கேரள அரசாங்கம் தான் முதலில் முயற்சி எடுத்தது என்பது உண்மையா. அதனுடைய உயரத்தை 136 அடியாக குறைத்தால், அதன் கொள் அளவு எவ்வளவு வரும்? ஏற்கெனவே 112 அடி நீர் தேங்கி இருக்கிறதே, அதை பாசனத்திற்கு உபயோகப்படுத்துவதற்கான வழி வகைகளை காண அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே அணையினுடைய உயரத்தைக் குறைக்க முடியாது. அணை அப்படியே தான் இருக்கும். அதிலே தேக்கி வைக்கப்பட வேண்டிய நீரின் கொள்ளளவு தான் குறைக்கப்படும். கொள்ளளவு அதிகமாக இருக்கும்போது நீர்க் கசிவு ஏற்படுகிறது என்று, அணைக்கு ஆபத்து வராத அளவிற்கு, அதன் கொள்ளளவை 136 அடியாக குறைக்கலாம் என மத்திய நீர் பாசனக் குழுவினருடைய ஆலோசனையின் பேரில் தான் அதை அவ்வாறு குறைக்க முயற்சி எடுத்து வருகிறோம்.

அதில் தேக்கி வைத்திருக்கும் நீரைப் பயன்படுத்துவது சம்பந்தமாகக் கேட்டார்கள். நாம் ஏற்கெனவே பாசனத்திற்கு அதை பயன் படுத்துகிறோம். வைகை பெரியார் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, திருமங்கலம், சிவகெங்கை போன்ற பகுதிகள் பாசன வசதி பெற, மூன்றாவது பிளேசில் சேர்க்கப்பட்டுள்ளன. இது குறித்த விவரமான பதில் வேண்டும் என்றால் தனிக் கேள்வி போட்டால் தரப்படும்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் உள்ள பெரியார் அணை நீர்த் தேக்கம்—மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது என்றும் நம் பொறியாளர்களால் அதை தெரிந்துக்கொள்ள முடியவில்லை என்றும் ஓய்வு பெற்ற பொறியாளர் ஒருவர் கூறியிருக்கிறாரே. அதன் காரணமாகத்தான் நீரின் கொள்ளளவு குறைக்கப்பட்டு, பல ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற முடியாத நிலைமையில் இருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, 1976–78 ஆம் ஆண்டுகளில் மத்திய நீர் பாசன குழுவின் உறுப்பினர்கள் அணையை நேரிடையாக வந்து பார்த்து விட்டு, வெளியே கூறப்பட்ட வதந்திகளைப் போல இது ஆபத்தான நிலையில் இல்லை என்று கருத்து சொல்லியிருக்கிறார்கள் நம்முடைய பொறியியலாளர்களும் அதே கருத்தைக் கொண்டிருக்கின்றனர். ஓய்வு பெற்றவர்கள் இது குறித்து என்ன கருத்துக்களைச் சொன்னார்கள் என்பது பற்றி எனக்குத் தெரியாது. இதே போலத்தான் அந்த அணை ஆபத்தான நிலையில் இருப்பதாக மலையாள மனோரமாவில் ஒரு கட்டுரை வெளியாகி ஒரு பரபரப்பை கிளப்பி விட்டிருக்கிறது. இவைகளெல்லாம் தவறான



பிரச்சாரங்களே தவிர, உண்மையில் அணைக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை. அந்த அணையைப் பார்த்து விட்டுச் சென்ற மத்திய நீர்ப்பாசனக் குழுவினர் கூட. 136 அடிக்கு கொள்ளளவை குறைத்தால் கசிவைக் கூடத் தவிர்க்கலாம் என்ற முறையில்தான் ஆலோசனை சொல்லி சென்றார்கள்.

இப்போது 145 அடி கொள்ளளவு நீர் தேக்க வேண்டும் என்று நாம் எண்ணுவதினால்தான், அந்த அணையை இன்னும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பெரியார் அணை மதுரை மாவட்டத்தில் இருந்தாலும் கூட, இராமநாதபுரத்திற்கும் பெரும் அளவில் பயன்படுகின்ற மிக முக்கியமான அணையாக அது இருந்து வருகிறது. அதன் கொள்ளளவை 152 அடியாக இருப்பதை 136 அடியாகக் குறைக்க வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டதாக இங்கே சொல்லப்பட்டது. அதன் காரணமாக எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்துவாரா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9–40)

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே ஒரு ஏக்கர் கூட பாதிக்காது. ஏற்கனவே, எந்த அளவிற்கு ஏக்கர்கள் பயன்பட்டதோ, அந்த அளவிற்கு மேலும், கூடுதலாக ஆக்கப்படுமே தவிர, ஒரு ஏக்கர் கூட பாதிக்க விட மாட்டோம். இதை நவீனப்படுத்துவதன் மூலமாக, கூடுதலாக 60 ஆயிரம் ஏக்கராக்கள் பாசன வசதி பெற அரசு திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே பெரியார் அணையினுடைய நீர் கொள்ளளவு 152 அடி. தற்சமயம் 136 அடி நீர் கொள்ளளவு நிரப்ப முடியும். தேக்க முடியும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். 152 அடி நீர்தேக்க நீர் அளவை, இப்போது அரசின் ஆய்வில் உள்ளதால், பதினெட்டாம் கால்வாய் வழியாக, அதனுடைய கீழே உள்ள ஆறுகளிலும், குளங்களிலும் அந்த நீரைத் தேக்கி வைப்பதற்கு மாற்று ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, இப்போது இந்த அணையை பலப்படுத்தும் பணி முடிந்தபிறகு, நமக்கு வரவேண்டிய நமக்குள்ள உரிமை 158 அடி உயரம்வரை நீரைத் தேக்கலாம். ஏற்கனவே, பாசன உறுதிபெற்ற கால்வாய்களை நவீனப்படுத்துவதன் மூலமாக கூடுதலாக கிட்டத்தட்ட 2 இலட்சம் ஏக்கர்களுக்கு பாசன வசதி கொடுக்க வேண்டுமென்பது ஏற்கனவே அரசால் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டம். அதற்கு

மேலும் மழைக்காலத்தில் கூடுதலாக மழை பெய்து, 158 அடிக்கு மேலும் தாண்டினால், நீங்கள் சொல்லுகிறபடி வரலாம். 145 அடிக்கு மேல் போகக்கூடாது என்ற கருத்து சொல்லப்பட்டால், இந்த உபரி நீரைப் பயன்படுத்துவதற்கு, நீங்கள் சொல்லும் பதினெட்டாம் கால்வாய் பற்றி யோசித்துப் பார்க்கலாம். ப்ளட் கேரியர் மூலமாக கூடுதலாக, இந்தக் கால்வாய்கள் மூலமாக நீரைக் கொண்டுபோய், பல்வேறு கண்மாய்களில் விட்டு, போடி, தேவாரம் போன்ற வறண்ட பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. இதனால், இந்த திட்டத்தை ஆய்வு செய்யும்படி அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆய்வு முடிந்து அறிக்கை கிடைத்தவுடன், இது குறித்து அரசு கொள்கை முடிவு எடுக்கும்.

## ஆனைமடுவு அணைக்கட்டுத் திட்டம்

*வினா எண் 740—திரு. இரா. திருமான்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

ஏற்காடு சட்டப் பேரவைத் தொகுதி புழுதிக்குட்டையில் உள்ள ஆனைமடுவு அணைக்கட்டுத் திட்டம் எப்போது நிறை வேற்ற எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: சேலம் மாவட்டம், சேலம் வட்டத்தில் குறிச்சி கிராமத்திற்கு அருகில் ஆனைமடுவு ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். இந்தத் திட்டத்தை செயல்படுத்தி, அங்குள்ள மலைவாழ் நிலங்கள் பயனடைய விரைவுபடுத்த வேண்டும். இந்தத் திட்டத்திற்கு மதிப்பீடு எவ்வளவு? எவ்வளவு ஏக்கராக்கள் பாயும்? இந்தத் திட்டம் எப்போது செயலாக்கப்படும் என்பதைத் தெரியவிரும்புகிறேன்.?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, இத்திட்ட மதிப்பீடு 351 இலட்சம். அப்போது தலைமைப் பொறியாளர் அவர்களுடைய கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இது குறித்து அரசு விரைவிலே முடிவெடுத்து, திட்டம் உண்டா இல்லையா, என்பதைப் பற்றி அரசு இறுதியாக அறிவிக்கும்.

திரு. செ செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆனைமடுவு அணைக்கட்டு மூலம் எத்தனை ஏக்கர்கள் பாசன வசதி பெற வாய்ப்பிருக்கிறது. எந்தெந்த ஆயக்கட்டுகள் பாசனம் பெறும் என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா?



மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, இத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு 5,234 ஏக்கர்கள் முதல் போகப் பயிரும், 1733 ஏக்கர்கள் இரண்டாம் போகப் பயிரும் பாசன வசதி அளிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆயக்கட்டுகள் சம்பந்தமாகக் கேட்டிருக்கிறார்கள். சின்னமநாயக்கன்பாளையம் 2,943 52 ஏக்கர்; குறிச்சி—935·47 ஏக்கர், கொளத்துக் கொம்பை—222.15 ஏக்கர், புழுதிக்குட்டை—40·53 ஏக்கர் நிர்முள்ளிக்குட்டை—288·82 ஏக்கர், சந்திரபிள்ளை வலசை 803·51 ஏக்கர். ஆகமொத்தம் 5,234,00 ஏக்கர்கள் பாசன வசதி பெற வாய்ப்பிருக்கிறது.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆனைமடுவு நீர்த்தேக்கத் திட்டமானது இந்த அரசு இப்போது நவீனப்படுத்தும் 39 திட்டங்களிலே ஒன்றாக அறிவிக்கப் பட்டுள்ளது. ஆனால், ஒப்புதல் அளிக்கப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தின் கீழ் இப்போது தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கின்ற நீர்ப்பாசன நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படுமா? இந்தத் திட்டத்திற்கு எத்தனை ஏக்கர் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படும் என்பதையும் தெரிவிக்க விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, இதுகுறித்து விவரமான குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன். எந்தத் திட்டம் போடப்பட்டாலும், ஏற்கனவே உள்ள ஆயக்கட்டுகள் பாதிக்கப் பட மாட்டாது. அதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இந்த உறுதி கொடுத்து, ரைபேரியன் ரைட் என்ற உறுதியை அவர்களுக்கு கொடுத்துவிட்டு, அவர்களுக்கு கொடுக்க வேண்டிய நீரைக் கொடுத்துவிட்டு, எஞ்சியுள்ள உபரி நீரை என்னசெய்வது என்று திட்டமிடப்படுகிறது. அந்த வசிஷ்டா நதியின், உபநதியின் குறுக்கே அணைக்கட்டுவது நல்ல திட்டம். நிறைய நீர் கிடைக்கும் வாய்ப்பு இருந்தால், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது நல்லது என்று அரசு கருதுகிறது.

## குருமந்தூர் மேடு—அலிங்கியம் சாலையில் கீழ் பவானி வாய்க்காலில் கட்டப்பட்டுள்ள பாலம்

*வினா எண் 741— திரு. கு. அ. செங்கோட்டையன்.—மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) கோபி வட்டத்தில் குருமந்தூர் மேட்டிலிருந்து அலிங்கியம் செல்லும் சாலையில் கீழ் பவானி வாய்க்காலுக்கு கட்டப்பட்டுள்ள பாலம் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:—(அ) இல்லை,

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கு அ செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, குருமந்தூர் மேட்டிலிருந்து அலிங்கியம் செல்லும் சாலையில் கீழ் பவானி வாய்க்காலுக்குக் கட்டப்பட்டுள்ள பாலத்தை விரிவு படுத்தாத காரணத்தால் பெரிய வாகனங்கள் அருகிலுள்ள 10 கிராமங்களுக்கு மேல் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஏறத்தாழ 10, 12 கிலோமீட்டர் தூரம் சுற்றி வரவேண்டி இருப்பதால், இதை அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த பாலத்தை விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் இல்லை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு முறை என்னிடமும், அரசிடமும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அங்கே வரக்கூடிய வாகனங்கள் குறித்த ஒரு அறிக்கையைத் தரவேண்டுமென்று ஸ்தல அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம். அறிக்கை வந்த பிறகு இதுகுறித்து முடிவுசெய்யலாம்.

## தமிழகத்தில் கனிவள ஆராய்ச்சித் திட்டம்

*வினா எண். 742 திரு. வி பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் கனிவள ஆராய்ச்சித் திட்டத்தை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட சிறப்பு நிதி நிறுவனத்தின் (United Nations Development Programme Committee) உதவி கோரப்பட்டு கனிவள ஆராய்ச்சி (Minerals) நடந்ததா?

(ஆ) ஆம் எனில் கனிவள ஆராய்ச்சி எந்தெந்த மாவட்டங்களில் நடந்தது?

(இ) அதன் முடிவுகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட சிறப்பு நிதி உதவியுடன் கனிம ஆய்வு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் 1967-ம் ஆண்டு நவம்பர் முதல் 1975-ம் ஆண்டு மே மாதம் வரை தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டது

(ஆ) வடஆற்காடு தென் ஆற்காடு, தர்மபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் சில பகுதிகளில், ஆக சுமார் 30,000 சதுர கிலோ மீட்டர் பரப்பில் கனிம ஆய்வு செய்யப்பட்டது.



(இ) இவ்வாய்வுகளின் மூலம் கண்டறியப்பட்ட புதிய கனிப் படிவங்களாவன:

(i) சேலம் மாவட்டம் கஞ்ச மலையிலும், திருவண்ணாமலைக்கு அருகில் எவுதி மலை மற்றும் வேடியப்பமலைப் பகுதிகளில் இரும்புத்தாது கிடைக்கிறது என்பது;

(ii) வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூருக்கு அருகில் செவ்வாத்தூர் மற்றும் கொரட்டி கிராமங்களில் வெர்மிகுலைட்டு (Vermiculite) படிவங்கள் உள்ளன என்பது ;

(iii) உரேனியம் உள்ள பாறைகள் வெர்மிகுலைட்டு கனிமத்துடன் சேர்ந்து வட ஆற்காடு மாட்டம் கொரட்டி மற்றும் செவ்வாத்தூர் பகுதிகளில் அமைந்துள்ளது என்றும் கண்டறியப்பட்டது. அதேபோல் சேலம் மாவட்டத்தில் சுண்ணாம்பு கரடுகளில் (Chalkhill's) தரை மட்டத்தில் இருந்து சுமார் 70 முதல் 100 மீட்டர் ஆழம் வரையிலும் மாக்னசைட் (Magnesite) கனிம அமைப்பு உள்ளது உறுதி செய்யப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் சில இடங்களில் தங்க தாதுக்கள் இலேசாக இருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனி வள ஆராய்ச்சியில் மதுரை மாவட்டத்தில் சிமெண்ட், பீங்கான் மூலப்பொருள்கள் இருப்பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டதா? அதை வெளிப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆய்வு செய்ததில் சிமெண்டிற்குத் தேவையான சுண்ணாம்புக் கல் கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் தான் மதுரை மாவட்டத்திலே பாளையம் பகுதியிலே சிமெண்ட் தொழிற்சாலை துவங்க இருப்பதாக இங்கே சட்டமன்றத்தில் கூட அறிவித்திருக்கிறோம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடத்தப்பட்ட கனிவள ஆய்வில் தமிழ் நாட்டில் தங்கத்திற்கான தாது இருப்பதாக தெரிய வந்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் வட்டத்தில் கண்டுபிடிப்பதற்காக நடத்தப்பட்ட ஆய்வில் தங்கத்தின் விழுக்காடுகள் மிகக் குறைந்த அளவே இருக்கிறது என்றும், பொருளாதார ரீதியில் இலாபகரமாக இருக்காது என்றும் அந்த ஆய்விலே அறியப்பட்டது.

திரு. நி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கனிவள நிறுவனம் நல்ல முறையில் இலாபம் பெறுகிற அளவிற்கு நடந்து கொண்டிருக்கிறது. கனிவள ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகளைச் செயல் படுத்துவதற்கும். அதன் மூலம் தொழில்வளம் பெருகுவதற்கும் அரசு ஆவன செய்யுமா? வட ஆற்காடு மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் செவ்வாத்தூர் பகுதியில் வெர்மிகு லைட்டு படிவங்கள் கிடைக்கின்றன. அதை வெட்டி எடுக்கும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. எஸ், திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட சிறப்பு நிதி உதவியுடன் 1967-லிருந்து 1975 ஆம் ஆண்டு வரையிலே சிறப்பு ஆய்வுகள் நடத்தப்பட்டன. அதற்குப் பின்னால் மாநில புவி இயல் துறை கனிம ஆய்வுகளை மாநிலத்தின் பல்வேறு இடங்களிலே நடத்தி வருகிறது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அடிப்படையிலே சுமார் 40 லட்சம் ரூபாய் அளவிலே விஞ்ஞான கருவிகள், நவீன சோதனைக் கூடங்கள் இவைகளை யெல்லாம் மாநில புவியியல் துறைக்குக் கொடுத்திருக்கிறது. அவற்றின் உதவியுடன் மாநில புவி இயல் துறை தொடர்ந்து ஆய்வுகளை நடத்தி வருகிறது. கிடைக்கிற கனிம வளங்களைப் பயன்படுத்த தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் ஒரு வைரமாலை மாவட்டம் என்பதை அரசு அறியுமா? அங்கே தடிக்காரன் கோணத்தில் வைரம் இருப்பதாக சொல்லப் பட்டு அந்த இடத்திலே போலீஸ் பாதுகாப்பு போடப் பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? உடனடியாக அங்கே அதைப்பற்றி ஆய்வை நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை. அங்கே வைரம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற காரணத்தினால் மாநில புவிஇயல் துறை அதைப் பார்த்து அங்கே ஆய்வு நடத்தும்படி கேட்டுக்கொள்ளப்படும்

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே திருவண்ணாமலை பகுதியிலே கௌரி மலையிலே கிடைக்கிற கனிவளம் என்ன? அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ? அது ஒரு சிறந்த கனிமம் என்று மேலை நாட்டினர் கூட இலண்டனில் இருக்கிறவர்கள் கூட பார்வையிட்டு அந்தக் கனிவளம் நல்ல தாதுப்பொருள் என்று சொல்லியிருக்கிறார்கள், அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : திருவண்ணாமலை பகுதியிலே இரும்புக்கனி பற்றி ஏற்கெனவே தனிக்கேள்வி இந்த மன்றத்திலே வந்தபோது விளக்கமாக பதில் சொல்லியிருக்கிறேன். அங்கே இருக்கிற கனிவளங்கள் போதுமான தரமுள்ளதாகவும் வியாபார ரீதியிலே லாபகரமாகவும் இருக்கிறது என்ற அளவிலே அறிக்கையிலே இல்லாத காரணத்தினாலே மத்திய அரசுக்கு மீண்டும் ஆய்வை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

திரு. ஏ. டி. கருப்பையா : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே கூடலூரிலே குன்னூர் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே பூமிக்கடியில் பொன் இருப்பதாகவும் அதை கண்டு பிடிக்காதபடி மூடிவைத்திருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது. அங்கே அப்படி மூடியிருப்பதை ஆய்வு செய்து கண்டுபிடிப்பதற்கு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 743, 744 ஆகியவை சேர்த்து எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

மணலி பகுதியில் தொழிற்சாலைகள் அமைக்க நில ஆர்ஜிதம்

வினா எண். 743 —திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மணலிப் பகுதியில் தொழிற்சாலைகள் அமைக்க நிலம் ஆர்ஜிதம் செய்தபோது நிலச் சொந்தக்காரர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு தருவதாக ஒப்புக்கொள்ளப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில் எத்தனை பேர்கள் வேலை பெற்றுள்ளார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

* வினா எண் 744 திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மணலிப் பகுதியில் தொழிற்சாலைகளுக்கென்று எத்தனை ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது?

(ஆ) நிலச் சொந்தக்காரர்களுக்கு ஈட்டுத் தொகை வழங்கப் பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (அ) சுமார் 1,200 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) ஆம் இதுவரை ஈட்டுத் தொகையாக சுமார் ரூ. 24,40,000 (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து நாற்பதாயிரம்) நிலச்சொந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**திரு. குமரி அனந்தன்:** அவைத் தலைவர் அவர்களே, இரண்டு கேள்விகளும் ஒரே நேரத்திலே எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாலே ஒவ்வொரு பகுதியாகக் கேட்க விரும்புகிறேன். மணலிப் பகுதியிலே மிகப் பெரிய தொழிற்சாலைகளுக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு இருக்கிறது. Madras Fertilisers Ltd., Madras Refineries Ltd., Sriram Fabrics Ltd., Kothari (Madras) Organic Chemicals இந்த நிறுவனங்களுக்காக நிலங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இருந்த போதிலும்கூட கடந்த 16 ஆண்டுக் காலமாக 32 பேர்களுக்குத்தான் அந்த நிறுவனங்களிலே வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது கவனத்திற்கு வந்திருக்கிறதா மற்றவர்களுக்கும் வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** நில ஆர்ஜிதம் ஏறக்குறைய 1,200 ஏக்கர் மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டியதைப் போல் இன்னும் 18 நிறுவனங்களுக்கு 1,064 ஏக்கர் நிலம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அவைகளிலே பல பணியைத் துவக்கியிருக்கின்றன, பல நிறுவனங்கள் கட்டுமானப் பணிகளைச் செய்துகொண்டிருக் கின்றன. 32 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டிருக் கிறது என்றும் மற்றவர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார்கள். நிலம் கொடுக்கப்படக் கூடிய அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு அந்த தொழிற்சாலைகளிலே வேலை கிடைக்குமாறு செய்யவேண்டுமென்று தான் அரசு இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்திருக்கிறது. தொடர்ந்து அப்படிச் செய்ய வேண்டுமென்று அரசு வலியுறுத்தும்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 16 ஆண்டுகளுக்கு முன்னால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட அந்த நிலங்களுக்கு நஷ்டயீட்டு தொகை இவ்வளவு நாளும் கொடுக்கப்படவில்லை என்பதுதான் பெருங் குறையாக இருந்தது. நமது மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் 24 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருப்பதாக இங்கே அறிவித்திருக்கிறார்கள். அந்த 24 இலட்சம் ரூபாயும் அந்த விவசாயிகளுக்குப் போய்ச் சேர்ந்து விட்டதா அல்லது அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா என்பதையும், 24 இலட்சம் ரூபாயிலேயே யும் அந்த நிலத்தைக் கொடுத்தவர்கள் அத்தனைப் பேர்களுக்கும்



நஷ்டயீடு அடங்கிவிட்டதா என்பதையும், 16 ஆண்டுகளுக்கு முன்னாலேயே அவர்கள் கோரியும், அதைப்பெற வேண்டியவர்கள் இதுவரையிலும் பெறாத காரணத்தினாலே அதற்குரிய வட்டியும் சேர்த்துக் கொடுக்கப்படுமா என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வழக்கு உயர்நீதிமன்றத்திலேயிருந்து, 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தீர்ப்பளிக்கப்பட்டு, ஏறத்தாழ 425 ஏக்கர் நிலத்திற்கு இன்னும் அவார்ட் வழங்கப்படாமல் இருக்கிறது. அதற்காகத் தனியாக மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிக்கு உத்தரவிடப்பட்டு அவருக்கு உதவியாக சில உதவியாளர்களும் நியமிக்கப்பட்டு அந்த அவார்ட் வழங்கப்பட காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் தகவலைக் கொடுத்தமைக்காக நன்றி. உங்கள் மூலம் நியமிக்கப்பட்ட ஸ்பெஷல் தாசில்தாரிடம் நேரிலே சென்று, நஷ்டயீட்டை விரைவிலே வழங்குவீர்களா என்று கேட்ட நேரத்தில், மூன்று மாதங்களில் வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், நான் கேட்டு ஆறு மாதங்கள் ஆகிவிட்டன என்பதால் மீதமிருப்பதை மிக விரைவில் வழங்குவதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உடனடியாக மீதம் இருக்கின்ற, நிலம் கொடுத்தவர்களுக்கு அவார்ட் கிடைக்க அதற்காக நியமிக்கப் பட்டிருக்கின்ற அதிகாரிகளுக்கு உத்தரவிடும்.

### அரசுத் துறைகளில் ஆதிதிராவிடர்களுக்காக ஒதுக்கப்பட்ட 18 விழுக்காடு இடங்கள்

*வினா எண் 665— திரு. க. பரமமலை. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) அரசுத் துறைகளில் அரிசனங்களுக்குரிய 18 சதவிகித கோட்டா பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) இது பற்றிய முழு விவரம் இந்தச் சபையில் வைக்கப் படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) அரசுத் துறைகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 18 விழுக்காடு இடங்கள் சரிவர இப்பிரிவினைச் சார்ந்தோரால் நிரப்பப்படுகின்றனவா என்பதை அறிய முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட உயர் மட்டக் குழு' (High Level Committee) ஆய்வு செய்கிறது. 'உயர் மட்டக் குழுவின் உறுப்பினர்-செயலாளரான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் எல்லாத் துறைத் தலைவர்களிடமிருந்தும் அரசு நிறுவனங்களிலிருந்தும் ஒவ்வொரு ஆண்டிலும் செய்யப்பட்ட நியமனங்கள் பற்றிய ஆண்டறிக்கைகளைப் பெற்று அவற்றை ஆய்வு செய்கின்றார். மொத்தமுள்ள 114 துறைகளுள் 85 துறைகளிடமிருந்து பெற்றுள்ள 31.12.1978 உடன் முடிவடைந்த காலத்திற்கான ஆண்டறிக்கைகளின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 8 விழுக்காடும், மொத்தமுள்ள 54 அரசு நிறுவனங்களுள் 28 நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றுள்ள 31.12.1979 உடன் முடிவடைந்த வருடத்திற்கான ஆண்டறிக்கைகளின்படி இந்நிறுவனங்களில் 9 விழுக்காடும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எட்டு, ஒன்பது விழுக்காடுதான் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதற்குத் தனியாகக் குழு அமைத்திருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆனால், பி. ஏ., எம். ஏ., பி. எல்., எம். எல்., படித்துவிட்டு ஆண்களும், பெண்களும் வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்ற இந்த நேரத்தில் 18 சதவீதம் என்பதைப் பூர்த்தி செய்யாமல் இருப்பதன் மர்மம் என்ன? எவ்வளவு சீக்கிரத்தில் எல்லா இடங்களும் பூர்த்தி செய்யப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எம், விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று, நிரப்பப்படாமல் இருக்கின்ற அந்த மீதமுள்ள இடங்களையும் நிரப்ப வேண்டுமென்ற எண்ணத்தோடு, ஒதுக்கீடான 18 விழுக்காட்டில் பொதுவிதி 22—ன் படி முதலில் அரசுப் பணிகளில் எடுக்கும்பொழுதும், அதன் பின்னர் பதவி உயர்வுக்கும் கடைப்பிடிக்க வேண்டும். இது மத்திய அரசின் விதியின்படி நடத்தப்பட வேண்டும் என்றும், 18 விழுக்காடு நிரப்பப்படும் வரையில் அந்த இடங்கள் மற்றவர்களால் நிரப்பப்படாமல் ஆதிதிராவிடர்களால் மட்டும் நிரப்பப்பட வேண்டுமென்றும், இதனை அரசும், அரசினைச் சார்ந்த நிறுவனங்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் ஒரு விதி



உள்ளது. அதன்படி நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் இந்த உயர் மட்டக் குழுவின் செயலாளராக இருக்கின்ற அவர் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கின்றார்கள். அந்தப் பரிந்துரையை அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. கூடிய விரைவில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினா—விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, அது நிரப்பப்படாமல் இருப்பதனுடைய காரணம் என்ன? 'கேன்டிடேட்ஸே' இல்லையென்று அர்த்தமா? அல்லது காலம் கடத்துவதுதான் நோக்கமா என்று நான் அமைச்சரிடத்திலே கேட்டேன். அதற்குச் சரியான பதில் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி 114 துறைகளுள் அரசுக்கு இதுவரை 85 துறைகளிடமிருந்துதான் ஆண்டறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதுபோல் 54 பொது நிறுவனங்களில் 28 நிறுவனங்களிடமிருந்துதான் இது வரையில் ஆண்டறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அந்த ஆண்டறிக்கைகளை முழுமையாகக் கொடுக்கவேண்டுமென்று அரசு அந்தத் துறைகளுக்குப் பணித்துள்ளது. அந்த விவரங்கள் கிடைக்கப்பட்டவுடன் அவையின்முன் அது வைக்கப்படும்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 18% நியமனம் என்ற அந்த ஆணை அனைத்து இலாக்காக்களாலும் அல்லது அரசுத்துறை நிறுவனங்களாலும் அமுல்படுத்தப்படவில்லை. ஆகவே. அதை அமுல் நடத்துகின்ற வரையில் அந்தச் சாதனையை எட்டுகின்ற வரையில், மற்ற நியமனங்களை நிறுத்தி வைத்து, தாழ்த்தப்பட்ட மக்களை மட்டும் தேர்ந்தெடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரிவினரின் எண்ணிக்கையைப் பொதுப் பணிகளில் அதிகரிக்கும் பொருட்டு, அரசுத் துறைகளில் ஒரு குறிப்பிட்ட பதவிகளில் மொத்த எண்ணிக்கை 10-க்கு மேல் இருக்குமானால் நேரடி ஆட்சேர்ப்பின்பொழுது ஒதுக்க விதி கடைபிடிக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. நேரடி ஆட்சேர்ப்பின்பொழுது தாழ்த்தப்பட்ட பழங்குடி

யினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள 18 விழுக்காடு இடங்களை நிரப்ப, அப்பிரிவுகளைச் சேர்ந்த தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் இல்லையாயின் ஒதுக்கப்பட்ட அந்தக் காலி இடங்களை அடுத்த ஆட்சேர்ப்பு ஆண்டிற்கு (Next year of recruitment) ஒதுக்கீடு (carry over) செய்யப்பட வேண்டுமென்றும் ஆணையிடப் பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் தகுதியின் அடிப்படையிலும் தேர்வு செய்யப் படலாம். அவ்வாறு தகுதியின் அடிப்படையில் அப்பிரிவினர் Open Competitionல் தேர்வு செய்யப்பட்டால் அத்தேர்வு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை எந்த விதத்திலும் பாதிக்காது.

**திரு. வெ. அரங்கராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரிசனங்களுக்கு 18% பூர்த்தி செய்யப்படவில்லை யென அமைச்சர் அறிவித்தார். 18 சதவீதத்திலே அரிசனங்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் என்றிருக்கிற காரணத்தால், அதிலே அரிசனங்களுக்கு மட்டுமே விழுக்காடுகள் நிறைவு செய்யப்படுகிறதா? 18% அரிசனங்களோடு சேர்ந்திருக்கிற காரணத்தால் ஆதிவாசிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே, ஆதிவாசிகளுக்காக, 18 சதவீதத்தைப் பிரித்து அல்லது அவர்களுக்கென 5 சதவீதமாவது ஒதுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் தற்பொழுது அரசுக்கு இல்லை.

**திரு. சி. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்மட்டக் குழு இருப்பதாக அமைச்சர் கூறினார். அந்தக் குழு இதற்கு முன்னால் எப்பொழுது கூட்டப்பட்டது? இனிமேல் அதைக் கூட்ட விரைவாக அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உயர்மட்டக் குழு ஏற்கனவே 25-6-1970 அன்றும் 22-2-1977 அன்றும் இருமுறை கூடி விவாதித்துள்ளது. இப்பொழுது ஆதி திராவிட நல இயக்குநர் அவர்கள் அந்தக் கூட்டத்திற்குத் தேவையான அஜெண்டாவைத் தயாரித்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார். ஆகவே, கூடிய விரைவில் அந்தக் கூட்டம் கூட்டப்படும்.

**திரு. ஜி. மூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்படுகிற புரமோஷனில் ரிசர்வேஷன் இருக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. அப்படி ரிசர்வேஷனில் அவர்களுக்கு புரமோஷன் வருகிறபொழுது தகுதியில்லை யென்ற காரணத்தாலோ அல்லது முழுமையான டிரெயினிங் அவர்களுக்கு இல்லையென்ற காரணத்தாலோ அது நிறுத்தி வைக்கப்பட்டு மற்ற சமூகத்தினருக்குத் தரப்படுகிறது. அப்படி



யிருக்கிற காரணத்தாலே, அவர்களைத் தகுதியுடையவர்களாக்கி அந்தப் பதவிகளில் அவர்களை அமர்த்துவதற்கு அரசு முன் வருமா? அதே நேரத்துலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று கொடுக்கப்படுகிற அந்த சதவீதங்கள் நிரப்பப்படாத நேரத்திலே அதை மற்ற சமுதாயத்தினரைக் கொண்டு நிரப்பி சீர் செய்து விடுகிறார்கள். அப்படியிருக்கும்போது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்குகின்ற இடங்களுக்கு அவர்களில் ஆட்கள் இல்லையென்று சொன்னால், அவர்களிலிருந்து மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு பௌத்தவர்களாக மாறிய தாழ்த்தப்பட்டவர்களுக்கு அதைக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எம். விஜயசாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் அளிக்கையில் பொது விதி 22-ன் படி முதலிலே அரசுப் பணியில் எடுக்கும்போதும், அதன் பின்னர் பதவி உயர்வினை கடைப்பிடிக்கும்போதும், மத்திய அரசு விதியின்படி நடத்தப்படவேண்டும் என்று சொன்னேன். தற்போது தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆதிதிராவிட நல இயக்குநர் அவர்கள் பரிந்துரை செய்து இருக்கிறார்கள் என்பதையும் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அந்தப் பரிந்துரைகளின் பேரில் அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று நேரடி ஆள் சேர்க்கும்போது இந்த இடங்கள் அந்தப் பிரிவினருக்காக ஒதுக்கப்படும்போது அந்த இடங்கள் நிரப்பப்படாதபோது, அடுத்த ஆண்டுக்கும் அந்த ஒதுக்கீடு கேரி ஓவர் செய்யப்பட வேண்டும் என்றும் நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். அந்த முறையில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலே சொன்னார்கள் 8%, 9% கொடுத்திருக்கிறார்கள் என்ற தகவலைச் சொன்னார்கள். ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது 18% டைரக்டர் ஆப் எம்ப்ளாய்மெண்ட் டிரெயினிங் மூலமாகக் கொடுக்கும்போது தகுதிவாய்ந்த கேண்டிடேட்ஸ்கள் இருக்கிறார்கள் என்பது அரசுத் தரப்பில் இருந்து கொடுக்கப்பட்ட ரிப்போர்ட்டுகளில் இருந்து தெரிகிறது. அப்படி இருக்கும்போது ஏன் அந்த 18% என்பது 8% அல்லது 9% என்று குறைகிறது. இரண்டாவதாக, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அந்தச் சலுகைகளிலே 18% ஒவ்வொரு துறை வாரியாக கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? மூன்றாவதாக கேரி ஓவர் கொடுக்கும்போது, கடைசி வரையிலே கொடுக்காமலேயே வைத்து 50%க்கு மேல் வருகிறபோது, அவை தானாகவே ரத்தாகின்றது என்பது அரசுக்குத் தெரியுமா? இவைகளுக்கு எல்லாம் மேலாக, இந்தப் புதிய அரசாங்கம் அமைத்த பின்னர், இன்னும் அரிசன நல அட்வைசரி கமிட்டி அமைக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி செய்யாமல் அரசுக்கு இந்த மக்கள்பால் உள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல் இருப்பது உண்மைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் அளிக்கையில் 114 துறைகளில் 85 துறைகளில் இருந்துதான் அரசுக்கு ஆண்டறிக்கை கிடைத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். அதேபோன்று, 54 பொதுநிறுவனங்களிலே, 28 நிறுவனங்களில் இருந்துதான் இதுவரையில் ஆண்டறிக்கை கிடைத்துள்ளது. அதை வைத்துதான் 8%, 9% என்று எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அந்த விவரங்கள் முழுமையாக கிடைத்த உடன் அரசு ஒரு விரிவான அறிக்கையை இந்த அவைமுன் வைக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதி திராவிட நல மாநில குழு அமைக்கப்படவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அந்தக் குழு அமைக்கப்பட்டு, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது வந்த உடன் அது அறிவிக்கப்படும்.

சு. பாபம்பாடியிலுள்ள அரிசன நலத்துறை பள்ளிக் கட்டிடம்

*வின எண். 666 திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் உள்ள சு. பாபம்பாடி அரிசன நல இரொகா பாடசாலைக் கட்டிடம் பழுது அடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, அமைச்சர் அவர்கள் இக்கேள்விக்கு இடம் இல்லை என்று கூறினார்கள். ஆனால், அந்த சு. பாபம்பாடி கிராமத்தில் உள்ள அந்தப் பள்ளியின் கூரைக் கட்டிடம், மண் சுவர் இடிந்து விழுகின்ற நிலையிலே இருக்கிறது. தற்போது அங்கே உள்ள குழந்தைகள் மரத்தடியிலே அமர்ந்து படித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைக் கேட்கவிரும்புகிறேங்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, என்னிடம் உள்ள தகவல்படி திருவண்ணாமலை வட்டம் சு. பாபம்பாடி ஒராசிரியர் பள்ளி, அவ்வூர் கிராம மக்களால் கட்டிக் கொடுக்கப்பட்டு, அந்தத் தனியார் கூரையில் அந்தப் பள்ளி இயங்கி வந்தது. அந்தக் கட்டிடம் பழுதுபட்டதால், இத்துறை 4,975 ருபாய்கள் செலவில் வேறு புதிய கூரை கட்டிடத்தை 16. 3. 1980 அன்று கட்டி முடிக்கப்பட்டு மேற்கண்ட பள்ளிக்கூடம் நல்ல முறையிலே, அந்தப் புதிய கட்டிடத்திலே இயங்கி வருகிறது.



1981 ஏப்ரல் 10]

[முற்பகல் 10.10]

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 16-3-1980 அன்று புதிய பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டு, அதில் அந்தப் பள்ளி நல்ல முறையில் இயங்கி வருகிறது என்று கூறினார்கள். மரத்தடியில் அந்தப் பள்ளி நடந்து வருகிறது என்று நான் குறிப்பிட்டேன். அந்தப் புதிய கூரைக் கட்டிடத்திற்கு பதிலாக, ஆதிதிராவிட நலத் துறை மூலமாக நடத்தப் பெறும் அந்தப் பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

அரிசனங்களுக்கு ஆதி திராவிடர்சள்' என்று பெயர் மாற்றம்

* வினா எண். 667 திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடையளிப்பாரா;

(அ) தமிழக அரசு உத்திரவுப்படி ஆதிதிராவிடர்கள் என்ற பெயர் மாற்றம் குறித்து அச்சமூக மக்களிடமிருந்து ஆட்சேபனைகள் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் பெயர் மாற்றம் குறித்து அரசு மறு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :— அ) ஆம்

ஆ) இம் மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதித் திராவிடர் என்ற சொல் அந்தச் சமுக மக்களிடையே உள்ள ஒரு பிரிவினரைத்தான் குறிக்கிறது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோர் ஜாதிப் பட்டியலில் இருக்கின்ற பிரிவுகளில் 'ஆதித்திராவிடர்' என்கிற ஒரு இனம் இருக்கிறது. ஆனால் தற்போது அரசு ஆதித்திராவிடர் என்று பன்மையில் அனைத்துப் பிரிவினரையும் இணைக்கும் வகையில் தான் அமைத்து இருக்கிறது.

திரு. ஜி. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆதித் திராவிடர் என்ற பெயருக்கு எதிர்ப்புகள் வந்து இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்துப் பரிசீலிப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். தயவு செய்து, அது குறித்து பரிசீலிக்க வேண்டாம். இந்த ஆதித் திராவிடர் என்ற பெயரையே வைத்துக்கொள்ள அரசு கண்டிப்பாக முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல ஆலோசனை.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு : —[ஓர் உரையில் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### அ. கேள்விகள் கட்சிவாரியாக எடுத்துக் கொள்வது

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய கேள்விப் பட்டியலில் 20 கேள்விகள் இடம் பெற்றுள்ளன. நான் திரும்பத் திரும்பப் பார்த்தேன். எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் கொடுத்துள்ள கேள்விகளில் ஒன்றாவது இடம் பெற்று இருக்கிறதா, அனுமதிக்கப் பட்டு இருக்கிறதா என்று. ஆனால் ஒன்றும் இல்லை. ஆனால் போனால் போகட்டும் பாவம் என்று நேற்றைக்கு முன்தினம் திருமதி இராஜாம்பாள் கொடுத்த கேள்வி ஒன்று இடம் பெற்றுள்ளது. நான் இன்னும் சொல்வேன். இந்த மன்றத்தில் வருகின்ற செவ்வாய்க் கிழமை அன்று எடுத்துக்கொள்ளப் படவிருக்கிற வினாப் பட்டியலையும் பார்த்தேன். அதிலேயும் ஒரு கேள்வி கூட இடம்பெறவில்லை. திரும்பத் திரும்ப ஒரு சிலர் கேட்டுள்ள கேள்விகளே இதில் இடம் பெறுவதால், நாங்கள் எங்களுடைய பணியை இங்கே சரிவர நிறைவேற்ற வில்லையோ என்கிற ஐயப்பாடு மக்களுக்கு எழக்கூடும். எங்களுடைய கேள்விகள் இந்தக் கேள்விப் பட்டியலில் இடம் பெறுவதற்கு நாங்கள் என்னதான் செய்யவேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்; தினந்தோறும் எப்படியாவது 3 துணை வினாக்கள் கேட்க மாண்புமிகு உறுப்பினர் வாய்ப்புப் பெற்று விடுகிறார்கள். கட்சி சார்பில் இங்கே கேள்விகள் அனுமதிக்கப்படுவது இல்லை. உறுப்பினர்கள் கேட்ட கேள்விகள் துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன. துறைகளில் இருந்து விடைகள் வரப்பெற்றுள்ள வினாக்கள் இங்கே முறைப்படி எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ளது போல், திருமதி இராஜாம்பாள் எழுப்பிய



(பேரவைத் தலைவர்)

கேள்வி பட்டியலில் இடம்பெற்றுள்ளது. அந்த அம்மையார் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்று எண்ணுகிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் கட்சியைப் பற்றிக் குறிப்பிட்டதால் இதைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கேள்விகள் அனுமதிப்பதில் எந்தவிதமான பாரபட்சமும் காட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஆ. அரசாங்க விழாக்களில் தொகுதி உறுப்பினர் கலந்து கொள்வது.

*திருமதி. தா. இராசாம்பாள் : மாண்புமிகு தலைவரவர்களே, அரசு விழாக்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்கள் கலந்து கொள்ள வாய்ப்பு இல்லாமல் அழைப்பிதழில் பெயர் சேர்க்கப்படாமல் விடப்பட்டு இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே அண்மையில் ஒரு விழாவில் என்னுடைய பெயர் விடுபட்டதால் சம்பந்தப்பட்ட அமைச்சருடைய கவனத்திற்கு நான் முன்னதாகவே கொண்டு வந்திருந்தும் அந்த அமைச்சர் விழாவிலே கலந்து கொண்டுள்ளார், எனக்கு அழைப்பு இல்லை. இப்படி பல நிகழ்ச்சிகள் என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல; பல்வேறு தொகுதிகளில் நடைபெறுகின்றன,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை அரசுக்கு நீங்கள் எழுதி அனுப்பி, பதில் பெற்றுக்கொள்ளலாம். (கூச்சல், குழப்பம்) மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசக் கூடாது. இங்கே கோபப்படவும் கூடாது. எல்லோரும் உட்காருங்கள்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: ஆளுங்கட்சி உறுப்பினர் பேசக் கூடாதா?

THIRU T. VENKATA REDDY: Whenever the opposition members speak. it has become the practice to obstruct them.

MR. SPEAKER: What is the point This is not connected with you.

திருமதி தா. இராசாம்பாள்; தற்போது என்னுடைய தொகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் என் பெயர் விடப்பட்டிருக்கிறது என்று தெரிந்து. நான் முன்கூட்டியே அமைச்சருக்கு ஆள் மூலம் தகவல் தெரிவித்தும், எனக்கு அழைப்பு வரவில்லை, அமைச்சர் கலந்துகொண்டார். மேலும் இந்த மாதிரியான அரசு விழாக்களை நடத்தும் அதிகாரிகள் தங்களுடைய சம்பளத்திலிருந்து அதற்கான தொகையை செலவழிக்கிறார்களா அல்லது அரசு அதற்கான தொகையைக் கொடுக்கிறதா என்பதை அமைச்சர் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் இப்படி நடை-

(திருமதி. தா. இராசாம்பாள்)

பெற்ற தவறுக்கு மன்னிப்புக்கோரவேண்டுமென்று சொல்வது அவ்வளவு பொருத்தமில்லாவிட்டாலும், தவறுக்கு தகுந்த தண்டனை அளிப்பதுடன் மேலும் இத்தகைய தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ளத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தற்போது என்னிடத்தில் அது சம்பந்தமாக எந்த விவரங்களும் இல்லை. ஆனாலும் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். அரசு நடத்துகின்ற நிகழ்ச்சிகளில் அந்தந்த தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரை அழைக்க வேண்டுமென்ற மரபை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் மற்ற அமைப்புகள், நடத்துகின்ற நிகழ்ச்சிகள் இருக்கின்றன. சில சேவா சங்கங்கள், மற்ற பல அமைப்புகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட அமைப்புகள் நடத்துகின்ற நிகழ்ச்சிகளில், அவர்கள் யார் யாரை வரவேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்களை அழைக்க முழு உரிமை இருக்கிறது. அதை நாம் புறக்கணித்து விட முடியாது. ஆனால் அரசு செலவிலே அரசாங்கம் நடத்துகின்ற நிகழ்ச்சிகளுக்கு சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களைக் கட்டாயம் அழைக்க வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அரசு நடத்துகின்ற விழாவிற்குச் சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினரை அழைப்பது சரிதான் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். போஸ்ட் ஆபீஸ், இரயில்வே ஸ்டேஷன் போன்றவற்றைத் திறக்கின்ற விழாக்களுக்குச் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரை அழைப்பதற்கு அல்லது அமைச்சரை அழைப்பதற்குரிய மரபை மத்திய அரசு கடைப்பிடிக்கின்றதா?

[பதில் இல்லை]

இ, உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, தேர்தல் அறிக்கையில் காவல் துறையினர் போராட்டம் நடத்தலாம் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லியிருப்பதாக ஒரு தவறான தகவலைத் தந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள்மீது நான் ஒரு உரிமை மீறல் பிரச்சனை தந்துள்ளேன்......

திரு. அ. ரகுமான்கான்: சார், நான் ரெடி, இப்போது எடுத்துக்கொள்ளலாம். நான் தயாராக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மி. வின்சென்ட் அவர்கள் கொடுத்த பிரச்சனை பற்றி திரு. ரகுமான்கான் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பதில் வரட்டும். வந்த பின் எடுத்துக்கொள்கிறேன்.



திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே. நோட்டீஸ் வந்திருக்கிறது. நான் தயாராக இருக்கிறேன். இப்போதே எடுத்துக்கொள்ளலாம்.

[முற்பகல் 10.20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு.ரகுமான்கான் அவர்கள் தனது பதிலை எனக்கு எழுதி அனுப்ப வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த உரிமை மீறல் பிரச்சினை பற்றி எனக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நான் இப்போது தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய பதிலை எனக்கு எழுதி அனுப்ப வேண்டும். அதற்குப் பிறகுதான் அதை எடுத்துக்கொள்வது பற்றி நான் முடிவு செய்வேன்.

திரு. அ ரகுமான்கான்: தலைவரவர்களே. அப்படிப் பதில் அனுப்பவேண்டும் என்று பிரிவிலேஜ் ரூலிலே எங்கே இருக்கின்றது விதி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்து நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்களே தயார் என்று சொல்கிறார். ஆகவே ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் அதற்குரிய பதிலை எனக்கு எழுதி அனுப்பிய பிறகுதான் நான் அது குறித்து முடிவு செய்யவேண்டுமே தவிர இங்கே உறுப்பினர்கள் திடீரென்று எழுந்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்றால் அவ்வாறு எடுத்துக்கொள்ள இயலாது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரிவிலேஜ் சம்பந்தமாக அனுப்பப்பட்ட நோட்டீசுக்கு நான் பதில் அனுப்பவேண்டுமா என்று கேட்டார்கள். ஆனால் அப்படி அனுப்பப்பட்டதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட உறுப்பினர் அதற்குரிய பதிலை அனுப்பியதற்குப் பிறகு அதிலே உரிமை மீறல் இருக்கிறதா, இல்லையா என்று பார்க்க வேண்டியது தாங்கள். அப்படிப்பார்த்து அதை எடுத்துக்கொள்வதாக இருந்தால் எடுத்துக் கொள்ளலாம், இல்லை என்றால் நிராகரித்து விடலாம்.

திரு. அ. ரகுமான்கான்: ஏற்கெனவே பல்வேறு உரிமைப் பிரச்சினைகள் கொடுத்திருக்கிறோம். அதற்கெல்லாம் பதில் கொடுத்தா இருக்கிறார்கள்.?

திரு. ந. சுந்தரராஜ்; தலைவரவர்களே, நேற்றையதினம் பத்திரிகையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே பாம் வைக்கப்பட்டு இருப்பதாகச் செய்தி வந்தது. அது சம்பந்தமாக ஒரு முழு அறிக்கையை இந்த அவையிலே தாக்கல் செய்வதற்கு அரசு தயாராக இருக்கின்றதா?

[பதில் இல்லை]

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### பள்ளிக் கட்டிட நிதி கொடுக்க இயலாத குழந்தைகளை தேர்வு எழுத அனுமதிக்காதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் குமரி அனந்தன், ப. தீர்த்தராமன், எஸ்.என். இராமசாமி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் சென்னை நகர் பள்ளிகளில் கட்டிட நிதி கொடுக்க இயலாத பெற்றோரின் குழந்தைகளைத் தேர்வு எழுத அனுமதி மறுப்பது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்னும் தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கேட்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களுள் ஒருவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் மிகச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம் என்று விடுதலை பெறுவதற்கு முன்பே பாரதி பாடினான். விடுதலை பெற்ற பாரதம் 12 வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி கொடுக்கவேண்டும் என்று அரசியல் அமைப்பில் வழிகாட்டு விதியில் குறிப்பிட்டிருக்கின்றது. ஆனால், நமது அருமை மிக்க கல்வியிற் சிறந்த தமிழ்நாட்டில் உள்ள சென்னை நகரத்தில் சில பள்ளிக்கூடங்களில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியை இங்கே விவாதிப்பதற்காகக் காரணங்களை உங்கள் முன்னால் எடுத்து வைக்க இருக்கிறேன். குழந்தைகளைப் பள்ளியிலே சேர்ப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதிலே முக்கியமானது, உயிர்நாடியானது அவர்களுக்கு அறிவு புகட்டவேண்டும் என்பதற்காக இருந்தாலும் அவர்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பள்ளிகள் குடியிருக்கின்ற இடத்திற்கு அருகாமையில் இருக்கின்றதா என்று பார்த்துத்தான் பெற்றோர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

அந்தப் பள்ளிக் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களிலே சேர்ப்பதற்கு, பெற்றோர்கள் படுகின்ற பாடு கொஞ்சநஞ்சம் அன்று. ஆனால் அதிலும் சில பள்ளிக்கூடங்களில் பிள்ளையைச் சேர்ப்பதற்கு இடம் கிடைக்காமல் பெற்றோர்கள் படுகின்ற பாடு 'தாளம் படுமோ, தறி படுமோ, யார் படுவார்கள்' என்று சொல்கிற நிலமையில் இருக்கிறது. அப்படி மிகுந்த சிரமங்களிடையே பள்ளியில் சேர்த்து விட்டாலு

(மணியடிக்கப்பெற்றது)





மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் பேசும்போது மற்ற உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும். பேச வேண்டுமென்றால் வெளியில் சென்று பேசிவிட்டு வரலாம்.

திரு. குமரி அனந்தன்: பேரவைத் தலைவரவர்களே, அப்படி மிகுந்த சிரமத்தோடு பள்ளிப் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களில் பெற்றோர்கள் சேர்க்கிறார்கள். அவர்கள் கேட்கிற சம்பளத்தைக் கட்டிவிடுகிறார்கள். காரணம் வீட்டுக்கு அருகாமையில் இருக்கிற பள்ளியாக இருந்தால், பலவற்றாலும் வசதியாய் இருக்கும் என்ற காரணத்திற்காக. சின்னஞ்சிறு பிஞ்சு குழந்தைகளை, தொலை தூரத்திற்கு அனுப்ப மனம் இல்லாத தாய்மார்கள், அண்மையில் இருந்தால் நல்லது என்று கருதி, அவர்கள் கேட்கிற அதிகமான சம்பளத்தைக் கூட கட்டி பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள். அப்படி படிக்க வைத்தும் கூட, அண்மையில் ஏற்பட்டிருக்கும்படியான சில சம்பவங்களில் ஒரு சம்பவத்தை நான் இந்த மாண்புமிகு பேரவையின் தலைவராகிய உங்களுக்கும், தொடர்புடைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன்;

ஒரு நாள் பள்ளியிலே 4-வது வகுப்பிலே படிக்கின்ற ஒரு சிறுவன் தாய் தந்தையிடத்திலே வந்து கட்டிடம் கட்டுவதற்காக 200 ரூபாய் வேண்டும் என்று கேட்கிறான். அதற்காக நாடகம் நடத்தப் போகிறார்கள் என்றும் சொல்கிறான். நாடகத்தைப் பார்க்க நேரம் இல்லாத தந்தை, அல்லது நாடகத்திற்கு அவ்வளவு பணம் கொடுக்க முடியாத தந்தை, வேண்டாம் நாடகம் எல்லாம், நாம் அதைப் பார்ப்பதற்கு இல்லை என்று சொல்லி அவர்கள் முடித்து விடுகிறார்கள்.

ஆனால் நாடகம் அத்தோடு முடியவில்லை. அந்தப் பையனுடைய வாழ்விலே அவனுடைய வளர்ச்சியைப் பாதிக்கும் நாடகம் அப்போதுதான் தொடங்குகிறது. சிறுவன் பள்ளிக்குச் செல்கிறான். வகுப்பிலே ஆசிரியர் பணம் கொண்டு வராதவர்களை எழுந்து நிற்கச் சொல்கிறார். கட்டிட நிதி 200 ரூபாயைக் கட்டாயம் கொண்டு வர வேண்டும் என்று கண்டிப்புடன் ஆசிரியர் சொல்லி அனுப்புகிறார். அந்தச் சிறுவன் வீட்டிற்கு வந்து தாயிடம் பணம் கேட்கிறான், தந்தை பணம் கொடுக்கவில்லை, அதனால் தாயிடமும் பணம் இல்லை, நாம்தான் நாடகம் பார்க்கப்போவதில்லையே எதற்காக பணம் என்று எதை, எதையோ சொல்லி அப்போதைக்கு அனுப்பி விடுகிறாள். இப்படி சில நாட்கள் செல்கின்றன.

பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் சிறுவனை எங்கே பணம் என்று கேட்கிறார்; மீண்டும் சிறுவன் தாயிடம் வந்து பணம் கேட்கிறான். செலவுக்கென்று வைத்திருந்த பணத்தில் 50 ரூபாய் எடுத்துக் கொடுத்து பள்ளியில் கொண்டு போய் இதைக் கட்டிட நிதி என்று சொல்லிக் கட்டிவிடு என்று கொடுக்கிறாள், தாய். அத்தோடு தீர்ந்துவிட்டதாக நினைக்கிறாள். ஆனால்,

பள்ளிக்குச் சென்றால், பாடம் சொல்லி வைக்க வேண்டிய ஆசிரியர் தடித்த குரலில் எங்கே மீதி பணம் 150 ரூபாய் என்று கேட்கிறார். அந்த 150 ரூபாய் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால், நீ பரிட்சையிலே தேற முடியாது என்பது மட்டும் அல்ல, பரீட்சையே எழுத முடியாது என்று சொல்வதோடு அல்லாமல், அப்படி ஒரு கடிதத்தையே எழுதி பெற்றோர்களுக்குக் கொடுத்து அனுப்புகிறார், உடனடியாகப் பணம் கட்ட வேண்டும் என்று.

நான் இங்கே குறிப்பிடுவது, அந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளுடைய எல்லா பெற்றோர்களும், மூன்று மாதத்திற்கு ஒரு முறை 200 ரூபாய் அங்கே சம்பளமாக தங்களுடைய பிள்ளைகளுக்குக் கட்டுகிறார்கள். அப்படிச் சம்பளமாக 200 ரூபாய் கட்டிய பின்னரும் கூட, கட்டிட நிதியாக 200 ரூபாய் கட்டவில்லை என்றால், பரிட்சையே எழுத முடியாது என்று உத்தரவு போடுவதோடு அல்லாமல் அதை ஆசிரியர் எழுத்து மூலமாக கடிதமாக எழுதி அனுப்புகிறார் என்றால் என்ன செய்வது என்று கேட்க விரும்புகிறேன், இலவசக் கல்வி முறையை தமிழ்நாடு அரசு கொண்டு வரவில்லையா? 4 வது வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் ஒரு சிறுவனுக்கே இத்தகைய தொல்லைகள் வந்தால் என்ன செய்வது?

அச்சம் தவிர் என்று சொல்லி கேட்டிருக்கிறோம். அந்தக் குழந்தைகளுக்கு சொல்லியும் வருகிறோம். ஆனால் அந்தச் சிறுவனுக்கு வீட்டிற்கு வந்து தந்தையிடம் பணம் கேட்பதற்கு பயம். பள்ளிக்குச் சென்று, ஆசிரியரிடம் பணம் இல்லை என்று சொல்வதற்கு பயம். ஒரு புறம் பெற்றோர், ஒரு புறம் ஆசிரியர். இந்த இரண்டு கடவுள்களுக்கும் இடையிலே நின்று கொண்டு அந்தச் சிறுவன் தவியாய் தவித்துக் கொண்டிருக்கிறான்.

200 ரூபாய் கட்டிட நிதி கொடுக்கவில்லை என்று சொன்னால் தேர்வே எழுத அனுமதிக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். அந்த வகையில் என்ன நடக்கிறது என்று பார்த்தால், எம். ஏ., படித்து விட்டு செகண்டரி கிரேட் டீச்சர் பயிற்சி பெற்றிருந்தாலும் கூட ஆசிரியர்களுக்கு இதுபோன்ற பள்ளிகளில் 200 ரூபாய் தான் சம்பளம் கொடுக்கிறார்கள். அதுவும் எப்படி? இதுபோன்ற நாடக நிகழ்ச்சி என்று வைத்து 3,000 ரூபாய் நிகழ்ச்சிக்காக வசூல் செய்து விட்டு, அதிலிருந்து ஒரு வருட சம்பளம் அந்த ஆசிரியருக்கு 2,400 போக அதிலும் 600 ரூபாயை பள்ளிக்கூடம் நடத்துபவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள் பெரும் அளவில் சம்பளத்தைப் பெற்றோர்களிடமிருந்து மாதாமாதம் வாங்கி விட்டு, கட்டிட நிதி கொடுக்கவில்லை என்றால் அந்தக் குழந்தைகளை பரீட்சை எழுத அனுமதிக்க மாட்டோம் என்று சொன்னால், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கும் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.



(முற்பகல் 10.30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குமரி அனந்தன், நீண்ட விவாதமாகப் போய்விடுகிறது, சீக்கிரம் முடியுங்கள்.

திரு. குமரி அனந்தன். : நான் பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எத்தனையோ பெற்றோர்கள் இன்றிருக்கின்ற நிலைமையை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். பஞ்சம் குடியேறிய வயிறும், மஞ்சள் நிறமேறிய தாலிக் கயிறும் இருந்து கொண்டிருக்கின்ற தாய்மார்கள் உடனடியாக 200 ரூபாய் எப்படிக் கட்ட முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் தமிழ் மண்ணிலே இருந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பள்ளிக்கூடங்களிலே இருக்கின்ற நிர்வாகிகள் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்களாம். நாங்கள் மத்தியிலே இருக்கின்ற கல்விக் குழுவின் அதிகாரத்தின்கீழ் இருக்கிறோம். இங்கே இருக்கின்றவர்கள் எங்களை எதுவும் செய்துவிட முடியாது. நாங்கள் என்ன கிராண்டு வாங்குகிறோமா, நாங்கள் எயிட் வாங்குகிறோமா, என்று பேசிக் கொண்டிருக்கிறார்களாம். ஆனால், நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், ஆசிரியர்களுக்கு குறைந்த சம்பளத்தை கொடுப்பதும், நினைத்த நேரத்திலே ஆசிரியர்களை வெளியேற்றுவதும், பள்ளிப் பிள்ளைகளை கட்டிட நிதி தரவில்லை என்று சொன்னால், தேர்வுக்கு அமர்த்த மாட்டோம் என்று சொல்வதும் நியாயமா, அவர்களைத் தட்டிக் கேட்பதற்கு வழியில்லையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றப் பள்ளிக்கூடங்களிலே ஒரு ஆண்டிற்கு டிபுடி இன்ஸ்பெக்டர்கள் என்று சொல்லக்கூடிய துணை ஆய்வாளர்கள் தணிக்கை செய்வதற்கு 3 முறைகள் அங்கே வருகிறார்கள். தவிர சர்பிரைஸ் விசிட் என்று வேறு வருகிறார்கள். ஆனுவல் இன்ஸ்பெக்ஷனுக்கும் வருகிறார்கள். இந்தக் கட்டுப்பாட்டிற் கெல்லாம் உட்படாமல் இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் இருந்து கொண்டிருக்கின்றனவே, இவைகளையெல்லாம் கண்காணிப்பதற்கு என்று ரீஜனல் ஆபிசர் ஒருவரைப் போட்டிருக்கிறோமே, என்ன நடவடிக்கையை அரசாங்கம் இதுவரை எடுத்திருக்கிறது. இந்தப் பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கு நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்டை நம்முடைய டி.பி.ஐ. தான் கொடுக்கிறார்கள். "நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்டை" நாம் கொடுத்துவிட்டு, நமக்கு எத்தவிதமான கண்காணிப்பும் இல்லையென்று சொன்னால், நமது நாட்டிலிருக்கின்ற, தமிழ் நாட்டில் இருக்கின்ற குழந்தைகளின் வருங்காலம் பாதிக்கப்படாதா? நான் ஒரு குறிப்பிட்ட குழந்தையைச் சொல்லவில்லை. எத்தனையோ குழந்தைகளிலே, இந்தக் குறிப்பிட்டக் குழந்தையும் ஒன்றாக இருக்கக்கூடும். அந்தக் குழந்தைப் படிக்கிறதா, படிக்கவில்லையா என்பது வேறு பிரச்னை. அந்தக் குழந்தையை விரோத மனப்பான்மையோடு ஆசிரியர்கள் பார்ப்பார்கள் என்பது வேறு பிரச்னை. ஆனால்

இப்படிப்பட்ட எந்தவிதமான கண்காணிப்பிற்கும் உட்படாமல் இருக்கின்ற அந்தப் பள்ளிக் கூடங்களை கண்காணிப்பதற்குரிய நடைமுறைகளை வகுத்து, மத்திய அரசாங்கத்திற்கு அரசாங்கம் எழுதுமா? இல்லையென்று சொன்னால், கண்காணிக்கின்ற வகையில் ஒரு நான்அபிஷியல் பாடியை அதிகாரப்பூர்வமற்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்து, இவர்களை மேற்பார்வையிடுவதற்குரிய அதிகாரத்தை அல்லது ஆலோசனையாவது கொடுக்க இந்த அரசாங்கம் செய்யுமா என்று நான் பணிவோடு கேட்டு, இந்தமாதிரி காரியங்களுக்குப் பள்ளிப்பிள்ளைகள் படிப்பதற்கு வழியில்லாத சூழ்நிலையில், உருவாக்குவதற்கான, படிக்க முடியாமல் இருக்கின்ற குழந்தைகள், அவைகள் படிக்க வேண்டுமென்ற ஒரு சித்தாந்த நிலை இந்த நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் வியாபார நோக்கத்தோடு நடந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னால் இவைகளையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்குரிய வழிவகைகளைக் காணவேண்டுமென்பதற்காக, ஆராய்வதற்காக இந்த அவையை இந்த அவையின் நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** பேரவைத் தலைவர் அவர்களே. இந்தப் பள்ளிக்கூடங்களிலே கட்டிட நிதி கொடுக்காவிட்டால், பள்ளிக்கூடத்திலே ஹால் டிக்கட் மாத்திரமல்ல; ஏற்கனவே படித்துக் கொண்டிருக்கின்ற கிளாசுக்குக் கூட வரக்கூடாது. இன்னும் பணம் கொடுக்காவிட்டால் பள்ளிகூடத்திற்கே வரக்கூடாது என்று வற்புறுத்துகிறார்கள். விழாக்கள் நடத்துவது, அது எந்த விழாவாக இருந்தாலும், அதற்குப் பணம் கொடுக்க வேண்டுமென்றும், கொடுக்காத பிள்ளைகளை அனுமதிக்க மாட்டோம் என்றும் சொல்கிறார்கள். ஆனால், அந்த மானேஜ்மென்ட் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கு அரசாங்கத்திலே இருந்து பணம் கொடுக்கிறார்கள். அப்படிப் பெற்றுக்கொண்டு பிள்ளைகளுடைய நலனைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, விழா நிதி, கட்டிட நிதி போன்றவற்றிற்குப் பணம் கொடுக்காவிட்டால், பள்ளிக்கு வரக்கூடாது என்று சொல்லிப் பிள்ளைகளுடைய படிப்பைக் கெடுக்கின்றார்கள். இப்படிப்பட்ட புகார்களை எல்லாம் தடுத்து நிறுத்தும் முறையில், ஒரு சர்வக் கட்சிக் கமிட்டி அமைத்து, அதைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் நமக்கு இருக்கிறது. பிள்ளைகளுடைய கல்வி பாதிக்கப்படுகின்ற நிலை இருப்பதால், அதைப்பற்றி விரிவாக விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளைப் பற்றி இவ்விதமான குற்றச்சாட்டுகள் ஏதும் அரசுக்கு வரவில்லை.

ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள சர். எம். வெங்கடசுப்பாராவ் ஆண்கள் பள்ளி தியாகராயநகரில் இயங்குகிறது. இது தமிழக பள்ளி விதிகளின் கீழ் அங்கீகாரம் பெற்ற பள்ளி அல்ல. இப்பள்ளி டெல்லியில் உள்ள இண்டியன் ஸ்கூல் சர்டிபிகேட் போர்ட் என்ற குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, அக் குழுவால் நடத்தப்படும் இண்டியன் ஸ்கூல் சர்டிபிகேட் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்வதாக அறியப்படுகிறது. இது போன்ற பள்ளிகள் மட்டும் அல்ல, சென்னையிலே செகண்டரி ஸ்கூல் போர்டு என்ற அமைப்பின் பேரில் பல பள்ளிகள் இருந்து கொண்டிருக்கின்றன. எந்தவிதமான அங்கீகாரம் இல்லாத வகையிலும் பல பள்ளிகள் இருந்து கொண்டிருக்கின்றன. எந்தவிதமான அங்கீகாரம் இல்லாத பள்ளிகள் பற்றி முறைப்படுத்துவதற்கு நாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். அதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வர இருக்கிறோம், ஆனால் மத்திய அரசின் அங்கீகாரத்தைப் பெற்றும், அல்லது இங்கே குறிப்பிடப்பட்டுள்ள இந்த 'இண்டியன் ஸ்கூல் சர்டிபிகேட் போர்டு' இதனுடைய தலைவராக திரு. ப்ரேங் அன்டோனி அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்; அந்த அமைப்பினுடைய அங்கீகாரத்தைப் பெற்றும் நடக்கின்ற இந்தப் பள்ளிகளிலே தமிழ்நாடு அரசின் சார்பிலே அதிகாரம் செலுத்துகிற அளவிற்கு நமக்கு வகையில்லை. ஆனால் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இங்கே நடைபெறுகிற எந்தப் பள்ளிக்கூடங்கள் ஆனாலும், தமிழ்நாடு அரசின் சார்பில், கல்வித் துறையின் சார்பிலே அதைச் சென்று பார்வையிடுவதற்கும் கட்டுப்படுத்துவதும் நடைபெறுமானால் அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் தமிழ்நாடு அரசு கல்வித் துறைக்குத் தரப்பட வேண்டுமென்று முயற்சியில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டிருக்கிறது. அப்படி ஒரு அதிகாரத்தைத் தருவார்களேயானால், இவைகளை நாம் கட்டுப்படுத்தலாம். நன்கொடை என்று வருகின்றபொழுது தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளிலே கூட கல்வித்துறையின் அனுமதியைப் பெற்று மாணவர்களிடத்திலே, இதுபோல நிர்ப்பந்தம் வாங்காது, அந்தப் பள்ளிகளிலே இருக்கிற பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் மூலமாக அவர்கள்தான் நன்கொடை வசூல் செய்யவேண்டுமென்று, முறைகளை, கட்டுப்பாடுகளை வைத்திருக்கின்ற காரணத்தால், இப்போது பெருமளவிற்கு இதுபோன்ற புகார்கள் அந்தப் பள்ளிகளிலே வருவதில்லை. அதுமட்டுமல்ல, இங்கே குறிப்பிட வேண்டிய இன்னொன்று, இந்தப் பள்ளிகளில் ஆங்கிலத்தைச் சொல்லித் தருவதை, ஆங்கில மீடியத்தில் பாடங்கள் நடத்துவதுமான ஒரு முறை இருக்கின்றது. சரியாகவோ, தவறாகவோ நம்முடைய பெற்றோர்கள் இந்தப் பள்ளிகளிலே பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டுமென்ற

ஆர்வம் கொண்டுள்ளதால், அவர்கள் அதை பயன்படுத்திக் கொண்டு இப்படிச் சமுதாயத்திலே தவறான வழிகளில் நடக்கிற முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே நாம் இவைகளைத் தவிர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்பாக தமிழ்நாடு அரசிற்குத் தமிழ் நாட்டில் நடைபெறுகின்ற எந்தப் பள்ளிக்கூடமாக இருந்தாலும், கல்வி நிலையமாக இருந்தாலும் அதைச் சென்று பார்வையிடுகிற அளவிற்கு ஒரு அதிகாரத்தை மத்திய அரசு தரவேண்டும். அந்த அதிகாரத்தைப் பெறுவோமேயானால் இந்தக் குறைபாடுகள் எல்லாம் நிச்சயமாக நீக்கிவிடலாம். அது பற்றி நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்பதை அறிவித்து, இதற்குப் பிறகு அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டியதில்லை என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்புகள்.

அ. தாம்பரம் அஜந்தா சீட்டுக் கம்பெனியில் பணம் கட்டியவர்கள் நிலை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : "தாம்பரம் அஜந்தா சீட்டுக் கம்பெனியில் பணம் கட்டியுள்ள பொது மக்களிடையே நிலவும் கவலை குறித்து"

திருவாளர்கள்—ப. பொன்னுரங்கம், பம்மல் நல்லதம்பி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ரமணி, ரா. உமாநாத், ஜே. ஹேமச்சந்திரன், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, எம். ஆறுமுகம், மு. அம்பிகாபதி, பொ. விஜயராகவன், கே. எம். தங்கமணி, மு. அப்பாதுரை, ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதைமாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.



திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 54-ன் கீழ், கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை குறித்து முதல் அமைச்சர் அவர்கள் இல்லை என்றாலும், மற்ற அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"தாம்பரம் அஜந்தா சீட்டுக் கம்பெனியில் பணம் கட்டியுள்ள பொது மக்களிடையே நிலவும் கவலை குறித்து"

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாக கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றைப் பேரவை முன் வைக்கிறேன்.

அறிக்கை.

செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை தாம்பரம், சானடோரியம் நெ. 1. இரயில்வே ஸ்டேஷன் சாலையில் "அஜந்தா ப்யூட்டி ஸ்டோர்ஸ்" என்ற பெயருடைய சீட்டுக் கம்பெனி ஒன்றை திரு சின்னத்துரை என்பவர் 20—8—1980 முதல் நடத்தி வந்தார். இக்கம்பெனி தமிழ்நாடு பொது வணிகவரிச் சட்டம் 1959 ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் வீட்டுக்குத் தேவையான எவர்சில்வர் சாமான்கள், இரும்பு நாற்காலிகள், கைக் கெடிகாரங்கள் போன்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. இதன் பொருட்டு இவர் தாம்பரம் சானடோரியம் பகுதியில் நான்கு கிடங்குகளையும் வைத்திருந்தார். இவரது வியாபாரத்திற்கு ராம் நிவாஸ், சத்யம் என்ற இருவரும் மற்றும் 20 நபர்களும் உதவி செய்தனர். இச்சீட்டுக் கம்பெனியில் வாடிக்கையாளர் ஒருவர் ரூபாய் 15–50-க்கு ஒரு சீட்டு வாங்கினால் 30 நாட்களுக்கு பிறகு ரூ. 30/- பெறுமானமுள்ள ஒரு பொருள் வழங்குவது நடைமுறையாக இருந்தது. பின்னர் இத்தொகை ரூ. 16.50 என்றும், இதற்கான கால வரையறை 40 நாட்கள் என்றும் உயர்த்தப்பட்டது. இச்சீட்டு விற்பனை சென்னை நகரத்திலும் அதன் சுற்றுப்புறத்திலுமுள்ள பெரும்பாலான பெண் மக்களது கவனத்தை ஈர்த்தது. சீட்டு வாங்கிய எல்லாருக்கும் குறிப்பிட்ட காலவரையறை முடிந்தவுடன் சீட்டுக்களைத் திரும்பப் பெற்றபின் பொருட்கள் கொடுக்கப்பட்டன. இவ்விற்பனையில் திரு. சின்னத்துரை பொருட்கள் வாங்கி விற்பது போன்றவற்றில் எந்தவிதமான கணக்கு வழக்குகளும் வைத்துக் கொள்ளவில்லை. எனவே இதேமாதிரியாக மற்ற வேறு இரு கோஷ்டியினர் போலி சீட்டுக்கள் அச்சிட்டு பொதுமக்களிடையே வழங்குவதற்கு இம்முறை வழிவகுத்தது. இதனை அறிந்த திரு சின்னத்துரை, குரோம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு பின் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

இதன் பிறகு 17—3—1981, 13—3—1981 ஆகிய தினங்களில் தாம்பரம் வணிகவரித்துறை அதிகாரியும், அவரைச் சார்ந்தவர்களும், திரு. சின்னத்துரைக்குச் சொந்தமான "அஜந்தா ப்யூட்டி ஸ்டோர்ஸ்" பார்வையிட்டு பலவித ரெகார்டுகளை கைப்பற்றி

உள்ளனர். மேலும் அக்கடையில் மொத்த விற்பனை ரூ. 5 லட்சம் என்று மதிப்பிட்டனர். இதனால் பெரும் அதிர்ச்சி அடைந்த திரு. சின்னத்துரை 19—3—1981 அன்று வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய பொருட்களைக் கொடுக்காமல் அவரும் அவருடன் பணியாற்றியவர்களும் கடையிலிருந்து வெளியேறிவிட்டனர். கடையின் சொந்தக்காரர் தலைமறைவாகிவிட்டார் என்ற வதந்தி மக்களிடையே பரவியது. இதனால் சீட்டுகள் வாங்கியவர்களும், மற்றும் தாம்பரம் சானடோரியத்தைச் சேர்ந்த சிலரும் ஒன்று சேர்ந்து 19—3—1981 அன்று விடியற்காலை சுமார் 2.00 மணியிலிருந்து 6.00 மணிக்குள் அச்சீட்டுக் கம்பெனிக்குச் சொந்தமான கிடங்குகளை வலுக்கட்டாயமாக திறந்து சுமார் 3 லட்சம் மதிப்புள்ள பாத்திரங்கள், இரும்பு நாற்காலிகள் போன்ற பல பொருட்களைக் கடத்திச் சென்றுவிட்டனர். இச் சம்பவம் குறித்து அன்று காலை சுமார் 8.00 மணிக்கு திரு. சின்னத்துரை குரோம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். கடத்தப்பட்ட பொருட்களில் 90 சதவிகிதம் பொருட்கள் பல்லாவரம் வட்ட காவல்துறை ஆய்வாளர் உள்ளூர்வாசிகளின் உதவியுடன் கைப்பற்றினார். இதன் தொடர்பாக வரதன் என்பவரும் மற்றும் 34 பேரும் கைது செய்யப்பட்டு பின்னர் முதற் குற்ற நன்னடத்தைச் சட்டத்தின் கீழ் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

3. இதன்பின் 23—3—81 அன்று தாம்பரம் வணிகவரி அதிகாரி அச்சீட்டுக் கம்பெனியிலிருந்து வரி பாக்கி செலுத்தாமைக்காக ரூ 4,03,979 மதிப்புள்ள எல்லா பொருட்களையும் காவல் துறையினரின் பாதுகாப்புடன் கைப்பற்றி உள்ளனர். 25—3—1981 அன்று அச்சீட்டுக் கம்பெனியின் பெண் வாடிக்கையாளர்கள் காலை 8.00 மணியிலிருந்து குரோம்பேட்டைக் காவல் நிலையத்தின் முன்கூடி தாங்கள் வாங்கிய டிக்கெட்டுக்கான பொருட்களைத் தர வேண்டும் என்று கோரினர். சிறிது சிறிதாக இக்கூட்டம் ஆயிரத்துக்கும் மேலாக மாறி குரோம்பேட்டை ஜி. எஸ். டி. சாலையில் வாகனப் போக்குவரத்திற்குத் தடை செய்தது. செய்தி அறிந்த உடன் செங்கை மாவட்ட காவல்துறை அதிகாரி அவ்விடத்திற்கு விரைந்து சென்று குற்ற வழக்கு ஒன்று, சீட்டுக் கம்பெனிச் சொந்தக்காரருக்கு எதிராக நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும், சுமார் இரண்டு லட்சம் மதிப்புள்ள பாத்திரங்களும் உடைமைகளும் விற்பனை வரித் துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அக்கூட்டத்தினரிடையே எடுத்துக் கூறினார். ஆனால் இம்முறையீட்டினை அக்கூட்டத்தினர் செவி சாய்க்காமல் தொடர்ந்து போக்குவரத்தை தடை செய்தனர். எனவே கூட்டத்தினர் கலைந்து செல்லும்படி எச்சரிக்கப்பட்டனர். பின்னர் இக்கூட்டத்தில் 50 சதவிகிதத்தினர் தங்களுடைய உடைமைகளைத் திரும்பப்பெற நீதிமன்றத்தில் மனு செய்து கொள்வதின் பொருட்டு தங்களுடைய பெயர்களையும் மற்ற விபரங்களையும் கொடுத்து விட்டு கலைந்து



சென்றனர். மற்ற சுமார் 100 பெண்கள் உட்பட்ட 500 பேர்கள் தொடர்ந்து போக்குவரத்துக்குத் தீங்கிழைத்தனர். மேலும் இக்கூட்டத்தினரிடையே இருந்த ஆண்கள், காவல்துறையினர் மீதும், காவல் நிலையத்தின் மீதும் கற்களை வீசினர். இதன் விளைவாக தாசில்தாரது வேனின் மேற்பகுதிக்கு சேதம் ஏற்பட்டதுடன் உதவிக் கண்காணிப்பாளருக்குக் காயமும் ஏற்பட்டது. பின்னர் கூட்டத்தினரிடையே உள்ள பெண்கள் எச்சரிக்கை விடுத்த பின் தனியே பிரிக்கப்பட்டனர். செங்கல்பட்டு மாவட்ட காவல்துறை அதிகாரி கற்களை வீசித் தீங்கிழைத்த கட்டுக்கடங்காத கும்பலை விரட்டினார். போக்குவரத்திற்கு இடையூறு செய்தும், காவல் துறையினரைத் தாக்கியும் தீங்கிழைத்தவர்களில் 7 ஆண்களையும் இச்சம்பவத்திற்கு முக்கிய காரணமாக இருந்த பெண்கள் மூவரையும் காவல் துறையினர் துரத்திக் கைது செய்தனர். கூட்டத்தில் உள்ள மற்ற பெண்கள் கூட்டத்தினரிடையே கற்கள் வீசப்பட்டதைக் கண்டவுடன் கலைந்து சென்றனர். இதன் தொடர்பாக குரோம்பேட்டைக் காவல் நிலையத்தில் குற்ற எண் 272/81ல் இ. பி. கோ. பிரிவு 147, 336, 353, 427ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது. 'அஜந்தா ப்யூட்டி ஸ்டோர்ஸ்' சொந்தக்காரர் திரு. சின்னத்துரையும் மற்றும் மூவரும் ஏற்கனவேயே கைது செய்யப்பட்டு 24—3—81 அன்று குரோம்பேட்டை காவல் நிலையக் குற்ற வழக்கு எண். 271/81 படி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கொண்டு விசாரணையிலிருந்து திரு. சின்னத்துரை, வங்கியில் அவரது கணக்கில் ரூபாய் 1,28,235.30 வைத்திருந்ததை வணிக வரித் துறையினரால் நிறுத்தி வைக்கப்பட்டதாக அறியப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட திரு. சின்னத்துரை என்பவர் இதேமாதிரியான வழக்கு ஒன்றில் சில வருடங்களுக்கு முன் திருச்சியில் ஈடுபட்டிருந்ததாகவும் அறியப்பட்டது. எனவே பரங்கிமலை காவல்துறை ஆய்வாளர் அவ்வழக்குகளின் மீது விரைவில் புலன் விசாரணையை முடிக்குமாறு கோரப்பட்டுள்ளார்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாம்பரம் சானடோரியத்திற்குப் பக்கத்திலே அஜந்தா பியூட்டி ஸ்டோர்ஸ் என்ற கடையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஏதோ குறைந்த தொகை செலுத்தினால், குறுகிய காலத்தில் கணிசமான மதிப்புள்ள பொருள்கள் ரேடியோ, ஸ்டில் சாமான்கள், பர்னிச்சர், டி. வி. போன்றவை கொடுக்கப்படும் என்ற பெரும் அளவில் பணம் கட்டி அதில் ஒரு ரூமர், அறிக்கையிலே அப்படித்தான் இருக்கிறது. அதனால் பணம் கட்டியவர்கள் பதட்ட நிலைக்கு ஆளாகி அங்கே சென்று அந்த கட்டிடத்தை கொள்ளை அடித்தார்கள் என்று சொல்லப்படுகிறது. கொள்ளை அடித்தவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-40)

அதுவும் கொள்ளை எப்படி நடந்திருக்கிறது என்றால் நம்முடைய ஆட்சியிலே — எக்ஸ்ட்ரா ஆர்டினரியாக நிர்வாகத்திலே நடக்கிற மாதிரி—இதுவும் எக்ஸ்ட்ரா ஆர்டினரியாக நடந்திருக்கிறது. இந்த அறிக்கையிலேயே சொல்லி இருக்கிறார்கள். விடியற்காலை 2 மணியிலிருந்து 6 மணி வரையிலே கொள்ளை நடந்திருக்கிறது. பக்கத்திலே தான் குரோம்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது, 5 மணி நேரம் கொள்ளை நடந்திருக்கிறது ஆனால் அதுவரையிலே போலீஸ் ஆக்ஷன் எடுக்கவில்லை, கொள்ளை முடிந்தபிறகு, பொருட்களை எடுத்துச் சென்றபிறகு போலீஸ் நடவடிக்கை எடுத்திருக்கிறது. 34, 35 பேர்கள் கைதுசெய்யப் பட்டிருக்கிறார்கள், கைது செய்யப்பட்டவர்கள் சாதாரணக் குற்றவாளிகளாக நடத்தப்படவில்லை போலீஸைப் பொறுத்த வரையில். ஐ.பி.சி. 457 வது செக்ஷன், 380 வது செக்ஷன், 34 வது செக்ஷன்களிலே வழக்குப் போடப்பட்டிருக்கிறது. செக்ஷன் 457 என்றாலே கடுமையான தண்டனை 14 ஆண்டுக் காலம் தண்டனை அளிக்கப் படவேண்டும். அதைப்போலவே 380 வது செக்ஷன் என்றால் 5 ஆண்டுக்காலம் தண்டனை கொடுக்கப் பட வேண்டும். இதுபோன்ற செக்ஷன்களிலே போடக்கூடிய அளவுக்குக் கடுமையான குற்றங்களை அவர்கள் செய்திருக் கிறார்கள். ஆனால் வழக்கு மன்றத்திலே அவர்கள் மன்னித்து விடப்படுகிறார்கள். எனக்குக் கிடைத்த தகவல், அவர்கள் மன்னித்து மட்டும் விடப்படவில்லை, அந்த கடுமையான குற்றங்களைச் செய்தவர்கள் போலீஸ் வண்டியிலே ஏற்றிச் செல்லப்பட்டு அவர்களுடைய இல்லங்களுக்கே கொண்டு விடப் பட்டிருக்கிறார்கள், இந்த ஆட்சியிலே இது எல்லாக் குற்றவாளி களுக்கும் பொருந்துமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் மாதிரிப் பேச முடியாது. ஒன்றிரண்டு கேள்விகள் கேட்கலாம.

திரு. ப. பொன்னுரங்கம் : நேரேட் பண்ணாமல் எப்படிக் கேட்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : அந்த நிறுவனமே அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் தான். கடந்த ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனம். லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருட்களைக் கைப்பற்றி குரோம்பேட்டை போலீஸ் ஸ்டேஷனிலே வைத்திருக் கிறார்கள். பாண்டியன் என்ற இன்ஸ்பெக்டர் மேற்பார்வையிலே கைப்பற்றப்பட்டு இருக்கின்றன. இவைகளையெல்லாம் இந்த அறிக்கையிலேயே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அங்கே பெண்



களும் ஆண்களும் சென்றிருக்கிறார்கள். அனைவரும் விரட்டப் பட்டிருக்கிறார்கள். விரட்டிப் பிடிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறார்கள். யார் தாய்மார்கள். ஒருவர் பெயர் ஜோதிபாய்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதிக்கு மாறாக பேசிக் கொண்டிருக்கிறீர்கள். கேள்வியாக மட்டும் கேட்க வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம் : நம்முடைய புளோரிலே பிரிசிடன்ட் இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி எப்படிக் கேட்கா மலிருக்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கு வேறு முறை யிலே கொண்டுவரவேண்டும். விவாதமாகப் போகக் கூடாது. கேள்வியாகத்தான் இதிலே கேட்க முடியும்.

திரு. ப. பொன்னுரங்கம் : 55 இல் கொடுத்தேன், 54 ஆக மாற்றி இருக்கிறீர்கள். எங்களுடைய தலைவிதி வேறு என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் கேள்வியை முடியுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : குற்றவாளிகளை விடுவித்த போலீசார் மீது கடுமையான நடவடிக்கை—பாண்டியன் என்பவர் தலைமையிலே உள்ள போலீசார்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சில விவரங்களைத் தந்திருக்கிறார்கள். வதந்தியை நம்பி உணர்ச்சி வயப்பட்டு தவறிழைத்த குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டு விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அதிலே குற்றம் காண்பது நல்லதல்ல. மேலும் குறிப்பிட்ட இந்த கொள்ளை யானது மிகவும் எக்ஸ்ட்ரா ஆர்டினரியாக நடந்தது என்றார்கள் அதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. காலிங் அட்டென்ஷன் நோட்டீஸிலே இவ்வளவு எக்ஸ்ட்ரா ஆர்டினரியாக பேசக்கூடிய மாண்புமிகு உறுப்பினரைப் பார்க்கிற போது சமுதாயம் அதற்கு விதிவிலக்கு அல்ல.

திரு. ப. பொன்னுரங்கம் : இன்னொரு குவஸ்டின்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கேள்வியாகக் கேட்கவில்லை.

திரு. கு. ரமணி : துணைத் தலைவரவர்களே, 19 ஆம் தேதியன்று நடந்த அந்தச் சம்பவத்தில் தங்கள் பொருள்களெல்லாம் போய்விட்டன, அந்தக் கடைச் சொந்தக்கார ஆசாமியும் தலைமறைவாகிவிட்டார் என்பதால் ஆத்திரம் கொண்ட ஜனங்கள் கூடியபொழுது எட்டு பேர் கைது செய்யப்பட்டு பின்னர் எச்சரிக்கை செய்து விடப்பட்டிருக்கிறார்கள். 25 ஆம் தேதி பிரமாண்டமான கூட்டம் கூடி தங்களுக்கு விநியோகம் செய்ய வேண்டிய பொருட்களை விநியோகம் செய்யவில்லை என்பதால் தங்களுக்குப் பொருள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். கடைக்காரர் ஏற்கனவே குற்றவாளி என்பது இந்த அறிக்கையிலே இருக்கிறது. இதுபோன்ற குற்றத்தைச் செய்துவிட்டு, அரசாங்கத்தை ஏமாற்றி சுமார் 4 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் வரி கட்டாமல் இருந்திருக்கிறார். இதுபற்றி வரி வசூல் செய்கின்ற துறை என்னதான் செய்து கொண்டிருந்தது ? முன்பே பல சீட்டுக் கம்பெனிகள் உரிமம் பெற்று நடத்தி திவால் ஆகிவிட்டன என்ற பெயரில் மக்களை ஏமாற்றுவது என்பது தொடர்ச்சியாக நடைபெற்றிருக்கிறது. அதிலிருந்து பாதுகாப்பு இல்லை. இந்த ஜனங்கள் 25 ஆம் தேதி வந்ததற்குக் காரணம், மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு கோடவுன்களை உடைத்து எடுத்துச் செல்லப்பட்ட 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட பொருட்கள் திரும்பப் பெறப்பட்டு அது போலீஸ் கையிலே இருக்கிறது. போலீசார் ஏன் அதை வைத்திருக்கிறார்கள்? வரித் துறையினர் கையிலே இருக்கிறது என்று சொல்கிறார்கள் சீட்டுப்போட்ட ஜனங்களுக்கு முதலில் கொடுக்கப்பட வேண்டிய பொருட்களைக் கொடுத்துவிட்டு, சர்க்காருக்கு வர வேண்டிய வரி சம்பந்தமாக பேங்கில் இருக்கின்ற ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பணத்தை சர்க்கார் பறிமுதல் செய்யலாம்; மற்றும் வீடு, தாவர சங்கம சொத்துக்களைப் பறிமுதல் செய்து ஈடுசெய்யலாம். வரிதுறையினர் விட்டுவிட்டதால் இந்த நிலை ஏற்பட்டதை அரசு உணர்ந்து, ஒருபாவமும் அறியாத ஏராளமான பெண்கள் பணம் போட்டு சீட்டு வாங்கியிருக்கிறார்கள்; எனவே, போலீசார் கையிலே வைத்திருக்கும் அந்தச் சொத்துக்களை எடுத்து அந்த ஜனங்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும்: இரண்டாவதாக, ஆத்திரத்தோடு 25 ஆம் தேதி வந்தவர்கள் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருப்பது தவறு. அவர்கள்மேல் இருக்கக்கூடிய கேஸ்களை வாபஸ் வாங்க வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். அந்த நடவடிக்கைகளை அரசு எடுக்க முயற்சிக்குமோ என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, சொத்துக்களைக் கைப்பற்றி, Commercial Tax Officer, Tambaram, அவர்கள் போலீஸ் உதவியுடன், செலுத்த வேண்டிய வரி பாக்கிக்காக கையகப்படுத்தியிருக்கிறார்கள். கட்டண ரசீதுகளைப் பெற்றுக்கின்றவர்களுக்கு இந்தப் பொருட்கள் வழங்கப்பட வேண்டுமென்ற ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். இது மிகவும் விசித்திரமான சம்பவம். ஏனென்றால், அந்த டிக்கட்டுகளுக்கோ, அந்த டிக்கட்டுகளின் முறைக்கோ கணக்கு வழக்கு கிடையாது. போலி டிக்கட்டுகளும் அச்சிடப்பட்டு மற்றவர்களுக்கும் அந்த ரசீதுகளை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, எது உண்மை, எது போலி என்பது பிரச்சினைக்குரியது. போலி டிக்கெட் அச்சடித்தவர்களைக் கைது செய்ய தேடி வருகிறார்கள். இக்கம்பெனி தமிழ்நாடு பொது வணிகவரிச் சட்டம் 1959-ன் கீழ் பதிவு செய்யப்பட்டு செயல்பட ஆரம்பித்திருக்கிறது; 20-8-1980 இலிருந்து நடத்தி வந்தார்கள். உடனடியாகக் கமர்ஷியல் டாக்ஸ் டிபார்ட்மெண்ட், வரி பாக்கிக்காக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள், ஏற்கனவே ஒரு குற்றத்திலே சம்பந்தப்பட்டவர்கள் என்று அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏமாறுகின்றவர்கள் இருக்கின்றவரையில் ஏமாற்றுபவர்கள் இருப்பார்கள் என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது.



திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மார்ச் 25 ஆம் தேதியன்று போலீசார் இந்த ஏமாந்த மக்களுக்கு இந்தப் பொருட்களைத் தருவதாக அறிவித்து அந்த அடிப்படையிலேதான் அந்த போலீஸ் ஸ்டேஷன் முன்னாலே மக்கள் குழுமியிருக்கிறார்கள். இந்த நிலையில் இந்தச் சம்பவம் ஏற்பட்டிருக்கிறது இதிலேயே விவரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது ஆகவே, இந்த ஏமாந்த மக்களுக்கு, உண்மையாகப் பணம் கட்டி ரசீது வைத்திருக்கும் மக்களுக்கு இந்தப் பொருட்களைத் திருப்பிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே நான் ஏற்கனவே சொன்னதைப்போல அரசுக்கு வர வேண்டிய வரி பாக்கிக்காக அந்தச் சொத்துக்களை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய வருமானத்தை நாம் வசூலிப்பதா அல்லது வாங்கிய சீட்டுகளுக்கு இந்தப் பொருட்களைப் பிரித்து கொடுப்பதா என்பதைப்பற்றி அரசு ஆராயும்.

(முற்பகல் 10-50)

## ஆ. கண்ணகி கோயிலை கேரள அரசு அதிகாரிகள் கையகப்படுத்த முயற்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : "மதுரை மாவட்டம் உத்தமபாளையம் வட்டத்தில் அமைந்துள்ள கண்ணகி கோயிலை கேரள அரசு அதிகாரிகள் கையகப்படுத்த எடுக்கும் முயற்சி குறித்து" திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, ப. நெடுமாறன், ஆர். டி கோபாலன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே, ''மதுரை மாவட்டம் உத்தமபாளையம் வட்டத்தில் அமைந்துள்ள கண்ணகி கோயிலை கேரள அரசு அதிகாரிகள் கையகப்படுத்த எடுக்கும் முயற்சி குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகுதிரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு சட்ட மன்ற விதி எண். 54ன் கீழ் கொடுக்கப்படும் மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சரின் அறிக்கை :

சிலப்பதிகார காப்பிய நாயகி கண்ணகியின் நினைவாக எழுப்பப் பெற்ற பத்தினிக் கோட்டம் என்றழைக்கப்படும் கோயில் ஒன்று, தொன்று தொட்டு தமிழ் நாட்டில் மதுரை மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் இருந்து வருகிறது. இக்கோயில் 'மங்கலதேவி கோயில்' என்றும் 'கண்ணகி கோயில்' என்றும் நீண்ட காலமாக அழைக்கப்பட்டு வருகிறது. இக்கோயில் மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்தைச் சார்ந்த பாதுகாக்கப்பட்ட வண்ணாத்தி பாறை என்னும் வனப்பகுதிக்குள் 4,380 அடிஉயரத்தில் நீண்ட சதுர வடிவமுள்ள 86 செண்ட் நிலத்தில் உள்ளது. மேற்கண்ட கண்ணகி கோயில் உள்ள இடத்தைக் குறித்து கேரள அரசு ஒரு புதிய கருத்தை எழுப்பியுள்ளது. கேரள அரசின் மாறுபட்ட இக்கருத்தைப் பற்றி ஒரு முடிவு காண வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம் 6—10—1980 நாளிட்ட கடிதத்தில் இந்திய பிரதமரைக் கேட்டுக் கொண்டார்கள். இக்கடிதத்திற்குப் பதிலளிக்கும் வகையில் மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள இந்திய தொல்பொருள் ஆராய்ச்சி துறை தலைமை இயக்குநர், (Director General), இந்திய நில அளவைத்துறை துணைத் தலைமை நில அளவையர் (Deputy Surveyor General) மற்றும் சம்பந்தப்பட்ட இரு மாநிலங்களின் வருவாய்த்துறை செயலர்கள் (Revenue Secretaries.) கொண்ட குழு இரு மாநில நிலஅளவையைச் சார்ந்த இயக்குநர்களின் உதவியோடு நேரில் கண்டறிந்தால் இப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண ஏதுவாகும் என்று கேரள முதல் அமைச்சருக்கு கடிதம்எழுதுவதாகத் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக இந்திய அரசின் மேலறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில், கேரள ரெவின்யூ போர்டு உறுப்பினர் திரு. கே. சி. சங்கர நாராயணன் அவர்கள் மங்கல தேவி கோயில் கேரள எல்லைக்குள் அமைந்துள்ளது என்றும் சர்வே செய்து நிச்சயிக்கப்பட்டுள்ளது என்றும், இக்கோயிலின் கிழக்குச்



சுவரும், மேற்குச் சுவரின் கால்பங்கும், குளங்களும் தமிழ்நாட்டின் எல்லைக்குள் இருக்கின்றன என்றும் தெரிவித்ததாக ஒரு மலையாள நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதே இதழில் கேரள அதிகாரிகள் அந்த இடத்தைப் பார்வையிட்டு, சர்வே செய்வது போன்ற படமும் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, இது குறித்து மீண்டும் மத்திய அரசுக்குக் கடிதம் விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளவிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே கண்ணகி கோயில் சம்பந்தமாக கேரள அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் எழுந்துள்ள சர்ச்சை எந்த ஆண்டிலிருந்து ஆரம்பமானது? மேற்படி சர்ச்சை ஆரம்பமாவதற்கு முன்பு தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையும், சர்வே துறையும் மேற்படி ஆலயம் தமிழகத்திற்குப் பாத்தியப்பட்டது என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளனவா? மேற்படி அறிக்கையின் நிமித்தம் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்?

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை, இந்தக் கண்ணகிக் கோயில் உரிமை விவகாரம் 1971 ஆம் ஆண்டிலேயிருந்து ஆரம்பிக்கப் பட்டது. அன்றைய முதலமைச்சர் அவர்கள் கேரள கல்வித் துறை அமைச்சருக்கு நேர்முகக் கடிதம் ஒன்று எழுதி, அது கேரள எல்லைக்குள்ளே இருக்கின்ற கோயில் என்று குறிப்பிட்டு அதைத் தமிழகத்திற்குத்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதிலேயிருந்துதான் அந்த விவகாரம் தொடர்கிறது. ஆனால், பின்னாலே, சர்வே நிபுணர்கள், எல்லை நிபுணர்கள், அதை ஆராய்ந்தபொழுது, அது தமிழ்நாட்டினுடைய எல்லைக்குள்ளே தானிருக்கிறது என்பது நிச்சயமாக வரையறுக்கப்பட்டது. அதற்குப் பிறகு தொடர்ந்து கடிதப் போக்குவரத்துக்கள் நடந்து கொண்டிருந்தபொழுது, 1975 ஆம் ஆண்டு கேரள மாநிலத்தினுடைய சர்வே இயக்குநரும், நம்முடைய சர்வே இயக்குநரும், அதைப் பற்றி ஒரு கூட்டத்திலே விவாதித்து, நம்முடைய தமிழக சர்வே இயக்குநர் ஆதாரங்களையெல்லாம் வைத்தபொழுது, அந்த நிகழ்ச்சியின் குறிப்புகளில்—மினிட்சிலே— கேரள மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரி கையெழுத்து போடாமலே சென்று விட்டார். அதற்குப் பிறகு 1976 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியிலிருந்தபொழுது, அன்றைக்கிருந்த ஆளுநர் சுகாதியா அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டு, உள்துறை அமைச்சருக்கு எழுதி, உள் துறை அமைச்சர் அவர்கள் இந்திய அரசின் சார்பிலே, தொல் பொருள் ஆய்வுத்துறை Director General of Central Archaeology அவர்களையும், Deputy Surveyor General அவர்களையும், இரண்டு மாநில ரெவின்யூ செக்கரட்டரிகளையும் ஒரு குழுவாக வைத்து, அந்த இடத்தைப் பரிசீலிக்க வேண்டு

மென்று தெரிவித்தார்கள். அந்தப் பரிசீலனையும் நடைபெறாமல் தள்ளிப் போடப்பட்டு வந்தது. பிறகு பருவ நிலை சரியாக இல்லை, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றார்கள். பருவநிலை தேர்ந்த பிறகு, கேரள அரசாங்கம் திடீரென்று அங்கே ஒரு சாலை போட ஆரம்பித்தது. அந்தச் சாலை போட்டு முடிந்ததற்குப் பிறகு பார்க்கலாம் என்றார்கள். சாலை போட்டு முடிந்ததற்குப் பிறகு நாம் நம்முடைய முன்னாள் வருவாய்த்துறை உறுப்பினர் அவர்களை, அங்கேயிருக்கிற வருவாய்த்துறை உறுப்பினரோடு அதைப்பற்றி பேசவேண்டுமென்று அனுப்பியபொழுது, கேரள வருவாய்த் துறை உறுப்பினர் பேசுவதற்கு மறுத்துவிட்டார். அதற்குப் பிறகு மத்திய அரசுக்கு நம்முடைய இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எழுதி, இப்பொழுது இந்திய உள்துறை அமைச்சர் கேரள முதலமைச்சருக்கு எழுதி முன்னாலே 1976—ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட அந்தக் குழு பரிசீலிக்கும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலேதான் கேரள அரசைச் சேர்ந்த வருவாய் வாரிய உறுப்பினர் அந்தப் பகுதிகள், கேரள எல்லைக்குள்ளே தானிருக்கின்றன என்கின்ற ஒரு அடிப்படையற்ற செய்தியைப் பொதுவாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 1981—வது ஆண்டு பிப்ரவரி திங்கள் 15 ஆம் தேதி இடுக்கி கலெக்டர் அவர்களும் அடிஷனல் சர்வேயர் அவர்களும் சர்வே செய்து, கேரள அரசுக்கு அந்தக் கோயில் சொந்தமென்றும் பாண்டிய அரசர்கள் காலத்திலே கில்ஜி படையெடுப்பின்போது தமிழ்நாட்டிலிருந்து கேரளத்துக்கு வந்த பூஞ்ஞாற்றில் தம்புரான் என்பவரால் இந்தக் கோயில் கட்டப்பட்டது என்றும், கேரளத்திற்கே உரித்தான கலை நுணுக்கத்தோடு இக்கோயில் கட்டப்பட்டது என்றும் சொல்கிறார்களே அது உண்மையா ? கேரள அறநிலையத் துறை அங்கே பிரமாண்டமான சிலை வைக்கவும் முயற்சி செய்கிறார்களே, அதைத் தமிழக அரசு தடுத்து நிறுத்துமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே வந்த அதிகாரிகள் அப்படிப்பட்ட செய்திகளைத் தெரிவித்ததாக மலையாளப் பத்திரிகைகளிலே வெளிவந்திருக்கின்றது. அந்தச் செய்திகள் அடிப்படை அற்றது. ஆதாரம் அற்றது. மேலும் 2 மாநிலங்களின் அரசுகள் அளவிலே மத்திய அரசின் துணையோடு இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றபோது, இடையிலே ஒரு குறிப்பிட்ட துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இங்கே வந்து அந்த நில அளவுகளை எல்லாம் பார்த்து அப்படிப்பட்ட ஒரு தவறான அடிப்படையிள செய்திகளை வெளியிடுவது என்பது அது ஆட்சிக்கோ அல்லது நிர்வாகத்திற்கோ உகந்ததல்ல.



அவர்கள் ஏதோ ஒரு புதிய கதையை அங்கே சொல்லி, யாரோ கில்ஜி படையெடுப்பின் போது வந்த ஒருவர் அமைத்ததாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் தெளிவாக 1883 ஆம் ஆண்டு வருவாய்த்துறை மூலம் அளிக்கப்பட்ட நோட்டிபிகேஷனிலே எல்லைகள் வரையறுக்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்டு, அது நம்முடைய வண்ணாத்திப் பாறை ரிசர்வ் பாரஸ்டிலே இருக்கிறது என்கின்ற வரை படங்கள் எல்லாம் தெளிவாக இருக்கின்றன. அதை இந்திய சர்வே துறையினர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை வெளியிலே சொன்னால் உண்மை வெளிப்பட்டு விடும். பிரச்சினை தீர்ந்து விடும். அவர்கள் சொல்ல மறுக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலேதான் கேரள அதிகாரிகள் இப்படிப்பட்ட ஒரு தவறான தகவலை, அதிகாரிகள் மட்டத்திலே வெளியிட்டிருக்கிறார்கள். அது வருத்தத்திற்குரியது. அதை கேரள அரசின் கவனத்திற்கு நம்முடைய அரசு கொண்டு வர இருக்கிறது. மத்திய அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வர இருக்கின்றது.

அவர்கள் ஒரு புதுக் கதையைச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அங்கே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆண்ட தமிழ்ப் பெரு மன்னன் ராஜராஜன் அவர்களுடைய கல்வெட்டுக்கள் காணக் கிடக்கின்றன. ராஜராஜன் கல்வெட்டிலிருந்து தொடர்ந்து 14 ஆம் நூற்றாண்டு வரையில் கோவிலுக்குத் தமிழ் மன்னர்கள் சோழன், பாண்டியன், ஆகியோர் கொடைகள் அளித்திருக்கிறார்கள். இவற்றைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் அந்தக் கோவிலிலே உள்ளன. இவைகள் தமிழ் மொழியிலே உள்ளன. 11 ஆம் நூற்றாண்டில் ராஜராஜ சோழன், 12 ஆம் நூற்றாண்டில் வல்லபப் பாண்டியன், 13 ஆம் நூற்றாண்டில் மாறவர்மன், சுந்தரப் பாண்டியன், 14 ஆம் நூற்றாண்டில குலசேகரப் பாண்டியன் ஆகியோர் கல்வெட்டுக்கள் இந்தக் கோவிலிலே உள்ளன. இந்தக் கல்வெட்டுக்களை 1965–66-லே மத்திய அரசு கல்வெட்டுத் துறையினர் படி எடுத்துள்ளார்கள். அவர்கள் படி எடுத்த போது இருந்த ராஜராஜன் கல்வெட்டுக்கள் இப்பொழுது அங்கே இல்லை. உடைக்கப்பட்டிருக்கின்றன. இவைத் தவிர இந்தக் கல்வெட்டுக்களில், குலசேகரப்பாண்டியன் கல்வெட்டிலே இத் தேவிக்கு அமுது படைக்க நிலம் கொடுத்ததைக் கூறுகிறது. அந்தக் கல்வெட்டில் மாசாத்துவான் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. சிலம்பில் கோவலன் தந்தை மாசாத்துவான் என்று கூறப்பட்டுள்ளதும் இங்கே நினைவு கொள்ளத் தக்கது. ஆகவே, எல்லை நிர்ணயிக்கபட்டதன் படியும், அங்கே இருக்கின்ற கல்வெட்டுக்களின்படியும் அது தமிழகத்திற்குத் தான் சொந்தம் என்பது ஐயமற நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதிலே மத்திய அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நம்முடைய அரசு எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், கேரள அரசைச் சார்ந்த ஒரு

வருவாய்த்துறை அதிகாரி, இந்த நிலையிலே அறிக்கைகள் தருவதும், கருத்துக்கள் தரப்படுவதும், கண்டனத்திற்குரியது என்பதை நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவு

மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, பி. 1981 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1981)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கிழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை "சட்ட முன்வடிவு எண். 37/1981)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, சட்டமன்ற விதி 100-ல் உள்ள 1-வது பிரிவைப் பற்றி விளக்கம் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை, இந்த சட்டத்தின் மீது நான் 6-ந் தேதி காலையில் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அது தமிழ்நாடு 1937 ம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவு என்பதை, தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச்சட்டத்தை ரத்து செய்வதற்கான சட்ட முன்வடிவு என்று திருத்தப்பட வேண்டும் என்று நான் கொடுத்திருக்கி றேன். ஆனால் எனக்கு என்ன கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் 100-ம் எண் விதியின்படி இது பொருள் வரம்புக்கு உட்பட்டதாக இல்லாத காரணத்தால் என்று கூறப்பட்டிருக் கிறது. நான் என்ன கேட்கிறேன் என்றால் 100-ம் எண் விதியின்படி சட்ட முன்வடிவு அல்லது தீர்மானத்தைக் கொண் வரப்படும் திருத்தம் அதற்குத் தொடர்புடையதாகவும் அதன் பொருள் வரம்புக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

[முற்பகல் 11.00]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் விதிகளை சரியாகப் படித்துப் பார்த்தால். ஒரே வரியில் சொல்லப்பட்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

An Amendment must be relevant to and within the scope of the subject matter *

* 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



மாண்புமிகு உறுப்பினர் அளித்த திருத்தம் சப்ஜெக்ட் மேட்டர் கீழ் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது முழுமை யாக ரத்து என்கிற அடிப்படையில் வருகிறது. அரசு கொண்டு வருகிற சட்டம் (ரிலாக்சேஷன்) என்ற அடிப்படையில் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் புரிந்து கொண்டு, தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மது விலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1981)...... உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெற வேண்டும்"

தீர்மானம் முறையே வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. எஸ். இராசு அவர்களும் இது போன்ற ஒரு திருத்தத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மது விலக்குத் திருத்தச் சட்ட முன்வடிவை சட்டமாக்க வேண்டும் என்கின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அந்தச் சட்ட முன்வடிவை வைத்து இருக்கிறார் கள். ஆனால், இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போல தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மது விலக்குத் திருத்தச் சட்டம் என்ற பெயரே இந்த அரசின் நோக்கத்திற்கு, இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டு இருக்கிற புதிய அம்சங்களுக்கு, விரோதமாக இருக்கிறது என்பதை நான் முதலிலே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன், சாராயக்கடை திறக்கப்படும், சாராயத்தை பாட்டில்களில் அடைப்பதற்கு அனுமதிக்கப்படும். அனுமதி பெற்று சாராயம் விற்கலாம், கள் விற்கலாம். 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் மது அருந்தலாம். உள்நாட்டுச் சரக்கு, வெளிநாட்டுச் சரக்கு எது வேண்டுமானாலும் அருந்தலாம். இதையெல்லாம் உள்ளடக்கி இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வந்து விட்டு, 1937-ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வருகிறேன் என்று சொல்வதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒருபுறத்திலே மது விலக்கை அமுல்படுத்தச் சட்டம் கொண்டு வருகிறீர்கள். அப்படியானால் மது விலக்கை அமல் நடத்துகிறபோது கள் இறக்க, சாராயம் காய்ச்ச அனுமதிக்க லாமா? சாராயத்தை பாட்டில்களில் அடைத்து விற்க

அனுமதிக்கலாமா ? 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் உள் நாட்டுச் சரக்கு வெளிநாட்டுச் சரக்கு எது வேண்டுமானாலும் சாப்பிடலாம் என்று அனுமதிக்கலாமா ? ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவின் பெயரே தவறானதாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். பேராசிரியர் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போல மது விலக்குத் திருத்தச் சட்டம் அல்ல. மதுவை வழங்குவதற்கு அனுமதிக்கிற கதவுகளைத் திறந்து விடும் சட்டமாக இது இருக்கிறது என்றுச் சொல்லிக் கொள்கிறேன். ஒரு புறத்திலே மது அருந்துவதற்கான வாய்ப்பு உருவாக்கி விட்டு, மது அருந்துவதற்கு சாராய சாம்ராஜ்யங்களின் கதவுகளைத் திறந்து விட்டுவிட்டு, இன்னொருப் புறத்திலே மது விலக்குச் சட்டத்தை தீவிரமாக அமல் நடத்துவோம் என்று சொல்வது எப்படி இருக்கிறது என்று சொன்னால்—கசாப்புக் கடைக்காரனை—கருணை மகான் என்று அழைப்பது போலவும், ஊமைப் பெண்ணை தேன்மொழி என்று அழைப்பது போலவும், கண்ணற்ற ஒருவனைக் கண்ணாயிரம் என்று சொல்வது போலவும், இந்தச் சட்டத்தின் தலைப்பே பொருத்தமற்றதாக இருக்கிறது என்கின்ற குற்றச்சாட்டை முதலாவதாகச் சொல்லிக் கொள்கிறேன்.

இரண்டாவதாக நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டம் கொண்டுவருவதற்கான காரண காரிய விளக்கங்களை இங்கே எடுத்துச் சொல்லியிருப்பதில் மது விலக்கு குறித்த மாநில அரசின் கொள்கை, 1981-82-ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவு திட்ட உரையில் அறிவிக்கப் பட்டுள்ளது என்றும் அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்காகத் தான் 1937—ஆம் மது விலக்குச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரும் வகையில் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். இங்கே நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் அது குறித்து என்ன சொல்லியிருக்கிறார் என்றால்- இந்த அரசு மது விலக்குக் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை வலியுறுத்துவதோடு மது விலக்குச் சட்டத்தை ரத்து செய்வதாக இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறது. மது விலக்குச் சட்டத்தைத் திருத்துவன் மூலம், சமூக விரோதிகள் சிலரின் கைக்குச் செல்லுகின்ற பணத்தை அரசுக்குக் கிடைக்க வழி வகை செய்ய முடியும் என்று இந்த அரசு கருதுகிறது.

ஆக, பட்ஜெட்டிலே மதுவிலக்குக் கொள்கையில் அழுத்தமாக இருக்கிறோம், மதுவிலக்குச் சட்டத்தை நாங்கள் ரத்து செய்ய வில்லை என்று சொல்லிவிட்டு. அதற்குப் புறம்பாக இந்தத் திருத்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதிலும் நான் அடிப்படையாகச் சொல்ல விரும்புவது எல்லாம், இன்றைக்கு அகில இந்திய அண்ணா தி.மு.க. அரசு இந்த மதுவிலக்குக் கொள்கையில் வைத்திருக்கிற நிலைமையை நான் இந்த மாமன்றத்தின் கவனத்திற்கு திரும்பவும் கொண்டுவர விரும்பு கிறேன்.



நம்முடைய மரியாதைக்குரிய முதலமைச்சர் அண்ணா தி.மு.க. அரசின் சார்பாகச் சொன்னார்கள். மது அரக்கனை ஒழிப்பேன் We are committe to the policy of Prohibition மதுவிலக்கை அமுல் படுத்துவதுதான் எங்களுடைய இலட்சியம் என்று சொன்னார்கள். மதுவிலக்கை அமுல்படுத்தி மது அரக்கனை ஒழித்து, தாய்மார்கள் கண்ணீரைத் துடைப்பேன் என்று சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு சொன்னபோது கூட, 'மதுவிலக்கை அமுல்படுத்தவது ராஜாஜியின் கொள்கை, மதுவிலக்கை அமுல்படுத்துவது அண்ணாவின் கொள்கை, எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் மதுவிலக்குக் கொள்கையை அமுல் நடத்துவேன்' என்று எல்லாம் அன்றைக்கு மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. இங்கே இன்னொன்றையும் இந்த மாமன்றத்தின் கவனத்திற்கு சபைக் குறிப்பிலிருந்து ஆதாரத் தோடு சொல்ல விரும்புகிறேன். மரியாதைக்குரிய முதலமைச்சர் ஒருமுறை இந்த மாமன்றத்திலே சொன்னார். நான் சொல்வது தவறு என்று தெரிந்தால், அமைச்சர்கள் எழுந்து சொன்னால், அதை நான் திருத்திக்கொள்கிறேன். 'வறுமையின் காரணமாக சில பெண்கள் விபச்சாரம் செய்யும் நிலை ஏற்படுகிறது. அப்படிப் பட்ட சூழ்நிலைகளில், அப்படிப்பட்ட தவறுகளைக்கூட நான் மன்னிப்பேன்' ஆனால் குடிப்பதை என்னால் மன்னிக்க முடியாது அனுமதிக்க முடியாது' என்று மாண்புமிகு நம்முடைய மரியாதைக் குரிய முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்குக் கொள்கையின் சிறப்பைப்பற்றிச் சொன்னார்கள்.

அது மட்டுமல்ல. இங்கே சட்டம் படித்த வழக்கறிஞர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நம்முடைய மன்றத்தின் அவைத் தலைவர் அவர்கள் தலைசிறந்த வழக்கறிஞர், அவர்கள் உயர்நீதிமன்ற வழக்கறிஞர், அவர்களுக்குத் தெரியும். ப்ரபேஷன் ஆக்ட் என்று ஒன்று இருக்கிறது. அதன்படி, தவறு செய்து விட்டாலும், நீதிமன்றத்திலே எந்தச் சூழ்நிலையில் தவறு செய்தார். அந்தத் தவறை எந்தச் சூழ்நிலையில் செய்தார் என்பதை எண்ணிப்பார்த்து, அவரை மன்னித்து விடுதலை செய்யும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு இருக்கிறது. அதற்கு கிரிமினல்சட்டம் எல்லாம் உண்டு, ப்ரபேஷன் ஆக்ட் இருக்கிறது- அதன்படி குடிப்பது குற்றமாக இருந்தாலும் குடித்த சந்தர்ப்ப சூழ்நிலையை எண்ணிப்பார்த்து, அவரைக்கூட மன்னிக்க முடியும். ஆனால் இந்தச் சட்டத்திலே ப்ரபேஷன் ஆக்ட்படி மன்னிக்க முடியாது, மன்னிக்க கூடாது என்று மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்களுடைய சர்க்கார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடுமையான சட்டப் பிரிவைக் கொண்டுவந்து, நிறைவேற்றினார்கள்.

[திரு. அ. ரகுமான்கான்] [1981 ஏப்ரல் 10

அது மட்டுமல்ல, இந்த சட்டமன்றத்திலே அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அமைச்சருக்கு கார் இருக்கிறது. அமைச்சருக்கு வேண்டியவர்கள் அல்லது நண்பர்கள் யாராவது அந்தக் காரிலே கள்ளச் சாராயம் கடத்திச் செல்லும்போது பிடிபட்டால், அந்தச் சட்டத்தின்படி சாராயத்தைக் கடத்திச் செல்பவர் மட்டுமல்ல: அமைச்சரும் உள்ளே போக வேண்டும் 'வைகரியஸ் லையபிலிட்டி' என்ற முறையில். அப்படிப்பட்ட, கடுமையான சட்டப்பிரிவைக் கொண்டுவந்தார்கள்.

அதைப்போல ஒருவன் சைக்கிள் கடை வைத்திருக்கிறான் அவனுடைய கடையிலே இன்னொருவன் வாடகைக்கு சைக்கிள் எடுத்துச்செல்கிறான். அந்த சைக்கிளிலே சாராயம் கடத்திச் சொல்லும்போது பிடிபட்டால் சைக்கிளை வாடகைக்கு எடுத்துச் சென்றவனும், அந்த சைக்கிள் கடைக்காரனும் 'ஓனர் ஆஃப் தி சைக்கிள்' என்ற முறையில்-கைதுசெய்யப்பட்டு, தண்டிக்கப்படுவார்கள். அந்த அளவுக்குக் கடுமையான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள்.

இந்த மாமன்றம் வழக்கறிஞர்களை நிரம்பிய மன்றம் உங்களுக்குத் தெரியும், கிரிமினல் சட்டத்தின்படி, குற்றம் செய்யும்போது, குற்றம் செய்தவனை தண்டிக்க வேண்டுமென்றால் அவன் செய்த குற்றத்தை நிருபிக்க வேண்டியது பிராசிகியூஷன் பொறுப்பு. அரசுத் தரப்பிலேதான் ஒருவர் செய்த குற்றத்தை நிருபிக்க வெண்டுமேயல்லாமல் குற்றம் சுமத்தப்பட்டவன் அல்ல. ஆனால் அந்த மதுவிலக்குச் சட்டத்தில் Onus of proof lies on the accused என்று இருக்கிறது. குற்றவாளிதான் தான் நிரபராதி என்பதை நிருபிக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆங்கிலச்சட்டத்திற்குப் புறம்பாக இது இருக்கிறது. ஆனால் பிரான்ஸ் நாட்டிலே அப்படி இருக்கிறது. ஒரு வேளை நம்முடைய முதலமைச்சரவர்கள் உலகம் சுற்றும் வாலிபனாக இருந்தபோது பிரான்சுக்குப் போய் அதைப் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட ஒரு கொடுமையான சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதிலே நான் பெயிலபிள் அஃபன்ஸ் என்ற பிரிவைச் சேர்த்திருக்கிறார்கள் மரியாதைக்குரிய இராஜகோபாலாச்சாரி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 1938-ல் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் அன்றுலிருந்து நம்முடைய மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருகின்ற காலகட்டம் வரையில் குடிப்பது ஜாமினில் எடுக்கும் குற்றமாக இருந்தது, ஆனால் நம்முடைய முதலமைச்சர் மது அரக்கனை ஒழிப்பேன் என்று சொல்லி, கடுமையான நடவடிக்கையின் மூலம் கடுமையான தண்டனை மூலம்தான் மது அரக்கனை ஒழிக்க முடியும் என்று சொல்லி, குடிப்பவன் ஜாமீன் மூலம் போகக்கூடாது என்ற ஒரு சட்டப்பிரிவைக் கொண்டுவந்து சட்டமாக்கினார்கள்.

இன்னும் சொல்லப்போனால் அதன் மூலமாக ஆயிரக்கணக்கான தோழர்கள் சிறையிலே வாட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.



1981 ஏப்ரல் 10] [திரு. அ. ரகுமான்கான்]

[முற்பகல் 11.10]

ஏழை எளிய மக்கள் சிறையிலே வாடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவர்கள் எல்லாம் ஜாமீனிலே வர முடியாத நிலை இருந்தது.

அடுத்து எந்த ஒரு சர்க்காரும் திருடுவதற்கு பெர்மிட் தருவதில்லை, கொலை செய்வதற்குப் பெர்மிட் தருவதில்லை, கொள்ளை அடிப்பதற்குப் பெர்மிட் தருவதில்லை கற்பழிப்பதற்கு பெர்மிட் தருவதில்லை ஆனால் குடிப்பதற்கு ஒரு சர்க்கார் பெர்மிட் தருகின்றது என்றால் அதிலும் 25 வயது நிரம்பியவர்கள் எல்லோருமே குடிக்கலாம் என்று அனுமதி தருகின்றது என்று சொன்னால், என்ன பொருள்? அது கிரேவ் அஃபன்ஸ். கொலையைப்போல், கொள்ளையைப் போல், திருட்டைப்போல் குடிப்பது அவ்வளவு கடுமையான குற்றம் அல்ல. அது ஒரு சாதாரண சமூகக் குற்றம்தான் அப்படிப்பட்ட குற்றத்திற்கு நான் பெய்லபிள் அஃபன்ஸ் என்று பெரிய கொலைக் குற்றத்திற்காகச் சொல்வது போல் இங்கே சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள். அப்படி நிறைவேற்றுகின்ற போதுகூட நாங்கள் எல்லாம் எடுத்துச் சொன்னோம்..(குறுக்கீடு).. அப்போது இது போன்ற மிகவும் கடுமையான சட்டம் வேண்டாம் என்றெல்லாம் சொன்னோம். இப்படிப்பட்ட கடுமையான சட்டங்களின் மூலம் யாரையும் திருத்திவிட முடியாது என்று சொன்னோம். இன்றைக்கு நம்முடைய தாய்மார்கள் எல்லாம் கற்புக்கரசியாக வாழ்கிறார்கள் என்றால் அது சட்டத்திற்கு பயந்தா? தண்டனைக் கிடைக்குமே, சிறைக்குப் போக வேண்டுமே, என்று பயந்து கொண்டா கற்புக்கரசியாக வாழ்கிறார்கள். இல்லை அது ஒரு சமூக ஒழுக்கம். அந்த அடிப்படையிலே தான் அதாவது குடிப்பவர்கள், குடிக்காதவர்கள் என்பது ஒழுக்கப் பிரச்சினை. ஆகவே அதை அப்படி ஒரு ஒழுக்கப் பிரச்சினையாகக் கருதவேண்டுமே தவிர மன்னிக்க முடியாத குற்றமாக நினைக்கக் கூடாது. ஆனால் அதை ''நான் பெய்லபிள் அஃபன்ஸ்', என்று அந்த அளவுக்கு கடுமையான குற்றம் என்று கருதுகின்ற வகையில் கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

இதிலே ஒரு மிகப்பெரிய வேடிக்கை. ஊர்விட்டு ஊர் கடத்துகின்ற சட்டம் வேறு எங்கேயும் கிடையாது. மதுவிலக்கை அமல் நடத்துவதிலே மற்றவர்களுக்கெல்லாம் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று ஊருக்குச் சொல்லிவிட்டு, சட்டமன்றத் தேர்தலின் போதும் சொல்லிவிட்டு. அண்ணா சிலையின் முன்பு ரத்தத்தின் ரத்தங்களான, சதையின் சதைகளான தனது கட்சிக்காரர்களை எல்லாம் அழைத்து வைத்துக் கொண்டு சபதம் செய்துவிட்டு இன்றைக்கு இப்படிப்பட்ட வகையில் அதனைத் தளர்த்தி இருக்கிறீர்கள். காஞ்சிபுரத்திலே அண்ணா மருத்துவமனையை திறந்து வைக்கின்றபோது இது குறித்து அண்ணா பத்திரிகையிலே வந்ததைச் சொல்கிறேன், பத்திரிக்கைச் செய்திகளை ஆதாரமாக வைத்துப் பேசக்கூடாது என்று சொன்னால் அதை நான் திரும்பப்பெறுவதற்குக் கூடத் தயாராக இருக்கிறேன். காஞ்சிபுரத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது

என்ன சொன்னார்? "குடித்தவனை ஜாமீனிலே எடுப்பதற்கு என்னுடைய கட்சிக்காரர் போனார், அப்படிப் போவது தப்பு குடிப்பவனை ஜாமீனில் எடுக்கக் கூடாது, ஆகவே அந்த ஆளையும் கைது செய்யும்படி நான் உத்தரவிட்டேன்" என்று சொன்னார். ஜாமீனுக்குப் போகிறவர்களை கைது செய்கின்ற அதிகாரம் யாருக்காகு என்று வது இருக்கின்றதா? ஜாமீனுக்குப் போகக் கூடாது விரோ யாராவது சொல்ல முடியுமா? ஜாமீனுக்கு போவது சட்ட என்றுதமா? இப்படி இவைகள் எல்லாம் சட்டவிரோதம் அல்ல அவ. சட்டம் கற்ற நம்முடைய மரியாதைக்குரிய திரு. கே.ஏ.கே, வில்ர்களுக்கும் தெரியும், நாம் அவர்களை வம்பிலே மாட்டிவிட அப்லை. ஒரு உதாரணத்திற்காகத்தான் சொன்னேன். ஆ மா படிப் பட்டவர்கள் எல்லாம் இருந்தும் கூட ஒரு சட்டவிரோத சென காரியத்தைச்செய்ய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் வி ான்னார் என்றால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்ட அரோதமான காரியத்தைச் செய்கிறார் என்றுதான் பொருள். —தற்கு என்ன நடவடிக்கை? நடவடிக்கை எடுக்கலாம். அப்படிப்பட்ட தப்பை எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்துவிட்டிருக்கிறார். ஆனால் மதுவினை ஒழிப்பதற் காக இந்த நாட்டிலே பிறந்த ஏசுநாதர், இந்த நாட்டிலே பிறந்த புத்தர், இந்த நாட்டிலே பிறந்த நபிகள் நாயகம் என்ற உணர்வை ஏற்படுத்துவதற்காக கடுமையான சட்டம் கொண்டு வந்தீர்கள். அது எப்படித் தெரியுமா? பப்ளிக் சர்வண்டுக்கு ஒரு தண்டனை, கவர்ன்மென்ட்டுக்கு ஒரு தண்டனை என்று கொண்டு வந்தீர்கள். அதிலே பப்ளிக் சர்வன்ட் யார், கவர்ன்மெண்ட் சர்வென்ட் யார் என்பதற்கு சர்க்காருடைய சட்டம் விளக்கம் கொடுத்தது எப்படி தெரியுமா? கார்ப்பரேஷன் கமிஷனர் பப்ளிக் சர்வட்டாக வருகிறார். நான் யாரையும் தவறாகச் சொல்லவில்லை. காவல்துறையின் அதிகாரி மீதும், மாநகராட்சி அதிகாரியின் மீதும் எனக்கு மிகுந்த மரியாதைஉண்டு. உதாரணத்திற்காகத் தான் சொல்கிறேன். இரண்டு பேரும் உட்கார்ந்து குடிக்கிறார்கள் என்று வைத்து கொண்டால் ஒரே பாட்டில், ஒரே சரக்கு, ஆனால் பப்ளிக் சர்வன்டுக்கு ஒரு தண்டனை கவர்மெண்ட் சர்வன்டுக்கு ஒரு தண்டனை என்றெல்லாம் சரத்துக்கள் இங்கே கொண்டு வரப்பட்டன. ஊர் கடத்துகின்றஒரு சட்டம் இருக்கிறது. அது மிக மோசமான கோமாளித்தனமான சட்டம் என்று சொன்னால் யாரும் கோபித்துக் கொள்ளக் கூடாது. காரணம் நமது முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களே பாடியிருக்கிறார்கள்.

"திட்டம் போட்டு திருடற கூட்டம் திருடிக் கொண்டே
இருக்குது–அதைச்
சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே
யிருக்குது
திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க
முடியாது.

என்று பாடினார். திருட்டை ஒழிப்பதற்கே மன மாற்றம் தேவை; சட்டத்தினால் முடியாது என்று சொன்னார்.



அது சினிமாவில்தான் என்று சொன்னாலும் அந்தத் தம்முடைய கொள்கை என்று பல முறை கன்பெஷன் ஸ்டேட்மெண்ட் அவர் கொடுத்திருக்கிறார்.

ஆகையினால் நான் சொல்ல விரும்புவது என்ன என்று கேட்டால் அப்படி ஊரை விட்டு ஊரை மாற்றுவதினால் அந்தக் குற்றவாளிகள் திருந்துவார்களா? ஒரு ஊரிலே ஆடு திருடு கிறான். அவனை இன்னொரு ஊருக்கு மாற்றினால், அங்கே முடிந்தால் மாடு திருடுவான் இல்லையென்றால் ஆள் கிடைத் தால், ஆளையே திருடுவான். ஆக பொருள்தான் மாறுபடுமே தவிர, சரக்குதான் மாறுபடுமே தவிர, அந்தக் காரியத்தை செய்பவன் செய்து கொண்டேதான் இருப்பான். ஆகையினால் ரிமூவிங் ஹிம் பிரம் ஒன் பிளேஸ் டு அனதர் பிளேஸ் என்று, மது குடிக்கும் தப்பைச் செய்தால்.... (மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப் பினர் எடுத்துக் கொண்ட சப்ஜெக்டுக்கே வராமல் பழைய சட்டத் திலேயே பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் 7,8 உறுப்பினர் கள் பேச வேண்டி இருக்கிறது. 2 பில்கள் பாஸ் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே சுருக்கமாக சப்ஜெக்ட்டில் பேச வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: அப்படியெல்லாம் சொல்லப்பட்ட அந்தக் கடுமையான சட்டம் இன்றைக்கு இருக்கிறதா இல்லையா? அந்தச் சட்டத்தின் தண்டனைகள் இருக்கிறதா? இல்லையா? இப்போது திருத்தச் சட்டம் கொண்டு வந்ததினால், அந்தச் சட்டம் என்னவாயிற்று? அந்தச் சட்டத்தின் தண்டனைகள் இருக் கிறதா, இல்லையா? நான் இப்போது கோடிட்டுக் காட்டிய அந்த தண்டனைகள் இருக்கிறதா இல்லையா? நான் கேட்கிறேன், ஒரு புறத்திலே 25 வயதிற்கு மேல் குடிக்கலாம் என்று அனுமதி அளித்துவிட்டு, இன்னொரு புறத்திலே ஊர் கடத்துகின்ற சட்டத்தையும் வைத்திருப்பது, எப்படியிருக்கிறது என்றால் என்னுடைய கொள்கை நான் சைவ உணவு சாப்பிடுபவன் என்று சொல்லிவிட்டு, அசைவ உணவுக் கடையிலே போய் உட்கார்ந்து கொள்வது முறையாகுமா? அது போன்று இருக்கிறது. ஆகவே நீங்கள் இப்போது கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தப் புதிய சட்டத்தினால் நீங்கள் அப்போது போட்ட சட்டத்தின் ஷரத்துக்கள் என்னவாயிற்று என்று நான் கேட்க விரும்புகிறேன்.

நமது நிதியமைச்சர் அவர்கள் கூட பட்ஜெட் உரையிலே சொன்னார்கள். பதிவாகியிருக்கிறது. இன்றைக்கு எங்கே பார்த்தாலும் கள், சாராயம் காய்ச்சுகிறார்கள். பட்டை என்றும் அதை போலவே பானை என்றும் பல விளக்கங்கள் கொடுத்து நம்முடைய நாவலர் அவர்கள் எப்படியெல்லாம் அது

தயாரிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். மது விலக்கு எங்களுடைய கொள்கை. புத்தர் ஏசுநாதர் தோன்றினால் கூட தவறுகள் நடைபெற்று கொண்டுதான் இருக்கிறது. ஆகவே, கொள்கையாக அது ஒரு புறத்தில் இருக்க, நடைமுறையில் அது வேறு மாதிரியாக இருக்கிறது. நாங்கள் என்ன செய்வது? அப்படித்தான் போக வேண்டும் என்ற கருத்து தொனிக்க நம்முடைய நாவலர் அவர்கள் கூட இங்கே பேசினார்கள். நான் கேட்கிறேன். குற்றவாளிகள் பெருகிக் கொண்டேதான் இருக்கிறார்கள். களவும் திருடும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. ஆகவே போலீஸ் ஸ்டேஷன்களே தேவையில்லை என்று இந்தச் சர்க்கார் உத்தரவு போடுமா?

நான் கேட்கிறேன் வாத்தியார் பரீட்சை நடத்துகிறார். மாணவர்கள் பரீட்சையில் தோல்வி அடைகிறார்கள், எனவே பரீட்சையே வேண்டாம் என்று இந்தச் சர்க்கார் உத்தரவு போடுமா? நான் கேட்கிறேன். கள், சாராயம் குடிக்கிறார்கள், தவறுகள் நடைபெறுகின்றன. ஆகவே மதுவிலக்கை கொஞ்சம் தளர்த்துகிறேன், அல்லது அதை ஒரு மாதிரியாக ஆக்குகிறேன் என்று சொல்வது மட்டும் எப்படிச் சரியாகும்? இது அடிப்படை கொள்கைக்கே விரோதமாகாதா?

அப்படியானால் நம்முடைய அருமை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் எங்களைக் கேட்கக் கூடும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின் போது, இந்த மதுவிலக்கு கொளகையை நீங்கள் சஸ்பெண்ட் செய்யவில்லையா ஒத்தி வைக்கவில்லையா என்று கேட்கக்கூடும். நான் உண்மையை மறுப்பதாக உத்தேசம் இல்லை, நான் ஒப்புக் கொள்கிறேன். அப்படிச் சொல்லியது உண்மைதான். ஆனால் அது மட்டுமல்ல; அன்றைக்கு நம்முடைய இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தார்கள். கோவையிலே அன்றைக்கு இது பற்றிய பெரிய விவாதம் நடைபெற்றபோது, அவர்களே இதற்கெல்லாம் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் அன்றைய சூழ்நிலையில், அன்றைய அமைப்பில் அன்றைக்கு இருந்த நெருக்கடியில் அபபடிக் கொண்டு வந்தது சரிதான் என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அப்படி ஏதாவது விளக்கங்களை அதில் நீங்கள் கேட்க விரும்பினால் இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே கேட்டுக் கொள்ளுங்கள். அவர் தான் இரண்டிற்கும் பதில் சொல்லியாக வேண்டும் என்று நான் ஆளும் கட்சி நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அன்றைக்கு திராவிட முன்னேற்ற கழகத்தில் இருந்த போது ஏன் அப்படிச் சொன்னார்? பிறகு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற போது ஏன் இப்படிச் சொல்கிறார் என்பதை அவரே தெளிவாக்குவார்கள் என்று சொல்லி அவர் முடிவுக்கே விட்டு விடுகிறேன்.



இதிலே முக்கியமான விஷயம் என்னவென்று கேட்டால், பிறகு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உருவாயிற்று. அப்போது, இது மாதிரி திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் மதுவிலக்கை சஸ்பெண்ட் செய்து விட்டதினால் ஒரு பெரிய குற்றத்தைச் செய்திருக்கிறார்கள். கருணாநிதி தான் சாராய சாம்ராஜ்யத்தை திறந்து விட்டார்கள். எல்லாப் பிள்ளைகளையும் காமராஜர் படிக்க வைத்தார், இவர் குடிக்க வைக்கிறார் என்று சொன்னார்கள். 'இல்லை பத்திரிக்கையில் வந்தது தவறு. நான் சொல்லியதாக சொல்வது தவறு என்று சொன்னால், திரும்ப பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

இப்படியெல்லாம் சொல்லிவிட்டு, பெண்களை வைத்து நாங்கள் போராட்டம் நடத்துவோம் என்று புதுக் கட்சி ஆரம்பித்த உடனேயே அந்தப் பிரச்னையை, தன்னுடைய லாபத்திற்காக அரசியலுக்காக மாற்றிக் கொண்டார்கள்.

[முற்பகல் 11-20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு 15 நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 7 பேர்கள் பேச வேண்டும். இன்னும் இரண்டு பில்கள் இருக்கின்றன. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்னும் 5 நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன். இதிலே லைசன்ஸ் முறை என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதனால், தெளிவாக ஆக்ஷன் இல்லை என்று தெரிகிறது. சொந்தக்காரர்களையும் வேண்டியவர்களையும் டெவலப் பண்ணுவதற்காக, அவர்கள் வளர்ச்சி பெறுவதற்காக இது உதவியாக இருக்கிறது. அது மட்டுமல்ல, இன்றைக்கு அரசாங்கமோ, கலைக்டரோ கடைகளை நடத்துவதற்கும் அல்லது விற்பனை செய்வதற்கும் அல்லது உரிமை தரும் லைசன்ஸ் கொடுக்கலாம் என்று விதியிலே இருக்கிறதே தவிர, ஆக்ஷனிலே விடப்படும் என்று தெளிவாகச் சொல்லப்படவில்லை, கேட்டால், ரூல் லே அதையெல்லாம் செய்யலாம் என்று சொல்லப்படுகிறது. வெளிப்டையாக சட்டத்திலே சொல்ல வேண்டும். ரூல்சிலே என்ன செய்யப் போகிறீர்கள் என்பது தெளிவாகத் தெரியாது. எனவே ஆக்ஷன் முறை இருப்பதாகத் தெரியவில்லை, ஆக்ஷன் முறை இருக்க வேண்டுமென்று நான் சொல்லும் போது, ஆக்ஷன் முறையிலே வரவேண்டுமென்று நான் சொல்வதாகக் கருதக் கூடாது. நான் சொல்வது, உங்கள் சட்டப் பிரிவில் இருக்கின்ற விதிகளின்படி லைசன்ஸ் முறையில் எந்த அதிகாரியாக இருந்தாலும், சர்க்காரும் தங்களுக்கு வேண்டியவர்களை. கட்சிக்காரர்

களை வளர்ப்பதற்கு, பணம் சம்பாதிப்பதற்கு, லஞ்சத்தை உருவாக்குவதற்கு இது ஆதாரமாக இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். [குறுக்கீடு]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் பொதுக் கூட்டத்தில் பேசுவது போல் பேசுகிறார். 23 நிமிடம் ஆகிவிட்டது; இன்னும் பாயிண்டுக்கு வரவில்லை. ஆகவே, அடுத்து திரு. மி. வின்சென்ட் பேசுவார்.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குச் சட்டத்தை மேலும் திருத்துவதற்காக சட்ட முன்வடிவில் பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்கு நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொண்டு மதுவிலக்குக் கொள்கையில் புரட்சித் தலைவர் அவர்களின் கொள்கை அப்படியேதான் அழுத்தமாக இருக்கிறது. மக்கள் மது அருந்துவதை இந்த அரசு விரும்பவில்லை (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோருக்கும் 15 நிமிடம்தான் பேச வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால் திரு. ரகுமான் கானுக்கு 8 நிமிடங்கள் அதிகமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இதே மாதிரி எல்லாக் கட்சிகளிலிருந்து ஒவ்வொருவர்தான் பேசியிருக்கிறார்கள் ஆகவே, அவர் மேலும் பேசவேண்டுமென்று விரும்புவது முறையல்ல,

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, விதிமுறைகள் எல்லாம் சட்ட மன்றத்திலே இருந்தாலும்கூட இப்படிப்பட்ட மசோதாக்கள் வருகின்ற போது, முழு அளவிற்கு நேரத்தைக் கட்டுப்படுத்துவது என்பது இயலாது; அது ஒத்து வராது மசோதாக்களின் மீது பேசுகின்ற பொது, வரையறுத்து பேச முடியாது. சில பிரச்சினைகளில், அதுவும் செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கின்ற உறுப்பினர் என்ற முறையில், அதன் அடிப்படைகளை விளக்குகின்ற போது, அதன் கொள்கை அடிப்படையில் செலக்ட் கமிட்டிக்கு விடுவது நல்லது என்பதை வலியுறுத்த முடியும். ஆகவே, அவர் மேலும் இரண்டு நிமிடங்கள் பேசுவதற்கு ஒத்துக் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நியாயம் என்பது இருவருக்கும் சரியாக இருக்க வேண்டும். வலியுறுத்தி நேரத்தைக் கட்டுப்படுத்தக் கூடாது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் வலியுறுத்தி நேரத்தைக் கேட்கவும் கூடாது. அதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இரண்டையும் சமநிலையிலே சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.





திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள் இறக்கப்படுவது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நடைபெறும் என்று பட்ஜெட்டிலே சொல்லப்பட்டது. முதலமைச்சர் அவர்களும் சொல்லியதாக நினைவு. ஆனால் தனி நபருக்குக் கொடுக்கக்கூடிய வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலே பாட்டில்களில் விலை குறைவாக இருக்கிறது. எக்சைஸ் டியூடி 30 ரூபாய் வைத்திருப்பதன் காரணமாக, பாட்டில்களின் விலை அதிகமாகிறது. இதனால், கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்குத் தான் வழி வகை ஏற்படுகிறது. மேலும், இந்தக் கள்ளச் சாராய சந்தையை ஒழிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பர்மிட் தொகை இவ்வளவு என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதில்லை. அது மட்டுமல்ல. உங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். நீதிபதி சதாசிவம் அவர்கள் கமிட்டி அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. எக்சைஸ் டியூடி வருமானத்திற்காக சர்க்கார் இதைச் செய்யக் கூடாது, இன்டர்டெயின்மென்ட் டாக்ஸ் மூலம், பிராபர்டி டாக்ஸ் மூலம் மற்றும் வேறு இனங்களின் மூலம் இந்த வருமானத்தை பெருக்கிக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மகாராஷ்டிராவிலே இப்போது ரிடக்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. கள்ளச்சாராயம் குறையவில்லை அது மாதிரி ரிலாக்ஸ் பண்ணுவது தவறு என்று நீதிபதி சதாசிவம் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ரிலாக்ஸ் பண்ணுவதால் கள்ள சாராயத்தை ஒழிக்க முடியாது. அதனால் கள்ளச்சாராயம் அதிகமாக காய்ச்சுவதற்கும், தனி நபர்களுக்கு கொடுப்பதற்கும்தான் வாய்ப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அது மட்டுமல்ல. இன்னும் பல பிரச்சனைகள் இருப்பதால் இந்தக் கொள்கை பற்றி மறுபரிசீலனை செய்ய இதைச் செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பிற்கு நன்றிகூறி முடிக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற பொழுது, கொலை செய்வதற்கும், கொள்ளை அடிப்பதற்கும், விபச்சாரம் செய்வதற்கும் பெர்மிட் கொடுக்க முடியுமா? மது அதிகமாக இருக்கிற காரணத்தால் பெர்மிட் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள் என்பதாகச் சொன்னார்கள். அதே நேரத்தில் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் கூட, பீர், பிராந்தி, விஸ்கி என்றெல்லாம்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை, உட்காருங்கள்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்டமுன்வடிவின் மீது பேசுகின்ற வாய்ப்பினை பெற்றமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுவிலக்குக் கொள்கையில் புரட்சித் தலைவரின் கொள்கை அப்படியே தான் அழுத்தமாக இருக்கிறது. மது அருந்துவதை ஏற்றுக் கொள்ள இந்த அரசு விரும்பவில்லை. எந்தக் காலத்திலும் அரசு அதனை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை. மதுவிலக்கு கொள்கை இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் அமுல் படுத்த வேண்டுமென்று மகாத்மா காந்தி, இராஜாஜி, அண்ணா, காமராஜர் போன்றவர்கள் எப்படி விரும்பினார்களோ அதைப் போலத் தான் தமிழக அரசின் முதல்வர் புரட்சித் தலைவரும் விரும்புகிறார் என்பதை நான் இந்த சபைக்கு தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அரசியல் சட்டத்தின் "Directive Principal of State Policy"-ல் கூட மதுவிலக்கு அமுல் நடத்தப்பட வேண்டுமென்று இருக்கிறது. நிறைவேற்றுகிற முழு பொறுப்பு மத்திய சர்க்காருடையது. மதுவிலக்கை மத்திய அரசால் நிறைவேற்ற முடியாமல் போனதற்கு காரணம், அது முடியாது என்பது தான். இந்திரா அம்மையாரும், மதுவிலக்கு இந்தியா முழுவதும் அமுல் நடத்தப்பட வேண்டுமென்ற எண்ணம் உடையவரே; மத்திய அரசே இதை ஏன் நிறைவேற்றவில்லை என்றால், விரும்பவில்லை என்பதல்ல; முடியவில்லை. இதை டெல்லி காங்கிரஸ்காரர்கள் உண்மையாக புரிந்திருக்கிறார்கள், என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுவிலக்கைப் பொறுத்த வரையில் இந்தியா முழுவதும் அமுல் படுத்தப்பட்டால் வெற்றி பெறுவோமே தவிர தமிழ் நாட்டில் மட்டும் நிறைவேற்றி வெற்றி பெறமுடியாது என்ற கட்டாய நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளோம். நம்மைச் சுற்றிலும் நான்கு மாநிலங்களில் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டுள்ளது.

அதைத் தான் 1971-ல் கலைஞர் அவர்கள் நான்கு பக்கமும் நெருப்பு பற்றி எரிகின்ற பொழுது, நாம் மத்தியிலே கற்பூர கட்டியாக இருப்பதில் சிரமம் உள்ளது என்பதை விளக்கமாக் கூறியிருக்கிறார்கள். முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் மக்கள் கண்ட கண்ட மதுப் பொருள்களை குடித்து மடிந்து போகிறார்கள்; பணக்காரர்கள் நல்ல ஸ்டாண்டர்டு சரக்கை உண்கின்றார்கள்; ஏழை, எளிய மக்கள் கண்டவற்றை உண்ணாமல் தரமான பொருளை உண்ணட்டும்; அதனால் தான் மதுவிலக்கை ரத்து செய்தோம் என்று 1977-ல் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மதுவிலக்கு இந்திய நாடு முழுவதும் தோல்வியே. இந்தக் கொள்கை நடைமுறைக்கு ஒத்து வராது என்கிற காரணத்தால்தான் மத்திய அரசு பல்வேறு கமிட்டிகளை போட்டுள்ளது. 1953-ல் எப். வி. இராமமூர்த்தி கமிட்டி; 1954-ல் ஸ்ரீமான் நாராயணன் கமிட்டி; 1971-ல் ஜஸ்டிஸ் ஜட்சன் கமிட்டி; தமிழ் நாட்டில் 1971-ல் எஸ்.





விஸ்வநாதன் கமிட்டி; 1970-ல் சதாசிவம் கமிட்டி; இந்த கமிட்டிகள் எல்லாம் மதுவிலக்கை எப்படி தீவிரமாக அமல் நடத்தலாம் என்பதற்கு போடப்பட்ட கமிட்டிகள் தான். ஆனால் அந்த கமிட்டிகள் எல்லாம் மதுவிலக்கு தோல்வியே என்பதற்கான அறிகுறிகளை சொல்லியுள்ளன. காலத்திற்கேற்ப சில மாற்றங்கள். அந்த மாற்றங்கள் சில கட்டாயங்களை உருவாக்குகின்றன. அந்த கட்டாயம் தான் மதுவிலக்கை தளர்த்துவதற்கான சட்டமுன் வடிவை இன்றையதினம் வேறு வழியில்லாமல் கொண்டு வந்துள்ளது.

1947-ல் இந்தியா பிரிக்கப்பட்ட போது பாகிஸ்தானுக்கு 100 கோடி ரூபாய் தரவேண்டுமென்ற ஒப்பந்தத்தை மீறி, கொடுக்க முடியாது என்று இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் பட்டேல், நேருவும் கூறினார்கள். அது சரியில்லை என்று கொடுத்து தான் ஆகவேண்டுமென்று காந்தி அவர்கள் 13 நாள் உண்ணாவிரதம் இருந்தார். அதற்கு காந்தியை, நேருவும், பட்டேலும் மதிக்கவில்லை என்பது அர்த்தம் இல்லை. காங்கிரஸ் மகாசபையை கலைத்து விடுங்கள் என்றார் காந்தி. மகாசபையை கலைக்காதது காந்திக்கு, காங்கிரஸ் செய்த துரோகம் என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. அதேபோல் தான் இந்திய நாடு முழுவதும் மதுவிலக்கு அமுலில் இருக்க வேண்டுமென்று காந்தி எண்ணினார். ஆனால் குஜராத்தில் தவிர இந்தியாவில் காங்கிரஸ் மாநிலங்களில் எல்லாம் மதுவிலக்கு ரத்து செய்யப் பட்டு விட்டது. ஆதலால் காங்கிரஸ்காரர்கள் காந்தியவாதிகள் அல்ல என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. அரசுக்கு வரவேண்டிய பணம் யாருக்கோ போகிறது என்று கூக்குரல் இட்டவர்கள் இந்த மன்றத்து உறுப்பினர்கள் தான். நம் பணம் எல்லாம், அண்டை மாநிலங்களுக்கு போகிறது; மதுவிலக்கை ரத்து செய்யக் கூடாதா? என்று கேள்வி கணைகளை இந்த மன்றத்தில் வைத்தவர்கள் இந்த மன்ற உறுப்பினர்கள் தான்.

[முற்பகல் 11.30]

ஆனால் இன்று மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்தினால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் கூறுகிறார், இதன் மூலம் கிடைக்கும் வருமானம் குஷ்டரோகியின் கையிலிருந்து கிடைக்கும் வெண்ணெய் என்று. நான் அருமை நண்பர் திரு. சித்தன் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திரா காங்கிரஸ் ஆளும் மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரா, மகாராட்டிரா, பீகார், ஹரியானா, பஞ்சாப், மத்திய பிரதேசம், அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, ராஜஸ்தான், உத்திர பிரதேசம், இமாசலப் பிரதேசம், கோவா, அருணாசலப் பிரதேசம், நியூ டெல்லி ஆகிய இடங்களுக்கும் அவைகள் பொருந்தும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த மாநிலங்கள் காந்தியின் மதுவிலக்குக் கொள்கைக்கு டாடா கொடுக்கலாம், காந்தியின் கொள்கைக்கு விடுதலை கொடுக்கலாம், காந்தி வெறுத்த மதுவை

மக்கள் அருந்த அனுமதிக்கலாம். ஆனால் தமிழ்நாட்டிலே மட்டும் அரசுக்கு வருமானம் வந்தால் குஷ்டரோகியின் கையிலிருந்து கிடைக்கும் வெண்ணெய்யாம் அது. இது என்ன வெங்காயப் பேச்சாக இருக்கிறது. திரு. சித்தன் அவர்களே, மற்ற மாநிலங்களை விட நியூ டெல்லி இஸ் அன்டர் தி டைரக்ட் கன்ட்ரோல் ஆப் சென்ட்ரல் கவர்ன்மென்ட், அங்கே மதுவின் மூலம் அரசுக்கு வருமானம் கிடைக்க 1981ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் வந்த அறிவிப்பு என்ன தெரியுமா? வருடத்தில் 80 நாட்கள் டிரை டேஸ், மதுக்கடைகள் அடைப்பு என்று அதுவரை இருந்தது. கடந்த ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் அதை 27 நாட்களாகக் குறைத்துவிட்டார்கள். 27 சாராயக் கடைகள் 50 ஆக உயர்த்தப் பட்டது. நாட்டுச் சாராய கடைகள் 9 ஆக இருந்தது 15 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதிகமான வருமானம் கிடைக்க டெல்லி அட்மினிஸ்ட்ரேட்டர் குரானா இத்தகைய நடவடிக்கைகளை எடுத்துள்ளதை திரு. சித்தன் அவர்கள் குஷ்டரோகியின் கையிலிருந்து கிடைத்த வெண்ணெய் என்று சொல்லமாட்டார்கள் என்று நம்புகிறேன். அதேபோல் தான் சண்டிகாரிலிருந்து வெளியாகிற தினசரிப் பத்திரிகை டிரிபியூன், கூறுகிறது. பஞ்சாப் முதல்வர் சாதார் சிங் அவர்கள் 1981–82 ஆம் ஆண்டிலே மட்டும் 9 கோடி ரூபாய் அதிகமான வருமானம் பெற முயற்சித்திருக்கிறார்கள். 120லட்சம் நாட்டுச் சாராயம் விற்க அனுமதி அளித்து இருக்கிறார்கள். அதிக லாபத்திற்காக சாராயக் கடைகளை ஏலம் விடுவதன் மூலம் 8 கோடியே 50 லட்சம் ரூபாய் வருகிறது என்றும் 91 கோடியே 20 லட்சம் வருமானம் கிடைப்பது 1981–82 ஆம் ஆண்டு 100 கோடி வருமானம் கிடைக்கும் என்று பஞ்சாப் சொல்கிறது. இதனை திரு. சித்தன் அவர்கள் குஷ்டரோகியின் கையிலிருந்து கிடைக்கும் வெண்ணெய் என்று சொல்லமாட்டார் என்று நம்புகிறேன். அரியானா முதல்வர் பஜன்லால் அவர்கள் மதுவின் மூலமாக 59 கோடி ரூபாய் வருமானம் வருவதாக 1981-82ஆம் பைனான்சியல் இயரில் 67 கோடி ரூபாய் கிடைக்க விலையை ஏற்றிவிட்டார்கள். ஆண்டுக்கு 8 கோடி ரூபாய் அதிக லாபம் அரியானாவில் 150 லட்சம் நாட்டுச் சாராயத்தை விற்க அனுமதி அளித்து இருக்கிறார்கள். இவையும் திரு. சித்தன் அவர்கள் குஷ்டரோகியின் கையிலிருந்து கிடைக்கும் வெண்ணெய் என்று சொல்லமாட்டார் என்று நம்புகிறேன். ஆனால் பரவாயில்லை, அவர் தீவிர காந்தியவாதி. காந்தீயம் தமிழ்நாட்டுக்கு மட்டும் தான், இந்திய நாட்டுக்கு அல்ல என்ற கொள்கையில் அழுத்தமாக உள்ள திரு. சித்தனை நான் வாழ்க என்று வாழ்த்துகிறேன். இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் காங்கிரஸ் கட்சியின் கொள்கையை அகில இந்திய அளவிலே வைத்து தான் பேச வேண்டுமே தவிர தமிழ்நாடு தேசியம் அது தனி என அவர்களே பிரிவினை வாதிகளாக மாறக்கூடாது என்பதை நான் அறிவுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் திரு. சுந்தரராஜ் அவர்கள் பிரச்சாரத்தின் மூலம் மதுவின் கொடுமையை விளக்க ஒரு கோடி ஒதுக்கப்பட்டது. எனது அண்ணன் சற்று தரம் தாழ்ந்தே அதற்கு விளக்கத்தைச் சொன்னார். ஆகவே



சுந்தரராஜ் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற கட்சியின் துணைத் தலைவர் ஆக மட்டும் இருந்தால் போதாது. இந்திரா காந்தி அம்மையாரின் எண்ணத்திற்கு மாசு கற்பிக்காமல் வாழ்ந்திட வேண்டும். ஏனென்றால் வாழும் இளைஞர் வாழ்ந்தாக வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். 1976 ஆம் ஆண்டு காந்தி ஜெயந்தி அன்று இந்திரா காந்தி அம்மையார் மதுவிலக்குபற்றி 12 அம்ச திட்டத்தை அறிவித்திருக்கிறார். மதுவிலக்கை சட்டத்தின்மூலம் கொண்டுவரமுடியாது, பிரச்சாரத்தின் மூலம் தான் கொண்டு வரமுடியும் என்று இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். பிரச்சாரத்திற்காக 1 கோடி ரூபாயை புரட்சித் தலைவர் ஒதுக்கியுள்ளதை இந்திரா அம்மையார் அவர்கள் மேல் நம்பிக்கையால் அதை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அதேபோல்தான் நான் சில உத்திரவாதங்களைக் கேட்க ஆசைப்படுகிறேன். மதுவிலக்கு தளர்த்தப்படுவதை குறைபடுத்திப் பேசும் கட்சித் தலைவர்களே, உங்கள் கட்சியிலே உள்ள உடன்பிறப்புகள் குடிக்கமாட்டார்கள் என்று உத்திரவாதத்தை உங்களால் தரமுடியுமா? மது லைசென்ஸை எடுக்கமாட்டார்கள் என்று உங்களால் கூறமுடியுமா? கடைகளைப் பிடிக்க முயற்சி கூட மேற்கொள்ளமாட்டோம் என்று உங்களால் சொல்ல முடியுமா சொல்லமுடியாது. காரணம் அதுதான் நாட்டிலே ஏற்பட்டுள்ள கட்டாயம். புனிதமான மதுவிலக்குக் கொள்கையிலே அத்தனை பெருக்கும் மாற்றம் இல்லை, ஆனால் கட்டாய நிலை காரியம் ஆற்றுகிறது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

* * *

மதுவிலக்குக் கொள்கையில் இந்த அரசு தள்ளாடுகிறது என்று கூறும் அருமை நண்பர் திரு ரகுமான்கான் அவர்களே,

* * *

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, என்னைப்பற்றிச் சொல்லியிருப்பதால் நான் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் சொல்ல வேண்டும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்களின் பெயரைச் சொன்னதால் அவர்கள் வாய்ப்புக் கேட்கிறார்கள். ஆகவே, பெயரைச் சொல்லாமல் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா : வெங்காயத் தோல் என்று குறிப்பிட்டபோது மட்டும் சிரித்தீர்களே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சபையிலே பேசுவது மாதிரி பேச வேண்டும். அதில் தரம் தாழ்ந்து விடக்கூடாது. உங்கள் கட்சியில் உள்ள இரண்டு தலைவர்களைப்பற்றிப் பேசினார்கள். அவர்கள் சும்மா இருந்தார்கள்.

திருமதி டி. யசோதா : வெங்காயத் தோல் என்று சொன்ன பொழுது மட்டும் சிரித்தீர்களே என்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் கண்ணியத்தோடு நடந்து கொள்ள வேண்டும்; வரம்பு மீறிப் பேசக் கூடாது. எல்லோரும் கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

திருமதி டி. யசோதா : கட்சிப் பாகுபாட்டோடு பார்க்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எனக்குக் கட்சிப் பாகுபாடு கிடையாது. எனக்கு உள்நோக்கம் கற்பிப்பது மாதிரி பேசுவது தவறு. இந்த நாற்காலிக்கு உரிய மரியாதையைக் கொடுத்தாக வேண்டும் என்பதைக் கூறி அவர்களை எச்சரிக்கிறேன். உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் இழிவுபடுத்திப் பேசக்கூடாது. உங்கள் கட்சியில் இருந்த இரண்டு தலைவர்களும் கேட்டுக்கொண்டு தானே இருந்தார்கள். அவர்கள் பிறகு பேசும்பொழுது பதில் சொல்ல வேண்டுமென்றால் சொல்வார்கள். இதனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் பாதிக்கப்படவில்லை. திரு. துரை முருகன் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்கள் ; உறுப்பினர் பேசி முடித்தவுடன் அதற்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னேன். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இம்மாதிரி பேசுவது கூடாது : கண்ணியத்துடன் நடந்து கொள்ளுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : எங்கள் உறுப்பினரவர்கள் சொன்னதற்குத் தங்களுக்கு இவ்வளவு கோபம் வருகிறதே ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் சிரித்தேன் என்று சொன்னார்கள். சந்தோஷம் ஏற்படும்பொழுது நானும் தான் சிரிப்பேன் ; நானும் மனிதன்தான்.

திரு. ஆர். தியாகராசன் : நாங்கள் சொல்வதையும் ரசிக்க வேண்டும் . அவர்கள் சொன்னதையும் ரசிக்க வேண்டும்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சிரிக்கக்கூடிய வார்த்தைகளை யார் சொன்னாலும் எனக்கும் சிரிக்கத் தெரியும்.

*திரு. க. அன்பழகன் : துணைத் தலைவரவர்களே, ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்பொழுது எதிர்கட்சியில் உள்ளவர்களையெல்லாம் சவால் விட்டு அழைப்பதைப்போல அவர்களெல்லாம் லைசென்ஸ் வாங்காமல் இருப்பார்களா என்று கேள்வியைக் கேட்டார்கள்.

பிறகு * * *

அடுத்து * * தவறான குற்றச்சாட்டை சொன்னால் அப்பொழுதே பதில் சொல்ல வேண்டிய நிலைமை, அவசியம் எங்களுக்கு இருப்பதால் இதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலட்சிய உறவில் பின்னிக் கிடக்கும் தி. மு. க., இந்திரா காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடத்தும் பாண்டிச்சேரியில் அரசாங்கமே வடிசாராய ஆலை நடத்துகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், கண்ணற்ற குருடனைப் பார்த்து கண்ணாயிரம் என்று சொல்வதா என்று ஒன்றைச் சொன்னார். அவருக்கு நான் பதில் சொல்லுகின்றேன், ஊருக்கு உபதேசம், உனக்கென்னடி மகளே என்று நீங்கள் பேசக் கூடாது என்ற பதிலை அவருக்கு நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். மதுவிலக்குக் கொள்கை இந்தியா முழுமையும் தோல்வியைத் தழுவியிருக்கிறது. காந்தி பிறந்த மண்ணான குஜராத்தில் மது விலக்கு அமுலில் இருந்தாலும் அங்குகூட, வசதி படைத்தவர்களுக்காக 31,000 பர்மிட்டுகள் தரப்பட்டுள்ளன. தொழிலாளர்களில் 74 சதவீதத்தினர் மதுப் பழக்கத்திற்கு அடிமையாகியிருக்கிறார்கள் என்று 12--9--1980--ல் குஜராத் சட்ட மன்றத்திலேயே அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இன்று மதுவிலக்குக் கொள்கையை தளர்த்துவதற்கான சூழ்நிலை யாது? யார் காரணம் என்பதை நாம் ஆராயாமல் இருக்க முடியாது. புரட்சித் தலைவர் கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்த நேரத்தில், எதிர்க்கட்சிகளை ஒடுக்க, கடுமையான சட்டம் என்று கதறியவர்கள் யார் ? மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்தான். ஏழைத் தொழிலாளர்களை, சிறையிலே தள்ளி, தாய்மார்களை,......

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஆளுங்கட்சி உறுப்பினர், அந்தச் சட்டத்திலே உள்ள குறைகளை எடுத்துச் சொல்லி, இந்தச் சட்டமன்றத்திலே நானே பேசியிருக்கிற பொழுது, எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்காக சொன்ன ஒரு காரணத்தை மட்டும், சொல்லுகிறபொழுது, ஒரு தவறான

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எண்ணத்தை உண்டாக்கும். அந்தச் சட்டத்தை இந்த அரசாங்கத்தாலே என்றைக்கும் முறைப்படி நிறைவேற்ற முடியாது. அதை நிறைவேற்றக்கூடிய அரசாங்கம் உலகத்திலே இல்லை என்று இந்தச் சட்ட மன்றத்திலே சொல்லப்பட்டது மட்டுமல்ல, அப்படி ஒரு சட்டம் கொண்டு வருவது, சமூக நீதிக்கு முரணானது என்றும் சொல்லப்பட்டது. இன்றைக்குக் கூட வந்திருக்கிற இந்தச் சட்டம், அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான கையாலாகாத தன்மையை அரசு உணர்ந்ததற்குப் பின்னாலே, அந்தச் சட்டம் பயனற்றுப் போய்விட்டது என்று தெரிந்து கொண்டதற்குப் பின்னாலேதான் வந்திருக்கிறது. எனவே, இந்த நேரத்திலே, எதிர்க்கட்சிகள் ஏதோ கதறியதாக, கலங்கியதாக, ஏதோ, அதற்காகவே அழுததாக, ஒப்பாரி வைத்ததாக எல்லாம் இந்தச் சட்ட மன்றத்திலே சொல்வது பொதுவாகவே எதிர்க்கட்சிகள் மீது ஒரு அவதூறைச் சொல்கிற வகையிலே அமைகிறது. அது முறையல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : ஏற்கனவே நடந்ததைப் பற்றி எடுத்துச் சொல்லக் கூடாது என்று பேராசிரியர் சொல்கிறார்..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பேச முடியாது, உட்காருங்கள். திரு. குமரி அனந்தன். (கூச்சல்—குழப்பம்)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....(கூச்சல்—குழப்பம்)

திரு. என். எஸ். வி. சித்தன் : அவர் என்னைப் பற்றி பேசியிருக்கிறார்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கட்சியின் சார்பிலே பேசும்பொழுது நீங்கள் சொல்லுங்கள். திரு. குமரி அனந்தன் 12.30 மணிக்கு ஊருக்குப் போக வேண்டுமென்றார். அதனால், அவரைப் பேசுமாறு அழைத்தேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அவர் என்னைப் பற்றி பேசியிருக்கிறார், கட்சியின் சார்பிலே ஏன் பேசவேண்டும்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கட்சியின் சார்பிலே தான் பேசமுடியும், கட்சியின் சார்பிலேதான் பதில் சொல்ல முடியும். ஒருவரைப் பற்றி ஒருவர் சொல்லிக் கொண்டே இருப்பாரேயானால், 234 பேர்களும் ஒரே நேரத்திலே ஒருவருக்கொருவர் பதில் சொல்லிக் கொண்டே இருக்கலாம். குற்றச்சாட்டுகள் தான் விவாதிக்கப்படும். சட்ட முன்வடிவின் மீது விவாதம் நடக்க முடியாது. அந்த முறையே சரியல்ல.



திரு. என். எஸ். வி. சித்தன் : நான் என்ன பேசுகிறேன் என்று கேட்டு, அதற்குப் பிறகு .........(கூச்சல்—குழப்பம்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

THIRU DURAI MURUGAN : Sir, Hon'ble Deputy Speaker has given me an assurance........

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே என்னைப் பற்றி ஒரு முறை அல்ல, பலமுறை, பல்வேறு கோணங்களிலே உறுப்பினர் வின்சென்ட், குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார். நான் அப்பொழுது எழுந்தபோது, எனக்கும் மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்கும், திரு. வின்சென்ட் பேசி முடித்ததற்குப் பிறகு வாய்ப்புத் தருகிறேன் என்று துணைத் தலைவர் சொன்னார். நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ளப் போவதில்லை. ஒன்றே ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல்—குழப்பம் இங்கே நம்முடைய வின்சென்ட் அவர்கள் பேசுகிற நேரத்திலே, நான் அன்றைக்கு நிதிநிலை அறிக்கை விவாதத்திலே பேசுகிற நேரத்திலே, (கூச்சல்—குழப்பம்)

.....

திரு. ஆர். மணிமாறன் : திரு. வின்சென்ட் பேசி முடிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வின்சென்ட் பேசி முடித்து, திரு. குமரி அனந்தன் பெயரைக் கூப்பிட்டாகிவிட்டது. அவரும் பேசத் தொடங்கிவிட்டார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய வின்சென்ட் அவர்கள் பேசுகிறபோது என்னைப் பற்றிப் பலமுறை சொல்லி இருக்கிறார். (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வின்சென்ட் அவர்கள் பேசி முடித்தாகிவிட்டது. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் பேச அழைக்கப்பட்டு, அவர் பேச ஆரம்பித்து விட்டார்.

திரு. எம். வின்சென்ட் : தலைவர் அவர்களே, நான் நீதி பேசுகிறேன், நியாயம் பேசுகிறேன், உண்மை பேசுகிறேன் ஆதாரத்தோடு பேசுகிறேன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வின்சென்ட், துடிப்புள்ள இளைஞர். அந்தத் துடிப்பை அவர் பயனுள்ள காரியங்களுக்குப் பயன்படுத்தினால் நல்லது.

திரு. ஆர். மணிமாறன் : பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சில் வின்சென்ட் அவர்கள் தன்னுடைய பேச்சை இன்னும் முடிக்கவில்லை. ஒரு மசோதாவில் பேசுகின்றபோது கால நேரம் பார்க்கக் கூடாது என்று நம்முடைய மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சற்று முன்னர்தான் சொன்னார். அது அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் பொருந்தும். திரு. வின்சென்ட் அவர்கள் தன்னுடைய பேச்சை இன்னும் முழுவதுமாக முடிக்கவில்லை. இதற்கிடையிலே பேசுகின்றபோதே பாதியிலே நிறுத்தப்பட்டு, அவர் உட்கார வைக்கப்பட்டிருக்கிறார் என்பதை தங்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன். தயவு செய்து வின்சென்ட் அவர்கள் பேசுவதற்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வின்சென்ட் அவர்கள் 20 நிமிடங்கள் பேசியிருக்கிறார். (குறுக்கீடு) பேச்சு என்பது குறுக்கீடு உட்படத்தான். அவர் 20 நிமிடங்கள் பேசியதாக அவைக்குறிப்பிலே இருக்கின்றது. இந்த மசோதாவுக்கு ஒரு மணி நேரம்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த ஒரு மணி நேரத்திற்குள் இதை முடிக்க வேண்டும். திரு. சித்தன் அவர்கள் பெர்சனல் எக்ஸ்பிளநேஷன் பின்னால் கொடுக்கலாம். திரு. குமரி அனந்தன் அவர்கள் இப்போது பேசுவார்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு அனுமதித்ததற்கு நன்றி. மதுவை ஆளுகின்ற முதல்வர் அவர்களும், விரும்பவில்லை என்பதனை பல்லாற்றானும், பல கூட்டங்களிலேயும் எடுத்துச் சொல்லி இருப்பதை நாம் எல்லாம் கேட்டிருக்கிறோம். இதற்கு முன்பு காந்தி மகான் பிறந்த தினங்கள் அன்றெல்லாம் வெளியிட்ட சுவரொட்டியிலே, மது அரக்கனை கொம்பு முளைத்தவனாக, கோரப்பல் கொண்டவனாக சித்தரித்து பாட்டில்களிலே போட்டு பூட்டி வைத்திருப்பது போன்று படம் எல்லாம் வெளியிட்டிருப்பதை நாம் கண்டிருக்கிறோம். அவன் வாலெடுத்து ஆட்களைப் பிடித்து விடக்கூடாது என்பதற்காக, வாய்கட்டிய ஒரு அரக்கனை உள்ளே வைத்து இருப்பதாக அந்தப் படம் போட்டிருப்பதை நான் பார்த்து இருக்கிறேன். மதுவை அரக்கன் என்று சொல்லுகிற காரணத்தால் மிகப் பெரும் புலவன் அரக்கனுக்கு என்ன விளக்கம் சொல்லுகிறான் என்பதை சொல்ல வேண்டும்.



[முற்பகல் 11.50]

இரக்கம் என்ற பொருள் இல்லாத நெஞ்சினன்—அரக்கன்—ஆக இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாத நெஞ்சினன் அரக்கன் என்ற காரணத்திற்காக பாட்டிலிலே போட்டு பூட்டுப் போட்டு வைத்தோம். ஆனால் அவனுக்குச் சிறிது இடைவெளி விட்டாலும் எவ்வளவு பெரிய ஆபத்து வரும் என்பதைச் சுட்டிக் காட்டத்தான் நாங்கள் விரும்புகிறோம்.

படத்திலே கூட, நடிக்கின்ற நேரத்திலே கூட, குடிப்பது போன்ற ஒரு காட்சி வந்து விடக்கூடாது என்பதிலே குறியாக, கவனமாக இருந்த நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று இந்த மது விலக்கைத் தளர்த்துவதற்குரிய சூழ்நிலையில் ஒரு மசோதாவைக் கொண்டு வருகிறார் என்று சொன்னால், உண்மையிலேயே மெத்த வருத்தத்தோடு அது பற்றிய கருத்துக்களைச் சொல்லவேண்டியிருக்கிறது.

இங்கே பேசிய அனைத்து உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். முன்னாலே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் சொன்னதை நான் இங்கே கோடிட்டுக் காட்டுதல் வேண்டும். அவர்கள் தங்களுக்குச் சாதகமாக இருக்கிறது என்பதற்காக முன்ன லே ஆண்ட கலைஞர் அவர்கள் சொன்ன உரையை எடுத்துக்கொண்டார்கள். இங்கே முழுவதும் மதுவிலக்கு இருக்கின்ற நேரத்தில் குஜராத்திலும், தமிழ் நாட்டிலும் மட்டும் இருக்கவேண்டுமா என்று சுட்டிக் காட்டுகின்ற நேரத்தில்—குஜராத்தைவிட தமிழ்நாட்டிற்கு அழுத்தம் கொடுத்துச் சொல்லவேண்டும் என்று அதைச் சொன்னார்கள். நான் அந்தப் பெருமகனாருக்குச் சொல்லிக் கொள்வேன். சுற்றிலும் நடப்பது தீமையாக இருந்து, அந்தத் தீமையை நாம் பின்பற்றவேண்டும் என்று எந்த நீதி நூலும் சொல்லவில்லை. சுற்றி இருப்பது நன்மையாக இருந்து நீங்கள் மட்டும் ஏன் அந்த நன்மையில் பங்குகொள்ளவில்லை என்பது தான் நீதி நூல்களின் கருத்தாக, நீதி மகான்களின் கருத்தாக இருக்கிறது.

வெள்ளைக்காரன் இந்த நாட்டைக் கொள்ளை அடித்துக் கொண்டு இருந்த நேரத்தில், எல்லோரும் கை கட்டி கப்பம் கட்டிக் கொண்டிருந்த நேரத்தில்—வானம் பொழியுது பூமி விளையுது உனக்கேன் கிஸ்தி—என்று கேட்ட தமிழக தேசியத்தை நாம் மறந்து விடக்கூடாது என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். மற்றவர்கள் எல்லாம் பேசாமல் இருக்கின்ற நேரத்தில் இந்தக் கட்டபொம்மனுக்கு மட்டும் என்ன வந்தது என்று யாரும் கேட்கவில்லை கணவன் இறந்து விட்டாலோ, அல்லது கணவன் கொல்லப்பட்டாலோ, அல்லது எரியுண்டு போனாலோ அதற்காக தீயிலே முழுகியவர்களும் உண்டு, பூவிழந்து

பொட்டிழந்து மூலையிலே உட்கார்ந்து முக்காடிட்டுக்கொண்டு இருந்தவர்களும் உண்டு, ஆனால் நான் எரியுண்டு போக மாட்டேன், மதுரை மாநகரை எரித்தே தீருவேன் என்று சொன்னாளே டத்தினிப் பெண்—அவள் செய்தது தான் புதுமை. ஆகவே, புதுமையைச் செய்யுங்கள், ஏன் மற்றவர்கள் செய்ததையே செய்யவேண்டும் என்று விரும்புகிறீர்கள். புரட்சி கரமான காரியங்களைச் செய்யுங்கள்.

நான் இன்னும் சொல்ல விரும்புகிறேன். இந்தியா முழுவதும் மதுக்கடைகள் திறந்து இருந்த நேரத்திலே 1937-ஆம் ஆண்டு சேலத்திலே மட்டுமே ராஜாஜி அவர்கள் மதுக்கடைகளை மூடினார். தமிழ்நாட்டிலே சுற்றி மதுக்கடைகள் இருந்த நேரத்திலே சேலத்திலே மட்டும் அவராலே மூட முடிந்தது என்று சொன்னால் அதற்கு நான் சொல்லவிரும்புகிறேன். கலைஞர் அவர்கள் சொன்ன உதாரணம் மிகச் சிறப்பாக இருந்தாலும் கூட, அவர்களுடைய தமிழுக்கு நான் மரியாதை செய்து, அதே நேரத்திலே என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். 'சுற்றி எரியும் நெருப்பு வளையத்தின் நடுவே பொருத்தாத கற்பூரமாக தமிழகம் இருக்கிறது' என்று சொல்வதற்குப் பதிலாக 'சுற்றி எரிகிற நெருப்புக்கு மத்தியிலே நீர் ஊற்றாகத் தமிழகம் இருக்கிறது. அந்த நீர் ஊற்று பொங்கட்டும், பொங்கிப் பாயட்டும், சுற்றி இருக்கிற நெருப்பை அணைக்கட்டும்'. 'அந்த நீர்' என்று நான் சொல்வது 'மதுவை ஒழிக்கும் நீர்' அதைத் தமிழ்நாடு தரட்டும், என்று சொல்கிற அந்த வகையிலே நெருப்புக்கு மத்தியிலே இருக்கின்ற நீர் ஊற்று என்கிற நல்ல பெயரை நாம் எடுத்தால் என்ன என்று சிந்திப் பதற்குத் தான் இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், 1937-ஆம் ஆண்டு மது ரத்து செய்யப்பட்டது. ராஜாஜி காலத்தில் ரத்து செய்யப் பட்டது. அதன்பிறகு, ராஜாஜி அவர்கள் ராசினாமா செய்ய வேண்டிய சூழ்நிலை. காங்கிரஸ் அரசாங்கம் ராசினாமா செய்தது. அதன் பிறகு வெள்ளைக்காரன் வந்தான். மீண்டும் 1939-லே மதுக்கடைகள் திறக்கப்பட்டன. மூடிய மதுக் கடைகள் திறக்கப்பட்டன என்றால், கள்ளமனம் கொண்ட வெள்ளையன் அந்தக் காரியத்தைச் செய்தான், நல்ல மனம் கொண்ட, வெள்ளை மனம் கொண்ட எம்.ஜி.ஆர். அவர்கள் செய்யலாமா என்பதைத்தான் நான் பணிவோடு, கனிவோடு கேட்டுக் கொள்கிறேன். அது தேவையில்லை என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன்.

200 கோடி ரூபாய் நமக்கு வருமானம் வருகிறது. 300 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்பது அல்ல. வருமானமா, மானமா என்பது தான் பிரச்னை. ஆக, மானத்தைவிட்டு வருமானத்தை நாம் தேட வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 200 கோடி ரூபாய் அளவிற்கு நாம் வருமானம் பெறுகிறோம் என்று



சொன்னால், இந்த நாட்டிலே உள்ள மக்கள் ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குக் குடிக்கவேண்டும். எனக்கு வந்து இருக்கும் தகவல் சரியானதா என்பதை தயவுசெய்து நீங்களே சீர்தூக்கிப் பார்த்துக்கொள்ளுங்கள், இல்லையென்றால் பரிசோதித்துப் பார்த்துக்கொள்ளுங்கள்; பாரி அன்ட் கம்பெனி ஒரு லிட்டர் 4 அணாவிற்கு விற்கிறது. அரசாங்கம் அதற்கு $3\frac{1}{2}$ ரூபாய் வரி போடுகிறது. ஆகவே, 3.75 ஆகிறது. ஆனால் அதைக் கடைக்காரன் தொழிலாளிக்கு 15 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக் கிறான். 15 ரூபாய்க்கு விற்கிறார்கள் என்று சொன்னால் நான் சொன்ன கணக்கை விட அதிகமாகக் கூடப்போகும்.

200 கோடி ரூபாய் நமக்கு வருமானம் வர வேண்டும் என்று சொன்னால், அவர்கள் துணிக் கடைக்குப் போவதை நிறுத்திக் கொள்ள வேண்டும், உணவுக் கடைக்குப் போவதை நிறுத்திக் கொள்ளவேண்டும், நகைக் கடைக்குப் போவதை நிறுத்திக் கொள்ளவேண்டும், பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகளை அனுப்புவதை நிறுத்தவேண்டும். இப்படியெல்லாம் செய்து இந்த 200 கோடி ரூபாய் வருமானத்தை இந்த அரசு பெறவேண்டுமா என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குடியினாலே வருகின்ற கேட்டைப்பற்றி நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. ஏனென்றால் இந்தக் குறிப்பிட்ட நேரத்தில் நான் முடிக்க வேண்டுமென்ற சித்தாந்தத்தின் அடிப்படையிலே இன்னும் சில மணித் துளிகளிலே நான் முடித்துக்கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாகச் சொல்வதாக இருந்தால் பி.ஏ.எஸ் பள்ளிக்கூடத்திலே படித்துக்கொண்டிருக்கிற, செகன்ட் ஃபார்ம் பையன் குடித்துவிட்டு வந்திருக்கிறான். ஆசிரியர் கேட்கிறார் ஏனடா குடித்துவிட்டு வந்தாய் என்று. அப்பாவுக்கு வாங்கிக் கொடுத்தேன், மிச்சத்தை நான் குடித்தேன் என்று பையன் சொல்கிறான். 25 வயது வரம்பு என்னாகும்? இன்று நீங்கள் பார்க்கலாம். விருகம்பாக்கம் போலீஸ் புலன் விசாரித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். மிதம் மிஞ்சி குடித்த காரணத்தாலே 28 வயது மதிக்கத்தக்க ஒருவன் செத்துக் கிடக்கிறான் நடு ரோட்டிலே. ஆக, 25 வயதுக்கு மேலேயுள்ள ஒருவன் எவ்வளவு குடித்தாலும் சாகமாட்டான் என்று அர்த்தமா? செத்துதானே கிடக்கிறான் அவன்? ஆக மதுவிலக்கைப் பொறுத்த வரையில் அவ்வளவு தூரத்திற்கு இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்

டெல்லியைப் பற்றிச் சொன்னால், டெல்லியிலே கூட ஒரு தனயன் தந்தையைக் கொன்றிருக்கிறான், ஏன்? தந்தை குடித்துவிட்டு தள்ளாடி வந்தது மட்டுமல்ல; போதை ஏறி வந்தது மட்டுமல்ல; காம வெறி ஏறி வந்திருக்கிறான். தன்னுடைய மனைவிக்கு முன்னாலே பெற்ற மகளை அவன்

பெண்டாள நினைத்திருக்கிற அந்த நேரத்தில் அந்த சண்டாளனுடைய செயலைத் தடுக்க முடியாமல் கண்ணீர்விட்டு கதறி அந்தத் தாய் கலங்குகின்ற காலத்தில் பையன் கத்தியை எடுத்து குத்தி, தந்தையை கொன்றிருக்கிறான். இது டெல்லியிலேதான் நடந்திருக்கிறது. தவறு செய்தது டெல்லியாக இருந்தாலும் சரி சென்னையாக இருந்தாலும் சரி தவறு தவறு தான் என்பதனை சுட்டிககாட்டுகின்ற ஒரு நிலையிலே நாம் எல்லாம் இருந்தாக வேண்டும், அதிலே எந்தவிதமான மழுப்பலும் இருக்கக்கூடாது, வழுவலும் இருக்கக்கூடாது என்பதை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

சிலர் சொல்ல விரும்புகின்றார்கள். அருமைக்குரிய சகோதரர்கள் இந்த மதுவிலக்கைப் பொறுத்தவரையில் தோற்று விட்டது என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 1920 ஆம் ஆண்டு மதுவிலக்கு அமெரிக்காவிலே கொண்டுவரப்பட்டது. 1930 ஆம் ஆண்டுவரை வெற்றிகரமாக அது நடந்தது. ஒவ்வொரு ஆண்டுக்கும் அங்கே நடந்த சாதனைகள் அமெரிக்காவில் இருந்த காரணத்தால் நடந்த சாதனைகள் புத்தக வடிவிலே மாண்புமிகு இராஜாஜி அவர்களுடைய நூலகத்திலே இருக்கிறது, இப்போதும் சென்று படிக்கலாம். பிறகு எப்படி அது மீண்டும் வந்தது? அங்கே இருக்கிற சில பணக்கார பத்திரிகைகள் அதை எதிர்த்து வெளியிட, சில 'இன்டரெஸ்டட் லாபி' என்று சொல்வார்களே, அவர்கள் அதனை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று துடித்த துடிப்பிலே அந்த சதியிலே அமெரிக்கா வீழ்ந்தது. அதைப்போல நாமும் சதி செய்யவேண்டியதில்லை. என்ன காரணத்தைக் கொண்டும் அமெரிக்காவிலே தோல்வியடைந்தது என்ற காரணத்தைச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம்.

அமெரிக்காவில் இருக்கிற மிகப்பெரும் தலைவராக கருதப்படுகின்றவர், 'தி கெட்டிஸ்பர்க் ஸ்பீச்' என்று சொல்லுகின்ற தலைசிறந்த பிரசங்கத்தை செய்த ஆப்ரகாம் லிங்கன் சொன்னார். மதுவுக்கு ஆதரவாக எத்தனையோ நியாயவான்கள் வரலாம்; ஆனால் ஆதரவாக நியாயம் வராது. ஆகவே, There will be defenders, but there will be no defence. ஆக டிபென்டர்ஸ் இருக்க முடியுமே தவிர மதுவுக்கு டிஃபென்ஸ் இருக்கமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாக முடியுங்கள்; வேண்டுமா, வேண்டாமா என்ற இரண்டில் ஒன்றுதானே.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மதுவிலக்கைப் பொறுத்தவரையில் நான் மிகுந்த நிதானத்தோடு பேசிக் கொண்டிருக்கிற காரணத்தாலேதான் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்து விடுவேன். ஏனென்றால் முடிக்கின்ற பழக்கம், படிக்கின்ற பழக்கம் மட்டும்தான் உண்டு, முடித்து விடுகிறேன்.



ஆகையால், அமெரிக்காவிலே ஆப்ரகாம் லிங்கன் சொன்னார். இதை ஒரு கான்சராக, புற்றுநோயாக கருத வேண்டுமென்று சொன்னதற்குரிய காரணம் புற்றுநோயை நீங்கள் வேறு வகையிலே களைய முடியாது. அதனுடைய வேரோடு வெட்டி எறிந்தால்தான் முடியும் என்று. நீங்கள் தளர்த்துவதற்காக நான் இதைச் சொல்கிறேன்.

இன்னும் ஒரு உதாரணம் இங்கே சொல்ல வேண்டும். லாயிட் ஜார்ஜ் சொன்னான். மிகப்பெரிய அமெரிக்காவிலே நான் சொன்னேனே, அதைப் போல ஆங்கில நாட்டை ஆண்டுக் கொண்டிருந்த லாயிட் ஜார்ஜ் சொன்னான். நாம் 3 விரோதிகளை எதிர்த்துப் போராடுகிறோம். ஒன்று, ஜெர்மன், இன்னொன்று ஆஸ்திரியா, இன்னொன்று மது. இந்த மூன்றிலும் கடுமையான கொடுமையான பகைவன் மதுதான் என்று சொன்னான்.

காந்திமகான் சொன்னதை நான் உங்களுக்குச் சொன்னால் இவன் அதைத்தானே சொல்வான் என்று நினைப்பீர்கள். ஒரு மணி நேரம் என்னை இந்த நாட்டினுடைய ஆட்சியாளன் ஆக்கினால் இழப்பீடு, நஷ்டயீடு எதுவும் கொடுக்காமல் அத்தனை மதுக்கடைகளையும் மூடிவிடுவேன் என்று சொன்னார் காந்தி மகான்.

நான் இன்னும் ஒருபடி மேலே போய், முடிப்பதற்கு முன்னால் முத்தாய்ப்பாக அதனை வைக்க வேண்டும் என்பதற்காக இந்த மாமன்றத்திலே வீற்றிருந்த ஒரு மிகப்பெரும் தமிழன், தமிழ் நெஞ்சம் கொண்ட ஒரு மனிதன், மிகச்சிறந்த நாவீறு படைத்த நல்ல தமிழ் பேச்சாளன் சொன்னதை இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இங்கே இருக்கிற இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டதை நான் பார்க்கின்றேன். பரிமாறிக் கொண்டவர்கள் அத்தனை பேர்களையும் வளர்த்து ஆளாக்கிய பெருமகன் 1968 ஆம் ஆண்டு இதே செனட்டினரி ஹாலிலே இராஜாஜி இருக்க, கிருபளானி இருக்க, காமராஜ் இருக்க, சுசிலா நய்யர் இருக்க, எல்லோரும் இருக்கின்ற நேரத்திலே அவர் என்ன பேசினார்? நான் இந்த காசுக்காக கள்ளுக்கடைகளைத் திறக்க மாட்டேன். The wailing women and weeping children என் மனக்கண் முன்னால் நின்றுகொண்டிருக்கிறார்கள். அரக்குகின்ற பெண்மணிகள். அழுகின்ற கண்மணிகள்—அரக்குகின்ற பெண்மணிகளும் அழுகின்ற கண்மணிகளும் என் கண்முன்னாலே நிற்கின்ற காரணத்தாலே காசுக்காக நான் கள்ளுக்கடைகளைத் திறக்கமாட்டேன்; மாசுபட வைக்கமாட்டேன் காசுக்காக என்று சொன்னாரே அந்தப் பேரறிஞர் அண்ணாவையும் நினைவு படுத்துகிறேன்.

[நண்பகல் 12-00]

உங்களிலே சிலருக்கு ஒரு எண்ணம் தோன்றக்கூடும். இங்கே தளர்த்துவது என்ற சொல் வருகிறதே என்பதற்காகத்தான ஒரு சான்றை, அவர் பேசியதை மட்டுமே இங்கே குறிப்பிட்டு முடிக்க நான் விரும்புகிறேன். மைசூரிலே கள்ளுக்கடையினைத் திறக்க வேண்டும் என்று முடிவு செய்த நேரத்திலே மரியாதைக்குரிய அண்ணா அவர்கள் என்ன பேசி இருக்கிறார் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காஞ்சியிலே அவர் எழுதிய தலையங்கத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மனிதனாகிப் போனேன் என்று பாடிக் காட்டினான் நகைச்சுவை மன்னன் என். எஸ். கிருஷ்ணன், நல்லதம்பி என்ற படத்தில், இப்போது மனிதன் ஆகவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். மைசூர் அமைச்சர் அவர்கள் நிருபர்களிடம் கூறுகிறார், 'மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்தப் போகிறோம்' என்று. அப்படியானால் மதுவிலக்குச் சட்டம் தோற்றுவிட்டதா என்று அவர்கள் கேட்கிறார்கள். அப்போது அந்த அமைச்சர் அழகாகப் பதில் கூறுகிறார், 'மதுவிலக்குச் சட்டம் தோற்றுவிடவில்லை, ஆனால் நாம் வெற்றி பெறவில்லை என்பதுதான் உண்மை' என்று. ஆக மதுவிலக்குத் திட்டம் தோற்று விடவில்லையாம், ஆனால் நாம் வெற்றிபெறவில்லையாம். அதாவது நான் விதவை அல்ல, என் கணவர் தான் இறந்து விட்டார் என்று சொல்வதைப்போல் அல்லவா இருக்கின்றது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்கிறார். ஆக மதுவைத் தளர்த்தவேண்டுமா, தளர்த்திக்கொடுக்கவேண்டுமா என்பதை நான் சொல்லவேண்டியதில்லை, அண்ணா அவர்களே சொல்கிறார்கள். மதுவிலக்குத் திட்டத்தினால் எல்லா மட்டத்திலும் லஞ்ச லாவண்யம் தாண்டவம் ஆடுகின்றது, மதுவிலக்கு சட்டத்தினால் மட்டரகச் சரக்குகளை எல்லாம் குடித்துவிட்டு மக்கள் நாசமாகிறார்கள் என்ற விவாதத்திற்கு அவர் பதில் சொல்கிறார். அப்படி மட்டரகச் சரக்கு இல்லாமல் நல்லரகச் சரக்கு கொடுப்பதற்கா அரசாங்கம் இருக்கின்றது என்று கேட்கிறார். ஆக தீமையிலே நல்லதா? தீமை தீமைதானே! என்று சொல்லுகின்ற அவருடைய குரலைத் தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். இறுதியிலே அவர் சொல்லி முடிக்கிறார், மகாத்மாவுக்கு ஜெயந்தி, மது குடிப்போருக்கு நல்ல சரக்கா என்று கேட்கிறார். அவர் கேட்பது எல்லோருக்கும் தான் பொருந்தும். காந்தியின் சிலைகளை மூடிவிட்டு நீங்கள் மதுக்கடைகளை திறந்துவிடுங்கள், காந்தியினுடைய சிலையை வைத்துக்கொண்டு அந்தக் காரியத்தைச் செய்யாதீர்கள் என்று சொல்கின்றவர் மிக அழகாக இடையிலே சொல்கிறார், இந்தத் திட்டம் நமக்கு வேண்டாம் என்று. அவ்வாறு இந்தத் திட்டம் நமக்கு வேண்டாம் என்று அவர் சொன்னதையே நானும் சொல்லிக் கொள்கிறேன். மகாத்மா காந்திக்கு விழா எடுப்பது ஒரு பக்கம், கள்ளுக்கடைகளைத் திறப்பது இன்னொரு பக்கமா? என்று கேட்கின்ற அதேநேரத்திலே அண்ணாவுக்கு விழா எடுப்பது ஒரு பக்கம், அரக்கு ஷாப்புகளைத்



திறப்பது இன்னொரு பக்கமா? அண்ணாவுக்கு விழா எடுப்போம், 1-ஆம் நம்பர் கடையிலே ஒயின் குடிப்போம் என்று சொல்வது நியாயமா? நல்ல உள்ளம் கொண்டவர்கள் இதைச் செய்யலாமா? இதை எதிர்த்து நிற்பேன், இந்த அக்கிரமத்தைத் தடுத்து நிறுத்து வேன், மதுக்கடைகள் திறக்கப்படாது, திறக்கப்படாது என்று சொல்லியவர் அவர். ஆகவே அவர் சொல்லியதைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு கொண்டு இதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்கின்ற வகையில் ஆய்வுக் குழுவுக்குக்கூட விடவேண்டாம் என்றும் இதை நீங்கள் பின் வலித்துக் கொள்ளுங்கள் என்று காந்தி-காமராஜ் காங்கிரஸ் கட்சி யின் சார்பிலே கேட்டுக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு ஆளும் கட்சியின் உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் பேசுகின்றபோது *** என்று சொன்னார். அந்தப் போர்ஷன் இந்தச் சபையின் நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கவேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியெல்லாம் பேசக் கூடாது. நீங்கள் குறிப்பிட்டதையும் சேர்த்து நீக்குவதற்கு உத்தர விடுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது, பணக்காரன் கையிலே இருக்கிற பணம், குஷ்டரோகியின் கையிலே இருக்கக்கூடிய வெண்ணைக்குச் சமம் என்றுதான் சொன்னார்களே தவிர வேறு அல்ல. மதுவிலக்குக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? அண்ணா அவர்கள் சொன்னதைச் சரியான முறையில் நீங்கள் தெரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே என்ன விஷயம் என்றால், என்னை வைத்துக்கொண்டே எல்லோரும் அண்ணாவைப் பற்றி பேசுகிறீர்களே என்பதுதான். திரு. பொ. விஜயராகவன்.

திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, இந்த மது விலக்குச் சட்டத் திருத்த முன் வடிவின் மீது நான் சார்ந்திருக்கிற ஜனதா கட்சியின் சார்பில், ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லி அமர்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. பொ. விஜயராகவன்] [1981 ஏப்ரல் 10

இன்றைக்கு மதுவிலக்கைத் தளர்த்துகின்ற வகையில், மதுக்கடைகளையும், கள்ளுக்கடைகளையும் திறக்கின்ற வகையில், 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் குடிக்கலாம் என்ற வகையில், இந்த அரசாங்கம் இந்தச் சட்டத்திருத்தைக் கொண்டு வந்திருக்கிறது. என்னுடைய கட்சியின் சார்பிலே இதை நான் வன்மையாகக் கண்டிப்பதோடு, இந்தச் சட்டத் திருத்தத்தை நீங்கள் வாபஸ் பெறவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். மற்றைய மாநிலங்களை உதாரணம் காட்டி, அங்கே இது போன்ற கள்கடைகளை, மதுக்கடைகளை திறந்திருக்கிறார்க . ஆகவே நாங்கள் மட்டும் எப்படி அவைகளை மூடி வைத்திருக்க முடியும் என்று சொல்லாதீர்கள்.

மற்றவர்கள் தப்பு செய்கிறார்கள், மற்ற இடங்களில் தப்பு நடைபெறுகிறது என்று காட்டி, நாமும் அதே தப்பைச் செய்ய வேண்டுமா? இப்போதிருக்கக் கூடிய ஒரு சமுதாயத்தினர் இளம் சமுதாயத்தினர் குடிப்பழக்கம் என்பதே ஏற்படாமல், குடி என்றால் என்னவென்றே தெரியாமல், இருந்துக் கொண்டிருக்கின்றனர். வளர்ந்து வரும் அந்த இளைஞர் சமுதாயம் நல் வழியிலே வளர வேண்டும் என்பதற்காக, திட்டங்களைத் தீட்ட வேண்டிய அரசாங்கமே அவர்களை மிக மோசமாக பாதிக்கக் கூடிய ஒரு நிலைமைக்கு கொண்டு தள்ளினால், அரசாங்கமே இந்த வேலையைச் செய்தால், யாரிடம் போய் முறையிடுவது என்று தெரியாமல் நாங்கள் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்போம் என்று வாக்குறுதி தந்துவிட்டு அரசாங்கம் அமைத்த இந்த ஆட்சி, கள் கடைகளைத் திறப்பதன் மூலம், மதுக் கடைகளைத் திறப்பதன் மூலம் தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்துவிடலாம் என்று நினைக்கிறதா என்று எனக்குப் புரியவில்லை. இப்படி மதுவிலக்கைத் தளர்த்துவதன் மூலம், வளர்ந்து வரும் இளைஞர் சமுதாயத்தை, மது அரக்கனின் கரங்களிலே ஒப்படைக்க வேண்டுமா என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இந்த மன்றத்தில் வீற்றிருந்தார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இந்த மன்றத்தில் வீற்றிருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் வீற்றிருந்தார்கள். இன்றைக்கும் அவர்கள் எல்லாம் தங்கள் திருவுருவப் படங்களில் இங்கே வீற்றிருக்கிறார்கள். இந்தப் பெரியவர்கள் எல்லாம் மதுவிலக்கைத் தளர்த்துவதை ஆதரித்து ஒரு நாளும் பேசியது இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட இந்தச் சட்டமன்றத்தில், இந்த மதுவிலக்கு தளர்த்தும் மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டாம். ஆகவே அதை உடனடியாக நீங்கள் வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



1981 ஏப்ரல் 10]

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மதுவிலக்கு திருத்த மசோதாவில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லஎன்னை அனுமதித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய அனைத்து உறுப்பினர்களும் கட்சிவாரியாக தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். அதிலே பெரும்பான்மையாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மதுவிலக்குக் கொள்கையை தளர்த்தக்கூடாது என்று அருமையாக வாதம் செய்தார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் எந்தக் காரணங்களுக்காக மதுவிலக்கை தளர்த்தக் கூடாது என்று மற்றவர்கள் சொன்னாலும் கூட, இன்றைக்கு மதுவிலக்கை தளர்த்த வேண்டிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிற காரணத்தினாலே ஒன்று கூற விரும்புகிறேன். ஏழை எளிய மக்கள் நாள்தோறும் காலையில் சென்றால், மாலை வரையில் வேலை செய்து களைத்து விட்டு வரும் நேரத்தில் களைப்பைப் போக்க வேண்டும் என்பதற்காக மதுவின் துணையை நாடுபவனை காவல்துறையினர் கொடுமைப்படுத்துகின்றனர். அத்தகைய கொடுமையான சூழ்நிலை இன்றைக்கு நாட்டிலே இருக்கிறது. இங்கே தத்துவங்களைப் பற்றிப் பேசினார்கள். பெரிய பெரிய தலைவர்களின் வாக்குகளை, தத்துவங்களை இங்கே எடுத்துரைத்தார்கள். அவர்கள் எல்லாம் சொன்னார்களே அதனால், உங்கள் கொள்கைகளை நீங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும்—வாபஸ் வாங்க வேண்டும் என்று கூறினார்கள், என்னைப் பொறுத்தவரையில், நான் சார்ந்திருக்கிற குடியரசுக் கட்சியைப் பொறுத்தவரையில், அந்த ஏழை எளிய மக்கள் காவல் துறையினால் கொடுமைப் படுத்தப்படுவதைத் தடுக்க சட்டம் கொண்டு வருகிற வரையில், இந்த மதுவிலக்கைப் பற்றி பேசுவதில் நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10]

இன்றைக்கு எவ்வளவோ கடுமையான சட்டங்கள் இருந்தாலும், அதாவது ஒருவருக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனை, ரூ. 2,000 அபராதம் என்று விதிக்கக்கூடிய கடுமையான சட்டம் இருந்தாலும், நாட்டிலே கள்ளச்சாராயம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, பாதிக்கப்படுகின்றவர்கள் ஏழைஎளிய மக்கள்தான். இதுவரையிலே ஒரு பணக்காரர் அல்லது வசதி படைத்தவர்கள் யாராவது இதிலே மாட்டி இருக்கிறார்களா அல்லது உள்ளே தள்ளப்பட்டிருக்கிறார்களா என்று பார்த்தால், யாருமே கிடையாது. இன்றைக்குச் சிறைச்சாலை கொடுமையை அனுபவிக்கின்ற அத்தனை பேர்களும் இந்த ஏழை எளிய மக்கள் என்பதாலே, ஒன்று, இந்தக் கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கு மிகுந்த கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால், ஏற்கனவே எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் போதாத நிலை இருக்கின்றது என்பது தெரிகிறது. இன்னும்

வெளிப்படையாகச் சொல்லவேண்டுமானால், போலீஸ்காரர்கள் இதை நிறைவேற்றுவதிலே தயக்கம் காட்டியிருக்கிறார்கள். அதனால்தான் இது தோற்றுப்போய்விட்டது. கள்ளச்சாராயம் விற்கின்றவர்கள், காய்ச்சுகின்றவர்கள் ஆகியோர்களை கைது செய்து உள்ளே தள்ளுகின்ற நிலையில் போலீஸ்காரர்கள் முழு மனது வைக்காத காரணத்தினால்தான், இப்படிப்பட்ட நிலை நாட்டிலே இருக்கிறது. அப்படி செயல்படாத காரணத்தினால், அதற்கு மாறாக அவர்கள் ஏழை எளிய மக்களைப் பிடித்து இதற்கு பலிக்கடாக்களாக்குகிறார்கள். குடித்துவிட்டு வருகின்ற ஏழை எளிய மக்களைப் பிடித்து அவர்கள் உள்ளே தள்ளுகிறார்கள். அதனால் அவர்கள் துன்பப் படுகிறார்கள். முழுமையாக காவல் துறையிலே இருக்கக்கூடிய வர்கள், மனச்சாட்சியோடு செயல்படுவார்களானால், புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மதுவிலக்கைத் தளர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆனால், அவர்கள் அப்படி செயல்படவில்லை. அதனால்தான் இந்த ஏழை எளிய மக்கள் அவர்கள் பிடியில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது. எனவே, இந்த மதுவிலக்குக் கொள்கைகளை தளர்த்தியாகவேண்டும். இல்லை என்று சொன்னால், அந்த மக்கள் இன்னும் கீழ்த்தரமான நிலைக்குச் செல்வார்கள். ஏழை எளிய மக்கள் இன்னும் இந்த போலீஸ் துறையின் அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுவார்கள். எனவே, கண்டிப்பாக இந்தக் கொள்கையை தளர்த்தியாக வேண்டும். ஏற்கனவே, 70, 80 சதவிகிதம் தளர்த்தப்பட்டிருக்கிறது. இன்னும் 20 சதவீதம்தான் இருக்கிறது. இதிலே பிடிவாதம் வேண்டாம். அடம் பிடிக்க வேண்டாம். எனவே, முழுமை யாகவே திறக்கவேண்டும்.

கர்நாடகாவிலே மது கரை புரண்டு ஓடுகிறது. அங்கே மது தாண்டவமாடுகிறது. ஆனால், அங்குள்ள ஏழை மக்கள் யாரும் தாலியை அறுக்கவில்லை. அதேபோல், மகாராஷ்டிராவிலே அல்லது இன்னும் பல மாநிலங்களிலே மது ஓடுகிறது. பாண்டிச்சேரியிலே ஓடுகிறது; ஓடிக்கொண்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது தாராளமாகத் திறந்து விட்டார்கள். ஆனால், அவர்கள் இன்றைக்கு அண்ணா தி. மு. கவைப் பார்த்து, இந்த அரசைப் பார்த்து, உங்களுக்கு இரட்டை இலை கட்சியின் சின்னமாக இருக்கிறது; உங்களுக்கு கொள்கையிலும் இரண்டு கொள்கையா என்று கேட்கிறார்கள். அன்றைக்கு எந்த லாபத்திற்காகத் திறந்துவிட்டார்கள், இன்றைக்கு இப்படி விமர்சிக்கிறார்கள். எனவே, ஏழை எளிய மக்களைக் காப்பாற்றுவதற்காக, இந்த கள்ளுக்கடைகளை திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குச் சட்டத்தை தளர்த்துகின்ற சட்ட முன்வடிவின் மீது அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பாக இங்கே விவாதிக்க அனுமதித்த உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.





இந்த மதுவிலக்கைத் தளர்த்துகின்ற முறையில் அகில இந்திய அண்ணா தி.மு.க. அரசு இப்போது இந்த திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால், சொல்லுகின்ற போது, இதிலே ஏன் அவர்கள் பிடிவாதம் காட்டுகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. மதுவிலக்கில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்று சொல்கிறார்கள். மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லக்கூடியவர்கள், தளர்த்துவதற்காகச் சொல்லுகின்ற காரணம், நாட்டிலே அதிகமாக குடிப்பழக்கம் வந்துவிட்டது; தடுத்து நிறுத்த முடியவில்லை என்கிறார்கள். அது மட்டுமல்ல. எங்கேயோ போய்ச் சேருகின்ற பணத்தைத் தடுக்கும் வகையில் தான், இதைத் தளர்த்தியிருக்கிறோம் என்று அந்த உண்மையை இந்த அரசு ஒத்துக் கொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். மது விலக்கின் மூலம் கிடைக்கக்கூடிய பணம் எங்கோ போய்ச் சேருகின்றது என்று எங்களைப் போன்றவர்கள் நீண்ட நெடுங் காலமாக எடுத்துச் சொன்னபோது, அதை ஒத்துக்கொள்ள வில்லை. இந்த முறை அதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு ஒத்துக் கொண்டமைக்கு நாங்கள் பாராட்டு கிறோம். ஆனால், இப்போது கொண்டு வந்திருக்கின்ற சட்டத்தில் மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு கொள்கை ரீதியாக ஒத்துக்கொள்கிறது, ஆனால் தளர்த்துகிறோம் என்று சொல்லுகிறார்கள். எங்களது இயக்கத்தைப் பொறுத்தவரையில் இன்றும், என்றும் சொல்கிறோம் மதுவிலக்கு இந்த நாட்டில் அமுல் படுத்த வேண்டுமென்று திட்டவட்டமாக இருந்தாலும் 33 ஆண்டுகால அனுபவத்திற்கு பின்னால் வரிசையாக வந்த ஆட்சிகள் அத்தனையும் மதுவிலக்குக் கொள்கையை அமுல் படுத்துவதிலே தோற்றுவிட்டது என்பதற்கு மற்றவர்கள் எல்லாம் சொன்ன காரணங்களை விட நான் தெளிவாக ஒன்றை சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். அண்டை மாநிலங்களில் அது இருக்கிறது. அதன் காரணமாகத்தான் இங்கு அமுல் படுத்தப்பட வேண்டும் என்ற காரணங்களை விட, இந்த நாட்டில் காங்கிரஸ் பேரியக்கம் இருந்த காலத்திலும் சரி, அதற்குப் பின்னால் வந்த திராவிட முன்னேற்ற கழக அரசானாலும் சரி அமுல் படுத்த முடியவில்லை என்று அவர்கள் மொத்தமாக தளர்த்தினார்கள். தளர்த்தியதற்கு பின்னால் காரணம் எதுவாக இருந்தாலும், மறுபடியும் அமுல் படுத்த வேண்டுமென்று சொன்னவர்கள்தான் மறுபடியும் தளர்த்தி கொண்டு வருவதை இந்த மன்றத்திலே பேசுகிறார்கள். நான் சொல்கிறேன், தொடர்ந்து இந்த அரசுகள் எத்தனையோ சட்டங்கள் கடுமையாகக் கொண்டு வந்தார்கள். காங்கிரஸ் ஆட்சியிலேயும் சரி, திராவிட முன்னேற்ற கழக ஆட்சியிலேயும் சரி, குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஆட்சியிலே கொண்டு வந்த சட்டம் மிகக் கடுமையான சட்டம். நாடு கடத்துவோம் என்று சொன்னதற்கு பின்னாலும், நாட்டில் நாடு கடத்தினாலும் அதையும் மீறுவோம் என்று சொல்கிற அளவிற்கு

மக்கள் வந்து விட்டார்கள் எனற காரணத்தினால் தளர்த்துகிறோம் என்று சொல்கிறார்கள். கோர்ட்டுகளில் எந்த அளவிற்கு வழக்குகள் அதிகரித்துள்ளன என்பதை பார்க்க வேண்டும். இது பற்றிய புள்ளி விவரங்கள் அரசிடம் இருக்கிறது. ஆண்டிற்கு ஆண்டு குடிப்பழக்கம் கூடியிருக்கிறது. காய்ச்சுபவர்கள் கூடியிருக்கிறார்கள். காய்ச்சுபவர்களுக்கு தண்டனை மட்டும் அல்ல; ஜாமீனில் அவர்கள் வெளியே வரமுடியாது என்ற சட்டத்தை கொண்டு வந்த போதும், அவர்கள் சாய்ச்சுவதை நிறுத்தவில்லை. அதை ஒழிக்கின்ற வகையில்தான் இந்த பணம் வேறு கைக்கு போகக்கூடாது என்பதற்காக இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்கிற பொழுது அந்த பணம் இன்னும் அதிசமாக வேறு கைக்கு போவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

காரணம் இந்த முறை வந்த பிறகு, தளர்த்துவது என்பதை விட்டு விட்டு ஒட்டுமொத்தமாக மதுவிலக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் நல்லது. தோற்றுவிட்டோம் என்று ஒத்துக் கொண்ட பிறகு இதில் ஏன் சில கட்டுப்பாடுகள், லைசென்ஸ் முறைகள்; ஏலம் கொண்டு வர வேண்டும்? அப்படி இல்லையென்றால் அங்கு அரசிற்கு வரும் பணம் குறைவதற்கு இடம் இருக்கிறது அதுமட்டுமல்லாமல் பல குற்றச்சாட்டுக்கள் இந்த அரசின் மீது வரக்கூடாது என்பதற்காகத் தான் சொல்கிறேன். வேண்டியவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கிறார்கள், அதிகாரிகள் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு கொடுத்தார்கள். ஆட்சியில் இருப்பவர்கள் சொல்லி அதிகாரிகள் செய்தார்கள் என்ற கெட்ட பெயர் இந்த அரசுக்கு வரவேண்டாம். ஏலத்தில் விட்டு விடுவதின் மூலம் இந்த அரசுக்கு அதிகப் பணம் வருவதை ஏன் தடுக்கிறார்கள் என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

கள் கட்டுகிற மரங்கள் என்கிறபோது, அந்த மரங்களுக்கு வரி விதிக்கிறோம் என்றும் லைசென்ஸ் கொடுக்கிறோம் என்றும் சொல்கிறார்கள். இந்த மரங்களுக்கு வரி விதிப்போம் என்பதிலே பல தவறுகள் நடைபெறுவதற்கு இடமிருக்கிறது. 2 (சி) பட்டா இன்றைக்கு எத்தனை மரங்களுக்கு இருக்கிறது என்று தெரியவில்லை. அதில் எந்த அளவிற்கு ஏலத்தை குறைத்து பண்ணுகிறார்கள்? பனை மரங்கள் இருக்கிற இடங்களை தமிழக அரசு கணக்குப் பார்த்து அதற்கு வரி விதித்து பெறுவதை விட ஏன் ஏலம் விடக்கூடாது என்பதைத்தான் சொல்கிறோம். இதை முழுமையாக தளர்த்த வேண்டும். இதில் அரசு கொள்கை ரீதியாக ஒன்றைச் சொல்லி விட்டு பிடிவாதம் காட்ட வேண்டாம். அதன் மூலம் நீங்கள் எந்த கொள்கையைச் சொல்லி அறிவிக்கிறீர்களோ, அந்தபணம் இந்த அரசுக்கு வராது. அந்த பணத்தை இந்த நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களுக்கு உபயோகப் படுத்துவதற்கு மாறாக, அந்த பணம் மறுபடியும் வேறு இடங்களுக்கு செல்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.



ஆகவே ஒட்டு மொத்தமாக தளர்த்த வேண்டும். இதில் ஏதோ இந்த அரசு கொள்கை ரீதியாக மதுவிலக்கை எடுத்துக் கொள்கிறது என்பதற்கு; தோல்வியுற்றோம் என்று ஒப்புக் கொண்ட பிறகு தளர்த்துகிறோம் என்று சொல்லி அதற்கு சில விதிமுறைகளை வைத்து தளர்த்துகிறோம்—25 வயது வைத்திருக்கிறோம்; பெர்மிட் கொடுக்கிறோம் என்றெல்லாம் சொல்லியிருப்பது வேண்டாம்.

போலீசார் நினைத்தால் மதுவிலக்கை பூரணமாக நடைமுறை படுத்த முடியும் என்பது தான் எங்களைப் போன்றவர்களுடைய கருத்து. தமிழ் நாட்டில் இருக்கிற போலீசாருக்கு காய்ச்சுபவர்களைத் தெரியும்; விற்பவர்களைத் தெரியும்; குடிப்பவர்களைத் தெரியும். அப்படியிருந்தும் போலீசார் ஒத்துழையாமை காரணமாகத்தான் நாம் மதுவிலக்கு கொள்கையில் தோற்று இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20.)

நெஞ்சிலே கைவைத்துச் சொல்லட்டும். போலீசாருக்கு தமிழகத்திலே யார் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள், யார் விற்கிறார்கள், யார் குடிக்கிறார்கள் என்ற பட்டியலை கேட்டால் அதைக் கொடுக்கலாம், அவர்கள் அத்தனை பேர்களுக்கும் தெரியும், எங்கே காய்ச்சப்படுகிறது, எங்கே விற்கப்படுகிறது, எங்கே குடிக்கப்படுகிறது என்ற நிலைமைகள் எல்லாம் தெரியும். மரத்திற்கு லைசென்ஸ் வாங்கவேண்டுமென்று சொன்னால் சாத்தூர் மலையிலே மரம் இருக்கிறது என்று எந்த அதிகாரி அரசுக்கு சரியான கணக்குகளைக் கொடுக்கப்போகிறார்கள்? ஆகவே எந்தவிதமான குறைபாட்டுக்கும் இடம் தராது ஒட்டு மொத்தமாக தளர்த்தவேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற பொருளாதார மெமோரண்டத்திலே பார்த்தால் அதிகமான அதிகாரிகள் போட வேண்டி இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒட்டு மொத்தமாகத் தளர்த்தினால் அந்த செலவும் இல்லை, அதிகமான போலீஸ் அதிகாரிகள் தேவையில்லை, இருக்கிற போலீஸ் அதிகாரிகளே போதும், பார்த்துக் கொள்ளலாம். ஆகவே ஒட்டு மொத்தமாகத் தளர்த்தினால் கள்ளச்சாராயம் காய்ச்சுவதும் குறையும். இப்போது பாட்டில்களிலே அடைத்து கொடுக்கிறோம் என்ற முறை வருகிறபோது சாதாரண ஏழை எளிய மக்கள் வாங்க முடியாத அளவுக்கு அவை இருக்கும். காரணம் அதன் பேரில் எக்சைஸ் டியூட்டி, பாட்டில் காஸ்ட், இருக்கிற விலைவாசி யேற்றம் இவைகளைப் பார்த்தால் அதிகமான விலையுடையதாக இருக்கும். ஏழை எளிய மக்கள் வாங்கமுடியாமல் போய் கடைசி

யாக அது கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களுக்கு உதவியாகத் தான் போய் முடியும். ஆகவே இதை ஒட்டு மொத்தமாக எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த திருத்தச் சட்ட முன்வடிவை எதிர்த்து ஒரு சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். இந்த அமைச்சரவை பல நல்ல திட்டங்களைக் கொண்டுவந்து ஏழை மக்கள் வாழவேண்டும், அவர்களுடைய வாழ்வு வளம்பெறவேண்டும் என்ற முறையிலே கொண்டுவந்த அந்த திருக்கரங்களால் இன்றைக்கு அந்த ஏழை களுக்கு அவர்கள் இன்றைக்கு வாழ்க்கையிலே ஓரளவுக்கு முன் வந்து கள்ளுக்கடை, சாராயக் கடைக்குப் போகாமல் முன்னேறி, பண்ட பாத்திரங்களை வாங்கிவைத்துக் குடும்பங்களை நடத்திக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே இந்த அமைச்சருடைய கரங்களால் இந்தச் சட்டத்தை கொண்டுவந்திருப்பது வேதனைக் குரியது என்பதை நான் முதன்முதலிலே தெரிவித்துக் கொள் கிறேன். நான் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்ற முறையிலேயும், பெண் இனத்தைச் சேர்ந்தவர் என்ற முறையி லேயும் அந்த இரண்டு பிரிவு மக்களும் இதனால் எவ்வளவு அல்லலுற போகிறார்கள், எவ்வளவு சீரழியப் போகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். லைசென்ஸ் வாங்கி பாட்டிலில் அடைத்து விற்கப்படுகிற சாராயத்தை குடிக்கலாம் என்றால் 10 வயதுள்ள பேரனை கிழவர் ஒருவர் கூப்பிடுவார், பாட்டிலை வாங்கி வரச் சொல்லுவார், அவர் குடித்துவிட்டு இந்தாடா பேராண்டி நீ கொஞ்சம் குடித்துப் பார் என்று சொல்வார், பிறகு அங்கே உள்ள பெண்களிடம் கொடுத்து நீங்களும் கொஞ்சம் ருசி பாருங்கள் என்று சொன்னால் எவ்வளவு வேதனைக்குரிய நிலைமைக்கு கொண்டுபோகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாங்கள் இந்தச் சட்டத்தை எதிர்ப்பதிலே அர்த்தம் உண்டு. நாங்கள் காந்தியடிகளின் கொள்கையிலே உத்தமத் தலைவர் காமராஜ் அவர்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி இன்றைக்கு அந்த லட்சியங்களின் அடிப்படையிலே தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியை இயக்கிக்கொண்டிருக்கின்றவர்கள். நாங்கள் சொல்கிறோம். ஆனால் இன்றைக்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் இதை கடுமையாக எதிர்த்துள்ளார்கள் என்றால் என்னால் பாராட்ட முடியவில்லை. 25 வயதுடையவர்கள் எல்லாம் கள்ளுக்கடை என்றால் என்ன, சாராயக்கடை என்றால் என்ன என்றே தெரியாத நிலைமை இருந்தபோது, நீங்கள் குடித்துப் பழகுங்கள் என்று சொல்லுகின்ற முறையிலே முந்தைய அரசாங்கம் 1974 ஆம் ஆண்டிலே குடிக்கக்கூடிய அளவுக்கு மக்களைக் கெடுக்கக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுத்தார்கள், இப்போது நீங்கள் அதைப்பற்றி கடுமையாக எதிர்த்துப் பேசினால் மக்கள் எந்த அளவுக்கு உங்களைப் புரிந்து



கொள்வார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப் போலவே நான், ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற இந்திரா காந்தி அவர்கள் நினைத்திருந்தால் மதுவிலக்கை இந்தியா முழுவதும் அமல் நடத்தி இருக்க முடியும். எவ்வளவு பணம் கேட்டாலும் கொடுத்து, தமிழக சர்க்கார் எவ்வளவு பணத்தைக் கேட்டாலும் கொடுத்து, தீவிரமாக நீங்கள் மதுவிலக்கை அமல் நடத்துங்கள் என்று சொல்லியிருக்கலாம். ஆனால் இந்தியா முழுவதும் இன்றைக்கு அமல் நடத்தாமல் தளர்த்தும்படி செய்துகொண் டிருக்கிறார்கள். இங்கேயுள்ள இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லாம் ஏ. ஐ. சி. சி.க்கு ஒரு தீர்மானத்தைக் கொண்டுபோய் மகாத்மா காந்தி அடிகள் கொண்டுவந்த திட்டத்தை மா பெரும் தலைவர் நேருஜி அவர்கள் கொண்டுவந்த திட்டத்தை, பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் அமலாக்கிய திட்டத்தை தீவிரமாக அமல் நடத்தவேண்டுமென்று சொல்வதை விட்டுவிட்டு அவர்கள் இதை எதிர்த்துப் பேசுவதில் அர்த்தம் இல்லை; ஆனால் எங்களுக்கு அதில் முழு உரிமையிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருமானத்தைப்பற்றி இங்கே அமைச்சரவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். வருமானம் வருவதற்கு நான் ஒரு வழியைச் சொல்கிறேன். அதைப் பின்பற்றினால் 200 கோடி என்ன, 400 கோடி, 500 கோடி, 600 கோடி ரூபாய் கிடைக்கும். 10 கோடி மக்கள் தொகை கொண்ட உத்தரப் பிரதேசத்தில் 1,200 சினிமாக்கொட்டகைகள் இருக்கின்றன; 8½ கோடி மக்கள் தொகை கொண்ட பீகார் மாநிலத்தில் 300 சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன; ஆனால் நான்கே முக்கால் கோடி மக்கள்தொகை கொண்ட நம்முடைய மாநிலத்தில் 2,140 சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. அப்படியிருந்தும் இங்கே சினிமாவுக்குப் போவது குறைந்திருக்கிறதா? கிராமங்களிலே உள்ள சினிமாக் கொட்டகைகளில் 40 பைசா டிக்கெட்டை 80 பைசா என்று போடுங்கள்; 80 பைசா டிக்கெட்டை 1 ரூபாய் 60 காசு என்று போடுங்கள். சினிமா பார்க்காமல் யாரும் இருப்பது இல்லை. எனவே, இதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்குக் கிடைக்கும்.

60,000 ரூபாய், 70,000 ரூபாய் என்று கார்கள் வாங்கு கிறார்கள், அதற்கு வரியாக 40,000 ரூபாய்கூடக் கொடுக்கப் படுகிறது. அதனால் யாராவது கார் வாங்காமல் இருக்கிறார் களா?

அடுத்து, இந்த வாசனைத் திரவியங்களான பவுடர் சோப்பு, கிரீம் ஆகிய இவைகளுக்கெல்லாம் வரியை அதிகமாகப் போட்டால் நிச்சயமாக 200 கோடி ரூபாய் என்ன, அதைவிட அதிகமான பணம் கிடைக்கும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு இந்தப் பணத்தை வசூல் செய்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1981 ஏப்ரல் 10

இன்றைக்கிருக்கின்ற நிலைமையில் ஒரு கோடி ரூபாய் செலவு செய்து மது குடிப்பதால் ஏற்படும் தீமைகளைப் பற்றிச் சொல்வதற்கான ஏற்பாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது தேவைதானா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். ஏதோ, பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவதைப்போல, அந்தப் பணத்தை அதற்காகச் செலவு செய்யாமல் இருக்க வேண்டும். இந்த சட்டத்தையே வாபஸ் வாங்க வேண்டும். திருத்தச் சட்டமே வேண்டாம்; மது விலக்கைத் தீவிரமாக அமல் நடத்துவோம் என்று சொல்லுங்கள். அப்படிச் செய்வீர்கள் என்று எண்ணித்தான், தமிழ்நாட்டிலுள்ள அரிசன மக்கள், தாய்க்குலம், முதல்வரவர்களைத் தெய்வமாக கருதினார்கள். மதுவிலக்கு ரத்தைக் கொண்டு வர மாட்டீர்கள்; மது விலக்கை அமல் படுத்துவீர்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் உங்களுக்கு ஓட்டுக் களைப் போடவில்லை, அள்ளி அள்ளிக் கொட்டினார்கள். ஆனால் இப்பொழுது அந்த மதுவிலக்கைத் தளர்த்தியிருக் கிறீர்கள். தங்கள் கணவன்மார்கள் குடித்து விட்டு ஜெயிலுக்குப் போகிறார்களே என்பதற்காக அந்தத் தாய்குலம் அழவில்லை; கணவன் ஜெயிலுக்குப் போனாலும் சரி, மதுவிலக்கைத் தீவிரமாக அமல் நடத்த வேண்டுமென்றுதான் அவர்கள் கருதுகிறார்கள். மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதிலேதான் மக்கள் கண்ணுங் கருத்துமாக இருக்கிறார்கள்.

நம்முடைய முன்னவரவர்கள் முன்பு இங்கே சொன்னார்கள், நாங்கள் தீவிரமாகச் சட்டம் போட்டும் அதை அமல் நடத்த முடியவில்லை என்று சொன்னார்கள், நான் சொல்கிறேன், நீங்கள் போடும் சட்டம் மக்களின் வாழ்வை உயர்த்தக் கூடிய தாக இருக்கிறது. ஆனால் அதைச் சரிவர அமல் நடத்த முடியவில்லை என்பது தங்களால் கையால் ஆகவில்லை என்பதை ஒத்துக்கொள்கின்ற சூழ்நிலையை உருவாக்குகிறது. இதைத் தவிர்க்க எந்தந்த யூனியன்களில் எந்தந்த வட்டங்களில், எந்தந்த வட்டாரங்களில் மது காய்ச்சப்படுகிறதோ, கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறதோ, அப்படிப்பட்ட போலீஸ் ஸ்டேஷன் களிலே உள்ள சப்-இன்ஸ்பெக்டர்களையும், ஏட்டுகளையும் சர்வீஸிலிருந்து டிஸ்மிஸ் செய்து வீட்டுக்கு அனுப்பினால் இதைத் தீவிரமாக அமல் நடத்த முடியும் என்று கூறி இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கோள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு தலைவரவர்களே, இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களால் இங்கே அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்ற மதுவிலக்குத் திருத்தச் சட்டம் என்கிற இந்தச் சட்டத்தின் மீது இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் சில முக்கியமான கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1981 ஏப்ரல் 10] [திரு. மு. அம்பிகாபதி]

எங்களைப் பொறுத்து, இந்த மதுவிலக்குத் திருத்தச் சட்டம் என்பதற்குப் பதிலாக, மதுவிலக்கு பரிபூரணமாக ரத்து சட்டம் என்று கொண்டு வர வேண்டுமென்று விரும்புகிறேன். அப்படிக் கொண்டுவந்தால் அது ஒழுங்காக இருக்கும், முறையாக இருக்கும், ஊழல் இல்லாமல் இருக்கும் என்று கருதுகிறோம். இந்தச் சட்டம் ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒருகால் என்று வைத்திருப்பதுபோல் இருக்கிறது, இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பது, சைவ மீன் குழம்பு நாங்கள் வைக்கப் போகிறோம் என்று சொல்வது மாதிரி இருக்கிறது. நாங்கள் சொல்வது, சைவ மீன் குழம்பு வேண்டாம், மீன் குழம்பு வையுங்கள் அல்லது சைவ சாம்பார் வையுங்கள் என்று தான் சொல்கிறோம். இரண்டிலே ஒன்றைச் சொல்லுங்கள். அண்ணாவே இருந்தாலும்கூட மதுவிலக்குக் கொள்கையை மாற்றிக்கொண்டிருப்பார்கள்.

[பிற்பகல் 12-30]

காலம் மாறுகிற பொழுது, கருத்துக்கள் மாறுகின்றன. objective condition-க்கு எற்ப subject factor-லே change வரும், அந்த science அடிப்படையிலேதான் கருத்துக்கள் மாறுகின்றன. மழை பெய்யும்போது குடை பிடிக்கிறோம், குளிரும்போது போர்த்துக்கொள்கிறோம், வெயில் அடிக்கும்பொழுது சட்டையைக் கழற்றிவிட்டு, வெளியிலே படுக்கிறோம். மனித வாழ்க்கைக் கேற்ப, சூழ்நிலைக்கேற்ப, மாறுகிற தன்மை படைத்தவன் மனிதன். எனவே, வள்ளுவர் இராண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே,

''கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு''

என்று சொல்லியிருக்கிறார். அது ஒரு கருத்து. அண்ணா அவர்களும் திராவிட நாடு திராவிடருக்கே என்று முன்பு கூறினார்கள். பிறகு அதை கை விட்டு விட்டார்கள். அந்த கொள்கை கை விடப்பட்டது. ஏனென்றால், சூழ்நிலைக்கேற்ப கொள்கைகள் மாறுகின்றன. மகாத்மா காந்தி அவர்களே. காங்கிரசைக் கலைக்க வேண்டுமென்று சொன்னார். ஆனால், பாவம் அவர் இறந்து விட்டார். அது கலைக்கப்படவில்லை,

* * *

(கூச்சல்-குழப்பம்) இப்பொழுது நம் சபையிலே பல காங்கிரஸ்கள் இருக்கின்றன. இருக்கின்றனவா, இல்லையா?

திரு. என். எஸ். வி. சித்தன்: மதுவிலக்கைப் பற்றி பேசு கிறாரா; காங்கிரசைப் பற்றிப்பேசுகிறாரா?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையில் விவாதத்திலிருப்பது மதுவிலக்குச் சட்டம் மகாத்மா காந்தி மதுவிலக்கைப் பற்றி சொன்னதை மட்டும் சொல்லுங்கள். காங்கிரஸ் இயக்கத்தைச் சண்டைக்கு இழுக்கக் கூடாது. அதை சபைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன்.

திரு மு. அம்பிகாபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, நீங்கள் தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும். மதுவிலக்கு பிரச்னையிலே மகாத்மா காந்தி அவர்கள் கருத்து சொன்னார்கள். அதே போல் காங்கிரஸ் கட்சியைக் கலைக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இல்லையென்று யாரும் மறுக்க மாட்டார்கள். நம்முடைய சபையிலே 5, 6 காங்கிரஸ்கள் இருக்கின்றன, அதையும் யாரும் மறுக்க மாட்டார்கள். எனவே தான் நான் சொல்கிறேன்....

திரு. என். எஸ். வி. சித்தன்: கம்யூனிஸ்ட் கட்சிகூட 3 இருக்கின்றன.

திரு. மு. அம்பிகாபதி: நீங்கள் பேசும்பொழுது சொல்லுங்கள். எனவேதான், இன்றையதினம் காந்தி சொன்னாரா? அண்ணா சொன்னாரா என்பது அல்ல, இன்றைக்கு முக்கியமான இந்தப் பிரச்னையிலே நாம் பார்க்க வேண்டியது தமிழகத்திலே இருக்கக் கூடிய 15 இலட்சம் மதுமரத் தொழிலாளர்களை நாம் காப்பாற்றப் போகிறோம், மதுவிலக்கை ரத்து செய்வதால் விளைவாக 15 இலட்சம் மது மரத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்பபு கிடைக்கும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, 20 இலட்சம் குடும்பங்களுக்கு வாழ்வளிப்பதற்கான ஒரு வாய்ப்பு இந்தச் சட்டத்தின் விளைவாக ஏற்படுகிறது. இது நெம்பர் 1. அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானம் பல்வேறு பிரிவுகளிலே, சில வசதிபடைத்தவர்களுக்குச் செல்வது, கள்ள மது தயாரிப்பதற்கான வாய்ப்புகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இது நெம்பர் 2. இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே, நாம் பார்க்க வேண்டியது, அகில இந்திய மதுமரச் சங்கத்தினுடைய பொதுச் செயலாளர், எங்களுடைய தோழர் எஸ். குமரன், எம். பி. அவர்கள் எங்களுடைய சங்கத்தின் சார்பிலே, நாங்கள் மாண்புமிகு முதலமைச்சருக்கு மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்ற மெமோரண்டம் கொடுத்திருக்கிறோம்; சர்வகட்சித் தலைவர்களுக்கும் சொல்லியிருக்கிறோம். அதிலே குடிக்க வேண்டுமா, வேண்டாமா என்பது அல்ல பிரச்னை. குடிப்பழக்கம் குடியைக் கெடுக்கும் என்பதிலே எங்களுக்கு, கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தெளிவானகருத்து உண்டு. மக்களிடத்திலே குடிப்பழக்கம் என்பது வேறு, எப்போதாவது சாப்பிடுவது என்பது வேறு. உலகத்திலே சிங்கப்பூர், தாய்லாந்து, மலேஷியா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளில் குடிக்கக்கூடாது என்று விளம்பரம் செய்யப்படுகிறது.



கடைகளிலே மது இருக்கிறது. அங்கே ஆல்கஹால் கன்டென்டைக் குறைத்து, மது வகைகள் வழங்கப்படுகின்றன, விற்கப்படுகின்றன. தமிழகத்திலே இரண்டு விஷயம். கடத்தலைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கம் சட்டத்திலே இருக்கிறது, ஆனால் நீங்கள் பிராந்திக்கு விதிக்கக்கூடிய வரியும் பாண்டிச்சேரியிலே விதிக்கக்கூடிய வரியைவிட அதிகமாக இருந்தால், பாண்டிச்சேரியிலிருந்து இங்கே கடத்தல் நடக்கும். நீங்கள் தடுக்க முடியாது. அப்படியானால், நம்முடைய தமிழகத்திலே விதிக்கக்கூடிய வரியில். மிகுந்த கவனத்தோடு நாம் பல்வேறு வரிகளை விதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ரூ. 200 கோடி அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது என்று சொன்னால் இலட்சக்கணகான (குறுக்கீடு) தோராயமாகச் சொல்கிறேன், ரூ. 200லிருந்து, ரூ. 300 கோடி கிடைக்கும். இலட்சக்கணக்கான விவசாயித் தொழிலாளர்களுக்கு இலவசமாக வீடு கொடுக்கிற திட்டத்தை அமுல் நடத்த முடியும். மத்திய அரசாங்கத்திடம் எங்களுக்கு பணம் கொடுங்கள் என்று கேட்க வேண்டிய அவசியம் இல்லை. விவசாயிகளுக்கு ரூ. 70 கோடி, ரூ. 80 கோடி தள்ளுபடி செய்கிறீர்கள், வரவேற்கிறோம். கொஞ்சம் பெரிய விவசாயிகளுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்யவேண்டும். ஜப்தி செய்வதை நிறுத்த வேண்டுமென்று சொன்னால், இதன்மூலமான வருமானத்திலிருந்து அதைச் செய்ய முடியும். படித்த இளைஞர்களுக்கு ரூ. 50, ரூ. 100 கொடுக்க வேண்டுமென்று சொல்லும் போது அதைச் செய்வதற்கு நமக்கு வாய்ப்பிருக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ. 50, ரூ. 100 பென்ஷன் அளிக்க வேண்டுமென்றால், இந்த வருமானத்திலிருந்து கொடுக்க முடியும். ரூ. 200, ரூ. 250 கோடி கிடைக்கிறதென்றால், நிச்சயமாக நாம் பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களைச் செய்யலாம். சில தொழிற்சாலைகளை, அரசாங்கமே உருவாக்க முடியும்.

லட்சக்கணக்கான மது மரத் தொழிலாளர்கள் மாற்று வேலை என்பது இல்லாமல் இந்த மதுவிலக்கு இங்கே அமலாக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய மறுவாழ்வுக்காக எந்தவிதமான தெளிவான திட்டமும் கிடையாது. மத்திய அரசாங்கத்திலே இருந்து அவர்களுக்கு உதவி செய்யப்பட்டு, அந்த சொசைட்டிகளுக்கு வந்து, அந்த சொசைட்டிகளிலே இருந்து முறையாக சேருவதில்லை என்று பல சிக்கல்கள் ஏற்பட்டு இன்றைக்கு நாட்டிலே பல்வேறு பிரச்சினைகள் இந்த மதுவிலக்குப் பிரச்சினையால் தோன்றி இருக்கின்றன. அரசாங்கத்திற்கு ஒரு பக்கம் சுமை. இந்த பர்மிட் கொடுப்பதிலே சிக்கல்கள் வரும். கள்ளுக்கு ஒரு ரேட்டு, பிராந்திக்கு ஒரு ரேட்டு, சாராயத்துக்கு ஒரு ரேட்டு என்று வைத்திருக்கிறீர்கள். கள் குடித்தானா, சாராயம் குடித்தானா என்று எப்படி கண்டுபிடிப்பது? எனவே நீங்கள் பூரணமாக மதுவிலக்கை ரத்து செய்தால்தான் இந்தப் பிரச்சினை தீரும். நீங்கள் கள் குடிப்பதற்கும் வரி விதிக்கப் போகிறீர்கள்.

[திரு. மு. அம்பிகாபதி] [1981 ஏப்ரல் 10

மரத்துக்கும் வரி விதிக்கப் போகிறீர்கள். சாப்பிடுதைற்குப் பர்மிட், இப்படி இரண்டு பக்கமும் வருமானம் எதிர்பார்க்கிற மாதிரி தெரிகிறது. எப்படி முன்பு இருந்ததோ அதைப்போலவே மதுவிலக்கைப் பூரணமாக செய்யாமல், நீங்கள் இதிலே ஏற்படக் கூடிய ஊழலை, கடத்தலை, சாராய நெரிசலை தடுக்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. இதே சட்டசபையில் கடுமையான சட்டம் கொண்டு வரப்பட்டபோது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சொன்னோம், இது ஒரு சமுதாயப் பிரச்சினை, அதை சட்டம் போட்டுத் தடுக்க முடியாது. சமுதாயத்திலே கொலை ஏற்படுவது ஒரு சூழ்நிலையின் காரண மாக இருந்தாலும் கொலையை நாம் அனுமதிக்க முடியாது. ஏனென்றால் ஒருவன் கொலை செய்வதால் இன்னொருவன் சாகிறான். குடித்தான் என்றால் வீட்டின் உள்ளே படுத்து விடுகிறான். அதே நபர் குடித்துவிட்டு ரோட்டிலே வந்து அடித்தான் என்றால், அதற்கு கேஸ் இருக்கிறது. ரோட்டிலே தவறாக நடந்தான் என்றால் நியூசன்ஸ் சார்ஜ் பண்ணலாம். சாப்பிடுகின்றவன் தவறு செய்கிறான் என்றால் அதன் விளைவாக பிறரை அடிக்கின்றபோது அவன் குற்றவாளியாக மாறுகிறான். இது தெளிவு.

எனவேதான் இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் சைவ மீன் குழம்பு வைக்காமல் தெளிவான முறையில் மதுவிலக்கை நாங்கள் ரத்து செய்கிறோம் என்று அறிவிக்க வேண்டும். மதுவிலக்கு இருக்கும், தீவிரமாக அமல்படுத்தப்படும். அதே நேரத்தில் தளர்த்தவும் படும். அப்படி என்றால் இது சைவ மீன் குழம்பு என்று பெயர். இந்த வார்த்தையை நான் கூட கண்டுபிடிக்க வில்லை. எங்களுடைய அருமைத் தலைவர் பாண்டிச்சேரி முன்னாள் எம்.எல்.ஏ. டாக்டர் ரங்கநாதன் அவர்கள் இரண்டு நாளைக்கு முன்னால் வந்து இருந்தார். நான் இந்த 'பில்லை' எடுத்துக் காட்டினேன். இது என்ன அம்பிகாபதி 'சைவ மீன் குழம்பு மாதிரி இருக்கிறதே' என்றார். It is not completley scrapped. நீங்கள் இதைப் பேசுங்கள் என்று சொல்லிவிட்டுப் போனார். ஆகையினாலேதான் நான் சொல்லுகிறேன். நீங்கள் இந்த மதுவிலக்குச் சட்டத்தை தளர்த்த வேண்டும் என்பதற்கு பதிலாக, அதை பூரணமாக ரத்து செய்ய வேண்டும். அருமை காங்கிரஸ் நண்பர்களையும் அல்லது திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களையும் கேட்கிறேன். பக்கத்திலே பாண்டிச்சேரி இருக் கின்றது. தயவு செய்து அங்கே போய் மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும் என்று பேசினால், நிச்சயமாக உங்களை திரும்ப அனுப்பமாட்டார்கள். அங்கேயே இருக்க வைத்துக் கொள் வார்கள். ஏனென்றால் இந்தக் கொள்கை மிகவும் புனிதமான கொள்கை, இதைச் சொல்வதற்கு மெனக்கட்டு மெட்ராசிலே இருந்து வந்திருக்கிறீர்கள் இங்கேயே தங்குங்கள் என்று, எப்படி யாவது தங்க வைத்து விடுவார்கள்.

எந்தக் கட்சியும் மதுவிலக்கைப் பற்றி பாண்டிச்சேரியிலே பேசுவதற்கு தைரியம் கிடையாது. சொன்னாலே ஆபத்து.



1981 ஏப்ரல் 10] [திரு. மு. அம்பிகாபதி]

முன்பு ஒரு எம்.பி. போய் இப்படிச் சொல்லி, அந்த ஆபத்துக்கு ஆளாகி எம்.பி. வந்து சேர்ந்தார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய சட்டத்திலே பூரணமாகக் கொண்டு வரவேண்டும். லட்சக்கணக் கான தொழிலாளர்களை பாதுகாக்கின்ற முறையிலே, பூரணமாக மதுமரத் தொழிலாளர்களை பாதுகாக்கின்ற முறையிலே, கேரளாவில் செய்ததைப்போல் பாதுகாப்புச்சட்டம் கொண்டு வரவேண்டும். அந்த மதுமரத் தொழிலாளர்களை வலுவாக்க வேண்டும். சில இடங்களில் எப்போது திறக்கப்போகிறார்கள் என்று பெண்கள் அதிகமாகக் கேட்பதாக எனக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டு திரு. சிவசாமி அவர்கள் கொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். பெண்கள், பிள்ளைக்கு கள்ளைக் கொடுத்தால் சோகை தீரும் என்று சொல்லப்படுகிறது. டாக்டர்கள் இதிலே சிறந்த டானிக் இருக்கிறது என்று கூறுவதாக கூறப்படுகிறது. எனவே இதைப்பற்றி எல்லாம் தெளிவாக விவாதிக்க வேண்டும். பாரதி கூறினானே 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று அதைப்போல பரிபூரணமாக மதுவிலக்கை கொண்டு வரவேண்டும் (குறுக்கீடு) அது நாங்கள் சொல்ல மாட்டோம் 'ஆடுவோமே, கள்ளு போடுவோமே' என்று, நாங்கள் சொல்வது மதுவிலக்கை பூரணமாக ரத்து செய்யவேண்டும். மக்களை வாட வைக்கும் கொள்கை, மக்களை காப்பாற்றுகின்ற கொள்கை, தமிழகத்தை முன்னேற வைக்கும் கொள்கைதான் எங்கள் கொள்கை என்பதைக் கூறி, மதுவிலக்கை பூரணமாக ரத்து செய்ய வேண்டும் என்று கூறி அமர்கிறேன்.

(பிற்பகல் 12–40)

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு 10-வது சட்டத்தைத் திருத்துகின்ற வகையில் 1981 ஆம் ஆண்டு மதுவிலக்குத் திருத்தச் சட்டமுன் வடிவு இங்கே அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இந்த அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டிருக்கக் கூடிய இந்தச் சட்டம் மதுவிலக்கைப் பூரணமாக ரத்து செய்வதற்கான பாதை யிலே ஒரு முக்கியமான மைல் கல் என்கிற வகையிலே மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இதை ஆதரிக்கிறது. ஏற்கனவே நான் இந்தச் சட்ட மன்றத்திலேஅனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்று கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்த நேரத்தில் கூறினோம்—கடுமையான சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம் மதுவிலக்கை அமல் படுத்துவதற்கு இயலாது. அது பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று சொன் னோம். அதனுடைய விளைவுகளை அரசாங்கம் புரிந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. பல்லாயிரக்கணக்கான வழக்குகள் சாதாரண மக்கள் மீது ஏற்பட்டன. அதன் காரண மாக அவர்களின் குடும்பங்கள் பாதிக்கப் பட்டன. எனவே தான் அரசு அந்த நிலையில் ஒரு மறு ஆய்வு செய்து இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து இருக்கிறது என்று கருதுகிறே

அதனுடைய விளைவாக இந்தத் திருத்தச் சட்டத்திலே கணிசமான அளவிற்கு இந்த மதுவிலக்குக் கொள்கை கைவிடப் பட்டு இருக்கிறது என்கிற அடிப்படையில் இதை ஆதரிக்கிறோம். மதுவைப் பொறுத்தவரையில் பிரச்சாரத்தின் மூலமும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலமும்தான் மதுவிலக்கைக் கொண்டு வரமுடியும் என்பது தான் உலகம் பூராவும் ஏற்பட்டு இருக்கும் சமுதாயத்தின் அனுபவமாகும். சட்டத்தின் மூலமும், கடுமையான தண்டனைகள் அளிப்பதன் மூலமும் மதுவிலக்கை அமல்படுத்த முடியாது. அதுவும் மக்கள் தொகையில் கணிசமான அளவிற்கு அந்தப் பழக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடத்தில் நம்முடைய விருப்பத்தைத் திணிப்பது என்பது முடியாத காரியம், அது பொருத்தமுள்ளதாக இருக்காது என்பதையும் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். இந்த மதுவிலக்கைத் தளர்த்துவதனால் பல்வேறு வியாபாரம் பாதிக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு மதுவிலக்கு அமலில் இல்லாத மாநிலங்களில் அவ்வாறு வியாபாரம் குறையவில்லை என்பது நம்முடைய அனுபவம். அது மட்டுமல்ல, அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது மதுவிலக்குத் தளர்த்தப்படுமானால் கொடிய குற்றங்கள் ஏற்படும் என்று சொன்னார்கள். கொடிய குற்றங்கள் ஏற்படுவதற்கு மது மட்டும் காரணம் இல்லை. எத்தனையோ மாநிலங்களில் மதுவிலக்கு அமலில் இல்லை, அங்கேயெல்லாம் சாதாரணமாக மது புழங்கிக் கொண்டு இருக்கிறது, அங்கே மட்டும் தான் இவ்வாறு கொடுமையான குற்றங்கள் நடைபெறுகிறதா என்றால் இல்லை. மதுவிலக்கை அமல் படுத்துகிற மாநிலங்களிலும் அத்தகைய கொடுமையான குற்றங்கள் நிகழ்வதற்கு வாய்ப்பு உண்டு. ஆகவே, இன்றைக்கு அதைப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

மகாத்மா காந்தி பெயரையும், ராஜாஜி பெயரையும் இங்கே கொண்டு வந்து சொன்னார்கள். அவர்களின் கருத்துக்கள் அந்தந்தச் சந்தர்ப்பங்களில் ஏற்புடையதாக இருந்து இருக்கும். மகாத்மா காந்தி அவர்கள் கூட பாகிஸ்தான் பிரிவினை வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால் அன்றைக்கு நாட்டிலே இருந்த சூழ்நிலையில் பாகிஸ்தான் பிரிவினையை ஏற்றுக் கொள்ள வேண்டியதாகத் தான் இருந்தது. அதைப் போலவே ராஜாஜி அவர்கள் ஒரு கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, பெரிய தலைவர்களின் கருத்துக்கள் எல்லாம் முழுமையாக ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று சொல்ல முடியாது. கடந்த காலத்தில் இருந்த சூழ்நிலையில் அவைகள் சரியாக இருந்து இருக்கலாம். ஆனால் இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது ஏற்பட்டுள்ள



நிலைமைக்கு ஏற்ப, அனுபவம் என்கிற அருமையான அடிப்படையில் இந்த மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்துவதற்கு முன்வந்திருக்கிறது என்பதைத்தான் இந்தச் சட்ட முன்வடிவு எடுத்துக் காட்டுகிறது. இன்றைக்குக் கணிசமான மக்கள் தொகை இந்தப் பழக்கத்தில் வந்துவிட்ட காரணத்தால் சுகாதார முறையில் அரசின் கண்காணிப்போடு தயாரிக்கப்பட்ட மது, சாராயம் ஆகியவைகளை மக்கள் பெறுவதற்கு வழிவகை செய்யவேண்டிய கட்டாயம் அரசுக்கு இருக்கிறது. நாம் பார்த்தோம், 1967-ல் தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தபோது எத்தனை பேர் கள்ளச்சாராயம் குடித்ததன் விளைவாக இறந்தார்கள். அப்படிப்பட்ட சாவுகளைத் தடுக்க வேண்டும் என்று சொன்னால் இப்படிப்பட்ட திருத்தம் தேவை. அரியானா மாநிலத்தில் கள்ளச்சாராயம் குடித்தவர்கள் பலபேர் இறந்து இருக்கிறார்கள். பாராளுமன்றத்திலே கூட இந்தப் பிரச்னை வந்தது. ஆகவே, கள்ளச்சாராயத்தின் மூலம் ஏற்படுகின்ற விளைவுகளை தடுக்க வேண்டிய அவசியமும், அதே நேரத்தில் உடல் நலம் பாதிக்கப்படாத வகையில் அவர்களுக்கு முறையான வகையில் மது கிடைக்கச் செய்ய வேண்டியதும் நியாயமாகும். அதுதான் பொருத்தமானது. அந்த வகையில் இதைப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்,

ஆனால் இங்கே வந்திருக்கிற இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இது இப்போது மதுவிலக்கைத் தளர்த்தும் சட்டமாக வந்திருக்கிறது. 1937 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 10—வது சட்டம் மதுவிலக்கை ஏற்படுத்துவதற்கான சட்டம். அந்தச் சட்டத்திலே சில சரத்துக்களை தளர்த்தி இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. அதற்கு காரணம் என்னவென்றால் அந்தச் சட்டத்திலே 4—வது பிரிவிலிருந்து, 4—ஏ, 5—வது பிரிவுகள் எல்லாம் தண்டனையைப் பற்றி குறிப்பிடுகின்றன. அது எப்படி இந்தச் சட்டத்திலே இருக்க முடியும்? இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து, தளர்த்துகிறோம் என்று சொல்லி அந்தத் தண்டனைப் பிரிவுகளை வைத்திருப்பது சரியல்ல. ஆகவே, இன்று இல்லாவிட்டாலும் இன்னொரு சந்தர்ப்பத்திலே அந்தப் பிரிவுகளை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பெர்மிட் வழங்குவது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 1937—ஆம் ஆண்டுச் சட்டத்தில் 18, 19, 20, 21 சரத்துக்கள் இருக்கின்றன. அங்கே பெர்மிட் என்று சொல்லப் பட்டது ஒரு குறுகிய வட்டத்திற்குள். அதாவது ரிலிஜியஸ் பர்ப்பஸ், மதக் காரியங்கள், தொழில் காரியங்கள், விஞ்ஞான ஆராய்ச்சி காரியங்கள்—இப்படிப்பட்டவைகளுக்கு பெர்மிட் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அதனுடைய நோக்கம் வேறு, நீங்கள் இங்கே சொல்லியிருக்கிற பெர்மிட் என்பதன் நோக்கம் வேறு. இதை மனதிலே கொண்டு, ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவரவேண்டும்.

இப்போது இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம் குடிப்பதற்கு லைசென்ஸ் போன்ற அனுமதி கொடுப்பதற்கு; அந்த வகையில் தளர்த்துவதற்கு. ஆனால் அன்றைக்கு மதுவிலக்கை அமுல்படுத்த சில விதிகளை வைத்திருந்தார்கள். இப்போது மதுவிலக்கைத் தளர்த்துவதற்கு சில விதிகளை வைத்திருக்கிறீர்கள். இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த பெர்மிட் முறை நடைமுறைக்கு பொருந்தக்கூடியதாக இல்லை. பெர்மிட் ஜாதி என்று ஒரு ஜாதியை இங்கே எற்படுத்த வேண்டுமா? தாங்கள் பெர்மிட் வைத்திருக்கிறோம் என்று தெரிந்தால் அவமானம் என்று கருதி, திருட்டுத்தனமாக இன்னொருவர் பெயரிலே பெர்மிட் வாங்கக்கூடும். அதை மறந்து விடக்கூடாது. எங்களைப் பொறுத்தவரையில் இந்த பெர்மிட் முறையை நீக்கிவிட வேண்டும் என்பதுதான்.

எக்சைஸ் வரி போடப்போகிறீர்கள். அதை ஏலத்தின் மூலம்தான் கொடுக்க வேண்டுமே தவிர விதிமுறைகள் மூலம் கொடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் இதிலே புகாருக்கு இடம் இருக்காது. அது மட்டுமல்ல. அதிலிருந்து வரக்கூடிய வருமானம் அதிகமாக இருக்கும்; உங்களுக்கு அது போதும். ஆகவே, பெர்மிட் தேவையில்லை.

அடுத்தபடியாக இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்த கள் இறக்குவதைப் பொறுத்தவரையில், ஒருவர் பனை மரம் வைத்திருந்தால், அந்த பனை மரங்களை ஒருவருக்கு குத்தகைக்கு விட்டிருந்தால், குத்தகை எடுத்தவர் வரி செலுத்தவில்லை என்றால் சொந்தக்காரரிடம் வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது எப்படி பொருந்தும்? கள் இறக்குவதற்கு யார் குத்தகைக்கு எடுத்தார்களோ அவர்களிடம் தான் வசூல் செய்ய வேண்டும். அவர் கொடுக்கவில்லை என்றால் இவரிடம் வாங்குவது என்பது சரியான யோசனையாகத் தோன்றவில்லை.

இன்னொன்று, இந்த மதுவிலக்கு அமுலில் இல்லாத மாநிலங்களில் எல்லாம் மக்கள் தலைவிரி கோலமாக இருக்கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தமட்டில் பாண்டிச்சேரியில், வேறு சில மாநிலங்களில் இல்லை என்று, மதுவிலக்கு இல்லை என்று அரசாங்கம் சொல்லும்போது திரு. சித்தன் ஒன்றைச் சொன்னார். அதனுடைய பொருளாதார பளுவை ஒரு மாநில அரசு ஏற்றுக் கொள்ள முடியும் என்றால் நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்; நாங்கள் அதற்கு உதவி செய்ய முடியாது என்று தெளிவாகச் சொல்லிவிட்ட பிறகு, இன்றைக்கு மாநில சர்க்காருக்குக் கிடைக்கக்கூடிய ஒரு ஆதாயத்தை மறுக்க வேண்டிய அவசியம் இல்லை. மதுவிலக்குக் கொள்கையை சட்டம்போட்டு செய்ய முடியாது, படிப்படியாக, பிரச்சாரம் செய்வதன் மூலம் தான் செய்ய முடியும் என்று நாங்கள் சொல்கிறோம்.



[பிற்பகல் 12-50]

ஆகவே, அந்த அடிப்படையிலே இன்றைக்கு அரசாங்கம், மதுவினைச் சாப்பிட்டுவிட்டு பப்ளிக் நியூசன்ஸ் செய்வது என்பதற்குரிய சட்டம் இருக்கின்றது, அதைப் பயன்படுத்தி பாதுகாப்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். அடுத்து கடந்த காலத்திலே மதுவிலக்கினை ரத்து செய்தபோது மக்கள் நெருக்கமாக குடியிருக்கின்ற பகுதிகளில் எல்லாம் மதுவினை விற்க அனுமதி கொடுத்த காரணத்தால்தான் ஒரு பெரிய எதிர்ப்பு மக்கள் மத்தியிலே ஏற்பட்டது என்பதையும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே இனிமேல் அந்தக் கடைகளுக்கு அனுமதி கொடுக்கின்றபோது குடியிருப்புகளை எல்லாம் தாண்டி ஒதுக்குப்புறமாக கடைகளை வைக்க அனுமதி கொடுத்தால் அது பாதுகாப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து இங்கே காந்தி காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும், காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும் அவர்களுடைய கொள்கைகளைச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கொள்கை அளவிலே மதுவிலக்கு வேண்டும் என்று சொன்னாலும் அதை தமிழகத்திலே அமல் நடத்த முடியவில்லை என்பதையும் அவர்கள் தற்போதைய நிலைமைகளையும் எல்லாம் சற்று பரிசீலனை செய்து பார்த்தால் அவர்களும் இந்த முடிவுக்குத்தான் வருவார்கள்.

அடுத்து இந்த அளவுக்குத் தளர்த்த முன்வந்த நிலையில் அரசாங்கத்திற்கு ஒரு தயக்கம் இருக்கின்றது. அதாவது அந்தக் கட்சியின் முன்னோடிகள் சொன்ன வார்த்தைகளை மீறுகிறோமோ என்ற தயக்கம் அவர்களுக்கு ஏற்படுகின்றது. ஆனால் அரசியலிலே பொருளாதார யதார்த்த நிலைமைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு ஒரு ஆட்சியை நடத்துவதுதான் நல்லதே ஒழிய மக்களைத் துன்புறுத்துவது சரியல்ல. காங்கிரஸ் கட்சியினர் சொல்வதுபோன்று இதைக் கடுமையாக அமல் நடத்தவேண்டும் என்றால் ஏற்கெனவே அந்தக் குற்றத்தைச் செய்திருக்கிறார்களா இல்லையா என்ற வகையில் ஆய்வு செய்யப்பட்ட வகையில் கிட்டத்தட்ட 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட வழக்குகளைப் போட வேண்டிய நிலைமை ஏற்படும். இன்னும் சொல்ல வேண்டும் என்றால் இலட்சக்கணக்கான வழக்குகள் கூட போடவேண்டிய நிலைமை ஏற்படும். அப்படி வழக்குகள் போடுவது என்பது எப்படிச் சரியானதாகும்? ஆகவே மதுவிலக்கினை கடுமையாக அமல் நடத்த வேண்டும் என்றால் இதை விட வேறு வழியில்லை. ஆனால் அதை எந்த அரசும் செய்ய முடியாது. ஆகவே அந்தக் கொள்கையை இன்றைக்கு அமல் நடத்த முடியாத நிலைமைதான் இருக்கின்றது.

அடுத்து கள்ளச்சாராயத்தின் மூலம் காவல் துறையிலே உள்ளவர்கள் ஏராளமான பணத்தைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள். அப்படி சேகரிக்கப்பட்ட பணத்தையும் பொருள்களையும் பறிமுதல் செய்வதற்கு ஏதாவது ஒரு வழிவகை செய்ய முடிந்தால் அதைச் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட சமூக விரோத சக்திகள் அரசாங்கத்தினுடைய இயந்திரத்தை ஊழல் மையமாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்கவேண்டும் என்றால் அரசாங்கம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். மது விலக்கு தளர்த்தப்பட்டதற்குப் பிறகும் கள்ளச்சாராயம் தலை தூக்க ஆரம்பிக்கலாம். ஆகவே அதிலே ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், அடுத்து பெர்மிட் முறை என்று இருப்பதன் காரணத்தால் பெர்மிட் வாங்க முடியாதவர்கள் கள்ளத்தனமாக கள்ளச் சாராயம் குடிக்கின்ற நிலைமை ஏற்படும். ஆகவே அதைத் தடுக்கின்ற முறையில் அரசாங்கம் சட்டத்திலே விதிகளை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து எனக்கு முன்னாலே பேசிய திரு. அம்பிகாபதி அவர்கள் குறிப்பிட்டது போன்று விவசாயத் தொழிலாளர்கள், பொது மக்கள் ஆகியவர்களுடைய நன்மைக்கும் சமுதாய சீர்திருத்த வளர்ச்சிக்கும் அரசாங்கம் நல்ல முறையில் பணியாற்ற வேண்டும் என்று கூறு இந்த மதுவிலக்குச் சட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால் இந்த சட்டம் மட்டும் போதாது. மது விலக்கை அடியோடு ரத்து செய்யவேண்டும் என்பதுதான் சரியானதாக இருக்கும், ஆகவே அதைப்பற்றி அரசாங்கம் சிந்தித்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேணடும் என்று கேட்டுக்கொள்கிறேன.

*திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற மதுவிலக்கினைத் தளர்த்துகின்ற மசோதாவிலே பேசுவதில் நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அதற்குக் காரணம் என்னவென்றால் நல்லதொரு சீர்திருத்த சட்டங்களை எல்லாம் இந்த அரசு கொண்டுவரும் என்ற நம்பிக்கையோடுதான் இந்த அரசுக்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். அப்படி வாக்களிக்கின்ற காலத்திலேயே மதுவினை நாங்கள் கொண்டுவருவோம், ஏனென்றால் மதுவிலக்கு என்பது தோல்வி அடைந்து விட்டது என்று நீங்கள் சொல்லி இருக்க வேண்டும். இதற்கு முன்பு இரண்டு ஆண்டு ஆண்டீர்கள், அப்போது இந்த மதுவிலக்கை அமல் நடத்த முடியவில்லை, ஆகவே மீண்டும் தேர்தலில் ஜெயித்தால் மதுவிலக்கினைத் தளர்த்துவோம் என்று தேர்தல் காலத்திலேயே சொல்லி இருந்தால் கூட நான் வருத்தப் பட்டிருக்க மாட்டேன். அப்படி முதலிலேயே சொல்லாமல் இப்போது செய்திருப்பது எப்படிச் சரியானதாகும்? உங்களை நம்பி ஓட்டளித்து ஆட்சி செய்ய அனுப்பியிருக்கிறார்களே மக்கள் அவர்களுக்குச் செய்கின்ற நல்ல காரியமா இது?



நமது மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் சொன்ன போது, அவர்கள் உண்மையில் மனிதாபிமானத்தோடுதான் இருக்கிறார்கள் என்றாலும் அவர்களுடைய கட்சியின் கொள்கையை எடுத்து வாதிடுவது என்று வரும் போது, தேர்ந்த வழக்குரைஞர்கள் எப்படி வாதத் திறமையோடு பேசி தன் கட்சிக்காரர்களுக்கு வெற்றி பெற்றுத் தருகிறார்களோ, அதுபோன்ற திறமையோடு பேசினார். அவருடைய திறமையை நான் பாராட்டுகிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, வழக்குரைஞர்கள் வெற்றி பெறுவதுபோல் என்று குறிப்பிடுகிறார்கள். உண்மையில் அப்படி அல்ல. என்னுடைய கொள்கையும், எங்களுடைய கட்சியின் கொள்கையும் அதுதான். அதைத்தான் நான் எடுத்துச் சொன்னேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, வழக்குரைஞர்களைப் போல வாத திறமை மிக்கவர் என்றுதான் அப்படிச் சொன்னேன். அவர்கள் குறிப்பிட்ட சோவியத் நாட்டிலே கூட, குடியினால் குடி கெடுகிறது, ஆகவே இந்தக் குடி தேவையில்லை என்றுதான் அந்த நாட்டுப் பெண்களும் நினைக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியுமா? அந்த சூழ்நிலையிலே அந்த நாட்டிலே இருப்பதைப்போல....

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, சோவியத் நாட்டிலே மதுவிலக்கு கிடையாது. மது குடிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக் கொள்கிறார்கள். ஆனால் அங்கே மதுவிலக்கு அமுலில் இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அங்கே மதுவிலக்கு அமுலில் இல்லை என்பது தெரியும். ஆனால் அங்கே உள்ள பெண்கள் மது குடிப்பது உடலுக்கும் கெடுதி, குடும்பத்திற்கும் கெடுதி என்பதை உணர்ந்திருக்கிறார்கள் என்று தெரியப்படுத்தினேன். நேற்று கூட மணப்பாக்கம் செல்கிற பஸ் நிலையத்தில் இளைஞர் ஒருவர் குடித்து விட்டு இறந்து கிடந்தார் என்ற நிலையைப் பார்த்தேன். அவர் கள்ளச் சாராயத்தை குடித்தாரா? நல்ல சாராயத்தைக் குடித்தாரா என்பது எல்லாம் எனக்குத் தெரியாது. இருந்தாலும் இந்தக் குடியினால் தீமைகள் தான் அதிகமாகின்றன என்பதற்காக எடுத்துச் சொன்னேன்.

மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களே கூட பேசும் போது இந்தக் குடியின் காரணமாக எத்தனை பேர் மாண்டார்கள் என்ற கணக்கை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். மக்களை உயர்ந்த நிலையில் கொண்டு வர விரும்பும் அவர்களை நல் வாழ்வு வாழ வைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கும் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி அதற்கு ஏற்ப, நல்ல திட்டங்களை உயர்ந்த லட்சியங்களைக் கொண்ட திட்டங்களை கொண்டு வர வேண்டுமே தவிர, இப்படி மக்களை மயங்க வைக்கும் குடிப் பழக்கத்தை வளர்க்கும் திட்டங்களை கொண்டு வரலாமா?

1970 ஆம் ஆண்டு மது விலக்கு ரத்து செய்யப்பட்டபோது அதை எதிர்க்கின்ற நேரத்தில், இன்றைய முதல்வர் அவர்கள் அதனை எதிர்த்து அப்போது போர்க்கொடி உயர்த்தினார். மது விலக்கு ரத்து செய்வதை எதிர்க்கும் இயக்கத்திற்கு அன்று அவர் தலைமை தாங்கினார். ஆனால் இன்றைக்கு அதே போல காரியத்தை இந்த அரசு செய்திருக்கிறதே என்று தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. யார் செய்தாலும் சரி, இன்று எதிர்ப்பவர்களும், இன்று ஆதரித்தவர்களும் அன்று ஒன்றாக இருந்து பிரிந்தவர்கள். ஆகவே, இந்த பாவ காரியத்தை மீண்டும் செய்ய வேண்டுமா என்று சற்று பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் இந்திய தலைவர்களின் படங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் கருணையோடு பார்க்கிறார்கள். ஒவ்வொருவரும் தலையை உயர்த்தி பெருமையோடு மது விலக்கைப் பற்றி பேசியவர்கள் அன்று. இங்கு படங்களாக இருக்கின்ற தலைவர்களிலே ஒருவர் கூட மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும் என்று சொன்னது கிடையாது. ஆனால் கடைசி நேரத்தில் பெரியார் அவர்கள் மட்டும். அன்றுள்ள சூழ்நிலை அவரை நிர்ப்பந்தப்படுத்தியதின் காரணமாக, ரத்து செய்யலாம் என்று சொன்னார். ஆனாலும் அவர் தனக்குச் சொந்தமான 500 தென்னை மரங்களை, வேரோடு வெட்டிச் சாய்த்தார்.

அடுத்து இந்த பில்லை எடுத்துக் கொண்டால், இந்த பில்லிலே ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன் என்று சொல்கிறபோது The Policy of Government on prohibition has been announced in the Budget Speecd for the year 1981-82. This Bill seeks to amend the Tamil Nadu Prohibition Act 1937 (Tamil Nadu Act X of 1937) suitably to give effect to the said policy. என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பாலிசி தோற்றுவிட்டது என்று தைரியமாகச் சொல்லலாம். எங்களால் முடியவில்லை என்பதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம் என்று சொல்லலாம். முன்பு என்ன நடந்தது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இதைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய சில உறுப்பினர்கள் கூட சொன்னார்கள்.

அன்று வெள்ளைக்காரன் ஆட்சியின் போது, சேலம் ஜில்லாவிலே ஒரு வெள்ளைக்காரன் கலெக்டராக இருந்தார். மூதறிஞர் இராஜாஜி அவர்கள் அங்கு சேர்மேனாக இருந்தார். அன்று அவர் தன்னுடைய ஜில்லாவுக்கு மதுவிலக்கை அமுல்படுத்தினார். கலெக்டர் அவரைக் கூப்பிட்டு நீர் என்னுடைய சேர்மேன். நான் சொல்வதைக் கேட்க வேண்டும். நான் உன்னுடைய உயர் அதிகாரி. கள்ளுக்கடையை உடனடியாக திறக்க வேண்டும், என்று கேட்டபோது, நீங்கள் டிஸ்டிரிக்ட் சீஃப்பாக இருக்கலாம். நான் இந்த நகரத்தினுடைய சீஃப்பாக இருக்கிறேன். வேண்டுமானால் என்னை டிஸ்மிஸ் செய்யுங்கள் என்று சொன்னார்கள். அந்த மூதறிஞர் 1970 ஆம் ஆண்டு காங்கிரஸ் மேல் இருந்த கோபத்





தினால், காங்கிரஸ் தோற்றுபோகச் செய்தபிறகு, கலைஞர் வீட்டிற்கு போய் கேட்டார். இந்த மது விலக்குப் பிரச்னை ஏழை மக்களை பாதிக்கக் கூடிய பிரச்னை. ஆகவே இதற்கு விட்டுக் கொடுக்க வேண்டாம் என்று கேட்டிருக்கிறார்கள். அதை யாரும் மறந்திருக்க முடியாது என்று நினைக்கிறேன். இதை நான் எந்த மத அடிப்படையிலோ, ஜாதி அடிப்படையிலோ பேசவில்லை. ஒரு மனிதாபிமான உணர்வோடு பேசுகிறேன். சமய ரீதியிலே பேசவில்லை, அரசியல் காரணங்களுக்காகவும் சொல்லவில்லை. ஏழை மக்களின் வாழ்வை நினைத்து சொல்கிறேன். இந்தத் தவற்றை நீங்கள் செய்தீர்களா? அல்லது உங்களுக்கு முன்பிருந்த ஆட்சி செய்ததா என்றெல்லாம் எடை போட வேண்டாம்.

[பிற்பகல் 1.00]

விபச்சார விடுதி நடத்துவதாலே அதிகப் பணம வருகிறது என்பதற்காக நாம் விபச்சார விடுதியை நடத்துவதற்கு ஒத்துக் கொள்ள முடியுமா ? அதை யாரோ செய்கிறார்கள் என்பதற்காக, அந்தக் குற்றத்தை நாம் செய்ய முடியுமா ? காங்கிரஸ் கட்சி ஆட்சியாக இருந்தாலும் சரி அல்லது வேறு கட்சி ஆட்சியாக இருந்தாலும் சரி, அது சரியல்ல. பம்பாய் நகரத்திலே ரெட் லைட் ஏரியா வைத்திருக்கிறார்கள். அதற்காக சென்னை நகரத்திலே அதேபோல் ரெட் லைட் ஏரியா வைத்தால் கோடிக் கணக்கிலே பணம் கிடைக்கும் என்பதற்காக, இதை ஒத்துக் கொள்ள முடியுமா ? அது இந்திரா ஆட்சியாக அல்லது அண்ணா ஆட்சியாக அல்லது யாருடைய ஆட்சியாக இருந்தாலும், அது மனிதாபிமானம் அற்றச் செயலாகும். இன்றையதினம் முதல்வராக உள்ளவர் இதைப் பூரணமாக உணர்ந்தவர். ஆனால், முதல்வரைச் சுற்றியிருக்கிறவர்கள், அரசியல்வாதிகள் அல்லது அதிகாரிகள் தங்களின் கொள்ளை லாபத்திற்காக, தங்கள் கட்சியை சேர்ந்தவர்கள் என்பதற்காக அதை விட்டு விடுங்கள் என்று சொல்வதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. நான் நிச்சயமாகச் சொல்வேன், இந்த அரசு ஒரு சட்டம் கொண்டு வந்ததே, அதை ஏன் அமுல்படுத்தவில்லை ? 1937-லே நாம் கொண்டு வந்தோம். 1952 முதல் 1967 வரையிலே மதுவிலக்குச் சட்டத்தை சரியாக அமுல்படுத்தினோம். குற்றங்கள் நடந்தது; கள்ளச் சாராயம் இருந்தது; ஆனால் மக்கள் பயந்தார்கள்.

குடிசைகளிலே சென்று பாருங்கள்; விவசாயிகளைப் பாருங்கள். அங்கேயெல்லாம் வர்க்கப் போராட்டத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். உயர்வு தாழ்வு ஒழிந்தால் ஒழிய, தொழில்கள் தேசியமயமானால் ஒழிய, இவைகளைச் செய்ய முடியாது. என்னுடைய அருமைச் சகோதரர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஜனநாயகம் என்பது வேறு; வர்க்க ரீதி என்பது வேறு. இந்த வர்க்க ரீதிப் போரட்டத்தை சர்வாதிகார நாட்டிலே தான் ஒழிக்க முடியும். இந்த நாட்டிலே ஜாதியை ஒழிக்க முடியாது; மதத்தை ஒழிக்க முடியாது. வெற்றி இதிலே வர்க்க ரீதியாக வெற்றிபெற முடியாது.

பெற்றதாக சொல்லிக் கொண்டு, பேசலாம். மேடையிலே
சொல்லலாம்; வாக்குவாதத்திற்காகச் சொல்லலாம். ஆனால்,
இதை தங்களுக்குத் தாங்களே எண்ணிக் கொள்ளலாமே தவிர
தார்மீக ரீதியாக, மனிதாபிமான ரீதியாக இதைச் செய்ய
முடியாது. இந்த நாடு சர்வாதிகார நாடாக ஆகாத வரையில்,
எந்தச் சட்டத்தையும் கட்டாயப்படுத்த முடியாது என்பது
உலகறிந்த உண்மை. அது ஆப்ரகாம் லிங்கன் காலமாக
இருந்தாலும் சரி, அமெரிக்கா என்று சொன்னாலும் சரி அல்லது
பார்லிமெண்ட் முறையிலே வெற்றிபெற்று 300 ஆண்டுகளாக
இ க்கும் இங்கிலாந்து நாடாக இருந்தாலும் சரி, மனிதாபிமானத்
தன்மை அற்றிருக்கிறது. ஆனால், மனிதாபிமானத் தன்மைக்கு
உலகத்திலே ஆதரவு கொடுக்கவேண்டுமென்று எண்ணுகிற அரசு,
இந்த அரசு. எனவே, இதை மனிதாபிமானத்தோடு பார்க்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய அருமைச் சகோதரர், ரிசர்வ்
தொகுதியிலே இருந்து வந்த மூர்த்தி அவர்கள் மிகக் கஷ்டப்
பட்டுச் சொன்னார்கள் பாவம். அண்ணல் அம்பேத்கார்
அவர்கள் ஒரு இடத்தில்கூட, அவர் காலத்தில் நான் அவரோடு
பேசினேன்; அவர் காலமெல்லாம் இருந்தேன்; வாதித்தேன்;
ஆகவேதான் நான் சொல்கிறேன்—அருமைச் சகோதரர்
இளைஞராக இருப்பதால் அவருக்குச் சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன்—அண்ணல் அம்பேத்கார் அவர்கள் ஒரு இடத்தில்
கூட மதுவிலக்கை ரத்து செய் என்று சொன்னது கிடையாது.
மதுவிலக்கிற்கு அவர் ஆதரவாக இருந்து, மக்களைத் திருத்த
வேண்டுமென்று அவர்கள் காலமெல்லாம் பாடுபட்டார்கள்
என்பதை அறிந்திருந்தவன். ஆகவே, இப்படிச் சொல்வது
மிகவும் பாவமான காரியம்; இது தவறு. இப்படிச் சொல்லி
விட்டால், போலீஸ்காரர்கள் விட்டுவிடுவார்கள் என்று எண்ணு
கிறார்களா? இது மிகவும் பாவமான காரியம்......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் ஈல்ட் ஆகவில்லை;
பிறகு பேசலாம். இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது.
உட்காருங்கள்.

திரு. எல். இளையபெருமாள்: அன்புமிக்க தலைவர் அவர்களே,
நான் எதிர்க் கட்சி என்பதற்காக சொல்லவில்லை. அருமைச்
சகோதரர் பேசுகின்றபோது, சொன்னார்கள்—எந்தக் கட்சிக்
காரர் குடிக்கவில்லை என்று சொல்ல முடியுமா? எந்தக்
கட்சிக்காரரும் லைசன்ஸ் எடுக்க முடியாது என்று சொல்ல
முடியுமா? என்று சொல்வது, வாதாடுவதற்கு வேண்டுமானால்
அழகாக இருக்கலாம். ஆனால், யதார்த்த நிலையிலே இதைப்
பார்க்கவேண்டும். தார்மீக ரீதியிலே மக்களுக்காக இருக்கின்ற
இந்த நல்ல அரசு, புரட்சி அரசு, ஏழைகள் அரசு இது தார்மீக
ரீதியிலே சரியா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த
நிலையிலேதான் வாதாட வேண்டும். யார் எல்லாம் குடிக்



கிறார்கள் என்பது இங்கே இருக்கின்றவர்களுக்குத் தெரியும்.
எந்தக் கட்சிக்காரருக்கு இதிலே பலம் அதிகம் இருக்கிறது,
எந்தக் கட்சிக்காரர்கள் அதிகமாக குடிக்கிறார்கள், பர்மிட்
வைத்துக்கொண்டு குடிக்கின்றவர்கள் யார், பர்மிட் இல்லாமல்
குடிக்கின்றவர்கள் யார், ராத்திரியிலே குடிக்கின்றவர்கள் யார்,
மேடையிலே குடிக்கின்றவர்கள் யார் என்பதெல்லாம் அவரவர்கள்
மனசாட்சிக்குத் தெரியும். லைசன்ஸ் பெறுவது என்பது யார்
வேண்டுமானாலும் பெறலாம் அல்லது பெறாமல் போகலாம்.
அது வேறு விஷயம். அதிலே எனக்கு எந்தவிதமான
ஆட்சேபனையும் கிடையாது. இதிலே அவரவர்கள் கட்சியைப்
பற்றி அவரவர்களே எண்ணிக்கொள்ள வேண்டும். யாருக்கு
கொடுக்கவேண்டும் என்பதிலே எனக்கு எவ்விதமான
ஆட்சேபனையும் இல்லை; கொடுக்கவே கூடாது என்று எண்ணு
கின்ற எனக்கு, யாருக்கு கொடுத்தாலும், கொடுக்காமல் போனா
லும் அதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது.
உத்தமர் காந்தி பற்றிச் சொன்னார்கள். உத்தமர் காந்தி
அவர்கள் இன்றைக்கு அண்ணா அவர்கள் சொன்னதைத் தான்
அன்றைக்கு சொன்னார். இராஜாஜி அவர்கள் சொன்னார்கள்.
உத்தமர் காந்தி அவர்கள் காங்கிரசை கலைக்க வேண்டுமென்று
சொன்னார்கள். காங்கிரசை கலைக்க வேண்டுமென்று
சொன்னது—ஒரு நாளில் கிடைக்கிற சபையினுடைய நேரத்திலே,
நீ எங்கு வாங்கினாய், நான் எங்கு வாங்கினேன்; நீ எப்படி
இருக்கிறாய், நாங்கள் எப்படி இருக்கிறோம் என்று அரசு
பணத்திலே நாம் அலவன்ஸ் பெற்றுக் கொண்டு பேசுகிறோமே,
இப்படிப்பட்ட நிலைமையில் காந்தி அவர்கள் கலைக்க வேண்டு
மென்று சொல்லவில்லை. நாட்டிற்கு நல்லாட்சி செய்கிறவர்கள்
நாட்டில் கடமை உணர்ச்சி உள்ளவர்கள், சொன்னதை, பேசியதை
செயல்முறையிலே காட்டுகிறவர்கள் உருவாக, வேண்டுமென்று,
உத்தமர் காந்தி அவர்கள் சொன்னாரே தவிர, நாழியையும்
வியர்த்தமாக்கி, பணத்தையும் வியர்த்தமாக்கி பேசுவதிலே
பயனற்ற நிலையிலே நாம் இருக்க வேண்டுமென்று அவர்கள்
விரும்பியது கிடையாது.

உலகத்திலேயே உத்தமர் காந்தி அவர்கள் தான் நாடு
விடுதலைப் பெற்றவுடன் ஒவ்வொரு நாட்டுக்காரர்களும், நாடு
விடுதலை பெற்றவுடன் தன் கையில் அதிகாரத்தை எடுப்பார்கள்.
ஆனால் காந்தி அவர்கள் நான் நினைத்த சுதந்திரம் வரவில்லை;
ஆகவே நான் தலைமை ஏற்கவில்லை, இதோ இருக்கிற
பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஏற்றுக் கொள்ளட்டும்;
இந்த நாடு விடுதலை பெற்று நல்லாட்சி நடத்தட்டும் என்று
சொன்னார்கள்.

பாகிஸ்தானுக்கு ஏதோ பணம் கொடுப்பதிலே காந்தி
அவர்களுக்கும், நேரு அவர்களுக்கும் வேற்றுமை கருத்து இருந்தது
என்று சொன்னார்கள். அருமை சகோதரர் இளைஞர், 30
வயதுக்கு மேல் இருக்காது என்று எண்ணுகிறேன். சுதந்திரம்
வந்தது கூட அவருக்குத் தெரியாது என்று நினைக்கிறேன்

..ாவம்: அது வேற்றுமை கருத்து அல்ல; இந்த நாடு பிரியக் கூடாது என்பதற்காகத் தான் சொன்னார்; பிரிந்ததால்தான், நான் நினைத்த சுதந்திரம் வரவில்லை என்று உத்தமர் காந்தி அவர்கள் சொன்னார்கள்.

இந்த சபையில் கூட ஒருவர் வெங்காயம் என்று சொன்னதை எப்படி அங்கீகரித்தது; வெங்காயப் பேச்சு என்பது உண்மையிலே பெரியாரைதான் நினைவூட்டும். அவர் பெரியவர்; ''என்னடா பேச்சு, வெங்காயப்பேச்சு'' என்று எல்லோருக்கும் சொல்வார்கள். அவர் பெரியவர், சீர்திருத்தவாதி, இந்த நாட்டிற்கு நல்லறிவு வரவேண்டும் என்று பகுத்தறிவை சொன்னார்கள் என்பதால் யாருக்கும் ஆட்சேபனை கிடையாது. ஆனால் அதேசமயத்தில் இனவெறியை அவர்கள் தூண்டவில்லை. அவர் சாப்பிடுகிற போது கூட நல்ல பிராமண ஓட்டலாக போய் வாங்கி வா என்று சொல்வார்கள். என் ஊருக்கு அவர் வந்திருக்கிறார், நான் கேட்டிருக்கிறேன்; என்ன, ஐயா என்று ஒருவர் கேட்டார்; அப்படி கேட்ட போது அவர் சொன்னார்கள், ''அவன் தான் ஒழுங்காக வைத்திருப்பான்; நம்மவன் சரியாக வைக்க மாட்டான் ஆகவே அவன் கிட்டேயே வாங்கி வா'' என்று சொல்வார்கள். ஆகவே அவர் பொருளைத் தான் பார்ப்பாரே தவிர பிராமணனா, ஆரியனா என்று பார்த்ததில்லை. வெங்காயம் என்று ஒரு பேச்சை இங்கு சொல்லியதை எப்படி சபை அங்கீகரிக்கிறது, அப்படியானால் நாங்கள் நாளைக்கு வேறு யார் பேசினாலும், உன் பேச்சு வெங்காயப் பேச்சு என்று சொன்னால், இந்த சபை ஏற்றுக் கொள்ளுமா என்பது தெரியவில்லை. சபாநாயகர் அவர்கள் இதில் தீர்ப்பு கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது கோடிக்கணக்கான மக்களுக்கு கேடு உண்டாக்குகிறது. 70 சதவீத தொழிலாளர்கள் குடிக்கிறார்கள் குஜராத்தில் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன் உத்தமர் காந்தி பிறந்த இடத்திலே மதவெறியர்களும், இனவெறியர்களும் இன்று அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்ட சட்டத்தை மீறி ஷெட்யூல்டு வருப்பினருக்கு புரமோஷன் கொடுக்கக் கூடாது; ரிசர்வேஷன் கொடுக்கக்கூடாது; ரெக்ரூட்மெண்ட் கொடுக்கக் கூடாது என்று செய்கிறார்களே, அதே கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா ? ஆகவே இந்த உதாரணத்தை பின்பற்றுவோம் என்று எங்களை அச்சுறுத்துகிறீர்களா என்று கேட்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்ற கழகம், ஆதி திராவிடர் என்று பெயர் வைத்தது என்று பெருமை கொள்கிற நீங்கள், இதே குஜராத் மாநிலத்தை எடுத்துக் கொண்டால் எனக்கு பயமாக இருக்கிறது. அந்த நிலை வராமல் முன்னவரும், தார்மீக மனிதாபிமானம் உள்ள தமிழர்களும் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற கருத்திலே, இளைஞர், சகோதரர் எப்படிச் சொன்னார் என்று எனக்குத் தெரியவில்லை. மேலும் இந்த மசோதாவிலே கடைசியாக நான் சொல்ல விரும்புவது ஒன்று. மனிதன், மனிதனாக வாழ வேண்டும்;





குடி, குடியை கெடுக்கும் என்று எல்லோரும் சொல்கிறார்கள்' குடி, குடியை கெடுக்கிறது என்பதை தெரிந்தும் எதற்காக கொண்டு வருகிறீர்கள்; பணத்திற்காக என்று சொல்லுங்கள்' அல்லது குடியை குடி கெடுக்காது; ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி யிருக்கிறோம், குடித்து விட்டு வந்தவுடன் புத்தி சொல்வோம் என்று;

பெரியார் அவர்கள் சொன்னது ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. கள்ளுக்கடை கூடாது என்று பிரசாரம் செய்த போது, குடிப்பவர்கள் இவர் தலையிலே கள்ளை கொண்டு வந்து ஊற்றினார்களாம் ஈரோட்டிலே. இது அவர் சொன்ன வார்த்தை. புத்தி சொல்ல போன இடத்திலே கிடைத்த பலன். அதுமட்டு மல்ல நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தியா பூராவும் கள் இருக்கிறது என்று சொல்கிறார்கள். கள் இருப்பது தென் நாட்டில் தான். வட மாநிலங்களில் தென்னை மரங்கள் கிடையாது. இரண்டாவது, சாராயம் கொண்டு வந்தார்கள் என்றார்கள்; சாராயம் கொண்டு வந்தது உண்மைதான்; யார் கொண்டு வந்தாலும், குற்றம் தான். அன்னை இந்திரா காந்தி ஏன் மதுவிலக்கை கொண்டு வரவில்லை; ஏன் நமக்குப் பணம் தரவில்லை என்று கேட்கிறார்கள். கேட்பதற்கு உரிமை உண்டு.

[பிற்பகல் 1.10]

கொடுக்கவேண்டியது அவர்களுடைய கடமை. ஆனால் காங்கிரஸ் கட்சி அன்றைக்கே அதை ஆட்சேபித்து இருக்கிறது. அதற்கு மற்ற மாநிலங்கள் உடந்தையாக வரவேண்டும். வராவிட்டால் குற்றம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். நாங்கள் 1952 முதல் 1967 வரையிலும் பல புதுத் திட்டங்களைக் கொடுத்தோம், இலவசமாக உணவு கொடுத்தோம், சீருடை கொடுத்தோம், கள்ளுக்கடைகளை மூடுவதிலே முழுவெற்றியை நாங்கள் பெற்றுவிட்டோம் என்று சொல்லவில்லை. ஆனால் வெற்றிபெற்றோம், மக்களுக்கு மதுவின் அச்சத்தை விளை வித்தோம், மக்கள் பயந்திருந்தார்கள். ஏதோ போலீஸ்காரர் லஞ்சம் வாங்கினார், லஞ்சம் வாங்கினார் ஆகையினால் போய் விட்டது என்று சொன்னார்கள். போலீசார் மட்டுந்தானா லஞ்சம் வாங்குகிறார், அதைச் சொன்னால் இந்த அவையிலே குற்றம் என்று எல்லோரும் சண்டை போடுவீர்கள். வாங்காத ஆள் 1 சதவீதம் இருக்கும் ஆனால் தமிழ் நாட்டிலே அதற்கு அன்பளிப்பு என்ற பெயரை வைத்துக் கொண் டிருக்கிறார்கள். அந்த நபரே வாங்கிக் கொடுத்து மாநாடு நடத்தினால் ஆம் என்று ஒப்புக் கொள்கிறோம். மனிதாபி மானத்திலே நாம் பின்தங்கியிருக்கிறோம். வட நாட்டார் தென் நாட்டாரைவிட—நான் அவர்களைக் குறை சொல்லவில்லை வெற்றி பெறாதவர்கள் ஆதி சங்கராச்சாரியர்கூட தென்நாட்டிலே யிருந்து சென்றார், இந்தியா பூராவும். அண்ணா அவர்கள்

மாநிலங்களுக்கு சுயாட்சி கேட்டார், திராவிட நாடு ஏன் கேட்கிறேன, காரணம் என்ன என்று சொன்னார்கள், அங்கே சித்திரி, இங்கே முந்திரி என்றெல்லாம் சொல்லி மக்கள் கவர்ச்சிக்காக பேசினார்கள். அந்த உத்தமர்கூட கள்ளுக் கடையைக் கொண்டுவருவேன் என்று சொல்லவில்லை. அந்தப் பெயரைச் சொல்வதற்கும் வினவுவதற்கும் நமக்கு என்ன தகுதி இருக்கிறது ? சொன்னால் காரிய சாத்தியமில்லை என்கிறார்கள். மனிதன் எண்ணினால், இஃப் தெர் இஸ் எ வில், தெர் இஸ் எ வே என்பார்கள், அதைப்போல் தான். வில் இல்லாவிட்டால் எங்கே வே வரும். திரு. சங்கரய்யா அவர்கள் சிறந்த தலைவர். நான் அவர்களை கெஞ்சிக் கேட்டுக் கொளவது எல்லாம் இந்த ஒரு லட்சியத்தை வைத்து 25 பேர்களை வாழவைக்க முடியும், 75 பேர்கள் இல்லாவிட்டாலும்கூட,

திரு. என். சங்கரய்யா : அவர்கள் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். குஜராத்திலே மதுவிலக்குச் சட்டம் அமலில் இருக்கிறது. அங்கே தான் ரிசர்வேஷனை எதிர்த்து கடுமையான மனிதாபிமானமற்ற முறையிலே சண்டை நடக்கிறது. ஒன்று வில் இருந்தால் செய்யலாம் என்று சொன்னார்கள். பெரும் பான்மையான காங்கிரஸ் அரசாங்கங்களுக்கு அந்த வில் ஏன் இல்லாமல் போய்விட்டது ? அதை யோசிக்கக்கூடாதா ?

திரு. எல். இளையபெருமாள் : அய்யா சபாநாயர் அவர்களே, அவர்கள் செய்தாலும் குற்றம் தான். குற்றம் என்பதிலே ஆட்சேபணை கிடையாது. அவர்கள் செய்தால் நான் செய்வேன், அவர்கள் குடிப்பதால் நான் குடிப்பேன் தி.மு.க. ஆட்சியில் கள் சாராயக்கடைகளை திறந்தார்கள், அண்ணா தி.மு.க. ஆட்சியிலேயும் அதிகமாக திறப்போம் கம்யூனிஸ்ட் ஆட்சி வந்தால் கூட லைசென்ஸ் போடுவோம்; நாங்கள் எல்லாம் மக்களை வாழவைப்போம் என்று சொன்னால் எல்லோரும் மக்களைக் காட்டி ஏமாற்றுகிற நிலை வேண்டாம். பலர் சிலரை சில நாள் ஏமாற்றலாம், சிலர் பல்ரை பல நாள் ஏமாற்றலாம், ஆனால் எல்லோரும் எப்போதும் யாரையும் ஏமாற்றமுடியாது என்ற காரணத்தினாலே நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்த மசோதாவை வாபஸ் பெற வேண்டும். இந்த மசோதா மக்களுக்கு கேடு உண்டாக்கும், இந்த மசோதாவைக் கொண்டுவருகிற இந்த ஆட்சியை மக்கள் மதித்தார்கள், வாக்களித்தார்கள், அந்த மக்களுக்கு துரோகம் செய்யக்கூடாது. காந்தியின் பெயரைச் சொல்கிற நீங்கள், அண்ணா பெயரைச் சொல்கிற நீங்கள் பெரியார் பெயரைச் சொல்கின்ற நீங்கள், இஸ்மாயில் சாய்பு படத்தை வைத்த நீங்கள், அம்பேத்கார் படத்தை வைத்த நீங்கள் வள்ளுவரையும் சேர்த்து வைத்துக்கொண்டு தினமும் குறளை ஓதிக்கொண்டு இந்தக் கெட்ட காரியத்தைச் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.





திரு. ஜி. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எங்கேயுமே மதுவிலக்குப் பற்றிப் பேசியதே இல்லை என்று இங்கே சொன்னார்கள். பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் பம்பாய் மாநாட்டிலே போலீஸும் போலீஸ் அதிகாரிகளும் இந்தச் சட்டத்தை அந்த மக்களுக்கு நியாயமான முறையிலே மனச்சாட்சிப்படியான முறையிலே செய்யத் தவறிவிட்டார்கள். அதனால் கள்ளுக்கடைகளை மதுக்கடைகளைத் திறக்க வேண்டுமென்று அந்த மாநாட்டிலே பேசியிருக்கிறார்கள். போலீஸார் செய்த தவறினால்தான் அதைத் திறக்கவேண்டும், அந்த மக்களைக் காப்பாற்றவேண்டும் அதுதான் வழி என்றும் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி ஒரு எரியும் வீடு என்று அம்பேத்கார் அவர்கள் சொல்லியிருக்கிறார்களே, அந்தக் கட்சியிலிருந்துகொண்டு பேசுகிறீர்களே, அதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ? இதை மாத்திரம் அம்பேத்கார் சொன்னார் என்று சொல்கிறார்களே, காங்கிரஸ் கட்சி எரியும் வீடு என்று சொன்னார்களே, அதை ஏற்றுக்கொள்கிறீர்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, மதுவிலக்குச் சட்டத் திருத்த முன்வடிவில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள், அவர்கள் பேசுகின்றபொழுது அவர்களுடைய கட்சிக்கேற்றவாறு இதை ரத்து செய்ய வேண்டுமென்றும். மிகத் தீவிரமாக ரத்து செய்ய வேண்டுமென்றும், மது விலக்கு இருக்கக் கூடாது என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கட்சியும், இங்கே பேசினார்கள். (குறுக்கிடு) பார்வர்ட் பிளாக் கட்சியும் பேசியது, தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ், இதை மிகவும் தீவிரப்படுத்த வேண்டும் மிகமிகத் தீவிரப்படுத்த வேண்டும் என்று பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரசும் பேசுகின்றபொழுது, இதைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று சொல்லியும் இடையிலே கொஞ்சம் மெதுவாகவும் கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் இதைச் சொல்கிறபொழுது, இங்கேயிருக்கின்ற கட்சிகள் தங்களுடைய எண்ணங்களை ஒரே விதமாகச் சொல்லாமல், மாறி மாறியும் சொல்கிறபொழுது துணிவாகவும் கொஞ்சம் அச்சத்தோடும் இங்கே பலர் பேர்யிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையிலும், அதனுடைய தலைவர் புரட்சித் தலைவர்களைப் பொறுத்தவரையிலும், எந்த அளவிற்கு மக்கள் மது அருந்துவதிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமென்று செய்ய வேண்டுமோ அதிலே தீவிரமாக, அசைக்க முடியாத எண்ணங்களை கொள்கைகளை வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகச சொல்வேன்.

இங்கே சொன்னார்கள், உங்கள் கட்சிதானே மதுவைக் குடித்தாலும், கள்ளச்சாராயம் காய்ச்சினாலும், கொண்டு போனாலும், சைக்கிளை வாடகைக்குக் கொடுத்தாலும் இவ்வளவு பெரிய கடுமையான சட்டத்தைப் போட்டீர்களே

என்று சொன்னார்கள். அவ்வளவு கடுமையான சட்டத்தைப் போட்டோம் என்றால், பல கட்சிக்காரர்கள் அதை எதிர்த்த பொழுதுகூட, புரட்சித் தலைவரவர்கள் அதிலே வலுவாக இருக்க வேண்டும் என்று எண்ணி துணிந்து போட்டதன் நோக்கமே மக்களை எப்படியும் காப்பாற்றியாக வேண்டும், சமுதாயத்தை எப்படியும் காப்பாற்றியாக வேண்டும், அவர்களை எப்படியும் இந்தக் குடிக்கின்ற குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென்றுதான் கடும் சட்டம் போடப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும்.

ஆனால், இன்றைக்குத் திருத்த மசோதா கொண்டுவந்த பொழுதும், அந்தச் சட்டம் அப்படியே இருக்கிறது என்றால் அதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். அது அப்படியே இருப்பதற்கு காரணம் என்னவென்றால், இன்றைக்கும் யாரும் தவறாகக் குடித்தாலும், தவறாகக் கொண்டு சென்றாலும், தவறாகச் காய்ச்சினாலும் அவர்களைக் கண்டிக்க வேண்டுமென்ற கடுமையான சட்டம் அப்படியே இருக்கிறது என்பதைத் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன்.

இங்கே பேசுகின்றபொழுது வருவாய் வரும்; அதிகப் பணம் வரும் என்று சொன்னார்கள். நான் உங்களுக்குத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்வேன்; அரசின் சார்பிலே தெரிவித்துக் கொள்வேன். பணம் வேண்டுமென்ற காரணத்திற்காக என்பது கூட அல்ல; பணம் வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக என்பது கூட அல்ல; இன்னும் சொல்கிறேன், பணம் வேண்டுமென்பதற் காகவே இதைக் கொண்டுவரவில்லை என்பதை மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் அரசின் சார்பில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதை இன்றைக்குக் கொண்டு வந்ததன் நோக்கமே, நடக்கின்ற குற்றங்களைக் கண்டிக்க வேண்டும்; நீக்க வேண்டும் என்பதுதான். உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால், உதாரணத்தைக் கொண்டு எல்லோரும் பேசினார்கள். புள்ளி மான் என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதாகச் சொன்னார்கள். புள்ளிமானைக் காப்பாற்ற வேண்டியது கடமை. ஆனால் புள்ளிமானைக் கொல்ல வேண்டுமென்று வேடன் கையிலெ உள்ள வில்லிலே நாண் ஏற்றி அம்பு வைத்துக் குறி பார்த்துக்கொண்டிருக்கிறான்.

அதுமட்டுமல்லாமல் புள்ளிமான் இரத்தத்தைக் குடிப்பதற் காகக் கடும் பசியுடன் தன்னுடைய கோரப்பற்களைக் காட்டிக் கொண்டு புலியானது அந்த மானைப் பார்த்துக்கொண்டிருக் கிறது. நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவரை கொலை செய்து விட்டால், கொலை செய்யப்பட்டவருக்கு அதிகமான நஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால் அவனைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குத்திக் கொண்டிருந்தால் அவனுக்கு எவ்வளவு தொந்தரவு இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.





[பிற்பகல் 1–20]

அந்த கோரப் புலி, மானைக் கடித்து தின்று விடவில்லை, கொன்று விடவில்லை. கடிக்கிறது, ரத்தம் வருகிறது குடிக் கிறது, காயத்தை ஆற்றுகிறது. அதற்குப் பிறகு அந்த ரத்தம் ஊற வேண்டும் என்பதற்காக, புல்களையும் பூண்டுகளையும், போட்டு, புள்ளி மானையும் வளர்க்கிறது. அந்தக் கோரப் புலி யார் என்றால். அவர்கள் தான் சமுதாயத்தினுடைய விரோதிகள். அந்தச் சமுதாய விரோதிகள்தான் பணத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்பதற்காக கள்ளச் சாராயத்தைக் காய்ச்சி கள்ள விற்பனை செய்து, மறைமுகமாகப் பணத்தை வாங்கி, அந்தப் பணத்தாலே அந்த கோரப் புலி பல முள்ள புலியாகமாறி, தேவைப்படுகிறபொழுது மானைக் கடித்து ரத்தம் வெளியே வருகிறபொழுது குடித்ததைப் போல, பணத்தை வாங்குகிறார்கள். தேவைப்படுகிறபொழுது புண்ணை ஆற்றி விட்டு புல்லைப் போட்டு வளர்க்கிறது. அந்தப் புலியை நாம் கொல்ல வேண்டும். இன்றைக்கு மானினுடைய ரத்தத்தைக் குடித்து குடித்து, பலமுள்ள புலியாக, வலு வாய்ந்த புலியாக இருக்கிறது. அதைக் கொல்ல வேண்டுமென்றால், மானினுடைய ரத்தம், புலியினுடைய வாய்க்கு போகக் கூடாது. மானினுடைய ரத்தம் புலியினுடைய வாய்க்கு போகக் கூடாது என்றால் என்ன? கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டும், கள்ளத்தன மாக விற்பதை ஒழிக்க வேண்டும். அவைகளையெல்லாம் செய்தால்தான் புலி பட்டினியாகக் கிடந்து சாகும். புலிப் பட்டினியாகக் கிடந்து சாகாவிட்டாலும் கோரப் பசியினாலே பலம் குறையும் சமயம் பார்த்து அதை வீழ்த்த வேண்டியது நம் எல்லோருடைய கடமையாகும். அப்படி நாமெல்லாம் அந்தவிடப் பலமாகி அதை விழ்த்த வேண்டுமென்றால், இன்றைக்கு அவர் கைக்கு பணம் போகக் கூடாது; கள்ளச் சாராயம் காய்ச்சக் கூடாது, கள்ளத் தனமாக விற்கக் கூடாது. அவைகளையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏதோ அரசுக்குப் பணம் வேண்டுமென்பதற்காக இது வழி என்று தயவு செய்து யாரும் கருத வேண்டாம். அதுவல்ல நோக்கம்.

மது விலக்குக் கொள்கையிலே இன்றைக்கு இருக்கிற அரசு, அண்ணாவின் கொள்கையிலே, அவர் சொன்னதை மனதிலே வைத்து அதை நிறைவேற்றுவதிலே என்றும் உறுதியாக இருக்கும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே ஒரு திருத்தம் வருகிறது. அந்தத் திருத்தம் இருக்கிற அநியாயங்களை நடக்கின்ற அட்டூழியங்களைக் குறைக்க வேண்டும், அல்லது நிறுத்த வேண்டும், அது இல்லாமல் பண்ண வேண்டும். அப்படி கொஞ்சங்கொஞ்சமாக, அதை நீக்கிய பிறகு சமுதாயம் திருந்திய பிறகு திருத்துவதற்கு வேண்டிய முயற்சி களை எடுத்துக் கொள்கிறபொழுது, அதைப்பற்றி இந்த அரசு மீண்டும் பரிசீலனை செய்யும் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன், இன்றைக்கு அவைகளை நாங்கள் கொண்டு

வந்து விடுவோம் என்று நீங்கள் எல்லாம் சொன்னாலும், அதிலே நாங்கள் ஒருதி முத்தம் தான் கொண்டுவந்திருக்கிறோம். உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால், சில தினங்களுக்கு முன்னாலே என்னுடைய கவனத்திற்கு ஒரு செய்தி வந்தது. consolidation of National cess என்ற புஸ்தகத்திலே ஒன்று எழுதப்பட்டிருக்கிறது, அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள்? மதுவின் தீமைகளைப் பற்றி மக்களிடம் பிரச்சாரம் செய்வதுடன் அரசு நின்று விட வேண்டும். சட்டம் போட்டு மதுவிலக்கை அமுல் படுத்துவது என்பது கடினமானது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதை அப்படியே நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அப்படியும் இன்றைக்குப் பலபேர், மிகப் பெரியவர்கள், அதைப்பற்றியெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் குறிப்பிட்டதைத் தெரிவித்தது, இன்றைய இந்திய துணைக் கண்டத்து பிரதமர் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்றை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். மதுவிலக்கு அன்றைக்குப் பல மாநிலங்களில் கடுமையாக இருந்தது 7, 8 மாநிலங்களில் மிகக் கடுமையாக இருந்த நேரம் எப்பொழுது என்றால். 1956 என்று உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன். அந்த 1956 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியப் பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம், கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.

"The House is of opinion that prohibition should be regulated as an integral part of the second Five Year Plan; and reccommends that the Planning Commission formulate the necessary progrmme to bring out nationwide prohibition speedily and effectively."

இது எப்போது என்றால் 1956 ஆம் ஆண்டு. அப்போது இந்தியத் துணைக் கண்டத்திலே இருந்த மாநிலங்களின் நிலை என்ன? ஆந்திராவில் இருக்கிற 20 மாவட்டங்களில் 11 மாவட்டங்களில் மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. மைசூரிலே இருக்கிற 24 மாவட்டங்களில் 16 மாவட்டங்களில் மதுவிலக்கு உண்டு. மகாராஷ்டிரத்திலேஇருக்கிற 26 மாவட்டங்களில் மதுவிலக்கு உண்டு. உ. பி. யிலே 51 மாவட்டங்களில் 11 மாவட்டங்களில் மதுவிலக்கு உண்டு. அசாமில் இருக்கிற 11 மாவட்டங்களில் 3 மாவட்டங்களில் உண்டு. கேரளாவில் கண்ணனூர், கோழிக்கோடு, பாலக்காடு மாவட்டங்களில் இருந்தன. ஒரிசாவில் 5 மாவட்டங்களில் இருந்தது. இன்றைக்கு என்ன நிலைமை என்றால், எல்லாமாவட்டங்களிலும் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டு ஆண்டுகள் பலவாகின்றன. நான் சொல்வது 1956 ஆம் ஆண்டு. இப்போது 1981 ஆண்டு. 25 ஆண்டுகளுக்கு முன்னாலே நாடாளுமன்றத்திலே இது கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படாவிட்டாலும், அதைச் சொல்லி உங்களிடத்திலே நான் வாதாடவில்லை. அந்த வழக்கைச் சொல்லி, என்னுடைய பேச்சுக்கு வலிவு தேடவில்லை. ஆனாலும் அப்படி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி, அப்படி எல்லாம் இருந்தாலும்



கூட நாம் இன்றைய நிலைமையில் மதுவிலக்கைத் தீவிரப்படுத்த வேண்டும் என்பதற்காக சட்டம் போட்டிருக்கிறோம். அதை நடைமுறைப்படுத்துகிறோம்.

அதே நேரத்தில் நான் முதலிலேயே சொல்லியபடி, சமுதாயத்திலே இருக்கிற குற்றவாளிகளை எல்லாம் இன்றைக் குக் கண்டு பிடித்து, அதைக் குறைப்பதற்காக இந்த வழிகளை நாங்கள் பின்பற்றுகிறோம். உங்களிடத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன், நான் நீண்ட நேரம் உங்களிடத்திலே பேசி வாதாட வேண்டியதில்லை என்பது உங்களுக்குத் தெரியும்.

ஆனால் இங்கே பேசியபோது ஒன்றைச் சொன்னார்கள். நான் உங்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1974–75லே சாராயக் கடைகள் கிட்டத்தட்ட 4000 இருந்தன. கள்ளுக்கடைகள் கிட்டத்தட்ட 7,000 இருந்தன. இன்றைக்கு நிலைமைக்கு ஏற்றவாறு அவைகள் அதிகரிக்கப் படும். ஏலம் போடப்படும். ஏலத்திலே யாரும் எடுப்பார்கள். இதிலே ஏதோ கட்சிக்காரர்களுக்கு கொடுத்துவிடுவார்களோ என்ற கவலை யாருக்கும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே நான் வருவாயைப் பற்றி எண்ணாததற்குக் காரணம் வருவாயைப் பற்றியோ எண்ணி—சாதாரணமாக உங்களுக்குத் தெரியும்—நாம் எந்த நோக்கத்திற்காக கொண்டு வருகிறோமோ அந்த நோக்கத்தை எண்ணிப் பார்க்கிற போதுதான் நம்முடைய கவனம் அங்கே செல்லும். நான் ஒன்றை உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய கவனமோ அரசினுடைய கவனமோ இதுவரையில் அந்த இடத்தில் செல்ல வில்லை எவ்வளவு வருவாய் வரும் என்று. வருவாய் வரட்டும், வந்தால் பயன்படுத்திக் கொள்வோம். ஆகவே அதற்காக மட்டும் இது இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள் கிறேன்.

நம்முடைய அருமைச் சகோதரர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிற போது கொலை செய்கிறார்கள், கொள்ளை அடிக் கிறார்கள், கற்பழிக்கிறார்கள், ஆக இவைகள் எல்லாம் நடை பெறுகிறது என்பதற்காக அந்த சட்டத்தை நீக்க முடியுமா என்று கேட்டார்கள். நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். கொலை செய்வது யாரை, இன்னொருவரை. கொள்ளை அடிப்பது யாரிடம், மற்றவர்களிடம், கற்பழிப்பது யாரை, மற்றவர்களை. இவைகள் எல்லாம் தாங்களே செய்கின்ற குற்றம் இல்லை. மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படுகிறது. ஆனால் அதற்கும், குடிப்பதற்கும் வேறுபாடு உண்டு. ஆனாலும் அவைகள் குற்றம்தான். ஆனால் அந்தக் குற்றத்தை நீக்குவதற் காகத்தான் இந்த சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக் கிறோம். இதைப் பொருத்தவரையில் இந்த அரசு எந்தக் காரணத்திற்காக கொண்டு வந்தது என்பதை உங்களிடத்திலே தெளிவாகச் சொன்னேன்.

[1981 ஏப்ரல் 10

[பிற்பகல் 1—30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதே சட்டமன்றத்தில் பேசுகிற போது தமிழகத்தில் முதல்வர் மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேரடியாக ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அப்படி நேரடியாகக் குற்றச்சாட்டு சொல்கிறபோது, எரி சாராய ஊழலில் அவர் நேரடியாகச் சம்பந்தப்பட்டு இருக்கிறார் என்ற குற்றச்சாட்டை இங்கே சொன்னபோது, முதலமைச்சர் அவர்கள் இங்கே இருந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது, அந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் நிருபிக்கமுடியுமா?, பிரைமாபேசி—இருக்கிறதா, முதல் நோக்கிலேயே முகாந்திரம் இருக்கிறதா, குற்றம் இருக்கிறதா என்றெல்லாம் கேட்கவில்லை. அப்படிக் கேட்காவிட்டாலும் அவர்கள் தன்னையே நீதி விசாரணைக்கு உட்படுத்திக் கொண்டார்கள்—என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். இன்றைக்கு அந்தக் குற்றச் சாட்டுகளை நிருபிப்பதற்கு, அதிலே இருக்கிற உள்நோக்கத்தை வெளிப்படுத்துவதற்கு கமிஷன் போடப்பட்டு இருக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியும். அதன் அடிப்படையில், அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பெருந்தன்மையாக விசாரணைக் கமிஷன் நியமிக்க ஏற்றுக்கொண்டார்கள் என்ற செய்தியும் உங்களுக்குத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குற்றச்சாட்டுகளை சுமத்திய எதிர்க்கட்சித் தலைவரின் கடமை என்னவென்றால், அதை நிருபிக்க வேண்டும் அதை நிருபிக்க வேண்டிய கடமை அவர்களிடத்தில்இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது சம்மந்தமாக நான் வேறு ஒன்று சொல்ல வேண்டுமானால், சில தினங்களுக்கு முன்னால் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும், வெளியே இருக்கின்ற சிலரும் தமிழகத்திலே சில தவறுகள் நடந்து இருக்கிறது என்று ஆளுநர் அவர்களிடத்திலே ஒரு மனுவைக் கொடுத்து இருக்கிறார்கள். மதிப்பிற்குரிய சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், திருவாளர்கள். குமரி அனந்தன், எஸ். ஆண்டித் தேவர், ப. நெடுமாறன், சட்டநாதக் கரையாளர், ஜி. மூர்த்தி ஆகியோரும் மற்றும் திருவாளர்கள் திருவாரூர் தங்கராஜ் அவர்களும், செங்கம் ஜப்பார் அவர்களும், திரு. ஜோசப் பெர்னாண்டோ அவர்களும், வை. பாலசுப்பிரமணியம் அவர்களும், இரா. குமரேசன் அவர்களும், திருமதி தி. ா. அனந்தநாயகி அவர்களும் ஒரு குற்றச்சாட்டை அவர்களிடத்தில் கொடுத்தார்கள். 1969-முதல் 1971 வரையிலும், எரி சாராயம் தமிழகத்தை விட்டு மற்ற மாநிலங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் அனுப்பியதிலும், தமிழ் நாட்டுக்குள்ளே எரி சாராயத்தை விநியோகிப்பதிலும் முறைகேடுகளும், ஊழலும், நடந்து உள்ளன



1981 ஏப்ரல் 10] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

என்றும் அதற்கு முன்னால் அப்போது இருந்த முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு தொடர்பு உள்ளதாக சந்தேகப்படுவதாகவும், அது பற்றி நீதி விசாரணை நடத்த வேண்டும் என்றும் மனு கொடுத்தார்கள். ஆளுநரிடத்தில் கொடுக்கப்பட்ட மனு அரசுக்கு அனுப்பப்பட்டது. அந்த மனுவைப் பரிசிலித்து குற்றச்சாட்டுகளில் ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து அரசுக்கு தெரிவிக்குமாறு சம்மந்தப்பட்ட எக்சைஸ் இயக்குநரிடத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து அவற்றில் சில குற்றச்சாட்டுகளுக்கு ப்ரைமாபேசி-முதல் நோக்கமே ஆதாரமே இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. பல குற்றச்சாட்டுகளுக்கு ப்ரைமாபேசி முதல் எடுப்பிலேயே குற்றம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ப்ரைமாபேசி கேஸ், முதல் நோக்கத்திலேயே ஆதாரம் இருப்பதாக கருதப்படும் குற்றச்சாட்டுகள் ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருப்பதால் அந்தக் குற்றச்சாட்டுகளின் உண்மை நிலையை ஆழமாக ஆராய்ந்து கண்டறிய நீதி விசாரணை அவசியம் என்று அரசு கருதுகிறது. கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக ஏற்கனவே ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற நீதிபதி கைலாசம் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது திரு. குமரி அனந்தன், திரு நெடுமாறன், திரு. ஆண்டித் தேவர் மற்றவர்கள் உள்பட பல அரசியல் கட்சித் தலைவர்கள் கொடுத்த மனுவில் கண்ட குற்றச்சாட்டுகளில் ப்ரைமாபேசி கேஸ் ஆதாரம் இருப்பதாகக் கருதப்படும் குற்றச்சாட்டுகளை ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள திரு. கைலாசம் கமிஷனே விசாரிக்க வேண்டும் என்று அரசு கருதுவதால் அதற்காக 11—3—81-அறிக்கையில்-டர்ம்ஸ் ஆப் ரெபரன்சில் — தகுந்தவாறு விரிவுபடுத்தி அந்த ஆணையை வெளியிட இருக்கிறது என்ற செய்தியையும் உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன் இந்த சட்ட முன்வடிவைப்பற்றி உங்களுடைய கருத்துக்களை எல்லாம் சொல்லி, இங்கே நிறைவேற்றுவதற்கு நான் உங்களைக் கேட்டபோது, உங்களுடைய உயரிய கருத்துக்களை எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். இதை நடைமுறைப்படுத்துகிறபோது, இதிலே இருக்கிற உங்களுடைய ஆலோசனைகளை எல்லாம் அரசு தீவிரமாகப் பரிசிலித்து நடைமுறைப்படுத்தும் என்று கூறி, என்னுடைய பதில் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, சில கட்சித் தலைவர்கள் கொடுத்த மகஜர் மீது, அதை அந்த இலாகாவுக்கு அனுப்பி, முகாந்திரம் இருப்பதாகச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகளை ஏற்கெனவே அமைத்து இருக்கிற கைலாசம் கமிஷனுக்கு அனுப்ப, அதனுடைய ''டேர்ம்ஸ் அண்ட் ரெஃபரன்ஸ்'' ஐ விரிவுபடுத்தப்போவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக காலத்தில் ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் அவைகளைப்பற்றி விசாரிப்பதற்கு ஏற்கெனவே ஓய்வு பெற்ற நீதிபதி கிருஷ்ணசாமிநாயுடு தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் அப்படி தவறு இழைத்திருந்தால் கண்ணிலே விளக்கெண்ணெய் விட்டு தேடிக்கொண்டிருக்கிற ஆளும் கட்சியினர் அதிலே அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளைக் கொடுத்து விசாரித்திருக்கலாம். ஆனால் அப்பொழுதெல்லாம் விட்டுவிட்டு இப்போது திடீரென்று தாங்கள் கொடுத்திருக்கிற.. .. ..

டாக்டர் கே. சௌரிராஜன் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் முடிக்கட்டும். உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டரை பின்னால் கேட்கிறேன்.

திரு. துரைமுருகன் : அப்போதே கொடுத்திருப்பார்கள். ஆனால் அவைகளுக்கு எல்லாம் மாறுப்பட்ட வகையில் நாங்கள் ஆளும் கட்சியிலே செய்திருக்கிற எரிசாராய ஊழலை ஊருக்கு, உலகுக்கு அம்பலப்படுத்தினோம் என்பதற்காக மீண்டும் ஏதாவது ஒன்று எரிய வேண்டும் என்பதற்காக அமைச்சரவர்கள் இதை தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் ஊருக்கு, உலகத்திற்கு எது நியாயம் என்று தெரியும். இன்றைக்கு எரிசாராய ஊழலிலே மாட்டிக்கொண்டிருக்கிறவர்கள் தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காக இப்படிப்பட்ட அரசியல் சாகசங்களைப் புரிகிறார்கள் என்பதால் அதற்கு எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்ப்பு தெரிவிக்கிறார், அவ்வளவுதான்.

விவாதம் முடிவுற்றது. திரு. ரகுமான்கான் அவர்களுடைய தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

திரு. என். எஸ். வி. சித்தன் : நாங்கள் டிவிஷன் வேண்டுமென்று கோருகிறோம்.





திரு. துரை முருகன் : தலைவரவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பிலே மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் இந்த சட்ட முன்வடிவை பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இதில் முன்னுக்குப்பின் முரணான விதிமுறைகள் இருக்கின்ற காரணத்தால் பலவிதமான குழப்பங்களுக்கும் ஊழல்களும் நடைபெற இடமிருக்கிறது. எனவே இது பற்றி தீர ஆலோசித்து, முடிவு எடுப்பதற்காகத்தான் நண்பர் ரகுமான்கான் ஒரு தீர்மானத்தைக் கொடுத்தார்.

[பிற்பகல் 1-40]

எனவே இந்த மசோதாவிலே பல்வேறு பிரச்னைகள் உள்ளடங்கி இருப்பதால் இது ஏற்புடையதல்ல என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாதம். காங்கிரஸ் கட்சி இந்த மசோதாவுக்கு டிவிஷன் கேட்டிருக்கின்றது. எங்களுடைய கோரிக்கையான இதைப் பொறுககுக் கமிட்டிக்கு விடவேண்டும் என்பதைக் கூட சர்க்கார் புறக்கணிக்கின்ற காரணத்தால் டிவிஷனில் நாங்களும் அவர்களோடு சேர்ந்து கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் டிவிஷன் கேட்டிருக்கின்றார்கள். அவ்வாறு கேட்டுக் கொண்டதற்குப் பிறகு திரு. துரைமுருகன் அவர்கள் எழுந்து பேசியது சபையின் மரபிலே முறையானதல்ல.

திரு. துரைமுருகன் : அவ்வாறு முடிவு எடுத்ததற்குப் பிறகு எங்களுடைய கருத்தைச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி கருத்து சொல்ல வேண்டியதில்லை. மரபுகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

பேரவை முன்னுள்ள கேள்வி

''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1981( ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று வாக்குகள் எண்ணிக் கணிக்கப்பெற்றன. (மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமை)

| | | |
|---|---|---|
| ஆதரித்தோர் | .. | 120 |
| எதிர்த்தோர் | .. | 28 |
| நடுநிலை வகித்தோர் | .. | எவருமில்லை. |

தீர்மானத்திற்கு ஆதரவாக 91 வாக்குகள் அதிகமாக கிடைத்துள்ளதால் தீர்மானம் நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

[1981 ஏப்ரல் 10

ஆதரித்தோர்

1. திரு. ஆர் மணிமாறன்
2. திரு. [illegible]. எச். பாண்டியன்
3. திரு. [illegible]. வி. வேலப்பன்
4. திரு. வி. வி. சுவாமிநாதன்
5. திரு. எஸ். எஸ். இராஜேந்திரன்
6. திரு. பி. முசிறிப்புத்தன்
7. திரு. ச. அங்குசாமி
8. திரு. கே. எம். அப்துல் ரசாக்
9. திரு. வெ. அரங்கராசன்
10. திரு. இரா. அருணாசலம்
11. திரு. தி. அன்பழகன்
12. திரு. மே. அ. இராசகுமார்
13. திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்
14. திரு. என். இராமசுப்பிரமணியன்
15. டாக்டர் கே. பி. இராமலிங்கம்
16. திரு. ம. கண்ணன்
17. திரு. கே. ஆர். கணபதி
18. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்
19. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
20. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
21. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி
22. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்
23. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்
24. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்
25. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி
26. மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன்
27. திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்
28. திரு. துரைராமசாமி
29. திரு. இ. கணேசன்
30. திரு. பி. கந்தசாமி
31. திரு. டி. கே. கபாலி
32. திரு. சோ. கலிதீர்த்தான்
33. திரு. பெ. கலியமூர்த்தி
34. திரு. ஆ. கலையரசன்



1981 ஏப்ரல் 10]

35. திரு. ச. கிருஷ்ணமூர்த்தி
36. திரு. என். குப்புசாமி
37. திரு. செ. குப்புசாமி
38. திரு. ப. குருசாமி
39. திரு. எம். குருசாமி என்கிற அண்ணாதாசன்
40. திரு. ந. குலசேகரபாண்டியன்
41. திரு. சி. சேகசவ ஆதித்தன்
42. திரு. சி. கோபால்
43. திரு. கா. கோபாலகிருஷ்ணன்
44 திரு. ஆர். டி. கோபாலன்
45. திரு. எம். ஆர். கோவேந்தன்
46. திரு. ஆர். சக்கரபாணி
47. திரு. இரா. சண்முகம்
48. திரு. ஏ. சி. சண்முகம்
49. திரு. வ. சத்தியமூர்த்தி
50. திரு. பி. சபாபதி
51. டாக்டர் கே. சமரசம்
52. திரு. தா. சாமிக்கண்ணு
53. திரு. சீ. சிவப்பிரகாசம்
54. திரு. மு. சிவபெருமாள்
55. திரு. எம். சின்னசாமி
56. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து
57. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்
58. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி
59. திரு. க. இரா. சின்னராசு
60. திரு. எம். சின்னராஜ்
61. திரு. மு. சுந்தரராஜன்
62. திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்
63. திரு. மா. சுப்பிரமணியன்
64. செல்வி. ப. விஜயலட்சுமி
65. திரு. ஜி. கே. சுப்பிரமணியன்
66. திரு. கு. அ. செங்கோட்டையன்
67. திரு. செ. செம்மலை
68. திரு. பூ. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி
69. திரு. ஏ. எம். சேதுராமன்

70. திரு. ஏ. தங்கராசு
71. திரு. ஆர். தவசி
72. திரு. ப. தனபால்
73. திரு. இரா. தாமரைக்கனி
74. திரு. பெ. திருமாறன்
75. திரு. பி. எஸ். துரைசாமி
76. திரு. பி. துரைராஜ்
77. திரு. பி. ஜி. நாராயணன்
78. திரு. செ. பட்டாபிராமன்
79. திரு. சு. பழனிசாமி
80. திரு. ச. பாலகிருஷ்ணன்
81. திரு. வி. பாலகிருஷ்ணன்
82. திரு. க. பாலசுப்பிரமணியன்
83. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
84. திரு. அ. பாலுச்சாமி
85. திரு. எம். பிச்சை
86. திரு. ஜே. சி. டி. பிரபாகரன்
87. திரு. ஏ. பெரியசாமி
88. திரு. என். பெருமாள்
89. திரு. ரா. கு. பெருமாள்
90. திரு. எம். எஸ். மாணிக்கம்
91. திரு. த. மாரிமுத்து
92. திரு. சு. முத்துகிருஷ்ணன்
93. திரு. இரா. கருப்பையா
94. திரு. எஸ். ஆண்டித்தேவர்
95. திரு. கி. சட்டநாத கரையாளர்
96. திரு. மு. அம்பிகாபதி
97. திரு. செ. சிவசாமி
98. திரு. தி. க. நல்லப்பன்
99. திரு. இரா. சா. முனிரத்தினம்
100. திரு. ஜி. மூர்த்தி
101. திரு. என். ஏ. பூங்காவனம்
102. திரு. எம். ஆறுமுகம்
103. திரு. ஆர். ரெங்கசாமி



104. திரு. எம். கே. ராஜமாணிக்கம்
105. திரு. மி. வின்செண்ட்
106. திரு. ஏ. டி. கருப்பையா
107. திரு. என். விஜயபாலன்
108. திரு. த. வீராசாமி
119. திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்
110. திரு. ஆ. வெள்ளைச்சாமி
111. திரு. க. ரெங்கசாமி
112. திரு. எஸ். ஜகத்ரட்சகன்
113. திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்
114. திரு. வே. இரா. ஜெயராமன்
115. திரு. என். சங்கரய்யா.
116. திரு. கு. ரமணி
117. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரவ
118. திரு. கே. ஆர். சுந்தரம்
119. திரு. எம். செல்லமுத்து

எதிர்த்தோர்.

1. டாக்டர் கே. சௌரிராஜன்
2. திரு. க. பாரமலை
3. திரு. பொ. விஜயராகவன்
4. திரு. ஆர். தியாகராஜன்
5. திரு. கே. நாராயணசாமி
6. திரு. பா. தீர்த்தராமன்
7. திரு. கே. எஸ்.ஜி. ஹாஜா செரீப்
8. திரு. நா. சுந்தரராஜ்
9. திரு. என். எஸ். வி. சித்தன்
10. திரு. எல். இளையபெருமாள்
11. திரு. சு. பாலன்
12. திரு. சி. பழனிமுத்து
13. திரு. எல். பலராமன்
14. திரு. எம். சுந்தரம்
15. திரு. ஆர். சுந்தரமூர்த்தி
16. திரு. ந. இராமச்சந்திரன்
17. திருமதி. க. இராசாம்பாள்
18. திருமதி. டி. யசோதா

19. திரு. எஸ். இராசாராமன்
20. திரு. எஸ். சிவராமன்
21. திரு. ஜே. எஸ். இராசு
22. திரு. கெ. சொக்கலிங்கம்
23. திரு. துரைமுருகன்
24. திரு. அ. செல்வராசன்
25. திரு. அ. ரகுமான்கான்
26. திரு. து. புருஷோத்தமன்
27. திரு. ப. பொன்னுரங்கம்
28. திரு. மு. ப. முனுசாமி

Thiru K. S .G. HAJA SHAREEF: I am sorry that this Government is adamant in passing this law despite our protests. As a protest, we are walking out.

(காங்கிரஸ் (இ) கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பில் இதனைப் பொது குழுவிற்கு விடவேண்டும் என்றுக்குக் கொடுக்கப்பட்ட தீர்மானத்தையும் தோற்கடித்துவிட்டு காங்கிரஸ் கட்சி சொன்ன கருத்தையும் ஒட்டுமொத்தமாகத் தோற்கடித்துவிட்டு, இந்த நாட்டின் சமுதாயத்திற்கு கேடு விளைவிக்கின்ற இதனைச் சட்டமாக்குவதற்கு அவசரப்படா தீர்கள் என்று நாங்கள் சொன்ன நியாயமான கோரிக்கைகளை உங்களுடைய பெரும்பான்மை பலத்தால் தோற்கடித்து விட்டதால் மக்களின் இதயத்திலே இருந்து உங்களைத் தூக்கி எறிகின்ற காலம் விரைவிலேவரும் என்று கூறி நாங்களும் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).

[பிற்பகல் 2.00]

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்தி காமராஜ் தேசிய கட்சிக்கு இந்த மசோதாவைநிறைவேற்றியதில் பங்கு இல்லை என்று தெரிவித்தும், அண்ணல் காந்தியின் ஆத்மா, உங்களை மன்னிக்காது என்று சொல்லியும், இந்த மன்றத்தை விட்டு நாங்கள் வெளியே செல்கிறோம்.

(காந்தி காமராஜ் தேசீயகட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்)

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தீர்மானம் நிறைவேற்றியதில் எங்களுக்கு பங்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள, நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.



(தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் அவ்வாறே அதே காரணத்திற்காக வெளிநடப்பில் கலந்து கொள்கிறோம்.

(ஜனதா கட்சியினர் வெளிநடப்பு செய்தனர்)

பிரிவுகள் 2 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 14-4-1981 செவ்வாய் கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2,02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவை முன்வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ, சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

**252.** தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் (திரைப்படங்கள்) 26–10–1979 ஆம் தேதியிடப் பெற்ற 2679 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

124. தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1981).

## இணைப்பு I

[14-ம் பக்கத்திலுள்ள குறிப்பிட்ட வினா எண் 736-க் கான விடையைக்காண்க]

விடை—

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 13-வது கூட்டம் சென்னையில் 25—1—1980-ல் நடந்தது. அக்கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு சபைமுன் வைக்கப்படுகிறது.

(ஆ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

25—1—1980 அன்று காலை 10-30 மணிக்கு சென்னை தலைமைச் செயலக ஆலோசனைக் கூட்டத்தில் நடைபெற்ற தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய 13-வது கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள்.

சென்னை தலைமைச் செயலக ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 13-வது கூட்டம் 25—1—1980 அன்று காலை 10—30 மணிக்கு நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரும் வாரியத்தின் தலைவருமான திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் தலைமைதாங்கினார்கள்.

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் பங்கேற்றனர்:—

அரசு உறுப்பினர்கள்

1. திரு. சி. இராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ்.,
அரசு செயலாளர்,
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை,
சென்னை—9.

2. திரு. எஸ். நரசிம்மன், ஐ.ஏ.எஸ்.,
தொழிலாளர் துறை ஆணையர்,
சென்னை—6.

3. திரு. எ. பிச்சை, பி.ஏ.,
சமூகநலத்துறை உதவி இயக்குநர்,
சென்னை-35
(சமூக நலத்துறை இயக்குநருக்குப் பதிலாக.)



4. திரு. கே. எம். குருசாமி, பி.ஏ.,
நிதித்துறைத் துணை செயலாளர்,
சென்னை—9.
(நிதித்துறை அரசு செயலாளருக்குப் பதிலாக.)

தொழிலாளர் பிரதிநிதிகள் :

5. திரு. எஸ். பழனியப்பன்,
பொதுச் செயலாளர்,
அண்ணா தொழிற் சங்கம்,
திருச்சி மாவட்டம் (சர்க்கரை கிளை),
சுல்தான்பேட்டை, வேலூர்,
நாமக்கல் வட்டம், சேலம் மாவட்டம்.

6. திரு. டி. ஞானகிராமன்,
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு மின்சார தொழிலாளர்களின் மத்திய அமைப்பு,
எண். 3/35—வது வீதி, நங்கநல்லூர்,
சென்னை-61.

7. திரு. டி. பி. ஏழுமலை,
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்,
32, சீனிவாச பெருமாள் கோயில் தெரு,
திருவொற்றியூர், சென்னை—19.

8. திரு. கே. எம். சுந்தரம்,
அனைத்திந்திய தொழிற் சங்க காங்கிரஸ்,
6/157, பிராட்வே, சென்னை—1.

9. திரு. பி. கோவிந்தராஜா,
பொருளாளர்,
தமிழ்நாடு இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்.
(மேற்பார்வை) தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், இராஜபாளையம்.

வேலையளிப்பவரின் பிரதிநிதிகள் :

10. திரு. எஸ். எம். சுந்தரம்,
திருவாளர்கள் மெட்டல் காஸ்ட் சர்வீஸ்,
பி/12, தொழிற்பேட்டை,
அம்பத்தூர், சென்னை—58.

11. திரு. என். கண்ணன்,
தென்னிந்திய வேலையளிப்பவரின் கூட்டமைப்பு,
44, மூர் தெரு, சென்னை-1
(திரு. ஆர். என். இரத்தினம் அவர்களுக்குப் பதிலாக

அரசுத் துறை சாராத உறுப்பினர்கள் :—

12. திருமதி பவானி பழனியம்மாள்,
15, டி. வி. கோவிந்தன் தெரு,
தவிட்டுப்பாளையம். அந்தியூர்-638 501,
(வழி) ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டம்.

13. திருமதி பி. வளர்மதி,
4/37, போக் ரோடு,
தி. நகர், சென்னை-17.

பின் வரும் உறுப்பினர்கள் வராமைக்கு அனுமதி அளிக்கப்பட்டது:—

14. திரு. என். சி. கண்காணி,
தலைவர்,
தமிழ்நாடு தோட்ட உரிமையாளர் சங்கம்,
கூனூர்-643 101.

15. திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார், எம்.ஏ.
தலைவர்,
மெஸ்ஸர்ஸ். திரு. ஆரூரான் சர்க்கரை லிமிடெட்,
17/4, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-34.

16. திரு. டி. இரங்கசாமி,
செயலாளர்,
தென்னிந்திய ஆலை உரிமையாளர் சங்கம்,
அஞ்சல்பெட்டி எண். 3783,
கோயம்புத்தூர்-18.

17. திரு. பி. ஜி. கிட்டு, எம்.எல்.ஏ.,
பள்ளிப்பாளையம் அஞ்சல்,
இருகை (வழி),
பல்லடம் தாலூக்கா,
கோயம்புத்தூர் மாவட்டம்.

18. திரு. ஆர். உமாநாத், எம்.எல்.ஏ.,
10, நாச்சியார் பாளையம் அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி-620 003.

19. திரு. ஆர். மணிமாறன், எம்.எல்.ஏ.,
1, வள்ளிப்பாளையம்,
திருப்பூர்-638 001.

வாரியத்தின் தலைவர் உறுப்பினர்களை வரவேற்றார். பின்னர் கூட்ட நிகழ்ச்சி நிரல் கலந்துரையாட எடுத்துக்கொள்ளப் பட்டது.



இனம் எண். 1—

12-வது கூட்டத்தின் தீர்மானங்களை உறுதி செய்தல்.

1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21-ம் நாள் நடைபெற்ற தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய 12-வது கூட்ட நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட்டன.

இனம் எண். 2—

12-வது கூட்டத்தின் தீர்மானங்களின் மீது எடுத்த நடவடிக்கைகள் .—

1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21 ஆம் நாள் அன்று மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 12-வது கூட்ட முடிவுகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

தொழிலாளர் நல நிதிக்கு, நிதி செலுத்தாதவர்களின் பட்டியலை தென்னிந்திய கூட்டமைப்பிற்கு அனுப்புவதுடன் உறுப்பினர்களுக்கும் அனுப்ப வேண்டுமென்று தொழிலாளர்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். தலைவர் இதற்கு சம்மதித்து. நிதி செலுத்தாதவர்களின் பட்டியல் எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படும் என்று தெரிவித்தார்.

வாரிய உறுப்பினர்களின் ஆலோசனைகளை முதலில் விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு, பின்னர் மற்றவைகளை வரிசையாக விவாதிக்கலாமென்று தலைவர் அவர்கள் யோசனைகளை தெரிவித்தார்கள். அதன்படி கீழ்க்கண்டவை முதலில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இனம் எண் 2—

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் திரு. பி. கோவிந்தராஜா அவர்களின் கோரிக்கைகள்:—

(1) ஒரு தொழிலாளி அவர் பணியேற்ற 5 ஆண்டு காலத்திற்குள் மரணம் எய்தினால் அவரது மனைவிக்கு பணிக்கொடை மிக குறைவாகவே கிடைக்கும். எனவே தொழிலாளியின் மனைவிக்கு ஒரு தையல் இயந்திரம் இலவசமாக வழங்கலாம்.

விவாதத்திற்கு பிறகு இது சட்ட வரம்பிற்குள் வராது என வாரியம் முடிவெடுத்தது.

(2) மூக்குக் கண்ணாடி வழங்குவதற்கென சம்பளத் தொகை உயர் மட்டமாக ரூ. 500 பெறுபவரே தகுதியுள்ளவர் என்றிருப்பனை தற்போது சிமெண்டு மற்றும் நூற்பாலைகளில் அதிக சம்பளம் வழங்கப்படுவதால் உயர்பட்ட சம்பளத் தொகை ரூ. 750 வரை பெறுபவருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கலாம்.

மாதம் ரூ. 500 வரை ஊதியம் பெறும் தொழிலாளர்கள், தங்களுக்குத் தேவையான மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கென உதவித்தொகை பெற அருகதை உள்ளவர்கள் என்பதை மாற்றி ரூ. 750 வரை ஊதியம் பெறும் தொழிலாளர்கள் அவ்வுதவி பெற அருகதை உள்ளவர்கள் என்று உச்சவரம்பை உயர்த்த வாரியம் ஒப்புக் கொண்டது.

(3) 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21 ஆம் நாள் அன்று நடந்த வாரியக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானம் எண் 14-ல் சட்டக் கல்லூரியில் கல்வி பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகள் பத்து பேருக்கு என்று இணைக்கலாம்.

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு சட்டக்கல்லூரியிலும் பயிலும் மூன்று தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உதவித்தொகை வழங்கலாமென வாரியம் தீர்மானித்தது.

இனம் எண் 35—

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் திரு. எஸ்.எம் சுந்தரம் அவர்கள் அளித்துள்ள யோசனைகளை ஆராய:—

1. (அ) மேலும் கூடுதலான சிறு தொழில் அதிபர்களை தொழிலாளர் நல நிதிக்கு உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளவும் அத்தொழிலிலுள்ள மேலும் கூடுதலான தொழிலாளர்களுக்கு வசதிகளை விரிவுபடுத்தவும் தேவைப்படும் தனிப் புள்ளி விவரங்கள் 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31-ம் நாள் அன்று தமிழ்நாட்டில் ஏறத்தாழ நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள சிறு தொழில் அமைப்புகளின் எண்ணிக்கை 22,000 ஆகும். மேல் விவரங்களுக்கு அசிஸ்டண்ட் டைரக்டர் (பி.ஜி.), எஸ்.ஐ. (சென்னை) ஆகியோருடன் தொடர்பு கொள்ளலாம். தற்போது வாரியத்தில் பதிவாகியுள்ள சிறு தொழில் அமைப்புகள் சுமார் 7,000 தான் என்று தெரிய வருகிறது.

தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் வரும் அனைத்து சிறு தொழில் நிறுவனங்களும் தொழிலாளர் நல நிதி சட்ட வரம்பிற்குள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன என்ற தொழிலாளர் துறை ஆணையரின் விளக்கத்திற்குப் பின்னர் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது.

(ஆ) பிற மாநிலங்களில், குறிப்பாக மகாராஷ்டிராவில் இதே போன்ற வாரியம் ஏற்பாடு செய்துள்ள பல்வேறு நல வாழ்வு நடவடிக்கைகள் பற்றிய விவரங்களைப்பற்றி தகவல்களை இவ்வாரியம் கேட்டுப்பெற வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.



மகாராஷ்டிரா மாநில தொழிலாளர் நல வாரிய நடவடிக்கைகள் குறித்து 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளர் பம்பாய் நகரத்திற்கு நேரில் சென்று அறிந்து வர அனுமதியளிக்கப்பட்டுள்ளார். அது பற்றிய அவரது அறிக்கை அடுத்த கூட்டத்தில் வைக்கப்படும் என்று உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

(இ) மாநில தொழிலாளர் வேலை வாய்ப்பு மற்றும் ஆள் எண்ணிக்கைச் சிறு குழு ஒன்றினை தேவைகளையும் வாய்ப்புகளையும் மதிப்பிடவென அரசின் வேறு துறை எதுவும் இத்தகைய சிறு குழுவினை அமைந்திராவிட்டால் அதனை வாரியம் அமைத்திடுவது பற்றி ஆராயலாம்.

இப்பணியை வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை மேற்கொண்டிருப்பதால் இது தேவையில்லையென கருதப்பட்டது.

(ஈ) தொழிற் பேட்டைகளில் நல வாழ்வு அதிகாரிகளை நியமிப்பது பற்றி ஆராயலாம்.

இது வாரியத்தின் நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டதென முடிவெடுத்தது.

(உ) தொழிலாளர்களுக்கான தபால் கல்வியின் மதிப்பு பற்றிய குறிப்பொன்றினை வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கலாம்.

முன்மொழிந்தவரே இதனை தேவையில்லை எனக்கருதியதால் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது.

(ஊ) வாரியத்தின் சொத்து குறித்து மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரியிலிருந்து விதிவிலக்கு பெற எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் நிலை.

விவாதத்திற்குப்பின் சொத்துக்கள் வரிக்கான மாநகராட்சி மன்றத்தின் அறிவிப்பு கிடைக்கப்பெற்றவுடன் விதி விலக்கு சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளலாமென வாரியம் முடிவெடுத்தது.

(எ) ஒவ்வொரு கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளுடன் நிலுவையாக உள்ள வாடகை முதலானவைகளின் வசூல் பற்றிய குறிப்பொன்றினை வழங்கலாம்.

இனி வாரியத்தின் காலாண்டிற்கான வரவு-செலவு பட்டியல் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

2. (அ) வாரியத்தின் உபரி நிதியை 'டிட்கோ' 'சிப்காட்' போன்ற அமைப்புகள் மற்றும் தமிழ்நாட்டிலே தலைமை இடங்களுள்ள பட்டியலிடப்பட்ட சிறிய வங்கிகளில் முதலீடு செய்யலாம் என்கிற கருத்தை ஆராயலாம்,

பிரேரணை ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டு தேவையான சட்டத்திருத்தத்திற்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளதென்று உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஆ) அந்த அந்த மாத நடவடிக்கைகளின் பிரகாசமான அம்சங்களைப் பற்றிய மாதாந்திரக் குறிப்பொன்றினை வாரியச் செயலாளர் வெளியிடலாம்.

வாரியத்தின் முடிவுகள் "உழைப்பவர் உலகம்" பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது என தெரிவித்ததால் இதன் மீதான மேல் நடவடிக்கையை முன்மொழிந்தவரே கைவிட சம்மதித்தார்.

(இ) வாரியக் கூட்டம் அனைத்திலும் தலைவரின் அனுமதியுடன் பிற விசயங்கள் ஏதுமிருப்பின் என்கிற நிரலையும் சேர்க்கலாம். இதற்கெனக் குறைந்தது அரைமணி நேரமாவது ஒதுக்கலாம் என்று யோசனை கூறப்படுகிறது. இதனை வாரிய உறுப்பினர்கள் எழுப்பும் குறிப்பான வினாக்களுக்கு விளக்கம் கூறவும், உறுப்பினர்கள் கருத்துக்களையும் யோசனைகளையும் பரிமாறிக்கொள்ளவும் பயன்படுத்தலாம்.

உறுப்பினரின் பிரேரணையை வாரியம் ஏற்றுக்கொண்டது.

(ஈ) வாரிய நிர்வாகம் பற்றிய மிகப்பெரிதாக உள்ள புள்ளி விவரங்களை திறமையாகவும், விரைவாகவும் தயாரிக்க "மைக்ரோ—கம்ப்யூட்டர் இயந்திரம்" ஒன்றை அமைப்பது பற்றி ஆராயலாம்.

இது தேவையில்லை என வாரியம் தீர்மானித்தது.

(உ) பயனுள்ள நடைமுறைக்கொத்த பல யோசனைகளை நாம் இதுவரை விவாதித்து வந்துள்ளோம். உழைக்கும் மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான வழிகள், யோசனைகள் போன்ற விசயங்களைப் பற்றித் தத்துவரீதியிலும் நுண்பொருள் உணரும் வகையிலும் ஆராய்ச்சி நடத்தத் தனியாகவோ அல்லது தொழிலாளர் கல்வி நிலையங்களின் உதவியுடனோ ஒரு ஆராய்ச்சிக் கூடத்தை அமைப்பது பயனுள்ளதாக இருக்குமென நம்புகிறேன். ஓரளவுக்கு அண்மைக்காலத்தில்தான் இவ்விசயம் முன்னேறிய நாடுகள் பலவற்றின் கவனத்தை இப்போது ஈர்த்து வருகின்றன.

இது வாரியத்தின் நடவடிக்கைக்கு அப்பாற்பட்டது என வாரியம் தீர்மானித்தது.

3. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியச் செயலாளர்களை அடிக்கடி மாற்றுவது.



வாரியத்தின் செயலாளரின் பதவியில் அடிக்கடி மாற்றங்கள் இருக்கக்கூடாது என்ற உறுப்பினரது ஆலோசனையை கவனத்திலேற்கப்பட்டது.

**இனம் எண் 36—**

தொழிலாளர்களின் குடும்பத்தின் பயனுக்காக சென்னை, கோயம்பத்தூர், வால்பாறை மற்றும் மதுரை போன்ற இடங்களில் சமூகக்கூடம் அமைத்தல்.

வட சென்னையில் சமூகக்கூடமடங்கிய கலையரங்கம் ஒன்று கட்டப்படுவதற்கு தக்க வரைபடம் மற்றும் மதிப்பீடுடன் அடங்கிய விவரமான பிரேரணை ஒன்றை அடுத்தக் கூட்டத்தில் வைக்க தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார். சமூகக்கூடம் கட்ட வட சென்னையில் தகுதியான இடங்களை தெரிவிக்குமாறு உறுப்பினர் திரு.டி. ஜானகிராமன் அவர்களையும் மற்றும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளையும் தலைவர் கேட்டுக்கொண்டார்.

**இனம் எண் 3—**

வேலூர் காசநோய் மருத்துவமனையில் தொழிலாளர் பகுதி (வார்டு) ஒன்று கட்டுவது பற்றி குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.கே. கோதண்டராமன் அவர்களின் ஆலோசனை.

வேலூரிலுள்ள காச நோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கான பிரிவு ஒன்றை கட்டுவதற்கு வாரியம் ஒப்புதல் அளித்தது. வேலூர் மற்றும் குடியாத்தத்தில் படிப்பகங்கள் ஆரம்பிக்கும் யோசனையை தற்போது அவசியமில்லை என்று வாரியம் தீர்மானித்தது.

**இனம் எண் 4—**

தொழிலாளர்கள் வாங்கிய மூக்குக் கண்ணாடிகளுக்கு செலவுத் தொகை திரும்பப்பெற உகந்திய அளவை ரூ. 500-லிருந்து ரூ.750 வரை உயர்த்துவது பற்றி ஆலோசிக்க.

இத்தீர்மானம் இனம் எண் 21-ல் ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**இனம் எண் 5—**

மதுரை மாவட்டம் பசுமலையில் ஒரு தொழிலாளர் நல மையம் துவங்குவது பற்றி பரிசீலித்தல்.

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இனம் எண் 6—

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கு சந்தா செலுத்தாத வாணியம்பாடி, குடியாத்தம் தொழிலாளர் நல மையங்களின் முன்னாள் மாணவர்களான தொழிலாளர்களின் மனைவி மகள் ஆகியோருக்கு உதவித் தொகை வழங்குவது பற்றி.

பயிற்சியாளர்களின் பெற்றோர்கள் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிக்கு நிதி செலுத்தாததால் பயிற்சியாளர்கள் உதவித் தொகை பெறத்தக்கவர்கள் அல்லர், எனவே இத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை; எனினும் நிதி செலுத்தாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டமைக்கும், அதற்கான செலவுத் தொகைக்கும் வாரியம் ஒப்புதல் அளித்தது.

இனம் எண் 7—

பணிவிதிகள் மற்றும் விதிமுறைகள் இல்லாத நிலையில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய ஊழியர்களுக்கு வருடாந்திர ஊதிய உயர்வு வழங்குவது பற்றி.

இத்தீர்மானம் வாரியத்தால் ஏற்கப்பட்டது.

இனம் எண் 8—

அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. சொர்ணம் அவர்களின் வேண்டுகோள்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள விக்கிரமசிங்கபுரத்தில் குழந்தைகள் காப்பகத்துடன் கூடிய நலமையம் ஒன்று துவக்கப்படவிருப்பதால் விக்கிரமசிங்கபுரத்தில் குழந்தைகள் காப்பகம் மற்றும் படிப்பகம் தற்போது ஆரம்பிக்கத் தேவையில்லை என வாரியம் முடிவெடுத்தது. விக்கிரமசிங்கபுரத்தில் புத்தக வங்கி ஆரம்பிக்கும் யோசனை குறித்து, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் புத்தக வங்கி திட்டம் விஸ்தரிக்கப்படவிருப்பதால் இதில் விக்கிரமசிங்கபுரம் அடங்குமாதலால் இப்பிரேரணை தனியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இனம் எண் 9—

நிர்வாகக் குழு திருத்தியமைத்தல் பற்றி ஆலோசித்தல்.

ஆட்சிமன்ற குழுவில் தொழிலாளர் நல ஆணையரையும் சேர்த்துக் கொள்ள வாரியம் ஒப்புதல் அளித்தது. செலவினத் தொகை ரூபாய் 10,000 என்பதை 25,000 ஆக உயர்த்த வேண்டியதின் அவசியம் குறித்து வாரியத்தின் செயலாளர் தமது பிரேரணையை அடுத்த கூட்டத்தில் வைக்க கேட்டுக் கொள்ளப்பட்டார்.



இனம் எண் 10—

சென்னை அண்ணா தொழிற்சங்க பேரவை உதவித் தலைவர் வழங்கிய சில ஆலோசனைகள் குறித்து.

(1) புத்தக வங்கி திட்டத்தை திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கும் அமுல் படுத்தல்.

புத்தக வங்கித் திட்டத்தை திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் விஸ்தரிக்க வாரியம் ஒப்புக் கொண்டது.

(2) திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கல்வி பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதி அளித்தல்.

இது வாரிய நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டதாகும்.

(3) திருநெல்வேலியில் குழந்தைகள் காப்பகங்கள் நிறுவுதல். இத்தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் வாரியத்தின் மூலமாகவோ அல்லது குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகவோ தொழிலாளர்களுக்கு வீடு கட்டித்தருதல்.

இது வாரிய நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டதாகும்.

(5) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசாரிபள்ளத்தில் உள்ள காச நோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கு ஒரு பிரிவு அமைத்துத் தருதல்.

இத்தீர்மானம் வாரியத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(6) திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலை தோட்டத்தில் உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி அளித்தல்.

தோட்டத் தொழிலாளர்களுக்கான மருத்துவ வசதி வேலையளிப்பவர்களால் அளிக்கப்பட வேண்டுமென தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் பிரிவு 10 ல் குறிப்பிடப்பட்டுள்ளதால் இத்தீர்மானம் தொழிலாளர் நல வாரியத்தின் நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டதாகும் என வாரியம் தீர்மானித்தது.

இனம் எண் 11—

ஒரு வாசகசாலையும் ஒரு படிப்பகமும் திறக்கக் கோரும் குடியாத்தம் தாலுகா பீடி தொழிலாளர்கள் சங்க செயலாளரின் கோரிக்கை.

இத்தீர்மானம் தேவையற்றதென கருதப்பட்டதால் வாரியம் இதனை ஏற்கவில்லை.

இனம் எண் 12—

சி.ஐ.டி.யூ. (கன்னியாகுமரி மாவட்டக் குழு) செயலாளரது கோரிக்கைகள் குறித்து.

(1) கன்னியாகுமரியில் தொழிலாளர்களுக்கு ஓர் விடுமுறை விடுதி.

4-10-1977-ல் நடைபெற்ற வாரியத்தின் 7-வது கூட்டத்தில் கன்னியாகுமரி தொழிலாளர்களுக்கான விடுமுறை இல்லம் கட்டுவது சம்பந்தமாக விவாதிக்கப்பட்டுவிட்டதால் இத்தீர்மானம் ஏற்கப்படவில்லை.

(2) கீழ் கோதையாறில் தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் ஒரு தையற் பயிற்சி நிலையம் அமைத்தல்.

இத்தீர்மானம் ஏற்கப்பட்டது.

(3) கன்னியாகுமரி மாவட்டம் ஆசாரிபள்ளம் என்ற ஊரில் உள்ள காச நோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கு ஒரு பிரிவு ஏற்படுத்தல்.

நாகர்கோவிலில் உள்ள ஆசாரிப்பள்ளம் என்ற இடத்தில் தொழிலாளர்களுக்கான காச நோய் பிரிவு ஒன்று கட்டப்படுவதற்கு இனம் எண் 10(5)—ல் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

இனம் எண் 13—

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் பலமாடிக் கட்டிடத்தின் பராமரிப்பிற்காக பணியாளர்களை நியமிப்பது பற்றி.

இத்தீர்மானம் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தொழிலாளர் நல வாரிய கட்டிடத்தைப் பராமரிக்கத் தேவையான பணியாளர் குறித்த விளக்கமான பிரேரணையை அடுத்தக் கூட்டத்தில் வைக்க வாரிய செயலாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

இனம் எண் 14—

தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தொழிலதிபர்களின் பிரதிநிதிகளின் கோரிக்கைகள்.

தீர்மானத்தை முன் மொழிந்தவர் கூட்டத்திற்கு வராததால் இத்தீர்மானத்தை அடுத்தக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளலாமென முடிவெடுக்கப்பட்டது.



இனம் எண் 15—

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் ஆண்டு தோறும் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் கைப்பந்து, கூடைப் பந்து, பூப்பந்து, செஸ் மற்றும் கேரம் ஆட்டங்களையும் சேர்த்தல்.

வாரியத்தின் வருடாந்திர விளையாட்டு போட்டியில் மேலும் பல விளையாட்டுகளை சேர்ப்பது குறித்த ஆலோசனையை பின்னர் எடுத்துக்கொள்ளலாம் என்று வாரியம் தீர்மானித்தது.

இனம் எண் 16—

புத்தக வங்கி துவங்குதல் சம்பந்தமாக சில அதிகப்படி விவரங்கள் குறித்து.

இத்தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இனம் எண் 17—

தொழிலாளர் நல மையங்களுக்கு அதிகமான வசதிகள் வழங்குதல்.

தொழிலாளர் நலமையங்களுக்கு வானொலிப்பெட்டி வழங்குவது தவிர மற்ற தீர்மானங்களுக்கு ஒப்புதலளித்தது.

இனம் எண் 18—

வாரியத்தின் திட்டங்களை திறம்பட செயல்படுத்த தொழிலாளர் நல மைய உதவித் தொழிலாளர் ஆய்வாளர்களின் பணி எல்லைகளை மாற்றி அமைத்தல்.

இத்தீர்மானம் ஆட்சி மன்ற குழுவிலேயே பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கலாமென வாரியம் தீர்மானித்தது.

இனம் எண் 19—

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கு கூடுதல் பணியாளர்கள் அங்கீகரிக்க வேண்டுகோள்.

வாரியம் இத்தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்தது. மேலும்' தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் நிர்வாக அலுவலர் பதவிக்கு தொழிலாளர் துறை அலுவலருக்கு இணையான பதவியைச்சார்ந்த ஒருவரையே ஏற்கலாம் என வாரியம் முடிவெடுத்தது.

இனம் எண் 20—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தொழிலாளர் நல மையம் துவங்குவது பற்றிய முன்மொழிவு.

இத்தீர்மானம் விவரமாக விவாதிக்கப்பட்டு தற்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் டால்மியாபுரத்தில் மட்டும் ஒரு தொழிலாளர் நல மையம் துவக்கலாமெனத் தீர்மானித்தது.

**இனம் எண் 22—**

கடைநிலை ஊழியர்களுக்கும், காவலர்களுக்கும் மற்றும் ஊர்தி ஓட்டுநர்களுக்கும் சீருடைகள் மற்றும் பெயர் அடையாள அட்டை வழங்குதல்.

இத்தீர்மானம் வாரியத்தால் ஏற்கப்பட்டது.

**இனம் எண் 23—**

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியக் கட்டிடத்தில் உள்ள ஆலோசனை மண்டபத்திற்கு மரச்சாமான்கள் மற்றும் தேவையான பொருட்களை வாங்குவதற்கான செலவுத் தொகைக்கு ஒப்புதல் அளித்தல் சம்பந்தமாக.

இத்தீர்மானம் விவாதிக்கப்பட்டு கைவிடப்பட்டது.

**இனம் எண் 24—**

மாநில அளவில் முக்கூட்டுக்குழு யோசனைகள் குறித்து.

இத்தீர்மானம் வாரியத்தால் ஏற்கப்பட்டது.

**இனம் எண் 25—**

மாநில அளவிலான முக்கூட்டு குழுவினரின் ஆலோசனைகள் குறித்தும்.

இத்தீர்மானப் வாரியத்தால் ஏற்கப்பட்டது.

**இனம் எண் 26—**

தமிழ்நாடு தொழில் கல்வி நிலையத்தில் வாசக சாலை திறப்பது சம்பந்தமாகப் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணை சம்பந்தமாக.

வாரியம் அரசு ஆணையைக் கவனத்தில் ஏற்றது.

**இனம் எண் 27—**

1979-80 ஆம் வருடத்திற்கான நிதி நிலை அறிக்கையின் மறு மதிப்பீடும் 1980-81 ஆம் வருடத்தின் நிதி நிலை அறிக்கையும்.

வாரியம் ஆலோசனை மண்டபத்திற்கான செலவினத்தைத் தவிர மற்றவற்றை ஏற்றுக்கொண்டது.



**இனம் எண் 28—**

தொழிலாளர் பிரதிநிதிகளும், தொழிற்சங்கத் தலைவர்களும் தங்குவதற்கென, சென்னை, தேனாம்பேட்டையில் கட்டப்பட விருக்கும் ஓய்வு விடுதியில் நிர்வாகத்தினரின் பிரதிநிதிகளையும் தங்க அனுமதித்தல் குறித்து.

இத்தீர்மானம் விவாதத்திற்குப் பின் கைவிடப்பட்டது.

**இனம் எண் 29—**

மலைப்பகுதியில் தொழிலாளர்களுக்கு ஓய்வு விடுதி கட்டுதல்.

மலைப்பிரதேசங்களில் ஓய்வு விடுதி கட்டுவதற்கான தீர்மானம் ஏற்கெனவே ஒத்துக்கொள்ளப் பட்டதென உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

**இனம் எண் 30—**

பொங்கல் விழா அன்று நாடகம் நடத்துவதற்குப் பொருளுதவி கோரி மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை லிமிடெட் தொழிலாளர்கள் அளித்த கோரிக்கை.

வாரியம் இத்தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

**இனம் எண் 31—**

திண்டுக்கல் தொழிலாளர் நல மையத்தை வேறொரு கட்டிடத்திற்கு மாற்றியதற்கும் மற்றும் சற்று அதிக வாடகை வழங்குவதற்கும் அனுமதி கோருதல்.

வாரியம் இத்தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.

**இனம் எண் 32—**

தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அளிக்கப்படவிருக்கும் பயிற்சிக் கட்டணம் குறித்து சில கூடுதல் விவரங்களை ஆலோசித்தல்.

(1) தொழிலாளர்களின் ஆதரவில் உள்ள சகோதரி அல்லது சகோதரர் விண்ணப்பித்துள்ளனர்;

(2) தொழிலாளியே தான் தட்டச்சு, சுருக்கெழுத்து பயில பயிற்சிக் கட்டணம் கோரியுள்ளார்; மற்றும்

(3) ஒரு விண்ணப்பதாரர் தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து இரண்டையும் ஒரேசமயத்தில் பயிலுவதற்குப் பயிற்சி கட்டணம் கோரியுள்ளார்.

வாரியம் தொழிலாளர்களுக்கும், அவரது துணைவியருக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்த மகள்கள் மற்றும் மகன்களுக்கும் இச்சலுகை பொருந்துமெனத் தீர்மானித்தது.

தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து ஆகியவற்றை ஒரே சமயத்தில் பயில்பவர்களுக்கும் பயிற்சிக் கட்டணமும் தேர்வுக்கட்டணமும் வழங்க ஒப்புதல் அளித்தது.

தட்டச்சும், சுருக்கெழுத்தும் பயிலுவதற்கான விண்ணப்பங்கள் பெறுவதற்கு வரையறை தேவையில்லை என்றும் வாரியம் தீர்மானித்தது.

இனம் எண் 33—

இயலாமல் போன தொழிலாளர்களுக்கும், இறந்து போன தொழிலாளர்களின் துணைவியருக்கும் பயிற்சி அளித்தல்.

இத்தீர்மானத்தை வாரியச் செயலாளர் சமூகநலத்துறை இயக்குநருடன் கலந்தாலோசித்து பின்னர் விவரமான தீர்மானத்தை வாரியத்தின் முன் வைக்கலாமென வாரியம் முடிவெடுத்தது.

இனம் எண் 34—

தொழிலாளர் நல வாரியக் கட்டிடத்தில் இயங்கும் மின் தூக்கி இயந்திரங்களை சுத்தப்படுத்துதல் மற்றும் பழுது பார்த்தலுக்கு செலவுத் தொகை வழங்குதல்.

வாரியம் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது.

இனம் எண் 37—

சென்னையில் நடத்தப்படும் அகில இந்திய சுற்றுலா வர்த்தக பொருட்காட்சி 1980 இல் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் பங்கேற்றமைக்கு ஒப்புதல் அளித்தல்.

வாரியம் இத்தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது.

வாரியத்தின் அடுத்த கூட்டம் குன்னூரில் ஏப்ரல் 1980 இல் நடத்தலாமென்று முடிவு செய்யப்பட்டது.

இறுதியாக வாரியத்தின் தலைவரான மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க் கிழமை, 1981 ஏப்ரல் 14

சித்திரை 2, துன்மதி — திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்."

ஒருவருக்குத் துணையினது நன்மை செல்வம் ஒன்றினையும் கொடுக்கும். அதனோடு அவர் செயல் நலமும் பெற்றிருந்தால், அவர் விரும்பும் எல்லா நன்மைகளையும் அந்தச் செயல் நலம் தரும்.

### 1. இரங்கற் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் டாக்டர் எஸ். சுப்பிரமணியம் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான, டாக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்கள், 6—4—1981 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுப்பிரமணியம், 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டுவரை இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவுகுறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்குப்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### கேரளம் மற்றும் கர்நாடக மாநிலங்களிலிருந்து வாங்கும் மின்சாரம்

*வினா எண். 745 திரு கு. ரமணி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

அ) கர்நாடக மாநிலத்திலிருந்து தமிழ்நாடு மின்சாரம் வாங்குகிறதா?

ஆ) ஆம் எனில் அதன் விவரங்கள் என்ன?

இ) கேரளத்திலிருந்தும், கர்நாடகத்திலிருந்தும் நாள் ஒன்றுக்கு மொத்தம் எவ்வளவு மின்சாரம் வாங்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) தற்போது இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(இ) கேரளத்திலிருந்து மட்டும் தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 2.3 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் வாங்கப்படுகிறது.

திரு. கு. ரமணி : தற்போது தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் வறட்சி காரணமாக மின்சார உற்பத்தி பாதிக்கும்படியான அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இப்போது மின்வெட்டு எங்கு பார்த்தாலும் மிகவும் அதிகமாகி மக்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளது. பலவிடங்களில், பலவீடுகளில் திடீர் திடீர் என்று மின்சாரம் நின்று போகும்படியான நிலை நடைமுறையில் இன்று ஏற்பட்டிருக்கிறது, எனவே இதைத் தடுக்கக்கூடிய முறையில் முன்கூட்டியே இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாகவே புனல் மின்திட்டங்கள் முழுமையாக வேலை செய்யக்கூடிய விதத்தில், தற்போது ஏற்பட்டுள்ள மின் பற்றாக்குறையை உணர்ந்து என்ன விசேஷ நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கப் போகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : புனல் மின் நிலையங்கள் மூலம் ஏற்படும் பற்றாக்குறையை அனல் மின் நிலையங்களை சரிவர இயக்குவதின் மூலம்தான் சீர் செய்ய முடியும். கேரள மாநிலத்திலிருந்து நாம் எவ்வளவு மின்சாரம் பெறுகிறோம் என்ற விவரத்தைத்தான் மூலக்கேள்வியில் கேட்டிருக்கிறார்கள். மின் பற்றாக்குறையை எப்படிச் சமாளிக்கப்போகிறோம் என்பதுபற்றி தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தர இயலும்.



1981 ஏப்ரல் 14]

திரு. கு. ரமணி : கேரளாவிலிருந்து நாம் மின்சாரம்பெறுவது என்பது நம்மிடம் மின்சாரம் போதாமல் இருப்பதால்தான். ஆகவே மூலக்கேள்வியோடு பூர்ணமாக இணைந்த கேள்வியைத் தான் கேட்டிருக்கிறேன். தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் தர இயலும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக எவ்வளவு கேள்விகள் போடவேண்டுமென்றாலும் நான் தயாராகயிருக்கிறேன். அனல் மின்நிலையங்களில் கூட இன்றைக்கு போதிய அளவு நிலக்கரி கிடைக்காமல் ஒரு ஸீரியஸ் க்ரைஸிஸ் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அதையும் மனதில் கொண்டு இப்போது ஏற்பட்டிருக்கக் கூடிய மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க என்ன விசேஷ நடவடிக்கைகளை — கேரளாவிலிருந்து அதிகமான அளவிற்கு மின்சாரம் பெறுவது உட்பட —— அரசாங்கம் எடுக்கபபோகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தேவையான நிலக்கரியைப் பெற்று அனல் மின் உற்பத்தியை அதிகரிக்கும் அளவிற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் அரசு மேற்கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். மேலும் அனல் மின் உற்பத்தியை பெருக்க அனல் மின் நிலையங்களை இன்னும் அதிக அளவில் அமைக்கவேண்டும் என்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கேரளத்திலிருந்து மின்சாரம் வாங்கும்போது அவர்களுக்குத் தேவையான சிமெண்டைக் கொடுத்து, பண்டம் மாற்று முறையில் நடந்தது. அதைப்போல் நிரந்தரமாக அவர்களுக்குத் தேவையான அரிசி முதலியவைகளைக் கொடுத்து, நமக்கு நிரந்தரமாக இருக்கும் மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சிமெண்டைப் பொறுத்தவரையில் பண்ட மாற்று முறையில் மின்சாரம் பெற்றுக் கொண்டு வருகிறோம். அரிசியைப் பொறுத்த வரையில் அந்த நிலை ஏற்படவில்லை. கேரளத்தைப் பொறுத்த வரையிலும்கூட அவர்களுடைய சுயதேவை அதிகரித்து வருகிறது என்பதை நாம் உணர வேண்டும். அவர்கள் கூடுதலாக மின் உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றினால், நமக்கும் உதவி செய்ய முடியும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்திலிருந்து தமிழகம் பெறக்கூடிய மின்சாரத்திலிருந்து பாண்டிச்சேரி மாநிலத்திற்கு எவ்வளவு வழங்கப்படுகிறது? எந்த அடிப்படையில், கேரளத்திலிருந்து நாம் என்ன விலைக்கு வாங்குகிறோம்? எத்தனை சதவிகிதம், என்ன விலைக்கு பாண்டிச்சேரிக்கு நாம் கொடுக்கிறோம்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கேரளத்திலிருந்து நாம் வாங்குகிற மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 28 பைசா தருகிறோம். நாம் பொதுவாக, தமிழகத்தின் மொத்தத் தேவைக்கு வாங்குகிறோம். பாண்டிச்சேரியைப் பொறுத்தவரையில், அவர்களுக்குத் தேவையானதை தனியாக எச். டி. சர்வீஸ் முறையில் மின்சாரம் தருகிறோம். தமிழகத்திலே மின் பற்றாக்குறைக்கு சில ஒழுங்குமுறைகள். அதாவது ரிஸ்ட்ரிக்ஷன் அண்டு கன்ட்ரோல் வைத்திருக்கிறோமோ, அப்படி பாண்டிச்சேரிக்கும் கடைப்பிடிக்க வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். ஆனால், இன்னும் அவர்கள் கடைப்பிடிக்க மறுக்கிறார்கள்.

திரு ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, கர்நாடகத்திலிருந்து மின்சாரம் வாங்குவதில்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். மின்சாரத்திற்கு அந்த அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் அணுகியிருந்து, அவர்கள் அதை மறுத்தார்களா? ஏதாவது அதைப்பற்றி கருத்து சொன்னார்களா? இன்றைக்கு இருக்கக்கூடிய நெருக்கடியை முன்னிட்டு, அவர்களை அணுகக் கூடிய வாய்ப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கர்நாடகத்திலும் நம்மைப்போல் பற்றாக்குறை இருக்கிறது. இருந்தாலும், பருவ மழைவந்து, 3–10–80 அன்று கர்நாடக முதல்வரைச் சந்தித்து, உதவ வேண்டுமென்று கேட்டேன். அவர் அந்த மாதம் மட்டும் ஒரு மாதத்திற்கு 1 மிலியன் யூனிட் கர்நாடகத்திலே கூடுதல் உற்பத்தி செய்ய வாய்ப்பிருந்த காரணத்தால், கொடுத்தார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்கு பற்றாக்குறை வந்துவிட்டது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மைக் வைத்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, கேரளாவிலிருந்து 2, 3 இலட்சம் யூனிட் நமக்கு கிடைப்பதாகச் சொன்னார்கள். ஆனால், அதே நேரத்திலே இன்றைக்குக் கிராமாந்திரப் பகுதிகளில் மொத்தமாக பற்றாக்குறை நிலை இழந்து, நாள் ஒன்றுக்கு 6 மணி நேரம்தான் விவசாயத்திற்கு கொடுக்கப்படுகிறது. என்னுடைய கிராமத்தில் பம்பு செட்டுகள் ஓடாத நிலையிருப்பதை, நான் நேரிலேயே பார்த்துவிட்டு வேந்தன்........



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை யொட்டி துணைக் கேள்வி போடுங்கள்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, கேரளாவிலிருந்து 2.3 இலட்சம் யூனிட் நமக்கு கிடைப்பதாக மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நிலைமை தொடர்கதையாக நீண்டுக் கொண்டு வந்திருக்கிறது. பல வருஷங்களாக நாம் தொடர்ச்சியாக, கேரளத்திலிருந்து மின்சாரம் வாங்கிக் கொண்டிருக்கிறோம்: தன்னிறைவு எய்தக் கூடிய முறையில் அந்த தொடர்கதையாக உள்ள மின்சாரம் வாங்குவது எப்போது நிறுத்தப்படுமா? என்பதை தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே 2.3 இலட்சம் அல்ல. 23 இலட்சம் யூனிட்டுகளை நாம் நாள் ஒன்றுக்கு வாங்கிக் கொண்டிருக்கிறோம். அதாவது 2.3 மில்லியன் யூனிட்டுகள். நாமே தன்னிறைவு எய்த வேண்டும் என்கிற அடிப்படையிலே, திட்டங்களைப் போட்டிருக்கிறோம். இன்னும் மேற்கொண்டு பல திட்டங்களைப் போட்டு, மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். சுமார் 2,000 மெகா வாட் பெறுவதற்கான திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்று ஓரளவுக்கு அது நிறைவேற்றப்படுமானால், நாம் தன்னிறைவை எய்த முடியும். அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்குவதும், தருவதும் இயல்பு.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கேரளத்திலும் மற்ற அண்டை மாநிலங்களில் இருந்து ஆண்டுதோறும், பெறக்கூடிய மின்சாரத்திற்கு எத்தனை கோடி ரூபாய் தமிழக அரசு செலவழிக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கேரளாவில் 12.2.80 முதல் 31.12.80 வரை 845 மில்லியன் யூனிட்டுகள் வாங்கியிருக்கிறோம். அதை 28 பைசாவில் பெருக்கினால் எவ்வளவு தொகை என்பது தெரியும்.

## கீழ்மேட்டூர் நீர்மின் திட்டத்தின் கீழ் இயக்கும் நீர் ஒதுக்குச் சுவர்களிற் இடிபாடுகள்

*வினா எண். 746 திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கீழ்மேட்டூர் நீர்மின் திட்டத்தின் கீழ் நடைபெறும் சிற்றணைகளில் (Barrages) 3 இடங்களில் நீர் ஒதுக்குச் சுவர்கள் (Coffer Dams) இடிந்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) ஆம். கடந்த வெள்ளத்தின்போது கீழ்மேட்டூர் நீர்மின் திட்டத்தின் கீழ் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட மூன்று சிற்றணைகளின் தடுப்புச்சுவர்கள் சிறிது சேதமடைந்தன. சிற்றணைகள் இரண்டிலும், மூன்றிலும் சேதம் சரி செய்யப்பட்டு கட்டுமான வேலைகள் திரும்ப ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணகிரி அணையிலுள்ள பூங்காவை நவீனப்படுத்தும் திட்டம்.

*வினா எண். 747 திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிருஷ்ணகிரி அணையில் உள்ள பூங்காவை சுற்றுலா பயணிகள் கவரும் வண்ணம் நவீனப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) கிருஷ்ணகிரி அணையில் சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு சுற்றுலாத்துறையின் மூலமாக விடுதி ஒன்று கட்டும் திட்டம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன்: (அ), இல்லை (ஆ) இல்லை. ஆனால் கிருஷ்ணகிரிக்கு அருகில் போகனப்பள்ளி கிராமத்திற்கருகில் சாலையோர தங்கும் விடுதியை (Motel) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9.10)

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அணையில் உள்ள பூங்காவைச் சுற்றுலாப் பயணிகள் கவரும் வண்ணம் நவீனப்படுத்தும் திட்டம் அரசுக்கு இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே சில இலட்சணக்கான ரூபாய் செலவில் மின்விளக்குகள் போடப்பட வேண்டுமென்று, அரசாங்கம் ஒப்புதல் அளித்து இருந்தது. ஆகவே, இதனை மீண்டும் பரிசீலனை செய்து, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் அந்தப் பூங்காவை நவீனப்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு ஆர். எம். விரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டுகள் பொதுப்பணித் துறையினரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அங்கே எந்த விதமான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமானாலும் சீர்திருத்தப் பணிகள் செய்து அழகுபடுத்தும் பணிகள் பற்றி பொதுப்பணித் துறையினரிடத்திலே தான் கேட்கப்பட வேண்டும்.

மதுரை யானைக்கல் பாலம் அருகில் வைகையாற்றின் நடுவிலுள்ள மண்டபத்தைப் புதுப்பித்தல்

*வினா எண். 748 திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரில் யானைக்கல் பாலம் அருகில் வைகையாற்றின் நடுவில் இடிந்து கிடக்கும் மைய மண்டபத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம் விரப்பன்: மதுரை நகரில் யானைக்கல் பாலம் அருகில் வைகை ஆற்றின் நடுவில் உள்ள மைய மண்டபத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வைகை ஆற்றின் நடுவில் இருக்கக் கூடிய மைய மண்டபம் திருமலை நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டது. அதனுடைய பக்கச்சுவர்கள் இடிந்து, சரிந்துக் கிடக்கின்றன. திருவிழா காலங்களில் மக்கள் அங்கே கூடுகிறார்கள். மதுரை நகரில் இருக்கக்கூடிய மக்கள் மாலை நேரங்களில் அங்கே ஓய்விற்காக சென்று வருகிறார்கள். ஆற்றில் அமைந்திருக்கக்கூடிய அந்த மண்டபத்தில் அழகிய சிற்பங்கள் அதிகமாக இருக்கின்றன. இந்த மண்டபத்தினை பாதுகாக்கக் கூடிய முயற்சிகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். விரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்டபம் யாரால், எப்போது கட்டப்பட்டது என்ற விவரங்கள் ஆவணங்களில் இல்லை என்று தெரிவிக்கிறார்கள். மேற்படி ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் மாசி உற்சவத்தில் பெரிய சுவாமி 10 ஆம் நாள் மாசி மகத்தன்று இம் மண்டபத்தில் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி தீர்த்தம் கொடுப்பது வழக்கம். ஆனால் 1962 ஆம் ஆண்டிலிருந்து இம்மண்டபத்தில் எழுந்தருளுவது இல்லை. மேலும் குறிப்பிட்ட 10 ஆம் நாள் மண்டபகப்படி நகரத்தாரால் நடத்தப்பட்டு வந்தது, ஆனால் 1961 முதல் நகரத்தார்களும் நிறுத்தி விட்டனர். ஆகவே அது இப்போது புழக்கத்தில் இல்லாதகாரணத்தால் மேலும் செலவு செய்ய வேண்டாம் என்று தீர்மானித்து இருக்கிறார்கள்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, மண்டபம் இடிந்து விழுந்துவிட்டக் காரணத்தினால் மாசி திருவிழா இதில் நடைபெறுவது நிறுத்தப்பட்டது. அதற்குப்பிறகு சில ஆண்டுகள் மண்டபத்திற்கு முன்னால் பந்தல் அமைக்கப்பட்டு அதில் திருவிழா நடந்தது. இப்போது அதுவும் நிறுத்தப்பட்டு விட்டது. ஆகவே திருவிழா இந்த மண்டபத்தில் நடைபெறும் வகையில் அரசு ஏற்பாடுகள் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்டபத்தை உபயோகப்படுத்துகிற முறை பற்றி ஆலய நிர்வாகிகள், ஆலய அறங்காவலர்களாலே தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்று. கடந்த 18 ஆண்டுகளாக அது உபயோகமில்லாமல் இருக்கிறது என்பதாலே தான் அது பழுதடைந்து இருக்கிறது. மேலும் இரண்டு இலட்சம் ரூபாய் வரையில் செலவாகும் என்று திட்டமிட்டு அந்தத் செலவை செய்ய வேண்டாமென்று முடிவு எடுத்திருக்கிறார்கள் என்ற குறிப்பு இருக்கிறது. ஒருவேளை மீண்டும் அதை பயன்படுத்துவதால் நலன் பயக்கும் என்ற எண்ணம் இருக்குமேயானால் அந்த மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கும், அதனுடைய அறங்காவலர்களுக்கும் அறநிலையத் துறை மூலமாக இந்த செய்தியைச் சொல்லி, பயனளிக்கும் வகையில் இருந்தால் அந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்படி அறங்காவலர்களையும், ஆலய நிர்வாகத்தையும் அறநிலையத் துறை கேட்டுக் கொள்ளும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளம் வருகின்ற காலத்தில் வைகை ஆற்றில் மக்கள், வெள்ளத்தினால் அடித்துச்செல்லப் படாமல் இருப்பதற்காக இந்த மண்டபத்தில் ஒதுங்கி நிற்கிறார்கள். ஆதலால் புயல் பாதுகாப்பு இல்லம் மாதிரி அந்த மண்டபத்தை வெள்ளப் பாதுகாப்பு இல்லமாக வைகையாற்றின்கரையிலே அமைக்கக்கூடிய வகையிலே அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மண்டபம் வைகையாற்றின் நடுவிலே இருக்கிறது, ஆகவே வெள்ளப்பாதுகாப்பு மண்டபமாக அது இல்லை. ஆண்டவன் அங்கே போயத் தங்கி விசேஷங்கள் நடத்துவதற்காகத்தான் அந்த மண்டபங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

## தொப்பையாற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 677 திரு. செ. செம்மலை: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொப்பையாற்றின் குறுக்கே நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பாலம் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?



(ஆ) அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு?

(இ) பாலம் கட்டும் பணி எப்போது முடிவடையும்?

மாண்புமிகு. திரு ப. குழந்தைவேலு ; (அ) வேலை நடைபெற்று வருகிறது.

(ஆ) மொத்த மதிப்பீடு ரூ. 7,72,700.

(இ) 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொப்பையாற்றுப் பாலம் சேலம் மாவட்டத்தையும் தர்மபுரியையும் இணைக்கின்ற ஒரு இணைப்புப் பாலமாக இருக்கிறது. 1976 ஆம் ஆண்டிலேயே அதற்கு அரசு அனுமதி வழங்கியும்கூட வேலைகள் 4 ஆண்டுக்காலத்திற்கு மேலாக முடியாத நிலையில் இருக்கின்றன. ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் நீக்கப்பட்டு இருக்கிறார். என்ன காரணத்தினால் நீக்கப்பட்டது என்பதையும் இப்போது எந்த முறையிலே ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு தண்ணீர் விடப்படுவதால் மேற்குறிப்பிட்ட பாலம் கட்டப்படவேண்டிய இடத்திலே தண்ணீர் எப்போதும் 10 அடி தேங்கியிருக்கிற காரணத்தினால் மேற்கொண்டு வேலை செய்ய முடியவில்லை. அந்த தொந்தரவின் காரணமாகத் தான் அந்த ஒப்பந்தக்காரர் பின்வாங்கி விட்டார். அதற்குப் பின் அந்த ஒப்பந்தம் காலாவதியாகி, புதிய ஒப்பந்தத்தில் பெரியண்ணக் கவுண்டர் இப்போது ஒப்பந்தக்காரர் ஆகி அந்த வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது,

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எனக்கு வந்த சில புகார்கள் அடிப்படையிலே ஒப்பந்தக்காரர்களுக்கும் அங்கே பணிபுரிகின்ற அதிகாரிகளுக்கும் இருக்கிற கருத்துவேற்றுமைகளினால் வேலை தாமதப்படுவதாக அறிகிறேன். அப்படியிருப்பின் அதிகாரிகள் அதை கவனித்து அமைச்சர் சொன்ன அந்த காலக்கெடுவிற்குள்ளாக அந்த வேலையை முடிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

## ஆம்பூர்—துத்திப்பட்டு இடையே பாலாற்றின் குறுக்கே மேம்பாலம்

*வினா எண். 678 — திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

[1981 ஏப்ரல் 14

(அ) வடாற்காடு மாவட்டம் ஆம்பூர்-துத்திப்பட்டு இடையே பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்.?

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை பிறப்பித்த பிறகு எடுத்துக் கொள்ளப் படும்.

**திரு. ந. குலசேகரபாண்டியன்:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? அதை எப்போது எடுத்து அரசு நிறைவேற்ற இருக்கிறது, இந்த ஆண்டே அதை எடுத்து நிறைவேற்ற ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, அந்தப் பாலம் கட்டும் திட்டம் நீண்ட நெடுநாளைய கோரிக்கையாக இருந்து வந்தது. 1981-82 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் 73 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஆண்டே வேலை துவங்கப்படும்.

**திரு. ந. குலசேகரபாண்டியன்:** தலைவர் அவர்களே, அந்தப் பாலம் தற்போது தரைப்பாலம் இருக்கும் இடத்திலேயே அமைக்கப்படுமா? அல்லது வேறு இடத்திலே அமைக்கப் படுமா? இந்த மதிப்பீட்டுத் தொகை அந்தப் பாலத்தைக் கட்டு வதற்கான மதிப்பீடா? அல்லது அதிலே இணைக்கும் சாலை களுக்கும் சேர்ந்து அந்த மதிப்பீடா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு;** தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரத்திலிருந்து பேராளம்பட்டு செல்லும் நெடுஞ் சாலையிலே பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்காக தான் இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் 73 லட்சத்து 75 ஆயிரம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

### வத்தலகுண்டு யூனியன் பகுதியில் சாலைபோடும் பணி

*வினா எண், 679— திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டைத் தொகுதி வத்தலகுண்டு யூனியனில் வத்தலகுண்டு உசிலம்பட்டி நெடுஞ்சாலைத்துறை ரோட்டில் சாந்திபுரம் பிரிவு-புள்ளிமான் கோம்பை (via) காமாட்சிபுரம் ரெங்கப்ப நாயக்கன்பட்டி ரோடு போட ஏற்கனவே நெடுஞ் சாலைத் துறையால் எடுத்துக் கொள்ளப்பட்டதா?



1981 ஏப்ரல் 14]

(ஆ) ஆம் என்றால் அந்த வேலை இன்னும் முடியாமல் பாதியில் விட்டுவிடுவதற்கு காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ரோடு எஸ்டிமெட் போட்டு சாங்ஷன் செய்யப் பட்டு வேலை ஆரம்பித்து வேலை ஓரளவு போடப்பட் டுள்ளது. ஆனால் அமைச்சர் அவர்கள் அது இல்லை என்று சொல்வதன் அர்த்தம் என்ன ஏற்கனவே எடுத்துக்கொள்ளப் பட்டது என்று மக்கள் சொல்கிறார்கள் இலாக்காவினர் சொன்னார்களே அதனுடைய உண்மையான நிலைமை என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, மதிப்பீடுதான் தயாரிக்கப்பட்டதே தவிர, வேலை ஆரம்பிக்கப் பட்டதற்கான எந்தவிதமான குறிப்பும் இங்கே தரப்பட வில்லை. இதுவரை போஸ்ட்—வார் டெவலப்மென்ட் ஸ்கீம் என்ற திட்டத்தின் அடிப்படையில் மண்சாலை போடப்பட்டது. ஆனால் இப்போது அந்த திட்டத்திற்கு 7 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் தேவைப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது இந்த அரசின் எந்தத் திட்டத்திலேயும் இதுவரையில் வரவில்லை ஆகவே நிதிநிலைமை சரியானவுடன் எடுத்துக்கொள்ளப்படும்.

[முற்பகல் 9.20]

**திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏழு லட்சத்திற்குத்தான் மதிப்பீடு போடப் பட்டது என்று கனம் அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அந்த ஏழு இலட்சம் ரூபாயைச் செலவு செய்து இந்த நடப் பாண்டிலேயே அந்தச் சாலை எடுத்துக் கொள்ளப்பட்டு, மலைப் பகுதியில் வாழ்கின்ற அந்த மக்களின் குறைகள் போக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரர்களே, நிதிநிலை சரியானால் இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படும்.

### கேளம்பாக்கம்—கோவளம் பாதையினிடையே உள்ள மேம்பாலம்.

*வினா எண். 680. —திரு கெ.. சொக்கலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியம் கேளம்பாக்கத்திலிருந்து கோவளம் செல்லும் பாதையில் மத்தியில் உள்ள மேம்பாலம் இடிந்து விழுந்து சாலை மூடப் பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) தேங்கியுள்ள உப்பங்கழி நீர் மற்றும் உப்புக்காற்று தன்மையால் பாலத்தின் இரும்புக் கம்பிகள், ஆர். எஸ், ஜே. உத்திரங்கள் துருப்பிடித்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனைப் பழுது பார்க்கும் வேலை நடந்து கொண்டு இருப்பதால் இச் சாலையின் பகுதி போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இப்பாலத்தை பழுதுபார்ப்பதற்காக ரூ 1.00 இலட்சம் செலவில் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, பழுதுபார்க்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மருதையாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 681.—திரு. என். பெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்சி மாவட்டம் – ஆலத்தூர் கேட்டையும் அரியலூரையும் இணைக்கும் வகையில் மருதையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் அதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் பெற்று 33 ஆண்டு காலமாகியும் என்னுடைய வரகூர் தொகுதியில் ஆலத்தூர் கேட்டையும் அரியலூரையும் இணைக்கும் வகையில் மருதையாற்றின் குறுக்கே பாலம் கட்டப்படாமல் இருக்கிறது. அமைச்சரவர்கள் தங்கள் பதிலில் இல்லை என்று கூறினார்கள். திரும்பவும் பரிசிலனை செய்து அந்தப் பாலத்தைக் கட்டித் தருவதற்கு நமது அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. 25 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்ற மதிப்பீட்டின் காரணமாக, நிதிநிலை சரியில்லாத காரணத்தினால் இப்பொழுது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.





திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு இல்லை என்று அமைச்சரவர்கள் பதில் கூறினார்கள். ஆலத்தூர்கேட்டைக்கும் அரியலூர்க்கும் இடையிலே பிள்ளைமச்சைக்கூத்தூர், இலுப்பக்குடி இருக்கிறது. ஆண்டுக்காண்டு மருதையாற்றில் மணல் நுழைந்து வருகின்ற காரணத்தால் ஆண்டுக்கு பத்தாயிரம் ரூபாய், பதினைந்தாயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டிய சூழ்நிலையும் இருக்கிறது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட அந்தப் பகுதியில் இந்த ஆண்டாவது அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்த ஆண்டு எந்தப் பகுதித் திட்டத்தின் கீழும் எடுக்கப்படவில்லை ஆகவே, வருகின்ற ஆண்டுகளில் இது பரிசீலிக்கப்படும்.

இளையான்குடி மருத்துவமனைக் கட்டிடம்

*வினா எண் 749—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இளையான் குடியில் கடந்த ஏழு மாதங்களுக்கு முன்னால் ரூ. 3.00 லட்சம் எஸ்டிமேட்டில் அடிக்கல் நாட்டப்பட்ட ஆஸ்பத்திரி எப்போது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) தாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) கட்டிட வேலைகள் அனைத்தும் விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு மருத்துவமனை ஆரம்பிக்கப்படும்.

(ஆ) திரு. கே. எஸ். மொஹம்மது இஸ்மாயில் என்ற தனி நபர் ஒருவர் ஒரு புதிய, மருத்துவமனை கட்ட இங்கு 5 ஏக்கர் நிலம் கொடுக்க முன்வந்தார். அங்குள்ள மக்கள் அந்த இடம் ஊருக்கு $2\frac{1}{2}$ மைல் தொலைவில் இருக்கிறது என்று எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஆகவே அந்த இடத்தில் மருத்துவமனை கட்டும் திட்டம் கைவிடப்பட்டது. ஏற்கனவே உள்ள ஊராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தை இடித்து புதிய கட்டிடம் கட்ட வேண்டியிருப்பதால் இக்கட்டிடம் கட்டுவதற்கான ஆரம்பப் பணிகள் நடைபெற காலதாமதம் ஏற்பட்டது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு இளையான்குடியில் கட்டிடமானது பூர்த்தியாகும் நிலையில் இருந்துகொண்டு இருக்கிறது. ஆனால் மதிப்பிற்குரிய அமைச்சரவர்களுக்குத் தகவல் கொடுத்தவர்கள் எந்த அளவிற்குத்

தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. இந்தக் கேள்வி ஆறு மாதங்களுக்கு முன்பு போடப்பட்ட கேள்வி. இப்பொழுது அந்தக் கட்டிடம் பூர்த்தியாகும் நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்களை அதன் திறப்பு விழாவிற்குக் கூப்பிடலாம் என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குச் சரியான தகவல் கொடுக்கப்படவில்லை; அந்த அளவிற்கு நிர்வாகம் கோளாறாக இருக்கிறது. அந்தக் கட்டிடம் ஒன்றரை இலட்சம் ரூபாய் அளவிலேதான் பூர்த்தியடையக் கூடிய நிலையில் இருக்கிறது. நான் நேற்று பார்த்தேன். தார்ச்சு முழுவதும் போடப்பட்டு விட்டது. மீதம் உள்ள ஒன்றரை இலட்சம் ரூபாய் உடனடியாகச் செலவு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய பதிலைச் சரியான வகையில் ரொம்ப எச்சரிக்கையாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். காலதாமதத்திற்கான காரணத்தை நான் சொன்னேன், இப்பொழுது நடைபெற்று முடியவில்லை என்று நான் சொல்லவில்லை. காலதாமதத்திற்கான காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. இடத்தை நாம் எடுத்துக்கொள்ள முடியாமல் ஏற்பட்ட சங்கடத்தின் காரணமாகக் காலதாமதம் ஏற்பட்டது. காலதாமதம் எதற்காக என்ற கேள்வி எழுப்பப்பட்டதன் காரணமாகத்தான் அதற்கான பதிலைச் சொன்னேன். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் கேட்ட துணைக் கேள்விக்கு என்னிடத்திலே தகவல் இருக்கிறது. நான் அவைகளையெல்லாம் சொல்ல முடியும் அந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையிலும் திரு. கே.எஸ். முஹமது இஸ்மாயில்அவர்கள் ருபாய் ஒரு இலட்சம் நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். அதையும் நாம் எடுத்துக்கொள்கிறோம். Government have sanctioned a sum of Rs. 1·6 lakhs in G. O. Ms. No. 1900, Health. அதைக் கொடுத்தாகிவிட்டது. இப்பொழுது 'கன்ஸட்ரக்ஷன் ஒர்க்' எல்லாம் முடிந்துவிட்டது. அடுத்த துணைக் கேள்விக்கு நான் பதில் கொடுத்திருப்பேன். இப்பொழுது தான் அவர்கள் கேட்டார்கள். காலதாமதத்திற்கு நான் பதில் சொல்லிவிட்டேன். 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை தயாராகிவிட்டது, விரைவில் துவக்கப்படும். அதில் எந்த விதமான சங்கடமும் வேண்டாம் தவறான தகவலை எந்த அதிகாரியும் கொடுக்கவில்லை. தெளிவாக நான் பதில் சொல்லி உள்ளேன்.

**திரு. செ. சிவசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, 32 வருடங்களாகக் கேட்டு, கேட்டு, அந்த ஆஸ்பத்திரியானது இப்பொழுதுதான் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, அது தாலுகா தலைநகரத்திலே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரி, பிற்பட்ட பகுதியிலிருக்கக்கூடிய ஆஸ்பத்திரி, ஆகவே, அதை மேலும்



விஸ்தரிக்க, பல் வைத்தியப் பிரிவு, எக்ஸ்-ரே பிரிவு போன்ற பிரிவுகளை ஏற்படுத்தும் வகையில் விஸ்தரிக்கக் கூடிய சந்தர்ப்பம் உண்டா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள், பல ஆண்டுகளாக, கேட்டு, கேட்டு பெறப்பட்ட ஆஸ்பத்திரி என்று மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஆட்சியை மறைமுகமாகப் பாராட்டியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அது முதலிலே இயங்கட்டும். அதற்குப் பிறகு அங்கு வரும் புற நோயாளிகளின் எண்ணிக்கையைப் பார்த்து, அக நோயாளிகள்—இன் பேஷன்ட்ஸ்——எண்ணிக்கையைப் பார்த்து, 20 பெட்கள் உள்ளன. அது 100 சதவீதம் யுட்டிலைசேஷன் ஆகிறதா என்பதையெல்லாம் பார்த்துத்தான், வெவ்வேறு பிரிவுகள் கொண்டு வர நாம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டி வரும். ஆகவே, பிறகு படிப்படியாக எல்லாவிதமான வசதிகளையும் கொண்டு வர முயற்சிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20—லிருந்து, 25,000 வரை மக்கள் வசிக்கும் பகுதியில், 5 ஏக்கர் இனாமாகக் கொடுக்கவும், ரூ. 1 இலட்சம் இனாமாகக் கொடுக்கவும் மக்கள் முன் வந்தால், அங்கே 20 பெட் உள்ள ஆஸ்பத்திரி கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். இது ஒரு பொதுக் கேள்வி'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கேள்வி என்றால், தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லப்படும்.

### மதுராந்தகம் தொகுதியில் காலரா நோய்.

*வினா எண். 750——திரு. எஸ் டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி வையாவூர் பிர்காவில் காலரா பரவியுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அங்கு காலராவில் 1980 ஆம் ஆண்டு இறந்தவர்கள் எவ்வளவு பேர்?

(இ) அவர்கள் குடும்பத்திற்கு அரசு நிவாரணம் ஏதாவது வழங்கியதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) இப் பகுதி காலரா நோயினால் பாதிக்கப்படவில்லை. (ஆ) மற்றும் (இ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, பாம்புத் தலை மைக் எங்களுக்கு மட்டும் ஏன் இல்லையென்று கேட்டேன். அதை எங்களுக்கும் வைத்துள்ளதற்காக, சபாநாயகருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பாம்புத் தலை மைக்கிலே எப்படியாவது பேசவேண்டுமென்பதற்காக, ஒரு கேள்வியைக் கேட்க வேண்டுமென்பதற்காகத்தான் இப்பொழுது கேள்வி கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பாம்புத்தலை மைக் அல்ல. முதலிலே, நல்ல பெயரை வையுங்களேன்.

திரு. துரைமுருகன்: தண்ணீர்ப் பாம்பு தலையைத் தூக்கினால் எப்படியிருக்குமோ அப்படித்தான் இந்த மைக் இருக்கிறது. ஆகவேதான் பாம்புத் தலை மைக் என்று சொன்னேன்.

இந்தக் காலரா பற்றிய கேள்வி 6 மாதத்திற்கு முன்னாலே கேட்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு இறந்தவர்கள் எவ்வளவு பேர் என்று கேட்கப்பட்டிருக்கிறது. பொதுவாக, இப்பொழுது குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திலே சமையலுக்குக்கூட தண்ணீரில்லாத நிலைமை உருவாகியிருக்கிறது. பேரூரிலே தண்ணீரே இல்லையென்று, நேற்று மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்திலே, திரு. பலராமன் அவர்கள்கூடத் தெரிவித்தார்கள். சேற்றுத் தண்ணீரை எடுத்து மக்கள் குடிப்பதால், இன்றைக்குக் காலரா பரவி இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதை உடனடியாகத் தடுத்து நிறுத்த அரசிடம் ஏதாவது நடவடிக்கைக் குறிப்புகள் இருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே. அவர்கள் இரண்டு கேள்விகள் கேட்டிருக்கிறார்கள், அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பதுபோல், அந்த மாதிரி எந்தக் காலராவும் கிடையாது. காலரா கற்பனையிலேதானிருக்கிறது. அது எனக்குத் தெரியும். Acute Gastro Entritis என்று சொல்லக்கூடிய வயிற்றுப் போக்குத்தான் இருக்கிறது. அதைச் சுருக்கமாக A.G.E. என்று சொல்வார்கள். அது 1 நாள், ½ நாள் இருக்கும். அதைக் கூட சில நேரங்களிலே, பயந்துகொண்டு காலரா என்று நினைக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, Gastro Entritis-ஐ காலரா என்று நினைக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினருக்கு யோசனையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் தொழில் நுட்பப்பிரிவு ஊழியர்களுக்கான ஊக்க ஊதியம்

*வினா எண். 751 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—





தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் தொழில் நுட்பப் பிரிவில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு (Collections) அடிப்படையில் ஊக்க போனஸ் அளிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தந்தை பெரியார் போக்குவரத்துக்கழக நிர்வாகத்திற்கும் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் 18(1) தொழில் தகராறு சட்டம் 47-ன் கீழ் 12-1-77ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஏற்பட்டது. அதன்படி 1-1-77 தேதி முதல் தொழில்நுட்ப பணியாளர்களுக்குப் பராமரிப்புப்படி என்கிற பெயரில் ஊக்க போனஸ் வழங்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9.30)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள டெக்னிக்கல் ஸ்டாபுக்குக் கொடுக்கப்படுகின்ற கலக்ஷன் போனஸுக்கு என்னென்ன நிபந்தனை விதிக்கப்படுகிறது.?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊக்க போனஸ் வாங்கக்கூடிய தகுதி பெறுகிறவர்கள், குறைந்த பட்சம் ஒரு மாதத்தில் 22 நாட்கள் பணியாற்றி இருக்கவேண்டும். அந்தப் பேருந்துகள் ஒரு கிலோ மீட்டருக்குக் குறைந்த பட்சம் இவ்வளவு தொகை ஈட்டவேண்டும் என்ற கணக்கு இருக்கிறது. அதேபோன்று ஒரு கிலோ மீட்டருக்கு இவ்வளவு செலவழிக்கவேண்டும் என்று கணக்கிருக்கிறது. மேலும் அங்கே செலவழிக்கப்படுகின்ற டீசல், டயர், டியூப் உதிரிப் பாகங்கள் போன்றவைகள் ஒரு கிலோ மீட்டருக்கு எவ்வளவு செலவழிக்கப்படுகிறது என்பன போன்றவைகளை எல்லாம் கணக்கிலே கொண்டு, அந்த ஊக்க ஊதியம் அளிக்கப்படுகின்றது.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நுட்பப் பிரிவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு எவ்வளவு ஊக்க போனஸ் வழங்கப்படுகிறது.? அந்த ஊக்க போனசை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவா அவர்களே, மாத்த வசூலில் 0.70 சதவீதம் அவர்களுக்கு ஊக்க போனசாக அளிக்கப்படுகிறது. இது ஒப்பந்தத்திலே ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் இதிலே தற்போது மாற்றம் செய்கின்ற சூழ்நிலை இல்லை.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, மற்றப் போககுவரத்துக் கழகங்களில் இப்படிப்பட்ட முறையில் போனஸ் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் இந்த முறைதான் கடைப்பிடிக்கப்படுகின்றது.

[1981 ஏப்ரல் 14

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் கொடுக்கப்படுவது போன்று, கலக்ஷன் அடிப்படையிலே கொடுக்கப்படுகின்ற இந்த ஊக்க போனஸ், மற்றப் போக்குவரத்துக் கழகங்களிலும் தரப்படவில்லை என்ற குறை இருக்கிறது. அப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்தால் அவைகளைப் போக்கி மற்றப் போக்குவரத்துக் கழகங்களிலும் இந்த ஊக்க போனஸ் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறைபாடு இதுவரையில் எங்கேயும் வரவில்லை; அப்படி இருப்பதாகவும் தகவல் வரவில்லை. அப்படி இருக்குமானால் நிச்சயமாக அது நிவர்த்திக்கப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, ஊக்க போனஸ் கொடுக்குமபடியான திட்டம் எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் இருந்து வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சாதாரணமாக அவர்களுக்கு அளிக்கப்பட்ட வேலைகளைச் செய்து—அதற்கு மேலும் உற்சாகத்தோடு செய்தவர்களுக்கு ஊக்க போனஸ் கொடுக்கப்படுகிறது. அந்த போனசுக்கு நிபந்தனை எதற்கு விதிக்கப்படுகிறது? அதற்கு அட்டெண்டன்ஸ் நிபந்தனை விதிப்பது சரியானதல்ல. இதை அமைச்சர் அவர்கள் கணக்கில் எடுத்துக் கொண்டு அந்த நிபந்தனையை நீக்கி எந்த அளவுக்கு லாபம் ஈட்டுவதற்கு மேல் உற்பத்தி செய்கிறார்களோ அதற்கு ஊக்க போனஸ் கொடுக்கின்ற முறையை எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் கடைப்பிடிப்பாரா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஒரு போக்குவரத்துக் கழகத்திலே 5,000 பேர்கள் பணியாற்றுகிறார்கள் என்று சொன்னால் இந்த 5000 பேர்களும் சரிசமமாக அந்தக் காரியத்தைச் செய்தால்தான் லாபம் வரும். அதன் மூலமாகத்தான் நாம் ஊக்க போனஸ் அளிக்க முடியும். அங்கே இருக்கிற ஒரு 4 ஆயிரம் பேர்கள் நல்ல முறையிலே அதிகமாகப் பணியாற்றினால் நல்ல லாபம் வரும். அதில் 1,000 தொழிலாளர்கள் குறைந்த நேரம் பணியாற்றுவதன் காரணமாக அவர்களுடைய லாபம் இவர்களுக்குப் போகும் என்ற காரணத்தினால்தான் எல்லோரும் சரிசமமாகப் பணியாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் அந்தக் காலத்தை நிர்ணயம் செய்திருக்கிறோமே ஒழிய அவர்களிடத்திலே அதிக வேலை வாங்க வேண்டும் என்ற உணர்வோடு நாங்கள் செய்யவில்லை. யாராவது கொஞ்சம் பேர்கள் குறைந்த நாட்கள் பணியாற்றுவதன் மூலமாக அதிக நாட்கள் பணியாற்றுகிறவர்களுடைய அந்தக் கஷ்டத்தின் மூலமாக வரக்கூடிய லாபம் அவர்களுக்குப் போகக்கூடாது. சரிசமமாக இருக்க வேண்டும் என்ற உணர்வோடு



[1981 ஏப்ரல் 14]

தான் இந்தக் காலத்தை நாம் நிர்ணயித்து இருக்கிறோம். தொழிற்சங்கத் தலைவர்களும் சேர்ந்து பேசி எடுக்கப்பட்ட முடிவுதான் இது.

*வினா எண். 752

நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்குத் தொழில் கருவிகள் வாங்கித் தரும் திட்டம்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள தலைமை Co-optex-ல் பொது நலநிதி நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்குத் தொழில் கருவிகள் வாங்கிக் கொடுக்கும் திட்டம் 1962-ம் வருடத்திற்குப் பின் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில், மேற்படி பணம் தற்பொழுது எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, 1962-ஆம் ஆண்டு வரையில் தொழிற்கருவிகள் வாங்குவதற்கு சேம நிதியிலிருந்து ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அது ஏன் கொடுக்கவில்லை? நெசவாளர்களுடைய தொழிற் கருவிகள், அதாவது தறி, திருவள்ளுவர் காலத்து மாடலாக இருக்கிறது. மிதிப்பான்கள் மிதித்து செட்டில் தறியாக உள்ளது. ஆதலாலே நவீனக் கருவிகள் வழங்க அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உள்ளதா? அப்படிக் கருவிகள் வழங்கும்போது மானியமாகக் கொடுக்கப்படுமா? கருவிகள் வாங்க எவ்வளவு தொகை கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டதுபோல சேமநல நிதியிலிருந்து எந்தவித உதவியும் நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. 1962—ஆம் ஆண்டுக்கு முன்பு பொது நல நிதியிலிருந்து தொழில் கருவிகள் எதுவும் வாங்கித் தரப்படவில்லை. ஆனால் தொழில் கருவிகள், மத்திய அரசால் கைத்தறி மற்றும் கதர் வளர்ச்சிக்காக நூற்பு மற்றும் நெசவாலைகளிலிருந்து 1-2-1953-க்குப் பிறகு உள்ளூர் தேவைக்காக உற்பத்தி செய்த மில் துணிகளின் மீது ஒரு கெஜத்திற்கு 3 பைசா வீதம் வரி வசூலிக்கப்பட்டு அத்தொகை 'செஸ் நிதி' என்ற ஒரு நிதியில் சேர்க்கப்பட்டு வந்தது. அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து மத்திய அரசு மாநில அரசிற்கு ஒரு பகுதி வழங்கியது. அவ்வாறு பெறப்

அரசிற்கு வழங்கிய செஸ் தொகையிலிருந்துதான் நெசவாளர்களுக்குத் தொழிற்கருவிகள் வாங்கித் தரப்பட்டு வந்தன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், பழைய தறிகளையேத்தான் நெசவாளர்கள் உபயோகித்து வருகிறார்கள். புதுத் தறிகள் வாங்கித் தருவதற்கான திட்டங்கள் அரசிடம் இருக்கிறதா என்று கேட்டார்கள். இதைப் பொறுத்தவரையில், மத்திய அரசு தனது பொது நிதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் கைத்தறி வளர்ச்சிக்காக மொத்தமாக ஒரு கணிசமான தொகையை மாநில அரசுக்கு அளித்து வருகிறது. அதன்படி கைத்தறி வளர்ச்சிக்காக மாநில அரசு செலவிடும் தொகையில் 50 சதவீதம் செலவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும். மீதமுள்ள 50 சதவீதம் செலவை மாநில அரசு ஏற்கிறது. தற்போது நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நவீன தொழிற்கருவிகள் வாங்கவும், ஏற்கனவே உள்ள கருவிகளை நவீனப்படுத்தவும் தறி ஒன்றுக்கு ரூ. 2,500 வரை மூன்றில் இரண்டு பங்கு கடனாகவும் ஒரு பங்கு மானியமாகவும் இந்த அரசு கொடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, கோவாப்டெக்ஸ் மூலமாக 'இன்டர்நேஷனல்' என்ற தனி அமைப்பு வைத்து இருக்கிறார்கள். அந்தத் தனி அமைப்பு மூலமாக வெளிநாடுகளுக்குக் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது வெளிநாடு சென்று தொழில் நுணுக்கம் அறிந்து வந்ததுபோல், நெசவாளர் பொது நல நிதியிலிருந்து செலவுசெய்து, நெசவாளர்கள் சங்கங்களின் தலைவர்கள் ஆண்டுக்கு 3 பேர் அல்லது இரண்டு பேர்களை கோவாப்டெக்ஸ் மூலமாகத் தொழில் நுணுக்கம் தெரிந்து வருவதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்துக்கள் அனுதாபத்தோடு பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோவாப்டெக்ஸ் பொது நல நிதியில் தற்போது எவ்வளவு பணம் சேர்ந்துள்ளது? எந்தெந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியை ஒட்டி இல்லாத காரணத்தால் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் கொடுக்கப்படும்.

காட்பாடியிலுள்ள கால்நடைப் பராமரிப்பு நிலையம்.

**வினா எண். 753 திரு. என். ஏ. பூங்காவனம்:** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



(அ) வடாற்காடு மாவட்டம் காட்பாடி தாலுகாவில் உள்ள காட்பாடி கால்நடைப் பராமரிப்பு நிலையத்தில் புதிதாக வரும் கால்நடைகளுக்குத் தடுப்பு மருந்து இல்லை என்று கூறுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மற்றும் (ஆ) காட்பாடி கால்நடை மருந்தகத்தில் தடுப்பூசி போடுவதற்காகக் கொண்டு வரப்படும் கால்நடைகளுக்கு சப்பை நோய், தொண்டை அடைப்பான் போன்ற நோய்களுக்கு இலவசமாகத் தடுப்பு செய்ய வசதி உள்ளது. ஆனால் கோமாரி நோய்க்கு இலவசமாகத் தடுப்பு ஊசி போடுவதில்லை. கோமாரி நோய் தடுப்பு மருந்தினை விலைக்கு வாங்கி தடுப்பூசி செய்து கொள்ள விவசாயிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கோமாரி தடுப்பூசி மருந்தின் விலையில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. 1980–81 ஆம் ஆண்டில் வேலூர் மண்டலத்திற்கு 10,000 டோஸ்கள் கோமாரி தடுப்பூசி மருந்துகள் விலைக்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 மாதங்களுக்கு முன்னால் காட்பாடியைச் சுற்றியுள்ள பகுதிகளில்—குறிப்பாக தாராபடுகை, காட்பாடி, தருமபுரஞ்காந்திநகர், செங்குட்டை, சேவூர், அரும்பருதி ஆகிய பகுதிகளில் கால்நடைகளுக்கு நோய் வந்த நேரத்தில், காட்பாடி கால்நடை பராமரிப்பு இல்லத்தில் மருந்து இல்லாது இருந்த காரணத்தால் கிட்டதட்ட 90–க்கும் மேற்பட்ட கன்றுகள், மாடுகள் இறந்து போய்விட்டன என்கிற தகவல் அரசுக்குத் தெரியுமா?

[முற்பகல் 9.40]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, ஆடு மாடுகள் இறந்தது பற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்க முடியும்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவரவர்களே, அந்தப் பகுதியிலுள்ள கால்நடைப் பராமரிப்பு இல்லங்கள் பெருமாள் குப்பம், காளாம்பட்டு சேர்க்காடு போன்ற பகுதிகளில் உள்ளவைகளில் கடந்த 3, 4 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆய்வாளர்கள் இல்லை. ஆகவே, உடனடியாக அந்த இல்லங்களில் ஆய்வாளர்களை நியமிக்கவும், ஏற்கனவே கால்நடைகள் இறந்து போனவர்களுக்கு மானியம் கொடுக்கவும், மானியம் கொடுக்கவில்லை என்றால் கடனாவது கொடுக்க சிபாரிசு செய்யும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, ஆய்வாளர்கள இல்லை என்றால் அந்த விவரத்தைக் கொடுத்தால் தகுந்த நடவடிககை எடுக்கப்படும. ஆடுமாடுகளை இன்ஷ்யூர் செய்திருந்தால் நஷ்டயீடு கொடுக்கப்படும்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, இந்தக் கோமாரி நோய்ககுத தடுப்பு ஊசி இலவசமாகப் போடுவது இல்லை என்று சொன்னார்கள். அதற்கு என்ன காரணம என்று தெரிவிப்பார்களா? இரண்டாவதாக விவசாயிகளே வாங்கி வைத்துக்கொள்ள வேண்டுமமென்று சொல்லுகிறார்கள். அதற்கு 50% மானியம் அளிப்பதாகவும சொன்னார்கள். அதன் விலை எவ்வளவு? ஒரு மாட்டுக்குக் கோமாரி நோய் வந்தால் எவ்வளவு ஊசி போட வேண்டும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, ஒரு ஊசி விலை 8 ரூபாய். கோமாரி நோய் பலவிதமான நுண் கிருமிகளால் ஏற்படுகிறது. ஒவ்வொரு வகை நுண் கிருமிக்குய ஒவவொரு வகையான ஊசி போட வேண்டியிருக்கிறது. ஆகையால் ஒரு ஊசி போட்டால் அந்த நோய் தீர்ந்துவிடும் என்று சொல்ல முடியாது. ஆகையால் நுண் கிரிமிகளின் தன்மையை அறிந்து ஊசி போட வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

உடையார் பாலளயத்தில் கால்நடை மருத்துவமனை

அமைக்கும் திட்டம்

*வினா எண். 754 திரு. பி தங்கவேலு: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்ககண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம் உடையார்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறத்து அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இந்தக் கால் நடை மருத்துவமனை எப்போது துவங்கப்பெறும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:— (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழாது.

திரு. த. ஆறுமுகம்: தலைவரவர்களே, உடையார்பாளையம் ஒரு வட்டமாக இருப்பதாலும், அந்தப் பகுதியில் அதிகமான கிராமங்கள் இருப்பதாலும், அந்தப் பகுதி பின்தங்கிய பகுதியாக இருப்பதாலும இந்த ஆண்டு அந்த மருத்துவனை தொடங்கப்படுமா?





மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, உடையார்பாளையம் ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறது. ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் பெரிய தளத்தில்ஒரு கால்நடை மருந்தகமும், மீன்சுருட்டியில்ஒரு கால் நடை மருந்தகமும் இருக்கின்றன. உடையார்பாளையத்தில் ஒரு மருந்தகம் ஏற்படுத்தினால் அது அந்த ஊராட்சி ஒன்றியத்தில் 3-வது மருந்தகமாகும். மேலும் அந்த வட்டாரத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10,065 ஆணையரிடம் விவரம் கேட்டதில், அங்கே ஒரு மருந்தகம் அமைக்கப்படுவதற்கான விவரங்கள் கிடைக்கவில்லை. ஆகையால் அங்கு கால்நடை மருந்தகம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

3. உரிமைப் பிரச்சினை

உறுப்பினர் திரு ரகுமான்கான்தான் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. ரகுமான்கான் அவர்கள்மீது திரு. மி. வின்சென்ட் அவர்கள் அவையில் அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அவை உரிமை மீறல் எப்படி ஏறபட்டுள்ளது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற விதி 246—ன்படி அவை உரிமைப் பிரச்சனை ஒன்றை எழுப்ப விரும்புகிறேன். 7-4-81-ம் நள் சட்டமன்றத்தில் தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு இன்றியமையாத பணிகள் குறித்த சட்ட முன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர் திரு அ. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையில் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் வேலை நிறுத்தம் செய்யலாம் அதற்கு உரிமை தரலாம் என்று தேர்தல் அறிக்கையில் நமது மாண்புமிகு முதல மச்சர் அவர்கள் சொல்லியுள்ளார்கள் என்று சட்டசபையில் குறிப்பிட்டார் அதற்குத் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவரவர்கள் எழுந்து, திரு. ரகுமான்சான்கான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்; எது உண்மையோ அதைச் சொல்லுங்கள் என்றும், தேர்தல் அறிக்கையில் அப்படிப்பட்ட வாசகம் இல்லை என்றும் உடனே சபையில் மறுத்தார்கள். ஆனால் திரு. ரகுமான்கான் அவர்கள் வழக்கம் போல் தன்னிடம் ஆதாரம் இருக்கிறது

என்றார்கள். அண்ணா பத்திரிகை ஆளும் கட்சிப் பத்திரிகை. அதில் இந்த வாசகம் உள்ளது என்று அழுத்தமாகச் சொல்லி, படிக்கத் தொடங்கினார். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட வாசகம் இல்லை என்று சொன்னது உண்மையாகும்.

எங்கள் தேர்தல் அறிக்கையில் உள்ளது இதுதான் : காவல் துறையினர் நலம். தமிழக காவல் துறைக்கு இந்தியா முழுவதும் ஏற்பட்டிருந்த சிறப்பையும், புகழையும் கருணாநிதி அவர்களின் ஆட்சிக் காலத்தில் காவல் துறை நிர்வாகத்தில் அத்துமீறிய கருணாநிதி கட்சிக்காரர்களின் தலையீட்டால் காவல் துறை நிர்வாகமே ஒழுக்க சிறப்பை இழந்துவிட்டது என்று ஜஸ்டீஸ் சதாசிவம் கமிஷன் சுட்டிக்காட்டிய சூழ்நிலையை மாற்றி கழக ஆட்சிக் காலத்தில் காவல் துறை நிர்வாகத்தில் யாருடைய தலையீடும் இல்லை என்கிற பெருமையை கழகம் உருவாக்கியுள்ளது. மேலும் காவலர்களுக்கு சலுகைகளையும் காவல் நிலையங்களில் புதிய வசதிகளையும் அளிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. காவல் துறையினர் நலன்களையும் நியாயமான உரிமைகளையும் காப்பதற்காக பெரும்பாலோரின் விருப்பப்படி காவலர் முதல் ஆய்வாளர் வரை உள்ளவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட சங்கம் அமைக்க காவலர்களுக்கு அனுமதி வழங்கப்படும். பாதுகாப்பு படைப் பிரிவினரின் வேலை நிலைகளைக் கவனித்து அவர்தம் நிலை உயர தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தேர்தல் அறிக்கையில் சொல்லப்படாத ஒன்றைச்சபையில் வேண்டும் என்றே திட்டமிட்டு கெட்ட எண்ணத்துடன் உள்நோக்கம் கற்பித்து, சபையைத் திசை திருப்பியது குற்றமாகும். மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்ன வாசகங்கள் அண்ணா பேப்பரில் இல்லை. அதில் வந்துள்ள தேர்தல் அறிக்கையில் சொல்லப்படாத ஒன்றை சொல்லியிருப்பது போல் பாவித்து வேண்டும் என்றே * * படிக்கத் துவங்கியது குற்றமாகும். தேர்தல் அறிக்கையைப் பற்றி. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரை சொல்லியது போதுமா? இன்னும் வேறு ஏதாவது இருக்கின்றதா? ஒரே கருத்தைத்தானே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, தேர்தல் அறிக்கையில் திரு. ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்ட வாசகம் இல்லை என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மறுத்த உடனாவது 'பேச்சுவார்த்தையில் வேகமாகப் பேசி விட்டேன்' என்று உண்மையைப் பேச மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் விரும்பி இருந்தால் 'தவறுதான்' என்று அவர் சொல்லி இருக்க முடியும் அதன்பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஆதாரம் அண்ணா பேப்பரில் இருக்கின்றது. ஆதலால் பேச அனுமதியுங்கள் என்று கேட்டார். பிரச்சினையோடு பழகிய எண்ணத்திற்காகவாவது அந்தப் பாசத்திற்குக் கட்டுப்பட்டாவது அண்ணா பேப்பரில் இல்லை என்று சொல்வதற்கு அந்த நேரத்தில் மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்களுக்கு வாய்ப்பு இருந்தது. அதேபோல்தான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுந்து பத்திரிகையில் வந்த செய்தியை ரகுமான்கான் குறிப்பிடவில்லை. அறிக்கையைப்பற்றிக் குறிப்பிடுகிறார் என்று அவர் குறிப்பிட்டார். மரியாதை கொடுப்பதற்காகவாவது இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் நான் சொன்ன வாசகங்கள் பேப்பரில் இல்லை என்று சொல்வதற்கு வாய்ப்பு இருந்தது. அதிலே இல்லை எனச் சொல்லி இருக்கவேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, திட்டமிட்டு ஒருமுறை சொல்லவில்லை, இரு முறை சொன்னார். முதலில் காவல் துறையைச் சார்ந்தவர்கள் ஸ்ட்ரைக் செய்யலாம், அதற்கு உரிமை தரலாம் என்று தேர்தல் அறிக்கையில் நமது முதலமைச்சர் சொன்னார் என்று அவர் குறிப்பிட்டார். அதைத் தொடர்ந்து வலியுறுத்தி அழுத்தமாக இரண்டாவது முறையாகச் சட்டமன்றத் தேர்தலின்போது தேர்தல் அறிக்கையிலே காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு ஸ்ட்ரைக் பண்ணுகிற உரிமை இருக்கின்றது என்று குறிப்பிட்டு திருப்பியும் அழுத்தந்திருத்தமாகச் சொன்னார். மாண்புமிகு திரு. ரகுமான்கான் வேண்டுமென்றே தவறான செய்தியைத்தந்தது, **வேண்டுமென்றே விபரீதம் விளைவிக்க எண்ணி தேர்தல் அறிக்கையில் இல்லாத செய்தியை இரண்டு முறை வலியுறுத்தியது * * வேண்டும் என்றே கெட்ட எண்ணத்துடன் திட்டமிட்டுத் திருத்திக் கூறியது, * * வேண்டும் என்று திட்டமிட்டு உள்நோக்கம் கற்பித்தது, * * அவை உரிமை மீறலாகும். ஆகவே இதனை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தாங்கள் அனுமதித்து ஒரு வகையிலே மாண்புமிகு உறுப்பினர் கொண்டுவந்திருக்கின்ற உரிமைப் பிரச்சினையின் தராதரத்திற்குள்ளேயோ தரப்படுகின்ற பல்வேறு கருத்துக்களைப்பற்றியோ கூட நான் சொல்ல விரும்பவில்லை. அதைப்பற்றி வாதிக்கக்கூடிய சூழ்நிலை இன்னும் வரவில்லை என்று நான் கருதுகிறேன். ஆனால் ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டுவருகின்றபோது அதைக் கொண்டுவருகின்ற அந்த முறைகளிலே ஏதோ ஒரு உறுப்பினர் குற்றம் செய்து விட்டார் என்று சொல்வதாக இருந்தாலும் அது எந்த வகையிலே என்று மரபு இருக்கின்றது. அவருடைய பேச்சு தவறா சரியா என்பது வேறு. அவர் அறிக்கையைப் படிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டதா என்பது வேறு. வாய்ப்பளிக்க மறுக்கப்பட்டது. எனவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் தவறு நடைபெற்றிருந்தாலும் கூட அதற்கு ஒரு மோட்டிவ் கற்பிக்கின்ற முறையிலே,

* **மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

உள்நோக்கம் கற்பிக்கின்ற முறையிலே பல்வேறு குற்றச்சாட்டுகளாக அதை எடுத்து வைத்து வாதிடுகிற அளவுக்கு இப்போதே அந்தத் தீர்மானம் வாதத்திற்கு வந்திருக்கின்றதா என்று நான் கேட்க விரும்புகிறேன். விவாதத்திற்கு வரவில்லை என்றால் வெறும் கருத்துக்களை மட்டும் சொல்லலாமே தவிர ஒரு வழக்கறிஞர் வாதிடுவதைப் போல இப்போதே வாதம் ஏற்பட்டிருப்பதைப்போல மாண்புமிகு உறுப்பினர் இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவருகிறபோதே வாதிடுவதைத் தாங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாக விளக்கச் சொன்னீர்கள், நான் விளக்கியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்களுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவருக்கு சுருக்கமாக விளக்கத் தெரிந்த அளவிற்கு விளக்கியிருக்கிறார்கள். அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டு எழுதி மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்கு 14-4-1981 ஆம் தேதி காலை 9 மணிக்குள் விளக்கம் அளிக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறோம். அவரிடமிருந்து இன்னும் எந்தவித பதிலும் வரவில்லை. வரும் என்று நான் எதிர் பார்க்கிறேன். அவரிடமிருந்து விளக்கம் வந்தபிறகு, இந்தப் பிரச்சினையைக் குறித்து பின்னால் தீர்ப்பளிக்கிறேன்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் மீது கொடுத்த உரிமை மீறல் பிரச்சினையை நீங்கள் வெகு வேகமாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், * *

திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்ன பிரச்னை இங்கே வந்தவுடனேயே தாங்கள் அதைப்பற்றித் தீர்ப்பளித்து விட்டீர்கள். அதற்குப் பின்னால் அதை மீண்டும் கிளப்பி அதற்கு ஒரு முகவுரை அளிக்க விரும்பும் இந்தச் செயலை நீங்கள் அனுமதிக்கிறீர்களா? அது அவைக்குறிப்பில் இருக்கலாம் என்று ஏற்றுக் கொள்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்?

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே அவைகள் எல்லாம் அவைக்குறிப்பில் இருக்க வேண்டுமா என்று தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டும். (கூச்சல், குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே, திரு. வின்சென்ட் அவர்கள் இந்தப் பிரச்னையை எழுப்பி, அதற்கு திரு. ரகுமான்கான் அவர்கள் உரிமை மீறல் பிரச்னையை எழுப்புவதாக இருந்தால் எழுப்புங்கள், நான் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் அந்த உறுப்பினரின் அனுமதியோடு இது உடனடியாக எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடனடியாக வேறு ஒரு பிரச்னைக்குப் போகாதீர்கள். பேரவையில் நான் எடுத்துக் கொள்ளாத வேறு எந்தப் பிரச்சினையைப் பற்றியும் பேசக் கூடாது.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு நீங்கள்தான் பாதுகாப்பு. நாங்கள் கொடுத்த உரிமைப் பிரச்னையை ஏன் எடுக்கவில்லை? கொடுத்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டதே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என் ஆய்வில் இருக்கிறது. அதை உடனடியாக எடுத்துக் கொள்வதும், கொள்ளாததும் என் முடிவைப் பொறுத்தது.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் கொடுத்த உரிமைப் பிரச்னைகள் எதுவும் எடுத்துக் கொள்ளப்பெறாத நிலையில் திரு. ரகுமான்கான் அவர்களின் மீதான இந்த உரிமை மீறல் பிரச்னை மட்டும் ஏன் இவ்வளவு சுலபமாக எடுத்துக் கொள்ளப் பெறுகிறது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்னை எழுந்த அன்றைக்கே, திரு. ரகுமான்கான், இதை உடனடியாக எடுத்துக் கொள்ளுங்கள் நான் பதிலளிக்கத் தயார் என்று சொன்னதின் பேரில் இதை எடுத்திருக்கிறேன்.

திரு. துரைமுருகன்: * *

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * *

மாண்புமிகு பேரவைத்தலைவர்: தயவுசெய்து அமைச்சர் அவர்கள் அமர வேண்டும். கொஞ்சம் பொறுத்துக் கொள்ளவேண்டும்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பேரவைத் தலைவர் [1981 ஏப்ரல் 14

எடுத்துக்கொள்ளாத ஒரு பிரச்சனையைப் பற்றி திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே பேசி விட்டார்கள். அது அவைக்குறிப்பில் இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதுதான் பிரச்சனை.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்பத் தாங்கள் அனுமதி அளித் தீர்கள். ஏன் அது ஒரு உரிமைப் பிரச்னையாக வருகிறது. உரிமைப் பிரச்னையில் அடங்குகிறது என்ற அளவோடு அவர்கள் அந்தக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு திரு. ரகுமான்கான் அவர்களிடம் இருந்து விளக்கம் வந்த பிறகு தாங்கள் தீர்ப்பு கூறுவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்குப் பிறகு திரு. துரைமுருகன் அவர்கள் எந்த ஒருவிதத் திலும் அடிப்படை இல்லாமல் பேசியிருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டரில்தான் பேசி இருக்கிறேன். நாவலரே இப்படிச் சொல்லக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சபை நடை பெறுகிறபோது ஒழுங்கு, விதிமுறைகளில் தவறு ஏற்படுமானால் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாமே தவிர நினைத்ததையெல்லாம் எடுத்துச்சொல்ல அல்ல பாயின்ட் ஆப் ஆர்டர். ஆகவே திரு. துரைமுருகன் குற்றச்சாட்டுக்களை வைப்பது அந்த வகையில் வராது. ஆகவே திரு. துரைமுருகன் சொன்னதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்புகிறோம், அதை அனுமதிப்பது அல்லது அனுமதி தராதது தாங்களே தவிர நாவலர் அல்ல.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதற்கு விளக்கம் சொன்னேனே தவிர நான் தீர்ப்பு அளிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்குக் கருத்துக்கள் சொல்ல உரிமை உண்டு. ஆகவே கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். பேரவையில் நான் எடுத்துக் கொள்ளாத பிரச்னை குறித்து திரு. துரைமுருகன் அவர்கள் திடீர் என்று எழுந்து பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதாகப் பேசியது சரியல்ல, அது அவை மரபு அல்ல. திரு. ரகுமான்கான் அவர்களே இந்தப் பிரச்னையை உடனடியாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதால் இப்பிரச்னை எடுத்துக் கொள்ளப்பெற்றது.



1981 ஏப்ரல் 14]

திரு. துரைமுருகன் : ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் வராத பிரச்னை பற்றி எதுவும் இங்கே கேட்கக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று குறிப்பிட்டுச் சொன்னதெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெற வேண்டும் என்று ஆணையிடுகிறேன்.

திரு. க. அன்பழகன் : சட்டமன்றம் முறையாக நடத்தப்பட தாங்கள் திரு. துரைமுருகன் அவர்கள் எழுப்பிய பிரச்னையை நீக்குவதில் எனக்கு எந்தவிதமான மாறுபாடுமில்லை. தாராள மாக நீக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர் களால் இங்கே கொண்டுவரப்பட்ட உரிமைப்பிரச்னை, அந்த உரிமைப் பிரச்னையை இந்த அவை ஏற்றுக்கொண்டு வாதிக்கிற ஒரு நிலை ஏற்படாதபோது பல்வேறுவிதமான உள்நோக்கங் களைக் கற்பிக்கிற அந்தக் குற்றச்சாட்டுக்களையெல்லாம் பற்றி அந்தத் தீர்மானத்தின் பேரில் அவர்கள் பேசத் தாங்கள் அனுமதித் தீர்கள். உறுப்பினர் அவர்கள் மாட்டர் ஆப் பாக்ட்—க்கு உட்பட்டு காரண காரிய விளக்கங்களைக் கூறி உரிமைப் பிரச்னையை எடுத்து வைத்திருந்தால் தவறு இல்லை. ஆனால் அந்தத் தீர்மானத்தின் பேரில் பேசப்பட்ட கருத்துக்கள் பல்வேறு விதமான உள்நோக்கங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. அவை சட்டமன்ற குறிப்பேட்டில் இடம் பெறுவது என்பது முறை தானா? அதை இந்த அவையில் அனுமதிப்பது என்றால் நாளைய தினம் வேறு பிரச்னைகளும் இதுபோல் பேசப்பெற்று முறை கேடான தன்மைகள் எல்லாம் முறையானதுதான் என்று கூறும் நிலை ஏற்படும் என்று அஞ்சுகிறேன்.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத்தலைவர்: உறுப்பினர் திரு. ரகுமான்கான் மீது உள்நோக்கம் கற்பித்து திரு. வின்சென்ட் குறிப்பிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. திரு. ரகுமான்கான் அவையிலே இல்லை. இருந்திருந்தால், அவரே பதில் சொல்லியிருக்கக்கூடும். திரு. ரகுமான்கான் அவர்களுடைய பதிலை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவருடைய பதில் கிடைத்த பின்னால், என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன். என் தீர்ப்பு வரும்வரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுத்திருப்பது நல்லதென்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, திரு. வின்சென்ட் சொன்னவை யாவும் குறிப்பேட்டிலே ஏறுகிறதா, இல்லையா? உரிமை மீறல் பிரச்னை என்ற அடிப்படையிலே உண்மை நிலை களை எடுத்துச்சொல்வது ஒன்று. ஆனால், பல்வேறு விதத்திலே உள்நோக்கம் கற்பிக்கின்ற முறையிலே அவர் பேச்சு அமைந் துள்ளது. நடைமுறையிலே இல்லாதவகையில், இதுபோன்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

கருத்துக்களைத் தெரிவிப்பது தவறு. அவற்றுக்கு ஆதாரமும் இல்லை; உள் நோக்கம் கற்பிக்கின்ற கருத்துக்களாகப் பேரவையில் எடுத்துச் சொல்ல அனுமதிக்கப்பெற்றால், நாளைய தினம் மற்றவர்களும் இது போல எடுத்துச் சொல்கிறபோது. இதே பிரச்னை தான் தொடர்ந்து வரும்; எனவே, தாங்கள் பரிசீலித்து பின்னர் இதுபற்றிச் சொல்வதாக இருந்தால் ஏற்றுக் கொள்கிறேன். பரிசீலிக்கத் தேவையில்லை, அது அவைக் குறிப்பிலே இடம் பெறும் என்று சொன்னால், நான் அதற்கு எதிர்ப்பாக விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் வரும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வின்சென்ட் அவர்கள் பேசும்போது, உறுப்பினர் **, *** என்று இரண்டு முறை சொன்னார்கள். அது பார்லிமெண்டரி வார்த்தையா? அது அவைக் குறிப்பிலே ஏறுவது சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவற்றை எல்லாம் பரிசீலித்து பிறகு நான் தீர்ப்பளிக்கிறேன். (குறுக்கீடு) பரிசீலிப்பதற்கு எனக்கு உரிமையிருக்கிறது. நான் பரிசீலித்து அறிவிக்கின்ற வரையில், அவை எதுவும் பிரசுரம் ஆகாது.

டாக்டர் கே. சமரசம் : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 246ன் **கீழ் மீது அவை உரிமை மீறல்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகனுக்குச் சொன்ன தீர்ப்புத்தான் உங்களுக்கும். உட்காருங்கள்.

## 4. தகவல் கோரல்.

எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்துள்ள அறிவிக்கை

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே. இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்றைக்கு எரிந்து சாம்பலாகக்கூடிய அளவிற்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் சம்பந்தமாகத்தங்களிடத்திலே நான் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் மிகமிக முக்கியமானது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அது குறித்து நேற்று அதிகாரிகளிடத்திலும், முதல் அமைச்சர் அவர்களிடத்திலும் பேசியிருக்கிறேன். நான் பேசியவரையில் பல விவரங்களைச் சேகரித்திருக்க முடியும். எனவே, அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதனால், அந்தப் பகுதியில் அமைதியான சூழ்நிலை உருவாகும் என்ற காரணத்தினால், அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இராமநாதபுரம் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்ததாகச் சொன்னார்கள். அவர்களே இங்கே பேசுகின்றபோது, அது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்களிடமும், அதிகாரிகளிடமும் தொடர்பு கொண்டதாகச் சொன்னார்கள். காலையிலே வானொலியிலும் இந்தச் செய்தி ஒலிபரப்பப்பட்டது. ஆகவே, அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் வாய்ப்பை அளித்திருக்கிறது; அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறபோது, அதை இன்றேஎடுத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதால், நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையிலே எல்லாப் பிரச்னைகளைப் பற்றியும் பேசியாக வேண்டும். நாளை எடுத்துக் கொள்ளலாம்.

## 5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சைதாப்பேட்டையில் அரசு ஊழியரின் மனைவி கொலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "சென்னை சைதாப்பேட்டையில் அரசு ஊழியர் ஒருவரின் மனைவி 30-3-1981 அன்று பட்டப் பகலில் அடித்துக் கொலை செய்யப்பட்டு, நகைகள் திருடப்பட்டுள்ளதால், அப்பகுதியில் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்று கேட்டு, திருவாளர்கள் ஆர். கருப்பையா, டி. கே. நல்லப்பன், எம். அப்பாத்துரை, ஆர். கிருஷ்ணன், என். வரதராசன், என். பழனிவேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியம் என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன். திரு. ஆர். கருப்பையா.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில், சைதாப்பேட்டையில் அரசு ஊழியருடைய மனைவி, அவர் தன்னுடைய வீட்டிலே இருக்கின்ற நேரத்திலே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். பொதுவாக அதனுடைய விவரங்களுக்குள் போகவேண்டிய அவசியம் அதிகமில்லை என்று கருதுகிறேன். இந்தப் படுகொலையைப்பற்றி அனைவரும் அறிவார்கள். அந்த அரசு ஊழியர் தன்னுடைய அலுவலகம் சென்றிருக்கின்ற நேரத்திலே, சற்றும் எதிர்பாராத நிலையில் அந்தப் படுகொலை நடந்திருக்கிறது. இது இந்த நகரத்திலே நடைபெற்றிருக்கிற முதல் கொலை என்றுகூடச் சொல்ல முடியாது, சென்னை நகரத்திலே தொடர்ச்சியாக இந்த மாதிரி கொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட வரையில், அவர்கள் அலுவலகங்களுக்குச் செல்லக் கூடிய நேரத்தில் இதுபோன்று ஏற்பட்டு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாத சூழ்நிலையில்

நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெறுவது அரசு ஊழியர்கள், மத்தியிலே ஒரு பதட்ட நிலைமை ஏற்படுத்தி இருக்கிறது. பொதுவாக தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் இந்தமாதிரி நிலைமை இருக்கிறது.

சில தினங்களுக்குப் முன்பு திருச்சியிலே பி. எச். இ. எல்.-ல் பணிபுரியக்கூடிய யோகநாதன் என்ற தொழிலாளர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். பெரிய நகரங்களில் அலுவலகங்களுக்கு வீட்டார் செல்லக்கூடிய நேரத்தில் அவர்களுடைய குடும்பங்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகியிருக்கிறது. சரியான பாதுகாப்பு ஏற்பாடுகளை உத்தரவாதத்துடன் செய்யவேண்டியது அவசியம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். இம்மாதிரியான கொலைகள் நடைபெறாமல் தடுக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நகர்ப்புறங்களில் சமூக விரோத சக்திகள் பெருகி வரக்கூடிய ஒரு நிலையில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்னை மாநகரில் புறநகர்ப் பகுதிகளில் இப்படிப்பட்ட சமூக விரோத சக்திகள், கணவன்மார் வீட்டில் இல்லாத நேரத்தில், அலுவலகத்திற்குச் சென்றிருக்கும் போது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதேபோல்தான் சைதாப்பேட்டையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. துபாய் செல்லும் நபர் ஒருவர் பணம் தேவையென்ற நிலையில் இந்தக் கொலையைச் செய்திருப்பதாகத் தெரிகிறது. தொடர்ச்சியாக இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடந்து வருவதால், சரியான போலீஸ் பாதுகாப்பை தகுந்த அடிப்படையில் ஏற்பாடு செய்ய வேண்டியது மிக அவசியம். எந்த ஒரு நபருமே பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே இது சம்பந்தமாக முழுமையாக விவாதிக்கப் பேரவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. வேல்முருகன் என்பவர் நெடுஞ்சாலைத்துறையில் வரைபடம் எழுதுபவராகப் பணிபுரிபவர். இவர் சென்னை சைதாப்பேட்டை மசூதித் தெருவில் 36-ம் எண் வீட்டு மாடியில் தன் மனைவி காந்தா (வயது 35)-வுடனும், 3 மகன்களுடனும் அந்த வீட்டில் சென்ற ஒரு மாத காலமாகக் குடியிருந்து வருகிறார். 30-3-81 அன்று பிற்பகல் உணவிற்காக திரு. வேல்முருகன் தனது இல்லத்திற்குச் சென்ற பொழுது, அங்கு தன்னுடைய பழைய நண்பன் நடராஜ பிள்ளையின் மகன் தர்மராஜ் பாண்டியன் (வயது சுமார் 30) வந்திருப்பதைக் கண்டார். இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பின் திருமதி காந்தா இருவருக்கும் மதிய உணவு அளித்தார். பிறகு திரு. வேல்முருகன் தன்னுடைய அலுவலகத்திற்குச் சென்று விட்டார். தர்மராஜ் பாண்டியன் நடு அறையில் ஓய்வு எடுப்பதாகக் கூறிப் படுத்துக் கொண்டார். சிறிது நேரம் முித்துத்



திருமதி காந்தா, சாப்பிட்டுவிட்டு தன் வேலைகளை முடித்துக் கொண்டு அதே அறையில் வந்து கீழே படுத்துக் கொண்டார். இவர்களைத் தவிர அப்பொழுது வீட்டிலிருந்த ஒரே நபரான திருமதி காந்தாவின் மகன் 11 வயதான அருள்ஜோதியை தர்மராஜ் பாண்டியன் பக்கத்திலிருக்கும் கடைக்குச் சென்று வயிற்று வலி மாத்திரைகள் இரண்டு, வாங்கி வரும்படி அனுப்பி இருக்கிறார். அந்தப் பையன் வெளியே சென்றதும், ஏற்கனவே பேப்பருக்குள் சுருட்டி வைத்திருக்கும் சிறு கடப்பாறை ஒன்றை எடுத்து உறங்கிக் கொண்டிருந்த காந்தாவின் தலையில் ஓங்கி பல முறை அடித்து அவரைக் கொன்றுவிட்டு, அவர் கழுத்திலிருந்த 13 பவுன் கோதுமை தங்க சங்கிலி ஒன்றையும், இரு கம்மல்களையும் கழற்றிச் சென்றுவிட்டதாகத் தெரிகிறது. வீட்டிற்குத் திரும்பிய அருள்ஜோதி தன் தாய் ரத்த வெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்து அவலக் குரல் எழுப்ப அதன் பிறகு தகவல் கிடைத்து போலீசார் அங்கு சென்று புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில் திரு. தர்மராஜ் பாண்டியன், வேல்முருகனின் குடும்பநண்பர் என்பதும், அடிக்கடி வேல்முருகனைப் பார்க்க வந்து போகும் வழக்கம் உண்டு என்றும் தெரிய வந்துள்ளன. இவர் மன்னார்குடியில் வேளாண்மைத் துறையில் 'போரிங் மெக்கானிக்காகப்' பணியாற்றி வந்தார் என்றும் தெரிய வந்துள்ளது

[முற்பகல் 10.10]

இப்போது அவர் தலைமறைவாக உள்ளார். அவரை விரைந்து பிடிப்பதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே இந்தச் சம்பவம் காரணமாக இப்போது ஏதும் பதட்ட நிலைமை இல்லை. விரைவாக குற்றவாளியைப் பிடிப்பதற்கான முயற்சிகளைக் காவல் துறையினர் தீவிரமாக மேற்கொண்டு உள்ளனர். எனவே பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 6. கவன ஈர்ப்புகள்.

### அ. தஞ்சை சோதனைச் சாவடிகளில் பணியாற்றும் ஊழியர்கள் சம்பளம்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டத்தில் சோதனைச் சாவடிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சென்ற 3 மாத காலமாக ஊதியம்

அளிக்கப்படாதது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

தலைவர் அவர்களே, 20—1—1981 முதல் மாநிலம் முழுவதும் நெல் வர்த்தக லெவி அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. லெவி செலுத்தப்பட்ட நெல் மட்டுமே வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறதா என கண்காணிக்க மாநில மாவட்ட எல்லைகளில் மொத்தம் 276 லெவி சோதனைச் சாவடிகள் நியமிக்கப்பட்டன. தேவைக்கேற்ப ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் மூன்று அடிப்படை ஊழியர்களுடன் மூன்று துணை தாசில்தார்கள் அல்லது மூன்று வருவாய் ஆய்வாளர்கள் அமர்த்தப்பட்டனர். அவசரத்தின் காரணமாக மாநிலம் முழுவதும் உள்ள சோதனைச் சாவடிகளுக்குத் தேவையான அலுவலர்களை 20-1-81 முதல் நியமித்துவிட்டு அரசின் ஒப்புதல் கோரப்பட்டது. பணியாளர்கள் நியமனங்களை ஏற்று பணியிடங்களுக்கு 20-1-81 முதல் 30-4-81 வரை அரசு அனுமதி 30-3-1981 அன்று வழங்கப்பட்டது. இந்த செலவினம் புதுப் பணித் திட்டத்தின் கீழ் வருவதால் இச்செலவினத்தை எதிர் பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெற வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள பணியாளர்களுக்குத் தேவையான சம்பளப்பணம் எவ்வளவு என்ற விபரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார். அத்தகவல்கள் உடனடியாகச் சேகரிக்கப்பட்டு உணவுப்பொருள் வழங்கு துறை ஆணையாளர் அலுவலர்களுக்கு விரைவில் சம்பளம் பட்டுவாடா செய்வார். ஆகவே நடைமுறையிலே ஏற்பட்ட காலதாமதந்தானே தவிர வேறல்ல. விரைவிலே அவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. ந. சிவஞானம்: தலைவர் அவர்களே, பட்டினியாகக் கிடக்கும் குடும்பங்களுக்கு உடனடியாக அரசு ஏதாகிலும் உதவி செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வேலையிலே அவர்களை 20ம் தேதி தான் சேர்த்தோம். ஆர்டர் அரசினுடைய அனுமதியில்லாமலே சேர்க்க வேண்டியிருந்தது. அதற்குப் பிறகுதான் அரசினுடைய அனுமதி பெறப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அதற்காக சட்டமன்றத்திலே ஒதுக்கீடு செய்யப்படவில்லை. பிறகுதான் ஒதுக்கீடு செய்தோம். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அந்தக் கணக்குகள் எல்லாம் வந்ததற்குப் பிறகு அதை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு 3 மாதசம்பளம் சேர்ந்து வரும். ஆகவே பட்டினி என்ற பிரச்சினைக்கே இடம் இல்லை. வேலையில்லாமல் இருந்தார்கள். அவர்கள் வேலையிலே





இப்போது சேர்க்கப்பட்டு விட்டார்கள். 3 மாத சம்பளம் கிடைக்காமலிருந்தால் கஷ்டம்தான் என்பதை அரசு உணர்கிறது. விரைவில் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. ந. சிவஞானம்: தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் ஒதுக்கீடு ஏதோ செய்து கொடுப்பதாகக் கூறியிருக்கிறாரே, அது குறித்து அரசுக்குத் தெரியுமா

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. அவர்களுடைய பட்டியல்கள் எல்லாம் வந்தபிறகு உடனடியாக நடவடிக்கை எடுத்து சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

ஆ. இராணிப்பேட்டையில் குடிநீர் பற்றாக்குறை.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, ''இராணிப்பேட்டை ஆற்காட்டிற்குப் பொதுவாக உள்ள குடிநீர் திட்டத்தைத் தனித் தனியாகப் பிரித்து இராணிப்பேட்டையில் குடிநீர்ப் பற்றாக் குறை நிலையை நீக்கும் பொருட்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரவைமுன் விவர அறிக்கை ஒன்றை வக்கிறேன்.

அறிக்கை

வடஆற்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டை, ஆற்காடு ஆகிய நகராட்சிகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம் ஒன்றிற்கு அரசு 1956-ஆம் ஆண்டு அனுமதி அளித்தது. த்திட்டம் 1957-ஆம் ஆண்டு முதல் அமுலிலிருந்து வருகின்றது. இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ஆதாரம் பாலாறு ஆகும். இந்த திட்டத்தின் ழ் உச்ச கட்ட மக்கட் தொகை (1986), இரண்டு நகராட்சிகளுக்கும் முறையே 40,000 எனக் கணக்கிடப்பட்டு, மொத்த குடிநீர்த் தேவை நாளொன்றுக்கு 36.4 இலட்சம் லிட்டர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு மொத்த மதிப்பீடாகிய ரூ. 12.15 இலட்சத்தில் ரூ 6.34 லட்சம் ஆற்காடு நகராட்சியும், ரூ. 5.81 லட்சம் ராணிப்பேட்டை நகராட்சியும் ஏற்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

2. தற்போது ஆற்காடு நகராட்சிக்கு தினசரி 27.55 லட்சம் லிட்டர் குடிநீரும் ராணிப்பேட்டை நகராட்சிக்கு தினசரி 10.9 லட்சம் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது.

3. எனினும் ஆற்காடு நகராட்சியின் மக்கட்தொகை எதிர் பார்த்ததைவிட கூடுதலாகிவிட்ட காரணத்தினால் ஓர் கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் உருவாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதின் காரணமாக அரசு 1974-ஆம் ஆண்டு ரூ. 29.40 லட்சத்திற்கு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை அமுலாக்க

ஆணை பிறப்பித்துள்ளது. இந்த திட்டத்தின் கீழ் ஒரு தனித் தலைமைப் பணி இடம் ஆற்காடு நகராட்சிக்கென்று உருவாக்கப்படும். மற்றும் இந்த திட்டத்தின் கீழ் பகிர்மானக் குழாய்கள் அமைத்தல், நீர நிலைத் தேக்கத்தொட்டிகள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த திட்டத்தின் கீழ் பெரும்பாலான பணிகள் முடிவு பெற்று 77ஆம் ஆண்டு முதல் முன்னோடி குடிநீர்த்திட்டம் அமுலில் உள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்பெற்று ஆற்காடு நகராட்சிக்கு கூடுதலான தண்ணீர் அளிக்கப்படும். எனவே இந்த ஆற்காடு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் முழுமை பெற்றவுடன், இராணிப்பேட்டை நகராட்சிக்கு கூடுதலான குடிநீர்க் கிடைக்கப்படுவதுடன் இந்த நகராட்சியின் உட்பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு கணிசமான அளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

4. இருப்பினும், இராணிப்பேட்டை நகராட்சியை சுற்றி பல பெரிய தொழிற்சாலைகள் அமைந்துள்ள காரணத்தினாலும், மேலும் இந்நகராட்சியின் மக்கட் தொகை கணிசமான அளவு கூடுதலான காரணத்தினாலும், இராணிப்பேட்டை நகராட்சிக்கு மட்டும், தனியான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதின் காரணமாக குடிநீர் வடிகால் வாரியம் 78ஆம் ஆண்டு ஒரு விரிவான ஆய்வுப்பணி ய மேற்கொண்டு, 68 இலட்சம் ரூபாயில் ஒரு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அந்த உத்தேச மதிப்பீடு வாரியத்தின் ஆய்வில் உள்ளது. இதற்கான பராமரிப்புச் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2.75 இலட்சம் ஆகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் தற்போதுள்ள கூட்டுக் குடிநீர்த்திட்டத்தின் தலைமைப் பணியிடத்தில் உள்ள ஊற்று நீர்க் கிணறையும் பயன்படுத்துவதாக திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கொண்டு கூடுதலாக புதிய ஊற்றுக் கிணறு ஒன்றும் 90 மீட்டர் நீளத்திற்கு காலரியும் போட உத்தேசித்துள்ளது. மற்றும் பகிர்மானக் குழாய்கள் அமைத்தல், நீரேற்று குழாய்கள் அமைத்தல், மேல் நிலை தேக்கத்தொட்டிகள் கட்டுதல், ஆகிய பணிகளும் எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் உச்ச கட்ட மக்கட் தொகையாகிய (2011) 90,000-க்கு தினசரி தேவையாகிய 81 இலட்சம் லிட்டர் குடிதண்ணீர் வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. இந்த குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நகராட்சியின் தீர்மானம் பெற்று, அரசு ஆணை பெற்றவுடன் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும். எனவே இந்த திட்டம் முழுமையாக நிறைவேறிய உடன் இராணிப்பேட்டை நகராட்சியின் குடி நீர்த்தட்டுப்பாடு முழுமையான அளவில் நிவர்த்தி செய்யப்படும்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, விவர அறிக்கை விளக்கமாக இல்லை. ஆங்காங்கு சில குறிப்புகளைத் தான் சொல்லியிருக்கிறார்கள். ஆற்காட்டிற்கும், இராணிப்பேட்டைக்கும் பொதுவான குடிநீர்த் திட்டம் இருக்கிறது.



இதனால் ஆற்காட்டிற்கும் சரியான வகையில் குடிதண்ணீர் கிடைப்பதில்லை; இராணிப்பேட்டைக்கும் சரியான வகையில் குடிதண்ணீர் கிடைப்பதில்லை. 53 சதவீதம் ஆற்காட்டிற்கும், மீதி இராணிப்பேட்டைக்கும் கிடைக்கிறது. இந்தமாதிரி நிலைமை இருப்பதால், இராணிப்பேட்டை வட்டாரத்தில் ஒரு ஆள், இரண்டு ஆள் ஆழத்திற்குப் பள்ளம் வெட்டி இரவு முழுவதும் தாய்மார்கள் குடிதண்ணீருக்காகக் காத்துக் கிடக்கின்ற அவல நிலை உருவாகியிருக்கிறது மேலும் காரை பெரியார் நகர் போன்று மேட்டுப் பகுதியில் இருக்கின்ற இடங்களுக்குக் குடிநீர் போவது கிடையாது. அதற்குக் காரணம் கேட்டால் தண்ணீர் குறைவாக இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்களின் குறிப்பிலே ஒரு திட்டம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆற்காட்டுக்குப் புதிதாக ஒரு திட்டத்தை 1974-ஆம் ஆண்டில் ஆரம்பித்து, 1977 ஆம் ஆண்டிலே பைலட் ஸ்கீம் என்று கொடுத்திருக்கிறார்கள். அதைக் கொடுத்துவிட்டால் ஏற்கனவே இருக்கின்ற திட்டங்கள் இராணிப்பேட்டைக்கு வந்து விடும். இப்படிப் பிரித்துக் கொடுப்பதில் உள்ள சிரமம் என்ன? பைலட் ஸ்கீம் என்ற அந்தப் புதிய ஸ்கீமின் பிரகாரம் ஆற்காட்டுக்குப் புதிதாகத் திட்டத்தைக் கொடுத்து, பழைய திட்டத்தை முழுக்க முழுக்க இராணிப்பேட்டைக்குக் கொடுத்தால் இராணிப்பேட்டையில் உள்ள தண்ணீர்ப் பற்றாக்குறையை நீக்க முடியும். அதைச் செய்வதற்கு அரசு ஏன் தயங்குகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, 1974இல் உத்தரவு இட்டு 77இல் உள்ளதாகச் சொன்ன அந்த பைலட் ஸ்கீம் போட்டிருப்பதும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தான். இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இருக்கின்றன. இப்பொழுது உள்ள இரண்டு பிரச்னைகள் என்னவென்றால், இராணிப்பேட்டை நகராட்சியைச் சுற்றிப் பல பெரிய தொழிற்சாலைகள் அமைந்துள்ள காரணம் ஒன்று. மேலும் ஒன்று என்னவென்றால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு உதவியாக வந்தால் நன்றாக இருக்கும்; மேலும் இந்நகராட்சியின் மக்கட் தொகை கணிசமான அளவு கூடுதலான காரணம் என்பது மற்றொன்று. இராணிப்பேட்டை நகராட்சியிலே மட்டும் தனிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 68 இலட்சம் ரூபாயிலே, அதற்கான பராமரிப்புச் செலவுக்கு 2.75 இலட்சம் ரூபாய் ஆகும் என்று தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நகராட்சியின் தீர்மானம் பெற்று, அரசு ஆணை பெற்றவுடன் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அது செயலுக்கு வந்தபின் இராணிப்பேட்டை நகராட்சியின் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு முழுமையாக நீக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, இதிலே ... றும் இருக்கிறது. இப்பொழுது இரண்டே இ... ன்னொன் இலட்சம் ரூபாய் பராமரிப்புச் செலவுக்கென

கழிவுநீர் கலந்திருப்பதாக சொல்கிறார்கள். நான் அரசாங்கத்தைக் கேட்பது, இதையாவது போட்டால் அந்த ஹெட்டிலேயிருந்து நேராக இராணிப்பேட்டைக்கு வருகின்ற அந்தக் குழாய்கள் புதிய குழாய்களாக அமைப்பதன் மூலம் தண்ணீர் ஊறுராக வரும் என்று சொல்கிறார்கள். எனவே, அந்தப் பராமரிப்புச் செலவையாவது உடனடியாகச் செய்து இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறையைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டே முக்கால் இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படவில்லை; பராமரிப்புச் செலவு இரண்டே முக்கால் இலட்சம் ரூபாய் ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் இப்பொழுது நகராட்சியின் பரிசீலனையில் இருக்கிறது. நகராட்சியிடமிருந்து பதில் வந்த பிறகு, அரசு பரிசீலனை செய்த பிறகு திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அப்படி எடுத்துக்கொள்ளப்பட்டால் இராணிப்பேட்டையைப் பொறுத்தவரையில் குடிதண்ணீர்ப் பஞ்சம் என்ற பிரச்னை இருக்காது.

7. அரசினர் சட்டமுன்வடிவு

குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே: 1981 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: I oppose the introduction of thi Bill.

மாண்புமிகு அமைச்சரவர்கள் இதுகுறித்து ஏதாவது கருத்துக்கள் சொல்வதானால் சொல்லட்டும். இல்லையென்றால் நான் இதை அப்போஸ் செய்து பேசி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜ்தான்.

(முற்பகல் 10·20)

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, இந்தக் குறைந்த பட்சக் கூலி நிர்ணய மசோதாவை அறிமுகம் செய்ய அமைச்சர் அனுமதி கேட்டுள்ளார். இந்தச் சட்டத்தினுடைய 5-வது பிரிவும், 7-வது பிரிவும் அரசாங்கம், குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிப்பதற்காக கமிட்டிகள் போடவேண்டுமென்பதை அடிப்படையாக வைத்திருக்கிறது. 9-வது பிரிவின்கீழ் குழுக்கள் இருக்கின்றன. அந்தக் குழுவிலே இருக்கிற உறுப்பினர் பதவிகள் காலியாகிற காரணத்தாலோ, அல்லது அதிலே சில டிஃபக்டுகள்



டெக்னிக்கலாக வருகிற காரணத்தாலோ, அந்தக் குழுவினுடைய அதிகாரம் செல்லுபடியாகாது, செயல் திறனற்றது என்று சொல்லக் கூடாது என்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதில் செக்ஷன் 5-ன்படியும், 7-ன்படியும் 9-ன்படியும், குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிக்க அரசு போடுகிற கமிட்டி வெறும் அட்வைசரி கமிட்டி தான். அதனுடைய பரிந்துரைகள் ஒன்றும் பைண்டிங் அல்ல. அதிலே உள்ள டெக்னிக்கல் டிஃபக்ட் காரணமாக அது செயல்படாது என்பதல்ல முக்கியம். இன்றைக்கு முக்கியமான பிரச்னை, ஏற்கனவே நிர்ணயித்திருக்கிற குறைந்தபட்சக் கூலி அமுல் நடத்தப்படவில்லையென்பது தான். பால் வள நிறுவனத்திலே குறைந்தபட்சக் கூலி அமுல் நடத்தப்படுகிறதா என்றால் இல்லை. எனவே, காலம் கடத்தத்தான் இப்படி குழு போடுவது வழி வகை செய்யும். அதற்காக வந்துள்ள சட்ட முன்வடிவு என்பதால், I oppose the introduction of the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி;

''1981 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. வரவு செலவுத் திட்டம் 1981—82

வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 6 பத்திரப் பதிவு

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 6 6 பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,25,50,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. ந. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவோணத்திலிருக்கும் சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகத்தில் பணி புரியும் அலுவலர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டிக் கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்

(திரு. ந. சிவஞானம்) [1981 ஏப்ரல் 14

"மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3, 25, 50, 000 இல் ரூ 100 குறைக்க வேண்டும்."

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த வருமானமுள்ளவரும் ரூ. 5 ஆயிரத்திற்குக் குறைவான மதிப்புள்ளவற்றிற்குப் பத்திரம் பதிவு கட்டணத்தைக் குறைப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.3,25,50,000 இல் ரூ 100 குறைக்க வேண்டும்"

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, ஆர். எஸ். மங்கலம், இளையாங் குடியில் உள்ள பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் இருப்பதால் புதிய கட்டிடங்கள் கட்டுவதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 6- பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,25,50,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்"

ஆ) கோரிக்கை எண்.10—பால் வழங்கு திட்டங்கள்

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 10— பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,04,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. சு. பாவன்: தலைவர் அவர்களே, ஏழை எளிய குடிசை வாழ் மக்களுக்கு மலிவு விலையில் பால் கிடைக்க வசதி செய்யாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 10— பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1,04,07,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்".

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, அரசுத் துறையில் உள்ள பால்வள நிறுவனங்கள் வினியோகிக்கும் பால் தரமானதா என ஆராயவும், தவறு நேர்ந்திருந்தால் அதைக் கண்டிக்கவும் நடவடிக்கை எடுப்பதும்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



1981 ஏப்ரல் 14] [திரு. உ. சுப்பிரமணியன்]

"மானியக் கோரிக்கை எண் 10— பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1, 04,07,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்"

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோவை மாநகர மக்கள் அனைவருக்கும் தேவையான அளவுக்கு பால் வழங்கும் திட்டமொன்று அமுல் நடத்த துரித நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 10 பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1,04,07,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்"

திரு. எம். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அன்னூர் அவினாசி, யூனியன்களில் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் பால் வழங்கும் சொசைட்டி அமைக்க வேண்டும் என்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.
மானியக் கோரிக்கை எண் 10 பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1,04,07,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை* நான் படித்ததாக குறிப்பேட்டில் ஏற்றிக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொன்னதற்குப் பின்னால், அதற்கான பதிலை, நான் இறுதியில் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் பத்திரப் பதிவு, மற்றும் பால் வழங்கு திட்டங்கள் இரண்டும் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இரண்டுக்கும் சேர்த்து 1½ மணி நேரம் ஒதுக்கப்படுகிறது. முதலிலே, விவாதத்தை திரு. பாபு ஜனார்த்தனம் அவர்கள் தொடங்குவார்கள்.

திரு பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவிலே 6 ஆம் எண் மானியக் கோரிக்கையில் ரூ 3, 25, 50,000 ரூபாயும், பால் வழங்குத் துறைக்காக ரூ. 1, 04, 07, 000 ரூபாயும் மானியம் கேட்டு வந்துள்ள மானியக் கோரிக்கையின் மீது என்னை பேச அழைத்தமைக்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*[128, 155 ம் பக்கங்களில் இணைப்புகள் I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளன]

பத்திரப் பதிவுக்காக சென்ற முறை ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தார்கள். ஆங்காங்கே பத்திரப் பதிவு அலுவலகத்திலே இருக்கின்ற பத்திரம் எழுதுகின்றவர்கள் 50 ஆயிரம் பேர்கள் இவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்ற திட்டத்தின்கீழ், இன்றைக்கு அவர்கள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பயிற்சி இல்லாமல் தற்போது பத்திரங்கள் எழுதிக் கொண்டுள்ளவர்கள், வேறு பயிற்சி பெற்றவர்களை கொண்டு வந்து அந்த அலுவலகங்களிலே நியமிப்பதால் இந்த பயிற்சிப் பெறாமல் மாமூலாக எழுதிக் கொண்டு இருப்பவர்கள் பாதிக்கப்படுவார்கள். அவர்களுடன் அவர்களுடைய குடும்பங்களைச் சேர்ந்த லட்சக் கணக்கனவர் களும் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் சென்ற முறையே எடுத்துக் கூறினேன். எனவே இந்த சட்ட முன்வடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அரசு அவசரக் கோலமாக கிராம மணியக்காரர் களையும், கணக்கப்பிள்ளைகளையும் எடுத்து விட்டு தற்போது அந்தப் பணிகள் சரிவர நடக்காததால் ஏற்பட்டுள்ள பாதிப்பைப் போல இதுவும் ஆகி விடக் கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் பத்திரம் எழுதிக் கொண்டுள்ள 50,000 பேர்கள் அவர்களுக்கு அந்த வேலை போய் விட்டால் மிகவும் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்ற காரணத்தால் அமைச்சர் அவர்கள் அந்தப் பத்திரம் எழுதுகின்றவர்கள் பாதிக்கப்படாத அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனறு கூறிக்கொள்கிறேன். ஆகவே இந்தப் பத்திரம் எழுதுகின்றவர்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும் என்ற சட்ட முன்வடிவு இன்று நிறைவேற்ற இருந்தாலும் அதை மறு பரிசீலனைச் செய்ய வேண்டும் எனறு கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் பத்திரப் பதிவு அலுவலகங்களில் பயிற்சி பெற்றவர்கள் எழுத வேண்டும் என்கின்ற போது அங்கே உள்ள அனுபவம் வாய்ந்தவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் அவர்கள் மீது அனுதாபம் கொண்டு இந்த சட்ட முன்வடிவை அமைச்சர் அவர்கள் தக்க முறையில் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே பத்திரப் பதிவு அலுவலகங்கள் தான் கணிசமான வருவாய் தரக் கூடிய அலுவலகங்களாகும். அப்படிப்பட்ட அலுவலகங்களுக்கு சரியான முறையில் கட்டிடங்கள் இல்லை. இருக்கின்ற கட்டிடங்களும் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை. அவைகள் பராமரிக்கப் பட வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். அதே போன்று பல கட்டிடங்கள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன அங்கே போதுமான இட வசதி இல்லாமல் அவர்கள் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவைகளை எல்லாம் அனுசரித்து அரசுக்கு மிகுந்த வருவாய் தரக் கூடிய அலுவலகங்களுக்கு தகுந்த கட்டிடங்கள் கட்டித் தர வேண்டும் என்றுத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அது மட்டுமல்ல, பத்திரங்கள் விற்கின்றவர்கள் நீண்ட நெடுங்காலமாக பல மாநாடுகளை நடத்தி அவர்கள் விற்கின்ற பத்திரங்களுக்கு கொடுக்கப்படும் கமிஷன் போதவில்லை என்றும், அந்தத் தொழிலை செய்கின்றவர்கள் பெருவாரியாக தலைப் போடுவதற்கு அச்சப்படுகிறார்கள் என்றும் தெரிகிறது. இதன் காரணமாக அந்தக் கமிஷனை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்றுகேட்டு அவர்கள் பல மாநாடுகளை நடத்தி இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பால் பண்ணைத் துறை கொள்கை விளக்கத்திலே கிராமப் பெண்கள் தங்கள் குடும்ப வருமானத்தைப் பெருக்கும் பொருட்டு கால்நடைகளை வைத்து உழைக்கின்றனர். இந்த அடிப்படை யில் பார்த்தால் பால்வளர்ச்சித் திட்டத்திற்கு நாம் சரி வரச் செய்யவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டிலே அடிமட்டத்திலே உள்ள வாய் இல்லாதப் பூச்சிகள் என்று சொல்லக் கூடிய அந்த ஏழைக் குடும்பங்கள் பல இருக்கின்றன. அவர்கள் இன்றைய தினம் போதுமான அளவுக்கு வசதியாக இந்தப் பால் பண்ணைத் தொழிலில் போதுமான பலன் அடையவில்லை. இந்த அரசு இதில் நல்ல கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

இங்கே பால் பண்ணை வளர்ச்சித் துறை பற்றிக் கொடுக்கப் பட்டுள்ள கொள்கை விளக்க குறிப்பில் இது வரையில் 3035 ஆரம்ப பால் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கமானச் சங்கங்கள், ‘ஆனந்த்’ திருத்த முறை சங்கங்கள், செயல்படாத நிலையிலுள்ள சங்கங்கள், கலைக்கப் பட உள்ள சங்கங்களின் எண்ணிக்கை என்று கொடுக்கப் பட்டுள்ள பட்டியலைப் பார்க்கிறபோது ஆனந்த் பாணியில் உள்ள சங்கங்கள் 3085 என்றும், வழக்கமான கூட்டுறவுச் சங்கங்கள் என்கிற வகையில் 742 என்றும் கொடுக்கப்பட்டுள்ளது. செயல் படாத நிலையில் உள்ள சங்கங்கள் 1577 என்றும், கலைக்கப்பட உள்ள சங்கங்களின் எண்ணிக்கை 1,039 என்றும்—ஆக மொத்தம் நல்ல லைமையில் இல்லாத சங்கங்களின் எண்ணிக்கை 2616 என்கிற வகையில் இருக்கிறது. ஆக, இவற்றை குறைத்து விட்டுப் பார்த்தால் நல்ல நிலைமையில் இயங்கக் கூடிய சங்கங்கள் 1211 என்கிற வகையில் தான் இருக்கிறது. அரசு இதை நல்ல முறையில் கவனிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

பால் சங்கங்களைப் பொறுத்த வரையில் பர்சேசிங் விலையை உயர்த்த வேண்டும். இதை பல முறை அரசுக்கு எடுத்துக் கூறியிருக்கிறோம். மிக கடுமையான சூழ்நிலையில் வாழ்கிற மக்களுக்கு ஏழை எளிய மக்களுக்கு அவர்கள் சேகரிக்கும்

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1981 ஏப்ரல் 14

பாலுக்குச் சரியான விற்பனை விலை கிடைக்கின்ற நிலைமை
இல்லை. மிகக் குறைந்த விலையில்தான் அந்தப் பாலை
வாங்கி, நகர்ப்புறத்தில் கொண்டு வந்து அதிக விலைக்கு
விற்கிறார்கள். இப்படிச் செய்தும் ஏதேனும் லாபம் வருகிறதா
என்று பார்த்தால், தமிழ்நாடு பால்வள நிறுவனத்தைப்
பொறுத்த வரையில் சென்ற ஆண்டு 2½ கோடி நஷ்டம் என்றும்,
வரும் ஆண்டில் 2 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் வரும்
என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இப்படி நிலைமை
இருந்தும். கிராம மக்களிடையே வாங்கும் பாலுக்கு விலையை
உயர்த்திக் கொடுக்கவில்லை என்பது வருந்தத் தக்கதாக
இருக்கிறது. அதே நேரத்தில் பல கோடிக் கணக்கான ரூபாய்
அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டு சீர் கெட்ட நிலையில் அந்த நிறுவனம்
இயங்கி வருகிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்கள்
ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள், நீண்ட காலமாக கோரிக்கை
களை வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.
அந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருக்கிற தொழிலாளர்
களை அழைத்துப் பேசி, அவர்களுக்கு மறுபடியும் வேலைக்கு வருவ
தற்கான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தார்களா என்றால்
இல்லை. நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கூறுவது
போல் கருங்காலிகளை வைத்து வேலை வாங்கும் நிலைமை
இருக்கிறது என்பதை வேதனையோடு இங்கே எடுத்துச்
சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். வேலை நிறுத்தத்தில்
ஈடுபட்டு இருப்பவர்களை அழைத்துப் பேசி, அவர்களின் கோரிக்கை
என்ன என்று கேட்டு, அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க
அரசு முன்வருவதற்கு பதிலாக இப்படி வேறு நபரை வைத்து
வேலை வாங்குவது தர்ம நியாயம் இல்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் பல
மாவட்டங்களில் ஒன்றியங்கள் ஏற்படுத்தப்படவில்லை. சில
மாவட்டங்களில் ஆனந்த் பாணியில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
மாவட்டங்களில் ஏற்படுத்தப்படவில்லை. குறிப்பாக
பல மாவட்டங்களில் ஏற்படுத்தப்படவில்லை. அந்த
வடாற்காடு மாவட்டத்தில் ஏற்படுத்தப்படவில்லை. அந்த
மாவட்டத்தில் ஆனந்த் பாணி முறையில் சங்கங்களை நடை
முறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
அப்படிச் செய்தால் மக்கள் நல்ல பலன் அடைவார்கள்.

அங்கேயிருக்கும் நிபுணர்களையும் அழைத்து வந்து இங்கே
உள்ள நடைமுறைகளைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க
வேண்டும். அந்த ஆனந்த், சொசைடியிலிருந்து ஒரு பெரிய
நிபுணர்—மாதவன் நாயர் என்று நினைக்கிறேன்—அவர் ஈரோட்டில்
இருக்கிற பண்ணையிலிருந்து நல்ல முறையில் காரியங்களைச்
செய்து வந்தார். 2,000 லிட்டர் அளவிற்கு இருந்ததை 20,000



1981 ஏப்ரல் 14] [திரு. பாபு ஜனார்த்தனன்]

அளவிற்கு உயர்த்திய நிபுணர் அவர். அவரை அந்த அமுல்
திரும்ப அழைத்துக் கொண்டு விட்டனர். அதன் காரணமாக
இன்றைக்கு அந்த ஈரோட்டு ஒன்றியம் வளர்ச்சி அடையாத
நிலையில் இருக்கிறது.

அதைப்போல பல இடங்களில் இப்படி இருக்கிறது.
இன்னும் இது நல்லமுறையில் பயன்படுத்தப்படவில்லை என்று
இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒன்றியங்கள்
இருக்கின்ற இடங்களிலே கூட்டுறவுச் சங்கங்களும் இருக்கின்றன.
அந்த கூட்டுறவுச் சங்கங்களை இந்த ஒன்றியத்தில் சேர்க்கும்
பிரச்சனையை ஜாக்கிரதையாகப் பரிசீலிக்க வேண்டும். எடுத்
தேன், கவிழ்த்தேன் என்ற அளவில் கூட்டுறவுச் சங்கங்களைக்
கலைத்து ஒன்றியங்கள் ஆக்கக்கூடாது. கூட்டுறவுச் சங்கங்கள்
நல்லமுறையிலே இயங்க வேண்டும். அதற்கு இடையூறு இருக்கக்
கூடாது. அந்த கூட்டுறவுச் சங்கங்கள் தாமாக முன்வந்து
ஒன்றியத்தில் இணைய விரும்பினால், அப்படிப்பட்ட இடங்களில்
தான் சங்கங்களை ஒன்றியத்தில் சேர்க்க வேண்டும்.

மேலும் இப்போது இருப்பதைவிட கூடுதலாக பல இடங்
களில் 'சில்லிங் சென்டர்ஸ்' ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படி
ஏற்படுத்தினால்தான் கிராமப் புறங்களில் இருந்து பாலை
சேகரித்து, கெடாமல் பாதுகாத்து நல்லமுறையில் கொண்டுவர
முடியும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல திருவற்றியூரத்தில் ஒரு 'சில்லிங் சென்டர்'
இருந்தது. 2,000 லிட்டர் வரையில் கொள்ளளவு கொண்டது.
ஒரு வருடமாக நல்ல முறையில் செயல்பட்டு வந்தது. என்ன
காரணத்தாலோ அதை திடீரென்று எடுத்துவிட்டார்கள்.
அதனால் அந்த வட்டாரத்திலுள்ள சொசைட்டிகள்
'டார்மென்ட்டாக' உள்ளன. வேலை செய்யவில்லை. அதனால்
பல கிராமங்களில் பால் கொள்முதல் செய்யப்படாமல், அந்த
சங்கங்கள் எல்லாம் மூடப்படக்கூடிய நிலையில் இருக்கின்றன.
ஆகவே, அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட பிரச்சனைகளில்
நல்ல முறையில் அக்கறை செலுத்தி நடவடிக்கை எடுக்க
வேண்டும். இல்லாவிட்டால் அவை உருப்படாமல் போய்விடும்
என்று தெரிவித்து, முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எம். சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே. பத்திரப் பதிவு, மற்றும் பால் வழங்கு
திட்டங்கள் குறித்த மானியக் கோரிக்கைகளில் அரசினுடைய
கொள்கையை ஒட்டி, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன்.

பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு
உறுப்பினர் பாபு ஜனார்த்தனம் அவர்கள் பேசும்போது பத்திரம்
எழுதுபவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற தகுதி, குவாலிஃ
பிகேஷன் என்ற அடிப்படையில் அவர்களுடைய உரிமையை

[திரு. எம். சின்னராஜ்] [1981 ஏப்ரல் 14

குறைத்துவிட்டதாக, பறித்துவிட்டதாக குறைபட்டுக் கொண்
டார்கள். உண்மையிலேயே பத்திரப் பதிவுதான் மக்களுடைய
சொத்துக்களுக்கு உரிமை கொடுப்பதாக இருக்கிறது. அந்த
உரிமையை வழங்கும் பத்திரத்தை எழுதுபவர்கள் ஓரளவு தகுதி
பெற்றிருந்தால்தான், ஓரளவு பயிற்சி பெற்றிருந்தால்தான் நல்ல
முறையில் எழுத முடியும். இல்லை என்றால் எவ்வளவு பிரச்சனை
கள் எழும் என்பதை வழக்கு மன்றங்களிலே அனுபவம் பெற்ற
வர்கள் நன்றாக அறிவார்கள். They are creators of some
problems of Litigation பல்வேறு வழக்குகளுக்கு அவர்கள்
எழுதித்தந்த டாகுமென்டுகள்தான் காரணமாக இருக்கின்றன.
அதை எல்லாம் உணர்ந்துதான் இந்த அரசு பத்திரம் எழுது
பவர்கள் ஓரளவு தகுதி பெற்றிருக்க வேண்டுமென்ற நல்ல
எண்ணத்தோடு ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்
கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், பத்திரப் பதிவுத் துறை நல்லமுறையில்
இயங்குவதற்காக சட்ட அலுவலர்களை பத்திரப் பதிவுத்
துறையிலே நியமிக்க அரசு முடிவு செய்திருக்கிறது. அப்படி
நியமிக்க படுகின்ற சட்ட அலுவலர்கள் கண்டிப்பாக சட்டம்
படித்து, வழக்கறிஞர் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டு
மென்று நான் அரசை கேட்டுக் கொள்கிறேன். காரணம் சொத்து
உரிமை பற்றி 4 ஆண்டு, 5 ஆண்டு காலம் வழக்கு மன்றத்தில்
வழக்காடி பயிற்சி பெற்றிருந்தால்தான், இதிலே இருக்கின்ற
குறைபாடு தெரியும்; நல்லமுறையில் டாக்குமெண்டுகள் அமை
வதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே பத்திரப் பதிவுத் துறையிலே
நியமிக்கப்படுகின்ற சட்ட அலுவலர்கள் குறைந்த பட்சம் 4,
அல்லது 5 ஆண்டுகள் வழக்கு மன்றத்தில் வழக்கறிஞராக பணி
யாற்றியவர்களாக இருக்கும்படி பாத்துக்கொள்ள வேண்டுமென்று
அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பத்திரப் பதிவைப் பொறுத்தவரையில்
பத்திரத் தாள்கள் வழக்கு மன்றத்திற்கு என்று விற்கப்படுகின்றன.
வழக்கு மன்றத்தில் நாம் வழக்கு போடும்போது சொத்தின்
மதிப்பு 3 இலட்சம், 5 இலட்சம் இருக்குமானால் அதற்குரிய
முத்திரைத் தாள்களை வாங்கிக் கொள்கிறோம். ஆனால் வழக்கு
மன்றத்தில் போடும் 'ப்ளெயின்ட்ஸ்'ஸுக்கு முத்திரைத் தாள்
தேவையில்லை. ஏனென்றால் நாம் ப்ளெயின்ட்ஸ்ஸை இணைப்
பாகத்தான் பத்திரத் தாள்களுடன் இணைக்கிறோம். ஆகவே
சாதாரணமாக கோர்ட் பீஸ் கட்டணத்திற்கு உரிய ரசீது பெற்று
அந்த ப்ளெயின்ட்ஸ் தாக்கல் செய்ய முடியும்.

[முற்பகல் 10·40]

முத்திரைத் தாள்கள் சில நேரத்தில் அதிகத் தொகை
கொடுத்து வாங்கும்போது அது ஒரு சுமையாக சுப்ரீம் கோர்ட்
வரை சொல்கிறது. ஆகவே அதைத் தவிர்த்துவிட முடியும்.
அதற்காக ட்ரெஷரியிலேயோ அல்லது சப் ட்ரெஷரியிலேயோ



1981 ஏப்ரல் 14] [திரு. எம். சின்னராஜ்]

பணியாற்றுகின்ற ஒரு அலுவலரை கோர்ட் போன்ற இடங்களில்
நியமித்து நேரடியாகவே அவரிடம் பணம் செலுத்தி அதற்கான
அத்தாட்சியைப் பெற்று அதை ப்ளெயின்டுடன் இணைத்து வழக்கு
மன்றங்களுக்குக் கொண்டு செல்ல முடியும். இதன் காரணமாக
பத்திரத் தாள்கள் பற்றிய குறைபாடுகளை நீக்க முடியும். சில
நேரங்களில் அது கிடைப்பதில்லை என்ற குறைபாட்டையும் கூட
நீக்க முடியும். ஆகவே பத்திரப் பதிவுத் துறையில் அதாவது
பத்திரப்பதிவு அலுவலகங்களில் இதை நடைமுறைபடுத்தப்
படவில்லை என்றாலும்கூட வழக்கு மன்றங்களில் அந்தப்
பத்திரத் தாள்களை வாங்குகிற அந்த முறையை மாற்றுவதற்கு
நமது அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, இன்று 15 புதிய சார் பதிவாளர்களை நியமிப்பது
பற்றி இந்த அரசின் கொள்கை விளக்கக் குறிப்பில் காணப்
படுகிறது. அதை மனமாற நான் பாராட்டுகிறேன். வரவேற்
கிறேன். இன்று மிகவும் அவசியமான ஒன்றாகும். கோவை நகரம்
வளர்ந்து வருகின்றது. கோவை நகரத்தில் இருக்கின்ற மூன்று
சார் பதிவாளர் அலுவலகங்களும் எப்போதும் நிரம்பி வழிகின்ற
அளவுக்கு மக்கள் கூட்டம் இருந்து கொண்டு இருக்கின்றது.
ஆகவே அதைத் தவிர்க்கின்ற முறையில் அங்கே அருகில் உள்ள
தொண்டாமுத்தூரில் ஒரு சார் பதிவாளர் அலுவலகத்தை
ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம். ஏற்கெனவே அதற்கான
பரிசீலனை இருந்து வருகின்றது என்பதை அறிகிறேன். ஆகவே
அவசியம் அங்கே ஒரு சார்பதிவாளர் அலுவலகத்தை ஏற்படுத்தித்
தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது வெறும்
பத்திரப் பதிவை மட்டும் மேற்கொள்ளாமல் இன்று சமுதாயத்
தில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களை வரைமுறைப்படுத்துவது,
சமுதாயத்தில் இருக்கின்ற பலவித கூட்டுறவுச் சங்க அமைப்புக்
களை நெறிப்படுத்துவது போன்ற பொறுப்புக்களையும் ஏற்றுக்
கொண்டிருக்கின்றது. அதே நேரத்தில் இதற்கான சட்டங்களின்
மீது மக்கள் மத்தியிலே நம்பிக்கையை ஏற்படுத்தித் தருகின்ற
பொறுப்பையும் பத்திரப் பதிவுத் துறை ஏற்றுக்கொண்டிருக்
கின்றது. இது அரசுக்கு நிறைய வருமானத்தை ஈட்டித்
தருகின்ற துறையாக இருந்து வருகின்றது. ஆகவே அதில்
பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் இன்னும்
கூடுதல் வசதிகளை செய்து கொடுப்பது நமது கடமையாகக்
கருத வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த
அடிப்படையில் இந்தத் திட்டத்தில் பல சௌகரியங்களைச்
செய்து கொடுப்பதற்குரியகுறிப்புக்கள் இருப்பதை நான் வரவேற்
கிறேன்.

அடுத்து பால் வளத்துறையில் ஆனந்த் பேட்டர்ன் என்று
சொல்லப்படுகின்ற முறை குஜராத்தில் வெற்றிகரமாக நடந்து
வருகின்றது. அந்தமுறையினை கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்
சங்கங்களைப் பொறுத்த அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

[திரு. எம். சின்னராஜ்] [1981 ஏப்ரல் 14

குஜராத்தில் கிராமப் புறத்தின் பொருளாதாரச் சுதந்திரத்தை ஏற்படுத்துவதற்கு இது உண்மையிலேயே ஒரு சிறந்த திட்டமாக அமைந்து சிறப்பான வெற்றியைத் தந்திருக்கின்றது என்பதை இந்தத் துறையிலே இருக்கின்ற அத்தனைபேரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனந்த் முறையின்படி கூட்டுறவு அமைப்புக்களில் த்ரி டையர் சிஸ்டம் என்ற அமைப்பில் கூட்டுறவு அடிப்படைச் சங்கங்கள், கூட்டுறவு ஒன்றியங்கள், கூட்டுறவு இணையங்கள், ஃபெடரேஷன் என்ற முறையில் அமைந்திருக்கின்றன. அதே முறையைப் பின்பற்றி நமது தமிழகத்திலும் தமிழ்நாடு கூட்டுறவு ஃபெடரேஷன், பால் கூட்டுறவு ஒன்றியங்களின் இணையத்தைத் துவக்கி இருப்பதை தமிழ்நாட்டின் பால் துறையின் அனைத்து சங்கங்களின் உறுப்பினர்களும், உழவர்களும் வரவேற்பார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அந்த ஆனந்த் பாணியைப் பின்பற்றுகின்ற நேரத்திலே நாம் இங்கே அந்த அளவுக்கு வெற்றியை இந்தத் துறையிலே அடைந்து இருக்கிறோமா என்பதையும் நாம் இன்று எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்று நமக்கு கொடுக்கப் பட்டிருக்கின்ற பட்டியலிலே ஒரு பக்கம் புதிய சங்கங்கள் அமைக்கப்பட்டு இருந்தாலும்கூட, மற்றொரு பக்கம் இருக்கின்ற சங்கங்கள் நடைமுறையில் இருக்கின்ற சங்கங்கள் டார்மென்டாக செயலிழந்து இருக்கின்ற பட்டியலும் நீண்டுகொண்டே வந்து கொண்டிருக்கின்றது என்பதை நாம் உற்று நோக்க கடமைப் பட்டிருக்கிறோம். அதற்கான காரணங்களை நோக்கும்போது ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அதை வழி நடத்துகின்ற அதிகாரிகள் அங்கே டெபுடேஷனில் இருக்கிறார்கள். பால்வள ஒன்றியமாகட்டும், அல்லது ஃபெடரேஷன் என்று சொல்லப்படுகின்ற அமைப்பாகட்டும், இவைகளிலே பணிபுரிகின்றவர்கள் எல்லாம் கீழ் மட்டத்திலே, கூட்டுறவுத் துறையிலே இருந்து கடன் வாங்கப்பட்டு டெபுடேஷனிலே பணிபுரிகிறார்கள். ஆனால் இது ஒரு மக்கள் இயக்கம். மக்கள் நம்பிக்கையைப் பெற்றாலொழிய இந்த பால் கூட்டுறவைப் பொறுத்தவரையில் நாம் வெற்றிபெற முடியாது என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்தவர்களும், அந்தத் துறையிலே இருப்பவர்களும் சொல்லுகிறார்கள் ஆகவே இத்திட்டம் முழு அளவுக்கு வெற்றிபெற வேண்டும் என்றால் டெபுடேஷனில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்க அலுவலர்களை கூட்டுறவு ஒன்றியத்தினுடைய அல்லது இணையத்தினுடைய நிரந்தர ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்பதை நமது அரசு திட்டமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஏற்றுக்கொண்டால் தனி கூட்டுறவு பயிற்சி என்ற வகையில் பயிற்சி கொடுக்க வேண்டிய அவசியம்கூட இல்லை. கூட்டுறவுச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், அக்கவுன்ட்ஸை பார்ப்பதற்கும் அதாவது ஆடிட் பண்ணுவதற்கும்தான் இந்தத் துறையைப் பொறுத்தவரையில் நாம் அவர்களை பயன்படுத்துகிறோம். ஆகவே அந்த ஊழியர்களுக்கு குறைந்தபட்சம் 3 மாத பயிற்சி



1981 ஏப்ரல் 14] [திரு. எம். சின்னராஜ்]

கொடுத்து அவர்களை முழு நேர கூட்டுறவு அதிகாரிகளாக நாம் மாற்றிவிடமுடியும். அதற்கென்று தனியாக அவர்கள் எந்த ஒரு படிப்பையும் பெற்றுவருவதில்லை. Any graduate can be trained as an Officer of the Co-operative Movement.

ஆகையினால், மற்ற எல்லாக் கூட்டுறவுத் துறைகளிலும் திட்டங்களை செம்மையாக செயல்படுத்துவதற்காக செய்வது போன்று, பால்வள துறையிலும் அனுபவத்தைப் பெற்றவர்களை முழு நேர ஊழியர்களாக நியமித்துக் கொண்டால் இத்துறையில் இருக்கும் ஒரு சில குறைபாடுகளையும் நீக்க முடியும் என்பதை வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி நியமிக்கும்போது, அவர்கள் ஏதோ தணிக்கை வேலை செய்வதற்காகவும், கிராம கூட்டுறவு பால்வளச் சங்கத் தலைவர்களை அச்சுறுத்துவதுதான் அவர்கள் வேலை என்பது போலவும் இல்லாமல் கிராமங்களில் அந்தப் பகுதிகளில் பால் வளத்தை அதிகப்படுத்துவதற்கும், அவ்வப்போது அங்கு எழும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், சங்கத் தலைவர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு, அவர்களை முழு நேர ஊழியர்களாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், நாம் இப்போது ஏற்றுக்கொண்டு தொடங்க இருக்கும் பால்பெருக்குத் திட்டம் II–இன் கீழ் பால் பண்ணை கழகத்தின் உதவியுடனும், மத்திய அரசின் இதர நிறுவனங்களின் உதவியுடனும் தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்களை முழுக்க முழுக்க ஆனந்த் பாணியிலேயே நடத்த வேண்டும்-அதற்கான பணிகளை மேல்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி மேற்கொண்டு, அந்தப் பணிகளை நிறைவேற்றும் போது, கோவை மாவட்டத்திற்கென சில பிரத்தியேகத் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் ஆனந்த் பாணி என்ற முறை வருவதற்கு முன்னாலேயே, கோவை மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அப்படி ஒரு பெயரை வைத்துக் கொள்ளாமலேயே ஆனந்த் பாணியில் உள்ள அனைத்து முறைகளையும் கொண்ட ஒரு அமைப்பை ஆரம்பித்து நடத்தி வந்துள்ளது. அவ்வளவு பெருமை வாய்ந்த கூட்டுறவு அமைப்பாளர்கள் இருக்கும் கோவை மாவட்டத்திற்கு ஆபரேஷன் ஃபிளட் II திட்டத்தின் கீழ் கொண்டுவரும் சிறப்புத் திட்டங்களை அமைச்சர் அவர்கள் நிச்சயம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கொண்டுவருவார்கள் என்றும் நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அந்தப் பகுதிகளில் அணைகட்டி என்ற மலைப்பகுதியில் நிறைய மேய்ச்சல் நிலங்கள் இருக்கின்றன. ஆகவே அந்த இடத்தில் ஒரு டைரி ஃபார்ம் ஒன்றை உருவாக்குவதற்கும், (Bull Mother Farm) விஞ்ஞான முறையில் கறவை மாடுகளை

[திரு. எம். சின்னராஜ்] [1981 ஏப்ரல் 14

உற்பத்தி செய்வதற்கும், ஏற்கெனவே திட்டங்கள் இருக்கிறது அதற்கென அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்து சில திட்டங்களை அமைத்துக் கொண்டிருக்கிறார் என்றும் தகவல்கள் தெரிகின்றன. அப்படிப்பட்ட திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் அந்தப் பகுதி நிச்சயமாக உயர்வடையும். அதுவும் மலை ஜாதியினர் அதிகமாக வசிக்கக் கூடிய அந்தப் பகுதி நல்ல முறையில் வளம் பெறச் செய்ய வாய்ப்பிருக்கிறது. ஆகவே அத் திட்டங்களை விரைவில் எடுத்துச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அருகாமையில் இருக்கிற பெரியார் மாவட்டத்தில் பால்பவுடர் தொழிற்சாலை முழு அளவு நல்ல முறையில் இயங்குவதற்கு கோவை மாவட்டத்தில் ஏற்படுத்தப் படும் திட்டங்கள் உதவிகரமாக இருக்கும். பெரியார் மாவட்டத்தில் இருக்கிற பால் பண்ணையும், கோவை மாவட்டத்தில் இருக்கிற பால் சங்கங்களும் சேர்ந்துதான் பால் பவுடர் தொழிற்சாலைக்குத் தேவையான பால் வழங்க முடியும். ஆகவே கோவை மாவட்டத்திற்கென சிறப்பான நல்ல திட்டங்களை பால்பெருக்கு திட்டம் II அதாவது ஆபரேஷன் ஃபிளட் II-ன் கீழ் கொண்டு வர வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு கோரிக்கையின் கீழும், பால்வளத் திட்டத்தின் கீழும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளைக் கூற விரும்பு கிறேன்.

பத்திரப் பதிவுகளை செய்கிற நேரத்தில், நிலங்களை வாங்குபவர்களுக்கு, அந்தப் பத்திரங்களை இரண்டு படிவங்கள் எடுத்துத்தான், பதிவு செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் பதிவு செய்திருப்பவர்கள் சில சங்கடங்களுக்கு உள்ளாகிறார்கள். ஆகவே அதை முறைப்படுத்த வேண்டும் என்று புது முறை கொண்டு வந்திருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிற அதே நேரத்தில், பத்திரங்களை எழுதுவதற்காக அங்கே இருக்கும் தொழிலாளர்களுக்காக எத்தகைய விதிகளும் இயற்றப்படவில்லை. அவர்களுடைய தகுதிகளை வரையறுக்கவும், உரிமங்கள் வழங்குவதற்காகவும் வகை செய்யப்பட்டுள்ளதாக, கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பெற்றுள்ளது. அப்படி செய்யும்போது அரிசன மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற 18 சதவீதம் ஒதுக்கப்பட்டு அவர்களுக்கு அந்த இடங்கள் வழங்கப்பட வேண்டும்.



1981 ஏப்ரல் 14] [திரு. சி. பழனிமுத்து]

அது மட்டும் அல்லாமல், பத்திரப் பதிவுத் துறையில் அதிகாரிகளையும் பணியாளர்களையும் புதிதாக நியமிக்கப்பெற இருப்பது பற்றியும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்களிலும் இந்த அலுவலகங்களில், பதிவு அலுவலாளரும் சார்பு அலுவலாளரும் இல்லாத காரணத்தால் வேலைகள் தாமதப்படுவதாகக் கூறுகிறார்கள். ஆகவே காலியாக இருக்கும் இடங்களில் உடனடியாக பணியாளர்களை நியமிக்க வேண்டும். அப்போதுதான் அந்த அலுவலகங்களில் தாமதம் இல்லாமல் பணிகள் நடைபெறும் என்பதை கூறிக்கொண்டு, அவ்வாறு நியமனம் செய்யும் போது அரிசன மக்களுக்கு ஒதுக்கப்பற்ற 18 சதவீத ஒதுக்கீட்டை நிறைவு செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, தற்போது கிராமங்களில் வேலை இழந்து நிற்கின்ற கர்ணம், முன்சீப் போன்றவர்களுக்கு இந்தப் பத்திரம் எழுதும் வேலைகளில் ஈடுபடுவதற்கு வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.50]

பத்திரங்களைப் பதிவு செய்வதற்கு என்று கைட்லைன்ஸ் இருந்தும், பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டு கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு ஆண்டுகள் பல ஆகியும் கூட அந்தப் பத்திரங்கள் நிலச் சொந்தக்காரர்களுக்கு வந்து சேரவில்லை. அதில் வருகிற வருமானம் அந்தந்த பேரூராட்சி களுக்கோ அல்லது ஊராட்சிகளுக்கோ வந்து சேருவதில்லை. இதுபோன்ற பல சங்கடங்கள் இருப்பதால் அந்த கைட்லைன்ஸை தளர்த்தி பத்திரங்கள் நிலச் சொந்தக்காரர்களுக்கு தாமதம் இன்றி கிடைக்க வழிவகை செய்யவேண்டும். அப்போதுதான் பணம் அந்தந்த ஊராட்சிகளுக்குப் போய்ச் சேர வழி ஏற்படும். நிலத்தின் மதிப்பீடு அன்றைக்கு உள்ளதால் பரிவர்த்தனை பெற்றுக்கொண்டு குறைவாகப் பதிவு செய்யக்கூடிய நிலை இருக்கிறது.

அடுத்தபடியாக, பால்வளம். பால்வளத்தை மேம்படுத்து வதற்காக கிராமப்புறங்களில் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கமாகவும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களாகவும், மாநில அளவில் பால் உற்பத்தி யாளர்கள் இணையமாகவும் இப்படி மூன்று அடுக்குகளாக அமைக்கப்பட்டுள்ளன. இப்போது பால் 18 குளிர்பதன நிலையங்களில் குளிர வைக்கப்படுகிறது. எங்கள் சேலம் மாவட்டத்தில் புங்கவாடி கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் பால் வளத்துறை அதிகாரிகளுக்கும் விண்ணப்பம் கொடுத்துள்ளோம். நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் அளவிற்கு மேல் பால் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். ஆகவே அந்தச் சங்கத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை பால்வள நிறுவனத்தில் ஊழல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஏறத்தாழ ஒன்றரை டன் வெண்ணெய் மறைந்து போய் விட்டதாக பொது மக்களிடையே பேசப்படுகிறது. இதுபற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகிறது என்பதை அறிய விரும்புகிறேன். இப்போது குஜராத் ஆனந்த் முறையைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லப்படுகிறது.

இப்போது மாட்டுத் தீவனம், வைக்கோல், பருத்தி, தவிடு இவற்றின் விலைகள் அதிகமாகியுள்ளன. கொழுப்புச்சத்தின் அடிப்படையில்தான் விலை நிர்ணயிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே சில சங்கங்களில் இருந்து அனுப்புகிற பாலை திருப்பி அனுப்பிவிடுகிறார்கள் போதுமான கொழுப்புச் சத்து இல்லை என்று. எனவே சீரான முறையில் பால் கூட்டுறவு நிலையங்களில் இருந்து பால் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்,

மாதந்தோறும் கூட்டுறவு பால் சங்கத் தலைவர்களை அழைத்து கூட்டம் போட்டு அவர்கள் குறைகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்யவேண்டும். சேலத்தில் பால் குளிரூட்டு நிலையங்களில் தவறுகள் இராமலிருக்க சங்கங்களில் செயலாளர்களை பிரதிநிதிகளாக போட்டுள்ளார்கள்.

சேலம் மத்திய கூட்டுறவு பால் நிறுவனத்தில் கடந்த ஆண்டு கிட்டத்தட்ட மூன்று லட்சம் ரூபாய் லாபம் கிடைத்துள்ளது. அதில் ஊழியர்களுக்குக் கடந்த ஆண்டு போனஸாக 20% தரப்பட்டுள்ளது.

அளவு குறையாமல் பணியாளர்கள் பால் விநியோகம் செய்வதற்காக அதைப் பார்வையிட அந்தந்த நிலையங்களில் சூப்பர்வைஸர்ஸ் நியமித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய வழித்தடங்கள் மூலமாக பனைமரத்துப்பட்டி பால் கூட்டுறவு சங்கம் மூலம், பால் உற்பத்தியைக் கொள்முதல் செய்யவேண்டும். பால் உற்பத்திச் சங்கங்கள் நம்முடைய கிராமத்திலுள்ள ஏழை எளிய பாமர மக்களுக்கு ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலமாகவும், எஸ். எப். ஏ. போன்ற மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாகவும் பல்வேறு முறையிலே அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்லமுறையிலே கொடுக்கிறார்கள். அந்தச் சங்கங்களுக்குக் கொடுக்கின்ற போது, ஏழை எளிய பாமர மக்கள் அந்த கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இப்போது தங்கள் வாழ்க்கை ஜீவனத்தை நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆகவே இந்த முறையில் அவர்கள் வழங்கும் போது, அவர்களுக்குப் பால் விலையை உயர்த்திக் கொடுத்து, பாலுக்கு அதிக விலை கிடைக்கச் செய்யவேண்டும். அப்படி எல்லாப் பகுதிகளிலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கொடுப்பதன் மூலமாக பாலின் தரத்தை மேம்படுத்தி



அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற கூட்டுறவுப் பதிவாளர்கள் நல்லமுறையில் செயல்படுவதற்கு, இங்கே இருக்கிற பால் ஆணையாளர் அவர்களும், மற்றவர்களும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பால் வளத்தைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிந்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பத்திரப் பதிவுப் பிரிவிலே பத்திரம் எழுதுவதற்கு முறைப்படுத்த வேண்டுமென்பதற்காக வேண்டி ஏற்கனவே சில திருத்தங்கள் செய்யப்பட்டன. அதிலே குறிப்பாக. நீண்டகாலமாக பத்திரம் எழுதி வந்தவர்கள். பாதிக்கப்படாமல் இருப்பதற்காக வேண்டி அவர்களுக்கு விலக்களிக்க வேண்டுமென்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அப்படி விலக்களிப்பதற்கு, அவர்கள் எத்தகைய தகுதி பெற வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஒரு தேர்வு வைத்து, அந்தத் தேர்வை எழுதி, அந்த பணியிலே தொடர்ந்து அவர்கள் இருக்கக்கூடிய வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

அது மட்டுமல்ல, அந்த பத்திரப் பதிவில், அதிக விலை மதிப்புள்ள சொத்துக்களை வைத்திருப்பவர்கள், விலைக்கு வாங்குகிற நேரத்தில் குறைந்த மதிப்பீடு செய்கின்ற நிலை இன்றைக்கு பரவலாக இருக்கிறது. அதை கண்காணித்து, சரியான மதிப்பீடு முறையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, குறைந்த வருவாய் இருக்கின்ற ஏழை மக்கள் சாதாரண மக்கள் தங்கள் சொத்துக்களை பரிமாற்றம் செய்து கொள்ளும் போது அல்லது விற்கவோ, வாங்கும்போதோ அவர்களுக்கு இன்றையதினம் அதைக் குறைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிக வசதியுள்ளவர்களிடம், அதிகக் கட்டணமும், சாதாரண ஏழை எளிய மக்களிடம் சலுகை காண்பிக்கின்ற முறையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக சென்ற பட்ஜெட் கூட்டத்தின்போது, எங்களுடைய கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைச் சொன்னார்கள். கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலே இருக்கின்றவர்கள், கேரளாவிற்குச் சென்று தங்கள் சொத்துக்களை நீண்டகாலமாக விற்கிறார்கள், பத்திரப் பதிவு செய்கிறார்கள் என்று சொன்னார்கள் 1000க்கு 110 ரூபாய் என்று இங்கிருப்பதற்குப் பதிலாக, அங்கே 50, 60 ரூபாயிலே பதிவு செய்கிறார்கள். அப்படிச் செய்வதால், தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகின்றது. ஆகவே, நமக்கு கிடைப்பதற்கு இங்கே அந்த சலுகையை நம்முடைய அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசு இதை ஆலோசிக்க வேண்டும். இதன்மூலம் தமிழக அரசுக்கு வருவாய் வாய்ப்பிருக்கிறது என்பதைக்கூறிக் கொள்ள விருப்புகிறேன்.

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1981 ஏப்ரல் 14

மேலும், பால் உற்பத்தியைப் பற்றிச் சொல்லவேண்டுமென்று சொன்னால், அரசு இன்றைக்குப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிச்சயமாக தமிழகத்தில், வருங்காலத்தில் இந்தத் திட்டங்களை முழுமையாக அமுலாக்குகின்ற நேரத்தில், சிறந்த பயன் நிச்சயமாகக் கிடைக்கும், பால் உற்பத்தியாளர்கள், மக்களுக்கு தரமான பாலைக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கம் இன்றைக்கு உண்மையிலேயே வரவேற்கத் தக்கதுதான். ஆனால், அந்தத் தரமான பால் தமிழகத்திலே இன்றைக்கு பல்வேறு பகுதிகளிலே மக்களுக்கு கிடைக்க செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்கிறது. சென்னையிலே கிடைக்கின்ற அளவிற்கு நாம் எடுத்துக் கொண்டால், தமிழகத்திலே மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், அல்லது வட ஆற்காடு ஆகிய பல்வேறு மாவட்டங்களிலே, பல தாலுகா தலைநகரங்களிலே தரமான பால் கிடைக்கவில்லை. கோவை மாநகரத்தை எடுத்துக் கொண்டால், அங்கேயுள்ள கூட்டுறவு சங்கங்கள் பாலை மக்களுக்கு விநியோகம் செய்கின்ற பொறுப்பை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அங்கேயுள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு பால் விநியோகிக்கும் பொறுப்பை, இந்த கூட்டுறவு சங்கங்களால் நிறைவேற்ற முடியவில்லை. அதுமட்டுமல்ல. மிகத் தரக் குறைவான பால் கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலே உள்ள தலைநகரங்களிலே தரப்படுகிறது. இதைப்பற்றி ஏற்கனவே பலமுறை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அந்தத் துறையிலே இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற லட்சகணக்கான மக்களுக்கு தரமான பால் கொடுப்பதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிப் பாலைக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். கிராமத்தில் இன்றைக்கு பால் உற்பத்தியாளர்களுக்கு கட்டுபடியாகக் கூடிய விலை கிடைக்கின்ற நிலைமை இல்லை.

[முற்பகல் 11·00]

குறிப்பாக இன்றைக்கு எடுத்துக் கொண்டால் பல மாவட்டங்களில் வறட்சி இருப்பதால் தீவனங்கள் மிக அதிகமான விலையில் விற்கப்படுகின்றன. சில இடங்களில் தீவனங்களே இல்லாமல் இருக்கிற நிலைமையும் இருக்கின்றது. ஆகவே பால் உற்பத்தியாளர்களுக்கு ஆர்வம் காட்டுகின்ற வகையில் விலையை கூட்டிக் கொடுக்கிற ஏற்பாடு செய்து கொடுத்தால்தான் கிராமப்புற மக்களுக்கு ஒரு வசதியை செய்து கொடுக்க முடியும்.

கிராமங்களில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கடனுதவி கொடுத்து வந்தார்கள். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்று வந்தார்கள். ஆனால் இப்போது பல மாவட்டங்களில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் ஏழை மக்களுக்கு கடன் வழங்க ஒரு தயக்கம் காண்பிக்கிறார்கள். அதுமட்டுமல்ல ஏற்கனவே தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் தாழ்த்தப்



1981 ஏப்ரல் 14] [திரு. கே. ஆர். சுந்தரம்]

பட்ட மக்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் அமைத்து, அதன் மூலம் அவர்களுக்கு மானியமாகவோ, கடனாகவோ கொடுக்கப்பட்டு வந்தது. எனக்கு தகவல் கிடைத்த வரையில் வட ஆற்காடு மாவட்டத்தில் 12 சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. முதலில் 1,800 மாடுகள் வாங்கிக் கொடுக்கப்பட்டது. இரண்டாவது தவணையாக 1,800 மாடுகள் வாங்கிக் கொடுக்கப்படவேயில்லை. ஆகவே இதுபோன்ற நிலைமைகள் தமிழகத்தில் பல்வேறு இடங்களிலும் இருக்கும் என்று எண்ணுகிறேன். இதற்கு தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாட்டுத் தீவனங்கள் வளர்ப்பதற்கு வளமான இடங்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். மாட்டுப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை என்ற இடத்தில் ஒரு புல்வெளி இருக்கிறது. அங்கு ஒரு மாட்டுப் பண்ணை அமைக்கலாம். வட ஆற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டை அருகில் 'தௌலாக்' என்ற இடத்தில் பாலாற்றங்கரை ஓரத்தில் புல்வெளி இருக்கிறது. நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கே புல்பண்ணை அமைக்க முடியும். புல் பண்ணையை அமைத்து, மாட்டுப் பண்ணையையும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

அதேபோல மாடுகள் இனவிருத்தி செய்வதற்கு வசதிகள் செய்து கொடுத்து, ஜெர்சி, ப்ரீஷியன் கலப்பு இன மாடுகள் அதிகமான அளவில் மக்களுக்குக் கிடைக்கும் விதத்தில் வழி செய்து கொடுத்தால் மக்களுக்கு மிகவும் நன்மையாக இருக்கும்.

மக்களுக்கு மாட்டுத் தீவனங்கள் போதிய அளவிற்குக் கிடைக்க வசதிகள் செய்து தர வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் அரிசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகமாக விஸ்தரிக்கவேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் தஸ்தம்பாடி அருகிலே 400 ஏக்கர் காட்டு வன இலாகா நிலம் இருக்கிறது. புல்வெளியை வளர்ப்பதற்கு ஏற்கனவே அரசாங்கம் ஆய்வுநடத்தி இருப்பதாக தெரிகிறது. அதை இடையிலே நிறுத்திவிட்டிருக்கிறார்கள். அதை தொடர்ந்து நடத்தி புல் வளர்ப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக இந்த பால் வள நிறுவனத்தில் ஊழியர்கள் நியாயமான வருவாய் இல்லாமலிருக்கிற நிலைமையை குறிப்பிட விரும்புகிறேன். இந்த பால்வள நிறுவனத்திலே பால் வாங்கும் விலை அதிகரித்ததாலும் ஊழியர்களுக்கு ஊதியம் உயர்வு கொடுத்ததாலும் நஷ்டம் ஏற்பட்டது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்தை எடுத்துக் கொண்டால் எல்லாத் துறைகளையும் விட, பால்வள நிறுவனத்திலே இருக்கிற ஊழியர்கள் ஊதியம்தான் மிகக்

குறைவான ஊதியமாக இருந்து வருகிறது. ஊதிய உயர்வு கொடுத்ததால்தான் நஷ்டம் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை.

கடந்த நவம்பர் மாதத்தில் பால் வள ஊழியர்கள் மதுரையிலே, சென்னையிலே வேலூரிலே தங்கள் கோரிக்கைக் களுக்காக வேலை நிறுத்தம் செய்தார்கள். மதுரையிலும் வேலூரிலும் அரசாங்கம் தலையிட்டு சில வாக்குறுதிகளைக் கொடுத்ததால் வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது. அப்படி வாபஸ் பெறப்பட்டும் இன்றைக்கும் வேலூரில் சில காரணங்களுக்காக சஸ்பெண்ட் செய்யப்பட்ட ஊழியர்கள் ஆறு, எட்டு மாத காலமாக இருக்கிறார்கள். அங்கே வேலை செய்கிற தற்காலிக ஊழியர்களுக்கு ஒரு நாள் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் தான் கொடுக்கப்படுகிறது. மிகக் குறைவான கூலி. அந்த ஊழியர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும். அங்கு வேலை பளு அதிகமாக இருக்கிறது. போதிய ஊழியர்கள் நியமனம் செய்யப்படவேண்டும்,

சென்னையை எடுத்துக் கொண்டால் மாதவரம், அம்பத்தூர் பால் நிறுவனங்களில் வேலை செய்கின்ற ஊழியர்கள் தொடர்ந்து ஆறு மாத காலமாக வேலை நிறுத்தம் செய்கின்ற அளவிற்குப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களது பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கின்றன. தொழிலாளர் துறையும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும் இதைத் தீர்ப்பதற்கு ஆரம்பத்தில் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். ஆனால் இன்று வரையில் பிரச்சினை தீர்க்கப்படாமல் 1,500 ஊழியர்கள் நடுத்தெருவில் நின்று கொண்டிருக்கிறார்கள். பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு இந்தத் துறை அமைச்சர் அவர்கள் இனியாவது கனிவோடு கவனித்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், குறைகளைத் தீர்த்து வைப்பதற்கு பேச்சு வார்த்தை நடப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கை, பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கை ஆகியவற்றின் மீது பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பை பெற்றதற்காக முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பத்திரப் பதிவு சம்பந்தமாக பத்திரங்கள் எழுதுவதற்கு பயிற்சி அளித்து பயிற்சி பெற்றவர்கள்தான் பத்திரங்கள் எழுத வேண்டுமென்கின்ற புரட்சிகரமான கருத்தை, நான் அரசின் சார்பிலே பேசுகின்றேன், அதனை வரவேற்கிறேன். காரணம் பத்திரங்களை எழுதுகின்றவர்கள் செய்கின்ற குறைவினால்தான் வழக்கு



மன்றங்களிலே ஏழை எளிய மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப் படுகிறார்கள் என்பதை நாங்கள் எல்லாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். ஆகவே பயிற்சி பெற்றவர்கள் தான் பத்திரங்களை எழுத வேண்டும் என்ற கருத்தினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய பகுதியிலே பாணாவரம் என்ற பகுதியிலே சப் ரிஜிஸ்டர் ஆபிஸ் ஒன்று ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்ற நிலைமையையும் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இப்போது இருக்கின்ற சப் ரிஜிஸ்திரார் ஆபீஸ் சுற்றி சுற்றி 17 மைல்களுக்கு அப்பால் தான் இருக்கிறதே தவிர கிராமங்களிலே இருக்கின்ற மக்கள் அவ்வளவு தூரம் சென்று ரிஜிஸ்தர் செய்ய வேண்டிய காரணத்தினாலே செலவுகள் அதிகமாகிறதே தவிர பக்கத்திலே அமையவில்லை. ஆகவே என்னுடைய தொகுதியிலே பாணாவரம் என்ற பகுதியிலே ஏழை எளிய மக்களின் நலன் கருதி ஒரு சப் ரிஜிஸ்தரார் ஆபிஸ் ஏற்படுத்த வேணடுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை பால் வளத்தைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும் பால் பண்ணைகளைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும் வறுமை கோட்டிற்குக் கீழே வாழுகின்ற ஏழை எளிய மக்களுக்கு தரமான பாலை கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடும் பால் வள நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன, என்பதை குறிப்பாக புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஏற்பட்டதற்குப்பிறகு பால் உற்பத்தி செய்வதற்கான வழிவகைகளையும் ஏழை எளிய மக்களுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் கடன்கள் கொடுத்து பால் உற்பத்தியைப் பெருக்கி கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக கிராமங்களிலே பால் உற்பத்தியாளர் சங்கம் என்றும் மாவட்ட அளவிலே உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் என்றும் மாநில அளவிலே கூட்டுறவு இணையம் என்றும் 3 அடுக்குகளாகப் பிரித்து நம்முடைய பால்வள நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. கிராமங்களிலே உள்ள மக்கள் வளம்பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம் தொடங்கப்பட்டு வருகிறது. அதே நேரத்திலே பல கிராமங்களிலே ஏற்கனவே கூட்டுறவு பால்வழங்கும் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அப்படிச் செயல்பட்டு வருகின்ற சங்கங்கள் நல்ல முறையிலே தரமான பாலை உற்பத்தி செய்து கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமங்கள் தோறும் பால் உற்பத்தியாளர் சங்கங்களைத் துவக்குகிறபோது ஏற்கனவே பால்வழங்கும் சங்கங்களாக இருக்கின்ற அந்தச் சங்கங்களுக்குப் பலவிதமான தொல்லைகள் ஏற்படுகின்றன. பால் வழங்கும் சங்கங்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற துணை விதிகளிலே ஒரு குறிப்பிட்ட கிராமங்களைத் தேர்ந்

தெடுத்து அவைகளிலேயிருந்து தான் பால் கொண்டுவர வேண்டுமென்று விதியை நிர்ணயித்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் கிராமங்கள் தோறும் ஏற்படுத்துகிற போது ஏற்கனவே நல்லமுறையிலே செயல்பட்டு வருகிற அந்தச் சங்கங்களுக்கும் அரசினுடைய கொள்கைக்கு ஏற்ப உற்பத்தியாளர் சங்கங்களை அப்படிப்பட்ட ஏரியாவிலே ஏற்படுத்தும்பொழுது நல்லமுறையிலே செயல்பட்டுவரும் தொழிலாளர்களும் இந்தக் கொள்கையின் காரணமாக பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. நல்ல தரமான பாலை உற்பத்தி செய்கின்ற அந்த சங்கமும் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே இதனை கருத்திற்கொண்டு, ஏற்கனவே துணை விதிகளுக்கு உட்பட்டு பால் வழங்கு சங்கத்திலே இருக்கின்ற அந்தக் கிராமங்களிலே உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

அந்த ஒரு காரணம் மட்டுமல்ல. அப்படி ஏற்படுத்தும் அந்த கிராமங்களிலே தனியார் சம்பந்தப்பட்டவர்கள் தனிப்பட்ட முறையிலே பாலை எடுத்து, சுயமாக ஆள வேண்டிய கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்தை நசுக்கிக் கொண்டிருக்கும் சூழ்நிலை வந்து விடுகிறது. ஆகவே, இந்தக் குறைபாடுகளைக் களைய வேண்டுமென்றால் ஏற்கனவே பால்வழங்கு சங்கமாக குறிப்பிட்ட கிராமங்களிலே ஒரு எல்லைக்கு உட்பட்டு பால் கொண்டு வரும் அந்தக் கிராமங்களை உற்பத்தியாளர் சங்கங்களோடு இணைத்துத் தனிப்பட்ட முறையிலே அவையும் நடந்து வரலாம் என்ற விதிவிலக்கை அளிக்க வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சோளிங்கர் நகரத்திலே இருக்கின்ற பால்வழங்குச் சங்கத்திலே தினசரி ஏறக்குறைய 5,000 லிட்டருக்கு மேல் பால் உற்பத்தியாகிறது. அந்தப் பாலை தினசரி சென்னைக்கும், மற்றும் பல இடங்களுக்கும் கொண்டு சென்று கொடுக்கும் சூழ்நிலை இருக்கிறது கோடைகாலத்தில் தினசரி 5,000 லிட்டர் உற்பத்தியாகும் பால் மழைக் காலங்களில் 6,000 லிட்டர். 7,000 லிட்டர் என்ற அளவிற்குச் சென்று விடுகிறது. அவ்வாறு மழைக்காலங்களில் பால் அதிகமாக உற்பத்தியாகும் பொழுது அந்தப் பாலை சத்துவாச்சேரியிலுள்ள குளிரூட்டும் நிலையத்திலும், மாதவரம் பண்ணையிலும் எடுக்க மறுக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. பால் உற்பத்தியை நல்ல முறையிலே செய்தாலும் அந்தப் பகுதியிலே மழைக்காலங்களில் தேக்க நிலை அடைந்து விடுகிறது. பல கறவைதாரர்களிடம் இன்று பால் வேண்டாமென்று சொல்லுகின்ற அச்சமான சூழ்நிலை அந்தப்



பகுதியில் ஏற்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்குவதற்காக, நடவடிக்கை எடுக்க வேண்டும். சுற்று வட்ட கிராமங்களிலேயும், சோளிங்கர் நகரத்திற்கு அருகிலேயும் ஏறத்தாழ பத்தாயிரம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது. இந்தப் பால் மாதவரத்திற்கும் சத்துவாச்சேரிக்கும் செல்லுகின்ற சூழ்நிலை இருக்கிறது ஆனால் மழைக் காலங்களில் அவர்கள் தேவையில்லை என்று சொல்லும் சூழ்நிலையிருப்பதால் ஆந்திரா மாநிலத்திலுள்ள சித்தூர் நகரத்திற்குகூட தமிழ்நாட்டிலே உற்பத்தியாகும் பாலை எடுத்துச் செல்லும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமைகளையெல்லாம ஆராய்ந்து என்னுடைய பகுதியான சோளிங்கர் நகரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தினை இந்த நேரத்தில் நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பால் உற்பத்தியினை அதிகமாகப் பெருக்க வேண்டுமென்றால் கால்நடைகளின் தீவனம் மிகவும் முக்கியமாகும். இப்பொழுது வடார்க்காடு மாவட்டத்திலேயும் சரி, வேறு பல பகுதிகளிலேயும் சரி, கடுமையான வறட்சி ஏற்பட்டிருப்பதாலே கால்நடைகளுக்கு குறிப்பாக ஏழை எளிய மக்கள் நெற்பயிரில் இருக்கும் வைக்கோலைக் கிராமங்களில் பயன்படுத்தி வருகிறார்கள் இன்று அந்த வைக்கோல் கூடக் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் பால் உற்பத்தியும் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலையும் இயற்கையாகவே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், வறட்சிப் பகுதிகளுக்குச் செலவிடப்படும் பணத்தில் ஒரு தொகையை இந்தத் தீவனத்திற்காகவும் செலவழித்து, அண்டை மாநிலங்களிலேயிருந்தும் தீவனத்தைப் பெற்று கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அதை விநியோகம் செய்ய வேண்டுமென்ற கருத்தினை இந்த நேரத்தில் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன், நன்றி வணக்கம்.

**திரு. என். ஏ. பூங்காவனம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பத்திரப் பதிவு, பால் வளம் என்ற இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். முதன் முதலாக, பத்திரப் பதிவு சம்பந்தமாக, அரசு அறிவித்து புதிதாக நடைமுறைக்குக் கொண்டு வர எடுத்திருக்கிற முயற்சி, ஏதோ வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும், அல்லது; புதியவர்களைப் புகுத்த வேண்டுமென்ற ஆர்வத்தாலோ அல்லது நல்ல நோக்கத்தோடோ கூட இருக்கலாம் என்று நினைக்கலாம். ஆனால், புதியவர்களை நாம் புகுத்துகிறபொழுது, அதிலே ஈடுபட்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான, பழைய, அனுபவம் பெற்று எழுதுகின்ற, தகுதி பெற்று அந்தப் பதவியிலே ஈடுபட்டுள்ள அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலையில்லாத நிலை ஏற்படும் என்பதையும் அரசு கவனத்திலே கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே பத்திரம் எழுதிக் கொண்டிருந்தவர்கள், அதிலே பழக்கப்பட்டவர்களுக்கு; எந்தவித்ச் சட்ட இடையூறுகளும் இல்லாமல்; அவர்களுக்கு வேண்டிய வாய்ப்பை அளித்துவிட்டு, வேண்டுமானால் ஒரு குறிப்பிட்ட அளவு வயது வரம்பு நிர்ணயித்து, அதற்கு மேற்பட்டவர்களை அதிலே எழுதவிடாமல் புதிதாக வருபவர்களுக்கு இடங்கொடுக்கக்கூடிய நிலையிருக்க வேண்டும். அந்நிலையை அரசு அனுஷ்டிக்குமானால், இப்பொழுது எழுதிக் கொண்டிருப்பவர்களை நிபந்தனையற்ற முறையில், சட்ட வரம்பற்ற முறையில், தொடர்ந்து எழுத அனுமதிக்க வேண்டுமென்று முதலிலே கேட்டுக் கொள்கிறேன். பாலை எடை போட்டு அதன் அடிப்படையில் வாங்குகிறார்கள், அதாவது, அதிலிருக்கும் கொழுப்புச் சத்தை அடிப்படையாகவைத்து, பாலை எடை போட்டு வாங்குகிறார்கள். கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் பாலை வாங்கிச் சேமித்து; எடையை நிர்ணயிக்கும்போது, அவர்கள் சொல்வதுதான் எடை என்ற நிலையிருக்கிறது அதனால் பாலுக்கு விலை மிகவும் குறைவாக வருகிறது. ரூ. 1.30, ரூ1.40 என்று ஒரு லிட்டர் பாலை எடுத்து, அதே பால் சென்னையிலுள்ள மாதவரம் பால் பண்ணையில் ரூ. 2.50க்கு விற்கப்படுகிறது. ஆனால், கிராமங்களிலுள்ள சங்கங்களிடமிருந்து ரூ. 1.30 லிருந்து, ரூ. 1.50க்கு மேல் எங்கும் வாங்குவதில்லை. சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், அல்லது ஏழை எளியவர்கள் அந்த மாட்டுக்குக் கொடுக்க வேண்டிய தீவனங்கள் அனைத்தையும் கொடுத்து, பாலைக் கொண்டு வரும்போது, அந்தப் பாலின் விலையை நிர்ணயம் செய்யும் முறையை மாற்ற வேண்டும். எந்த, எந்தச் சங்கத்தில் பாலை எடுக்கிறார்களோ, அங்கேயே விலை நிர்ணயிக்கப்படவேண்டும். அங்கே நிர்ணயிக்காமல், சம்பந்தப்பட்ட அதிகாரி சொல்கிற அல்லது அவர் என்ன வேண்டுமென்று கேட்கிறாரோ, அதை நிறைவேற்றுகிற அளவுக்கு, அந்த சங்கத்தின் பாலின் கொழுப்பு அளவு கூடும், எதிர்த்து பேசக் கூடியவர்கள் யாராவது இருந்தால், அந்த பாலின் கொழுப்பு அளவு குறையும், பாலின் அளவும் குறையும். அதனால், அங்கேயிருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுடைய தலைவர்கள், டைரக்டர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்நிலையிலிருந்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும், பாதுகாப்பளிக்கவேண்டும். அதற்கு அரசு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பால் வழங்குதல் சம்பந்தமாக சில கருத்துக்களை நான் அமைச்சரின் முன்னால் பணிவோடு வைக்க விரும்புகிறேன். அதை அவர்கள் தவறாகப் பொருட்படுத்த மாட்டார்கள் என்று கருதுகிறேன். தமிழகம் முழுமையும், குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்தில், பால் வள நிறுவனம் இயங்கக்கூடிய முறைகளையும், செயல்படக்கூடிய முறைகளையும் அமைச்சரின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதன் கிளைப் பகுதிகளாக இருந்து, அந்தந்த கிராமங்களிலே உள்ளவர்கள் அடைகின்ற கஷ்டங்களையும் துன்பங்களையும் நான் அமைச்சரின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



இப்பொழுதுள்ள சூழ்நிலையில், ஒரு மாட்டுக்கு வைக்கோல் போட வேண்டுமென்றால், ஒரு பிரி 25 காசு விற்றது. இப்பொழுது 80 காசுக்கு விற்கிறது. அதேபோல், புல்கட்டு, ரூ. 1, ரூ. 1½-க்கு விற்றுக் கொண்டிருந்தது. இப்பொழுது அங்கங்கே புல் கிடைக்காத காரணத்தால், எங்கெங்கிருந்தோ கொண்டு வருகிற புல் கட்டை ரூ. 6, ரூ. 7-க்கு விற்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பிண்ணாக்கு விலை கூடுதலாக இருக்கிறது, தவிடு விலை கூடுதலாக இருக்கிறது. ஆகவே, அவைகளை யல்லாம் அளித்து, மாட்டை வளர்த்து பால் கறந்து, அந்தந்தக் கிராமச் சங்கங்களுக்குப் பால் கொண்டு வந்து, அங்கிருந்து தலைமை அலுவலகத்திற்குப் பால் கொண்டு வரும்போது பல இடையூறுகள் ஏற்படுகின்றன, பாலைக்கொண்டு செல்லும்போது வழியில் ஆட்டத்தினால் பால் தளும்பி கீழே விழுகிறது. அப்படித் தளும்பி கீழே விழுகிற பால் எந்தச் சங்கத்திலிருந்து வருகிறதோ, அந்தச் சங்கத்தைச் சேர்கிறது.

[முற்பகல் 11-20]

குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் ஒரு குற்றச்சாட்டை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு சென்றேன். ஒரு பால்வள நிறுவனத்தின் தனி அதிகாரி ஒருவர் 9000 ரூபாய் விரயமாக முறைகேடாக நடந்து கொண்டார்கள் என்று புகார் கொடுத்திருந்தேன். நான் புகார் கொடுத்த உடனே நடவடிக்கைஎடுத்து இருக்கிறார்கள். எனக்கும்பதில் வந்திருக்கிறது அதற்காக நன்றி. ஆனால் அந்தத் தனி அதிகாரியின் பேரில் இன்றைய தினம் வரையிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. சஸ்பெண்ட் செய்வதோ அல்லது வீட்டுக்கு அனுப்புவது போன்றோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாதவரம் பால் பண்ணையில் நடைபெறும் வேலைநிறுத்தம் சம்பந்தமாகவும், ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அங்கே பணியாற்றக்கூடிய அரசு ஊழியர்கள் மிகவும் ஏழைகள். பாமர மக்கள். உழைக்கின்ற மக்கள். உரிமை கேட்டதற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் கிராமத்திலே உள்ள விவசாயிகள், நகரத்திலே உள்ள பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பலம் உள்ளவன் பாதுகாத்துக் கொள்கிறான் பலம் இல்லாதவர்கள் காவல் துறையினரை நாடுவார்கள். எதுவுமே இல்லாதவர்களுக்கு அ சாங்கம் நீதி வழங்கவேண்டும். அப்படிப் பட்ட மக்களுக்கு அரசு தரப்பிலே இருந்து எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும். மாதவரம் பால்பண்ணையிலே கிட்டத்தட்ட 1500 தொழிலாளர்களை 6 மாதம் வெளியே நிற்க வைத்து, கூடுதல் பணத்தைக் கொடுத்து, வெளியே இருந்து கருங்காலிகளை கொண்டு வந்து வேலை வாங்குவது தர்மமா, நீதியா, நேர்மையா, நியாமா என்பதை இந்த நேரத்தில் பணிவோடு கேட்க விரும்பு

கிறேன் இங்கே பணிபுரிகின்றவர்கள் அத்தனை பேர்களும் தமிழர்கள். தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ் மக்கள், உரிமை கேட்டார்கள் என்ற ஒரே காரணத்திற்காக வெளியே விரட்டுவது என்பது நியாயம் அல்ல, நீதி அல்ல, நேர்மை அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் நீதி வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மிக விரைவில் முடிவெடுத்து அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாட்டுத் தீவனத்தைப் பொருத்தவரையில் அதிலே நிறைய கலப்படங்களைச் செய்கின்றார்கள். அதிலே கல், மண் போன்றவை களைக் கலந்து விற்கின்றார்கள். எனவே அரசு கால்நடைகளைப் பாதுகாக்க, நடவடிக்கை எடுத்து தீவனங்கள் சரிவர கிடைக்கு மாறு கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பத்திரப்பதிவு பால் வழங்கும் திட்டத்தினுடைய மானியத்தின் மீது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல அனுமதித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள், பால் பெருக்கி, பலத்தையும் நாட்டின் நலத்தையும் பெருக்கவேண்டும் என்று திட்டமிட்டு அவர்கள் பணி செய்து வருவதை நான் பாராட்டுகிறேன். மாதவரம் பால்பண்ணையைப் பற்றிப் பேசப் பட்டது. அது என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற காரணத் தால் மட்டும் அல்லாது, தமிழகம் எங்கும் அந்தத் தொழில் பல்கிப் பெருக வேண்டும் என்ற எண்ணம் இருக்கின்ற காரணத்தாலும், அங்கே நடைபெறுகின்ற வேலை நிறுத்தத்தைப் பற்றி நான் அமைச்சர் பெருந்தகை அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாகும். மாதவரத்திலே 300 தொழி லாளர்களும், அம்பத்தூரிலே 200 தொழிலாளர்களும் அயனா வரத்திலே 100 தொழிலாளர்களும், சென்னையில் 900 தொழி லாளர்களும், ஆக மொத்தம் 1500 தொழிலாளர்கள் இன்றைக்கு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த வேலைநிறுத்தத் தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்ட நேரத்தில், அங்கே இருக்கின்ற தொழிற்சங்கத் தலைவர்களும் நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சென்று கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அதற்கு நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன் அந்த வேலைநிறுத்தத்திலே ஈடுபட்டுள்ளவர் கள் அத்தியாவசியமான பணி புரிகின்றவர்கள் ஆதலினாலே உடனடியாக இதுகுறித்து அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அத்தியாவசியப் பணிகளில் ஈடுபட்டு இருக்கிறவர்கள் வேலை நிறுத்தம் செய்வார்கள் என்ற யூகம் வந்தால் 14 நாட்களுக்குள் பேச்சுவார்த்தை நடத்துவதற்குரிய சூழ்நிலை உருவாகவேண்டும் என்று விதி கூறுகிறது. ஏறத்தாழ 146 நாட்களாக வேலை நிறுத்தம் நடத்தப்பட்டும் கூட அதற்குத் தீர்வு காண முடியாதது வருத்தத்திற்குரியதாக இருக்கிறது.

அது மட்டுமல்லாமல், அங்கே பணிபுரிகின்றவர்கள் போதிய அளவு ஊதியம் பெறவில்லை. அரசாங்கத்தில் பணிபுரியும் கடை நிலை ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம்கூட அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், மளிகைக் கடை, ஜெனரல் ஸ்டோர்ஸ், மாக்கடை போன்ற இடங்களில் பணிபுரிகின்றவர்களுக்கு எந்தஅளவிற்குக் குறைந்த பட்ச ஊதியம் கொடுக்கவேண்டும் என்று அரசு ஆணையிட்டு இருக்கிறதோ அந்தக் குறைந்த பட்ச ஊதியத்தைக்கூட அங்கே பணிபுரிகின்றவர்கள் பெறவில்லை என்பது அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அவருடைய சாதகமான தீர்ப்புக்காக அது காத்து இருக்கிறது என்பதை இங்கே நான் பணிவோடு தெரிவித்து கொள்கிறேன்.

அங்கே 146 நாட்களாக வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், 'ஆவின் பால்' தொழிற்சாலையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் சாவின் பால் போய்விடக்கூடாது என்பதால் உழைப்பால் உயரவேண்டும் என்று நினைக்கிற நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொழிலாளர்களின்பால் அன்பால் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நட்பால் கேட்டு, அப்பால் செய்யவேண்டியது அவருடைய கடமை என்பதைச் சொல்லி, என்னுடைய வேண்டுகோளை வைத்து உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அ. ரகுமான்கான் இருக்கையில் இல்லாததால், மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதில் அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத்துறை மானியக் கோரிக்கை மீதும், பால்வளத் துறை மானியக் கோரிக்கை மீதும் அங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் வெட்டுத் தீர்மானங் களை நல்கியிருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: நான் லாபியில்தான் இருந்தேன். தாங்கள் என் பெயரை அழைத்தது கேட்கவில்லை. ஆகவே, தயவு செய்து பேச அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசுவதற்காக அழைக் கப்பட்ட நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் இருக்கையில் இல்லாததால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதில் அளிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்த நேரத்தில் பேசு

[பேரவைத் துணைத் தலைவர்] [1981 ஏப்ரல் 14

வதற்கு அனுமதி கேட்பது சரியல்ல, முறையும் அல்ல. அப்படி அனுமதி அளித்தால், அது ஒரு புதிய முறையை ஏற்படுத்தியதாகும் என்பதால், தற்போது பேச அனுமதிப்பதற்கு இல்லை.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு அமைச்சர் யீல்ட் செய்தால் பேசுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இதிலே அமைச்சர் ஒப்புக்கொள்வது என்பது பிரச்னையில்லை. மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் சொல்லும் போது நான் குறுக்கிடுவது முறையல்ல.

பத்திரப் பதிவுத்துறை மற்றும் பால்வளத்துறை மானியங்கள் மீது 6 மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களுடைய உணர்வுகளையும், கருத்துக்களையும் இந்த கண்ணியம் மிக்க சபையின் முன்பாக வைத்து இருக்கிறார்கள்.

அதைப்போலவே, பல்வேறு வெட்டுத் தீர்மானங்களின் வாயிலாக பல்வேறு விவரங்களை அரசின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். உறுப்பினர்களின் வெட்டுத் தீர்மானத்தின் மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன அந்தக் கருத்துகளின் மீதும், உணர்வுகளின் மீதும் சுருக்கமாக சிலவற்றைச் சொல்ல விழைகிறேன்.

[முற்பகல் 11-30]

பதிவுத்துறை என்பது கடந்த 116 ஆண்டுகாலமாக தமிழகத்தில் இருந்து வருகிற ஒரு தொன்மைமிக்க துறையாகும். இன்றைக்கு 11 சட்டங்களை-மனித வாழ்வுக்குத் தேவைப்பட்ட 11 சட்டங்களை-செயலாக்குகிற துறையாக பத்திரப்பதிவுத் துறை விளங்குகிறது. 1977-ம் ஆண்டுக்கு முன்பு 35 பதிவு மாவட்டங்கள்தான் இந்தத்துறையில் இந்த மாநிலத்தில் இருந்தன. ஆனால் தற்போது 40 பதிவு மாவட்டங்கள் இருக்கின்றன. பொதுமக்களின் நலன் கருதியும், நிர்வாகத்தைத் திறமை படுத்தவும் வேண்டி: பெரிய பதிவு மாவட்டங்களைப் பிரித்து, கூடுதலான மாவட்டங்களாக அதை தமிழக அரசு அமைத்து வருகிறது. அதன் அடிப்படையில் சென்ற ஆண்டு பெரியார் மாவட்டம் செங்கற்பட்டு பதிவு மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களையும் பிரித்து, முறையே ஈரோடு, கோபி, காஞ்சிபுரம். செங்கற்பட்டு என்று 4 பதிவு மாவட்டங்களை ஏற்படுத்தி அவை 15-9-1980-ம் நாளிலிருந்து இயங்கி வருகின்றன. இந்த ஆண்டில் அதாவது நடப்பாண்டில் இரண்டு பதிவு மாவட்டங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆக இவ்வாண்டு முதல் தமிழகத்தில் பதிவுத் துறையில் 42 பதிவு மாவட்டங்கள் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 14] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

அடுத்து, 1977-ம் ஆண்டுக்கு முன்பு 414 சார் பதிவாளர் அலுவலகங்களே இருந்தன. பொதுமக்கள் பத்திரம் பதிவு செய்வதற்காக சார் பதிவாளர்களை நாடி வெகுதூரம் செல்வதை தவிர்ப்பதற்காக தமிழக அரசு பல சார் பதிவாளர் அலுவலகங்களைத் திறக்க முடிவு செய்து, 1980-81 ஆம் ஆண்டில் புதிதாக 15 சார் பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்பட்டு, அவை 15-9-81-லிருந்து செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில் மேலும் 15 சார் பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்பட்டு, மொத்தம் 450 சார் பதிவாளர் அலுவலகங்கள் தமிழகத்தில் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி வளர்ந்து வரும் பத்திரப் பதிவுத் துறையை மேலும் சீர்திருத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பதிவுத் துறை தலைமை அலுவலகத்தில் உள்ள துணைப் பதிவுத் துறை தலைவர் பதவி கூடுதல் தலைவர் பதவியாக 2-12-1980 முதல் உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் பதிவுத் துறை தலைவருக்கு உதவியாக கணக்குகளைப் பேணி வர முதுநிலை கணக்காய்வாளர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். வேலூர், திருச்சி, மதுரை, கோவை ஆகிய 4 தலைமையிடங்களை கொண்ட 4 வட்டார அலுவலகங்கள் திறக்கப்பட இருக்கின்றன. ஒவ்வொரு வட்டாரமும் ஒரு துணைப் பதிவுத்துறைத் தலைவரின் கீழ் இருக்கும். ஒவ்வொரு வட்டார எல்லையிலும் இரண்டு பதிவு ஆய்வாளர்கள் அலுவலகங்கள் செயல்படும். அவர்கள் மாவட்ட பதிவாளர் அலுவலகங்களில் ஆய்வு செய்தல், சொத்து மதிப்பு பற்றிய புகார்கள் பற்றி ஆய்வு செய்வார்கள்.

தமிழக அரசுக்கு தற்போது வரும் வருவாயைத் தேடித் தருவதில் பதிவுத் துறை 3-வது இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 40 கோடிக்குமேல் வருவாய் உள்ள பதிவுத் துறையின் கணக்குகளை இதுவரையில் 22 சார் பதிவாளர்கள் மட்டுமே தணிக்கை செய்து வந்தனர். இந்த தணிக்கையை தீவிரமாக்குவதன் மூலம் அரசுக்கு வரும் வருவாய் இழப்பு ஏற்படாமல் தடுக்கவும் அதைக் கருத்தில் கொண்டு 22 சார் பதிவாளர்கள் மாவட்டப் பதிவாளர்களாக பதவித் தரம் உயர்த்தப் பட்டுள்ளனர். இதனால் பதிவுத் துறையில் பல்லாண்டுகாலமாக பணியாற்றி, பதவி உயர்வு கிடைக்காமல் இருந்த தேக்க நிலை குறைக்கப்பட்டுள்ளது. அதோடு பதிவுத் துறையில் அதிக காலம் சேவைச் செய்கின்ற ஒரு வாய்ப்பையும் அளிக்கிறது. மேலும் முத்திரைத்தாள், பதிவு கட்டணம் மூலம் அரசுக்கு அதிக வருமானம் கிடைக்கவும் வாய்ப்பு இதனால் ஏற்படுகிறது.

அடுத்து, சீட்டு நிதிக் கழகத்தைப்பற்றி சிலர் குறிப்பிட்டார்கள். தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் 1-12-1969 முதல் தமிழ்நாடு முழுவதிலும் நடைமுறையில் இருந்து வருகிறது. சீட்டு நடத்தும் சில கம்பெனிகள் தங்களுடைய சந்தாதாரர்களை ஏமாற்றி, அவர்களுடைய

சந்தாத் தொகையை ஏமாற்றுகிறார்கள் என்றும் உரிய தொகையைப் பட்டுவாடா செய்யவில்லை என்றும் அரசுக்கு பல புகார்கள் வந்திருக்கின்றன. சிட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் இத்தகைய குற்றங்களுக்கு அதிகபட்சம் 100 ரூபாய்தான் அபராதம் விதிக்கலாம் என்று இன்றைக்கு சட்டம் இருக்கிறது. இம்மாதிரியான குற்றங்களுக்கு அதிக அளவில் தண்டனை கொடுக்கவும், அதிக அளவில் அபராதம் விதிக்கவும், வேறு பல குறைபாடுகளைக் களைவதற்கும் தமிழக அரசின் சிட்டு நிதிக் கழகம் ஒன்று இயங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு அரசு சார்பிலே ஒரு கழகத்தை நிறுவினால் அவர்கள் பணம் அரசிடம் பாதுகாப்பாக இருக்கும் என்பதால் அரசின் சார்பிலே ஒரு சிட்டு நிதிக் கழகத்தைத் தொடங்க முடிவு எடுக்கப்பட்டு, அது இன்னும் இரண்டு, மூன்று மாதங்களுக்குள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதன் மூலமாகக் கிடைக்கும் பங்கு மூலதனம், மற்றும் கமிஷன் கிடைப்பதையும் கொண்டு அரசு பல முன்னேற்றங்களைச் செய்ய முடியும். இந்த சிட்டு நிதிக் கழகத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் இருக்கும். மேலும் அதனுடைய கிளைகள் 15 இடங்களில் நிறுவப்படவும் உத்தேசிக்கப்பட்டு உள்ளது. படிப்படியாக அதனுடைய வெற்றியைப் பார்த்து மாநிலம் முழுவதும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

பத்து இலட்சம் ரூபாய் மூலதனத்தில் ஆரம்பத்தில் இந்தச்சிட்டு நிதிக் கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் 20 இலட்சம் ரூபாய் அளவுக்கு தமிழக அரசுக்கு வருமானம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. முத்திரைத்தாளின் முக மதிப்பைக் காட்டிலும் அதிக விலைக்கு விற்கப்படுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்ததைத் தொடர்ந்து ஒரு முன்னோடித் திட்டமாக 25 சார் பதிவாளர் அலுவலகங்களில் முத்திரைத்தாள் விற்பனை செய்ய 1977 ஆம் ஆண்டு அரசு ஆணையிட்டது. 1980 ஆம் ஆண்டு முதல் மேலும் 50 சார்பதிவாளர் அலுவலகங்களில் விற்பனை செய்ய ஏற்பாடு ஆகி இருந்தது. இந்தத் திட்டம் மன நிறைவு அளிக்கத்தக்க வகையில் செயல்படுவதுடன் அரசுக்கும் கணிசமான தொகை மிச்சப்படுவதாலும் இந்தத் திட்டத்தையே நிரந்தரமாக்கி தமிழகத்திலுள்ள அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களிலும் இதை விரிவுபடுத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசினுடைய பரிசிலனையில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே பல்வேறு இடங்களில் புதியதாக சார் பதிவாளர் அலுவலகம் திறக்க வேண்டும் என்ற கோரிக்கையினை விவரமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சார் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தப்பட



வேண்டும் என்றால் அங்கே குறைந்தபட்சம் ஆயிரம் ஆவணங்களாவது பதிவு பெறவேண்டும். செலவுகள் வரவுக்குட்பட்டதாக இருக்க வேண்டும். அலுவலர்களுக்கு குடியிருக்க வீடும், பதிவேடுகளைப் பாதுகாப்பாக வைக்கவும் அலுவலகம் இயங்கவும் வசதியான கட்டிடங்கள் வேண்டும். இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கருத்துக்களைக் கேட்டு சார் பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்பட உள்ளன. நிர்வாக வசதிகளைக் கருத்தில் கொண்டு பொது மக்கள் எளிதில் அணுகும் வகையில் முறையில் ஊரின் மத்தியிலோ அல்லது பொதுமக்கள் அதிகம் வசிக்கும் இடத்திலோ ஆரம்பிக்க வேண்டும். அடுத்து பதிவு அலுவலகங்கள் ஊரின் மையப் பகுதியில் இல்லை என்ற புகார் வந்தால் பரிசிலனை செய்து அவற்றை மாறுதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இப்போது சொந்தக் கட்டிடங்கள் பற்றி விவரங்களைச் சொன்னார்கள். 2 பத்திரப்பதிவு அலுவலகங்கள், 5 பத்திரப்பதிவு ஆய்வாளர் அலுவலகங்கள், 15 மாவட்டப் பதிவாளர்கள் அலுவலகங்கள் மற்றும் 273 சார் பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவை அரசுக் கட்டிடங்களிலே செயல்பட்டு வருகின்றன. 2 பதிவு ஆய்வாளர் அலுவலகங்கள், 25 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள், 162 சார் பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவை தனியார் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. அடுத்து மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான ஆலோசனைகளைக் கவனத்தில் கொண்டு படிப்படியாக பதிவுத் துறை அலுவலங்கள் அனைத்தையும் அரசுக் கட்டிடங்களில் அமைக்க ஆவன செய்யப்படும்.

அடுத்து வழிகாட்டிப் பதிவேடுகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து சொன்னார்கள். 1968 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம்தேதிக்கு முன்னால் பதிவு செய்யும் பத்திரத்தில் குறிப்பிடும் மதிப்பின் அடிப்படையில் முத்திரைத் தீர்வை இணைக்கப்பட்டது. இதன் பிறகு கிரையம், தானம், பரிவர்த்தனைகள் போன்ற பத்திரங்களின் மீது சொத்து மதிப்பைக் கருத்தில் கொண்டு முத்திரைத் தீர்வை நிர்ணயிக்கப்படுகிறது. சார் பதிவாளரிடத்தில் பதிவு செய்ய வரும் பத்திரங்களில் சரியான சொத்தின் மதிப்பு கொடுக்கப்பட்டுள்ளதா என்பதைத் தெரிந்துகொள்ள வருவாய்த்துறையினரால் கொடுக்கப்பட்ட மதிப்பை வைத்து வழிகாட்டி பதிவேடு தயாரிக்கப்பட்டது. நகர மற்றும் கிராமப்புறங்களில் சொத்துக்களின் மதிப்பை சரியான முறையில் நிர்ணயிக்க பத்திரத்துறை அலுவலர்களின் கீழ் வருவாய் அலுவலரை நியமித்து வழிகாட்டிப் பதிவேடு 1975-ல் தயாரித்து வழங்கப்பட்டது. ஆனால் நிலங்களின் மதிப்பு 1971-லிருந்து சில இடங்களில் இரட்டிப்பாகியும், வீட்டு மனைகளின் விலை 3, 4 மடங்கு உயர்ந்தும் உள்ளது. ஆகவே இந்த விலை உயர்வைக் கருத்தில் கொண்டு புதிதாக வழிகாட்டிப் பதிவேடுகளைத் தயாரிக்க அரசு முடிவு எடுத்து இப்

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1981 ஏப்ரல் 14

பணிக்கு 61 சார் பதிவாளர்கள், 62 உதவிப் பதிவாளர்கள், ஒரு இளநிலை உதவியாளர் 38 தட்டச்சர்கள், 60 அடிப்படை ஊழியர்கள், ஒரு வைப்பர் எழுத்தர் ஆகியோரை அரசு நியமித்துள்ளது. இவர்களது பணி 31-8-8 –க்குள் முடியலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அப்படி புதியதாக வழிகாட்டி பதிவேடு தயாரித்து வழங்கப்பட்ட உடன் ஆண்டுக்கு சுமார் 11 கோடி அரசுக்கு அதிக வருவாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதைப் போலவே பத்திரத்தாள் கிடைப்பதிலே பல இடங்களிலே சங்கடங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். 1967 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதிக்கு முன்னால் பதிவு செய்ய வரும் பத்திரங்களின் நகலை எடுத்து கொடுப்பது பதிவுத் துறை எழுத்தருடைய கடமையாக இருந்தது, மேற்படி தேதிக்குப் பின் படிவங்களை அச்சடித்து 1 ரூபாய் 30 பைசாவுக்கு அரசால் விற்கப்படுகின்றது. இந்தப் படிவத்தில் பதிவு செய்யக் கொண்டுவரும் நகலை எழுதி மூலப் பத்திரத்துடன் பதிவு செய்யும்போது கொடுக்கப்படுகிறது. இந்த முறையால் காலதாமதம் தடுக்கப்படுகிறது. பொதுமக்களுக்கு பதிவு செய்து கொடுத்த பத்திரங்களைத் திரும்பப் பெறுவதிலும் காலதாமதம் ஆவதில்லை. மேலும் பத்திரத் தாள்கள் தாராளமாக கிடைக்கவில்லை என்ற புகார்கள் ஏதும் இதுவரை அரசுக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பத்திரங்களை நகல் எடுக்கின்ற நேரத்திலே சில பிரச்சினைகள் வருகின்றன. அந்தப் பிரச்சினைகளைப் போக்குவதற்கு ஒரு 100 வார்த்தைகளுக்கு 50 பைசா வீதமும் 600 வார்த்தைகளைக் கொண்ட ஒரு பத்திரத்திற்கு ரூபாய் 3 வீதமும் வசூலிக்கப்படுகிறது.

[முற்பகல் 11.40]

ஆனால் நகல் எடுக்கும் இயந்திரத்தை உபயோகித்தால் ஒவ்வொரு 100 வார்த்தைகளுக்கும் 40 நயாபைசா வீதமும், 600 வார்த்தைகள் கொண்ட ஒரு பக்கத்திற்கு 2.50 பைசா வீதமும் வசூலிக்கலாம். ஒரு பத்திரத்தின் நகல் தேவை என்றால், அப்பத்திரத்தை நகல் எடுக்கும் இயந்திரத்தில் வைக்க வேண்டும். நகல் எடுக்கத் தேவைபடும் காகிதத்தை கீழ் பகுதியில் வைத்து இயந்திரத்தை இயக்கினால், அப்பத்திரத்தின் நகல் அப்படியே காகிதத்தில் விழும். இதன் மூலமாக தேவைப்பட்ட அளவு மிக வேகமாக நகல்கள் எடுக்க முடியும். 20 சார் பதிவாளர் அலுவலகங்களில் இவ்வகை இயந்திரங்களை 4 லட்சத்து 17 ஆயிரத்து 15 ரூபாய் செலவில் வைப்பதற்கான கருத்துரு ஒன்று அரசின் ஆய்வில் இருக்கிறது. அது அங்கீகரிக்கப்பட்டு, அதிலிருந்து நகல்கள் எடுப்பது திருப்திகரமாக இருந்தால் மேலும் பல சார் பதிவாளர் அலுவலகங்களில் படிப்படியாக அமுல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 14] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

மாண்புமிகு உறுப்பினர்கள் நாகர்கோவில் பகுதியிலே நிலவுகிற ஒரு விவரத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் பூங்காவனம் அவர்கள் எடுத்துச் சொன்னார். பத்திரப் பதிவு சட்டத்தின் 28வது பிரிவின்படி ஒரு சார்பு அலுவலகத்தில் பத்திர பதிவு செய்வதற்கு அப்பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் சொத்து. முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியோ அச்சார்பு பதிவாளர் அலுவலகத்திற்குக் கொடுக்கப் பெற்றிருக்கும் எல்லைப்பகுதிக்குள் இருத்தல் வேண்டும். அதன்படி தமிழ்நாட்டிலும் வேறு மாநிலங்களிலும் சொத்து வைத்திருப்பவர்கள், சம்பந்தப்பட்ட சொத்துக்கள் சம்பந்தப்பட்ட பத்திரங்களை அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப தமிழ்நாட்டிலோ அல்லது வேறு மாநிலங்களிலோ பதிவு செய்து கொள்ளலாம். மேலும் பிரிவு 30(2)ன் படி சென்னை, பம்பாய், டெல்லி, கல்கத்தா போன்ற நகரங்களில் உள்ள பகுதிகளில் பத்திரங்களில் கண்டுள்ள சொத்துக்கள் எங்கு இருந்தாலும் அதைப் பதிவு செய்யலாம். எனவே தமிழ்நாட்டில் மட்டுமே பதிவு செய்ய வேண்டும் என்று நாம் பத்திரப் பதிவாளர்களை நிச்சயமாக வற்புறுத்த முடியாது. ஆனால், தமிழ்நாட்டில் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவு திட்டம் மூலமாக, நான் ஏற்கெனவே சொன்னது போல 40 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு வருமானமாக வருகிறது. பத்திரங்களை வேறு மாநிலங்களில் பதிவு செய்வதால் குறிப்பாக நாகர்கோவிலில் இருப்பவர்கள், கேரள மாநிலத்தில் பதிவு செய்கிறார்கள். இதன் காரணமாக ஓரளவு இழப்பு ஏற்படுகிறது. என்றாலும், அது மிகவும் குறைவாகவே இருக்கிறது. கிட்டத்தட்ட ½ சதவீதம்தான் அப்படி வேறு மாநிலங்களுக்குச் செல்கிறது. அப்படி கன்னியாகுமரி மாவட்டத்தில்தான், 90 பங்கு அதிகமாக உள்ளது. காரணம் கன்னியாகுமரி மாவட்டத்தின் பெரும் பகுதிகள் கேரள அரசின் பகுதிகளாகவே சமீபகாலம் வரை இருந்து வந்தன. ஆகவே, அங்குள்ளவர்களுக்குக் கேரள மாநிலத்திலேயும், தமிழ் நாட்டிலேயும் சொத்துகள் உள்ளன. ஆனால் இத்தகைய நிலை காலப் போக்கில் படிப்படியாக மாறிவிடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்

இறுதியாக பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்தவரையில் 1981-82 ஆம் ஆண்டில் பல புதிய திட்டங்களை அமுலாக்கலாம் என்று தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. ஏற்கெனவே நான் சொன்னது போல் இரு மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களை அமைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக 15 சார் பதிவாளர் அலுவலகங்களும் திறக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போல பத்திரத் துறை, தலைமை அலுவலகங்களில் உள்ள வேலை பளுவைக் கருத்தில் கொண்டு, நிர்வாகத்தில் மேலும் சீர் செய்யும் நோக்கத்தோடு 4 துணை பதிவு அலுவலரை நியமிக்க இருக்கிறது. அதேபோன்று 100 இராக்காவலாளர்களையும், 50 இளநிலை

உதவியாளர்களையும் நியமிக்கக் கருதப்பட்டுள்ளது. அதற்கான உத்தரவுகளை அரசு வழங்கியிருக்கிறது. பதிவுத் துறை கணக்கு அலுவலகத்திலே, நேர்முக உதவியாளராக முதுநிலை கணக்கு அதிகாரி ஒருவரை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக பலதரப்பட்ட சட்டங்களை அமுல்நடத்தவும், பதிவு அலுவலருக்கு சட்ட நுணுக்கங்களில் உதவி செய்யவும், துணைப் பதிவுத் துறைத் தலைவரின் தரத்தில் சட்டத் தகுதியுடைய ஒரு சட்ட அலுவலரை நியமிக்க இருக்கிறோம்.

பதிவுத் துறையைப் பாதுகாப்பதற்காக, 113 இரும்பு அலமாரிகளை வாங்கி பதிவு இருப்பு அறையில் வைப்பதற்காக ரூபாய் 2 லட்சம் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதனைப் போலவே பொதுமக்களுடைய நலனுக்காக பல வசதிகளை செய்ய இருக்கிறோம். அதனைப் போலவே, இவ்வாண்டில் 3 மாவட்டப் பதிரப்பதிவு அலுவலகங்களுக்கும், 10 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் முதல் கட்டமாக தொலைபேசி வசதி செய்து கொடுக்க அரசு உத்தேசித்திருக்கிறது. (குறுக்கீடு)

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதியதாக அலுவலர்களை நியமிக்க அரசு ஆணையிட்டதை சொல்கிறார்கள். ஆனால் கடந்த காலத்திலே, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்குக் கொடுக்க வேண்டிய உத்தியோகங்கள், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட விகிதாசாரத்திலே கொடுக்கவில்லை என்பது உண்மையா? அது மட்டுமல்ல, ஏற்கெனவே கொடுக்கப்பட்ட உத்தியோகங்களில் பதவி உயர்வுகளும் சரியானபடி, அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிற விகிதாசாரத்திலே கொடுக்கப்படவில்லை என்பது ஐ.ஜி ஆப் ரிஜிஸ்டிரேஷன் ஆபிஸிலேயே தகவல் சொல்கிறார்களே, அமைச்சர் அவர்கள் இந்த ஓராண்டில் 3 முறை சொல்லியும் கூட, இந்த ஒதுக்கீடு சரியானபடி வழங்கவில்லை என்பது உண்மையா? அதை எதிர்காலத்தில் போக்குவதற்காகவாவது அரசு ஏதாவது ஆணை கொடுத்துள்ளதா என்று அறியவிருப்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட விவரங்கள் என்னிடத்தில் இப்போது இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வினை மனதில் வைத்துக் கொண்டு, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கிறேன்.

அடுத்து, பால்வள துறையைப் பொறுத்து சில விவரங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் 1958 ஆம் ஆண்டுமுதல் பால்வளத் துறையை நிறுவி, தமிழகத்தின் பால்வள பெருக்கத்திற்காக பல நல்ல முயற்சிகளை, கடந்த 23 ஆண்டுகளாக அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.



குறிப்பாக இன்று தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, முகவை, கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் அரசு நிதி உதவியுடன் இந்தக் காரியங்கள் இன்று நடைபெற்று வருகின்றன. செங்கை, தென்ஆற்காடு, வடஆற்காடு, சேலம், பெரியார், தர்மபுரி, கோவை, நீலகிரி, மதுரை மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் நிதி உதவியுடன் ஆக்கப்பணிகள் செயல்படுதத்ப் படுகின்றன.

அதேபோன்று ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பால் பண்ணைத் திட்டங்களுக்காக மொத்தமாக 5.80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பால் பண்ணைத் திட்டங்களுக்கான பெரும் நிதி ஆதாரங்கள் வங்கியினரிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் பெறப்படும். தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், கன்னியாகுமரி, மாவட்டங்களில் பால் உற்பத்தி சேகரிப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இந்த மாவட்டங்களில் கால்நடை மருத்துவ உதவி ஊர்திகளும் உபயோகப்படுத்தப்படும். திருநெல்வேலியில் ஒரு திரவ நைட்ரஜன் ஆலை ஏற்படுத்தப்படும். புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் பால் பதப்படுத்தும் வசதியும், பால் குளிர்விக்கும் சாதனமும் ஏற்படுத்தப்படும். ரூ. 5.80 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதால் அந்த நிதி ஆதாரத்தோடு இந்தத் திட்டங்கள் எல்லாம் ஐந்தாண்டுக் காலத்தில் குறிப்பிட்ட மாவட்டங்களில் நிறைவேற்றப்படும்.

அடுத்து, கடந்த பத்து ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட முதல் பால் பெருக்கத்திட்டம் நடைபெற்றுவருகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் ரூபாய் 16 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பல திட்டங்கள் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

1872-ம் ஆண்டில் பால் கொள்முதல் இந்த ஒன்பது மாவட்டங்கள் பொறுத்தவரையில் நாள் ஒன்றுக்கு 46.000 லிட்டராக இருந்தது. 1977-ல் அது 1,67,000 லிட்டராக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு மூன்று லட்சம் லிட்டராக பால் கொள்முதல் உயர்ந்துள்ளது. உபரி காலத்தில் பால் கொள்முதல் நாள் ஒன்றுக்கு நான்கு லட்சம் லிட்டராகும்.

பால் விற்பனை சென்னையில் 1973-ம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 81,000 லிட்டராக இருந்தது. 1977—ல் அது 1,90,000 லிட்டராக இருந்தது. 1981-ல், நடப்பாண்டில் 2,50,000 லிட்டராக சென்னையைப் பொறுத்தவரையில் உயர்ந்திருக்கிறது. மொத்தத்தில் மதுரையும் சென்னையும் சேர்ந்து பால் விற்பனை நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய 3,40,000 லிட்டராக உயர்ந்துள்ளது.

விவசாயிகளுக்குப் பால்பெருக்குத் திட்டத்தின் காரணமாக பல்வேறு நலன்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக இதிலே ஐயாயிரம் விவசாயிகள் இந்த முதல் பால்பெருக்குத் திட்டத்தில் பயன் அடைந்துள்ளார்கள். அதாவது 1973-ல் பயன் பெற்றிருந்

தார்கள். முதல் பால்பெருக்குத் திட்டத்தின் விளைவாக ஒன்பது மாவட்டங்களில் பால் உற்பத்தி பெருகி, பால் குளிர் செய்யும் வசதி பெருகி, மூன்று இலட்சம் விவசாயிகள் அதனால் பலன் பெறுகிறார்கள். 1973 ஆம் ஆண்டு அந்த ஒன்பது மாவட்டங்களில், பால் வியாபாரத்தில் ஈடுபட ஐயாயிரம் விவசாயிகள் பயன் அடைந்தார்கள். ஏறத்தாழ 11 கோடி ரூபாய் செலவு செய்த பிறகு இன்று மூன்று லட்சம் விவசாயிகள் அதனால் பலனடைகிறார்கள்.

பால் கொள்முதல் விலை—ஆண்டு ஒன்றுக்குக் கீழ்க்கண்டவாறு தொகை கொடுக்கப்பட்டுள்ளது. 1973-ம் ஆண்டில் அந்த விவசாயிகளுக்கு ரூ. 130 இலட்சம் கொடுக்கப்பட்டது. 1978-ல் ரூ. 1220 லட்சம் கொடுக்கப்பட்டது. 1981-ல் இரண்டாயிரம் லட்சம் ரூபாய் மூன்று லட்சம் விவசாயிகள் முதல் பால்பெருக்குத்திட்டத்தின் வாயிலாக பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

சென்னையில் அம்பத்தூரில் நாள் ஒன்றுக்கு இரண்டு லட்சம் லிட்டர் பால் பதப்படுத்த உற்பத்தித்திறன் உள்ள ஒரு பண்ணை மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தக் காலத்தில் துவக்கப்பட்டது. மதுரைப் பால்பண்ணையில் உற்பத்தித் திறன் நாள் ஒன்றுக்கு 56,000 லிட்டரிலிருந்து 1,50,000 லிட்டராக விரிவு படுத்தப்பட்டு ஒரு பால்பவுடர் தொழிற்சாலை ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் அங்கே நிறுவப்பட்டது அந்தக் காலத்தில். ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் ஒரு லட்சம் லிட்டர் பால் பதப்படுத்தவும் அதை பால் பவுடர், வெண்ணெய் போன்ற பொருள்களாக மாற்றக் கூடிய வசதியுடன் உள்ள ஆலை மூன்று கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது, ஈரோட்டில் நாள் ஒன்றுக்கு 100 டன் உற்பத்தி செய்யும் வசதியுடன் ஒரு கால்நடை தீவன ஆலை ஒரு கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டு 16-11-1980-ல் புரட்சித் தலைவர் அவர்களால் துவக்கப்பட்டது.

[முற்பகல் 11.50]

பெரியார் மாவட்டத்தில் நிறுவப்பட்ட இந்தத் தொழிற்சாலையினால் ஏறக்குறைய 200 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக 30,000 விவசாயிகள் பயனடைவார்கள். சேலத்தில் ஒரு புதிய பால் பண்ணை நாளொன்றிற்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்த, பால் பொடி மற்றும் வெண்ணெய் போன்ற பால் பொருள்கள் தயாரிக்கும் வசதிகளுடன் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்டு வருகிறது. சேலம் பால் பண்ணை 1982 ஆம் ஆண்டில் செயல்படும். சேலம் பால் பண்ணையின் மூலம், சேலம் மாவட்டத்தில் 30,000 விவசாயிகள் பயன் பெறுவார்கள். கன்று வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இது வரையில் 15,000 கன்றுகள் சேர்க்கப்பட்டுள்ளன. குறைந்த நிலமுடைய 15,000 சிறு விவசாயிகளும் மற்றும் நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களும் இத்திட்டத்தினால் பயனடைகிறார்கள். மேலும், 4,000 கன்றுகள் சேர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுவரையில் ஏறக்குறைய 183 இலட்சம் ரூபாயை மானியமாக இந்தத் திட்டத்திற்கு அரசு நல்கியிருக்கிறது.



அடுத்து, முதல் பால் பெருக்குத் திட்டம் கடந்த மார்ச்சு 31 ஆம் தேதியன்று முடிவுற்று, ஏப்ரல் முதல் நாளிலிருந்து இரண்டாம் பால் பெருக்குத் திட்டம் அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம், இந்த இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்திற்கு இந்தியா முழுவதிலும் 485 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாட்டிற்கு 12-ல் ஒரு பங்கான ரூபாய் 40 கோடி ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி 40 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பெருங்காரியம். ஏற்கனவே, முதல் பால் பெருக்குத் திட்டம் முடிவடைந்து, இப்போது இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்திற்கான காரியங்களைத் தொடங்குவதற்காக பலத் திட்டங்கள் போட்டுச் செய்வதற்கு இந்த 40 கோடி ரூபாய் முதலீடு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படித் திட்டங்கள் போட்டு, பால் உற்பத்தியைப் பெருக்குகின்றபோது, 1980 ஆம் ஆண்டு நாள் ஒன்றுக்கு 22.8 இலட்சம் லிட்டர்களாக இருப்பது, ஐந்தாண்டுகள் முடிவுற்ற பிறகு, 1986 ஆம் ஆண்டு 34.8 இலட்சம் லிட்டர்களாக உயரும் என்று கணக்கு போடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, இந்த உற்பத்தியினால் ஏறக்குறைய 5,000 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் நிறுவப்படும். இரண்டாவது பால் பெருக்கத் திட்டத்தினால் பயன்பெறும் தற்போதுள்ள 3 இலட்சம் கறவை இனங்கள் ஏறக்குறைய 13 இலட்சமாக உயரும். அந்த அளவுக்கு 1986லே 13 இலட்சம் கறவை இனங்கள் இதற்குப் பயன் படுத்தப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். இப்படி 5,000 கிராமங்களிலே பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவி செயல்படும்போது, ஏறக்குறைய 5,00,000 விவசாயிகள் இதனால் பயனடைவார்கள் என்றும், இது தவிர இதனால் பல துறைகளில் 3,000 பேர்களுக்கு நேரடியான வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற விவரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, இரண்டாவது பால் பெருக்குத்திட்டத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தங்களுடைய உணர்வுகளை எடுத்துச்சொல்லி, தங்கள் தங்கள் பகுதிகளிலே அந்தத் திட்டத்தை விரிவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். நெல்லை மாவட்டம், அதைப்போல் சென்னை, மற்றும் கோவை, வேலூர் போன்ற பல்வேறு பகுதிகளைப் பற்றிய விவரங்களை

எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, இன்றைக்குக் குளிர் நிலையங்கள் திறன், சில்லிங் சென்டர்களின் கப்பாசிடி நாள் ஒன்றுக்கு 2.80 இலட்சம் லிட்டரிலிருந்து 4.50 இலட்சமாக உயரும். இதற்காக 6 புதிய குளிர் சாதன நிலையங்கள் விரிவாக்கப்படும். ஆனால் அவைகள் எங்கு விரிவாக்கப்படும் என்பது குறித்து பின்னால் முடிவெடுக்கப்படும்.

இன்றைக்கு அம்பத்தூர் பால் நிலையம் நாள் ஒன்றுக்கு 2 இலட்சம் கொண்டதாக இருக்கிறது. இந்த 5 ஆண்டுகள் முடிவடையும்போது. அது 4 இலட்சமாக உயரும். அதைப் போலவே, வேலூரில், சத்துவாச்சேரி பால் பண்ணையின் உற்பத்தித் திறன் நாள் ஒன்றுக்கு 30,000 லிட்டர் அளவுக்கு இன்றைக்கு இருக்கிறது. இது ஐந்தாண்டுகளுக்குப் பிறகு ஒரு இலட்சம் லிட்டராக உயரும், அதைப்போலவே, ஈரோட்டில் இன்றைய உற்பத்தித் திறன் 1 இலட்சம் லிட்டர் என்பதிலிருந்து 3 இலட்சம் லிட்டராக உயரும். கோயம்பத்தூரில் நாள் ஒன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தப்படும் புதிய பால் பண்ணை. இந்தத் திட்டத்தின் மூலம் அமைக்கப்படும். சேலத்தில் நிறுவப்படவிருக்கும் புதிய பால் பண்ணை 2 இலட்சம் லிட்டர் கொண்டதாக இருக்கும். மதுரையில் தற்போது 1.5 இலட்சம் லிட்டர் என்ற அளவு, 2.50 இலட்சம் லிட்டராக உயரும். 2 புதிய கால்நடைத் தீவன ஆலைகள் மாண்புமிகு உறுப்பினர் வட ஆற்காடு சுந்தரம் அவர்கள் அதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நாள் ஒன்றுக்கு 100 டன்உற்பத்தி திறனுள்ள 2 புதிய கால்நடை தீவன ஆலைகளை அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். பிறகு எந்த இடத்தில் அது துவக்கப்படும் என்பதை அரசு முடிவு எடுக்கும். தற்போது ஈரோட்டிலே கடந்த நவம்பர் மாதம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் துவக்கப்பட்ட, அந்த ஆலையினுடைய உற்பத்தித் திறன் வருகிற ஐந்து ஆண்டுகளுக்குள் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் உதகை மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில்நாள்ஒன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் திறனுள்ள ஒருபுதிய பால் பண்ணையை இரண்டு கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்தப் பண்ணையில் பால் ஆடை கட்டிகள் தயாரிக்கும் வசதியும் இருக்கும். இந்த பண்ணையால் நீலகிரி மாவட்டத்திலிருக்கிற 16 ஆயிரம் விவசாயிகள் பலன் பெறுவார்கள். அதைப் போலவே வறட்சிப்பகுதி சிறப்புத் திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரியில் ஏறத்தாழ மூன்று கோடி ரூபாய் முதலீட்டில் ஒரு இலட்சம் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட பால் பொடி தயாரிக்கும் ஒரு புதிய தொழிற்சாலை அங்கே நிறுவப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி தொழிற்சாலை 1982ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாகச் செயல்படத் துவங்கும் என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



அடுத்து பால் விற்பனை (டிஸ்ட்ரிபியூஷன்). இந்த மாநிலத் தில் இரண்டாவது பால் பெருக்கத் திட்டத்தின்போது ஒரு இலட்சத்திற்கு மேலாக ஜனத்தொகையுள்ள எல்லா நகரங் களிலும் பால் மற்றும் பால் பொருள்கள் விநியோகம் செய்யப் படும். பல உறுப்பினர்கள் சொன்னார்கள், இன்றையதினம் கோவை, சேலம், மதுரை, சென்னை போன்ற பெரிய நகரங் களில்தான் இவைகள் கிடைக்கின்றன. தாலுகா தலைநகரங் களிலும், மற்ற பெரிய நகரங்களிலும், அதற்கு அப்பாலும் இருக் கிற இடங்களில் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அதனை மனதில் வைத்துக் கொண்டு ஒரு இலட்சத்திற்கு மேலாக ஜனத்தொகை உள்ள எல்லா நகரங்களிலும் பால் மற்றும் பால் பொருள்கள் விநியோகம் செய்யப்படும். மதுரை, கோவை, திருச்சி போன்று முக்கிய நகரங்களைத் தவிர, சேலம், திருநெல் வேலி, ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர், நாகர்கோவில் போன்ற நகரங்களில் இந்தத் திட்டம் தீவிரமாகச் செயல்படும். அதோடு இரண்டாவது பால் பெருக்கத் திட்டம் செயல்படும் ஒன்பது மாவட்டங்களில் 50 ஆயிரத்திற்கு மேல் ஜனத்தொகை உள்ள எல்லா நகரங்களிலும் பால் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்து சென்னை நகரத்தில் உள்ள பண்ணைகள் மூலம் நாள் ஒன்றுக்கு சென்னைக்குத் தேவையான ஆறு இலட்சம் லிட்டர் பாலில் இன்றைக்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் லிட்டர் பால் விநியோகிக்கப்படுகிறது. இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் 1986-ஆம் ஆண்டு முடிவுறும்போது சென்னை பால் பண்ணைகளின் மூலம் நாள் ஒன்றுக்கு சென்னை நகர வாடிக்கை யாளர்களுக்கு 4 இலட்சத்து 50 ஆயிரம் லிட்டர் பால் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் சென்னை யினுடைய பால் விற்பனை மொத்தமாக வழங்கும் தானியங்கி நிலையத்தின் மூலமாகச் செயல்படும். தற்போது 13 தானியங்கி நிலையங்கள் இருக்கின்றன. இவை 50-ஆக ஓராண்டிற்குள் உயரும். இந்த தானியங்கி நிலையங்கள் மட்டுமே நாள் ஒன்றுக்கு 75 ஆயிரம் லிட்டர் பாலை சென்னை நகரத்திலே விநியோகம் செய்ய முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத் திற்கு கொண்டு வருகிறேன்.

அடுத்து சில குறைபாடுகளை உறுப்பினர்கள் சொன்னார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் பூங்காவனம் அவர்கள் குறிப் பிட்டார்கள். பாலைக் கொள்முதல் செய்கின்றகூட்டுறவுச் சங்கத் திலிருந்து 'பில்லிங் சென்டருக்கு' கொண்டு செல்கிற நேரத் திலே ; 'பில்லிங் சென்டரிலிருந்து 'டைரிக்கு' எடுத்துச் செல்கிற நேரத்திலே; 'டைரியிலிருந்து' அதை பதப்படுத்துகிற நிலைக்குப் பிறகுவிநியோக இடங்களுக்கு செல்லக்கூடிய நேரத்திலே, இப்படி பல காலக்கட்டங்களில் சில முறைகேடுகள், சில தவறுகள் நடை பெறுகின்றன என்று குறிப்பிட்டார். மற்ற பல உறுப்பினர்களும்

வெட்டுத் தீர்மானங்களின் மூலம் எடுத்துச் சொன்னார்கள். அதற்கு சில விவரங்களைத் தருவது எனது கடமையென கருதுகிறேன். சென்னை, மதுரை போன்ற முக்கிய நகரங்களில் பாலை பதப்படுத்தி கண்ணாடி புட்டிகளில், பாலித்தீன் பைகளில் நிரப்பியும், தானியங்கி இயந்திரங்கள் மூலமாகவும் நுகர்வோருக்கு விநியோகம் செய்ய, கிராமங்களில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மூலம் பாலை சேகரித்து குளிர் நிலையங்களுக்குப் பால் கொண்டு வரப்படுகிறது. பால் குளிர் நிலையங்களில் குளிர் படுத்தப்பட்டு சென்னை, மதுரை போன்ற நகரங்களுக்குப் பால் சேகரிக்கும் வண்டிகள் மூலமும், ரெயில் டாங்கர்கள் மூலமும் கொண்டு வரப்பட்டு, பண்ணையில் மேலும் நிலைப்படுத்தப்பட்டு பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு செயல்படும்போது பல நிலைகளில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அவைகளைக் கடுமையான சோதனைகள் மூலமாகத் தவிர்க்கத் தக்க நடவடிக்கைகளை, தமிழக அரசு எடுத்து வருகிறது. குறிப்பாக பாலை பல நிலைகளில் கையாளுவதில் உள்ள ஒழுங்கீனங்களை, மற்ற குறைகளைத் தவிர்க்க, அதற்கான நடவடிக்கை எடுக்க ஒரு கண்காணிப்பு பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் புதிதாக கடந்த மார்ச்சு மாதம் 2-ம் தேதியிலிருந்து காவல் துறையிலிருந்து மாவட்டக் காவல்துறை அதிகாரி கண்காணிப்புப் பிரிவுக்கு தலைமை அதிகாரி பொறுப்பு ஏற்றிருக்கிறார்.

[நண்பகல் 12.00]

**மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு அமைச்சரின் பதிலுரை முடியும்வரை மானியக் கோரிக்கைகளுக்கான நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மிகவும் சிரமப்பட்டு எல்லா விளக்கத்தையும் சொல்லவேண்டுமென்று அறிக்கையைப் படிக்கிறார்கள். எனக்கும் ஓரளவுக்கு அனுபவம் இருக்கிற காரணத்தினால் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தக் கருத்துக்களிலே பெரும்பாலான கருத்துக்கள் முன்னதாக இந்த அவைக்கு தரப்பட்ட அறிக்கையிலே இடம்பெற்று இருக்குமானால் அமைச்சர் அவர்களுக்கு இவ்வளவு சிரமம் கிடையாது. உறுப்பினர்களுக்கும் இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து அவர்கள் சொல்லவேண்டிய கருத்துக்களை அந்த அடிப்படையிலே சொல்லியிருக்க முடியும். இப்போது அமைச்சர் சொன்னதற்குப் பின்னாலே வாதம் வரப்போவதில்லை. ஆகவே பெரும்பாலான கருத்துக்கள் அறிக்கை கருத்துக்கள். ஆகவே அந்தக் கருத்துக்களை முன்கூட்டி வைக்கிற முறையை அமைச்சர் பின்பற்றி இருப்பாரானால் இந்த அவைக்கு அவர்கள் தரவேண்டிய கருத்துக்களைமுன் கூட்டி தந்து



அதன்மூலமாக அங்கத்தினர்கள் சொல்லக்கூடிய கருத்துக்களை ஏற்று புதிய கருத்துக்கள் மேலும் இருந்தால், சொல்லியிருப்பாரானால் இந்த வாதம் இன்னும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்க அறிக்கையிலே சில விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் சில விளக்கங்களைச் சொல்கிறேன். இரண்டாவது பால்வள திட்டத்திலே முதல் பால் பெருக்குத் திட்டத்திலே என்ன நடைபெற்றிருக்கிறது என்பது பற்றியும் ஹேண்டிலிங் பிரச்சினைபற்றியும் இங்கேசொன்னார்கள். டிஸ்டிரிபியூடிங் பிரச்சினைபற்றிச் சொன்னார்கள், அதைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

**திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்லக் கூடாது என்பதல்ல. அதிலே அடிப்படையான கருத்துக்கள்—அந்தத் துறையிலே 2 ஆண்டுக்காலத்திற்கு முன்னாலே, ஒரு ஆண்டுகாலத்திற்கு முன்னாலே 6 மாதங்களுக்கு முன்னாலே, நடைமுறைக்குவந்தகருத்துக்கள்பலவற்றைஇப்போது அமைச்சர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை அச்சடித்து தரப்பட்டிருக்கிற அந்த அறிக்கையிலேயே தந்திருப்பார்களானால் நன்றாகப் புரிந்து கொண்டு உறுப்பினர்கள் பங்கு ஏற்று இருக்க முடியும். இப்போது புதிதாகச் சொல்கிறபொழுது மறுபடியும் வாதம் ஏற்படமுடியாது. அதுபற்றி ஏதாவது சந்தேகம் எழுந்தால் எழுப்புவதற்கு நேரம் இல்லை. அமைச்சருக்கும் அதனாலே சிரமம், அங்கத்தினர்களுக்கும் மன நிறைவு அளிக்கக்கூடிய செய்திகளை முன்கூட்டி தருவதற்கு வாய்ப்பில்லை, இப்போது தரப்படுகிற கருத்துக்கள் காரணமாக—என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவர் அவர்களே, மேலும் இந்தத் துறையிலே நடைபெற இருக்கின்ற முன்னேற்றகாரியங்களை இந்தகண்ணியமிக்கசபையின்கவனத்துக்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்பதால் சொல்கிறேன். இந்தச் சபையின் நேரத்தை எடுக்கவேண்டுமென்ற உள்நோக்கத்தோடு அல்ல. இங்கே ஹாண்ட்லிங் பிரச்சினை பற்றி சொல்கிறபோது என்ன கண்காணிப்பு வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கொள்கைபற்றி சில பிரச்சினைகளைச் சொன்னார்கள். அதற்கு நடைமுறையிலே அரசு என்ன செய்துகொண்டு இருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லி உறுப்பினர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களுடைய மேலான பரிசீலனைக்கு அது உதவும் என்ற அடிப்படையில்தான் விளக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த மார்ச் 2 ஆம் தேதி ஒரு போலீஸ் அதிகாரி அந்த வேலைகளைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார். சென்னையைப் பொறுத்தவரையில்

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1981 ஏப்ரல் 14

கடந்த மாத காலத்திலே ஏறத்தாழ 4 ஆயிரம் சோதனைகள் நடத்தப்பட்டு அவைகளின் மூலமாக 900-க்கு மேலான ஒழுங்கீனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை, கலப்படம் செய்தல், பணிநேரத்திற்கு வராமல் இருத்தல், அதைப் போலவே வாடிக்கையாளர்களிடத்திலே சரியாக நடக்காமை போன்ற பல குற்றங்களுக்காக பல நண்பர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்த அமைப்புகள் வாயிலாக மேலும் அவைகள் நடைபெறாமல் இருக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே சென்னையிலே நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் 100 வட்டங்களிலே அமைக்கப்படும் என்று இந்த அவையிலே சொன்னதைப்போன்று அவைகளை அமைப்பதற்காக தமிழகத்தினுடைய பால்வளத் துறையிலே ஒரு கூட்டுறவு இணைப் பதிவாளர் தலைமையிலே அதனுடைய திட்டம் நல்க இருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பால்வளத் துறை சம்பந்தமாக வெட்டுப் பிரேரணைகளை பல உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தந்தப் பகுதிகளிலே தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்றும், சில்லிங் சென்டர்களை உருவாக்கவேண்டும் என்றும், கூட்டுறவு சங்கங்களை உருவாக்கவேண்டுமென்றும் விவரங்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். சென்னை மாதவரத்திலே பால்வள நிறுவனத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் பிரச்சினைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வெட்டுப் பிரேரணைகளுக்கு எல்லாம் சுருக்கமாகப் பதில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்,

மாதவரத்திலே நடக்கும் வேலை நிறுத்தத்தைப் பற்றிப் பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். தமிழ்நாடு பால் வள நிறுவன ஊழியர் சங்கத்தினர் சில கோரிக்கைகளைத் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்குக் கடந்த நவம்பர் மாதத்தில் வைத்தனர். அந்தக் கோரிக்கைகளின் மேல் சென்னையில் உள்ள இரண்டாம் சரகத் தொழிலாளர் துறை துணை ஆணையாளர் அவர்கள் முன்னிலையில் 18-11-1980 மற்றும் 19-11-1980 ஆகிய தினங்களில் சமரசப் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெற்றது. திடீரென்று சமரசப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கும்போதே எவ்வித முன்னறிவிப்பும் இன்றி 19-11-1980 அன்று மாலை 7.30 மணி முதல் சென்னையில் உள்ள தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர் சங்கத்தினர் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் தொழில் தகராறுகள் சட்டப்படி ஒரு 'பொது சேவை' நிறுவனம். வேலை நிறுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் தொழில் தகராறுகள் சட்டத்தின்படி வேலை நிறுத்த அறிவிப்பு தொழிற்சங்கத்தினரால்



1981 ஏப்ரல் 14] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

கொடுக்கப்படவேண்டும். ஆனால் அச்சட்டப்படி வேலை நிறுத்த அறிவிப்பு தொழிற்சங்கத்தினரால் கொடுக்கப்படவில்லை. எனவே, இவ்வேலை நிறுத்தம், சட்டவிரோதமும் நியாயமற்றதுமாகும். மேலும், சமரச ஆணையர் முன் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கும்போதே வேலை நிறுத்தத்தை மேற்கொண்டது சட்ட விரோதமாகும்.

கடந்த ஆண்டில் தொழிலாளர்கள் நலனுக்காகப் பல நன்மைகள் செய்யப்பட்டு உள்ளன. அவற்றில் முக்கியமானது, ஏறக்குறைய 1,000 தினக்கூலி தொழிலாளர்கள் பால் விநியோகஸ்தர்களாகவும், இளநிலை மஸ்தூர்களாகவும், நிரந்தரப் பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். அத்தகைய நடவடிக்கையினால், இந்நிறுவனத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூபாய் 30 இலட்சத்திற்கும் மேலாகச் செலவினம் அதிகரித்து இருக்கிறது. தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர்கள் சங்கம் சென்னை உயர்நீதி மன்றத்தில் 12-2-1981 அன்று ஒரு ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ளது. என்றாலும், தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் இந்த அரசு மிகவும் அக்கறை காட்டும் என்பதனை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கால்நடைத் தீவனங்களுடைய விலை உயர்வைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு ஜனார்த்தனன் அவர்கள் கூறினார்கள். கால்நடைத் தீவனங்கள் விலை உயர்ந்திட்ட காரணத்தினால், சென்ற ஆண்டு பால் வாங்கும் விலை ஏற்கனவே கிராமங்களில் உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

குறைவாகப்பால் உற்பத்தியாகும் மாதங்களில் (லீன் மன்த்ஸ்) எப்பொழுது பால் உற்பத்தி குறைகிறதோ, அப்பொழுதும் இந்த அதிகபட்ச விலை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதனைப்போல, பாலின் தரத்தைக் கண்காணித்தலைப்பற்றி எடுத்துக்கொண்டால், உணவுக் கலப்படச் சட்டத்தின்கீழ் தரமான பால் விநியோகம் செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கப் பால் தர நிர்ணயப் பிரிவு ஒன்று தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தில் இயங்கி வருகிறது. அந்த நிறுவனம் இந்தப் பணியில் பாலின் தரத்தைக் கண்காணிப்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே, டெலிவரி ஷெட்யூல் பற்றி, இன்றைக்குப் பண்ணையிலிருந்து பல பல இடங்களுக்கு விற்பனைக்குச் செல்லும் நேரத்தில் தாமதமாக வருகிறது என்ற குறைபாட்டை, சென்னை போன்ற இடங்களில் உள்ள அந்தக் குறைபாட்டை, டெலிவரி ஷெட்யூலில் இருக்கின்ற குறைபாடுகளைப் பற்றிச் சொன்னாகள்.

சென்னையில் 55 பால் விநியோகிக்கும் வழித்தடங்கள் செயல் படுகின்றன. இந்தத் தடங்கள் 450 பால் டொப்போக்களுக்கும் 52 பாலகங்களுக்கும் பாலையும், பால் பொருள்களையும் விற்பனைக்கு வழங்குகின்றன. இந்தத் தடங்களைச் சரியான முறையில் ஏற்படுத்தி டெப்போக்களுக்கும் பாலகங்களுக்கும் குறித்த நேரத்தில் பாலை விநியோகம் செய்வதற்கு கம்ப்யூட்டர் உதவியுடன் ஆய்வு நடத்தப்படுகிறது. இந்த ஆய்வு முடிந்தவுடன் சென்னையிலுள்ள வழித்தடங்கள் சரிபடுத்தப் படும், சீர்படுத்தப்படும் என்பதனையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தில் கிடைக்கின்ற பாலில் சில நேரங்களில் வாடை வீசுகிறது என்ற ஒரு விவரத்தைச் சொல்கிறார்கள். சென்னையிலே கிடைக்கின்ற பாலில் வாடை வீசுகிறது, அதிலே பட்டர், ஆயில் போன்ற அந்த பட்டர் ஆயிலைப் போடுவதன் காரணமாக இன்றைக்கு வாடை வீசுகிறது, அதற்கு ஏதாவது மாற்று செய்ய வேண்டுமென்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சொல்லியிருக்கிறார்கள். கிராமப்புறங் களிலிருந்து சென்னைக்கு வருகின்ற பாலின் அளவு ஒரே நிலையில் இருப்பதில்லை. உபரி காலங்களில் தேவைக்கு மேலான பால் கிடைக்கிறது. ஆனால் பால்வற்றிய காலங்களில் அந்த அளவிற்குப் பால் கிடைப்பதில்லை. சென்னையினுடைய பால் விநியோக முறை சீராக ஆண்டுதோறும் இருக்கிறது. பாலை தேவைக்கேற்ப விநியோகிக்க கிராமப்புறங் களிலிருந்து வருகின்ற பாலுடன் பால் பொடியையும், வெண்ணெய் கொழுப்பையும் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. வெண்ணெய் கொழுப்பைப் பால் வற்றிய காலங்களில் அதிக அளவு உபயோகிக்க வேண்டியிருக்கிறது. இதனால் விநியோகிக்கும் பாலில் ஓரளவு வாடை ஏற்படுகிறது. இந்த நிலையைத் தவிர்க்க பாலிலிருந்து எடுக்கப்படும் கொழுப்பையே உபயோகிக்க முடியுமா என்பது தமிழக பால் துறையினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, பாலில் வருகின்ற அந்த வாடையைப் போக்கவும், அதைப்போல பாலினுடைய தரத்தை உயர்த்துவதற் காகவும், அதே நேரத்தில் காலதாமதம் இல்லாமல் வாடிக்கையாளர்களுக்குப் பால் கிடைப்பதற்காகவும் கம்ப்யூட்டர் மூலமாக என்னென்ன குறைகள் இருக்கின்றன என்றுகண்டுபிடித்து விரைவிலே அதற்கு ஆக்கபூர்வமான வழிமுறைகளையும் செய்யத்தக்க நடவடிக்கைகளை இன்றைக்குத் தமிழக அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டு, ஏதாவது பல கருத்துக்கள், பல உறுப்பினர்கள் விரும்பிய கருத்துக்கள், அவர்களுடைய வாதத்தின்பொழுது,



வெட்டுத் தீர்மானத்தின்பொழுது உருவாக்கிய அந்த உணர்வு களுக்கு நான் பதில் சொல்லவில்லை என்றாலும் கூட அவை களையெல்லாம் நான் கவனத்திலே கொண்டு, தக்க நடவடிக்கை எடுப்பேன் என்ற உறுதியைச் சொல்லி, இன்றைக்கு இந்த இரண்டு மானியங்களின் மீதான அந்த நிதியினை ஒதுக்கீடு செய்யுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்

(பிற்பகல் 12–10)

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பர்சேசிங்பிரஸை கிராமங்களிலே உயர்த்துவது குறித்து, நான் உட்பட மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளோம். சென்ற 1980–81-லே ரூ. 2 கோடிக்கு மேல் நஷ்டம் வந்திருக்கிறது என்றும், 1981–82-ல் ரூ. 2கோடிக்கு நஷ்டம் வரும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்பொழுது வறட்சி மிகுந்த நிலைமையிலே மாட்டுத் தீவனம் விலை ஏறியிருக்கிறது, கிடைக்காத நிலைமையிருக்கிறது. ஆகவே, பர்சேஸிங் தொகையை லீன் சீசன் முடிந்த பிறகு ஏற்றுவதை விட, இப்பொழுதே உயர்த்தினால் கிராம மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், மாதவரம் பால்பண்ணையில் பணியிலிருந்த 1,500 தொழிலாளர்களுக்கும் மீண்டும் வேலை கொடுத்து, அவர்களுக்கு வாழ்வளிக்க, அமைச்சரவர்கள் அதையும் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பால்வள நிறுவனத்திற்கும் சில பிரச்சனைகள் இருக்கின்றன. உங்களுக்குத் தெரியும், டீசலின் விலை ஏற்றங்கள், உபரிப் பொருள்களின் விலை ஏற்றங்கள், ஆகியவற்றின் காரணமாக, ப்ராசசிங் சிஸ்டத்தில், அடக்க விலை, அதிக அளவிற்கு உயர்ந்து கொண்டிருக்கிறது. என்றாலுங் கூட, அனுதாபத்தோடு உற்பத்தியாளர்களுக்கு ஒரு நியாயமான விலை கிடைக்க இந்த அரசு ஆவன செய்யும்.

அந்தப் போல் மாதவரம் தொழிலாளர் பிரச்னை பற்றிச் சொன்னார்கள். இன்றைக்குச் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். என்றாலுங்கூட அரசு பரிவோடு அந்தப் பிரச்னையை ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 6 பத்திர பதிவு எண்

திரு. செ. சிவசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திருவாளர்கள் ந. சிவஞானம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றவனாகக் கருதப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானிய கோரிக்கை எண் 6-பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,25,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மானியக் கோரிக்கை எண் 10-பால் வழங்கு திட்டங்கள்**

திருவாளர்கள் சு. பாலன், கு. ரமணி, எம். ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. உ. சுப்பிரமணியன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,04,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றுகோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது

**(இ) கோரிக்கை எண் 22-கால்நடை வளர்ப்பு**

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ 15,72,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

**திரு. சு. பாலன் :** துணைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்புக்காக பல புல் பூண்டுகளை வளர்ப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 15,72,49,000—இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

**திரு. சி. பழனிமுத்து:** துணைத்தலைவர் அவர்களே, ஆத்தூர் பெத்தநாயக்கன் பாளையத்திலுள்ள கால்நடை கேந்திர கிராம நிலையத்தில் ஜெர்சி, முர்ரா போன்ற உயர்தர மாடுகள் இருந்து செயல்படாமலிருப்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 15,72,49,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. டி. மணி:** துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் விளவங்கோடு தாலுக்கா, குழித்துறை கால்நடை கேந்திரத்திற்கு 3 பிரிஷியன் இனக்காளை வழங்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண்—22 கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 15,72,49,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.'

**திரு. தி கா. நல்லப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, மூன்று ஏக்கர் வரை உள்ள விவசாயிகளுக்கு, ஆடு, மாடுகள் வாங்க கொடுக்கப்படும் கால்நடைகளுக்கு பாதி ரூபாய் மானியமாகக் கொடுப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 15,72,49,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**(ஈ) கோரிக்கை எண் 30-சமூக நலன்**

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,74,65,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

**திரு. சு.பாலன் :** துணைத்தலைவர் அவர்களே, விதவைகளின் நல்வாழ்வுக்காகவும் அவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்காக சிறப்பு அம்சங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 30 சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 20,74,65,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

Thiru. S. Rajaraman: To discuss the need to upgrade the post of Superinentdent of the Vigilence Home at Katcheri Road Mylapore, Madras, to the rank of a Director of Correctional, Admini tration. I move

"That the allotment of Rs. 20,74,65,000 under Demand No. 30 Social welfaoe be reduced by Rs. 100."

திரு. கே. ஆர். சுந்தரம் : துணைத்தலைவர் அவர்களே, ஆதரவற்ற பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்க மாவட்டங்கள் தோறும் அரசு சிறிய தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க, கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண்—30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 20,74,65,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. மு. அப்பாதுரை : துணைத்தலைவர் அவர்களே, கோவில்பட்டி தாலுகா புங்கவர் நத்தம் கிராமத்தில் தாய்—சேய் நலவிடுதி ஏற்படுத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக்கோரிக்கை எண் 30 சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 20,74,65,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவைமுன் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக்குறிப்புகளை *நான்படித்ததாக குறிப்பேட்டில் ஏற்றிக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொன்னதற்குப் பின்னால் அதற்கான பதிலை நான் இறுதியில் கூறுகிறேன்.

திரு. ஏ. டி. குலசேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ச்சி, சமூகநலம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடையக் கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

[*155-213ம் பக்கத்தில் இணைப்புகள் III, IV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



கால்நடைகள் விவசாயப் பெருமக்களுக்கு ஜீவ நாடியாகும். அப்படிப்பட்ட கால்நடைச் செல்வங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதால் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கறவை மாடுகளுக்குச் சத்துணவாகப் பயன்படும் பருத்திக் கொட்டை, குருந்தவிடு, புண்ணாக்கு போன்றவைகளின் விலை மிகமிக அதிகமாக இருக்கிற காரணத்தால், சத்துணவுக்கு மானியமாக கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடந்த மூன்றாண்டுகளாக எருமை விந்து விநியோகம் இல்லாமல் இருக்கின்றது. இது குறித்து அரசாங்கத்தின் பார்வைக்குப் பலமுறை கொண்டு வரப்பட்டும் அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அடுத்து விவசாயப் பெருங்குடி மக்களிடம் இருந்து பெறுகின்ற பாலின் விலையை அதிகப்படுத்துவதன் மூலம் ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, கால்நடை வளர்ப்பில் அக்கறை ஏற்பட்டு கறவை மாடுகள் வளர்க்கின்ற மனப்பான்மை வளர அரசு கவனம் செலுத்த வேண்டும்.

மருந்துகளை டெண்டர் மூலமாக வாங்குவதினால் அதிகம் செலவாகிறது. அதை சென்ட்ரல் பர்ச்சேஸ் கமிட்டி மூலம், மத்திய கொள்முதல் கழகத்தின் மூலம் வாங்க வேண்டும். டெண்டரில் வாங்கினால் அதனுடைய தரம் குறைந்தும், விலை அதிகமாகவும் இருக்கின்றது. கால்நடை மருத்துவத்தில் நவீன மருத்துவத்திற்குத்தான் அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆனால் நாட்டு வைத்திய முறைப்படி பழங்கால வைத்திய முறைகளை ஊக்குவிக்கின்ற முறையிலே இந்த அரசாங்கம் நாட்டு வைத்திய முறைக்கு அதிக ஊக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே இருந்து அன்றாடம் அநேகமான கால்நடைகள் கேரள மாநிலத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன. குறிப்பாக கோவை மாவட்டத்திலிருந்து ஏராளமான கால்நடைகள் கேரளாவிற்குக்கொண்டு செல்லப்படுகின்றன. இது தவிர்க்கப்படவேண்டும். இந்த நிலை நீடித்தால் தமிழ்நாட்டிலே கால்நடைகளே இல்லாத நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஆடு வளர்ப்பு, கோழிப்பண்ணை, கறவை மாடு வளர்ப்பு போன்றவற்றிற்குச் சமூக நலத் துறை இன்னும் அதிகமான கவனம் செலுத்தி, அதிக நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் 500 கால்நடை மருத்துவ கிளைகள் தமிழகத்தில் இயங்காமல் இருக்கின்றன. மூடிக்கிடக்கின்ற எல்லா கால்நடை மருத்துவக் கிளைநிலையங்களிலும் கால்நடை ஆய்வாளர்களை

[திரு. ஏ. டி. குலசேகர்] [1981 ஏப்ரல் 14

நியமித்து அவைகளை இயங்கச் செய்யவேண்டும். கால்நடை ஆய்வாளர் பயிற்சியை உடனடியாகத் துவக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எல்லா மாவட்டங்களிலும் ஆட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை ஏற்படுத்த வேண்டும். ஆடு, கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டும். அந்தக்கூட்டுறவுச் சங்கங்களைப் பராமரிப்பதற்காகத் தனியாக ஒரு நிறுவனம் நிறுவப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு கால்நடைப் பண்ணைகள் 9 உள்ளன. இவை அனைத்தும் நஷ்டத்திலேயே இயங்குகின்றன. இந்த நிலையிலே கால்நடை வளர்ப்புக்கு மிகவும் குறைந்த அளவு நிதி ஒதுக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கால்நடை பராமரிப்புத் துறையில் பணியாற்றும் வேக்சினேட்டர்களுக்குப் பதவி உயர்வுக்கு வாய்ப்பு கொடுக்கும் வகையில் கால்நடை மருத்துவத்தில் அடிப்படை கல்வி போதிக்கப்பட வேண்டும்.

ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கப் பணிகளைக் கவனிக்க தனியாக கால்நடை ஆய்வாளர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கால்நடை ஆய்வாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் உரிமைகளை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்பு நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டித் தரவேண்டும். கால்நடை மருத்துவர்களுக்கு வாகன வசதிகள் செய்து தரவேண்டும். ஏனென்றால், நம் நாட்டில் 60,70 கிராமங்களுக்கு ஒரு கால்நடை மருத்துவ நிலையம்தான் உள்ளது.

(பிற்பகல் 12–20)

ஒரு கிராமத்தில் ஒரு கால்நடைக்கு நோய் வந்துவிட்டால், அல்லது ஏதேனும் உடல் நலக் குறைவு ஏற்பட்டு விட்டால், அந்த இடத்திற்கு மருத்துவரை அழைத்துவர வாடகை வண்டிகளைத்தான் மக்கள் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. அந்த மருத்துவர் வந்து பார்த்துவிட்டு, பின்னர் எழுதித்தருகிற மருந்தை வாங்கி வருவதற்காக அந்த விவசாயி 20 மைல் செல்ல வேண்டிய சூழ்நிலைகளும் இருக்கின்றன. ஆகவே, கால்நடை மருத்துவர்களுக்கு வண்டி வசதி ஏற்படுத்தித் தரவேண்டும். ஒவ்வொரு ஒன்றியத்திலும் உள்ள கால்நடைப் பராமரிப்பு இல்லங்களில் உள்ள கால்நடை உதவியாளர்களுக்கும் மருத்துவர் களுக்கும் வாகன வசதியும், தொலைபேசி வசதியும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவ ஆராய்ச்சிக்காகப் பயன்படும் ஒரு கருவியை 10–12 லட்ச ரூபாய் செலவில் அந்தக் கால்நடைப் பராமரிப்புத் துறையில் வாங்கி வைத்து இருக்கிறார்கள். அது இன்றையதினம் இயங்காமல் இருக்கிறது. அந்தக் கருவியை இயங்கச் செய்ய இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 14] [திரு ஏ. டி. குலசேகர்]

சுமார் 1 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்ட -டேப்கோ-கோழிவளர்ப்பு நிறுவனம் இன்றையதினம் 76 லட்ச ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. தொழில் நடத்தும் திறமை இல்லாதவர்கள். நிர்வாகத் திறமை இல்லாதவர்கள், அதிகமான அளவிற்கு சம்பளம் பெறும் அதிகாரிகள் அங்கே பணி செய்வதால் இன்றைக்கு அந்த நிறுவனம் நஷ்டத்தில் இயங்க வேண்டிய நிலைமையில் இருக்கிறது. இந்தக் கால்நடை பராமரிப்புத் துறையை இரண்டாகப் பிரித்து மருத்துவக் கல்வி வைத்தியம் என்று ஒரு துறையாகவும் அதில் கால்நடை மருத்துவ சர்ஜன்களை நியமித்து, முழுக்க முழுக்க அவர்கள் பொறுப்பில் விட்டுவிட வேண்டும்.

கால்நடை வளர்ச்சி சுகாதாரம் என்று ஒரு தனித் துறை உருவாக்கி, அவைகளைக் கால்நடை ஆய்வாளர்களின் பொறுப்பில் விட்டு விடவேண்டும். ஏற்கனவே மருத்துவத் துறையைப் பிரித்துள்ளது போல இந்தத் துறையையும் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

சமூக நலத் துறையில் கலைஞர் ஆட்சி இருந்த காலத்தில் கண்ணொளி வழங்கும் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம் போன்ற திட்டங்கள் இருந்தன. இந்த ஆட்சி காலத்தில் அவைகள் எல்லாம் செய்யப்படாமல் இருக்கின்றன. நீங்களாக எதைச் செய்யாவிட்டாலும், முன்பு இருந்த ஆட்சி செய்ததை ஒழுங்காகச செய்ய வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன்

குழந்தைகள் இந்த நாட்டின் எதிர்காலச் செல்வங்கள். அவர்களுடைய வளர்ச்சிதான் வருங்கால சமுதாயத்தின் உயர்வை பிரதிபலிக்கும் என்கிற அடிப்படையில் தான் மறைந்த மனிதருள் மாணிக்கம் நேரு அவர்களின் பிறந்த தினத்தைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடி வருகிறோம். பீடி சுற்றும் தொழிலில் சிறுவர்களை அதிகமாக பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக பீடி சுற்றும் தொழிலை அரசாங்கமும் அதிகமாக ஆதரித்து ஊக்குவித்துக் கொண்டுவருகிறது. இந்தத் தொழிலில் குழந்தைகளை பயன்படுத்தக்கூடாது என்று சட்டம் இருந்தபோதிலும், அது நடைமுறைப்படுத்தப் படவில்லை. அதை நடைமுறைப்படுத்த இயலாவிட்டாலும் அந்தக் குழந்தைகளுக்குப் போதிய வைத்திய வசதி, போதுமான அளவு ஊதியம் அளிக்க அறிவு மேம்பாடு அடைய கல்வி வசதி ஆகியவற்றை அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், நெசவுத் தொழில், கல் உடைக்கும் தொழில், கட்டிடம் கட்டும் தொழில், ரோடு போடும் தொழில், விவசாயக் கூலித் தொழில் ஆகிய துறையில் பணி புரியும் பெண்களுக்கு மருத்துவ வசதி, சத்துணவு, குழந்தை பேணும் காலங்களில் ஆகும் செலவு ஆகிய வற்றையும், மற்றும் வைத்திய வசதி போன்றவற்றையும், மற்றும்

[திரு. ஏ. டி. குலசேகர்] [1981 ஏப்ரல் 14

மகப்பேறு காலங்களில் ஆகின்ற அனைத்துச் செலவுகளையும் அரசாங்கமே சமூக நலத் துறை மூலம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக என்னுடைய தொகுதி தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. அங்கு ஆண்களும் பெண்களும் வேலைக்குப் போகின்றார்கள். ஆகவே அவர்களுடைய குழந்தைகளைப் பராமரிப்பதற்காக அங்கே இரண்டொரு குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும். தற்போது ஒன்று தான் உள்ளது. சிங்காநல்லூர் பகுதியில் அதிகமான தொழிலாளர்கள் இருப்பதால் அங்கே 3-4 குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் ஆங்காங்கு ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமூக நலத்துறை போதிய அளவிற்கு கால்நடை வளர்ச்சிக்கும் குழந்தைகள் பராமரிப்பிற்கும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

## 9. அறிவிப்பு.

### உறுப்பினரது உரையில் நீக்கப் பெற்ற பகுதிகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திரு அ. ரகுமான்கான் அவர்கள்மீது அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை திரு. வின்சென்ட் அவர்கள் எழுப்பி, பேசும்போது குறிப்பிட்ட சில வார்த்தைகளை, அவைக் குறிப்பைப் பார்த்து விட்டு நீக்குவதாகச் சொன்னேன். அதுபற்றிய என்னுடைய தீர்ப்பை இப்போது அளிக்கிறேன்.

* * * *

என்ற வார்த்தையை நீக்கிவிட உத்தரவிடுகிறேன். அதைப் போல * என்ற சொற்களையும் நீக்கிவிட உத்தரவிடுகிறேன். திரு வின்சென்ட் பேசிய மற்ற பகுதிகள் அவைக் குறிப்பில் இருக்கும்.

### வரவுசெலவுத் திட்டம் 1980—81
### வாக்கெடுப்பு—தொடர்ச்சி

**செல்வி வி, விசயலட்சுமி;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த 1981-82 ஆம் ஆண்டு கால்நடை வளர்ப்பு மற்றும் சமூக நலன் குறித்த மானியக் கோரிக்கையின் மீது எனக்கு பேச வாய்ப்பளித்ததற்காக முதலில் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இந்த மன்றத்திலே கோரிக்கை எண் 30-ன்கீழ் சமூக நலனுக்காக 1981-82 ஆம் ஆண்டுக்கு 20,74,65,000 ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று மாண்புமிகு சமூக நலத்துறை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1981 ஏப்ரல் 14] [செல்வி வி. விசயலட்சுமி]

அமைச்சரவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதிலே உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை வழங்குவதற்காக ஒரு திட்டத்தைச் சொல்லி, அதற்கு இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல 120 பார்வையற்றவர்களுக்கு வாழ்வளிக்கும் பொருட்டு சென்னையில் ஒரு நெசவுக் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்க அரசு முன்வந்திருப்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

500 காது கேட்கும் கருவிகள் வழங்குவதற்காக 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதும், உடல் ஊனமுற்றோர் நலனுக்காக 1981-82 ஆம் ஆண்டில் 203.98 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதும் வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

காது கேட்காதவர்களுக்கு அரசு இரண்டு பள்ளிகளையும் கால் ஊனமுற்றவர்களுக்கு பள்ளி ஒன்றையும் தொடங்க அரசு முன்வந்திருப்பதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

அரிசன பள்ளி ஒன்றையும் தொடங்க அரசு முன்வந்திருக்கிறது. இந்தத் துறையில் பல்வேறு சமுதாய நலத் திட்டங்கள் தொடங்க இருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இத்தகைய பலவேறு திட்டங்களை மக்களுடைய நலனைக் கருதி ஏற்படுத்திக் கொடுத்திருப்பது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள்தான் என்பதை மகிழ்ச்சியுடன் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

அதைப்போல மாண்புமிகு சமூக நல அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன், இந்தத் துறையில் பாலசேவிகா என்று அழைக்கப்படும் பெண்களும் ஆயாக்களும் குறைந்த அளவுக்கு ஊதியம் பெற்று வருகிறார்கள் அவர்களுக்கு எல்லாம் மிகக் குறைந்த ஊதியம்தான் வழங்கப்படுகிறது. இந்த ஊதியத்தைக் கொண்டு பாலசேவிகாக்களும், ஆயாக்களும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியவில்லை. இது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆகையால் அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சேலம் மாவட்டத்தில் கோழி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல் வட்டத்தில் அனங்காநத்தத்தில் ஒன்று ஆரம்பிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. அதைப் போல என்னுடைய தொகுதியான வீரபாண்டியில் கோழி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய இந்த இரு கோரிக்கைகளையும் ஏற்று

உரிய உத்தரவை உடனடியாகப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்,

(பிற்பகல் 12.30)

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் அவர்களே, கால்நடை மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாக பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். பொதுவாக இந்த ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக இராமநாதபுரம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து அந்த மாவட்டங்களுக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. 60 இலட்சம் ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுதிகளில் கறவை மாடுகள் வாங்குவதற்கும், ஆடுகள் வாங்குவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சின்னசேலம், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் போன்ற பகுதிகளில் கடுமையான வறட்சி இருப்பதால் அங்கே இருக்கக் கூடிய ஏழை எளியவர்கள் ஆடு மாடுகள் வாங்கக் கடன் வழங்க வேண்டும் என்று மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியையும் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு கடன் வழங்க அரசு முன்வரவேண்டும்.

இன்றையதினம் கால்நடைத்துறையிலே இருக்கக்கூடிய மாணவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள் என்று படித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அப்படிப் படித்தவர்களில் 300க்கும் மேற்பட்டவர்கள் வேலையற்று இருக்கிறார்கள் ஒன்றியங்களில் இருக்கக் கூடிய லைவ்ஸ்டாக் ஆய்வாளர்கள்தான் ஆங்காங்கே பணிபுரிகிறார்கள். அவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஒருபுறம் இருக்கின்றது. ஆனால் மருத்துவத் துறையிலே படித்து முடித்த கால்நடை டாக்டர்களுக்கு வேலை வாய்ப்புகள் கொடுக்கப்படவில்லை. அவர்கள் கிட்டத்தட்ட 6 ஆண்டுகள் மிகக் கஷ்டப்பட்டு பணம் செலவழித்துப் படிக்கிறார்கள் அப்படிக் கஷ்டப்பட்டு படித்த கால்நடை மருத்துவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு கொடுக்கப்படவேண்டும். ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய கால்நடை மருத்துவமனைகளிலே கால்நடை டாக்டர்களை நியமிக்கின்ற அளவுக்கு ஒரு உத்தரவை வழங்கி அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற அதனை நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து மற்ற மாநிலங்களில் எல்லாம் கால்நடை மருத்துவர்களுக்கும் மற்ற மருத்துவர்களுக்கும் ஒரே மாதிரியான சம்பளம் கொடுக்கப்படுகின்றது. ஆனால் தமிழகத்தில் மட்டும் கால்நடை மருத்துவர்களுக்கு, மற்ற மனிதயியல் மருத்துவர்களை விட குறைவான சம்பளம் கொடுக்கப்படுகின்றது. மனிதயியல் மருத்துவர்களுக்காவது தாங்கள் சொந்தமான





முறையிலே சம்பாதித்துக்கொள்ள வழிவகைகள் இருக்கின்றன. ஆனால் கால்நடை மருத்துவர்களுக்கு எந்தவிதமான அப்படிப்பட்ட வாய்ப்புக்களும் இல்லை. கால்நடைகள் வாய் பேசாமல் இருக்கும். அதேபோன்று அதன் மருத்துவர்களும் வாய் பேசாமல் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காகவா அவர்களுக்கு இதுவரையில் ஊதியஉயர்வு கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது? ஆகவே அவர்களுக்கு உரிய ஊதிய உயர்வுகொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் கால்நடை மருத்துவர்களுக்கு போதிய வேலை வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.

அடுத்து மனிதயியல் மருத்துவர்களின் கவுன்சில்களைப் பொறுத்தவரையில் அந்தத்துறையில் உள்ளவர்களே உறுப்பினர்களாகவும், தலைவராகவும் வருகிறார்கள். ஆனால் கால்நடைத் துறையின் கவுன்சிலில் மட்டும் ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி நியமிக்கப்படுகிறார். ஆகவே மற்ற துறைகளைப் போன்று இந்தத் துறைக்கும் அந்தத் துறையிலே அனுபவப்பட்ட ஒருவரை நியமிக்கின்ற முறை வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடைத் துறையைப் பொறுத்த வரையில் நியமிக்கப்பட்ட I. A. S. அதிகாரிகள் (இயக்குநர்) வெளி நாடுகளுக்குச் சென்று அங்குள்ள முறைகளை எல்லாம் அறிந்து வருகிறார்கள். அப்படிச் சென்று வந்த அவர்களின் பணி, அவர்களுக்காக செலவழித்தப் பணம் இவ்வளவும் வீணாகின்ற வகையிலே அவர்கள் வேறுத் துறைக்குச் செல்கிறார்கள். ஆகவே அந்தத் துறையினைச் சார்ந்த இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்களாக இருப்பவர்களையே முன்னுரிமை கொடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்பி தனிப்பயிற்சி அளித்து அந்தத் துறையினை நல்ல முறையிலே கிராமங்களில் செயல்படுத்துவதற்கு இயக்குநர்கள் அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்ற ஆண்டு 19. 6. 80 அன்று கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் ஒரு போராட்டத்தை அறிவித்தார்கள். அப்போது அத்துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்கள் சென்று அவர்கள் கோரிக்கை ஒரு வழியாக தீர்த்து வைக்கப்படும் என்று சொன்னார்கள் ஆனால் இது வரையில் தீர்த்து வைக்கப்படவில்லை. ஆகவே அதை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்றுக் கேட்டு கொள்கிறேன்.

அடுத்து மனிதர்களுக்காக செயல்படும் நடமாடும் மருத்துவ மனையைப் போன்று கால்நடைகளுக்காகவும் நடமாடும் மருத்துவ மனையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வீரிய விந்து பற்றிச் சொல்ல விரும்புகிறேன். செயற்கை முறையிலே அவற்றை பயன்படுத்துவதற்காக ஏற்பாடு செய்கின்ற வகையிலே அவற்றை அந்தந்த பகுதிகளிலேயே

பயன்படுத்த வேண்டும். இரண்டு மூன்று நாட்களுக்கு பத்தப்படுத்தி எடுத்துச் செல்கின்ற போது அது பயன் படுத்துவதற்குரிய நிலையிலே இல்லாமற் போய் விடுகின்றது. அவைகள் உரிய முறையில் செம்மைபடுத்த ப்படாமல் மிகவும் பாழ்பட்ட நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. அவற்றை நல்ல முறையிலே பயன்படுத்தும் வகையில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதிக்கும் 2 கால்நடை மருத்துவ மனைகளை ஏற்படுத்தி, அவற்றில் இவைகளை பயன்படுத்தும் வகையில் செயல் படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடையச் சின்னசேலம் தொகுதியில் ஒரு ஆட்டுப் பண்ணை இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பண்ணை அது' இப்போது அது எப்படி இருக்கிறது என்று சொன்னால், முதலிலே அது எப்படி ஆரம்பிக்கப்பட்டதோ அதே நிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறது. எந்தவிதமான விரிவாக்கமும் அங்கே செய்யப் படவில்லை. அங்கே இருக்கும் சூப்பிரண்டென்டும், மானேஜரும்: அங்கே இருக்கும் தொழிலாளர்களுக்கும், மக்களுக்குமிடையே பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், இதைப் பற்றி நான்இயக்குநரிடத்திலேயே எடுத்துச் சொன்னேன், ஆனால் இதுநாள் வரையில் எந்த வித பலனும் இல்லை. நீர் அடித்தால், நீர் விலகாது என்றுச் சொல்வது போல, அதிகாரிகளைப்பற்றி அதிகாரிகளிடத்திலே குறை சொன்னால், அவர்கள், தங்கள் மட்டத்திலேயே அதை சரிசெய்து கொண்டு விடுகிறார்கள். எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. ஆகவே அதை உடனடியாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடை தொகுதியில், நயினார் பாளையம், மூங்கில் பாடி போன்ற இடங்களில் உள்ள மக்கள் ஆடுகள் வாங்க வேண்டும் என்றும், மாடுகள் வாங்க வேண்டும் என்றும் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுக்களை பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய உத்திரவு இட வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தஞ்சாவூர் ஜில்லாவில் மாத்தூர் என்னுமிடத்தில், கால்நடை மருத்துவ மனை ஒன்று திறக்க வேண்டும் என்று 1974 ஆம் ஆண்டிலிருந்து அரசுக்கு கோரிக்கைகள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப்பகுதி மக்கள், இந்த ஆண்டிலாவது அங்கே ஒரு கால்நடை மருத்துவ மனையை ஆரம்பிக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய கால்நடை மருத்துவர்கள், ஆய்வாளர்கள் நீண்ட நாட்கள் விடுப்பில் சென்று விட்டால், அங்கே எந்த வித மாற்று ஏற்பாடும் இல்லாமல், அந்தப் பதவிகள் காலியாகவே



வைக்கப்பட்டிருக்கின்றன. அதனால், அந்தப் பகுதி கால் நடைகள் அந்த மருத்துவ மனையை இருந்தும் பயன் படுத்த முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அந்த நிலையை மாற்றி, கால்நடை ஆய்வாளர்களையோ, டாக்டர்களையோ, விடுப்பில் சென்றிருப்பவர்களுக்கு பதிலாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக கொள்கிறேன்.

அடுத்து காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஒரு ஆண்டிற்கு 25 கால்நடை மருத்துவ மனைகள் என்று ஏற்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள் ஒரு ஆண்டிற்கு 10 மருத்துவ மனைகள் தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று அறிக்கையிலே அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணியை விரிவு செய்யும் பொருட்டு ஒவ்வொரு கிராமத்திலும் ஐந்து மைல் தூரத்தில் ஒரு கால்நடை மருத்துவ மனை என்ற வகையில், அந்தப் பகுதியின் கால்நடை செல்வங்களுக்கேற்ப ஏற்படுத்த இந்த அரசு முன் வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இந்த ஆண்டு மிகவும் வறட்சி அதிகமாக ஏற்பட்ட ஆண்டு, ஆகவே, எந்தெந்தப் பகுதிகள் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தந்தப் பகுதிகளில் கால்நடைகளை வாங்குவதற்கு கடன் வழங்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து தண்ணீர் பிரச்னை. தண்ணீர் இல்லாமல் இந்த வறட்சிப் பகுதிகளில் கால்நடைகள் மிகவும் தவிக்கின்றன. ஆகவே, கிராமப்புறங்களில் சிறு சிறு குளங்கள் குட்டைகள் வெட்டுவதற்கும் தூர்ந்து இருப்பதை தூர் எடுப்பதற்கும் ஏற்பாடு செய்து கால்நடைகளுக்கு குடி தண்ணீர் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வாய்ப்பு அளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ச்சி, சமூக நல ஆகிய மானியக் கோரிக்கைகளின் எண். 22, 30 ஆகியவைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல் வாய்ப்பு அளித்த மக்காக முதற்கண் உங்களுக்கு என்னுடை நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே கிராமப் புறங்களிலே கிராம பொருளாதாரத்திற்கு இன்றைக்கு கால்நடை வளர்ச்சி என்ப மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருந்து வருகிறது என் சொன்னால், அது நிச்சயமாக மிகையாகாது. கிராம புறங்களிலே ஒரு மனிதனுடைய அந்தஸ்தை, அவனுடை ஸ்டேஸ்டஸை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என் சொன்னால், அவன் எத்தனை மாடுகள் வைத்திருக்கிறா எத்தனை ஆடுகள் வைத்திருக்கிறான், எத்தனைக் கோழிக

வைத்திருக்கிறான், என்பதை எல்லாம் வைத்து தான் அவருடைய அந்தஸ்தை நிர்ணயம் செய்வார்கள். ஆகவே, அப்படிப்பட்ட கிராமப் பொருளாதாரத்தையே மாற்றக் கூடிய அந்த கால்நடை பராமரிப்புத் துறை, இன்றைக்கு தமிழகத்தில் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, மிகவும் வேகமாக நல் முறையில் செயல்பட்டு வருகிறது என்று சொன்னால் மிகையாகாது.

[பிற்பகல் 12-40]

கால்நடைகள் நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சையளித்தல் போன்றவற்றில் கால்நடை பராமரிப்புத் துறை செவ்வன செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்காக அந்தத் துறையைச் சார்ந்தவர்களை பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கால்நடை பராமரிப்பு சிறப்புத் திட்டத்தின் கீழ் கால்நடை பராமரிப்புத்துறை 20 ஆடுகளை வாங்க இன்று தமிழ்நாட்டில் ஆடு உற்பத்தி திட்டத்தின் கீழ் ரூ, 4000 வழங்குகிறது. அதிலே சிறிய விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபாய் மானியமாகவும் விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ. 1330 மானியமாகவும் வழங்குகிறது. அதே போல் தமிழ்நாடு பால் அபிவிருத்தி நிறுவனம் கன்று வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ, 960 மானியமாகவும் ரூ, 960 கடனாகவும் சிறு விவசாயிகளுக்கு வழங்குகிறார்கள், ஆனால் விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ. 1280 மானியமாகவும் ரூ. 640 கடனாகவும் வழங்குகிறார்கள். தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம் 100 கோழிகள் கொண்ட ஒரு பண்ணை அமைக்க ரூ. 5846 செலவாகிறது என்றால் சிறு விவசாயிகளுக்கு ரூ. 1462-ம், விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ. 1949 ம் மானியமாக வழங்குகிறார்கள் இந்த மூன்றுத் திட்டங்களும் எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் அதிகமாக செயலாக்கபட்டு வருகின்றன. அதன் காரணமாக எங்கள் மாவட்டத்திலுள்ள கிராமப்புற விவசாய மக்களும் விவசாயத் தொழிலாளர்களும் பயன் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் சார்பாக தமிழ்நாடு முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

கால்நடைகளை மேம்படுத்த, ஒரு சில கிளை நிலையங்களில் இன்றைக்கு நோய்த் தடுப்பு மருந்துகள் கிடைப்பதில்லை என்ற சிறிய குறைபாடுகள் அங்காங்கே இருக்கின்றன. அந்த குறைபாடுகளை அரசு களைவதற்கு உடனடியாக வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

தமிழ்நாட்டில் ஏறக்குறைய இரண்டரைக் கோடி கால்நடைகள் இருப்பதாக புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. ஆனால் நம்மிடையே இருக்கக்கூடிய கால்நடை மருந்தகங்கள்





மிகக் குறைவாக இருக்கிற காரணத்தால் சுமார் 2,000 கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் விதம் திறக்கப் படுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

எனது தொகுதி ஆலங்காயம் மலைப் பகுதியில் ஜமுனாமுத்தூர் காவாலூர் பகுதி தரான பருவநிலை கொண்ட பகுதியாகும். அங்கே ஒரு பொலிகாளை நிலையம் அமைக்கப்பட்டு உறைவிந்து வங்கி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் அங்கே ஒரு திரவ நைட்ரஜன் தொழிற்சாலையும் அமைத்துத் தர வேண்டும். அந்தத் தொழிற்சாலை அமைவதற்கு ஏற்றதொரு இடமாக அது இருக்கும் அதோடு அங்குள்ள பழங்குடி மக்கள், ஆதிவாசிகள் போன்றவர்கள் நல்ல வளர்ச்சி பெறவும் அது ஊக்கமளிப்பதாக இருக்கும், அதோடு வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள கிளை நிலையங்கள் தொடர்ந்து தேவையான உறைவிந்துகள் பெறுவதற்கும் அது ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தால், அந்த உறைவிந்து வங்கியை அந்த மலைப் பகுதியில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை மருந்தகம் ஒன்று இப்போது வாணியம்பாடியில் இயங்கி வருகிறது. அதைவிட்டால் ஆலங்காயத்திற்கு வர வேண்டும். இவற்றிற்கு இடையே ஏறத்தாழ நாற்பது கிராமங்கள் உள்ளன. அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு மருந்தகத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்றால் அவர்கள் நெடுந்தூரம் நடக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள், ஆகவே ஆலங்காயத்திற்கும் வாணியம்பாடிக்கும் இடையே வெள்ளைக் குட்டை என்ற கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால், இந்த நாற்பது கிராமங்களுக்கும் வாரத்திற்கு ஒரு முறையாவது சென்று வரக்கூடிய ஒரு நடமாடும் கால்நடை மருந்தகத்தையாவது அரசு ஏற்படுத்தித் தர முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன்.

ஆம்பூர், வாணியம்பாடி நகரங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களை விரிவாக்கி அவற்றிற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தந்து அந்த மருந்தகங்களை மருத்துவமனைகளாக உயர்த்துவதற்கு அரசாங்கம் வழி வகை செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் கால்நடை மருத்துவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் வெகுவாக எடுத்துச் சொன்னார்கள், மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களும், சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும் சமீபத்திலே

கலந்துகொண்ட கால்நடை மருத்துவக் கல்லூரி பவள விழாவிலும், கால்நடை உதவி மருத்துவர்கள் மாநாட்டிலும், கால்நடை மருத்துவர்களுடைய கோரிக்கைகள் அனைத்தையும் இந்த அரசு நிச்சயமாக நிறவேற்றும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த வகையில் கால்நடை மருத்துவர்கள் இந்த அரசோடு மிகவும் இணக்கமாகவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கூறிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் வகையிலும் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த வகையிலே கால்நடை மருத்துவர்கள் இன்றைக்கு கிராமங்களிலே சமூக, பொருளாதார உயர்வை உயர்த்தக்கூடிய புரட்சியாளராக பணியாற்றிக் கொண்டிருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு தற்போதுள்ள ஊதிய விகிதத்தை மாற்றி, அதிக ஊதிய விகிதத்தை இந்த அரசு கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற அலுவலர்களுக்கு வழங்குவது போல, விடுமுறை நாட்களில் பணியாற்றுவதற்கான சரிகட்டும் விடுப்பு வழங்க அவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், தமிழ்நாடு முழுவதும் வட்ட அளவில் ஒரு கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகங்களை உருவாக்கித் தர வேண்டுமென்றும் நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் தமிழ்நாடு முழுவதும் வட்ட அளவில் ஒரு நடமாடும் மருத்துவ மனையும் ஏற்படுத்த வேண்டும், தற்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 59 பொலிக் காளை நிலையத்திற்கு தனியாக கால்நடை மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிகளில் பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை ஆய்வு செய்வதற்கு சானிடரி இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்தத் தரம் சரியான முறையிலே பரிசிலனை செய்யப்படுகிறதா என்றால் அது சரியாக வரவில்லை என்ற காரணத்தினால், இதிலே நன்கு கற்று பட்டம் பெற்ற உதவி மருத்துவர்களை நகராட்சிகளில் இந்த பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை ஆய்வு செய்வதற்காக அமர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலே கால்நடை பராமரிப்புத்துறை, தமிழ்நாடு கோழிவள நிறுவனம். பால்வள நிறுவனம் இவைகளின் தலைமைப் பொறுப்பிற்கு அந்தத்துறையைச் சேர்ந்த கால்நடை மருத்துவப் பட்டம் பெற்றவர்களையே அரசு நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தற்சமயம் இத் துறையில் 1000 கால்நடை உதவி மருத்துவர்களுக்கு உதவி புரிய 3000 கால்நடை ஆய்வாளர்கள் உள்ளனர். மேலும், கால்நடை ஆய்வாளர்களின்



பயிற்சியைத் துவக்கி, மருத்துவர்களுக்கு உதவி செய்பவர்களின் எண்ணிக்கையை மட்டும் பெருக்கிச் செல்வது அவசியமற்றது. எனவே, படித்த கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் இன்னும் நிறைய பேர்கள் வேலையில்லாமல் இருக்கின்ற காரணத்தினால், மேற்படி வேலைகளுக்கு கால்நடை உதவி மருத்துவர்களை அமர்த்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

காது கேளாதவர்களுக்கு என்று அரசின் சார்பாக துவங்க இருக்கும் பள்ளிகள் ஒன்றையோ அல்லது உடல் ஊனமுற்றவர் சிறப்பு ஆண்டையொட்டி துவங்க இருக்கும் கால் ஊனமுற்றோர் அரசினர் பள்ளி ஒன்றையோ ஆம்பூர் அல்லது வாணியம்பாடியில் துவங்கவேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள் கிறேன். பின்தங்கிய மகளிர், உடல் ஊனமுற்ற மகளிர், ஆடவர் ஆகியவர்களுக்கு வழங்கும் தையல்மிஷின் திட்டத்தை இன்றைக்கு தமிழகத்திலே உள்ள மக்கள் உளமாரப் பாராட்டிக் கொண்டிருக் கிறார்கள். 1981 ஆம் ஆண்டிலே 100 தையல் மெஷின்களை வழங்க இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கைம்பெண் மறுமணம் செய்துகொள்வதற்கு 5,000 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. அதற்கு நான் பாராட்டுத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கைம்பெண்கள், ஆதரவற்ற மகளிர் ஆகியோர் நலனுக்காக வழிகாட்டி நிலையம் அமைக்க அரசு முன் வந்துள்ளது பாராட்டுதலுக்குரிய செயலாகும். அதைச் சென்னை, தஞ்சை, மதுரை, கோவை ஆகிய மாவட்டங் களிலே துவங்கயிருப்பதாக கொள்கைக் குறிப்பிலே சொல்லப் பட்டிருக்கிறது. அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்ற அதே நேரத்திலே, வட ஆற்காடு மாவட்டத்திலும் அதுபோன்ற ஒன்றைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, இந்த மானியக் கோரிக்கை களை வரவேற்று, முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

(பிற்பகல் 12–50)

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, சமூகநலம், கால்நடை பராமரிப்பு மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய சில கருததுக்களை சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர் களுடைய அரசு செய்து கொண்டிருக்கிற பல நல்ல காரியங்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சமூகநலத்துறை மூலமாக

ஆதரவற்ற குழந்தைகளுக்கு, பெண்களுக்கு, வாழ்வில் நலிவுற்றவர்களுக்கு அளித்து வருகிற நன்மைகளை இன்னும் அதிகப்படுத்தி, பல சிறப்பான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, அப்படிப்பட்ட அநாதைகளுக்கு வாழ்வளிக்கப்பட்டு வருகின்றது. ஆதரவற்ற கைம்பெண்களின் மகளிருக்கு திருமண உதவியாக தாலி, சேலை வாங்குவதற்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தை கொண்டு வந்ததற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை மனதார பாராட்டுகிறேன். இந்த திட்டத்தை ஆயிரம் என்று இருப்பதை அடுத்த ஆண்டு 10 ஆயிரமாக விரிவுபடுத்தி தாய்மார்களின் மகளிருக்கு திருமண உதவி கிடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிதிப்பற்றாக்குறை காரணமாக அப்படிப்பட்ட உதவி கிடைக்காமல் போய்விடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில் ஒரு மாவட்டம் என்று இருப்பதை மாற்றி தமிழகம் முழுவதும் உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு கிடைக்க இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஐந்து வயதிற்குள் தான் குழந்தைகளுடைய மூளை வளர்ச்சி இருப்பதால்; சத்துணவு பெற்று பிற்காலத்தில் நல்லகுடிமகனாக வளரக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும். குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கின்ற திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல உடல் ஊனமுற்றவர்களுக்காக இந்த ஆண்டு புதிய திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள்.

வேதாரண்யத்தில் ஒரு பயிற்சிப் பள்ளி இருந்த இடம் 22 ஏக்கர் நிலம், அந்த கட்டிடங்களோடு பயன்படுத்தப்படாமல் இருக்கின்றது. அதை பயன்படுத்தி உடல் ஊனமுற்றோர்களுக்கு பள்ளியை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட அந்த இடத்தை பார்வை இட்டிருக்கிறார்கள். அந்த இடத்திலே பள்ளியை துவங்குவதற்கு அமைச்சர் அவர்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்பு துறையிலே நல்ல காரியங்களை செய்து இருந்தாலும், நம் நாட்டில் கால்நடை தான் விவசாயிகளின் செல்வமாக இருக்கிறது. எனவே கால்நடைத் துறைக்கு ஒதுக்கப்படுகிற பணம் குறைவாக இருப்பதால், அது ஒன்றியத்திற்கு வழங்கப்படும் போது அங்கே இருக்கிற ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கிற நிலைமைதான் இருக்கிறது. நல்ல காரியங்களை செய்யக்கூடிய நிலைமை இல்லை. கால்நடைத் துறைக்கு இன்னும் அதிகமாக பணத்தை ஒதுக்கி, விவசாயிகள் கால்நடைச் செல்வத்தை பெருக்க உதவியை செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல கால்நடை மருத்துவர்களுக்கு செய்கின்ற அதே நேரத்தில் கால்நடை மருந்தகங்களை அதிகமாக துவக்கினால், கால்நடை மருத்துவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்ததாகவும் இருக்கும்; கால்நடை மருத்துவ வசதிகள் ஏழை, எளிய மக்களுக்கு நல்லமுறையில் கிடைப்பதற்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவத்திலே, ஏழை எளிய விவசாயிகளுக்கு தெரிந்த, அவர்கள் பயன்படுத்துகிற நாட்டு வைத்தியத்தை, சித்த வைத்தியத்தை பயன்படுத்தி கால்நடைகளுடைய நோய்களை போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

கால்நடையில் விவசாயிகளுக்கு நன்கு உழைக்கும் 'உம்பளச்சேரி, இனத்தை அபிவிருத்திச் செய்வதற்கான திட்டங்கள் தீட்டப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்து இருந்தார்கள். அதை மீண்டும் செயல்படுத்தி, உழைக்கக்கூடிய அந்த இனத்தை பெருக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, விவசாயிகளுக்கு உதவி புரியவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொற்கை பண்ணையிலே 300, 400 ஏக்கர் நிலம் பயன்படுத்தப் படாமல் இருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிறது. இதன் காரணமாக கால்நடைகள் சுத்தமாக, சுகாதாரமாக வைக்கப்படாமல் இருக்கின்றன. கொற்கை பண்ணைக்கு அதிக நிதி ஒதுக்கி கால்நடைகளுக்கு தண்ணீர் வசதிகள் செய்து, அவைகளை சுத்தமாக வைத்திருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, கால்நடை, சமூகநலன் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது எங்கள் கட்சியின் சார்பாக இரண்டொரு கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கால்நடை மருந்தகங்களிலே வேண்டிய மருந்துகள் இல்லை. போதிய மருந்துகள் கிடைக்க அரசு ஆவன செய்யவேண்டும். கோமாரி நோயைத் தடுக்கின்ற மருந்துகளை அதிக அளவில் வாங்குவதற்கும் அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அமைச்சர் அவர்கள் அறிக்கையிலேயே கோமாரி நோயால் கால்நடைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த மருந்துகளை அதிக அளவுக்குக் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அடுத்து வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு கால்நடைப் பண்ணையை ஏற்படுத்தவேண்டும். அதற்கு ஏற்ற இடமாக இராணிப்பேட்டைக்கு அருகில் நௌலாக் தோட்டம் இருப்பதால் அங்கே அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தரமான இன விருத்திக்காக, ஜெர்ஸி போன்ற இன விருத்திக்காக கன்னியாகுமரி மாவட்டத்திலே முயற்சிகளை மேற்கொள்வதாக சென்ற

ஆண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டத்தை விரைவிலே செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே வறட்சி இன்றைக்கு 11 மாவட்டங்களிலே ஏற்பட்டு இருக்கிறது. எங்கள் மாவட்டத்திலே குறிப்பாக வறட்சி மிகுதியின் காரணமாக கால்நடைகள் பெருமளவுக்கு இறந்து விட்டன. அதனால் அந்தப் பகுதியிலே உள்ள ஏழை எளிய விவசாயிகள் மாடு வாங்குவதற்காக மானியங்களையும் கடன்களையும் கொடுத்து உதவுவதற்கு அரசு முன்வரவேண்டும்.

ஆடுவளர்ப்பு, கோழிவளர்ப்புப் பண்ணைகள் அரசுத் துறையிலேயே ஏற்படுத்த அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஆடுவளர்ப்புக்கு கூட்டுறவுத் துறையில் ஊக்கம் அளிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பழனி வட்டத்திலே ஆயக்குடி பகுதியிலே உள்ள கூட்டுறவு சங்கத்திலே அந்த அமைப்பு ஏற்பட்டு 6 மாதங்கள் ஆகியும் அதற்காக கடன்கள் பல முறைகள் கேட்டும் கூட இன்னும் கடன்கள் கிடைக்கவில்லை. இதே நிலைமை தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே இருக்கிறது. எனவே அந்தக் கடன்களை உடனுக்குடன் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

கால்நடைப் பணியாளர்கள் நெடுங்காலமாக தற்காலிகமாகவே இருக்கிறார்கள். அவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்காமல் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நிரந்தர ஊழியர்களாக்கி அரசு ஊழியர்களுக்குக்கிடைக்கின்ற சலுகைகளை எல்லாம் அவர்களுக்கும் கொடுப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதோடு அவர்கள் மாநில அளவிலே ஒரே சங்கமாக அமைத்திருக்கிறார்கள், அந்த சங்கத்திற்கு அங்கிகாரம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற கால்நடை மருத்துவ மனைகளிலே பணியாற்றுகின்ற கால்நடை ஆய்வாளர்கள் மேல் படிப்பிற்காக அனுமதி கேட்டால் கொடுக்காத நிலைமை இருக்கிறது. மற்றத்துறைகளிலே உள்ளவர்களுக்கு மேல்படிப்புக்கு அனுமதி அளிக்கிற நிலைமையைப்போன்று அவர்களுக்கும் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சி கடந்த ஆண்டே ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்னும் ஆரம்பிக்கப் படாமல் இருக்கிறது. பல கால்நடை மருத்துவ மனைகளிலே இன்றைக்கு கால்நடை ஆய்வாளர்கள் இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தப் பயிற்சியை உடனடியாகத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலே கால்நடை ஆய்வாளர்களாகப் பணியாற்றுகின்றவர்கள் தொடர்ந்து பணியாற்றினால் அவர்களை பி. வெட்டர்னரி பிராக்டிஷனர்ஸ் என்று ஆக்குகின்ற முறையிலே தக்க முறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஊராட்சி ஒன்றியங்களிலே



பணியாற்றுகின்ற ஆய்வாளர்கள் சில கிராமங்களிலே நோய்வந்தவுடன் போய்ப் பார்த்து சிகிச்சையளிப்பதற்குத் தேவையான மருந்துகள் வேண்டுமென்றால் அவர்கள் கிளை மருந்தகங்களின் மூலமாகத்தான் பெறவேண்டியிருக்கிறது. அதனால் காலதாமதம் ஏற்படுகிறது, இந்தக் காலதாமதம் தவிர்க்கப்படக் கூடிய முறையில் மருந்துகளை பி.டி.ஓக்கள் மூலமாக உடனுக்குடன் பெற்றுக் கொள்ளக்கூடிய முறையிலே ஏற்பாடுசளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறையிலே உள்ள டாக்டர்களை மற்ற டாக்டர்களைப் போல் பாவிக்க வேண்டும். அவர்களுக்கும் இவர்களுக்கும் 150 வரையில் சம்பள வித்தியாசம் இருக்கிறது. அந்த வித்தியாசம் இல்லாமல் எல்லா டாக்டர்களுக்கும் ஒரே விதமான சம்பளம் கொடுக்க அரசு முன் வரவேண்டும். அரசுத் துறையிலே உள்ள பல்வேறு துறைகளுக்கும் தனித்தனிச் செயலாளர்கள் இருப்பதைப்போன்று கால்நடைத் துறைக்கும் தனிச் செயலாளர் இருப்பதுதான் நல்லது, அதைச் செய்யவேண்டும். இந்த ஆண்டு ஊனமுற்றோர் ஆண்டு.

(பிற்பகல் 1-00)

ஊனமுற்றோர்களுக்கு அதிக வசதிகளைச் செய்து கொடுக்க அரசுத் துறையிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற பல சலுகைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சியளித்து டான்சி மூலம் சிறுதொழிற் சாலைகளை அமைத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க வேண்டும். ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சி அளித்தால் மட்டும் போதாது. அவர்களுக்கு மற்ற தொழிலகங்களில் வேலைவாய்ப்பு கிடைப்பது கடினமாக இருக்கிறது. ஆகவே, அரசே தன்னுடைய சிறுதொழில் கார்பரேஷன் மூலமாக நடத்தப்படும் பல்வேறு தொழிற்துறைகளிலே அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடலூனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் மூன்று சக்கர வண்டிகள் மற்றவைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற அதிகப்பணம் மிகவும் குறைவாக இருக்கிறது. இதற்கு பணம் ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விதவைகள் உதவி பெறுவதற்கு வயது வரம்பை வைத்திருக்கிறார்கள். அந்த வயது வரம்பே அவர்களுக்கு இருக்கக்கூடாது. விதவைகள் அனாதைகளாக, ஆதரவற்றவர்களாக இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு வரம்பு நிர்ணயிக்ககாமல் உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊனமுற்றவர்களுக்கு உதவி அளிப்பதிலும் வயது வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது. வேலை செய்து பிழைக்க முடியாமல் இருக்கின்ற உடல் ஊனமுற்றவர்களுக்கு வயது வரம்பு ஏர்ணயிக்கப்படாமல் உதவித் தொகை வழங்குவதற்கான நிற்டாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விதவைகள், ஆதரவற்றவர்கள் ஆகியவர்களுக்கு அமைக்கப்பட்டிருக்கும் இல்லங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவைகள் சில மாவட்டங்களில்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எல்லா மாவட்டங்களிலும் அவைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதவித் தொகை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. சென்ற ஆண்டாவது ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்குவதாகச் சொல்லியிருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டில் தொகையே குறிப்பிடவில்லை. நல்ல மனதோடு இதைச் செய்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும் இதற்காகக் கொடுக்கலாம், எவ்வளவு பேர்களுக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்ற எண்ணத்தில் அந்தத் தொகையை சொல்லாமல் விட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு வேடிக்கையாகச் சொல்லுவார்கள், தாலுக்கா ஆபிசிலே சென்று கேட்டால், குறிப்பிட்ட கோட்டா முடிந்து விட்டது, ஒரு ஆள் மறைந்து விட்டால் அடுத்து உங்களுக்குக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, அவ்வாறான நிலைமையின்றி, ஆதரவற்றவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பதை உடனடியாகப் பரிசிலித்து வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். தமிழகத்திலே பிற்பட்ட நிலையிலே இருக்கின்ற ஏழைஎளிய மக்கள் அத்தனை பேர்களுக்கும் உதவி கிடைக்கின்ற முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவரவர்களே, 1981—82-ஆம் ஆண்டிற்கான கால்நடை வளர்ப்பு மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுவதற்கு விழைகிறேன். குறிப்பாகச் சிதம்பரம் தாலுகாவில் சிதம்பரம் தொகுதி, புவனகிரி தொகுதிகளில் தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டம் இல்லாத. குறையைப் போக்க 1981—82-ஆம் ஆண்டிலிருந்து ஐ. சி. டி. பி. திட்டத்தை அமுல் படுத்த முன்வந்த சமூக நலத்துறை அமைச்சரையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசையும் பாராட்டுகிறேன். ஆனால் 50 கிளை நிலையங்கள் மட்டும தென்னார்க்காடு மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அது போதாது. மதுரையில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 100 கிளைகளை அனுமதித்தது போல் 100 கிளை நிலையங்களை தென்னார்க்காடு மாவட்டத்திற்கு ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 50-க்குப் பதில் 100 கிளை நிலையங்களை அனுமதிப்பதால் அதிகப் பணச் செலவு ஏற்படாது. மேலும் தீவிரக்கால்நடை அபிவிருத்தித் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்த உறைவிந்து கையாளுவதில் மருத்துவரல்லாத பணியாளர்களுச்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் 1980–81ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள படி 1981–82-ஆம் ஆண்டில் உடனடியாகப் பயிற்சி அளிக்க உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





உறைவிந்து வைக்க 'கன்டெய்னர்கள்' வேண்டும். உறைவிந்து பாதுகாக்க நைட்ரஜன் திரவம் அதிகம் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

கால்நடைச் செல்வங்களில் ஆடு, கோழி முதலியவைகள் அடங்கும். தற்போது தமிழகம் பூராவுக்கும் 455 ஆடுவளர்ப்பு சங்கங்கள்தான் இருக்கின்றன. அதை இரண்டு பங்கு அதிகரிக்க வேண்டும். சிதம்பரம் தொகுதி, புவனகிரி தொகுதிகளில் ஆடு வளர்ப்பு கூட்டுறவுசங்கங்கள் புதிதாக ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் குறைந்தது 5 சொசைட்டிகள் வீதம் ஆரம்பிக்கப்பட வேண்டும். செம்மறி ஆடுகளுக்கு மாத்திரம்தான் வங்கிகள் கடன் கொடுக்க முன்வருகின்றன. ஆனால் அது போதாது. வெள்ளாடு வளர்க்க விவசாயிகள் விரும்புகிறார்கள். புதுக்கோட்டையில் ஜமுனாபாரி வெள்ளாடு கலப்பினம் அபிவிருத்தி செய்ய 1980-81க்கு மாத்திரம் சுமார் 16 இலட்சம் ஒதுக்கப்பட்டது என்று கொள்கை விளக்கத்தில் படிக்கிற பொழுது தெரிகிறது. ஏன் அந்தத் திட்டத்தை சிதம்பரம், புவனகிரி தொகுதிகளிலும் விஸ்தரித்து அங்குள்ள விவசாயிகளும் பலனடையும்படி செய்ய அரசு முன்வரக்கூடாது என்று கேட்கத் தோன்றுகிறது. சிதம்பரத்தில் 5,000 மாணவர்கள பல்கலைக் கழக உணவு விடுதியில் இருக்கிறார்கள். அந்தக் காரணத்தினால் இங்கு இறைச்சியை அபிவிருத்தி செய்ய வெள்ளாடு வளர்க்கும் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடற்புழு நீக்கப்பட வேண்டிய அவசியத்தை சினிமா சிலைடு மூலம் தீவிர பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறப்பு கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கோழி வளர்ப்பு திட்டத்தைச் சிதம்பரம் தாலுக்காவிற்கு விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நவீன முறையில் இறைச்சிக் கூடம் ஒன்றைத் துணிந்து சென்னையில் ஏற்படுத்த முன்வந்த புரட்சித் தலைவர் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கால்நடை நோய் தடுப்பு மருந்து ராணிப்பேட்டையில் தயாரிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அங்கு கோமாரி நோய்க்குத் தடுப்பு மருந்து தயாரிக்கப்படுகிறதா? குறிப்பாக, கோமாரி நோய் தடுப்பு மருந்து வாங்க சுமார் 7½ இலட்சம் ரூபாய் ஒதுக்க ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1980–81–ம் ஆண்டு தமிழ்நாட்டில் கோமாரி நோய் தடுப்பு ஊசி எவ்வளவு வேண்டும்? தமிழ்நாட்டில் எவ்வளவு தயாரிக்கப்படுகிறது? கோமாரி நோயினால் விலை உயர்ந்த கறவை மாடுகளும், கன்றுகளும் இறந்து விடுகின்றன. இந்த நேரம் பருவமழை தவறியதால் அதிகமாக கோமாரி நோய் வருகின்ற காரணத்தாலும், நோயினுடைய தன்மையை

அறிந்து. மருந்துகளுடைய விலையைக் குறைத்து, அதிக உற்பத்தி செய்து கொள்முதல் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பொருளாதாரத்தில் மெலிந்தோர்–நலிந்தோர்களுக்கு இலகுவில் கடன் கொடுக்க மான்யம் வாங்கிக் கொண்டுகூட கொடுக்க முன்வரத் தயங்குகிறார்கள். சில வங்கிகள், குறிப்பாக, இந்தியன் வங்கி திருவொற்றியூரில்தான் வாங்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றது. இதை அனுமதிக்கக் கூடாது. திருவொற்றியூரில் மாட்டின் விலையைப் பன்மடங்கு உயர்த்தி விடுகிறார்கள். அத்துடன் 'டெக்ஸ்ரோன்' போன்ற ஊசியைப் போட்டு, பால் அதிகமாகக் கறப்பது போல் காட்டுகிறார்கள். ஏழை விவசாயிகளைத் திட்டமிட்டு ஏமாற்றுகிறார்கள். நியாயமான விலையில் தரமான கறவை மாடுகள் விவசாயிகளுக்குக் கிடைக்க சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்பு, சமூக நலன் என்ற மானியக் கோரிக்கைகளின் பேரில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். கால்நடையைப் பொறுத்தவரை, வளர்ப்பு என்று சொல்வதற்கு முன்னால், இன்றையதினம் பருத்திக் கொட்டை, தவிடு போன்ற அந்த அத்தியாவசிய, கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களை, அவற்றிலிருந்து எண்ணெய் எடுக்கின்ற காரணத்தால், குறிப்பிட்ட அளவுக்குப் பருத்திக் கொட்டைகளையும், தவிட்டையும் கால்நடைகளுக்கே ஒதுக்க வேண்டுமென்று, இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கால்நடைகளைப் பொறுத்தவரை, பன்னியாண்டிகள் என்று சொல்லக்கூடிய ஒரு சமூகத்தினர் எங்கள் பகுதியில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வெள்ளைப் பன்றிகள் என்ற இனத்தைக் கொடுத்து, அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கிற காரணத்தால், அந்தத் தொழிலை விருத்தி செய்ய அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கும் இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வைத்திருக்கக்கூடிய சிறு விவசாயிகளுக்கும் இந்தக் கால்நடைத் துறையில் ஒரு பகுதியை மானியமாகவும், ஒரு பகுதியைக் கடனாகவும் கொடுத்து, உதவ வேண்டும். சில வங்கிகள் கால்நடைகளுக்கென்ற கடன் கொடுக்கின்ற நேரத்தில் கூட்டுறவுத் துறையில் அவர்கள் பால் விற்பனை செய்தால்தான் மானியம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அந்தத் திட்டத்தை அறவே நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



கால்நடை அதிகாரிகளைப் பொறுத்தவரை, முழுமையாக அந்தத் துறையில் ஈடுபட்டு, முன்னுக்குக் கொண்டு வரக் கூடியவர்களை டைரக்டராக நியமனம் செய்ய வேண்டும். அதை விடுத்து, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அத்துறை டைரக்டர்களாக நியமனம் செய்திருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைத் துறையில், ஒரு ஒன்றியத்திற்கு ஒரு மருந்தகம் ஏற்படுத்தி, புதிது புதிதாக வரும் நோய்கள், அதாவது, கால் கட்டு, வாய்க்கட்டு என்று சொல்லக்கூடிய அந்தக் கொடுமையான நோய்கள் எங்கள் பகுதியிலே இருக்கின்றன. அவற்றிற்கு மருந்துகளை அந்தந்தப் பகுதிகளிலே வைத்திருந்து, உடனடியாக வழங்க ஆவன செய்ய வேண்டும்.

(பிற்பகல் 1-10.)

கால்நடை மருத்துவர்களுக்கும், மற்ற மருத்துவர்களுக்கும் இருக்கின்ற சம்பள வித்தியாசத்தைப் போக்க வேண்டும். கால்நடைத் துறையில் வைத்தியம் செய்பவர்கள் கால்நடைகளைப் பார்த்து இன்னின்ன நோய் வந்திருக்கிறது என்று ஆராய்ந்து அத்துறையிலே செயல்படக்கூடிய நிலை இருக்கின்றது. அதனாலே இவர்களுடைய சம்பள வித்தியாசத்தைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சமூக நலத்துறையைப் பொறுத்தவரையில் வெளி நாட்டில் இருந்து தாயகம் திரும்பி இருக்கின்ற பெண்களுக்கு அவர்கள் அந்த நாட்டில் இருந்தபோது என்ன தொழிலைச் செய்து வந்தார்களோ அதேவிதமான தொழிலைத்தான் அவர்கள் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். அதற்கு மாறாக வெளி நாடுகளில், குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர் போன்ற பகுதிகளிலே இருந்து வரக்கூடியவர்கள் அங்கே தேயிலைத் தோட்டங்களிலே பணிபுரிந்து கொண்டிருந்தவர்கள். தாயகம் திரும்பியதும் 2 ஏக்கர், 3 ஏக்கர் என்று அவர்களுக்கு விவசாயத்துக்கு கொடுத்தால் அவர்கள் தேயிலைத் தோட்ட அநுபவத்தை கொண்டு இந்த விவசாயத் தொழிலில் முழுமையாக ஈடுபட முடிவதில்லை.

அடுத்து விவசாயத் தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள், பீடித் தொழிலாளர்கள், மீனவர்கள் அதிகமாக இருக்கின்ற இடங்களில் அவர்களுடைய குழந்தைகளுக்குப் பாதுகாப்பு இல்லங்கள் கட்டி அந்தக் குழந்தைகளைப் பராமரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து தாய் சேய் நல விடுதிகளை பொறுத்தவரையில் ஏறத்தாழ 3,000 மக்கள் வாழ்கின்ற ஒவ்வொரு பகுதியிலும் ஒரு தாய்–சேய் நலவிடுதி ஆரம்பிக்கப்பட்டு அதற்குத் தேவையான மருந்துகளும் அதிலே இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல தாய்சேய் நலவிடுதிகளில் பல ஆண்டுகளாக ஆயாக்கள் நியமனம் செய்யப்படாத சூழ்நிலை இருக்கின்றது. அந்தமாதிரி இடங்களில் ஆயாக்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பென்சனைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட ஒரு வட்டத்தில் 100 அல்லது 150 பேர்களுக்குப் பென்சன் கொடுத்துக் கொண்டிருந்தால், அவர்களிலே யாராவது ஒருவர் இறந்து விட்டால் தான் மற்றவர்களுக்கு கொடுக்கும் நிலை இருக்கின்றது. இந்த நிலையை மாற்றி, வயது வந்த அனைவருக்கும் பென்சன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோழிப்பண்ணையைப் பொறுத்த வரையில், ஏற்கனவே கோழிப்பண்ணைக்காகக் கடன் கொடுக்கப்பட்டு அது தற்போது கைவிடப்பட்டுள்ளது. அதை மீண்டும் கொடுக்கின்ற காலத்தில் அந்தத் தொழிலை சரிவரச் செய்கின்றவர்களுக்கு, அந்தத் தொழிலை ஊக்குவிப்பவர்களுக்கு கொடுக்கின்ற வகையில் நன்றாகப் பரிசீலனை செய்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டுக்கான கால்நடை பராமரிப்பு மற்றும் சமூக நலன் பற்றிய மானியக் கோரிக்கையினை வரவேற்று பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை வளர்ப்பு கிராமப்புற மக்களுக்குக் கூடுதல் வருமானத்தைப் பெற்றுத் தருகிற உப தொழிலாக இருந்து வருகிறது. இன்றைக்குக் கிராமப் புறத்திலே இருக்கின்ற விவசாயத் தொழிலாள மக்களும், குறு, சிறு நில விவசாயிகள் இந்தக் கால்நடைகளை வளர்ப்பதன் மூலம் பல பலன்களை, பயன்களைப் பெற்று வருகிறார்கள். இன்றைக்குக் கிராமப் பகுதியில் வறட்சி நிலை நிலவி வருவதும், பல கிராமங்களில் இந்த கால்நடைகளுக்கு தீவனங்கள் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. இன்றைக்குப் பருத்திக் கொட்டையாகட்டும், கடலையில் இருந்து கிடைக்கின்ற புண்ணாக்காகட்டும் விலை மிகவும் அதிகமாக இருக்கின்றது. கிராமப்புற மக்கள் வாங்குவதற்கு மிகவும் தொல்லைப்படுகிறார்கள். எனவே இந்தப் பருத்திக் கொட்டையையும் புண்ணாக்குப் போன்ற தீவனத்தையும் நியாயவிலையில் கிடைப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை உற்பத்தித் திறமை மேம்படுத்துவதற்கும், கால்நடை நோய் தடுப்பு மற்றும் கால்நடை சிகிச்சைக்கும் பல திட்டங்களை இந்த மானியக்கோரிக்கையில் அறிவித்து இருப்பதை



உளமார நான் பாராட்டுகின்றேன். இந்தத் திட்டங்களைப் பலவும் சிறு விவசாயிகள் மற்றும் குறுநில விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள், ஆகியோர் சிறிய அளவில் கொழி மற்றும் ஆடு வளர்ப்பு நிலையங்களை ஏற்படுத்துவதும், கன்றுகளைப் பராமரிக்கவும் உதவும் என்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த 1980–81 ஆம் ஆண்டில் 57 கன்றுப் பேரணிகளும் 5 மாவட்டக் கால்நடைக் கண்காட்சிகளும் நடத்துவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அதை வரவேற்கிறேன். இதுபோன்ற கண்காட்சிகளின் மூலம் கிராம மக்கள் அயலின கால்நடைகள் குறித்த விவரங்களை அறிந்து கொள்ளவும். நோய் தடுப்புப் பணிகளைப் பற்றி தெரிந்து கொள்ளவும் முடியும். அதற்கு வாய்ப்பாக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், கன்றுப் பேரணி ஒன்றுக்கு ரூபாய் 400 வீதம் 57 மைந்திர கிராம வட்டாரங்களிலும், கால்நடைக் கண்காட்சி ஒன்றுக்கு ரூ.5,000 வீதம் தென் ஆற்காடு, சேலம், வட ஆற்காடு, தர்மபுரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் நடத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை வரவேற்கிறேன்.

அதேபோல் கிராமப் பகுதியில் இருக்கின்ற ஆடுகளில் உள்ள குடற்புழு சொக்கிட்டமூ போன்ற புழுக்களை நீக்குவதற்காகவும் அதன் மூலம் ஆட்டின் வளர்ச்சியை அதிகரித்து, இறைச்சி உற்பத்தியைப் பெருக்க ஆட்டின் தோலின் தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை மேற்கொள்வதற்காக பாராட்டுகிறேன். அதற்காக 1980–81 ஆம் ஆண்டில் 3.75 இலட்சம் தொடர்ந்து செலவிடப்படும் என்பதை அறிந்து அதை வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்திய அரசின் சிறப்புக் கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு மாவட்டங்களில் கோழி வளர்ப்புத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரையில் 3,613 பண்ணைகள் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் ஒவ்வொரு பண்ணைக்கும் தேவையான மொத்தச் செலவில், சிறு விவசாயிகளுக்கு 25 விழுக்காடும், குறுநில விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு 33⅓ விழுக்காடும் மானியம் அளிக்கப்படுகின்றது. இதுவரை 52.90 இலட்ச ரூபாய் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு கிராமத்திலே கால்நடை வளர்ச்சி பெறவேண்டும் என்று பல்வேறு திட்டங்களை அரசு போட்டு வந்தபோதிலும் கால்நடைகள் தீவன அதிகமான அளவிற்கு விலை விற்பதால் மாடுகளை வைத்து இருப்பது மிகவும் தொல்லையாக

காரியமாக இருக்கிறது. தற்போது பாலின் விலை குறைவாக இருப்பதால், அதை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சமீப காலமாக வட்டார அளவில் கால்நடை வளர்ப்புக்கு முக்கியத்துவம் அளித்து வருவதால், அவற்றிற்கு வேண்டிய மருத்துவ வசதிகளைச் செய்து தருவதற்காக ஆங்காங்கு வட்டாரம் தோறும் ஒரு கால்நடை மருத்துவ மனை ஆரம்பிக்க வேண்டும் என்றுக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் ஆங்காங்கு கிராமப் பகுதிகளுக்குச் சென்று மருத்துவ வசதிகள் செய்ய நடமாடும் கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே இந்த அரசு இந்தச் சட்ட மன்றப் பேரவையில் அறிவித்ததைப் போல், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளை கால்நடை விரிவாக்க அலுவலர்களாக நியமிக்க வேண்டும் என்று இந்த அரசை நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவர்கள் ஆண்டு பூராவும் அரசு விடுமுறைகளில்கூட பணி புரிகின்றனர். அரசு விடுமுறைகளில் பணிபுரியும் மனித இயல் மருத்துவர்களுக்கு அளிக்கப்படுவதுபோல், இந்த கால்நடை மருத்துவர்களுக்கும், ஈடுகட்டும் விடுப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை உதவி மருத்துவர்களுக்கும், மனித இயல் உதவி மருத்துவர்களுக்கும் இடையே ஊதிய விகிதத்தில் 150 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. இரண்டு மருத்துவர்களும் ஒரே மாதிரியான அடிப்படையில் கல்வித் தகுதி பெற வேண்டி இருப்பதால், அந்த வித்தியாசத்தை நீக்கி, கால்நடை உதவி மருத்துவர்களுக்கும், மனித இயல் உதவி மருத்துவர்களுக்கு அளிக்கப்படுவது போன்ற ஊதிய விகிதம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை ஆய்வாளர்கள் தடுப்பு ஊசி சான்றிதழ் வழங்கலாம் என்பதை ரத்து செய்வதாக அரசு வாக்குறுதி அளித்துள்ளது. அதை ஆணையாக நிறைவேற்ற வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை உதவி மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கையில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ரிசர்வ் கால்நடை மருத்துவர்களாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்சமயம் புதிதாக ஏற்படுத்தியுள்ள பொலிகாளை நிலையத்திற்கும் தனியாக கால்நடை உதவி மருத்துவர்கள் நியமிக்க வேண்டும் என்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று உரையை முடித்துக் கொள்கிறேன்.



[பிற்பகல் 1.20]

*திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் (நிலக்கோட்டை): துணைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த இரு மானியக் கோரிக்கைகளையும் ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக சமூக நலத்துறையை எடுத்துக்கொண்டால் நிறைய பெண்களுக்காக பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இது நம்முடைய அமைச்சரவர்களின் தனித் திறமையை எடுத்துக் காட்டுகிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

முதலிலே, இந்த கால்நடைகளைப் பொறுத்தவரையில் ஆங்காங்கே நிறைய மாடுகள் தீனி இல்லாமல் கஷ்டப்படுகின்றன. மாடுகளை வளர்க்கின்றவர்கள் மாட்டுத் தீவனம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த சூழ்நிலையில் எங்கெல்லாம் புறம் போக்கு நிலங்கள்-கண்மாய்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் எஃப்.டி.எல்-லுக்குமேலே மாட்டுப் புல்களை வளர்க்கச் சொல்லி, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் அந்த புல்லை கிலோ இவ்வளவு விலை என்று நிர்ணயம் செய்து விற்கச் செய்தால் ஓரளவுக்கு மாட்டுத் தீவனமும் கிடைக்கும்; பஞ்சாயத்துக்களுக்கு வருமானமும் கிடைக்கும்.

இன்று விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. அதைப்போல மாட்டு விலையும் குறிப்பாக உழவு மாட்டு விலையும் ஏறிக் கொண்டிருக்கிறது. உழவு மாடு 3,000 ரூபாய், 4,000 ரூபாய்க்கு குறைந்து வாங்க முடியவில்லை. அந்த அளவுக்கு விலை ஏறி விட்டது. அதற்கு என்ன காரணம் என்று பார்த்தால், மாதம் ஒன்றுக்கு கேரளாவுக்கு மட்டும் கிட்டத்தட்ட 1½ இலட்சம் மாடுகள் கடத்தப்படுவதாக கணக்கு இருக்கிறது. அதனால் நம்முடைய சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக சர்வோதய இயக்கத் தலைவர் வினோபாஜி அவர்கள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். பலர் ஜெயிலுக்குப் போயிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் 250 பேர்-சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஜெயிலுக்குப் போயிருக்கிறார்கள். அந்த நேரத்தில்தான் நம்முடைய அரசு ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, கேரளாவுக்குப் போகும் நல்ல மாடுகளை அங்கு கொண்டுபோகாமல் தடுக்க வேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, அது செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டது. அதன் பிறகு இந்த அரசு 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டு, மீண்டும் இந்த அரசு வந்தபிறகு அந்தச் சட்டத்தை கொண்டுவரவில்லை. கேரளத்தில் 710 கொலைக் கூடங்களில் அந்த மாடுகளைக் கொன்று, இறைச்சியைப் பக்குவப்படுத்தி ஏற்றுமதி செய்து, அதனால் மத்திய அரசும் கேரள அரசும் சுமார் 80 கோடி ரூபாய் வருமானம் பெறுகிறார்கள் என்று சர்வோதய இயக்கத்தினர் கணக்கு எடுத்திருக்கிறார்கள். ஆகையால், மாடுகளின் விலையேற்றத்தைத் தடுக்க, கேரளாவுக்குச் செல்லும் மாடுகளை தடை செய்வது சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதன் பிறகு ஆடு வளர்ப்பு வருகிறது. ஆடுகளுக்கு இன்ஷ்யூர் செய்துவருகிறோம். பால் மாடு எப்படி வாங்கிக் கொடுக்கிறார்களோ அதைப்போல—மாடு வாங்குவதற்கு வீட்டுவரி ரசீது இருந்தால் போதும் என்று வைத்திருக்கிறோம்-இந்த ஆடுகள் வாங்க 4,000 கொடுக்கப்படுகிறது. 2, 3 ஏக்கர் வைத்திருக்கிற சிறிய விவசாயிகள் சொத்தைக் காட்டுகிறார்கள். அதைப்போல கூலி, விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் நன்மைக்காக அமைச்சரவர்கள் இங்கே கூலி விவசாயிகளுக்காக ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அந்த விவசாய கூலிகள் ஆடு வாங்க வேண்டுமானால் அவர்களுக்கு நிலம் வைத்திருக்கிற இன்னொருவர் கையெழுத்துப்போட்டு கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இதை மாற்றி, அங்கே இருக்கிற கிராம ஊழியர்கள், கிராம உத்தியோகஸ்தர்கள் கையெழுத்துப் போட்டால் போதும் என்று செய்ய வேண்டும். அதோடு அவர்களுக்கு 1,000 ரூபாய், 1,330 ரூபாய் இனாம் கூட கொடுக்கப்படுகின்றது. இது ஏழைகளின் வாழ்வை உயர்த்துவதற்கு வழியாக அமைந்துள்ளது.

இப்போது ஆடுகள் திடீர் திடீரென்று கத்தி, இறந்து போகின்றன. கோமாரி நோய் போன்று வந்து, திடீரென்று கத்தி, உடனே இறந்துவிடுகின்றன. அது என்ன நோய். இதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும் என்று இந்த இலாகா ஆராய்ந்து பார்த்து, தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நல்ல கன்றுகளை வளர்க்கக் கொடுக்கிறோம். கிராமப்புறங்களிலுள்ள விவசாயிகளுக்கு ஒரு ஆளுக்கு இரண்டு கன்றுகள் என்று கொடுத்தால் அவர்கள் நல்லமுறையில் வளர்த்து கொடுப்பார்கள். கிராம மக்களுக்கு இப்படி நல்ல கன்றுகளை வளர்க்க ஏற்பாடு செய்து கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதன் பிறகு இந்த சமூகநலனில் ஐ.சி.டி.எஸ். இருக்கிறது. இதற்கு ஒரு கேள்வியே போட்டு, அதற்கு வேறுவிதமான பதில் வந்திருந்தாலும்கூட, இந்த 'இன்டர் நேஷனல் டெவலப் மென்ட் ஸ்கீம்' இன்றைக்கு மூன்று பஞ்சாயத்து யூனியன்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுபோதாது. படித்த பெண்கள் நிறையபேர் இருக்கிறார்கள். மத்திய அரசின் உதவியுடன் இந்தத் திட்டத்தை 376 பஞ்சாயத்து யூனியன்களிலும் செயல்படுத்தினால் எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற நிறைய பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆகவே, அனைத்து பஞ்சாயத்து யூனியன்களிலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், 376 யூனியன்களிலும் இத்திட்டம் நிறைவேறினால் 37,600 பெண்களுக்கு ஆயா வேலை கிடைக்க வகை ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து, விதவைப் பெண்களுக்கு நம்முடைய அரசாங்கம் பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறது. விதவைப் பெண்களின் குழந்தைகளுக்கான முழு பராமரிப்பையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்; அவர்களுக்கு ரஷியா, ஜப்பான் நாடுகளில் என்னென்ன செய்கிறார்களோ அந்த அடிப்படையில் செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய பல அங்கத்தினர்கள் விதவைகளுக்கு வயது வரம்பைப் பார்க்கக்கூடாது என்று சொன்னார்கள்

அவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்ற காரணத்தால் அவர்களுக்குரிய வயது வரம்பை 20 என்றாலும் சரி, 25 வயது என்றாலும் சரி, வயது வரம்பை எடுத்துவிடவேண்டும். அவர்களுடைய வாழ்வுக்கு என்ன வழி என்பதைப் பார்த்து விதவைக்கான பென்ஷனைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்து விதவைப் பெண்களின் குழந்தைகளுக்கு புஸ்தகமும், நோட்டுகளும் வாங்கிக் கொடுக்க வழிவகை செய்து கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் ஆரம்பப் பள்ளியில் படிப்பவர்களுக்கு 15 ரூபாய் என்றும், நடுநிலைப்பள்ளிகளில் படிப்பவர்களுக்கு 40 ரூபாய் என்றும், உயர்நிலைப்பள்ளிகளில் படிப்பவர்களுக்கு 60 ரூபாய் என்றும் உதவித்தொகை கொடுப்பதற்கு தீர்மானம் போடப்பட்டிருக்கின்றது. இந்த நிலைமையை மாற்றி அவர்களுடைய படிப்புக்கான செலவு முழுவதையும், உணவு போன்றவற்றிற்கான செலவு முழுவதையும், அரசாங்கம் கொடுக்க ஏற்பாடு செய்வதுதான் பொருத்தமாக இருக்கும்... (மணியடிக்கப்பெற்றது).

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலம், கால்நடை பராமரிப்பு ஆகிய மானியத்திலே பேசுவதற்கு நான் அதிக நேரம் எடுத்துக்கொண்டு பேசவிரும்பவில்லை. சுருக்கமாகச் சில கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான்கு நிமிடங்கள் தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்; சுருக்கமாகச் சொல்லவே விரும்புகிறேன், மிக முக்கியமானவற்றை மட்டும் சொல்கிறேன். 1981-ஆம் ஆண்டு உடல் ஊனமுற்றவர்களின் ஆண்டு என்று அறிவித்து உடல்

ஊனமுற்றவர்களுக்கெல்லாம் பலவிதமான நன்மைகள் செய்ய வேண்டும் என்றும் அவர்களை மேலே உயர்த்தவேண்டும் என்றும் சொல்லப்படுகின்ற கருத்து இன்றைக்கு இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய கருத்தாக இருந்து கொண்டிருக்கிறது. அதிலேயும் குறிப்பாக தமிழக அரசு அதிலே மிகவும் அக்கறை கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்ட அக்கறை இருக்கின்ற போது நான் கேட்டுக்கொள்வது எல்லாம் இங்கே இருக்கக்கூடிய அமைச்சரவையில் கூட உடல் ஊனமுற்ற ஒருவரை அமைச்சராக ஆக்கி அவருக்கு வாய்ப்பு கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், உடல் ஊனமுற்றவர்களுக்கெல்லாம் பஸ்களிலே இலவசமாக போகக்கூடிய வாய்ப்பை இந்தச் சர்க்கார் ஏற்படுத்தித் தருவதாக பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். ஆனால் நடைமுறையில் பார்த்தால் 10, 11 வயதுடைய சின்னஞ் சிறார்கள் அதாவது உடல் ஊனமுற்றவர்கள் பஸ்களிலே இலவசமாகப் போகலாம் என்று இருக்கின்றது. 8 வயது, 10 வயது பாலகர்கள் எல்லாம் அவர்கள் உடல் ஊனமுற்றவர்களாக இருந்தால் அவர்கள் தனியாக பஸ்களிலே போவது அதுவும் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையிலே போவது என்பது மிகவும் சிக்கலான ஒன்று. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அக்குழந்தையின் தந்தையோ தாயோ அக்குழந்தையுடன் செல்ல முடியாது என்ற நிலை இருந்தால் அந்தக் குழந்தைகள் எப்படிப் போவார்கள். அப்படியானால் எவ்வளவுபேர் இந்த உதவியினால் பயன்பெறப்போகிறார்கள்? அதிலே என்ன பலன் இருக்கிறது? ஆகவே உடல் ஊனமுற்றவர்களுக்கு இந்த சர்க்கார் உண்மையிலே உதவி செய்யவேண்டும் என்று விரும்பினால் உடல் ஊனமுற்றவர்கள் அத்தனை பேரும் பஸ்களிலே இலவசமாகப் போகலாம் என்று சட்டத்திலே கொண்டு வரவேண்டும். அப்படிப்பட்ட ஒரு அறிவிப்பு செய்யவேண்டும். இதற்குக் கூடவா டெல்லியிலே இருந்து அதிகாரம் உங்களுக்கு வரவேண்டும். உங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தியே செய்யலாம். மேற்கு வங்கத்திலே எந்த அதிகாரத்தை கொண்டு செய்திருக்கிறார்கள்? ஆகவே அதே மாதிரி இங்கேயும் உடல் ஊனமுற்றவர்கள் அத்தனைபேரும் பஸ்களிலே இலவசமாகப் போகலாம் என்று இந்த அரசும் அந்த முறையைப் பின்பற்ற வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் இங்கே பேசிய உறுப்பினர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். விதவைகளாக இருந்தாலும், முதியவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு உதவி செய்யவருகின்ற வகையில் வயது வரம்பு வைத்திருக்கிறீர்கள். முதியவர்களுக்கு வயது வரம்பு வேண்டும் என்றால் கூட அதிலேயும் அதிகமான அளவுக்கு வைக்கக்கூடாது. ஏனென்றால் பல முதியவர்களைப் பார்த்தால் முதியவர்களாக தோன்றுவதில்லை. ஆகவே முதியவர்களுக்கு அதிக அளவுக்கு வயது வரம்பு இருப்பது பற்றிக்கூட எதுவும் சொல்லவில்லை என்றாலும் விதவைகள் என்று சொல்லப்



படுகின்றபோது அவர்கள் ஆதரவற்றவர்கள். அவர்களுக்கு வயது வரம்பு இருக்கக்கூடாது. அவர்கள் ஏற்கெனவே கணவனை இழந்து நிற்பவர்கள், ஆதரவற்றவர்கள். அவர்கள் எந்தப் பாதுகாப்பும் இல்லாதவர்கள். அவர்கள் மிகவும் பலவீனமானவர்கள். அவர்கள் வீக்கர் செக்‌ஷனைச் சேர்ந்தவர்கள். ஆகவே அவர்கள் மேலே உயர்வதற்கு உதவி செய்யவேண்டும். அவர்கள் தங்களது இளமை காலத்தில் வழிதவறிப் போகக்கூடிய சூழ்நிலை ஏற்படாத வகையிலே அவர்களுக்கு பாதுகாப்பு இருக்கவேண்டும். . . .

[பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் முன்அனுமதியுடன் பேரவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான் : ஆகையினால் சமுதாயத்தில் பலகீனமாக உள்ள அந்த இளம் விதவைகளுக்குதக்க பாதுகாப்பு வேண்டும். அவர்களை நம்முடைய தங்கைகளாக, தாய்மார்களாக கருதி, அவர்களுக்கு நல் வாழ்வு கிடைக்கும் பொருட்டு, இளம் விதவைகள் அத்தனை பேருக்கும், வயது வரம்பு இல்லாமல், உதவித் தொகை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அதேபோல் ஊனம் உற்றவர்கள் என்று சொன்னாலே இயலாதவர்கள் என்றுதான் பொருள். அவர்கள் சமுதாயத்தின் வீக்கர் செக்‌ஷன் என்றுதான் பொருள். எனவே, அவர்களுக்கும் வயது வரம்புத் தேவையில்லை. அது மட்டும் அல்லாமல் இந்த அரசு அவர்களுக்கு உதவித் தொகை எவ்வளவு என்று கேட்டால் 25 ரூபாய் கொடுக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தத் தொகை அவர்களுக்கு போதுமானதா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை என்று சொல்வேன். அந்த 25 ரூபாயை வைத்துக் கொண்டு, இன்றைய விலைவாசி ஏற்றத்தில் குடும்பம் நடத்த முடியுமா? நாம் எவ்வளவோ காரியங்கள் செய்கிறோம். மக்களுடைய வரிப்பணம் எப்படியெல்லாமோ போகிறது. யார் யாருக்கோ கொடுக்கிறது அரசாங்கம். ஆஸ்தான கவிஞருக்குக் கூட கொடுக்கிறது. மற்றவர்களுக்கும் கொடுக்கிறது. அவைகள் எல்லாம் முறையாக செலவழிக்கப்படுகிறதா என்கிற பிரச்னை எல்லாம் இப்போது இங்கே வேண்டாம். அப்படி அரசினுடைய பணம் வீணாக எத்தனையோ வழிகளில் போய்க் கொண்டிருக்கும் போது, ஆதரவற்ற, ஏழை எளிய மக்களான ஊனம் உற்றோர்களுக்கு குறைந்தது மாதம் 250 ரூபாயாவது உதவித் தொகையாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோருக்கும் 3 நிமிடங்கள்தான் கொடுத்தேன். உங்களுக்கு 6 நிமிடங்கள் ஆகி விட்டது. சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : இன்னும் 2 நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன். இன்னும் நான் சப்ஜெக்டுக்கே வரவில்லையே. தயவுசெய்து அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே இன்னொரு கருத்தையும் இங்கே உங்கள் மூலமாக இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்கு இன்றைக்கு உதவிப் பணம் வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நடைமுறையில் பல பேருக்கு கிடைக்காத ஒரு சூழ்நிலை தான் இருந்துகொண்டிருக்கிறது. என்னிடத்திலே கூட மனு கொடுத்திருக்கிறார்கள். மதுரையில் 2,000 ரூபாய் உதவித் தொகை கொடுக்க வேண்டியதற்கு 200 ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் காலி இடத்தைக் கேட்டால், நீங்களே ஏதாவது காலி இடம் இருந்தால் பார்த்துச் சொல்லுங்கள் என்று சகல தஸ்தாவேஜுகளையும் வைத்திருக்கும் அரசாங்கம் அவர்களிடம் சொல்கிறது. எனவே, கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு உதவித் தொகை அரசு வழங்குகிறது என்று அறிவிப்போடு நின்றுவிடாமல் அது பல பேருக்கும் பயன்பெறுகிற அளவில் நடைமுறையில் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

*மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை மற்றும் சமூக நலத்துறை, ஆகியவற்றின் மீதான மானியக் கோரிக்கைகள் மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், வெட்டுத் தீர்மானங்களின் மூலமாகவும்; எடுத்து அவையிலே விவாதிப்பதன் மூலமாகவும், தங்களுடைய கருத்துக்களை எல்லாம் தெரிவித்தார்கள். அவர்களுடைய கருத்துக்களும், கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களும் பரிசீலிக்கப்பட்டு, நான் பதில் கூறும்போது அவற்றை முறைப்படுத்தியே கூற விரும்புகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரைக்கும், நமது நாடு ஒரு விவசாய நாடு என்பது அனைவருக்கும் தெரியும். அந்த வகையில் நம் மாநிலத்தில் கால்நடை வளர்ப்பதலை கிராமப்புறத்திலே உள்ள மக்கள் அனைவரும், முக்கிய உபதொழிலாகக் கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிராமப்புற மக்களின் வருமானத்தை பெருக்குவதற்கு கால்நடை வளர்ச்சி மிகவும் தேவையானது. கால்நடைகள் விவசாயிகளுக்கு நண்பனாகவும், தோழனாகவும் பயன்படுகின்றன.

அந்த வகையில் நம் மாநிலத்தில் காணப்படுகிறது. என்ன வென்றால் கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காகவும் விவசாயிகள் வருமானத்தை பெருக்குவதற்காகவும் கால்நடை பராமரிப்புத் துறை பல திட்டங்களைப் போட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம், கேந்திர கிராமத்திட்டம், மேற்கு தொடர்ச்சிமலை



மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாடு திட்டம், மலைப்பகுதி மேம்பாடு திட்டம், கால்நடை வளர்ப்பு சிறப்புத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம் போன்ற திட்டங்கள் போட்டு அதன் வாயிலாக நம் மாநிலத்தில் காணப்படும் கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காகவும் விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவதற்காகவும் கால்நடை பராமரிப்புத் துறை நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் இந்தத் திட்டத்தின் மூலமாக சிறிய விவசாயிகள், குறுநில விவசாயிகள், மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்கள் அனைவரும் முக்கிய இடம் வகிக்கிறார்கள்.

இப்போது நம் மாநிலத்தில் சாதாரணமாக நாட்டு இன கால்நடைகள்தான் காணப்படுகின்றன. அந்த நாட்டு இன கால்நடைகளை பாதுகாத்து விஞ்ஞான முறையில் நாட்டு இனங்களின் தரத்தை உயர்த்துவது கேந்திர கிராம திட்டத்தின் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகிறது. அந்த வகையில் தமிழகத்தில் 62 கேந்திர கிராம வட்டங்கள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம், கொடவாசல், திருவாரூர், மன்னார்குடி, நாகப்பட்டினம் போன்றயிடங்களில் கேந்திர கிராமத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது தமிழகத்தில் ஏழு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் தற்போது 59 பொலி காளை நிலையங்கள் செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த பொலிகாளை நிலையங்களில் உயர்ரகமான காளைகளை பயன்படுத்தி வருகிறார்கள். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், ஜெர்ஸி, ப்ரீஷியன், ரெட்டேன், காங்கேயன், முர்ரா, பரௌன் போன்ற காளைகள் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதோடு மட்டுமல்லாமல் உறைவிந்து நிலையங்கள் ஏற்படுத்திக் கொண்டு கால்நடை பராமரிப்புத்துறை செயல்பட்டு வருகிறது. திரவ விந்து நுட்பம் படிப்படியாக உறைவிந்து நுட்பமாக மாற்றப்பட்டு உறைவிந்து நீண்ட நாட்கள் பாதுகாக்கப்படவும் அப்படி பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் கூடுதல் கருதரிப்பு விகிதமும் உறுதிபடுத்தப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் அபிஷேகப்பட்டியில் உறைவிந்து வங்கி ஒன்றும் திரவ நைட்ரஜன் திட்டம் ஒன்றும் விரைவில் செயல்பட இருக்கிறது. தஞ்சை மாவட்டம் ஈச்சங்கோட்டையில் உள்ள கால்நடைப் பண்ணையில் 38.81 இலட்சம் செலவில் டென்மார்க் அரசு உதவியோடு மற்றொரு உறைவிந்து வங்கி விரைவில் செயல்படுத்தப்பட இருக்கிறது.

கால்நடைகள் பற்றி விவசாயிகள் நன்றாக தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக கால்நடை கண்காட்சிகள், கன்றுப் பேரணிகள் போன்றவை எல்லாம் நடைபெற்று வருகின்றன 1980-81-ல் தென்ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், தர்மபுரி,

மற்றும் கோவை போன்ற மாவட்டங்களில் கால்நடை கண்காட்சிகளும், பல்வேறு மாவட்டங்களில் 56 கன்றுப்பேரணிகளும் நடத்தப்பட்டிருக்கின்றன.

[பிற்பகல் 1.40]

ஒரு கால்நடை கண்காட்சி நடத்த வேண்டுமென்றால், அதற்கு ரூ. 5,000 கொடுக்கப்படுகின்றது. கன்று பேரணி நடத்த வேண்டுமென்றால், அதற்கு ரூ. 400 கொடுக்கப்படுகின்றது. அதோடு மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஆடு வளர்க்கும் திட்டத்தைப்பற்றிக் கூறினார்கள். வறட்சி இந்த வருஷம் மிகுதியாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் ஆடு வளர்ப்பை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டுமென்று கூறினார்கள். அதை முன்னிட்டுத்தான், உயர்ந்த ரகமான ஆடுகள் இனங்களை வாங்கி வளர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, மாண்டியா, மேச்சேரி, கீழக்கரிசல், இராமநாதபுரம் வெள்ளை, மற்றும் வேம்பூர் இனங்களைப் பாதுகாத்துப் பெருக்கும் நோக்கத்தில் இரண்டு ஆட்டுப் பண்ணைகளும், மாவட்டக் கால்நடை பண்ணைகளுடன் இணைக்கப்பட்ட நான்கு ஆடு வளர்ப்பு நிலையங்களுமுள்ளன. அதோடு மட்டுமல்ல, நமது தமிழகத்தில் 455 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. இந்த ஆடுகளிடையே குடற்புழுக்கள் காணப்படுகின்றன என்றும், அதனால் ஆடுகளின் இறைச்சி குறைவாகவும், அது மிகவும் மெலிந்து காணப்படுவதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அதை முன்னிட்டு, ஆடுகளுக்கு அதிகமாகக் காணப்படும் குடற்புழுக்களை அகற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு திட்டத்தை 1979–80லே ஆரம்பிக்கப்பட்டு, அதற்காக 1980–81ல் 3.75 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றது. 1980–81-ல் 96,184 ஆடுகளுக்கு குடற்புழுக்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. 1980–81ல் 15.98 இலட்சம் செலவில் 200 ஜமுனாபாரி வெள்ளாடுகளைக் கொண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் கால்நடைப் பண்ணையில் வெள்ளாடு வளர்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தற்போது தமிழகத்தில் 29 கோழி விரிவாக்க நிலையங்களும், 2 குஞ்சு பொரிப்பு நிலையங்களும் உள்ளன. 1980–81ம் ஆண்டில், அலங்காநத்தம், முசிறி ஆகிய இடங்களில் மேலும் இரண்டு கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் விஜயலட்சுமி அவர்கள் வீரபாண்டி தொகுதியில் ஒரு கோழி வளர்ச்சி கூட்டுறவு சங்கத்தை அமைத்தால் நலமாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். அது பரிசீலிக்கப்படும் என்று நான் இந்த மன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1980–81-ல் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மற்றும் குறுநில விவசாயிகளுக்கு 11,343 கறவை மாடுகளும் 3.64 உழவு மாடுகளும் வழங்கப்படுகிறது. ஆடு வளர்ச்சிக்காக 8.66



இலட்சம் நிதி உதவி வழங்கப்படுகிறது. வறட்சி பற்றிக் கூறினார்கள். வறட்சிப் பாங்கான பகுதிகளுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? என்றெல்லாம் குறிப்பிட்டுப் பேசினார்கள். வறட்சிப் பாங்கான பகுதிகளில் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களில் கறவை மாடுகள் வாங்கவும், ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துவதற்கும் 1980–81-ல் ரூ. 60.94 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்ல. வறட்சிப் பகுதிகளில் கால்நடைகளுக்கு வேண்டிய தேவைகளை அரசு செய்து வருகிறது. வைக்கோல் வாங்கி வறட்சி பகுதியான மாவட்டங்களுக்கு சப்ளை செய்ய ஆவன செய்யப்படுகிறது. நடமாடும் மருத்துவமனை 6 உள்ளன. தேவைப்பட்டால் மேலும் ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்யும்.

சின்னசேலம் பண்ணையில் நிர்வாக தவறு பற்றி அரசுக்கு தகவல் இல்லை. தகவல் வந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் சிவராமன் அவர்களுக்கு குறிப்பிட விரும்புகிறேன். அடுத்து, மிகக் கொடிய நோயான வெக்கையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கொடிய நோய் அதிகமாகக் காணப்படுகிறது. அந்த நோயை ஒழிப்பதற்கு மருந்துகள் முறையாக கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். மிகக் கொடிய நோயான வெக்கையை ஒழிப்பதில் 17 மாவட்டக் குழுக்களும், 10 கண்காணிப்புப் பிரிவுகளும், 13 சோதனை சாவடிகளும் ஈடுபட்டுள்ளன. புதுக்கோட்டை, ஈரோடு, விருதுநகர் ஆகிய இடங்களில் மாவட்டக் குழு 1980–81ல் ஆரம்பிக்கப்பட்டன. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் கருச் சிதைவு நோய் ஆய்வுக்கூடம், கோழி நோய் தடுப்பு மருந்து உற்பத்திப் பிரிவு, வாத்துநோய் தடுப்பு மருந்து உற்பத்திப் பிரிவு ஆகியவற்றிற்கு 1980–81-ல் 15.38 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அடுத்து ஈச்சங்கோட்டை தீவனத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் கூறினார்கள். தீவனத்தை நல்ல முறையில் உற்பத்தி செய்ய வேண்டும். புற்களைப் பயிரிட வேண்டுமென்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அந்த வகையில், ஈச்சங்கோட்டையில் பண்ணை ஆரம்பிக்கப்பட்டு, தீவன பயிற்சி நிலையம் சேர்த்து, 5 நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அடுத்து, சென்னை மாநகரத்தில் ஒரு நவீன இறைச்சிக்கூடம் ஆரம்பிப்பதற்கு இந்த வருடம் 3 கோடி ரூபாய் முதலீட்டில் நாங்கள் ஒரு திட்டம் போட்டிருக்கிறோம். அந்த வகையில் சென்னை மாநகரில் 5 இலட்சமாக ஜனத்தொகை இருந்தபோது, தற்போது பெரம்பூரிலுள்ள இறைச்சிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போதுள்ள மக்கள் தொகை 30 இலட்சமாக கூடுதலாகி உள்ளது.

அந்தவகையில் அந்த மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும் நவீன முறையில் இறைச்சி தருவதற்கும், இதர உப பொருள்களை அளிப்பதற்கும் 150 ஏக்கர் நிலத்தில் மாதவரத்தில் ஒரு நவீன இறைச்சிக் கூடம் ரூபாய் மூன்று கோடி முதலீட்டில் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமான வேலைகள் துவங்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் இரண்டு ஆண்டு காலத்தில் இந்த நவீன இறைச்சிக் கூடம் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்து இந்த ஆண்டிற்கான புதியத் திட்டங்கள், 1981-82. சிறப்புத் திட்டங்களை பற்றி இந்த மன்றத்திலே கூற விரும்புகிறேன். 60 முர்ரா எருமை காளைகள் வாங்கப்படும். உறைவிந்த நுட்பத்தில் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இரண்டு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் செங்கல்பட்டு மாவட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டத்திலும் துவங்கப்படும்,

கொற்கை, சாத்தூர், அபிஷேகப்பட்டி, செட்டிநாடு ஆகிய கால்நடை பண்ணைகள் வலுப்படுத்தப்படும். 900 பர்டிஸோ காயடிக்கும் கருவிகள் வாங்கப்படும். ஈரோடு, புதுக்கோட்டை, கடலூர் ஆகிய மூன்று இடங்களிலுள்ள கால்நடை மருத்துவ மனைகள் பிரதம மருத்துவ நிலையங்களாக தரம் உயாத்தப்படும்.

திருவள்ளூர், ஹோசூர், பட்டுக்கோட்டை மற்றும் அம்மாபேட்டையில் உள்ள கால்நடை மருந்தகங்கள் மருத்துவ மனைகளாக தரம் உயர்த்தப்படும். அடுத்து கால்நடை மருந்தகங்களை கட்டுவதற்கு எண்ணிக்கை உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு 10 கால்நடை மருந்தகங்கள் திறந்தோம். இந்த ஆண்டு இன்னும் 10 கால்நடை மருந்தகங்களைக் கூட்டி, 20-ஆக கால்நடை மருந்தகங்களை இந்த ஆண்டு திறக்க போகிறோம், என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த வகையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் எடமலைபூர் மெலட்டூர், மதுரை மாவட்டத்தில் ஓடைப்பட்டி, காமயே கவுண்டன்பட்டி, தர்மபுரி மாவட்டத்தில், மாத்தூர்; தஞ்சாவூர் மாவட்டத்தில் பாப்பான்நாடு; திருநெல்வேலி மாவட்டத்தில் கல்லிடைக்குறிச்சி; செய்துங்கநல்லூர்; திருச்சி மாவட்டத்தில் உப்பிலியாபுரம்; கரூர்; பெரியார் மாவட்டத்தில் மைலம்பாடி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் சேயூர்; புதுக்கோட்டை மாவட்டத்தில் கிரமங்கலம்; சேலம் மாவட்டத்தில் பள்ளிப்பட்டி, கமலம்பட்டி; தென்னாற்காடு மாவட்டத்தில் மங்களூர்; எலவாஞ்சூர்கோட்டை; வட ஆற்காடு மாவட்டத்தில் காட்டுக்காநல்லூர்; இராமநாதபுரம் மாவட்டத்தில் பாகநேரி; செங்கல்பட்டு மாவட்டத்தில் பாண்டேஸ்வரம் ஆகியவையாகும்.



அடுத்து இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் திசுவளர்வெக்கை நோய் தடுப்பு மருந்து பிரிவை வலுப்படுத்தப்படும். ஈரோட்டில் கோழி நோய் கண்டுபிடிக்கும் ஆய்வுக் கூடம் ஏற்படுத்தப்படும்.

செட்டிநாடு பண்ணையில் தீவனப் பயிர் விதை உற்பத்தி நிலையம் நிறுவப்படும். சாத்தூர் மற்றும் சின்னசேலம் முதலிய இடங்களில் ஆடு வளர்போருக்கு ஒரு குறுகிய பயிற்சி அளிக்கப்படும்.

நாட்டினப் பன்றிகளை தரம் உயர்த்துவதற்காக இலவசமாக 125 அயலின ஆண் பன்றிகள் வழங்கப்படும் கால்நடை கணக்கெடுப்பதற்கு ஒரு பிரிவு ஏற்படுத்தப்படும். நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கு மண்டலங்களா பிரிக்கப்பட்டு திருச்சி, சேலம் ஆகிய புதிய மண்டலங்கள் உருவாக்கப்படும்.

எம். வி. எஸ். ஸி. பட்டப்படிப்புக்கு 10 துறை அலுவலர்கள் அனுப்பப்படுவார்கள். மலடு நீக்கம் சிகிச்சையில் பயிற்சி அளிக்கப்படும். ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம்செய்வதன் மூலம் இறைச்சியின் உற்பத்தி பெருக்கப்படும்.

அதோடு மட்டுமல்லாமல், கால்நடை ஆய்வாளர்களின் பயிற்சி விரைவில் துவங்க வேண்டுமென்று எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கால்நடை ஆய்வாளர்களின் பயிற்சி விரைவில் துவங்கப்படும். மருந்துகளைப் பற்றி கூறினார்கள். மருந்துகள் எந்தெந்த இடங்களில் கிடைக்கவில்லை என்பதற்கான தகவலை கொடுத்தால், அதில் உடனடி நடவடிக்கை எடுக்க மருந்துகள் கிடைக்க முயற்சி எடுக்கப்படும்.

திருமதி பொன்னம்மாள் அவர்கள் கால்நடை கடத்தல் தடுககும் சட்டம் இயற்றி இருந்ததின் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறினார்கள். மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு, இது சம்பந்தமாகவும் கால்நடைகளை பராமரிக்கும் பல திட்டங்களை கொண்டு ஒரு மசோதா நிறைவேற்றக் கூறி மத்திய அரசின் ஒப்புதலுக்கு 18–[illegible]–1981 அன்று அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னும் பல உறுப்பினர்கள் கொடுத்த கருத்துக்கள். கால்நடையைப் பொறுத்தவரையில் நல்லமுறையில் பரிசீலித்து அவைகளுக்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.50]

அடுத்து சமூக நலத்துறை. சமூக நலத் துறையைப் பொறுத்த வரைக்கும் சமுதாயத்தின் நன்மையை மட்டுமே கருத்திலே கொண்டு செயல்படுகிறது. இத் துறைக்கு எவ்வளவு செலவாகிறது, எவ்வளவு வருவாய் வருகிறது என்பதை எண்ணிப் பார்க்காமல்

[திருமதி. கோமதி சீனிவாசன்] [1981 ஏப்ரல் 14

மனிதாபிமான உணர்வோடு செயல்படுகிற ஒரு துறையாகும் இந்தத் துறையின் மூலம் சமுதாயத்தின் நலிந்த மக்கள், ஆதரவற்றவர்கள், விதவைகள், கணவனால் கைவிடப் பட்டவர்கள், உடல் ஊனமுற்றோர்கள், கைம்பெண்கள், கைம் பெண்களின் குழந்தைகள், மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பார்வையற்றவர்கள் குற்றம் செய்த சிறுவர்கள் குழந்தைகள் ஆகியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் எதிர் காலத்தில் சுயமாக வேலைசெய்து அவர்கள் பிழைப்பதற்கா நல்ல திட்டத்தை உருவாக்குவதுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் முக்கிய கொள்கை ஆகும் என்பதை இந்த மாமன்றத்திலே நான் குறிப்பிட விரும்பு கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பல நல்ல திட்டங்களை தீட்டுகிற நேரத்திலே குறிப்பாக சமூக நலத் துறை வசம் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் துறைக்கு சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 10,81,86,000 ஆகும். ஆனால் வளர்ந்து வருகின்ற மக்கள் தொகைக்கு ஏற்பவும், அதிகரித்து வருகின்ற தேவைக்கேற்பவும் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 20, 74, 64,000 ஆகும். பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை வழி நின்று அவர்களுடைய கொள்கையை நெறிதவறாது ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற ஆண்டு 10 கோடி ரூபாய் சமூக நலத்துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்திருந்தாலும் இந்த ஆண்டு அதற்காக 20 கோடி ரூபாய் செய்திருக்கிறார் என்றால் அவர்கள் ஏழை எளிய மக்களின் பால் எவ்வளவு பற்று வைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த வகையிலே சமூக நலத் துறையிலே ஆதரவற்றவர்கள், அனாதைகள், மற்றும் ஊனமுற்றோர்களுக்கு எல்லாம் நல்ல பல நன்மைகளைப் பெற வேண்டுமென்பதற்காக பல நல்ல திட்டங்களை இன்றைக்குச் செய்து இருக்கிறோம் என்பதை நான் இந்த மாமன்றத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையிலே சர்வதேச ஊனமுற்றோர் ஆண்டாக இந்த ஆண்டு கருதப்படுவ தால் அவர்களுக்கு எல்லாம் பல திட்டங்களைத் தீட்டி அவர் களுக்கு என்ன என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்வதோடு மட்டுமல்லாமல் தொழிற் பயிற்சித் திட்டங்களையும் சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறோம். அந்த வகையிலே இரண்டு கால் ஊனமாக இருந்தால் அவர்களுக்கு 3 சக்கர வண்டியும், ஒருகால் ஊனமாக இருந்தால் ஒரு செயற்கை உறுப்பும், காது கேளாதவர்களுக்கு காது கேட்கும் கருவியும் 45 வயதிற்கு மேற்பட்ட ஊனமுற்றோராக இருந்தால் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டமும் தையற் கலையிலே நன்கு பயிற்சி பெற்றிருந்தால் அவர்களுக்கு தையல் இயந்திரம் இலவச மாக வழங்கும் திட்டமும் இன்னும் பல நல்ல திட்டங்களையும்



1981 ஏப்ரல் 14] [திருமதி. கோமதி சீனிவாசன்]

செய்து கொண்டிருக்கிறோம். அந்த வகையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் அவர்களுக்கு ஒரு தொழிற் பயிற்சி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டு அதில் பயிற்சி பெற்ற 70 நபர்களுக்கும் அங்கேயே வேலையில் அமர்த்தப்பட ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. இந்த ஆண்டு சர்வதேச ஊனமுற்றோர் ஆண்டாக இருப்பதால் அதையொட்டி 59.51 இலட்சம் நிதி ஒதுக்கீட்டை செய்திருக்கிறோம். பார்வையற்றோருக்காக புதிதாக 2 அரசினர் பள்ளிகளும் காதுகேட்காதவர்களுக்காக புதிதாக இரண்டு அரசினர் பள்ளியும், கால் ஊனமுற்றோருக்காக ஒரு அரசினர் பள்ளியும் தொடங்குதல், உடம்பின் கீழ் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட 100 நபர்களுக்கு சக்கர நாற்காலிகள் இலவசமாக வழங்கும் திட்டமும் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்தும் வேலை கிடைக்காதவர்களுக்கு உதவித் தொகை கிடைக்கும்படி திட்டங் களையும் செய்து இருக்கிறோம். பார்வையிழந்தோர் மற்றும் காது கேளாதோருக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு என பயிற்சிப் பள்ளியில் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படும். உலக ஊனமுற்றோர் ஆண்டையொட்டி அவர்களுக்கு விளையாட்டுப் போட்டியை நடத்தியிருக்கிறோம். இந்த ஆண்டு இறுதியிலும் விளையாட்டுப் போட்டி நடத்தப்படும்.

உலக ஊனமுற்றோர் கணக்கு எடுப்பு ஒன்று நடத்தப் படுகிறது. எந்த அரசாலும் ஏற்படுத்தப்படாதது இது. இந்த ஆண்டு இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது, அதாவது சமுதாயத்தில் ஊனமுற்றோர் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பதை சுமாராக இதுவரைக்கும் கணக்கெடுத்து சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு மட்டும் ஊனமுற்றோர் பற்றி எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கு எடுப்பதன் வாயிலாக அதை நடத்துவதற்கு முடிவு எடுத்திருக் கிறோம். தற்போது தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதவர்க்கு பயிற்சி அளிப்பதற்காக தனிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படுகிறது. கிண்டியிலே உள்ள வயதுவந்த பார்வை இழந்தோருக்கான நடத்தப்படும் லேசு ரக பொறியியல் திட்டத்தை தொழில் நுட்ப பயிற்சி நிறுவனமாக தரம் உயர்த்துதல், வட்டார புது வாழ்வு நிலையம் அமைத்தல், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 10 முதல் 20 வரை உடல் ஊனமுற் றோர்களுக்கு சுய வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும்.

உடல் ஊனமுற்றோரிடம் பொதுமக்களின் நாட்டத்தைத் திருப்பவும், அவர்களின்பால் ஒரு நலனும் ஏற்படுவதற்காக, அவர்களுடைய நலனில் ஈடுபாடு செய்ய வேண்டி பிரச்சாரமும், செய்திப்படமும் தயாரிக்கவுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.

செயற்கை உறுப்புகள் தயாரித்து வழங்குவதற்காக இரண்டு புதிய நிலையங்கள் துவங்கப்படும்.

புதிய செவிலியர் பிரிவுகள் அமைக்கப்படும்.

உடலூனமுற்றோரின் ஆண்டினையொட்டி சிறப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக இரண்டு நல அதிகாரிகளும், துணைப் பணியாளர்களும் நியமிக்கப்படுவார்கள். நான்கு மண்டல மறுவாழ்வு நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

பார்வையற்ற 120 பேர்களுக்குத் துணி நெய்வதில் ஆறு மாதங்களுக்குப் பயிற்சி கொடுக்கும் திட்டமொன்று துவங்கப்படும்.

அடுத்து, விதவைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இந்த மாமன்றத்தில் பேசினார்கள். பல சிறப்பு அம்சங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு புதிய திட்டத்தைச் செய்திருக்கிறோம்; எந்த அரசும் செய்யாத ஒரு புதிய திட்டத்தைச் செய்திருக்கிறோம். அதாவது, விதவைகளின் ஒரு மகள் திருமணத்திற்கு, —1,000 பெண்களுக்கு, ஒரு பெண்ணுக்கு 1,000 ரூபாய் விதம் 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம், இந்தத் திட்டத்தின் வாயிலாக தமிழகத்திலுள்ள ஆதரவற்ற விதவைகளின் பெண் மக்களின் திருமணத்திற்காக ஆயிரம் ரூபாய் விதம் 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விதவைகளுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்ற திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய கருத்துக்களைக் கூறும் பொழுது தெரிவித்தார்கள். 40 வயது என்பதைக் குறைக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். எதிலுமே ஒரு வரையறை இருக்க வேண்டும். அந்த வரையறையை மீறினால், அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும் என்று கூறுவார்களே அந்த வகையில் ஆகிவிடும். எனவே, வரையறுத்துத்தான் ஒவ்வொரு திட்டத்தையும் செய்ய வேண்டுமென்ற முறையில் வயது வரம்பை வைத்திருக்கிறோம். அந்த வகையில் 40 வயதுக்கு மேற்பட்ட விதவைகளுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இளம் வயதிலேயே விதவையாகிவிட்டால் அவர்களுக்கு என்ன செய்வது அவர்களுக்கும் உதவித் தொகை கொடுத்தால் என்ன என்றெல்லாம் கேட்டார்கள். 18 வயது முதல் 40 வயது வரையிலே உள்ள அந்த இடைப்பட்ட வயதில் விதவையாகப் போய்விட்டால் அவர்களுக்கு சேவை இல்லம் என்று ஆரம்பித்திருக்கிறோம். அந்தச் சேவை இல்லத்திலே பள்ளிப்படிப்பு, மற்றும் தையற்கலை, நட்டச்சு, கணக்கியல் போன்றவற்றில் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து அதன்வாயிலாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு நாங்கள் தகுந்த நடவடிக்கைகளையெல்லாம் மேற்கொண்டிருக்கிறோம்.



விதவைகளின் குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் புத்தகங்கள் நிறைய, அதிகத் தொகையில் வழங்க வேண்டுமென்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு மேல்நிலைக் கல்வி பயிலும் விதவைகளின் குழந்தைகளுக்கு, ஒரு குழந்தைக்கு 100 ரூபாய் விதம் 1,000 குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள், புத்தகங்கள் வழங்குவதற்குத் திட்டங்கள் தீட்டி வழங்கப்படும்.

விதவைகளின் மறுமணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு மணமக்கள் இருவர் பெயரிலும் கூட்டாக, 5,000 ரூபாய்க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்படுகிறது. இந்தத் தேசிய சேமிப்புப் பத்திரங்களுக்கு ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு 10,000 ரூபாயாகத் திரும்பக் கிடைக்கும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அடுத்து, குழந்தைகள் காப்பகங்கள் சில இடங்களில் இருக்கின்றன. எங்களுக்குக் குழந்தைகள் காப்பகங்கள் வேண்டுமென்று உறுப்பினர்கள் கேட்டார்கள். தமிழகத்தில் மொத்தம் 4,613 குழந்தைகள் காப்பகங்கள் இருக்கின்றன. இவற்றில் 450 நிலையங்கள் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் நலனுக்காக நடத்தப்படுகின்றன. நடப்பு ஆண்டில்—அதாவது இந்த ஆண்டில் 100 குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பிக்கலாம் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

பழங்குடியினர் பகுதித் திட்டத்தின் கீழும், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுப் பணிகள் திட்டத்தின் கீழும் குழந்தைகள் நல நிலையங்களும், அங்கன் வாடிகளும் நடத்தப்படுகின்றன. இந்தக் குழந்தைகள் நல நிலையங்களில் சத்துணவு மற்றும் கல்வி தரப்படுகிறது; மருத்துவ வசதியும் தரப்படுகிறது. குழந்தைகள் காப்பகங்களுக்காக இதுவரை 850 நிரந்தரக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டில் 20 கட்டிடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்து, சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் உலக வங்கி உதவியுடன் இந்த ஆண்டு ஆரம்பித்து மிகவும் முன்னோடித் திட்டமாக மதுரை மாவட்டத்தில் கொட்டாம்பட்டி என்ற இடத்தில் நடந்து கொண்டிருக்கிறது. உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் மதுரை, செங்கல்பட்டு, வட ஆற்காடு, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நிறைவேற்றப்பட இருக்கின்றது.

(பிற்பகல் 2-00)

இந்தச் சத்துணவுத் திட்டத்தின் வாயிலாக ஆறு மாதக் குழந்தை முதல் 36 மாத வரையிலான உடல் தேர்ச்சி பெறாத குழந்தைகளுக்கு முறைப்படி ஆழ்ந்த கவனத்துடன் சத்துணவு

வழங்கப்படும். இந்த ஆண்டில் மதுரையிலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்திற்காக ரூ. 55·78 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்து, முதியோரைப் பற்றி கூறினார்கள், முதியோர் உதவித் தொகை பென்ஷன்—பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். 65 வயதிற்கு மேற்பட்டு ஆதரவற்ற முதியோராக இருந்தால் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும், அந்த உதவித்தொகை ரூ. 25 ஆக வழங்கப்படுகிறது. இதுவரைக்கும் ரூ. 20 வழங்கப்பட்டிருந்தது. தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசேற்ற பிறகு, ரூ. 5 அதிகமாக உயர்த்தி, ரூ. 25 வழங்கப்படுகிறது. அதை அதிகமாகக் கொடுக்க வேண்டும், ஒருவர் இறந்து விட்டால் அவருக்குப் பதில் இன்னொருவருக்கு வழங்கப் படுகிறது. ஒருவரைக் சாட்டி இன்னொருவருக்கு உதவித் தொகை வழங்குகிறார்கள் என்றெல்லாம் உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் முதியோர் உதவித் தொகை பெறுவோரின் எண்ணிக்கை முன்பெல்லாம் வரையறுக்கப்பட்டிருந்தது—இவ்வளவுதான் கொடுக்க வேண்டு மென்று ஒரு குறிப்பிட்ட அளவு வரையறுக்கப்பட்டிருந்தது— இந்த வருஷம் அவ்வாறில்லாமல், தமிழகத்திலுள்ள ஆதரவற்ற, தகுதி வாய்ந்த எல்லா முதியோர்களுக்கும் உதவித் தொகை வழங்கும் திட்டம் பரிசிலனை செய்யப்பட்டு, இந்த ஆண்டு கொடுக்கப்படும் என்பதை இந்த மன்றத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அதை முன்னிட்டு, 1,51,224 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்க ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

மகளிர் நலத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் கூறினார்கள். சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அவர்களெல்லாம் நல்ல முறையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்த வேண்டுமென்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வகையில்தான் கிராமப் புறத்தில் 20,000 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் சிறப்புத் திட்டத்தின் கீழ் 1980–81–ல் ரூ. 20·80 இலட்சம் வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் தீப்பெட்டி தொழிற்சாலை, பனைமரப் பொருள் தயாரித்தல், சாக்குக் கட்டி தயாரித்தல், குறிப்பேடுகள் தயாரித்தல், கயிறு தயாரித்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு பெண்கள் சுய வேலை வாய்ப்பில் ஈடுபட்டு, தங்களுடைய குடும்பத்தின் வருமானத்தை அதிகரிக்க வகை செய்யப்படும். இத்திட்டம் விரைவாகச் செயல்பட்டு வருகின்றது.



அடுத்து, தனியார் தொண்டு நிறுவனங்களில் பயிற்சி பெறும் பெண்களுக்கு அரசு மானியம் வழங்கி வருகின்றது நமது சமூக நல வாரியமும் மத்திய சமூக நல வாரியத்தின் உதவியுடன் மகளிருக்காகவும் குழந்தைகளுக்காகவும் நல்ல பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது.

சீர்திருத்தப் பள்ளியில், இந்த ஆண்டு சமூகத்தில் பாதிக்கப் பட்ட பெண்களுச்கு இல்லங்கள் நடத்தப்பட்டு, அங்கு அவர்களுக்குக் கல்வியும் பல கைத்தொழில்களும், பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

தஞ்சாவூர் மற்றும் இராணிப்பேட்டையிலுள்ள அரசினர் இளைஞர் சீர்திருத்தப் பள்ளியில் தச்சுத் தொழிற்கூடங்கள் இயந்திரமயமாக இந்த ஆண்டு மாற்றப்படும். மேலும் சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் மின்விசை சலவைத் தொழிலகம் ஒன்று இந்த ஆண்டு தொடங்கப்படும்.

மன நோயாளிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எடுத்துக் கூறினார்கள். மன நோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவி செய்ய தற்பொழுது சில தனியார் நிறுவனங்கள் இல்லங்களை நடத்தி வருகின்றன. அங்கு அவர்களுக்கு அளிக்கப்படும் தொழிற் பயிற்சிக்கு அதிக அளவில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, மன நோயினால் பாதிக்கப்பட்ட ஏழை, எளிய மக்களின் நலனைக் கருதி, 100 பேர்களைச் சேர்க்கும் நிலையம் ஒன்று அரசு நிர்வாகத்தில் இயங்க இருக்கிறது. அங்கு அவர்களுக்கு கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி ஆகியவைகள் அளிக்கப்படும்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் விஜயலட்சுமி அவர்கள் பால சேவிகாக்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்று கூறினார்கள். ஊதிய உயர்வைப் பற்றி ஒன் மேன் கமிஷனில் இருக்கிறது. ஒன் மேன் கமிஷனின் சிபாரிசு வந்த பிறகு, அரசு உத்தரவு பிறப்பிக்கும் என்று இந்த மாமன்றத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

தையல் மெஷின்கள் குறைவாகக் கொடுக்கின்றார்கள் என்று மாண்புமிகு உறுப்புனர்கள் அனைவரும் குறிப்பிட்டார்கள். 1981–82 ஆம் ஆண்டில் ஆயிரம் தையல் இயந்திரங்கள் வழங்கப்படும். அதற்கு ரூ. 6 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்து, 3 வயத்திற்குட்பட்ட குழந்தைகளுக்காவும் கர்ப்பிணிப் பெண்களுக்காகவும் மற்றும் பாலூட்டும் தாய்மார் களுக்காகவும் சத்துணவு நிலையங்கள் 9,000 5 ஆண்டுகளில் நிறுவப்படும்; உலக வங்கியின் உதவியுடன் நடத்தப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

[திருமதி. கோமதிசீனிவாசன்] [1981 ஏப்ரல் 14

ஆகவே இன்னும் சில உறுப்பினர்களுடைய குறைகளை அல்லது கோரிக்கைகளைப் பற்றி நான் சொல்லாமல் விட்டிருந்தால் அவைகள் நல்லமுறையில் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது ஒரு சந்தோஷமான செய்தியைச் சொன்னார்கள். முதியோர்கள் அத்தனை பேர்களுக்கும் பென்சன் தருவதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். அதே நேரத்தில் ஒரு லட்சம் என்று ஒரு எண்ணிக்கையையும் சொன்னார்கள். அப்படி இருந்தால் அது எல்லோருக்கும் வராது. எனவே வயதான, தகுதி உள்ள அத்தனை பேருக்கும் இந்த பென்சன் கிடைக்கும் என்று அறிவிப்பார்களா என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது, வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண்:22—கால்நடை வளர்ப்பு

திருவாளர்கள் க. பாலன், டி. மணி, தி. கா. நல்லப்பன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

திரு. சி. பழனிமுத்து அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாக கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "மானியக் கோரிக்கை எண். 22-கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,72,49,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன்

திருவாளர்கள் க. பாலன், எஸ், இராசாராமன், மு. அப்பாதுரை ஆகியவர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு, கே. ஆர். சுந்தரம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.



1981 ஏப்ரல் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,74,65000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றது. நாளை 15—4—1981 காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2·07 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

253, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல்-முறைப்படுதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 19—2-1981 ஆம் தேதியிடப்பெற்ற 419 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல்-முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது )

254. திருநெல்வேலி மாவட்டம். தென்காசி வட்டம், சுந்தரபாண்டியபுரம் கிராமத்தைச் சேர்ந்த பிச்சாண்டித்தேவர், தென்காசி காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தபோது 12—11-1978 ஆம் தேதியன்று இறந்தது பற்றி விசாரணை செய்வதற்காக திரு ஆர். நடராஜன், ஐ. ஏ. எஸ். அவர்களைக் கொண்டு நியமிக்கப் பட்ட தனிநபர் விசாரணைக் குழுவின் அறிக்கை 1952 ஆம் ஆண்டு. விசாரணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

255. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1980 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-அ பிரிவின் கீழ் பேரவையின்முன் வைக்கப்பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

125. கோரிக்கை எண். 6-பத்திரப் பதிவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, ஏப்ரல் 1981 (தமிழ், ஆங்கிலம்).

[1981 ஏப்ரல் 14

126. கோரிக்கை எண். 10-பால் பண்ணை வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

127. 1980-81 ஆம் ஆண்டு தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் செயலாக்கம் பற்றிய ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

128. கோரிக்கை எண். 22-கால்நடை பராமரிப்புப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82 (தமிழ், ஆங்கிலம்)

129. கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

130. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான பணிகள் பற்றிய அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

131. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாடகை வண்டி (திருத்த) சட்டமுன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/1981).

132. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/1981).

## இணைப்பு I.

[....41 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].
மானியக்கோரிக்கை எண் 6

### பத்திரப்பதிவுத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு

பத்திரப் பதிவுத் துறை முக்கியமாக 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு சட்டம் (மத்தியச் சட்டம்) செயல்படுவதை நிர்வகிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள போதிலும், பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் பிறப்பு-இறப்பு, திருமணங்களை பதிவு செய்யும் தலைமைப் பதிவாளராகவும், சீட்டு நிதிகளின் இயக்குநராகவும் இருக்கிறார். 1-12-80 லிருந்து முத்திரைத்தாள் சட்டத்தின்படி—வருவாய் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரியாகவும் விளங்குகிறார்.

பத்திரப் பதிவுச் சட்டத்தின்படி பெரும்பாலும் சொத்துரிமை மாற்றம் குறித்த ஆவணங்களைப் பதிவுச் செய்யும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இயங்காச் சொத்துக்கள் மீது உரிமை கோருபவருடைய உரிமைகளை நிலைநாட்டும் ஆவணங்களைப் பாதுகாக்கும் பொறுப்பையும் இத்துறை நிறைவேற்றி வருகின்றது, அவ்வப்போது, பின்வரும் சட்டங்கள் செயல்படுவதை நிர்வகிக்கும் பணியும் பத்திரப் பதிவுத்துறையுடன் சேர்க்கப்பட்டுள்ளது.



1981 ஏப்ரல் 14]

1. இந்திய பங்குதாரர்கள் சட்டம்;
2. சங்கங்கள் பதிவுச் சட்டம்;
3. பிறப்பு-இறப்பு மற்றும் திருமணப் பதிவுச் சட்டங்கள், சிறப்பு திருமணச் சட்டம், கிறிஸ்துவத் திருமணச் சட்டம், பார்சி திருமணச் சட்டம், விவாகரத்துச் சட்டம்;
4. தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டம்; மற்றும்
5. வரதட்சணை ஒழிப்புச் சட்டம்;

இவையன்றி வருவாய்த்துறை வாரியம் நீக்கப்பட்டதன் காரணமாக, இந்திய முத்திரைத்தாள் சட்டம் செயல்படுவதை நிர்வகிக்கும் பணி பத்திரப் பதிவுத்துறையிடம் சேர்க்கப்பட்டுள்ளது.

2. இத்துறையின் நிர்வாக அமைப்பு —(i) துறைத்தலைவர் பத்திரப் பதிவுத் துறைத்தலைவர் இத்துறையின் தலைவராவார். இவர் முத்திரைத்தாள் சட்டத்தின் தலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரியுமாவார். மேலும், கூடுதல் தலைவர் ஒருவரும், சீட்டு நிதிக் கூடுதல் இயக்குநர் ஒருவரும், நேர்முக உதவியாளர் ஒருவரும் இவருக்கு உதவி புரிகின்றனர்.

(ii) பத்திரப் பதிவுத்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் விவரம்.—

| | |
|---|---|
| பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் (ஐ. ஏ. எஸ். பதவித் தரம்) .. .. .. .. .. | |
| பத்திரப் பதிவுத்துறை கூடுதல் தலைவர் .. | 1 |
| பத்திரப் பதிவுத்துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர் | 1 |
| சீட்டு நிதி கூடுதல் இயக்குநர் .. | 1 |
| பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளர்கள் .. | 7 |
| மாவட்டப் பத்திரப் பதிவாளர்கள் .. | 40 |
| சீட்டு நிதி ஆய்வு அதிகாரி .. | 1 |
| சார்பதிவாளர்கள் .. | 672 |
| உதவியாளர்கள் .. | 633 |
| இளநிலை உதவியாளர்கள் .. | 991 |
| சுருக்கெழுத்து தட்டச்சர்கள் .. | 3 |
| தட்டச்சர்கள் .. | 80 |
| தற்காலிகப் பிரிவு எழுத்தர்கள் .. | 617 |
| ஆவண எழுத்தர்கள் .. | 49 |
| இளநிலை பதிவேடுகள் கட்டுவோர் .. | 21 |
| அடிப்படை பணியாளர்கள் .. | 1126 |
| இரவுக் காவலாள் .. | 75 |

(iii) துணை பதிவுத்துறைத் தலைவர்கள்.—நிர்வாகத்தினை பரவலாக்கி, அதிகப்பயனுள்ளதாகச் செய்வதற்காக 1981–82 ஆம் ஆண்டில் சென்னை அல்லது வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களை தலைமை யிடமாகக் கொண்டு, நான்கு மண்டல அலுவலகங்களை ஏற்படுத்தி பதிவுத்துறையினை சீரமைக்கக் கருதப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டல அலுவலகமும் ஒரு துணைப்பதிவுத்துறைத் தலைவரின் கீழ் உரிய உதவிப் பணியாளர்களுடன் பணியாற்றும்.

(iv) பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளர்கள்.—சென்னை, கடலூர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் பத்திரப் பதிவு அலுவல கங்களின் ஆய்வாளர் அலுவலகங்கள் மொத்தம் ஏழு உள்ளன. ஒவ்வொரு அலுவலகத்தின் கீழும் ஐந்து அல்லது ஆறு பத்திரப் பதிவு மாவட்டங்கள் உள்ளன. 1981–82 ஆம் ஆண்டில் பதிவகங்களின் ஆய்வாளர் அலுவலகம் ஒன்றை உதவிப் பணியாளர்களுடன் ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது. இதன் பிறகு ஒவ்வொரு மண்டல அலுவலகத்தின் கீழ் இரண்டு பதிவகங்களின் ஆய்வாளர் அலுவலகங்கள் செயல்படும். சார் பதிவாளர் அலுவலகங்களைத் திடீரென ஆய்வு செய்தல் மாவட்ட அலுவல கங்களின் ஆண்டு தோறும் ஆய்வு ஆவணங்களில் குறிப்பிடப் பட்டுள்ள சொத்துக்களின் மதிப்பைக் குறைத்து மதிப்பிடுதல் மற்றும் தவறான நடத்தை தொடர்பான புகார்கள் குறித்து விசாரணை நடத்துதல் முதலிய முக்கியப் பணிகளை இவர் கவனிக்கிறார். மேலும் சங்கங்களையும், சீட்டு நிதிக் கம்பெனி களையும் ஆய்வு செய்கிறார்.

(v) மாவட்டப் பதிவாளர்கள்.—மாநிலத்தில் 40 பத்திரப் பதிவு மாவட்டங்கள் உள்ளன அவை ஒவ்வொன்றும் ஒரு மாவட்டப்பதிவாளரின் பொறுப்பில் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் 9 முதற் 13 வரையிலான சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. மாவட்டப்பதிவாளர்கள், தம் பொறுப் பிலுள்ள மாவட்டங்களிலுள்ள சார்பதிவாளர் அலுவலகங் களையும் ஆண்டுதோறும் ஆய்வு செய்கின்றனர்; திடீர் ஆய்வு நடத்துகின்றனர்; மேலும் பொது மக்களிடமிருந்து வரும் புகார் களையும். ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் மதிப்பைக் குறைத்து மதிப்பிடுதல் குறித்த புகார்களையும் விசாரணை செய்கின்றனர். மேலும் சார்பதிவாளர் ஆவணங் களைப் பதிவு செய்ய மறுத்துப் பிறப்பித்த ஆணைகளுக் கெதிராக வந்த மேல் முறையீடுகளையும் விசாரணை செய்கிறார். நிறுவனங்கள், சங்கங்கள், திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் பதிவாளர்களும் இவர்களேயாவார். 1981–82 ஆம் ஆண்டுக் காலத்தில் மேலும் இரு மாவட்டப் பதிவாளர் அலுவல கங்களை அமைக்க கருதப்பட்டுள்ளது.



(vi) சார் பதிவாளர் அலுவலகங்கள்.—இம்மாநிலத்தில் மாவட்டப் பதிவாளர்களின் பொறுப்பில் நடைபெறும் பத்திரப் பதிவுக்கிளை அலுவலகங்கள் 40 உட்பட தற்போது மொத்தம் 475 பத்திரப் பதிவு அலுவலகங்கள் உள்ளன. பிற பத்திரப் பதிவு அலுவலகங்கள், சார் பதிவாளர்களின் தலைமையில் நடை பெறுகின்றன. ஆவணங்கள், சீட்டுகள், திருமணங்கள் ஆகிய வற்றைப் பதிவு செய்தல்; அவை தொடர்பான பதிவேடுகளை வைத்து வருதல் ஆகியவையே இப்பத்திரப்பதிவு அலுவலகங்களின் முக்கியப் பணிகளாகும்.

1981-82 ஆம் ஆண்டுக் காலத்தில் மேலும் 15 சார் பதி வாளர் அலுவலகங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

முன்னோடித் திட்டமாக 25 சார் பதிவாளர் அலுவலகங் களில், நீதித்துறை சார்பற்ற முத்திரைத்தாள்களும் நீதி மன்றக் கட்டணமாக அளிக்கப்படும் முத்திரைத்தாள்களும் விற்பனை செய்யப்பட்டன. 1980 ஆம் ஆண்டில், மேலும் 50 சார் பதி வாளர் அலுவலகங்களில் நீதித்துறை சார்பற்ற முத்திரைத் தாள்கள் விற்பனை செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. தற்போது 75 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு நீதித்துறை சார்பற்ற முத்திரைத்தாள்கள் விற்கும் அனுமதி அளிக்கப் பட்டுள்ளது; ஆயினும பத்திரப் பதிவு அலுவலகங்கள் (475) அனைத்துற்கும் நீதிமன்றக் கட்டணமாக அளிக்கப்படும் முத்திரை தாள்கள் விற்பனை செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(vii) தணிக்கை.—பத்திரப் பதிவுத்துறையில் மொத்தம் 22 துறைத் தணிக்கைப் பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு தணிக்கைப் பிரிவிலும் சார் பதிவாளர் (நிலை I) ஒருவர், உதவியாளர் ஒருவர், தட்டச்சர் ஒருவர் உள்ளனர். அவர்கள் பத்திரப்பதிவு அலுவலங் களின் கணக்குகளை தணிக்கை செய்கின்றனர்; மேலும் ஆவணங் களை மதிப்பிடுவதில் தனி கவனம் செலுத்துகின்றனர். இத் தணிக்கை பிரிவு பத்திரப்பதிவு அலுவலகங்கள் ஆய்வாளரின் மேற் பார்வையில் உள்ளது.

அண்மையில் 22 சார் நிலைப்பதிவாளர்கள் (நிலை I) மாவட்டப் பதிவாளர்களாக பதவித் தரம் உயர்த்தப் பட்டுள்ளனர்.

(viii) பத்திரப் பதிவுத்துறை வருவாய் ஈட்டும் துறையாகும், உரிய வருவாய் கிடைக்காமல் போவதைத் தடுக்கும் பொருட்டு இத்துறையில் இதற்கென முதல் நிலைத் தணிக்கைப் பிரிவு ஒன்றுள்ளது. இத்துறையின் வருவாய் வரவுகள் ஆண்டுதோறும் மாநிலக் கணக்குத்துறைத் தலைவரால் தணிக்கை செய்யப்படு கின்றன. பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில், நேர்முக உதவியாளராக முதுநிலை கணக்கு அதிகாரி ஒருவரை நியமிக்கக் கருதப்பட்டுள்ளது.

(ix) பத்திரப் பதிவுச் சட்டம்.—சீட்டு நிதிகள் சட்டம் முத்திரைத்தாள் சட்டம் முதலிய சட்டங்களை பதிவுத்துறை நிர்வகிப்பதால் பதிவுத்துறைத் தலைவரின் அலுவலகத்தில் துணைப் பதிவுத்துறைத் தலைவரின் பதவித் தரத்தில் சட்டத் தகுதியுடைய சட்ட அலுவலர் (Law Officer) ஒருவரைக் கொண்ட சட்டப்பிரிவு ஒன்றினை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

(x) பத்திரப் பதிவு அலுவலகங்களில் பணிச்சுமை அதிகரித்து வருவதைமுன்னிட்டு மேலும் 50 இளநிலை உதவியாளர்களை நியமிக்க கருதப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் மேலும் 100 இரவுக் காவலர்களையும் நியமிக்க ஒப்புதலளிக்கக் கருதப்பட்டுள்ளது.

3. சீட்டு நிதிகள் நிர்வாகம்.—(i) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் 1—12—69 முதல் இம்மாநிலம் முழுவதிலும் செயலுக்கு வந்தது. பத்திரப் பதிவுத்துறை தலைவரே சீட்டு நிதி இயக்குநராவார். தலைமையிடத்தில் இவருக்கு உதவிபுரிய சீட்டுநிதிக் கூடுதல் இயக்குநர் ஒருவர் உள்ளார். மாவட்டப் பதிவாளர்கள், அவரவர்களுடைய அதிகார வரம்பில் சீட்டு நிதிகளை ஆய்வு செய்யும் அதிகாரிகளாக செயலாற்றுகின்றனர்; சார்பதிவாளர்கள் சீட்டு நிதிப் பதிவாளர்களாவர். தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் செயல்படுவதை நிர்வகிப்பதற்கென்றே பணியாளர்களை நியமிப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவ்விவரம் வருமாறு:

| | |
|---|---|
| 1. பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளர் பதவித்தரத்தில் சீட்டு நிதிக்கூடுதல் இயக்குநர். | 1 |
| 2. மாவட்டப் பதிவாளர் பதவித்தரத்தில் சீட்டு நிதிகள் ஆய்வு அதிகாரி. | 1 |
| 3. சார் பதிவாளர் (நிலை-II) பதவித் தரத்தில் சீட்டு நிதிப் பதிவாளர்கள். | 21 |
| 4. சீட்டு நிதித் தணிக்கையாளர்கள். | 10 |
| 5. சார் பதிவாளர் (நிலை-I) பதவித்தரத்தில் கண்காணிப்பாளர். | 1 |
| 6. சார் பதிவாளர் (நிலை-II) | ....1 |

இவையன்றி சீட்டுநிதிகள் சங்கங்கள் பதிவுப் பணிகளைக் கவனிப்பதில் மாவட்டப் பதிவாளருக்கு உதவி செய்யும்பொருட்டு 1980-81 ஆம் ஆண்டுக்காலத்தில் 38 சார் பதிவாளர்கள் (நிலை—II) பதவிகளை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.



(ii) 1978–79 ஆம் ஆண்டு முடிவில், 16,214 சீட்டு நிதிக் கம்பெனிகள் இருந்தன; 1979–80 ஆம் ஆண்டு முடிவில் சீட்டு நிதிக் கம்பெனிகளின் எண்ணிக்கை 16,668 ஆக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு மிகவும் சொற்பமானவையே ஆகும். இதன் மூலம் கிடைத்த வருமானம் 1978–79 ஆம் ஆண்டுக் காலத்தில் ரூ. 4.25 இலட்சமாகும். இது 1979–80 ஆம் ஆண்டுக் காலத்தில் ரூ. 7.86 இலட்சமாக அதிகரித்தது. சீட்டு நிதிக் கம்பெனிகளின் முதலாட்கள் கொடுத்த பிணையவைப்புத் தொகையின் மதிப்பு ரூ. 13.03 கோடியிலிருந்து ரூ. 12.53 கோடியாகக் குறைந்துள்ளது.

(iii) 1979–80 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்படாத 41 சீட்டுகள் நடத்தப்பட்டதை கண்டுபிடிக்கப்பட்டது. 72 இனங்களில், முதலாளர்கள் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது. ஏனைய குற்றங்கள் தொடர்பாக, நீதி மன்றங்களில் தாக்கல் செய்த 3,129 இனங்களில் 2,014 இனங்களில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டனர். வசூலிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை ரூ. 81,450 ஆகும்.

(iv) மேம்பாடுகள்.—சீட்டில் சேர்ந்துள்ளவர்கள் தாங்கள் ஏலத்தில் எடுத்த தொகை கிடைக்க இயலாமை குறித்து அனுப்பிய புகார்கள் அரசுக்கு வரப்பெற்றன. சீட்டு நிதிகள் சட்டத்தின் நிர்வாகத்திலுள்ள குறைபாடுகளைக் களைவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் அரசே சீட்டுகளை நடத்தவும், அதற்கான கழகம் ஒன்றை அமைக்கவும் அரசு கருதியுள்ளது, பொதுத் துறையின் சீட்டுகளை நடத்தும் பொருட்டு சீட்டு நிதிக் கழகம் ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

பத்திரப் பதிவு அலுவலகங்களை மேம்படுத்தல். —(i) ஆவண அறைகளைக் கட்டுதல்/விரிவுபடுத்துதல் ;—பத்திரப் பதிவு அலுவலகங்களில் வைத்து வரப்படுகின்ற ஆவணங்களை நிலையாகவும் நல்ல நிலையிலும் பராமரிக்க வேண்டும் என்ற அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் அரசு முழுமையாக அறிந்துள்ளது. முந்தைய ஆண்டில் இருந்தது போலவே இந்த ஆண்டிலும், சில பத்திரப் பதிவு அலுவலகங்களில் ஆவண அறைகளைக் கட்டுவதற்கு/விரிவுபடுத்துவதற்கு கருதப்பட்டுள்ளது.

(ii) அலமாரிகளை வாங்கஒப்புதல் அளித்தல்.—படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் பத்திரப் பதிவு அலுவலகங்களில் நிலையான ஆவணங்களை வைத்து வருவதற்காக இரும்பு அலமாரிகளை வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் உள்பூட்டு வசதிகளுடன் கூடிய 13 அலமாரிகள் உட்பட 892 அலமாரிகள் வாங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது 113 அலமாரிகளை வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

(iii) தொலைபேசி வசதிகள்.—தற்போது 21 மாவட்டப் பத்திரப் பதிவாளர்களின் அலுவலகங்களில் மட்டுமே தொலைபேசி வசதிகள் உள்ளன. 16 மாவட்டப் பத்திரப் பதிவாளர்களின் அலுவலகங்களுக்கும், தஞ்சாவூரிலுள்ள பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர் அலுவலகம் ஒன்றிற்கும் தொலைபேசி வசதிகள் அளிப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர்களின் ஆறு அலுவலகங்களுக்குத் தொலை பேசி வசதிகளை அளிப்பதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டில் 3 மாவட்டப் பத்திரப் பதிவாளர்களின் அலுவலகங்களுக்கும் 10 சார் பதிவாளர்களின் அலுவலகங்களுக்கும் தொலைபேசி வசதிகளை செய்து கொடுக்கவும் கருதப்பட்டுள்ளது.

(iv) மேசை நாற்காலிகள் வாங்குவதற்கு அனுமதியளித்தல் .—சார் பதிவாளர் அலுவலகங்களில் உள்ள மேசை, நாற்காலிகள் மிகவும் பழையவை. மேலும் பத்திரம் பதிவு செய்ய வரும் பொது மக்கள் உட்காருவதற்குப் போதிய இடவசதிகள் இல்லை. எனவே, பொது மக்களும் பார்வையாளர்களும் உட்காருவதற்கு பெஞ்சுகள், நாற்காலிகள் முதலியவை வாங்குவதற்காக ரூ. 100,000-க்கு அனுமதியளிக்கக் கருதப் பட்டுள்ளது.

(v) அடிப்படைவசதிகள் .—பத்திரப் பதிவு அலுவலகங்கள் அனைத்திற்கும் நீரடிக் கழிப்பிட வசதிகள் அளிக்கப்படவேண்டும் என்ற கொள்கையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்கென 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 100000 வகை செய்யப்பட்டது. அவ்வாறே 1981-82 ஆம் ஆண்டிலும் ரூ. 1,00,000-க்கு அனுமதியளிக்கக் கருதப்பட்டுள்ளது.

(vi மின் வசதி .—பத்திரப் பதிவு அலுவலகங்களுக்கு மின் விசிறிகள், குழல் விளக்குகள் ஆகிய வசதிகளைச் செய்யக் கருதப் பட்டுள்ளது.

பத்திரப் பதிவு நடைமுறையை மேம்படுத்துதல் :—பத்திரங்களைத் தாக்கல் செய்யும் புதிய முறை ஒன்று 1967 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. இதனால், பத்திரங்களின் நகலை பத்திரம் பதிவு செய்ய வருபவர்களே தயாரித்து; பதிவு செய்வதற்கு மூலப் பத்திரங்களுடன் கொடுக்க வேண்டும். சம்பந்தப் பட்ட அலுவலகத்தைப் பொறுத்தவரையில் முறையாக உரிமம் வைத்துள்ளவர்கள் மட்டுமே அந்த அலுவலகத்தில் பதிவு செய்வதற்குரிய பத்திரங்களின் நகலை எழுத வேண்டுமென்ற நோக்கத்துடன் தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு பத்திர நகல் எழுதுவோர் உரிமம் விதிகள் இயற்றப்பட்டன. இது வரையில் 18,500 உரிமங்கள் வழங்கப்பட்டன.

ஆனால், அத்தகைய விதிகள் எதுவும் பதிவு செய்ய வரும் பத்திரங்களை எழுதுவோர்களுக்காக இயற்றப்படவில்லை.



தற்போது பத்திரம் எழுதுவோருக்குச் சில தகுதிகளை வரையறுக்க முடிவுசெய்யப்பட்டுள்ளதோடு பத்திரம் எழுதுவோருக்கு உரிமங்கள் வழங்குவதற்காக 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டம் அண்மையில் திருத்தப்பட்டுள்ளது.

6. வருவாய் .—பத்திரப் பதிவுக்காகத் தாக்கல் செய்யப் படும் பத்திரங்கள் மீது விதிக்கப்படுகின்ற முத்திரைத்தாள் கட்டணம், பதிவுக்கட்டணங்கள், பத்திரங்களைத் தேடுவதற்கான கட்டணங்கள் முதலியவை இத்துறையின் முக்கிய வருவாய் வாயிலாகும். கட்டண வீத அட்டவணையை பத்திரப்பதிவுச் சட்டத்தின் 78 ஆம் பிரிவின்கீழ் அரசு அண்மையில் மாற்றியமைத்துள்ளது. முத்திரைத்தாள் கட்டணம் பதிவுக் கட்டணங்களும் சொத்துக்களின் அங்காடி மதிப்பை யொட்டி விதிக்கப்படுகின்றன.

அங்காடி மதிப்பை எளிதில் மதிப்பீடு செய்யும் வகையில் 1974 ஆம் ஆண்டில் சொத்துக்களின் அங்காடி மதிப்பைக் காட்டும் வழிகாட்டியாக இருப்பதற்கான பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு. பத்திரப்பதிவு அலுவலகங்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. நிலங்களின் மதிப்புகள் கணிசமாக உயர்ந்துள்ளதால் கட்டண வீதங்களைத் திருத்தியமைக்க அவசியமேற்பட்டுள்ளது. இவ்வாறு திருத்தியமைக்கும் பணி நடந்தேறி வருகிறது; இது 31-8-81க்குள் முடிவடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே 1981-82 ஆம் ஆண்டில் இத்துறையின் வருவாய் கணிசமான அளவுக்கு அதிகரிக்கும் இத்துறைக்கு சீட்டு நடத்தும் கம்பெனிகளிடமிருந்து, துணை விதிகளைப் பதிவு செய்தல், பத்திரங்களைத் தாக்கல் செய்தல், ஆகியவற்றிற்கான கட்டணங்கள், தணிக்கைக் கட்டணங்கள் முதலிய சிறு அளவிலான வருவாயும் கிடைக்கிறது. 1981-82 ஆம் ஆண்டிற்கு சுமார் ரூ. 13 இலட்சம் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏனையச் சட்டங்களைப் பொறுத்தவரையிலான வருமாய் பின் வருமாறு :—

1. சங்கங்கள் பதிவுச் சட்டம் ரூ. 1.28 இலட்சம்.
2, இந்தியப் பங்குதாரர்கள் சட்டம் ரூ. 0 85 இலட்சம்.
3. பிறப்பு-இறப்பு திருமணச் சட்டங்கள் ரூ 0.19 இலட்சம்.
4. இந்து திருமணச் சட்டம் ரூ. 0.32 இலட்சம்.
5. சிறப்புத் திருமணச் சட்டம் ரூ. 0.05 இலட்சம்.

1979-80 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை 10,26,706 ஆகும். 1980-81 ஆம் ஆண்டில் 1-4-1980 முதல் 1980 டிசம்பர் வரையில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை 8,06,740 ஆகும்.

7. பதிவுக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்து 1980-81 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட ஆணை:—ஆதித் திராவிடர்கள் பழங்குடியினர் நடத்தும் கூட்டுறவுச் சங்கங்களும் ஏனைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தும் கூட்டுறவுச் சங்கங்களும் கடன் பெறுவதற்குப் பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் செலுத்த

தக்க முழுக் கட்டணத்தையும் முறையே முழுச் சலுகையாகவும் அரைக் கட்டணச் சலுகையாகவும் செலுத்தலாம் என ஒவ்வொரு ஆண்டும் அரசு அறிவிக்கை வெளியிடுவதன் மூலம் தள்ளுபடி செய்துள்ளது. இத்திட்டம் 1-7-1980-லிருந்து மறு உத்தரவு வரை தொடர்ந்து இருக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

8. வரவு-செலவு;—1976-77 ஆம் ஆண்டு முதல் இத்துறையின் வரவு-செலவு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| ஆண்டு. | வரவு. | செலவு. |
|---|---|---|
| | (ருபாய் இலட்சத்தில் முத்திரை தீர்வை தவிர்த்து). | |
| 1976-77 | 325·27 | 198·06 |
| 1977-78 | 359·26 | 213·85 |
| 1978-79 | 537·84 | 234.40 |
| 1979-80 | 568·27 | 265·00 |
| 1980-81 | 528·08 | 198·08 |
| | (1980 டிசம்பர் வரையில்.) | (1980 நவம்பர் வரையில்.) |

## இணைப்பு II

[41ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### பால்வளத்துறை கோரிக்கை எண். 10

### கொள்கை விளக்கம்

மனித உணவில் பால் ஒரு முக்கியமான சத்துள்ள உணவாக இருக்கிறது. பால் வர்த்தகம் கிராமப் புறங்களில் ஒரு துணைத் தொழிலாகக் கொண்டுள்ளது. கிராமியப் பெண்கள் தங்களுடைய குடும்ப வருமானத்தைப் பெருக்கும் பொருட்டு கால் நடைகளை வைத்து உழைக்கின்றனர். நகரப் பகுதிகளின் வளர்ச்சியைக் கண்டு இடைத் தரகர்கள் கிராமப் பகுதிகளிலிருந்து பாலை குறைந்த விலையில் கொள்முதல் செய்து அதனை நகர்ப்பகுதிகளுக்குக் கொண்டு வந்து அதிக விலையில் விற்க ஆரம்பித்தனர். இதனால் பால் உற்பத்தியாளரோ அல்லது நுகர்வரோ பயனடைவதில்லை. இடைத் தரகர்கள் மட்டும் ஒழுங்காக அமையாத பால்பண்ணை செய்வினையின் பலன்களை அனுபவித்தனர். ஒழுங்குபடுத்தப்பட்ட பால் உற்பத்தியின் வருகையால் மேற்குறிப்பிடப்பட்ட முறையில் முழுமையான மாற்றம் எற்பட்டது. இடைத் தரகர்களால் செய்யப்பட்டு வந்த பணி கிராமிய உற்பத்தியாளர் சங்கத்தினரால் மேற்கோள்ளப்பட்டது. பால் உற்பத்தியாளர்களின் நலனைக் காப்பதே கிராமிய உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் தலையாய கடமையாகும். இதே



போன்று நகர்ப்புறங்களில் நுகர்வோருக்கு தரமான பாலை நியாய விலையில் வழங்க ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்கள் அதாவது கூட்டுறவுகள் பொது நிறுவனங்கள் சேவை செய்ய இயலும். நவீன பால் பண்ணைகள், குளிருட்டும் நிலையங்கள் மற்றும் முன்னேற்றமடைந்த பால் நிலையங்கள் அமைப்பதின் காரணமாக மேற்கூறிய முறையில் முன்னேற்றமடைய ஏதுவாகிறது.

2. 1958 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் பால்வளத்துறை நிறுவப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதன் முதலில் நவீன பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மாதவரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1967 ஆம் ஆண்டில் மதுரை பால்பண்ணை நிறுவப்பட்டது. கிராமப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் அதிகமான பாலை சென்னை மற்றும் மதுரை பால் பண்ணைகளுக்கு அனுப்புவதற்கு முன் பக்குவம் செய்யும் பொருட்டு பல குளிரூட்டும் நிலையங்கள் அவ்வப்பொழுது நிறுவப்பட்டன. 1972-ம் ஆண்டு பால் கொள்முதல் பக்குவப்படுத்துதல், மற்றும் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் தமிழ்நாடு பால் வள நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. தமிழ்நாடு பால்வள நிறுவனம் நிறுவனங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, பொறுப்புகள் வரையறுக்கப்பட்டு "பால் பெருக்குத் திட்டம்—1" வெற்றிகரமாக செயல்படுத்தும் பொருட்டு அமைக்கப்பட்டது. "பால் பெருக்குத் திட்டம்-1" தமிழ்நாட்டில் ஒன்பது மாவட்டங்களில் அதாவது செங்கற்பட்டு வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், பெரியார், சோயம் புத்தூர், நீலகிரி, மதுரை மற்றும் தருமபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. பால் பண்ணை வளர்ச்சித்துறை "பால் பெருக்குத் திட்டம்—1"-ன் கீழ் வராத மாவட்டங்களில் பால் பண்ணை வளர்ச்சி நடவடிக்கைகளையும் மாதவரத்தில் கால் நடைப் பண்ணையையும் நிர்வகித்து வந்தது. உரிமைதாரர்கள் தங்களுடைய கால்நடைகளை வைத்து நிர்வகித்து வந்த பால் குடியிருப்பும் கூட பால்பண்ணை வளர்சித் துறையின் அதிகாரத்தில் செயல்பட்டது. பிறகு அரசு எடுத்த முடிவின்படி அரசுப் பால் பண்ணையையும், கால் நடை குடியிருப்பும், நிர்வாகம் ஆகியவை பால்வளத் துறையின் கட்டுப்பாட்டிலிருந்து மாநில கால்நடை பராமரிப்புத் துறைக்கு 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாளில் மாற்றப்பட்டது. பால்பண்ணை வளர்ச்சித்துறை இம் மாநிலத்தில் கிராம அளவில் கூட்டுறவுகளை அமைப்பதையும் மாவட்ட அளவில் ஒன்றியங்களை நிறுவுவதையும் கவனித்து வருகிறது. இத்துறை குறிப்பாக பால் பெருக்குத் திட்டம் செயல்படாத மாவட்டங்களில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

3.1 பால் கூட்டுறவுகளைப் பொறுத்தவரை பால்வளத் துறையின் பணிகள் பின்வருமாறு:—

(1) கிராமியப் பால் கூட்டுறவுகளை ஆரம்பித்தல் பதிவு செய்தல் மற்றும் கண்காணித்தல்.

2) கிராம அளவில் உற்பத்தியாளர் கூட்டுறவுகளை அமைப்பது: பிரசித்திபெற்ற "ஆனந்த" பாணியில் அமைக்கப்படும் உற்பத்தியாளர் கூட்டுறவுகளின் சிறப் பம்சங்கள் பின்வருமாறு:—

(அ) முன்பு அமைக்கப்பட்ட வழக்கமான சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பாலுக்கு அதன் அளவின் அடிப்படையில் பணம் கொடுக்கப்பட்டு வந்ததற்கு மாறாக தற்போது அமைக்கப்படும் புதிய சங்கங் களில் உற்பத்தியாகும் பாலை அவ்விடத்திலேயே ஒவ்வொரு அங்கத்தினரும் சங்கத்திற்கு வழங்கும் பாலில் உள்ள கொழுப்புச் சத்து எவ்வளவு என்பது முடிவு செய்து அதன் அடிப்படையில் பணம் கொடுக்கப்படுகிறது.

(ஆ) சங்கங்கள் கட்டணை மையமாகக் கொண்டதல்ல.

(இ) இச்சங்கம் உற்பத்தியாளர் நலனை ஆதார மாகக் கொண்டதாகும்.

(ஈ) உள்ளூர் விற்பனையில் இது அதிக அளவில் ஈடுபாடு கொள்வதில்லை.

(உ) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக கால்நடை மருத்துவப் பணி, செயற்கை முறைக் கருத்தரிப்பு கால்நடை சமனிட்டுத் தீவனம் போன்ற அடிப் படை வசதிகள் உறுப்பினர்கள் இருப்பிடங் களிலேயே செய்து கொடுக்கப்படுகின்றன.

(ஊ) இத்தகைய உற்பத்தியாளர்களின் சங்கச் செயாலர் கள். செயற்கைக் கருத்தரிப்புப் பணி செய்யும் முறையில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். மாவட்ட அளவில் உற்பத்தியாளர் சங்கங்களைக் கொண்ட ஒன்றியம் நிறுவுவது.

(3) தற்போது வழக்கத்திலுள்ள வர்த்தக கூட்டுறவு சங்கங்களையும், ஒன்றியங்களையும் உற்பத்தியாளர் சங்கங்களாகவும் ஒன்றியங்களாகவும் மாற்றப்பட்டு வருகின்றன.

(4) உள்ளூர் மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு எங்கெங்கு அவசியமோ அங்கெங்கு நடைமுறையிலுள்ள வினியோக கூட்டுறவுகளை நுகர்வோர் கூட்டுறவுகளாக மாற்றி அமைக்கப் பட்டு வருகின்றன.

மாநில அளவில் எல்லா மாவட்ட ஒன்றியங்களைச் சார்ந்த இணையம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுநாள் வரை தமிழ் நாடு பால்வள நிறுவனத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வந்த



அனைத்து நடவடிக்கைகள் 1981-ம் வருடம் பிப்ரவரித் திங்களி லிருந்து மாநில இணையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. உற்பத்தி யாளரின் நலனை பாதுகாக்கும் நோக்கத்துடன் "பால் பெருக்குத் திட்டம்-1"னைத் தொடர்ந்து "பால் பெருக்குத் திட்டம்-2"னைச் செயல்படுத்தும் பொருட்டு இம்மாதிரியான நடவடிக்கைகள் அவசியம் எனக் கருதப்படுகிறது.

32. உற்பத்தியாளர் கூட்டுறவுகளை அமைப்பதன் வளர்ச்சி:—

(1) இதுவரை 3,085 ஆரம்ப பால் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1980–81 ஆம் ஆண்டில் 140 சங்கங்கள் புதியதாக பதிவு செய்யப் பட்டுள்ளன. 1981 82 ஆம் ஆண்டில் 500 உற் பத்தியாளர் சங்கங்கள் நிறுவ உத்தேசிக் கப்பட்டுள்ளது.

(2) 1980 81 ஆம் ஆண்டில் 197 வழக்கமான வர்த்தக சங்கங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இது வரை 1,660 வர்த்தக சங்கங்கள் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. 1981–82 ஆம் ஆண்டில் 500 வழக்கமான வர்த்தக சங்கங்களை மாற்றியமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(3) 1980-81 ஆம் ஆண்டில் 19 செயல்படாத சங்கங்கள் புதுபிக்கப்பட்டு உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. 1981-82 ஆம் ஆண்டில் 150 செயல்படாத சங்கங்களை புதுப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டு, சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் மதுரை மாவட்டங்களில் ஆறு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் நிறுவப்பட்டுள்ளன. "பால் பெருக்குத் திட்டம் 2-"னை செயல்படுத்தும் பொருட்டு மொத்தம் ஒன்பது ஒன்றியங்கள் நிறுவப்படும்.

33. வழக்கமான சங்கங்கள், இயங்கும் திருத்த முறைச் சங்கங்கள், செயல்படாத நிலையிலுள்ள சங்கங்கள், கலைக்கப்பட உள்ள சங்கங்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| துணைப் பதிவாளர் (பால்பதம்) வட்டம். | மாவட்டம். | செயல்படும் சங்கங்கள்: ஆனந்த் பாணி. | செயல்படும் சங்கங்கள்: வழக்கமான சங்கங்கள். | செயல்படாத நிலையில் உள்ள சங்கங்கள். | கலைக்கப்பட உள்ள சங்கங்கள். | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| கடலூர் | தென் ஆற்காடு | 158 | 37 | 259 | 67 | 521 |
| தருமபுரி | தருமபுரி | 228 | 6 | 20 | 10 | 264 |
| ஈரோடு | பெரியார் | 271 | 2 | 14 | 71 | 358 |
| | கோயம்புத்தூர் | 203 | 17 | 96 | 35 | 351 |
| | நீலகிரி | 81 | 17 | 10 | 2 | 110 |
| காஞ்சீபுரம் | சென்னை | 1 | 4 | 3 | 9 | 17 |
| | செங்கற்பட்டு | 318 | 79 | 162 | 342 | 901 |
| மதுரை | மதுரை | 278 | 170 | 390 | 88 | 926 |
| சேலம் | சேலம் | 453 | 8 | 87 | 65 | 613 |
| திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | 83 | 83 | 123 | 8 | 374 |
| | தஞ்சாவூர் | 35 | 60 | 102 | 111 | 308 |
| | புதுக்கோட்டை | 6 | 21 | 26 | 28 | 81 |
| திருநெல்வேலி | திருநெல்வேலி | 275 | 59 | 91 | 32 | 457 |
| | கன்னியாகுமரி | 24 | 27 | .. | 3 | 54 |
| விருதுநகர் | இராமநாதபுரம் | 302 | 78 | 88 | 43 | 511 |
| வேலூர் | வட ஆற்காடு | 369 | 74 | 106 | 48 | 597 |
| | மொத்தம் .. | 3,085 | 742 | 1,577 | 1,039 | 6,443 |



3.4. பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| (1) தமிழ்நாட்டிலுள்ள இயங்கும் பால் கூட்டுறவுகளின் எண்ணிக்கை | 3,837 |
| (2) பால் வழங்கு கூட்டுறவுகளில் உள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை (செயல்படும் சங்கங்கள் பொருத்த மட்டில்) | 10.07 இலட்சம் |
| (3) சங்கங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (செயல்படும் சங்கங்கள் பொருத்தமட்டில்). | ரூ. 273.77 இலட்சம் |

கூட்டுறவு பால் ஒன்றியங்கள்—

| | |
|---|---|
| (1) பால் வழங்கு ஒன்றியங்களின் எண்ணிக்கை. | 18 |
| (2) பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் | 6 |
| (3) பால் ஒன்றியங்களில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை. | 18,372 |
| (4) செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ரூ. 35.74 இலட்சம் |

உற்பத்தியும் விற்பனையும்—

| | |
|---|---|
| (1) நாள் ஒன்றுக்கு சராசரி உற்பத்தி (சங்கங்கள் மற்றும் ஒன்றியங்கள் பொருத்த மட்டில்). | 6.45 இலட்சம் லிட்டர். |
| (2) உள்ளூர் சராசரி விற்பனை (சங்கங்கள் மற்றும் ஒன்றியங்கள் பொருத்த மட்டில்). | 3.20 இலட்சம் லிட்டர் |
| (3) தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்குத் தினசரி வழங்கும் சராசரி பால் அளவு | 3.25 இலட்சம் லிட்டர். |

4.1. திட்ட மதிப்பீடுகள்: (1) ஏழு பால் கொள்முதல் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் இதுவரை 172 உற்பத்தியாளர் சங்கங்களை நிறுவியுள்ளன.

நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள்:

(2) திட்டமில்லா மதிப்பீட்டின்கீழ் செயல்பட்டு வரும் நான்கு நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்களன்றி, நான்கு நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுகின்றன.

(3) கூட்டுறவு நடவடிக்கைகளின் நிர்வாகத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் ஒரு துணைப் பதிவாளர் (பால்பதம்) அவர்களின் தலைமையில் சொற்ப அலுவலர்களுடன் கோயம்புத்தூரில் ஒரு அலுவலகம் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூபாய் 1.39 இலட்சம் நிதி ஒதுக்கீடு 1981-82 ஆம் ஆண்டிற்கு செய்யப்பட்டுள்ளது.

(4) 1981-82 ஆம் ஆண்டில் 400 வழக்கமான மற்றும் செயல்படாத நிலையிலுள்ள கூட்டுறவுகள், உற்பத்தியாளர் கூட்டுறவுகளாக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மருந்துகள் பால் குவளைகள், பரிசோதனைக் கருவிகள் முதலியன வாங்கும் பொருட்டு சங்கம் ஒன்றுக்கு ரூபாய் 6,250 வீதம் மானியமாக வழங்கும் பொருட்டும் 1981-82ம் ஆண்டில் ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.2. பால் கூட்டுறவுகளுக்கான நிதி உதவி.—பின்வரும் திட்டங்கள் பால் வளத் துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

(1) பால் விநியோகச் சங்கங்களுக்குப் பால் குவளைகள் பால் கருவிகள், குளிர்பதனங்கள், போக்குவரத்து வண்டிகள் ஆய்வுக்கூடம் மற்றும் கிடங்குகள் கட்ட கடனுதவியளித்தல்.

(2) நிர்வாகம் மற்றும் தொழில் நுட்பப் பணியாளருக்காகவும், தீவன பண்ணை பராமரிப்புக்காகவும் கூட்டுறவுகளுக்கு மானிய உதவியளித்தல்.



5. 1. திட்ட ஒதுக்கீடு.—1979-80 ஆம் ஆண்டின் செலவுக் கணக்குகள், 1980-81 ஆம் ஆண்டில் திட்ட மதிப்பீடு, திருத்தப்பட்ட மதிப்பீடு, 1981-82 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு பின்வருமாறு:—

கோரிக்கை எண். 10.

| அம்சம். | 1979-80 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். | 1980-81 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு. | 1980-81 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. | 1981-82 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்). | | |
| (1) பால்பெருக்குத் திட்டத்தின்கீழ் வராத மாவட்டங்களில் பால் கொள்முதல் குழுக்கள் அமைப்பது. | 7,44 | 5,81 | 5,70 | 4,52 |
| (2) நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைப்பது | .. | 4,94 | 2,99 | 1,32 |
| (3) பால் கூட்டுறவுகளுக்கு மானியம் வழங்குதல். | | | | |
| (1) நிர்வாகம் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள் .. | 39 | 75 | 1,15 | 65 |
| (2) தீவனப் பண்ணை பராமரிப்பு. | .. | 10 | 1,18 | 10 |
| மொத்தம் .. | 7,83 | 11,60 | 11,02 | 6,59 |

5. 2 திட்ட ஒதுக்கீடு—கோரிக்கை எண் 55—பல்வகை மூலதனச் செலவு.

| அம்சம். | 1979-80 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். | 1980-81 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு. | 1980-81 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. | 1981-82 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்). | | |
| (1) பால் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு நிதி உதவி முதலீடு .. .. | 10,50 | 1 | 1 | 1 |
| (2) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் பால் பண்ணை வளர்ச்சிக்காக தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பங்கு மூலதனத்திற்கு தொகை அளித்தல் .. .. .. | 29,67 | 30,00 | 30.00 | 30,00 |
| (3) தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு நிதி உதவி முதலீடு .. | 0,59 | .. | .. | .. |
| (4) மேற்கு மலைத்தொடர் வளர்ச்சி திட்டத்தின்கீழ் கொடைக்கானல் பாலாடை வெண்ணெய் தயாரிப்பு தொழிற்சாலை அமைக்க கொடைக்கானல் பால் வழங்கு ஒன்றியத்திற்கு பங்கு மூலதன உதவி. | 1,31 | 1 | 1 | .. |
| (5) வறட்சிப் பகுதிக்குட்பட்ட இடங்களில் பால் பண்ணை வளர்ச்சித் திட்டம். .. .. .. | 87,50 | 87,50 | 87,50 | .. |
| மொத்தம் .. | 1,29,57 | 1,17,52 | 1,17,52 | 30,01 |

5.3 திட்ட ஒதுக்கீடு கோரிக்கை எண்—56 மாநில அரசின் கடன்களும் முன் பணங்களும்.

| அம்சம். | 1979-80 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். | 1980-81 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு. | 1980-81 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. | 1981-82ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் ஆயிரத்தில்) | |
| (1) பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள விவசாய உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்க கடனுதவி .. .. .. | .. | 1 | .. | .. |
| (2) பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் குவளைகள் வாங்க, சோதனைக்கருவிகள், குளிரூட்டும் சாதனங்கள் மற்றும் வாகனங்கள் ஆய்வுக்கூடம் கட்டுவதற்கு முதலீயனை கட்டுதல் போன்றவற்றிற்கு கடனுதவி .. .. .. | 5.00 | 5,50 | 5,00 | 5,00 |
| (3) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் பால்வளத் துறை ஆணையாளரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சட்டப்படிக்கான கூட்டுறவு வங்கி அரசு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு கடன்கள் .. .. | 29,67 | 30,00 | 30,00 | 30,00 |
| (4) மேற்கு மலைத் தொடர் வளர்ச்சி திட்டத்தின்கீழ் கொடைக்கானலில் பாலாடை வெண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலை அமைக்க கொடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியத்திற்கு கடன் .. .. .. | 1,31 | 1 | 1 | 1 |
| (5) பால் கூட்டுறவுகளின் வளர்ச்சிக்கும் விற்பனை வசதிகளுக்காகவும் கடனுதவி .. .. | 9,50 | .. | .. | .. |
| மொத்தம் ... | 45 48 | 35,02 | 35 01 | 35,01 |

கோரிக்கை எண் 10,55 மற்றும் 56-ன் கீழ் 1981–82 ஆம் ஆண்டில் ''திட்டத்தின்கீழ் வரும் பணி'' மற்றும் ''திட்டத்தின் கீழ் வராத பணி'' ஆகியவற்றின் கீழ் பால்வளத் துறைக்காக மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 170.14 இலட்சம் அளவில் அமையும்.

[1981 ஏப்ரல் 14

**தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் பணிகள்.**—(6.1) தமிழ்நாடு பால்வள நிறுவனம் 31-1-1981 வரை சென்னை மற்றும் மதுரை நகரங்களில் பால் கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல், மற்றும் விற்பனை செய்தல் ஆகிய நடவடிக்கைகளை செய்து வந்தது. 15-12-80 ஆம் நாளன்று தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் பதிவு செய்யப்பட்டு 1-2-81 ஆம் தேதி தமிழ்நாடு பால்வள நிறுவனம் நடத்தி வந்த எல்லா நடவடிக்கைகள், நிறுவனத்தின் சொத்துக்கள், கடன்கள் உட்பட இணையத்திற்கு மாற்றப்பட்டன. இணையம் தமிழ்நாடு பால்வள நிறுவனம் மேற்கொண்ட எல்லா மேம்பாட்டு நடவடிக்கைகளையும் பால் பெருக்குத் திட்டத்தினையும் செயல்படுத்தி வரும். 1979–80 ஆம் ஆண்டில் நிறுவனம் தினசரி 2.68 இலட்சம் லிட்டர் பாலைக் கொள்முதல் செய்தது. 1980-81 ஆம் ஆண்டில் 31-1-81 வரை தினசரி பாலின் கொள்முதல் 2.73 இலட்சம் லிட்டர் அளவிற்கு இருந்தது. 1- -81லிருந்து 31-12-81 கால அளவிற்குள் இணையம் தினசரி பால் கொள்முதலின் அளவை 3.00 இலட்சம் லிட்டர் அளவிற்கு உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. கொள்முதல் செய்யப்பட்ட பாலின் அளவு, இதனால் பயனடையும் விவசாயிகளின் எண்ணிக்கை அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை பின்வருமாறு:—

| அம்சம். | 1979–80. | 1980–81 (31-1-81 முடிய மதிப்பீடு) | 1981 (1-2-81 முதல் 31-1 -81 வரை மதிப்பீடு). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (எண்கள் இலட்சத்தில்) | |
| கொள்முதல் செய்யப்பட்ட பால் (லிட்டர்). | 981.51 | 835.60 | 1,002.00 |
| பயனடையும் குடியானவர்களின் எண்ணிக்கை. | 2.77 | 2.85 | 2.90 |
| விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட தொகை ரூபாய். | 1,771.62 | 1,700.00 | 2,000.00 |



1981 ஏப்ரல் 14]

(6.2) சென்னை மற்றும் மதுரை பால் பண்ணைகள் 4.5 சதவீத கொழுப்பும் 8.5 சதவீதம் கொழுப்பற்ற திண்மைப் பொருளும் அடங்கிய தரப்படுத்தப்பட்ட பாலை விற்பனை செய்கின்றன. விற்பனை விவரம் பின்வருமாறு;—

| அம்சம். | 1979–80. | 1980-81 (31-1-81 முடிய மதிப்பீடு.) | 1981 (1-1-81 முதல் 31-12-81 வரை மதிப்பீடு). |
|---|---|---|---|
| | | (எண்கள் இலட்சத்தில்). | |
| (1) | (2) | (3) | (4) |
| பால் (லிட்டரில்) .. | 1,157.05 | 1,031.30 | 1,169.00 |
| தின சராசரி | 3.17 | 3.37 | 3.50 |
| வெண்ணெய் (கிலோகிராமில்) .. | 6.31 | 4.35 | 6.00 |
| நெய் (கிலோ கிராமில்) .. | 5.47 | 4.90 | 5.50 |
| பால்பொடி (கிலோகிராமில்) .. | 2.26 | 6.85 | 7.00 |

(6.3) உலக உணவுத் திட்டத்தின் உதவியால் ஆடை நீக்கிய பால்பொடி, வெண்ணெய் கொழுப்பு மலிவு விலையில் கிடைக்காமையால் இந்நிறுவனம் ஆடை நீக்கிய பால்பொடி மற்றும் வெண்ணெய் கொழுப்பு அதிக விலை கொடுத்து வாங்குகிறது. பெட்ரோல் அதன் இதரப் பொருட்களின் விலை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போனதினால், பாலை சேகரித்து பதப்படுத்தி வினியோகிக்க ஏற்படும் செலவுகளும் 1979–80 ஆம் ஆண்டில் உயர்ந்துள்ளன. இச்செலவுகள் நடப்பு ஆண்டில் (1980–81) மேலும் அதிக அளவில் உயர்ந்துள்ளன. 1980–81 ஆம் ஆண்டில் (ஏப்ரல்–மே திங்களில்) பால் கொள்முதல் விலை ஒரு லிட்டருக்கு சுமார் 0.35 பைசா வரை உயர்த்தப்பட்டுள்ளது. எனவே பால்வள நிறுவனம் பால் மற்றும் பால் பொருட்களின் விலைகளை உயர்த்த நேரிட்டது. 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தேதியிலிருந்து பாலின் விற்பனை விலை லிட்டர் ரூ. 2.00லிருந்து ரூ. 2.50 ஆக உயர்த்தப்பட்டது. விற்பனை விலை, காலம் கடந்து உயர்த்தப்பட்டதால் பால்வள நிறுவனத்திற்கு 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய் 233.27 இலட்சம் நட்டம் ஏற்பட்டது. நடப்பு ஆண்டிலும் ரூபாய் 200 இலட்சம் வரை நட்டம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(6.4) இந்நிறுவனத்தின் 1979–80 ஆம் ஆண்டில் மொத்த விற்பனை (turn over) ரூபாய் 29.45 கோடியாகும். 1978–79 ஆம் ஆண்டில் இது ரூபாய் 25.43 கோடியாக இருந்தது. 1980-81 ஆம் ஆண்டில் (31-1-1981 முடிய) ரூபாய் 26.20 கோடி வரை இருக்கும்.

7. மாட்டுத் தீவன தொழிற்சாலை.—மாதவரம் பால் குடியிருப்பு ஒரு மணிக்கு 4 முதல் 5 டன் உற்பத்திக் கொள்ளளவுள்ள கால் நடை தீவன உற்பத்தி ஆலை தற்போது மாதம் ஒன்றுக்கு சராசரி 1,500 டன் தீவனத்தை உற்பத்தி செய்கிறது. விற்பனை வசதியைக் கருதி ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான மாட்டுத் தீவனத் தொழிற்சாலையை இந் நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ளது. உற்பத்தியாகும் தீவனம் விவசாயிகளுக்கும், கால்நடை பராமரிப்புத் துறையைச் சேர்ந்த கால்நடைப் பண்ணைகளுக்கும் விநியோகிக்கப்படுகிறது. 1978–79, 1979-80, 1980-81 (மதிப்பீடு) ஆம் ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்ட தீவனத்தின் அளவு பின்வருமாறு:—

| அம்சம். | | 1978-79 | 1979–80. | 1980-81 (31-1-1981 வரை மதிப்பீடு). (டன்களில்). |
|---|---|---|---|---|
| மாட்டுத் தீவனம் | .. | 16,175 | 18,443 | 13,230 |

தீவனத்தை குளிகை வடிவில் தயாரிக்கும் (Pelletiser) ஆலை ஒன்று ரூபாய் 10 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அது இயங்குவதற்கு தயார் நிலையில் உள்ளது. 'பால் பெருக்குத் திட்டம், 1-ன் நிதி உதவியுடன் ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் நாள் ஒன்றுக்கு 100 டன் உற்பத்தி கொள்ளளவுள்ள கால்நடை தீவன ஆலையை எல்லா வசதிகளுடன் நிறுவியுள்ளது.

8. பால் பெருக்குத் திட்டங்கள்.—(8.1) 'பால் பெருக்குத் திட்டம் 1' (உலக உணவுத் திட்டம் 618) 1981 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மலிவான விலையில் கொடுக்கப்பட்டுள்ள ஆடை நீக்கிய பால்பொடியும், வெண்ணெய் கொழுப்பும் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக இந்நிறுவனம் அதிக விலையுள்ள ஆடை நீக்கிய பால்பொடியும், வெண்ணெய் கொழுப்புச் சத்தும் இந்திய பால்பண்ணை வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெற்று உபயோகித்து வருகிறது. அடிப்படை வளர்ச்சிக்காக இத் திட்டத்தின்கீழ் நிதி உதவி 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் மானியமாகவும் அளிக்கப்படுகிறது. இம்மாநிலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு





ரூபாய் 1,683 இலட்சத்தில், ரூபாய் 14,47.95 இலட்சம் நிதிஉதவி இதுநாள் வரை பெறப்பட்டுள்ளது. நிதி உதவியின் முன்னேற்ற விவரம் பின்வருமாறு :

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| (1) 'பால் பெருக்குத் திட்டம் 1'-ன்கீழ் நிதி ஒதுக்கீடு. | 1,683 |
| (2) இந்தியப் பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் வரை கொடுத்துள்ள நிதி | 1,447.95 |
| (3) தமிழ்நாடு பால்வள நிறுவனத்தினரால் 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் வரை உபயோகப்படுத்தப்பட்ட தொகை (ஈரோடு, சேலம், ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிதி உதவி இதனில் அடங்கியுள்ளது.) | 1,380.42 |

(8.2) இத் திட்டத்தின்கீழ் ஈரோட்டில் பால் உற்பத்தி சமப்படுத்தும் பண்ணையும் மற்றும் கால்நடை தீவன ஆலையும் ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலமாக நிறுவப்பட்டுள்ளன. கால்நடைத் தீவன ஆலை மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்களால் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16 ஆம் நாளன்று திறந்து வைக்கப்பட்டது. உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணையில் உள்ள இயந்திரங்கள் சோதனை ஓட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின் மதிப்பீடு சுமார் ரூ. 5 கோடி. ரூபாய் 305 இலட்சம் மூலதனத்தில் உற்பத்தி சமப்படுத்தும் பால்பண்ணை ஒன்றினை சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலமாக சேலத்தில் அமைக்கப் படுகிறது.

(8.3) இத் திட்டத்தின்கீழ் விழுப்புரம், சின்ன சேலம், ஆம்பூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் இத் திட்டத்தின்கீழ் அம்பத்தூர், மற்றும் மதுரை பால் பண்ணைகள் விரிவுபடுத்தும் பணிகள் நடந்துக் கொண்டிருக் கின்றன.

9. பால்பெருக்குத் திட்டம் 2.— 'பால் பெருக்குத் திட்டம் 1'-ன் தொடர்ச்சியாக 'பால் பெருக்குத் திட்டம் 2' இந்திய பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தினரால் சுமார் 40 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு செயல்படஉள்ளது. இத் திட்டம் 'பால் பெருக்குத் திட்டம்-1'-ல் அடங்கிய ஒன்பது மாவட்டங்களில் செயலாக்கப் படும். இந்திய பால்பண்ணை வளர்ச்சிக் கழகத்தோடு இதற்கான ஒப்பந்தம் தமிழ்நாடு அரசால் ஏற்கனவே கையொப்பமிடப் பட்டுள்ளது. இத் திட்டத்தின் குறிக்கோள் பின்வருமாறு:—

(1) இத் திட்டத்தின் அமைப்பினை (ஐன்பது மாவட்டங்களை) ஒன்பது பால் ஒன்றியங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

(2) 1984-85 ஆம் ஆண்டுக்குள் 4,500 கூட்டுறவுச் சங்கங்கள் பால் பெருக்குத் திட்டம் அமுல்படுத்தும் இடங்களில் நிறுவப்பட வுள்ளது (தற்போது நிறுவப்பட்டுள்ள 2,079 சங்கங்களும் இதில் அடங்கும்).

(3) 13 இலட்சம் பால் கறவைகள் மூலம் பால் கொள்முதல் செய்யப்படும். இதில் 48 சதவீதம் செயற்கை இனவிருத்தித் திட்டத்தில் கொண்டு வரப்படும்.

(4) மாநிலத்தில் உள்ள 16 பெரிய (நகரங்களில் 1971 மக்கட் தொகை கணக்குப்படி 1,00,000-க்கு மேல்) ஒன்பது நகரங்கள் இத் திட்டம் செயல்படும் மாவட்டங்களில் உள்ளன. இத் திட்டம் செயல்படும் பகுதி இம் மாநிலத்தில் நகர்புறங்களில் உள்ள மக்கள் தொகையில் (1978-79) ஏறக்குறைய பாதியாகும். மாநிலத்தில் உள்ள எல்லா முதல்தர நகரங்களில் பால் விற்பனை வசதிகள் ஏற்படுத்தப்படும். தவிர இத் திட்டப் பகுதியிலுள்ள எல்லா இரண்டாம் தர நகரங்களிலும் பால் விற்பனை செய்யப்படும். 1984-85-ல் பெருநகர மக்கட் தொகையில் 69 சதவீதம் மக்கள் இத் திட்டத்தினால் பயன் பெறுவார்கள். தற்போது தினசரி நகர்புறங்களின் மொத்த தேவையான 12.36 இலட்சம் லிட்டர்கள் 1984-85-ல் 16.44 இலட்சம் லிட்டராக உயரும். இத் திட்டத்தில் உருவாக்கப்பட்ட பால்பண்ணையில் பங்கு மொத்தத் தேவையில் 66 சதவீதம் வரை இருக்கும்.

(5) மாநிலத்தில் இத் திட்டத்தின்கீழ் அடங்கும் முக்கிய நகர்புற பகுதிகளில் நாளொன்றுக்கு 10.8 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்வதற்காக, 7.15 இலட்சம் லிட்டர் பால் பயன் படுத்தக்கூடிய திறனும், 2.30 இலட்சம் லிட்டர் உற்பத்தியை சமப்படுத்தும் திறனும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(6) இத் திட்டத்திற்கு ரூபாய் 39.82 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச் செலவில் சென்னையில் பால் விற்பனை திட்டத்திற்காகும் செலவும் அடங்கும். இச்செலவிற் கான பணம் 'பால் பெருக்குத் திட்டம்-1'-ன் நிதியிலிருந்து தரப் படுகிறது.

10. சிறப்புத் திட்டங்கள் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தால் செயல்படுத்துபவை. கீழ்க் கண்ட திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

(10.1) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் 1975-76 ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுக் கால அளவில் நீலகிரி மாவட்டத்தில் 10,000 விவசாயிகள் பயன்பெறும் முறையில் பால்பண்ணை வளர்ச்சிக்கு இத் திட்டம் வழி கோலுகிறது. இதன்மூலம் தற்போது நாளொன்றுக்கு கிடைக்கும் 24,000 லிட்டர் பால் 40,000 லிட்டர் அளவிற்கு உயர வழி வகுக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு கிராமங்களில் வசிக்கும் 16,000 விவசாயிகள், 3912



தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைச் சாதியினர்கள் உள்ளிட்ட விவசாயிகள் தங்களுடைய கால்நடைகளை அறிவியல் முறையில் இனவிருத்திச் செய்து கொள்வதற்கு வழி வகுக்கிறது. 1980-81 ஆம் ஆண்டு முடிய ரூபாய் 2,65.83 இலட்சம் 50 சதவீதம் கடனாகவும் 50 சதவீதம் மூலதனமாகவும் தமிழ்நாடு அரசு பால்வள நிறுவனத்திற்கு நிதி உதவி அளிக்க அனுமதி அளித்து உள்ளது. இதுவரையில் ரூபாய் 1,69.12 இலட்சம் நிதி உதவி (1979-80 ஆம் ஆண்டு வரை) அளிக்கப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதி உதவியில் ரூபாய் 60.45 இலட்சம் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின்கீழ் ஒரு புதிய பால்பண்ணையை நிறுவ ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக 11 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டுமானப்பணி நடப்பு ஆண்டிலேயே மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் பெறப் பட்டுள்ள நிதி உதவியால் கடலூரிலும் கோத்தகிரியிலும் நிறுவப் பட்டுள்ள இரண்டு குளிரூட்டும் நிலையங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இதுவரை 89 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டு நாளொன்றுக்கு 29,000 லிட்டர் பால் கொள் முதல் செய்யப்பட்டு வருகிறது.

10.2. வறட்சியால் பாதிக்கக்கூடிய பகுதிக்கானத் திட்டம்.—

இத் திட்டத்தின்கீழ் 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 72.34 இலட்சம் தருமபுரி மாவட்டத்திற்கும், ரூபாய் 17.58 இலட்சம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் தமிழ்நாடு அரசு நிதி உதவி அளித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக 1980-81 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்திற்கு ரூபாய் 15.95 இலட்சமும், இராமநாத புரம் மாவட்டத்திற்கு ரூபாய் 16.98 இலட்சமும் நிதி உதவி அளிக்க தமிழ்நாடு அரசு அங்கீகாரம் கொடுத்துள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் 314 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புதியதாக நிறுவப்பட்டு, நாளொன்றுக்கு கூடுதலாக 30,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதர வசதிகள் செய்து கொடுப்பதோடு மட்டுமின்றி 175 பால் சோதனைக் கருவிகளும் 2,555 பால் குவளைகளும் பால் உற்பத்தி யாளர் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கிருட்டிணகிரி மற்றும் தருமபுரியில் நிறுவப்பட்டுள்ள இரண்டு பால் குளிரூட்டும் நிலையங்களிலிருந்து பால் சேகரித்துக் கொண்டு வரும் பொருட்டு 5 'இன்சுலேடட்' பால் சேகரிப்பு வண்டிகள் வாங்கப்பட்டுள்ளன. பால் அதிகமாகக் கிடைக்கும் காலங்களில் பால் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக ரூபாய் 10 இலட்சம் செலவில் இவ்விரண்டு குளிரூட்டும் நிலையங்களை விரிவுபடுத்தும் வேலை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

10 மெட்ரிக் டன் திறன் கொண்ட உற்பத்தி சமப்படுத்தும் பால்பண்ணையை கிருட்டிணகிரியில் நிறுவ தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. இத் திட்டத்திற்கு ஆகும் செலவில் 50 சதவீதம் இந்திய அரசும், மிகுதி 50 சதவீதம் தமிழ்நாடு அரசும் பால்வள நிறுவனத்திற்கு கடனாக வழங்கும். இத்திட்டத்

திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 175 இலட்சத்தில் இதுவரை ரூபாய் 131.25 இலட்சம் நிதி உதவி நிறுவனம் பெற்றுள்ளது. இயந்திர சாதனங்கள், கட்டிட வேலைகள் ஆகியவற்றின் விலை ஏற்றத்தின் காரணமாக கூடுதலாக ரூபாய் 100 இலட்சம் தேவைப்படும் எனக் கணக்கிட்டு நிறுவனம் தமிழ்நாடு அரசிடம் அதிக நிதி உதவி கோரியுள்ளது. இத்திட்டத்தை முழுமையாக முடிப்பதற்கு ரூபாய் 275 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப் படுகிறது. கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன. இயந்திர சாதனங்கள் தருவிக்கப்பட்டு வருகின்றன, 1982—ஆம் ஆண்டு தொடக்கத்தில் இந்த ஆலை செயல்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டம்.—இம் மாவட்டத்திற்கு இத் திட்டத்தின் கீழ் 900 பால் குவளைகள், 91 பால் சோதனைக் கருவிகள் மற்றும் 75 செயற்கை கருமுறைக்கான கருவிகள் பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பரமக் குடியில் ரூ. 2.50 இலட்சம் செலவில் ஒரு குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட ரூபாய் 17.58 இலட்சத்தில், ரூபாய் 13.26 இலட்சம் 1979–80 ஆண்டு வரை செலவிடப்பட்டுள்ளது.

10.3. சிறப்பு கால்நடைப் பராமரிப்புத் திட்டம்/கன்றுவளர்ப்புத்திட்டம். 25,000 சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் தங்களிடமுள்ள கலப்பினக் கிடேரிகள் மூலம் 25,000 உயர் தரக் கலப்பினப் பசுக்களைப் பெறு வதற்கும், கன்றுகளை பராமரிப்பதற்கும் அவசியமான உதவிகள் அதாவது தீவனம், அரசு மான்யம், மற்றும் வங்கிகள் மூலமாக கடன் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. தவிர மருத்துவ வசதி மற்றும் காப்பக வசதி அனைத்தும் 4 மாதத்திலிருந்து 27 மாதங்கள் வரை அளிக்கப்படுகின்றன. 1980-81 ஆம் ஆண்டில் வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் இச் சிறப்புத் திட்டத்தை செயல் படுத்தும் பொருட்டு அரசு ரூபாய் 50.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய இசைந்துள்ளது. சிறு உழவர்கள் சொற்ப நில உழவர் களுக்கு 50 சதவீதமாகவும், மான்யமாகவும், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை அரசின் மான்யம் 66⅔ சதவீதமாகவும் அளிக்கப்படுகிறது. இதுவரை ரூபாய் 141.72 இலட்சம் பெறப்பட்டு இத்தொகை முழுவதும் தகுதியுள்ள விவசாயிகளுக்கு மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 15,395 கன்றுகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. 15,395 உழவர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளார்கள். 1981 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31—ஆம் தேதிக்குள் மேலும் 4,000 கன்றுகளை இத்திட்டத்தில் சேர்க்க பால்வள நிறுவனம் வழிவகுத்துள்ளது.

இதரச் சிறப்புத் திட்டங்கள்

(10.4) அரிசன நலத் திட்டம் (பால்பண்ணை வளர்ச்சித் துறையினரால் செயல் படுத்துபவை).— இத் திட்டத்தின் கீழ் பால்



கூட்டுறவுகளிலுள்ள அரிசன உறுப்பினர்களுக்கு நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கி அல்லது கூட்டுறவு வங்கி மூலமாக ரூபாய் 1,500 கடன் வழங்கப்படும். ரூபாய் 500 மானியமாக வழங்கப் பட்டு அது வங்கியில் செலுத்தப்படுகிறது. இத்தொகை சம்பந்தப பட்ட உறுப்பினர்கள் கடனுக்காக சரிக்கட்டப்படும். ஒவ்வொரு வருக்கும் இத்தகைய கடன்கள் ஒவ்வொரு முறையும் ரூபாய் 1,500 வீதம் இரண்டு முறைகள் வழங்கப்படும்தொகையின் மொத்தம் ரூபாய் 3,000 ஆகும். 1980–81 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் மூலம் மானியமாகவும், நிர்வாகச் செலவினங்க ளாகவும் ரூபாய் 3.85 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 700 பால் கூட்டுறவு அரிசன அங்கத்தினர்கள் பயன் அடைந்துள்ளனர்.

1981–82 ஆம ஆண்டிற்கு ரூபாய் 11,65 இலட்சம் நிதி ஒதுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய அரசின் அரிசன நல சிறப்புக் கூட்டமைப்புத் திட்டத்தில் பால் பண்ணைத் தொழிலில் அரிசன குடும்பங்களை ஈடுபடுத்த அவர்களின் மேம்பாட்டிற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாகவுள்ள சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள் மற்றும் நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர் ஆகியோர், கறவை மாடுகள் வாங்கிப் பயன்பெறும் பொருட்டு மானியமாக ரூபாய் 30 இலட்சம் 1980–81 ஆம் ஆண்டில் அரசு நிதி ஒதுக்கீடு செய் துள்ளது.

நபர் ஒன்றுக்கு ரூபாய் 375/- வீதம் 1,440 சிறு உழவர் களுக்கும், நபர் ஒன்றுக்கு ரூபாய் 500/— வீதம் 1920 சொற்ப நில உழவர்களுக்கும் மற்றும் நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர் களுக்கும் மானியமாக நிதி உதவி வழங்கப்படும். மேலே கூறிய நிதி உதவி தவிர, நாட்டுடமையாக்கப்பட்டுள்ள வங்கிகள் மூலமாக சிறு உழவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூபாய் 1125/- வீதமும் சொற்ப நில உழவர்கள் மற்றும் நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் நபர் ஒன்றுக்கு ரூபாய் 1000/— வீதம் கடனாக வழங்கப்படும்.

11. பொது.—1980-81 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியும் கொள்முதலும் அதிகரித்துள்ளன. கொள்முதல் பாலுக்கு விலை உயர்த்தப்பட்ட காரணத்தினால் இவ்வாண்டில் பால் வறட்சி ஏற்படும் காலங்களிலும் பால் உற்பத்தி அதிகமாக இருக்கும் காலங்களிலும் பால் சேகரிப்பு அதிகரித்துள்ளது. பால் உற்பத்தி யாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் நல்ல சேவை செய்யும் பொருட்டும் பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## இணைப்பு III

*[84-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]*
கோரிக்கை எண் : 22—கால்நடைப் பராமரிப்பு.

### கொள்கை விளக்கம்.

### I. முன்னுரை.

நம் மாநிலத்தில் கால்நடை வளர்த்தல் கிராமப்புற மக்களின் முக்கிய உபதொழில் ஆகும். இது அவர்களுக்குத் தேவையான கூடுதல் வருமானத்தை அளிக்கிறது. பால், கோழியிறைச்சி, பன்றியிறைச்சி, முட்டை முதலிய நுகர் பொருட்கள் இதன் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன, நம் மாநில விவாசாயிகளின் கால்நடைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி, அதன் மூலம் அவர்களுடைய வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு பற்பல வழிகளில் கால்நடை பராமரிப்புத் துறை முயற்சிகளை மேற்கொண்டு உள்ளது. கால்நடைகளுக்கு நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் ஆகியப் பணிகளை இத்துறை அளிக்கிறது. தரமற்ற நாட்டின் கால்நடைகளின் தாத்தை மேம்படுத்தும் பொருட்டு, உயர் அயலினக் காளைகள், கலப்பினக் காளைகள், தரா மான நாட்டினக் காளைகள் ஆகியவற்றின் விந்து கால்நடை இனவிருத்திக்கு அளிக்கப்படுகின்றது. குறைந்த விலையில் தீவனம், தீவனப் பயிர் விதைகள், தீவனப் பயிர் நாற்றுகள் போன்றவைகளும் அளிக்கப்படுகின்றன. மேற்கண்ட பணிகள் ஆற்றப்படும் திட்டங்களில் முக்கியமான சில திட்டங்கள் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம், கேந்திரக் கிராமத் திட்டம், கால்நடை வளர்ப்பு சிறப்புத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம் பாட்டுத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டம். ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம் ஆகியவைகளாகும்.

### II. வளர்ப்புத் திட்டங்கள்.

#### (1) பொதுவானது.

பால்பண்ணை, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு போன்ற பல்வேறு கால்நடை வளர்ப்பு முறைகளை மேம்படுத்துவதே கால்நடை பராமரிப்புத் துறையினால் செயல் படுத்தப்படும் வளர்ப்புத் திட்டங்களின் நோக்கமாகும் கால்நடை பராமரிப்புத் துறை கால்நடை வளர்ப்பின் நவீன முறைகளைப் பின்பற்ற விவசாயிகளுக்கு அறிவுறுத்துகிறது. கிராமவாழ் மக்கள் கால்நடை வளர்த்தலை அவர்களுடைய உபதொழிலாக்கிக் கொள்வதற்கு, கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் வழி செய்கின்றன. இத் திட்டங்கள் அனைத்திலும் சிறிய, குறுநில விவசாயிகளுக்கும், வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் முதலிடம் அளிக்கப்படுகிறது. செயல்படுத்தப்படும் பல்வேறு கால் நடை பராமரிப்புத் திட்டங்களின் நோக்கமும் அவற்றின் முன்னேற்றமும் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.



#### (2) கேந்திர கிராமத் திட்டம்.

கால்நடை பராமரிப்புத் தொழிலுக்கேற்ற குறிப்பிட்டப் பகுதிகளில் நாட்டினக் கால்நடைகளை பாதுகாத்து, விஞ்ஞான வளர்ப்பு முறையில் நாட்டினங்களின் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரமும் சராசரியாக இனப்பெருக்கத்திற்கேற்ற [illegible],000 பசுக்களையும், எருமைகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்தின் கீழும் முக்கிய நிலையமொன்றும், 10 கிளை நிலையங்களும் உள்ளன. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு கன்று மான்யமாக வழங்கப்படுகிறது. இதனால், செயற்கை இனவிருத்தியின் பயனாகக் கிடைக்கப்பெறும் கன்றுகள் தகுந்த முறையில் பராமரிக்கப்படுவதுடன், சிறந்த மரபுக் காளைகளுக்குப் பிறக்கும் கன்றுகளை விவசாயிகள் விற்பதும் தவிர்க்கப்படுகிறது. தற்போது 626 கிளை நிலையங்களுடன் கூடிய 62 கேந்திர கிராம வட்டாரங்கள் மதுரை, திருச்சிராப் பள்ளி, புதுக்கோட்டை. கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராம நாதபுரம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. இதில் ஐந்து கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரங்கள் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நன்னிலம், கொடவாசல், திருவாரூர், நாகப்பட்டினம், மன்னார்குடி. ஆகிய இடங்களில் 1980-81-இல் நிறுவப்பட்டன.

#### (3) தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள்.

ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்புக்கான வசதிகளை அளிப்பதே தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமாகும். கால்நடைகளின் மரபின் தரத்தை உயர்த்துவதற்கான செயற்கை முறை இனவிருத்தி மற்றும் சிறந்த தீவனம் அளிக்க ஏதுவாக தீவன உற்பத்திக்கு ஊக்கத் தொகை அளிப்பது போன்ற வசதிகள் இதில் உள்ளடங்கும். தற்போது 7 தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் இயங்கி வருகின்றன. மதுரையில் தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 100 கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவைகள் இனப்பெருக்கத்திற்கேற்ற 1,00,000 பசுக்களையும், எருமைகளையும், உள்ளடக்கியுள்ளன. மற்ற கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் ஒவ்வொன்றும் 50 கிளை நிலையங்களைக் கொண்டுள்ளது. மேற்கூறியத் திட்டம் ஒவ்வொன்றும் இனப்பெருக்கத்திற்குகந்த 50,000 பசுக்களையும், எருமைகளையும் உள்ளடக்கி இருக்கிறது.

#### (4) பொலிகாளை நிலையங்களும். உறைவிந்து தொழில்நுட்பமும்.

இம்மாநிலத்திலுள்ள 59 பொலிகாளை நிலையங்களைக் கால் நடை பராமரிப்புத் துறை பராமரித்து வருகின்றது. இந்த நிலையங்களில் நல்ல தரமுள்ள பொலி காளைகள் பராமரிக்கப் படுகின்றன. இவைகளில் முக்கியமான இனங்கள் ஹோல்ஸ்டன், பிரிசியன், ஜெர்சி, பிரவுன் ஸ்விஸ், ரெட்டேன், சிந்தி, காங்கேயம் முர்ரா, தார்பார்க்கர் முதலியவைகள் ஆகும். இந்நிலையங்

சவில் விந்து சேகரிக்கப்பட்டு விஞ்ஞான முறையில் கலவை செய்யப்பட்டு, கிளை நிலையங்களில் செயற்கை முறை இனவிருத்தி செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது. பெருமளவில் செயற்கை முறை இனவிருத்தித் திட்டம் திரவ விந்தைக் கொண்டு செயல் படுத்தப்படுகிறது.

திரவ விந்து நுட்பம் படிப்படியாக உறைவிந்து நுட்ப முறையில் மாற்றப்படும். உறைவிந்து தொழில்நுட்ப முறையில் விந்தினை நீண்ட நாள் பாதுகாப்பதுடன், கூடுதல் கருத்தரிப்பு விகிதமும் உறுதிப்படுத்தப்படுகிறது. இப்பணியினை கிராமவாழ் கால்நடை வளர்ப்போர் பலன்பெறும் வகையில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2,000 கிளை நிலையங்கள் மூலம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், செங்கல்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களில் சில இடங்களிலும் உறை விந்து தொழில் நுட்பம் நடைமுறையிலுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அபிஷேகப் பட்டி மாவட்டக் கால்நடைப் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள உறை விந்து வங்கி ஒன்றும், திரவ நைட்டிரஜன் திட்டமும் விரைவில் செயல்பட இருக்கிறது.

மற்றொரு உறைவிந்து வங்கி ரூபாய் 38.81 இலட்சம் செலவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஈச்சங்கோட்டையிலுள்ள அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணையில் டென்மார்க் அரசு உதவியுடன் ஏற்படுத்தப்பட உள்ளது. இதற்கு டென்மார்க் அரசு ரூபாய் 20·03 இலட்சம் மதிப்புள்ள உபகரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. அவர்களின் தொழில் நுட்ப உதவிகளும் பயன்படுத்தப்படும். இந்த உறைவிந்து வங்கி ஆரம்பக் கட்டமாக 50 கிளை நிலையங்களுடன் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டை அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணையை சுற்றியுள்ள இடங்களை உள்ளடக்கி 1981-82 ஆம் ஆண்டில் செயல்பட ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது,

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநிலமெங்கும் உறைவிந்து தொழில் நுட்பத்தை செயல்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளதால் உறைவிந்து முறையை கையாளுவதில் கால்நடை மருத்துவர்களுக்கும், ஏனைய மருத்துவரல்லாத பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்று 1980-81 இல் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சித் திட்டம் ஆறாவது திட்டக் காலத்தின் இதர ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படும். இதனால் போதுமான அளவு உறைவிந்து நுட்பத்தை பயன்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கப்பட்ட அலுவர்கள் இருப்பார்கள்.

### (5) வம்சாவழி ஆய்வுத் திட்டம்.

மத்திய அரசு உதவியுடன் சிவப்பு சிந்தி காளைகளுக்கான வம்சாவழி ஆய்வுத் திட்டம், ஒசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் 1972 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



இது 1—4—1979 முதல் மாநிலத் திட்டமாக தொடர்ந்து செயல்படுகிறது. ஒவ்வொரு பிரிவுக்கும் 6 காளைகள் அடங்கிய ஐந்து அணிகளாக காளைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றில் நான்கு அணிக் காளைகள் தங்களுடைய ஆய்வை ஏற்கனவே முடித்திருக்கின்றன. 8,000 டோசுக்கு அதிகமாக விந்து சிவப்பு சிந்தி காளைகளிலிருந்து சேகரிக்கப்பட்டு வருங்கால உபயோகத்திற்காக உறை விந்தாக்கப்பட்டுள்ளது. ஆய்வு செய்யப்பட்டக் காளைகள் சிறந்ததென நிரூபிக்கப்பட்டால் இவற்றின் உறை விந்து பயன் படுத்தப்படும்.

இதே போன்று வம்சாவழி ஆய்வுத் திட்டமொன்று முர்ரா எருமை காளைகளுக்காக ரூ. 37.15 இலட்சம் செலவினத்திற்கு 1980—81-ல் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணையில் துவங்கப்பட உள்ளது.

### (3) கால்நடைக் கண்காட்சிகளும், விளக்கக் காட்சிகளும்.

1980—81 ஆம் ஆண்டில் 57 கன்றுப் பேரணிகளும், 5 மாவட்ட கால்நடை கண்காட்சிகளும் நடத்துவதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. கன்று பேரணி ஒன்றுக்கு ரூபாய் 400 விதம் 57 கேந்திர கிராம வட்டாரங்களிலும், கால்நடைக் கண்காட்சி ஒன்றுக்கு ரூ. 5,000 விதம் தென் ஆற்காடு, சேலம், வட ஆற்காடு, தர்மபுரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் நடத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கன்று பேரணிகளிலும், கால்நடைக் கண்காட்சிகளிலும் கால்நடைப் பராமரிப்புத் தொழிலின் நவீன முறைகளை விளக்கும் படங்களும், அட்டவணைகளும் கிராம மக்கள் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. பல்வேறு வித அயலின மாடுகளும், சிறந்த நாட்டின் ஆடு, கோழி, பன்றி ஆகியவைகளும் வைக்கப்படுகின்றன. இதன் மூலம் கிராம மக்கள் கால்நடை வளர்ப்பிலும், பராமரிப்பிலும் உள்ள நவீன முறைகளினால் உண்டாகும் நன்மைகளை நன்கறிந்து தங்களுடைய கால்நடைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### (7) ஆடு வளர்ப்பு,

சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு ஆடு வளர்ப்பு சிறந்த உப தொழில்களில் ஒன்றாகும். ஆடு வளர்ப்போரையும், சிறிய, குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களையும் ஆடு வளர்ப்பில் ஊக்குவிக்கும் பொருட்டு, கூட்டுறவுச் சங்கங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் சிறிய அளவில் ஆடு வளர்க்க நிதியுதவி அளிக்கப்படுகிறது. மாநிலத்தில் ஆடு உற்பத்தித் திட்டங்களில் கால்நடைப் பராமரிப்புத் துறை அதிக முக்கியத்துவம் காட்டுகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் மூலம் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு ஆடுகள் விநியோகிக்கப்படுகின்றன. மேலும் இத்துறையின் மூலம் இலவசமாக கால்நடை மருத்துவ உதவியும் அளிக்கப்படுகிறது.

புகழ் பெற்ற இனங்களான மாண்டியா, மேச்சேரி, கீழக்கரிசல், இராமநாதபுரம் வெள்ளை, வேம்பூர் இனங்களைப் பாதுகாத்துப் பெருக்கும் நோக்குடன் இரண்டு ஆட்டுப் பண்ணைகளும் மாவட்டக் கால்நடைப் பண்ணைகளுடன் இணைக்கப்பட்ட நான்கு ஆடு வளர்ப்பு நிலையங்களுமுள்ளன. அயல் நாட்டு இனமான ''காரிடேல்'' ஆட்டு மந்தை சிறிய அளவில் ஒசூரில் பராமரிக்கப்படுகிறது. இப்பகுதிகளில் மாண்டியா காரிடேல் கலப்பினங்கள் தேவையான விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. தற்பொழுது தமிழகத்தில் 455 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இதில் 39 சங்கங்கள் வேளாண்மை மறுநிதி அபிவிருத்தி கழகத்தின் கீழும், இதர சங்கங்கள் சிறப்பு கால்நடை பராமரிப்புத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டம், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் கீழும் இயங்குகின்றன.

(8) குடற்புழு நீக்கம் செய்வதின்மூலம் இறைச்சி உற்பத்தியை அதிகரித்தல்-

குடற்புழு, கொக்கிப் புழு போன்ற புழுக்களை நீக்குவதின் மூலம் ஆட்டின் வளர்ச்சி அதிகரித்து இறைச்சி உற்பத்தி பெருகுவதுடன் ஆட்டின் தோலின் தரமும் உயர்த்தப்படுகிறது, குறிப்பிட்ட இடைவெளியில் ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்வதால் அவற்றின் எடை அதிகரிக்கிறது. இதன்மூலம் ஆடு வளர்ப்போர் கூடுதல் இலாபம் பெறுகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு, பெருமளவில் குடற்புழுவினை நீக்கம் செய்யும் திட்டமொன்று 1979—80 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1980—81 ஆம் ஆண்டில் 3.75 இலட்சம் ரூபாய் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் திருச்சிராப்பள்ளி, செங்கல்பட்டு, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. 1980–81 ஆம் ஆண்டில் 96,184 ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

(4) புதுக்கோட்டையில் வெள்ளாடு வளர்ப்புப் பகுதி ஒன்று ஏற்படுத்துதல்.

வெள்ளாடு இறைச்சி, பால் ஆகிய பல பலன்தரும் பிராணியாகும். வெள்ளாட்டின் தோல், உரோமம் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதின் மூலம் ஓரளவு அந்நிய செலாவணி ஈட்டப்படுகிறது. ஜமுனாபாரி வெள்ளாடுகளுடன் உள்ளூர் இன வெள்ளாடுகளைக் கலப்பினம் செய்து பால், இறைச்சி உற்பத்தியை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஜமுனாபாரி



அங்கீகரிக்கப்பட்ட சிறந்த இந்திய வெள்ளாட்டு இனமாகும். 1980-81 ஆம் ஆண்டில் 15.98 இலட்சம் ரூபாய் செலவில் 200 ஜமுனாபாரி வெள்ளாடுகளை அடிப்படை இருப்பாகக் கொண்டு புதுக்கோட்டை மாவட்டக் கால்நடை பண்ணையில் வெள்ளாடு வளர்ப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

(10) கோழி வளர்ப்பு.

(அ) தமிழகத்தில் 29 கோழி விரிவாக்க நிலையங்களும், 2 குஞ்சு பொரிப்பு நிலையங்களும் உள்ளன. சுற்றிலுமுள்ள கிராமப்புறங்களில் கோழி விரிவாக்கப் பணிகளை ஆற்றும் பொருட்டு கோழி விரிவாக்க நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இவைகள் கிராமப்புற மக்கள் கோழி வளர்ப்பை உபதொழிலாக நடத்துவதற்கு ஊக்கப்படுத்தி வருகின்றன. விவசாயிகளுக்கும் சிறிய மற்றும் பெரிய அளவில் கோழி வளர்க்க ஆர்வமுள்ளோர்களுக்கும் விநியோகிப்பதற்கான தரமுள்ள வெள்ளை லெக்கார்ன் இளக் கோழிகள் கோழி விரிவாக்க நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றன. அருப்புக்கோட்டை, விருதுநகர், ஈரோடு, ஓமலூர், திருப்பூர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் 5 கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர மேலும் இரண்டு சங்கங்கள் 1980–81 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திலுள்ள அலங்காநத்தம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள முசிறி ஆகிய இடங்களில் இயங்க பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் 12—7—1973 அன்று திட்டமிட்ட கோழி வளர்ப்புப் பணிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதற்கென்றே நிறுவப்பட்டது. வீரிய இனக் கோழிகள், கோழித் தீவனம் ஆகியவற்றை வழங்குவதுடன் முட்டை, கோழி இறைச்சி விற்பனையை மேற்கொண்டு விவசாயிகளுக்கு நியாயமான வருமானம் கிடைக்க செய்துள்ளது.

இந் நிறுவனம் நான்கு தீவனக் கலவை நிலையங்கள், ஐந்து கோழி வளர்ப்பு மற்றும் விரிவாக்கப் பண்ணைகள் இரண்டு வீரிய இனங் குஞ்சு பொரிப்பகங்கள் ஆகியவற்றோடு எட்டு விற்பனை மையங்களையும் செயல்படுத்தி வருகின்றது. தீவனக் கலவை நிலையங்கள், ஊட்டமுள்ள (முழுமையான) கோழித் தீவனத்தை உற்பத்தி செய்து விற்கும் பணியினைச் செய்து வருகின்றன. தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனத்தின் தீவனம் இந்தியத் தர நிறுவனத்தின் சான்றிதழ் பெற்ற சிறப்பினைக் கொண்டது.

ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், தனது பணிகளை மென்மேலும் விரிவு படுத்துவதற்கென ஒரு கோடி ரூபாய் திட்ட முதலீடு கொண்ட திட்டங்கள், சிலவற்றை, தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம் தீட்டியுள்ளது, (i) வளர்ந்து வரும் தேவைக்கேற்ப, அதிக அளவில் கோழித் தீவனம் தயாரிக்கும்

வகையில் தற்போதுள்ள தீவனக் கலவை நிலயங்களை வி
வாக்குதல்; (ii) தற்போதுள்ள குஞ்சு பொரிப்பகங்களை விரி
படுத்தி மேலும் அதிக வீரியஇனக் குஞ்சுகளை உற்பத்தி செய்தல்;
(iii) திட்டமிட்ட மற்றும் அறிவியல் முறைப்படி விற்பனைப் பண
களை மேம்படுத்தத் தேவையான அடிப்படை அமைப்புகளை
உருவாக்குதல், ஆகிய பணிகள் இத் திட்டத்தில் அடங்கும்.

இந்திய அரசின் சிறப்புக் கால்நடை மேம்பாட்டுத் திட்ட
தின் கீழ், கோழி வளர்ப்புத் திட்டம் ஒன்றினை செங்கல்பட்டு
வடஆற்காடு, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் நி
வேற்றி கிராமப்புற விவசாயிகளில் நலிந்த பிரிவினரின் சமூக
பொருளாதார நிலையினை உயர்த்தும் பணியினை தமிழ்நா
கோழி அபிவிருத்தி நிறுவனம் செய்து வருகின்றது
100 கோழிகள் கொண்ட ஒரு பண்ணையினை ஆரம்பித்து;
துணைத் தொழிலாக மேற்கொள்வதன் மூலம் விவசாயிக
தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள இத் திட்டம் வ
செய்கிறது. இதுவரை இதுபோன்ற 3,613 பண்ணைகளுக்
அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில், ஒவ்வொ
பண்ணைக்கும் தேவையான மொத்த செலவில், சி விவசா
களுக்கு 25 விழுக்காடும் குறுநில விவசாயிகள் மற்றும் நிலமற்
விவசாயத் தொழிலாளர்களுக்கு 33½ விழுக்காடும் மானிய
அளிக்கப்படுகின்றது. இதுவரை 52.99 இலட்சம் ரூபாய் இ
வறு மான்யமாக வழங்கப்பட்டுள்ளன இத் திட்டத்தில் ஏ
படும் செலவினை மத்திய மற்றும் மாநில அரசுகள் சமமாக
பகிர்ந்துக் கொள்கின்றன. தமிழ்நாட்டில் சென்னைக்கு அருக
மையில் ஒரு வாத்துப் பண்ணை அமைப்பதை அரசு ஆய்ந்
வருகின்றது.

## (11) தமிழ்நாடு இறைச்சி நிறுவனம்

சென்னை வாழ் மக்களுக்கு சுத்தம் மற்றும் சுகாதாரமா
இறைச்சி கிடைக்க செய்யும் பொருட்டு ரூபாய் 2,25 இலட்ச
செலவினத்தில் சென்னையில் ஒரு இறைச்சிக் கூடம் நிறுவ
தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்திற்கு 2-3-1979 நாளிட்
அரசு ஆணை எண் 423-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந் நிறுவனம் 1956 ஆம் ஆண்டிற்கான இந்தியக் கம்பெனி
சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, 3-2-1979 முத
இயங்கி வருகிறது. நவீன இறைச்சிக் கூடம் கட்டுவத
பொருட்டு சென்னைக்கு அருகாமையிலுள்ள மாதவரத்தி
சுமார் 150 ஏக்கர் நிலப்பரப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது. இ
விடம் வல்லுநர்களால் பார்வையிடப்பட்டு நவீன இறைச்சி
கூடம் நிறுவ இப் பகுதி ஏற்றது என பரிந்துரைக்கப்பட்டது.

அரசும் நவீன இறைச்சிக் கூடம் நிறுவுவதற்கான துவக்க
பணிகளை மேற்கொள்ளுவதற்கும் அனுமதி அளித்துள்ளது.



திட்டமிடப்பட்ட பணிகளை செயல்முறைக்கு கொண்டு வர பொறியியல் பகுதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நிர்வாக பொறியாளர் ஒருவர் அமர்த்தப்பட்டுள்ளார்;

தமிழ்நாடு அரசு தனது பகுதிப் பங்காக ரூபாய் 35 இலட்சங்களை அளித்துள்ளது. தமிழ்நாடு அரசு அளிக்க உள்ள மீதம் உள்ள பங்குத் தொகை ரூபாய் 21.25 இலட்சங்கள் ஆகும்.

இத் திட்டத்தில் சென்னை மாநகராட்சியின் பங்குத் தொகை ரூபாய் 18.75 இலட்சம். சென்னை நகராண்மைக் கழக ஆணையாளர் அவர்களை தங்களது பங்கைச் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளார். அவர்களின் பங்குத் தொகையும் சீக்கிரமே எதிர்ப்பார்க்கப்படுகிறது.

மேலும் இந்நிறுவன நெறியாளர் கழகம் (Board of Directors) தற்போது சென்னை மாநகராட்சி கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பெரம்பூரில் இயங்கி வரும் இறைச்சிக் கூடங்களை தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் ஏற்று நடத்த ஒப்பளித்தது. இது குறித்து அரசு விரைவில் உத்திரவிடவிருக்கிறது.

இந் நிறுவனத்திற்கான திருத்தப்பட்ட செய்முறை அறிக்கையை (Revised Feasibility Report) தயாரிக்கும பொறுப்பினை பம்பாய் விவசாய நிதிக் கழகம் வசம் ஒப்படைக்கப்பட்டு, அக்கழகம் செய்முறை அறிக்கையை (Feasibility Report) விரைவில் முடித்துத் தர இசைந்துள்ளது.

நவீன இறைச்சிக் கூட கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பு அறிவிப்புகளை (tenders) ஆய்ந்து முடிவெடுக்கும் பொருட்டு ஒரு வல்லுநர்கள் குழு அமைக்கப்பட இருக்கிறது.

இந் நிறுவன நெறியாளர் கழகம் (Board of Directors நவீன இறைச்சிக் கூடம் அமைப்பதில் ஆலோசனைக் கூற தேர்ச்சிப் பெற்ற ஆலோசகர் (Turn-key Consultant) அமர்த்துவதற்கு ஒப்பளித்து அதற்கான விளம்பரம் சென்னை, பம்பாய், கல்கத்தா மற்றும் டெல்லி முதலிய இடங்களில் தினசரி நாளிதழில் வெளியிடப்பட்டிருக்கிறது.

திருத்தப்பட்ட செய்முறை அறிக்கை தயாரானதும் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பு அறிவிப்புகள் முடிவு செய்யப்பட்டவுடன் நவீன இறைச்சிக்கூட கட்டுமானப் பணிகள் துவங்கப்பட இருக்கிறது.

## (12) பன்றி வளர்ப்பு

மிகக் குறைந்த வருமானம் உள்ள சமுதாயத்தில் நலிந்த பின்தங்கிய வகுப்பினர் தான் பன்றி வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு உள்ளனர். நகர்ப்புற மக்களிடையே பன்றி இறைச்சி உண்ணுதல் பெரியதோர் விழிப்புணர்ச்சி ஏற்பட்ட காரணத்தால்

இம் மாநிலத்தில் பன்றி வளர்ப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. எனவே மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் உள்ள 5 பன்றி வளர்ப்புப் பிரிவுகளிலும் மற்றும் சென்னை நகரில் உள்ள சைதாப்பேட்டை கால்நடை மருத்துவமனையில் உள்ள பன்றி வளர்ப்புப் பிரிவிலும் அயலின வெள்ளையார்க்ஷயர் பன்றிகள் பராமரிக்கப்படுகிறது. இதன் மூலம் அயலின் பன்றிகளுடன் நாட்டின பன்றிகள் கலப்பினம் செய்யப்படுகிறது. பன்றி இறைச்சியின் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சென்னை நகரிலுள்ள சைதாப்பேட்டை மருத்துவமனையின் இறைச்சிக் கூடம் ஒன்று இயங்கி வருகின்றது.

(13) நாய் வளர்ப்பு.

இராஜப்பாளையம், கோம்பை போன்ற நாட்டின நாய்கள் மறைந்து வருவதால் அவைகளை பாதுகாக்க வேண்டியது அத்தியாவசியமாகும். புகழ் பெற்ற இவ்வினங்களை நம் மாநிலத்தில் பாதுகாப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு 1980-81ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி தரமுள்ள இவ்வின நாய்களை உற்பத்தி செய்யும் பொருட்டு 0.50 இலட்சம் ரூபாய் செலவுல் நாய் வளர்ப்பு இனவிருத்திப் பிரிவு ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்பட இருக்கிறது.

(14) தீவனப் பயிர் அபிவிருத்தி.

இம் மாநிலத்தில் தீவனப்பயிர் உற்பத்தியில் போதுமான, கவனம் செலுத்தப்பட்டாலொழிய பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மாடுகளையும், எருமைகளையும் கலப்பினம் செய்வதின் மூலம் வெற்றியைக் காண முடியாது. தற்பொழுது புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை, செங்கல்பட்டு மாவட்டத்தில் படப்பை, திருநெல்வேலி மாவட்டத்தில் அபிஷேகப்பட்டி, மற்றும் தென் ஆற்காடு மாவட்டத்தில் சின்ன சேலம் ஆகிய இடங்களில் இயங்கி வரும் 4 தீவனப் பயிர் உற்பத்தி நிலையங்கள், விவசாயிகளில் தீவனப் பயிர் தேவை, யைப் பூர்த்தி செய்ய இயலவில்லை. எனவே தீவனப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1980-81ம் ஆண்டில் 2.93 இலட்சம் ரூபாய் செலவில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டை அயலின கால்நடை வளர்ப்புப் பண்ணையில் தீவனப் பயிர் உற்பத்தி நிலையம் ஒன்று ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(15) சிறப்புத் திட்டங்கள்

(1) கால்நடைப் பராமரிப்பு சிறப்புத் திட்டம்

சிறிய மற்றும் குறுநில விவசாயிகளும், வேளாண்மை தொழிலாளர்களும் சிறிய அளவில் கோழி மற்றும் ஆடு வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தவும், கன்றுகளைப் பராமரிக்கவும் இத் திட்டம் உதவுகிறது. இத் திட்டத்தின் கீழ் கன்று



வளர்ப்பிற்கு சிறிய மற்றும் குறுநில விவசாயிகளுக்கு ரூ. 960 மானியமாகவும் மீதித் தொகையான ரூ. 960 கடனாகவும், கொடுக்கப்படுகிறது. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு ரூ. 1,280 மானியமாகவும் ரூ. 640 கடனாகவும் வழங்கப்படுகிறது.

ஆடு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 20 பெட்டை ஆடுகளும் ஒரு கிடாவும் அடங்கிய சிறிய ஆடு வளர்ப்புப் பிரிவு ஒன்றுக்கு ஆகும் மொத்த செலவாகிய ரூ. 4000—ல சிறிய விவசாயி ஒருவருக்கு ரூ. 1000-ம் குறுநில மற்றும் வேளாண்மைத் தொழிலாளருக்கு ரூ. 1,330—ம் மானியமாக வழங்கப்படுகிறது.

கோழி உற்பத்தித் திட்டத்தின் கீழ் முட்டையின 100 கோழிகள் அடங்கிய பிரிவு ஒன்று அமைக்க ஏற்படும் மொத்தச் செலவு ரூ. 5,846 ல் சிறு விவசாயி ஒருவருக்கு ரூ. 1,462-ம் குறுநில மற்றும் வேளாண்மைத் தொழிலாளர் ஒருவருக்கு ரூ. 1,949-ம் மானியமாக வழங்கப்படுகிறது. மீதித் தொகை தேசிய மயமாக்கப்பட்ட மற்றும் கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடனாக பெறுவதற்கு வழி செய்யப்படுகிறது.

மேற்கண்ட திட்டங்கள் அனைத்தும் கீழ்க்கண்ட மாவட்டங்களில் கால்நடைப் பராமரிப்புத் துறை' தமிழ்நாடு பால்வள நிறுவனம் மற்றும் தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன:—

| திட்டம். | மாவட்டம். |
|---|---|
| கால்நடைப் பராமரிப்புத் துறை— | |
| ஆடு உற்பத்தித் திட்டம் .. | சேலம், வட ஆற்காடு. திருநெல்வேலி. |
| தமிழ்நாடு பால்வள அபிவிருத்தி நிறுவனம்— | |
| கன்று வளர்ப்பு .. .. | சேலம், வட ஆற்காடு, மதுரை தென் ஆற்காடு, கோயம்புத்தூர். |
| தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம்.— | |
| கோழி உற்பத்தி .. .. | சேலம், வட ஆற்காடு, மதுரை, செங்கல்பட்டு. |

1980—81—ம் ஆண்டில் ரூ 19.66 இலட்சம் நிதி உதவியுடன் 1,912 ஆடு வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(2) மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் சிரிய கன்று வளர்ப்பைச் செயல்படுத்துவதற்காக 1980—81—ம் ஆண்டில் 5 இலட்சம் ரூபாய்ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 25 மாதங்களுக்குக்

கன்று ஒன்றைப் பராமரிக்கும் மொத்தச் செலவாகிய ரூ. 1,920-ல் 50 விழுக்காடு சிறிய மற்றும் குறுநில விவசாயிகளுக்கும் 66¾ விழுக்காடு வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் மானியமாக அளிக்கப்படுகிறது.

(3) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் உதகமண்டலம் மாவட்டக் கால்நடைப் பண்ணையை வலுப்படுத்துதல், நான்கு ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துதல் ஆடு வளர்ப்பு நிலையங்கள் மற்றும் கால்நடையின் நோய்ப் புலனாய்வு நிலையம் ஏற்படுத்துதல் போன்ற நடைமுறையிலுள்ள திட்டங்களுக்காக, 9.35 இலட்சம் ரூபாயை மத்திய அரசு திட்டக்குழு அங்கீகரித்துள்ளது மேலும் குருத்துக்குளித் தீவனப் பண்ணையை விரிவுப்படுத்துதல், உதகமண்டலம் மாவட்டக் கால்நடைப் பண்ணையை விரிவுபடுத்துதல், பன்றி வளர்ப்புத் திட்டம், கீழ்க்குந்தா கால்நடை மருந்தகம் கட்டுதல் ஆகிய புதிய திட்டங்களுக்கான 6.76 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடும் அங்கீகரித்துள்ளது. 1980–81-ல் மேற்கண்ட புதிய திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(4) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.

இம்மாநிலத்திலுள்ள சேலம், தென் ஆற்காடு, வட ஆற்காடு, தர்மபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலுள்ள ஒன்பது பழங்குடியினர் பகுதிகளில் வாழும் பழங்குடியினருக்கு ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தித் தர ஆடுகளும், பன்றி வளர்ப்புப் பிரிவு ஏற்படுத்த பன்றிகளும் வழங்கி, பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக 1980-81-ம் ஆண்டில் 11.36 இலட்சம் ரூபாய்க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வட ஆற்காடு தர்மபுரி மாவட்டங்களிலுள்ள பழங்குடியினர் பகுதிகளில் புதியதாக இரண்டு கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்துவதற்காக 3.41 இலட்சம் ரூபாயும் ஒப்புதல் அளித்துள்ளது.

(5) வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

சில வறட்சி பகுதிகளிலுள்ள விவசாயிகளின் துயர் நீக்குவதே வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் செயல்படுத்தப்படும் இரு மாவட்டங்கள் இராமநாதபுரம், தர்மபுரி ஆகும். இத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு நிரந்தர வசதிகள் செய்யப்படுகிறது. 1980-81-ல் இவ்விரு மாவட்டங்களிலும் கால்நடைப்





பராமரிப்பு பணிகளை நிறைவேற்ற 60.94 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதே ஒதுக்கீட்டின் கீழ் வரும் முக்கியத் திட்டங்களின் விபரம் பின்வருமாறு:—

| வரிசை எண்ணும் திட்ட விபரமும். | செலவு ரூபாய். (இலட்சத்தில்) |
|---|---|
| இராமநாதபுரம் மாவட்டம்— | |
| (1) 2,400 கறவை மாடுகள் வழங்குதல் .. | 17.32 |
| (2) 600 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல் | 7.05 |
| (ஒவ்வொரு நிலையமும் 10 பெட்டை ஆடுகளையும், 1 கிடாவையும் கொண்டது.) | |
| தர்மபுரி மாவட்டம்.— | |
| (1) 200 கறவை மாடுகள் வழங்குதல் .. | 3.50 |
| (2) 250 ஆடு வளர்ப்புப் நிலையங்கள் நிறுவுதல் | 2.60 |
| (ஒவ்வொரு நிலையமும் 10 பெட்டை ஆடுகளும், 1 கிடாவும் கொண்டது.) | |

(6) சிறு விவசாயிகள் மேம்பாட்டுத்திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் தகுதியுள்ள சிறு விவசாயிகளுக்கு 25 விழுக்காடு, குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு 33 விழுக்காடு மானியமாக வழங்கப்படும். திட்டக்காலத்தில் தகுதியுள்ள விவசாயி ஒருவர் பெறும் அதிகபட்ச மானியம் ரூ. 3,000. 1980-81 ஆம் ஆண்டு சிறிய மற்றும் குறுநில விவசாயிகளுக்கு 71.66 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 11,342 கறவை மாடுகள் வழங்கப்பட்டன. ஆடு வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு 8.66 இலட்சம் ரூபாய் நிதி உதவி 877 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. ரூபாய் 2.43 இலட்சம் செலவில் 364 உழவு மாடுகள் வழங்கப்பட்டன. ரூபாய் 0.52 இலட்சம் நிதி உதவியில் 21 கோழி வளர்ப்பு பிரிவுகளும் 13 பன்றி வளர்ப்புப் பிரிவுகளும் இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டன.

(7) ஒருங்கிணைந்த மாதிரிப் பொருள்கள் ஆய்வுத் திட்டம்.

கால்நடை உற்பத்திப் பொருட்களான பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி ஆகியவற்றை புள்ளி விவரம் சேகரிக்கும் ஒருங்கிணைந்த மாதிரிப் பொருள் ஆய்வுத் திட்டம் 1977–78 முதல் தமிழகத்தில் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டம் 1-4-1970 முதல் மாநிலத் திட்ட

மாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இதுவரை எடுக்கப்பட்ட ஆய்வுகளின் முடிவு கீழே கொடுக்கப்படுகின்றன.

பால் உற்பத்தி மதிப்பீடு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1977-78 | .. | .. | 1681 | ('000' டன்) |
| 1978-79 | .. | .. | 1727 | ( ,, ) |
| 1979-80 | .. | .. | 1860 | ( ,, ) |

முட்டை உற்பத்தி மதிப்பீடு—

| | | | | |
|---|---|---|---|---|
| 1477-78 | .. | .. | 682 | (மில்லியன்) |
| 1978-79 | .. | .. | 782 | ( ,, ) |
| 1979-80 | .. | .. | 853 | ( ,, ) |

## III. கால்நடைப் பண்ணைகள்.

ஒன்பது கால்நடைப் பண்ணைகள் கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் உள்ளன. அவைகள் விதைப் பண்ணைகளாக இயங்குகின்றன. இப் பண்ணையில் பிறக்கும் சிறந்த மரபுடைய பொலி காளைகள் துறை பொலிகாளை நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இங்கு அவற்றின் விந்து சேகரிக்கப்பட்டு, விஞ்ஞான ரீதியில் கலவை செய்யப்பட்டு, செயற்கை இனவிருத்தி செய்யும் பொருட்டு கிளை நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இப்பண்ணைகளில் வெவ்வேறு வகையான நாட்டின மற்றும் அயலினக் கால்நடைகள் பராமரிக்கப்படுகின்றன. சிந்தி, தார்ப் பார்க்கர், காங்கேயம், உம்பளாச்சேரி முதலியவ நாட்டினங்களாகும். அயலினங்கள் ஜெர்ஸி, ஹோல்ஸ்டேன் பிரிசியன் ஆகும். சில பண்ணைகளில் முர்ரா எருமைகளும் பராமரிக்கப்படுகின்றன. சில பண்ணைகளில் பசு இனங்களும் எருமை இனங்களும் தவிர ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்புப் பிரிவுகளும் உள்ளன. மேலும் இது கலப்பு மாதிரிப்பண்ணையாக இயங்குகின்றன. சில பண்ணைகளில் தீவனப் பயிர் உற்பதி நிலையமும் உள்ளன. ஈச்சங்கோட்டைப் பண்ணையில் ஜெர்சி இனங்கள் மட்டுமே உள்ளன. இதைத் தவிர வேறெந்த இனங்களும், கால்நடைகளும் இப்பண்ணைகளில் பராமரிக்கப்படவில்லை.

தர்மபுரி மாவட்டம் ஓசூரில் "கால்நடை வளர்ப்புப் பகுதி' ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையிலிருக்கிறது. ஜெர்ஸி சிந்தி இன கலப்பினக் காளைகளின் உற்பத்தியை அதிகரித்தலும், இவ்வினவிருத்திக்காக உறைபதவிந்து விநியோகித்தலும், மரபு வழி பண்பியல் செயல்முறைக் கல்வி பயிற்சி நிலையம் (School of applied genetics) நிறுவுதலும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்கு 300.16 இலட்சம் ரூபாய் செலவு ஆகும். இத்திட்டத்திற்கு ஒப்புதல் வேண்டியும், நிதி உதவி கோரியும் மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. இதனை நிர்வகிக்க 1860-வது வருடத்திய சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் "ஓசூர் பால் பண்ணை வாரியம்" என்ற ஒரு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாரியத்திற்கு வரையறை செய்யப்பட்ட விதிமுறைகளின்படி தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.





### அயலின கால்நடை வளர்ப்புப் பண்ணை, ஈச்சங்கோட்டை

இப்பண்ணை 1976-ல் துவக்கப்பட்டது. அடிப்படை இருப்பான 150 ஜெர்சி பசுக்களும், இரண்டு காளைகளும் ஆஸ்திரேலியா அரசின் உதவியுடன் இறக்குமதி செய்யப்பட்டன. தற்பொழுது இப்பண்ணையில் 192 முதிய மாடுகளும், 60 இளம் மாடுகளும் உள்ளன. 1980-81ஆம் ஆண்டில், 57 கன்றுகள் பிறந்துள்ளன. உயர்ரகத் தீவனப் பயிரை அதிகரிப்பதற்காகவும், பண்ணையின் தீவனப் பயிர் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், கால்நடை வளர்ப்போருக்குத் தீவனப் பயிர், விதை மற்றும் நாற்றுக்கள் வழங்கும் பொருட்டும், 1980-81ஆம் ஆண்டில் தீவனப் பயிர் உற்பத்தி நிலையம் ஒன்று இப்பண்ணையில் ஏற்படுத்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தீவனப்பயிர் விதைகளும், புல் நாற்றுகளும், மலிவான விலையில் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்றன.

### கிடேரி உற்பத்தித் திட்டம்.

ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப்பாங்கான பகுதி மேம்பாட்டுத்திட்டம் போன்ற பல்வேறு முன்னேற்றத் திட்டங்கள் மூலம் சிறிய மற்றும் குறுநில விவசாயிகளுக்கும், வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் கால்நடை வளர்ப்போருக்கும், கிராம மக்களுக்கும் கறவை மாடுகள் விநியோகிக்கப்படுகின்றன. இத்திட்டங்களின்கீழ் விநியோகிக்கப்படுவதற்கான கறவை மாடுகள் மிகவும் குறைவாக உள்ளது. எனவே, கால்நடைகள் அடிக்கடி அண்டை மாநிலங்களிலிருந்து வாங்கப்பட்டு பயன்பெறத்தக்க விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. கிடேரிகள் உற்பத்தித் திட்டத்தின் கீழ் தொடர்ந்து கலப்பின கிடேரிகளைத் தேவையான விவசாயிகளுக்கு வழங்கி, அவர்கள் தரமுள்ள கறவை மாடுகளுடன் சிறிய பால் பண்ணைகளைத் துவங்குவதற்கு இத்திட்டம் பெரிதும் உதவும். 1980-81-ம் ஆண்டில் புதுக்கோட்டை மற்றும் உதகமண்டலம் மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் கிடேரி (பசு) உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்துவதற்கு 19.72 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கிறது.

### ஓங்கோல் கால்நடைகள் வாங்குதல்.

போக்குவரத்துக்கும், விவசாயத்திற்கும் உழவு மாடுகளையே சிறு விவசாயிகள் பெரிதும் சார்ந்துள்ளனர். ஏனெனில் பண்ணை இயந்திரச் சாதனங்கள் மற்றும் கருவிகளுக்காகும் செலவினங்களுக்கு முதலீடு செய்ய அவர்களால் இயலாது. ஓங்கோல் கால்நடை இரு பயன் அளிக்கும் சிறந்த இந்திய இனமாகும். இது உழவு வேலைக்கும், பால் உற்பத்திக்கும் பெயர் பெற்றது. சிறு விவசாயிகளின் இத்தேவையைத் திருப்தி செய்யும் பொருட்டும், இவ்வினத்தின் தூய தன்மையை பாதுகாக்கும் பொருட்டும் சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையில் ஓங்கோல் கால்நடை வளர்ப்புப் பிரிவு ஒன்று அமைக்க 1.77 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மாடுகள் வாங்குதல்.

கால்நடை வளர்ப்பில் கலப்பினத் திட்டத்தை ஆற்றலுடன் செயல்படுத்துவதற்காக 103 ஜெர்ஸி காளைகளும், மூன்று ஹோல்ஸ்டீன் பிரிசியன் மற்றும் 25 முர்ரா எருமைகளும் வாங்கும் பொருட்டு 1980-81ம் ஆண்டில் 7.26 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மாவட்டக் கால்நடைப் பண்ணைகளை புனரமைத்தல்.

கால்நடைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக கால்நடைப் பண்ணை வலுப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். கால்நடைப் பண்ணை புனரமைப்புக் குழுவின் பரிந்துரையின்படி ஆட்டுப் பண்ணையில் தீவனப் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வசதியை அதிகரிக்கும் பொருட்டு 1980-81ஆம் ஆண்டில் 26.25 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

IV. கால்நடை நோய் நீக்கப் பணிகள்.

மாநிலமெங்கும் கால்நடை நோய் நீக்கப் பணிகளை கால்நடைப் பராமரிப்புத் துறை அளிக்கிறது. கால்நடைகளையும் கோழிகளையும், வெக்கை நோய், தொண்டை அடைப்பான், சப்பை நோய் அடைப்பான், கோழி அம்மை, கோழிக் கழிச்சல் போன்ற நோய்களுக்குத் தடுப்பு ஊசி போடுவதன் மூலம் நோய்த் தடுப்புப் பணிகள் ஆற்றப்படுகின்றன. கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக மாநிலத்தின் நகர்ப்புறங்களிலும், கிராமப் புறங்களிலும் சேர்ந்து தற்போது 671 கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன:

| | | |
|---|---|---|
| (அ) | கால்நடை மருந்தகம் .. .. .. | 531 |
| (ஆ) | கால்நடை மருந்தகம் மற்றும் கேந்திர கிராம நிலையம். | 75 |
| (இ) | கால்நடை மருத்துவமனை .. .. | 47 |
| (ஈ) | கால்நடை மருத்துவமனை மற்றும் கேந்திர கிராம நிலையம். | 6 |
| (உ) | பிரதம மருத்துவமனை | 12 |
| | மொத்தம் .. | 671 |

மேற்கண்ட நிலையங்கள் தவிர, 13 பரிசோதனைக் கூடங்கள் 6 நடமாடும் நிலையங்கள், 8 கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் மற்றும் 2,227 கிளை நிலையங்களும் இம்மாநிலத்திலுள்ளன.



(2) மருந்து கிடங்குகள்.

மருந்துகளை வாங்கி தகுந்த சமயத்தில் மாநிலத்திலுள்ள கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு விநியோகிப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே மருந்துகளை வாங்கி விநியோகிப்பதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கும் நோக்குடன் ரூ. 2.0 இலட்சம் செலவில் நம் மாநிலத்தில் 4 மருந்து கிடங்குகளை அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் மருத்துவ நிலையங்களுக்கு விரைவில் மருந்துகள் விநியோகிக்கப்படும். இக் கிடங்குகள் செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்படும்.

(3) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்.

மிகக்கொடிய கால்நடை நோய்களில் ஒன்று வெக்கை நோயாகும். இந் நோய் கால்நடைகளிடையே இறப்பை உண்டாக்கி, இழப்பை விளைவிப்பதுடன், பால், இறைச்சி போன்றவற்றின் உற்பத்தியைக் குறைக்கிறது. இத்திட்டத்தின் மூலம் முறையான கால அளவில் வெக்கை நோய் தடுப்பு ஊசி போடப்பட்டு கால்நடைகள் நோய் எதிர்ப்புச் சக்தி கொண்டதாக இருக்க வழிவகை செய்கிறது. தற்போது 14 மாவட்ட குழுக்களும், 10 கண்காணிப்பு பிரிவுகளும், 13 சோதனைச் சாவடிகளும் உள்ளன. 1980-81ம் ஆண்டில் 4.27 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 3 மாவட்ட குழுக்களை புதுக்கோட்டை, ஈரோடு, விருதுநகர் ஆகிய இடங்களில் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும் கன்னியாகுமரி, கடலூர், சேலம், தர்மபுரி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள மாவட்டக் குழுக்களுக்குக் கூடுதல் வசதிகள் அளிக்கும்படியாக 5.74 இலட்சம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

(4) மருந்து தயாரிக்கும் பிரிவு ஏற்படுத்துதல்.

பல்வேறு வகையான தரமுள்ள மருந்துகளைத் தயாரித்து துறையின் மருத்துவ நிலையங்களுக்கு எப்போதும் கிடைக்கும் வகையில் மற்றும் விநியோகிக்கும் நோக்குடன் மருந்து தயாரிக்கும் பிரிவு ஒன்றை 1980–81-ம் ஆண்டில் 16.14 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(5) கோமாரி நோய்த் தடுப்புப் பணி.

நாட்டினக் கால்நடைகளைவிட கலப்பினக் கால்நடைகள், கால்நடைகளிடையே தோன்றும் கோமாரி நோய்க்கு விரைவில் ஆளாகின்றன. பொதுவாக இந் நோய், கால்நடைகளின் உடல் நலத்தைக் கெடுத்து பால் உற்பத்தியைக் குறைப்பதுடன், பசுக்களில் மலட்டுத் தன்மையையும் உண்டாக்குகிறது. இந்நோயினால் கால்நடை வளர்ப்போருக்கு ஏற்படும் இழப்பு பெரியதாகும். 1976-77 முதல் கோமாரி நோய்களிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்கும் திட்டம் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்

படுகிறது. 1980–81ஆம் ஆண்டில் கோமாரி நோய்த் தடுப்பு மருந்து வாங்குவதற்காக 7.40 இலட்சம் ரூபாய்க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(6) கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை

இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், தடுப்பு மருந்து, நிணநீர், நோய் கண்டுபிடிக்கும் மருந்துகள், கலவைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து மாநிலத்திலுள்ள மருத்துவ நிலையங்களில் தேவைகளுக்கேற்றபடி விநியோகிக்கிறது. இந் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் தடுப்பு மருந்துகள் அண்டை மாநிலங்களுக்கும் விற்கப்படுகின்றன. கருச்சிதைவு நோய் ஆய்வுக்கூடப் பிரிவு, கோழி நோய்த் தடுப்பு மருந்து உற்பத்திப் பிரிவு, வாத்து நோய்த் தடுப்பு மருந்து மற்றும் திசு வளர் கோழி அம்மைத் தடுப்பு மருந்து உற்பத்திப் பிரிவு ஆகியவற்றை வலுப்படுத்துவதற்காக 15.38 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நிலையத்தில் அலுவலர் குடியிருப்பு இல்லங்கள் அமைப்பதற்காக 5.0 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## V. கால்நடைப் பராமரிப்புத் துறையின் நிர்வாக அமைப்பு.

இந்திய ஆட்சிப் பணியின் அமைப்பிலுள்ள அலுவலரை கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநராகக் கொண்டுள்ளது. கூடுதல் கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் இருவர் தொழில் நுட்பப் பணிகளில் இவருக்கு உதவி புரிகின்றனர். 1980–81-ல் முதன்மை அலுவலக பணியாளர் பதவி ஒன்று உருவாக்கப்பட்டது. இவர் நிர்வாகப் பணிகளில் உதவி புரிகிறார். கால்நடை பராமரிப்புத் துறை புள்ளி விவரப் பகுதியின் பொறுப்பாளராக உள்ள இணை இயக்குநர் புள்ளி விவரம் மற்றும் திட்டப் பணிகளில் இயக்குநருக்கு உதவி புரிகிறார். மண்டல அளவில், ஒவ்வொரு மண்டலமும் ஒரு இணை இயக்குநரின் கீழ் உள்ளது. இவருக்குக்கீழ் பணிபுரியும் உதவி இயக்குநர்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய்க் கோட்டங்களுக்கும் பொறுப்பாளராக உள்ளார். தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம், கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் துணை இயக்குநர் பொறுப்புள்ளவராக உள்ளார். மேலும் 1980–81-ல் கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் அலுவலகத்திலுள்ள கணக்குப் பிரிவினை வலுப்படுத்துவதற்காகத் தலைமை கணக்கு அலுவலர் பதவி ஒன்றுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

ஈச்சங்கோட்டையிலுள்ள அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணையும், புதுக்கோட்டையிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையும், இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையமும் கூடுதல் இயக்குநரின் பொறுப்பிலுள்ளது. மாதவரத்திலுள்ள பால் பண்ணை மற்றும் கால்நடை பராமரிப்பு இல்லம் இணை இயக்குநரின்கீழ் இயங்குகின்றன.



நிர்வாக வசதிக்காக இம் மாநிலம் 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் 61 கால்நடைப் பராமரிப்புக் கோட்டங்கள் உள்ளன, இவை ஒவ்வொன்றும் உதவி கால்நடைப் பராமரிப்பு இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

## VI. வருங்காலத் திட்டங்கள்.

1981–82-ம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களின் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | கூறுகள். | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| 1. | 60 மூர்ரா எருமைக் காளைகள் வாங்குதல். | .. | |
| 2 | உறை விந்து தொழில் நுட்பத்தில் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல். | கால்நடை உதவி மருத்துவர்கள் | 100 |
| | | கால்நடை ஆய்வாளர்கள் | 240 |
| 3. | தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டம். | 2 | |
| 4. | மாவட்டக் கால்நடைப் பண்ணைகளை வலுப்படுத்துதல் (தற்போதுள்ள பண்ணைகள்). | 4 | |
| 5. | பர்டிஸோ காயடிக்கும் கருவிகள் வாங்குதல். | 900 | |
| 6. | கால்நடை மருத்துவமனைகளை, பிரதம மருத்துவ நிலையங்களாக நிலை உயர்த்துதல். | [illegible] | |
| 7. | கால்நடை மருந்தகங்களை, மருத்துவமனைகளாக நிலை உயர்த்தல். | [illegible] | |
| 8. | புதிய கால்நடை மருந்தகங்கள் ஆரம்பித்தல். | 20 | |
| 9. | இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தை வலுப்படுத்துதல் (திசு வளர்ப்பு நோய் தடுப்பு மருந்து பிரிவை வலுப்படுத்தல்). | [illegible] | |

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | கூறுகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 10. | கோழி நோய் கண்டுபிடிக்கும் ஆய்வுக்கூடம் ஏற்படுத்துதல். | 1 |
| 11. | ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்வதின்மூலம் இறைச்சி உற்பத்தியைப் பெருக்குதல். | .. |
| 12. | நாட்டினப் பன்றிகளின் தரம் உயர்த்துவதற்காக இலவசமாக 125 அயலின ஆண் பன்றிகள் வழங்குதல். | .. |
| 13. | தீவனப் பயிர் விதை உற்பத்தி நிலையம் நிறுவுதல். | 1 |
| 14. | சாத்தூர் மற்றும் சின்னசேலம் ஆட்டுப் பண்ணைகளில் ஆடு வளர்ப்போருக்குக் குறுகிய காலப் பயிற்சி அளித்தல். | ... |
| 15. | கால்நடை இடைக்கால கணக்கெடுப்புப் பிரிவு. | 1 |
| 16. | மலடு நீக்கச் சிகிச்சையில் பயிற்சி அளிக்கும் திட்டம். | .. |
| 17. | எம். வி. எஸ். ஸி. பட்டப்படிப்புக்கு துறை அலுவலர்களை அனுப்புதல். | 10 அலுவலர்கள் |
| 18. | நிர்வாகத்தை வலுப்படுத்துதல் இருகால்நடைப் பராமரிப்பு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் ஏற்படுத்துதல். | 2 மண்டலங்கள். |

கோமதி சீனிவாசன்,



## இணைப்பு IV

### கோரிக்கை எண் 30 சமூக நலத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு

84-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.

### 1981–82

### முன்னுரை

கோரிக்கை எண் 30-ன்கீழ் 1981–82 ஆம் ஆண்டிற்கு ரு. 20,74,64,000 நிதி ஒதுக்கிடு செய்ய அவையின் ஒப்புதலை கோருகின்றேன்.

2. சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் வாழ்க்கை நிலையை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மேம்படுத்துவதில் தனிக் கவனம் செலுத்த வேண்டியது வளம்கெழு அரசின் கடமையாகும். எனவே மகளிருக்கு நலம் பயக்கும் தனித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கென 195 ஆம் ஆண்டில் மகளிர் நலத்துறை ஏற்படுத்த பட்டது. இத் துறையின் பணிகள் ஆலமரத்துக் கிளைகள் போல படிப்படியா ஏனைய பிரிவின ருக்கும் அதாவது சிறார், உடலூனமுற்றோரின் நல்வாழ்விற்கும் பாடுபடும் வகையில் விரிவு படுத்தப்பட்டன. இவ்வாறாக, 1972 ஆம் ஆண்டில் சமூக நலத்துறை தோன்றியது; அப்போ திருந்து இத்துறை, சமுதாயத்தில் இம் மூன்று பிரிவினரின் நலனுக்கும் மேம்பாட்டுக்கும் பல திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருகிறது.

### நிர்வாக அமைப்பு

3. மாநில அளவில், சமூக நலத் துறை இயக்குநர் இத்துறைக்குத் தலைவராவார். ஒரு இணை இயக்குநர், இரண்டு துணை இயக்குநர்கள், நிர்வாக நேர்முக உதவியாளர் ஒருவர், நான்கு உதவி இயக்குநர்கள் (குழந்தை நலனுக்கு ஒருவர், மகளிர் நலனுக்கு ஒருவர், சிறப்புச் சத்துணவுத் திட்டத்திற்கு ஒருவர், உலக வங்கி சத்துணவுத் திட்டத்திற்கு ஒருவர்) உடலூனமுற்றோருக்கான மாநில குழுவிற்குப் பொறுப்பு வகிக்கும் செயலாளர் ஒருவர் பழி ஈட்டப் பிரிவுக்குப் பொறுப்பு வகிக்கும் தனி அதிகாரி ஒருவர், கணக்கு அதிகாரி ஒருவர்' உதவி கணக்கு அதிகாரி ஒருவர் ஆகியோர் இயக்குநருக்கு உதவி புரிகின்றனர்.

4. மாவட்ட அளவில், மாவட்ட சமூக நல அதிகாரிகளும் குழந்தைகள் நலத் திட்ட அதிகாரிகளும் துறைப் பணித் திட்டங்கள் அனைத்திற்கும் பொறுப்பு வகிக்கின்றனர். வளர்ச்சிப் பணி அதிகாரிகளும் (சமூக நலன்), கிராம சேவகிகளும் ஊராட்சி ஒன்றிய அளவில் பணி புரியும் நேரிடைப் பணியாளர்களாவர். கிராமப் பகுதிகளில், சமூக நல அமைப்பாளர்கள் சமூக நல நிலையங்களை நடத்தி வருகின்றனர். கைத் தொழில் பயிற்சியாளர்கள் (மகளிர்) பணி நிலையங்களை உற்பத்திப் பிரிவுகளை நடத்தி வருகின்றனர். பல சேவகிகள் குழந்தை நலத் திட்ட அமைப்பாளர்கள் பல்வேறு குழந்தைகள் காப்பகங்கள், குழந்தை நல நிலையங்களை நடத்தி வருகின்றனர்.

## உடலூனமுற்றோர் நலன்.

5. ஐக்கிய நாடுகள் அவை, 1981 ஆம் ஆண்டை அனைத்து நாட்டு ஏலாமையுற்றோர் ஆண்டாக அறிவித்துள்ளது. அத்தீர்மானத்தில் கையெழுத்திட்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். எனவே, உடலூனமுற்றோருக்குப் புது வாழ்வு அளிப்பதில், குறிப்பாக இந்த ஆண்டில் அரசு அதிக நாட்டம் செலுத்த விரும்புகிறது.

6. மொத்த மக்கள் தொகையில், உடலூனமுற்றோர் கணிசமான அளவில் உள்ளனர். அவர்களுக்குப் புதுவாழ்வு அளித்து அவர்கள் இயல்பான வாழ்க்கை நடத்துவதற்கு வழிவகுக்க அரசு ஆதரவு தரவேண்டியதோடு அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

7. இதுவரையில் நாம் செய்திருப்பதெல்லாம் சரியான வழியில் அடியெடுத்து வைத்திருப்பதுதான், இன்னும் நாம் சாதிக்க வேண்டியதோ ஏராளம். எனவே, தற்போதைய திட்டங்களை விரிவுபடுத்துவதும் உடலூனமுற்றோரின் புதுவாழ்வுக்கான பல புதிய திட்டங்களை நிறைவேற்றுவதும் மிக அவசியம். இத்திட்டங்கள், அவர்கள் சமூக, பொருளாதார வகையில் தற்சார்பு நிலையை அடைய வழிகோலும்.

### தற்போது நிறைவேற்றப்படும் திட்டங்கள் :

8. உடலூனமுற்றோருக்கெனத் தற்போது, கல்வித் திட்டங்களும் வாழ்க்கைத் தொழில் பயிற்சித் திட்டங்களும் அவற்றோடு அவர்களுக்கு வேலை வாய்ப்பு வாங்கித் தருவதற்கான திட்டங்களும் நிறைவேற்றப்படுகின்றன. இலவசமாகச் செயற்கை உறுப்புகள் வழங்கும் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. முக்கியமான புதுத் திட்டங்கள் வருமாறு :—

1. உடலூனமுற்றோருக்குக் கல்வி.

(அ) உடலூனமுற்றோருக்குக் கல்வி வசதி அளிப்பதற்கென அரசு, தனிப் பள்ளிகளை நடத்தி வருகிறது. அரசே 20 பள்ளிகள் நடத்துவதோடு, 24 பள்ளிகளுக்கு மானியமும் வழங்குகிறது. உடலூனமுற்றோருக்கான எல்லாப் பள்ளிகளையும் நிர்வகிக்கும் பொறுப்பு 1979-ல் பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து சமூக நலத் துறை இயக்குநருக்கு மாற்றப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள தனிப்பள்ளிகளை மேற்பார்வையிடுவதற்கென இயக்குநர் அலுவலகத்தில், மாவட்டக் கல்வி அதிகாரி பதவித் தரத்தில் மேற்பார்வையாளர் ஒருவர் உள்ளார். இவருக்குத் துணைப் பணியாளர்களும் உண்டு.



தற்போது செயல்பட்டு வருகின்ற தனிப்பள்ளிகளின் விவரம் வருமாறு :—

| பள்ளியின் வகை. | அரசுப் பள்ளிகள். | மானியம் பெறும் பள்ளிகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. பார்வையற்றோர் பள்ளி .. | 10 | 9 |
| 2. செவிடர் பள்ளி .. .. | 9 | 11 |
| 3. முடவர் பள்ளி .. .. .. | .. | 1 |
| 4. சித்த சுவாதீனமற்றோர் பள்ளி. | .. | 1 |
| 5. தொழுநோய் பிடித்தோருக்கான பள்ளி .. .. .. | .. | 1 |
| 6. பயிற்சிப் பள்ளிகள் .. .. | 1 | 1 |
| மொத்தம் .. | 20 | 24 |

9. இவை தவிர, இளம்பிள்ளைவாதம், முடக்கு வாதம் முதலிய நோய்களால் பாதிக்கப்பட்டு, கீழ்க்கண்ட அரசு மருத்துவமனைகளின் முட நீக்கியல் வார்டுகளில் நெடுங்காலமாகச் சிகிச்சை பெற்று வருகின்ற குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிப்பதற்காகத் தனிப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன :—

1. அரசினர் பொது மருத்துவமனை, சென்னை.
2. அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.
3. அரசினர் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.
4. அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.
5. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தஞ்சாவூர்.
6. மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை.
7. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை. திருநெல்வேலி.
8. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.

இப்பள்ளிகள் அனைத்துமே, இந்த மருத்துவமனைகளின், தலைமை அதிகாரிகளின் பொறுப்பில் உள்ளன. இவற்றுக்காகும், செலவை சமூக நலத் துறை ஏற்றுக் கொள்கிறது.

[1981 ஏப்ரல் 14

10. இந்தத் தனிப் பள்ளிகள் மூலம் 1980-81 ஆம் ஆண்டில் 4,275 மாணவர்கள் பயின்றனர். 422 ஆசிரியர்கள் பணியாற்றினர்.

1980-81 ஆம் ஆண்டில் இதற்காக, ரூபாய் 35.35 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 37.51 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

ஆ. படிப்புதவித் தொகைகள்.

11. மத்திய அரசுத் திட்டத்தின்கீழ், 14-40 வயதுத் தொகுதியைச் சேர்ந்த உடலூனமுற்ற நபர்களுக்கு (14-30 வயதுத் தொகுதியினருக்குக் கல்விக்காக; 14—40 வயதுத் தொகுதியினருக்குத் தொழிற்சாலைப் பயிற்சிக்காக) பொதுக் கல்வித் தொழில் நுட்பக் கல்வியைத் தொடரவும், தொழிற்சாலையில் பயிற்சி பெறவும் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. கல்வியைப் பொறுத்து திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 40 முதல் ரூபாய் 125 வரை படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. 1978-79 ஆம் ஆண்டில் 561 பேருக்கு ரூபாய் 3.13 இலட்சமும், 1979-80 ஆம் ஆண்டில் 998 பேருக்கு ரூபாய் 5.65 இலட்சமும், 1980-81 ஆம் ஆண்டில் (1980 டிசம்பர் 31 வரை) 557 பேருக்கு ரூபாய் 3.31 இலட்சமும் படிப்புதவித் தொகையாக வழங்கப் பட்டது.

பதினோராம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட படிப்பும் படிக்கும் உடலூனமுற்ற மாணவர்களுக்குப் படிப்புதவுத் தொகை வழங்கும் பரவலாக்கப்பட்ட திட்டத்தைப் போலவே, 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையில் பயிலும் உடலூனமுற்ற மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்குவதற்கான ஒரு திட்டத்தைச் செயல் படுத்த அரசு உத்தேசித்துள்ளது. 1981-82 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 2.00 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

சித்த சுவாதீனமற்றோருக்கான நிலையங்கள்.

12. சித்த சுவாதீனமற்றவர்களுக்காகத் தற்போது, சில தனியார் நிறுவனங்களே இல்லங்கள் நடத்தி வருகின்றன. இந்த இல்லங்களில் கல்வி கற்பிக்கப்படுவதுடன், வாழ்க்கைத் தொழில் பயிற்சியும், அளிக்கப்படுகிறது. இந்நிறுவனங்கள் மிகவும் அதிக அளவில் கட்டணங்கள் வசூலிக்கின்றன. இதனால், மன நோயினால் பாதிக்கப்பட்டோர் அதிகமாக உள்ள, ஏழை மக்கள் இந்தத் தனியார் நிறுவனங்களில் உள்ள கல்வி, வாழ்க்கைத் தொழில் பயிற்சி வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடிவதில்லை. எனவே, 100 சித்த சுவாதீனமற்றோருக்கென ஒரு நிலையத்தை அரசு நிர்வாகத்தின்கீழ் ஏற்படுத்தக் கருதப் பட்டுள்ளது.



1981 ஏப்ரல் 14]

உடல் ஊனமுற்றோருக்கான வாழ்க்கைத் தொழில் பயிற்சி.

(அ) நவீனப் பயிற்சி—உற்பத்தி பணிமனை, முட்டுக்காடு.

13. இப்பணிமனை, 1975 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் செங்கற்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில் ரூபாய் 30.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது. உருக்குப் பொருள்களின் தயாரிப்பு, வார்ப்புத்தொழில்களில், உடலூனமுற்றோருக்குப் பயிற்சி அளிப்பதே இதன் நோக்கமாகும். இதுவரையில், 3 பிரிவுகளாக, உடலூனமுற்றோர் 77 பேர் பயிற்சி அளிக்கப்பட்டு பணிமனையிலே பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

(ஆ) ஸ்ரீ சேவா மந்திரியில் பயிற்சியளித்தல்.

14. உடல் ஊனமுள்ள மகளிருக்குச் சென்னை-1 இல் உள்ள ஸ்ரீ சேவா மந்திரியில் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, உடைகள் தயாரித்தல், பூத்தையல் வேலை, பொம்மைகள் செய்தல் முதலியவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. உடல் ஊனமுற்ற 58 மகளிருக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கென, பயிற்சியாளர் ஒருவருக்கு அரசு ரூபாய் 75 வழங்குகிறது. உடல் ஊனமுற்ற 25 மகளிருக்கு 1981-82 ஆம் ஆண்டில் உணவு செய்முறை—பாதுகாத்தலில், பயிற்சியளிக்கக் கருதப்படுகிறது. இதற்காக மொத்தம் ரூபாய் 53,500 ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல்.

15. காது கேட்காத குழந்தைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டத்தின்கீழ், காது கேட்காத குழந்தைகளுக்கு நவீன முறையில் கற்பிப்பதற்கு சென்னை செவிடர் பள்ளி (லிட்டில் ப்ளவர் கான்வெண்டு) மூலமாக ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சிக் காலத்தில் பயிற்சியாசிரியர்களுக்கு, அவர்கள் கடைசியாக வாங்கிய சம்பளத்துடன் தனிச் சம்பளம் ரூபாய் 25-ம் சேர்த்து வழங்கப்படுகிறது. இவ்வாண்டில், 14 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக அரசு ரூபாய் 86,590-க்கு அனுமதியளித்துள்ளது.

16. சித்த சுவாதீனமற்ற குழந்தைகளுக்குக் கற்பிப்பதற்காக ஆசிரியர்களிக்குப் பயிற்சியளிக்க ஒவ்வோராண்டும் குழந்தைகள் காப்பகத்திற்கு ரூபாய் 45,600 மானியம் வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலம் ஓராண்டாகும். பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு உதவிச் சம்பளமாக மாதம் ரூபாய் 100 வழங்கப் படுகிறது.

(ஈ) பார்வையற்ற மகளிருக்குத் தொழிற்கூடங்களுடன் கூடிய கூரை வேயப்பட்ட புதுவாழ்வு இல்லம் :

17. பார்வையற்ற மகளிருக்காகச் சென்னையில் புது வாழ்வு இல்லம் ஒன்று, 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் செயலபட்டு வருகிறது. மகளிர் இங்கு தங்கியிருந்து தொழிற் பயிற்சி பெற வசதிகள் உள்ளன. பார்வையிழந்து, வறுமையில் வாடி ஆதரவளிக்க யாருமில்லாத நிலையிலுள்ள மகளிரின் (40 வயதுக்குக் குறைந்த) கல்வித் தகுதி என்னவாயிருப்பினும், அவர்கள் இந்த இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அவர்களுக்கு நெய்தல், சாக்கு தயாரித்தல் முதலிய பல்வேறு தொழில்களில் 6 மாத காலத்திற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன், அவர்களுக்கு அங்கேயே வேலை அளிக்கப் பட்டு, அன்றாடம் அவர்கள் செய்யும் வேலைக்கேற்ப ஊதியம் வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு மாதம் ரூபாய் 50 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகையிலிருந்து அவர்களுடைய உணவுக்கான செலவு செய்யப்படுகிறது. வேலை அளிக்கப்பட்ட 7 ஆம் மாதத்தி லிருந்து உணவுக்காகும் செலவில் பாதியைத் தாங்கள் ஈட்டும் ஊதியத்திலிருந்து கொடுக்க வேண்டும். இந்த இல்லத்தில் 40 பேரைச் சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது, இங்கு பார்வையற்ற மகளிர் 32 பேர் உள்ளனர்.

(உ) வயது வந்த பார்வையற்றோருக்கு கனரகப் பொறியியல் அல்லாத பிற பொறியியல் திட்டம் கிண்டி :—

18, வயது வந்த பார்வையற்றோருக்குக் கனரகப் பொறியியல் அல்லாத பிற பொறியியல் தொழில்களில் பயிற்சியளிக்கும் திட்டம் கிண்டியில் 1967—ஆம் ஆண்டு மேத் திங்கள் 1—ம் நாளிலிருந்து கிண்டியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வயது வந்த பார்வையற்றோரில் பள்ளிக்கல்வியை முடித்தவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் கனரகப் பொறியியல் அல்லாத பிற பொறியியல் தொழில்களில் 6 மாத காலத்திற்குத் தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு இலவசமாக உணவும், தங்குமிடமும் அளிக்கப்படுகின்றன. கைச்செலவுக்காக வாரம் ரூபாய் 2-ம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியிலும் பார்வையற்ற 16 சிறுவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு பயிற்சி யளிக்கப்படுகிறது.

1979-80 ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 1.49 இலட்சம் செலவிடப்பட்டது.

1980-81 ஆம் ஆண்டில் ரூ. 1.48 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டில் 1.62 இலட்சம் ரூபாய் ஒதுக்கக் கருதப் படுகிறது.



(ஊ) பார்வையற்றோருக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வட்டார நிலையம்:

19. பார்வையற்றோருக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் களுக்குப் பயிற்சியளிக்கும் வட்டார நிலையம், 1969 ஆம் ஆண்டில் பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசினர் பள்ளியின் வளாகத்தில் அமைக்கப்பட்டது. மேற்படி பள்ளியின் முதல்வர் பயிற்சி நிலையத்தின் கௌரவ இயக்குநர் ஆவார். நான்கு தென் மாநிலங்களிலிருந்து அந்தந்த அரசுகள் தெரிந்தெடுத்து அனுப்புகிற ஆசிரியர்கள், பார்வையற்றோருக்குக் கல்வி கற்பிப்பதற்காக தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 10 மாதங் களாகும். ஒவ்வொரு தொகுதியிலும் 12 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்கள் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களாகயிருந்தால், பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு உதவித் தொகையாக மாதமொன்றுக்கு ரூபாய் 110-ம், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களாகயிருந்தால் மாதமொன்றுக்கு 25 ரூபாயும் வழங்கப்படுகிறது. இது தவிர, பயிற்சி பெறுபவர் களுக்குப் படிப்புப் படியாக மாதம் 53 ரூபாய் அளிக்கப்படுகிறது.

இதற்காகும் மொத்தச் செலவையும் மத்திய அரசு ஏற்கிறது. 1980—81 ஆம் ஆண்டில் இப்பயிற்சி நிலையத்திற்கு ரூபாய் 48,000 ஒதுக்கப்பட்டது.

(எ) பார்வையற்றோருக்காக பயிற்சி—பணிக்களரி—நெசவு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தல்:

20. பார்வையற்றோருக்காகப் பயிற்சி— பணிக்களரி—நெசவு கூட்டுறவுச் சங்கதலை ஏற்படுத்தும் திட்டத்திற்கு அரசு அனுமதி யளித்துள்ளது. தொடக்கத்தில் ஒவ்வொரு தொகுதியிலும் 30 பேராக நான்கு தொகுதிகளில், பார்வையற்ற 120 பேருக்கு, மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் கட்டுத் துணி, படுக்கை விரிப்புகள், துண்டுகள் முதலியவற்றை நெய்வதில் ஆறு மாதங் களுக்குப் பயிற்சியளிக்கப்படும். பயிற்சி முடிந்தபின், அவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். பின்னர், அவர்கள் தாங்களாகவே வருவாய் ஈட்டத் தொடங்குவர். மதுரையில் ஏற்கெனவே இதுபோன்ற நிலையம் இருப்பதால், இந்நிலையத்தை மதுரையில் அமைப்பதற்குப் பதிலாக சென்னையில் அமைக்க அரசு பரிசீலித்து வருகிறது. இந்நிலையம் செயல்படத் தொடங்குகையில், பார்வையற்ற 120 பேருக்குப் புதுவாழ்வு அளிக்கும்.

உடல் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு அளித்தல்.

(அ) உடல் ஊனமுற்றோர் சிறு கடைகள் அமைப்பதற்கு நிதியுதவி அளித்தல்:

21. உடல் ஊனமுற்றோர் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் சிறு கடைகள் அமைக்க நிதி உதவி அளிக்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் சிறு கடை அமைப்பதற்கு ஆகும் செலவு

1,000 ரூபாய்க்கும் மேற்பட்டால் அவர்களுக்கு வங்கியிலிருந்து கடனுதவியும், அரசின் உதவித் தொகையுமாக 500 ரூபாய் அளிக்கப்படுகிறது. சிறு கடைகள் அமைக்கத் தகுதியான மனைகளும் அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. 1979–80 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் சிறு கடைகள் அமைக்க உடல் ஊனமுற்ற 140 பேருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக அரசு 0.94 இலட்சம் ரூபாய்க்கு அனுமதியளித்துள்ளது; உடல் ஊனமுற்ற 85 பேர் சிறு கடைகளை அமைத்துள்ளனர். இத்திட்டம் 1981–82 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

(ஆ) பயிற்சி பெற்ற உடல் ஊனமுற்றோரை தொழில் பழகுவோராக நியமித்தல்:

22. இத்திட்டத்தின்படி, வேலை வாய்ப்புக்காக தமிழ் நாட்டு வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளவர்களும், பயிற்சி பெற்றவர்களுமான உடல் ஊனமுற்றோர் சுமார் 1,500 பேர் பல்வேறு நிறுவனங்களில் தொழில் பழகுவோராக நியமிக்கப்படுவர். ஓராண்டுக் காலம் தொழில் பழகு பயிற்சியை முடித்தபின் அவர்கள் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுவர். தொழில் பழகும் காலத்தில், ஒவ்வொரு பயிற்சியாளருக்கும், அரசு மாதம் 150 ரூபாய் பயிற்சி உதவித் தொகையாக அளிக்கும். தொழில் பழகும் காலம் முடிந்தவுடன் அத்தொழிற்சாலை அவரைப் பணிக்கு எடுத்துக் கொள்ளும். 1979–80 ஆம் ஆண்டில் 30 பேர் தொழில் பழகுவோராக நியமிக்கப்பட்டனர். 1980–81 ஆம் ஆண்டில் இதற்காக ரூபாய் 3·00 இலட்சம் ஒதுக்கப்பட்டது. பயிற்சி முடித்துள்ள உடல் ஊனமுற்ற 194 பேர் இதுவரை தொழில் பழகுவோராக நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டம் 1981–82 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

(இ) உடல் ஊனமுற்றோருக்காக மதுரையில் புது வாழ்வு வட்டார நிலையம் ஏற்படுத்தல்:

23. 1980–81 ஆம் ஆண்டில் மதுரையில் புது வாழ்வு வட்டார நிலையம் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்காக ரூபாய் 2·92 இலட்சம் வழங்க அனுமதியளித்துள்ளது. இப் புதுவாழ்வு நிலையம், உடல் ஊனமுற்றோர் எவ்வளவு பேர் உள்ளனர் என்பதை திட்டமிட்ட வழியில், அறிவியல் முறையில் மதிப்பிட்டு, ஒவ்வொரு மாதமும் 20 பேருக்கு புது வாழ்வு அளிக்க உதவி செய்யும். இந்நிலையம் விரைவில் செயல் படத் துவங்கும்.



## IV. ஏனைய உதவிகள்.

(அ) உடல் ஊனமுற்றோருக்கு மாநிலக்குழு மூலமாக நிதி உதவி செய்தல்

24. உடல் ஊனமுற்றோரின் நல்வாழ்வுக்காக மாநிலக் குழு ஏற்படுத்தப்பட்டது. தற்போது இக்குழு, சமூக நலத்துறை இயக்குநரின் நிர்வாகப் பொறுப்பில் செயல்படுகிறது. தமிழ் நாட்டில் உடல் ஊனமுற்றோருக்கு நலம் பயக்கும் சில திட்டங்களை இக்குழு செயல்படுத்தி வருகிறது. அரசு, இக் குழுவுக்குத் தனிப்பட்ட மானியமாக ரூ. 1 இலட்சம் அளித்துள்ளது. உடல் ஊனமுற்றோரின் சுய வேலை வாய்ப்புக்காகவும் அவர்களுக்கு உதவி செய்யும் நிறுவனங்களின் பல்வேறு நலப் பணிகளுக்காகவும் மானியம் வழங்க இந்நிதி பயன்படுத்தப் படுகிறது.

(ஆ) மூன்று சக்கர வண்டிகளும், காது கேட்கும் கருவிகளும் வழங்குதல் :

25. வறுமையிலே வாடும் உடல் ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இது வரை 5,000 மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 1980–81 இல் 666 மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்படும். 1981-82 இல் 1,000 மூன்று சக்கர வண்டிகள் வழங்கக் கருதப் படுகிறது. இதற்கென ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்படுகிறது.

காது கேளாவிட்டாலும் கல்வி கற்க வேண்டுமென்ற ஆர்வத்தில் பள்ளிக்குச்செல்லும் குழந்தைகளுக்குக் காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால், அவர்களுடைய பெற்றோரின்/பாதுகாப்பாளரின் வருமானம் ரூ.500-க்கு மேற்படக் கூடாது. இதுவரை 2,325 காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1980-81 இல் 500 காது கேட்கும் கருவிகளை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 1981–82-லும் 500 காது கேட்கும் கருவிகள் வழங்கப்படும். இதற்கென ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்படுகிறது.

(இ) தொண்டு நிறுவனங்களுக்கு மானிய உதவி அளித்தல்:

26. தொண்டு நிறுவனங்கள், உடல் ஊனமுற்றோருக்கு உதவி செய்யவும் அவர்களுடைய நிலையை மேம்படுத்தவும் அரசு நிதியுதவி அளித்துள்ளது. கட்டிடங்கள் கட்டுதல், கருவிகள் வாங்குதல் போன்ற பல்வேறு காரியங்களுக்காக 20 தொண்டு நிறுவனங்களுக்கு இதுவரை ரூ. 3.6 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது,

இளம்பிள்ளை வாதத்தினாலும், முடக்கு வாதத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்கிற சித்த சுவாதீனமற்ற, காது கேட்காத, வாய் பேசாத, பார்வையற்ற, உடல் ஊனமுற்ற குழந்தை

களையும், தொழுநோயால் துன்பப்படும் குழந்தைகளையு தொழுநோயாளியின் குழந்தைகளையும் பராமரிப்பதற்கு மாதம் ஒன்றுக்கு, குழந்தை ஒன்றுக்கு ரூ. 30 என்ற விதத்தில் தொண்டு நிறுவனங்களுக்கு பராமரிப்பு மானியம் அளிக்கப்படுகின்றது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 1.26 இலட்சம் இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) பார்வையற்றோருக்கான எழுத்துமுறை வட்டார அச்சகம் பூவிருந்தவல்லி :

27. பள்ளியில் கற்பிக்கும் பல்வேறு பாடங்களை நான்கு தென் மாநில மொழிகளில் அதாவது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகியவற்றில் எழுத்து முறையில் அச்சிடுவதற்குத் தனி அச்சகம் மத்திய அரசால் 1968—69-இல் ஏற்படுத்தப்பட்டது. இந்த அச்சகம், நான்கு தென் மாநிலங்களுக்குத் தேவையான பார்வையற்றோர் படிப்பதற்குரிய எழுத்து முறையில் அமைந்த புத்தகங்களை அச்சிடுகிறது. இந்த அச்சகம், பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசினர் பள்ளியின் வளாகத்தில் அமைந்துள்ளது. மேற்படி அச்சகத்தைப் பராமரிப்பதற்கான செலவை 1976 வரை மத்திய அரசு ஏற்றது. இந்த வட்டார அச்சகத்தைப் பராமரிப்பதற்காகும் செலவை தற்போது தமிழ் நாடு அரசு ஏற்றுக் கொள்கிறது. இச் செலவை நான்கு தென் மாநிலங்களும் பங்கிட்டுக்கொள்ளும். 1980—81—இல் இதற்காக ரூ 1,50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

1981-82-இல் செயல்படுத்துவதற்கான புதிய திட்டங்கள்.

28. அனைத்து நாடுகள் உடல் ஊனமுற்றோர் ஆண்டில் (1981) ஊனமுற்றோர் நலன் காத்து நல்வாழ்வு அளிப்பதில் அரசு தனிக் கவனம் செலுத்தும். உடல் ஊனமுற்றோர் வாழ்க்கை நலம் பெற துறையில் சிறந்த வல்லுநர்களிடம் கலந்தாய்ந்து பல புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு கல்வி வசதி அளித்தல், வளரும் இளைய தலைமுறையினருக்கும், வயது வந்தோருக்கும், வாழ்க்கை தொழிற் பயிற்சி மற்றும் தொழில் நுட்ப பயிற்சிகள் அளித்தல், வேலை வாய்ப்பு அளித்தல் சுய வேலை வாய்ப்பு நல்குதல், எல்லா மாவட்ட மருத்துவ நிலையங்களிலும் மருத்துவ வசதி அளித்தல் போன்ற திட்டங்கள் அவர்களும் நாட்டு நலனில் புனர் வாழ்வு பெற்று நம்மை போன்று சமமாக ஈடுபட வகை செய்கின்றன.

இத்திட்டங்களுக்காக 1981—82 ஆம் ஆண்டில் ரூ.85.29 இலட்சம் செலவாகும், திட்ட கால முழுவதிற்கும் ரூ. 203·98 இலட்சம் செலவு ஏற்படும்.



உத்தேசிக்கப்பட்ட புதிய திட்டங்கள்

பார்வையற்றோருக்கு இரு அரசினர் பள்ளிகளைப் புதிதாக ஏற்படுத்துதல்.—

29. பார்வையற்றோருக்கு தற்போது அரசு பல்வேறு மாவட்டங்களில் 10 பள்ளிகளை நடத்தி வருகிறது, பார்வையற்றோருக்காக 1981—82 இல் மேலும் இரு பள்ளிகளைப் புதிதாக ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளியிலும் 50 குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுவர். இக் குழந்தைகளுக்கு இலவசமாக உணவும் தங்குமிடமும் அளிக்கப்படும். இப் பள்ளியில் 1 முதல் 5 வகுப்புகள் வரை இருக்கும். 1981-82 இல் ரூ 4·54 இலட்சமும், 1981—85இல் ரூ. 34.00 இலட்சமும் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

காது கேளாதவர்களுக்குப் புதிதாக இரண்டு அரசினர் பள்ளிகளைத் தொடங்குதல்.—

30. காது கேளாதவர்கள் கற்பதற்காக அரசு தற்போது பள்ளிகளை நடத்தி வருகிறது. மேலும் 1981 ஆம் ஆண்டில் இரண்டு பள்ளிகளை தொடங்கக் கருதியுள்ளது. ஒவ்வொரு பள்ளியிலும் 50 மாணவர்கள் இருப்பர். அப்பள்ளியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவும், தங்குவதற்கு இடமும் இலவசமாக வழங்கப்படும். அவர்களது பேச்சை மேம்படுத்திக் கொள்ளவும், அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இப்பள்ளியில் பாலர் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை இருக்கும். 1981—82 ஆம் ஆண்டில் ரூபாய் 5.66 இலட்சமும், 1981—85 ஆம் ஆண்டில் ரூபாய் 37.77 இலட்சமும் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கால் ஊனமுற்றோருக்கு அரசினர் பள்ளி ஒன்று தொடங்குதல்.—

31. கால் ஊனமுற்ற சிறார்களுக்கு அரசினர் பள்ளி ஒன்றைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. கால் ஊனமுற்ற சிறார்களுக்கென்று அரசுப் பள்ளி எதுவும் தற்போது இல்லை. அனைத்து நாட்டு ஏலாமையுற்றோர் ஆண்டையொட்டி இவ்வகைச் சிறாருக்கு சோதனை அடிப்படையில் பள்ளி ஒன்று தொடங்கக் கருதப்பட்டுள்ளது. 1981—82 ஆம் ஆண்டில் ரூபாய் 2.97 இலட்சமும் 1981—85 ஆம் ஆண்டில் ரூபாய் 19.19 இலட்சமும், செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உடம்பின் கீழ்ப்பகுதி பக்க வாத நோய்க் (Para Plegic) கண்டுள்ளவர்களுக்கு 100 சக்கர நாற்காலிகளை இலவசமாக வழங்குதல்—

32. உடம்பின் கீழ்ப்பகுதி பக்கவாத நோய் கண்டுள்ளவர்களுக்கு இலவச சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டமொன்றை செயல்படுத்த அரசு கருதியுள்ளது, 1981—82—ஆம் ஆண்டில்

இவ்வகை ஏழை நோயாளிகளுக்கு 100 சக்கர நாற்காலிகள் வழங்கப்படும். 1980-81-ஆம் ஆண்டிற்கு 50 சக்கர நாற்காலிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 1981-82ஆம் ஆண்டில் ரூபாய் 1.00 இலட்சமும் 1981-85 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1.00 இலட்சமும், 1981-85 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 5.00 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலையில்லாமலுள்ள பார்வையிழந்தோருக்கு வேலையற்றோருக்கு வழங்கப்படும் படியை நீட்டித்தல்.—

33. வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்குத் தற்போது படி வழங்கப்பட்டு வருகிறது. சில அடிப்படைத் தகுதிகளையும், நிபந்தனைகளையும், தளர்த்தி, மாநில வேலை வாய்ப்பகங்களில் தங்களது பெயரைப் பதிவு செய்து கொண்டுள்ள தகுதி பெற்ற பார்வையிழந்தோருக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் கணிசமான அளவுக்கு பார்வையிழந்தோர் பயனடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1981-82-ஆம் ஆண்டில் ரூபாய் 6.00 இலட்சமும், 1981—85-ஆம் ஆண்டில் ரூபாய் 30.00 இலட்சமும் செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது.

பார்வையிழந்தோர் காது கேளாதவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்.—

34. பார்வையிழந்தோர், காது கேளாதவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க தற்போது போதுமான வசதி இல்லை. பார்வையிழந்தோருக்குப் போதிக்கும் ஆசிரியர்களுக்கு பூவிருந்தவல்லியிலுள்ள பார்வையிழந்தோர் பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ள அரசினர் பயிற்சிப் பள்ளியிலும், காது கேளாதவர்களுக்குப் போதிக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு தொண்டு நிறுவனத்திலும், பயிற்சி அளிக்கப்படுகிறது. இப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு வகையிலும் சுமார் 10 ஆசிரியர்கள் பயிற்சி பெறுகிறார்கள். ஒவ்வொரு வகையிலும் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 20 ஆசிரியர்கள் தேவைப் படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக பார்வையிழந்தோருக்கான ஆசிரியர்கள் 20 பேருக்குப் பயிற்சியளிப்பதற்காக பூவிருந்தவல்லி அரசினர் பயிற்சிப் பள்ளியை விரிவுபடுத்தும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. அது போன்றே ஆண்டு ஒன்றுக்கு பயிற்சி பெறும் காது கேளாதோர் ஆசிரியர்களின் எண்ணிக்கையை 14-இலிருந்து 20 ஆக உயர்த்தத் தொண்டு நிறுவனத்திற்கு நிதி உதவி வழங்கப்படும். ஆகும் செலவு நிர்ணயிக்கப்படுகின்ற வரையில் ரூபாய் 1.00 இலட்சம் ஒரு மொத்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



அனைத்து நாட்டு ஊனமுற்றோர் ஆண்டையொட்டி ஊனமுற்றோருக்குச் சமூக மாவட்ட மாநில, அளவிலான போட்டி விளையாட்டுகளை நடத்துதல்.—

35 இவ்வாண்டு, அனைத்து நாட்டு ஊனமுற்றோர் ஆண்டாக இருப்பதால் அது தொடர்பாக 1981 ஆம் ஆண்டில் உடலூனமுற்றோருக்காக மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் போட்டி விளையாட்டுகளை நடத்துவதற்காக ரூபாய் 1.00 இலட்சம் ஒரு மொத்த நிதி ஒதுக்கம் செய்யக் கருதப்பட்டுள்ளன. உடலூனமுற்றோருக்கு அத்தகைய போட்டி விளையாட்டுகளை நடத்துவது அவர்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தும் மேலும் அவர்களிடம் மறைந்துள்ள திறமையைப் பொதுமக்கள் குறிப்பாக தொழிலதிபர் அறிந்து கொள்ள உதவும்.

உடலூனமுற்றோர் பற்றிய கணக்கெடுப்பு.—

36. மாநிலத்திலுள்ள உடலூனமுற்றோர் குறித்து ஆய்வு மேற்கொண்டு கணக்கெடுக்கக் கருதப்பட்டுள்ளது. புள்ளி விவர ஆணையாளர் மூலம் கணக்கெடுப்பு நடத்தப்படும் தற்போதுள்ள களப் பணியாளர்களைக் கொண்டு இக் கணக்கெடுப்பு நடத்தப்படும்.

எழுது பொருள்கள் வகையிலும், புள்ளி விவரங்களைத் தொகுப்பதற்காகப் புள்ளி விவர ஆணையாளர் அலுவலகத்திலுள்ள பணியாளர் வகையிலும் செலவு ஏற்படும். 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 2.00 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிறுவனத்தில் காது கேளாதவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல்.

37. பல்வேறு தொழில்களில் காது கேளாதவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிக்க இயலும் வண்ணம், தற்போதுள்ள தொழில் பயிற்சி நிறுவனத்தில் காது கேளாதவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக தனிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 1.00 இலட்சமும், 1981-85 ஆம் ஆண்டில் ரூபாய் 3.25 இலட்சமும் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கிண்டியில் உரிய வயது வந்த பார்வையிழந்தோருக்காக உள்ள இலேசு ரகப் பொறியியல் திட்டத்தைத் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் தரத்திற்கு உயர்த்துதல்:—

38. கிண்டியில் உரிய வயது வந்த பார்வையிழந்தோருக்காக உள்ள இலேசு ரகப் பொறியியல் திட்டத்தைத் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் மாதிரியில் வலுப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இவ்வாறு தரம் உயர்த்துவதனால் இந்நிலையம் மூலம் பயிற்சி பெறும் பார்வையிழந்தோர் வேலை

வாய்ப்பு பெறுவதற்கான வாய்ப்பு பெருகும். 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 1.06 இலட்சமும் 1981-85ல் ரூ. 6.24 இலட்சமும் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

### வட்டார புதுவாழ்வு நிலையம் அமைத்தல்.

39. சென்னையில் உடலூனமுற்றோருக்கான வாழ்க்கைத் தொழில் பயிற்சி புது வாழ்வு நிலையம் ஒன்றை இந்திய அரசு நடத்தி வருகிறது. அதே போன்று வட்டார புது வாழ்வு நிலைய மொன்றை தமிழ்நாடு அரசு மதுரையில் அமைத்து வருகிறது. இந்நிலையம் அறிவியல் அடிப்படையில் உடலூன முற்றோர் பற்றி மதிப்பிட்டு ஆய்வு செய்து திங்கள் ஒன்றுக்கு 25 உடலூனமுற்றோருக்கு புது வாழ்வு உதவி அளிக்கும். 1981-82-ல் ரூ. 3.18 இலட்சமும் 1981-85-ல் ரூ. 32.34 இலட்சமும் செலவிடக் கருதப் பட்டுள்ளது. இது போன்ற இன்னும் ஒரு நிலையத்தை இம் மாநிலத்தில் 1981-82-ல் அமைக்க அரசு கருதியுள்ளது.

### உடலூனமுற்றோர் அமைக்கவிருக்கும் சிறு தொழில் பிரிவுகளுக்கு மாநில அரசு உதவித் தொகை.

40. அனைத்து நாட்டு ஊனமுற்றோர் ஆண்டை முன்னிட்டு பல உடலூனமுற்றோரின் பொருளாதார வகையிலான மேம் பாட்டுக்கு தனி முயற்சிகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. அனைத்து நாட்டு ஊனமுற்றோர் ஆண்டு நிதி இதற்குப் பயன்படுத்தப்படும். வட்டாரம் ஒன்றுக்கு 10 முதல் 20 பேர் என்ற விதத்தில் இத்தொகை வழங்கப்படும். இத்துடன் உடலூனமுற்றோர் சுயவேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொள் வதற்கு இயலும் பொருட்டு 1981–82-ல் 5.00 இலட்சம் உதவித் தொகையும் ஒதுக்கப்படும். 1981-82-ல் ரூ. 5.00 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

### நல அதிகாரிகள் இருவரையும் துணைப் பணியாளர்களையும் நியமிப்பதன் மூலம் உடலூனமுற்றோர் பிரிவை வலுப்படுத்துதல்.

41. அனைத்து நாட்டு ஊனமுற்றோர் ஆண்டு தொடர்பாக சிறப்புப் பணியை மேற்கொள்வதற்காக 2 நல அதிகாரிகள் பதவிகளுக்கும் துணைப் பணியாளர்களுக்கும் அனுமதி வழங்கக் கருதப்பட்டுள்ளது. 1981-82ல் ரூ 0.44 இலட்சமும் 1981-85ல் ரூ. 1.32 இலட்சமும் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

### பிரச்சாரமும் செய்திப் படங்களைத் தயாரித்தலும்

42. உடலூனமுற்றோரிடம் பொது மக்கள் நாட்டத்தைத் திருப்பவும், அவர்களின் நலன், உயர்வு ஆகிய சம்பந்தப்பட்ட விஷயங்களில் பொதுமக்கள் ஈடுபாடு கொள்ளச் செய்யவும் போதுமான அளவுக்குப் பிரச்சாரம் செய்ய வேண்டியது அவசியம். எனவே, 1981–82ல் செய்தி படம் தயாரிப்பது உட்பட பிரசாரத்திற்காக ரூ. 2.00 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.



### செயற்கை உறுப்புகள் வழங்குவதற்காக இரண்டு புதிய துணை நிலையங்களை ஏற்படுத்துதல்

43. மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளுடன் இணைந்த மேலும் இரண்டு செயற்கை உறுப்புகள் துணை நிலையங்களை ஏற்படுத்த அரசுக் கருதியுள்ளது. இந்நிலையம் கைகால் ஊனமுற்றோருக்கு மருத்துவ ரீதியில் புதுவாழ்வு அளிக்கும். மேலும் இந்நிலையம் கைகால் ஊனமுற்றோர் நடப்பதற்கும் இயலும் வண்ணம் தாங்கு கட்டைகளையும் ஏனைய சாதனங்களையும் தயாரித்து அவர்களுக்கு வழங்கும் இத்திட்டம் மருத்துவக்கல்வி இயக்குநரால் செயல்படுத்தப் படும். இத்திட்டத்திற்கு 1981-82-ல் ரூ. 4.38 இலட்சமும் 1981-85ல் ரூ. 14.12 இலட்சமும் செலவிடக் கருதப் பட்டுள்ளது.

### 3 புதிய செவியியல் பிரிவுகளை அமைத்தல்

44. இம்மாநிலத்திலுள்ள அரசு மருத்துவ மனைகளில் காது மூக்கு, தொண்டை நோய் சிகிச்சைப் பிரிவுகளுடன் இணைந்த 3 புதிய செவியியல் பிரிவுகளை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது இப்பிரிவு, சரியாக காது கேட்காதவர்களை கண்டறிந்து அவர்களின் கேட்கும் சக்தியை மேம்படுத்துவதற்குத் தேவை யான மருத்துவ உதவிகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டம் மருத்துவக் கல்வி இயக்குநரால் நிறைவேற்றப்படும். 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 2.16 இலட்சமும், 1981-85ஆம் ஆண்டில் 5.67 இலட்சமும் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

### குடும்ப—குழந்தை நலம்

45. குறிப்பாக கிராமபுறங்களிலுள்ள பெண்கள், குழந்தை களுக்கான பல்வேறு சத்துணவு சுகாதாரப் பணித் திட்டங்களை அரசு நிறைவேற்றியுள்ளது, குழந்தைகள்-குடும்ப நலன் அதன் மூலமாக மாநிலத்தின் நலனைக் கருத்திற் கொண்டு இத்திட்டங் கள் விரிவுபடுத்தப்பட்டு தீவிரப்படுத்த வேண்டும். இத்திட்டங் களின் விவரங்கள் வருமாறு:

### (அ) குழந்தை நல நிலையங்கள்

46. குழந்தை நலத் திட்டம் 1962 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. மாநில முழுவதிலும் 4613 குழந்தை நல நிலையங் கள் உள்ளன. இவற்றில் 450 நிலையங்கள் ஆதி திராவிட வகுப்பை சேர்ந்த குழந்தைகளுக்காகவும் 130 நிலையங்கள்

பழங்குடியினர் வகுப்புக் குழந்தைகளுக்கும் 25 நிலையங்கள் ஆதிவாசி வகுப்புக் குழந்தைகளுக்கும் 10 பனியர் வகுப்புக் குழந்தைகளுக்கும் 5 நிலையங்கள் ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோர் குழந்தைகளுக்கும் 5 நிலையங்கள் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் குழந்தைகளுக்கும் அமைந்தவை.

47. இந்நிலையங்களில் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் அக்குழந்தைகளுக்கு பள்ளிப் படிப்பிற்கு முந்தைய கல்வியும் அளிக்கப்படுகிறது. 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் டலாகார் சத்துணவுத் திட்ட அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் மூன்று இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டம் ஒவ்வோராண்டும் விரிவு படுத்தப்பட்டு வருகிறது. 1977-78 ஆம் ஆண்டில் 100 குழந்தை நல நிலையங்களும், 1978-79-ல் 150 நிலையங்களும், 1979-80 இல் 200 நிலையங்களும் தொடங்கப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டில் மேலும் 100 நிலையங்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது, ஒவ்வொரு ஊராட்சியிலும் குறைந்தது ஒரு குழந்தை நல நிலையம் தொடங்க வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

பழங்குடியினர் பகுதி (துணைத் திட்டம்)

48. தென்னார்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலை, வடார்க்காடு மாவட்டத்தில் சவ்வாது மலை, சேலம் மாவட்டத்தில் பச்சை மலை கல்ராயன், மருதமலை, தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி மலை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அச்சமலை போன்ற பழங்குடியினர் பகுதிகளில் 1980-81 வரை 139 குழந்தை நல நிலையங்கள் தொடங்கப் பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மொத்தத்தில் சுமார் 5560 பழங்குடியினர் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். 91 குழந்தை நல நிலையங்களுக்கு இட வசதி செய்து கொடுப்பதற்காக 91 கட்டிடங்கள் கட்டுவதற்கு 1980-81 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுப் பணிகள்

49. மத்திய அரசால் வகுக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுப் பணிகள், இம்மாநிலத்தில், சென்னை, தருமபுரி மாவட்டத்தில் தனி வட்டாரம், மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டாரம் ஆகிய தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் 100 அங்கன் வாடிகள் வீதம் தொடங்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட இத்திட்டங்களிலுள்ள குழந்தைகளுக்கு, கூடுதல் சத்துணவு, நோய்த் தடுப்பு, மருத்துவ ஆய்வு, பிற மருத்துவமனைகளிலிருந்து அனுப்பப்பட்டவர்களுக்கான சிகிச்சை



சத்துணவு வழங்கல், சுகாதாரக் கல்வி, பள்ளிக் கல்விக்கு முந்தைய கல்வி போன்ற விரிவான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டங்களில், பெண்களின் பயனுக்கென, செயல்முறைக் கல்வித் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப்பகுதிகளில் சுமார் 30,000 குழந்தைகள் பயனன்கின்றனர். இவை, 1981-82ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும். சென்னையிலுள்ள 100 அங்கன் வாடிகள் ஒவ்வொன்றிலும் ஒன்று என்ற விதத்தில் குழந்தைகள் காப்பகம் அமைக்கவும் கருதப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

குழந்தை நல நிலையக் கட்டிடங்கள்:—

50. கிராமப் புறங்களிலுள்ள குழந்தை நல நிலையங்கள், உள்ளூர் மக்கள் வழங்கிய இடங்களில் நடைபெற்று வருகின்றன. ஆனால் 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன், அரசு 1980-81 வரை 850 கட்டிடங்கள் கட்டியுள்ளது. மேலும் 20 கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. 1981-82 ஆம் ஆண்டிற்கு ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தாய்-சேய் நல்வாழ்வுத் திட்டம் சென்னை நகர மேம்பாட்டுத் திட்டம்):

51. சென்னைநகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தாய்-சேய் நலத் திட்டத்தை உலக வங்கியின் உதவியுடன் சமூக நலத்துறை செயல்படுத்தி வருகிறது.

மேற் குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1. துணைச் சத்துணவு.

2. உடல் நல ஆய்வும் வேறு மருத்துவமனைகளிலிருந்து அனுப்பப்பட்டவர்களுக்கு சிகிச்சை.

3. நோய்த்தடுப்பு

4. சிறுவர்களுக்கு பாலர் கல்வியும், பள்ளிக் கல்விக்கு முந்தைய கல்வியும்,

5. சத்துணவு—சுகாதாரக் கல்வி.

6. செயல்முறைக் கல்வி.

இத்திட்டத்தின்கீழ் வரும் குழந்தை நல நிலையங்கள் மூலம் இப்பணிகள் ஆற்றப்படுகின்றன.

இந்த குழந்தை நல நிலையங்களில் பள்ளி செல்லும் வயதடையா பாலர்கள், சூலுற்ற மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு இயல் மருத்துவப் பிரிவின் மூலம், மருத்துவ அதிகாரிகளும், மருத்துவமனைப் பணியாளரும் சுகாதாரப் பணிகள் ஆற்றுகின்றனர்.

ஒவ்வொரு நிலையத்திலும் பால சேவகி ஒருவர், ஆயாக்கள் இருவர், ஆகியோரைக் கொண்டு 70 குழந்தைகள் பராமரிக்கப் படுகின்றனர். 1977 முதல் 1980 வரையில் 100 நிலையங்கள் தொடங்கப்பட்டன. மேலும் 50 நிலையங்கள் வரையில் தொடங்கப்பட உள்ளன.

கேர் நிறுவனம் இலவசமாக வழங்கும் பாலகாரைக் கொண்டு இத்திட்டத்தின் கீழ் துணைச் சத்துணவு அளிக்கப்படுகிறது. நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 0.45 என்ற விதத்தில் உணவுச் செலவு அல்லாத செலவுகளுக்காக ஒதுக்கப்படுகிறது.

சென்னை நகர மேம்பாட்டுத் திட்டம் II இன் கீழ் 0–5 வயதுத் தொகுதியைச் சேர்ந்த குழந்தைகளுக்கு நான்காண்டுகளிற் படிப்படியாக மேலும் 300 குழந்தை நல நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 1981.82 ஆம் ஆண்டிற்கு ரூ. 37.98 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறப்புச் சத்துணவுத் திட்டம்.

53. பொளாதாரத்தில் நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கும், சூலுற்ற மகளிர்க்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்குவதை நோக்காகக் கொண்டு சிறப்புச் சத்துணவுத் திட்டம் 1970–71 ஆம் ஆண்டில் இருந்து சமூக நலத் துறையினால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 'கேர்' நிறுவனமும், தமிழக அரசும், பாலகார் உணவையும் சாலட் எண்ணெயையும் இலவசமாக வழங்குகின்றன. ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 80 கிராம் பாலகார் உணவும் 7 கிராம் சாலட் எண்ணெயும் ஒதுக்கப்பட்டு அவற்றைக் கொண்டு சமைக்கப்பட்ட உப்புமா, கிச்சடி, பொங்கல் போன்ற உணவுகள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது. சுவைப் பொருள்கள் வாங்குவதற்கும், போக்குவரத்து கட்டணங்களுக்கும், அமைப்பாளர்கள், உதவியாளர்கள், சமையற்காரர், மேற்பார்வையாளர்கள், எழுத்தர்கள் ஆகியோருக்கு கௌரவ ஊதியம் வழங்குவதற்காவும், பயன் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு 6 பைசா என்ற விதத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கு தொடர் மானியம் வழங்கப்படுகிறது. சிறிய சமயலறை கட்டவும், போக்குவரத்திற்காக சாதாரண வண்டிகள் வாங்கவும், பயன் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் ரூ. 5 வீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கு தொடரா இன மானியம் வழங்கப்படுகின்றன.



மருத்துவ ஆலோசனையுடன் கூடிய மாற்றியமைக்கப்பட்ட சிறப்புச் சத்துணவுத் திட்டம்;

54 மருத்துவ வசதியுடன்கூடிய, மாற்றியமைக்கப்பட்ட சிறப்புச் சத்துணவுத் திட்டம், சென்னை, மதுரை கோயம்புத்தூர் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இம் முறையின் கீழ் பயனடைவோருக்கு, வாரம் ஒன்றுக்கு, ஒரு நபருக்கு 700 கிராம் வீதம் பாலகார் வழங்கப்படுகிறது.
பயனடைவோரின் தாய்மார்களின் பொருத்தமான சத்துணவினை தமது இல்லங்களில் தயாரித்து வழங்குவர். இதற்கென, தனியாக நியமிக்கப்பட்ட மருத்துவ பணியாளர்கள், பயன்பெறும் சிறார்களை, குறிப்பிட்ட நாட்களுக்கொருமுறை மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்கின்றார்கள். உள்ளூர் அலுவலர்கள் இத் திட்டத்தைச் செயல்படுத்துகின்றனர் இத்திட்டத்தின் எல்லா நடவடிக்கைகளும் சமூக நலத்துறை இயக்குநர் நிர்வாகத்தின் கீழ்வரும்.

1980–81 ஆம் ஆண்டில் மேற்கூறிய இரண்டு திட்டங்களில் பயனடைந்தவர் எண்ணிக்கை 2,76,530 ஆகும் 1980–81 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட செலவினம் ரூ. 52.6 இலட்சம் ஆகும்.

கைவிடப்பட்ட குழந்தைகளின் நலனுக்காக இந்திய அரசின் திட்டங்கள்:

55. பாதுகாப்பு இல்லங்கள், கைவிடப்பட்ட குழந்தைகளின் பராமரிப்பு இல்லங்கள் நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு மான்யமாக மத்திய அரசு உதவியளிக்கிறது. பராமரிப்புச் செலவினத்தில், 90 சதவீதம் வரை, இவ்வித பராமரிப்பு மான்யம் அளிக்கப்படுகிறது. மேலும் குழந்தைகள் தங்குவதற்கான கட்டிடம் கட்ட ரூ40,600 மான்யம் வழங்கப்படுகிறது. (இது கட்டிடம் கட்ட ஆகும் மொத்த செலவில் 90 விழுக்காடு ஆகும்.) இந்த மான்யத் தொகை அளிக்கும் செலவினத்தை மத்திய மாநில அரசுகள் சமமாக ஏற்கின்றன.

இத் திட்டத்தின் கீழ் இதுவரை, 95 நிறுவனங்களில் 5,275 குழந்தைகள் பயனடைகின்றனர். 1981–82 ஆம் ஆண்டிற்கு ரூ. 63 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அனாதை இல்லங்கள்:

56. 5–லிருந்து 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்காக சென்னை, சேலம், கன்னியாகுமரி, மதுரை ஆகிய இடங்களில் ஒவ்வொன்று வீதம் 4 அனாதை இல்லங்கள் செயல்படுகின்றன.

ஒவ்வொன்றும் 250 குழந்தைகள் தங்கும் வசதி கொண்டவை. அக் குழந்தைகளுக்கு, உணவு, உறையுள், ஆடைகள், மருத்துவ வசதி, கல்வி வசதி ஆகியவை அளிக்கப்படுகின்றன. இந்த அனாதை இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு, இல்லங்களிலேயே 5-ம் நிலை வரை பாடம் கற்பிக்கப்பட்டு, அதற்கு மேற்பட்ட கல்விக்காக அரசுப் பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

மேற்கூறிய நான்கு அனாதை இல்லங்களிலும் இதுவரை 646 குழந்தைகள் சேர்க்கப்பட்டனர். 1980–81 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.83 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகங்கள்: நோட்டுப்புத்தகங்கள் வழங்குதல்:

57. ரூ. 3,000-க்கும் குறைவான ஆண்டு வருமானமுள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் வழங்கும் திட்டம் 1978–79 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. தொடக்கப்பள்ளி பயிலும் குழந்தை ஒன்றுக்கு ரூ. 15 என்ற வீதத்திலும், நடுநிலைப் பள்ளியிலும் குழந்தை ஒன்றுக்கு ரூ. 40 என்ற வீதத்திலும், உயர்நிலைப் பள்ளி பயிலும் குழந்தை ஒன்றுக்கு ரூ. 60 என்ற வீதத்திலும். உதவித் தொகை அளிக்கப்படுகிறது. ஆண்டிற்கு ரூ. 1.00 இலட்சம் இத் திட்டத்தின் கீழ் செலவிடப்படுகிறது. சுமார் 3,000 குழந்தைகள் ஆண்டுதோறும் பயனடைகின்றனர்.

1981–82 ஆம் ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் செலவில், இத் திட்டத்தினை, மேல்நிலைக் கல்வி பயிலும், 100 குழந்தைகளுக்கு, ஒருவருக்கு ரூ. 100 வீதம், விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மகளிர் நலம்:

58. மகளிர் நலனில், குறிப்பாக விதவைகள் ஆதரவற்றவர்கள் பொருளாதார நிலையிலும் சமூக நிலையிலும் பின்தங்கிய மகளிர் நலனில் சிறப்பு நாட்டம் செலுத்தப்பட வேண்டியவர்களுக்கு, தொழிற்கல்வியளித்து சுயவேலை வாய்ப்பு மற்றும் தன்னம்பிக்கைத் திட்டங்களை அளிப்பதே சமூக நலத்துறையில், அரசு செயல்படுத்தும் திட்டங்களின் நோக்கமாகும்.

மகளிர் நலத் திட்டங்கள்:

59. பணி இல்லங்கள்.—18—40 வயதுத் தொகுதியில் வறிய நிலையில் உள்ள விதவைகள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலனுக்காக, இத் துறை தாம்பரம், கடலூர் சேலம், தஞ்சாவூர். திருநெல்வேலி ஆகிய இடங்களில் பணி இல்லங்களை நடத்தி வருகிறது.



8-ம் வகுப்பு வரை புதிய பத்தாம் வகுப்பு குறுகிய காலப் பாடமுறைக் கல்வி கற்பிக்கவும், தையல், பூத்தையல், நெசவு ஆகிய பல்வேறு கைத்தொழில்கள் பயிற்சி அளிப்பதற்கான வசதிகள் இங்கு உள்ளன. இவ்வில்லங்களில் சேர்க்கப்படும் மகளிர் தங்கள் இரண்டு குழந்தைகளுடன், மூன்று ஆண்டுகள் வரை தங்க அனுமதிக்கப்படுகின்றனர். வயது வந்த பெண் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 50 வீதமும் குழந்தை ஒன்றுக்கு மாதம் ரூ. 36—ம் உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

மேலும் வயது வந்த மகளிர் ஒருவருக்கு உடைக்காக ஆண்டு ஒன்றுக்கு 60 ரூபாயும், சிறுவர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு 35 ரூபாயும் கொடுக்கப்படுகின்றது. 6 ஆம் வகுப்பிலிருந்து 8-ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 40 ரூபாயும், 9 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 60 ரூபாயும் இந்த இல்லத்தில் உள்ள மகளிர் குழந்தைகளுக்கு (5-ஆம் வகுப்பு வரை படிப்பவர்கள்) ஆண்டொன்றுக்கு 15 ரூபாயும் புத்தகப் படியாகக் கொடுக்கப்படுகின்றது. தாம்பரம் பணி இல்லத்தில் உடல் ஊனமுற்ற மகளிர், சிறுவர்களுக்காக தனிப்பட்ட பிரிவு ஒன்றும் உள்ளது. மேலும் ஆயத்த உடை தயாரிக்கும் நிலையம் ஒன்றும் 15 தொழிலாளர்களுடன் செயல்பட்டு வருகின்றது.

தாம்பரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள பணி இல்லங்கள் ஒவ்வொன்றிலும் மானியம் பெறும் தொண்டு நிறுவனமான சென்னை ஸ்ரீ செவா மந்திரிலும், 20 பேருக்கு சுருக்கெழுத்து, தட்டச்சு பாடமுறையில் சுருக்கெழுத்து, தட்டச்சு போன்ற தொழில் முறைப் பாடமுறைகள் நான்கு நடத்தப்படுகின்றன. ஓராண்டுப் பயிற்சிக் காலத்தில் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20 பயிற்சி உதவித் தொகையாகக் கொடுக்கப்படுகிறது. இது இந்த ஆண்டிலும் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

பள்ளிகளில் மேல்நிலைப் பாடமுறைகள் செயலுக்கு கொண்டு வரப்பட்டதனால், சோதனை நடைமுறையாக, தாம்பரம் பணி இல்லத்தில் உள்ள 30 பேருக்கு தொகுதி 3 பாடங்களில் இடைநிலைக் கல்வி அளிக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டு உள்ளது 1981–82 வரவு—செலவு திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 40,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இடைநிலை ஆசிரியர் பயிற்சி பாடமுறை பல்லாவரம்:

65. தாம்பரம், பணி இல்லம், மாநில அரசு மானியம் பெறும் தொண்டு நிறுவனங்கள் மூலமாக பள்ளி இறுதித் தேர்வு குறுகிய கால பாடமுறையில் தேறிய வயது வந்த மகளிருக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சியாக இடைநிலை ஆசிரியர் பயிற்சி பாடமுறை நடத்தப்படுகின்றது. ஒவ்வொரு பிரிவிலும் அனுமதிக்கப்பட்ட

எண்ணிக்கையான 40 பேருடன் இளநிலை முதுநிலை பிரிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன. பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு வருக்கும் மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் பயிற்சி உதவித்தொகை யாகக் கொடுக்கப்படுகின்றது.

தட்டச்சில் வாழ்க்கைத் தொழில் பயிற்சி.

61. ஆண்டொன்றுக்கு ரூ. 3,000-க்குக் குறைவாகக் குடும்ப வருமானம் பெறும் 16 முதல் 30 வயதுத் தொகுதியில் உள்ள வறிய மகளிர் 1,000 பேருக்கு தட்டச்சுப் பாடமுறையில் அவர்கள் வாழ்க்கைத் தொழில் பயிற்சியைப் பெறும் பொருட்டு ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 15 என்ற வீதத்தில் 10 மாதங்களுக்கு பயிற்சி உதவித் தொகை கொடுக்கப்படுகின்றது. இத் திட்டத்தின்படி 2,400 மகளிர் இதுவரை பயனடைந் துள்ளனர். இந்த ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

கணக்கு வைப்பிலும் கணக்கியலிலும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி.

62. ஆண்டொன்றுக்கு ரூபாய் 3,000க்கு குறைவாக வருமானம் பெறும் 1,000 வறிய மகளிருக்கு ஒவ்வொருவருக்கும் ரூபாய் 165 என்ற வீதத்தில் கணக்கு வைப்பையும், கணக்கியலையும் கற்றுக் கொள்வதற்காக உதவக் கருதப்பட்டுள்ளது. பயிற்சிக் கால அளவு 6 மாதங்களாகும். இப் பாடமுறைக்கான கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள், புத்தகங்களின் விலை ஆகியவை இந்த மானியத் தொகையில் அடங்கும். கீழ்நிலை தேர்வு எழுதி நல்ல வேலை வாய்ப்பைப் பெறுவதற்காக இத் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. 1981–82-ல் ரூபாய் 1.65 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பணிப்புரியும் மகளிருக்கான இல்லங்கள்

63. சென்னை மாநகரில், கீழ்நிலை, நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பணி மகளிருக்கு தங்குவதற்கும் உணவுக்கும் வசதி செய்து கொடுக்க 1979 வரை ஒரே ஒரு இல்லம்தான் இருந்தது. இதில் 25 பேர் மட்டுமே தங்க அனுமதிக்கப்பட்டனர்.

1980–81-ல் ஒவ்வொரு இல்லத்திலும் 50 பேர் தங்க இயலும் வகையில் ரூபாய் 3.61 இலட்சம் செலவில் பணி மகளிர் இல்லங்கள் ஐந்தினைக் கட்ட அரசு அனுமதித்தது. அனுமதி வழங்கப்பட்ட ஐந்து இல்லங்களில் சென்னையிலும், திருச்சியிலும் உள்ள இல்லங்கள் திறக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடியிலும், தருமபுரி மாவட்டம் ஒசூரிலும், மதுரையிலும் இந்த இல்லங்கள் தொடங்கப்பட உள்ளன.

பணிபுரியும் மகளிருக்கான இல்லங்களை நடத்த தொண்டு நிறுவனங்களுக்குக் கட்டிட மானியம் வழங்கப்படுகிறது. மொத்த மதிப்பீட்டுச் செலவில் 75 சதவீதம் மத்திய அரசு மானியம்,



மொத்தக் கட்டுமானச் செலவில் 15 சதவீதம் மாநில அரசு மானியம் அல்லது ரூபாய் 35,000 இவற்றில் எது குறைவோ அத்தொகையும் வழங்கப்படுகின்றது. இதுவரை 19 நிறுவனங்கள் மத்திய அரசு மானியத்தைப் பெற்றுள்ளன. 14 நிறுவனங்கள் மாநில அரசு மானியத்தைப் பெற்றுள்ளன.

உற்பத்தி பயிற்சி நிலையங்களும், உற்பத்திப் பிரிவுகளும்.

64. கிராமபுறத்தில் உள்ள ஆதரவற்ற மகளிருக்கு ஓராண்டுக்கு தையல், கம்பளி நெசவு, பனை ஓலை, பாய் முடைதல், சமுக்காளம் நெய்தல், மூங்கில் வேலை, பிரம்பு வேலை ஆகிய வற்றில் பயிற்சி அளிப்பதற்காக உற்பத்தி—பயிற்சி நிலையங்களும் உற்பத்தி பிரிவுகளும் நடத்தப்படுகின்றன. அவர்கள் தங்களது குடும்ப வருமானத்தைப் பெருக்க, இப்பயிற்சி அவர்களுக்கு உதவும் போக்குவரத்துச் செலவு, ஏனைய இடை நிகழ்வு செலவு குறித்து பயிற்சிக் காலத்தின்போது ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 30 பயிற்சி உதவி தொகை கொடுக்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் புத்தூர், பெரியார் மாவட்டத்தில் ஈரோடு, தருமபுரி மாவட்டத்தில் ஓசூர் ஆகிய இடங்களில் 1—1—1981 முதல் தையற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப் பட்டன. வடஆற்காடு மாவட்டம் தச்சூரில் பாய்முடையும் நிலையம் ஒன்றும் 1—1—1981 முதல் தொடங்கப்பட்டது.

சமூக நலத்துறை, ஆதி திராவிட–பழங்குடியினர் நலத்துறை, பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை, புதுவாழ்வுத் துறை ஆகிய துறைகளின் நிதிகளைக் கொண்டு சமூக நலத் துறை தற்போது 55 உற்பத்தி—பயிற்சி நிலையங்களையும், 4 உற்பத்தி பிரிவு களையும் நடத்தி வருகின்றது.

"சிறப்புத் திட்டங்கள்"

கிராமப்புற மகளிருக்கு வேலை வாய்ப்பளித்தல்.

65. சுமார் 20,000 கிராமபுற மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான "சிறப்புத் திட்டம்" ஒன்றிற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக 1980-81 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 20.80 இலட்சம் வழங்கப் பட்டது. இத்திட்டங்களின் கீழ் கிராமப்புறங்களிடையே தொழில் கூட்டுறவு அமைப்புகளை அமைப்பதன் மூலம் அவர்கள் பயிற்சியையும், வேலைவாய்ப்பையும் பெறுவர். பயிற்சிக்

காலத்தில் இவர்களுக்குத் திங்களொன்றுக்கு ரூபாய் 50-லிருந்து ரூபாய் 75 வரை கொடுக்கப்படும். இந்த சிறப்புத் திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படவிருக்கின்ற முக்கியமான திட்டங்கள் வருமாறு:—

### தீப்பெட்டித் தொழிற்சாலை.

66. மதுரை, புதுக்கோட்டை, தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இதுவரை 190 தீப்பெட்டித் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் (மகளிர்) நான்கு மத்திய பணிக் கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத் தொழிலில் மொத்தம் 2,560 கிராமப்புற மகளிர் பயிற்சி பெற்று உள்ளனர். மதுரை, புதுக்கோட்டை, தருமபுரி ஆகிய இடங்களில் உள்ள ( தீப்பெட்டித் தொழில் பிரிவுகள் உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளன.

198 -82 ஆம் ஆண்டில் சேலம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் நான்கு மத்திய பணித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும். 1981-82 ஆம் ஆண்டில் இத்தொழில் தொகுதிகள் உற்பத்தி செய்யத் தொடங்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பனைமரப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்.

67. தருமபுரி மாவட்டத்தில் பனை மரப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழிலில் ஏற்கெனவே 250 கிராமபுற மகளிர் பயிற்சி பெற்றுவருகின்றனர். இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக பத்து தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பேடுகள் தயாரித்தல்:

68. 750 மகளிருக்குப் பயிற்சியளித்து வேலை கொடுப்பதற்கு 15 தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கான திட்டமொன்றிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில், 10 சங்கங்கள் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 5 சங்கங்கள் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் இரு சங்கங்கள் ஏற்கெனவே உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டன. எஞ்சியுள்ளவை 1981-82 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும்.

சாக்குக்கட்டி தயாரிக்கும் சங்கங்கள் :

69. தருமபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே ஆறு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, உற்பத்திச் செய்யத் தொடங்கியுள்ளன. மேலும், நான்கு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவை பதிவு செய்யப்படவேண்டும்.



கயிறுத் தயாரிப்புத் தொழில் :

70. தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ. 6.61 இலட்சம் மொத்தச் செலவில் கயிறுத் தயாரிப்புத் தொழில் பயிற்சித் நிறுவனமொன்றை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்குயுள்ளது. கயிறுத் தயாரிப்புத் தொழிற்சாலையில் 100 மகளிருக்குப் பயிற்சி அளிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

தையற்கலை சங்கம் :

71. சென்னை மாநகரில், ரூ. 17,000 செலவில் தையற்கலைக் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்துவதற்கான திட்டமொன்றிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

கிராமத் தொழில் நிலையம் :

72. 1981-82 ஆம் ஆண்டில், மதுரை மாவட்டத்தில் ரூ. 41,000 செலவில் கிராமப்புற மகளிர் 25 பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு கிராமத் துணி நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

இது தவிர. 120 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்க, இராமநாதபுரம், மதுரை, தஞ்சாவூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில்; வண்ணச் சாக்கட்டி தயாரிப்பு மற்றும் மூன்று மெழுகுவர்த்தி தயாரிப்பு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை உற்பத்தியைத் தொடங்கிவிட்டன.

தாயகம் திரும்பிய பெண்களுக்கான தனி இல்லம் :

73. புதுக்கோட்டை மாவட்டத்தில் மாத்தூரில் உள்ள, தாயகம் திரும்பிய பெண்களுக்கான அரசு சிறப்பு இல்லம், முதலில் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டுப்பாட்டின் கீழும், பின்னர் சீர்திருத்தப் பணித்துறை நிர்வாகத்தின் கீழும் இருந்தது. இவ்வில்லம் 1979-ம் ஆண்டில் சமூக நலத்துறை இயக்குநரின் நிர்வாகத்தில் கொண்டு வரப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் பேரில், இவ்வில்லத்தில் மகளிர் சேர்க்கப்படுகின்றனர். ஆதரவற்ற அனைத்து மகளிரும், அவர்களுடைய 5 வயதுக்குக் குறைவான குழந்தைகளும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பர்மாவிலிருந்து அவர்களது கணவர்கள் திரும்பிவரும் வரை அல்லது, இந்த இல்லத்திலிருந்து அழைத்துச் சென்று தங்கள் செலவில் பாதுகாப்பு அளிப்பதாக, அவர்களது உறவினர்கள் எழுத்துமூலம் உறுதியளித்து, அவர்களை அழைத்துச் செல்லும் வரை, அல்லது, அவர்களுக்கு வணிகக் கடன் (அல்லது) வேலை வாய்ப்பு பெற்று அவர்கள் வாழ்க்கையைச் சீரமைத்துக் கொள்ளும் வரை, அவர்கள் இவ்வில்லத்தில் இருக்கலாம்.

14 வயதுடைய மகளிர், பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்க்கான தனி இல்லங்களிலிருந்து, அரசு சிறப்பு இல்லங்களுக்கு மாற்றப்படுகின்றனர். அங்கு எஸ். எஸ். எல். சி. படிப்பு முடியும் வரை அரசு இல்லங்களில் இருக்கலாம்.

இவ்வில்லங்களில் தற்போது உள்ளவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | | |
|---|---|---|
| பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் | .. | 49 |
| ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் | .. | 84 |
| ஆதரவற்ற மகளிர் | .. .. .. .. | 1 |

இந்த இல்லங்களிலுள்ளவர்களுக்கு, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மருந்தகங்கள் மூலம் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.

இவ்வில்லங்களிலுள்ளவர்களுக்கு இலவசமாக உணவும், உறைவிடமும் அளிக்கப்படுகின்றன. இதற்கான செலவு அரசு மானியத்திலிருந்து சரிசெய்யப்படுகிறது. இந்த இல்லத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஜதை ஆடை இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொருவருக்கும் ரூ. 2 மதிப்புடைய எண்ணெய், சோப்பு, சீகைக்காய்தூள் ஆகியவை ஒவ்வொரு மாதமும் வழங்கப்படுகிறது.

மகளிர் அனைவரும் கல்வி பெறுவதற்கு மாத்தூரிலுள்ள தனிப்பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனர்.

இந்த இல்லத்தை நிருவகிப்பதற்கு 1981–82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1.60 இலட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

சமூக நல பிரிவுகள் :

74. சமூக நலத்துறையின் நடவடிக்கைகளுக்கு சமூக நலப் பிரிவுகள் அடிப்படையாக உள்ளன. இம்மாநிலம் முழுவதும் 50 சமூகநலப் பிரிவுகள் இருக்கின்றன.

இச் சமூக நலக் கிளைகளின் பொறுப்பு வகிப்பவர்கள் காலை வேளைகளில் வகுப்புகள் நடத்துகின்றனர். மாலையில் ஒவ்வொரு வீடாகச் சென்று வீட்டுப் பெண்களுக்குக் குடும்பக் கலை சத்துணவு, குழந்தை வளர்ப்பு முதலியன பற்றி கற்பிக்கின்றனர். பெண்களை ஒரு பொது இடத்தில் கூடச் செய்து அவர்களுக்கு தையல், பாய் முடைதல், இலை தைத்தல் போன்ற பயன்தரத்தக்க கலைகளில் பயிற்சி அளிக்கின்றனர்.

பாலர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் 50 சமூக நலக் கிளைகளில் தொடங்கப்பட்டுள்ளது.



முதியோர் கல்வி, சமையற் கலை செய்முறை விளக்கம் போன்றவையும் இக் கிளைகளின் பணிகளில் அடங்கும். இக் கிளைகளின் உறுப்பினர்கள், துணிகள் தைத்து ஊதியம் பெற்றுத் தங்களுடைய குறைந்த குடும்ப வருவாயைப் உயர்த்திக் கொள்கின்றனர்.

தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானியம் அளித்தல்:

75. சேவை இல்லங்களை நடத்த தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானியம் அளிக்கிறது. பின்வரும் தொண்டு நிறுவனங்கள் சேவை இல்லங்களில் உள்ளவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக நபர் ஒன்றுக்கு திங்கள் தோறும் ரூ. 50 வீதம் பயிற்சி உதவித் தொகையை மானியமாகப் பெறுகின்றன. மேலும் ஆசிரியர்களுக்குச் சம்பளம், ஏனைய சில்லறைச் செலவுகளுக்காகவும் ஆண்டொன்றுக்கு ரூ. 450 மானியமாகப் பெறுகின்றன.

1. கஸ்தூரிபா சேவிகாசிரமம், காந்தி கிராமம்,
2. அவ்வை ஆஸ்ரமம், சிவசைலம் (கஸ்தூரிபாய் சேவிகாஸ்ராமத்துடன் இணைக்கப்பட்டது).
3. மதுரை சேவாசிரமம், மதுரை.

மேற்சொன்ன நிறுவனங்கள் ஆதரவற்ற பெண்களுக்காக பள்ளி இறுதித் தேர்விற்கான குறுகிய கால பயிற்சியை அளித்து வருகின்றன.

இதைத் தவிர, சென்னை ஸ்ரீ சேவா மந்திர் என்னும் தொண்டு நிறுவனம், தட்டச்சு, சுருக்கெழுத்து போன்ற பாட பயிற்சிகள் நடத்தி, இப்பயிற்சியளிப்பதற்காக ஆசிரியர்களுக்கான ஊதியம், படிப்புதவித் தொகை, பராமரிப்பிற்கான கட்டணம், ஆகியவற்றை மானியமாகப் பெற்று வருகிறது.

இத்திட்டத்தை, மேலும், பெருமளவுத் தொண்டு நிறுவனங்களில் தொடங்க ஊக்கமளிக்கும் வகையில், புதிய முறை உதவித் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

1981–82 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.22 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமூக நல வாரியத் திட்டங்களுக்கான மானியம்:

76. 1954 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சமூகநல வாரியம், இம்மாநிலத்தில் தொண்டு நிறுவனங்களின் வளர்ச்சி மேம்பாட்டுப் பணிகளில் பெரும் பங்கு வகித்து வருகிறது. மகளிர், 6 வயதுக் குட்பட்ட குழந்தைகள் உடல், ஊனமுற்றோர் ஆகியோரின் நலனுக்காக தொண்டு செய்து வரும் தனியார்

நிறுவனங்களுக்கு வழங்கும் பொருட்டு, மாநில சமூக நல வாரியத் திட்ட அரசு ரூ. 1 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது. கீழ்கண்ட பணிகளில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கே இம்மானியத் தொகை வழங்கப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது.

(1) குழந்தைகள் காப்பகம்.

(2) பாலர் பள்ளிகள்.

(3) குழந்தைகளுக்கான மனமகிழ் மன்றங்கள்.

(4) சிறார்களுக்கான ஆலோசனை நிலையம்.

(5) தாய்-சேய் பராமரிப்பு, சுகாதாரம், சத்துணவு, கலை கைத்திறத் தொழில் ஆகியவற்றில் மகளிருக்குப் பயிற்சி அளித்தல்.

(6) மகப்பேறு, நல்வாழ்வுப் பணிகள்.

(7) மகளிருக்கான மனமகிழ் பணிகள்.

(8) முதியோர் தள்ளாத வயதினருக்கான பணிகள்.

(9) தொழுநோய், எலும்புருக்கு நோயிலிருந்து குணமடைந்தவர்களுக்கான புதுவாழ்வுப் பணிகள்.

(10) உடல் ஊனமுற்றோருக்கான நல்வாழ்வுப் பணிகள்.

(11) மகளிருக்கான எழுத்தறிவிப்புத் திட்டங்கள்.

(12) மகளிர் மன்றங்கள்.

கிராமப்பகுதியிலுள்ள மகளிரை ஒன்று திரட்டி அவர்கள் தங்களிடையேயுள்ள பல்வேறு சமூக பொருளாதார வேறுபாடுகளை மறந்து செயல்புரிய வைக்கும் பொருட்டு, ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் சுமார் 30 மன்றங்கள் வீதம் மொத்தம் 11,220 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மகளிர் மன்றத்தின் பொறுப்பு வகிப்பவருக்கு காலாண்டிற்கு ஒரு முறை ரூ. 15 மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. மகளிர் மன்றங்களின் பல்வேறு நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சமூக நலப் பணி மானியத்தின் கீழ் ஆண்டொன்றிற்கு ரூ. 4,000 செலவிடப்படுகிறது.

மகளிர் மன்றங்கள் மூலமாகப் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

77. பல்வேறு வகையான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் மகளிர் மன்றங்களை ஊக்குவிப்பதற்காக பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறந்த மகளிர் மன்றங்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மகளிர் மன்றங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு சிறந்த மகளிர் மன்றங்களுக்கு ரொக்கப் பரிசாக முறையே ரூ. 1,000



ரூ. 600. ரூ. 400 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1980-81 ஆம் ஆண்டில் 112 ரொக்கப் பரிசுகள் வழங்குவதற்காக ரூ. 66,400 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயலிலிருக்கும்.

மகளிர் மன்றங்களின் முன்னேற்றமும் வளர்ச்சியும்:

78. கிராமப் பகுதிகளிலுள்ள மக்களிடையே சமூக பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளை இம்மகளிர் மன்றங்கள் பெருமளவில் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மகளிர் மன்ற நிர்வாகிகளுக்கு பொருளாதார நடவடிக்கைகளில் பயிற்சியளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. மாநில அளவில், 41 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 225 மகளிர் மன்றங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 6,575 வீதம் இத்திட்டத்திற்காகச் செலவிடப்படுகிறது. அடுத்த ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

ஆதரவற்ற கைம்பெண்களின் மகளிருக்குத் திருமண உதவி:

79. ஆதரவற்ற, கணவனால் கைவிடப்பட்ட, துயரால் வாடும் கைம்பெண்கள் தங்களுடைய பெண் மக்களின் திருமண ஏற்பாடுகளைச் செய்வதற்கு மிகவும் இடர்ப்படுகின்றனர் என்பது பொதுவாகத் தெரிய வந்துள்ளது. ஆகவே, 18 வயது முதல் 30 வயது வரையிலான 100 மணமக்களுக்கு, அதாவது மணப்பெண்ணுக்குச் சேலையும், சட்டையும், திருமாங்கல்யமும், மணமகனுக்கு வேட்டியும், மேலாடையும் வாங்கும் பொருட்டு, 1,000 ரூபாய் திருமணப்படி கொடுப்பதெனக் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1981-82 ஆம் ஆண்டுக்கு ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தையல் இயந்திரம் வழங்குதல்:

80. இத் திட்டத்தின் கீழ், 20 முதல் 40 வரையிலான வயதுடைய ஆதரவற்ற கைம் பெண்கள், சமூக நிலையில் பின்தங்கிய மகளிர், உடல் ஊனமுற்ற மகளிர், ஆடவர் ஆகியோர் தையற்கலையில் பயிற்சி பெற்றிருப்பின், அவர்கள் பிழைப்புக்கு வழிதேடும் பொருட்டுத் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டம், 1975–76 முதல் செயலாக்கப்பட்டு வருகின்றது. இது வரை 5,500 தையல் மிஷின்கள் வழங்கப்பட்டுள்ளன 1980-81 ஆம் ஆண்டில் 100 தையல் இயந்திரங்கள் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது: அவை விரைவில் வழங்கப்படும். இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயலில் இருக்கும்; அதன் பொருட்டு ரூ. 6 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கைம்பெண் மறுமணம்:

81. மறுமணம் செய்துக்கொள்ளும் மணமக்கள் இருவர் பெயரிலும் கூட்டாக, 5,000 ரூபாய்க்கு ஏழாண்டுக்குரிய தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கி ஊக்குவிப்பதன் மூலம் கைம் பெண்களுக்குப் புது வாழ்வு அளிப்பதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத் திட்டத்திற்காக, 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில், ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

துயரால் வாடும் மகளிரின் புது வாழ்வுக்கென பயிற்சி நிலையங்கள் அமைக்கும் திட்டம்:

82. புது வாழ்வு இல்லங்கள் அமைக்கும் பொருட்டு மத்திய அரசு தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உ வி அளித்தது. இதனால் இறுதியில் தம் பிழைப்பதற்கு தாமே வழி தேடுவதற்குரிய கைத்திறத் தொழில் தேர்ச்சி பெற்று மகளிர் பயனடைவர். இத்திட்டம் 1977-78 ஆம் ஆண் டில் தொடங்கப்பட்டது. 31-3-1979 ஆம் நாளுக்கு முன்னர் மத்திய அரசிடமிருந்து மானியமாகப் பெற்று, இந்நிலையங் களுக்காக செய்யப்பட்ட செலவு முழுவதும், மாநிலத் திட்டம் சாராத பணிகளுக்குரிய நிதியிலிருந்து செய்யப்படவேண்டும் என்று, தற்போது மத்திய அரசு தெரிவித்துள்ளது. இது மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது.

83. சென்னை மாநகரிலுள்ள கைம்பெண்கள், அவர் களுடைய குடும்பத்தினர் ஆகியோரின் நலனுக்கென. சமை யலுக்குத் தேவைப்படும் பொருள்களைத் தயாரித்தல், ஏ கம் பெண்கள், ஆதரவற்ற பெண்கள் 15 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, சமையலுக்கு தேவைப்படும் பொருட்கள் தயாரிப்புப் பிரிவு ஒன்று சென்னை மாநகரில் அமைக்கப் பட்டுள்ளது. இதற்கென, 1980-81 ஆம் ஆண்டு ரூ. 60,000 நிதி ஒதுக்கப்பட்டது.

வழிக் காட்டி நிலையம்:

84. 1978 ஆம் ஆண்டில், பின்வரும் இடங்களில். கைம் பெண்கள், ஆதரவற்ற மகளிர் ஆகியோரின் நலனுக்காக, வழிகாட்டி நிலையம் அமைக்க தமிழ்நாடு அரசு உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்துள்ளது.

1. சென்னை மாநகர்.
2. தஞ்சாவூர்.
3. மதுரை.
4. கோயம்புத்தூர்.



இவ்வழிகாட்டி நிலையங்களின் முக்கிய நோக்கங்கள வருமாறு: ஏழைக் கைம்பெண்களின் குழந்தைகள் தொண்டு நிறுவனங்கள் மூலமாக இருப்பிட வசதி, வாழ்க்கைப் பராமரிப்பு வசதி, கல்வி வசதி பெறச் செய்தல்; தொண்டு நிறுவனங்கள் மூலமாகக் கைம்பெண்கள் கல்வியறிவும், வாழ கைத் தொழில் பயிற்சியும் பெற உதவி செய்தல்; கைம்பெண்கள்: இறந்த தம் கணவனுக்குச் சேரவேண்டிய, ஆயுள் ஈட்டுறுதித் தொகை, பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி ஆகிய வற்றைப் பெற உதவி செய்தல்; கைம் பெண்கள் தம் பிழைப் புக்கு வழி தேடும் பொருட்டு, சிறிய அளவில் வியாபாரம் நடத்து வதன் மூலமாக, சுய வேலை வாய்ப்பைத் தாமே அமைத்துக் கொள்வதற்கு, வங்கிகளிடமிருந்து நிதி உதவி பெறும்படிசெய்தல்

நான்கு வழிகாட்டி நிலையங்களும் நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகள், அட்டவணையிடப் பட்ட வங்கிகள், ஆகிய வற்றின் நிதி உதவியுடன் கைம்பெண்களுக்கும் ஆதரவற்ற மகளிருக்கும் சுய வேலைவாய்ப்பு அளிப்பதில் முனைப்புடன் ஆழ்ந்த கவனம் செலுத்தி வருகின்றன. வங்கிகள் அளிக்கும் நிதி உதவி ரூ. 6.5 இலட்சத்துடன் இதுவரை 3,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

85. முதியோர் இல்லங்கள் :—வயது முதிர்ந்த ஆடவரும், பெண்டிரும், (உற்றார், உறவினர் இல்லாதோர்) வயதான காலத்தில் அமைதியான வாழ்க்கை வாழும் பொருட்டு, 1980 ஆம் ஆண்டு டிசம்பரில், திருச்சிராப்பள்ளியில், அரசு, 25 பேர் தங்கு வதற்கேற்ற வசதியுடைய முதியோர் இல்லமொன்றை தொடங்க அனுமதி வழங்கியது. அவ்வில்லத்தில் தங்குவோர், சாப் பாட்டுச் செலவு வகைகளிலும், வாடகைக் கட்டண வகைகளிலும் திங்கள் தோறும் 100 ரூபாய் செலுத்த வேண்டும். திங்கள் ஒன்றுக்கு 350 ரூபாய்க்கும் மிகையான வருமானமுடைய ஆட வரும். பெண்டிரும் இவ்வில்லத்தில் சேருவதற்கு தகுதியுடையவ ராவர். 1980-81 ஆம் ஆண்டிற்கு 47,000 ரூபாய் ஒதுக்க பட்டுள்ளது.

86. பிச்சைக்காரர் இல்லங்கள் :— மேல்பாக்கத்திலுள்ள பிச்சைக்காரர்கள் பராமரிப்பு முகாம், தமிழ்நாடு 1945 ஆம் ஆண்டு பிச்சை எடுத்தல் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளி யெனத் தீர்ப்பளிக்கப்பட்ட பிச்சையெடுப்பவர்களுக்கென்றே நடத்தப்படும் பிச்சைக்காரர் இல்லமாகும். இம்முகாம், 1973 முதல் சமூக நலத் துறையின் பொறுப்பில் உள்ளது. இதில் 770 ஆடவரும், 180 பெண்டிரும் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது; தற்போது இவ்வில்லத்தில் 283 ஆடவரும் 48 பெண்டிரும், உள்ளனர். இவ்வில்லத்தில் தங்கியிருப்போருக் நெசவுத் தொழில், தச்சு வேலை; தையல் தொழில் முதலியவற்றில் பயனுள்ள வாழ்க்கைத் தொழில் பயிற்சி அளிக்கப் படுகிறது. இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயலில் இருக்கும்; 1981-82 ஆம் ஆண்டுக்கென ரூ. 7.02 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஆதரவற்ற கைம் பெண்களின் பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு உதவியளிக்கும் திட்டம் :**

87. ஆண்டு வருமானம் 3,000 ரூபாய்க்கும் குறைவாக உள்ள ஆதரவற்ற கைம் பெண்களின் பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு, அவர்கள் உயர்நிலைப் பள்ளியில் படிப்பை முடிக்கும் வரையில், இலவசமாகப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும், வழங்கும் திட்டம் 1978-79 ஆம் ஆண்டு முதல் செயலாக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் பள்ளி செல்லும் பிள்ளைகள் 3,000 பேர் பயனடைகின்றனர்.

இத்திட்டத்தின் பயனை மேலே குறிப்பட்ட ஆதரவற்ற கைம் பெண்களின் மேல் நிலைப் பள்ளிப் படிப்பு பயிலும் பிள்ளைகளுக்கும் வழங்கக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயனை மேல் நிலைப் பள்ளிப் படிப்பு பயிலும் பிள்ளைகளுக்கும் வழங்குவதால். கைம் பெண்களின் மக்களில் மேலும் 1000 பேர் பயனடையக் கூடும். இத்திட்டத்திற்கென, 1981-82 ஆம் ஆண்டிற்கு அரசு ரூ. 1.00 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

**முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டம்:**

88. பிழைப்புக்கு வழியற்ற, ஆதரவளிக்க உற்றார் உறவினர் யாருமில்லாத வயது முதிர்ந்தவர்களின் துயர் தீர்க்கும் பொருட்டு அரசு, சமூகப் பாதுகாப்பு நடவடிக்கையாக, 1—4—1962 முதல் இத்திட்டத்தைச் செயலாக்கியது. இத்திட்டத்தின் படி, 65 வயதுடையவருக்கும், அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற முதியோருக்கும், 45 வயதுடைய அதற்கு மேற்பட்ட வயதுடைய உடல் ஊனமுற்ற, ஆதரவற்ற முதியோருக்கும் 40 வயதுடைய அதற்கு மேற் பட்ட வயதுடைய ஆதரவற்ற கைம் பெண்களுக்கும், வயது முதிர்வு உதவித் தொகையாகத் திங்கள் ஒன்றுக்கு 25 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆயின், இரு கண்ணும் தெரியாதவர்களுக்கு வயது வரம்பு ஏதுமில்லை.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட அளவிலான குழுக்களையும் அரசு அமைத்துள்ளது. இக்குழுக்களில், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட மருத்துவ அதிகாரி மாவட்ட சமூக நல அதிகாரி, ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுக்கள், உடல் ஊன முற்றோர் அனுப்பும் விண்ணப்பங்களை ஆய்வுசெய்து, அவ்விண்ணப்பதாரர்களின் வயது குறித்த விதிகளைக் கருதிப்பாராது, ஒவ்வொரு விண்ணப்பதாரரின் இடர்ப்பாட்டை மட்டுமே கருதிப்பார்த்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்க அனுமதிக்கும்.

முதியோர் உதவித் தொகைத் திட்டம் என்பதன் கீழ் திங்கள் ஒன்றுக்கு ரொக்கமாக 25 ரூபாய் வழங்குவதோடு, ஆண்டொன்றுக்கு இருமுறை இவ்வுதவித் தொகை பெறுவோருக்கு சேலை



கள், வேட்டிகள் ஆகியவையும் ஒரு வாரத்துக்கு ஒருவருக்கு 1 கிலோ நேர்த்தியான அரிசியும் இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும், எப்பணியும் புரிய இயலாதோரும் 60 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் ஆனவருமான ஆதரவற்ற வேளாண்தொழிலாளர்களுக்கும் உதவித் தொகை வழங்க இயலும் வண்ணம் இத்திட்டத்தை இவ்வரசு 1980 ஆம் நிதியாண்டில் அவர்களுக்கும் நீட்டித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரையில், உடல் ஊனமுறாதோர், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற கைம் பெண்கள் ஆகியோர் அடங்கிய 1,51,234 பேருக்கு முதியோர் உதவித் தொகை வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படும் ஒரு திட்டமானதால், மாவட்டங்களில் இவ்வுதவித் தொகையைப் பெறத் தகுதியுடையோர் கண்டறியப்படுவதை பொறுத்து, அவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஒப்புதல் அளிக்கும்.

**தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம்.**

(உலக வங்கி நிதி உதவியுடன்)

89. தமிழ்நாட்டில் அரசு மேற்கொண்டுள்ள சத்துணவுத் திட்ட மேம்பாட்டு முயற்சிகள் திறம்பட பல இடங்களுக்கும் நல்ல பயனளிக்கவல்லதாகச் செய்யும் பொருட்டு தெரிந்தெடுக்கப் பட்ட ஆறு மாவட்டங்களில் (மதுரை, செங்கற்பட்டு, வடஆற்காடு, இராமநாதபுரம், திருநெல்வேலி; புதுக்கோட்டை) உலக வங்கியின் நிதி உதவி பெறும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவு திட்டம் செயலாக்கப்படுகிறது சத்துணவைப் பொறுத்தமட்டில் மிக மோசமான நிலையிலுள்ள 6 முதல் 36 மாதம் வரையிலான குழந்தைகளுக்கு, முறைப்படி, ஆழ்ந்த கவனத்துடன், சத்துணவு வழங்குவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும். மேலும், சத்துணவு அதிகம் தேவைப்படும் சூலுற்ற மகளிருக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும், பள்ளி செல்லவிருக்கும் பாலர்களுக்கும், சத்துணவின் முக்கியத்துவம், சத்துணவின் தரம், சத்துணவு தொடர்பான பணிகள் இவர்களைச் சென்றடையும் வழிகள் ஆகியவற்றையும் இத்திட்டம் மேம்படுத்தும்.

இத்திட்டம் முதலாண்டில், மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டி வளர்ச்சி வட்டாரத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ. 55.78 கோடியாகும்.

இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவு இத்திட்டத்தின் பல்வேறு அம்சங்களுக்குரிய செலவு வாரியாகக் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

| திட்டத்தின் பல்வகை அம்சங்கள். | | ரூபாய். (கோடியில்) |
|---|---|---|
| 1. சத்துணவு வழங்கும் பணிகள் | .. | 25.87 |
| 2. கிராமச் சுகாதாரப் பணிகள் | .. | 24.40 |
| 3. சத்துணவு பற்றித் தெரிவித்தல் | .. | 3.29 |
| 4. கண்காணித்தலும் மதிப்பீடுதலும் | .. | 1.08 |
| 5. திட்ட ஒருங்கிணைப்பு | .. | 1.14 |
| மொத்தம் | .. | 55.78 |

இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ரூ. 55.78 கோடியில் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனத் திட்டம் கடன் உதவி ரூ. 26.88 கோடியாகும். இது, இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவில் தோராயமாக 50 சதவீதமாகும்.

இத்திட்டம் மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டி வட்டாரத்தில் 16-11-1980 முதற்கொண்டு செயல்படத் தொடங்கியது. இவ்வளர்ச்சி வட்டாரத்தில் 66 சமுதாயச் சத்துணவு நிலையங்களும், 20 சுகாதாரத் துணை நிலையங்களும் உள்ளன.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு, மதுரை மாவட்டத்திலுள்ள எஞ்சிய 32 வளர்ச்சி வட்டாரங்களையும் எடுத்துக் கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் இரண்டாம் ஆண்டின் தொடக்க நடவடிக்கைகளில் பின்வருவன அடங்கும்; அதாவது, இத்திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணியில் இரண்டாம் ஆண்டுக்கென சத்துணவுத் திட்டப் பணியாளர்களையும் சுகாதாரப் பணியாளர்களையும் தெரிந்தெடுத்தல், அவர்களுக்குப் பயிற்சி அளித்தல், மதுரை மாவட்டத்தில் 365 சுகாதாரத் துணை நிலையங்களை அமைப்பதற்குரிய இடத்தைத் தெரிந்தெடுத்தல், எடை காட்டும் கருவி உட்பட பிற கருவிகளைக் கொள்முதல் செய்தல், துணைச் சத்துணவு தயாரித்தல், சத்துணவு பிரச்சாரம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், கண்காணிப்பு முறையை, ஏற்படுத்துவது தொடர்பான பணிகள், சிறப்பாய்வு பற்றித் திட்டமிடுதலும், ஆய்வு செய்தலும், இரண்டாம் ஆண்டுக்கென விவரமான செயலாக்க அட்டவணையைத் தயாரித்தல் முதலியன.

சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணித்துறை.

90. சமூகத்திலும், பொருளாதாரத்திலும் கீழ் நிலையிலுள்ள எண்ணற்ற மக்களின் நலன்களை மேம்படுத்துவதிலும், அவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டுவருவதிலும், தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது.



அரசினராலும், அரசு மானியம் பெறும் தனியார் நிறுவனங்களாலும் எண்ணற்ற சமூக நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அரசினரின் நேரடிப் பொறுப்பிலிருக்கும் சீர்திருத்தப் பணித்துறை, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் தவறிழைத்ததாகக் கருதப்படும் இளங்குற்றவாளிகளையும் 1956 ஆம் ஆண்டு பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறுமிகள் மற்றும் பெண்களின் பொறுப்பினை ஏற்று அவர்களின் நலனுக்காகச் செயல்படுகின்றது.

நிறுவன அமைப்பு:

91. சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் விழிப்புப் பணித்துறை இயக்குநர், இத்துறையின் தலைவராவார். இவரது தலைமை அலுவலகம் சென்னை மாநகரில் உள்ளது. இவர் சீர்திருத்தப் பள்ளிகள், வரவேற்பு இல்லங்கள் மகளிர் காப்பகங்கள் மீட்பு மனைகள் முதலியவற்றையும் நிர்வகித்து வருகிறார். மாநில அளவில் பயணங்கள் மேற்கொண்டு, துறை மற்றும் தனியார் நிறுவனங்களின் ஆண்டு ஆய்வையும் மற்றும் திடீர் ஆய்வுகளையும் நடத்தி அவற்றின் நடைமுறைகளைக் கண்காணித்தும் வருகின்றார்.

இயக்குநரின் நிர்வாகப் பணிகளுக்கு இரு உதவி இயக்குநர்கள் மற்றும் ஒரு நேர்முக உதவியாளர் பணி புரிகின்றனர்.

தலைமை அலுவலகத்தில் இயக்குநருக்கு அலுவலகப் பணிகளில் நேர்முக உதவியாளர் உதவியாய் இருக்கின்றார். தென் மாவட்டங்களில் உள்ள சார்நிலை அலுவலகங்களின் நேரடி மேற்பார்வைக்கென, இத்துறையின் வட்டார அலுவலகம் ஒன்று மதுரையில் துவக்கப்பட்டுள்ளது. ஓர் உதவி இயக்குநர் அங்கு பொறுப்பில் உள்ளார். இப்பதவி துணை இயக்குநர் பதவியாக உயர்த்தப்பட்டுள்ளது. மற்றுமோர் உதவி இயக்குநர், தொழிற் கல்வி பயிற்சி திட்டங்களின் பொறுப்பினை ஏற்று இயக்குநருக்கு தொழில் நுட்ப அலுவலராக சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் பணிபுரிகிறார்.

தமிழ்நாடு குழந்தைகள் சட்டம்:

92. 1920 ஆம் ஆண்டின் குழந்தைகள் சட்டத்தின்கீழ் இம் மாநிலத்தில் 22 சீர்திருத்தப் பள்ளிகள் (நீண்டகால வரையறை நிலையங்கள்) இயங்கி வருகின்றன. இவற்றுள் 8 பள்ளிகள் அரசினராலும் 14 பள்ளிகள் அரசு மானியம் பெறும் தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன.

முழு மனவளர்ச்சி இல்லாத அல்லது மனவளர்ச்சி குன்றிய சிறார்களை தனியார் நிறுவனமான பாலவிஹார் கீழ்ப்பாக்கம், இளநிலை சீர்திருத்தப் பள்ளியும், மகாபோதி நிறுவனம் நடத்தும் உடல் ஊனமுற்ற சிறார் பள்ளியும் பொறுப்பேற்று பயிற்றுவிக்கின்றன.

மாநில அளவில் 13 வரவேற்பு இல்லங்கள் (குறுகியகால வரையறை) உள்ளன. விசாரணைக்குட்படும் சிறுவர் சிறுமியர்களைச் சேர்த்து அவர்களை நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு அனுப்பப்படுகின்றனர். பின்னர் இவர்கள் சீர்திருத்தப் பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். மேற்குறிப்பிட்ட 1. இல்லங்களில் 7 வரவேற்பு இல்லங்கள் அரசினராலும், எஞ்சியவை குழந்தைகள் பாதுகாப்புச் சங்கம், விடுதலைப்பெற்ற கைதிகள் உதவிச் சங்கம், அரசினரின் மானியம் பெறும் பிற தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றால் நடத்தப்பட்டு வருகின்றன.

1956 ம் ஆண்டு மகளிர் சிறுமிகள் பரத்தமைத் தடுப்புச் சட்டம்.

93. 1956ம் ஆண்டு பெண்டிர் மகளிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மூன்று (நீண்டகால வரையறை) மகளிர் காப்பகங்கள்; மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக கருதப்படும் மகளிர் மற்றும் பெண்களுக்கு புகலிடம் தந்து அவர்களுக்கு கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிற்சிகளை அளித்து வருகின்றன. சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்கிவரும் (குறுகிய கால வரையறை) மீட்பு மனைகள், நீண்டகால வரையறை அரசினர் காப்பகங்களாக மாற்றியமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன.

மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் பாதுகாப்பு கருதி தாமே முன் வந்து சேரும் மகளிரையும், பெண்களையும் சேர்த்துக்கொள்கின்றன.

இவற்றைத் தவிர குறுகியகால வரையறை கொண்ட ஆறு மீட்பு மனைகள் மேற்படி சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் என விசாரணைக்குட்படுத்தப்படும், சிறுமிகளையும், பெண்களையும் ஏற்று அவர்களை விசாரணை முடியும்வரை பராமரிக்கின்றன. மகளிரை அனுப்பி வைப்பதற்குரிய இல்லங்களாக மகளிர் காப்பகங்கள் செயல்படுகின்றன.

பிற்காப்புத் திட்டங்கள்

94. சட்டங்களின்படி அமைந்த சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் காப்பகங்களைத் தவிர்த்து மேற்படி நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறிய முன்னாள் இல்லவாசிகளுக்கென மூன்று பிற்காப்பு இல்லங்கள் செயலாற்றி வருகின்றன. இவற்றுள் இரண்டு சிறார்களுக்காகவும் ஓர் இல்லம் மகளிர் மற்றும் பெண்களுக்காகவும் அமைந்துள்ளன. பெண்களுக்கான இல்லம் வேலூரிலும், மாணவர்களுக்கான இல்லங்கள் மதுரை மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூரிலும் அமைந்துள்ளன. இவ்வில்லங்கள் சீர்திருத்த இல்லங்களிலிருந்து பயிற்சி காலம் முடிவுற்று வெளியேறும் ஆதரவற்ற சிறுவர் சிறுமியர் மற்றும், சிறைக்காவலிலிருந்து விடுவிக்கப்படும் பெண்களின் வாழ்க்கைக்குத் தேவையான



தொழிற் கல்வி பயிற்சியினை அளிக்கின்றன. இவற்றைத் தவிர வடாற்காடு மாவட்டம் வேலூரில் அமைந்துள்ள பெண்கள் பிற்காப்பு இல்லத்துடன் ஆடைகள் மற்றும் ஹோல்டால்கள் செய்யும் பயிற்சி நிலையம் இணைக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

கல்வி.

95. சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் விழிப்புப் பணித்துறையின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் அனைத்துமே தமிழ்நாடு கல்வி விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களாகும். எல்லாப் பள்ளிகளிலும் 8 ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கப்படுகின்றது. செங்கல்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளியில் மேல் நிலைக் கல்வி வரை மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

தொழிற்கல்வி

96. கீழ்க்குறிப்பிட்டுள்ள வருவாய் பயக்கும் தொழிற் கல்வி பயிற்சிகள் சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் விழிப்புப் பணித்துறை நிறுவனங்களில் கற்பிக்கப்படுகின்றன. இதனால், இவ்வில்லவாசிகள் பயனடைவதுடன் அவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கும் பணியும் இலகுவாகிறது.

சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் மகளிர் காப்பகங்கள்

(1) தச்சு வேலை.

(2) தையல் மற்றும் பூ வேலை

(3) நெசவு

(4) பாய் நெசவு

(5) கருமார்பணி

(6) உலோகப் பணி

(7) தோட்டம் மற்றும் வேளாண்மை

(8) கொத்து வேலை

(9) புத்தகம் கட்டுதல்

(10) இசைக் கருவி இசைத்தல்

(11) மாட்டுப் பண்ணை

பிற்காப்பு இல்லங்கள்

(12) புத்தகம் கட்டுதல்

(13) கருமார் பணி

(14) தையல் வேலை

மேற் கூறிய தொழிற் பேட்டைகளில் சென்னை அரசினர் பெண்கள் சீர்திருத்தப் பள்ளி மற்றும் தஞ்சாவூர் அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளி ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள தையற் கூடங்களும், செங்கல்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள தச்சு தொழிற் கூடமும் இயந்திரச் சாதனங்கள் அமைக்கப்பட்டு அப்பிரிவுகளில் பயிலும் மாணவர்கள் நவீன இயந்திரங்களைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்கவும் பயிற்றுவிக்கப்படுகின்றனர். நவீன இயந்திரங்களில் பணி புரிவதன் மூலம் அவர்கள் விடுதலை பெற்றுச் சென்ற பின்னர் தனியார் நிறுவனங்களில் வேலை பெற அதிக வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

**இளம் குற்றவாளிகள் வழிக்காட்டி நிலையம்**

97. சென்னை, மதுரை, வேலூர் ஆகிய மூன்று இடங்களில் இளங் குற்றவாளிகளுக்கான வழிக்காட்டி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் இளைஞர்க்கான நீதிமன்றங்கள் தனியார் நிறுவனங்கள் அனுப்பும் இளைஞர்களின் மன நிலையை ஆராய்ந்து அவர்கள் பற்றிய மனவியல் விவரங்கள் அளிக்கின்றன. இதனைத்தவிர இந் நிலையங்களில் சிறார்களின் குற்றவியல் தன்மை பற்றி ஆய்வு நடத்தி அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன அருகில் இருக்கும் வரவேற்பு இல்லங்களின் கோரிக்கைகளை இந்நிலையங்கள் ஏற்கின்றன. செயற்குழு உறுப்பினர்கள் கடத்தினாலும் இவ்வில்லங்களுக்காகும் செலவு முழுவதும் அரசு ஏற்கிறது.

**வரவு செலவு மதிப்பீடு**

98. இத்துறையின் நடப்பாண்டின் வரவு செலவு மதிப்பீடு ரூ. 126.64 லட்சம் இதில் ஊழியர் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுடன் தனியார் நிறுவனங்களுக்கு உதவிமானியமாக வழங்கப்படும் ரூ. 11,07 லட்சமும் அடங்கும்.

**வரவினங்கள்**

99. 1981-82 ல் எதிர்பார்க்கப்படும் வரவினங்கள் பற்றிய விவரம் வருமாறு:

| | | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சீர்திருத்தப் பள்ளிகளின் உற்பத்தி பொருட்கள் விற்பனை மூலம் .. | 4.00 |
| 2 | இதர பலவகை வரவினம் .. .. | 2.00 |
| 3 | மகளிர் காப்பகங்கள் மூலம் .. .. | 0.30 |
| 4 | பிற்காப்பு இல்லங்கள் மூலம் .. .. | 0.55 |
| | மொத்தம் .. | 6.85 |



**புதிய திட்டங்கள்**

100. 1981-82-ம் ஆண்டின் இரண்டாம் பகுதி திட்ட வேலைகளாக அங்கீகரிக்கப்பட்ட பணித் திட்டங்கள் வருமாறு:

| | திட்டம். | மதிப்பீடு (ரூபாய் (லட்சத்தில்). |
|---|---|---|
| 1 | தஞ்சாவூர் மற்றும் இராணிபேட்டை அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளியில் உள்ள தச்சுத் தொழிற் கூடங்களை இயந்திரமாக மாற்றுதல் .. | 8.17 |
| 2 | சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் மின் விசை சலவை தொழிலகம் ஒன்று துவங்குதல் .. .. .. | 5.50 |
| | மொத்தம் .. | 13.67 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1981 ஏப்ரல் 15.

சித்திரை 3, துன்மதி --திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

''பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.''

ஒரு செயலைச் செய்யத் தொடங்கும்போது, அதற்கு வேண்டிய பொருள், அதற்கு ஏற்ற கருவி, பொருத்தமான காலம், செய்வதற்கு உகந்த முறை ஆகிய இந்த ஐந்தையும் மயக்கம் தீர எண்ணிப்பார்த்துபின்பு அந்தச் செயலைச் செய்ய வேண்டும்.

## I. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தமிழ்நாடு பணியாளர் தேர்வுக் குழுவினால் தேர்வு செய்யப்பெற்றோர்.

*வினா எண். 754-அ---திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு பணியாளர் தேர்வுக் குழுவினால் நடத்தப் பெற்ற தேர்வில் தேர்வுபெற்ற சுமார் 4,000 பேருக்கு 8 மாதமாகியும் வேலைக்குரிய உத்திரவு பிறப்பிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) பல்லாண்டுக் காலம் தற்காலிகமாகப் பணிபுரிந்தவர்களை நிரந்தரப் பணியமர்த்துமுகத்தான் டிசம்பர் திங்கள் 1977 ஆம் ஆண்டு தேர்வாணைக் குழு மூலம் நடத்தப்பெற்ற சிறப்புத் தேர்வில் 4,493 பேர் அமைச்சுப் பணி, 910 பேர் செயலகப் பணிக்குமாக, இந்நிலைகளில் நடந்த இத் தேர்வில் தற்போது

தலைமைச் செயலகப் பணியே வேண்டுமென்று விரும்பிக் காத்திருக்கும் 169 பேரைத் தவிர மற்ற அனைவருக்கும் நியமன உத்திரவுகள் வழங்கப்பட்டுவிட்டன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, மாண்பு மிகு அமைச்சரவர்கள் அறிவித்துள்ளபடி பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறவர்கள் எல்லாம் பெர்மனண்டாக வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்களா ? மேலும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இன்னும் வேலையில் அமர்த்தப்படவில்லை என்று அறிவித்தார்கள். வேலைகள் காலி இருப்பதாகவும் சொன்னார்கள். அதே நேரத்தில் ஏற்கனவே பல இடங்களில் வேலை பார்த்து வந்தவர்கள்தான் சர்வீஸ் கமிஷன் எழுதி தேர்வுபெற்று வந்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கெல்லாம் உடனடியாக வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, தற்காலிகமாக வேலை பார்த்து, பிறகு வேலை பெறாமல் இருந்தவர்களுக்கு என்று சர்வீஸ் கமிஷன் மூலம் ஒரு சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டது. அதில் அமைச்சுப் பணியைச் சேர்ந்தவர்களும், தலைமைச் செயலகப் பணியைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டார்கள். அமைச்சுப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 4,493 பேர்களும் நிரந்தரமாக பணியில் அமர்த்தப்பட்டுவிட்டார்கள். தலைமைச் செயலகப் பணிக்கு தேர்வு செய்யப்பட்ட 910 பேர்களில் 348 பேர்கள் தலைமைச் செயலகப் பணியில் அமர்த்தப்பட்டுவிட்டார்கள். தலைமைச் செயலகப் பணியில் ஆண்டுக்கு 120 முதல் 140 இடங்களே காலி ஏற்படக்கூடும். காலி ஏற்படும்போதுதான் மீதமுள்ளவர்களையும் அமர்த்த முடியும். ஆகையால் பணிக்கு அமர்த்தப் படாதவர்களை அமைச்சுப் பணியில் இடம் காலி இருக்கிறது; அதில் சேர விருப்பமா என்று கேட்டதில் 342 பேர் அந்த வேலை கொடுத்தாலும் போகிறோம் என்று சொல்லி, போய்விட்டார்கள். 169 பேர்கள் மட்டும் தலைமைச் செயலகத்தில்தான் வேலை கொடுக்க வேண்டும்; வேலை காலி ஏற்படும்போது பெற்றுக் கொள்கிறோம் என்று சொல்லி, காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, காலி ஏற்படும்போது அந்த இடத்தில் அவர்கள் அமர்த்தப் படுவார்கள்.

திரு. எம். ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, அமைச்சுப் பணியில் இடம் காலி இருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் காலியாக இருக்கும் இடத்தில், தேர்வு செய்யப்பட்டு வேலை இல்லாமல் இருப்பவர்கள் தாங்களே முன்வந்து அந்த இடத்துக்குப் போவதாக ஒப்புக்கொண்டால் அவர்களுக்கு அங்கே நிரந்தரமாக வேலை கொடுக்க அரசு முன்வருமா ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர்களுக்கும் சேர்த்துத்தான் விருப்பம் கேட்கப்பட்டது. ஆனால் 342 பேர்கள். அமைச்சுப் பணி காலியாக இருந்தால் அங்கே போகிறோம் என்று சொன்னதால் அவர்கள் அமைச்சுப் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். 169 பேர் தலைமைச் செயலகத்தில் பணி காலி ஏற்படுகின்றபோது செல்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் வேறு பணியில் சேருவதற்கு முன் வந்தால் அவர்களை அமைச்சுப் பணிகளில் காலியிடங்கள் ஏறபடுகின்றபோது சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் தலைமைச் செயலகத்தில்தான் சேருவோம் என்று சொல்கின்றபோது இங்கே காலியிடம் ஏற்படுகின்றபோதுதான் அவர்களை சேர்த்துக்கொள்கின்ற சூழ்நிலை ஏற்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சா அவர்கள் பதிலளிக்கின்றபோது தேர்வு பெற்று தலைமைச் செயலகப் பணிக்காகக் காத்திருப்பவர்கள் 169 பேர் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இங்கே இடம் காலி இல்லை என்று சொலகிறோம். ஆனால் தலைமைச் செயலகத்தில தற்போது நூற்றுக் கணக்கான தற்காலிக ஊழியர்கள் பணியாற்றுகிறார்களே, அந்த இடங்களில் இந்த நிரந்தரப் பணியாளர்களை அதாவது தேர்வு ஆணை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நியமித்தால் என்ன என்பது பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தலைமைச் செயலகத்தில் இடங்கள் காலி ஏற்படுகின்றபோதுதான் அவர்களை நியமிக்க வேண்டும். அதாவது இவர்கள் எல்லாம் நிரந்தரப் பணிக்காக தேர்ந்தெடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். நிரந்தரமாக இடம் காலி ஏற்படுகின்றபோதுதான் நியமிக்க வேண்டும். ஆனால் தற்போது தற்காலிகமாக பணிபுரிபவர்களை நீக்கி விட்டு ஏன் இவர்களை அந்தப் பணிகளில் நியமிக்கக் கூடாது என்பது பற்றிய விவரங்கள் தற்போது இல்லை. அது குறித்து தனியாகத்தான் ஆராய வேண்டும். ஆனால் தற்போது பணிபுரிபவர்களை வெளியே அனுப்பிவிட்டு மற்றவர்களை சேர்த்துக் கொள்ளவே பெர்மனன்ட் போஸ்ட் ஏற்பட்டால்தான் அது முடியும். அப்போதுதான் அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குரிய சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகரில் இரைச்சல் தொல்லைகளை அகற்றுதல்.

*வினா என் 754-ஆ.—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகரில் இரைச்சல் தொல்லைகளை அகற்றுவதற்காக ஏதேனும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், செயற்குறிப்பின் நிலை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரிய நகரங்களானாலும், சிறிய நகரங்களானாலும் திருமணம், இழவு போன்ற எந்த விழாவாக இருந்தாலும் ஒலிபெருக்கிகளை வைத்து ஏகப்பட்ட இரைச்சல் ஏற்படுத்தி பொது மக்களுக்கு அதுவும் நோய் உள்ளவர்களுக்கு அதனால் பெரும் தொந்தரவு ஏற்படுகின்றது. ஆகவே ஒலி பெருக்கி வைப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒலிபெருக்கிக்கு உரிமம் வழங்குவதிலே போதிய கட்டுப்பாடுகள் எல்லாம் வைத்துத்தான் உரிமங்கள் வழங்கப் படுகின்றன. அந்த விதிகளைப் பற்றி எண்ணாமலும், அதனை மதிக்காமலும் பலர் நடந்து வருவதால்தான் இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படுகின்றன. முற்பகல் 9 மணி முதல் இரவு 10 மணி வரைதான் ஒலிபெருக்கிக்கு உரிமம் வழங்குகின்ற முறையினை காவல் துறையினர் மேற்கொண்டிருக்கிறார்கள். அதிலும் ஒரு தடவை ஒலிபெருக்கி வைப்பதற்கு 3 மணி நேரம் தான் தரப்படுகின்றது. அது 3 மணி நேரத்திற்கு மேல் ஒலிக்கக் கூடாது என்று விதி இருக்கின்றது. அதிலும் மருத்துவமனைக்கு அருகிலோ, வழிபாட்டு இடங்கள் அருகிலோ மற்ற அமைதி காக்கின்ற இடங்களிலோ ஒலிபெருக்கி வைக்கக் கூடாது என்றும் விதி இருக்கின்றது. மேலும் ஒலிபெருக்கியினை கோவிலின் கோபுரங்களிலோ அல்லது வெளியிடங்களில் அதிகமான இரைச்சல் கேட்கின்ற வகையிலோ வைக்கக் கூடாது என்றும் விதிகள் இருக்கின்றன. ஆனால் திருப்பாவை திருவெம்பாவை போன்றவைகளை கோவிலின் கோபுரங்களின் உச்சியில் ஒலிபெருக்கிவைத்து ஒலிபரப்பி காலை 5 மணிக்கே எல்லோரையும் எழுப்பி விட்டு விடுகிறார்கள். சட்டமன்றம் கூடும் காலங்களிலே அவ்வாறு எழுப்பி விட்டாலாவது மிக நன்றாக இருக்கும். (ஆரவாரம்) ஆனால் சாதாரண காலங்களிலும் அவ்வாறு எழுப்பிவிட்டு விடுகிறார்கள்.



அடுத்து, ஒலிபெருக்கி ஒலிப்பதற்கு 3 மணி நேரம் தான் கொடுக்கப்படும் என்று விதி முறை இருந்தாலும் அதை நீட்டிக்கின்ற அளவுக்கு சென்று விடுகிறார்கள். இதையெல்லாம் கட்டுப்படுத்துகின்ற முறையிலே விதியினை மீறுகின்றவர்களைக் கைது செய்வதற்கோ அல்லது கருவிகளைக் கைப்பற்றுவதற்கோ அல்லது வழக்கு மன்றங்களில் வழக்கு தொடர்ந்து அவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கோ விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் பொதுமக்கள் பெரும்பாலும் இதற்கு ஒத்துழைப்பு தரவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

அடுத்து, ஒலிபெருக்கிக் குழாய்களை மாட்டக் கூடாது என்றும் பெட்டிகளைத்தான் மாட்ட வேண்டும் என்றும் விதிகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி பல இடங்களிலே இரைச்சல் வந்து கொண்டுதான் இருக்கின்றன. அதைக் கட்டுப்படுத்துவதற்கு காவல் துறையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஆனால் பொது மக்களின் ஒத்துழைப்பும் இதிலே இருந்தால்தான் எதிர்பார்க்கின்ற அளவுக்கு நல்ல நிலைமை உருவாவதற்கு வழி ஏற்படக்கூடும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து மற்றும் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் பேரிரைச்சல் காரணமாக 10 சதவீதத்தினர் செவிடர்களாக ஆகி இருக்கிறார்கள். அந்தச் செவிடர்கள், 1970 ஆம் ஆண்டு பிரிட்டனில் ஒரு இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கேட்டது போல் தங்களுக்கும் நஷ்ட ஈடு தர வேண்டும் என்று கோரி செவிடர்கள் மாநாடு நடத்த இருக்கிறார்கள் என்ற தகவல் அரசுக்கு தெரியுமா ?

டாக்டர் காமேஸ்வரன் அவர்கள் மத்திய அரசின் உதவியுடன் இந்தப் பேரிரைச்சல் பற்றி நல்ல முறையில் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அவர்களுடைய யோசனையை அரசு ஏற்குமா ? அவர்களுடைய ஆராய்ச்சி சம்பந்தமாக தினமலர்பத்திரிக்கையில் வந்திருக்கின்ற செய்தியை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்து இது சம்பந்தமாக ஆய்வு செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

[1981 ஏப்ரல் 15

[முற்பகல் 9-10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத்
துறையிலே இரைச்சல்கள் ஏற்படாத அளவுக்கு எப்படி ஹாரன்
கள் வைக்கப்பட வேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன.
புஷ் ஹாரன் என்று சொல்லப்படுகிற காது ஜவ்வைக் கிழிக்கிற
அளவிற்கு இருக்கிற ஹாரன்களை பயன்படுத்தக் கூடாது என்று
விதிமுறைகள் இருக்கின்றன. தொழிற்சாலைகள் என்று வரும்
போது, அவற்றில் இருந்து இரைச்சல் வரத்தான் செய்யும்.
வெளியே இருப்பவர்களுக்கே அந்த இரைச்சல் இவ்வளவு கடின
மாக இருந்தால், உள்ளே அந்த இயந்திரங்களை உபயோகப்
படுத்துகிற தொழிலாளிக்கு எவ்வளவு இரைச்சல் இருக்கும் என்
பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதற்காகத்தான் இண்டஸ்டிரியல் ஏரியா, நான்-இண்டஸ்டி
ரியல் ஏரியா என்று பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி
இரைச்சல் அதிகமாக இருக்கும் இயந்திரங்களை உபயோகப்
படுத்தும் தொழில்களுக்கு நான்-இண்டஸ்டிரியல் ஏரியாக்களில்
தான் அனுமதி கொடுப்பார்கள். ரெசிடென்ஷியல் ஏரியாக்
களில் அனுமதி கொடுப்பதில்லை. இரைச்சலே ஏற்படக்
கூடாது என்று சொன்னால், தொழிற்சாலைகளே ஏற்படுத்த
முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல்,
அதிகமாக காது செவிடாக இருப்பவர்களுக்கென்றே தனியாக
கருவி இருக்கிறது. அதை வாங்கி உபயோகப்படுத்திக் கொள்ள
லாம். கண்பார்வை சரியாக இல்லாதவர்கள் கண்ணாடி அணி
வது போன்று, இந்த காதுகேட்குங்கருவியையும் வாங்கி அணிந்து
கொள்ளலாம். 200 ரூபாய் 400 ரூபாய் கொடுத்து காது
கேட்கும் கருவி வாங்குவதற்கு பதிலாக, 2 கோடி ரூபாய் சொத்து
உள்ள தொழிற்சாலையையே வேண்டாம் என்று சொல்வது
அவ்வளவு சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஒலிபெருக்கி மூலமாக ஏற்படக்கூடிய
இரைச்சல் சம்பந்தமாக 1½ ஆண்டுகளுக்கு முன்னாலே கூட
இதே அவையிலே, இது சம்பந்தமான கேள்வி வந்தபோது,
அப்பொழுது அவை முன்னவர் அவர்கள் என்ன பதிலைக் கூறி
னார்களோ அதே பதிலைத்தான் இன்றைக்கும் அமைச்சர்
அவர்கள்—அவை முன்னவர் அவர்கள் பதிலாகக் கூறியிருக்கி
றார்கள். அதே பதிலை கொஞ்சம் கூட மாற்றாமல், ஈ அடித்
தான் காப்பி என்று சொல்வார்களே, அதுபோல அப்படியே
சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அப்படி அவர்கள் பதில்
கூறிய பின்னாலும் இரைச்சல் இன்னும் அதிகமாகத்தான்
ஆகியிருக்கிறது. அதுதான் நம்முடைய சங்கடம்—கஷ்டம்.



1981 ஏப்ரல் 15]

குறிப்பாக பொதுக்கூட்டங்களுக்கு அமைச்சர்களும்
மற்றவர்களும் போகிறார்கள். விழாக்களுக்கு போகிறார்கள்.
அதுபோன்ற இடங்களில், அந்த முக்கிய நபர்கள் வருவதற்கு
11, 12 மணி ஆகிவிடுகிறது. அந்த நேரத்தில் எப்படி போலீஸ்
காரர்கள் போய், மைக் போடாதே என்று சொல்ல முடியும்?
ஆகையினால், இரைச்சல்கள் இன்னும் அதிகமாக இருக்கக்
கூடிய சூழ்நிலையில், அவைகளை கண்ட்ரோல் செய்யும் அதி
காரிகளுக்கு, சங்கடங்களும் சிக்கல்களும் ஏற்படுகிறபோது,
விதிகளை ஸ்டிரிக்ட்டாக என்ஃபோர்ஸ் பண்ணுவதற்கு நட
வடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகுபேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, சட்ட திட்டங்களும், விதி
முறைகளும் அப்படியே இருக்கிற காரணத்தில்தான், 74-லே கேட்
டாலும், 81-லே கேட்டாலும், 85-லே கேட்டாலும் ஒரே பதில்
தான் கிடைக்கிறது. ஆனாலும் கூட, அதற்குப் பிறகும் இரைச்
சல்கள் அதிகமாக ஆகியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.
அதைக் கட்டுப்படுத்தும் போதுதான் இத்தகைய பிரச்னைகள்
வருகின்றன என்று குறிப்பிட்டேன். முக்கியப் பிரமுகர்கள்
வருவதில் தாமதம் ஏற்படுவதால்தான் ஒலிபெருக்கிகள் 11,
12 மணி வரையில் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்றும்
சொன்னார்கள்.

விழாக்களையும், கூட்டங்களையும் 10.30 மணிக்குள்
முடித்துக் கொண்டு விடவேண்டும் என்ற அளவில் செய்தால்
நல்லதாகத்தான் இருக்கும். ஆனால் அது எல்லா அரசியல்
கட்சிகளும் சேர்ந்து ஒத்துக்கொண்டு முடிவு எடுத்தால்தான்
சரியாக இருக்கும். அப்போது 10.30 மணிக்குமேல் ஒலிபெருக்கி
களை அனுமதிக்க வேண்டாம் என்று காவல்துறைக்கு உத்தரவு
அனுப்பிவிடலாம். அதை அனைவரும் நடைமுறைப்படுத்து
வதிலும் ஒத்துழைக்க வேண்டும். இல்லை என்றால் ஒரு கட்சிக்கு
10.30 மணிக்கு மேல் அனுமதித்துவிட்டு, இன்னொரு கட்சிக்கு
அனுமதிக்கவில்லை என்கிற பிரச்னை எல்லாம் எழும்.

ஆனால் இப்பொழுதே பொதுவாக இரவு 10.00 மணிக்கு
மேல் ஒலிபரப்பிகளில் இரைச்சல் இருக்கக் கூடாது என்று
இருக்கிறது. அதை யாரும் கேட்பது கிடையாது. திருமணங்கள்
போன்ற விழாக்களில் அதை அவ்வளவு கண்டிப்பாக போய்
கட்டுப்படுத்துவது என்பதும் சங்கடமாக இருக்கிறது. கூட்டங்களி
லும் 10.30 மணிக்குமேல் ஆகிவிடுகிறது. இது ஒருவாறுபழகி
பொது மக்களும் நடைமுறையில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.
9 மணிக்கு கூட்டம் ஆரம்பம் என்று சொன்னாலும் கூட, முக்கிய
மானவர்கள் வருவதற்கு நேரம் ஆகும், அதற்குள் சாப்பிட்டு
விட்டு, கதாகாலட்சேபம் மாதிரி 11 மணிக்கு மேல் முடித்துக்
கொண்டு வரலாம் என்று அவர்களும் நினைக்கிறார்கள்,

பொது மக்கள் லேட்டாக வருவார்கள். அவர்கள் அனேகமாக 10 மணிக்குத்தான் வந்து கூடுவார்கள். அதனால்தான் நாங்கள் அப்படி ஏற்பாடு செய்கிறோம் என்று கூட்டங்களை ஏற்படுத்து பவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் 10 மணிக்குத் தானே கூட்டம் போட்டிருக்கிறார்கள், 10·30 மணிக்கு நாம் செல்லலாம் என்று முக்கியப் பிரமுகர்களும் நினைக்கிறார்கள். 10.30 மணிக்கு மேல்தானே முக்கியமானவர்கள் வரப்போகிறார்கள், அதற்கு ஏற்றாற்போல் நாம் சென்றால்போதும் என்று பொது மக்களும், அந்த நேரத்தை அட்ஜஸ்ட் செய்து கொண்டு வருகிறார்கள். ஆக எப்படியோ கூட்டம் நடக்கும். தெருவில் இருப்பவர்களுக்கு இரவு 12, 1 மணி வரையில் தூக்கம் இல்லை.

எனவே இதை ஸ்டிரிக்ட்டாக அமுல் செய்ய வேண்டும் என்று சொன்னால், அனைத்து அரசியல் கட்சிகளும் சேர்ந்து, 10.30 மணிக்குள் கூட்டத்தை முடித்துக் கொள்ள வேண்டும் என்று நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்தால், பொது மக்களும் அதற்கு தகுந்தாற்போல் வந்து விடுவார்கள். எல்லோருக்கும் நன்மை ஏற்படும். ஆனால் இதை அனைவரும் சேர்ந்து ஒப்புக்கொள்ள வேண்டும்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிணறுகள் வெட்டுவதற்கு 600 அடிக்கு ஒரு கிணறு தான் வெட்ட வேண்டும் என்று இருப்பது போல, ஒலிபெருக்கிகளை வைப்பதற்கும், ஒரு ஒலிபெருக்கிக்கும், இன்னொரு ஒலிபெருக்கிக்கும் இடையே இத்தனை தூரம் இருக்க வேண்டும் என்று கட்டாயமாக ஒரு முறையைக் கொண்டு வர அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பாரா? ஏனென்றால் நெருக் கடியான பல இடங்களில், சில கடைக்காரர்களும், கம்பெனிக் காரர்களும் விளம்பரங்களுக்காக இப்படிப்பட்ட ஒலிபெருக்கி களை வைத்து இரைச்சல் அதிகமாக இருக்கும் காரணத் தால் பாதசாரிகளுக்கு பஸ் போன்ற போக்குவரத்துகள் செய்யும் ஹாரன்கள் காதில் விழுவதில்லை, அதனால் விபத்துக் கள் அதிகமாக நடைபெறுகின்றன.

மேலும் இதே காரணத்திற்காக தனி நபர்கள், ஜப்பானில் இரைச்சலால் அதிகமாக இடைஞ்சல் ஏற்படுகிறது என்று கோர்ட் டுக்கு போய், அங்கே சவுண்ட் பேரியர்ஸ் கட்டி பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்கள். அதேமாதிரி இங்கும் செய்வதற்கு அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று தொல்லைகள் ஏற் படாத அளவிற்கு கட்டுப்பாடு விதிகள் வைக்கப்பட்டிருக்கின்றன.





கலியாணக் கூடத்தில் அதுபோன்று மற்றவிடங்களில் ஒலிபெருக்கி வைத்தால் அந்த ஒலி கல்யாணகூடத்திற்கு வெளியே வரக் கூடாது, கலியாணகூடத்திற்கு உள்ளேதான் அந்த ஒலி பரவ வேண்டும் என்றெல்லாம் விதிமுறைகள் இருக்கின்றன. கடை களில் விளம்பரப்படுத்துவது என்பதில் அந்த அளவிற்குத்தான் இருக்கவேண்டுமே தவிர மற்ற இடங்களுக்கு அந்த ஒலி வரக் கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன. கூட்டங்களைப் பொறுத்தவரையில் ஒலிபெருக்கிக்கு அனுமதி கொடுக்கும் போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று ஒரு ஒலிபெருக்கிக்கும் இன்னொரு ஒலிபெருக்கிக்கும் மோதுகிற அளவிற்கு இல்லாது ஒரு குறிப்பிட்ட இடைவெளி வைத்துத் தான் கூட்டங்களுக்கு ஒலிபெருக்கி வைத்துக்கொள்ள அனு மதி தரப்படுகிற அளவிற்கு விதிமுறைகள் உள்ளன. கட்டுப் பாடுகள் உள்ளன. அதைக் கடைப்பிடிப்பது என்பதில்தான் சிரமங்கள் வருகின்றன. அதை தீவிரமாகக் கட்டுப்படுத்த, இவ்வளவு விவாதம் நடந்த பிறகு காவல் துறை இதில் தீவிர கவனம் செலுத்தும் வாய்ப்பினை மேற்கொள்வார்கள் என எதிர் பார்க்கலாம். விதிகளுக்குக் கட்டுப்படுகிற சூழ்நிலைக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு உண்மையில் தேவைப்படுகிறது.

திரு. ஏ. ஜி. சண்முகம் : வெளி நாடுகளில், அங்குள்ள நகரங்களில் வாகனங்கள் ஹாரன் அடித்து தொல்லை செய்வதை தடை செய்திருக்கிறார்கள். குறிப்பாக மருத்துவமனைகள் உள்ள இடங்களில், இராயப்பேட்டை, தலைமை மருந்துவமனை இவைகள் இருக்கக்கூடிய சாலைகளில் செல்லக்கூடிய வாகனங் கள் நிபந்தனையை மீறி பாஞ் ஹாரன் போன்றவைகளை பயன்படுத்துவதை—நோயாளிகளை மனதில் கருதியாவது தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நம்முடைய நாட்டில் பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், கல்விச் சாலைகள் ஆகியவைகளின் இருபக்கமும் 'நோ ஹாரன் ஸோன்' என்றளவிற்கு அடையாளக்குறி இட்டு ஹாரன் செய்யக் கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன. ஜெனரல் ஹாஸ்ப் பிட்டல் இருக்கிற இடத்திலும் வைக்கப்பட்டிருக்கிறது. மருத் துவ மனைகள் எங்கே இருந்தாலும், சிறு பள்ளிக்கூடங்களாக இருந்தாலும்கூட ஹாரன் அடிக்கக்கூடாது என்று அடையாளக் குறியெல்லாம் வைத்திருக்கிறோம். சில பேர்கள் அதைக கடைப்பிடிக்கிறார்கள். பலபேர்கள் அதை மீறி விடுகிறாகள். அதில் ஏற்படுகிற தொல்லைதான்.

[1981 ஏப்ரல் 15

## சிறு சேமிப்புத் திட்டத்தினை ஊக்கப்படுத்துதல்.

*வினா எண். 688.— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிறு சேமிப்புத் திட்டத்தை ஊக்கப்படுத்துவதற்கு சிறப்பு பரிசு வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இம்மாதிரியான செயற்குறிப்புள்ள திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சேமிப்புப் பழக்கம் வர மாதம் ரூ. 50 விதம் சம்பளத்தில் பிடித்தம் செய்து அரசாங்கம் ரூ. 50 கொடுத்து சிறுசேமிப்பு மூலம் சேமித்து அவர்கள் பதவிக் காலம் முடிந்தவுடன் அரசாங்க ஊழியர்களுக்கு ரூ. 10,000 வழங்குவது போல் வழங்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சிறுசேமிப்பு அவரவர்கள் சேமிக்கின்ற பணத்தைச் செலுத்த வேண்டும் என்பதே தவிர உங்களுக்கு ரூ. 50 அரசு தந்து நீங்களும் அதில் சேருகின்ற அளவிற்கு உங்களுக்குத் தருவானேன் உங்களை சேமிக்கச் சொல்வானேன் ? அது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் அரசாங்க ஊழியர்களுக்கு ஓய்வு பெறுகிற போது ரூ. 10,000 கொடுக்கிற நிலை இப்போது ஏற்படவில்லை. அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏதேனும் ஒரு அடிப்படையில் அரசாங்கம் ஒரு பங்கு செலுத்த வேண்டும் அவர்கள் ஒரு பங்கு செலுத்த வேண்டும் என்ற விதிமுறைகளின் அடிப்படையில் அதைச் செலுத்துவது என்ற வகையில் இன்னும் ஒரு உடன்பாடு ஏற்படாத காரணத்தால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க ஊழியர்கள் சங்கங்களையும் தலைவர்களையும், மற்றவர்களையும் கலந்து பேசிய பிறகு அந்த முடிவிற்கு வர வேண்டும். அதற்குப் பிறகுதான் அதைப் பற்றி யோசிக்க வேண்டி வரும். இப்போது சிறு சேமிப்புத் திட்டத்தைப் பொறுத்த வரையில் பல்வேறு ஊக்கத் தொகைகளை அதற்கான அளவிற்கு மாவட்ட வாரியாகவும், மாநில அளவிலும், பள்ளிக் கூடங்கள் பொறுத்தும் மாவட்டத்தில் திரட்டுபவர்கள் பொறுத்தும், முகவர்கள் பொறுத்தும் பல்வேறு வகைகளில் அளித்துக் கொண்டிருக்கிறோம். புதிதாக எதுவும் இல்லை என்று சொன்னேனே தவிர பல்வேறு வகைகளில்



1981 ஏப்ரல் 15]

அளித்துக் கொண்டு வருகிறோம். சிறந்த முறையில் சிறந்த மாவட்டம் என்று இவர்களுடைய இலக்குக்கு மேல் தேடிக் கொடுப்பார்களானால் அதில் முதல் இடம் பெறுகின்ற மாவட்டத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையும், இரண்டாவது இடத்தைப் பெறுகிற மாவட்டத்திற்கு ரூ. 75,000ம், மூன்றாவது இடத்தைப் பெறுகிற மாவட்டத்திற்கு ரூ. 50,000 என்றும் ஊக்கத் தொகை, பரிசு கொடுக்கிறோம். இந்த ஒரு இலட்சம், ரூ. 75,000, ரூ. 50,000 இவற்றை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திட்டமிட்டு செலவழிக்கலாம் என்று எடுத்துக் கூறியிருக்கிறோம். அதே மாதிரி சிறந்த பள்ளிக்கூடங்கள் மற்றவைகள் சிறந்த முறையில் 500க்கு மேற்பட்டு கணக்குகளை சேகரித்து வைப்பார்களானால் அதில் முதல் இடம் பெறுகிறவர்களுக்கு ரூ. 2,000 என்றும் அடுத்த இடம் பெறுகிறவர்களுக்கு ரூ. 1,000 என்றும் அதற்கு அடுத்த இடத்தைப் பெறுகிறவர்களுக்கு ரூ. 500 என்றும் பல்வேறு பரிசுகள் தருவது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதிதாக இல்லை என்றுதான் நான் குறிப்பிட்டேன்.

[முற்பகல் 9-20].

**திரு. பாபு ஜனார்த்தனன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சிறு சேமிப்பு இயக்கம் வட்ட ஆட்சியர், ஒன்றிய ஆணையாளர், மற்றும் சுகாதார புலாகா போன்றவற்றிற்கு கோட்டா கொடுத்துவிட்ட காரணத்தால், பொது மக்கள் அவர்களிடத்திலே அணுகுகின்ற போது, அவர்களைக் கட்டாயப்படுத்துகின்ற நிலை இருக்கிறது. அரசு அவ்வாறு கட்டாயப்படுத்தக் கூடாது என்று அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது மத்திய அரசாங்கத்தினுடைய திட்டம். மாநில அரசும் மேற்கொண்டு செய்கிறது. மாநில அரசு செய்கிற போது, மாநிலத்திலே பணியாற்றுகின்ற அதிகாரிகள், அலுவலர்கள், மற்றவர்கள் மூலமாகச் செய்ய வேண்டி வருகிறது. சிறு சேமிப்புத் துறை தானாகவே செய்யலாம் என்றாலும், நம்முடைய நாட்டைப் பொறுத்த வரை இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இருந்தாலும் கூட, அப்படித் தரப்படுகின்ற நிதி வேறு எங்கும் போகவில்லை ; அவர்களுக்கே திருப்பித் தரப்படுகின்றது. இந்த வகையிலே வரப்படுகின்ற நிதி, இந்த சிறு சேமிப்பு நிதி மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் தான் வந்து சேருகிறது. இந்த சிறு சேமிப்புத் தொகையை வைத்துத்தான் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய அரசு திட்டம் போட்டு, பின்னர் அது

மாநில அரசிற்கு வருகிறது. அந்தக் காலம் முடிந்த பிறகு, வட்டியோடு அவர்களுக்குத் திருப்பித் தரப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அரசாங்கத்தின் கையில் அந்தப் பணம் இருக்கிறதே தவிர, இதிலே வேறு கேடு எதுவும் ஏற்படவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்புக்குச் செலுத்தப்படும் தொகை, பல காரணங்களால் திருப்பித்தரப்படாத நிலை ஏற்பட்டு இருக்கிறது. அந்தத் தொகையை வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசு பயன்படுத்திக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால், என்ன நிலையில் இருக்கிறது என்பதைச் சொல்லலாம்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்புத் திட்டத்தை மக்களுக்கு மேலும் விளக்குகின்ற வகையில் சினிமாப் படம் தயாரிக்க இருப்பதாகவும், அதில் நம்முடைய முதல்வர் அவர்கள் நடிக்கவுள்ளதாகவும், சிறு சேமிப்புத் திட்டத் துணைத் தலைவர் அவர்கள் பேட்டி தந்திருக்கிறார்கள். அவ்வாறு இருப்பின், கதை வசனம் தயாராகி விட்டதா, படப்பிடிப்பு துவங்கி விட்டதா என்பதை அமைச்சர் அறிவிப்பாரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சிறு சேமிப்புத் துறையின் துணைத் தலைவர் அப்படிப்பட்ட யோசனையைச் சொல்லியிருக்கிறார். அந்த யோசனை முடிவு பெற்று, பிறகு என்ன நடைபெறும் என்பதை இந்த அவை அறிந்து கொள்ளலாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற செ.ரணம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சிறு சேமிப்புத் திட்டம் அமுலில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதிலே முதல் பரிசு, இரண்டாவது பரிசு, மூன்றாவது பரிசு ஆகிய பரிசுகள் கொடுப்பதாகச் சொன்னார்கள். இந்த ஆண்டு இந்த பரிசுத் தொகைகள் எந்த ஸ்தாபனத்திற்கு எந்த நபருக்கு கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன் அதோடு, இந்த சினிமா படம் எடுத்தால், நமமுடைய ஜே.எஸ். இராசு அவர்களை டைரக்டராக போடுவதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டினுடைய விவரக் குறிப்புகள் இன்னும் வரவில்லை. வந்ததற்குப் பிறகு அறிவிக்கலாம். முதலில் இப்படிப்பட்ட படம் எடுக்கும் முயற்சி எடுத்து, அதில் யார் யார் இயக்குநராக இருப்பார்கள், யார் யார் சிறந்த நடிகர், நடிகைகளாக இருப்பார்கள் என்பதைத் தேர்ந்தெடுக்கும்போது உரியவர்களை நண்பர் அவர்கள் சிபாரிசு செய்யலாம். பொருத்தமாக இருந்தால் ஏற்றுக் கொள்ளலாம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்புத் திட்டத்தை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், மாவட்ட ஆட்சித் தலைவர் போன்ற அதிகாரிகள், ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற தொகையை சிறு சேமிப்புக்கு எடுத்து விடுகின்ற காரணத்தால், கிராமங்களிலே வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. அது மட்டுமல்ல, ரெவின்யூ அதிகாரிகள், லைசன்ஸ் பெறுவதற்காக கமிஷன் மண்டிக்காரர்கள் தங்களை அணுகுகின்றபோது, சிறு சேமிப்பிற்காக தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார்கள். அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பணத்தை எந்த அளவுக்கு எடுக்கிறார்கள், அதனால் எந்த அளவுக்கு பாதிக்கப்படுகின்றது என்ற விவரம் இல்லை. யாரும் பாதிக்கப்படாத அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். யாருக்கும் தொல்லை கொடுக்கக் கூடாது, யாருக்கும் வருத்தம் ஏற்படக் கூடாத அளவிற்கு கேட்டு, இதைச் செய்ய வேண்டும் என்ற அறிவுரையின் அடிப்படையில், இந்த சிறு சேமிப்பு இயக்கத்தின் குறிப்பிலே பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே செய்யாமல், அவர்கள் மீறினால், அதைப் பற்றி, தக்க முறைகளில், அந்த நோக்கம் நிறைவேறுகின்ற அளவிற்கு என்னென்ன அறிவுரைகளை வழங்க வேண்டுமோ, அவைகளை வழங்க அரசு ஆயத்தமாக இருக்கிறது.

### ஆயுள் காப்பீட்டுக் கழகம் வழங்கியுள்ள கடன்கள்.

*வினா எண். 689— திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆயுள் காப்பீட்டுக் கழகம் என்னென்னத் திட்டங்களுக்கு எவ்வளவு ரூபாய்கள் கடன் வழங்கியுள்ளது ?

(ஆ) புதியதாக ஏதேனும் திட்டங்களுக்காக அரசு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தை அணுகியுள்ளதா ?

(இ) ஆம் எனில் எவையெவை ?

[1981 ஏப்ரல் 15

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) பின் வரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஆயுள் காப்பீட்டுக் கழகம் இது வரை வழங்கியுள்ள கடனுதவியின் விவரங்கள் :

| திட்டம். | கடன் தொகை. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் கோடியில்). |
| 1. சமூக வீட்டு வசதித் திட்டங்கள் .. | 34.95 |
| 2. தொடக்க வீட்டு வசதி சங்கங்கள் .. | 59.92 |
| 3. தமிழ்நாடு மின் வாரியத்திற்கு அடமானக் கடன்கள். .. | 71.11 |
| 4. மூலதனப் பணிகளுக்காக தமிழ்நாடு மின் வாரியத்திற்கு கடன்கள். .. | 9.57 |
| 5. குடிநீர் வழங்கு கழிவு நீரகற்றுத் திட்டங்கள் .. | 45.88 |
| 6. மூலதனப் பணிகளுக்காக சென்னை மாநகராட்சிக்குக் கடன்கள். .. | 5.00 |
| மொத்தம் .. | 226.43 |



1981 ஏப்ரல் 15]

(ஆ) மற்றும் (இ) 1980-81 ஆம் ஆண்டில் இந்த அரசு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தை பின்வரும் புதிய திட்டங்களுக்காக கடனுதவி வழங்க வேண்டி அணுகியுள்ளது.

| திட்டம். | கேட்ட கடன் தொகை. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் கோடியில்). |
| 1. சமூக வீட்டு வசதித் திட்டங்கள் .. .. | 2.50 |
| 2. கிராமப்புற வீட்டு வசதித் திட்டங்கள் .. .. | 15.00 |
| 3. நகர்ப்பகுதி வீட்டு வசதித் திட்டம் .. .. | 20.00 |
| 4. புதிய 14 குடிநீர் வழங்கு திட்டங்கள் .. .. | 1.80 |
| மொத்தம் .. | 39.30 |

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களுக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகம் வட்டியில்லாத கடனாக ஏதேனும் ஒரு பகுதியாவது கொடுக்கிறதா ? அல்லது வட்டியோடு தான் கொடுக்கிறது என்றால் வட்டி விகிதம் மற்ற நிதி அமைப்புகள் கொடுக்கிறதை விட குறைவாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறுகின்ற தொகை வட்டியோடு தான் பெறுகிறோம். மற்ற வங்கிகள் பெறுகிற வட்டியை விட குறைவாக வட்டிக்குத்தான் தருகிறது. இது பற்றி விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர் ஆண்டாக இருக்கின்ற காரணத்தால், ஆயுள் காப்பீட்டுக் கழகம் இப்போது பல திட்டங்களுக்காக கடன் கொடுப்பதைப் போல, உடல் ஊனமுற்றவர்களுக்கு ஒரு திட்டத்தை வகுத்து, கடன் பெற அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 ஏப்ரல் 1

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் இருக்கிறதா என்பதைப் பற்றிய விவரக் குறிப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போன்று, உடல் ஊனமுற்றோர் ஆண்டாக இருப்பதால், அவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கு பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு போதுமான அளவிற்கு நிதி வசதி மாநில அரசிற்கு தேவைப்படுகிற காரணத்தாலும், குறைந்த வட்டியிலோ, அல்லது வட்டியில்லாமலோ, ஒரு தொகையை ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஒதுக்க மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதி, மத்திய அரசின் ஒப்புதலோடு அந்தத் தொகை ஒதுக்கப்படுமேயானால் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். இந்த கருத்தை மனதிலே வைத்துக் கொண்டு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் குடியரசுத் தலைவர் அவர்கள் வந்திருந்த போது கால்நடைகளுக்கு இன்ஷூரன்ஸ் செய்யும் வசதியைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்படுவதோடு அல்லாமல், விவசாயிகளுக்கு அடிக்கடி பயிர்கள் தீய்ந்து போகின்றன. இந்நிலைமையில் பயிர் இன்ஷூரன்ஸ் செய்வதற்கும், கால்நடை இன்ஷூரன்ஸ் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி குறிப்புகள் மத்திய அரசுக்கு மாநில அரசு பயிர் இன்ஷூரன்சானாலும் சரி, கால்நடை இன்ஷூரன்சானாலும் சரி, வழிவகை வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய அனுமதி கிடைத்தபிறகு அதுபற்றிய நிலைமைகளை நாம் யோசிக்கலாம். இப்போது புதிய இன்ஷூரன்ஸ் கம்பெனி ஒன்று கால்நடைகளுக்கு இன்ஷூரன்ஸ் செய்யும் குறிப்புகள் இருப்பதாகச் செய்தித்தாளில் வந்தது. அது பற்றிய முழு விபரமும் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் முழு விவரங்களையும் தெளிவாக எடுத்துச் சொல்லலாம்.

திரு. என். தென்னசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடன் வாங்குகிற பொழுது, மாநில அரசுகள் நேரடியாக வாங்குகின்றனவா? அல்லது மத்திய அரசின் மூலம் வாங்குகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.



1981 ஏப்ரல் 15]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசுகள், மத்திய அரசின் மூலம்தான் அணுகுகிறோம். மத்திய அரசு வழங்கலாம் என்று சொன்ன பிறகுதான் ஆயுள் காப்பீட்டுக் கழகம் இந்தக் கடன் தொகைகளை வழங்குகிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது வீட்டு வசதித் திட்டங்களுக்காக 2 கோடி ரூபாயும், கிராமப்புற வீட்டு வசதித் திட்டங்களுக்கு 15 கோடி ரூபாயும், நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களுக்கு 20 கோடி ரூபாயும் இந்த ஆண்டு கேட்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஏறக்குறைய ஆறு, ஏழு மாதங்களாக கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து எந்த வித கடன் வசதியும் பெறமுடியாமல், எந்த வேலையும் செய்ய முடியாமல், இருப்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன். இப்போது அவர்கள் கிராம வீடு கட்டும் சங்கத்திற்கு நாங்கள் கடன்கள் தரமாட்டோம் என்றும், நகர விடுகட்டும் சங்கங்களுக்குத்தான் தருவோம் என்றும் கண்டிஷன் போட்டிருக்கிறார்களாமே. அப்படிப்பட்ட கண்டிஷனைப் போக்கி அந்தக் கடன்களை கிராம வீடு கட்டும் சங்கங்களும் பெறுவதற்கான துரிதமான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற நிலைமை பற்றி எந்த விவரமும் இப்போது அறியமுடியவில்லை. அதுபற்றி குறிப்பை எனக்கு எழுதித் தருவார்களானால் இங்கே சொல்லியிருப்பது சமூக வீட்டு வசதித் திட்டங்களுக்காக 2—கோடி ரூபாயும், கிராமப்புற வீட்டுவசதித் திட்டங்களுக்காக 15 கோடியும் நகர்ப் பகுதி வீட்டு வசதித் திட்டத்திற்கு 20 கோடி ரூபாயும் என்று தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் கிராமப்புறங்களிலே வீட்டு வசதி செய்கிறோம் என்று தான் இருக்கிறது—அப்படி ஏதாவது இடைஞ்சல் அல்லது இடையூறு இருக்குமானால் அதைக் கண்டறிந்து நீக்குவதற்காக முயற்சிகள் எடுக்கின்ற வகையில் தனியாகக் குறிப்புகளைத் தருவார்களானால் அதைப்பற்றி ஆராயலாம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, ஆயுள் காப்பீட்டுக் கழகம் மத்திய அரசினுடைய நேரடிப் பார்வையிலே இயங்கி வருகிறது. அதுபோன்ற கழகத்தை மாநில அரசு ஆரம்பிக்கும் எண்ணம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். சில மாநிலங்களிலே அதுமாதிரி இன்ஷூரன்ஸ் திட்டம் வைத்து அந்த மாநிலங்களிலே உள்ள நிதியையும் சேர்த்து மாநிலங்களுக்குப் பயன்படுத்துகின்ற முயற்சிகள் இருப்பதாக அறிகிறோம். அந்த விவரக் குறிப்புகளையெல்லாம் சேகரிக்குமாறு கேட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் வேறு பல மாநிலங்களிலே கையாள்கிற முறையை அதே முறையை நாமும் கையாண்டு அதன் மூலமாக வருகிற நிதியை வைத்து தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் மற்றவைகளுக்காகவும் பயன்படுத்த முடியுமா என்பதைப் பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். அதுபற்றி இன்னும் முடிவுக்கு வரவில்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, எல்.ஐ. சி. யிலிருந்து கொடுக்கும்படியான கடன்களைப் பெற்றுப் பயன்படுத்தக்கூடிய ஸ்தாபனங்கள் அந்தத் திட்டங்களினால் பயன்பெறக்கூடிய மக்களிடமிருந்து என்னென்ன விதத்தில் வரி வசூலிக்க வேண்டும் அல்லது கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்ற முறையிலே நகராட்சி குடிநீர்த் திட்டத்திற்காக கடன் வாங்கிவிட்டால் அதைச் செலுத்துவதற்கு அவர்களுக்கு பண வசதியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அந்தத் திட்டத்தினால கிடைக்கும் தண்ணீரை பயன்படுத்தக்கூடிய குடித்தனக்காரர்கள் மக்களிடமிருந்து இன்ன முறையிலே கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று ஆலோசனை சொல்லிக் கொண்டிருக்கின்ற, சொல்லுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, என்பது அரசுக்குத் தெரியுமா? . கடன் தருகிறவர்கள் அப்படிப்பட்ட முறையிலே இன்ன முறையில் இவ்வளவு வசூலிக்க வேண்டும் என்று சொல்கிற நிலைமை இல்லாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய நிலைமை எனக்குத் தெரியவில்லை. ஆனால் வேர்ல்டு பேங்க் கூட கடன் தருகிற போது இன்ன இன்ன முறையிலே கொடுக்க வேண்டும், இன்ன முறையிலே அதை ஈடு கட்ட வேண்டுமென்று நிபந்தனைகளைப் போட்டுத்தான் கொடுக்கிறார்கள். மத்திய அரசு அந்த நிபந்தனைகளை வகுக்கிறார்களா அல்லது ஆயுள் காப்பீட்டுக் கழகமே வகுக்கிறதா என்று தெரியவில்லை. நகராட்சிகளோ, பேரூராட்சிகளோ கடன்களைப் பெறுகின்றபோது அவைகளை அவைகள் திருப்பித் தருவதற்கான வலிமை பெற்றிருக்கின்றனவா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. பல நகராட்சிகள் பேரூராட்சிகளிலே நிதி ஆதாரங்கள் இல்லாமல் நிர்வாகச் செலவிற்கே கிட்டத்தட்ட 80 சதவிகிதம் போய்விடுகிற நிலைமை இருக்கின்றன காரணத்தினால் கடன்களைத் திருப்பி அடைக்க முடியுமா என்பதைப்



பார்த்து அதற்காக அவர்களுக்கு இருக்கிற ஒரே வருமானம் வரிதான். அந்த வரியின் மூலமாக அதை உயர்த்திக் கொடுக்க ஆயத்தமாக இருந்தால்தான் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. அந்த நம்பிக்கை வருகிறபோது அவர்கள் கடன் தருகிறார்கள். ஆனால் இதிலே யார் நிபந்தனைகளை விதிக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதைப்பற்றி ஆராய்ந்து யார் விதிமுறைகளை வகுக்கிறார்கள் என்பதைப் பார்த்து ஆராயலாம்.

### தஞ்சை மாவட்டத்தில் உள்ள பினாமி நிலங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 690 மற்றும் 691 ஒன்றாக எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

*வினா எண். 690—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1980–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம், தஞ்சை ஜில்லா நெ. 116, கொலமாணிக்கம் கிராமம் மக்கள் மூலமாகவும் சர்வோதய தலைவர் மூலமாகவும் நேரிலும் தபால் மூலமும் மனுக்கள் (பினாமி நிலங்கள் பற்றி) அரசாங்கத்திற்கு வந்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அரசின் நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) 1980 ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் அரசுக்கு மனு வந்தது.

(ஆ) இது பற்றி அரசு பரிசீலித்து, தகுந்த நடவடிக்கை எடுத்து சவளக்காரன் கிராமத்தில் பினாமி யென்று கருதப்பட்ட நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்து அவர்கள் சாகுபடி செய்து வருகிறார்கள். குலமாணிக்கம் கிராமத்தில் உள்ள எல்லா நிலங்களையும் தமிழ்நாடு சர்வோதய விவசாயத் தொழிலாளர் சங்கத்திற்கும். வேறு ஒரு தனிப்பட்டநபருக்கும் தமிழ்நாடு வக்ப் வாரியத்தின் அனுமதி பெற்று விற்பதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

*வினா எண். 691—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை ஜில்லா சேவாகரன் கிராம குத்தகைதாரர்கள் விவசாய தொழிலாளர்கள் மூலமாக மேற்படி கிராம நிலச்சுவான்தாரர்கள் பேரில் பினாமி நிலம் வைத்திருப்பதாக அரசாங்கத்திற்கு மனுக்கள் வந்துள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) சேவாகரன் என்ற பெயரில் கிராமம் எதுவுமில்லை. சவளக்காரன் என்ற பெயரில் கிராமம உள்ளது. மேற்படி கிராமத்தில் உள்ள பினாமி நிலங்கள் தொடர்பாக, 1980 ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் அரசுக்கு மனு வந்தது.

(ஆ) இதுபற்றி அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுத்து, சவளக்காரன் கிராமத்தில் பினாமி என்று கருதப்பட்ட நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்து அவர்கள் சாகுபடி செய்து வருகிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 690 ஆவது கேள்விக்கு பதில் சொல்லும்பொழுது பிரித்துக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். பிரித்துக் கொடுத்துள்ள நிலங்களுக்குத் தொகை நிர்ணயம் செய்தபொழுது மார்க்கெட் ரேட்டை விட இரண்டு மடங்கு நிர்ணயம் செய்தது அரசுக்குத் தெரியுமா? அது சம்பந்தமாக அந்த சர்வோதயத் தலைவர் மனுக் கொடுத்து, அதில் இதுவரை நடவடிக்ககை எடுக்கப்படாமல் இருப்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை அறிய விரும்புவதோடு, மேலும், அந்தப் பினாமி நிலம் சம்பந்தமாக அமைச்சரவர்கள் இந்தச் சபையிலே உறுதி கொடுத்தார்கள், குழுக்கள் அமைக்கப்படும் என்று. அது இந்தக் கிராமத்திற்கு மட்டுமல்ல, இந்த ஜில்லாவுக்கு மட்டுமல்ல, தமிழகம் முழுவதற்கும் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அவ்விதம் அமைப்பதற்கு இன்றுவரை ஏதாவது முயற்சி எடுத்தார்களா? அதில் காலதாமதம் ஆவதற்கு என்ன இடையூறு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டு அவைகளில் சாகுபடி செய்து வருகிறார்கள். அதற்குக் கொடுக்கப்பட்ட தொகை சந்தை விலையைவிட அதிகம் என்று நினைத்து மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். அந்த நிலத்தைப் பொறுத்தவரையிலே அது தனியாருடைய நிலம் இல்லை என்பதும், அங்கேயிருக்கின்ற சில சமய நிறுவனங்களுக்குச் சொந்தமானது என்பதும், இன்றைக்கிருக்கின்ற சட்டதிட்டங்களில் சமய நிறுவனங்களை நாம் கட்டுப்படுத்த முடியாது என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் குழுக்கள் அமைப்பதைப்பற்றிக் கேட்டார்கள். கைகள் இரண்டையும் கெட்டியாகச் சங்கிலி போட்டுக் கட்டி, பெரிய பூட்டைப் போட்டு பூட்டியிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். எப்படி அந்தப் பூட்டை உடைப்பது, எப்படி வெட்டுவது என்பதற்கு யோசனை சொன்னால் அதைச் செய்வதற்கு தயாராக இருக்கிறேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற பொதுப் பொறுப்புக் கழகங்கள் எவ்வளவு? அவைகளிடம் இருக்கின்ற நிலங்கள் எவ்வளவு? அதில் உள்ள குத்தகைதாரர்கள் எவ்வளவு பேர்? அதில் பினாமி குத்தகைதாரர்கள் எத்தனை பேர் என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மட்டும் பொதுப் பொறுப்புக் கழகம் 9,574 இருக்கின்றன. அவர்களுடைய பிடியிலே இருக்கின்ற நிலம் 1,59,608 ஏக்கர்களாகும். அதிலே குத்தகை செய்து கொண்டிருக்கின்ற குத்தகைதாரர்கள் 66,710 பேர். இதில் பினாமிகள் இருக்கிறார்களா இல்லையா என்பதை கண்டுபிடிக்க ஆவன செய்யப்படுகிறது. அரசு இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது, கைகள் கட்டப்பட்டிருக்கின்றன, பெரிய பூட்டு போடப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். எந்தப் பூட்டாக இருந்தாலும் பினாமி சம்பந்தமாக நீங்கள் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சொல்வது மத்திய அரசா அல்லது மாநில அரசா அல்லது நிலச்சுவான்தார்களா அல்லது வருங்காலத் தேர்தலுக்கு அஞ்சியா? எதனால் அந்தப் பூட்டு போடப்பட்டிருக்கிறது? அது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்துக்குத் தெரிவித்தீர்களா? அதில் என்ன கஷ்டம் இருக்கிறது? நாம் போடும் சட்டங்கள் கோர்ட்டுகள் மூலமாக அவர்களுக்கு வசதியாக வழக்கறிஞர்கள் எடுத்துக் கொள்ளுவதால் வரும் தொல்லையா என்பதை அறிய விரும்புகிறன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, பெரிய மிராசுதாரரிடம் சென்று, நன்றாகச் சாப்பிட வேண்டுமென்று எண்ணி கிடாயைக் கேட்டால் அவர்கள் சினை ஆட்டைக் கொடுப்பார்கள் என்று கிராமங்களிலே சொல்வார்கள். நாம் மத்திய அரசாங்கத்தைப் பார்த்து நல்ல கிடாயைக் கேட்கிறோம். ஆனால் அவர்கள் சின்ன ஆட்டைக் கொடுப்பதற்குக்கூடச் சம்மதிக்கவில்லை. அந்த மிராசுதாரர் சினை ஆட்டைக் கொடுத்தால் அதை வாங்கியவர்கள் என்ன செய்வார்கள்? பாவம் அந்தக் குடியானவர் அந்த ஆட்டை வாங்கி வளர்த்தால் அந்தச் சினை ஆடு நான்கு குட்டிகளைப் போட்டுவிட்டது. அதில் இரண்டு பெண் குட்டிகள் இரண்டு ஆண் குட்டிகள். அப்படிப் போட்டாலும் அதைக் காப்பாற்றும் அளவிற்கு நாம் காத்திருக்கிறோம். மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட தேதி உங்களுக்குத் தெரியும்; இங்கேயும்கூட நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். 30—8—80 ஆம் தேதி அனுப்பப்பட்டது. இன்றைக்கு 231 நாட்கள் ஆகிவிட்டன. இன்னும் வரவில்லை. ஆனால், திரு. இளையபெருமாள் போன்ற தொண்டர்கள் நிலச்சீர்திருத்தத்தில் காட்டுகிற ஆர்வத்தை, மேலே உள்ள தலைவர்கள் காட்டவில்லையென்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.40]

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மத சம்பந்தப்பட்ட சொத்துக்கள் பல்வேறு வகையிலே பினாமியாக இருக்கின்றன; முறையாகப் பயன்படுத்தப்படவில்லையென்று மனுக்கள் வந்து கொண்டே இருக்கின்றன. அது குறித்து, சமய சொத்துக்கள் பற்றிய சட்டத்தைத் திருத்த மாநில அரசிற்கு வாய்ப்பு இருக்கிறதா? வாய்ப்பிருந்தால் திருத்துகின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலத்தைப் பொறுத்த வரைக்கும் அது கன்கரன்ட் லிஸ்டிலே வந்து விடுகிறது. நாம் என்ன செய்தாலும் மத்திய அரசை அணுக வேண்டியிருக்கிறது. மத்திய அரசினுடைய காலதாமதத்தால் பல முற்போக்குச் சட்டங்கள், நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட முடியாமல் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று முதலிலேயே தெரிவித்தேன். அந்தக் கட்டப்பட்ட கட்டுக்களையும் பூட்டுக்களையும் உடைத்தால்தான் நாம் அவைகளைத் தீவிரமாகச் செய்ய முடியும். அதே போலத்தான் நிலச் சீர்திருத்தமும். மதச் சார்பற்ற, இன்றைக்கு மதம் என்ற பெயரை வைத்துக் கொண்டு, மதச் சடங்குகளுக்கு அப்பாற்பட்டு அவைகளைப்





பயன்படுத்துகின்ற நிலம் கூட, பல மாதங்களுக்கு அடிப்படையிலே இருந்து கொண்டிருக்கிறது. இந்த அரசு, அண்ணாவினுடைய அரசு, புரட்சித் தலைவருடைய அரசு, மதத்தின் சார்பிலே நடத்துகின்ற அநியாயங்களைக் கண்டு பிடித்து, அதிலேயிருக்கிற நிலங்களை எடுத்து, ஏழை, எளியவர்களுக்கு, விவசாயிகளுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறது. அதற்கேற்ற சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற இந்த அரசு தயாராக இருக்கிறது. அதற்கு முன்னாலே இங்கே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும், எல்லாக் கட்சிகளும், ஏகமனதாக நிறைவேற்றி அனுப்பப்பட்ட சட்டம், மத்திய அரசிடம் தூங்கிக் கொண்டிருக்கிறது. அது தூங்கினாலும், அந்நிலங்கள் சம்பந்தமான சீர்திருத்தச் சட்டமும் விரைவிலே இங்கே வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்து தரப்பினராலும் பாராட்டப்பட்ட அந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதிலே தேவைக்கு மேற்பட்ட காலத்தை மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கின்ற வகையிலே, மத்திய அரசை வற்புறுத்த, இந்த மன்றத்திலேயிருக்கிற சர்வகட்சிக் குழுவினை அனுப்பி, அந்தச் சட்டத்திற்கு உடனே ஒப்புதல் அளிக்க வேண்டுமென்கிற வகையிலே, அரசு வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேளாக் காதினராக இருக்கிற பொழுது யார் போய்ச் சொன்னாலும் அந்தக் காதிலே விழாது என்றுதான் நான் கருதுகிறேன். ஆனால், முதலிலே சொன்னதைப் போல், இங்கேயிருக்கிற அனைத்துக் கட்சிக்காரர்களும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களிலும், எல்லா கட்சிகளும் சேர்ந்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட சட்டம் இது ஒன்றுதான். இதே மன்றத்திலே கூட, 1961-லே, 1971-லே, 1972-லே சட்டங்கள் இயற்றப்பட்டபோது, எல்லா கட்சிகளாலும் ஏகமனதாக நிறைவேற்றப்படவில்லை. இப்பொழுது ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட பிறகு அதை ஆராய்ந்து அறிந்த பிறகு, மத்திய அரசு கேளாக் காதினராக, பாராமுகமாக இருக்கும்போது, அனைத்துக் கட்சி உறுப்பினர் சென்றாலும், இதே நிலைதான் ஏற்படும் என்று நான் அஞ்சுகிறேன்.

திரு. எஸ். இளையபெருமாள் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது கிராமத்துப் பழமொழியெல்லாம் சொன்னார்கள். கேளாக் காதினர் என்று சொன்னார்கள். ஆனால், சட்டரீதியாக, அனுப்ப வேண்டிய முறையோடு நாம் அனுப்பாத காரணத்தால்தான் காலதாமதம் ஏற்படுகிறது என்றும், அது திருப்பி அனுப்பப் பட்டு விட்டதா, இல்லையா என்று சொல்லாமலே கேளாக் காதினர் என்று சொல்வதைவிட, எதனால் திருப்பி அனுப்பப் பட்டது? அப்பொழுது சட்டரீதியாக நாம் அனுப்பாத காரணத்தால்தான் திருப்பி அனுப்பப்பட்டதா என்றும், பத்திரிகைச் செய்தியில் அப்படி வெளியிடப் பட்டிருக்கிறது என்பதையும் அரசு அறியுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் இங்கே சொல்லுகிறபோது, திருப்பி அனுப்பப்பட்டதாக எங்குமே குறிப்பிடவில்லை. அனுமதி வரவில்லையென்றுதான் தெரிவித்தேன். எனக்கு இருக்கிற நம்பிக்கை, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் இருக்கிற சட்டத் துறை, மற்றச் சட்டத் துறைகளைவிட, அனுபவம் மிக்கவர்கள், ஆற்றல் மிக்கவர்கள், சட்டத்தை நன்கு அறிந்தவர்களைக் கொண்டதாகத்தான் இருக்கிறது என்று நான் கருதுகிறேன், எனக்கு நம்பிக்கையிருக்கிறது. சட்டத் துறை நன்றாக ஆராய்ந்து முறையாகத்தான் அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சேர்ந்திருக்கிற தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பெரிய நிலப் பிரபு, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை பினாமியாக வைத்துக் கொண்டிருப்பவர், நான் மற்றவர்களைக் கண்காணிக்கிற இடத்திலே இருக்கிறேன் என்று சொல்லி அரசை மிரட்டுகிறார்களே, அப்படிப்பட்டவர்கள் வைத்திருக்கிற பினாமி நிலங்களை எடுப்பதற்கு விசேஷமான புலன் ஆய்வுத் துறை ஒன்றை, ரெவின்யூ துறையின்கீழ் உடனடியாக அமைத்துச் செயல்பட இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பது இங்கே பிரச்சனை அல்ல. ஆனால், அரசை மிரட்டுகிறார்கள் என்றால், எந்த அரசை என்று குறிப்பிடவில்லை. மத்திய அரசா, மாநில அரசா? ஆனால், மத்திய அரசை மிரட்டுகிறாரா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. எனக்குச் செய்தி வருவதற்கு நியாயம் இல்லை. ஆனால் மாநில அரசை மிரட்டியதற்கு ஆதாரம் இல்லை. மிரட்டவும் முடியாது. துணிவும் இருக்காது.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து வினா எண். 692......(குறுக்கீடு). எல்லோருக்கும் அனுமதி கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை. மூலக் கேள்வி போட்டவர் இரண்டு கேள்விகள் கேட்டார். ஏற்கனவே 4 கேள்விகளுக்கு 44 நிமிஷங்கள் ஆகியிருக்கின்றன. உறுப்பினர்கள் இவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தால் அவர்களே இந்தக் கேள்வியை கேட்டிருக்க வேண்டும். யாரோ போட்ட கேள்விக்குள்ளே நுழைந்து கேள்வி கேட்பது முறையாகாது.

டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு உறுப்பினரை கேள்வி கேட்க அனுமதிப்பதும், அனுமதிக்காமல் இருப்பதும் தங்களுக்குள்ள உரிமை, அதிகாரம். அதிலே நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால் யாரோ போட்ட கேள்விக்கு உள்ளே நுழைந்து கேள்வி கேட்க இடம் இல்லை என்று குறிப்பிட்டீர்கள். இந்த அவையின் மரபு, எந்த ஒரு கேள்வியிலும் அமைச்சர் தருகிற பதிலை ஒட்டி மற்ற உறுப்பினர் கேள்வி கேட்பதற்கு உரிமை உண்டு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு உறுப்பினர் போட்ட கேள்வியில் இன்னொரு உறுப்பினர் துணைக் கேள்வி கேட்கும் வாய்ப்பு என்று மாற்றிக் கொள்ளலாம்.

## சென்னை மத்திய சிறையை செங்குன்றத்திற்கு மாற்றுதல்.

*வினா எண். 692.—திரு. து. புருஷோத்தமன், திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை மத்திய சிறையை செங்குன்றத்திற்கு மாற்றும் யோசனை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. பி. பொன்னையன் : செங்குன்றத்திற்கு அருகாமையில் உள்ள புழல் கிராமத்தில் சிறைத் துறைக்குச் சொந்தமான 139.50 ஏக்கர் நிலத்தில் புதிய மத்திய சிறையை நவீன முறையில் கட்டும் பணி, அரசின் தீவிர பரிசிலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு சிறு குற்றங்கள் புரிந்து ...

[1981 ஏப்ரல் 15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி, சென்னை சிறையை செங்குன்றம் மாற்றுவது குறித்து, அதை ஒட்டிக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குற்றவாளிகளைக் கோர்ட்டுக்கு கொண்டு வரும் போது அவர்களுக்கு போதிய எஸ்கார்ட்டு போலீஸ் இல்லாத காரணத்தால் அவர்களை சிறையிலே வைத்திருக்கின்ற நிலைமை இருக்கின்றது. இதன் காரணமாக சிறையில் கூட்டம் அதிகமாக இருக்கின்றது. எனவே இத்தகைய சிறு குற்றங்களை விசாரிப்பதற்காக மீண்டும் நடமாடும் கோர்ட்டு கொண்டு வரப் படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, ரிமாண்டு பிரிசனர்சைப் பொறுத்தவரையில் அவர்களை நீதிமன்றத்திற்கு விரைவில் கொண்டு வருவதற்கு இன்னும் அதிக மான காவலரைப் போடுவதென அரசு தீர்மானித்திருக்கிறது. நடமாடும் நீதிமன்றத்தைக் குறித்து அரசு மீண்டும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஒரு தடவை ஜெயிலுக்குப் போனவர்கள் மறு தடவை போகாமல் இருக்க மாட்டேன் என்று சொல்லுகிற அளவுக்கு குற்றங்கள் செய்கின்றவர்கள், மீண்டும் ஏதாவது குற்றங்கள் செய்து ஜெயிலுக்கு வருகிறார்கள். அவர்களை எல்லாம் சீர் திருத்துவதற்கு, கைதிகள் எப்படி திருந்த வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் பல்லாண்டு வாழ்க என்னும் திரைப்படத்தில் காட்டப்படுகிறது. அந்தத் திரைப்படத்தை மீண்டும் மீண்டும் வாரம் ஒரு முறை போட்டால், அவர்கள் திருந்த வாய்ப்பு இருக்கும். சிறையிலும் நெரிசல் குறையும். எனவே அரசு இது குறித்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஜெயில் ரிபார்ம்ஸ் கமிஷன் பல ஆய்வுகளை செய்து, புனர் வாழ்வு அளித்தல், சிறைக் கைதிகளைச் சீர்திருத்துதல் போன்ற பணிகளை எப்படி நடத்த வேண்டும் என்று அறிவுரை கூறி இருக்கிறது. பல்லாண்டு வாழ்க படத்திலே வரும் சில கொள்கைகளும் இந்த ஜெயில் ரிபார்ம்ஸ் கமிஷன் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையில் தூக்குதண்டனை பெற்ற கைதிகளும் இருப் பார்கள், அவர்களைப் பார்த்து பல்லாண்டு வாழ்க என்று சொன் னால், அது பலிக்குமா ?



1981 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக் கனி கூறியது, மீண்டும் மீண்டும் சிறைக்கு வருபவர்களை திருத்தி வாழ வழி செய்வது என்ற அடிப்படையில் கூறி இருக்கிறார்கள்.

உரமூட்டைகள் விற்பனை.

*வினா எண். 693 : திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1980 ஆம் ஆண்டு தொடக்கத்தில் உரவிலையை மத்திய அரசால் உயர்த்திய சமயம் தமிழகத்திலுள்ள கூட்டுறவு சங்கங் களில் கையிருப்பிலிருந்த உர மூட்டைகளை முன் தேதியிட்டு பொறுப்பிலிருந்தவர்கள் விற்று விட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அவர்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(முற்பகல் 9-50).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) சில இடங்களில் அவ்வாறு நடந்து இருக்கக்கூடும் என சந்தேகம் உள்ளது.

(ஆ) அவ்வாறு முன் தேதியிட்டு விற்பனை செய்யப்பட்ட தாகச் சந்தேகப்படும் அளவு உரங்களுக்கு விலை வித்தியாசத் தொகையை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து விசாரணைக்குப் பின் வசூலிக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஊழியர்கள், அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை விசாரணைக்குப் பின் எடுக்கப்பட உள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும்பான்மையான கூட்டுறவுச் சங்கங்களில் மைய அரசு உர விலையை ஏற்றி இருக்கிறது என்பதை அறிந்து ஒரே நாளில் இது போன்ற ரசீது போட்டு உரங்களை விற்று இருக்கிறார்கள். ஆகவே, புகார் வந்துள்ள கூட்டுறவு சங்கங்களில் மட்டும் இந்த விசாரணை என்று இல்லாமல், எந்தெந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் சாதாரண மான நாட்களில் தினந்தோறும் 2-3 மூட்டை உரங்கள் கூட விற்காதோ, அங்கெல்லாம் கூட மத்திய அரசு உர விலையை ஏற்றியவுடன், முன் தேதியிட்டு, கையிருப்பில் இருந்த உர மூட்டைகளை விற்றதாக நிலைமைகள் இருக்கின்றனவோ, அப்படிப்பட்ட அனைத்துச் சங்கங்களின்மீதும் உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக புகார் வந்த கூட்டுறவுச் சங்கங்களின் மீது தான் நடவடிக்கை என்று இல்லை. வழக்க மாகவே மத்திய அரசு இப்படி உர விலை ஏற்றுவதாக உத் தேசித்து வருகிறது என்று பத்திரிகையில் செய்தி வந்தவுடன், ஆங்காங்குள்ள பல கூட்டுறவு சங்கங்களில் முன் தேதியிட்டு இப்படிப்பட்ட விற்பனை செய்து விடுவதும் அல்லது விவசாயி களையே கூட உடந்தையாக வைத்துக் கொண்டு திடீரென்று ஒரே நாளில் இதை விற்பனை செய்து விடுவதும் பல ஆண்டு காலமாக, ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகிறது. அந்த அடிப்படையில் மொத்தமுள்ள 4537 கூட்டுறவு மற்றும் சில்லரை விற்பனை நிலையங்களில் இப்படிப்பட்ட ஆய்வு நடத்தி, இது பற்றி விசாரித்ததில் கிட்டத்தட்ட 122 சங்கங் களில் இது போன்ற தவறுகள் நடந்து இருக்கக் கூடும் என்கிற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் ஒரே நாளில் திடீரென்று விற்பனை ஆகியிருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உரவிலை உயர்ந்த போது, காட்பாடி தொகுதி யில் உள்ள காந்தி நகரில் உள்ள கூட்டுறவு சங்கத்தில் 40 டன் யூரியா முன் தேதியிட்டு விற்கப்பட்டு, 25,000 ரூபாய் அள விற்கு அங்கேயுள்ள அலுவலர்கள் எடுத்துக் கொண்டது அரசுக்குத் தெரியுமா ? அது சம்பந்தமாக புகார் அரசுக்கு வந்துள்ளதா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தச் சங்கம் என்று தெரிவித் தால் நடவடிக்கை எடுக்க உறுதுணையாக இருக்கும். அலுவலர் கள் என்று இல்லை. கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தான் விற்பனை செய்யப்படுகிறது. மொத்தமுள்ள 4537 கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்கனவே தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மூலம் தான் இயங்கி வருகின்றன. எந்தச் சங்கம் என்று சுட்டிக்காட்டினால் தகவல் தரப்படும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, சென்ற ஆண்டும் பரவலாக இதே போன்ற ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் உர விலை ஏற்றியபோது, குறிப்பாக, வியாபாரிகள் வாங்கி வைத்து விட்டார்கள். அதே போல் இந்த ஆண்டும் மத்திய அரசாங்கம் விலை உயர்த்தப் போகிறது என்று தெரிந்தவுடன் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்தும் வியாபாரிகள் வாங்கிச் சென்று விட்டார்கள். அதன் காரண மாக விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, மார்ச்





மாதத்தில் பட்ஜெட் வரல போகிறது என்கிற நிலைமையில், ஒரு மாதத்திற்கு முன்பே இந்த அரசாங்கம் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இந்தத் தேதிக்குப் பிறகு உரம் யாருக்கும் விற்கக் கூடாது என்கிற அடிப்படையில் ஒரு பொது சர்குலர் அனுப்பி, அதை மீறி நடப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு என்பது அல்ல. ஒவ்வொரு ஆண்டும் இப்படி நடந்து கொண்டு இருப்பதாகத்தான் குறிப்பில் இருந்து தெரிய வருகிறது. சென்ற ஆண்டு நடந்தது போல் இந்த ஆண்டு நடந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் முன் கூட்டியே ஒரு உத்தரவு 4537 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பியுள்ளோம். அதில் இந்தத் தேதிக்குப் பின் உரம் விற்பனை செய்யக் கூடாது, ஸ்டாக் எடுக்க வேண்டும் என்று சொல்லியிருந்தோம். அப்படியிருந்தும் எப்படியோ சிலர் ஆங்கிலப் பத்திரிகையில் வந்த செய்தியை அடிப்படையாக வைத்து அதற்கு முன் தேதியிட்டு ரசீது போட்டு விற்று விட்டு இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 122 சங்கங்களில் இப்படி முன் தேதியிட்டு உரம் விற்பனை செய்யப் பட்டிருக்கிறது. வியாபாரி கள் மட்டுமல்ல, விவசாயிகளே கூட, வசதி படைத்த விவசாயி கள் சிறு சிறு விவசாயிகளைப் பிடித்து அவர்கள் பெயரில் வாங்கி, அதை விவசாயத்திற்குப் பயன்படுத்தாமல், அவர்கள் பெரு விவசாயிகளாக இருந்து, வியாபாரத்திலும் ஈடுபடுகிற கார ணத்தால் அதற்குப் பயன்படுத்தியுள்ளதாகத் தகவல் வந்து இருக்கிறது. அதற்காக வழக்குப் பதிவு செய்து விசாரிக்கப்பட்டு வருகிறது.

**திரு. என். பழனிவேல் :** துணைத் தலைவரவர்களே, மத்திய அரசு உரத்தின் விலையை முடிவு செய்து ஓராண்டுக்கு மேலாகி விட்டது. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் தேதியிட்டு 120 சங்கங்களுக்கு மேல் உரத்தை அதிக விலைக்கு விற்றதாகச் சொன்னார்கள். அப்படி அதிக விலைக்கு விற்ற, அந்தந்த மாவட்டத்தில் உள்ள அந்த அந்த சங்கத்தின் நிர்வாகிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப் போல சட்டப் பிரிவு 65-ன்படி 'என்குயரி' நடத்தியாக வேண்டும். இப்போது இருக்கிற பிரச்சினை என்னவென்றால் தவறு செய்திருக்கிற சங்கத்தை வேண்டுமானால் கலைத்து விட முடியும். பூர்வாங்க விசாரணைக்குப் பின்னால், அந்த விசாரணையின் அடிப்படையில் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இப்போது சந்தேகத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சந்தேகம் ஊர்ஜிதமானால் அந்த சொசைட்டியை சூப்பர்சீட் பண்ணலாம்; அலுவலர்களை பணி நீக்கம் செய்யலாம். இப்போது அவர்கள் 'சோ காஸ் நோட்டீசுக்கு' தந்திருக்கிற பதில் விவசாயிகளுக்கு உரத்தின் விலை ஏறும் என்று தெரிந்து விட்டதால் ஒரே நாளில் திடீரென்று எல்லா விவசாயிகளும் வந்து உரத்தை வாங்கி விட்டார்கள் என்று. ஆகவே, இதில் விவசாயிகளையும் விசாரிக்க வேண்டியிருக்கிறது.

### செங்கற்பட்டு கூட்டுறவு நகர வங்கி

*வினா எண் 694.— திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டு கூட்டுறவு அர்பன் வங்கி எண் 375 நிர்வாகம் பற்றி புகார் ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) அவை பற்றி என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. பி. பொன்னையன் :** (அ) மற்றும் (ஆ) திரு. எ. ருக்மாங்கதன் என்பவரிடமிருந்து புகார் மனுக்கள் பெறப்பட்டன. அவற்றின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, திரு. ருக்மாங்கதன் அவர்கள் அனுப்பிய புகார் கிடைத்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புகார் அனுப்பி நீண்ட நாள், ஏறத்தாழ 6 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்ட காரணத்தால் அதில் சம்பந்தப்பட்ட எவர் மீதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி. பொன்னையன் :** துணைத் தலைவரவர்களே, அவர்கள் கொடுத்திருக்கிற 5 புகார்கள் மீது விசாரிக்கப்பட்டு, சிலவற்றில் குற்றம் இல்லை என்றும் சிலவற்றில் குற்றம் ஊர்ஜிதம் ஆகியிருக்கிறது என்றும் தெரிந்த காரணத்தால், அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. யார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று பெயர் தரப்படவில்லை. மற்றபடி தவறு செய்தவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.



### புகளூர் நதி நீரேற்றுப் பாசன கூட்டுறவுச் சங்கம்.

* வினா எண் 695 — திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம் புகளூர் நதி நீரேற்றுப் பாசன கூட்டுறவு சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

(ஆ) அதன் மூலம் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன ?

(இ) அச்சங்கத்திற்குக் கட்டுப்பட்ட ஓரத்தை தளவாய்பாளையம், கோவிந்தம்பாளையம் திட்டப் பகுதிகள் பாசனம் பெறாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஈ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. பி. பொன்னையன் :** (அ) திருச்சி மாவட்டம் புகளூர் நதி நீரேற்றுப் பாசனக் கூட்டுறவு சங்கம் 1968 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) இச்சங்கத்தின் மூலம் சுமார் 2,214 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. ஆனால் சுமார் 1,101 ஏக்கர் நிலங்களுக்கு மட்டுமே தற்போது பாசன வசதி பெறும் வழி வகைகள் வகுக்கப்பட்டுள்ளன.

(இ) மற்றும் (ஈ) ஓரத்தை, தளவாய்பாளையம், கோவிந்தம்பாளையம் திட்டப் பகுதிகளுக்கான நிலத்தில் பாசனம் நடைபெற சில நடைமுறை இடைஞ்சல்கள் உள்ளன. இத்திட்டப் பகுதிகளுக்கான விசையேற்றங்கள் மூலத்திட்டமான "தெளிப்பான் முறைப் பாசனத்திற்" கேற்ப புகளூர் கால்வாயில் அமைக்கப்பட்டன. உறுப்பினர்களின் எதிர்ப்பின் காரணமாக தெளிப்பான் முறைப்பாசனம் கைவிடப்பட்டு சாதாரண பாசனம் அளிக்க வேண்டியிருப்பதால் புகளூர் கால்வாயிலிருந்து நீர் இறைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டு அதற்குப்

பதிலாக காவிரி நதியிலிருந்து நீர் இறைக்க வேண்டுமென பொதுப் பணித்துறை நிபந்தனை விதித்துள்ளது. எனவே விசையேற்றங்கள் புகளூர் கால்வாயிலிருந்து காவிரி நதிக்கு மாற்றப்பட வேண்டியுள்ளன. அவ்வாறு, மாற்றுவதானால் கூடுதல் செலவு ஏற்படும். மேலும் காவிரி நதியிலிருந்து இத்திட்டப் பகுதிகளுக்கு நீர் எடுத்துச் செல்லும் வழியில் தனியார் நிலங்கள் குறுக்கிடுகின்றன. அவ்வாறு குறுக்கிடும் நிலப் பகுதிகளை ஆர்ஜிதம் செய்து குழாய்கள் பதிக்க வேண்டி வரும்.

மேற்கூறிய இடைஞ்சல்கள் இன்றி இத்திட்டத்தினால் பயன் பெறும் விவசாயிகள் நலனும் மற்றும் புகளூர் கால்வாய் அருகிலுள்ள இத்திட்டத்தை சேராத மற்ற ஆயக்கட்டுதார்கள் நலனும் பாதிக்காத வகையில் பாசன வசதி செய்வதற்கான வழி வகைகளை தலைமைப் பொறியாளர் உதவியுடன் இச்சங்கத்தின் தலைவரான திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆராய்ந்து வருகிறார். மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவான அறிக்கை கிடைத்த பின் மேற்கொண்டு துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, தனியார்கள் இப்படிப்பட்ட நதி நீரேற்றுப் பாசனத்தை செயல்படுத்த ஆரம்பிக்கும்போது ஓராண்டு காலத்தில் முடிந்துவிடுகிறது. ஆனால் கூட்டுறவுத் துறையில் சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு வரும்போது, அமைச்சரவர்கள் சொன்னமாதிரி 1968-ல் ஆரம்பிக்கப்பட்டு 13 ஆண்டுகள் ஆகியும் இன்று வரையில் அந்தச் சங்கம் செயல்படவில்லை. அதனால் கூட்டுறவுத் துறையில் மக்களுக்கு நம்பிக்கை அற்றுப் போய்விடுகிறது. ஆகவே, விரைந்து செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே பல்லாண்டு காலமாக தூங்கிக்கொண்டிருந்த இந்தத் திட்டத்தின் நடைமுறையைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று நானே கூட முயற்சி செய்து, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அந்தக் குழுவை அமைத்து, அவரே அது பற்றி ஆராய்ந்து அறிக்கை தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். கூட்டுறவுத் துறையில் சில விதிமுறைகளை ஒட்டி சங்கடங்கள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுவதுபோல் அந்த விதிமுறைகளைத் தளர்த்தியும் நடைமுறைப்படுத்த அரசு உத்தரவிட்டிருக்கிறது.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு. பேரவைத் துணைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.





திரு. எம். சின்னசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசையேற்றங்களை புகளூர் கால்வாயிலிருந்து காவிரி நதிக்கு மாற்றவேண்டும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி மாற்றுகின்ற திட்டத்திற்கான செலவை விவசாயிகளிடமிருந்து வசூலிக்காமல் அந்தச் செலவை அரசே ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடமிருந்து அந்தச் செலவு குறித்து ஒரு தொகை வசூலிக்கப்படும்.

### பம்மல் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 696— திரு. பம்மல் நல்லதம்பி மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பம்மல் பகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் புகுந்து குடிநீரைக் கெடுத்தல், சுகாதார கேடுகளை விளைவிப்பதைத் தடுக்க பாதாள சாக்கடைத் திட்டத்தின் மூலம் கழிவு நீரை அப்புறப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டத்தை ஏற்று உடன் செயல்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம், (அ) திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் மக்களின் சுகாதாரத்தைக் கெடுப்பதோடு மட்டுமல்லாமல் குடிநீரையும் கெடுக்கின்ற அளவுக்கு இருக்கின்றது. இந்த நிலை பம்மல் பகுதியில் மட்டுமல்ல. பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை போன்ற பகுதிகளிலேயும் இதனால் குடிநீர் கெட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக இந்தக் கழிவுநீரை வெளியேற்றுவதில் ஒரு புதுத் திட்டத்தை அரசு ஏற்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த மாதிரிப் பிரச்சினைகளுக்கு அரசு இயக்குநர், பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவம், சென்னை-6 அவர்களிடத்தில் தொடர்பு கொண்டு இதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும். அது தான் முறை. அதற்கேற்றபடி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் காரணமாக குடிநீரும் கெட்டுவிடுகின்ற காரணத்தால் வாணியம்பாடியில் தோல் பதனிடும் உரிமையாளர்கள் பாரத் லெதர் கார்ப்பரேஷன் மூலமாக 40 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் கோரி இருப்பதாகத் தகவல் வந்துள்ளது. அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: துணைத்தலைவரவர்களே, பொதுவாகவே தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீரால் அந்தத் தொழிற்சாலைகளுக்கு கீழ் உள்ள மக்களின் குடிநீரும் பாதிக்கப்படுகின்றது. பயிர்களும் விளையாமல் சாவி ஆகிவிடுகின்றன. ஆகவே ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஒரு செப்டிக் டாங்க் கட்டி கழிவு நீரைத் தேக்கி வைக்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. மாண்புமிகு திரு. இராஜா முகமது அவர்கள் கூட இந்தச் சபையிலே அது குறித்து பலமுறை குறிப்பிட்டு இருக்கிறார்கள், அந்தத் தொழிற்சாலைகளுக்கு தாக்கீது அனுப்பப்பட்டது என்று. அந்தத் தொழிற்சாலைகள் அவ்வாறு செய்யாவிடில் அவற்றின் லைசன்ஸ் கேன்சல் செய்யப்படும் என்றுகூட தாக்கீது அனுப்பப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அந்தத் தாக்கீது தாக்கீதாகவே போய்விட்டதே தவிர நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே ஒரு குறிப்பிட்ட தேதியை நிர்ணயித்து அந்த தேதிக்குள் எல்லா தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் கழிவு நீரைத் தேக்குவதற்கென்று டாங்க் கட்டவேண்டும் என்றும் அவ்வாறு கட்டாவிட்டால் லைசன்ஸ் ரத்து செய்யப்படும் என்றும் அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் உள்ளடக்கிய ஒரு கேள்வியைக் கேட்டால் அதற்குத் தகுந்த பதில் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்குக் கூட விவரம் இல்லை என்றால் என்ன அர்த்தம் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தகவல் தன்னிடம் இல்லை என்று சொல்லும்போது என்ன செய்ய முடியும்?

திரு. துரைமுருகன் : இதற்கெல்லாம் பதிலைத் தெரிந்து கொண்டு வரவேண்டாமா ? The Hon. Minister must come prepared.

நவமணி தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பாக்கிப் பணம்.

* வினா எண். 697 திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) "நவமணி" நாளிதழ் நின்றுவிட்டபோதிலும் அதனுடைய தொழிலாளர்களுக்கு இதுவரை சேரவேண்டிய எந்தப் பணமும் கொடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) விரைவில் தீர்க்கப்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

(இ) "நவமணி" அலுவலகத்தில் இருக்கும் அச்சு இயந்திரங்கள், மற்றப் பொருள்களின் விவரம் இவ்வரசுக்கு தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (அ) மற்றும் (ஆ) "நவமணி" நாளிதழை நடத்தி வந்த கூட்டுறவு நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் கலைக்கப்பட்டது. இதற்காக நியமிக்கப்பட்ட கலைப்பு அதிகாரி நிர்வாகத்திற்குச் சொந்தமான சொத்துக்களை வரப்பெற்றும் (தம் வசப்படுத்தி—(Realise the assets) கலைக்கப்பட்ட நிர்வாகம் கொடுக்க வேண்டியவர்களுக்கு முழுமையாகவோ அல்லது விகிதாச்சாரப்படியோ நிலைமைக்குத் தக்கவாறும், தக்க வரிசைப்படியும் சட்டப்படி கொடுக்கும் பொறுப்பை ஏற்றுள்ளார். கலைப்பு அதிகாரியின் நிர்வாகத்தில் தலையிடுவது சட்டப்படி தக்கதன்று.

(இ) தெரியும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நவமணியை தொழில் கூட்டுறவாக ஆக்கி கொடுக்கப்பட்ட கடன் ரூ. 12 இலட்சமும் நவமணியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படவில்லை என்பது உண்மையா ? நவமணியின் ஆசிரியர்கள்

திரு. ராமலிங்கம், திரு. சன்முகவேல் ஆகிய இருவரும் காரணம் இல்லாமல் டிஸ்மிஸ் செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா? அவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்க தொழில் கோர்ட்டு இட்ட ஆணையை ஹைக்கோர்ட் ஊர்ஜிதம் செய்த பிறகும் நஷ்டயீடு கொடுக்காமல் இருப்பதைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கத்தின் பெருவாரியான சொத்துக்கள் விற்றுப் பணமாக்கும் நிலையில் உள்ளதினால், முன்னாள் ஊழியர்களின் விண்ணப்பங்கள் மீது இன்னும் பட்டுவாடா செய்ய முடியாமல் நிலுவையில் உள்ளன. கலைப்பு அதிகாரி பழைய ஊழியர்களின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டிய தொகையினை தீர்மானம் செய்து வருகிறார். கலைப்பு அதிகாரி தேவையான நடவடிக்கை எடுத்து விசாரித்து அவரவர்களுக்கு.உரிய பணத்தை முன்னுரிமை வரிசைப் பிரகாரம் நிதி நிலைமைக்கு ஏற்றவாறும், சட்டத்தின்படியும் தொகையைக் கொடுப்பார்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நவமணி பத்திரிகை அலுவலகத்தில் இருந்த அச்சு இயந்திரங்கள் போன்ற சொத்துக்கள் எல்லாம் மக்கள் குரல் பத்திரிகைக்கு கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறு கொடுக்கப்பட்டது விற்பனை மூலமாகவா? ஏலத்தின் மூலமாகவா?டெண்டர்கள் மூலமாகவா?என்பதை அறிய விரும்புவதோடு அந்த விற்பனையின் மதிப்பு எவ்வளவு? அதிலே யார் யார் கலந்து கொண்டார்கள். விற்பனையான இயந்திரங்கள் என்னென்ன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தத் தகவல்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்கு பதில் சேகரித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நவமணியின் அச்சுஇயந்திரங்களை விற்பனை செய்வதில் டெண்டர் கோரப்பட்டதா? அதில் அதிகப்பட்சத் தொகை என்ன? ஜனாதிபதி ஆட்சியின்போது கொடுக்கப்பட்ட தொகையைவிட அதிகமாக தொகையைக் கொடுத்து மக்கள் குரல் பத்திரிகை அதை வாங்கியிருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவலும் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நவமணியின் இயந்திரங்களை மக்கள் குரலுக்குக் கொடுத்தது சம்பந்தமான தகவல்களை இந்தக் கூட்டத் தொடரிலேயே அச்சடித்து உறுப்பினர்களுக்கு நகல் அளிக்கும் வகையில், அவை மேசைமுன் வைக்கப்படுமா என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் விரிவான அறிக்கை அச்சடித்து அவைமுன் வைக்கப்படும்.

## கிராமத் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை.

* வினா எண். 698—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமத் தொழிலாளர்களுக்கு கிராஜுட்டி திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென மாநில தொழிலாளர் அமைச்சர்களின் மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) 19-7-80 மற்றும் 20-7-80 ஆகிய தினங்களில் மாநில தொழிலாளர்கள் அமைச்சர்களின் மகாநாடு புதுடெல்லியில் நடத்தப்பட்டது. கிராமத் தொழிலாளர்களுக்கு கிராஜுட்டி திட்டத்தை அமுல்படுத்துவது சம்பந்தமாக அம்மகாநாடு விவாதித்தது. 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள கிராம மற்றும் இன்பார்மல் (informal) பகுதிகளை உள்ளடக்கிய அனைத்து நிறுவனங்களுக்கும் பணிக் கொடை வழங்கல் சட்டம் பொருந்துமாறு செய்யப்பட வேண்டும் என அம் மகாநாடு கருத்து கொண்டுள்ளது. அவ்வாறே, இங்ஙனம் செய்யப்படும் முன்பு பணிக்கொடை நிதி ஏற்படுத்துவது சம்பந்த

மாக தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும். ஆய்வாளர்கள் நியமனத்திற்கும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். 10—க்கும் குறைவாக டணிக்கு அமர்த்தியுள்ள நிறுவனங்களுக்கு இச்சட்டம் அமுல்படுத்தப்பட சட்டத்தில் இசைவளிக்கும் வழி வகை செய்யப்பட வேண்டும் எனவும் அம்மகாநாட்டில் தெரி விக்கப்பட்டுள்ளது. பணிக்கொடை வழங்கல் சட்டம் மையச் சட்ட மாக இருப்பதால், கிராமத் தொழிலாளர்களுக்கு இச்சட்டத்தை அமுல்படுத்துவது குறித்து இந்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டம் மைய அரசினால் முடிவு எடுக்கப்பட வேண்டியதாக இருக்கிறது என்பது ஒருபுறம் இருக்க, இந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேற நல்ல முறையில் அமுல்படுத்துவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று மாநில அரசு ஏதாவது ஆலோசனைகளை கூறியிருக்கிறதா? அதற்கு மைய அரசிடமிருந்து ஏதாவது பதில் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெல்லியில் நடந்த மகாநாட்டில் இந்த அரசின் சார்பாக நான் கலந்து கொண் டேன். அதில் நாங்கள் எல்லாம் பேசிய பிறகுதான் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குடிநீர் வாரிய பராமரிப்பிலுள்ள மின்சார மோட்டார்களை பழுது பார்ப்பதில் ஏற்படும் காலதாமதம்.

*வினா எண் 699—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) குடிநீர் சப்ளை செய்யும் மின்சார மோட்டார்கள் பழுதுபட்டால் அதனைப் புதுப்பிக்க குடிநீர் வாரிய பராமரிப்புத் துறை காலதாமதம் செய்வதால் குடிநீர் சப்ளை மாதக்கணக் கில் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதனைப் போக்க அரசு என்ன நட வடிக்கை எடுத்துள்ளது?





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) பழுதுகளின் தன்மையைப் பொருத்து பராமரிப்பில் சிறிது காலதாமதம் ஏற்படலாம்.

(ஆ) தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்தின் பராமரிப்புப் பிரிவினை தக்கவாறு பலப்படுத்தி பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

[முற்பகல் 10–10]

திரு. எம். சின்னசாமி : நகராட்சிகளுக்கு தனியாக ஒரு பராமரிப்புத் துறை இருப்பதுபோல் ஊராட்சி ஒன்றியங்களிலும் இந்த மோட்டார்கள் பராமரிக்கப்பட தனியாக ஒரு பிரிவை குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தமிழ்நாடு ஊரக குடிநீர் திட்டத்தின் கீழ் பொருத்தப்பட்டுள்ள கை பம்ப்கள், மின்விசைப் பம்ப்கள் பராமரிப்பு, உள்ளாட்சி நிறுவனங்கள் சரியாகச் செய்யாததால் குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அது முறையாகச் செயல்பட்டு வருகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பஞ்சாயத்து ஒன்றியங்களில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்கள் ஏற்கனவே பஞ்சாயத்து ஒன்றியங்களின் நிர்வாகத்தில் இருந்தது. அப்போது குறைபாடு கள் அதிக அளவில் இல்லை. நானே ஒரு பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருந்திருக்கிறேன். ஆனால் குடிநீர் வடிகால் வாரி யத்தின் மேற்பார்வையில் எடுத்ததற்குப் பிறகு நம் மாநிலத் திலே பல ஆயிரக்கணக்கான மோட்டார்கள் ரிப்பேர் செய்யப் படாமல் இருக்கின்றன. இன்றையதினம் கூட 943 மோட்டார் கள் ரிப்பேர் செய்யப்படாமல் இருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அந்த வாரியத்தைச் சேர்ந்தவர்களே சொல்லி இருக்கிறார்கள். ஏன் இவ்வளவு சிரமத்தை அமைச்சர் அவர்கள் சுமக்க வேண்டும். அந்தந்த யூனியன்களிடமே அந்தப் பொறுப்பை ஒப்படைத்து விட்டால் அங்குள்ள குறையபாடுகளை அங்குள்ள ஆணையர்களிடம் எடுத்துச் சொல்லி அவற்றைச் சரிபார்த்துக் கொள்வார்கள் அல்லவா? அது சம்பந்தமாக ஏன் ஒரு முடிவு எடுக்கக்கூடாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சுமையைத் தூக்குவ தற்குப் பயந்தால் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற கருத்து பரிசீலிக்கப் படவேண்டிய ஒரு கருத்து என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் செங்கல்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு ஆகிய

மாவட்டங்களில் பரீட்சார்த்தமாக செய்து பார்த்து. குறிப்பாக ஊரகக் குடிநீர் திட்டத்தின்கீழ் பொருத்தப்பட்டுள்ள கைப்பம்புகள், மின்விசைப் பம்புகள் பராமரிப்பு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கனவே நான் அவர்களிடம் நேரில் சொல்லியிருக்கிறேன். இந்தக் கருத்து மறு பரிசீலனை செய்யப்பட வேண்டிய கருத்து என்பதை அரசு ஏற்றுக்கொள்கிறது.

**திரு. எம். சின்னசாமி :** பொதுமக்கள் அதிகமாக வந்து குறைகளைச் சொல்கிற இடம் பஞ்சாயத்து போர்ட், பஞ்சாயத்து யூனியன் ஆகும். ஆகவே ஊரில் மோட்டார்கள் பழுதுபட்டால் குடிநீர் வடிகால் வாரிய என்ஜினியர்களை போய்ப் பார்ப்பது என்பது அரிதாக இருக்கிறது. எனவே குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளை பஞ்சாயத்துகளில், ஊராட்சி ஒன்றியங்களில் போடுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இந்தப் பராமரிப்பு வேலையில் இப்போது ஒரு சிறிய மாற்றத்தைச்செய்திருக்கிறோம். (1) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தனித்தனியே ஒரு பொருத்துனரும், (2) 1,000 பம்ப்களுக்கு ஒரு பராமரிப்புக் குழு என்பதற்குப் பதிலாக 500 பம்ப்களுக்கு ஒரு பராமரிப்புக் குழுவும், (3) மேலும் நான்கு புதிய பராமரிப்புக் குழுக்களையும் அமைக்க வாரியத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது அளித்துள்ள அனுமதியின்படி ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு உதவிப் பொறியாளர் , மூன்று மின் இணைப்பாளர்கள், மற்றும் ஒரு ஜிப்புடன் கூட ஓட்டுநர் இவர்களைக் கொண்ட 15 பராமரிப்புக் குழுக்கள் பழுதுகளை உடனுக்குடன் கவனித்து சரி செய்யும். இதையும் மீறி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு திருப்தியில்லையென்றால் நிச்சயமாக இதை மீண்டும் பரிசிலனை செய்வோம்.

**திரு. ஆர். தியாகராசன் :** இந்த குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரையில் பொறுப்பு பஞ்சாயத்துக்கு இருக்கிறதா அல்லது வாரியத்திற்கு இருக்கிறதா என்றால் பல கிராமங்களில் பைப்புகளுக்கு மேல் நிலையில் உள்ளவற்றின் பொறுப்பு பஞ்சாயத்து ஒன்றியங்களிடமும், மோட்டார், ஸ்டார்ட்டர்ஸ் போன்றவற்றின் பொறுப்பு வாரியத்திடமும் இருக்கிற காரணத்தால் இவர்களுக்கு இடையே போட்டி ஏற்பட்டு சில கிராமங்களில் பொறுப்பு எனக்கு இல்லை, உரிமை எனக்கு இல்லை என்று பொறுப்பை ஏற்பதில் சிக்கல்கள் உள்ளன. எனவே முழுப் பொறுப்பையும் ஒன்றியத்தினிடமோ அல்லது வாரியத்தினிடமோ ஒப்படைக்க வேண்டும். உதாரணத்திற்கு முதலை கிராமத்தை எடுத்துக் கொண்டால் பொறுப்பை யார் ஏற்பது என்ற சிக்கல்



இருக்கிறது. காயில்ஸ்,ஸ்டார்ட்டர்ஸ் போன்றவைபழுதுபட்டால்
ஆறு மாதங்களானாலும் கூட அவை சீர் செய்யப்படாமல்
இருக்கின்றன. இதை அரசு அறியுமா? எனவே மாவட்ட வாரி
யாக ஒரு ஒர்க்ஷாப் வைத்து காயில்ஸ், ஸ்டார்ட்டர்ஸ்
போன்றவை பழுதுபட்டால் ரிப்பேர் செய்ய எலெக்ட்ரீஷியன்ஸ்
போட அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த பராமரிப்பு பற்றிய முழுவிவரங்களை
யும் பரிசீலனை செய்ய வேண்டுமென்றால், மாற்று யோசனை
களையும் ஏற்றுக் கொண்டு, அவைகளை எப்படிச் செய்யலாம்
என்று இந்த அரசு கருதியிருக்கிறது என்பதை மீண்டும் ஒரு
முறை நான் வலியுறுத்தி சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த வறட்சிக் காலத்தில் இந்த பராமரிப்புப் பணி
சரிவர செய்யப்படவில்லை. குறிப்பாக, வட ஆற்காடு மாவட்
டத்தில் பூராவும் பவர் பம்புகள் பழுதடைந்த சூழ்நிலையில்,
பொது மக்கள் குடி தண்ணீர் பிரச்சினையில் பெரிதும் பாதிக்கப்
பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே, மாவட்ட வளர்ச்சி மன்றக்
கூட்டத்திலே ஒருமனதாக தீர்மானம் போட்டு, அதை இந்த
அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் இதை ஆண்டுக்கணக்காக பரீட்சார்த்தமாக பரிசிலனை
செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதனால்
பொது மக்கள் பெரிதும் தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்
கிறார்கள். அதனால், அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து உட
னடியாக இதை ரத்து செய்து, உள்ளாட்சித் துறையிடம் ஒப்
படைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்
வதற்கு மாறாக எல்லோரும் இதுபற்றி என்னைப் பாராட்டிக்
கொண்டிருக்கிறார்கள். "பெட்டிங் மி ஆன் தி பேக்"— குடி
நீர் வாரியம் நன்றாக வேலை செய்கிறது என்று என்னை எல்
லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே மாண்பு
மிகு உறுப்பினர்கள் சொல்வதுபோல், குறைகள் இருக்குமானால்
பரிசீலனை செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன் ஏற்றுக்
கொண்டேன் என்று பொருள் அல்ல. மாண்புமிகு உறுப்பினர்
கள் மிகவும் கஷ்டப்பட்டு, தகவல்களைச் சேகரித்திருப்பார்கள்.
அதற்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதால், பரிசீலனை
செய்கிறேன் என்று சொல்கிறேன். ஆனால், இந்த வறட்சிப்
பணியில் 'தி பெஸ்ட் ஆர்கனைசேஷன்' அழகாக சிரமப்பட்டு
திருப்திகரமாக வேலை செய்து கொண்டு வரும் இலாக்காக்களில்
குடிநீர் வாரியமும் ஒன்று. அநேகமாக எல்லோரும் என்னைப்
பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியோடு புதிதாக சேர்க்கப்பட்டிருக்கின்ற, 1978 ஆம் ஆண்டுக்கு முன்பாக வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியப் பிரிவாக இருந்த 32, 33 ஆம் வட்டங்களில் பஞ்சாயத்துப் பிரிவாக இருந்தபோது, மின்சார மோட்டார்களை வைத்து சிறுசிறு தண்ணீர் திட்டங்களை நிறைவேற்றி வந்தார்கள். இன்றைக்கு மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட பிறகு, தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக, அந்தப் பகுதி மக்கள் பல அல்லல்களுக்கும், தொல்லைகளுக்கும் ஆளாகும் நிலைமையில் இருக்கிறார்கள். அப்படி இருக்கின்றபோது, 10-க்கும் மேற்பட்ட மின்சார மோட்டார்களை பழுதுபார்த்து, மற்றும் மதராஸ் மெட்ரோபாலிடன் வாட்டர் சப்ளை அண்டு சுவரேஜ் போர்டு மூலமாக உடனடியாக இப் பணி தற்காலிகமாக நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வடகரை கிராம மேட்டுக்கால் பாதை ஓரமாகச் செல்லும் கால்வாய்.

வினா எண். 700—திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்காசி தாலுக்கா வடகரை கிராமத்தில் செங்குளம் டேங்கிலிருந்து கருப்புசாமி கோவில் வரையுள்ள மேட்டுக்கால் ரோட்டின் ஓரமாகச் செல்லுகின்ற கால்வாயை அகலப்படுத்தி தனியார் ஆக்கிரமிப்புகளைத் தடுத்து கல்வர்ட் கட்டவும் மேற்படி கால்வாய் செல்லுமிடங்களிலுள்ள பத்து மடைகளையும் புதுப்பித்துக் கட்டித் தரவும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மேட்டுக்கால் வாய்க்காலின் சிறப்பு மராமத்துப் பணி சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது என்றும், வாய்க்காலில் போதுமான அளவு தண்ணீர் செல்ல தற்போதுள்ள அகலமே போதுமானது என்றும் சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். இது போன்ற இடங்களில் போக்குவரத்திற்கு சிறுபாலங்கள் (culverts) கட்டுதல் நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையைச் சேர்ந்தது.





ஆக்கிரமிப்பு சம்பந்தப்பட்ட வரையில், வாய்க்காலின் மேல் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டதாகவும், மற்ற இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் சிறுபாசன தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். மதகுகளைப் புதுப்பிக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேட்டுக்கால் பகுதியில் குறிப்பாக, தலையிலிருந்து வடகரைக்கு வருகிற மேட்டுக்கால் பகுதியில் ஏற்பட்டிருக்கின்ற தடைகளை அகற்றியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஓரளவுக்கு அந்தப் பணி நடந்திருக்கிறது. ஆனால், பூரணமாக அந்தப் பணி நிறைவேற்றப்படவில்லை. இன்னும் அந்தப் பகுதியில் தடைகளை அகற்ற வேண்டிய வேலைகள் இருக்கின்றன. அதை நிவர்த்திக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே இராஜா முகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற குறிப்பின்படி மேட்டுக்கால்வாயின் பகுதிகளில் இருந்த தடைகள் நீக்கப்பட்டிருக்கின்றன. வேலை முடிந்துவிட்டது என்று குறிப்பு தரப்பட்டிருக்கிறது. திருப்திகரமாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுவார்களானால், அதுகுறித்து அரசு பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறது.

திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பாசனத் துறை சம்பந்தமாக மேலும் பரிசீலனை செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு அந்தப் பகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக வங்கி உதவியுடன் பாசனக் குளங்களை நவீனப்படுத்தும் திட்டம்.

*வினா எண். 701—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 500 ஏக்கருக்கும் அதிகமாக உள்ள ஆயக்கட்டுகளுக்கு பாசன வசதி தரும் குளங்களை உலக வங்கியின் உதவி கொண்டு நவீனப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் கருத்திலுள்ளதா ?

[1981 ஏப்ரல் 15

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனை குளங்கள் ஆய்வுக்காக ரடுத்துக்கொள்ளப்பட்டன ?

(இ) ஆய்வுகளின் மீது அரசு என்ன முடிவு எடுத்துள்ளது ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) ஆம்.

(ஆ) ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் தற்போது சில முன்னோடித் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. செங்கல்பட்டு மாவட்டத்தில் பிள்ளைப்பாக்கம் குளத்தை நவீனப் படுத்துவதற்கும், இராமநாதபுரம் மாவட்டத்தில் கட்டிக்குளம் மற்றும் கம்பிக்குடி குளங்களை நவீனப்படுத்தாமல் தல ஆய்வு களை ( Field Studies ) மேற்கொள்வதற்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் ஐந்து ஏரிகளை நவீனப்படுத் தும் முன்னோடித் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இந்த ஆய்வுகளின் மீதான இறுதி அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது.

[முற்பகல் 10–20]

**திரு. மி. வின்செண்ட் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது குளங்கள் மூலம் பாசன வசதி பெறும் மொத்த ஏக்கர் எவ்வளவு ? நவீனப்படுத்துவதின் மூலம் எத்தனை ஏக்கர் நிலம் கூடுதலாக பாசன வசதி பெறும் ? இந்த முன்னோடித் திட்டம் குமரி மாவட்டத்திற்கு உண்டா ? நாகர்கோவில் தொகுதியைச் சேர்ந்த மூன்று மைல் நீளமுள்ள பாக்குளம் நவீனப்படுத்தப்பட்டு பல்லாயிரக்கணக்கான ஏக்கர் அதிக சாகுபடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 500 ஏரிகளின் தற்போதைய மொத்த ஆயக்கட்டு ஆறு இலட்சம் ஏக்கர் ; சுமார் 120 கோடி ரூபாய் செலவழிப்பதின் மூலமாக மேலும் கூடுதலாக ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி அளிக்கலாம். 5 இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கருக்கு பாசன வசதியை உறுதிப் படுத்தும் வாய்ப்பும் இருக்கிறது என்று குறிப்புகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஒரு ஏரியை பற்றிக் குறிப்பிட்டிருக் கிறார்கள். 500 ஏரிகளை நவீனப்படுத்துகிறபோது நிச்சயமாக அந்த ஏரியும் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 15]

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்வது, இப் பொழுது பருவ மழையும் மாறிவிட்டது ; தண்ணீர் வரத்தும் குறைவாக இருக்கின்ற இந்த நேரத்தில் நீர்பாசனத் துறை மூலமாக ஒவ்வொரு பஞ்சாயத்து ஏரியாவிற்கும் ஒவ்வொரு குளத்தை ஆழப்படுத்திக் கொடுத்தால் விவசாயிகள் தண்ணீர் வரு வதற்கு முன்னால் நாற்று இட்டு பயிர் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். நீர்பாசனத் துறை மூலமாக குளங்களை ஆழப்படுத் திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மானியக் கோரிக்கையில் அரசினுடைய செயற்குறிப்புகளை விளக்கி இருக் கிறோம். இப்போது மூலக் கேள்வி 500 ஏக்கருக்கும் அதிக மாக உள்ள ஆயக்கட்டுகளுக்கு பாசன வசதி தரும் குளங்களை நவீனப்படுத்துகிற திட்டம் பற்றியது. அதிலே கிட்டத்தட்ட 500 ஏரிகள் இருக்கின்றன. உலக வங்கியின் உதவி மூலம் சுமார் 120 கோடி ரூபாய் பெற்று நவீனப்படுத்துவதைப் பற்றி நாம் இப் போது சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 500 ஏக்கருக்கு அதிகமாக பாசன வசதி தரும் குளங் களை நவீனப்படுத்தும் வகையில் உலக வங்கி கடன் வழங்க அனுமதித்து விட்டதா ? அல்லது அது பரிசீலனையில் உள்ளதா ? இந்தத் திட்டம் எத்தனை ஆண்டுகளுக்குள் எடுத்துக்கொள்ளப் படும்? அப்படி எடுத்துக்கொள்ளப்படுமேயானால் முகவை மாவட்டத்தில் ஆற்றுப்பாசனம் அதிகம் இல்லாததால் 500 ஏக்கருக்கு மேல் பாசன வசதி தரும் கண்மாய்களை எடுத்துக் கொள்ள இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உலக வங்கி நிதியுதவி அளிப்பதிலே தயக்கம் காட்டவில்லை. மாறாக இந்த நவீனப்படுத்தும் முறைகளை நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய முறையிலே நாம் நவீனப்படுத்துவோமேயானால் அவர்கள் உதவியளிக்க தயாராக இருக்கிறார்கள். அதற்கு முன்னோடித் திட்டமாக செங்கல்பட்டு மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் இரண்டு குளங்களை அவர்கள் சொல்லியிருக்கிற முறையிலே இப்போது நவீனப்படுத்திக்கொண்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு, அந்த முறையிலே அவர்கள் திருப்தி யடைவார்களானால், நிதியுதவியை விரைவாகப் பெற்று அனைத்துக் குளங்களையும் நவீனப்படுத்துகிற முறையிலே அரசு ?டுபடும்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏரிகளை நவீனப்படுத்துகிற திட்டத்திற்காக கடன் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இரண்டு மாவட் டங்களை குறிப்பாக் இதற்காக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். தர்மபுரி மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை அமல் படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ? ஆம் எனில், பாரூர் அதற்கு மிகச் சிறப்பான அமைப்பாக இருக்க முடியும் என்று அரசு நம்பு கிறதா ? அதை நவீனப்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முன்னோடித் திட்டம் என்பது இரண்டு மாவட்டங்களிலே இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டங்களை நிறைவேற்றி அறிக்கையை பெற்ற பிறகு 500 ஏக்கருக்கு மேல் பாசன வசதியைத் தரக்கூடிய 490-க்கு மேற்பட்ட அனைத்து குளங்களையும் எடுத்து நவீனப் படுத்துவதற்கு இருக்கிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற ஏரியும் தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிற மற்ற ஏரிகளும் நவீனப்படுத்தும் திட்டத்திற்குள் உட்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. மணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 500 ஏக்கருக்கு அதிகமாக ஆயக்கட்டு உள்ள குளங்களை நவீனப் படுத்துகிற நேரத்தில், குமரி மாவட்டத்தில் இருக்கிற இது போன்ற குளங்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும்தான். மொத்தம் 490 அளவிலே ஏரிகள் இருக்கின்றன. 500-க்கு மேற் பட்ட ஏக்கர்கள் பாசன வசதியுள்ள அனைத்து ஏரிகளும் எடுக்கப் படும்போது அனைத்து மாவட்டங்களிலே உள்ளவையும் இந்தத் திட்டத்தின் மூலமாகப் பயன்பெறும்.

திரு. செ. சிவசாமி : பேரவை துணைத் தலைவர் அவர்களே, 500 ஏக்கருக்கு மேல் பாசன வசதியுள்ள கண்மாய்களை ஆழப் படுத்தும் திட்டத்தில் உலக வங்கியிலிருந்து என்ன ஆலோசனை களைச் சொல்லியிருக்கிறார்கள் ? என்ன என்ன நிபந்தனைகளை அவர்கள் போட்டிருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் விரிவாக விடை சொல்ல வேண்டியுள்ளது என்றாலும் சொல்லிவிடுகிறேன். 25 ஏக்கர் பாசனத் தேவையான குழாய்களை, கால் வாய்களை



அமைப்பது என்ற அளவிலே ஒவ்வொரு 25 ஏக்கருக் கும் மதகை ஏற்படுத்தி அதன் மூலமாக தண்ணீரை சிக்கனம் செய்ய முடியும். அதன் மூலமாக இன்னும் 1 லட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசனம் கொடுக்க முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள், 25 ஏக்கர்கள் என்று கூறுகிறபோது விவசாயிகள் அதற்கு ஒத்து ழைக்க வேண்டும். இந்த இரண்டு திட்டங்களிலே ஏற்கனவே விவசாயிகள் அங்கே ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தகவலை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் ஆய்வு அறிக்கை கிடைத்த பிறகு மற்ற இடங் களுக்கும் விஸ்தரிப்பது பற்றி ஆராயப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக நெல் உற்பத்தியில் அதிகம் செய்கிற மாவட்ட மாக இருப்பது வட ஆற்காடு மாவட்டம்தான். அங்கே எந்த, எந்த ஏரிகள் நவீனப்படுத்தப்படுகின்றன ? அதிலே முக்கியமாக மாமண்டூர் ஏரி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அனைத்து மாவட் டங்களிலும் உள்ள 500 ஏக்கருக்கு மேல் பாசன வசதி கொடுக் கின்ற எல்லா ஏரிகளும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதால் எல்லா மாவட்டங்களுக்கும் அது பொருந்தும்.

திரு. க. பரமலை : துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே கம்பிக்குடி, கட்டிகுளம் ஆகிய கண்மாய்களை நவீனப்படுத்தும் வேலைகள் நடப்பதாக அமைச் சர் அவர்கள் சொன்னார்கள். 500 ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெறும் கண்மாய்கள் என்கிறபோது எங்கள் மாவட்டத் திலே 1,500 ஏக்கருக்கும் மேலாக பாசனம் தரக்கூடிய மிகப் பெரிய கண்மாய்கள் இருக்கின்றன. ஆகவே திருப்புவனம், கானூர், மாரனநாடு, கொந்தகை போன்ற ஏரிகளுக்கு முன் னுரிமை கொடுத்து நவீனப்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, 500 ஏக்கருக்கு மேலே என்றால் அதிலே 1,000 ஏக்கரும் அடங்கிவிடுகிறது. இருந்தாலும் வறட்சியால் பாதிக்கப் பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுக்க அரசு யோசிக்கும்.

திரு. எம். சின்னசாமி: 500 ஏக்கருக்கு மேலே பாசன வசதி கிடைக்கும் கண்மாய்களை நவீனப்படுத்தும் திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 500 ஏக்கருக்குக் குறை வாக உள்ள 100, 200 ஏக்கர் பாசனம் பெறுகிற சிறிய குட்டை களை எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா அல்லது அவை கைவிடப்பட்டுவிட்டனவா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, இது உலக வங்கி உதவி பெற்று செயல்படுத்துகின்ற திட்டம். 500 ஏக்கருக்கு கீழே பாசனம் பெறும் கண்மாய்களைப் பொறுத்த வரையில் ஏற்கனவே சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின் கீழ் குளங்களை ஆழப்படுத்தவும், கரைகளைப் பலப்படுத்தவும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அவைகளை கைவிட வில்லை. அரசு அதற்கு தனித் திட்டங்களை தயாரித்து அந்தக் குளங்களை நவீனப்படுத்துவதற்கு முயற்சிக்கும்.

பொன்னாபுரம் கிராம வட்டாரத்திற்கு ஆளியார் பாசன வசதி ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 702—திரு. கு. ரமணி : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) தாராபுரம் தாலுகா பொன்னாபுரம் கிராம வட்டாரத் தில் ஆளியார் பாசன வசதி ஏற்படுத்த பலமுறை அதிகாரிகள் வந்து சர்வே செய்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காமலிருந்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு பாசன வசதி கிடைக்க உடனடி ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) : பொன்னாபுரம் கிராமத்தில் 1,000 ஏக்கர் நிலம், பரம்பிக்குளம் மற்றும் ஆளியார் விரிவாக்கத் திட்ட ஆயக்கட்டில் சேர்க்கப் பட்டு, ஆய்வு வேலைகள் நடைபெற்று உள்ளன. மேற்படி கிராமத்தில் வாய்க்கால் வெட்டும் பணிகள் விரைவில் துவங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, இந்த பொன்னாபுரம் கிராமத்திலே சர்வே செய்து நீண்ட நாளாகி விட்டது. ஆரம்பத்திலே சர்வே செய்த காலத்திலே நிர்ணயிக்கப் பட்ட ஏக்கர் இப்போது குறைக்கப்பட்டிருக்கிறது என்று விவ சாயிகள் கருதுகிறார்கள். அதற்குக் காரணம், அதற்குப் பக்கத் திலே உள்ள கிராமங்களிலே, வேறு பல கிராமங்களிலே நீர்ப் பாசனத்தை விஸ்தரிக்க வேண்டிய நிலைமையினால் ஏக்கரேஜ் குறைந்திருக்கிறது என்று அவர்களிடமிருந்து புகார் வந்துள்ளதா ? அப்படியென்றால் ஏற்கனவே போட்டுள்ள திட்டப்படி, அந்த நிறைவேற்ற அரசு முயற்சி எடுக்குமா ?



[முற்பகல் 10-30]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, தாராபுரம் வட்டம், பொன்னாபுரம் கிராமத்தின் மொத்த விஸ்தீரணம் வருவாய்த் துறை பதிவேடு களின் படி கிட்டத் தட்ட 10,873·61 ஏக்கர்கள். பொன்னா புரம் கிராமத்தின் தென்பகுதியிலே 1,500 ஏக்கர் பரப்பு சேர்க்கப்பட்டிருக்கிறது. அமராவதித் திட்டத்தின் கீழ் 13—4—1978 ஆணையின்படி அது சேர்க்கப்பட்டிருக்கிறது. மொத்தம், தாராபுரம் தாலுக்காவில் 38,150 ஏக்கர் தற்போது நடைபெற்று வரும் பரம்பிக்குளம்-ஆளியாறு பாசன விரிவாக்கத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட ஆணையிடப்பட்டிருக்கிறது. பொன்னாபுரம் கிராமத்திலே ஒரு சிறுபிரச்னை என்னவென்றால், தென் மேற்குப் பகுதியில் 600 ஏக்கர் நிலத்தடியிலிருக்கும் கனிப் பொருள்களை எடுக்கும்பொருட்டு தோண்டப்பட்டு, பாசனத் திற்குத் தகுதியில்லாத இடம் என்று ஒதுக்கப்பட்டு விட்டது. அது போக எஞ்சியிருக்கின்ற பகுதிகள் இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கின்றன. கால்வாய் வெட்டுகின்ற பணியினைத் துவக்கும்படி ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நீண்ட நாட்களாகவே இந்தத் திட்டம் செயலுக்கு வராமல், அங்கிருக்கின்ற விவசாயிகள் இதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதனால் இதைத் துரிதப் படுத்தி, குறிப்பாக இந்தக் காலத்திற்குள் இது முடிவடையும் என்று அரசாங்கத்தால் அறிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை 1981—82-க்குள் நிறை வேற்ற வேண்டுமென்று அரசு தெளிவுபடுத்தியிருக்கிறது.

டால்மியா சிமெண்ட் ஆலை.

*வினா எண். 703—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரியலூர் அருகிலுள்ள பெரிய நாகாலூர் சுண்ணாம்பு சுரங்கத்திலிருந்து டால்மியா சிமெண்ட் ஆலைக்கு சுண்ணாம்பு கற்கள் விநியோகம் யார் மூலம் நடைபெறுகிறது ?

(ஆ) இந்த விநியோக உரிமம் (Lease) எவ்வளவு காலத் திற்கு வழங்கப்பட்டுள்ளது ?

[1981 ஏப்ரல் 15

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) திருச்சிராப்
பள்ளி மாவட்டம் அரியலூர் அருகில் உள்ள சுண்ணாம்புக்கல்
சுரங்கத்திலிருந்து டால்மியா சிமெண்ட் ஆலைக்கு சுண்ணாம்புக்
கல் விநியோகம், துணை குத்தகைதாரர்களான திருவாளர்கள்
பிக்ஸட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின்
மூலம் நடைபெறுகிறது.

(ஆ) திருவாளர்கள் பிக்ஸட் பிரைவேட் லிமிடெட் நிறு
வனத்திற்கு 1—12—1975 முதல் 7—9—1985 முடிய பத்தாண்டு
களுக்கு பெரியநாகலூர் கிராமத்தில் சுண்ணாம்புக்கல் உள்ள
பரப்பளவு (172·99ஏக்கர்) பகுதியும் மற்றும் 1—12—1975 முதல்
2—10—1990 முடிய பதினைந்து ஆண்டுகளுக்கு அமீனாபா ,
கைருலாபாத் கிராமங்களில் சுண்ணாம்புக்கல் உள்ள பரப்பளவு
(235·58) ஏக்கர் பகுதியும் சுண்ணாம்புக்கல் விநியோகம் செய்வ
தற்கு துணை சுரங்கக் குத்தகை வழங்கப்பட்டுள்ளது.

*வினா எண். 704—திரு. ந. ஆறுமுகம் : மாண்புமிகு
தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களிலிருந்து
சுண்ணாம்புக்கற்கள் எடுத்த வகையில் அரசுக்கு டால்மியாபுரம்
சிமெண்ட் ஆலை நிர்வாகம் தர வேண்டிய உரிமத்தொகை
(Lease Amount) பாக்கி எவ்வளவு ?

(ஆ) அந்த தொகையை அரசு வசூலிக்க எடுத்த நட
வடிக்கை என்ன ?

(இ) எந்த ஆண்டிலிருந்து இந்தத தொகை பாக்கி உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) அரசாங்
கத்திற்குச் சொந்தமான நிலங்களிலிருந்து சுண்ணாம்புக்
கற்கள் எடுத்த வகையில் அரசுக்கு டால்மியாபுரம்
சிமெண்ட் ஆலை நிர்வாகம் 30—6—1980 உடன் முடிந்த அரை
ஆண்டு வரை ரூ. 2,24,092.75 பாக்கியாக உள்ளது.

(ஆ) இந்தத் தொகை வசூலிப்பது சம்பந்தமாக ஆலை நிர்
வாகத்தினால் திருச்சி துணை நீதிமன்றத்தில் 1978-ல் வழக்கு
ஒன்று தொடரப்பட்டது. மேற்படி வழக்கில் ஆலை நிர்வாகத்
தினருக்கு சாதகமாக 24—12—1980 அன்று தீர்ப்பாகி இருக்
கிறது.

(இ) இந்தத் தொகை 1976 ஆம் ஆண்டிலிருந்து பாக்கியாக
உள்ளது.



1981 ஏப்ரல் 15]

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, அரியலூருக்கு அருகிலுள்ள நாசலூர் குவாரி
தனியாருக்கு குத்தகை மூலம் கொடுக்கப்பட்டிருக்
கிறது. பிக்ஸட் கம்பெனிக்கு. அந்தக் கம்பெனியிலிருந்து
இன்றைக்கு கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு இரண்டாயிரம
டன் கற்கள் டால்மியாபுரத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள்.
லாரிகளில் டிரெய்லர் போட்டு இருபது டன் ஏற்றுகிறார்கள்
ஒரு லாரிக்கு. ஒரு நாளைக்கு நூறு டன் ஏற்றப்படுகிறது.
1,200 டன கொண்டு செல்கிறார்கள். ஒரு நாளைக்கு
எவ்வளவு கொண்டு செல்லப்படுகிறது, அதற்கு செஸ்
எவ்வளவு என்று நிர்ணயிக்க அங்கே அதிகாரியை வைத்து,
எடைபோடும் மெஷினையும் வைப்பதற்கு இந்த அரசு
உத்தேசித்திருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்ன இந்த
நிறுவனதிதற்கு குத்தகை கொடுத்த காலம் 1975 இல்,
அதாவது 1977-க்கு முன்னாலே நாங்கள் ஆட்சிக்கு வருவ
தற்கு முன்னாலே, அவர்கள் எவ்வளவு எடுத்துச்
செல்கிறார்கள் என்பதற்கெல்லாம் அங்கே அதற்கென்று
ஒரு தாசில்தார் இருக்கிறார், அவர் அவற்றையெல்லாம்
அங்கே சரிபார்த்து அரசுக்கு வர வேண்டிய பணத்தை வசூல்
செய்வதற்கு இருந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலை
வர் அவர்களே, 1975-இல் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது
என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். யாரால் அது
கொடுக்கப்பட்டது ? அந்த நேரத்தில் ஒன்றியம் இல்லை.
யாரால் அந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது, என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே
சொன்னேன். திருவாளர்கள் பிக்ஸட் பிரைவேட் லிமிடெட்,
சென்னை நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1975-ல்
பொறுப்பில் இருந்தவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, பிக்ஸட் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது
என்று சொல்லியிருக்கிறார்கள். 1975-ல் ஒன்றியம் கலைக்
கப்பட்ட நேரத்தில் யாரால் கொடுக்கப்பட்டது ? அந்தத் தனி
அதிகாரி யார்? எத்தனை ரூபாய்க்குக் கொடுக்கப்பட்டது
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு முதலிலேயே நான் பதில் சொன்னேன். யாரால் கொடுக்கப்பட்டது என்றால், அரசால் கொடுக்கப்பட்டது. எவ்வளவு ஏக்கர்கள் என்றும் சொல்லி இருக்கிறேன். அவர்கள் எவ்வளவு மதிப்புக்கு எடுக்கிறார்களோ அந்த அளவுக்கு அரசாங்கத்திற்கு தொகையைக் கொடுக்கிறார்கள்.

## தேனி தொகுதியில் கூட்டுறவுத்துறையில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 705—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தேனி சட்டப் பேரவைத் தொகுதியில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஆய்வில் உள்ளது.

## மின்சார பல்பு தயாரிக்கும் தொழிற்சாலை.

*வினா எண் 706—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் அரசாங்கம் சொந்தமாக மின்சார பல்பு தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேள்விக்கு இடம் இல்லையென்று சொல்லுகிறார்கள். தற்பொழுது எல்லா மாவட்டங்களிலும், அந்தந்த மாவட்டத்தைப் பொறுத்து



தொழில்கள் அமைக்கக் கூடிய இந்த நல்ல நேரத்திலே சாத்தான்குளம் ஒன்றியத்தில், சாத்தான்குளத்தில் இது போன்ற பல்புகள் தயாரிக்க மூலப்பொருள்கள் நல்லமுறையில் இருக்கிறது. எனவே, அங்கு ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தனியார் துறையில் Kalpana Lamp Components private Limited என்ற நிறுவனம் தயாரித்துக் கொண்டிருக்கிறது. நான் இப்பொழுது சொன்னது, அரசினுடைய ஆய்விலே, அரசின் சார்பிலே தனியாக ஒரு தொழிற்சாலையைத் துவங்கும் எண்ணம் இப்பொழுது இல்லை என்பதாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தமிழகத்தில் எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் உள்ள கிராமங்களில் போடப்பட்டுள்ள தெரு விளக்குகளில் முன்னாலே போடப்பட்டது, ஸ்க்ரு டைப் பல்புகளாக இருந்தது, இப்பொழுது பின் டைப் பல்புகள் போடுகிற காரணத்தாலே மழை வருகிற நேரத்திலே, மழைத் தண்ணீர் உள்ளே போய், பல்புகள் ப்யூஸ் ஆகின்றன. அதைத் தடுப்பதற்காக, அரசு உடனடியாக அங்கு ஒரு தொழிற்சாலை அமைக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே போடப்படுகிற பல்புகளை மின் சார இலாகாவினர் வாங்குகிறார்களா அல்லது உள்ளாட்சித் துறையினர் வாங்குகிறார்களா என்று தெரியாது. இருவரிலே ஒருவர் வாங்குவார்கள். நல்ல பல்புகளாக வாங்கச் சொல்லி அவர்களிடத்திலே கேட்கலாம்.

## நீலகிரி மலைச் சரிவில் வசிக்கும் மலைவாழ் மக்களின் கோரிக்கைகள்

*வினா எண். 707—திரு. கு. ரமணி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம் நீலகிரி மலைச்சரிவில் மானார், அத்திக்கடவு, பரளிப் பகுதியில் வசிக்கும் மலைவாழ்

மக்களின் கோரிக்கைகளடங்கிய மகஜர் ஒன்று கோவை
கிழக்கு பேரவைத் தொகுதி உறுப்பினரால் கொடுக்கப்
பட்டதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது என்ன நட
வடிக்கை எடுத்துள்ளது?

(இ) அந்த ஆதிவாசி மக்கள் கால்நடையாக வந்து கோவை
மாவட்ட ஆட்சித் தலைவரின் காரியாலயம் முன்பு தாணா
போராட்டம் நடத்தியது அரசுக்குத் தெரியுமா?

(ஈ) அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) தமிழ்நாடு விவசா
யிகள் சங்கம், பரளிகிளையின் கூட்டத்தில் பரளி, அத்திக்கடவு,
பில்லூர் பகுதிகளில் வசிக்கும் ஆதிவாசிகளின் குறைகளை
தீர்க்கும் பொருட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின்
நகல் ஒன்று கோவை கிழக்கு பேரவை தொகுதி உறுப்பினர்
மூலமாக அரசுக்கு 7—2—1980 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கண்ட தீர்மானங்களடங்கிய மகஜரின் நகல்
ஒன்று கோவை மாவட்ட ஆட்சியருக்கு நடவடிக்கைக்கு அனுப்
பப்பட்டு ஆவன செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசு
மட்டத்தில் சம்மந்தப்பட்ட துறைகளுக்கும் நகலின் பகுதி
நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(இ) தெரியும். தமிழ்நாடு விவசாயிகள் சங்க செயலா
ளரால் கோரிக்கை மனுவும் தர்ணா பற்றிய மனுவும்
23—9—1980 அன்று மாவட்ட ஆட்சியருக்கு கொடுக்கப்
பட்டது. 24—9—1980 அன்று நேரில் சென்று தர்ணாவைக்
கைவிடுமாறு தனித் தாசில்தார் அவர்கள் கேட்டுக்கொண்ட
பொழுது, எற்கனவே திட்டமிட்டபடி அமைதியான முறையில்
ஓர்ணாவும் பாதயாத்திரையும் நடத்தப்படும் எனறு விவசா
யிகள் சங்கம் சார்பாக தெரிவிக்கப்பட்டது. அவ்வாறே
அமைதியான முறையில் 25—9—1980 ல் தர்ணா நடத்தப்
பட்டது.

(ஈ) அவர்களது கோரிக்கைகளின் பேரில் சம்பந்தப்பட்ட
அதிகாரிகன் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்
பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 10-40]

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, சுமார் 3 ஆண்டு
களாக இந்த ஆதிவாசிகள் 100 செட்டில்மெண்டுகளில் வசிக்



கின்ற 3,000-க்கும் மேற்பட்ட ஆதிவாசுக் குடும்பங்கள்
குடி தண்ணீர் மற்றும் வேலை வசதிகள் விவசாயத்திற்கு
அவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய நிலத்தில் அவர்களுககு
உத்தரவாதம். குறைந்த பட்சம் அவர்களுக்குத் தேவையான
கோரிக்கைகளை முன் வைத்தும் எந்தவித நடவடிக்கைகளும்
இதுவரையில் எடுக்கப்படவில்லை. நானும் மாவட்ட
ஆட்சித் தலைவர் இடத்திலே நேரில் சென்று பார்த்தேன்.
ஆகவே அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று
அதிகாரிகள் ரிப்போர்ட்டு செய்தாலும் அமைச்சர் அவர்கள்
தயவு செய்து அந்த இடத்திற்கு நேரில் வந்து பார்த்து
நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஆதிவாசிகளுக்கு குடியிருக்க வீட்டு
வசதி, பள்ளி வசதி, வவசாயம் செய்ய உழவு மாடுகள், வ்வசா
யப் பொருள்கள் ஆகியவை ஆதிதிராவட நலத்துறை மூலம்
வழங்கப்பட்டு வருகின்றன. குடிநீர் வசதி, மருத்துவ
வசதி, விபத்து மற்றும் நோய்க்காலத்தில் ஆம்புலன்ஸ்
வசதி ஆகியவை பஞ்சாயத்து அபிவிருத்தி துறை மூலமாகவும்
வனத்துறை மூலமாகவும் வேலை வாய்ப்பு போன்ற வசதிகள்
தவறாமல் அவ்வப்பொழுது அவர்களது தேவைகளை அனுசரிதது
வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் கூட்டுறவு பண்டகசாலை
அமைக்கவும் மறறும் வாக்காளர் பட்டியல்ல் பெயர்களைச்
சேர்த்தல், வனத்துறையில் காவலர் போன்ற வேலைகளுக்கு
முன்னுரிமை வழங்கல் முதலியவை குறித்து ஆவன செய்யும்படி
சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு தக்க அறிவுரைகள்
வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
அந்தப் பகுதிக்கு நேரடியாக வந்து குறைகளை களைய
வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். அதை நான் நேரிலே
உறுப்பினர் அவர்களிடத்தில் பேசுகின்றபொழுது ஏற்கனவே
சொல்லி இருக்கிறேன். கூடிய விரைவில் அந்தப் பகு
திக்கு நேரடியாக வந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, அங்கே கல்வி வசதிக்
காக, பள்ளிக்கூடம், குடிநீர் இதற்கெல்லாம் ஏற்பாடுகள்
செய்யபட்டிருக்கிறது என்பது பொதுவாகத் தரப்படக்கூடிய
ரிப்போர்ட்டு. அவர்களுடைய குழந்தைகள் படிக்க வாய்ப்
பில்லை. அங்கே 50 பிள்ளைகளுக்கு மேல் படிக்க பள்ளிக்
கூடம் இல்லை. அங்கே 3,000 பேர்கள் இருக்கிறார்கள்.
எனவே இந்த மாதிரி நடவடிக்கைகளை நேரில் பார்த்து
நடவடிக்கை எடுக்காவிட்டால் அதிகாரிகள் கொடுக்கின்ற

ரிப்போர்ட்டு மட்டும் நடவடிக்கை ஆகாது என்பதை தாழ்மை யோடு தெரிவித்துக் கொள்கிறேன். எந்தக் காலத்திலே அந்த இடத்திற்கு வந்து நேரடியாகப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்போகிறார் என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவர் அவர்களே, விரைவில் அந்தப் பகுதியைப் பார்வையிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன:

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் ( * ) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைத் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை

### மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் பிரச்சினைக்கான முன்னறிவிப்பைக் கொடுத்துள்ளார். இதை அவையில் எழுப்ப என் இசைவை ஏன் அளிக்கவேண்டும் என்பதற்கான காரணங்களைச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன். திரு ஆர். கருப்பையா அவர்களும் இதே பிரச்சினை குறித்து ஒரு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்.

**திரு. ரா. உமாநாத் :** அவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் தமிழக அரசின் தொழிலாளர் நலக் கொள்கையைக் கண்டித்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது உங்களுக்குத் தெரியும். அதில் கலந்து கொண்டு நானும் மற்றக் கட்சியைச் சேர்ந்து சட்டப் பேரவை உறுப்பி னர்களும் கடுமையாக விமர்சனம் செய்து, பல ஸ்தூலமான வாதங்களையும் விவரங்களையும் முன் வைத்தது உங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் எங்களது வாதத்திற்கும், விவரத்திற்கும், நேரான பதில் கூறாமல், இரண்டு முக்கியமான விஷயங்களை அஸ்திவாரமாகக் கொண்டு பதில் கூறினார்.



ஒன்று, கட்டாய மத்தியஸ்தம் என்பதைப் பொதுவாக தொழிற்சங்க இயக்கம் ஏற்க மறுத்துள்ளது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் மேற்கு வங்க சர்க்கார் சில விஷயங்களில் மத்தியஸ்தம் கட்டாயமாக இருக்க வேண்டும் என்கிற சட்டத்தைக் கொண்டு வந்து விட்டதாக மிகவும் அழுத்தம் திருத்தமாக நமது தொழில் அமைச்சர் குறிப்பிட்டார். நம்முடைய பேரவைக் குறிப்பில் இருந்து, அவர் பேசியதை அப்படியே படிக்கிறேன்.

> "With a view to encouraging arbitration and to make it popular, the State Government has proposed in the Bill that arbitration may be made compulsory.

இதை தமிழக அரசு ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது சர்ச்சைக்குரியது; விவாதத்திற்குரியது; முதல்வர் அவர்களோடு பேசி முடிவெடுக்க வேண்டியது. கம்பல்சரி ஆர்பிட்ரேஷன் பற்றி இந்த அரசு இன்னும் முடிவெடுக்கவில்லை. புரட்சித் தலைவர் அவர்களோடு பேசித்தான் முடிவெடுக்கவேண்டும். ஆனால் மேற்கு வங்காள அரசு கொண்டுவந்து விட்டது.'' இந்த சென்டென்ஸ் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் மேலும் கூறினார்....... ''சில கேஸ்களை ஆர்ப்பிட்ரேஷனில் தான் முடிவெடுக்கவேண்டும் '' என்பதற்காகச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். அது தான் செக்ஷன் 10 (எ) என்பதாகச் சொல்லி, அந்தச் சட்டத்தின் பெயரையும் சொன்னார். மேற்கு வங்கச் சர்க்கார் அதைக் கொண்டு வந்து இருக்கிறது என்று சொன்னார். அது, வேலை போகிற அளவிற்குப் பெரும்பாலான மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னால் கட்டாயம் ஆர்ப்பிட்ரேஷன் வரவேண்டும் என்று 10 (ஏ). யிலே இருக்கிறது. இந்த சென்டென்ஸ் முக்கியமானது ''அந்த பில்லை வரவழைத்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறேன்''. இது சட்டப்பேரவைக் குறிப்பேட்டில் இருக்கிறது. அந்த பில்லை வரவழைத்து பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

அதன் பிறகு, மேற்கு வங்கத் தொழிலாளர் நல அமைச்சருக்கு நான் எழுதிக் கேட்டேன். நமது தொழிலாளர் நல அமைச்சர் கூறியது போல், 10-ஏ என்கிற கட்டாய மத்தியஸ்தச் சட்டம், மேற்கு வங்க அரசு சட்டசபைக்குக் கொண்டுவந்ததாகவோ, நிறைவேற்றியதாகவோ இல்லை எனத் தெரிகிறது. இது முதல் பாயின்ட். அதாவது, இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொன்னது.

இரண்டாவது—நமது தொழிலாளர் நல அமைச்சர் கூறியது:
வேலை நிறுத்தங்கள் நடைபெறும்போது, அரசு இடைக்கால
நிவாரணமளித்து வேலை நிறுத்தத்தைத் தடை செய்யும்
சட்டம் தமிழக அரசு, ப்ரோபொஸ் பண்ணியதாகவும், அதை
நாங்கள் எதிர்த்ததாகவும் ஆனால், அதே சட்டத்தை
திரு ஜோதி பாசு அவர்கள் கொண்டு வந்ததாகவும் மாண்புமிகு
அமைச்சர் சொன்னார். அவர் சொன்னதை நான் அவைக்
குறிப்பில் இருந்து படிக்கிறேன்.

''புரட்சித் தலைவர் அவர்கள் என்னைக் கூப்பிட்டு
இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்ட் 10 (பி)-யைப் புகுத்த
வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி அந்தச் சட்டத்
தைப் புகுத்தினால், வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்
கும்போது, இண்டரிம் ரிலீப் கொடுக்கின்ற அதிகாரம்
சங்கத்திற்கு இருக்கிறது. அப்படி ஒரு அதிகாரம் அரசாங்
கத்திற்கு இருக்குமானால், அதைக் கொடுத்து விட்டு
ஸ்ட்ரைக்கைத் தடை செய்யலாம். சர்வீஸ் கன்டிஷன் பற்றி
பிறகு நாம் ஸ்டிபிலேட் செய்து சொல்ல முடியும். அந்தச்
சட்டத்தைக் கொண்டு வந்தபோது, அதை எதிர்க்கிறோம் என்று
சொன்னபோது, புரட்சித் தலைவர் அவகள் அதை பின்
வாங்கிக் கொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். உடனே
அதை நான் பின்வாங்கிக்கொண்டேன்.

அதன் காரணமாகத்தான் வேலை நிறுத்த நாட்களை
குறைக்க முடியவில்லை. அதை உணர்ந்து திரு. ஜோதி பாசு
அவர்களே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.''
இந்த சென்டென்சை மிகவும் கவனித்துப் பார்க்கவேண்டும்.
''அந்தச் சட்டத்தின் நகலை நான் எடுத்து வைத்து இருக்
கிறேன். 9 (சி) சட்டத்தைக் கொண்டு வந்து, 10 (ஏ)
சட்டப் பிரிவை கொண்டு வந்து வேலை நிறுத்தத்தைத் தடை
செய்வதற்கும், இன்டரிம் ரிலீப் கொடுப்பதற்கும், மேற்கு
வங்காளச் சட்டமன்றத்திலே அந்தச் சட்டத்தைக் கொண்டு
வந்து நிறைவேற்றி, அதை டெல்லி அரசாங்கத்திற்கு அதன்
கன்கரன்சை பெறுவதற்காக அனுப்பியிருக்கிறார்கள்.''
என்று நமது அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்.

இந்த உரிமைப் பிரச்சினையினுடைய உயிரே இந்த சென்டன்
ஸிலே தான் இருக்கிறது.

9-சி சட்டம் இடைக்கால நிவாரணம் அளித்து
ஸ்ட்ரைக்கைத் தடை செய்யும் சட்டமெனவும், 10 (ஏ) சட்டம்
கட்டாய மத்தியஸ்த சட்டமெனவும் கூறி, மேற்கு வங்க





சட்டமன்றம் இரண்டையும் நிறைவேற்றியதாகவும் கூறினார்.
அந்த இரண்டு சட்டங்களையும் மத்திய அரசின் கன்கரன்சிற்
காக டெல்லிக்கு அனுப்பியதாகவும் கூறினார். அப்படி
9 (சி) மற்றும் 10 (ஏ) ஆகிய இரண்டு சட்டங்களையும் மேற்கு
வங்கச் சட்ட மன்றத்தில் கொண்டு வரவில்லை. மேற்கு
வங்கச் சட்ட மன்றம் 9-சி, மற்றும் 10-ஏ சட்டங்களை
நிறைவேற்றவும் இல்லை. மைய அரசின் கன்கரன்சிற்காகவும்
அதை அனுப்பவும் இல்லை. ஆகவே, நம்முடைய அமைச்சர்
அவர்கள் கூறியது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான்
28—2—1981 தேதியன்று மேற்கு வங்க தொழிலாளர் நல
அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில், கட்டாய
மத்தியஸ்தச் சட்டமும், இடைக்கால நிவாரணமளிப்பது ஸ்ட்ரைக்
தடை செய்யும் சட்டமும் நீங்கள் பேரவையில் நிறை
வேற்றியிருக்கிறீர்களா, அல்லது பேரவையின் ப்ரபோஸ்
பண்ணியிருக்கிறீர்களா என்று கேட்டேன். அதற்கு அவர்
தெளிவாக பதில் சொல்லியிருக்கிறார்.

[முற்பகல் 10-50]

மேற்கு வங்க தொழிலாளர் நல அமைச்சர் திரு. கே. பி.
கோஸ் அவர்கள் எனக்கு 4—3—1981-ந்தேதி அனுப்பிய கடிதத்
தின் தமிழாக்கத்தைப் படிக்கிறேன். தங்களிடம் ஆங்கிலத்
தில் கொடுத்திருக்கிறேன். ''அன்புள்ள தோழர் உமாநாத்
21—2—1981 தேதியிட்ட உங்களுடைய கடிதம் கிடைக்கப்
பெற்றேன். தமிழக சட்டப் பேரவை கூட்டத்தில் உங்களு
டைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்
பேசி இருப்பதாகக் கூறப்பட்டதைக் கண்டு நான் வியப்
படைகிறேன். எங்கள் மாநிலத்தில் எங்குமே எந்த வேலை
நிறுத்தத்தையும் தடை செய்வதற்காகவோ அல்லது வேலை
நிறுத்தத்தின்மீது எந்த ஒரு கட்டுப்பாட்டையும் திணிக்கவோ
உத்தேசிக்கும் எந்த ஒரு மசோதாவையும் மேற்கு வங்காள
சட்டப் பேரவையில் நாங்கள் நிறைவேற்றவில்லை என்பதை
நான் அழுத்தம் திருத்தமாக கூற முடியும். இந்த விஷயத்
தில் சி.ஐ.டி.யு.வின் நிலை என்ன என்பது நீங்கள் அறிந்ததே.

நாங்கள் இயற்றவிருக்கும் சட்டத்தின் ஒரு நகலை உங்களு
டைய உபயோகத்திற்காக இத்துடன் அனுப்பிவைக்கிறேன்.
அதில் வேலை நிறுத்தத்தைத் தடை செய்வதற்கோ அல்லது
கட்டுப்படுத்துவதற்கோ சுட்டிக்காட்டக் கூடிய எந்த ஒரு

ஷரத்தும் எந்தப் பகுதியிலும் நீங்கள் பார்க்க முடியாது. ஆகவே; நாங்கள் வேலை நிறுத்தத்தைத் தடைசெய்வது என்ற பிரச்சினையே எழவில்லை.

எந்த ஒரு சட்டத்தையும் கொண்டு வருவதற்கு முன்னால் அதைப்பற்றி மாநில தொழிலாளர் அட்வைசரி போர்டு என்கிற முத்தரப்பு அமைப்பில் அதை விவாதிப்பது என்பதுதான் எங்களுடைய நடைமுறை பழக்கம். தொழிலாளர் நல அமைச்சரை தலைவராகக் கொண்ட அந்த அட்வைசரி போர்டில் முதலாளிகள், மைய தொழிற்சங்கங்கள், மாநில அரசு இவர்களின் பிரதிநிதிகள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

எங்கள் மாநில சர்க்காரிடம் இது சம்பந்தமாக தகவல்களை கேட்காமலே உங்கள் மாநிலத்தின் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட அறிவிப்பு செய்வதைக் கேட்டு நான் உண்மையிலேயே அதிர்ச்சி அடைகிறேன். எப்படியிருந்தாலும் இப்போதைக்கு இதைத் தான் நான் தெரிவிக்க விரும்புவது.'' என்று கடிதத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

மேலும், மேற்கு வங்க சட்டப்பேரவையில் நிறைவேற்றிய தாக அமைச்சர் கூறிய 9-சி, 10-ஏ பற்றிய குறிப்புகளை நான் இங்கே குறிப்பிட்டேன். நான் எழுதிய லெட்டரை 10—3—1981-ல் அனுப்பி வைத்தேன். அதை படித்த பிறகு 9-சி, 10-ஏ, சட்டப் பிரிவுகள் பாஸ் செய்தபிறகு எனக்கு வெஸ்ட் பெங்கால் லேபர் மினிஸ்டரிடமிருந்து 28 மார்ச் 81-ல் கடிதம் வந்திருக்கிறது. அதைப் படிக்கிறேன்.

Dear Comrade Umanath,

(D.O. No. 920 I.R.)

Please refer to your letter of March 10,1981 regarding the statement of the Labour Minister of Tamil Nadu made in the Tamil Nadu Assembly on the Industrial Disputes (West Bengal Second Amendment) Bill, 1980 A copy of the aforesaid Bill, as passed by the West Bengal Legislative Assembly, with certain amendments, on the 8th September, 1980 is enclosed. Also enclosed please find a copy of the Industrial Disputes (West Bengal Amendment) Act, 1980. The Second Amendment Bill of 1980 is yet to receive the President's assent, but the Amendment Act of 1980 is already operative in this State on getting the President's assent



It will be evident from the provisions of the Second Amendment Bill of 1980 that there is no proposal for inserting either a new section 9 (*c*) or a new Section 10 (*a*) in the Industrial Disputes Act, 1947, as mentioned in the quoted speech of the Minister. As a matter of fact there is absolutely nothing in the Bill by way of imposing a ban on strike. As regards interim relief, your attention is invited to the provisions of sub-clause (2) of Clause 7 of the Bill which inserts a new sub-section to Section 15 of the Industrial Disputes Act, 1947 which, *inter alia*, make it obligatory on the part of every Labour Court/Industrial Tribunal, to which an Industrial dispute is referred for adjudication, to determine within a period of sixty days the quantum of interim relief admissible. It also provides for the quantum of interim relief in respect of dispute over dismissal, retrenchment or termination of service. As will be evident, the Government has not taken upon itself the authority to grant interim relief.

2. There is also no provision for making arbitration compulsory or obligatory in any manner.

3. As you could also verify from the Bill, there is no provision in the Bill allowing any power to the Government to prescribe terms and conditions of employment of the workmen. The Second Amendment Bill of 1980 is the only Bill seeking to amend the Industrial Disputes Act, 1947, in its application to West Bengal, which is at present pending for the President's assent, so far as West Bengal is concerned, and no provisions of the kind reported to have been mentioned in the statement of the Labour Minister of Tamil Nadu have been incorporated therein. Apparently, the Minister got wrong information from some unknown source. There is no question of my Secretary passing on any wrong information to anybody, after the Bill had been passed in the Assembly regarding its contents.

4. Various legislative proposals are constantly being processed and examined in my department in consultation with the parties concerned. It might so happen that some such proposals that were processed in my department at one time or other reached the Tamil Nadu Minister through some source other than my department. In any case, no proposal of the kind mentioned was incorporated in any Bill passed by the State Assembly. My department has meanwhile furnished copies of the Bill passed by the Assembly to the Deputy Secretary to the Govern ment of Tamil Nadu, Labour and Employment Department (Thirumathi Lalitha Kumar, I.A.S.) with letter No. 723-I.R., dated 13th March 1981

(K. P. GHOSH.)

[திரு. ரா. உமாநாத்] [1981 ஏப்ரல் 15

ஆகவே அந்த மாற்றம் அதிலே தெளிவாக வந்திருக்கின்றது. மேற்கு வங்க கூட்டணி அரசு அல்லது அரசு சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள் பல்வேறு கட்டங்களில் எந்தெந்த யோசனைகள், திருத்தங்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்தார்கள் என்பது அல்ல இங்கே பிரச்சினை.

அல்லது மேற்கு வங்க லேபர் அட்வைசரி போர்டிலே எதையெல்லாம் விவாதித்தார்கள் என்பதல்ல பிரச்சினை. இங்கே உரிமை மீறலுக்குரிய பிரச்சினை அதுவல்ல, இங்கே இருக்கின்ற உரிமை மீறலுக்குரிய பிரச்சினை என்னவென்றால் கட்டாய மத்தியஸ்தத்திற்கும், வேலை நிறுத்தத் தடைக்கும் சட்ட முன் வடிவம் கொடுத்து 9சி, 10ஏ திருத்தச் சட்டமென மேற்கு வங்க சட்டமன்றத்தில் நிறைவேற்றி மைய அரசுக்கு அதன் கன்கரன்ஸுக்காக அனுப்பப்பட்டுள்ளது என்ற முற்றிலும் உண்மைக்குப் புறம்பான தகவலை நமது அமைச்சர் அவர்கள் அழுத்தம் திருத்தமாக சொந்தப் பொறுப்பில் அசர்ட் பண்ணி எம்பசைஸ் பண்ணி இந்த அவைக்குக் கொடுத்தார் என்பதுதான் உரிமை மீறல் பிரச்சினை. அதற்கு நான் படித்த இரண்டு கடிதங்கள் ப்ரைமா ஃபேசியாக இருக்கின்றன.

அடுத்து, இன்னொரு பயங்கரமான வேலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். 10-ஏ சட்டப் பிரிவை வரவழைத்து பரிசிலனை செய்து கொண்டிருக்கிறேன் என்று அவர் பேசியுள்ளார். அன்று நாங்களும் காதாரக் கேட்டோம். அசெம்பிளி ரிக்கார்டிலேயும் அப்படியே தான் எழுதப்பட்டுள்ளது. ஆனால் பேரவையின் பதிவேட்டில் அமைச்சரவர்கள் ஒரு வேலை செய்துள்ளார், 10-ஏ என்று அவர் குறிப்பிட்ட அந்த பில்லை வரவழைத்து பரிசிலனை செய்து கொண்டிருக்கிறேன் என்று அவையில் பேசியது பதிவேட்டில் பதிந்துள்ளது, அதை அவரே அடித்து, ''இந்த பில்லை வரவழைத்து பரிசிலனை செய்ய இருக்கிறேன்'' என்று மாற்றி எழுதியுள்ளார். இதிலே முக்கியமான பொருள் அடங்கி இருக்கின்றது. பில்லை வரவழைத்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னால் பில் கையிலே இருக்கின்றது என்றும் அதைப் பரிசீலனை செய்கிறார் என்றும் பொருள். ஆனால் அதை ''அந்த பில்லை வரவழைத்து பரிசிலனை செய்ய இருக்கிறேன்'' என்று மாற்றினால் பில் கையில் இல்லை.; இனிமேல வரவழைக்கப் போகிறேன்; கைக்கு வந்த பிறகுதான் பரிசிலனை செய்யப் போகிறேன் என்று பொருள். தலைவர் அவர்களே, இது அவையில் பேசியதற்கு நேர் மாறான பொருள். ரிக்கார்ட் கரெக்ஷன் என்ற பெயரால் பேசிய கருத்தை மாற்ற முடியாது. விதிகள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. நம்முடைய ஹேன்ட் புக்கில் விதி 58-ல் இது பற்றி தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.



1981 ஏப்ரல் 15] [திரு. ரா. உமாநாத்]

No change of the idea or altering the idea is allowed.

அப்படி ஐடியாவைக் கூட ஆல்டர் பண்ணக் கூடாது என்றுஇருக்கின்றது. ஷக்தர் அண்ட் கௌல் எழுதிய புத்தகத்தில் கூட அவ்வாறு குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால் அப்படிச்சொல்ல விரும்பாததைச் சொல்லி விட்டார் என்றால் அதனால் தவறு வரும் என்றால் அந்தத் தவறுக்கு கரெக்ஷன் ஸ்டேட்மென்ட்தான் கொடுக்க வேண்டும். அதற்குரிய ரூல்படி கரெக்ஷன் ஸ்டேட்மென்ட்தான் கொடுக்க வேண்டுமே அல்லாது உங்களுடைய ரிக்கார்டிலே அவர் கையாலே செய்த திருத்தமானது

It is nothing but tampering of Assembly records and it constitutes another breach of privilege.

அப்படி டேம்பர் பண்ணியும் அவர் அவையில் கூறியதை மறைக்க முடியவில்லை. ஏன் என்றால் 10-ஏ பில் கையில் இருக்கின்றது என்று கூறியதை டேம்பர் பண்ணிய அமைச்சர் 9-சி பில்லைப் பற்றி அதே போல் கூறியதைக் கவனிக்கத் தவறி விட்டார். Truth is out அதைப்பற்றி அவர் பேசியதாக குறிப்பேட்டின் இன்னொரு பகுதியில் இருப்பது என்னவென்றால் ''அதை உணர்ந்த திரு. ஜோதி பாசு அவர்களே இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார், இந்த சட்டத்தின் நகலை நான் எடுத்து வைத்து இருக்கிறேன்.'' இதை அவர் டேம்பர் பண்ண மறந்து விட்டார். இதை மிகவும் கெட்டிக்காரத்தனம் என்ற வகையிலே கூட நான் குறிப்பிடுவேன். ஆனால் தாங்கள் அதை அனுமதிக்க மாட்டீர்கள் ஆகவே அது வேண்டாம். இப்படி முற்றிலும் இல்லாத சட்டங்களை இருப்பதாகக் கூறி இந்த அவைக்குக் காணிக்கையாக வைக்கிறேன் என்று கூறியதும், இல்லாத ஒரு சட்டத்தின் நகலைத் தான் எடுத்து வைத்திருக்கிறேன் என்று கூறியதும் இல்லாத ஒரு பில்லை தான் வரவழைத்து பரிசிலனை செய்து கொண்டிருக்கிறேன் என்று கூறியதும், இல்லாத ஒரு பில்லை மேற்கு வங்க சட்டப் பேரவையில் நிறைவேற்றி மைய அரசின் கன்கரன்ஸுக்கு அனுப்பியதாகக் கூறுவதன் மூலம் கனம் அமைச்சர் has played a hoax on this House.

[முற்பகல் 11–00].

ரெக்கார்ட் டேம்பர் செய்ததன் மூலம் அவையை அவமதித்து இருக்கிறார்கள். தமது தொழிலாளர் விரோதக் கொள்கைகளை, உண்மைகளை சொல்லி நியாயப்படுத்த உண்மைகள்

இல்லாத காரணத்தினால் மேற்கு வங்கத்திலும் தங்களது போன்ற சட்டங்கள் உண்டு என்று உண்மையற்ற தகவல்களை கொடுத்து, இந்த அவையை ஏமாற்ற முயற்சித்திருக்கிறார்கள். மேலும் மேற்கு வங்க அவையில் கொண்டு வராத illusory சட்டங்களை நிறைவேற்றியதாக கூறுவதன் மூலம், மேற்கு வங்க சகோதர அவை மீது அபாண்டம் பொழிவதாகாதா ?

பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அந்த அவை நிறைவேற்றாத சட்டங்களை நிறைவேற்றியதாக, இந்த அவையில் அமைச்சர் கூறினால், அந்த அவை அதனை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டால், இரண்டு அவைகளுக்கும் இடையில் உள்ள நல்லுறவு கெடாதா ? What will be happening in the relationship between two brother Assemblies?

இரண்டு அவைகளுக்கும் இடையே உள்ள சகோதர உறவு என்ன ஆகும்?

ஒரு சகோதர அரசின் முதலமைச்சர் ஒரு நடவடிக்கை எடுத்ததாக ஒரு அமைச்சர் இந்த அவையில் கூறுவதற்கு முன், அங்குள்ள அமைச்சரிடம் அதை வெரிபை செய்வதுதானே நெறியாகும். அதற்கான நேரமும் இருந்ததே. ஆனால் அந்த நெறியையும் மீறியுள்ளார். அதனால் மேற்கு வங்க தொழிலாளர் நல அமைச்சர் எழுதிய கடிதத்தில் I am shocked என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

சொன்ன பிறகும் அவை வெரிபை பண்ணுவதற்கு நிறைய நேரம் இருந்திருக்கிறது. சென்ற கூட்டத் தொடருக்கும் இந்த கூட்டத் தொடருக்கும் இடையில் பெரிய கேப்-இடைவெளி இருந்திருக்கிறது. அவர் வெரிபை பண்ணியிருக்கலாம். அதுவுமல்லாமல், மேற்கு வங்க அமைச்சரிடமிருந்து வந்த கடிதத்தின்படி, அவர்கள் நிறைவேற்றிய பில்லை 13–3–1981 ஆம் தேதியே, நமது அமைச்சருக்கு டெஸ்பேச் செய்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. ஆகையினால் வேண்டும் என்றே, அப்படி கைக்கு வந்த பிறகும் கூட திருத்தாமல் இருந்திருக்கிறார் — தவறு இருக்கிறது என்று தெரிந்தும் கூட திருத்தத் தயாராக அவர் இல்லை என்பது டெலிபிரேட்டாக தெரிகிறது. அதை வேண்டுமென்றே அப்படியே இருக்கட்டும் என்று விட்டு வைத்து, அதை உண்மையாக்க முயன்றிருக்கிறார்.

He wants to hide the fact from the House.



ஆகவே, தலைவர் அவர்களே, இவ்வளவு பிரைமா பேசிகளுடன் நான் விளக்கி எடுத்துச் சொல்லிய பிறகும், இவ்வளவு தஸ்தாவேஜுகளை காட்டிய பிறகும், சரியான ஆதாரம் இல்லை என்று சொல்லி தள்ளிவிடாமல், தயவு செய்து பரிசீலனை செய்து இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளோடு முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போதே நான் எப்படி உங்களுக்கு உறுதி கூற முடியும். அமைச்சர் அவர்களின் விளக்கத்தை கேட்ட பிறகு தான் பரிசீலனை செய்ய முடியும். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் நான் வேண்டுமென்றே பேரவைக்குத் தவறான தகவலைத் தந்துள்ளேன் என்று எழுப்பிய உரிமைப் பிரச்சினையில், பேரவைக்கு தவறான தகவல்கள் எதையும் வேண்டுமென்றே, ' வேண்டுமென்றே '' என்ற வார்த்தையை எம்பசைஸ் செய்து சொல்கிறேன். — அளித்து பேரவையில் உரிமைகளை மீறவில்லை என கூற விரும்புகிறேன்.

இது பற்றி தங்களுக்கு விளக்கமாகவே எழுப்பப்பட்ட பிரச்சினையின் மீது எழுத்து மூலமாகவும் நான் தந்துள்ளேன். எனவே எழுப்பப்பட்ட இந்த பிரச்சினையில் இப்போது சுருக்கமாக என்னுடைய விளக்கத்தை இங்கு கூற விரும்புகிறேன்.

நான் 12–2–1981 அன்று அவையில் பேசிய பேச்சிலேயே நான் 10–2–1981 அன்று கொடுக்கப்பட்ட தகவல்களைத் திருத்தி கூறியுள்ளேன். எனவே, நான் 12–2–1981 அன்று பேசியதில் தவறு உள்ளதா அல்லது நான் கூறியது ஆதாரம் இன்றி இருந்ததா என்று மட்டும்தான் தாங்கள் கவனிக்க வேண்டும்.

நான் 12–2–1981 அன்று பேசியதில் பின்வருமாறு கூறியுள்ளேன் ;—

The West Bengal Government has *drafted a Bill* for is application in that State. The Bill has already been forwarded to the Union Government for concurrence. While introducing a new Section in that Act the State Government proposes to assume powers to prescribe the terms and condition of employment for prevention of work stoppage..

அந்த பில்லை வரவழைத்து பரிசிலனை செய்வதாக இருக்கிறோம் என்று கூறியுள்ளேன். எனவே அன்று கூறிய தகவல்கள் மேற்கு வங்க அரசினுடைய சட்ட முன்வடிவின் நகலிலிருந்து வந்தது அல்ல என்பது தெளிவாகும். நான் அன்று பேரவைக்கு கொடுத்த தகவல் All India Organisation of Employers Labour News என்ற புஸ்தகத்தில் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது. அதிலே உள்ள விவரம் பின் வருமாறு.—

"....In the absence of any Central proposal for amendments to the Industrial Disputes Act, 1947, the West Bengal Government itself has drafted a Bill for its application in the State. The Bill has already been forwarded to the Union Government for concurrence. While introducing a new Section in the Act, the State Government proposes to assume powers to prescribe terms and conditions of employment, for prevention of work stoppage or restoration of normally in industrial production. It has proposed that the following provisions may be incorporated in the Act as a new section 9 (C). If the State Government is satisfied that it is necessary for public convenience or for maintenance of supplies and services essential to the life of the community or employment, it may ask any employer or workmen to observe, for such period as may be specified in the order, the terms and conditions of employment prescribed by the State Government. During the period no industry will be allowed to close, to suspend and terminate the services of any workman. With a view to encouraging arbitration and to make it popular, the State Government has proposed in the bill that arbitration may be made compulsory in certain specific cases. Section 10-A provides compulsory arbitration in cases of breach of public peace, prolonged hardship to a large section of community and loss of employment."

இதற்கு ஆதாரமாக மேற்கு வங்க அரசின் சுற்றறிக்கை ஒன்றின் மூலமாக இம்மாதிரியான திருத்தங்களின் மீது பொது கருத்து அறியும் வகையில் மேற்கு வங்க அரசு 24—3—1980 ஆம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கருத்தைக் கேட்டு சுற்றறிக்கை ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்கள். அந்தச் சுற்றறிக்கைக்கு இணைப்பாக கொண்டுவரப்படயிருந்த சட்ட திருத்தத்தின் வரைவு ஒன்றினையும் தங்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளேன். அதில் இன்டஸ்டிரியல்ஸ் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டில் 9 (சி) என்ற புதுபிரிவையும், 10 (ஏ) என்ற புதுப் பிரிவையும் கொண்டுவருவதற்கான வரைவுகளைக் குறித்து கருத்துக்களைக் கேட்டுள்ளார்கள். 9 (சி) என்ற பிரிவின் முக்கிய அம்சம்—



"If the State Government is satisfied that it is necessary or expedient for securing convenience of the public and/or for maintenance of supplies or services essential to the life of the community or employment, it may, by general or special order, make provison for—

(b) requiring for such period as may be specified in the order, any industry or any part thereof not to close or remain closed, and to work or continue to work on such conditions as may be specified in the order".

என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இதில் மற்ற உட்பிரிவுகளை நான் படிக்கவேண்டிய அவசியம் இல்லை.

10 (ஏ) என்ற பிரிவு கட்டாயமாக மத்தியஸ்திற்கு வழி கோலுவதாகும்.

எனவே நான் கூறியதைப்போன்ற எண்ணம் மேற்கு வங்க அரசுக்கு இருந்து, அதற்கான வரைவுகளின்மீது சம்பந்தப்பட்டவர்களது கருத்துக்களைக் கேட்டுள்ளார்கள். எனவேதான் மேற்கு வங்க அரசின் 24—3—1980 தேதியிட்ட கடிதத்திலேயே கூட பின் வருமாறு தெரிவித்துள்ளார்கள் :—

"....In enclosing a copy of the proposed amendments of the Industrial Disputes Act, 1947, in its application to West Bengal, I am directed to say that previous consultation with and concurrence of the Government of India would be necessary before introducing any Bill in the matter in the State Assembly, in accordance with the previaling practice, as the subject matter attracts clause (2) of article 254 of the Constitution, and the Bill, when passed by the State Assembly, will accordingly be required to be reserved for the consideration of the President under Article 200, *read* with clause (2) of Article 245 of the Constitution."

Your views and suggestions on the proposed amendments, if any, may please be communicated to this Department preferably within a period of fifteen days from the date of receipt."

எனவே, இது அந்த வெளியீட்டில் இருந்ததனால்தான், 'அந்த பில்லை வரவழைத்து பரிசிலனை செய்வதாக இருக்கிறோம்' என்று தெளிவாக கூறியிருக்கிறேன்.

மேலும் திரு. உமாநாத் அவர்கள் மேற்கு வங்க அரசின் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அவருக்கு 28—3—1981 அன்று எழுதிய கடிதத்திலும் கூட 4-வது பாராவை உற்று கவனித்தால் நான் கூறுவதற்கு ஆதாரம் இருக்கிறது என்பது மிகத் தெளிவாகத் தெரியும்.—

(திரு. எஸ். இராகவானந்தம்) [1981 ஏப்ரல் 15

"Various legislative proposals are constantly being processed and examined in my department in consultation with the parties concerned It might so happen that some such proposals that were processed in my department at one time or other reached Tamil Nadu Minister through some source other than my department. In any case, no proposal of the kind was incorporated–may I repeat for the benefit of the Hon. Speaker–in any case, no proposal of the kind mentioned was incorporated in any Bill passed by the State Assembly. My department has meanwhile furnished copies of the Bill passed by the Assemby to the Deputy Secretary to the Government of Tamil Nadu, Labour and Employment (Thirumathi Lalitha Kumar, I.A.S.) with letter No 723-I.R., dated 13th March 1981."

That means it is under consideration.

எனவேதான், 12–2–1981 அன்று நான் பேரவைக்குக் கொடுத்த தகவலில் எந்தவிதமான தவறோ அல்லது தெரிந்தே, வேண்டுமென்றே தவறான தகவல் எதுவும் கொடுக்கவில்லை. எனவே இந்தப் பேரவையின் உரிமையை நான் எந்தவிதத்திலும் மீறவில்லை என்பதை தங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, போன தடவை சி. ஐ. டி. பிரச்சினை வந்தபோது, நான் தீர்ப்பு கூறியதற்குப் பிறகு ஏன் பேசுகிறீர்கள், சர்க்கார் சார்பாக சொல்கிறபோதே கிளாரிபிகேஷன் சொல்லியிருக்கலாமே என்று தாங்கள் விளக்கியிருக்கிறீர்கள். நான் இதிலே விளக்கமாகப் போகவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது முதலாளிகள் சங்கம் வெளியிட்டிருக்கின்ற பிரசுரத்திலிருந்து, மேற்கு வங்க சர்க்காருக்கு யோசனைகள் இருந்ததாகவும், அந்த அடிப்படையிலே கன்சல்டேஷனுக்கு சென்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு 15 நாட்களுக்குள் அந்த விஷயம் அனுப்பியதாகவும், ஆகவே, இதிலே தவறில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் மறுபடியும் கிளியராகச் சொல்கிறேன். நான் மீண்டும் சொன்னதைச் சொல்கிறேன். அப்படி புரபோசல் இருக்கிறது என்பதல்ல அமைச்சர் அவர்களுடைய ஸ்டேட்மென்ட். பிரிவுகள் 9(சி). 10 (ஏ)யில் அசெம்பிளியிலே பாஸ் பண்ணி, சென்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு கன்கரன்சுக்குப் போய் இருக்கிறது என்பதுதான். அது தான் இதிலே சென்ட்ரல் பாயின்ட். அசெம்பிளியிலே இந்த பில் பாஸ் பண்ணி, சென்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு கன்கரன்சுக்காகப் போயிருக்கிறது என்பதுதான் இதிலே உள்ள சென்ட்ரல் பாயின்ட்.



1981 ஏப்ரல் 15]

[திரு. ரா. உமாநாத்]

அதுதான் இந்த அவையை அவமதிப்பதாக இருக்கிறது—'இஸ் கிவிங் அன் அன்-டுருத்'—அந்த சென்ட்ரல் பாயின்டிலே தான் தாங்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை குறித்து, என்னுடைய தீர்ப்பு* பின்னால் வழங்கப்படும்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : " கடந்த சில நாட்களாக இராமநாதபுரத்திலும், சுற்றியுள்ள கிராமங்களிலும் உருவாகியுள்ள கலவர சூழ்நிலை குறித்து " விவாதிக்க பேரவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கேட்டு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், திருவாளர்கள் செ. சிவசாமி, சோ. அழகர்சாமி, மு. அம்பிகாபதி, எம். ஆறுமுகம், என். ஏ. பூங்காவனம், ஏ. டி. கருப்பையா, குமரி அனந்தன், சு. பாலன், ப. பொன்னுரங்கம், துரை முருகன், ப. நெடுமாறன், க. பாரமலை, எஸ. ஆண்டித்தேவர், உ. சுப்பிரமணியன், இரா. கருப்பையா, எல். இளையபெருமாள, ரா. கிருஷ்ணன், ரா. உமாநாத், கு. ரமணி, எஸ். இராசாராமன், சி. பழனிமுத்து, பா. புஜனார்த்தனன், பொ. உத்திராபதி, ப். மொக்கையன், ஜி. மூர்த்தி, என். சங்கரய்யா, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. என். எஸ். வி. சித்தன் ஆகிய 30 பேர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக கூறும்படி மாண்புமிகு உறுப்பினர்களை கேட்டுக் கொள்கிறேன்.

*டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள இரு சாரார் சார்பிலும், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை நான் இந்த அவையின் முன் கொண்டு வருகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறேன்.

---

* 4—5—1981 ஆம் தேதி தீர்ப்பளிக்கப்பெற்றது.

[டாக்டர் மு. கருணாநிதி]

கடந்த சில நாட்களாக இராமநாதபுரம் நகரத்திலேயும், அதை சுற்றியுள்ள சிற்றூர் பகுதிகளிலும் கொலையும், கொள்ளையும், தீ வைப்புச் சம்பவங்களும், அதன் தொடர்பாகத் துப்பாக்கிப் பிரயோக நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. ஏதோ ஒரு சிறிய நிகழ்ச்சியின் அடிப்படையில் இத்தகைய வன்முறை சம்பவங்கள் கடந்த ஒரு மாத காலமாகவே அரும்பி, இன்று நாட்டு மக்களுடைய கவனத்தைத் திருப்புகின்ற அளவிற்கும், மிகுந்த கவலையை நாட்டின் அமைதியில் அக்கறை கொண்ட ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் எழுப்புகின்ற அளவிற்கு ஏற்பட்டுள்ளது என்பதை மிகுந்த வருத்தத்தோடு இங்கே சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

கடந்த இரண்டொரு நாட்களுக்கு முன்பு கூட வெள்ளா, ஆனைக் குடியிருப்பு, இருஞ்சூர்மடை, தெய்வசிறுநல்லூர், களறி, கைலாச மங்கலம் ஆகிய சிற்றூர்களில் உள்ள நூற்றுக் கணக்கான விடுகள் தீ வைக்கப்பட்டு, முற்றிலும் அழிந்து சாம்பலாகி விட்டிருக்கின்றது என்ற செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன, பல கிராமங்களில் உள்ள வைக்கோல் படப்புகள் தீ வைக்கப்பட்டு, அவற்றோடு இல்லாமல் உயிர் சேதங்கள், உடமைச் சேதங்கள், நூற்றுக் கணக்கான கால் நடைகள் உயிர் இழக்கக்கூடிய கொடுமைகள் இங்கே நடைபெற்றிருக்கின்றன. ஏதோ ஒரு அரசியல் கட்சி சண்டையாகவோ, அல்லது இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட மோதுதலாகவோ இல்லாமல் வகுப்புக் கலவரம் என்ற அளவிற்கு, ஏற்கனவே, தங்களுடைய உரிமைகளை, சலுகைகளை பெற வாதாடுகின்ற, போராடுகின்ற, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அதேபோல தங்களுடைய உரிமைகளை சலுகைகளைப் பெற வாதாடுகின்ற, போராடுகின்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதுதல் என்பதை எண்ணுகின்ற நேரத்தில் உள்ளபடியே ஒன்றே குலமாக, ஒற்றுமையாக வாழ வேண்டுமென்று உத்தமர்கள் பலர் நீண்ட நெடு நாட்களாக நம் நாட்டிலே செய்து வந்த பிரச்சாரம் இன்னும் முழுமையான வெற்றி அடையவில்லை என்பதை எண்ணித்தான் நாம் வருந்த வேண்டிய சூழ்நிலையில் இன்றைக்கு இருக்கிறோம்.

இன்றைக்கு அணுகுமுறை என்ன என்பதை எல்லாம் ஆலோசிப்பதற்கு இடையே, எழுந்துள்ள குமுறலை, கொதிப்பை, கொந்தளிப்பை அடக்குவதற்கு, உடனடியாக நாம் ஈடுபட வேண்டிய செயல்முறைகள் எப்படி இருக்க வேண்டுமென்று விவாதிப்பதற்கும், அந்த விவாதத்தினுடைய கருத்துக்கள் அரசின் சார்பிலே கேட்டு, அதற்கேற்ற நடவடிக்கைகளை கட்சிச் சார்பற்ற முறையிலே அனைவரும் கலந்து எடுப்பதற்கும் உதவிகரமாக இருக்கும் என்கின்ற எண்ணத்தோடு இந்த ஒத்தி வைப்புத்





[டாக்டர் மு. கருணாநிதி]

தீர்மானத்தை இங்கே கொண்டுவர முற்பட்டேன். கடந்த ஒரு மாத காலமாகவே இராமநாதபுரம் வட்டாரத்திலே இந்த சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதிலே யார், யாரை முதலில் தாக்கினார்கள், என்ன காரணத்தினால் தாக்கினார்கள், யார் குற்றவாளிகள் என்கின்ற ஆராய்ச்சியிலே நான் ஈடுபட விரும்பவில்லை. அப்படி ஈடுபடுகின்ற காரணத்தினால் இருக்கின்ற நிலைமை மேலும் தீவிரப்படுத்தப்பட்டு, மேலும் வன்முறை சம்பவங்கள் அங்கே உருவாகி மீண்டும் ஒரு முதுகுளத்தூர் ஏற்பட்டு விடக் கூடுமோ என்கின்ற அச்சத்தின் காரணமாக தான் நான் அந்த ஆராய்ச்சியிலே ஈடுபட விரும்பவில்லை. எனினும் காவல் துறையினர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை காலம் தாழ்ந்து எடுத்த காரணத்தினால் எந்த அளவிற்கு வன்முறைகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன என்பதை இங்கு சுட்டிக்காட்டுவதன் மூலம் இனிமேலாவது பலத்த காவல் துறை பாதுகாப்போடு அங்கே பாதிக்கப்படுகின்ற மக்கள் மேலும் பாதிக்கப்படாமல் அவர்களது உடைமைகள், உயிர்கள், குழந்தை குட்டிகள், கால் நடைச் செல்வங்கள் இத்தனையும் பாதுகாக்கப்படுகின்ற ஒரு சூழ் நிலை அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற அந்த அடிப்படையிலே தான் இதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 11–20]

கடந்த இரண்டொரு நாட்களுக்கு முன் வெளி வந்த 'இந்து' பத்திரிகையில் கூட அங்கே காவல் துறையினர் எப்படி எந்த அளவிற்கு செயல்பட்டனர் என்பதை வேடிக்கையாக அல்ல, வேதனையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். இராமநாதபுரம் நகரத்திலே அண்ணா நகர் என்ற ஒரு பகுதி இருப்பதாகவும் அந்தப் பகுதி எப்படி இருக்கிறது என்பதையும் இந்து பத்திரிகை வருணித்துக் காட்டுகிறது.

> Anna Nagar was the main target of attack. It is common knowledge in the town that this colony is noted for large scale illicit distillation of arrack and bootlegging too. But why did the police take so long to bring the situation under control ?

என்று கேட்டுவிட்டு, அங்கே இருக்கிற நிலவரத்தை வருணிக்கிற போது

> Shabby-looking youths, armed with spears, clubs, iron rods, and knives were walking the streets quite freely the whole of Saturday as if they were in full command of the situation.

Their main haunt was the Railway feeder road and surprisingly there was not a single policeman in this area in spite of the fact that the railways was the only mode of communication since Friday afternoon.

At midnight on Saturday this correspondent was an eye-witness to the reign of terror unleashed on the railway station platform when some men, a few of them in an intoxicated state and all of them armed with iron rods walked up and down the platform, peering into the faces of the waiting passengers and passing uncharitable comment on women.

When the men left after this rather creepy exercise, a jeep arrived on the scene and three police officers alighted from it. The panic-stricken passenger thought that their saviours had arrived at last to protect them. But it was evident that the police officers had arrived on a hunt for coffee to be taken to their superiors. The flask which one of them carried proved their mission.

அந்தப் போலீஸ் அங்கே வந்ததுகூட கலவரத்தையோ ஏற்படக் கூடிய அமளியையோ அடக்குவதற்காக அல்ல, அவர்களுடைய மேலதிகாரிகளுக்கு காபி வாங்குவதற்காக போலீஸ் ஜீப் வந்ததே தவிர, கலவரங்களை அடக்குவதற்கு அமைதிப்படுத்துவதற்கு அமலி உருவாகாமல் பார்ப்பதற்கு இல்லை என்று தான் இந்து பத்திரிகை எழுதிக் காட்டுகிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ் நிலையில் பலத்த காவல் துறையினருடைய கண்காணிப்பு இல்லாத காரணத்தால் கடந்த ஒரு வார காலமாக இராமநாதபுரம் நகரம் வெறிச்சோடிக் கிடக்கிறது. பாலைவனமாகக் காட்சி தருகிறது, கடைகண்ணிகள் அங்கே அடைக்கப்பட்டுக் கிடக்கின்றன, அந்தப் பகுதியிலே பேருந்து போக்குவரத்தும் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் நகரத்திலே மாத்திரம் 144 தடை உத்திரவு போடப்பட்டிருக்கிறது. பக்கத்திலே உள்ள கிராமங்களில் அந்தத் தடையுத்தரவு இல்லை. நகரத்திலே பெரும்பான்மையாக இருப்பவர்கள் கிராமங்களிலே உள்ளவர்களைத் தாக்குவதும் கிராமங்களிலே பெரும்பான்மையாக உள்ளவர்கள் நகரத்திலே உள்ளவர்கள் மீது படை யெடுப்பதுமான சூழ்நிலை தடுத்து





நிறுத்தப்படாவிட்டால் ஒரு பயங்கரமான வகுப்புக் கலவரத்தை அந்தப் பகுதியிலே மாத்திரமல்ல, மாநில அளவிலே ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தின் காரணமாக இப்படிப்பட்ட நிலைமை கடுகளவு உருவாகக்கூடாது என்ற அக்கறையின் காரணமாக இந்த அவையை ஒத்திவைத்து விட்டு நாம் அதைப்பற்றி விவாதித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாம் அனைவரும் பொறுப்பேற்கின்ற நிலைமையிலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் கொண்டு வருகிறேன்.

திரு. செ. மாரி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இராமநாதபுரத்தில் ஒவ்வொரு நாளும் என்ன நடக்கிறது என்ன நிகழ்ந்துக் கொண்டிருக்கிறது என்பது கேள்விக் குறியாக இருந்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமை இன்றைக்கு மட்டுமல்ல, கடந்த 20 நாட்களுக்கு மேலாக இந்த ஆபத்தான நிலைமை தான் அங்கே இருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இது சம்பந்தமாக 3– 4– 1981 அன்றே நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது இது நாள் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. 8– 4– 1981 அன்று நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். இன்றைக்கு வரைக்கும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அவைக்கு முதலிலே நான் கொடுத்தேன். ஆகவே முதலிலே நான் தான் பேசி இருக்க வேண்டும். இந்த நிலைமையை எடுத்துச் சொல்வதற்காக நான் தான் முதலில் அறிவிப்பு கொடுத்திருந்தேன். இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்ததன் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக இதை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தி இருக்கமுடியும். ஆனால் இன்றைக்கு நிலைமை கட்டு மீறிப் போய்விட்டது. இருந்தாலும்கூட, இந்த நிலைமையிலே போலீசை அதிகமாகக் கொண்டு வந்து அதைத் தடுத்து நிறுத்த முடியும். நான் கேள்விப்பட்டதெல்லாம் வெள்ளார் போன்ற இடங்களிலே, ஆனைகுடி, சகலைபுரம் போன்ற இடங்களிலே நேற்றைய தினம் 30 வீடுகளைக் காலி செய்து அதில் தீ வைத்ததாகக் கேள்விப்படுகிறேன். இராமநாதபுரம் டவுனுக்கு வரக்கூடிய பைப்பை பொட்டிதட்டிக் கிராமத்தில் உடைத்து இருக்கிறார்கள். சத்திரக்குடி என்ற இடத்திலே போலீஸ் லாரியை உடைத்து போலீஸ் தப்பித்துச் செல்லக்கூடிய அளவிற்குப் பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது; போலீஸ் ஸ்டேஷன் தாக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சம்பவங்களை பார்க்கின்ற பொழுது 1957-ஆம் ஆண்டு நடந்த மிகப் பெரிய ஜாதிக் கலவரம் கண் முன்னால் வருகிறது. இராமநாதபுரத்தில் உள்ள மக்கள், முதுகுளத்தூரில் ஏற்பட்ட ஜாதிக் கலவரம் இங்கேயும் ஏற்படக்கூடாதே என்பதில் ஒன்றாய் கருத்தாக இருக்கிறார்கள். தலைவர்கள் அத்தனை பேர்களும், கட்சித் தலைவர்கள் எந்தவிதமான வித்தியாசமும் பாராட்டாமல் எந்த அள

விற்கு இந்தச் சம்பவங்களை ஒடுக்க முடியுமோ எந்த அளவிற்கு குறைக்க முடியுமோ அதற்கு ஆதரவாக அத்தனை பேர்களும் பேசி வழிகாட்டும் முறையிலே சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட கமிட்டியை நியமித்து, அந்தக் கமிட்டி கிராமத்திற்குச் சென்று சமாதானம் செய்யலாமே தவிர, இன்றைககுப் போட்டிருக்கும் கமிட்டி ஜாதிக் தலைவர்களைக் கொண்ட கமிட்டியாகும். இந்தக் கமிட்டி நிச்சயமாக இன்றைக்கிருக்கின்ற சூழ்நிலைகளை அடக்க உதவாது ; குறைக்க உதவாது. அவர்கள் ஓரளவிற்குத் தங்கள் கொள்கைகளின் அடிப்படையிலே, வேறொரு கோணத்திலேயிருந்து பார்த்துச் செய்கிறதால் மேலும் மேலும் இது வளரக்கூடிய சந்தர்ப்பம்தான் ஏற்படும். ஆகவே அரசியல் தலைவர்களைக் கொண்ட கமிட்டியை அமைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்து, அதன் மூலமாக இந்த நிலைமைகளைச் சன்னம் சன்னமாகக் குறைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த நிலைமைகளைப் பற்றிச் சபையிலே விவாதிக்க வேண்டுமென்பதால் இந்த அவையில் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த சில நாட்களாக இராமநாதபுரம் நகரைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளிலேயும், நகரிலேயும் ஏற்பட்டிருக்கின்ற கலவரச் சூழ்நிலை அனைவருடைய கவனத்திற்கு மட்டுமல்லாமல், மிகப் பெரிய கவலைக்கும் உட்பட்டதாகவும் இருக்கிறது. ஒரு மனித உடம்பிலே ஒரு கரம் இன்னொரு கரத்தை அடித்து நொறுக்க முனைவது போல, முகத்தில் உள்ள ஒரு கண் இன்னொரு கண்ணைப் பிடுங்க நினைப்பது போல, சமுதாயத்தின் மிக முக்கியமான பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கின்ற மக்கள் ஒருவரையொருவர் தாக்குகின்ற ஒரு சூழ்நிலை மிகுந்த வேதனையளிப்பதாகும்.

ஏற்கனவே பின் தங்கியவர்களாக இருக்கின்றவர்கள், தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கின்றவர்கள் மேலும் தங்கள் வாழ்விலே பின் தங்கிய தன்மையும், தாழ்த்தப்பட்ட தன்மையும் பெறுகின்ற வகையிலே சூழ்நிலைகள் உருவாகிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் சமுதாயம் உடனடியாக இதைத் தடுத்து நிறுத்துகின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

அங்கே நடைபெற்ற சம்பவங்களைப் பார்க்கின்றபொழுது, காவல் துறை அதிகாரிகள் இன்னும் சற்று விழிப்போடு, துடிப்போடு, முனைப்போடு, முன்னெச்சரிக்கையோடு பணி புரிந்திருந்தால் இந்தக் கலவரமே நடைபெறாமல் தடுத்து நிறுத்தியிருக்க முடியும் என்றுதான் தோன்றுகிறது. எங்கோ ஒரு சிறு பொறி



யாக எழுந்தது, அதை அணைத்து விடுவதற்குப் பதிலாக அவர்களிலே சிலர் பேசிய பேச்சுக்களே காற்றாக இருந்து விசிறிவிட்டிருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது. சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியவர்கள் சில நேரத்திலே அந்தச் சட்டை செய்யாமல் இருக்கின்ற காரணத்தினால் துன்பம் வருகிறது ; சட்டென்று ஏதாவது சொல்லி விடுவதனாலே துன்பம் வருகிறது. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற அவர்கள் இதை மனத்திலே கொண்டு செயல்பட வேண்டும்.

அங்கே உடனடியாக அமைதியை நிலை நாட்டுவதற்கான சூழ்நிலை வகுப்பதற்காக எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுக் காட்டியதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட கமிட்டி சார்பாளர்கள் அடங்கிய குழு அங்கே உடனடியாகச் சென்று அமைதியை நிலை நாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஏற்பட்டிருக்கின்ற இழப்பு மட்டுமல்ல, ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற பதைப்பும் போவதற்கு, அவர்கள் நெஞ்சத்திலே இருக்கின்ற அச்ச உணர்வைப் போக்கி அவர்களுக்கு ஆறுதலையும், அமைதியையும் ஏற்படுத்த இந்தக் குழு உடனடியாகப் போவது தேவைப்படுகிறது என்று சொல்லி, பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு இப்பொழுது அனைத்து நிவாரணங்களையும் செய்ய வேண்டுமென்று சொல்லி, அம்மாதிரி நடவடிக்கைகளை யெல்லாம் பற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று காந்தி—காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

* திரு. 11. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே, சில நாட்களாக, இராமநாதபுரம் நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சிகள் நம்முடைய தமிழ்நாட்டிற்கு அவமானம் தேடித் தருகிற நிகழ்ச்சிகளாக அமைந்து விட்டன. இங்கே முன்னாலே பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற கட்சிகளின் தலைவர்களும் சுட்டிக்காட்டியதைப் போல, தமிழகம் இந்த நிகழ்ச்சிகளைப் பொறுத்து அதிர்ச்சி அடைந்து இருக்கிறது. இது போன்ற வேதனை தரும் நிகழ்ச்சிகள் நம்முடைய தமிழ்நாட்டிலே நடைபெற்று வருவதைக் கண்டு எல்லோரும் வேதனை அடைந்திருக்கிறோம். இதற்கு எப்படி முற்றுப் புள்ளி வைத்து, மீண்டும் ஒரு சுமுகமான நிலைமையை இந்தத் தமிழகத்திலே ஏற்படுத்துவதற்கு வழி என்ன என்பதை ஆராய வேண்டிய நிலைமையிலே, நாம் இன்றைக்கு இருக்கிறோம். அதிலும், சின்னஞ்சிறு பொறியாக இந்த நிகழ்ச்சி

கிளம்பிய பொழுதே, அதை அணைத்து விட வேண்டிய போலீஸ் அதிகாரிகள், உள்ளூரிலே இருப்பவர்கள், அதை விசிறி விட்டு இருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. சென்ற மார்ச் மாதம் 21 ஆம் தேதி நடைபெற்ற சிறு சம்பவம். அந்த சம்பவத்தை ஒட்டி, அங்கே இருக்கக்கூடிய ஒரு பிரிவு மாணவர்கள் வெளியிட்ட துண்டறிக்கை கூட என்னிடம் இருக்கிறது. அதையும் நம்முடைய மதிப்பிற்குரிய முன்னவர் அவர்களிடம் நான் அளிக்க விரும்புகிறேன். அதை ஒட்டி, அந்த ஊரிலேயே இருக்கிற போலீஸ் அதிகாரிகளுக்கு ஆதரவாக துண்டறிக்கைகளும், சுவரொட்டிகளும் வெளியிடக் கூடிய நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. ஆக, ஏறத்தாழ 1 மாதத்திற்கு மேலாக உள்ளூர் போலீஸ் அதிகாரிகளை ஆதரித்தும், எதிர்த்தும் அறிக்கைகள் வெளியிடக் கூடிய சூழ்நிலைகள் இருந்த பொழுது அதை நாம் கவனித்து, தக்க நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த நிகழ்ச்சிகள் நடந்திருக்காது. இராமநாதபுரம் நகரைச் சுற்றி இருக்கிற கிராமங்களிலே பல கிராமங்கள் இன்றைக்குக் கொளுத்தப்பட்டிருக்கின்றன. பலர் இன்றைக்கு விடு வாசல்களை இழந்து, அகதிகளாகி, கிராமங்களை விட்டு வெளியே ஓடிப் போய், எங்கேயாவது வாழ வேண்டிய பிற்படுத்தப்பட்ட நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் நம்முடைய சகோதரர்கள் என்பதிலே ஐயம் இல்லை. அவர்களுக்கு ஏற்பட்ட இந்த இழப்புக்கும், வேதனைக்கும் பரிகாரம் தேட வேண்டிய ஒரு முக்கியமான பொறுப்பு நமக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்புணர்ச்சியோடு, இந்தப் பிரச்னையை நாம் அணுக வேண்டியவர்களாக இருக்கிறோம்.

துப்பாக்கிச் சூடு ஒரு பக்கம். அதே நேரத்திலே, ஆயுதம் தாங்கிய கூட்டத்தினர், கிராமங்களிலே இரவு நேரத்திலே புகுந்து தாக்குகின்ற நிலைமையையும் ஆயிரக்கணக்கானோர் கொளுத்திய தீப்பந்தங்களுடன் இரவு நேரத்திலே, கிராமம், கிராமமாக சென்று வீட்டையெல்லாம் கொளுத்துகின்ற கொடுமையும் இன்றைக்குத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு நாம் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

துப்பாக்கிச் சூடுகளை, ஸ்தல போலீஸ் அதிகாரிகள் அவர்களாகவே செய்து விட்டார்கள் என்ற குற்றச் சாட்டும் எழும்பி இருக்கிறது. ஸ்தலத்திலே இருக்கக்கூடிய ரெவின்யூ அதிகாரிகளின் அனுமதியில்லாமல், துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது, முன்னெச்சரிக்கைக் கொடுக்கப்படவில்லை, டியர் கேஸ் வெடிக்கப்படவில்லை என்றெல்லாம் அந்த ஸ்தல போலீஸ் அதிகாரிகளைப் பற்றி அங்கேயிருக்கிற பொறுப்பானவர்கள் புகார் சொல்லியிருக்கிறார்கள். இந்த இராமநாதபுரம் நிகழ்ச்சி, மற்றொரு முதுகுளத்தூருக்கு நிச்சயமாக வழி வகுத்து விடக் கூடாது. அதை நாம் தடுத்தாக வேண்டும். இந்த



நேரத்திலே அரசின் கவனத்திற்கு ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். முதுகுளத்தூர் கலவரத்திற்குப் பின்னாலே அன்றைக்கிருந்த ஆட்சி ஒரு முக்கியமான முடிவு எடுத்தது. கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலே இரு பெரும் சமூகத்தினரைச் சேர்ந்த போலீஸ் அதிகாரிகள் யாரையும் நியமிப்பதில்லை. வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களைத் தான் நியமிப்பது, அதன் மூலம் சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்கு உதவும் என்று முடிவு எடுக்கப்பட்டது. அதிகாரி ஒரு குறிப்பிட்ட, சம்பந்தப்பட்ட சமூகத்தினரைச் சேர்ந்தவராக இருந்து, அவர் நியாயமாகச் செய்தால் கூட அதிலே குற்றச் சாட்டுகள் ஏற்படும் நிலைமை இருக்கும் போது பதட்ட நிலைமை அதிகரிக்குமே தவிர, நிச்சயமாகக் குறையாது. இதை அரசாங்கம் மனதிலே கொண்டு அந்தக் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலே, சர்ச்சையிலே ஈடுபட்டிருக்கக் கூடிய சமூகங்களைச் சேர்ந்தவர்கள் யாரும் போலீஸ் அதிகாரிகளாக அங்கேயில்லாமல் பார்த்து, மற்ற, நேர்மையாக, உடனடியாக, துரிதமாகச் செயல்படக் கூடியவர்களை, அங்கே நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு ஜாதியின் பேராலே இந்தக் கலவரத்தைத் தூண்டிவிட்டவர்கள் யார் என்று பார்த்தால், நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சற்றுக் கோடிட்டுக் காட்டினார், கள்ளச் சாராயப் பேர்வழிகள் இந்தக்கலவரத்திற்குப் பின்னணியாக இருந்திருக்கிறார்கள். அதற்கு அப்பாவி மக்கள் இரையாகக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஜாதியின் பேரால், வகுப்பின் பேரால், இனத்தின் பேரால் யார் கலவரத்தைத் தூண்டி விட்டாலும் அவர்களை மிகக் கடுமையாக சட்டத்தின் மூலம் ஒடுக்க வேண்டும் என்றும், அப்பாவி மக்கள் இரையாகக் கூடாது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன், யாராக இருந்தாலும் உடனடியாகப் பிடித்து உள்ளே போடவேண்டும். அதே நேரத்தில் அப்பாவிகளான ஆயிரக்கணக்கான பேர்கள் போலீசாரால் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். கலவரத்தில் சம்பந்தப்பட்டிருப்பவர்களைத் தவிர, மற்றவர்களை எல்லாம் விட்டுவிட வேண்டும். அந்தப் பகுதியிலே சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்கு அனைத்துக் கட்சிகளைக் கொண்ட குழுவை அமைக்க வேண்டும். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் சிவசாமி அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே அங்கே உள்ள சமாதானக் குழுவைப் பற்றிச் சொன்னார்கள். அந்தக் கருத்தை நானும் வரவேற்கிறேன். அங்கே அமைக்கப்பட்டிருந்த சமாதானக் குழுக் கூட்டம் முடிந்த உடனேயே ஒரு கொலை செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டம் முடிந்து உடனடியாகவே அந்தக் கொலை நடைபெற்று இருக்கிறது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு; அங்கே கிராமம் கிராமமாகச் சென்று, மக்கள் மத்தி

- (திரு ப. நெடுமாறன்) [1981 ஏப்ரல் 15

யிலே ஏற்பட்டிருக்கின்ற அந்த விரோத மனப்பான்மையை போக்கி, சுமுகமான சூழ்நிலையை மீண்டும் ஏற்படுத்தும் வகையிலே செயல்பட வேண்டும் என்று தெரிவித்து, அதைப்பற்றி விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு மாத காலமாக முகவை மாவட்டத்திலே இரண்டு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து அங்கே கலவரத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தக் கலவரம் எப்படி ஆரம்பித்தது என்று பார்த்தால், கல்லூரியிலே இருந்த ஒரு வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள், திட்டமிட்டு மற்ற இனத்தைச் சேர்ந்தவர்களை குறை கூறுவது என்ற அளவுக்கு நிகழ்ச்சி நடந்திருக்கின்றது. பெண்களை கேலி செய்திருக்கிறார்கள். தகாத முறையில் நடந்து இருக்கிறார்கள். திட்டமிட்டே நடந்து இருக்கிறார்கள் என்று தகவல் வருகிறது. அதற்கு அப்போதே தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன் தொடர்பாக அங்கே இராமநாதபுரத்திலே திட்டமிட்டு, அந்தக் குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 600 பேர்கள் இராமநாதபுரம் நகருக்குச் சென்று தாக்கியிருக்கிறார்கள், அந்த தினத்தன்றே இராமநாதபுரத்தில் நிகழ்ச்சி நடக்க, அங்கே இருக்கின்ற சித்திரக் குடி காவல் நிலையத்தை குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்டவர்கள் காரணம் இன்றி தாக்கி இருக்கிறார்கள். காவல் துறை அதிகாரிகள் காயமுற்று இருக்கிறார்கள். அந்த அளவுக்குத் திட்டம் இட்டு தாக்கி இருக்கிறார்கள்.

எனக்கு முன்னாலே பேசியவர்கள், சொன்னார்கள். 1957 ஆம் ஆண்டு நடந்த முதுகுளத்தூர் போல நடக்கக் கூடாது. அன்று நடந்த கலவரத்துக்குப் பின்னணி என்ன என்பதை இந்த மன்றத்திலே விரிவாக விவாதித்திருக்கிறார்கள். அன்றைக்கு நடந்தது ஜாதிக் கலவரம் அல்ல என்பதுதான் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் வாதம். ** ** **

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித் தேவர் அவர்கள் முன்னாலே ஆளும் பொறுப்பில் இருந்தவர்கள் தூண்டிவிட்டார்கள் என்று ஒரு குற்றச் சாட்டைச் சொல்லுகிறார். தயவு செய்து அதை நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1981 ஏப்ரல் 15]

[முற்பகல் 11–40]

திரு. எஸ். ஆண்டித்தேவர் : முதுகுளத்தூர் சம்பவத்தைப் பற்றி ஏற்கெனவே பேசியிருக்கிறார்கள். அது இங்கே அனுமதிக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் இருக்கிறது. அதற்காக பழைய சம்பவங்களை இங்கே விவரித்துப் பேசுவது சரியல்ல. இது ஒரு உணர்ச்சி வயப்பட்ட பிரச்னை. இதிலே பங்கேற்று உரையாற்றியவர்கள் அனைவரும் எந்த ஜாதிப் பெயரையும் குறிப்பிடாமல், சமுதாயக் கலவரங்கள் என்கிற வகையில் மிகவும் ஜாக்கிரதையாகப் பேசினார்கள். தற்போது அந்த வண்டி தடம் மாறினால், அது நாட்டுக்கு நல்லதல்ல. ஏற்கெனவே இருந்த சர்க்காரின் நடவடிக்கை குறித்து இப்போது விமர்சனம் செய்வது சரியல்ல. அப்படி செய்யப்பட்டிருந்தால், அது அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பெறும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பழைய கதையைப் பேச வேண்டாம் என்று ஏற்கெனவே சொல்லி, அது அவைக்குறிப்பில் இருந்தும் நீக்கப்பெற்று இருக்கிறது. மறுபடியும் அது குறித்துப் பேசுவது சரியல்ல. அதுவும் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பெறும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : சென்ற ஆண்டு நமது நிதி நிலை அறிக்கையில் கூட இராமநாதபுரம் மாவட்டத்தில் ஜாதிக் கலவரங்கள் நடந்து இருக்கின்றன. அதிலே ஒரு சமூகத்தைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் அதிகமாகத் தவறு செய்து இருக்கிறார்கள் என்று கொடுக்கப்பட்டது. முகவை மாவட்டத்தில் இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. அதை நிறுத்துவதற்கு நல்ல முயற்சியை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ** ** **

திரு. எஸ். இளையபெருமாள் ** ** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1981 ஏப்ரல் 15

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்பட்டு விட்ட கலவரம் அடங்க வேண்டும் என்பதற்காக நாம் இங்கே விவாதித்துக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித் தேவர் குறிப்பிட்டதையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் குறிப்பிட்டதையும் அவைக் குறிப்பில் இருந்து எடுத்துவிடுவது நன்மையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு உறுப்பினரும் இங்கே சகோதரத்துவம் பேசினாலும், வெளியே சென்றவுடன் எப்படியோ ஜாதி வந்து விடுகிறது. நாட்டிலே அப்படிப்பட்ட தொல்லையில்லாமல் ஒரு சுமூகமான சூழ்நிலை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாம் இங்கே பேசிக்கொண்டு வருகிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆண்டித் தேவர் மற்றும் திரு. இளையபெருமாள் இருவரும் பேசிய அந்தக் குறிப்பை அவைக்குறிப்பில் இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : முகவை மாவட்டம் இராமநாதபுரத்தில் நடைபெற்ற கலவரம் தற்போது பரமக்குடி வரை பரவி இருப்பதாக செய்தி வந்திருக்கிறது. அது மாவட்டம் முழுவதும் பரவிவிடும் சூழ்நிலை இருப்பதால், இந்த முக்கியமான பிரச்னையைக் கருதி, அங்கேயுள்ள நிலைமைகள் என்ன என்பதை அறிந்து வருவதற்காக அனைத்துக் கட்சியையும் சார்ந்த தலைவர்களைக் கொண்ட ஒரு உயர்மட்டக் குழு அமைத்து, அந்தப் பகுதி நிலைமைகள் அறிந்து, தவறு செய்கின்றவர்களை கண்டிக்கவும், அப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்கவும் அரசு உடனடியாக நடவடிகை எடுக்க வேண்டும் என்று கேட்டு, அதற்காகவிவாதிக்க வேண்டும் என்பதற்காக அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுருக்கமாகவும் அழகாகவும் நல்ல முறையில் சொல்லிவிட்டார்கள். அதைப்பற்றி மேலும், மேலும் விரிவாகப் பேசி குழப்பத்தை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காக நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

'' டெலிகேட் புராபளம் '' என்று சொல்வார்களே, அந்த மாதிரி இது உணர்ச்சிகளை கிளப்பக்கூடிய வகையில் இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி அதிகமாகப்பேசி, மேலும் குழப்பம் ஏற்படுவதற்கு உறுதுணையாக இருக்கக்கூடாது என்ற முறையில் சுருக்கமாகச் சொல்கிறேன்.



1981 ஏப்ரல் 15] (திரு. உ. சுப்பிரமணியன்)

இந்தப் பிரச்னை நீண்டகாலமாக இருக்கிறது. இப்போது இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பது மட்டுமல்ல ; நீண்டகால நோக்கோடு மேலும் இந்தப் பிரச்னை உருவாகாமல் இருப்பதற்கு, திடீர், திடீரென்று கலவரங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு அரசும் எதிர்க் கட்சித் தலைவர்களும் கூடி நல்ல முறையிலே ஆலோசனை செய்ய வேண்டியது மிகவும் அவசியம், அதுதான் நன்மையாக இருக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்கெள்கிறேன்.

அங்கே நடைபெறும் நிகழ்ச்சி ஏதோ திடீரென்று வந்துவிட்டது என்று சொல்வதற்கில்லை. ஏறத்தாழ 20, 25 நாட்களாக ஆரம்பித்துத்தான் 10 ஆம் தேதி வெடித்திருக்கிறது. இதற்கு யார் பொறுப்பு, எப்படி வந்தது என்று ஆராயப்போனால், அது மிக வேதனை அளிக்கக்கூடியதாகத்தான் இருக்கும். அற்ப விஷயம், அற்பமான நிகழ்வு என்று சொல்வார்களே— நெக்லிஜிபிள் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்— அந்தமாதிரி தூக்கி எறியக் கூடிய சம்பவமாகத்தான் இருக்கும். ஆனாலும், இருதரப்பிலும் உள்ள ஜாதி வெறியர்கள் இதைப் பயன்படுத்தி கலவரம் ஏற்படுத்துவதை இதற்கு முன்னாலும் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு இடங்களில் நாம் பார்த்திருக்கிறோம். இப்போது இந்த இராமநாதபுரம் நிகழ்ச்சிக்கு பல்வேறு காரணங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அரசு இதிலே தன்னுடைய கவனத்தை மிகத் தீவிரமாகச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10 ஆம் தேதிக்குப் பிறகு போலீஸ் நடவடிக்கை கடுமையாக இருக்கிறது. இருந்தாலும் இன்று காலை வந்த பத்திரிகையில மீண்டும் இராமநாதபுரத்தில் 600 பேர் கூடி 35 வீடுகளைக் கொளுத்தினார்கள் ; வேறு ஒரு இடத்தில் 120 வீடுகளைக் கொளுத்கினார்கள் ; இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் இரயிலைத் தடுத்து நிறுத்தி, 4 பேர்களை வெளியே இழுத்துப்போட்டார்கள் : ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்று செய்தி வந்திருக்கிறது. இதைப் பார்க்கும்போது சட்டம், ஒழுங்கு எப்படி இருக்கிறது என்ற அச்சம் நமக்கு ஏற்படுகிறது.

நான் கூட சமீபத்தில் முதுகுளத்தூருக்கு ஒரு திருமணத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்றேன். அங்கே போனபோது பரமக்குடிக்கு அப்பால் பஸ் போகாது என்று சொல்லிவிட்டார்கள், ஆகவே, நானும் என்னோடு வந்தவர்களும் அதற்கு மேல் போக முடியவில்லை ; அந்தத் திருமணத்திற்கு என்னால் போக முடியவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளையும் நாம்கருத்தில்கொள்ள வேண்டும். ஆகவே, இதை மற்ற ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் போல் கருதக்கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்

களும், அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் எல்லோரும் சேர்ந்து இந்த நிகழ்ச்சியில் உன்னிப்பாக கவனம் செலுத்தி, ஆவன செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய பத்திரிகையில் ஏதோ இரண்டு போலீஸ் அதிகாரிகளை மாற்றி இருப்பதாகவும் அதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நேரத்தில் இருவரை அங்கே மாற்றுவது என்பது சரி என்று இருந்தாலும்கூட இன்னொரு பகுதி மக்கள் பாதிக்கப்படுகிற காரணத்தால், ஒன்று யாரையும் மாற்ற வேண்டாம்; மாற்றினால் பாதிக்கப்பட்ட இரண்டு வகுப்பினரையும் தற்காலிகமாக மாற்றுவதுதான் சாலச் சிறந்தது என்பதிலே உங்களுக்கு ஆட்சேபனை இருக்க முடியாது. அதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இப்போது கமிட்டி என்று சொன்னார்கள். சாதாரணமாக பல கமிட்டிகளைப் பார்த்திருக்கிறோம். அப்படி இல்லாமல் '' ஹை பவர் கமிட்டி '' என்ற அடிப்படையிலே முதலமைச்சர், அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்கள் அடங்கிய ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு. அந்தக் கமிட்டி அங்கு சென்று அந்த மக்களுக்கு ஆறுதல் சொல்வதோடு, பலமாதங்கள் ஆனாலும், நீண்டகாலமாக அங்கே இருந்துவரக்கூடிய பிரச்னைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு காணவேண்டும். அப்படியானால்தான் அந்தப் பகுதி மக்களின் அவப்பெயரை நீக்க முடியும். அதற்கு ஒரு சரியான முடிவு எடுக்கப்பட வேண்டும். இல்லை என்றால் '' ரோம் நகரம் தீப்பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்தான் '' என்று சொல்வார்களே, அந்த மாதிரி மக்கள் இந்த சட்டமன்றத்தையும், நம்மையும் நினைத்துவிடுவார்கள் என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சனைகளைப்பற்றி விரிவாக விவாதித்து, அந்த மக்களுக்கு ஒரு நிரந்தர பரிகாரம் காணவேண்டியிருப்பதால் சபையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவரவர்களே, இன்று இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறக்கூடிய சம்பவங்கள் மக்கள் அமைதிக்கும் மக்கள் நலனுக்கும் பெரிய அபாயத்தை உண்டுபண்ணக்கூடியதாக இருக்கின்றன என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல தங்களுடைய உரிமைக்கு முயற்சி செய்துகொண்டிருக்கிற ஷெட்யூல்டு வகுப்பினரும் அதேமாதிரியாக உரிமையைப் பெற முயற்சி செய்கிற பிற்பட்ட வகுப்பினரும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு சமுதாயத்தினருடைய பிரச்சனைகளையும் தீர்த்துவைப்பது நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும். ஆகவே நம்முடைய சட்டமன்றத்தினுடைய அனைத்துக் கட்சிகள் சார்பிலேயும், அரசுத் தரப்பிலேயும் ஒரு முடிவு செய்து, அந்த மக்களின் பிரச்சனையைத் தீர்ப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

[முற்பகல் 11-50]

அவர்கள் அனைவரும் உணர்ச்சி வசப்படாமல் அமைதியாக இருந்து இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்று இந்த சட்டமன்றத்தின் மூலமாக ஒரு வேண்டுகோள் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டால் அது அங்குள்ள நிலைமையை சாந்தப்படுத்துவதற்கு பேருதவியாக அமையும்.

அதுமட்டுமல்ல. ஜாதி வெறியைத் தூண்டிவிடக்கூடிய பிரச்சாரத்தை யார் செய்தாலும் அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாம் இங்கே அரசியல் ரீதியிலே அமைதியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த நேரத்தில் ஜாதி வெறியைத் தூண்டக்கூடிய பிரச்சினைகளுக்கு மிகவும் முன்னுரிமை கொடுத்து ஜாதி அடிப்படையில் ஒருவருக்கு எதிராக ஒருவரைத் தூண்டிவிடுவது அரசியல் கட்சிகளின் அடிப்படையையே மாற்றக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும். சுதந்திரப் போராட்டக் காலத்தில் பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் இராமநாதபுரம் போன்ற இடங்களில் ஒன்று சேர்ந்து மாபெரும் போராட்டத்தை 1941–42 ஆம் ஆண்டுகளிலே நடத்தினார்கள். ஆனால் தற்போது அந்த மக்களிடையே ஜாதி உணர்ச்சி தூண்டிவிடப்படுவது குறித்து நாங்கள் மிகவும் வருத்தமடைகிறோம். ஆகவே அந்த மக்களின் மத்தியிலே சுதந்திரப் போராட்ட காலத்திலே ஒன்று சேர்ந்து பாடுபட்டதை எல்லாம் ஞாபகப்படுத்தி இதை அரசியல் ரீதியிலே அணுகவேண்டும்.

இதுபற்றி போலீஸ் இலாகா சொல்வதைக் காட்டிலும் அங்கே இருக்கக்கூடிய ஆட்சித்தலைவர் அவர்களும், ஆர். டி. ஓ. அவர்களும்தான் இன்றைக்கு அரசாங்கம் என்ற காரணத்தால் அவர்களுடைய ஆலோசனைப்படியும் வழிகாட்டுதல்படியும் காவல்துறை செயல்படவேண்டும். ஆகவே அரசாங்கத்தின் செயற்குறிப்பை மனதிலே கொண்டு, அரசின் அனுகுமுறை

யினை மனதிலே கொண்டு அந்த மக்கள் மத்தியிலே ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதி போலீஸ் இலாகா சரிவர செயல்பட முடியவில்லை என்பதை அரசு ஆராயவேண்டும்.

அடுத்து இராமநாதபுரம் மாவட்டத்திலும் மற்ற இடங்களிலும் ஜாதிவெறியைத் தூண்டுகின்ற பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன. இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த கவலை தெரிவிக்கின்றது. இதுபற்றி எல்லாம் இந்த சட்டமன்றத்திலே வெளிப்படையாக விவாதித்து இந்தப் பிரச்சினைகளின் உண்மை நிலையைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். காவல்துறை பணியாளர்களும், மற்ற அரசுத் துறை பணியாளர்களும் இன்றைக்கு ஜாதி மத வித்தியாசமின்றி பணியாற்றிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்றால் முதலிலேயே அதற்கான தனிப் பயிற்சியை காவல் துறையிலே இருப்பவர்களுக்கும், அரசுத் துறையிலே இருப்பவர்களுக்கும் கொடுத்தால்தான் இந்த நாடு இன்றைக்கு முன்னேற முடியும். இப்போது ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை சாதாரணமானதல்ல. இந்த நிலை நீடிக்க அனுமதிக்கக்கூடாது நல்ல வாழ்வுக்காகப் போராட வேண்டிய மக்களை இப்படி ஜாதி அடிப்படையில் பிளவு படுத்தினால் அவர்களுக்கு எவ்வளவு பாதகம் ஏற்படும் என்பதை நாம் உணரவேண்டும். ஜாதி அடிப்படையில் பிரச்சினைகளைப் பார்த்தால் அதை தீர்க்க முடியாது. அந்த இடங்களில் அரசியல் கட்சிகளுக்கு நல்ல செல்வாக்கு இருக்கின்றது. ஆகவே இதை அரசியல் ரீதியாக அணுகி ஜாதிமத உணர்ச்சியில் அணுகுவதற்கு அனுமதிக்காமல் அரசியல் கட்சிகள் பூராவும் இராமநாதபுரம் மாவட்டத்தில் பிரச்சாரம் செய்தால் இந்த ஜாதிக் கலவரத்தை தடுத்து நிறுத்த முடியும். மக்களிடத்திலே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். ஆகவே அந்தப் பகுதிகளில் சர்வ கட்சிப் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து ஜாதிப் பிரச்சினைகள் பற்றிய நம்முடைய கருத்துக்களைச் சொல்லி மக்கள் தற்போது தேசிய ரீதியிலே முன்னேறவேண்டி இருக்கின்றது என்று அவர்களிடத்திலே கூறினால் அரசியல் ரீதியாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். இந்தப் பிரச்சினை சாதாரணமானதல்ல. ஒரு பெண் அவமதிக்கப்படுகின்றாள் என்றால் அவள் எந்த ஜாதியைச் சேர்ந்தவள் என்பதல்ல, எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பெண்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்ற பொதுக் கருத்தை மக்களிடத்திலே ஏற்படுத்துவதன் மூலம்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் உரிமைகளை, சமுதாயம் ஏற்றுக் கொள்கின்ற வகையிலேயும் சிக்கல்கள் இருக்ககூடாது. அப்போதுதான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற நிலைமை மிகவும் அபாயகரமானது. பத்திரிகையிலே வரக்கூடிய செய்தியைப் பார்த்தால் இந்த



நிலைமை பரவுவதற்குரிய முயற்சிகள் செய்யப்பட்டுவருகின்றன என்பது தெரிய வருகிறது. நிர்வாக ரீதியான நடவடிக்கை எடுத்து உடனடியாகத் தடுக்கவேண்டும். ஜாதிப் பிரச்சாரங்களைத் தடை செய்யவேண்டும். கிராமங்களிலே ஜாதி உணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய பிரச்சாரம் நடந்தால் நிச்சயமாக அதைத் தடை செய்ய இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். இது குறித்து நாம் இன்றைக்குக் கூடிப்பேசி இதற்கான ஒரு வழிவகையினைக் காணவேண்டும் என்று கூறிக் கொள்கிறேன். சிலர் ஏற்கெனவே இறந்து இருக்கிறார்கள். ஜாதி உணர்ச்சி உச்ச கட்டத்திற்குப் போய் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதைத் தடுப்பதற்கு நிர்வாக ரீதியிலே நடவடிக்கை எடுப்பதோடு அரசியல் ரீதியாக இதை அணுகவேண்டும். கிழக்கு இராமநாதபுரத்திலே அரசியல் கட்சிகளைக் கொண்ட ஒரு சமாதான கமிட்டி ஏற்படுத்தி அதிகாரிகளின் துணையோடு அவர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

பிரச்சனைகள் மிக ஆழமாக இருக்கின்றன. தமிழகத்தில் மீண்டும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு தீவிரமான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இங்கே பேசிய அனைத்துக் கட்சி தலைவர்களும் அங்கே அமைதி ஏற்பட வேண்டும், மக்களிடையே ஒற்றுமை நிலவியாக வேண்டும் என்று கூறினார்கள். அந்தச் செய்திகளை வானொலியிலே அரசாங்கத்தின் அறிவிப்புகளாக வருவதற்கும், பத்திரிகைகளிலே மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக எல்லா மக்களுக்கும் தெரியப்படுத்தவும் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த மாமன்றம் அதைப்பற்றி ஆழ்ந்த கவலை கொண்டிருக்கிறது. அத்தகைய சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அமைதியான சூழ்நிலை அங்கே ஏற்பட வேண்டும் என்பதிலே இந்த மன்றமும் அரசாங்கமும் ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கிறது என்று மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இது குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமாதலால், அவைகளையெல்லாம் விவாதிப்பதற்காக, அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக இராமநாதபுரத்தில இப்படிப்பட்ட மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரண்டு சமூகத்தினர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள இந்த பதட்ட நிலை, தமிழகத்தின் பிற பகுதிகளிலேயேயும் பரவாமல் இருப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை தெரிவித்துக் கொண்டு, எந்த சமூதாயம் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் கருத்திலே கொள்ள வேண்டும்.

தாங்கள் பாதிக்கப்படுகிறபோது, காவல் துறையினிடம் சென்று மனு கொடுத்து, அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்ட பின்னாலேயும், காவல் துறையினர் நடவடிக்கை எடுப்பதில் ஏன் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அப்படி நடவடிக்கை எடுத்த போதும், யார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்களோ, அவர்கள் மீதே நடவடிக்கை எடுக்கிற, அவர்களையே துன்புறுத்துகிற ஒரு சூழ்நிலை அங்கே ஏற்பட்டதன் காரணமாகத்தான் அந்தக் கொடுமைகளைத் தாங்க முடியாத நிலையில், அந்த மக்கள் இந்த மோசமான காரியத்தில் ஈடுபட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காவல் துறையினர் மாத்திரம் உரிய நேரத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருப்பார்களேயானால், நீதியை அங்கே நிலைநாட்டி இருப்பார்களேயானால், இப்படிப்பட்ட ஒரு வகுப்புக் கலவரம் அங்கே ஏற்படாமலே போயிருக்கும். எனக்கு இருக்கிற அச்ச உணர்வு என்னவென்றால், அந்தப் பகுதியிலே இருக்கிற காவல் துறை அதிகாரிகள் எந்த சமுதாயத்தையோ சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தினாலே கூடவோ அல்லது தைரியத்தினாலோ கூடவோ, பார்த்துக் கொள்ள ஆள் இருக்கிறது என்ற எண்ணத்தினாலோ, இப்படிப்பட்ட காரியத்திலே அந்த சமுதாயம் இறங்கியிருக்கிறது என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஒரு நிலைமை அங்கு இருக்குமேயானால் உடனடியாக, அது போன்ற அதிகாரிகள் மீது, தமிழக அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சம்பவத்தினாலே தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும் அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மட்டும் மிகவும் ஆணித்தரமான உண்மை. அவர்கள் எத்தனை நாளைக்குத்தான் இப்படி அந்தப் பகுதியிலே பாதிக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் அந்த நிலையைப் பொறுத்துப பொறுத்துப் பார்த்துப் பின்பு, அந்த மக்கள் இந்த சமுதாயத்தினருக்கு பதில் அடி கொடுக்கக் கூடிய ஒரு துர்பபாக்கிய நிலைமைக்கு நாம் அவர்களை ஆளாக்கி விடக் கூடாது. எனவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல, இது தமிழகம் முழுவதும் பரவாமல் இருக்க ஒரு சூழ்நிலையை, நாம் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து உருவாக்க வேண்டும். இதற்கு எல்லா கட்சியின் தலைவர்களும் சேர்ந்து ஒரு நல்ல முடிவினை எடுக்க, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் அந்தப் பகுதிக்கு சென்று, இரு தரப்பு மக்களையும் சந்தித்து, நேரிடையாகப் பேசி, ஒரு உடன்பாட்டு சூழ்நிலையை





ஏற்படுத்துவதற்காக, ஏற்பட்டிருக்கக் கூடிய கலவரத்தை உடனடியாக தடுப்பதற்காகவும்— இப்படி கலவரத்தை தடுக்க என்று சொல்கிறபோது, அடித்தவர்களை எல்லாம் இதோடு அடித்தது போதும் நிறுத்தி விடுங்கள் என்று சொல்வதற்காக அல்ல, அல்லது அடி வாங்கியவர்களிடம் இது வரைக்கும் போதும் நிறுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்வதற்காகவும் அல்ல. மேலும் அடிபட வேண்டியவர்கள் அடி வாங்காமல் இருக்கவும், அடிக்கிறவர்களை நடவடிக்கை எடுத்து தடுக்கவும், ஒரு சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தவும், ஏற்பாடு செய்ய வேண்டும். ஏற்படுத்தும் சூழ்நிலையை நிரந்தரமான முறையில் சுமூகமாக ஏற்படுத்த வேண்டும். ‘ உடனே கலவரத்தை நிறுத்தி விடுங்கள் ’ என்ற முறையில், நாம் சமாதானம் செய்வோமேயானால் இன்னொரு பகுதி மக்கள் நிச்சயமாக ஒரு கொந்தளிப்பை மனத்திலே வைத்துக் கொண்டிருப்பார்கள். அது நல்லதல்ல. எனவே நிரந்தரமான அமைதி சூழ்நிலையை நாம் ஏற்படுத்த வேண்டும்.

எனவே, இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதன் மூலம் தான் ஒரு சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் என்பதையும் சுட்டிக் காட்டி, அதற்கான சர்வகட்சி கமிட்டி ஒன்றை அங்கே அனுப்பி அந்த மக்களை நேரிடையாக சந்தித்து ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே, குடியரசுக் கட்சியின் சார்பாக கேட்டுக் கொண்டு, விடை பெறுகிறேன். அதற்காக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்றும், கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12—00).

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிற நிகழ்ச்சிகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாமன்றம் முழுவதும் எவ்வளவு வேதனையோடும், அக்கறையோடும் அதைக் கவனித்து ஒரு நல்ல நிலைமையை, சூழ்நிலையை தமிழகத்தில் ஏற்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள் என்பதை எண்ணி அவர்கள் நல்லெண்ணத்திற்கு அரசாங்கத்தின் சார்பாக முதலில் நன்றி கூறிக் கொள்கிறேன்.

குறிப்பாக கூடியவரையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் வகுப்புவாதப் பிரச்சினை உருவாவதற்குரிய எந்த வார்த்தைகளையும் தங்கள் பேச்சில் புகுத்த விடாமல் பார்த்துக் கொண்டு அவர்களுடைய உள்ளத்தில் இருக்கிற, எந்த அமைதி நாட்டில்

தேவை என்று விரும்புகிறார்களோ அதை எப்படியாவது ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் அரசாங்கத்திற்கு சில கருத்துக்களை எடுத்து வைத்ததை நான் பெருமையோடும், மகிழ்ச்சியோடும், நன்றியோடும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி அவர்கள் மட்டும் பேசிய கருத்தில் கொஞ்சம்— என்னைப் பொறுத்தவரையில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன், அதை கொஞ்சம் மாற்றிப் பேசியிருந்தார்களானால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். முழுமை அடைந்திருக்கும் என்று குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

இந்த அரசாங்கத்தினுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட, காவல் துறை தக்க சமயத்தில் நடவடிக்கைகள் எடுத்திருந்தால் இப்படி ஒரு பிரச்சினை வளர்ந்திருக்குமா என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் ஐயப்பட்டிருக்கிறார்கள். இது வகுப்புவாதக் கலவரமாகத் தோன்றவில்லை என்பதையும் பண்பாட்டின் அடிப்படையில் ஒழுங்குபடுத்த வேண்டுமென்று விரும்பிய மக்களுக்கும் பண்பாட்டை மீறி நடந்துக் கொண்டவர்களுக்கும் இடையே நடைபெற்ற, குறிப்பிடத்தக்க வகையில் ஓரிருவருக்கிடையே ஏற்பட்ட மனத்தாங்கல், கருத்து வேறுபாடு, முரண்பாட்டின் விளைவுதான் இந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதை நாம் முதலில் மனதில் கொள்வோமானால் தொடக்கத்திலேயே வகுப்புப் பிரச்சினை இல்லை என்பதை நாம் புரிந்துக் கொள்ள முடியும். நடவடிக்கைகள் எடுக்கவில்லையா என்றால் அப்போது தொடக்கத்திலேயே யார் தவறு செய்தார்களோ அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல. நான் இங்கே குறிப்புகளை படித்தேனானால் அதுவே ஒரு வேளை நாம் எதைப் பற்றி இங்கே வெளியிடக்கூடாது என்று விரும்புகிறோமோ அந்தக் கருத்தைச் சொல்வதற்கு வந்துவிடுமோ என்ற ஐயத்தில், அந்த எண்ணத்தில், அதைப் படிக்க விரும்பாமல் எனக்குத் தெரிந்ததைச் சொல்ல விரும்புகிறேன்.

உண்மையில் இப்படிப்பட்ட மாறுபாடான, விரும்பத்தகாத செயல்கள் தமிழகத்தில் ஏற்படுவதற்குள்ள அடிப்படைக் காரணம் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டம் முழுவதுமே இப்படிப்பட்ட பிரச்சினைகள் அண்மைக் காலத்தில் அதிகமாகி அதைப்பற்றி பத்திரிகைகளில் எழுதப்பட்டு அதைப் படிக்கிற மக்களிடையே சில எண்ணங்கள் உருவாகி அதை விவாதிக்கத் தொடங்கி விபரீதமாகக்கூட முடிகிறது என்பதை நான் இந்த மாமன்றத்தில் சொல்ல வேண்டியது என் கடமை என்று கருதுகிறேன். செய்திகள் பத்திரிகைகளில் வரும்போது அதைப் படிப்பவர்களுக்கு சில சமயங்களில் உற்சாகம் இருக்கலாம்,





அக்கறை இருக்கலாம், இதைப்பற்றி தெரிந்துக் கொள்ளவேண்டிய உரிமை கூட அவர்களுக்கு இருக்கலாம். ஆனால் ஏடுகளில் சொல்லப்படுகிற செய்திகள் எல்லாம் முழுமையாக, உண்மையாக ஆகிவிடுவதில்லை என்பதும் ஒரு சில பத்திரிகைகளில் விஷயங்கள் தாமதமாக வந்தாலும் கூட விசாரித்து உண்மையை அறிந்து வெளியிடுகிறார்கள் என்பதை நான் இங்கே சொல்வது என் கடமை என்று உணருகிறேன். இதைப்பற்றிக் குறிப்பிடும்போது வானொலியில்— நேற்றையதினம் என்று கருதுகிறேன்— காலையில் மாநிலச் செய்தியில் ஒரு செய்தி வந்தது. அதில் அவர்கள் வெளியிட்டார்கள். இராமநாதபுரத்தில் ஒரு பகுதியில் ஒரு காங்கிரஸ் தலைவர் முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களோடு பேசியதாகவும் அவர்கள் சொன்னதைக் கேட்டு எம்.ஜி.ஆர். அவர்கள், முதல்வர் அவர்கள் அதைப்பற்றிக் கவனிக்கிறேன் என்று சொல்லி நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒத்துக் கொண்டதுபோல் அந்தக் கருத்து அங்கே வெளியிடப்பட்டது. உண்மையில் நடந்தது அது அல்ல. இரவு 12 மணி அல்லது 1 மணி இருக்கும் என்று கருதுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மிகப் பயங்கரமான ஒரு செய்தியை நான் கேள்விப்படுகிறேன், தகவல் வந்திருக்கிறது, ஒரு காங்கிரஸ் கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார், இன்னும் பல செய்திகள் வருகின்றன என்று சொன்னார்கள்.

திரு. சத்தியேந்திரன், எம்.பி., அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று என்னிடத்தில் சொல்லி, இதை விசாரிக்க வேண்டும் நடவடிக்கை எடுக்க வேண்டும், இதிலே தீவிரமாக கவனம் செலுத்த வேண்டும் என்று சொன்னார்கள். நான் உடனே, எனக்குத் தெரிந்த விவரங்களைச் சொல்லி, இன்னும் சில நிமிடங்களில் உங்களுக்குத் தகவல் தருகிறேன் என்று சொல்லி, உடனடியாக நான் மதுரையிலுள்ள அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு, அதைப்பற்றி மீண்டும் அவர்களிடம் சொல்லி, இன்னும் விவரங்களை நாளை காலை தருகிறேன் என்று சொல்லி, டெலக்ஸ் மூலம் தருவதற்கு ஏற்பாடு செய்தேன். அப்போது சொன்னார்கள், 40, 50 பேர்களை நெருப்பிலே தூக்கிப் போட்டுவிட்டார்கள், குழந்தைகளை தூக்கி எரிந்து விட்டார்கள். அது உண்மையா என்று விசாரிக்க வேண்டும், அப்படியெல்லாம் இல்லாமல் இருக்க வேண்டும், அது மட்டுமல்ல, அப்படி நடைபெறாது பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், அறிக்கை வெளியிடும்போது, இதைப்பற்றிக் குறிப்பிடவில்லை. அந்த நல்லெண்ணத்திற்கு அரசு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறது. செய்திகள் வருகின்றன. ஆனால், இன்றையதினம் வரையில் அப்படி வந்த செய்திகள் எல்லாம் செய்திகளாக வந்ததே தவிர, அந்த அளவுக்குக் கொடுமைகள் அங்கே நடைபெறவில்லை என்

பதை நாம் இங்கே உணர்ந்திருக்கிறோம். இவைகளையெல்லாம் நினைவிலே வைத்துக்கொண்டு பார்த்தால், இங்கே சில எண்ணங்களைச் சொன்னார்கள். ஒரு அமைதிக்குழு வேண்டும்; அது உச்சமட்டக் குழுவாக இருக்க வேண்டும். அது அமைதியான சூழ்நிலையை உருவாக்கிவிடும் என்று சொன்னார்கள். அந்தக் குழு அந்தப் பகுதி மக்களிடம் சென்று சொல்வதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும், அதிலே அனைத்துக் கட்சித் தலைவர்களையும் போட்டு, ஆங்காங்கே இதைப்பற்றி மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். இது மிக நல்ல யோசனை. இத்தகைய கூட்டங்கள் நடத்துவது, அனைத்துக்கட்சித் தலைவர்களும் ஒருங்கிணைந்து, மக்களுக்கு வேண்டுகோள்விடுப்பது, விளக்கம் தருவது என்பதை இந்த அரசு உளமாற வரவேற்கிறது; அதைச் செய்யத் தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. விளம்பரம் செய்ய வேண்டுமென்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் மூர்த்தி அவர்கள் தவறாகக் கருத மாட்டார்கள். அவர்கள் பேசியதை மட்டும் வேண்டுமென்றால் வெளியிட்டு விளம்பரமாக போட இந்த அரசு தயாராக இருக்கிறது என்ற உத்தரவாதத்தினைத் தர விரும்புகிறேன். இன்னொன்றையும் நான் குறிப்பிடுவது மிக அவசியம். நொந்து போனவர்கள், ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள், அடக்கி வைக்கப்பட்டவர்கள், ஆதிக்கத்திற்கு அடிமைப்படுத்தப்பட்டவர்கள் கொஞ்சம் ஆத்திரப்படுவதும், ஆவேசப்படுவதும் இயற்கை; இதிலே தவறுகள் இருக்கலாம். ஆனால், எப்போதும் இதையே ஒரு பிரச்னையாகக் கொள்வது என்பது நடைமுறைக்கு நல்லதல்ல என்ற பணிவான என் வேண்டுகோளை வைக்கிறேன். எல்லோருக்கும் பிரச்னை இருக்கிறது. வறுமை என்று வந்தால், எல்லோருக்கும் பிரச்னை வந்துவிடுகிறது; இல்லாமை என்று வந்தால், எல்லோருக்கும் பிரச்னை வந்து விடுகிறது. இவைகளை வைத்துக் கொண்டு, வேறு வழியிலே இந்தப் பிரச்னையைத் திசை திருப்பிவிட்டால், நாம் அமைதியை நிச்சயமாக ஏற்படுத்த முடியாது.

நேற்றைய தினம் நான் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு, உடனடியாக அங்கே உள்ள அனைத்துக் கட்சிகளினுடைய பிரதிநிதிகளை அழைத்து, அமைதிக் குழு அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறேன். அது போதாது என்று நீங்கள் கருதுவீர்களானால், நிச்சயமாக உச்சமட்டக் குழு என்ற வகையிலும், அமைதிக் குழு அமைக்க வேண்டுமென்றால், அது நிரந்தரமாக தமிழகத்தில் இருக்க வேண்டுமென்று விரும்பினால், அதை விட மகிழ்ச்சி தருவது வேறல்ல. அந்த உத்தரவாதத்தைத் தருவீர்கள் என்ற நம்பிக்கையில், அதை வரவேற்கத் தமிழக அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.





இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு கட்டளையையிட்டு, அதை செயல்படுத்தச் சொல்லியிருக்கிறேன். பயங்கரமான ஆயுதம், தேவையற்ற ஆயுதம் என்ற வகையில் யாரிடத்திலாவது இருந்தாலும், அதைக் காவல் துறையினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை ஆங்காங்கே தண்டோரா போட்டும், அறிக்கைகளை விட்டும், ஆங்காங்கே அதிகாரிகள் மீண்டும் மக்களிடத்திலே சொல்லும்படியும் சொல்லியிருக்கிறேன். வன்முறையில், ஈடுபடுவார்கள் என்ற சந்தேகம் இருந்தால், முன்னதாகவே அவர்களுடைய செயலைத் தடுப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளையும் எடுக்கச் சொல்லியிருக்கிறேன். இவைகளையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம், நாம் இந்த மன்றத்தில் இவ்வளவு ஒருமை உணர்வோடு, எந்தவித சந்தேகத்திற்கும் யாருக்கும் இடம்தராத வகையில் கருத்துக்களை வெளியிடுவோம் என்று வேறு சிலர் கருதாமல் இருப்பார்களானால், அவர்களுக்கு இது படிப்பினையாகவும், எச்சரிக்கையாகவும் அமையும் என்பதை நான் இங்கே சொல்வதிலே பெருமை அடைகிறேன்.

[பிற்பகல் 12—10]

அதோடு இந்த அரசு எந்த வகையிலும் காவல் துறை எந்தெந்த நேரத்தில் பணியாற்ற அனுமதிக்கவில்லை என்றோ, அல்லது காவல் துறை செயல்படவில்லை என்றோ சொல்வதை இப்போது நான் புள்ளி விவரத்தை வைத்து சொன்னேனானால், யார், யார் மீது, எத்தகையவர் மீது எப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொல்வதே, ஒரு வேளை எந்த வகுப்பார் யாரை தாக்கினார்கள், எந்த வகுப்பார் தாக்கப்பட்டார்கள், எத்தனை பேருக்கு ஆபத்து என்பதை எல்லாம் வெளிப்படுத்துவது, நிச்சயமாக நான் நினைக்கின்றேன். நீங்கள் காட்டிய நல்லுணர்வுகளுக்கு அது ஒத்துழைக்காது; அந்த அளவில்தான் அந்த அறிக்கையை படிக்காமல் எனக்குத் தெரிந்த உண்மைகளை இங்கே வெளியிடுகிறேன்.

காவல் துறையினருக்கும் விபத்துக்கள், ஆபத்துக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அவைகளைத் தாங்கிக்கொண்டுதான், அவர்கள் பணியாற்றுகிறார்கள். எந்த அதிகாரியாவது, எந்த மதத்தை, ஜாதியை, எந்த மொழியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தமிழகத்தினுடைய ஒட்டு மொத்தமான நன்மைக்கு புறம்பாக செயல்படுவாரானால், எவ்வளவு உயர்ந்த பதவியிலே இருந்தாலும், இந்த அரசு அவர் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மன்றத்திலே நான் உறுதி கூறிக்கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 ஏப்ரல் 15

அதோடு நான் நாளைய தினம் மலேசியா போவதாக இருந்தேன். நாளயை தினம் இராமநாதபுரத்திற்குப் போகிறேன் என்பதையும், மலேசியா போகப் போவதில்லை என்பதைச் சொல்லி நாங்கள் எவ்வளவு உங்களுடைய நல்லுணர்விற்கு மதிப்பு வைத்திருக்கிறோம் என்பதையும், எங்களுடைய கடமையைச், செய்வதில் ஆர்வமாக இருக்கிறோம் என்பதையும் எடுத்துக்காட்டுவதற்கு அதைச் சொல்லி, இந்த நிலையில் இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய நிலைமை இல்லை என்பதால் வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய..........

**திரு. எல். இளையபெருமாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். கஷ்டம் இருப்பதை கருத்தாகக் கொண்டு..........

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தில் கருத்துக்கள் சொன்னதற்கு பிறகு விவாதிப்பது முறையல்ல. விளக்கவும் வேண்டாம். தேவைப்படும் பொழுது நேரிலே கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் கேட்பது எதுவும் இப்போது வேண்டாம். வேண்டுமானால் நேரில் கேட்டுக் கொள்ளுங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. தன்னிலை விளக்கம்.

*மதுராந்தகம் தொகுதி உறுப்பினர் அளித்தது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவை விதி 105-ன் கீழ் தன்னிலை விளக்கம் ஒன்றினை மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் அளிப்பார்கள்.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொது வாழ்வும், அரசியல் வாழ்வும் மக்கள் சேவையை அடிப்படையாக கொண்டதுதான். கடந்த 12 ஆண்டு கால பொது வாழ்வில் விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினைகள், ஆதி திராவிட மக்களின் மேன்மைக்காகவும்



1981 ஏப்ரல் 15] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் பல போராட்டங்கள், முயற்சிகளை செய்து வந்துள்ளேன். அதன் வாயிலாக பொது மக்களின் நன்மதிப்பையும் பெற்றுள்ளேன். அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவும் விளங்குகின்றேன். 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் அன்று இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்கள் ஒத்திவைப்பு தீர்மானத்தின் போது பேசுகின்ற சமயம் ................ (குறுக்கீடு)

**திருமதி டி. யசோதா :** தலைவரவர்களே, உரிமைப்பிரச்சினை...............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உரிமைப் பிரச்சினை இல்லை. தன்னிலை விளக்கம். தன்னிலை விளக்கம் கொடுக்க ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிமை இருக்கிறது.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருமதி டி. யசோதா அவர்கள் பேசுகின்ற சமயம் என்னைப் பற்றி பல உண்மைக்கு மாறான தகவல்களை இம்மாமன்றத்தில் வெளியிட்டு சபையை திசை திருப்பியுள்ளார்கள். மதுராந்தகத்தில் உள்ள எனது அலுவலகத்தில் நான் எந்த பெண் ஊழியரையும் நியமித்ததில்லை. ஞானசௌந்தரி என்னும் பெயருடைய பெண்ணை நான் எக்காலத்திலும் என் அலுவலக ஊழியராக நியமித்ததில்லை. அப்பெண் என் அலுவலக ஊழியர், அலுவலகத்தில் பணி புரிந்துள்ளார் என்று நான் எந்த பத்திரிகையிலும் குறிப்பிடவில்லை. மேலும் பாரத பிரதமர் இந்திரா காந்திக்கு அனுப்பிய தந்தியிலும் அவ்வாறு நான் குறிப்பிடவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். நான் குறிப்பிடாத ஒன்றை குறிப்பிட்டதாகக் கூறி இம்மாமன்றத்தைப் மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்கள் திசை திருப்பியுள்ளார் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 8 ஆம் தேதி பஞ்சாயத்தில் நான் கலந்துகொண்டு ரூபாய்500 ஞானசௌந்தரி என்னும் பெண்ணுக்கு கொடுத்துவிடுவதற்கு தீர்ப்பளித்தேன் எனறு கூறுவது முற்றிலும் உண்மைக்கு மாறான தகவல் ஆகும். 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8 ஆம் நாள் அன்று மதுராந்தகம் ஒன்றிய ஆணையாளர் மற்றும் பல அதிகாரிகளுடன் நான் வறட்சிப் பகுதிகளை சுற்றிப் பார்க்கச் சென்றிருந்தேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்று இரவு ஸ்ரீபெரும்புதூர் அருகிலும், மதுராந்தகம் அருகிலும் பொதுக் கூட்டத்தில் நான் கலந்துகொண்டு பேசி

யுள்ளேன். நான் அந்த பெண் விவகாரப் பஞ்சாயத் திலே கலந்துகொள்ளவில்லை. உண்மை இவ்வாறு இருக்க நான் பஞ்சாயத்தில் கலந்து கொண்டதாக கூறுவது உள்நோக்கம் கொண்ட வீண் பழியாகும். அவர்கள் குறிப்பிடுவது போன்று 8 ஆம் தேதி பஞ்சாயத்திலோ அல்லது 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் நாள் பஞ்சாயத்திலோ நான் கலந்துகொண்ட தில்லை. அவர்கள் குறிப்பிட்டதுபோன்று நான் ரூ.500 கொடுப்ப தாகத் தீர்ப்பளிக்கவுமில்லை. என்னைப் பொறுத்தவரை அவர் கள் குற்றச்சாட்டுப்படி ஒரு பெண்ணை அகமத் பாட்சா கெடுத்திருக்கிறார் என்று என் பார்வைக்கு கொண்டு வந்திருந் தால் அது உண்மையாகவும் இருக்கும் பட்சத்தில் கண்டிப்பாய் நான் பஞ்சாயத்து கூட்டிக்கொண்டோ அல்லது ரூபாய் அளிக்க வேண்டும் என்றோ முடிவு செய்திருக்க மாட்டேன். கண்டிப் பாய் அவர் அப்பெண்ணை திருமணம் செய்யவேண்டும் என்று தான் கூறியிருப்பேன். *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன் சவால் விடக்கூடாது என்று. சவால் விட்டால் தன்னிலை விளக்கம் கூறுவதை நிறுத்திவிடுவேன்.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு உறுப்பினர் டி. யசோதா பேசுகின்ற சமயம் என் அலுவலகம் உள்ள கட்டடம் முழுவதையும் நான் வாடகைக்கு எடுத்துள்ளதாகக் கூறி யுள்ளார்கள். நான் கட்டடத்தின் ஒரு பகுதியைத்தான் வாடகைக்கு எடுத்துள்ளேன். மற்ற பகுதிகளில் பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் வாடகைக்கு உள்ளனர்..........

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கம் என்ற பெயரால்....................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னிடம் காட்டி அனுமதிவாங்கிதான் படிக்கிறார் அவர் முடித்துவிடட்டும்.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** கருப்பண்ண முதலியார் மகள் ஞானசௌந்தரி என்னும் பெண் என்னிடம் வேலை கேட்டு வரவில்லை. அவள் என் அலுவலகத்தில் தங்கியதுமில்லை. நான் யாரையும் என்னுடைய அந்தரங்க காரியதரிசியாகவோ செயலாளராகவோ நியமித்ததுமில்லை என்பதை இம்மாமன்றத் திற்குச் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவருடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கும் நான் பொறுப்பல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் *பெற்றது.



மேலும் மாண்புமிகு உறுப்பினர் டி. யசோதா அவர்கள் இம்மாமன்றத்தில் பேசுகின்ற சமயம் அண்ணா தி.மு.க.வில் ஒரு பிரிவினர் செங்கை மாவட்ட மக்கள் நல மன்றம் என்ற பெயரில் ஒரு அறிக்கை கொடுத்து இருக்கின்றார்கள் என்று கூறுவது முற்றிலும் தவறாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட பிரிவு அண்ணா தி.மு.க விலேயே இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக மக்களின் வாழ்விலே ஒளிவிளக்காகவும் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரப் பாடுபடும் கலங்கரை விளக்காகவும், குறிப்பாக ஆதிதிராவிட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் தமிழக முதல்வர் அவர்க கள் விளங்குகின்றார் என்று ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எழுதிக் கொடுத்ததை மட்டும் படியுங்கள் வேறு ஏதாவது படித்தால் நான் அதை அனுமதிக்கமுடியாது. சபையிலே தகராறைக் கிளப்ப விரும்பினால் நான் அனுமதிக்கமாட்டேன். இல்லாததை எல்லாம் சேர்ந்து சேர்த்துப் படித்தால் நான் நீக்கிவிடுவேன்.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** கடைசியாக இம்மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்வது அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக உண்மைக்கு மாறான தகவல்களை யார் சொன்னாலும் ஒன்றை மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புவது உண்மை வெளிவருவதில் காலதாமதம் ஆகலாம், ஆனால் உண்மை தோற்றதில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஒரு மாண்புமிகு உறுப்பினர், யாராக இருந்தாலும், தன்னிலை விளக்கம் அளிப்பதற்கான உரிமையுண்டு என்பதை நான் நன்றாக அறிவேன். தன்னிலை விளக்கம் என்ற பெயரால் தன்னை சம்பந்தப்படுத்துகிற பிரச்சனைகளில் தான் சொல்ல விரும்பு கிற ஒரு கருத்தை யாரும் சொல்லலாம். தாங்கள் அதை அனு மதிக்கலாம். ஆனால் ஒரு வழக்குக்கான சூழ்நிலையும் பிரச் சினையும் இருக்கிறபோது தன்னிலை விளக்கம் என்ற பெயரால் தன்னைச் சூழ்ந்திருக்கிற மற்றச் சூழ்நிலைகளையும் சேர்த்து விளக்குவதற்கு ஒரு உறுப்பினருக்கு உரிமையுண்டா? இங்கே தரப்பட்டு இருக்கின்ற தன்னிலை விளக்கத்தில் வேறு பல சூழ் நிலைகள் விளக்கப்படுகின்றன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பிரச்சினையிலே கொலையா தற்கொலையா என்று தெரியாதிருக்கிற நிலை. அந்த நேரத்திலே ஒரு உறுப்பினர்மீது குற்றச்சாட்டு மாதிரி வருகிறபோது ஒரு உறுப்பினருக்கு தன்னிலை விளக்கம் என்ற பாதுகாப்பு அளிப்பது இந்தச் சட்டமன்றத்திலே தொன்றுதொட்டு இருக்கிற மரபு. அந்த மரபின் அடிப்படையிலே அவர் தனக்கு எந்த அளவுக்கு சம்பந்தம் உண்டு எந்த அளவுக்கு இல்லை என்பதை விளக்குகிற தன்னிலை விளக்கமே தவிர எந்தவிதமான சட்டப் பிரச்சினையும் இல்லை. தனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை திரு உகம்சந்த் தனக்குச் சொல்லத் தெரிந்த வார்த்தைகளிலே சுற்றிச் சுற்றிச் சொல்லியிருக்கிறாரே தவிர வேறு ஒன்றும் இல்லை.

(பிற்பகல் 12–20)

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தாங்கள் அருள் கூர்ந்து இங்கே படிக்கப்பட்ட தன்னிலை விளக்கம் முழுவதும் நாளையதினம் குறிப்பேட்டிலே ஏறுவதற்கு முன்னால் மற்றொரு முறை படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தான் சம்பந்தப்படவில்லை, தனக்கு அது தெரியாது, தான் அந்த இடத்திற்குச் செல்லவில்லை அல்லது என்னைக் கேட்டுச் செய்யவில்லை, நான் பஞ்சாயத்துக்குச் செல்லவில்லை என்று சொல்லுகின்ற கருத்துக்கள் நியாயமானது. ஆனால் அந்தக் கருத்துக்கள் சரியா அல்லவா என்பது எனக்குத் தெரியாது. அவருக்குச் சொல்வதற்கான உரிமை உண்டு. ஆனால் சூழ்ந்து வருகின்ற பல்வேறு கருத்துக்கள் வேறு விதமான எண்ணங்களை ஏற்படுத்தும். சூழ்ந்து வருகின்ற கருத்துக்களைத் தன்னிலை விளக்கம் என்று சொல்லுவது அவ்வளவு சரியாக இருக்காது. அன்றைக்குப் பேசுகின்ற பொழுது எந்தவொரு உறுப்பினராக இருந்தாலும், ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்பினரை உட்படுத்திப் பேசுவது மரபு அல்ல என்று ஏற்றுக்கொண்டபொழுது, அதைப்போல மாண்புமிகு உறுப்பினரவர்கள் தன்னிலை விளக்கம் என்ற பெயரால் அங்கேயிருந்த சூழ்நிலைகளையும், மற்றவற்றையும் உள்ளடக்கிக் கூறுவது வழக்கிலே வேறு பல பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். தன்னிலை விளக்கம் என்பது தன்னிலை விளக்கமாக இருக்க மட்டும் தாங்கள் அனுமதிக்க வேண்டுமே தவிர வேறு வகையிலே அனுமதிக்கலாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் தன்னிலை விளக்கத்தைப் படித்துப் பார்த்துவிட்டுத்தான் அனுமதித்தேன். வழக்குக்கும் இதற்கும் சம்பந்தமில்லாதபடிதான் தன்னிலை விளக்கம் தரப்பட்டிருக்கிறது. உறுப்பினரவர்கள் வேண்டுமானால் அதைப் படித்துப் பார்க்கட்டும்.





திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த வழக்கிலே எப்படியெப்படி நடந்து கொண்டிருப்பேன் என்று சொல்வதெல்லாம் எப்படித் தன்னிலை விளக்கமாகும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எஃப்.ஐ.ஆர்.-இலே இருக்கின்ற பிரச்சினை எதுவும் இதில் வரவில்லை. என்னிடத்திலே நியாயம் கேட்டிருந்தால் கல்யாணம் செய்துக் கொள்ளச் சொல்லியிருப்பேன் என்ற கருத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. நியாயம் கேட்டிருந்தால் என்று சொல்லியிருக்கிறார்கள். அது தவறு அல்ல.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதிலே நான் ஒரு நோக்கத்தோடு குறிப்பிடுவதாகக் கருத வேண்டாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் உட்கார்ந்து கொண்டே பேசக் கூடாது. ஏதாவது கருத்து சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய அனுமதியைப் பெற்று எழுந்து சொல்ல வேண்டும்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னிலை விளக்கம் சொல்வதற்கு முழு உரிமையும் உண்டு ; அதில் எனக்கு மாறுபாடு இல்லை. சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட அந்த நேரத்திலேயும்கூட மாண்புமிகு உறுப்பினரவர்களை நேரடியாக எந்தக் குற்றச்சாட்டிலேயும் சம்பந்தப்படுத்தி இந்த வாதம எழுப்பப்படவில்லை. அந்த இடம் குறிபிடப்பட்டதே தவிர, கட்டிடம் குறிப்பிடப்பட்டதே தவிர..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வாதத்தில் மாண்புமிகு உறுப்பினரவர்களின் பெயர் வந்த காரணத்தால்தான் இந்தப் பிரச்சினையே வந்தது.

திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த வாதம் நடைபெறுகின்றபொழுது சபாநாயகர் என்று இடையிலே வருகிறது ; ஆகவே, சபாநாயகர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்ற பொருள் இல்லை. அதுபோல, அந்த இடம் குறிப்பிடப்பட்டதால் உறுப்பினரைக் குறிப்பிட்டுக் குற்றம் வரத்தக்க வகையில் எந்தக் கருத்தும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைக்குச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டில் ஒரு பஞ்சாயத்து நடந்தது, அந்தப் பஞ்சாயத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்ற வரி வந்த இடத்தில் எம்.எல்.ஏ. வருகிறார் ; அந்த இடத்திற்காகத்தான் தன்னிலை விளக்கம் வருகிறது.

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், நான் அந்த இடத்திற்குச் செல்லவில்லை, எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை, எந்தவிதமான கருத்தும் தெரிவிக்கவில்லை என்று சொல்லி தன்னிலை விளக்கம் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் இப்பொழுது தெரிவித்திருக்கின்ற கருத்து, வழக்கின் பிரச்சினைக்கு உள்ளேகூட வேறு விதமான எண்ண ஓட்டத்தை ஏற்படுத்தக் காரணமாக இருக்கும். கட்சிக் கொள்கையைப்பற்றி, தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலன், இரட்சகன் என்பதைப்பற்றிச் சொல்லி, ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஒரு பெண்ணுக்கு ஏற்பட்டால் என்னென்ன செய்திருப்பேன் என்று சொல்லியிருக்கின்ற கருத்துக்கள் எல்லாம் தன்னிலை விளக்கம் என்று வருகிறபொழுது நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் எந்த வகையிலேயும் இப்படிச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகளோடு தொடர்பில்லை என்ற கருத்துக்கள் தரலாமே தவிர, வேறுவிதமான கருத்துக்கள் அதனோடு சேர்ந்து இடம் பெறுவது, நாளையதினம் நிச்சயமாக எண்ண ஓட்டத்திலே, தன்னிலை விளக்கம் என்பது வேறு விளக்கம் தருவதற்கு வாய்ப்பாகிவிடும். அதைத் தாங்களே கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் சொல்லியிருப்பது, "தமிழக மக்களின் வாழ்விலே ஒளி விளக்காகவும், அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரப் பாடுபடும் கலங்கரை விளக்காகவும், குறிப்பாக, ஆதி திராவிட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும்" என்று யாரைச் சொல்லி இருக்கிறார் என்றால், தமிழக முதல்வரைச் சொல்கிறார். தலைவரைப் பற்றித் தொண்டர்கள் சொல்வது வழக்கம்தான்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அந்தக் கருத்துக்களிலேகூட எனக்கு மாறுபாடில்லை. தன்னிலை விளக்கக் கருத்துக்களிலே, இந்தக் கருத்துக்களையெல்லாம், மகாத்மா காந்தியிலே தொடங்கி, தொடரலாமா? தன்னிலை விளக்கம் தன்னிலை விளக்கமாக இருக்கும்படி கவனித்துக் கொள்ளுங்கள். இல்லையானால், மறுபடியும் மற்ற தன்னிலை விளக்கங்கள் அந்த வடிவத்தைப் பெற நேரிடும்.
(கூச்சல்—குழப்பம்).

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் கொண்டு வந்த ஒரு பிரச்சினையிலே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் உகம்சந்த் சம்பந்தமாக, பஞ்சாயத்திலே, இருந்தாரா, இல்லையா என்பதுதான் அவருடைய தன்னிலை விளக்கமாக இருக்க வேண்டுமே தவிர, அவர் மற்றப் பிரச்சினைகளை எல்லாம்



கொண்டு வந்து, இன்றைக்கு ஏதோ தனக்குச் சம்பந்தம் இல்லையென்று சொல்கிறார். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, அதிலே சம்பந்தப்பட்டவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்கும் சம்பந்தம் உண்டா, அக்கறை உண்டா என்பது தான்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உகம்சந்த் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவருடைய அனுமதி பெற்று, மாண்புமிகு பேரவைத் தலைவரிடத்திலே அந்த அறிக்கையைக் காட்டிவிட்டு, அந்தத் தன்னிலை விளக்கம் தந்திருக்கிறார்கள். தாங்கள் எந்த அளவிற்கு அனுமதித்திருக்கிறீர்களோ, அந்த அளவுக்கு இப்பொழுது சொல்ல அனுமதித்து, அதற்கு மேலே ஏதாவது குறிப்புகள் இருந்தால் அதை வேண்டுமானால் எடுக்கலாமே தவிர, தாங்களே அனுமதித்திருக்கிறீர்கள். அனுமதித்த அந்தக் குறிப்பை அப்படியே ஏட்டிலே ஏற்றுவதுதான் முறை. அந்த அளவுக்கு ஏற்றும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசுகின்றபொழுது, மாண்புமிகு உறுப்பினரைக் குற்றம் சுமத்தாமல் அவரைப் பார்த்து.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி யசோதா பேசும் போது, திரு. உகம்சந்த் பஞ்சாயத்திலே உட்கார்ந்தார் என்று சொன்னதால்தானே இவ்வளவும். திரும்ப, திரும்ப விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, திருமதி யசோதா அம்மையார் கொண்டு வந்த அந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே பேசிய பேச்சுக்களை ஒட்டி உகம்சந்த் அவர்கள் சில கருத்துக்களைத் தன்னிலை விளக்கமாகக் குறிப்பிடுகிறார்கள். அதிலே நாங்கள் புரிந்து கொள்ளக் கூடிய சூழ்நிலையிலே, எதிலே இல்லாமல் இருக்கிறோம் என்றால், எது உண்மை எது உண்மையற்றது என்று தெரிந்து கொள்ளாத சூழ்நிலையிலே இருக்கிறோம். ஆக, உகம்சந்த் அவர்களுக்கு, அந்த ஞானசௌந்தரி மரணத்திலே, அதன் சார்பாகக் கைது செய்யப்பட்டவர்களிடத்தில் அக்கறை இருந்ததாக வெளியிலே பேசப்படுகிறது. அந்த அக்கறை அவருக்கு உண்டா, இல்லையா என்பதை நான் அவர் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது கோர்ட்டாக ஆகிவிடும். இது வழக்கு மன்றம் அல்ல. (குறுக்கீடு) அதை

விசாரிக்கிற இடம் இதுவல்ல. வெளியிலே வேண்டுமானால், லாபியிலே கேட்டுக்கொள்ளுங்கள். பிறகு, மற்றொருவர் இன்னொன்று கேட்பார்........

டாக்டர் மு. கருணாநிதி : அவர் பதில் சொல்ல விரும்புகிறார், நீங்கள் ஏன் தடுக்கிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் சொல்ல விரும்புவது வேறு. நீங்கள், லிடிங் கொஸ்டியனெல்லாம் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அந்த மாதிரி மரபுகளை இதுவரைக்கும் சபையிலே அனுமதித்ததில்லை. இது நீங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிற இடமில்லை. அது சம்பந்தப்பட்ட வரையிலே வழக்கு மன்றத்திலே இருக்கிறது. நீங்கள் வேண்டுமானால், லாபியிலே சந்திக்கலாம், பேசலாம், என்ன சமாச்சாரம், என்ன நடந்தது என்று கேட்கலாம். (குறுக்கீடு) அதைத் தெரிந்து கொள்ள வேண்டிய வேலை எனக்கும் இல்லை. (குறுக்கீடு) சபையிலே எதை, எதையோ தெரிந்து கொள்ள வேண்டுமென்று நினைக்கலாம். தன்னிலை விளக்கத்திலே, தனக்கு சம்பந்தம் இல்லையென்று சொல்லத்தான் அனுமதித்தேனே தவிர, வேறொன்றும் இல்லை. ஆகவே, அந்த அளவுக்குத்தான் இருக்கிறது. அதிலே வேறு ஏதாவது பிரச்னைகள் இருந்தால், நான் இன்னொரு தடவைப் படித்துப் பார்த்து, வேறு முடிவுகள் இருந்தால் சொல்கிறேன். (கூச்சல்-குழப்பம்) ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருப்பதை நான் அனுமதிக்க முடியாது. தயவு செய்து எல்லோரும் உட்கார வேண்டும்.

திருமதி டி. யசோதா : அன்றைக்கு முன்னவரே தவறான தகவல் கொடுத்திருக்கிறார்........(குறுக்கீடுகள்) அவருடைய பெயரை நான் பயன்படுத்தக்கூடாது என்று அவருக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய பெயரை அவர் பயன்படுத்தியிருக்கிறாரே ?........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றிய பிரச்னையை நான் அனுமதிக்கவில்லை. இனிமேல் பேசுவதெல்லாம் அவைக் குறிப்பிலே ஏறாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அவரும் தன்னிலை விளக்கம் கொடுக்க வாய்ப்பளிக்க வேண்டுமல்லவா ?

[பிற்பகல் 12-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உகம்சந்த் அவர்கள் இதை ஒரு உரிமைப் பிரச்சினையாகத்தான் முதலில் கொடுத்தார். அதற்குநான் அனுமதி மறுத்துவிட்டு தன்னிலைவிளக்கமாக வேண்டுமானால் சொல்லுங்கள் என்று அனுமதி அளித்தேன். அவரும் தன்னிலை விளக்கமாக தன்னுடைய கருத்தை சொல்லி இருக்கிறார். அது அவருக்குள்ள உரிமை ஆகும். அதோடு இந்தப் பிரச்சினை முற்றுப்பெற்று விட்டது. ஒருவர் தன்னிலை விளக்கம் சொல்லி, அதற்கு மற்றொருவர் தன்னிலை விளக்கம் என்ற பெயரால் பதில் சொல்லி பின்னர் அடுத்தவர் சொல்வது எல்லாம் முடியாத காரியம்.





திருமதி டி. யசோதா : தலைவர் அவர்களே, நான் முதலிலே இந்த மன்றத்திலே இந்தப் பிரச்சினையைக் குறித்து எழுப்பியபோது அந்த சட்டமன்ற உறுப்பினர் பெயரைச் சொல்லக்கூடாது என்று நீங்கள் பாதுகாப்புத் தந்தீர்கள். ஆனால் இன்று அவர் என்னுடைய பெயரைப் பல இடங்களில் பயன்படுத்தி இருக்கிறார். (கூச்சல், குழப்பம்).

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, திருமதி யசோதா அவர்களுக்கும் தன்னிலை விளக்கம் சொல்ல அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னைப் பற்றி ஒரு தவறான தகவல் இந்த அவைக்குத் தரப்பட்டு இருப்பதன் காரணமாக, அந்தத் தவறை விளக்க வேண்டிய அவசியத்திற்குதன்னிலை விளக்கம் தரவேண்டிய நிலைமை மாண்புமிகு உறுப்பினர் உக்கம்சந்த் அவர்களுக்கு ஏற்பட்டது. அதே மாதிரி ஒரு தவறான தகவல் தன்னைப் பற்றி கூறி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் கருதுவார்களானால் தன்னிலை விளக்கம் எழுதி, தங்களிடம் அனுமதி பெற்று, அனுமதிக்கப்படுவார்களானால், அதற்குப் பிறகு சொல்லலாமே தவிர, இப்போது இந்தப் பிரச்சினையைச் சொல்வது சரியல்ல.

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) பெரியார் மாவட்டம், பூச்சநாயக்கன்பாளையத்தில் தீ விபத்து.

திரு. கு. ஃ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, "பெரியார் மாவட்டம் கோபிச் செட்டிப்பாளையம் வட்டத்தில் உள்ள பூச்சநாயக்கன்பாளையத்தில் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் அன்று ஏற்பட்ட தீ விபத்தினால் ஆதி திராவிட மக்களுக்குச் சொந்தமான 17 வீடுகள் சேத

மடைந்தது குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தீயினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக 200 ரூபாய் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு வேட்டி, சேலை கொடுக்கப்பட்டது. அரிசி 5 கிலோ கொடுக்கப்பட்டது. அவர்கள் வீடுகட்டுவதற்கு ஒரு குடும்பத்திற்கு 2,000 ரூபாய் கொடுக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்களுக்கு 200 ரூபாயும் சேலை, வேட்டியும், அரிசியும் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த 2,000 ரூபாயையும் உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு ' தாட்கோ ' மூலமாக வீடு கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, 2,000 ரூபாயை மிக விரைவில் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யும். தாமதமானால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை உடனே எடுக்கப்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆ. கேலவரப்பள்ளி அணையைக் கட்டும் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

Thiru T. VENKATA REDDY : Mr. Deputy Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Irrigation, to a matter of urgent public importance, (i.e.) " Anxiety prevailing among agriculturists due to the suspension of the construction of Kelavarapalli Dam in Hosur Taluk, Dharmapuri District ".

* மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்—



அறிக்கை.

1977-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் தர்மபுரி மாவட்டம் ஓசூர் வட்டம் பொன்னியாற்றின் குறுக்கே கேலவரப்பள்ளி என்ற இடத்தில் ரூபாய் 551.50 இலட்சம் செலவில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்நீர்த்தேக்கத்திற்காக 1,419 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டும். அதில் 977 ஏக்கர் இரயத்துவாரி நிலங்கள். 442 ஏக்கர் இனாம் நிலங்கள். அரசு 1979-ஆம் ஆண்டு, மே திங்களில், இந்நீர்த்தேக்கத்திற்காக தர்மபுரி மாவட்டம் ஓசூர் வட்டத்தைச் சேர்ந்த திம்மசந்திரம் மற்றும் இளையசந்திரம் என்ற கிராமங்களைச் சேர்ந்த 69.74 ஏக்கர் இனாம் நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக; நிலம் கையகப்படுத்தும் சட்டம் 4(1)-பிரிவின்கீழ் ஒரு அறிவிக்கையை வெளியிட்டது. அவ்வறிவிக்கையை வெளியிடுவதற்கு முன்னதாகவே பொதுப்பணித்துறை அதிகாரிகள் நிலசுவான்தாரர்களிடம் வாய்மொழி மூலம் ஒப்புதல் பெற்று, அந்நிலங்களில் பிரவேசித்து வேலைகள் துவக்கிவிட்டனர். அவ்வாறு வாய்மொழி ஒப்புதல் அளிக்கும்போது அவர்கள் தங்களது எழுத்து மூல ஒப்புதலைத் தருவதாகக் கூறினர் என தெரிவிக்கப்படுகிறது. அதிகாரிகள் நிலங்களில் பிரவேசித்து அரசு அறிவிக்கையும் வெளியிட்ட பின்பு அந்நிலங்களின் சொந்தக்காரர்கள் என்று உரிமை கோரும் திருமதி எச். கமலம்மாள் மற்றும் அவர்களது மகன்களும், நிலம் ஒப்படைக்கான இசைவு அல்லது மறுப்பு தெரிவித்துக்கொள்ள தங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றும், அரசு நில கையகப்படுத்தும் சட்டம் 4(1) பிரிவின்கீழ் வெளியிட்ட அறிக்கை செல்லாது என்றும், சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனுவினை நவம்பர் 1979-இல் தாக்கல் செய்தனர். இந்த ரிட் மனுவை எதிர்த்து அரசு ஓர் எதிர் ஆணை உறுதிப்பத்திரத்தினை (Counter Affidavit) தாக்கல் செய்தது. உயர்நீதிமன்றம் மேற்கண்ட ரிட் மனுவின் பேரில் தீர்ப்பு வழங்கும் வரை நிலம் கையகப்படுத்தும் சட்டம் 4(1) பிரிவின்கீழ் வெளியிட்ட அறிவிக்கையினைத் தொடர்ந்து எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று தடுப்பு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் இத்திட்டத்தின் வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

2 கேலவரப்பள்ளி நீர்த்தேக்க அணையின் கட்டுமானப்பகுதி. அலுவலர்களுக்கான தற்கால விடுதிகள், தொழிலாளர்களின் விடுதிகள், சாமான் வைக்கும் கொட்டகைகள் மற்றும் கருவிகள் வைக்கும் பட்டறைகள் கட்டப்பட்டுவிட்டன. இது வரை இத்திட்டத்திற்கு ரூபாய் 289 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கினை உயர்நீதி மன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது கட்சிக்காரர்கள் சம்மதித்ததால் அவர்களுக்கு, ஈட்டுத்தொகை வழங்க ஒரு நடுவரை நியமிக்கலாம் என்று நீதிபதி யோசனை தெரிவித்தார். ரிட் மனுதாரர்கள் நிலம் கையகப் படுத்தும் சட்டத்தின் கீழ் இந்த நிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய இழப்பீட்டை விட மிக அதிகமான தொகையை இழப்பீடாகக் கொடுக்குமாறு கோரியுள்ளனர். நீதிபதியின் யோசனையை அரசு பரிசீலித்து ஈட்டுத் தொகையினை நிர்ணயம் செய்ய நடுவர் ஒருவரை நியமிக்க ஒத்துக் கொள்ளலாம். ஆனால், அவர் நிர்ணயம் செய்யும் ஈட்டுத் தொகையினை இந்த இனாம் நிலங்களின் (Te ure) சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்தில் (Supreme Court) நிலுவையில் உள்ள வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் வரை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படும் என்று வழக்கறிஞருக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மேற்கண்ட நிபந்தனையினை ரிட் மனுதாரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, இது பற்றி அரசு மேலும் பரிசீலனை செய்து வருகிறது.

4. இவ்வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ரிட் மனுவில் சம்பந்தப்பட்ட நிலங்களில் அணைக்கட்டின் பகுதிகள் கட்டப்பட்டு உள்ளன. இவ்வழக்கு முடிவு பெறாததால் இத்திட்டப்பணிகள் யாவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. திட்டம் கைவிடப்படவில்லை.

THIRU T. VENKATA REDDY : M . Deputy Sp aker, Sir, though the case has b en fil d in the Court in the yea 1979, it has been al eady 16 month old and so fa the Government has not taken any steps to v cate the stay o der or to proceed with theDam. I want to know what is the difficulty in pu suing the case vigoro sly in the Court.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ; பேரவைத் தலைவர் அவர்களே. நீதிபதி ஏற்கெனவே ஒரு யோசனையை அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அதன்படி ஈட்டுத்தொகை ஒன்றை நிர்ணயம் செய்வதற்கு நடுவரை நியமனம் செய்ய ஒப்புக் கொள்ளலாம். ஆனால், அவர் நிர்ணயம் செய்யும் ஈட்டுத் தொகை இந்த இனாம் நிலங்கள் சம்பந்தப்பட்டதற்கும் கொடுக்கலாமா என்கிற பிரச்னை இருக்கிறது. இனாம் நிலங்கள் சம்பந்தப்பட்ட விஷயம் சுப்ரீம் கோர்ட் வழக்கில் சம்பந்தப்பட்டு இருப்பதால், அது குறித்து முடிவு எடுக்க முடியாமல் இருக்கிறோம். எனவே, இது குறித்து அரசு மேலும் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது.

THIRU T. VENKATA REDDY : When the Supreme Court is seized of the matter the Government can also deposit the compen-



sation amount in the Court and wait for the disposal of the suit so that the Court can dispose of the matter soon. Why the Government has not deposited the compensation amount in the Court.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்த வரையில், தொகையை டிபாசிட் செய்வதில் எந்தப்பிரச்னையும் இல்லை. ஆனால், சம்பந்தப் பட்டவர்கள் ஒரு நடுவரின் தீர்ப்பை ஒப்புக்கொள்ள மறுக்கிற காரணத்தால்தான் இது தாமதமாகிக்கொண்டு இருக்கிறது. இருந்தாலும் கூட, மிக விரைவில் இது குறித்து சட்ட ரீதியாக ஏதாவது ஒரு முடிவு எடுக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்கலாம்.

## 6. வரவு-செலவுத் திட்டம்—1981-82 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

### (அ) கோரிக்கை எண். 24—தொழில்கள்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

"மானியக் கோரிக்கை எண். 24-தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 11,15,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்ட ஜவ்வாது மலையில் ஜம்னாமத்தூரில் ஒரு சந்தன எண்ணெய் தொழிற்சாலை ஆரம்பிக்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.—

"மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 11,15,55,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. சி. பழனிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாட்டம், ஆத்தூர் வட்டத்தைத் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய வட்டமாக சேர்க்கப்பட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 24.—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 11,15,55,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

[1981 ஏப்ரல் 15

திரு. டி. மணி : துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் போதுமான மூலப்பொருட்கள், இடவசதி, தண்ணீர் கிடைக்கின்ற தடிக்கார கோணத்திற்கு அருகாமையில் டயர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றைஆரம்பிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.—

" மானியக் கோரிக்கை எண். 24.—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 11,15,55,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் அவினாசி வட்டம் சேயூர்பகுதியில் சிட்கோ மூலம் சிறு தொழிற்சாலைகள் அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.—

" மானியக்கோரிக்கை எண்.—24 தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,15,55,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும் ."

(அ) கோரிக்கை எண். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

" மானியக் கோரிக்கை எண். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் ரூ. 38,60,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

திரு. ப. சுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் ஒருபுதிய சந்தனத் தொழிற்சாலை ஏற்படுத்துவதைப் பற்றிவிவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.—



1981 ஏப்ரல் 15] (திரு. ப. சுந்தரம்)

" மானியக்கோரிக்கை எண். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு என்கிற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 38,60, 73,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

THIRU S. RAJARAMAN : Sir, to discuss the need to set up a Commission of independent industrial and economic experts to examine the Capital Outlay on Industrial Development, I move—

"That the allotment of Rs. 38,60,73,000 under Demand No. 49, Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் தொழில் கொள்கை மற்றும் திட்டங்கள்* ஆகியவற்றை அச்சடித்து புத்தமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அளிக்கப் பட்டுள்ளன. அவற்றை நான் படித்ததாக ஏற்றுக்கொண்டு சபைக்குறிப்பில் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொன்ன பின்னாலே நானும், மாண்புமிகு, ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட துறைகள் குறித்து பதில் அளிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12·40]

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, நம்முடைய சட்டமன்றத்தில் உள்ள விசிறிகள் (ஃபான்ஸ்) சரியாக இயங்கவில்லை. அதை நல்லமுறையில் இயங்கச் செய்வீர்களா? அதற்கான நடவடிக்கை எடுக்கச் செய்வீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றி பின்னால் பார்க்கலாம்.

---

* 132—344-ம் பக்கங்களில் இணைப்பாக ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

*திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மானியக் கோரிக்கை—24. தொழில்கள் மற்றும் மானியக் கோரிக்கை—49, தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகியவைகள்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கனவே ஆளுநர் உரையிலே குறிப்பிடும்போது இந்த மாநிலத்திலே தொழில் அமைக்கும் திட்டத்திற்கும், மேலும் வேலைவாய்ப்பு வசதியை உருவாக்குவதற்கும் தனியார் துறையிலும் அரசுத் துறையிலும் தொழில்களைத் தொடங்க அரசு ஊக்கமளித்து வருகிறது என்ற ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார்கள். பின்னால வரவு–செலவுத் திட்டத்திலே சொல்லும்போது தொழில் துறையிலே தமிழகத்தின் சாதனை சிறப்பாக அமைந்துள்ளது என்றும் தமிழ்நாட்டில் புதிய தொழில்களைத் தொடங்க முன் வருகிறவர்களுக்கு மேலும் பல வசதிகளும் ஊக்கமும் அளிக்கப்பட வேண்டுமெனப் பலரும் கூறுகிறார்கள்; இதனை ஆராய்ந்துவரும் அரசு, விரைவிலேயே ஏற்றதொரு முடிவு எடுக்கும் என்றும் சொன்னார்கள். ஆக ஆளுநர் உரையிலேயும் வரவு–செலவுத் திட்டத்திலேயும் நல்ல பல திட்டங்கள் வரும் என்று அறிவித்திருக்கிறார்களே தவிர, இப்போது தரப்பட்டிருக்கிற தொழில்துறை கொள்கை விளக்கக் குறிப்பிலும் சிறப்பான திட்டங்கள் எவை, இன் னின்ன திட்டங்கள் இப்போது இருக்கின்றன; இன்னின்ன திட்டங்கள் எதிர்காலத்திலே எடுத்துக்கொள்ளப்பட இருக் கின்றன என்று உறுதியாகச் சொல்லவில்லை. இதிலே தெளிவான முறையில் இந்த நாட்டு மக்களுக்கு செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்வதற்கான திட்டங்கள் எதுவும் இருப்பதாக என்னால் காண முடியவில்லை.

இன்றைக்கு தமிழ்நாட்டில் திட்டக் குழு என்று வைத் திருக்கிறார்கள். அதனுடைய முடிவுகள், எந்த எந்த திட்டங் களை இந்த நாட்டுக்குத் தீட்டி, இந்த நாடு ஒட்டுமொத்த மாக செல்வத்திலே, பொருளாதாரத் துறையிலே வளப் படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு எந்த எந்த வகையிலே நிறைவேற்றப் போகிறார்கள் என்று இதுவரையில் உருப்படியான திட்டம் எதையும் போடவில்லை. அப்படிப் பட்டத் திட்டங்கள் ஏதாவது போடப் பட்டிருக்கிறதா, என்ன புதிய திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்பதுபற்றி பட்டியல்போட்டுத் தர இந்த அரசு தயாராக இல்லை என்றும் சொல்லக்கூடிய நிலைதான் இருந்துகொண்டிருக் கிறது.



சில நாட்களுக்கு முன்பு கேள்வி நேரத்தில் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது சில திட்டங்களை மத்திய அரசு அனுமதிக்கவில்லை என்று சொன்னார்கள்.

“Manufacture of Polyster Fibre and Licensed Manufacture of Liquid Crystal”

என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அப்படிச் சொல்லுகின்ற நேரத்திலே எதற்காக அந்தத் திட்டங்களை எல்லாம் மத்திய அரசு தடைசெய்கிறது அல்லது அனுமதி மறுக்கிறது என்று சொல்லவில்லை. இந்த நாட்டு நலனைக் கருதி, இங்கே இருக்கிற அனைத்துக் கட்சிகளின் சார்பில் இப்படிப்பட்ட நல்ல பல திட்டங்களை, நல்ல பல தொழிற் சாலைகளை இங்கே உருவாக்குவதற்கு ஒட்டுமொத்தமான அனைத்துக் கட்சிகளின் ஆதரவைப் பெற்று, மத்திய அரசு நாம் போடுகின்ற திட்டங்களை ஏன் நிறுத்துகிறது அல்லது ஏன் நிறைவேற்ற வேண்டாம் என்று சொல்லுகிறது என்பதை ஆராய்ந்து, இந்தத் திட்டங்களை அல்லது இன்னும் பல திட்டங்களை நிறைவேற்ற உங்களுடைய ஆலோசனை என்ன என்று அனைத்துக் கட்சிகளையும் கேட்டு, அந்த அடிப்படையில் இந்த மாநிலத்தில் தொழில்களை உருவாக்க வேண்டுமென்ற ஒரு ஆலோசனையை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போதுதான் திடீரென்று மாநில சுயாட்சியைப்பற்றி ஆளும் கட்சியினர் சொல்லி வருகிறார்கள். இப்படி இருக் கின்ற நேரத்தில் தொழில்துறை முன்னேற வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே கூட அனைத்துக் கட்சிகளின் ஆதரவை யும் பெற்று, மைய அரசை வற்புறுத்தி அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற முடிவினை மேற்கொள்ள ஏன் இந்த அரசு முன்வரக்கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

பல்வேறு காலங்களில் அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் பல புதிய திட்டங்களுக்கு தமிழ்நாடு காத்துக்கொண்டிருக் கிறது என்று பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டிருக்கிறார் கள். ஆனால் இந்தத் தொழில் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் அப்படிப்பட்ட செய்திகளோ, விளக்கமோ இல்லை. குறிப்பாக 4—9—1980 நாளிட்ட மெயில் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் ‘டெவலப்மெண்ட் ஆஃப் எலக்ட்ரானிக்.

இண்டஸ்டிரி' இந்த மாநிலத்திற்கு மிகவும் முக்கியமானது என்றும் அதை நிறுவுவதற்கான எண்ணங்களை நாங்கள் வைத்திருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

"Seminar on Export Potentiality and Technology in collaboration with West Germany"

என்ற ஒரு கருத்தரங்கைத் திறந்து வைக்கின்ற நேரத்திலே அந்தக் கருத்தைச் சொன்னார்கள். அந்த தொழில் எந்த அளவிலே இருக்கின்றது என்பது தெரியவில்லை. பல மாதங்கள் உருண்டோடிவிட்டன.

அதேபோன்று கோயம்புத்தூரிலே மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது 250 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளும் சிறு அளவிலே 1,000 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளும் விரைவிலே இந்த ஆண்டு தொடங்க இருக்கிறோம் என்ற அறிவித்து விட்டார்கள். ஆனால் இன்று வரையில் அதுபற்றி என்ன செயல் நடந்து இருக்கின்றது என்பது தெரியவில்லை. இது 24—8—1980 அன்றைய மெயில் பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றது.

அடுத்து இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே 24—11—1980 அன்று மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் கெமிக்கல் மேனுஃபேக்சரர்ஸ் அசோசியேஷன் என்ற சங்கத்திலே பேசுகின்றபோது "இங்கே ரசாயன தொழிலுக்கு மிகப்பெரிய அளவில் வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே அந்தத் தொழில்கள் வளருவதற்கு எல்லா வகையான உதவிகளையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று சொன்னார்கள். ஆனால் பல மாதங்கள் ஆகியும் எந்த வகையில் உதவி செய்திருக்கிறார்கள் என்ற செய்தி வரவில்லை.

அடுத்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ் 16 மாவட்டங்களிலேயும் தொடங்க இருக்கிறோம் என்று சென்னையிலே பேசுகின்றபோது சொன்னதாக 21—11—1980 இந்து பத்திரிகையிலே வெளியான செய்தி தெரிவிக்கின்றது.

இன்னும் பொற்கொல்லர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கவேண்டும் என்று நீண்ட நாட்களாக சொல்லி வருகிறார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்கிறேன் என்றும், கோயம்புத்தூரில் மட்டுமல்ல,





தமிழ்நாடு முழுவதும் பொற்கொல்லர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு வகை செய்வதற்கு வழிவகை செய்யப்படும் என்று சான்றிதழ் பெற்ற பொற்கொல்லர்கள் சங்கத்தின் வரவேற்பிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கோவையிலே பேசியதாக 1980-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ஆம் தேதியிலே வெளியிடப்பட்ட தினமணி பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. ஆனால் இன்று வரை அது எந்த அளவுக்கு வடிவம் கொண்டிருக்கின்றது என்பது தெரியவில்லை.

அதைப்போல் தனியார் துறையிலே பல புதிய தொழில்கள் வருவதற்கு எல்லா வகையான உதவியும் செய்வோம் என்று அவர் கூறியது 19—12—1980 தேதியிட்ட மெயில் பத்திரிகையிலே செய்தியாக வெளிவந்திருக்கின்றது. இப்படிப் பல்வேறு நேரங்களிலே இந்த அமைச்சர்களும் நாட்டு மக்களுக்கு அளிக்கின்ற செய்தியிலே பல்வேறு தொழில்களைத் தொடங்க இருக்கிறோம் [illegible] [illegible] நல்ல திட்டங்களையாவது செயல்படுத்தி இருக்கிறார்களா என்றால் இல்லை.

அடுத்து இங்கே பல்வேறு வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் [illegible] கொடுத்திருக்கின்றார்கள். அதிலே குறிப்பாக தென்னார்க்காடு மாவட்டத்திலே ஆறு சர்க்கரை ஆலைகள் இருக்கின்ற காரணத்தால் அங்கே கிடைக்கின்ற மூலப் பொருட்களைக் கொண்டு காகித ஆலை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. முண்டியம்பாக்கம், பெரிய செவலை, மூங்கில்துறைப்பட்டு, நெல்லிக்குப்பம், பெண்ணாடம் மற்றும் அருகே உள்ள புதுவை மாநிலத்தின் அருகிலே உள்ள அரியூர் போன்ற இடங்களில் சர்க்கரை ஆலை இருப்பதால், விழுப்புரத்தில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. மேலும் தீப்பெட்டி தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான வசதிகளும் இருக்கின்றன.

இதுமட்டுமல்லாமல் வெட்டுத் தீர்மானங்களிலே குறிப்பாக பலரும் கள்ளியாகுறிச்சி மாவட்டத்திலே ரப்பர் தொழிற்சாலை வேண்டும் என்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் வேண்டும் என்றும் [illegible] பல்வேறு இடங்களில் சர்க்கரை ஆலைகள் [illegible] திறைய ஆரம்பிக்க வேண்டும் என்றும் ஆடை தயாரிக்கும் தொழில்கள் ஆரம்பிக்க வேண்டும் என்றும் தென்னை நாரிலிருந்து கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்றும் தென்னார்க்காடு மாவட்டத்தில் [illegible] வதால் வனஸ்பதி தயாரிக்கின்ற தொழிற்சாலை [illegible] ஆரம்பிக்க வேண்டும் என்றும் இன்னும் [illegible] தயாரிக்கின்ற [illegible]

நம்முடைய மாநிலத்தில் மிகக் குறைந்த அளவிலே இருப்பதாலும், அவற்றிற்கு நல்ல எதிர்காலம் இருப்பதாலும் அப்படிப்பட்ட தொழில்களை ஆரம்பிக்கவேண்டும் என்றும் என்னுடைய எண்ணத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே மற்ற மாநிலங்களுடன் போட்டி போடுகின்ற வகையில் நாம் தொழில் வளத்தில் மேம்படவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு தொழில்களிலே முன்னேற்றம் குறைந்திருப்பதைப் பற்றி அரசின் வெளியீடுகளிலே கூட குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதற்கெல்லாம் இந்த அரசினுடைய மெத்தனம்தான் காரணமா அல்லது மத்திய அரசோடு ஒத்துழைக்க இந்த அரசு மறுக்கிறதா? அல்லது மத்திய அரசு இவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கத் தயார் இல்லை என்றால் அதற்கு என்ன காரணம்?

ஆகவே நான் முன்னரே குறிப்பிட்டது போல் அனைத்துக் கட்சிகளையும் சேர்த்து ஒரு குழுவினை அமைத்து அவர்கள் மூலமாக மத்திய அரசோடு தொடர்பு கொண்டு திட்டங்களை ஒட்டுமொத்தமாக நிறைவேற்றி தமிழ் நாட்டினுடைய செல்வங்களை வளர்ப்பதற்கு இந்திய நாட்டினுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு திட்டங்கள் தீட்டலாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எது எதற்கோ உயர்மட்டக் குழு ஆரம்பிக்கிறார்கள், யார் யாருக்கோ உதவி செய்வதற்கு. அப்படி இல்லாமல் தொழில் துறை முன்னேற வேண்டும் என்ற நல்ல காரணத்திற்காக மாத்திரம் ஒரு உயர்மட்ட குழுவை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய கருத்தைத் தெரிவித்து விடை பெறுகிறேன், வணக்கம்.

[பிற்பகல் 12–50]

* திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கைகளை வரவேற்று பேசுவதற்காக அனுமதி அளித்தமைக்கு, தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். '' நீங்கள் மாநில சுயாட்சி கேட்கிற இந்த நேரத்திலே '' என்று சுட்டிக்காட்டிப் பேசினார்கள். நாங்கள் மாநில சுயாட்சியை எந்த நேரத்திலும் எப்பொழுதும்





கேட்டது இல்லை. நாட்டை தொழில் மயமாக்கவும், தொழில் வளமாக்கவும், பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று தான் கேட்டார். அந்த அதிக அதிகாரத்தை தான் நாங்கள் என்றோ கேட்டோம், இங்கேயும் கேட்கிறோம்; எங்கேயும் கேட்போம் என்பதைச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசு மாநில அரசோடு ஒத்துழைக்க மறுக்கிறதா அல்லது மாநில அரசு மத்திய அரசோடு ஒத்துழைக்க மறுக்கிறதா என்று கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். உறவு வைத்துக் கொண்டிருக்கும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் யார் யாரோடு ஒத்துழைக்க மறுக்கிறார்கள் என்பது.

அடுத்து விளம்பரத்திலேயே ஆட்சியை நடத்தியவர்கள் இன்று விளம்பரத்தைப் பற்றி சுட்டிக் காட்டிப் பேசியிருக்கிறார்கள். அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்களையும், செய்த சாதனைகளையும், அதிகமாக விளம்பரப்படுத்தாமல் நன்னடக்கத்தோடு, இந்த அரசு நடந்துகொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள், மத்திய அரசு பல தொழிற்சாலைகளுக்கு அனுமதி தரவில்லை என்று சொல்லி, ஏன் எதனால் தர மறுக்கிறார்கள்? அதற்கு ஒரு உயர்மட்டக் குழுவைப் போட்டு, ஆலோசனையைச் சொல்லும் அளவிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். உயர்மட்டக் குழுவையும், கமிட்டியையும், ஆலோசனையையும், பின்னால் வைத்துக் கொண்டாலும், கூட, இங்கேயே, இந்த அவையிலேயே, தமிழ்நாட்டிற்கு அதிகமாகத் தொழிற்சாலைகளை தர மத்திய அரசு முன் வரவேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தி, அனைத்துக் கட்சியினரும் ஒருமித்த குரல் கொடுத்துப் பேசினால், இன்றுள்ள சூழ்நிலையில் அதுவே பெரிய சாதனையாகும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றுள்ள சூழ்நிலை என்னவென்றால், மாநிலத்தின் பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டு தொழில் வளர்ச்சியடைய வேண்டும் என்றால், அது மத்திய சர்க்காரின் மூலமாகத்தான் அடைய முடியும் என்ற சூழ்நிலை கட்டாயமாக இருந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் மாநில சர்க்காருக்கு தொழில் துறையின் மூலம் அதிகமாக வருமானம் கிடைக்க வாய்ப்பில்லை. நடைபெற்றுக் கொண்டிருக்கும் பெரிய, முக்கியமான தொழில்களும் மைய அரசின் பொறுப்பாட்சியில்தான் உள்ளது. அவைகளெல்லாம் மாநில சர்க்காரின் கட்டுப்பாட்டின் கீழ் வரும்

காலம் தான் மாநிலங்களின் பொற்காலமாக இருக்கும். அப்படி ஒரு பொற்காலம் வரவில்லை என்று சொன்னாலும், அவைகளின் வருமானமாவது மாநிலங்களுக்கு நேரிடையாக வர வேண்டிய சூழ்நிலையாவது ஏற்பட்டாக வேண்டும். அதற்கு நாம் முயற்சி எடுத்தாக வேண்டும்.

தொழில் வளர வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் தொழில்களை எல்லாம் மத்திய சர்க்கார் எடுத்துக் கொண்டால் என்னவாவது? நாமும் ஒரு சர்க்கார் நடத்துகிறோம். நமக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து, அவர்களை ஓரளவு திருப்தி செய்ய வருவாய் தேவைப்படுகிறது. மக்கள் மத்திய சர்க்காரிடத்திலா இருக்கிறார்கள்? மாநில சர்க்காரிடத்தில்தான் உள்ளார்கள் என்று இந்த மன்றத்தில், தொழில் மானியத்தின் மீது விவாதம் நடைபெற்றபோது, அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்து பதில் சொல்லியிருக்கிறார்கள்.

தொழில் வளர்ந்தால் வருவாய் வருகிறது. அப்படி வருகிற வருவாயும் மத்திய சர்க்காருக்கு போய்விடுகிறது. தனியார் தொழில்களில் இருந்து வருகிற பெரும் பங்கும் மத்திய சர்க்காருக்கே போய்விடுகிறது. ஆகவேதான் நம் நாட்டில் தேசிய மொத்த வருமானமும் நேஷனல் இன்கம், தனி நபர் வருமானமும்— பெர்கேப்பிடா இன்கம் ஆகிய இரண்டிற்கும் இடையே ஏற்றத் தாழ்வு இருக்கிறது.

தொழில்கள் பெருக பெருக வருவாய் பெருக வேண்டும். வருவாய் பெருக பெருக அது பரவலாக்கப்பட வேண்டும். தனி நபர் வருமானத்திற்கும், தேசிய மொத்த வருமானத்திற்கும் ஏற்றத் தாழ்வு குறையும்படி எப்படி ஜப்பான் நாட்டிலே நடைமுறைப் படுத்தியிருக்கிறார்களோ, அதேபோல இந்திய நாட்டிலே நடைமுறைப்படுத்தினால்தான், நாம் திட்டமிட்டபடி சரியான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மைய அரசு ராணிப்பேட்டையில் பெல் நிறுவனம் துவங்க உள்ளதை பாராட்டுகிறேன். அதே நேரத்தில் அதற்காக அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ள தமிழக அரசிற்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், மாநிலங்களில் தொழில் வளர்ச்சி பெருக வேண்டும் என்றால், மைய அரசு அதன் முதலீட்டை அதிகமாக பரவலாகச் செய்தால்தான், மாநிலங்களின் வளர்ச்சி பெருகும் என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





தமிழகத்தைப் பொருத்தவரை, மைய அரசு, தொழில் முதலீட்டை செய்வதில் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தான் செயல்படுகிறது என்று குற்றம் சாட்டவும் கடமைப்பட்டுள்ளேன். ஏனென்றால் மைய அரசின் முதலீடு முதலில் 10 சதவிதமாக இருந்தது 6 சதவிதமாக குறைந்து 4 சதவிதமாக மாறியுள்ளது. இது வேதனை தரும் விஷயமாகும். மைய அரசு பல தொழிலகங்களை தமிழ்நாட்டிற்கு கொண்டு வர வேண்டும். அதிலே பாரபட்சம் காட்டக் கூடாது என்பதைக் கூறி, தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்குவதிலே காலதாமதம் செய்யக்கூடாது என்பதையும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சி மாநிலம் என்பதால் தொழில் முதலீட்டை அதிகமாகச் செய்ய வேண்டும். அப்போதுதான் மத்திய அரசை மக்கள் பாராட்டுவார்கள். ஏனென்றால் எதிர்க்கட்சி மாநிலத்திற்கு இவ்வளவு தாராளமாக உதவி செய்ய மத்திய அரசு முன்வந்திருக்கிறதே என்று அதைச் சுட்டிக் காட்டி மக்கள் மத்திய அரசைப் பாராட்டுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மைய அரசில் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் நிதி அமைச்சராக இருக்கிறார். அவர்கள் காலத்தில் தமிழ்நாடு புறக்கணிக்கப்படுகிறது, தமிழக மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்ளவில்லை என்ற அவப்பெயரை அவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் கட்சியை சற்று தள்ளி வைத்துவிட்டு, கட்சிக் கட்டுப்பாட்டை சற்று தளர்த்திக்கொண்டு தமிழகத்தை தொழில் மையமாக, மாற்ற வேண்டும். அது நம் அனைவரின் கடமையுமாகும். வட மாநிலத்தில் கிடைக்கும் தொழில்களில் சரிபாதி தென்னகத்திற்கு, குறிப்பாக தமிழகத்திற்கு கிடைப்பதற்கு ஒவ்வொருவரும் குரல் கொடுக்கவேண்டும், மத்திய அரசுக்கு எதிராக என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக அரசு பல சிறு தொழில்களுக்கும், பல பெரிய தொழில்களுக்கும் அவற்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து அதிகப்படியான ஒத்துழைப்பை நல்கிக் கொண்டிருக்கிறது. சிறு தொழில்களை வளர்த்தல், மிகச் சிறிய தொழில்களை மேம்படுத்தல், கிராமங்களை தொழில்மயமாக்குதல் போன்றவற்றில் நமது அரசு சிறப்பான கவனம் செலுத்தி வருகிறது. பெருந் தொழில்கள் துறையும், சிறு தொழில்கள் துறையும் ஒன்றுக்கொன்று துணையாக இயங்கும் வகையில் அரசு திட்டமிட்டு செயல்படுகிறது.

மின்னணுவியல் துறையை முன்னணியில் கொண்டுசெல்வதற்காக தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் அமைக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளதைப் பாராட்டுகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருமளவில் போக்குவதற்கு இந்த தமிழக அரசு அதற்கான நடவடிக்கைகளை திறமையான முறையில் செய்து வருகிறது.

கிராமங்களில் பட்டுப்பூச்சிகள் வளர்க்க இந்த அரசு தீவிர கவனம் செலுத்தி அதற்கான அடிப்படை வசதிகளை செய்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, கர்நாடகாவை நம்பிக்கொண்டு இருந்தோம், பட்டு கோராவிற்கு. அந்த நிலையை மாற்றி உள்ளது இந்த அரசு. தமிழ்நாட்டிலேயே பட்டு கோரா உற்பத்தி செய்வதற்கு தமிழக அரசு முனைப்பாக செயலாக்கம் புரிந்து கொண்டிருக்கிறது.

கதர்-கிராமத் தொழிலை எடுத்துக் கொண்டால் ரூபாய் 6.7 இலட்சம் கைவினைஞர்களிடையே கடுபட வைத்துள்ளது. குறிப்பாக கிராம பஞ்சாலைத் தொழிலுக்கும், நுண்வகை துணி தயாரிப்பு, பனைவெல்லம் செய்தல், கையால் தயாரிக்கப்படும் காகிதத் தொழில்; மட்பாண்டம் செய்தல், தேனீ வளர்த்தல், சோப்பு தயாரித்தல் போன்றவற்றிற்கு தமிழக அரசு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து செம்மையான முறையில் செய்துகொண்டிருக்கிறது.

கைத்தறி தொழிலை எடுத்துக்கொண்டால், 13.35 இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் செம்மைப் படுத்தப்பட்டுள்ளது. பாலிஸ்டர் துணிகள் கைத்தறியில் கொண்டுவர 2,000 கைத்தறிகள் இயங்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருக்கிறது தமிழக அரசு.

தமிழ்நாடு சிறுதொழில்கள் வளர்ச்சிக் கழகம் மூலம் சிறு தொழில்களுக்கு கொட்டகைகள் அமைத்துக்கொடுத்தல், கருவிகள் வழங்குதல், இன்றியமையா மூலப் பொருட்கள் வழங்குதல், விற்பனை வசதி செய்து கொடுத்தல், சிறு தொழில்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் 55 உற்பத்தி நிலையங்களை செயல்படுத்திக்கொண்டு வருகிறது.

பொதுத்துறையில் பெரிய, நடுத்தர தொழிற்சாலைகள் சிலவற்றை அமைத்து நிர்வகிக்கும் பணியும், தனியார் உடனுழைப்புடன் கூட்டுறவுத்துறையில் தொழில் பிரிவுகளை மேம்படுத்த தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் (டிட்கோ) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரக்கோணத்தில் உருக்காலை ஒன்றையும், ஆலங்குளம், அரியலூர் ஆகிய இடங்களில் சிமெண்ட் தொழிற்சாலைகளையும் டிட்கோ நிர்வகித்து வருகிறது.





வெடி மருந்து தயாரிக்கும் திட்டம் உட்பட பல புதிய திட்டகள் டிட்கோவின் சீரிய முயற்சியில் செம்மைப்படுத்தப்படுகிறது. இந்த வெடி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்காக வட ஆற்காடு மாவட்ட மக்கள் சார்பாக இந்த அரசுக்கு என் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொழிற்சாலையைத் துவங்க ஆரணியில் பல வசதிகள் இருப்பதால், அந்தத் தொழிற்சாலை அமைப்பதற்கான நல்ல தொழு சூழ்நிலை ஆரணியில் இருப்பதால் ஆரணியில் அதை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உப்பு உற்பத்தி செய்வதில் தமிழகம் இந்தியாவில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் இத்தொழிலுக்கு தமிழக அரசு முக்கியத்துவம் கொடுப்பதை நான் பாராட்டுகிறேன். தற்போது, இராமநாதபுரம் மாவட்டத்தில் மறையூர், வாலிநோக்கம் என்னும் இடங்களிலும், தஞ்சை மாவட்டத்தில் மரவக்காட்டில் இரண்டு பெரும் உப்பளத்திட்டத்தினை தொடங்கியுள்ள அரசைப் பாராட்டுகிறேன்.

கருப்பஞ்சக்கையிலிருந்து பத்திரிகைக்காகிதம்,எழுது தாள்கள் உற்பத்தி செய்ய 190 கோடி ரூபாயில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க திட்டமிட்டிருப்பதை பாராட்டி வரவேற்கிறேன். இரண்டாயிரம் பேர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும், 10,000 பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கக்கூடிய இந்தத் திட்டத்தை அனைத்துக் கட்சியினரும் வரவேற்பார்கள்.

மாக்னஸைட் மூலம் வட மாநிலத்திற்கு கோடிக்கணக்கான ரூபாய் சென்றுகொண்டிருந்ததைத் தடுக்கும் வகையில் தடை செய்து அதை அரசு ஏற்று நடத்தும் வகையில் தமிழ்நாடு மாக்னஸைட் நிறுவனம் துவங்கியுள்ள புரட்சித் தலைவர் அவர்கள் அரசை அனைவரும் பாராட்டுகிறார்கள். ஆரம்பித்த முதல் ஆண்டே அது இலாபத்தைத் தேடித்தந்திருப்பதை பாராட்டுகிறேன்.

[பிற்பகல் 1-00]

முந்திய ஆட்சிக் காலத்தில், சாதாரணமானவர்கள் எல்லாம் இலட்சாதிபதிகளாக்கிய, 50, 100-க்கு கஷ்டப்பட்டவர்களை எல்லாம் கோடீஸ்வரர்களாக்கிய கருங்கல் விஷயத்தில் ஒரு முற்றுப்புள்ளி வைத்த கழக அரசை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே, தமிழ்நாடு கனிவள நிறுவனம் மூலம் கரிய கருங்கல் உற்பத்தி ஏற்றுமதிக்கான திட்டத்தையும், புதிய தொழில் பிரிவு ஒன்றையும் நிறுவ முன்வந்த இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

தொழில் துறையில் 12.70 சதவிதமாக இருந்த தமிழகம், இன்றைக்கு 26.89 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. அதேபோல், இன்றையதினம் ஏற்பட்டிருக்கிற உற்பத்தி, மதிப்பு, தொழிலாளர்களின் எண்ணிக்கை, ஊதிய மதிப்பு ஆகியவற்றில் தமிழகம் மூன்றாவது இடத்தைப் பெற்றிருப்பது பாராட்டுவதற்குரியதாகும். வருங்காலத்தில் முதலிடத்தைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மானியத்தை வரவேற்றுப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற் கொள்கையின் திட்டங்களைப் பற்றி இந்த மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்தமைக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, தமிழகத்திலே பெரும் தொழில்கள், சிறிய தொழில்கள் பெருகவில்லை என்ற குற்றச்சாட்டை எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த சட்ட மன்றத்தின் வாயிலாக குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் அவர்கள் தொழிற் துறை பெருகவில்லை என்பதற்கான காரணத்தை பட்ஜெட் மானிய கோரிக்கையின்போது மத்திய சர்க்காருடைய உதவியைப் பெறுவதில் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன, இப்போது எந்தெந்த ஆலைகளுக்கு உரிமம் வழங்கப்பெற்றிருக்கிறது என்பதைப் பற்றித் தெள்ளத் தெளிவாக கூறினார்கள். இந்தத் திட்டங்களைப் பற்றியெல்லாம் என்னைப் போன்றவர்கள் பேசுவதற்கு நிச்சயமாக நேரம் இடம் கொடுக்காது என்ற காரணத்தினால், ஒரு சிலவற்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவாக, நெல்லை மாவட்டத்திலே பாட்டுக்கொரு புலவன் பாரதியார் பிறந்தார் என்பது அனைவருக்கும் தெரியும். '' ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம், நல்ல கல்விச் சாலைகள் வைப்போம் '' என்று பாரதியார் பாடினார். அந்த பாரதி பிறந்த எட்டையாபுரத்திலே நூற்பாலை ஒன்றை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதற்காக நான் தமிழக அரசிற்கும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஏழைஎளிய மக்களின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே வேளையில், நான் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் வாயிலாகவும், சட்ட மன்றத்திலேயும் என்னுடைய தொகுதியில் தொழிற் துறை எங்கும் இல்லை, நூற்பாலை அங்கே கிடையாது என்று சொல்லியிருக்கிறேன். எஜுகேஷன் அண்டு இன்டஸ்ட்ரீஸ் என்பது அங்கே இல்லாத காரணத்தினால், அங்கே தொழிற் துறையை வளர்ப்பதற்காக அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலையை ஏற்படுத்த வேண்டுமென்று





மாண்புமிகு மாவட்ட ஆட்சியாளர் மூலமாக பலமுறை அரசுக்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும், ஏனோ, அரசு அதைக் கவனிக்காத நிலை இருக்கின்ற காரணத்தினால், நயவு செய்து இந்த நிதி ஆண்டிலாவது வைப்பார் என்ற கிராமத்தில், அந்தப் பகுதி மக்கள் சார்பாக 200 ஏக்கர் நிலம் இனாமாகவும், 2 இலட்சம் ரூபாய் பங்குத் தொகையாகவும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் ; எனவே, அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று தமிழக அரசையும், மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் கேட்டுக்கொண்டு, இதற்கு முன் வர வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், சேரன்மாதேவியிலுள்ள ஏழை, எளிய மக்களின் நிலையைச்சொல்லவேண்டும். பேரவைத் துணைத்தலைவர் அவர்கள் தொகுதி, அவர் சாதித்துக்கொள்வார்கள் என்றாலும், நான் நேற்றைய முன்தினம் அங்கே சென்றபோது, பல கட்சியைச் சார்ந்த பெரியவர்கள் எல்லாம் வந்து சந்தித்து, அந்தப் பகுதியில் ஒரு நூற்பாலை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். தனி முதலாளிகளுக்கு இதிலே நிரம்ப வருமானம் கிடைக்கின்ற காரணத்தினால், அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கிறார்கள். அரசு இடுகின்ற உத்தரவிற்கேற்ப, போனஸ் ஒழுங்காக அளிக்கிறார்கள். அதற்கு அடிப்படைக் காரணம், இதிலே நிரம்ப இலாபம் வருகிறது. இதனைத் தமிழக அரசு அறிந்து, அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உப்பளத் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, உப்பு மூலம் இராசாயனத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்காக முகவை மாவட்டத்தில் ஒன்றும், தஞ்சை மாவட்டத்தில்ஒன்றும் ஏற்படுத்த அரசு உத்தேசித்திருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே வேளையில், நெல்லை மாவட்டத்தில் விளாத்திக்குளம் தொகுதியிலே வேப்பலோடை என்ற பகுதியிலே அதிகமான உப்பளங்கள் இருக்கின்ற காரணத்தினால், அந்த வேப்பலோடையில் ஒரு கூட்டுறவு மூலமாகவோ அல்லது தனியார் உதவியுடனோ, அந்தப் பகுதியிலே உள்ள ஏழை, எளிய மக்களுக்கு வாழ்வளிக்க, கிராமப்பகுதியிலே தொழிற் துறையை வளர்க்க ஒரு இரசாயன தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்றும், அதற்கு அரசு முன்வர வேண்டுமென்றும், கேட்டுக் கொள்கிறேன்.

வானத்தையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற விவசாயிகள் எல்லாம், அங்குள்ள கிராம மக்கள் எல்லாம் நன்மை அடைய, முகவை மாவட்டத்திலே தீப்பெட்டித் தொழிற்சாலை

ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழக அரசு அனைத்திந்திய அண்ணா தி.மு.க. பொறுப்பேற்றதற்குப் பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு வாழ் வளிக்க வேண்டுமென்று, சிறிய தொழிற்சங்க கூட்டுறவின் மூலமாக 1977 ஆம் ஆண்டு 18 கூட்டுறவு சங்கங்கள் இருந்ததை 1980–81-ல் இன்றுவரை இந்த அரசு 61 சங்கங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இன்னும் ஒப்புதல் அளிக்க இருப்பது 25-க்கு மேற்பட்ட சங்கங்கள். ஒப்புதல் அளிக்கவிருக்கிற சங்கங்களுக்கு அரசுத் துறை மூலமாக கூடிய விரைவிலே—வேலை வாய்ப்பை அமைத்து, அங்கே உரிமங்கள் பெற்று வேலை செய்ய முடியாமல் காத்திருக்கிற, அந்த ஏழைத் தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற முறையிலே ஒப்புதல் அளித்து துவங்கவிருக்கிற சங்கத்திற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக தஞ்சை, மதுரை மாவட்டங்களிலே நூற்றுக் கணக்கான தொழிற்சாலைகள் போன ஆண்டு துவங்க உரிமம் பெறுவதற்கு, மாவட்ட அலுவலர்களுக்கு தாக்கீது எல்லாம் சென்றது; அதன் அடிப்படை காரணம் சென்ற ஆண்டு ஆர். டி. எல். ஏ. டிபார்ட்மெண்டிலிருந்து ஒரு அரசாணை பிறப்பிக் கப்பட்டது. தொழிற்சாலையைச் சுற்றிலும் பத்து அடி இடை வெளி இருக்க வேண்டும் என்றும், அப்போதுதான் உரிமம் வழங்கப்படும் என்றும் அறிவித்தார்கள். தீப்பெட்டித் தொழிற் சாலையைப் பொறுத்த வரையில் எனக்கு நன்றாகத் தெரியும்; நானும் கடந்த 25 ஆண்டு காலமாக அந்த தொழிலை செய்து வருகிறேன். எங்கோ ஒரு இடத்தில் வெடிகுண்டு வெடித்ததின் காரணமாக உரிமங்கள் தருவதை நிறுத்திவிட்டார்கள். 10 அடி இடைவெளி வேண்டுமென்று உத்தரவை இட்டுவிட்டனர். எந்த காரணத்தைக் கொண்டும் தீப்பிடிக்கிற நிலைமை இல்லா திருப்பதால், இந்த உத்தரவை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் 85-க்கும் மேற்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. இரண்டு இலட்சத் திற்கும் மேற்பட்ட மக்கள் வேலை வாய்ப்பு பெறுகின்ற அளவிற்கு இந்தத் திட்டங்களைத் தீட்டி நடவடிக்கை எடுத்து வருகின்ற தமிழக அரசிற்கும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் நான் இம்மன்றத் தின் வாயிலாக என்னுடைய நன்றியைக் கூற கடமைப்பட்டி ருக்கிறேன்.



ரூபாய் 72 இலட்சம் செலவில் தொழில் கூட்டு அடிப்படை யில் குன்றக்குடியில் பொட்டாசியம் குளோரேட் தொழிற் சாலை ஏற்படுத்துவதை நான் மனமார பாரட்டுகிறேன். அதே வேளையில் தமிழ்நாடு மாநில தீப்பெட்டி தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு பரிசீலனையில் இருக்கின்றது. இது உடனடியாக துவங்கப் படுமேயானால் மிகவும் நலமாக இருக்கும்.

ஏற்கனவே இருந்த கஷ்டமெல்லாம் குளோரேட்டைப் பற்றித்தான். ஆறு மாத காலத்திற்கு முன் அந்த குளோரேட் கிடைக்காது இருந்த காரணத்தினால், தொழில்கள் முடங்கி கிடந்தன. தற்போது சர்க்கார் தீவிரமாக முயற்சியெடுத்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்த காரணத் தினால் இப்போது அதற்கு கட்டுப்பாடு நீங்கி வேலைகள் சுமுகமாக நடந்து கொண்டிருக்கின்றன. எனவே காகிதத் தொழிற்சாலையை, குளோரேட் தொழிற்சாலையை உடனடி யாக துவங்க உடனடியாக உத்தரவிட்டால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில் மையங்கள் மாவட்ட வாரியாக இருக்கின்றன. என்னுடைய நெல்லை மாவட்டத்திலே நாங்குனேரி விளாத்திக்குளம் தொழில் பிரிவிலே பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கின்றது. அவ்வாறு பிற் படுத்தப்பட்ட பகுதியென்று அரசு அறிவித்தும், அரசாணை எங்களுக்கு வராத காரணத்தினால், தனியார் தொழிற்சாலை துவங்குவதற்கு இன்னும் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாணை உத்தரவை தொழில் மையம் மூலமாக அறிவித்தால் தான் தொழிற்சாலை துவங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சம்பந்தப்பட்ட அதி காரிகள் எங்களுக்கு அந்த அரசாணை உத்தரவினை உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பினை தந்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றி யைத் தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.

திரு. பூ. மு. நரசிம்மன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில்கள் பற்றிய மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கியதற்கு நான் முதலில் என்னுடை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டில் தொழில்கள் வளர்ந்தால்தான், பொருளாதாரச் செல்வம் பெருகும் என்பதை அனைவரும் அறிவார்கள். கிராமங்களில் தொழில் மையங்கள் அமைக்கின்ற சீரிய கொள்கை, புரட்சித் தலைவர் அவர்களுடைய கொள்கையாக இருப்பதை நான் மனதார பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். கிராமங்களிலே குறிப்பாக வேளாண்மை தொழிலை செய்து

கொண்டிருக்கிற பகுதிகளில், பட்டுப் புழு வளர்க்கின்ற தொழிலை மேற்கொண்டிருக்கிறார்கள் என்கிற செய்தியை நான் இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டுப் புழு வளர்ப்பதில் ஈடுபடுகிற மக்கள் அங்கே நூலை ஏற்படுத்துகிற ஒரு பிரிவை ஏற்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கைவினைத் தொழில்களில் கிராமங்களில் இருக்கின்றவர்கள் ஈடுபடுகிறார்கள். அவர்களுக்கு ஆர்வத்தை வளர்க்க வேண்டுமானால் தொழில் கூடம் ஒன்றினை அமைக்க வேண்டுமென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

பள்ளிப்பட்டு தொகுதியிலே குறிப்பாக ஆர். கே. பேட்டை ஒன்றியத்திலும் பள்ளிப்பட்டு ஒன்றியத்திலும் தொழிற் பயிற்சி முகாம்கள் அமைத்து அவர்களுக்கு வேலை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பள்ளிப்பட்டு தொகுதியில் நெசவுத் தொழிலை நம்பி வாழ்கிறவர்கள் 30 ஆயிரத்திற்கு மேலாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால் அவர்கள் நூல் பெறமுடியாத அளவுக்கு வாழ்க்கையில் இன்னல்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். ஒரு மாதத்தில் 15 நாட்களுக்கு மட்டும் வேலை செய்கிறார்கள் மீதி 15 நாட்களுக்கு நூல் பெறமுடியாமல் அவர்கள் தொழிலை மேற்கொள்ளமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே பள்ளிப்பட்டு தொகுதியிலே ஒரு கூட்டுறவு நூற்பாலையை ஏற்படுத்தவேண்டுமென்ற கோரிக்கையை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தீப்பெட்டித் தொழிற்சாலைகளை ஆர். கே. பேட்டை பகுதியிலும் திருத்தணிப் பகுதியிலும் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக பள்ளிப்பட்டு தொகுதியிலே ஆர். கே. பேட்டை ஒன்றியமும், பள்ளிப்பட்டு ஒன்றியமும், திருத்தணி ஒன்றியமும் 3 பகுதிகளும் அடங்கியிருக்கின்றன. அந்த 3 பகுதிகளிலேயும் வேளாண்மை தொழிலை நம்பித்தான் மக்கள் வாழ்கிறார்கள். அங்கே கரும்பை பெருமளவுக்கு பயிரிடுகிறார்கள். அந்தப் பகுதியிலே ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேதகு ஆளுநர் உரையிலேயும் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை உருவாக்க இருப்பதாகச் சொல்லப்பட்டது. அந்த சர்க்கரை ஆலையை திருத்தணி ஒன்றியத்திலே ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக மைய அரசும் உரிமம் வழங்கியிருக்கிறது. ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகியும்கூட அந்த கூட்டுறவு சர்க்கரை ஆலை



வராமல் அங்கேயிருந்து மாற்றப்படுவதாகசொல்லி அந்தப் பகுதி மக்கள் இன்னலுக்கு ஆளாகியிருக்கிறார்கள் அந்த கூட்டுறவு சர்க்கரை ஆலையை திருத்தணிப் பகுதியிலேயே அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு தொழில்கள் பற்றிய மானியத்தை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

*திரு தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் வைத்திருக்கிற தொழில் மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். தொழில் மானியம் எல்லா மானியங்களையும்விட மக்களுடைய எதிர்கால பொருளாதார நல்வாழ்வுக்கு ஒரு முக்கியமான மானியமாக இருக்கிறது. தொழில் துறையில் தமிழக அரசு எந்த அளவுக்கு சிறப்பாக பணி புரிந்து வருகிறது என்பதை இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கைகளிலிருந்து நன்றாக அறிவோம். தமிழக அரசு தமிழகத்திலே தொழில் வளம் குன்றாத அளவுக்கு கண்ணுங்கருத்துமாக செயல்பட்டு வருவதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் முன்னேற்றம் சிறப்பாக அமைவதற்காக ஒத்துழைப்பு எந்த அளவுக்குத் தேவை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பெரிய தொழில்களை துவங்க மைய அரசினுடைய அனுமதி தேவைப்படுகிறது. தொழிலதிபர்களும் சிறு தொழில் செய்கிறவர்களும் தொழில் துறையின் ஒத்துழைப்பு இருந்தால்தான் தொழில் வளம் பெருகுவதற்கு வாய்ப்பு இருக்கும். இன்றைக்கு தொழில் துறையில் தமிழக அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழகத்திலே திட்டமிடப்பட்டு தொழில் வளம் பெருக வேண்டுமென்றால் மத்திய அரசினுடைய அனுமதியும் அதனுடைய ஒத்துழைப்பும் மிகவும் அவசியமாக தேவைப்படுகிறது. தொழில் லைசென்ஸைப் பெறுவதைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே தமிழகம் 2 ஆவது இடத்திலே இருக்கிறது. ஆனால் மத்திய அரசினுடைய அனுமதி பெறுவதிலே தாமதம் தேக்கம் இருக்கிறது. மத்திய அரசுக்குச் சொந்தமான பொதுத் துறை நிறுவனங்கள், தொழிற்சாலைகளை தமிழகத்திலே எடுத்துப் பார்க்கிறபோது மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இங்கே குறைவாகத்தான் இருக்கிறது. மத்திய அரசின் முதலீடு தமிழகத்திலே 1967 ஆம் ஆண்டோடு நின்றுவிட்டது என்றுகூட சொல்லலாம். தமிழகத்திலே அதிகமாக தொழில் முதலீடு செய்ய மத்திய அரசு முன்வரவேண்டும். மத்திய அரசு முதலீடு சென்ற சில ஆண்டுகளுக்கு முன்னாலே 8 சதவீதமாக இருந்தது. கடந்த ஆண்டு 1 சதவீதமாகக் குறைந்திருக்கிறது. பெரிய தொழிற்சாலைகளை அமைக்க மத்திய அரசு அனுமதிக்க முன் வரவேண்டும். தமிழகத்திலே என்னென்ன மூலப் பொருட்கள் கிடைக்கின்றனவோ அவற்றைப் பயன்படுத்தி தொழிற்சாலைகளை உருவாக்குகின்ற முறையிலே மத்திய அரசு அனுமதி அளிக்க முன் வரவேண்டும்.

தொழில் துறைக்குத் தேவையான இரும்பு, நிலக்கரி, சிமெண்ட் போன்றவைகளைத் தமிழகத்தின் தேவைக்கேற்ப மத்திய அரசு அளிப்பதில்லை. தொழில் துறைக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மூலப் பொருட்களை அதிகமாகக் கொடுத்து உறுதுணையாக இருக்க வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், தொழில்களை நடத்துவதற்கு மின்சாரம் மிகவும் தேவையாகும். இன்றைக்குத் தமிழ் நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களை நடத்துவதற்குக்கூட நிலக்கரி பற்றாக்குறையாக இருக்கிறது. மின் உற்பத்தி செயல்படவில்லையென்றால், மின்சாரத் தேவை, நிறைவு செய்யப்படவிலலையென்றால், அதனை நம்பியிருக்கின்ற தொழிற்சாலைகள் பாதிக்கப்படும். ஆகவே, நிலக்கரியை அதிகமாகத் தமிழகத்திற்கு மத்திய அரசு தந்து உறுதுணையாக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருட்களை சப்ளை செய்யவும், உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மற்ற இடங்களுக்குக் கொண்டு செல்லவும் போக்குவரத்து வசதி சிறப்பாக இருக்க வேண்டுமென்றால் பிராட்கேஜ் இரயில் பாதைகளை அமைத்துத் தருவதில் தமிழகத்திற்கு மத்திய அரசு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் வாயிலாகப் புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவும், தொழில் வளர்ச்சியைச் சிறப்பாக ஏற்படுத்தவும் இந்த அரசால் முடியும்.

தொழில் வளர்ச்சி என்பது 90 சதவீதம் மத்திய அரசினுடைய ஒத்துழைப்பில்தான் இருக்கிறது. ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்குத் தேவையான அனைத்தையும் பெறுவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

தமிழகத்தில் என்னென்ன மூலப் பொருட்கள் கிடைக்கின்றனவோ அவைகளைக் கண்டுபிடித்து, அவற்றை வைத்துக் கொண்டு தொழிற்சாலைகளைத் துவங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிலயிடங்களில் எல்லாத் தொழில்களையும் துவங்குவதற்கான வாய்ப்புகள் இருந்தாலும்கூட, அந்த இடங்களிலே புதிய தொழில்கள் துவங்கப்படவில்லை. அதற்குக் காரணம், புதிய தொழில்களைத் துவங்குவதற்கு அரசு சலுகைகள் அளித்தாலும்கூட, அங்கே அந்தத் தொழிற்சாலைகளைத் துவங்குகின்ற அளவில் பொருளாதார வசதியற்ற நிலையில் அந்தப் பகுதி மக்கள் இருப்பதால் அது





போன்ற இடங்களில் கூட்டுறவுத் துறையின் மூலமாகவும், சிறு தொழில் வளர்ச்சி மூலமாகவும் தொழில் துவங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு பகுதியில் புதிய தொழிற்சாலை துவங்கப்படுகிறதென்றால், அந்தப் பகுதியில் தொழில் உற்பத்தியைத் தொடங்க வேண்டுமென்ற எண்ணத்தோடும், வேலையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தர வேண்டுமென்ற எண்ணத்தோடும் துவங்கப்படுகிறது. ஆனால் ஒரு இடத்தில் புதிய தொழிற்சாலை துவங்கப்படும்பொழுது அந்தப் பகுதி மக்களுக்கு வேலை கிடைப்பதில்லை. ஆகவே, புதிய தொழிற்சாலை உருவாக்கப்படுகிறது என்றால் அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் தொழில்களை ஆரம்பித்தால் நகர்ப்புறங்களில் உள்ள நெருக்கடி குறையும். கிராமப்புறங்களில் உள்ள மக்கள் வேலை வாய்ப்பைத் தேடி நகர்ப்புறங்களுக்கு வருகிறார்கள். ஆகவே, கிராமப் பகுதிகளில் புதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு, டிட்கோ, சிட்கோ ஆகியவைகளின் மூலம் தொழில்கள் நடத்துவதற்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. அந்தக் கடன் தொகைகள் எந்த அளவிற்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை அரசுகண்காணிக்க வேண்டும். தொழில் நடத்துவதற்காக வாங்கிய கடனைத் தொழிலுக்குச் செலவு செய்யாமல் வேறு செலவுகளுக்குப் பலர் பயன்படுத்துகிறார்கள். ஒருவரே பினாமி பெயரில் பணத்தைப் பெற்றுக் கொண்டு தொழில்களுக்காக வாங்கிய பணத்தை மற்றவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்கு உதவியாக இருக்கின்ற அரசு அதிகாரிகளையும் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்நாடு ஒரு விவசாய நாடாகும். எழுபது சதவீதம் கிராமப் புறங்களில் வாழும் மக்கள் விவசாயத்தைச் செய்கிறார்கள். ஆனால், ஆண்டு முழுவதும் அவர்கள் விவசாயத்தை நடத்துவதில்லை. ஆறு மாதங்கள்தான் விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். மற்ற ஆறு மாதங்கள் வீணாக இருப்பதால் இதுபோன்ற கிராமப் பகுதிகளில் சிறு தொழில்களை ஏற்படுத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு தொழில் வளர்ச்சிக்குத் தமிழக அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. மத்திய அரசின் நிதியமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தமிழக அரசு சிறு தொழில் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்துகிறது என்று பாராட்டியிருக்கிறார்கள். சிறு தொழில்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் இதை உறுதி செய்து கொள்ள முடியும். 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் உள்ள தொழில்களின் எண்ணிக்கை 34,000. அதே நேரத்தில் சிறு தொழில்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனையாகாமல் தேங்கி விடுவதன் காரணமாக அதற்கு நிலையான ஒரு மார்க்கெட்டை ஏற்படுத்தித் தர வேண்டும். உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனையாகாமல் தேங்குவதன் காரணமாகத் தொழிற்சாலைகளை மூடுகின்ற நிலைமை ஏற்படுவதோடுகூட, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கும் பாதகம் ஏற்படுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. எனவே, அரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்கள் எந்த அளவிற்குத் தொழில் துறையில் முன்னேறுவதற்கு சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு ஆதரவு அளிக்கின்றனவோ அதைப்போல தமிழக அரசும் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–20)

சர்க்கரைத் தொழிலைப் பொறுத்த வரையில் அது நசுங்கி விடக்கூடிய நிலையிலே இருக்கிறது. அதற்குக் காரணம், கரும்பின் விலை குறைவாக இருப்பதேயாகும். கரும்பு விலையைப் பொறுத்தவரையில் மத்தியஅரசுதான் அதற்குவிலையைநிர்ணயம் செய்கிறது. கரும்பு அரைவைப் பருவம் துவங்குகின்ற நேரத்திலே இந்த விலையை நிர்ணயிப்பதை விட, கரும்பைப் பதிவுசெய்கின்ற நேரத்திலே அந்த விலை நிர்ணயத்தைத் தெரிவித்தால், விவசாயிகள் ஆர்வத்தோடு பதிவு செய்கின்ற ஒரு நிலைமை ஏற்படும்.

இன்றைக்கு இந்திய அளவிலே மற்ற மாநிலங்களோடு தமிழகத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மகாராஷ்டிரம், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் கரும்பு உற்பத்தித் திறன் அதிகமாக இருக்கின்றது. தமிழகத்திலே அந்த அளவுக்கு உற்பத்தி திறன் இல்லையென்றாலும், உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. ஆகவே, மற்ற மாநிலங்களில் உற்பத்தித் திறன் அதிகமாக இருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு விலை குறைவாக இருந்தாலும், அங்கே தொழில் பாதிக்கப்படுவதில்லை, ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரை, ஆண்டுக்காண்டு விவசாயச் செலவு அதிகமாகிற காரணத்தால், இங்கே அந்தத் தொழில் பாதிக்கப்படுகிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, கரும்புக்கு அதிக விலை தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல், சர்க்கரை விற்பனையிலே கூட மற்ற மாநிலங்களோடு, தமிழகம் போட்டியிட முடியவில்லை. மற்ற மாநிலங்களில் உற்பத்தித் திறன் அதிகமாக இருக்கிற காரணத்தால், அவர்கள் குறைந்த விலைக்குக் கூட சர்க்கரையை விற்க முன் வருகிறார்கள். ஆனால், தமிழகத்திலே உற்பத்தி செய்யப்படுகிற சர்க்கரையை அந்த அளவுக்கு விற்பனை செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, லெவி சர்க்கரைக்கு அதிக விலை கொடுக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக கனி வள நிறுவனம் இன்று சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறது. அது செயல்படத் தொடங்கிய இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில், இலாபத்தை ஈட்டியிருக்கிறது என்பது பெருமைபடக்கூடிய ஒரு காரியமாகும். அதே போல், தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் தொடங்கிய முதல் ஆண்டிலேயே இலாபத்தைப் பெற்றிருப்பது அனைவரும் பாராட்டத்தக்க, வரவேற்கத்தக்க ஒன்றாகும். சமீப காலம் வரை தமிழகத்தில் கனி வளங்களே இல்லையென்ற ஒரு தவறான கருத்து அரசியல் மட்டத்திலேயும், அதே போல் அக்கறையற்ற ஒருசில அதிகாரிகள் மட்டத்திலேயும் நிலவியது. அந்தக் கருத்தை மாற்றுகிற வகையில், தமிழக அரசு ஒரு கனி நிறுவனத்தை அமைத்து இந்தப் பணிகளை மேற்கொண்டு, அது சிறப்பாக பணிபுரிய உறுதுணையாக இருப்பதை இந்த நேரத்திலே நான் பாராட்டுகிறேன்.

கனி வளம்தான் தொழில் வளத்திற்கு முக்கியம். அதே போல், தொழில் வளம் பொருளாதார வளத்திற்கு முக்கியம் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அந்தப் பணிகளுக்காக இந்த நிறுவனம் சிறப்பாக நடைபெறுவதற்கு அரசு மேலும் ஊக்கம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் பொறுப்பேற்றவுடன் கனி நிறுவனம் வாயிலாக, கருப்புக் கல்லை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஒரு வழிவகை செய்து தந்துள்ளார். அதன் காரணமாக, தனிப்பட்டவர்கள் இடைத்தரகர்களாக இருந்து பெறுகின்ற இலாபத்தைத் தவிர்க்கும் முறையிலே, மிகச் சிறப்பாக, தமிழக அரசு தன்னுடைய பணியினைச் செய்து வருகிறது. இன்றைக்கு உச்ச நீதிமன்றங்கூட அரசினுடைய அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருப்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கருப்புக் கல் ஏற்றுமதியில், தமிழகம் மற்ற மாநிலத்தவர்கள் பாராட்டி, நம்மிடம் கருத்துக்களைப் பெறுகிற அளவு, அது சிறப்பாக பணிபுரிவதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குக் கருப்புக் கல்லை வெட்டி ஏற்றுமதி செய்வதைவிட, அந்தக் கருப்புக் கல்லை மெருகேற்றி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி

செய்தால் நல்ல கிராக்கி இருக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, தமிழகத்தில் மிக விரைவாக மெருகூட்டும் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழக கனிம வள நிறுவனம் என்னுடைய தொகுதியில் திருப்பத்தூருக்கு அருகில், செவ்வாத்தூர் என்ற பகுதியிலே, வெர்மாகுலைட் என்ற மைக்கா வகையைச் சேர்ந்த கனிப்பொருளை வெட்டி எடுத்து நல்ல இலாபத்தை ஈட்டி வருகிறது. நம் நாட்டிலேயே தரம் வாய்ந்ததாக அந்த வெர்மாகுலைட் என்ற பொருள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதே பாறைகளில் கதிரியக்கத் தன்மை வாய்ந்த பைரோகுளோர் என்ற கனிமங்கள் நிறைந்து கிடப்பதாகச் சொல்லப்படுகிறது. அவற்றை வெட்டி எடுத்து, நாட்டுக்குப் பயன்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து, அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்திய அணு ஆராய்ச்சிக் கழகத்தினரையும் இப்பணியிலே ஈடுபடுத்த வேண்டுமென்று அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் பாஸ்பேட் உரம் செய்வதற்கு மூலப் பொருளாக அமையும் அப்பெட்டைட் கனிமங்கள் அந்தப் பாறைகளிலே இருப்பதாகக் கூறப்படுகிறது. அவற்றை வெட்டி எடுத்து, உரத் தொழிற்கூடங்களுக்குப் பயன்படுத்த முடியுமா என்பதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டம் இன்றைக்குத் தொழில் துறையிலே பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. ஆனால், வியக்கத்தக்க அளவுக்கு கனிப் பொருள்களும். மூலப் பொருள்களும் இருக்கிற காரணத்தால், அவற்றைப் பயன்படுத்துவதற்குப் பல புதிய தொழிற்சாலைகளை அந்தப் பகுதியிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலையில் இரும்புத் தாது இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவைகளைப் பயன்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

அதே போல் கரும்புச் சக்கை, கரும்பு சோகை, கருவேல மரம், மூங்கில் போன்றவைகள் அந்தப் பகுதியிலே அதிகமாக யிருக்கின்ற காரணத்நால் ஒரு காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு அரசு முன் வரவேண்டும்.

வட ஆற்காடு மாவட்டத்தில் அதிக அளவு நிலக்கடலை உற்பத்தி இருக்கிற காரணத்தால், கடலை எண்ணெய் உற்பத்தி இருக்கிற காரணத்நால், ஒரு வனஸ்பதி தொழிற்சாலையை அந்த மாவட்டத்திலே அமைக்க வேண்டும்,



வட ஆற்காடு மாவட்டத்திலே மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பது திருப்பத்தூர் பகுதியாகும். அந்தப் பகுதியிலே புதிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். ஒரு தொழிற்கூடம் அந்தப் பகுதியிலே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த திருப்பத்தூர் பகுதியிலேயும் மற்றும் வடாற்காடு மாவட்டம் முழுமையும், ஆண்டொன்றுக்கு 60,000 டன்கள் மாம்பழம் உற்பத்தியாகின்றது. அதேபோல அந்தப் பகுதியிலே திராட்சையும் உற்பத்தியாகின்றது. தக்காளி போன்ற பழ வகைகளும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே ஒரு பழரச தொழிற்சாலை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வாணியம்பாடி தாலூகாவிலே மரிமானகுப்டம் பகுதியில் ஈயம் கிடைக்கிறதாவென சில வருடங்களுக்கு முன்பாக ஆராய்ச்சி செய்தார்கள். அந்தப் பகுதியிலே அந்தப் பொருள் இருப்பதாகத் தெரிந்தால், அந்த சாத்தியக் கூறுகள் இருந்தால் அவைகளை வெட்டி எடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தொழில் மானியக் கோரிக்கையில் எந்தவிதமான கருத்துக்களும், அரசினுடைய கொள்கைகளும் இல்லை என்று பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். இந்த அரசினுடைய பல அருமையான திட்டங்களும், செயல்முறைகளும் இங்கே சிறப்பாக விளக்கப்பட்டிருக்கிறது என்று கூறி இந்தத் தொழில் மானியக் கோரிக்கையை வரவேற்று பாராட்டி விடைபெறுகிறேன்.

## 7. அறிவிப்பு.

### பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க பேரவையின் நிகழ்ச்சிகளில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்படுகின்றன:—

இன்று எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள்—24-தொழில்கள் மற்றும் 49-தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் மீதான விவாதம் நாளையும் தொடரும்.

நாளை (16—4—1981) அன்று தொழில்கள் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் முடிவுற்று வாக்கெடுப்பு நடந்தவுடன் மானியக் கோரிக்கைகள் 26-கைத்தறியும் நெசவுத்

தொழிலும், 27-கதர்த் தொழில், 37-பொதுப்பணிகள், கட்டிடங்கள், 38-பொதுப்பணிகள், பணியாளர் அமைப்பும், கருவிகளும் தளவாடங்களும் மற்றும் 51-பொதுப்பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவை எடுத்துக் கொள்ளப் பெறும். நாளையதினம் பேரவை மாலையிலும் 4 மணி முதல் கூடும்.

24—4—1981 அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் 31-பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் மற்றும் 44-எழுதுபொருள் அச்சுத் துறை ஆகியவை 22—4—1981 புதன்கிழமை அன்று எடுத்துக் கொள்ளப்படும்.

மானியக் கோரிக்கை எண். 17-கல்வி, 23—4—1981 (வியாழக்கிழமை) மற்றும் 24—4—1981 (வெள்ளிக்கிழமை) அன்று எடுத்துக்கொள்ளப்பெறும்.

ஏனைய அலுவல்கள் குறித்து ஏற்கனவே அறிவித்ததில் மாறுதல் இல்லை.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (16—4—1981) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.
எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

133. கோரிக்கை எண். 30.—சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு—1981–82 (தமிழ், ஆங்கிலம்).

134. சமூக நலம் பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1981–82 (ஆங்கிலம்).

135. தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு, 1980–81 (தமிழ், ஆங்கிலம்).

136. தொழில் கொள்கையும், திட்டங்களும், 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

137. 1981–82 ஆம் ஆண்டில் தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

138. 1981–82 ஆம் ஆண்டில் சர்க்கரைத் தொழில் பற்றிய செயல்முறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு.

### தொழில் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பும், திட்டங்களும்.

வேலை வாய்ப்புக்களைப் பெருமளவில் உருவாக்குவதும் நமது மாநிலத்தில் ஒரு பகுதியில் தொழில்கள் பெருகியும், மற்றொரு பகுதியில் குறைந்தும் இருப்பதைப் போக்கி எல்லாப் பகுதிகளிலும் தொழில்கள் சீராக அமைந்திட நடவடிக்கை எடுத்துக்கொள்வதும்தான் தமிழ்நாடு அரசின் தொழில் துறைக் கொள்கையின் இரு நோக்கங்களாகும். இந்நோக்கங்களை விரைவில் எய்துவதற்காக, தமிழ்நாடு அரசு சிறு தொழில்களை வளர்த்தல், மிகச் சிறிய தொழில் துறைகளை மேம்படுத்துதல், கிராமங்களைத் தொழில் மயமாக்குதல் போன்ற பணிகளில் சிறப்பாகக் கவனம் செலுத்தி வருகிறது. இதனால் தொழில்கள் எல்லா இடங்களிலும் பரவலாக அமைக்கப் பெறுவதற்கும் நாட்டின் செல்வ வளமும் வருமான வளமும் சிறந்த முறையில் பரவலாய் பகிர்மானமாவதை உறுதி செய்வதற்கும் இயலும். அதே நேரத்தில் சிறு தொழில்கள் துறையோடு தொடர்பை ஏற்படுத்தவும், இன்றியமையாத் துறைகளின் உற்பத்திக்கும் முக்கியத் துறைகளின் ( Code Sector ) உற்பத்திக்கும் உறுதி செய்யவும், இம்மாநிலத்தில் தொழிலுக்கான அடிப்படை வசதிகளை வலுப்படுத்தும் நோக்கத்தோடு, பெரிய நடுத்தரத் தொழில்களும் இணைந்து சுமுகமான முறையில் வளர்ச்சி பெறவும் கவனம் செலுத்தப்படுகிறது. திட்டமிட்ட வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பார்த்தால், பெருந் தொழில்கள் துறையும் சிறு தொழில்கள் துறையும் ஒன்றுக்கொன்று துணையாக இயங்கும் வகையிலும் மாநிலப் பொருளாதாரத்திற்குத் தேவையான வளர்ச்சி சக்திகளுக்கு உதவக்கூடிய அளவுக்கு அவற்றை முடுக்கி விடுவதிலும் பெருந் தொழில், சிறு தொழில் துறைகளுக்கு உரிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் தனியார் தொழில் முனைவர்களின் திறனை ஊக்குவிப்பதில் அரசு அதிக நாட்டம் செலுத்தி வருகிறது. ஆனால் சமூக நீதியை நிலைநாட்டுதல், தொழில் நுட்ப உத்திகளைப் புதிதாகக் கண்டறிதல், நலம்

பயக்கும் அளவுக்கு வருமான வாய்ப்புகளை பகிர்ந்தளித்தல் போன்ற நோக்கங்களை ஈடேற்ற வேண்டுமென்று தெரிகிற உற்பத்தித்துறைகளில் மட்டுமே, அரசு நேரடியாகத் தலையிடும். அரசு உள்ளூர் வள வாயில்கள், மூலப் பொருள்கள், மனித ஆற்றல் போன்ற வகையில் இம்மாநிலத்தில் கிடைக்கக் கூடிய இயற்கைவள வாயில்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும். தனித்தியங்கவல்லத் திட்டங்கள் எவையென்பதைக் கண்டறிந்து கட்டுப்படியாகும் திட்டங்களைத் தீட்டி அடிப்படை வசதிகளுக்கு வகை செய்தல், செயலூக்கம் அளித்தல், கடன் வசதி, ஏனைய இடு பொருட்கள் ஆகியவற்றை வழங்குதல், பயிற்சி வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல், உரிய தொழில் நுட்ப உத்தியை பயன்படுத்துதல், உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல் போன்றவைகளில் உதவி செய்வதன் வாயிலாக அவற்றை உற்பத்தியைப் பெருக்கும் வளங்களாக மாற்றிட வேண்டும்.

2. வேலை வாய்ப்புகளை அதிகரித்தல், வேலை வாய்ப்பு இன்மையாலும் போதிய வேலை வாய்ப்பின்மையாலும் ஏற்படும் கெடுதல்களைக் குறைத்தல் போன்ற நோக்கங்களுடன் சிறு தொழில், குடிசைத் தொழில், மிகச் சிறிய தொழில், வீட்டுத் தொழில் ஆகியவற்றைப் பரவலாக வளர்ச்சியடையச் செய்வதே நமது மாநில அரசுத் தொழிற் கொள்கையின் முக்கிய நோக்கமாகும். மாநில அரசு கடைப்பிடிக்கும் கொள்கையில், தொழில்களையும், தொழில் முனைவர்களையும் ஊக்குவித்தல், வளர்ச்சி நிலையங்கள், நிதியுதவி, நிருவாக—விற்பனை உதவி நொடித்துப் போன தொழில் பிரிவுகளை மீண்டும் தொடங்குதல் போன்றவை உள்ளிட்ட அடித்தள வசதிகளுக்கு வகை செய்தல் ஆகியவற்றிற்காகக் குறிப்பிட்ட திட்டங்களை செயல்படுத்துவதும் அடங்கும். பொதுவாக, இத்துறையில் திட்டமிடும் பொறுப்பையும் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பையும் குறிப்பாக, மாவட்டத் தொழில் நிலையங்களும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் தக்க முறையில் செயலாற்றி வருகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பையும் தொழில்—வணிக இயக்கம் மேற்கொள்கிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (IIC) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (SIDCO) தமிழ்நாடு



மாநிலத் தொழில் ஆக்க முயற்சிக் கழகம் (SIPCOT) போன்ற வளர்ச்சிக்கு ஆக்கமளிக்கும் நிறுவனங்களும் இந்திய அரசின் சிறு தொழில் பணி நிறுவனமும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் இத்துறைக்குத் தேவையான இடு பொருட்களுக்கு வகை செய்யும் பொறுப்பை மேற்கொள்கின்றன. கிராமத் தொழில்களை மேம்படுத்துதல், ஒருங்கிணைந்த உதவிக்கு வகை செய்தல் போன்ற துறைகளில் சிறு தொழில் முனைவர்களுக்கு நேரிட முதன்மை நிறுவனங்களாகச் செயல்படுவதில் மாவட்டத் தொழில் நிலையங்கள் பெருமளவில் வெற்றி கண்டுள்ளன. அவை தொடர்ந்து செயல்படுவதில் சில ஐயங்கள் ஏற்பட்ட போதிலும், குறிப்பாக சில சிறிய சரிக் கட்டல்களைச் செய்து இவற்றைத் தொடர்ந்து நீடிப்பதென்று இந்திய அரசு முடிவாகத் தீர்மானித்துள்ளது. இந்நிலையங்களைப் பெரிதும் திறனுடையவையாகவும், பயனளிப்பவையாகவும் செய்திட இவற்றை வலுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ளும் கணிசமான அளவிற்குத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிக்கக் கூடியவையாயுள்ள தீப்பெட்டித் தொழில், தேயிலைத் தொழில், தென்னை நார்த் தொழில் போன்ற தொழில் துறைகளை மேம்படுத்த அதிக வாய்ப்புள்ளதால் அவற்றிற்குத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதில், தொழில்—வணிகத் துறை கவனம் செலுத்தும்.

3. வளர்ச்சிக்குப் பெருமளவில் வாய்ப்புள்ள துறை, மின்னணுவியல் துறையாகும். இதற்குத் தேவையான செயலாக்கம். அண்மையில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு மின்னணுவியல் கழகம், தொழில்துறை ஆகியவற்றின் மூலம் அளிக்கப்படும்.

4. பட்டுப்புழு வளர்க்கும் தொழில் தொழிலாளர்களுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பளிக்கக் கூடிய கிராமத் தொழிலாகும். ஆனால் இதற்காக முதலீடு செய்ய வேண்டிய மூலதனத் தொகையோ மிகக் குறைவு. பட்டுப்புழு வளர்ப்புத் துறை முசுக்கட்டை மரங்கள் பயிரிடப்படும் நிலப் பரப்பளவை அதிகரிப்பதோடு, விதைப் பண்ணைகள், பட்டுப் புழுக் கூடு அங்காடிகள், செய்முறை விளக்கம்—பயிற்சி நிலையங்கள்

ஆகியவற்றை மேம்படுத்துதல், பட்டு நூல் சுற்றும் தொழிற்கூடங்களை அமைத்தல், மாவட்டப் பட்டுப் புழு வளர்ப்பு நிலையங்களை அமைத்தல் போன்ற துறைகளிலும் கவனம் செலுத்தல் பட்டுநூல் சுற்றல், பட்டு நூல் முறுக்கேற்றுதல் கழிவுக்கட்டு நூல் சுற்றல் துணைப் பொருட்கள் தொழில் பிரிவு போன்ற புதியதொழிற் பிரிவுகளையும் இத்துறை மேற்கொள்ளும்.

5. இம்மாநிலத்தில் கைவினைத் தொழில்களுக்கு உதவி புரிதல், அவற்றை மேம்படுத்துதல், வளர்ச்சியடையச் செய்தல் போன்ற பணிகள் 1973 ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்ற தமிழ்நாடு கைவினைத் தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கிராமங்களில் வேலை வாய்ப்பற்றிருக்கும் கைவினைஞர்களுக்குப் பயனுறும் வகையில் வேலை வாய்ப்பளித்தல், உள்ளூரில் கிடைக்கக்கூடிய வள வாயில்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்காக பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தவும் புதிய திட்டங்களை வகுக்கவும் புதிதாக விற்பனை நிலையங்களை ஏற்படுத்தவும், கைவினைத் தொழில் கழகம் திட்டமிட்டுள்ளது. கைவினைப் பொருட்களின் ஏற்றுமதிப் பணியானது வரும் ஆண்டுகளில் கணிசமான அளவிற்கு உயரும்.

6. இம்மாநிலத்தில் ஏறத்தாழ 6·7 இலட்சம் கைவினைஞர்கள் கதர்—கிராமத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இதே அளவு கைவினைஞர்கள் தொடர்பான துணைத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். கதர்—கிராமத் தொழில்கள் துறையின் கீழ் வரும் திட்டங்கள், தற்போதுள்ள கிராமத் தொழில்களை வளப்படுத்தல், புதிய தொழில்களை வளர்த்தல், முழுவதும் பயன்படுத்தக் கூடியதாகவும் முழு நேரத்திற்குரியதாகவும் உள்ள வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. பயன்தரத்தக்க பயிற்சிக் திட்டங்கள் மூலம் கைவினைஞர்களுக்குச் சிறந்த தொழில் திறனை அளித்தல், உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திட புதிய அமைப்புகளைத் தோற்றுவித்தல் ஆகியவற்றிற்காக இத்துறையில் உற்பத்தியைப் பலமுறைப்படுத்த முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்



றன. கதர்த் துணி உற்பத்தியை அதிகரிக்க, கிராமப் பஞ்சாசாலைத் தொழில்களும், நுண்வகைத் துணித் தயாரிப்புத் தொழில் பிரிவுகளும் அமைக்கப்படுவதோடு, பனைவெல்லத் தொழிலுக்குத் தனிக் கவனம் செலுத்தப்படும். கையால் தயாரிக்கப்படும் காகிதத் தொழிலுக்கு ஏற்ற முறையில் ஊக்கமளிக்கப்படும். எண்ணெய் ஆட்டுதல், மட்பாண்டம் செய்தல், தேனீ வளர்த்தல், சோப்பு தயாரித்தல் போன்ற ஏனைய கிராமத் தொழில்களுக்கும் ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்படுவதோடு உதவியும் அளிக்கப்படும்.

7. கைத்தறித் தொழில் இம்மாநிலத்தில் தொன்றுதொட்டு நடைபெற்று வரும் மிக முக்கிய குடிசைத் தொழில் ஆகும். இத் தொழில் சுமார் 13.35 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து வருகின்றது. கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ச்சியாக வேலைவாய்ப்பளித்தல், அவர்களுக்குக் குறைந்தளவு ஊதியம் கிடைக்கச் செய்தல் என்கிற இவ்விரு நோக்கங்களைக் கொண்டு, இத்துறையை ஊக்குவிப்பதற்காக மாநில அரசின் தொழில் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. உகந்த முறையில் நிதியுதவி அளித்தல், விற்பனைக்கு ஆதரவு நல்குதல், இன்றியமையா மூலப் பொருள்களை வழங்குதல், பயிற்சி அளிக்கவும் இத்தொழிலை பல முனைப்படுத்தவும் உரிய திட்டங்களை நிறைவேற்றுதல், செய்முறை வசதிகளுக்கு வகை செய்தல் ஆகியவற்றின் மூலம் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களை விரைந்து அதிக அளவில் இத்துறையின் கீழ்க் கொண்டுவரக் கருதுகிறது. கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்யத் தனிக் கவனம் செலுத்தப்படும். இத்துறையில் தொடக்க நிலை முயற்சியாக சிங்கப்பூரில் ஏற்றுமதி இல்லம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போதுள்ள கூட்டுறவு நூற்பாலைகளை விரிவுபடுத்துதல், தேவையான இடங்களில் புதிதாகக் கூட்டுறவு நூற்பாலைகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் நூல் உற்பத்தியை அதிகரிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க அரசு கருதியுள்ளது.

8. தமிழ்நாடு சிறுதொழில்கள் வளர்ச்சிக் கழகம், பின்தங்கிய பகுதிகளிலுள்ள சிறுதொழில்களுக்குக் கொட்டகைகளை அமைத்துக் கொடுத்தல், கருவிகளை வழங்குதல், இன்றியமையா மூலட்

பொருட்களை வாங்கி வழங்குதல், விற்பனை வசதிகளுக்கு வகை செய்தல், வட்டியில்லாக் கடன் வழங்குதல், நொடித்த தொழில் பிரிவுகளை இயங்க வைக்கத் தொடக்கச் செலவுக்குரிய தொகை வழங்குதல், மத்திய அரசு வழங்கும் முதலீட்டு உதவித் தொகை வாங்கிக் கொடுத்தல், ஏனைய செயலூக்க உதவிகளை நல்குதல் ஆகியவை உட்பட சிறுதொழில்களுக்குப் பல உதவிகளையும் செயலூக்கங்களையும் தொடர்ந்து அளித்து வருகிறது. சிறு தொழில் துறைக்கு மேலும் பெருமளவில் உதவி செய்யவேண்டும் என்ற நோக்கில், இக்கழகம், வரும் ஆண்டுகளில் தனது பணிகளைக் கணிசமான அளவிற்குப் பெருக்கிக் கொள்ளும்.

9. தமிழ்நாடு சிறுதொழில் கழகம் 55 உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ளது. இக்கழகம், பல திட்டங்களைச் செயல்படுத்தவுள்ளது. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் உற்பத்தி கணிசமான அளவிற்கு அதிகரிக்கும் என்பதோடு, தற்போது அரசுத் துறைகளுக்கும் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் அது ஆற்றிவரும் பணிகளும் மேம்படுத்தப்படும்.

10. ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சி மைய அரசு மைய துறைத் திட்டங்களில் செய்யும் முதலீடுகளின் அளவைப் பொறுத்து அமைகிறது. தமிழ்நாட்டில் மைய அரசு செய்யும் முதலீடுகள் கடந்த சில ஆண்டுகளில் பெரிதும் குறைவாக உள்ளன. அதிகமான பொதுத்துறைத் திட்டங்களை நாம் மாநிலத்தில் ஏற்படுத்த மாநில அரசு தீவிரமாக முயன்று வருகிறது. 'பெல்' நிறுவனத்தின் புதிய பிரிவு ஒன்றை இராணிப்பேட்டையில் தொடங்குவதற்கு மைய அரசு அனுமதி வழங்க முன் வந்துள்ளது. இனிவரும் ஆண்டுகளில், இம்மாநிலத்திற்கு அத்தகைய மேலும் பல திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படுமென்று நம்பப்படுகிறது.

11. பெரிய, நடுத்தர தொழில்களின் மேம்பாட்டிலும் வளர்ச்சியிலும் மாநில அரசுக்குள்ள பெரும் பொறுப்பு, தனியார் துறையின் முறையான வளர்ச்சிக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகள், நிதியுதவி, ஏனைய உதவிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதேயாகும். இக்குறிக்கோளை எய்துவதற்காக பல கழகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இக்கழகங்கள் அரசிடமிருந்து தேவை



யான நிதியுதவியையும், நிர்வாக உதவியையும் பெறுவதுடன், இப்பணிகளுக்காக நிதி உதவி நிறுவனங்களிலிருந்து பெருமளவு நிதியுதவியையும பெறுகின்றன. சில முக்கியக் காரணங்களுக்காக தெரிந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் நேரடியாக உற்பத்தியில் ஈடுபடும்படி சில கழகங்களுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளன.

12. பொதுத்துறையில் பெரிய, நடுத்தர தொழிற்சாலைகள் சிலவற்றை அமைத்து நிர்வகிக்கும் பணியும் தனியார் தொழில் முனைவர்களின் உடனுழைப்புடன் கூட்டுத் துறையில் தொழில் பிரிவுகளை மேம்படுத்தும் பணியும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் (டிட்கோ) ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது அரக்கோணத்தில் உருக்காலை ஒன்றையும், ஆலங்குளம் அரியலூர் ஆகிய இடங்களில் சிமிட்டித் தொழிற் சாலைகளையும "டிட்கோ" நிறுவனம் நிர்வகித்து வருகிறது. இப்பிரிவுகளை விரிவுபடுத்துவதோடு வெடிமருந்து தயாரிக்கும் திட்டம் உட்பட பொதுத்துறையில் புதிய திட்டங்கள் சிலவற்றை நிறுவி "டிட்கோ" நிறுவனம் செம்மையாகச் செயல்படவிருக்கிறது.

13. தமிழ்நாடு தொழில் ஆக்கக் கழகத்திற்கு (SIPCOT) தனியார் துறையில் பெரிய-நடுத்தரத் தொழில்களை மேம்படுத்துதல் நமதுமாநிலத்தில் போதிய அளவு வளர்ச்சியடையாத பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைக்கும் பணியை விரைவுப்படுத்துதல் ஆகிய இரு பொறுப்புகள் உள்ளன. இக்கழகம் ஊக்கத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்துகிறது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதியுதவித் திட்டத்தின் கீழ தொழிற்சாலைகளுக்கு நிதியுதவியளிப்பதோடு இது தொழில் முனைவர்களுக்குப் பல்வேறு துறைப் பணிகளையும் ஆற்றுகிறது. மாநிலத்தில் பல இடங்களில் தொழில் மையங்களை உருவாக்கி, எளிய நிபந்தனைகளின் பேரில் தொழிற்சாலைகளுக்கு மேம்பாடு செய்யப்பெற்ற மனைகள் கிடைக்க வகை செய்யும் இந்த ஊக்கத் திட்டங்களில் மைய அரசின் உதவித் தொகையில், மாநில அரசு வழங்கும் வட்டியில்லா விற்பனை வரிக் கடனும் அடங்கும். இந்த ஊக்கத் திட்டங்களை வருங்காலத்தில் தொழில் தொடங்குபவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகயிருக்கிற வகையில் மாற்றுவது குறித்து அரசு முனைப்புடன் பரிசிலித்து வருகிறது.

14. 1949 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம (TIIC) தமிழ்நாட்டின் மாநில நிதியுதவிக் கழகமாகச் செயல்பட்டு வருகிறது. நடுத்தரக்காலக் கடன்கள் வழங்குதல், இயந்திரங்கள் வாங்கியதற்கான தொகையைக் காலந்தாழ்த்திச் செலுத்துவதற்கான உத்திரவாதங்கள் அளித்தல், பொது மக்கள் வாங்காத மூலதனப் பங்குகளையும் முன்னுரிமைப் பங்குகளையும் வாங்குதல் ஆகிய வழிகளில் புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தவும, ஏற்கெனவேயுள்ள தொழில் பிரிவுகளை விரிவுபடுத்தி நவீனப்படுத்தவும் இது உதவுகிறது. மேலும், தொழில்நுட்ப வல்லுநர்கள், கிராமப்புற மருத்துவர்கள், போக்குவரத்து பணியை நடத்துபவர்கள் ஆகியோருக்கும், ஓட்டல்களுக்கும் குறைந்த வட்டிக் கடன் திட்டங்கள் மூலம் நிதியுதவி வழங்குதல் தொழில் நுட்பத் தொழில் முனைவோர் திட்டங்கள் முதலியவற்றின் கீழ் கடனுதவி அளித்தல் போன்ற சிறப்புத் திட்டங்களையும் இக்கழகம் செயல்படுத்தி வருகிறது. அதிக அளவில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தக் கூடியனவும், சிறப்பாக பின் தங்கிய, கிராமப்புறப் பகுதிகளில் அமைக்கப்படுகின்றவையும், குறிப்பாக சமுதாயத்தில் பொருளாதார ரீதியில் நலிந்துள்ளவர்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டவையுமான தொழில்களுக்கு முன்னுரிமையளித்து, வருங்காலத்தில் இவற்றுக்கு அதிக உதவியளிக்க இக்கழகம் கருதியுள்ளது.

15. நீண்ட கடற்கரையையும், கதிரவனின் ஒளியையும் பெருமளவில் பெரும்பேறு பெற்றுள்ள தமிழ்நாடு உப்பு உற்பத்தியில் நம்நாட்டில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. உப்புத் தொழில் ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் தொழில்களில் ஒன்றாகும். இதனால, கடற்கரையோர மாவட்டங்களிலுள்ள உழவுத் தொழிலாளர்களுக்கும் அந்தந்தக் காலங்களில் வேலை வாய்ப்பு கிட்டுகிறது. உப்பு உற்பத்தியை பெருக்குவதற்கும், உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழில்கள் நிறுவப்படுவதைத் ஊக்குவிப்பதற்குமான நடவடிக்கைகளில் மாநில அரசுக்கு, தமிழ்நாடு மாநில உப்பு—தொடர்பான இரசாயனங்கள் வாரியம் ஆலோசனைகள் வழங்குகிறது. அண்மையில் ஒரு பொதுத்துறை நிறுவனமாக அமைக்கப்பட்ட உப்புக் கழகத்திடம் புதுப்புது இடங்களில் உப்பளங்கள் தொடங்குதல், உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துதல் ஆகிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது, இக்கழகம், இராமநாதபுரம் மாவட்டத்தில், மறையூர், வாலிநோக்கம் என்னும் இடத்தில் ஒன்றும், தஞ்சாவூர் மாவட்டத்தில் மரவக்காடு என்னும் இடத்தில் ஒன்றுமாக இரண்டு பெரும் உப்பளத் திட்டங்களைத் தொடங்கியுள்ளது. இக்கழகம், புதிய இடங்களில் உப்பு உற்பத்தியைத் தொடங்கி சிறு உற்பத்தியாளர்களுக்கு நிதியுதவியும, விற்பனை வசதியும் செய்து கொடுக்கும். கடல் இரசாயனங்களின் தயாரிப்புக்கான திட்டங்களை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கும்.



16. சர்க்கரைத் தொழில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிலாகும். கிராமப்புறங்களில் இது முக்கிய அங்கம் வகிக்கிறது சர்க்கரைத் துறை இயக்குநர் அலுவலகமும், பொதுத்துறையில் சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்காக 1974 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சர்க்கரைக் கழகமும் 1981–82 ஆம் ஆண்டிலும்—அடுத்து வரும் ஆண்டுகளிலும் நிறைவேற்றுவதற்காக பல திட்டங்களை உருவாக்கியுள்ளன.

17. தமிழ்நாடு மட்பாண்டத்தொழில் நிறுவனம் (TACEL) திருமழிசையில் இயந்திரச் செங்கற்சூளை ஒன்றையும், சென்னையிலும், விருத்தாசலத்திலும் மட்பாண்டத் தொழில் பிரிவுகளையும் நடத்தி வருகிறது. இந்நிறுவனம் தனது தொழில் பிரிவுகளில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களில் கவனம் செலுத்தி, கிராமப்புறங்களில் குயவர்களுக்கும் தொழில் முனைவோருக்கும் உதவுவதற்கான திட்டங்களை மேற்கொள்ளும்.

18. கருப்பஞ்சக்கையிலிருந்து பத்திரிகைக் காகிதங்கள், எழுதுத் தாள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் பொரும் திட்ட மொன்றைத் தமிழக அரசு மேற் கொண்டுள்ளது. தொழில் நுட்ப உத்திகளை இறுதி செய்தல், நிதி ஏற்பாடுகள் செய்தல், சாதனங்கள் வழங்குதல் முதலியவற்றுக்கான தொடக்க நடவடிக்கைகளை தமிழ்நாடு பத்திரிகைக் காகிதங்கள், தாள்கள் நிறுவனம் (TNPL) மேற்கொண்டு வருகிறது. இந்நிறு

வனம் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவென்றே தனியே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குச் சுமார் ரூபாய் 19 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு, இந்திய நிதியுதவி நிறுவனங்கள், உலக வங்கி ஆகியவை நிதியுதவி செய்யும் இத்திட்டம் நாட்டில் ஒரு புது வகையான தொழில் நுட்பவியலுக்கு முன்னோடியாக விளங்கும். இது, தற்போது சர்க்கரை ஆலைகளில் எரி பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் கருப்பஞ்சக்கையைப் பயன்படுத்துவதுடன் ஏறத்தாழ இரண்டாயிரம் பேருக்கு நேரடியாகவும், பத்தாயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு நல்கும்.

19. மாநிலத்தில் சுரங்கத் தொழில் வளர்ச்சியில் அரசு தன் கவனம் செலுத்தும். சேலத்திலுள்ள மாக்னசைட் சுரங்கங்கள் சிலவற்றை நடத்துவதற்காக 197[illegible] ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம், சுரங்கப் பணிகளை அதிகரித்தும், சுரிந்த மாக்னசைட் ( D_ad burnt Magnesite ) உற்பத்திக்கான ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தியும் அதன் பணியை விரிவுபடுத்தும். தமிழ்நாடு கனிவள நிறுவனம் கரிய கருங்கல் உற்பத்தி—ஏற்றுமதிக்கான திட்டமொன்றை மேற்கொண்டு கருங்கல்லை வெட்டியெடுத்து மெருகிட்டுப் பளபளப்பாக்கும் புதிய தொழிற் பிரிவு ஒன்றை நிறுவும். இம்மாநிலத்தில் கிராபைட் ( Graph:te ) படிவங்களை வெட்டியெடுத்து பயனுறச் செய்வதற்கான திட்டமொன்றையும் இந்நிறுவனம் மேற்கொள்ளும்.

தொழில் வணிக இயக்குநரகத்தின் கொள்கைக் குறிப்பு.

இந்தியா போன்று, வளர்ந்து வரும் ஒரு நாட்டில், பொருளாதார வேறுபாடுகளும், அதன் விளைவாக நிகழும் உற்பத்திக் குறைவும், போதிய வேலை வாய்ப்பின்மையும் ஏற்படுகின்றன. எனவே, கிராமம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலும், வேளாண்மை மற்றும் தொழில் துறைகளிலும், வளர்ச்சியடைந்துள்ள பகுதிகள், ஓரளவு வளர்ச்சியடைந்துள்ள பகுதிகள் மற்றும் வளர்ச்சி குன்றியுள்ள பகுதிகளிலும், தொழில்களிலேயே பல் வேறு வகைத் தொழில்களுக்கிடையேயும் சீரான சம நிலையிலான வளர்ச்சியை உண்டாக்குவது அவசியமாகிறது. இது நாடே சமாளிக்க வேண்டியிருக்கும் ஓர் பிரச்சினை என்பதிலும், காலநாமதமின்றி அதற்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் என்பதிலும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

நாட்டின் குறிப்பிட்ட ஒரு பகுதியில் உற்பத்தியைப் பெருக்கி, வருவாயை உயர்த்துவதற்கு ''தொழில் மயமாக்குதல்'' என்பது ஒரு வலிமை மிக்க கருவியாகும். ஆனால், குறைந்த மூலதன முதலீட்டினைக் கொண்டே அதிகப்படியான வேலை வாய்ப்பு ஏற்படுத்துதலைக் குறிக்கோளாகக் கொண்டு பார்த்தால், சிறு தொழில்களும், குடிசைத் தொழில்களும் இப்பணியில் முக்கியமான இடத்தை வகிக்கின்றன என்பதனை யாரும் மறுக்க இயலாது. சிறு தொழில்களையும், குடிசைத் தொழில்களையும் பரவலான முறையில், துரிதமாக வளர்வதற்குச் சாதகமானதொரு சூழ்நிலையை உருவாக்கி வரும் அதே நேரத்தில், மாநில அரசு அத்தியாவசியமான கனரகத் தொழில்களை அமைப்பதற்கும் உதவி அளித்து வருகிறது. இதில் ஒரு தலையான கருத்துப் போக்கிற்கோ அல்லது கொள்கைப் பிடிப்பிற்கோ இடமில்லை.

நாட்டில் பெருமளவில் தொழில் வளர்ச்சியடைந்துள்ள மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் மாநிலத்தின் பொருளாதார அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 1950–51-ம் ஆண்டில் 51.10 சதவீதமாக இருந்த மாநிலத்தின் வருவாயில் வேளாண்மைத் துறையின் பங்கானது, 1978–79-ம் ஆண்டில் 38.18 சதவீதமாக குறைந்துள்ளது. ஆனால், அதே காலத்தில் தொழில் துறையின் பங்கானது 12.70 சதவீதத்திலிருந்து 26.89 சதவீதமாக உயர்ந்துள்ளது. 1976–77-ம் ஆண்டின், தொழில்களைப் பற்றிய வருடாந்திர ஆய்வு அறிக்கையின்படி (தற்பொழுது கிடைத்துள்ள விவரப்படி), நாட்டிலுள்ள மொத்த தொழிற்சாலைகளில் 10.54 சதவீதம்

தமிழ்நாட்டில் இருந்திருக்கின்றன. பதிவு பெற்ற தொழில்கள் மூலம் கிடைத்த மொத்த வருவாயில், மாநிலத்தின் பங்கு 9.88 சதவீதமாகும். உற்பத்தி மதிப்பு, தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் ஊதிய மதிப்பு ஆகியவற்றில் தமிழகம் மூன்றாவது இடத்தை வகித்து வருகிறது. பதிவு பெற்ற தொழில்களில் 1970–71-ல் அதிக அளவில் மாநிலத்திற்கு வருவாயை ஈட்டித் தந்த தொழில் பஞ்சாலைத் தொழிலாகும். ஆனால், 1976–77-ல், இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள் மற்றும் இயந்திரப் பாகங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழில்கள் தான் மாநில வருவாய்க்கு அதிகமான பங்கினை அளிக்கும் அதிமுக்கிய தொழிலாக உருவெடுத்துள்ளன. நாட்டினுடைய அடிப்படைத் தொழில் வளர்ச்சியில் நமது மாநிலம் மிக முக்கியமாக விளங்குகிறது என்பது இதிலிருந்து தெளிவாகும்.

சிறு தொழில்களின் வளர்ச்சியும், பெருந்தொழில்களைப் போலவே சிறந்து விளங்குகிறது. தொழில் வணிக இயக்குநரகத்தில், சிறு தொழில்களைப் பதிவு செய்வது கட்டாயமில்லை என்றாலும், வளர்ந்து வரும் பதிவு பெற்றுள்ள சிறு தொழில்களின் எண்ணிக்கை, வளர்ச்சிப் போக்கினைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை 1978-ம் ஆண்டு மார்ச்சு மாத இறுதியில், 18,789 இலிருந்து, 1979-ம் ஆண்டின் மார்ச்சு இறுதியில் 22,254 ஆக உயர்ந்தது. இது 1980-ம் ஆண்டு டிசம்பர் இறுதியில் சுமார் 34,000 ஆக உயர்ந்துள்ளது. தற்பொழுது சிறு தொழில் துறையில் மிக நுட்பமான தொழில்களும், உயர் தொழில் நுட்பம் வாய்ந்த தொழில்களும், பரவலான நிலையில் வளர்ந்து வரும் குடிசை மற்றும் மிகச் சிறு தொழில்களும் அமைந்திருப்பதைக் காணலாம்.

இந்த ஆண்டில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் சிறப்பம்சங்களை, பின்வருகின்ற பத்திகளில் காணலாம்.

**மாவட்ட தொழில் மையங்கள் :**

மாவட்ட தொழில் மையங்கள், திறன்மிக்க தொழில் விரிவாக்க அமைப்புக்களாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்துள்ளன என்பதை அவற்றின் கடந்த 30 மாத கால முன்னேற்றம் தெளிவுபடுத்துகிறது. தொழில் வளர்ச்சியினைத் துரிதப்படுத்துவதிலும், இதுவரையில் வளர்ச்சியடையாத பகுதிகள் பெரும் பயனைப் பெறச் செய்வதிலும் மாவட்டத் தொழில் மையங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. 1980–81 ஆம் ஆண்டில் இத் தொழில் மையங்கள் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு, 40,000-க்கும் அதிகமாக வேலை வாய்ப்பளிக்கக்கூடிய சுமார் 4,800 சிறு தொழில்களுக்கு நிரந்தரச் சான்றிதழ்களை (31–12–1980 வரை) வழங்கியுள்ளன. இதே ஆண்டில் 9,431



பேருக்கு வேலை வாய்ப்பளிக்கக்கூடிய 5,240 கைத்தறித் தொழில்களும், கைவினைத் தொழில்களும் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. 2,362 சிறு தொழில்களுக்கு ரூ. 5.79 கோடியை நிதியுதவியாக வங்கிகளிடமிருந்து இம் மையங்கள் பெற்றுத் தந்துள்ளன. 9,616 சிறு மற்றும் கைவினைத் தொழில்கள், பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்தும், நேரடியாக வங்கிகளிடமிருந்தும் வழங்கப்பட்ட நிதியுதவி உட்பட பெறப்பட்ட நிதியுதவி சுமார் ரூ. 8.82 கோடியாகும். புதுக்கோட்டை, தென்னாற்காடு மாவட்டங்கள் மற்றும் கிழக்கு இராமநாதபுரம் போன்ற தொழிலில் பின்தங்கிய பகுதிகள் நூறு சதவீத முன்னேற்றம் அடைந்திருப்பது தொழில் மையங்கள் மேற்கொண்டு வரும் முனைப்பான முன்னேற்ற நடவடிக்கைகளுக்குச் சான்று கூறுகின்றன.

வழங்கப்பட்ட மொத்த நிரந்தரப் பதிவுச் சான்றிதழ்களில், தென்னாற்காடு, வட ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி போன்ற தொழிலில் பின்தங்கிய மாவட்டங்களின் பங்கு 1978-ம் ஆண்டு மார்ச் இறுதியில் 39.2 சதவீதமாக இருந்தது. இது 1980-ம் ஆண்டு செப்டம்பரில் 42.06 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஓரளவு வளர்ச்சியடைந்துள்ள மாவட்டங்களிலும், வளர்ச்சி குன்றிய பகுதிகள் பலனடைந்துள்ளன. உதாரணமாக, செங்கல்பட்டு மாவட்டத்தில், 1961 முதல் 1978 வரை, 1,604 சிறு தொழில்கள் நிரந்தரப் பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றிருந்தன. ஆனால், கடந்த 32 மாதங்களில் மட்டும், 1,494 புதிய தொழில்கள் நிரந்தரப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் ரூ. 296.80 இலட்சம் மூலதனத்துடன், 4,773 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கக்கூடிய கிராமப்பகுதிகளில் அமைந்துள்ள 373 தொழில்களும் அடங்கும். தொழில் நிலையங்கள் மிகக் குறைவாயிருந்து வந்திருக்கும் தஞ்சாவூர் மாவட்டத்தில், நிரந்தரத் தொழில்களின் எண்ணிக்கை 50 சதவீதமாக உயர்ந்துள்ளது. பின்தங்கிய தர்மபுரி மாவட்டத்திலும் ஏறக்குறைய 100 சதவீத வளர்ச்சி காணப்படுகிறது. 1980–81-ம் ஆண்டில் (டிசம்பர் 1980 வரை) மட்டும் 90-க்கும் அதிகமான ஊக்குவிப்புப் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. இக்கருத்தரங்குகளில் 7,000 பேருக்கு மேல் கலந்துகொண்டுள்ளனர்.

அபிவிருத்தி ஆணையாளர் (சிறு தொழில்கள்) மேற்கொண்ட ஒரு கணிப்பின்படி 1979-80-ம் ஆண்டில் நாட்டிலுள்ள 382 மாவட்ட தொழில் மையங்களில், 6.65 இலட்சம் பேருக்கு கூடுதலாக வேலை வாய்ப்பளிக்கின்ற 1.17 இலட்சம் புதிய தொழில்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு மாவட்ட தொழில் மையத்திலும் சராசரியாக 306 புதிய தொழில்களும், 1,741 பேருக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பும்

தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொழில் மையத்தி லும் சராசரியாக ரூ. 66 இலட்சம் நிதி வசதிக்கு வகை செய்யப் பட்டுள்ளது. இதனோடு ஒப்பிடுகின்ற பொழுது, 1979–80ஆம் ஆண்டில், மாநிலத்தில் 14 மாவட்ட தொழில் மையங்களில் (இவற்றில் ஆறு மையங்கள் 1979 ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பரில் துவக்கப்பட்டவை) ஒவ்வொரு மையத்திலும் சராசரியாக 891 புதிய தொழில் நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டன; 5,172 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது; சராசரியாக ரூ. 159 இலட்ச நிதியுதவிக்கும் வழி வகுக்கப் பட்டுள்ளது.

தொழில்கள் துரிதமாக உற்பத்தியைத் துவங்குவதற்கு இடை யூறாக பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. இவை பெரு ரகத் தொழில்களைவிட வசதிகுன்றிய சிறு தொழில்களையே மிகவும் பாதிப்பனவாக அமைகின்றன. இவற்றைக் களைந்தெறி வதில் சமீபத்தில் மிக முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இதில் பல துறைகள் சம்பந்தப்பட்டிருந்த போதிலும், சிக்கல் கள் எவை, அவை எங்கு பாதிப்பினையேற்படுத்துகின்றன என் பதனைக் கண்டறிந்து அவற்றிற்கெல்லாம் தீர்வு காண்பதில், தொழில் வணிக இயக்குநரகம் ஒரு முக்கியமான பொறுப்பினை ஏற்றுள்ளது. இவ்வகையில் சட்டங்களையும், விதிகளையும், திருத்தியமைக்க முற்படுங்கால் காலதாமதம் ஏற்படும் என்பதால் பயன்தரத்தக்க வகையில் நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டுள் ளன. பல்வேறு நிலைகளில் சிறு தொழில்களின் பிரச்சினை களைக் கண்டறிந்து, அவற்றைத் தீர்த்து வைப்பதில் மாவட்ட தொழில் மையங்கள் ஈடுபட்டுள்ளன. சிறு தொழில்களின் துரித மான வளர்ச்சிக்கு வழிகோலும் வகையில், தொழிற்சாலைச் சட் டத்தின் விதிகள் மற்றும் தொழிலாளர் நல நிதிச் சட்டங்கள் ஆகியவற்றை மேலும் எளிமையாக்குவது பற்றி, உயர்மட்ட அலு வலர்கள் குழு ஒன்று முனைந்து பரிசீலித்து வருகிறது.

ஏற்கனவே எளிமையாக்கப்பட்ட வழிமுறைகளால் கிடைக் கப் பெற்ற அனுமதிகள் பற்றிய தகவல்கள் சில உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து சேகரிக்கப்பட்டன. இவற்றின் அடிப் படையில் பார்த்தால், 1979–80 ஆம் ஆண்டு முழுவதற்கும் சிறு தொழில் நிலையங்களுக்கு அளிக்கப்பட்ட அனுமதிகள் 8,611 என்றிருக்க, கடந்த ஒன்பது மாதங்களில் மட்டும், சுமார் 8,300 அனுமதிகள் சிறுதொழில் நிலையங்களுக்குக் கிட்டியுள்ளன என்பது தெரியவருகிறது. மாவட்ட தொழில் மையங்கள், எடுத்துக்கொண்ட முயற்சிகளின் விளைவாக ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் கிராம இளைஞர் சுய வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டத்தின் கீழ் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை, 17,000-க்கும் அதிகமானவர் கள் பயிற்சி பெற ஏதுவாயிற்று. ரூ. 80 இலட்சத்திற்கும் அதிக மாக உதவித் தொகையும் கொடுக்கப்பட்டுள்ளது.





மாவட்ட தொழில் மையங்கள், தொழில் வணிக இயக்கு நரகத்தின் கள அமைப்பாக செயல்பட்டு வருவதோடு, கள அளவில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் வளர்ச் சித் திட்டங்களைச் செயலாக்குவதிலும் (இந்நிறுவனத்திற்கே கள அளவில் சிறு அமைப்பு இருந்த போதிலும்) உதவி புரிகின்றன. தொழில் வணிகத் துறையின் (அது பல்லாண்டுகளாகச் செய்து வரும்) பணிகளைச் செம்மையாக்குதல், தொழில் முனைவர்களை ஊக்குவித்தல், நிதி உட்பட அனைத்து உதவிகளையும் தொடர்ச்சி யான முறையில் அளித்தல் போன்ற அபிவிருத்திப் பணிகளைச் செய்யக்கூடிய வகையில் மாவட்ட தொழில் மையங்கள் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

ஒருமித்த தொழில் வளர்ச்சிக்கு வழிகோலும் வகையில் மாவட்ட தொழில் அமைப்பு இருக்க வேண்டுமென்று மைய அரசு அண்மையில் முடிவெடுத்துள்ளது. இதனைத் தொடர்ந்து மாவட்ட தொழில் மையங்கள் எந்தவடிவில் அமைந்தால் மேலும் சிறப்பாக அவை செயல்பட இயலும் என்பது பற்றி மாநில அளவில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்—

வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதில், அதிலும் குறிப் பாக நலிந்துள்ள மக்களுக்கும், கிராம மக்களுக்கும் வேலை வாய்ப் பினைப் பரவலான முறையில் ஏற்படுத்துவதில் தொழில் துறை யின் ஆற்றல் மிக்க அமைப்புகளில் ஒன்றாகத் திகழ்வது தொழில் கூட்டுறவுச் சங்கங்களேயாகும். இந்த ஆண்டிலும், கூட்டுறவுச் சங்கங்கள் போற்றத்தக்க அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள் ளன. 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதியில் 297 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. தொழில் வணிக இயக்குநர கத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை, 1980 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 619 ஆக உயர்ந்துள்ளது. இவை அனைத்தும், அவற்றின் முழு உற் பத்தி அளவினை எட்டியிராவிட்டாலும், உற்பத்தி மற்றும் விற் பனையில் அவை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள் ளன. இதனைக் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையிலி ருந்து அறியலாம்.

| ஆண்டு. | | | தொழிற் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை. | உற்பத்தி. | விற்பனை. |
|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1976–77 | .. | .. | 306 | 1,128.58 | 1,297.19 |
| 1977–78 | .. | .. | 297 | 1,509.20 | 1,762.97 |

[1981 ஏப்ரல் 15

(ரூபாய் இலட்சத்தில்.)

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1978-79 .. .. | 389 | 1,813.70 | 2,035.33 |
| 1979-80 .. .. | 559 | 2,489.33 | 2,874.25 |
| 1980-81 (31-12-80 வரை). | 619 | 2,367.91 | 2,724.17 |

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுள் குறிப்பிடத் தக்கவை, தேயிலை மற்றும் தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களாகும்.

தேயிலைத் தொழில்.—

நீலகிரி மாவட்டத்தில் 12 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. கூட்டுறவு அமைப்பில் வந்துள்ள தேயிலை பயிரிடப்படுகின்ற நிலப்பரப்பு, சிறு தேயிலைப் பயிரிடுபவர்—உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றிய நாளது வரையிலான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| சிறு தேயிலை பயிரிடுபவர்—உறுப்பினர்களின் எண்ணிக்கை. | 6,190 |
| கூட்டுறவு அமைப்பில் உள்ள தேயிலை பயிராகும் நிலப்பரப்பு (ஏக்கரில்). | 12,846 |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்). | 125.10 |

| விவரங்கள். | 1976-77. | 1977-78. | 1978-79 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உற்பத்தி (கிலோகிராம்—இலட்சத்தில்). | 43.14 | 58.98 | 64.48 |
| விற்பனை (கிலோகிராம்—இலட்சத்தில்). | 40.79 | 56.20 | 55.09 |
| விற்பனையின் மதிப்பு .. | 479.67 | 723.30 | 564.59 |



1981 ஏப்ரல் 15]

| விவரங்கள். | 1979-80 | 1980-81 (31-12-80) |
|---|---|---|
| (1) | (5) | (6) |
| உற்பத்தி (கிலோகிராம்—இலட்சத்தில்). | 55.08 | 53.78 |
| விற்பனை (கிலோகிராம்—இலட்சத்தில்). | 68.96 | 47.62 |
| விற்பனையின் மதிப்பு .. | 719.15 | 492.19 |

உற்பத்தியளவு குறிப்பிடத்தக்கதாக இருந்த போதிலும், சில சங்கங்கள் இன்னும் இலாப முறையில் செயல்பட முடியவில்லை. சங்கங்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும், சிறு தேயிலை பயிரிடுபவர்களுக்கு உயர்ந்த விலை கொடுக்க வேண்டும் என்ற நோக்கினை நிறைவேற்றுவதற்கும் வழக்கமாக இருந்து வரும் ஏலமுறை விற்பனையோடு தயாரான தேயிலையையும் விற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தேயிலையைப் பெரிய பெட்டிகளில் அடைத்து அவற்றையும், சிறிய அட்டைப் பெட்டிகளில் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்பனை செய்ய, மத்தியச் சங்கம் துவங்கி விட்டது. மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு கீழ்க்கண்டவாறு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| 8 தொழிற்சாலைகளில் பங்கு மூலதனம். | ரூ. 11·00 இலட்சம். |
| தமிழ்நாடு ஒட்டுப் பலகைத் தொழிற்சாலைக்கு பங்கு மூலதனம். | ரூ. 1.00 இலட்சம். |
| கைகாட்டி கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு குடியிருப்புக்களைக் கட்டுதல். | ரூ. 0.48 இலட்சம். |
| 'சி. டி. சி.' இயந்திரம் நிறுவுதலுக்கு 2 தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு உதவி. | ரூ. 1.50 இலட்சம். |
| | ரூ. 13.98 இலட்சம். |

[1981 ஏப்ரல் 15

இந்த உதவி உறுப்பினர் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு மேலும் சிறந்த வசதிகளைச் செய்து கொடுக்க ஓர் சாதனமாக அமையும்.

தீப்பெட்டி தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்—

கடந்த சில ஆண்டுகளில் மிகச் சிறப்பான வளர்ச்சியடைந்துள்ள தொழில்களுள் இதுவும் ஒன்றாகும்.

" பொட்டாசியம் குளோரேட் " தீக்குச்சி, மெழுகுக்குச்சிகள், தீப்பெட்டி நிலக் காகிதம் போன்ற மூலப் பொருள்களை வழங்குவதற்கும், தீப்பெட்டி விற்பனை போன்ற பணி வசதிகளை உறுப்பினர் தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கு அளிப்பதற்கும் 31–3–1979 இல் 18 சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பணித் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன.

குறிப்பிடத்தக்க அளவுக்கு வேலை வாய்ப்பினை, அதிலும் குறிப்பாக, கிராமப் பகுதிகளில் ஏற்படுத்துவதற்காக, 1979-80-ல் 20 தீப்பெட்டி பணிக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்தது.

சமூக நலத் துறையின் சிறப்புத் திட்டத்தின் கீழ், கிராமப் பகுதிகளில் 10,000 மகளிர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கக் கூடிய வகையில், மகளிர் தீப்பெட்டி தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் உதவிபுரிய மேலும் 4 தீப்பெட்டிப் பணித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மகளிர்களுக்கென 1979-80-ல் அமைக்கப்பட்டன. ஓரளவிற்கு ஏற்கெனவே இத் தொழில் வளர்ந்துள்ள சாத்தூர் மற்றும் கோவில்பட்டி போன்ற பகுதிகளில் மேலும் 6 தீப்பெட்டிப் பணிச் சங்கங்களும் 1979-80-ல் அமைக்கப்பட்டன. மாநிலத்தில் 1980 மார்ச் இறுதியில் இத்தகைய 48 சங்கங்கள் இருந்தன.

எனவே பல்வேறு மாவட்டங்களில் தொழிற் கூட்டுறவு உற்பத்தியாளர்களுக்கென பணிச் சங்கங்கள் முன்பிருந்தே செயல்பட்டு வந்திருந்தபோதிலும், 1979-80-ல் தொழிற் கூட்டுறவுத் துறையில் இவை மிகப் பெரிய முன்னேற்றத்தை தோற்றுவித்து உள்ளன. தீப்பெட்டி குடிசைத் தொழிலானது, பரம்பரையாக இத் தொழில் வளர்ந்துள்ள பகுதிகளில் மட்டுமல்லாது, வளர்ச்சியடையாத பகுதிகளிலும் வேரூன்றியுள்ளதன் வாயிலாக போற்றத்தக்க முன்னேற்றத்தினைத் தமிழகம் இன்று கண்டுள்ளது.

1980-81-ல் 20,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய 10 பணிச் சங்கங்களை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு உள்ளது. தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவு பணிச் சங்கங்கள் தவிர, 31–3–1979-ல் மாநிலத்தில் 100 தீப்பெட்டித் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் இருந்தன.



1981 ஏப்ரல் 15]

இவ்வையும் தீப்பெட்டிகளைத் தயாரிப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினை ஏற்படுத்தின. 1979-80ஆம் ஆண்டில் மேலும் இத்தகைய 155 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 1980 ஆம ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாளில் இத்தகைய 255 சங்கங்கள் இருந்தன.

1980–81-ஆம் ஆண்டில் 20 பணியாளர்கள் சங்கங்கள் அமைப்பதென உத்தேசிக்கப்பட்டிருந்தது. இவற்றில் ஆறு சங்கங்கள் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுவிட்டன.

மேற்கண்டவை தவிர, 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாளில் அன்றைய தொழில் துறை அரசாணை எண் 1466இல் அரசு நிதியுதவியின்றியும், இலவச பணியாளர் உதவியின்றியும் மேலும் பல தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்வதற்கு அரசு ஆணை வழங்கியுள்ளது. இந்த அரசாணையின்படி, இதுவரையில் 11 சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பணிச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில், தொழில் கூட்டுறவுத் துறையில், 61 சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பணிச் சங்கங்கள் உள்ளன.

மாநிலத்தில், தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கங்கள் வளர்ந்து வருவதன் காரணமாக அடைந்துள்ள குறிப்பிடத்தக்க அபிவிருத்திக்குச் சான்று கூறும் வண்ணம் பின்வரும் விவரங்கள் அமைந்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை புதிதாகத் துவக்கப்பட்டு, இன்னமும் முழு அளவில் உற்பத்தித் திறனை அடையவில்லை என்றாலும், அவற்றின் முன்னேற்றம் குறிப்பிடத் தக்கது.

தீப்பெட்டி பணிச் சங்கங்கள்.

| ஆண்டு. | தீப்பெட்டி பணிச் சங்கங்களின் எண்ணிக்கை. | உற்பத்தி. | விற்பனை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1978–79 .. .. | 18 | 794.35 | 901.12 |
| 1979–80 .. .. | 48 | 1,427.09 | 1,483.20 |
| 1980–81 (31–12–1980 வரை). | 61 | 966.00 | 1,096.77 |

1980–81 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி, மதுரை, மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் குச்சிகள் தயாரிக்கும் மூன்று கூட்டுறவுத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும்.

தீப்பெட்டி தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருள்களைப் பெறுவதில், தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு உதவியளிப்பதற்காக, அரசு பின்வரும் கோரிக்கைகளைப் பரிசிலித்து வருகிறது:—

(1) ரூபாய் 72 இலட்சம் செலவில், தொழிற் கூட்டுறவு அடிப்படையில், குன்றக்குடியில் ''பொட்டாசியம் குளோரைட்'' தொழிற்சாலை ஏற்படுத்துவது.

(2) ரூபாய் 125 இலட்சம் செலவில் தமிழ்நாடு மாநில தீப்பெட்டி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் ஒரு சிறிய காகிதத் தொழிற்சாலையை அமைப்பது.

கயிறு தொழில்.

இந்தியாவிலேயே, தென்னை உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாவது இடம் வகிக்கிறது. 1,09,760 ஹெக்டேரில் தென்னை பயிரிடப்பட்டு, ஆண்டு தோறும் 104 கோடி தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 83 கோடி தேங்காய் மட்டைகளை பயன்படுத்தி 766,400 மெட்ரிக்டன் கயிற்றுநார் உற்பத்திச் செய்யப்படுகிறது.

தற்போது 10 கயிறு கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. 1980–81 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 10 கயிறு கூட்டுறவு சங்கங்களில், ஒரு கயிறு கூட்டுறவு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மற்ற ஏனைய 9 சங்கங்களும் இன்னும் பதிவு செய்யப்பட உள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் மேலும் 22 கயிறு கூட்டுறவு சங்கங்களை, கயிற்றிழை நூற்பு மற்றும் கயிறு உற்பத்தி இனங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய திட்டங்களின் பலனால், தற்போது உள்ள 40 சதவீத தென்னை மட்டை நுகர்வு அதிகபட்ச அளவுக்கு உயரும். கயிறு தொழில் வளர்ச்சிக்கு வழங்கப் பெறும் மத்திய அரசின் நிதி உதவிகளைப் பெற்று, கயிற்றிழை உற்பத்தியையும வேலை வாய்ப்பையும் அதிக அளவிற்கு உயர்த்த அரசு பல திட்டங்களைத் தீட்டி வருகிறது.



தோல் தொழில்—

கடந்த ஆண்டில் கொள்கைக் குறிப்பில், தமிழகத்தின் பொருளாதார அபிவிருத்தியில் முக்கியப் பங்கை வகிக்கும் இந்த தொழிலின் நிலை பற்றி விவரமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஆண்டில் காணப்பட்டுள்ள வளர்ச்சியின் சிறப்பம்சங்கள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன :—

முதன்முதலாக வாணியம்பாடியில் அமைக்கப்பட்ட தோல் நிறைவு செய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஏற்கனவே உற்பத்தியைத் துவக்கி விட்டது. 1980–81-ல் (31—12—1980) வரை, இச்சங்கம் ரூபாய் 2·42 இலட்சம் வருவாயாகக் கிடைக்கப்பெற்றுள்ளது. இராணிப்பேட்டையிலும், திண்டுக்கல்லிலும் மற்ற இரு சங்கங்களையும் விரைவில் துவக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நிலம் வாங்கப்பட்டு கட்டிடப்பணிகள் நடைபெற்று வருகின்றன. தொழிற்சாலைக் கட்டிடங்கள் கட்டப்பட்டு மாநில நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்று, தேவையான இயந்திரங்களை நிறுவிய பிறகு இந்த இரு நிலையங்களும் இந்த ஆண்டில் உற்பத்தியைத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1980–81-ல் இன்னும் ஒரு நிலையம் பேரணாம்பட்டில் அமைக்கப்பட்டது. இந்த நிலையமும் விரைவில் செயல்படத் துவங்கும். 1982–83-ல் மேலும் ஒரு தோல்நிறைவு செய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஆம்பூர் அல்லது குரோம்பேட்டையில் நிறுவப்படும்.

இரசாயனப் பிரிவு—

நாட்டில் இரசாயனத் தொழிலில் வளர்ச்சி மிகவும் சிறப்பானதாக அமைந்துள்ளது. இத்தொழிலின் வளர்ச்சிக்குத் தேவையான இயற்கை வளங்களும், வசதிகளும் குன்றியுள்ள தமிழ்நாடு முக்கியமாக வேளாண்மை சார்ந்த மாநிலம், என்றாலும, நடந்த பத்தாண்டுகளில் இரசாயனத் தொழிலில் மாநிலத்தில் படிப்படியாகத் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வந்துள்ளது. உரங்கள், கனரக ரசாயனப் பொருள்கள், சிமிட்டி, சர்க்கரை, காகிதம். ''ஆல்கஹால்'', ''பெட்ரோலியம்'' சுத்திகரிப்பு, ''ரயான்'' நூல், ''பிளாஸ்டிக்'', ''அலுமினியம்'' போன்றவற்றின் தயாரிப்பில் மாநிலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. நான்கு தென் மாநிலங்களை மட்டும் எடுத்துக் கொண்டாலும், சிமிட்டி, வாகனங்களுக்குரிய ''டயர்கள்'' ''காஸ்டிக் சோடா'', ''நைட்ரஜன்'' மற்றும் ''பாஸ்பேட்'' உரங்கள் தயாரிப்பதற்காக நிறுவப்பட்டுள்ள உற்பத்தித் திறனில் பெரும்பங்கு தமிழகத்திலேயே அமைந்துள்ளது. தமிழ்நாட்டில், பெருரகத் தொழில் துறையில் இரசாயனத் தொழில்கள், அதிலும் குறிப்பாக ''ஆல்கஹால்'' அடிப்படைத் தொழில்கள், வேளாண்மை அடிப்படையிலான தொழில்கள், கனிம அடிப்படையிலான தொழில்கள், அடிப்படை மருந்துப் பொருள் தொழில்கள், பூச்சிக் கொல்லி இரசாயனத் தொழில்கள் முதலியவை மேலும் வளர்ச்சியடைவதற்கு மிகச் சிறந்த வாய்ப்பு உள்ளது.

சிறுதொழில் பகுதி.—

சிறுதொழில் துறையிலும், இரசாயனத் தொழில்களும் அவற்றினைச் சார்ந்த தொழில்களும் படிப்படியாக வளர்ச்சி யடைந்திருப்பதைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து அறியலாம் :—

சிறுதொழில் துறையில் இரசாயனத் தொழில்கள், அவற்றினைச் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி.

| தொழிலின் பெயர். | பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களின் மொத்த எண்ணிக்கை. | | | |
|---|---|---|---|---|
| | 31–12–1977-ல் | 31–12–1978-ல் | 31–1–1979-ல் | 30–9–1930-ல் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 இரசாயனப் பொருள்கள். | 2,466 | 2,746 | 3,243 | 5,045 |
| 2 உணவுப்பொருள்கள் | 1,491 | 1,698 | 1,968 | 2,744 |
| 3 ஊட்டச்சத்துப் பொருள்கள், புகையிலைப் பொருள்கள். | 127 | 171 | 200 | 250 |
| 4 காகிதப் பொருட்கள். | 1,545 | 1,887 | 2,228 | 2,732 |
| 5 ''இரப்பர்'' மற்றும் ''பிளாஸ்டிக்''. | 1,158 | 1,254 | 1,354 | 1,617 |
| 6 உலோக மற்ற கனிமப் பொருள்கள். | 942 | 1,091 | 1,496 | 1,900 |
| மொத்தம் .. | 7,729 | 8,847 | 10,489 | 14,288 |

இரசாயனத் தொழில்கள் மற்றும் சார்புத் தொழில்களின் எண்ணிக்கையானது 1977 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், 1980 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட இரட்டிப்பாகியுள்ளது. 30–9–1980-ல் தொழில் வணிக இயக்குநரகத்தில் நிரந்தரம் பதிவு பெற்றிருந்த தொழில்களின் எண்ணிக்கை 32,044 ஆக இருந்தது. இவற்றில் இரசாயனத் தொழில்கள் 5,045 ஆகும். இரசாயனம் சார்புடைய தொழில்கள் 9,243 ஆகும். கையால் செய்யப்



படும் தீக்குச்சி, சோப்பு வகைகள், மருந்து கலவைப் பொருள்கள், வாசனைப் பொருள்கள் ''பிளாஸ்டிக்'' செய்முறைத் தொழில்கள், இரப்பர் செய்முறைத் தொழில்கள் வர்ணங்கள் மற்றும் வண்ணப் பொருள்கள், சாயப்பொருள்கள், சாய இடைநிலைப் பொருள்கள், கடல் சார்ந்த இரசாயனங்கள், தொழிலியல் இரசாயனப் பொருள்கள் முதலியன போன்ற இரசாயன மற்றும் அது சார்ந்த தொழில்களை மாநிலத்தில் சிறு தொழில் துறையில் அபிவிருத்தி யடையச் செய்ய மேலும் வாய்ப்பு உள்ளது.

மாநிலத்தின் சிறு தொழில் துறையில், கையால் தீப்பெட்டி செய்தலும், வான வெடிகள் தயாரிக்கும் தொழிலும் இரசாயனத் தொழில்களுள் மிக முக்கியமானவையாக விளங்குகின்றன. தீப்பெட்டி குடிசைத் தொழில்களுக்கு சுங்கவரிச் சலுகை உள்ளதால், குடிசைத் தொழில் துறையில், அதிலும் குறிப்பாக பின்தங்கிய மற்றும் கிராமப் பகுதிகளில் இத்தொழிலுக்கும் நல்ல வாய்ப்பு உள்ளது. வானவெடிகள் தயாரிக்கும் 80 தொழில் நிலையங்களில் பெரும்பாலானவை சிவகாசியிலேயே அமைந்துள்ளன. இவை ஆண்டொன்றுக்கு ரூ. 16 கோடி மதிப்புள்ள வானவெடிகளைத் தயாரிக்கின்றன. இவை உள்நாட்டுத் தேவையினை நிறைவு செய்வதோடு வெளிநாட்டுச் சந்தையிலும் விற்பனையாகின்றன. இது இத்தொழில் மேலும் வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பினைத் தோற்றுவித்துள்ளது. தீப்பெட்டி மற்றும் வானவெடித் தொழிலுக்குந் தேவைப்படும் ''பொட்டாசியம் டைகுரோமேட்'', சிவப்பு ''பாஸ்பரஸ்'', பசை, தீக்குச்சி, நீலக் காகிதம், ''பேரியம் நைட்ரேட்'', ''ஸ்ட்ரோன்சியம் நைட்ரேட்'' போன்ற இரசாயனப் பொருள்களைத் தயாரிப்பதற்குத் தகுந்த துணைத் தொழில்களை அமைப்பதற்கும் நல்ல வாய்ப்பு உள்ளது. இத்தகைய தொழில்களை அமைக்க முன் வருகின்றவர்களுக்கு இயக்குநகரத்தின் இரசாயனப் பிரிவானது ஊக்கமளித்து வருகிறது. மாநிலத்தில் பசை, சிவப்பு ''பாஸ்பரஸ்'', ''பேரியம் நைட்ரேட்'' மற்றும் ''ஸ்ட்ரோனிசியம் நைட்ரேட்'' தயாரிக்கும் தொழில் நிலையங்கள் தோன்றியுள்ளன. தீப்பெட்டி தொழில் நிலையங்களுக்கும் பெருமளவில் தேவைப்படுகின்ற மூலப்பொருள்களில் ஒன்றான திக்குச்சி மெழுகினை இந்த இரசாயனப் பிரிவு வழங்கி வருகிறது. தீப்பெட்டித் தொழில் துரிதமாக வளர்ச்சி யடைவதற்கும், அத்தொழிலுக்கு திக்குச்சி மெழுகு போதுமான அளவில் கிடைக்கச் செய்வதற்கும் அசாம் எண்ணெய் கம்பெனி மெழுகோடு, ஆண்டொன்றுக்கு 8,000 டன் பழுப்பு மெழுகு தயாரிக்கும் திறன் கொண்ட எட்டு பழுப்பு மெழுகு சுத்திகரிக்கும் நிலையங்களை மாநிலத்தில் அமைப்பதற்கு இத்துறை ஊக்குவித்துள்ளது. அபிவிருத்தி ஆணையாளர் (சிறு தொழில்கள்) அவர்களின் நெறிமுறைகளின்படி சுத்திகரிக்கப்படும் திறனளவு மேலும் ஊக்குவிக்கப்பட மாட்டாது.

சிறு, குடிசை மற்றும் சின்னஞ்சிறு தொழில்கள் துறைகளில் நல்ல தரமுடைய சலவைச் சோப்புகளைத் தயாரிக்கும் 400 தொழில் நிலையங்கள் தமிழ் நாட்டில் உள்ளன. சலவைச் சோப்புகளின் தேவை படிப்படியாக அதிகரித்து வருகிறது. கிராமப் பகுதிகளிலும், மக்கள் சலவைச் சோப்பினைப் பயன்படுத்தத் துவங்கிவிட்டனர். எனவே மாநிலத்தில் இத் தொழில் மேலும் வளர மிகவும் நல்ல வாய்ப்பு உள்ளது.

சிறு தொழில் வளர்ச்சி அடைவதற்குப் பெருமளவில் வாய்ப்பு பெற்றுள்ள மற்றுமொரு தொழில் மருந்து கலவைப் பொருள்களைத் தயாரிப்பதாகும். பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் துறையில்தான் அடிப்படை மருந்துப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆதலால் சிறு தொழில் துறையில், மருந்து கலவைப் பொருள்கள் தயாரிக்கப்படுவதை மேற்கொள்ளவேண்டும். மருந்து இடைநிலைப் பொருள்கள் தயாரிக்கும் தொழில் நிலையங்களை அமைப்பதற்கும் நல்ல வாய்ப்பு உள்ளது. சென்னைக்கருகில், திருப்போரூரில் மருந்து தொழில் மையம் ஒன்றினை அமைக்கும் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. சிறு தொழிலதிபர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோன்ற பொருள் உற்பத்தியில் ஈடுபடும் தொழில் முனைவர்களை இயக்குநரகம் ஊக்குவித்து வருகிறது.

‘‘பிளாஸ்டிக்’’ செய்முறைத் தொழில் 1950 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதிலும் 1960-லிருந்துதான் வளர்ச்சியடைந்து வருகிறது. மனித வாழ்க்கையில் ‘‘பிளாஸ்டிக்’’ பொருள்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. 1983–84-ல் மொத்தமாக 12·34 இலட்சம் டன் ‘‘பிளாஸ்டிக்’’ பொருள்கள் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ‘‘எல். டி. பி. இ.’’, ‘‘எச். டி. பி. இ.’’, ‘‘பாலிப்ரோப்பிலீன்’’, ‘‘பாலிஸ்டிரின்’’ ‘‘பிவிசி’’ போன்ற அடிப்படை ‘‘பிளாஸ்டிக்’’ மூலப் பொருள்களைப் பெருரகத் தொழில் துறையில்தான் தயாரிக்க முடியும். ஆனால் ‘‘பிளாஸ்டிக்’’ செய்முறைத் தொழில்களைச் சிறு தொழில் துறையில் நிறுவலாம். பரோடாவில் ‘‘இந்தியன் பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட்’’ நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளதால் சிறு தொழில்துறைக்கு ‘‘பிளாஸ்டிக்’’ மூலப் பொருள் கிடைப்பதிலுள்ள சிக்கல்கள் நீக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் 392 ‘‘பிளாஸ்டிக்’’ தொழில் நிலையங்கள் பெரும்பாலும் சிறு தொழில் துறையிலேயே உள்ளன. இந்த இயக்குநரகம், புதிய தொழில் முனைவர்களுக்கு அனைத்து வசதிகளையும் அளித்து ‘‘பிளாஸ்டிக்’’ செய்முறைத் தொழில்கள் அமைப்பதனை ஊக்குவித்து வருகிறது.



கடந்த முப்பதாண்டுகளில் வர்ணத் தொழில், வியக்கத்தக்க அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. 1950-லிருந்து வர்ணப் பொருள்களுக்கான தேவை உள்நாட்டுத் தயாரிப்போடு இறக்குமதி மூலமும் சமாளிக்கப்பட்டு வந்தது. தொழில் நடவடிக்கைகள் பெருகியதன் காரணமாக பலவிதமான வர்ணப் பொருள்களும், அதிக அளவில் தேவைப்பட்டன. வர்ணப் பொருள்களின் இறக்குமதியின் பேரில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் ஏற்கனவே உள்ள வர்ணத் தொழில் நிலையங்கள் வர்ணப் பொருள்களை அதிக அளவில் தயாரிப்பதற்கும், புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கும் நல்ல தூண்டுகோலாக இருந்தன. இத்தொழில் மூலம் பொருள்கள் செறிந்த ஒன்றாகும். அதாவது தயாரிக்கப்படும் பொருளின் மதிப்பில் 80 சதவிகிதத்திற்குமேல் மூலப் பொருள்களுக்கு செலவாகிறது. தற்பொழுது உள்நாட்டுத் தேவைகள் நிறைவு செய்யப்படுவதோடு பலவிதமான வர்ணப் பொருள்களை போதுமான அளவுக்கு பல்வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வர்ணப் பொருள் தொழிலுக்கு சிறு அளவு மூலதனமே தேவைப்படுவதால் அவற்றைச் சிறு தொழில் துறையிலேயே தயாரிக்க முடியும். தற்பொழுதுள்ள தொழில் நிலையங்கள் உள்நாட்டுத் தேவையினைய நிறைவேற்ற இயலாதபடி அடுத்த சில ஆண்டுகளில் வர்ணப் பொருள்கள் அதிகமாகத் தேவைப்படுமாதலால், புதிய வர்ணத் தொழில்கள் அமைப்பதற்குப் போதுமான வாய்ப்பு உள்ளது.

மாநிலத்தில் வனவியல் சார்ந்த தொழில்களில், முந்திரி பக்குவப்படுத்தும் தொழில் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. சிறு தொழில் துறையில், சுமார் 175 முந்திரி பக்குவப்படுத்தும் தொழில் நிலையங்கள் முக்கியமாக கன்னியாகுமரி மாவட்டத்திலும் தென்னாற்காடு மாவட்டத்தில் பண்ருட்டியிலும் அமைந்துள்ளன. முந்திரிக் கொட்டைகள் போதுமான அளவில் கிடைக்காமையே தமிழ்நாட்டில் முந்திரி பக்குவபடுத்தும் தொழிலின் வளர்ச்சியைப் பாதித்துள்ளது. உள்நாட்டில் கிடைக்கக்கூடிய முந்திரிப் பருப்பு தேவைக்கு மிகவும் குறைவாக உள்ளது. எனவே, இத் தொழிற்சாலைகள் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட முந்திரிப் பருப்பினையே நம்பி உள்ளன. ஆதலால், நாட்டில் முந்திரி பயிரிடுவதை அதிகப்படுத்த வேண்டுமென்பது அவசியமாகிறது. தமிழ்நாட்டில் முந்திரி பயிரிடுவதற்கு தட்பவெப்ப நிலை மிகவும் சாதகமாக உள்ளது. முந்திரி பயிரிடுவதற்குரிய நிலப்பரப்பினை அதிகப்படுத்துவதற்கும், விளைச்சலை அதிகப்படுத்துவதற்கும் உரிய விவரமான திட்டமொன்று மாநிலத் தோட்டக்கலைத்துறையின் பரிசீலனையில் இருக்கிறது.

‘‘பிளாஸ்டிக்’’கைப் போலவே சமீப காலமாக இரப்பர் கலந்த பொருள்களும் அதிகமாகத் தேவைப்படுகின்றன. தானியங்கி வண்டிகள் மற்றும் கனரக வண்டிகளுக்குரிய

“ டயர்கள் ” தவிர எஞ்சிய அனைத்து இரப்பர் பொருள்களையும் சிறு தொழில் துறையில் தயாரிக்க முடியும். இங்கும் இயற்கை இரப்பரின் பற்றாக்குறையை இத்தொழிலின் வளர்ச்சியைப் பாதிக்கிறது. இந்திய அரசு கணிசமான அளவில் இயற்கை இரப்பரை இறக்குமதி செய்கிறது. 1979 ஆம் ஆண்டில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 1,43,406 டன்களோடு 32,000 டன் இரப்பர் இறக்குமதி செய்யப்பட்டது. மேலும் சாத்தியக்கூறுகள் அதிக அளவில் இயற்கை இரப்பரை இறக்குமதி செய்ய இருப்பதால் மாநிலத்தில் இரப்பர் பக்குவப்படுத்தும் தொழில்களை அதிக அளவில் அமைக்க வாய்ப்புள்ளது.

**இரசாயனப் பிரிவின் நடவடிக்கைகள் :**

இரசாயனப் பிரிவின் நடவடிக்கை பற்றிய விவரங்கள் கடந்த ஆண்டு கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டுள்ளன. 1979–80-ல் 4,402 தொழில் நிலையங்களுக்கு சோதனை வசதிகள் அளிக்கப்பட்டன. 1980–81-ல் (31–12–1980 வரை) 3,511 தொழில்களுக்கு சோதனை மற்றும் தொழில் நுட்ப உதவி அளிக்கப்பட்டுள்ளது.

இயக்குநரகத்தின் இரசாயனப் பிரிவு, தொழில் வணிகத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள சிறு தொழில் நிலையங்களுக்கு “ பாரபின் ” மெழுகு, தீக்குச்சி மெழுகு, இறைச்சிக் கொழுப்பு, உயர்வேக “ டீசல் ”, எண்ணெய் போன்ற மூலப் பொருள்களைப் பெறுவதில் உதவியளிக்கிறது. 1979–80 மற்றும் 1980–81 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட கிடைப்பதற்கரியதாயுள்ள மூலப் பொருள்களின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | 1979–80 | 1980–81 (31–12–1980 வரை). |
|---|---|---|
| | மெட்ரிக் டன். | மெட்ரிக் டன். |
| “ பாராபின் மெழுகு ” .. | 3,498 | 4,103 |
| தீக்குச்சி மெழுகு .. .. | 3,815 | 2,695 |
| இறைச்சிக் கொழுப்பு .. | 160 | 573·5 |
| | 1980–81 ஆம் ஆண்டில் அளவு. | உரிமங்களின் எண்ணிக்கை (31–12–80 வரை) |
| “ டீசல் எண்ணெய் ” .. .. | கிலோ லிட்டர் 19,988 | 265 |



மேற்கண்டவை தவிர இத்துறையில் பதிவு பெற்றுள்ள சிறு தொழில்கள் “சோடா ஆஷ்”, சோடா உப்பு, சுடாம் முதலிய பொருள்களைப் பெறக்கூடிய வகையில் இரசாயனப்பிரிவு சிறு தொழில்களின் தேவைக் கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குப் பரிந்துரை செய்கிறது.

தொழிற்சாலைகளின் உபயோகத்திற்காக உலைக்கள எண்ணெய், “இன்டேன் வாயு” ஆகியவற்றை வழங்குவதற்கும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பரிந்துரை செய்கிறது. தொழிற்சாலைகளின் உபயோகத்திற்காக வீரியமற்ற சாராய உரிமம் வழங்குவதற்கும் பரிந்துரை செய்கிறது. பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிக்கும் சிறு தொழில் நிலையங்கள், உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களையும், இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களையும் ஒதுக்கீட்டின் மூலம் பெறுவதற்கு வழிவகுக்கும் வகையில், இப்பிரிவு அவற்றின் உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது.

இவ்வாறு உதவியளிக்கப்பட்ட சிறு தொழில் நிலையங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | 1979–80-ல் | 1980–81-ல் (31–12–80 வரை). |
|---|---|---|
| 1. வீரியமற்ற சாராயம் .. | 23 | 13 |
| 2. உற்பத்தித் திட்டம் ஒப்புதளித்தல் .. | 42 | 27 |
| 3. உலைக்கள எண்ணெய் .. | 44 | 70 |

**இரசாயனத் தொழில் தகவல் களஞ்சியம் —**

இத்தகவல் களஞ்சியத்தின் நடவடிக்கைகள் பற்றி கடந்த ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இந்த ஆண்டின் நடவடிக்கைகளின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு :—

1. 1,421 இரசாயன பொருள்களைப் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு, எளிதில் உபயோகப்படுத்தக் கூடிய வகையில் வைக்கப்பட்டுள்ளது.

2. இரசாயனப் பொருள்களைப் பற்றி சேகரிக்கப்பட்ட விவரங்கள் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

3. மாநிலத்திலுள்ள 275 சிறு இரசாயனத் தொழில்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு பேணப்படுகின்றன.

4. 10 தொழில் திட்டத் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டன மேலும் 10 திட்டத் தொகுப்புகள் தயாரிக்கப்படுகின்றன.

5. 5 திட்டத் தொகுப்புகள் சமீபத்திய தகவல்களின் அடிப்படையில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

6. தொழில் முனைவர்களுக்கும், இதர அரசு நிறுவனங்களுக்கும் 63 திட்டத் தொகுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

7. 413 தொழில் நுட்ப விசாரணைகளுக்கு ஆலோசனைகள் அளிக்கப்பட்டுள்ளன.

8. தொழில் முனைவர்களுக்கு அளிக்கப்பட்ட தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் திட்டத் தொகுப்புகள் மீது தொடர் நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. அளிக்கப்பட்ட தகவல்கள் பயனுள்ளவையாயிருந்தன என்று 49 தொழில் முனைவர்களிடமிருந்து பாராட்டுக் கடிதங்களும் பெறப்பட்டுள்ளன. தொழில்களை அமைப்பதற்கு அவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றியும் இத்துறைக்கு அவர்கள் தெரிவித்துள்ளனர். மேலே கூறப்பட்டுள்ள பணிகளைத் தொடர்ந்து செய்து வருவதோடு பல்வேறு மாவட்டங்களில் அபிவிருத்தியடைவதற்கு வாய்ப்புள்ள ரசாயன மற்றும் அதன் சார்பு தொழில்கள் எவையென்று கண்டறிவதிலும், இத்தகவல் களஞ்சியம் தற்பொழுது ஈடுபட்டுள்ளது. சில குறிப்பிட்ட இரசாயனம் மற்றும் அதன் சார்புப் பொருள்கள் பற்றிய தகவல்களை நிலத்தின் பெருரக மற்றும் சிறு தொழில் துறையிலுள்ள இரசாயனத் தொழில் நிலையங்களிடமிருந்து சேகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## மின் மற்றும் மின்னணுப்பிரிவு.

### மின்னணுத் தொழில் —

தொழில் வணிக இயக்குநரகம் மேற்கொண்ட மேம்பாட்டுப் பணியின் காரணமாக மிக நுட்பம் வாய்ந்த மின்னணுத் தொழில் துறையில் போற்றத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. பெருரகத் தொழில் துறையில் போதுமான முதலீடு இன்மையால், கடந்த ஆண்டுகளைப் போலவே இத் தொழிலின் முதலீட்டில் பெரும் பகுதி சிறு தொழில் துறையிலேயே அமைய வேண்டியதாயிற்று. தனியார் துறையில், குறிப்பாக சிறு தொழில் துறையில், மிக நுட்பமான மின்னணுப் பொருள்களைத் தயாரிப்பதற்கு ஊக்கமளிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன், இந்திய அரசு 48 மிக நுட்பமான மின்னணுப்பொருள்களை நிர்ணயித்து, அவற்றின் உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் பொறுப்பினைத் தொழில் வணிகத் துறையிடம் ஒப்படைத்துள்ளது. இயக்குநரகம் தீவிரமாக மேற்கொண்ட மேம்பாட்டுப் பணியின் காரணமாக



மின்னணுச் சுவர் கடிகாரங்கள், மின் நுண்ணிழை சம்பந்தப்பட்ட பொருள்கள், ஒலிப்பதிவுகருவிகள், " ஆசிலோஸ்கோப்புகள் " தொலைக் காட்சி வாங்கிகள் போன்ற மிக நுட்பமான உயர் ரகப் பொருள்களைச் சிறு தொழில் துறையில் தயாரிப்பதற்குரிய 43 புதிய மின்னணுத் தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மாநிலத்தில ஆண்டொன்றுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கும் திறனளவானது 20,000-த்திலிருந்து 45,000 ஆக உயர்ந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. 1980—81 ஆம் ஆண்டில் சிறு தொழில் துறையில் தொலைக் காட்சிப் பெட்டிகளைத் தயாரிக்கும் புதிய 17 தொழில் நிலையங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 3 தொழில் நிலையங்கள் ஏற்கனவே உற்பத்தியைத் துவங்கிவிட்டன. மாநிலத்தின் தனியார் துறையில் மின்னணுத் தொழில் வேரூன்றிவிட்டது என்பதை மிக நுட்பமான மின்னணுப் பொருள்கள் மற்றும் சிறப்பு மின்கலங்கள் தயாரிக்கும் மூன்று பெரிய தொழில் நிலையங்கள் இந்த ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளதிலிருந்து கண்கூடாகக் காணலாம். இரயில்துறை, பாதுகாப்பு, தபால் தந்தி, போக்குவரத்து, கல்வி மற்றும் மருத்துவத்துறைகளின் தேவையினை நிறைவேற்றுவதற்குரிய வகையில் இம்மாநிலத்திலுள்ள தொழில்களுக்கு விற்பனை உதவியளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சிறு ரக மின்னணுத் தொழில் துறையில் 1970—71 இல் ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள பொருள்களே தயாரிக்கப்பட்டன. இது படிப்படியாக உயர்ந்து, தற்பொழுது ரூ. 21 கோடியாக உயர்ந்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் இத்தொழிலில் வேலை வாய்ப்பும் குறிப்பிடத் தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது. நாட்டின் மொத்த உற்பத்தியில் தமிழ் நாட்டின் பங்கு தற்பொழுது 8 சதவீதமாக உள்ளது. (மூலதன முதலீட்டின் அடிப்படையில்) அடுத்த சில ஆண்டுகளில் பெருரக மற்றும் சிறு தொழில் துறைகளில் புதிய பல மின்னணுத் தொழில்கள் தோன்றக் கூடிய நிலை உருவாகியுள்ளதால் தமிழ்நாட்டின் பங்கு இன்னும் அதிகரிக்கும்

### மின்சாரத் தொழில்—

தமிழ்நாட்டில் மின்சாரத் தொழில், பெருரகத்துறையிலும், சிறு தொழில் துறையிலும் நன்றாக அபிவிருத்தி அடைந்துள்ளது. நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முதலில் மின் அழுத்த மாற்றிகள் தயாரிக்கப்பட்டன. மின் அழுத்த மாற்றிகள் பெருரகத் துறையில் தயாரிப்பதில் நான்கு தொழில் நிலையங்களும், " ஸ்விட்ச் கியர் " தயாரிப்பதில் இரண்டு நிலையங்களும், மின்னல் தாங்கிகள் தயாரிப்பதில் ஒரு நிலையமும், " புரொடெக்சன் ரிலேய்ஸ் " மற்றும் கட்டுப்பாட்டுக் கருவிகள் தயாரிப்பதில் ஒரு நிலையமும், தானியங்கி மின்சாரப் பொருள்கள்

தயாரிப்பதில் இரண்டு நிலையங்களும், மின்சார மோட்டார்கள் மற்றும் '' ஜெனரேட்டர்கள் '', '' லிப்டுகள் '' மற்றும் சுழல் சாதனங்கள் தயாரிப்பதில் எட்டு நிலையங்களும், அமைந்துள்ளன. இவை 30,000-க்கும் அதிகமான பேருக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளன.

சிறு ரக மின் தொழிற்சாலைகள் 325-க்கும் அதிகமாக உள்ளன. ஆண்டொன்றுக்கு ரூ. 1,900 இலட்சத்திற்கும் அதிக மதிப்புள்ள பொருள்களை தயாரிக்கும் இத்தொழிற்சாலைகளில் 12,000 பேர் பணி புரிகின்றனர். இவர்களில் 4,000 பேர் மகளிர். இவற்றுள் ஏறக்குறைய 40 சதவீதத் தொழிற்சாலைகள் சிறு நகர்ப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் அமைந்துள்ளன. மின்சாரப் பொருள்களின் தயாரிப்பினை ஊக்குவிப்பதற்காகத் தனித் தொழிற்பேட்டைகளை ஏற்படுத்துவது, ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையங்களை நிறுவுவது, தொழில் முனைவர்களுக்கு இதர உதவிகளை அளிப்பது போன்ற தேவையான அடிப்படை வசதிகளை அமைப்பதில் அரசு மேற்கொண்டுள்ள தனிப்பட்ட முயற்சிகளின் காரணமாக, அடுத்த மூன்றாண்டுகளில் குறைந்தது 15,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பரிசோதனை, பொருள் அபிவிருத்தி ஆகியவற்றில் தேவையான உதவி அளிப்பதில், காக்களூரில் உள்ள மத்திய மின்சாரப் பொருள் பரிசோதனை ஆய்வுக்கூடமும், அடையாற்றிலுள்ள மின்னணு ஆய்வு அபிவிருத்தி நிலையமும் சிறப்புப் பணியாற்றி வருகின்றன. தரம் வாய்ந்த மின்சாரப் பொருள்களின் உற்பத்தியினை வலியுறுத்தும் 1976 ஆம் வருடத்திய வீட்டு வசதி மின்சாரச் சாதனங்கள் (தரக்கட்டுப்பாட்டு) ஆணை தீவிரமாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது. தரமுள்ள பொருள்களையே தயாரிக்க வேண்டும், தரமுள்ள பொருள்களையே விற்பனை செய்ய வேண்டும் என்ற நிலையை உருவாக்க தயாரிப்பாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

பொறியியல் பிரிவு—

இவ்வியக்குநரகத்தின் பொறியியல் பிரிவு கீழ்க்கண்ட பணிகளைச் செய்துவருகிறது—

1. மூலப்பொருள்கள் பெறுவதற்காக தொழில்களுக்கு அத்தியாவசியச் சான்றிதழ்கள் வழங்குதல்;

2. மூலப்பொருள்கள்—துணை உரிமத்திற்குரிய அத்தியாவசியச் சான்றிதழ்கள் வழங்குவது.

3. '' புரட்டோ டைப் '' ஆய்வுக்கூட சாதனங்கள் முதலியன உட்பட இயந்திரச் சாதனங்களைப் பெறுவதற்குரிய அத்தியாவசியச் சான்றிதழ்கள் வழங்குவது.



4. அனுமதிச் சான்றிதழ்கள் வழங்குவது;

5. உபயோகச் சான்றிதழ்/இறுதிப் பயன்பாட்டுச் சான்றிதழ்கள்/நுகர்வுச் சான்றிதழ் வழங்குவது;

6. இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் மூலப்பொருள்கள்/இயந்திரச் சாதனங்கள் போன்றவற்றைச் சரியாகப் பயன்படுத்தப்பட்டனவா என்று ஆய்வு செய்வது;

7. தொழில் நுட்ப அபிவிருத்தி தலைமை இயக்குநர் மற்றும் பஞ்சாலைத் தொழில் ஆணையாளர் அவர்களின் மூலமாகப் பெறுவதற்குரிய பெருரகத் தொழில் உரிமங்களுக்காகப் பரிந்துரை செய்வது ; மற்றும்.

8. வேறு எந்தத் துறையாலும் பரிந்துரை செய்யப்படாத அச்சுத் தொழில், புகைப்படத் தொழில், போக்குவரத்து, மோட்டார் முதலிய தொழில்களுக்குரிய இறக்குமதி விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்வது. துணை உரிமம் வழங்கும் குழுவிற்கு உதவியளிப்பதற்கு சென்னை-1லுள்ள ஏற்றுமதி இறக்குமதி தலைமைக் கட்டுப்பாட்டு அலுவலருடன் இப்பிரிவு இணைந்து செயல்படுகிறது. இறக்குமதி விண்ணப்பங்களுக்கு உரிமங்கள் வழங்குவதற்கு மண்டல மூலதனப் பொருள்கள் குழுவினது கூட்டங்களில் கலந்து கொண்டு உதவியளிக்கிறது. உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்கள் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருள்களைத் தருவித்து விநியோகிப்பதற்கென்று அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மூலம் தொழில்களுக்கு கிடைக்க வழி வகுக்கிறது. தேனிரும்பு உள்ளிட்ட இரும்பு மற்றும் எஃகு கம்பிச் சுருள்கள், இரும்புப் பாளங்கள், வர்த்தகத் தரமுடைய அலுமனியம். செம்பு, துத்தநாகம். 'ஈ. சி.' தரமுடைய அலுமினியம், துருப்பிடிக்காத எஃகு, நிலக்கரி மற்றும் கல்கரி போன்ற மூலப்பொருள்கள் இவற்றில் அடங்கும்.

சில அத்தியாவசிய மூலப்பொருள்கள், அனைத்திந்திய அளவிற் பற்றாக்குறையாக உள்ளதால், தொடர்ந்தாற்போல் தேவையை விட குறைந்த அளவிலேயே கிடைத்து வருகின்றன. இந்திய அரசிடமிருந்து அதிகமான ஒதுக்கீட்டினைப் பெறுவதற்கு இத்துறை தொடர்ந்து முயற்சி எடுத்து வருகிறது.

இருமபு மற்றும் எஃகினைப் பொறுத்தவரை, 1978–79 முதல் 1980–81 வரை ஒதுக்கீடானது ஆண்டுக்காண்டு கீழ்க்கண்டவாறு அதிகரித்து வந்துள்ளது:—

| வருடம். | | ஒதுக்கீடு. |
|---|---|---|
| 1978–79 | .. | 12,330 மெட்ரிக் டன்கள். |
| 1979–80 | .. | 26,000 மெட்ரிக் டன்கள். |
| 1980–81 | .. | 29,035 மெட்ரிக் டன்கள். |

க்கரி மற்றும் கல்கரி—

ல்கரி—

மாதமொன்றுக்கு ஒதுக்கீட்டு அளவு 2 ''ரேக்கு''களாகும் [50 சரக்குப் பெட்டி ''பி.பி. (B. P.) மற்றும் 50 சரக்குப் பெட்டி ''பி.எச். (B. H.) கடின கல்கரி] தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை மொத்தம் 5 ''ரேக்குகள்'' மட்டுமே பெற்றுள்ளது. சரக்குப் பெட்டிகளின் தீவிர பற்றாக்குறையின் காரணமாக தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் கல்கரியை சாலைப் போக்குவரத்து மூலம் எடுத்து வருகிறது.

நிலக்கரி :

மாதமொன்றுக்கு 2,000 சரக்குப் பெட்டி நிலக்கரி மாநிலத்திற்குத் தேவைப்படுகிறது. ஆனால் இந்த மாநிலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு மாதமொன்றுக்கு 500 சரக்குப் பெட்டி நிலக்கரியேயாகும். 31–12–1980 வரை நிலக்கரி பெறப்பட்டது பற்றிய நிலவரம் பின் வருமாறு :—

| | 31–12–1980 வரை ஒதுக்கீடு. சரக்குப் பெட்டிகள். | 31–12–1980 வரை பெற்றிருப்பது சரக்குப் பெட்டிகள். |
|---|---|---|
| 1. நேரடி உபயோகிப்பாளர்கள் வகை. | 3,600 | 958½ |
| 2. கிடங்கு வகை .. .. | 2,400 | 589 |

இம்மாநிலத்திற்கு, சரக்குப் பெட்டிகளை அதிக அளவில் ஒதுக்குவதற்கென இயக்குநரகமும், அரசும் அனைத்து முயற்சிகளையும் எடுத்துள்ளன.

பொருள் உற்பத்தி பாதிக்கப்படாத முறையிலும், தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்கக் கூடிய வகையிலும் தேவையான மூலப் பொருள்கள் தொழில்களுக்குக் கிடைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மாநிலத் தொழில் துறையும், மாநில அரசும் எடுத்து வருகின்றன. ஏட்டளவில் உள்ள போலியான தொழில் நிலையங்களைக் களைவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, கிடைக்கின்ற மூலப் பொருள்களைத் தேவைக்கேற்ப பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



புவியியல் பிரிவு :

திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்டங்களில் பளையம்—மயிலம்பட்டி—கீரனூர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ''சிமெண்ட் தரமுடைய சுண்ணாம்புக்கல் படிவங்கள்'' பற்றிய விரிவான ஆய்வானது, 30 மில்லியன் மெட்ரிக் டன்களுக்கு மேல் ''சிமெண்ட் தரமுடைய சுண்ணாம்புக்கல்'' படிந்துள்ளதை வெளிப்படுத்தியுள்ளது. ஆண்டொன்றுக்கு 4,00,000 டன்கள் உற்பத்தித் திறனளவு கொண்ட பெருரக சிமெண்ட் தொழிற்சாலைகளுக்குத் தேவையான சுண்ணாம்புக் கல்லை இங்கிருந்து பெறமுடியும். படிமத்தின் தரம், தொழிலுக்குப் பயன்படுத்தக்கூடிய தகுதி பற்றிய விரிவான அறிக்கை ஒன்று தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாலா வட்டத்திலுள்ள தடிகாரகோணம் பகுதியில் ஆபரண மணிக்கற்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம், ''கிரை சோபெரில்'' என்ற வைடூரியக் கற்கள் படிந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. முன் ஆய்வுகளின் முடிவுகள் ஊக்கமளிக்கும் வகையில் இருந்தபடியால், மணிக்கற்களைப் பற்றி விரிவான ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி வட்டத்திலுள்ள கூடங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அடுக்குப்பாறை வகை சுண்ணாம்புக்கல் படிமம் பற்றிய விரிவான ஆய்வின் மூலம், 6 முதல் 7 மில்லியன் டன்கள் ''அடுக்குப் பாறை வகை சுண்ணாம்புக்கல்'' கிடைப்பதாகத் தெரிய வருகிறது. இதனைக் கொண்டு இப்பகுதியில் ஒரு சிறு சிமெண்ட் தொழிற்சாலையை அமைக்க முடியும்.

நீலகிரி மாவட்டத்தின் பல பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்பட்டதற்கான காரணங்களை இந்த ஆண்டு இந்திய புவியியல் ஆய்வகத்துடன் இந்த புவியியல் பிரிவும் இணைந்து ஆய்வு செய்தது. முதல் கட்டத்தில் நிலச் சரிவுகள் ஏற்பட்ட இடங்கள் கண்டறியப்பட்டு, அவை ஏற்பட்டதற்குரிய நிலவியல் மற்றும் அது சார்ந்த தன்மைகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளன. முதல் கட்ட ஆய்வின் முடிவுகள் கொண்ட பயனுள்ள அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி இம் மாவட்டத்தில் மேலும் நிலச் சரிவுச் சேதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, இம்மாவட்டத்தில் புதிய திட்டங்கள் எவற்றையும் அமைப்பதற்கு முன்னர் இத்துறையின் புவியியல் பிரிவோடு கலந்தாலோசிக்க வேண்டுமென அனைத்து துறைத் தலைவர்களுக்கும் அரசு அறிவுறுத்தியுள்ளது. நிலச் சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமான

மூலம் புகைப்படம் எடுத்து, ஆய்வு நடத்த தேசிய தொலை தூர உணர்வு ஆய்வு கழகத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இது சம்பந்தமாக மாவட்டத்தின் ஒரு பகுதியில் புகைப் படங்கள் எடுக்கப்பட்டுவிட்டன. நிலச் சரிவால் பாதிக்கப் பட்ட பகுதிகளில் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது, பாதிக்கப்படாத பகுதிகளில் எவ்வகையில் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது என்பவை பற்றி ஆலோசனை கூறுவதற்கு விரிவான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பிரிவின் இரசாயன மற்றும் உலோகவியல் ஆய்வுக் கூடங்கள், அவற்றின் நவீன மற்றும் நுண்ணிய சாதனங்களைக் கொண்டு, மாதிரி கனிப் பொருள்களைப் பற்றிய எண்ணற்ற பகுப்பாய்வுகளை மேற்கொண்டது. கள ஆய்வின் மூலம் கிடைக்கப் பெற்ற கனிமப் பொருள்களின் தன்மை, கிடைக்கும் அளவு பற்றிய உறுதியான விவரங்களைப் பெறுவதில் இவை பேருதவியாய் அமைந்துள்ளன.

சிமெண்டிற்குப் பதிலாக சுண்ணாம்புச் சாந்து தயாரிப் பதற்கு, தரம் குறைந்த சுண்ணாம்புக்கல்லை உபயோகப் படுத்துவது பற்றிய ஆராய்ச்சியில் மாநிலப் புவியியல் பிரி வினது ஆய்வுக் கூடங்கள் ஈடுபட்டுள்ளன.

**கனிமப் பொருள் நிர்வாகம் :**

கனிமப் பொருள்களைச் சட்டத்திற்குப் புறம்பாக வெட்டி எடுத்துச் செல்லுதல், கனிமப் படிவங்களை தவறுதலாக வகைப் படுத்துவதால் அரசுக்கு ஏற்படுகின்ற உரிமைத் தொகை இழப்பு மற்றும் கனிமப் படிவங்களின் தரத்தை வேண்டுமென்றே குறைவாக மதிப்பிடுவது ஆகிய தகாத செயல்களை மாவட்டங் களில் அமைத்துள்ள ஏழு மண்டல சுரங்க நிலையங்கள் கட்டுப் படுத்தி உள்ளன. இதன் பயனாக 1978–79-ல் ரூ. 1.86 கோடியாக இருந்த மாநிலத்தின் கனிமப் பொருள் வருவாய், 1979–80-ல் ரூ. 3.59 கோடியாக உயர்ந்துள்ளது.



மாவட்ட தொழில் மையங்களின் முன்னேற்றம் பற்றிய அறிக்கை

ஏப்ரல்—டிசம்பர் 1980.

| | வழங்கப்பட்ட சிறு தொழில் சான்றிதழ்கள். நிரந்தர மானவை. | வழங்கப்பட்ட சிறு தொழில் சான்றிதழ்கள். தற்காலிக மானவை. | வேலை வாய்ப்பு. | உற்பத்தியைத் துவங்கிய கைவினைத் தொழில்கள் மற்றும் கைத்திறத் தொழில்கள். | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 செங்கற்பட்டு .. .. | 444 | 946 | 5,455 | 127 | 340 |
| 2 தர்மபுரி .. .. | 146 | 919 | 1,449 | 195 | 607 |
| 3 கன்னியாகுமரி .. .. | 84 | 313 | 4,115 | 229 | 229 |
| 4 புதுக்கோட்டை .. .. | 89 | 541 | 589 | 879 | 978 |
| 5 இராமநாதபுரம் .. .. | 737 | 850 | 6,483 | 171 | 363 |
| 6 சேலம் .. .. .. | 547 | 1,043 | 2,584 | 123 | 664 |
| 7 தென்னாற்காடு .. .. | 295 | 1,018 | 1,644 | 25 | 50 |
| 8 திருநெல்வேலி .. .. | 330 | 855 | 830 | 614 | 1,041 |
| 9 கோயம்புத்தூர் .. .. | 773 | 1,645 | 5,581 | 391 | 487 |
| 10 வட ஆற்காடு .. .. | 306 | 927 | 2,794 | 1,297 | 2,724 |
| 11 மதுரை .. .. .. | 345 | 1,011 | 2,877 | 457 | 496 |
| 12 பெரியார் .. .. .. | 271 | 895 | 654 | 24 | 72 |
| 13 தஞ்சாவூர் .. .. .. | 213 | 407 | 702 | 108 | 257 |
| 14 திருச்சிராப்பள்ளி .. .. | 187 | 823 | 4,550 | 600 | 1,123 |
| | 4,767 | 12,193 | 40,307 | 5,240 | 9,431 |

| | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|
| | மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக வங்கியுதவி. | | தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தேசிய சிறு தொழில் நிறுவனம், கதர் வாரியம், சிட்கோ போன்றவை மூலம் நிதியுதவி. | |
| | எண்ணிக்கை. | தொகை. (ரூ. இலட்சத்தில்.) | எண்ணிக்கை. | தொகை (ரூ. இலட்சத்தில்.) |
| 1 செங்கற்பட்டு .. .. | 214 | 46.52 | 153 | 62.53 |
| 2 தர்மபுரி .. .. .. | 29 | 36.07 | 2,574 | 148.13 |
| 3 கன்னியாகுமரி .. .. | 135 | 72.62 | 456 | 18.36 |
| 4 புதுக்கோட்டை .. .. | 174 | 10.69 | 237 | 5.33 |
| 5 இராமநாதபுரம் .. .. | 63 | 62.96 | 261 | 83.18 |
| 6 சேலம் .. .. .. | 125 | 63.68 | 147 | 86.84 |
| 7 தென்னாற்காடு .. .. | 430 | 30.01 | 3,467 | 90.38 |
| 8 திருநெல்வேலி .. .. | 289 | 42.29 | 549 | 10.29 |
| 9 கோயம்புத்தூர் .. .. | 190 | 123.87 | 675 | 42.67 |
| 10 வட ஆற்காடு .. .. | 11 | 14.48 | 248 | 129.70 |
| 11 மதுரை .. .. .. | 53 | 12.83 | 95 | 50.77 |
| 12 பெரியார் .. .. .. | 564 | 33.36 | 14 | 10.18 |
| 13 தஞ்சாவூர் .. .. | 53 | 4.86 | 60 | 11.48 |
| 14 திருச்சிராப்பள்ளி .. .. | 32 | 24.99 | 680 | 132.15 |
| | 2,362 | 579.23 | 9,616 | 881.99 |



1—4—1980 முதல் 31—12—1980 முடிய வங்கிகள் தவிர நிதி நிறுவனங்கள் அளித்த நிதியுதவி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமத் தொழில் திட்டம். | | தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம். | | தேசிய சிறு தொழில் நிறுவனம். | | தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம். | |
| | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை. | ரூபாய் இலட்சத்தில். | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை. | ரூபாய் இலட்சத்தில். | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை. | ரூபாய் இலட்சத்தில். | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை. | ரூபாய் இலட்சத்தில். |
| 1 செங்கல்பட்டு .. | 3 | 0.25 | 68 | 23.02 | 38 | 38.01 | 7 | 0.13 |
| 2 தர்மபுரி .. | 17 | 1.55 | 140 | 104.31 | 4 | 1.78 | .. | .. |
| 3 கன்னியாகுமரி | 8 | 0.75 | .. | .. | .. | .. | .. | .. |
| 4 புதுக்கோட்டை | 6 | 0.45 | .. | .. | .. | .. | .. | .. |
| 5 இராமநாதபுரம் | 1 | 0.07 | 28 | 27.44 | 1 | 0.08 | 59 | 21.15 |
| 6 சேலம் .. | 2 | 0.20 | 80 | 60.28 | 10 | 7.95 | .. | .. |
| 7 தென்னாற்காடு | 12 | 0.83 | 145 | 37.78 | 9 | 2.99 | .. | .. |
| 8 திருநெல்வேலி | 2 | 0.20 | 6 | 7.46 | .. | .. | .. | .. |
| 9 கோயமுத்தூர் .. | 1 | 0.08 | 43 | 21.40 | 12 | 4.29 | 1 | 0.50 |
| 10 மதுரை .. | 1 | 0.04 | 22 | 35.31 | .. | .. | .. | 14.21 |
| 11 வட ஆற்காடு | 7 | 0.48 | 152 | 86.72 | 4 | 0.30 | 62 | 41.92 |
| 12 பெரியார் .. | .. | .. | 11 | 10.15 | .. | .. | .. | .. |
| 13 தஞ்சாவூர் .. | 3 | 0.30 | 52 | 10.27 | 4 | 0.89 | 1 | 0.02 |
| 14 திருச்சிராப்பள்ளி | 24 | 2.30 | 367 | 127.00 | .. | .. | .. | .. |
| | 87 | 7.50 | 1.114 | 551.14 | 82 | 56.29 | 130 | 77.93 |

1—4—1980 முதல் 31—12—1980 முடிய வங்கிகள் தவிர நிதி நிறுவனங்கள் அளித்த நிதியுதவி—தொடர்ச்சி.

| | வங்கிகள் மூலமாக கைவினைஞர்களுக்கு உதவி. | | நேரடியாக வங்கி உதவி. | | பிறு வியவசாயிகள் வளர்ச்சி நிறுவனம். | |
|---|---|---|---|---|---|---|
| | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை. | ரூபாய் இலட்சத்தில். | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை. | ரூபாய் இலட்சத்தில். | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை. | ரூபாய் இலட்சத்தில். |
| | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 1 செங்கல்பட்டு .. | 37 | 1.12 | .. | .. | .. | .. |
| 2 தர்மபுரி .. | 826 | 20.03 | 274 | 17.48 | .. | .. |
| 3 கன்னியாகுமரி .. | 26 | 0 89 | 16 | 11.32 | .. | .. |
| 4 புதுக்கோட்டை.. | 82 | 0.66 | 149 | 4.22 | .. | .. |
| 5 இராமநாதபுரம் | 79 | 0.36 | 93 | 34 08 | .. | .. |
| 6 சேலம் .. | 38 | 0.53 | 17 | 17.88 | .. | .. |
| 7 தென்னாற்காடு.. | 502 | 5.92 | 128 | 16.76 | 2523 | 21.79 |
| 8 திருநெல்வேலி .. | 460 | 2.17 | .. | .. | 81 | 0.46 |
| 9 கோயமுத்தூர் .. | 9 | 0.11 | 16 | 3.70 | 478 | 4.29 |
| 10 மதுரை .. | 72 | 1.21 | .. | .. | .. | .. |
| 11 வட ஆற்காடு .. | .. | .. | .. | .. | .. | .. |
| 12 பெரியார் .. | 3 | 0.03 | .. | .. | .. | .. |
| 13 தஞ்சாவூர் .. | .. | .. | .. | .. | .. | .. |
| 14 திருச்சிராப்பள்ளி | 289 | 2.85 | .. | .. | .. | .. |
| | 24·23 | 35·88 | 693 | 105·44 | 3082 | 26·54 |



1—4—1980 முதல் 31—12—1980 முடிய வங்கிகள் தவிர நிதி நிறுவனங்கள் அளித்த நிதியுதவி—தொடர்ச்சி.

| | பட்டுத் தொழில் துறை. | | கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|
| | தொழில் களின் எண்ணிக்கை. | ரூபாய் லட்சத்தில் | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை. | ரூபாய் லட்சத்தில். | தொழில் களின். எண் ணிக்கை. | ரூபாய் லட்சத்தில். |
| (1) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) |
| 1 செங்கல்பட்டு .. | .. | .. | .. | .. | 153 | 62.53 |
| 2 தர்மபுரி .. | .. | .. | 1,313 | 2,98 | 2,574 | 148.13 |
| 3 கன்னியாகுமரி .. | .. | .. | 406 | 5,40 | 456 | 18·36 |
| 4 புதுக்கோட்டை.. | .. | .. | .. | .. | 237 | 5.33 |
| 5 இராமநாதபுரம் | .. | .. | .. | .. | 261 | 83.18 |
| 6 சேலம் .. | .. | .. | .. | .. | 147 | 86.84 |
| 7 தென் ஆற்காடு.. | .. | .. | 148 | 4·31 | 3,467 | 90.38 |
| 8 திருநெல்வேலி .. | .. | .. | .. | .. | 549 | 10.29 |
| 9 கோயமுத்தூர் .. | 39 | 6.23 | 76 | 2.07 | 675 | 42.67 |
| 10 மதுரை .. | .. | .. | .. | .. | 95 | 50.77 |
| 11 வட ஆற்காடு .. | .. | .. | 23 | 0·28 | 248 | 129·70 |
| 12 பெரியார் .. | .. | .. | .. | .. | 14 | 10·18 |
| 13 தஞ்சாவூர் .. | . | .. | .. | .. | 60 | 11·48 |
| 14 திருச்சிராப்பள்ளி | .. | .. | .. | .. | 680 | 132·15 |
| | 39 | 6·23 | 1,966 | 15·04 | 9,616 | 881·99 |

## தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம்.

மின்னணுவியல் தொடர்பான கூட்டுத் துறைத் திட்டங்களில் பங்கேற்பது உள்பட, மின்னணுத் தொழிலையும் அத்துடன் சார்ந்த பிற தொழில்களையும் மேம்படச் செய்து, வளர்ச்சியடையச் செய்வதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமாக, பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு தனியார் நிறுவனமாக தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் 1977 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 2 கோடியாகும்; செலுத்தப்பட்ட மூலதனமாக ரூ. 31.1 இலட்சத்தைத் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. இந்நிறுவனத்திற்கு வேண்டிய முக்கியமான பணியாளர்களை அமர்த்திக் கொண்ட பின்னர், இந்நிறுவனம் 1980 ஆம் ஆண்டிலிருந்து செயற்படத் தொடங்கியது.

2. பொதுத் துறையிலும் கூட்டுத் துறையிலும் நவீன மின்னணுவியல் தொழில்கள் சிலவற்றை ஏற்படுத்த இந்நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. வெவ்வேறு திட்டங்களை ஆராய்ந்து, அவற்றைத் தொடங்குவதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவதற்கான ஏற்புடைமை அறிக்கைகளைத் தயாரிக்கும் பணியையும் இது மேற்கொண்டுள்ளது. கீழே குறிப்பிட்டுள்ள ஐந்து தொழிற் திட்டங்கள் பற்றிய ஏற்புடைமை அறிக்கைகளை இந்நிறுவனம் டாட்டா பொருளாதார ஆலோசனைப் பணி நிலையத்திடமிருந்து பெற்றுள்ளது.

(1) மருத்துவ மின்னணுவியல்

(2) மின்னணு கணக்குப் பொறிகளுக்குரிய சிறு அச்சுக் கருவிகள்.

(3) கணக்கீட்டுப் பொறி முறைகளுக்குத் தேவைப்படும் நேரடிப் பதிவுக் கருவிகள்.

(4) கம்பியில்லாத் தந்திப் போக்குவரத்திற்கான கருவிகள்.

(5) உடல் நலச் சீர்குலைவை அளந்தறி கருவிகள்.

3. இந் நிறுவனம் பின்வரும் ஐந்து திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதிக் கடிதங்கள் பெற்றுள்ளது.

| | உற்பத்தியளவு/ எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு |
|---|---|
| 1. தொலைக் காட்சி ரிசீவர் .. .. .. | 10,000 |
| 2. மின்னணுக் கைக் கடிகாரங்கள் .. .. | இரண்டு இலட்சம். |
| 3. கணக்கீட்டுக் கைப்பொறிகள் .. .. | 50 |
| 4. மின் இணைப்பு முனைகள் .. .. | 2,000 |
| 5. எலக்ட்ராலிட்டிக் கப்பாசிட்டர்கள் .. | 50 மில்லியன் |



இந்நிறுவனம் கீழ்க்காணும் திட்டங்களுக்கும் அனுமதிக் கடிதம் வழங்கும்படி மத்திய அரசிடம் விண்ணப்பித்துள்ளது.

| | உற்பத்தியளவு/ எண்ணிக்கை. |
|---|---|
| 1. தொலைப் பேசிக் கருவிகள் .. .. | 2 இலட்சம் |
| 2. செய்தித் தொடர்பு கருவிகள் .. .. | 10,000 |
| 3. எக்ஸ்ரே சாதனங்கள் .. .. .. | 250 |
| 4. உலோக/கார்பன் பிலிம் ரெசிஸ்டர்கள் .. | 300 மில்லியன் |

ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்ட திட்டங்களை 1981—82-ல் நிறைவேற்றலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. இதற்கு முன்னோடியாக தொழில்-வணிகத் துறை இயக்குநர், சென்னை, திருவான்மியூரில் உள்ள மின்னணுவியல் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் தொழிற்பேட்டையில் 5 ஏக்கர் நிலத்தை ஏற்கனவே இந் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளார். தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் ஓசூரிலுள்ள தொழிற்பேட்டையில் 35 ஏக்கர் நிலத்தை இந் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

5. 1980—81 ஆம் ஆண்டில், மாநில அரசு, மத்திய அரசு முகவர் நிறுவனங்களான தமிழ்நாடு நீர் வழங்கல்-வடிகால் வாரியம், மின்னணு ராடார் வளர்ச்சி நிறுவனம், பெங்களூர், இரயில்வே, போக்குவரத்து நிறுவனங்கள் முதலியனவும் பிற முகவர் நிறுவனங்களும் வாங்குகின்ற சாதனங்களை ஒட்டி, சில துணைப் பாகங்களை வழங்கவும், அப் பாகங்களை இணைத்துப் பொருத்தி வடிவாக்கிக் கொடுக்கவும் தமிழ்நாடு மின்னணுவியல் தொழில் நிறுவனம் முற்பட்டுள்ளது. இச் சாதனங்களுக்கான முன் மாதிரிகளைத் தயாரிக்க சாதனத்தின் வடிவமைப்பை உருவாக்கிடத் தேவையான வடிவமைப்பு அபிவிருத்தி ஆராய்ச்சிப் பணியை திருவான்மியூரில் உள்ள மின்னணுக் கருவிகள்—சோதனை—தயாரித்தல் நிலையம் முதற்கண் மேற்கொள்ளும், பாகங்களை ஒருங்கு பொருத்திச் சாதனமாக உருவாக்கி அதனைச் சோதனையிடும் நிலையம் ஓசூரில் அமைக்கப்படும்.

6. கணக்கீட்டுக் கைப் பொறிகள் தயாரித்தல், மைக்ரோ புராசஸ் பேஸ்டு சிஸ்டம்ஸ், தொலைக் காட்சிச் சாதனங்கள் தயாரிப்பு (video equipment and Service, etc) முதலியவற்றை மேற்கொள்ள கூட்டுத் துறைத் திட்டங்களில் பங்கேற்கும்படி இந் நிறுவனம் அணுகப்பட்டுள்ளது. கூட்டுத் துறையில் மேற்கொள்ளவிருக்கும் சில திட்டங்கள் பற்றியும் இந் நிறுவனம் தொடக்க ஆய்வு நடத்தி வருகிறது.

7. மாநிலத்திலுள்ள மின்னணுத் தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பதற்கு உதவி புரிய வேண்டி, இந்நிறுவனத்தின்கீழ் விற்பனை அமைப்புப் பிரிவை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந் நிறுவனம் விற்பனை நடவடிக்கைகளை நேரடியாகவே மேற்கொள்ளும். இதனால் சிறு தொழிலதிபர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்கின்ற பிரச்சினைகள் இருக்காது. எனவே உற்பத்தியில் அவர்கள் நாட்டம் செலுத்த முடியும்.

8. இப்போது இருக்கிற திட்டங்களை 1981–82 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதனால், 400 பேருக்கு வேலை வாய்ப்பு அமையும்.

## தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்.
## (டான்சி.)

தொழில் வணிகத் துறையின் கீழிருந்த சிறு தொழிற்சாலைகளை ஏற்று வணிக முறையில் நடத்தும் பொருட்டு, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) 1965-ம் ஆண்டு அமைக்கப்பட்டது. 65 தொழிற்சாலைகள், ரூ. 9·89 இலட்சம் மதிப்புள்ள இருப்புக்களுடன் டான்சிக்கு 1965-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் தேதி முதல் மாற்றப்பட்டன. மேற்கூறிய தொகையில் ரூ. 4,00 இலட்சம் அரசால் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகவும் எஞ்சிய தொகை அரசிடமிருந்து பெறப்பட்ட கடனாகவும் கருதப்பட்டது.

தற்போதுள்ள சில தொழிற்சாலைகளை விரிவுபடுத்தும் திட்டம் உட்பட நிறுவனம் மேற்கொள்ளும் திட்டங்களுக்கான நிலையான மூலதன செலவை ஏற்கும் பொருட்டு தேவையான உதவியை பங்கு மூலதனம் அல்லது கடனாக அரசு இந் நிறுவனத்திற்கு அளித்து வருகிறது. 1980–81-ல் ரூ. 12·50 இலட்சம் பங்கு மூலதனமாகவும், ரூ. 12·50 இலட்சம் கடனாகவும் அரசு இந் நிறுவனத்திற்கு வழங்க உத்தேசித்துள்ளது. டான்சியின் பங்கு மூலதனம் மற்றும் கடன் வடிவம், 1980-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ல் உள்ளபடி கீழே தரப்பட்டுள்ளது:—

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | .. | 10·00 |
| 2. அளிக்கப்பட்ட பங்கு மூலதனம் | .. | 7·60 |
| 3. அரசிடமிருந்து வாங்கிய கடன் | .. | 8·90 |

2. சில மாற்றியமைக்கப்பட்ட ஒழுங்கு செயல்களுக்குப்பின் இந் நிறுவனத்தின்கீழ் தற்போது 55 உற்பத்தித் தொழிற்சாலைகள் உள்ளன. அவைகளைக் கீழ்க்குறிப்பிட்டவாறு தொகுதிகளாகப் பிரிக்கலாம்:—

1. இரும்பு வடிவமைப்பு/கட்டுமான தொழிற்சாலைகள்.
2. கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலைகள்.
3. பொறியியல் தொழிற்சாலைகள்.
4. இரும்புப் பொருட்கள் அமைப்பு/உற்பத்தித் தொழிற்சாலைகள்.
5. தச்சுத் தொழிற்சாலைகள்.
6. தோல் தொழிற்சாலைகள்.
7. பல்வகை மற்றும் சிறப்பு வகைத் தொழிற்சாலைகள்.

3. அரசிடமிருந்து டான்சிக்கு மாற்றப்பட்ட தொழிற் சாலைகளை வணிக முறையில் தனித்து இயங்கவல்ல தொழிற் சாலைகளாக மாற்றுவதற்காக, டான்சி நிர்வாகம் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. தனியார் துறையிடமிருந்து கிடைக்கும் குறிப்பிட்ட பணிகளுடன், அரசுத் துறைகள் மற்றும் இரயில்வே, மின்வாரியம், தபால் தந்தித் துறை, குடி நீர் மற்றும் வடிகால் வாரியம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் போன்ற அரசு நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் பணிகளையும் பெருவாரியான டான்சி நிறுவனத் தொழிற் சாலைகள் நிறைவேற்றி வருகின்றன.

பல்லாண்டுகளாக தொடர்ந்து டான்சியின் உற்பத்தி பெருக்கம் சீராக அதிகரித்து வருகிறது. 1965–66ஆம் ஆண்டில் ரூ. 389 இலட்சமாக இருந்த உற்பத்தியானது 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 1835 இலட்சமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக 1978–79, 1979–80 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி யின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கவையாகும். 1977–78-ல் ரூ. 1187 இலட்சம் மதிப்புள்ள உற்பத்தியிலிருந்து 1978–79-ல் ரூ. 1537 இலட்சமாகவும் 1979–80-ல் ரூ. 1835 இலட்சமாகவும் உயர்ந்துள்ளன. இந்த இரண்டு ஆண்டு களில் பெற்ற உற்பத்திப் பெருக்கம் மட்டும் 55 சதவீதம் ஆகும். இந்த விழுக்காடு இதுவரை அடைந்துள்ள டான்சி யின் உற்பத்தி வளர்ச்சியில் அதிகபட்சமாகும். 1979–80-ல் அடையப்பெற்ற ரூ. 1835 இலட்சம் உற்பத்தியானது டான் சியை நட்டமில்லாமல் இயங்கும் நிலைமையினை அடையச் செய்ததோடு மட்டுமில்லாமல், ரூ. 17·53 இலட்சம் அளவு சிறிய இலாபத்தையும் ஈட்டச் செய்துள்ளது. 1980–81-ல் இந்நிறுவனத்தின் உற்பத்தி மதிப்பு ரூ. 2,070 இலட்சம் அளவில் இருக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. 1981–82-ம் ஆண்டிற்கான உற்பத்தி இலக்கு ரூ. 2400 இலட்சம் ஆகும்.

4. சமீப ஆண்டுகளில் பல புதிய திட்டங்களை மேற் கொள்வதன் மூலம் டான்சி தனது நடவடிக்கைகளைப் பல திறப்படுத்திக் கொண்டுள்ளது. இந்தத் திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:—

(i) இயந்திரக் கருவிகள் தயாரிப்புத் திட்டம்.—இரும்பு அறுவை இயந்திரம் (Hacksaw Machine) பெஞ்சுத்துளைக் கருவி (Bench drill) தூண் துளைக்கருவி (Pillar drill) மற்றும் கனரகத் துளைக்கருவி (Gang drill) ஆகியவற்றைத் தயாரிக்க, மேற்கண்ட திட்டம், இராணிப்பேட்டை யில் தொடங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 385 இயந்திரங்க ளாகும். அவற்றின் மதிப்பு ரூ. 88 இலட்சமாகும். வேலைவாய்ப்பு எண்ணிக்கை 144 பேர்களாகும். டிசம்பர் 1977-ல் உற்பத்தியை ஆரம்பித்த இந்தத் தொழிற்சாலை இதுவரை 150 இரும்பு அறுவை இயந்திரங்களைச் செய்துள்ளது. வேலை



வாய்ப்பு 101 பேர்களுக்கு தரப்பட்டுள்ளது. ஏற்றுமதி செய்யும் நோக்குடன், 8 இரும்பு அறுவை இயந்திரங்களை தான்சானியாவுக்கும், மற்றொன்றை அல்ஜீரியாவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலும், செஷயில்ஸ் என்ற நாட்டிலிருந்து, இரண்டு ஹேக்சா இயந்திரங்களுக்குப் பணி ஆணை வந்துள்ளது.

(ii) கைக்கடிகார இணைப்புத் தொழிற்சாலை.—பெங்க ளூரிலுள்ள இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் நிறுவனம் தயாரித்து அளிக்கும் கைக்கடிகாரங்களின் உதிரி உறுப்புகளை இணைக்கும் தொழிற்சாலை உதகமண்டலத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 30 இலட்சமாகும். முதற்கட்டமாக ஓரளவு இணைக்கப்பட்ட உதிரி உறுப்புகளை இணைக்கும் பணி ஜனவரி 1978-ல் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாங்கட்டமாக, முழு இணைப்புப் பணியும் 1979 ஏப்ரலில் தொடங்கப்பட்டு நடை பெற்று வருகின்றது. 1979–80-ல் 4·29 இலட்சம் கைக் கடிகாரங்கள் இணைக்கப்பட்டுவிட்டன. வேலைவாய்ப்பு சுமார் 103 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்துஸ் தான் மெஷின் டூல்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ள இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களில் செயல்படும் இம்மாதிரி தொழிற்சாலைகள் யாவற்றையும் விட, உதகமண்ட லத்தில் உள்ள டான்சி கைக்கடிகார இணைப்புத்தொழிற் சாலை மட்டுமே மிக அதிகமான கைக்கடிகாரங்களை இணைக் கும் செயல் திறன் பெற்றுள்ளது எனப் பெயர் பெற்றுள்ளது. இதுபற்றி, இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் நிறுவனம் பாராட்டு தலையும் தெரிவித்துள்ளது.

இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் சில உதிரி உறுப்புகளைச்செய்யக்கூடிய வாய்ப்புகள் தற்போது டான்சி யின் கவனத்தில் உள்ளது. இதற்காக ரூ. 30 இலட்சம் ஆறா வது திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விரி வாக்கத் திட்டம் 1981–82 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கும் 3 ஆண்டுகளில் மேற்கொண்டு 50 பேர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும்.

(iii) சாராய (Spirit) சம்பந்தப்பட்ட பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலை.—சாராய (Spirit) சம்பந்தப் பட்ட பொருட்களைத் தயாரிப்பதற்கென, ரூ. 11·26 இலட்சம் செலவில் ஒரு தொழிற்சாலை அம்பத்தூரில் நிறுவப் பட்டுள்ளது. பிரெஞ்சு பாலிஷ், காஸ்கெட் ஷெல்லாக், படவார்னீஷ் போன்ற பொருட்களை இத் தொழிற்சாலை தற்பொழுது உற்பத்தி செய்கிறது. 1979–80 ஆம் ஆண்டில்

இத்தொழிற்சாலையின் உற்பத்தி ரூ. 23·52 இலட்சமாகும். இத் திட்டத்தின் மொத்த வேலைவாய்ப்புத் திறனான 50 பேர்களில், இதுவரை 29 பேர்களுக்கு வேலைவாய்ப்புத் தரப்பட்டுள்ளது. எஞ்சிய பேர்களுக்கு, இத் தொழிற்சாலை அதன் உச்சகட்ட உற்பத்தி நிலையினை அடையும்பொழுது வேலைவாய்ப்புத் தரப்படும்.

(iv) டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை—விண்ண மங்கலம் விரிவாக்கத் திட்டம்.—ரூ. 17·00 இலட்சம் செலவில், தானியங்கி தெளிப்பு இயந்திரம் (Auto spray), எளிதாக்கும் இயந்திரம் (Lightening Buffing Machine), உலர்த்தும் இயந்திரம் (Vaccum Drier) போன்ற கூடுதலான இயந்திரங்கள் இத் தொழிற்சாலையில் நிறுவப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்கள் பொருத்தப்பட்டதின் விளைவாக, இங்கு உற்பத்தி செய்யப்படும் தோலின் வேலை முற்றிய தரம் கணிசமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(v) டான்சி காப்பிட்டு மின்கம்பித் தொழிற்சாலை, கிண்டி—விரிவாக்கத் திட்டம்.—இத் தொழிற்சாலையின் மின் கம்பி முலாம் பூச்சுத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, செங்குத்து முலாம் பூச்சு இயந்திரம் (Vertical Enamelling plant) சமீபத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. சுமார். ரூ. 5·00 இலட்சம் விலை மதிப்புடைய இவ்வியந்திரம் தருவிக்கப்பட்டு தற்பொழுது நிறுவப்படுகின்றது.

(vi) ஆடைக்குரிய தோல் (Garment Leather) உற்பத்தித் திட்டம்.—மாதவரத்தில் நிறுவப்பட்டுள்ள இந்தத் தொழிற்சாலை அதற்கான வேலைப்பாடுகளில் முடிவுறும் நிலையில் உள்ளது. இத் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.23.12 இலட்சமாகும். தேவையான இயந்திரங்கள் தருவிக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. சோதனை உற்பத்தி சமீபத்தில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தின் மொத்த வேலைவாய்ப்புத் திறனான 50 பேர்களில், இதுவரை 10 பேர்கள் அமர்த்தப் பெற்றுள்ளனர். எஞ்சிய நபர்கள் இத் தொழிற்சாலை முறையான உற்பத்தியைத் தொடங்கும்பொழுது அமர்த்தப்படுவர்.

5. மேலே குறிப்பிடப்பட்ட கைக்கடிகார இணைப்புத் தொழிற்சாலை—விரிவாக்கும் திட்டம் தவிர கீழ்க்கண்ட புதிய திட்டங்களை ஆறாவது திட்டக்காலத்தில் நிறுவுவதற்காக இந்த நிறுவனத்திற்கு 1981–82-ல் பங்கு மூலதனமாக ரூ.25 இலட்சம் அரசு வழங்க உத்தேசித்துள்ளது.

(i) அம்பத்தூர் டான்சி கட்டுமானத் தொழிற்சாலையில் முலாம் பூசும் இயந்திரத்தை நிறுவும் திட்டம்.—முலாம் பூசிய கட்டுமானங்களைப் புனையும் தொழிற்சாலை தற்போது டான்சியில் ஒன்றே ஒன்றுதான் உள்ளது. இத்தொழிற்சாலையின் முலாம் பூசும் பெருமத்திறன் (Maximum capacity) ஆண்டுக்கு 6,000 டன்களாகும். அம்பத்தூரில் உள்ள டான்சி கட்டுமானத் தொழிற்சாலையில் முலாம் பூசும் பணிகளை ஏற்பதற்கான வசதிகளை ஏற்படுத்த இத் திட்டத்தை ஆறாவது திட்டக் காலத்தில் ரூ. 40 இலட்சம் செலவில் அமைப்பது என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1981–82ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டுகளில் இத் திட்டத்தினால் மொத்த வேலைவாய்ப்பு 60 பேர்களுக்குக் கிடைக்கும.



(ii) மூடிய 'மொகாசின்' காலணிகள் தயாரிக்கும் திட்டம்.—மொகாசின் ஆல் ஆன மூடிய காலணிகளை முக்கியமாக ஏற்றுமதிக்காக தயாரிக்கும் தொழிற்சாலையை ரூ. 5 இலட்சம் செலவில் பெரம்பூரில் ஏற்படுத்துவது என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தால் 1981–82 ஆம் ஆண்டில் மொத்தம் 10 பேர் வேலைவாய்ப்பு பெறுவர்.

(iii) கிண்டியில் சிறப்புக் கதவுகள் செய்யும் திட்டம்.—கிண்டியிலுள்ள டான்சி மரப்பொருள் தொழிற்சாலையில் சிறப்புக் கதவுகள் செய்யும் பணியினை ரூ. 10 இலட்சம் செலவில் மேற்கொள்வதென உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 1981–82 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு ஆண்டுகளில் 10 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

(iv) மாலிக் பசை தயாரிக்கும் திட்டம்.—அம்பத்தூரிலுள்ள வார்னிஷ் தொழிற்சாலையில் தேவைப்படும் மூலப்பொருளான மாலிக் பசை தற்போது வெளி மாநிலங்களிலிருந்து பெறப்படுகிறது. ரூ. 5 இலட்சம் செலவில் மாலிக் பசை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் 1981–82 ஆம் ஆண்டில் மொத்தம் 20 பேர் வேலைவாய்ப்பு பெறுவர்.

(v) இரண்டாவது தோல் பதனிடும் தொழிற்சாலை நிறுவுதல்.—விண்ணமங்கலத்திலுள்ள டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை தன்னுடைய முழு உற்பத்தித் திறனையும் ஏற்கனவே எட்டிவிட்டது. எனவே டான்சி மற்றுமோர் தோல் பதனிடும் தொழிற்சாலையை நிறுவ வாய்ப்பிருக்கிறது. ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள இத் திட்டம் 1982–83 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு காலத்தில் மொத்தம் 100 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்.

(vi) மூடிய காலணிகள் (Shoes) செய்யும் தொழிற்சாலை.—டான்சி ஏற்கனவே ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலையைப் பெற்றிருப்பதால் மூடிய காலணிகள் செய்யும் தொழிற்சாலை ஒன்றை டான்சியால் அமைக்க இயலும். முழுவதும் அயல்நாட்டு ஏற்றுமதிக்கான மூடிய காலணிகள் செய்யும்

தொழிற்சாலை ஒன்றை டான்சி அமைக்க உதவுவதில் அயல் நாட்டு நிறுவனங்கள் ஆர்வம் காட்டுவதாக அந்நிறுவனங்களு டன் நடத்திய பேச்சு வார்த்தைகளிலிருந்து தெரியவருகிறது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 60 இலட்சம் ஆகும். இத்திட்டம் 1982–83 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு காலத்தில் மொத்தம் 50 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்.

6. சுமார் 6,000 நபர்களுக்கு டான்சி நேரிடையாக வேலை வாய்ப்பினை அளித்து வருகிறது. புதியத் திட்டங்களின்கீழ் புதியதாக வேலைவாய்ப்புப் பெற்றுள்ள சுமார் 280 பேரும் இந்தப் புள்ளியில் அடங்கும். 1980–81-ல் டான்சி சுமார் 30 பேர் களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பினை அளிக்கும்.



இணைப்பு

டான்சி தொழிற் பிரிவு மற்றும் விற்பனை நிலையங்களின் பெயர்ப் பட்டியல்.

தொழில் பிரிவுகள்.

1. டான்சி கருவி அறைக்கூடம் மற்றும் பொறியியல் தொழிற் சாலை, திருச்சிராப்பள்ளி.
2. டான்சி தகடு அழுத்த இயந்திர தொழிற்சாலை, கிண்டி.
3. டான்சி கொல்லுலை , கிண்டி.
4. டான்சி அழுத்த அச்சு வார்ப்படத் தொழிற்சாலை, கிண்டி.
5. டான்சி கருவி அறைக்கூடம், கிண்டி.
6. டான்சி இயந்திரக் கருவி தொழிற்சாலை (தொழிற் பேட்டை), அம்பத்தூர்.
7. டான்சி வார்ப்படத் தொழிற்சாலை, கிண்டி.
8. டான்சி வார்ப்படத் தொழிற்சாலை, காட்பாடி.
9. டான்சி வார்ப்பட மற்றும் கனரக இயந்திரத் தொழிற் சாலை, ஈரோடு.
10. டான்சி வார்ப்பட மற்றும் பொறியியல் தொழிற்சாலை, தஞ்சாவூர்.
11. டான்சி வார்ப்பட மற்றும் பொறியியல் தொழிற்சாலை, பேட்டை.
12. டான்சி இயந்திரக் கருவி தொழிற்சாலை, ராணிப் பேட்டை.
13. டான்சி கருவி அறைக்கூடம் மற்றும் கொல்லுலை, கோயம்புத்தூர்.
14. டான்சி கட்டுமான மற்றும் முலாம் பூசும் தொழிற்சாலை, மேட்டூர் அணை.
15. டான்சி கட்டுமானத் தொழிற்சாலை, அம்பத்தூர்.
16. டான்சி கட்டுமானத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.
17. டான்சி பொறியியல் தொழிற்சாலை, நாமக்கல்.
18. டான்சி பொறியியல் தொழிற்சாலை, விழுப்புரம்.
19. டான்சி பொறியியல் தொழிற்சாலை, திருவண்ணாமலை.
20. டான்சி பொறியியல் தொழிற்சாலை, கிருஷ்ணகிரி.
21. டான்சி பொறியியல் மற்றும் தச்சு வேலை தொழிற் சாலை, சேலம்.

இணைப்பு—தொடர்ச்சி.

டான்சி தொழிற் பிரிவு, மற்றும் விற்பனை நிலையங்களின் பெயர்ப்பட்டியல்—தொடர்ச்சி.

22. டான்சி விவசாயக் கருவிகள் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

23. டான்சி மரப்பொருள் தொழிற்சாலை, கிண்டி.

24. டான்சி மரப்பொருள் தொழிற்சாலை, கிருஷ்ணகிரி.

25. டான்சி மரப்பொருள் தொழிற்சாலை, மதுரை.

26. டான்சி மரப்பொருள் தொழிற்சாலை, புதுக்கோட்டை.

27. டான்சி மரப்பொருள் மற்றும் மரம் அறுக்கும் தொழிற்சாலை, பொள்ளாச்சி.

28. டான்சி மரப்பொருள் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, கடலூர்.

29. டான்சி மரப்பொருள் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, மன்னார்குடி.

30. டான்சி மரப்பொருள் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, பேட்டை.

31. டான்சி பொறியியல் மற்றும் பூட்டுத் தொழிற்சாலை, திண்டுக்கல்.

32. டான்சி எஃகு நாற்காலி, மேசை முதலியன உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, வேலூர்.

33. டான்சி எஃகு நாற்காலி, மேசை முதலியன உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, ராஜபாளையம்.

34. டான்சி எஃகு நாற்காலி, மேசை முதலியன உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, பழனி.

35. டான்சி எஃகு மற்றும் பித்தளை வேலைகள் தொழிற்சாலை, கும்பகோணம்.

36. டான்சி பொறியியல் தொழிற்சாலை, திருப்பாச்சூர்.

37. டான்சி பொறியியல் தொழிற்சாலை, செம்பரம்பாக்கம்.

38. டான்சி பொறியியல் தொழிற்சாலை, மாயூரம்.

39. டான்சி பொறியியல் தொழிற்சாலை, கரூர்.

40. டான்சி பொறியியல் தொழிற்சாலை, திருப்பூர்.

41. டான்சி பொறியியல் தொழிற்சாலை, வள்ளியூர்.

42. டான்சி பொறியியல் தொழிற்சாலை, மதுரை.

43. டான்சி பொறியியல் தொழிற்சாலை, தூத்துக்குடி.

44. டான்சி கருவி அறைக்கூடம் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, விருதுநகர்.





45. டான்சி கருவி அறைக்கூடம் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, மதுரை.

46. டான்சி தோல் பொருள் தொழிற்சாலை, பெரம்பூர்.

47. டான்சி தோல் பொருள் தொழிற்சாலை, (திருவல்லிக் கேணி), பெரம்பூர்.

48. டான்சி தோல் பொருள் தொழிற்சாலை, பல்லாவரம்.

49. டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை, விண்ண மங்கலம், வட ஆற்காடு.

50. டான்சி உரோமம் பதனிடும் தொழிற்சாலை, விண்ண மங்கலம், வட ஆற்காடு.

51. டான்சி வார்னீஷ் உற்பத்தி தொழிற்சாலை, அம்பத்தூர்.

52. டான்சி அச்சகம், கிண்டி.

53. டான்சி மின் கருவிகள் பழுது பார்க்கும் தொழிற்சாலை, கிண்டி.

54. டான்சி மின் கருவிகள் முலாம் பூசும் தொழிற்சாலை, கிண்டி.

55. டான்சி கைக்கடிகார இணைப்புத் தொழிற்சாலை, உதகமண்டலம்.

56. டான்சி விற்பனைக்கூடம், சென்னை-14.

57. டான்சி விற்பனைக்கூடம், சென்னை-6.

58. டான்சி விற்பனைக்கூடம், மதுரை-2.

59. டான்சி விற்பனைக்கூடம், கோயம்புத்தூர்-12.

60. டான்சி விற்பனைக்கூடம், திருச்சிராப்பள்ளி-2.

[1981 ஏப்ரல் 15

## தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், சென்னை-600 006.

''சிட்கோ'' என்று அழைக்கப்படும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் துவக்கத்தில் ஒரு தனியார் நிறுவனமாக 1970-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் நிறுவப்பட்டு பின்னர் 1971-ம் ஆண்டு சனவரி திங்கள் 21 ஆம் நாள் அன்று ஒரு பொது நிறுவனமாக மாற்றி அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் மூலக் குறிக்கோள் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியினைக் குறிப்பாக சின்னஞ்சிறு தொழில் துறைகளில் பரவலான, விரைவான வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும், ஊக்குவிக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாகும்.

2. பொருளாதாரம் :

சிட்கோவின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் பொதுவாய் 5 கோடிகளாகும். இதில் அரசினால் செலுத்தப்பட்ட மூலதனமான ரூபாய் 3·55 கோடியுடன் ரூபாய் 3·77 கோடியை அரசிடமிருந்து கடனாகப் பெற்றும் மற்றும் வங்கிகளிடமிருந்தும், மற்ற நிதி நிறுவனங்களிடமிருந்தும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி வழங்கும் திட்டத்தின்கீழும் (I. D. B. I. Refinance Scheme) பொது மக்களிடமிருந்தும் பெறப்படும் சேமிப்பு நிதியின் மூலமும் தேவையான நிதி வசதியை நிவர்த்தி செய்து கொள்கிறது.

3. சிட்கோவின் செயல் திட்டங்கள் :

(அ) அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் (தொழிற்பேட்டைகள்).

(ஆ) சிறுதொழில் பிரிவுகளுக்குத் தேவையான இன்றியமையா மூலப் பொருட்களை கொள் முதல் செய்து விநியோகித்தல்.

(இ) சிறுதொழில் பிரிவுகளின் உற்பத்தி பொருட்களுக்கு விற்பனை வசதி செய்து தருதல்.

(ஈ) மேலும் 15 சதவீதம் மத்திய மூலதன மானியம்/தமிழக அரசு மானியம் வழங்குதல், நலிவுற்ற சிறுதொழில்களுக்கு முன் வரம்புத் தொகை உதவி, விற்பனை வரியை ஈடு செய்ய வட்டியில்லா கடன் உதவி, குறைந்தழுத்த மின்சாரத்தை உபயோகிக்கும் சிறுதொழில்களுக்கு மானியத் தொகை உதவி போன்ற ஒருமித்த திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது.



1981 ஏப்ரல் 15]

4. இந்நிறுவனம் 1980—81 ஆம் ஆண்டில் ஆற்றிய பணிகளின் அறிக்கையும் 1981—82 ஆம் ஆண்டின் திட்டங்களும் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

### தொழிற்கூட திட்டங்கள்.

தொழிற்பேட்டை மனைகளை நிர்வகித்தல் :

தமிழ்நாட்டிலுள்ள 783 தொழிற்கூடங்களடங்கிய 33 தொழிற் பேட்டைகளை சிட்கோ, தமிழக அரசின் சார்பில் ஏற்று தொடர்ந்து நிர்வகித்து இதன் மூலமாக 45,500 பேர்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி வருகிறது.

சீர் அமைக்கப்பட்ட மனைகள்:

கிண்டி, அம்பத்தூர், துவாகுடி, கப்பலூர் மற்றும் மேட்டூர் போன்ற இடங்களில் சீரமைக்கப்பட்ட மனைகள் கிடைக்க வழி செய்கிறது. புதிதாக தொடங்கப்படும் சிறுதொழில் முனைவோர் துரிதமாக தொழிற்கூடங்கள் கட்டும் பொருட்டு சுமார் 991 திருத்தியமைக்கப்பட்ட தொழிற்பேட்டை மனைகளில் 837 மனைகள் வழங்கப்பட்டு விட்டன.

சிட்கோவின் தொழிற்பேட்டை மனைகள் :

சிட்கோவின் துவக்கம் முதற்கொண்டு 1979—80 ஆம் ஆண்டு வரை சுமார் 514 தொழிற்கூடங்களை தவணை முறை திட்டத்தின் கீழ் அம்பத்தூர், இராணிப்பேட்டை, ஓசூர், நாமக்கல், முதலான இடங்களில் கட்டி வழங்கியுள்ளது. 1979—80-ம் ஆண்டு 58 தொழில்கூடங்கள் அம்பத்தூர், இராணிப்பேட்டை, புதுக்கோட்டை முதலான இடங்களில் கட்டப்பட்டு வழங்கப்பட்டது, சுமார் 250 தொழிற்கூடங்கள் 1980—81-ம் ஆண்டு வில்லிவாக்கம், கொடுங்கையூர், ஓசூர், மறைமலை நகர், இராணிப்பேட்டை, கப்பலூர், சேலம், பரபகுடி, புதுக்கோட்டை, திருப்பூர் முதலான இடங்களில் கட்டப்பட்டு வழங்கப்படும். 1981—82 ஆம் ஆண்டு சுமார் 350 தொழிற்கூடங்களை ரூபாய் 450 இலட்சம் செலவில் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை தொழிற் பேட்டை மனைகள் ஏற்படாத நீலகிரி மாவட்டத்திலுள்ள ஊட்டியிலும் தொழிற்பேட்டை மனைகளை நிறுவும் திட்டமும் குறிப்பாக செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

சின்னஞ்சிறு தொழிற்கூடங்கள் :

குறிப்பாக சின்னஞ்சிறு தொழிற்கூடங்கள் மற்றும் குடிசை தொழிற்துறைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த 'சிட்கோ' மேற்படி தொழிற்களுக்கான சின்னஞ்சிறு தொழிற்கூடங்களை

200 சதுர அடி முதற் கொண்டு தேவையான அளவுகளில் கட்டி கைவினைஞர், திக்குச்சி செய்வோர், பட்டு தொழில் செய்வோர் முதலானவர்களுக்குக் கட்டி வழங்கி வருகிறது. மேற்படி தொழிற் கூடங்கள் ஏராளமான அளவில் கிராமம் மற்றும் கிராமத்தின் உட்புறங்களில் பொருளாதாரத்தில் குறையுற்றோரின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக கட்டப்பட்டு எளிய தவணைகளில் வழங்கப்படுகிறது. இதுவரை 682 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டதில் 259 தொழிற்கூடங்கள் குறிப்பாக பின்தங்கிய மாவட்டமான தருமபுரியில் கட்டப்பட்டிருக்கின்றது. 1981-82 ஆம் ஆண்டு சுமார் 663 சின்னஞ்சிறு தொழிற் கூடங்களை நாட்டின் பல இடங்களில் சுமார் 100 இலட்சம் ரூபாய் செலவில் கட்டவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத் திட்டத்தினால் கிராமப்புறங்களில் சுமார் 4,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட வழி வகுக்கும்.

**இன்றியமையா மூலப் பொருட்களின் விநியோகம் :**

துவக்கத்தில் ''சிட்கோ'' இரும்பு-எஃகு மூலப் பொருட்களை மட்டும் கொள்முதல் செய்து விநியோகித்து வந்தது. 1974–75-ம் ஆண்டு மூலப் பொருட்களான நிலக்கரி, தீப்பெட்டிமெழுகு, பாரபின்மெழுகு, பொட்டாசியம் குளோரைட், மற்றும் பலதரப்பட்ட மூலப் பொருட்களின் விநியோகத்தையும் மேற்கொண்டது. 1979–80 வரை இம்மூலப் பொருட்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை போன்ற முக்கிய இடங்களில் மட்டும் விநியோகிக்கப்பட்டு வந்தது. எனினும் பாரபின் மெழுகு, தீப்பெட்டி மெழுகு, பொட்டாசியம் குளோரைடு முதலான மூலப் பொருட்கள் இதனை குறிப்பாக உபயோகிக்கும் சிறு தொழில் முனைவோருக்கு அண்மையிலேயே கிடைக்க சாத்தூர், சிவகாசி, கோவில்பட்டி, குடியாத்தம் முதலான இடங்களில் துணைக் கிடங்குகள் நிறுவப்பட்டன. 1980–81-ம் ஆண்டு சேலத்தில் மேலும் ஒரு துணைக்கிடங்கு துவக்கப்பட்டுள்ளது. அம்பத்தூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மேலும் மாவட்ட தலை நகரங்களில் விநியோகக் கிடங்குகள் நிறுவப்படவும், இதன் மூலமாக சிறுதொழில் முனைவோருக்கு தங்கள் மாவட்ட எல்லைக்குள்ளேயே மூலப் பொருட்கள் கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்தும் திட்டங்களும் நிறைவேற்றப்படவிருக்கின்றன. மூலப் பொருட்களை துரிதமாக கையாள தற்போது எடைபோடும் அளவை விட சுமார் 1½ மடங்கு முதல் 2 மடங்கு வரை எடை போடும் பெரிய இயந்திரங்களை கிண்டி கிடங்கில் பொருத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கும் DGS&D தொழில் நிறுவனங்களுக்கும், துத்தநாகம், ஈயம் முதலான மூலப் பொருட்களை இந்துஸ்தான் துத்தநாக கம்பனியின் (ஜெய்ப்பூர்) ஒத்துழைப்புடன் விநியோகிக்கும்படியான ஒப்பந்தமும் செய்யப்பட்டுள்ளது. கிண்டி மற்றும்





சுற்றுப்புறத்திலுள்ள சிறுதொழில் நிறுவனங்களுக்கும், அம்பத்
தூர் தொழில் நிறுவனங்களுக்கும் இன்றியமையா மூலப் பொரு
லாள் உலை எண்ணெய் விநியோகிக்கும் திட்டம் முடியும் தரு
வாயில் உள்ளது. 1980–81-ம் ஆண்டு சிட்கோ ரூபாய் 6.62
கோடி மதிப்புள்ள 9,475 டன் பாரபின் மெழுகை விநியோகித்
துள்ளது. சரியான நேரத்தில் இம்மூலப்பொருளை இறக்குமதி
செய்ததால்தான் மேற்படி அதிகப்படியான விற்பனை சாத்திய
மாயிற்று. இதனால் சிறுதொழில்களின் முழு தேவைகளையும்
இவ்வாண்டில் 'சிட்கோ' பூர்த்தி செய்துள்ளது என்பது குறிப்
பிடத்தக்கது. எனவே, 1981–82-ம் ஆண்டு சுமார் ரூபாய் 9
கோடி மதிப்புள்ள 12 ஆயிரம் டன் பாரபின் மெழுகு ஒதுக்கீடு
செய்யப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

கல்கரி (கோக்.)

1979–80-ம் ஆண்டை விட 1980–81-ம் ஆண்டில் சிட்கோ
கல்கரி விநியோகத்தை சிறிது அதிகமான அளவில் விநியோகித்
துள்ளது. இரயில்வே சரக்குப் பெட்டிகள் கிடைக்காத சமயத்தில்,
சாலை மூலம் கொண்டு வரும்படியான ஏற்பாட்டை செய்திருந்
ததினால் இவ்வதிகப்படியான விற்பனை சாத்தியமாயிற்று.
இதனால் விலை சிறிது அதிகம் இருப்பினும் அதனை மகிழ்ச்சி
யுடன் ஏற்றுக் கொள்ள சிறு தொழில் நிறுவனங்கள் சம்மதித்தது.
இவ்வாண்டு இதுவரை 12,200 டன்கள் விற்பனைசெய்து, மேலும்
இவ்வாண்டின் கடைசிவரையில் சிறு தொழிலுக்குத் தேவையான
அளவு கல்கரியை விநியோகிக்கவும் தற்போது கைவசம் இருப்புள்
ளது. 1981–82-ம் ஆண்டு ரூ. 2·6 கோடி மதிப்புள்ள 24,000
டன் மதிப்புள்ள கல்கரியை இந்திய நிலக்கரி நிறுவனத்தின் ஒத்
துழைப்புடன் விநியோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்
படி நிறுவனம் தற்போது கோயம்புத்தூரிலும் ஒரு நிலக்கரி
கிடங்கை நிறுவியுள்ளது.

இரும்பு உருக்கு மூலப் பொருட்கள்

தமிழ் நாட்டுடைய ஒதுக்கீடாக சுமார் 30,000 டன் இரும்பு,
உருக்கு இருந்தும் இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களில் 4,645
டன்கள் தான் ஒதுக்கீடு கிடைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட
அதிகாரிகளை அரசின் மூலம் தொடர்பு கொண்டதின் மூலம்
மேலும் 25,000 டன்கள் இவ்வாண்டிற்குள் கிடைக்கும் என எதிர்
பார்க்கப்படுகிறது. இது சென்ற ஆண்டின் விநியோகமான
22,300 டன்களை விட சிறிது அதிகமாகும். மொத்தத்தில் சிட்
கோவின் விநியோக மதிப்பு இவ்வாண்டு ரூ. 17 கோடி இருக்கு
மென மதிப்பிடப்படுகிறது. இது சென்ற ஆண்டின் விநியோக
மதிப்பான ரூ. 13 கோடியைவிட அதிகமாகும். வரும் ஆண்டு
களில், சிட்கோவின் பணி சிறப்பானதாக இருக்குமெனவும், மூலப்
பொருள்களின் விநியோகமதிப்பு ரூ.32 கோடியாக இருக்குமென
வும் எதிர்பார்க்கப்படுகிறது.

### சிறு தொழில் வளர்ச்சி நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனை வசதி பெற்றுத் தரல்

மேற்படி திட்டம் 1977–78-ம் ஆண்டு சிறிய அளவில் துவங்கப்பெற்றது. இதன் மூலமாக உற்பத்திப் பொருட்களின் தரத்தை நிர்ணயிக்கவும், சிறுதொழில்களிலிருந்து அவைகளைப் பெற்று அரசு நிறுவனம்/அரசு சார்பு நிறுவனம் முதலியவைகள் மேற்படி பொருட்களை வாங்கவும், வரைமுறைகள் ஏற்படுத்தப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் கொள்முதல் முதலீடான ரூ. 26 இலட்சம் மதிப்புள்ள விற்பனைப் பொருட்கள் சிறு தொழில்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. சிட்கோ அடிக்கடி 'வாங்குவோர்-விற்போர்' சந்திப்புகளை ஏற்படுத்தி சிறந்த பொருட்களை அடையாளம் கண்டு அவைகளை அரசு/அரசு சார்பு நிறுவனங்களுக்கு வினியோகிக்கவும் முற்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக மேல் உயர்நிலைப் பள்ளிகளுக்கான விஞ்ஞானக் கருவிகளை வினியோகித்து வருவதும் அல்லாமல் தற்போது மின்சார வாரியம் பொதுநல சுகாதார மருத்துவ இயக்குநர் அலுவலகங்களுக்கு தேவையான ஊட்டச்சத்துணவு பொருட்களை உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தற்போது விநியோகத்தில் ஈட்டப்பட்ட முதலீட்டை விட இரட்டிப்பாக்கப்பட்டு 1981–82-ம் ஆண்டு சுமார் ரூ. 6·5 கோடியை எட்டும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து இம்முதலீட்டின் அளவு ரூ. 25 கோடியை எட்டும் எனவும் எதிர்ப்பார்க்கப்படுகிறது. முதல் முதலாக D.G.S.D நிறுவனங்களும் மேற்படி விநியோகத்தில் பங்கு கொண்டதின் மூலம் சிறுதொழில்கள் பலன் பெற்றுள்ளது. தற்போது சிறுதொழில்களிலிருந்து பெறப்படும் உற்பத்தி பொருட்களின் எண்ணிக்கையான 257-ஐ 400 ஆக உயர்த்தும் திட்டமும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வரும் ஆண்டு விற்பனை நிலையங்களையும், விற்பனை தகவல்களை சேகரிக்கும் அலுவகம், விற்பனைக்கான சர்வே நடத்தும் திட்டங்களும் மேற்கொள்ளப்படும்.

### நலிவடைந்த சிறுதொழில் நிறுவனங்களுக்கு முன்வரம்புத் தொகை உதவி.

'சிட்கோ' மேற்படி திட்டத்தை செயல்படுத்தியதில் நன்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. சிறுதொழில்களால் விண்ணப்பிக்கப்பட்ட 44 விண்ணப்பங்களில் ரூ. 7·518 இலட்சங்கள் அங்கீகரிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு ரூ. 1·518 இலட்சம் இதுவரை வழங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ரூ. 40 இலட்சங்கள் வழங்கப்படலாமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.



### மூலதன மானியம் வழங்குதல்.

இத்திட்டத்தில் மத்திய மூலதன மானியம் பெற 33 பிற்பட்ட வட்டங்கள் தகுதி பெற்றவை. சென்ற ஆண்டின் (1979–80) 145 பேர்களுக்கு உதவிய ரூ. 42·40 இலட்சங்களை விட, இவ்வாண்டு சுமார் 500 சிறுதொழில் பிரிவுகள் ரூ. 100 இலட்சங்கள் வரை உதவி பெற்று சுமார் 4,400 பேர்களுக்கு வேலை வாய்ப்பு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இம்முன்னேற்றம் 1981–82-ம் ஆண்டும் தொடரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்று கூறுவது மிகையாகாது.

### தமிழ்நாடு அரசு மூலதன மானியத் திட்டம்.

இவ்வாண்டு தொடங்கப்பட்ட இத்திட்டம் இன்னும் பிரபலமாகாத போதிலும் ரூ. 0·50 இலட்சங்கள் வரை உதவித் தொகை நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது. மத்திய மூலதன மானியம் வழங்கும் திட்டத்தைப் போல் இத்திட்டமும் 1981–82-ல் முன்னேற்றம் அடையும் என எதிர்பார்க்கப்பட்டு ரூ. 10 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### திட்டங்களுக்கான பொருளாதாரம்

தொழிற்கூட திட்டங்கள், உதவித் தொகை திட்டங்கள் உட்பட மூலப் பொருட்கள் கொள்முதல் செய்ய ஈட்டப்படும் ரூ. 32 கோடியும் சிறுதொழில்களின் உற்பத்திப் பொருட்களை வாங்க ஈட்டப்படும் ரூ. 6·5 கோடியும் திரட்டுவதற்காக முதல் ஒதுக்கீடு ரூபாய் 989 இலட்சங்கள் தேவைப்படுகிறது. இதில் ரூ. 100 இலட்சம் அரசிடமிருந்து மூலதன உதவியாகவும், ரூ. 92 இலட்சம் கடனாகவும் பெறப்படும். மேலும் ரூ. 100 இலட்சம் மத்திய அரசிடமிருந்து பெறப்படும். ரூ. 697 இலட்சம் அரசு வங்கி நிதியுதவி செய்யும் நிறுவனங்களிடம் இருந்து கடனாகப் பெறப்படும்.

### திட்ட ஒதுக்கீடு

6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 'சிட்கோ' விற்கு ரூ. 12 கோடிகள் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 280 இலட்சங்கள் மேற்கூறப்பட்டுள்ள திட்டங்களுக்காக 1981–82 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 192 இலட்சத்தை, அரசு மூலதனமாகவும் கடனாகவும் வழங்க ஒதுக்கீடு செய்துள்ளது.

### இலாப அனுகூலங்கள்

'சிட்கோ' தொடர்ந்து 4 வருடங்களாக இலாபத்தில் நடைபெற்று வருகிறது. 1981–82 ஆம் ஆண்டு ரூ. 25 இலட்சம் நிகர இலாபம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பட்டுப்புழு வளர்ப்புத் தொழில்.

பட்டுப்புழு வளர்ப்புத் தொழில், ஒரு ஏக்கருக்கு 5 நபர்களுக்கு முழு நேர வேலை வாய்ப்பளிக்கும் விவசாயத்தினைச் சார்ந்தத் தொழிலாகும் 1980–81ஆம் ஆண்டில் 9,000 ஏக்கர் பரப்பு கூடுதலாக்கப்பட்டபின் முசுக்கொட்டைப் பயிர் பரப்பு தற்போது 40,000 ஏக்கர்களாக உயர்ந்துள்ளது.

2. இத்தொழிலில் கூடுதல் வேலைவாய்ப்பு 45,950 நபர்களுக்கு மேல் அளிக்கப்பட்டுள்ளது. பட்டுப்புழு வளர்ப்புத் திட்டங்கள் மற்ற திட்டங்களான வறட்சிப் பகுதி நிவாரண திட்டம், தீவிர மலைவாழ் மக்கள் அபிவிருத்தி திட்டம், ஆகியவைகளுடன் இணைக்கப்பட்டு செயலாற்றப்படுகின்றது. அரசின் தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, பட்டுப்புழு வளர்ப்புத் திட்டங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளன, இந்த அபிவிருத்தி திட்டங்களின் கீழ், 110 லட்சம் நோயற்ற பட்டுப்புழு முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் 1980–81-ல் பல பகுதிகளில் வறட்சி ஏற்பட்டபோதிலும், 50 லட்சம் கிலோ நூற்பு பட்டுக் கூடுகள் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டில் கச்சாப் பட்டு உற்பத்தியும், 1,06,000 கிலோவிலிருந்து 1,50,000 கிலோவாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது வரை, 5,395 விவசாயிகளுக்கு முசுக்கொட்டைச்செடி வளர்ப்பிலும், பட்டுப்புழு கூடு நூற்பிலும் நவீன முறைகளில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. உபகரணங்கள் வாங்க உதவித் தொகை அளிக்கும் திட்டத்தின்கீழ் ரூ. 19·75 லட்சம் 5,275 விவசாயிகளுக்கும், புழு வளர்ப்புக் கொட்டகைகள் கட்ட உதவித் தொகை அளிக்கும் திட்டத்தின்கீழ் ரூ. 10·48 லட்சம் 2,865 விவசாயிகளுக்கும் வழங்கப்படும். நூற்புத்திறனை அதிகரிக்கும் பொருட்டு நடப்பாண்டில் 700 தட்டுகள் ரூ. 7·70 லட்சம் செலவில் நிறுவி, மொத்தத் தட்டுகளின் எண்ணிக்கை 1,510 ஆக உயர்த்தப்படும். அங்காடிகளில் பட்டுப்புழு கூடுகளின் விற்பனை முதலியன குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது.

3. தமிழ்நாடு மாநில பட்டு உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு இணையம் ரூ. 2·53 கோடி மதிப்புள்ள 95,960 கிலோ கச்சாப்பட்டினை விற்பனை செய்துள்ளது. ஏற்கனவே கும்பகோணம் மற்றும் சேலத்தில் செயல்படும் கிளைகளுடன் மதுரையிலும், மற்றும் ஆரணியிலும் மேலும் இரண்டு கிளைகளை இணையம் துவக்கியுள்ளது. அகதிகள் மறுவாழ்வு வங்கியின் உதவியுடன், 360 இழைகள் கொண்ட முறுக்குப் பிரிவு



ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, 16 அகதிகளுக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இணையத்தின் கடன் வாங்கும் வசதியை அதிகரிக்கும் பொருட்டு, அரசு ரூ. 5 லட்சம் கடனாக வழங்கியுள்ளது. மத்திய பட்டு வாரியமும் விலை நிர்ணயம் திட்டத்தின் கீழ் இவ்விணையத்தை அதன் மூலப்பொருள் கிடங்காக அங்கீகரித்து பட்டு முதலியன வாங்குவதற்கு மற்றும் தமிழ் நாட்டில் கச்சாப்பட்டின் விலையினை நிலை நிறுத்த ரூ. 5 லட்சம் வழங்கியுள்ளது. நடப்பாண்டில் இவ்விணையம் ரூ. 2 லட்சத்திற்குமேல் லாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1981–82 ஆம் ஆண்டிலும், எம் 5 வகை முசுக்கொட்டை செடி எல்லா மாவட்டங்களிலும் பயிரிட உதவித் தொகை அளிக்கும் திட்டம் நீட்டிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள மற்றும் புதிய வித்தகங்களில் நோயற்ற முட்டைகளை உற்பத்திச் செய்வதற்கு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும். விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டமும் நீட்டிக்கப்பட உள்ளது. சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு புழு வளர்ப்புக் கருவிகள் மற்றும் புழு வளர்ப்பில் உள்ள தொழில் நுட்பங்களை பரவலாகக் எல்லா மாவட்டங்களும் பயனடையும் வண்ணம் 10 தொழில் நுட்ப சேவை மையங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. 500 குடிசைப் பிரிவு நூற்பகங்கள் நிறுவி அதற்காக வழங்கப்படும் 50 சதவீதம் உதவித் தொகை திட்டமும் நீட்டிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. வளரும் மையங்களில் ஒவ்வொன்றும் 10 தட்டுகள் கொண்ட 5 கிராம பட்டு நூற்பகங்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் உதவியுடன் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளாலேயே நடத்தப்பெறும் 25 கிராம மட்ட இளம் புழு வளர்ப்புச் சங்கங்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டு மற்றும் பெரியார் மாவட்டங்களில் இரண்டு பட்டுப் புழுக்கூடுகள் அங்காடிகள் துவக்கப்படும்.

சுய வேலை வாய்ப்பு பயிற்சி திட்டங்கள் மற்றும் தீவிர கிராம அபிவிருத்தி திட்டங்களைப் பயன்படுத்தி பட்டு நூற் பயிற்சியில் தற்போது கிடைக்கப்பெறும் வசதிகள் அதிகரிக்கப்படும். இவ்வாண்டில் உற்பத்திச் செய்யப்படும் பட்டு உற்பத்தியின் விளைவாக, மாநிலத்திலுள்ள மற்ற தொழில் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணையம் ரூ. 6 கோடி மதிப்புள்ள 2 லட்சம் கிலோ பட்டை விற்பனை செய்யும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் தேசிய வங்கிகளின் உதவியுடன் சிறு தொழில் அபிவிருத்திக் கழகத்தால் நடத்தப் பெறும் சிறு துறை திட்டத்தின்கீழ் உள்ள பட்டு நூற்பு மற்றும் முறுக்கு தொழில் பேட்டைகள், பெரியார் மாவட்டத்திலுள்ள தாராபுரம் மற்றும் தர்ம்புரி மாவட்டத்திலுள்ள தர்ம

புரியில் உள்ளவைகள் போன்று 1981–82-ல் தர்மபுரியிலுள்ள ஓசூர் சாமல்பட்டி மற்றும் பேரிகை ஆகிய இடங்களுக்கும் நீட்டிக்கப்படும்.

1981–82-ல் எரி புழு வளர்ப்புக்காக, ஓர் முன்னோடி மற்றும் விரிவாக்க நிலையம் ஒன்று சேலத்தில் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. கோயம்புத்தூரிலுள்ள விவசாயப் பல்கலைக் கழகம் அரசின் வேண்டுகோளுக்கிணங்க பட்டுப் புழு வளர்ப்பில் 4 வருட பட்டப் படிப்பு ஒன்றினை புகுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாண்டில் 40 பட்டதாரிகளுக்கு விவசாயப் பல்கலைக் கழகத்தில் டிப்ளமோ பயிற்சியளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பட்டுப் புழு வளர்ப்புத் தொழில் மேற்கொண்டுள்ள விவசாயிகள் கொண்ட பின்தங்கிய பெரியார் மாவட்டத்தில், தனி ஒரு மாவட்ட அலுவலகம் திறக்கப்படும்.

1981–82 ஆம் ஆண்டில் இறுதியில் பட்டுப் புழு வளர்ப்புத் தொழில் நடவடிக்கைகளின் நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஏக்கர். | வேலை வாய்ப்பளிக்கப் பட்ட நபர்களின் எண்ணிக்கை. | உற்பத்திச் செய்யப்பட்ட பட்டுப் புழுக் கூடுகளின் அளவு. | கச்சாப்பட்டு உற்பத்தி அளவு. |
| --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) |
| 48,000 ஏக்கர் | 2·43 லட்சம் நபர்கள். | 50 லட்சம் கிலோக்கள். | 6 லட்சம் கிலோக்கள் |

## தமிழ்நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனம்.

அரசுக்குச் சொந்தமான பொது நிறுவனமாக தமிழ்நாடு கைத்திறன் பொருள்கள் வளர்ச்சி இணையகம் 1973 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் நாள் அன்று நிறுவப்பட்டது. முன்பு அரசின் தொழில் துறையின் கீழ் இயங்கி வந்த விற்பனை கூடங்களின் சொத்துக்களையும், பொறுப்புக்களையும், மற்றும் மாநில கைத்திறத் தொழில் வளர்ச்சி கூட்டுறவு சங்கத்தின் வாணிப விற்பனைப் பொருட்களையும் ஏற்றுக்கொண்டு 1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1 ஆம் தேதி முதல் இந்நிறுவனம் இயங்கி வருகிறது. இதற்கு அடுத்த ஆண்டில், அதாவது 1974 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் நாள் முதல் தொழில் வலனிகத்துறையின் கீழ் இயங்கி வந்த 14 உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களையும் இந்நிறுவனம் மேற்கொண்டது.

கைத்திறன் தொழில்களுக்கும் கைவினைஞர்களுக்கும்தொழில் நுட்ப உதவி தொழில் வளர்ச்சிக்கான உதவிகள் அளித்தும் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்வதன் மூலமும், மேலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொருட்காட்சிகள் அமைத்து விற்பனை வசதி ஏற்படுத்துவதன் மூலமும் இம்மாநிலத்தில் கைநுட்பத் தொழில் வளர்ச்சியில் தனியானதோர் எழுச்சியையும் புதிய போக்கையும் உருவாக்கிட கைநுட்பக் கலைத் தொழில் மேம்பாட்டு வளர்ச்சி அடைவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு தனியானதோர் நிறுவனம் அமைக்கப்பட்டது.

2. சாதனை.— இந்நிறுவனம் தமிழ்நாட்டிலுள்ள சென்னை, மாமல்லபுரம், நெய்வேலி, கடலூர், சேலம், வேலூர், ஈரோடு, கோயமுத்தூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய 13 விற்பனை நிலையங்கள் மூலமாகவும் புதுடில்லி, பம்பாய் மற்றும் பெங்களூரிலுள்ள மூன்று விற்பனை நிலையங்கள் மூலமாகவும் பல்வேறு வகையான கைத்திறன் பொருட்கள் விற்பனை செய்து வருகிறது. இந் நிறுவனம் 1980–81 ஆம் ஆண்டில் புதிய விற்பனை நிலையங்களை சிதம்பரத்திலும், கன்னியாகுமரியிலும், மதுரையில் உள்ள இந்திய சுற்றுலா வளர்ச்சி இணையகத்தின் கட்டிடத்திலும் துவக்கி ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்தின் 1979–80 ஆம் ஆண்டின் வாணிபத் தொகை ரூ. 143·00 இலட்சமாகும். 1980–81 ஆம் ஆண்டிற்கு வாணிபத் தொகை ரூ. 150·00 இலட்சமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டிற்கு வாணிப குறி இலக்கு ரூ. 175·00 இலட்சமாகும்.

1979–80 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் சுமார் ரூ. 3·00 இலட்சம் இலாபம் சம்பாதித்தது. மேலும் 1980–81 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 4·00 இலட்சமும், 1981–82 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 5·00 இலட்சமும் இலாபம் சம்பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. உற்பத்தி.—இந்நிலையம் 1979–80 ஆம் ஆண்டில் உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களின் மூலமாக சுமார் ரூ. 42·00 இலட்சம் பெறுமான கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்தது. 1980–81 ஆம் ஆண்டில் உற்பத்தியின் அளவு சுமார் ரூ. 43·00 இலட்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1981–82 ஆம் ஆண்டிற்கு உற்பத்தி இலக்கு ரூபாய் 50 இலட்சமாகும்.

4. பயிற்சி.—இந்நிறுவனம் 17 பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களில் பலவகை கைத்திறன்களில் கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 1979–80 ஆம் ஆண்டில் 291 கைவினைஞர்களுக்கு பல்வேறு கைத்திறன்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் 272 கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் கலைத்தட்டு செய்வதிலும், தஞ்சாவூர் வண்ண ஓவியங்கள் தீட்டுவதிலும் பயிற்சி அளிக்க தஞ்சாவூரில் இரண்டு பயிற்சி நிலையங்களை இந்நிறுவனம் துவக்கியுள்ளது. மேலும், வேலூரில் நூக்கமர கைத்திறன் பொருட்கள் பயிற்சி நிலையத்தையும் சென்னையில் நிர்மல் ஓவியம் பயிற்சி நிலையத்தையும் நடப்பாண்டில் துவக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. 1981–82 ஆம் ஆண்டில் 350 கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

5. வடிவமைப்பு நிலையம்.—உள்ளூர் மக்களின் விருப்பத்திற்கும், அயல்நாட்டு சுற்றுலா பயணிகளின் விருப்பத்திற்கும் ஏற்றபடி, கைவினைப் பொருட்களில் புதிய வடிவமைப்புகளையும், புதிய செயல் முறைகளையும் உருவாக்கி ஒரு வடிவமைப்பு நிலையத்தை சென்னையில் நடத்தி வருகிறது.

6. தமிழக அரசின் நிதியுதவி.—இந்நிறுவனத்திற்கு தமிழக அரசு 1979–80 ஆம் ஆண்டு முடிய பங்கு மூலதனம் மானியம், மற்றும் கடனுதவி மூலமாக ரூ. 149 இலட்சம் அளித்துள்ளது.

| | | |
|---|---|---|
| 1. பங்கு மூலதனம் .. .. | ரூ. 96 | இலட்சம். |
| 2. கடன் .. .. .. | ரூ. 29 | ,, |
| 3. மான்யம் .. .. .. | ரூ. 24 | ,, |
| மொத்தம் .. | ரூ. 149 | ,, |



தமிழக அரசின் 1980–81 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ. 13·43 இலட்சம் மான்யமாகவும், ரூ. 3·00 இலட்சம் மூலதனப் பங்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள ஒதுக்கீட்டிலிருந்து நடப்பாண்டில் இது வரை பங்கு மூலதனமாக ரூ. 3·00 இலட்சமும் மான்யமாக ரூ. 9 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 12 இலட்சத்தை இந்நிறுவனத்தின் திட்டங்களை செயல்படுத்துவதற்காக தமிழக அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

7. வங்கிகளிடமிருந்து கடனுதவி.—ரூபாய் 22 இலட்சம்வரை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன் உதவி பெறுவதற்கு இந்நிறுவனத்திற்கு வசதி உள்ளது.

8. தொடர்ந்து செயல்படுத்தும் திட்டங்கள்.—1979–80 மற்றும் 1980–81 ஆம் ஆண்டுகளில் துவங்கிய திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு திட்டத்திற்கும் மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை பின்வருமாறு :—

| திட்டத்தின் பெயர். | மதிப்பிடப்பட்டுள்ள செலவுத் தொகை. 1980–81. | 1981–82. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. அலுவலர்களும், கைவினைஞர்களும் புதிய வடிவமைப்புகளை செய்வதற்கும் உற்பத்தியில் புதிய முறைகளைக் கையாளுவதற்கும் அளிக்கப்படும் பயிற்சித் திட்டம். | 0·25 | 0·35 |
| 2. சந்தன மரச் சிற்பபயிற்சி நிலையம், கள்ளக்குறிச்சி .. .. | 1·00 | 1·07 |
| 3. நூக்கமர உட் பதிப்பு பயிற்சி நிலையம், மதுரை .. .. | 0·75 | 0·80 |
| 4. கம்பள நெசவு பயிற்சி நிலையம், வாலாஜாபேட்டை .. .. | 2·68 | 2·94 |
| 5. சென்னையிலுள்ள வடிவமைப்பு நிலையத்தை விரிவுபடுத்துதல். | 1·00 | .. |

| | | |
|---|---|---|
| 6. தஞ்சாவூர் கலைத்தட்டு வேலைப்பாடு பயிற்சி நிலையம், தஞ்சாவூர் .. .. .. | 1·22 | 1·30 |
| 7. தஞ்சாவூர் வண்ண ஓவியப்பயிற்சி நிலையம், தஞ்சாவூர் .. .. | 0·83 | 0·90 |
| 8. நூக்க மர கைத்திறன் பொருட்கள் பயிற்சி நிலையம், வேலூர் .. | 1·42 | 1·46 |
| 9. நிர்மல் ஓவியப் பயிற்சி நிலையம், சென்னை .. .. .. | 0·93 | 1·10 |



## தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (சென்னை).

1. **முன்னுரை**.— நம் நாட்டிலேயே மாநில அளவில் நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களில் முதல நிறுவனமாகத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், கம்பெனிகள் சட்டத்தின்படி 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துதல், விரைவுபடுத்துதல் என்பவையே இதன் முக்கிய நோக்கமாகும். இந்த நிறுவனத்தின் அதிகார வரம்பு மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் புதுச்சேரிக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாநில நிதி நிறுவனமாக இது செயல்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியையும் (ஆர்.பி.அய்), இந்திய தொழில் வளர்ச்சி வங்கியையும் கலந்தாலோசித்த பின்னர் இந்திய அரசால் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மூலமாக 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவி நிறுவனச் சட்டத்தின் சில முக்கியமான விதித்துறைகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் நிறுவனத்திற்குப் பொருந்தும்படியாக செய்யப்பட்டிருக்கின்றன.

2. **அலுவல்களும், நோக்கங்களும்**.— இந்நிறுவனத்தின் முக்கிய அலுவல்களும், நோக்கங்களும் பின்வருமாறு:—

(அ) முக்கியமாக நிலம், கட்டிடம், இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காக தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால, நடுத்தரக்காலக் கடன்கள்களை வழங்குவது.

(ஆ) எந்திரங்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்து கொள்ளும் ''காலம் தாழ்த்தித் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு'' உத்திரவாதம்/மேல் உத்திரவாதம் அளிப்பது.

(இ) வங்கிகள்/ஈட்டுறுதி நிறுவனங்கள்/பொது மக்களிடம் இருந்து பெறும் கடன்கள் முதலியவற்றின் மூலம் தொழில் நிறுவனங்கள் பெறும் கடன்களுக்கு உத்திரவாதம் அளிப்பது.

(ஈ) தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடனீட்டுறுதிப் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவது மற்றும் அவற்றுக்கு உத்திரவாதமளிப்பது.

(உ) மத்திய அரசு ஒப்பளிக்கும் உதவித் தொகையை ஒட்டி அத்தொகையை தொழில் நிறுவனங்களுக்கு முன்கூட்டியே கடனாக வழங்குவது.

3. உதவியின் அளவும் விவரமும்.— தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் வழங்கும் உதவியின் அளவு பின்வருமாறு:-

(அ) கடன்கள்—

| | |
|---|---|
| குறைந்த அளவு .. .. | ரூபாய் 5,000. |
| உயர் அளவு .. .. | ரூபாய் 30 இலட்சம் (தனி நபர் உடைமையிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் பங்குதாரர் உடைமையிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் உயர் அளவு ரூபாய் 15 இலட்சமாகும்.) |
| (ஆ) காலம் தாழ்த்தித் தொகை செலுத்துவதற்கான உத்திரவாதம் .. .. | ரூபாய் 30 இலட்சம். |
| (இ) பொதுக் கடன் வெளியீட்டுப் பங்கிற்கு உத்திரவாதமளிப்பது/நேரடியாக கலந்துகொள்வது. | ரூபாய் 25 இலட்சம் (உயர் அளவு) பொதுக் கடன் வெளியீட்டில் 25 சதவிதம் அல்லது தொழிலதிபர் முதலீடு செய்யும் தொகைக்கு நிகரான ஒரு தொகை. இவற்றில் எது குறைவோ அது. |

இருப்பினும் மேற்கூறிய மூவகைக் கடன்களைப் பொறுத்த மட்டில் தொழில் பிரிவு ஒன்றுக்கு வழங்கப்படும் மொத்த உதவி ரூபாய் 65 இலட்சத்திற்கு மிகக் கூடாது.

சிறு தொழில் மற்றும் நடுத்தரத் தொழில் துறைகளில் (அ) புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கும், (ஆ) ஏற்கெனவே உள்ள தொழில் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும் (இ) வேறு துறைகளில் ஈடுபடுவதற்கும், (ஈ) தற்போதுள்ள தொழில் பிரிவுகளை நவீனமயமாக்குவதற்கும் இந்நிறுவனம் நிதியுதவி அளிக்கிறது. சிறு தொழில் துறையிலும், சின்னஞ்சிறு தொழில் துறையிலும், தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும், பெருமளவில் வேலை வாய்ப்பினை உருவாக்கவும் இந்நிறுவனம் பல சிறப்புத் திட்டங்களை உருவாக்கியுள்ளது. குறைந்த வட்டி வீதம், கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்குவதற்கு நீண்ட கால அவகாசம் கடனைத் திருப்பிச் செலுத்த நீண்ட கால அளவு மற்றும் குறைந்த பிணையத் தொகை போன்ற தாராளமான எளிய நிபந்தனைகளில் இந்நிறுவனம் கடனுதவி அளிக்கிறது.



அதிக அளவில் வேலை வாய்ப்பினை உருவாக்கவும் எந்த ஒரு பகுதியிலும் தொழில் வளம் குறைந்து தோன்றாவண்ணம் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும் பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு, அதிலும் குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதற்கு முதலிடம் தரப்படுகிறது. பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு, குறைந்த வட்டி, கடனைத் திருப்பித் தர நீண்ட காலக்கெடு, மற்றும் பல சலுகைகளின் அடிப்படையில் நிதி உதவி அளிக்கப்படுகிறது. கிராமப் புறங்களிலும், பின்தங்கிய பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற சிறு, சின்னஞ்சிறு தொழில் பிரிவுகளுக்கு இன்னும் பெருமளவில் உதவிபுரியும் நோக்கத்துடன், போக்குவரத்துக் கடனாக இருப்பின் 50,000 ரூபாய் வரையிலும், பிறவகைக் கடனாக இருப்பின் 25,000 ரூபாய் வரையிலும் கடனுதவி அளிப்பதற்குரிய அதிகாரங்களை மேற்படி நிறுவனத்தின் வட்டார/கிளை அதிகாரிகளுக்கு இந்நிறுவனம் வழங்கியுள்ளது. சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் துறைகளில் நிறுவப்பட்டுள்ள பல்வேறு தொழில் பிரிவுகளுக்கும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் பிரிவுகளுக்கும் இந்நிறுவனத்தால் விதிக்கப்படும் வட்டி வீதம் பின் வருமாறு:—

| விவரம். | மறுநிதி உதவி அளிக்கப்படும் போது (சதவீதம்). | மறுநிதி உதவி அளிக்கப்படாத போது (சதவீதம்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சிறுதொழில் துறை:— | | |
| 1. பின்தங்கிய பகுதி .. | 10·25 | 10·25 |
| 2 பின் தங்கிய பகுதி அல்லாத பிற பகுதிகள் .. .. | 11·85 | 11·85 |
| 3 பின் தங்கிய பகுதி அல்லாத பிற இடங்களில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள் .. .. | 11·85 | 11·85 |
| 4 பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள் ... | 10·25 | 10·95 |

| | | | |
|---|---|---|---|
| 5 ஆதி திராவிடர்கள்/பழங்குடியினர்/மிகவும் பின் தங்கிய வகுப்பினர் (குறைந்த அளவுக் கடன்) | .. .. | 10·00 | 10·00 |
| நடுத்தரத் தொழில் துறை:— | | | |
| 1 பின் தங்கிய பகுதி | .. | 10·25 | 11·25 |
| 2 பின் தங்கிய பகுதி அல்லாத பிற பகுதிகள் | .. | 13·50 | 14·50 |

4. நிதி வாயில்கள்:—முக்கியமாக தமிழ்நாடு அரசு மற்றும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அளிக்கும் பங்கு மூலதனம் முறையே 53·08 சதவீதம் மற்றும் 42 9 சதவீதம் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவி, கடனீட்டுறுதிப் பத்திரங்கள், வைப்புத் தொகைகள், முதலியவை இந்நிறுவனத்தின் வாயில்களாகும்.

1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ம் நாள் அன்றுள்ளவாறு இந்நிறுவனத்தின் நிதி வாயில்களின் நிலவரம் கீழே கொடுக்கப்பட்டு உள்ளது:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்றுள்ளபடி (தற்காலிக மானவை). |
|---|---|
| 1 பங்கு மூலதனம் .. .. .. | 1,399·56 |
| 2 கடனீட்டுறுதிப் பத்திரங்கள் .. .. | 1,675·58 |
| 3 இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி உதவி .. .. .. | 3,689·51 |
| 4 பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட குறிப்பிட்ட கால வைப்பீடுகள் .. .. | 322·62 |
| 5 நிறுவனத்தின் ரொக்க நிதி வாயில்கள் .. | 675·00 |
| | 7,762·27 |



5. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறும் மறுநிதி உதவி.—இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, குறைந்த வட்டி வீதத்தில் தாராளமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு மறுநிதி உதவி அளிக்கிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தில் செலுத்தப்பட்ட மூலதனமும் இலவச ஒதுக்கீடுகளும் சேர்ந்து எவ்வளவு தொகை வருமோ அதைப் போல் மூன்று மடங்கு வரை இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதி உதவி அளிக்கிறது. 1980-81 ஆம் ஆண்டில் (1980 டிசம்பர் வரையில்) இந் நிறுவனம் ரூபாய் 8·92 கோடி மறுநிதி உதவி பெற்று உள்ளது. 1979–80-ல் பெற்ற மறுநிதி உதவி ரூபாய் 9·69 கோடியேயாகும். மேலும் 1980–81 ஆம் ஆண்டில் (1980 டிசம்பர் வரையில்) இந்திய தொழில் வளர்ச்சி வங்கிக்கு ரூபாய் 3·82 கோடி திரும்பச் செலுத்தப்பட்டு உள்ளது. 1979–80-ல் மறுநிதி உதவிபெற்ற வகையில் ரூபாய் 5·34 கோடியே திரும்பச் செலுத்தப்பட்டது. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் இறுதியிலும் மற்றும் 1980-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் இறுதியிலும் நிலுவையாக உள்ள மறுநிதி உதவித்தொகைகள் முறையே ரூபாய் 36·90 கோடியும் ரூபாய் 31·79 கோடியும் ஆகும்.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதி உதவி பெற்று அசலையும் வட்டியையும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் எப்பொழுதும் காலந்தாழ்த்தாமல் திரும்பச் செலுத்தி வந்துள்ளது.

6. 1979-80 மற்றும் 1980-81 ஆம் ஆண்டுகளில் (1980 டிசம்பர் வரையில்) செயலாக்க ஆய்வு.—இந் நிறுவனத்தின் 1980-81 ஆம் ஆண்டில் (1980 டிசம்பர் வரை) செயலாக்கம் 1979-80 ஆம் ஆண்டில் செயலாக்கத்தோடு ஒப்பிடுகையில் போற்றத் தகுந்த முன்னேற்றத்தை இந்நிறுவனம் பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசின் தொழிற் கொள்கைக்கிணங்க, இந் நிறுவனம் வேலை வாய்ப்பினைப் பெருமளவில் ஏற்படுத்த வேண்டுமென்ற முக்கிய நோக்கத்துடன், சிறு மற்றும் சின்னஞ் சிறு தொழில் துறைகளிலுள்ள தொழில் நிலையங்கள், அதிலும் குறிப்பாக கிராம மற்றும் ஓரளவு நகர்ப் பாங்குள்ள பகுதிகளில் அமைக்கப்படுகின்ற தொழில் நிலையங்களை ஊக்குவித்து சிறப்பு முன்னுரிமை அளித்து வருகிறது. பொருளாதார நிலையில் பின் தங்கி நலிந்துள்ள மக்கள், தொழில் நிலையங்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காகவும், மற்றும் தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படச் செய்யவும் பல வேறு புதிய திட்டங்களும் சலுகைகளும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் ஆய்வுக் குழு ஒன்று 1980 ஆம் ஆண்டு ஜூலை-ஆகஸ்ட் திங்களில் தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் செயலாக்கத்தை மதிப்பீடு செய்து இந்நிறுவனம் 1980-81 ஆம் நிதி ஆண்டில் சிறப்பாகச் செயலாற்றியுள்ளது என்று பாராட்டியுள்ளது.

(i) **உதவி அளிக்கப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை**— 1979-80 மற்றும் 1980-81 ஆம் (டிசம்பர் 1980வரை) ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் செயலாக்கத்தினால், நிறுவனத்திடமிருந்து உதவி பெற்ற தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து உள்ளது. இவ்வாண்டுகளில் இந் நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரங்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1979–80 | | 1980-81 (1980 டிசம்பர் வரையில்). (தற்காலிகமானவை). | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை. |
| ஒப்புதல் அளிக்கப் பட்டவை. | 1,500 | 1,719·13 | 2,765 | 2,377.91 |

இவற்றில் பெரும்பாலானவை இம் மாநிலத்தின் பிற் பட்ட பகுதிகள் மற்றும் கிராமப் பகுதிகளிலுள்ள சிறு மற்றும் சின்னஞ்சிறு துறைகளைச் சார்ந்த தொழில் நிலையங்கள் என்பது போற்றத்தக்கதாகும். முன்பே தெரிவித்துள்ளவாறு 1980 ஆம் ஆண்டு செப்டம்பரில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் வட்டார/கிளை அலுலகங்களுக்கு கடன் வழங்கும் அதிகாரமளித்ததன் மூலம் அந்த ஆண்டில் இந்நிறுவனத்திடமிருந்து பெருமளவிலான சிறு மற்றும் சின்னஞ்சிறு துறைகளைச் சார்ந்தத் தொழில் நிலையங்கள் நிதியுதவி பெற்றுள்ளன.

இந்நிறுவனத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தத் தொகை வழங்கப்பட்ட தொகை மற்றும் நிலுவையிலுள்ள தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

| | | எண்ணிக்கை. | தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை—. | | | |
| 31—3—1980 வரை | .. | 4,765 | 14,382.86 |
| 31—12—1980 வரை | .. | 7,438 | 16,327.40 |



| | | | |
|---|---|---|---|
| வழங்கப்பட்ட தொகை— | | | |
| 31—3—1980 வரை | .. | .. | 11,862.05 |
| 31—12—1980 வரை | .. | .. | 13,175.24* |
| நிலுவையிலுள்ள தொகை— | | | |
| 31—3—1980 வரை | .. | .. | 7,174.38 |
| 31—12—1980 வரை | .. | .. | 7,714.86* |

* தற்காலிகமானவை.

(ii) **வேலை வாய்ப்புகள்.**—இந்த நிறுவனத்தினால் உதவி அளிக்கப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை குறிப்பாக, சிறு மற்றும் சின்னஞ்சிறு தொழில் துறைகளில் உயர்ந்துள்ளதால், வேலை வாய்ப்புகள் பெருமளவில் உயர்ந்துள்ளன. இந்நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிதி உதவியால் இவ்வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இவற்றினால் சமுதாயத்தில் நலிந்துள்ள மக்களின் பெரும்பாலானவர்கள் பலன் அடைந்து உள்ளனர்.

இந்நிறுவனத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வேலை வாய்ப்பு விவரங்கள் பின்வருமாறு:—

| | எண்ணிக்கை. |
|---|---|
| 1979–80 .. .. .. .. | 19,626 |
| 1980–81 (1980 டிசம்பர் வரையில்) | 24,079 |

(தற்காலிகமானவை).

(iii) **சிறு தொழில்களுக்கு நிதியுதவி.**—ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, இந்நிறுவனம் சமுதாயத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள பெரும்பாலானோருக்குப் பயன்படுகின்ற வகையில் சிறு தொழில் துறைக்கு அதிக அளவில் நிதி உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின் வருமாறு:—

நிதி உதவியின் அளவு .. குறைந்த அளவு ரூபாய் 5,000 உச்ச அளவு ரூபாய் 30·00 இலட்சம்; தனி நிறுவனங்களுக்கு உச்ச அளவு ரூபாய் 30 இலட்சமாகும். தனி நபர் உடைமை, பங்குதாரர் உடைமை நிறுவனங்களுக்குக்கடனின் உச்ச அளவு ரூபாய் 15 இலட்சமாகும்.

| | |
|---|---|
| வட்டி வீதம் .. .. .. | பிற்பட்ட பகுதியிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு ஆண்டொன்றுக்கு 10·25 சத வீதம். |
| | இதர பகுதியிலுள்ள தொழில் நிறுவனங்களுக்குஆண்டொன் றுக்கு 11.85 சதவீதம். |
| திரும்பச் செலுத்தும் காலம் .. | தொழில் திட்டங்களின் தன்மைகளுக்கேற்ப 10 முதல் 16வரையிலான அரை ஆண்டுத் தவணைகளில் திரும்பச் செலுத்தத் தக்கதாகும். |

இத் தொழில் பிரிவுகளுக்கு இந்நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவிகளின் விவரங்கள் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1979-80. | | 1980-81 (1980 டிசம்பர் வரையில் தற்காலிக மானவை). | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| சிறு தொழில் துறைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | 1,447 | 886·36 | 2,705 | 1,573.96 |

(iv) பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி.— மாநிலத்தின் கிராம மற்றும் ஓரளவு நகரப் பாங்குள்ள பகுதிகளில் தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு இந் நிறுவனம் பெருமளவில் நிதி உதவி அளித்து வருகிறது.

உதவிகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

எளிய நிபந்தனைகளின் பேரில் ரூபாய் 30 இலட்சங்கள் வரை கடன்கள்.



சிறு அல்லது பெரு ரகத்தொழில் நிலையங்களுக்கு ஆண்டொன்றுக்கு 10·25 சதவீத வட்டி வீதமும், மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்களால் தொடங்கப்படும் தொழில்களுக்கு ஆண்டொன்றுக்கு 10·25 சதவீத வட்டி வீதமும்.

கடன்களைத் திரும்பச் செலுத்தத் துவங்குவதற்குரிய அவகாச காலம் 4 ஆண்டுகள் வரை.

கடன்களைத் திரும்பச் செலுத்தும் காலம் 14 ஆண்டுகள் வரை.

காப்புத் தொகையாக கடன் வாங்குவோர் கொண்டுவர வேண்டிய நிதி கோருவதில் இணக்கமான அணுகு முறை.

பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு இந் நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவிகளின் விவரங்கள் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1979-80. | | 1980-81 (1980 டிசம்பர் வரையில்) (தற்காலிக மானவை). | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | 971 | 926.00 | 1,477 | 1,306.60 |

(v) தொழில் நுட்ப வல்லுநர்கள்.—தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு அதாவது தொழில் நுட்பவியல் பட்டம்/தகுதிப் பட்டயம்/சான்றிதழ்கள் மற்றும் பல்வேறு தொழிலியல் தயாரிப்புகளில் முன்அனுபவம் மற்றும் திறன் கொண்டவர்கள் தாங்களாகவே தொழில் நிலையங்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக இந்நிறுவனம் இத் திட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. இத் திட்டத்தில் முக்கிய அம்சங்களாவன:—

ரூபாய் 3 இலட்சம் வரை கடன்கள் வழங்குதல்.

பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் பிரிவுகளுக்குச் சலுகையாக ஆண்டொன்றுக்கு 10·25 சதவீத வட்டி வீதமும், இதர பகுதிகளில் ஆண்டொன்றுக்கு 11·85 சதவீத வட்டி வீதமும்,

ரூபாய் 2 இலட்சம் வரை கடன் வாங்குவோர் காப்புத் தொகையாக நிதி கொண்டு வர வேண்டியதில்லை. கடன் ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மேல் காப்புத் தொகை 10 சதவீதம் கட்ட வேண்டும்.

கடன் தொகையைத் திரும்பச் செலுத்தத் துவங்குவதற்கு நீண்ட அவகாச காலமும் திரும்பச் செலுத்த வேண்டிய கால அளவும் அதிகமானதாகும். இத் திட்டத்தின்கீழ் இந் நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரங்கள் பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1979-80. | | 1980-81 (1980 டிசம்பர் வரையில்) (தற்காலிக மானவை) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை | 48 | 65.79 | 30 | 41.72 |

(6) போக்குவரத்து உரிமையாளர்களுக்கு உதவி.—ஆட்டோ ரிக்ஷாக்கள், சுற்றுலா வாடகை கார்கள், லாரிகள், ஆட்டோ டிரெய்லர்கள், டிரக்குகள், டெம்போக்கள், வான்கள் போன்ற போக்குவரத்து வண்டிகளை வாங்க உதவும் வகையில் இந் நிறுவனம் ஒரு தனித் திட்டத்தை வகுத்துள்ளது. இந்த உதவியின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு :—

(அ) ஆட்டோ ரிக்ஷா (உரிமையாளரே ஓட்டுவது).

வட்டி விதம் : 14·40 சதவீதம். ஒழுங்காகத் தொகையைத் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு வட்டியில் 2 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

கடனுதவி வண்டியின் விலையில் 85 சதவீதம் வரை. (ஆதி திராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு 90 சதவீதம் வரை கடனுதவி அளிக்கப்படுகிறது.)

கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் : மாதத் தவணைகளில் நான்காண்டுகள் காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும்.



(ஆ) [illegible] டிரக் வண்டி உரிமையாளர்கள். (உரிமையாளரே ஓட்டுவது)

கடனுதவி : வண்டியின் விலையில் 85 சதவீதம் வரை.

வட்டி விதம் : 14.40 சதவீதம். ஒழுங்காகத் தொகையைத் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு வட்டியில் 2 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

திருப்பிச் செலுத்தும் காலம் : ஐந்தாண்டுகள் வரை.

(இ) இதர வண்டி உரிமையாளர்களுக்கு :

கடனுதவி : புது வண்டியின் விலையில் 75 சதவீதம் வரை.

வட்டி விதம் : 15.50 சதவீதம். ஒழுங்காகத் திருப்பிச் தொகையைத் செலுத்துபவர்களுக்கு வட்டியில் 2 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

உதவி பற்றிய விவரங்கள் பின் வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்)

| | 1979-80. | | 1980-81 (1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை) (தற்காலிகமானவை). | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| போக்குவரத்து உரிமையாளர்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள் .. .. | 96 | 39.91 | 427 | 142.43 |

இத்திட்டத்தின் மூலம் முக்கியமாகப் பயன் அடைந்தவர்கள் பின் தங்கிய பகுதிகளைச் சார்ந்த ஒற்றை டிரக் உரிமையாளர்களே ஆவார்கள்.

(vii) மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு உதவி.—மின் வெட்டுக் காலங்களில் ஏற்படும் இடையூறுகளை களைவதற்கு மின் உற்பத்தி எந்திரங்களையும் டீசல் எந்திரங்களையும் வாங்கவும், தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் இத் திட்டத்தின்கீழ் கடனுதவி அளிக்கிறது. உதவி வழங்குவதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு :—

கடனுதவி : ரூ. 5 இலட்சம் வரை (தகுதி அடிப்படையில் கடன் தொகை உயர்த்தப்படும்).

திருப்பிச் செலுத்தும் காலம் : 3 முதல் 5 ஆண்டுகள் வரை. கடன் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து 6 திங்கள் கழித்து கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்கலாம்.

கடன்பெறுவோர் போட வேண்டிய காப்புத் தொகை : 25 சதவிதம் —நடுத்தரத் தொழிலாளர்களுக்கு 15 சதவிதம்—சிறு தொழில்களுக்கு.

வட்டி விதம் : தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தை பொறுத்து ஆண்டொன்றுக்கு 10·25 சதவீதம் முதல் 14·5 சதவீதம் வரை.

உதவியின் விவரம் பின் வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்)

| | 1979–80. | | 1980–81 (1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை) (தற்காலிகமானவை). | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள் .. | 28 | 51·68 | 69 | 171·95 |



மாநிலத்தில் போதுமான அளவு மின்சாரம் கிடைக்காததால், இத் திட்டத்தின்கீழ் அதிக அளவில் தொழில் நிறுவனங்கள் கடனுதவி பெற்றுள்ளன.

(viii) உலக வங்கி அளிக்கும் கடனுதவியைப் பெற்றுத் தருதல்—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்கள், கூட்டு உறுப்புகள், முதலியவற்றை இறக்குமதி செய்தல், தொழில் நுட்ப அறிவுத் திறனைப் பெறுதல் முதலியவற்றிற்காக உலக வங்கி வழங்கும் அந்நிய செலாவணிக் கடன் உதவியைப் பெற்றுத் தரும் நிறுவனமாக இம் மாநிலத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் முக்கியக் கூறுகள் பின் வருமாறு :—

கடனுதவி : ரூ. 30 இலட்சங்கள் வரை.

வட்டி விதம் : சிறு தொழில் பிரிவுகளுக்கும் பின் தங்கிய பகுதிகளில் உள்ள எல்லாத் தொழில் பிரிவுகளுக்கும் ஆண்டொன்றுக்கு 12·10 சதவிதம் ; பின்தங்கிய பகுதிகளல்லாத பிற பகுதிகளில் உள்ள நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு ஆண்டொன்றுக்கு 12·70 சதவிதம்.

கடனைத் திரும்பச் செலுத்தத் தொடங்க அனுமதிக்கப்படும் காலம் :— 2 முதல் 4 ஆண்டுகள் வரை.

திரும்பிச் செலுத்தும் காலம் :— 12 ஆண்டுகள் வரை.

இத் திட்டத்தின்கீழ் 1980–81-ல் வழங்கப்பட்ட நிதி உதவியின் அளவு பின் வருமாறு கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது.

(தொகை ரூபாய் இலட்சத்தில்)

| | 1979–80 | | 1980–81 (1980 டிசம்பர் வரை) (தற்காலிகமானவை) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| உலக வங்கி கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள் .. | 12 | 99·87 | 24 | 268·52 |

(ix) எளிய நிபந்தனையில் கடன் வசதி.—எளிய நிபந்தனையில் கடன் வழங்கும்/தொடக்க முதலீட்டு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ், சிறு தொழில்களுக்கும், சின்னஞ்சிறு தொழில்களுக்கும் நிதி உதவி அளிக்கும் திட்டத்தை இந் நிறுவனம் வகுத்துள்ளது. தொழில் திட்டத்திற்குத் தேவையான மூலதனத்தில், தொழில் முனைவோர் செலுத்த இயலும் மூலதன பங்கு போக, பாக்கி தேவைப்படுகின்ற மூலதனத்தைப் பெறுகின்ற வகையில் இந் நிதி உதவி அளிக்கப்படுகிறது. தகுதி வாய்ந்த தொழில் நுட்பத்திறன் படைத்த வல்லுநர்களாக உள்ள தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் வகையில், குறிப்பாக, தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளிலும் தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளிலும், தொழில்களை நிறுவ தெரிந்தெடுத்து உதவுகின்ற அடிப்படையில் இத் திட்டத்தின்கீழ் உதவி அளிக்கப்படுகிறது. தனி உரிமையாளர் மற்றும் பங்குதாரர் தொழில் நிறுவனங்களுக்கு இந்த உதவியானது குறைந்த வட்டிக் கடனுதவி வடிவில் ஆண்டொன்றுக்கு ஒரு சதவீத வட்டி வீதத்தில் அளிக்கப்படுகிறது. வரையறுக்கப்பட்டுள்ள நிறுவனங்களைப் பொறுத்த வரை (Limited Companies) இந்த நிதி உதவியானது சேர்ந்து வரும் முன்னுரிமைப் பங்குகள் வடிவில் (Cumulative preference shares) வழங்கப்படும். இத் திட்டத்தின்படி இந் நிறுவனம் வழங்கியுள்ள உதவி பின் வருமாறு :

(தொகை ரூபாய் இலட்சத்தில்.)

| | 1979–80 | | 1980–81 (1980 டிசம்பர் வரை) (தற்காலிகமானது). | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை | எண்ணிக்கை. | தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| எளிய நிபந்தனைக் கடன் வழங்கும்/தொடக்க முதலீட்டு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப் பட்ட கடன்கள் .. | 687 | 34·65 | 236 | 15·51 |

இத் திட்டத்தின் சிறப்புக் கூறுகள் பின் வருமாறு :—

கடன் தொகையின் அளவு.. ரூ. 2 இலட்சம் (அல்லது) தொழில் திட்டத்தின் செலவில் 20 சதவீதம் (இவற்றில் எது குறைவோ அது).

வட்டி வீதம் :— ஒரு சதவீதம்.

திருப்பிச் செலுத்தும் காலம் : தொழில் நிறுவனத்தின் தன்மையைப் பொறுத்தது.



(x) சின்னஞ்சிறு கடன் / கூட்டுக் கடன் திட்டம்.— சமுகத்தில் பொருளாதார நிலையில் பின் தங்கியவர்கள் பெரும் அளவில் பயன் அடையும் பொருட்டு, சின்னஞ்சிறு கடன் வழங்கும் திட்டத்தை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ், தனித்தியங்கவல்ல தொழில் நிலையங்களுக்கு ரூ. 5,000 முதல் ரூ. 25,000 வரை கடன் அளிக்கப்படுகிறது. வட்டார/கிளை அலுவலகங்கள் தற்போது ரூ. 25,000 வரை கணிசமான அளவுக்குக் கடன் வழங்குகின்றன. முக்கியமாக, கிராமப் பகுதிகளிலும் தொழிலில் பின் தங்கிய பகுதிகளிலும், உள்ள தொழில்களை மேம்படுத்துவதற்குப் பெரும் அளவில் வேலை வாய்ப்பினை தோற்றுவிப்பதற்கும் இத் திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. கூட்டுத் கடன் திட்டத்தின்கீழ் நிலையான இருப்புகளை ஏற்படுத்தவும், நடைமுறை மூலதனக் கடன் வசதிக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந் நிறுவனம் வழங்கும் இந்த உதவியைப் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :

(தொகை ரூபாய் இலட்சத்தில்.)

| | 1979–80. | | 1980–81. | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை | எண்ணிக்கை. | தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சின்னஞ்சிறு கடன்/கூட்டுக் கடன் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப் பட்ட கடன்கள் .. | 615 | 81.33 | 1,735 | 313·84 |

இத் திட்டத்தின் சிறப்புக் கூறுகள் பின் வருமாறு :

இதற்கு முன் குறைந்த பட்ச கடனாக ரூ. 10,000 வழங்கப் பட்டு வந்தது. இப்போது அது ரூ. 5,000 என வரையறுக்கப் பட்டுள்ளது. இதற்கு ஆண்டொன்றுக்கு வட்டி விகிதம் 10 சதவீதம். ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், மிகவும் பின் தங்கிய வகுப்பினர், ஆகியோர் உரிய காலத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்தி விட்டால் 1 சதவீதம் வட்டி சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 11 சதவீதம் என்ற வீதத்தில் வட்டி வசூலிக்கப்படும். வட்டித் தொகையையும், அசல் தொகையின் தவணையையும், உரிய கால அளவிற்குள் திருப்பிச் செலுத்தி விட்டால் 1 சதவீதம் சிறப்பு தள்ளுபடி வழங்கப்படும்.

### (x) நிதியுதவி குறித்து மாவட்ட வாரியான பகுப்பாய்வு.

1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளில் மாவட்ட வாரியாக வழங்கப்பட்ட நிதி உதவியின் ஒப்பீட்டு நிலையைக் காட்டுகின்ற அறிக்கை:—

(தொகை ரூபாய் இலட்சத்தில்.)

| மாவட்ட வாரியாக. | 1979–80. | | 1980–81 (1980 டிசம்பர்வரை) (தற்காலிகமானது) 1979–80. | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) பின்தங்கிய மாவட்டங்கள்:— | | | | |
| 1 தருமபுரி .. .. | 398 | 372.14 | 326 | 397.52 |
| 2 வட ஆற்காடு .. | 48 | 141 60 | 141 | 171.86 |
| 3 மதுரை .. .. | 162 | 162·48 | 234 | 234.49 |
| 4 இராமநாதபுரம் .. | 63 | 91·88 | 196 | 159.44 |
| 5 தென் ஆற்காடு .. | 177 | 74·59 | 174 | 49.73 |
| 6 திருச்சிராப்பள்ளி. | 63 | 18 71 | 234 | 130.32 |
| 7 கன்னியாகுமரி .. | 20 | 8·26 | 40 | 40.65 |
| 8 புதுக்கோட்டை .. | 27 | 45·40 | 46 | 89.33 |
| 9 தஞ்சாவூர் .. | 11 | 10·02 | 85 | 30.06 |
| | 969 | 925·08 | 1476 | 1303.40 |
| 10 பாண்டிச்சேரி .. | 2 | 0·92 | 1 | 3.20 |
| மொத்தம் (அ) —.. | 971 | 926·00 | 1477 | 1306.60 |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| (ஆ) பின்தங்கிய மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்கள்: | | | | |
| 11 செங்கற்பட்டு .. | 206 | 234·39 | 80 | 235.67 |
| 12 கோயம்புத்தூர் .. | 75 | 275·45 | 169 | 184.99 |
| 13 சென்னை .. | 136 | 118·09 | 518 | 362.18 |
| 14 பெரியார் .. | 24 | 28·09 | 26 | 37.80 |
| 15 சேலம் .. .. | 42 | 104·72 | 338 | 176.92 |
| 16 நீலகிரி .. .. | 1 | 6·25 | .. | .. |
| 17 திருநெல்வேலி .. | 45 | 26·14 | 157 | 73.75 |
| மொத்தம் (ஆ) .. | 529 | 793·13 | 1288 | 1071.31 |
| ஆக மொத்தம் (அ+ஆ).. | 1500 | 1719·13 | 2765 | 2377.91 |

1979–80ஆம் ஆண்டுப் புள்ளி விவரங்களுடன் ஒப்பிடும்போது 1980–81ஆம் ஆண்டில் (1980 டிசம்பர்வரை) பின்தங்கிய பகுதிகளில் தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையளவிலும் தொழில்களின் எண்ணிக்கையிலும் கணிசமான அளவிற்கு அதிகரித்திருப்பது மேற்கண்ட அட்டவணையிலிருந்து தெரிய வரும். ஆகவே பின்தங்கிய பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில்களுக்குக் கடன் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்பதும் இதனால் தெரிய வரும். பின்தங்கிய மாவட்டங்களில், தருமபுரி, மதுரை, திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு, இராமநாதபுரம் மற்றும் தென் ஆற்காடு மாவட்டம் 1980–81ஆம் ஆண்டில் (1980 டிசம்பர்வரை) கணிசமான அளவு நிதி உதவி பெற்றுள்ளன.

10. <u>இவ்வாண்டில் (1980–81) அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள்/சலுகைகள்/திருத்தங்கள்.</u>—(i) ஆவணங்களை எழுதிக் கொடுப்பதில் திருத்தம். நிறுவனத்திடமிருந்து உதவி பெறும் பிரிவுகளுக்கு எந்திரங்களை வாங்குவதற்குக் கடன் அனுமதி வழங்கும்போது நிறுவனம் தேவையான பிணையப் பத்திரத்தை எழுதி வாங்கிக் கொள்கிறது. பின்னர், தொழில் பிரிவுகள் வாங்கும் எந்திரங்களின் இனத்தில் மாற்றமிருக்குமானால் அத்தொழில் பிரிவுகள் பொதுவாக மூலப் பத்திரத்தில் திருத்தம் செய்து புதிய பத்திரமொன்றை எழுதிக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுவது வழக்கம்.

இவ்வாறு தொழில் பிரிவுகள் வாங்கும் எந்திரங்களில் மாற்றம் இருப்பதாக அவற்றிடமிருந்து திருத்த ஒப்பந்தப் பத்திரமெனும் நடைமுறையை சோதனை ஏற்பாடாக ஓராண்டு காலத்திற்கு நிறுத்தி விடவும் பின்னர் நிலைமையை மறு ஆய்வு செய்யவும் நிறுவனம் தற்போது முடிவு செய்திருக்கிறது.

(ii) ஏற்கனவே ஒதுக்கப்பட்ட கடன் தொகையை ஒரு தொழிற் பிரிவு. நிறுவனத்திடமிருந்து பெறாமல் காலந்தாழ்த்தும் போது விதிக்கப்படும் கட்டணம் இந்தியத் தொழில் வளர்ச்சியின் ஆய்வு அறிக்கை.—இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி[illegible]டமிருந்து பெறப்பட்ட ஆலோசனையைக் கருத்திற் கொண்டு [illegible]க வங்கிக் கடனைப் பொறுத்தவரையில் பின் தங்கிய பகுதி[illegible]ல் அமைந்துள்ள தொழில் பிரிவுகளுக்கு அரை [illegible]நம் என்னும் அளவில் தற்போது விதிக்கப்படுவதற்குப் பதிலாக தொழில் பிரிவு எந்த இடத்தில் அமைந்திருந்தாலும் 1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் தேதி முதற் கொண்டு தொழிற் பிரிவிற்கு வழங்கப்பட்ட கடனைப் பெறுவதில் காலந்தா[illegible]கயில் விதிக்கப்படும் கட்டணம் ஒரு சதவீதம் என்று ஒ[illegible]ான வீதத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(iii) தொழில் பிரிவுக[illegible]ித்த காலக் கடன்/தொடக்க முதலீட்டு உதவிக் க[illegible] குறித்த காலக் கடனும் வழங்குதல்.— குறித்த [illegible] கடன் வகையிலும், தொடக்க முதலீட்டு உதவிக் கட[illegible]கயிலும், நிதி உதவி பெறும் திட்டங்களைப் பொறுத்த வரையில், தொடக்க முதலீட்டு உதவிக் கடன் குறித்த மனுவின்[illegible] முடிவு எடுக்கும்போது, குறித்த காலக் கடன் வழங்குவது [illegible]ம் நிறுவனம் பரிசீலனை செய்யும்.

[illegible]ுக்கு மேற்பட்ட லாரி அல்லது டிரக்குகளை வா[illegible]்கான நிதி உதவி.— தற்போதுள்ள வழிமுறை [illegible], ஒரே ஒரு டிரக் வைத்திருக்கின்றவர்களுக்கு மட்டுமே [illegible] உதவி வழங்குவதைப் பரிசீலனை செய்ய நிறுவனம் முடிவு செய்துள்ளது. மேலும் பொதுச் சுமையேற்றிகளா[illegible]ள்ள டிரக்குகள் ஏனைய வகைச் சரக்கு வண்டிகள் போன்ற பிற இனங்களுக்கும், ஒற்றை டிரக் வண்டி உரிமையாளர்களுக்குக் கடனுதவி வழங்கும் திட்டத்தை நீட்டிப்பதென நிறுவனம் முடிவு செய்துள்ளது.

(v) மின் உற்பத்தி எந்திரம் வாங்குவதற்கான கடன்கள்—கடன் தொகையை ரூ. 5,000 ஆகக் குறைத்தல்.— மின் வெட்டால் பாதிக்கப்பட்ட தொழில் பிரிவுகள் மின் உற்பத்தி எந்திரத்தை அல்லது எண்ணெய்ப் பொறிகளை வாங்குவதற்குக் கடன் வழங்கப்பட்டு வருவது போல சிறு தொழில் முனைவோர்களுக்கும்



அத்தகைய நிதி உதவி வழங்குவது குறித்துப் பரிசீலனை செய்யும் நோக்கத்துடன், தற்போது அனுமதிக்கப்படுகின்ற கடன் தொகையின் குறைவளவு ரூ. 10,000-லிருந்து ரூ. 5,000 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

(vi) மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்கள் வாங்குவதற்கு நிதி உதவி அளித்தல்.— மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்கள் வாங்க நிதி உதவி அளிக்க இந் நிறுவனம் முடிவு செய்துள்ளது. முதற் கட்டமாக, மோட்டார் பொருத்தப்பட்ட ஐம்பது சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு நிதி உதவி வழங்கப்படும்.

(vii) ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்குவதற்கான நிதி உதவி வழங்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல்.— ஓர் இலட்சமும் அதற்குக் கூடுதலாகவும் மக்கள் தொகை உடைய பெரிய நகரங்களுக்கும், இராணிப்பேட்டை, ஒசூர் போன்ற தொழிற்சாலைத் தொகுதிகள் அமைந்துள்ள நகரங்களுக்கும் மட்டுமே ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்க தற்போது நிதி உதவி வழங்கப்படுகிறது. இக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி வாய்ப்பு இருக்குமானால் மக்கள் தொகையின் அளவு ஓர் இலட்சத்திற்கும் குறைவாக இருந்தாலும், அத்தகைய அனைத்து நகரங்களுக்கும் அல்லது வணிக மையங்களுக்கும் ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்கக் கடன் வழங்குவதைப் பரிசீலனை செய்வதென நிறுவனம் முடிவு செய்துள்ளது.

(viii) மத்திய அரசு ஒப்பளிக்கும் உதவித் தொகையை ஒட்டி அத்தொகையைத் தொழில் நிறுவனங்களுக்கு முன் கூட்டியே கடனாக வழங்கும் திட்டத்தின்கீழ் சிறு கடன்கள் (கூட்டுக் கடன்களைப்) பொறுத்து வட்டி விதம்.— மத்திய அரசு ஒப்பளிக்கும் உதவித் தொகையை ஒட்டி வழங்கப்படும் சிறு கடன்களைப் பொறுத்து குறித்த காலக் கடனுக்காக வட்டி விதத்தையே விதிக்க இந்நிறுவனம் முடிவு செய்துள்ளது.

(ix) அனுமதியளித்தல், ஆவணங்களை எழுதுதல், தொகை வழங்கல் போன்ற அதிகாரங்களை வட்டார அல்லது கிளை அலுவலகங்களுக்குப் பிரித்துக் கொடுத்தல்— நிறுவனத்தின் பணிகளைப் பரவலாக்குதல்.— நிறுவனத்தின் பணிகளைப் பரவலாக்கும் நோக்குடன் போக்குவரத்துக் கடன்கள் குறித்த நேர்வில் ரூ. 50,000 வரையும் ஏனைய குறித்த காலக் கடன்களைப் பொறுத்த நேர்வுகளில் (அதாவது சிறு கடன்கள் அல்லது கூட்டுக் கடன்கள்) ரூ. 25,000 வரையும் கடன் அனுமதி வழங்கவும்,

ஆவணங்களை எழுதிக் கொடுக்கவும், தொகை வழங்கவும், நிறுவனத்தின் வட்டார அல்லது கிளை மேலாளர்களுக்கு அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு ஒப்பளிக்கும் உதவித் தொகையை ஒட்டி அத் தொகையை தொழில் நிறுவனங்களுக்கு முன்கூட்டியே கடனாக வழங்குவதற்கும், இதுபோன்ற சலுகையோடு வழங்கப்படும் நிதி உதவி அளிப்பதற்கும், வட்டார/கிளை மேலாளர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(x) சிறு தொழில்களுக்கான கடன் உத்திரவாதத் திட்டம்.—சிறு தொழில் பிரிவுகளுக்கு ஏற்படும் இடர்பாட்டைக் குறைக்கும் பொருட்டு, கடன் உத்திரவாதத் திட்டத்தின்கீழ் வரும் தொழிற் பிரிவுகளுக்கு ரூ. 10,000 வரை வழங்கப்படும் கடன்களைப் பொறுத்தமட்டில். ஈட்டுறுதி வலியுறுத்தப்பட வேண்டியதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

(xi) புதிய வைப்பீடுகளை ஏற்றுக் கொள்ளுதல்/ஏற்கனவே செய்யப்பட்டுள்ள வைப்பீடுகளைப் புதுப்பித்தல்.—ரூ. 5 கோடி வரையில் குறித்த கால வைப்பீடுகளை ஏற்றுக்கொள்ள/புதுப்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வைப்பீடுகளை உரிய நாளுக்கு முன்னதாகப் பெற்றுக்கொள்ளும் நிலைகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டி வீதத்தில் அவ்வாறு முன்னதாக பெற்றுக் கொள்ளும் நாள் வரையில் வட்டித் தொகை அளிப்பதாக அறிவித்தது, 1980 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ஆம் நாளிலிருந்து திரும்பப் பெறப்பட்டுள்ளது.

(xii) வட்டி வீதத்தை திருத்தியமைத்தல்.—கீழே குறிப்பிட்டுள்ளவற்றைப் பொறுத்த மட்டில் நிறுவனம் 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1ஆம் நாளிலிருந்து வட்டி வீதங்களைத் திருத்தியுள்ளது :—

| | தற்போதுள்ளது. | திருத்தியமைக்கப்பட்டது. |
|---|---|---|
| | (சதவீதம்.) | |
| (அ) ஆதி திராவிடர்கள் அல்லது பழங்குடியினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்குச் சிறிது கடன்கள்/கூட்டுக் கடன்கள். | 8 | 9 |
| (ஆ) சிறிய கடன்கள் அல்லது கூட்டுக் கடன்கள் (அதாவது ரூ. 25,000 வரையில்) கடன்கள். | 9 | 10 |
| (இ) பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களுக்கு வழங்கப்படும் கடன்கள். | 9.5 | 12 |



(xiii) கடன்களுக்கு அரையாண்டு வட்டி வீதத்தை கணக்கிடுதல்—பழைய நடைமுறையை மீண்டும் பின்பற்றுதல்—மாதாந்திரத் தவணைகளுக்கு ஆண்டு அடிப்படையில்.—வட்டி வீதத்தைக் கணக்கிடும் முறை, பழைய நடைமுறைக்கு மாற்றப்பட்டு, தொகை கேட்கப்படுகிற அரையாண்டின் கடைசி நாள் வரையிலான வட்டி வீதத்தைப் பழைய நடைமுறையின் 1981 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் நாளிலிருந்து கணக்கிடுவதற்கும், அத்தொகை அடுத்த நாளன்று செலுத்துவதற்குரியதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. செலுத்தத் தவறிய தொகைக்கு செலுத்தத் தவறிய காலத்திற்கு 2 சதவீத தண்ட வட்டி விதிப்பதற்குப் பதிலாக, தொகை செலுத்தத் தவறிய நாளன்று நிலுவையாக உள்ள தொகைக்கு 2 சதவீத தண்ட வீதம் விதிக்கப்படும்.

வருங்காலத்திலும், புதிதாக வழங்கப்படும் கடன்களுக்கும், பின்வருமாறு, வட்டியும், தவணைத் தொகைகளும் செலுத்தத் தக்கவையாகும்:—

| கடன் தொகை. | செலுத்த வேண்டியது. |
|---|---|
| (அ) ரூ. 5 இலட்சமும் அதற்கும் மேற்பட்ட கடன்கள். | ஒவ்வொரு காலாண்டிற்கும் வட்டியும் அசலும் செலுத்தத் தக்கதாகும். |
| (ஆ) போக்குவரத்து சிறிய கடன்கள் முதலியவை உட்பட ரூ. 5 இலட்சத்துக்குக் குறைவான கடன்கள். | ஆண்டு அடிப்படையில் வட்டியும் அசலும் கணக்கிடப்பட்டு மாதந்தோறும் செலுத்தத் தக்கவையாகும். |

(xiv) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு—முறைப்படுத்துதல்) சட்டம்—சட்டப்படி பத்திரம் எழுதுவதிலுள்ள சிக்கல்கள்—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் எடுத்துள்ள நடவடிக்கைகள்.—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடம் நிலத்தை அடைமானம் வைக்க நகர்ப்புற நில உச்சவரம்பு அதிகாரிகளிடமிருந்து அவசியமான ஒப்புதலைப் பெறுவதில் நிதியுதவி பெறும் தொழில் பிரிவுகளுக்குள்ள இடர்பாடுகளையும் தாமதத்தையும் தவிர்க்கும் பொருட்டும் தொழில் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படும், தாமதத்தைக் குறைக்கும் பொருட்டும், தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நில (உச்சவரம்பு—முறைப்படுத்துதல்) சட்டத்தின் வரம்புக்குள் வரும் தொழிற் பிரிவுகளைப் பொறுத்த வரையில், பத்திரம் எழுதும் காரியத்திற்கான நடைமுறையில். மேற்படி நிறுவனம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(அ) முன்னரேயுள்ள ஒரு தொழிற் பிரிவுக்கு நிதியுதவி வழங்க வேண்டுமானால் தற்போதுள்ள கட்டிடமும், அக்கட்டிடத்தை அடுத்துள்ள 500 சதுர மீட்டர் நிலமும் பிணையமாக எடுத்துக் கொள்ளப்பட்டு மேற்சொன்ன சொத்துடன், அடைமானமாகவும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமானால், முதற்கண் உச்ச வரம்புக்கு அதிகமாகவுள்ள காலி நிலத்திற்கு இசைவு பெற வேண்டும் என்று வற்புறுத்தி பின்னர் எஞ்சிய நிலம் அடைமானமாக எடுத்துக்கொள்ளப்படும்.

(ஆ) புதிய தொழிற்பிரிவுக்கு நிதியுதவி செய்யப்பட வேண்டுமென்றால், மேற்படி சட்டத்தின் 7-வது பிரிவின்கீழ் தொழிற்பிரிவு உச்சவரம்புக்குள் வரும் நிலத்தின் பரப்பைத் தெளிவாகக் குறிப்பிட்டு அவசியமான உறுதிமொழியைத் தாக்கல் செய்ததற்கான சாட்சியத்தைக் கொண்டுவந்து காட்டுமாயின், உச்சவரம்புக்குள் வரும் நிலமும், அதனை அடுத்த 500 சதுர மீட்டர் நிலமும் பிணையமாகவும் அடைமானமாகவும் எடுத்துக் கொள்ளப்படலாம். அவசியமான இசைவைப் பெற்ற பின்னர், அதிகமாக உள்ள காலி நிலத்தை அடைமானம் வைக்குமாறு தொழிற்பிரிவு கேட்டுக் கொள்ளப்படலாம்.

(இ) வழங்கப்படும் நிதியுதவி கொண்டு புதிய கட்டிடம் கட்டப்பட்டால், அதாவது காலி நிலம் மட்டும் இருந்தால், தொழில் முதலீட்டு நிறுவனம் அனுமதிக்கத்தக்க வரையறைக்குள் உள்ள நிலத்தை, அதாவது நகர்ப்புற நில உச்சவரம்பு நிர்ணயிக்கும் அதிகாரிகளிடமிருந்து விலக்கு பெற வேண்டிய அவசியமில்லாத அளவுள்ள, மேற்படி நிறுவனத்துக்கு அடைமானம் வைக்கக்கூடிய நிலத்தை, தொடக்கக் காலத்தில் ஏற்றுக் கொள்ளலாம். நில உச்சவரம்பு நிர்ணய அதிகாரிகளின் அனுமதியைப் பெற்ற பின்னர் மேற்குறிப்பிட்ட மிகை நிலம் குறித்த அடைமானத்தை ஏற்றுக் கொள்ளலாமென்று அப்பிரிவுக்கு ஆலோசனை கூறலாம்.

(ஈ) மிகை நிலம் சொற்பமாக இருந்தால் (1 மனைவரை) அந்நிலம் முழுவதும் அடைமானத்தில் எடுத்துக் கொள்ளப்படலாம். ஆனால் அரசின் அனுமதி பின்னர் பெற்றுத் தரப்படுமென்ற உறுதிமொழியைப் பெறுவதன் மேல் இத்தகைய அடைமானம் எடுத்துக் கொள்ளப்படலாம்.

(உ) நிறுவனத்தின் நிதியுதவியில் பெரும்பகுதி குறித்து தொழில் பிரிவு நிலம், கட்டிடம் ஆகிய இரண்டையும் பிணையமாக அளித்தால், அத்துணைப் பிணையமும் அடைமானமாக ஏற்றுக் கொள்ளப்படலாம்.

(ஊ) முறையான அடைமானம் நீங்கலாக, எந்திரம், தளவாடங்கள் மீது அடைமானப் பத்திரம் ஒன்றைப் பெறலாம். இச்சட்டத்தின் கீழ் விலக்கு அளிக்கப் பெறாத காரணத்தால் இந்த



அடைமானம் செல்திறனற்றது என்று கருதக்கூடிய நிலை பின்னர் எழுந்தால் எந்திரத் தளவாடங்கள் மீது நிறுவனத்திற்கு உரிமை தொடர்ந்திருக்கும்.

(XV) 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவி நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் நிலுவைத் தொகையை வசூலித்தல்.—இம் மாநிலத்திலுள்ள சிறிய, நடுத்தர, பெரிய தொழிற்சாலைகளுக்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் வழங்கும் கடன்கள் முன்பணங்களை வசூலிக்க இயலும் பொருட்டும் அதே வகையில் நிறுவனத்திற்குச் சேரவேண்டிய அனைத்துத் தொகையையும் நிலவரி பாக்கிகளாக பாவித்து, வசூலிக்க இயலும் பொருட்டும் இந் நிறுவனம் தமிழ்நாடு 1864 ஆம் ஆண்டு நில வரி வசூல் சட்டத்தின் 52(ஏ) (ii) ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள ஒரு நிறுவனமாகும்.

2. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தன்னிடமிருந்து கடன்களைப் பெற்று, காலங்கடந்த நிலுவைகள் வைத்துள்ள தொழிற் பிரிவுகளிடமிருந்து பெருமளவு இச்சட்டத்தின் விதித் துறைகளைப் பயன்படுத்திக் கடன்களை வசூலிக்க முடிந்தது. மேற்படி சட்டத்தின் 52 (ஏ) பிரிவு இயற்றியது. தமிழ்நாடு சட்ட மன்றத்தின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என்று சென்னை உயர்நீதி மன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது.

3. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஒரு மாநில நிதியுதவி நிறுவனமாக இருப்பதால் நிலுவையாக நின்றுள்ள கடன்களைச் செலுத்தத் தவறிய தொழிற் பிரிவுகளிடமிருந்து காலங்கடந்த நிலுவைகளை வசூலிப்பதற்காக, 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவிச் சட்டத்தின் கீழ் தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

11. வசூல் தொகை.—உற்பத்தியையும், ஆதாயத்தையும், பாதிக்கக்கூடிய வகையில் மின்வெட்டு கடன் முடக்கும் நிலக்கரி, கல்கரி இன்றியமையா மூலப் பொருள்கள் முதலியவை கிடைக்காமை போன்ற இடர்ப்பாடுகள் இருந்த போதிலும், நிதியுதவி பெற்ற தொழிற் பிரிவுகளிடமிருந்து நிலுவைத் தொகைகளை வசூலிப்பதில் இந்நிறுவனம் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. கடந்த இரு ஆண்டுகளில் நிறுவனம் வசூலித்த தொகை குறித்த விவரங்கள் வருமாறு:

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1979–80 .. .. .. .. .. | 10,55.01 |
| 1980–81 .. .. .. .. .. | 6,21.37 |

(1980 டிசம்பர் வரை.)

1980-81 ஆம் ஆண்டு முழுவதும் ரூ. 11.00 கோடி வசூலிக்க வேண்டுமென்ற இலக்கை எய்துவதில் இந்நிறுவனம் இணைந்து செயல்பட்டு வருகிறது.

மேலும் இடர்ப்பாடுகளுக்குள்ளான தொழிற் பிரிவுகளைப் பொறுத்த வரையில் வட்டி செலுத்துவதற்குக் காலக்கெடு அளித்தல், அசல் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கான கால அளவை மாற்றுதல், வட்டி வீதம், அசல் தொகை செலுத்துவதற்கான கால அளவை நீட்டித்தல் போன்ற அவசியமான உதவிகளை இந்நிறுவனம் அளிக்கிறது.

12. ஆதாய மிழப்பு விவரங்கள்.—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் நடவடிக்கைகளில் கணிசமான அளவிற்கு மேம்பாடு ஏற்பட்டிருப்பினும் முதலீடுகள்/வைப்பீடுகளில் வருவாய் குறைந்திருப்பதால் வரி செலுத்துவதற்கு முந்தைய நிலை ஆதாயம் 1980–81-ம் ஆண்டில் சிறிதளவு குறையலாம். வரி செலுத்துவதற்கு முன்னர் நிறுவனம் கடந்த இரண்டாண்டுகளில் பெற்ற ஆதாயம் குறித்த விவரம் வருமாறு :

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| 1979–80 .. .. .. .. .. | 1,85.16 |
| 1980–81 .. .. .. .. .. (1981 மார்ச் வரை மதிப்பீடு). | 1,75.00 |

13. கிளை அலுவலகங்கள் தொடக்கம்.—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்குத்தற்போது வட்டார அலுவலகங்கள் 2, கிளை அலுவலகங்கள் 9, சென்னையில் தலைமை அலுவலகம் ஆகியவை உள்ளன. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்துடன், பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் மேலும் கிளை அலுவலகம் ஒன்று விரைவில் தொடங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் 1979–80 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1980–81 ஆம் ஆண்டில் (31-12-80 வரை) நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளதை மேற்குறித்த புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்.



இணைப்பு 41.

1979-80, 1980-81 ஆம் ஆண்டுகளில் (31—12—1980 அன்றுடன் முடிவடையும் 9 மாதங்கள்.) நிறுவனம் செயல்பட்டது குறித்த நிலைமையையும் 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளுக்கான மதிப்பீடுகளையும் காட்டும் விவர அறிக்கை.

(ரூபாய் இலட்சத்தில்)

| விவரங்கள். | 1979-80. | | 31—3—1980 வரை சேர்ந்து வரும் தொகை. | |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | எண். | தொகை. | எண். | தொகை. |
| | | ரூ. | | ரூ. |
| எல்லாவற்றையும் உள்ளிட்ட நிலைமை— | | | | |
| அனுமதிகள் .. .. | 1,500 | 17,19·13 | 4,765 | 1,43,82·86 |
| தொகை வழங்குதல் .. | 346 | 10,67·49 | 3,073 | 1,18,62·05 |
| நிலுவை .. .. .. | 2,294 | 71,74·38 | .. | 71,74·38 |
| பின் தங்கிய இடங்களில் உதவி— | | | | |
| அனுமதிகள் .. .. | 971 | 926·00 | 2,439 | 65,26·79 |

| | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| தொகை வழங்குதல் .. | 169 | 5,50·08 | 1,159 | 41,65·06 |
| சிறுதொழில் பிரிவு— | | | | |
| அனுமதிகள் .. .. | 1,477 | 8,86·36 | 3,861 | 40,30·46 |
| தொகை வழங்குதல் .. | 298 | 3,85 17 | 2,245 | 28,51·64 |
| சிறப்புத் திட்டங்கள் அனுமதி—(பன்னாட்டுத் தொழில் வளர்ச்சிக் குழுமம்/உலக வங்கி அளிக்கும் கடன்.) | 12 | 99·87 | 150 | 12,92·86 |
| தொழில் நுட்ப வல்லுநர் | 48 | 65·79 | 219 | 2,26·14 |
| பேருந்து உரிமையாளர்கள் | 96 | 39·91 | 447 | 2,85·24 |
| பதிவு பெற்ற மருத்துவர்கள் | 15 | 15·36 | 50 | 39·45 |
| உணவுவிடுதித் திட்டங்கள் .. | 4 | 25·05 | 37 | 3,27·71 |
| மின் உற்பத்திக் கருவிகள் .. | 28 | 51·68 | 104 | 1,61·70 |
| குறைந்த வட்டியில் கடன் .. | 687 | 34·65 | 902 | 43·44 |
| வசூல் .. .. .. | .. | 10,55·01 | .. | .. |
| வரிவிதிப்பிற்கு முன் ஆதாயம் | .. | 1,85·16 | .. | .. |
| உருவான வேலை வாய்ப்பு .. | 19,626 | .. | .. | .. |





## இணைப்பு 41.

1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளில் (31–12–1980 அன்றுடன் முடிவடையும் 9 மாதங்கள்) நிறுவனம் செயல்பட்டது குறித்த நிலைமைகளையும் 1980–81, 1981–82 ஆம் ஆண்டுகளுக்கான மதிப்பீடுகளையும் காட்டும் விவர அறிக்கை.

(ரூபாய் இலட்சத்தில்.)

| விவரங்கள். | 1980–81 (31–12–1980 வரை). | | 1980–81 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள். | | 1981–82 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள். | |
|---|---|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| எல்லாவற்றையும் உள்ளிட்ட நிலைமை.— | | | | | | |
| அனுமதிகள் .. .. | 2,765 | 2,377.91 | .. | 3,200.00 | .. | 4,500.00 |
| தொகை வழங்குதல் .. | .. | 1,323.19 | .. | 2,100.00 | .. | 3,500.00 |
| நிலுவை .. .. .. | .. | 7,714.86 | .. | .. | .. | .. |
| பின்தங்கிய இடங்களில் உதவி.— | | | | | | |
| அனுமதிகள் .. .. | 1,477 | 1,806.60 | .. | 1,600.00 | .. | 2,400.00 |
| தொகை வழங்குதல் .. | .. | .. | .. | .. | .. | .. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சிறு தொழில் பிரிவு— | | | | | | |
| அனுமதிகள் .. .. | 2,705 | 1,573.96 | .. | 1,606.00 | .. | 2,500.00 |
| தொகை வழங்குதல் .. | .. | .. | .. | .. | .. | .. |
| சிறப்புத் திட்டங்கள் அனுமதி— | | | | | | |
| பன்னாட்டுத் தொழில் வளர்ச்சிக் குழுமம்/உலக வங்கி அளிக்கும் கடன். | 24 | 268.52 | .. | .. | .. | .. |
| தொழில் நுட்ப வல்லுநர் | 30 | 41.72 | .. | .. | .. | .. |
| பேருந்து உரிமையாளர்கள். | 427 | 142.43 | .. | .. | .. | .. |
| பதிவு பெற்ற மருத்துவர்கள். | 5 | 10.00 | .. | .. | .. | .. |
| உணவு விடுதித் திட்டங்கள். | 7 | 42.20 | .. | .. | .. | .. |
| மின் உற்பத்திக் கருவிகள் .. | 69 | 174.95 | .. | .. | .. | .. |
| குறைந்த வட்டியில் கடன் ... | 236 | 15.51 | .. | .. | .. | .. |
| வசூல் .. .. .. | .. | 621.73 | .. | 1,100.00 | .. | 1,350.00 |
| பரி விதிப்பிற்கு முன் ஆதாயம். | .. | .. | .. | 175.00 | .. | .. |
| உருவான வேலை வாய்ப்பு. | 24,079 | .. | 35,000 | .. | 50,000 | .. |





## தொழில்களுக்கு நிதி உதவி.

மத்திய அரசிலும் மாநில அரசிலும் தொழில்களுக்குத் தேவைப்படும் நிதி உதவிகளை அளிக்கப் பல நிதி உதவி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இந்நிறுவனங்கள் சிலவற்றின் பணிகள் பற்றிய ஆய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (ஐ.டி.பி.ஐ.).—1964 ஆம் ஆண்டு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிச் சட்டத்தின் கீழ், 1964 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இவ்வங்கி அமைக்கப்பட்டது. மத்திய நிறுவனமான இவ்வங்கியின் முக்கிய நோக்கம், மாநில நிதி உதவி நிறுவனங்களின் அலுவல்களை ஒருங்கிணைத்து அவை கடன் வழங்க மறுநிதி உதவி செய்வதேயாகும். இது, பங்குத் தொகைகளுக்கும் கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்கும் உத்திரவாதம் அளிக்கிறது ; தொழில் பிரிவுகளுக்குக் குறித்த காலக் கடன்களை வழங்குகின்றது. இவ்வங்கி தொடங்கியது முதல், 1980 ஆம் ஆண்டு ஜூன் இறுதி வரை தமிழ்நாட்டிலுள்ள தொழில் பிரிவுகளுக்கு இது நேரிடையாக ரூ. 52,969 இலட்சம் ஒப்பளித்துள்ளது. நிதி அனுமதி அளித்து மேற்சொன்ன கால அளவில் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மொத்தம் ரூ. 36,464 இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது. 1979–80 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள தொழில்களுக்கு ரூ. 10,933 இலட்சம் நிதி உதவியளிக்க ஒப்பளித்துள்ளது. இவ்வாண்டில் வழங்கப்பட்ட தொகை ரூ. 8,002 இலட்சமாகும்.

2. இந்தியத் தொழில் கடன் முதலீட்டு நிறுவனம் (ஐசிஐசிஐ).—இந்நிறுவனம் 1955 ஆம் ஆண்டு சனவரியில் ஏற்படுத்தப்பட்டது. தொழில்களுக்கு வெளிநாடுகளிலிருந்து கடன்களைப் பெற்றுத் தருவதை நோக்கமாகக் கொண்டு தனியார் துறையில் அமைக்கப்பட்ட மற்றொரு தொழில்வளர்ச்சி வங்கியாகும். இது, தவிர, பங்குத் தொகைகளுக்கும் கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்கும் உத்திரவாதமளித்தல் போன்ற பிற உதவிகளையும் இவ்வங்கி அளிக்கிறது. இந்நிறுவனம், இந்தியா முழுவதிலுமுள்ள தொழில்களுக்கு 1979–80 ஆம் ஆண்டில் ஒப்பளித்த நிதியுதவி ரூ. 21,239 இலட்சமாகும். இதில், தமிழ்நாட்டிலுள்ள தொழில்களுக்கு ஒப்பளித்த நிதியுதவி ரூ. 2,170 இலட்சமாகும். 1979–80 ஆம் ஆண்டில், அந்நிறுவனம், இந்தியா முழுவதிலுமுள்ள தொழில்களுக்கு மொத்தம் ரூ. 13,684 இலட்சம் நிதி உதவி அளித்தது. தமிழ் நாட்டில் உள்ள தொழில்களுக்கு வழங்கிய நிதி உதவி மொத்தம் ரூ. 1,104 இலட்சமாகும்.

3. இந்தியத் தொழில் நிதி நிறுவனம் (ஐ.எப்.பி.ஐ).—நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் 1948 ஆம் ஆண்டில் நிறுவப் பட்ட இந்தியத் தொழில் நிதி நிறுவனம், பொதுவாகத் தொழில் களுக்கும், குறிப்பாக, இரசாயனத் தொழில்களுக்கும், நெச வாலைத் தொழிலுக்கும், சர்க்கரைத் தொழிலுக்கும் நீண்டகால நடுத்தரக் காலக் கடன்களை வழங்குகிறது. இந்நிறுவனம், சாதாரணப் பங்குகளுக்கும் முன்னுரிமைப் பங்குகளுக்கும் கட னீட்டுறுதிப் பத்திரங்களுக்கும் உத்திரவாதமளிப்பதுடன், வட்டி யில்லா சாதாரணப் பங்கு மூலதனம் முன்னுரிமை பங்கு மூல தனம் மற்றும் கடனீட்டுறுதி மூலதனம், ஆகியவற்றில் முதலீடு செய்கிறது. மேலும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட எந்திரங்களுக்குக் காலந்தாழ்த்தி தொகை செலுத்துவது போன்றவற்றிற்கும் உத்திரவாதமளிக்கிறது, 1979–80 ஆம் ஆண்டில், இந்நிறுவனம், தமிழ் நாட்டிலுள்ள 15 தொழில் திட்டங்களுக்கு ரூ. 909·96 இலட்சம் அளவிற்கு நிதி உதவி ஒப்பளித்துள்ளது. நேரடியாக அளித்த பங்குத் தொகையும் இதில் அடங்கும். இந்த ஆண்டில் வழங்கப்பட்ட நிதி உதவி ரூ. 568.74 இலட்சமாகும்.

4. வர்த்தக வங்கிகளின் பங்கு.—தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பதில் வர்த்தக வங்கிகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. 1975 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் உள்ள நிலவரப்படி, தமிழ் நாட்டில் உள்ள வர்த்தக வங்கிகளில் (Scheduled Commercial Bank) வைப்பீடாக இருந்த தொகை ரூ. 94,997 இலட்சமாகும். 1980 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் இருந்த வைப்பீட்டுத் தொகை ரூ. 2,18,691 இலட்சமாகும். (தற்காலிகமானது). தமிழ் நாட்டிலுள்ள அட்டவணையிட்ட வர்த்தக வங்கிகள் வழங்கிய முன் பணங்களில் 1975 ஆம் ஆண்டு டிசம்பரில் நிலுவையாக இருந்த தொகை ரூ. 1,03,626 இலட்ச மாகும். 1980 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் நிலுவையாக இருந்த தொகை ரூ. 1,964.56 இலட்சமாகும். (தற்காலிக மானது). அட்டவணையிட்ட வர்த்தக வங்கிகள் தமிழ்நாட்டில் உள்ள கூட்டுப் பங்கு நிறுவனங்களின் பங்குகளிலும் கடனீட் டுறுதிப் பத்திரங்களிலும் முதலீடு செய்துள்ள தொகை 1974 மார்ச்சில் ரூ. 264 இலட்சமாகவும் 1979 மார்ச்சில் ரூ. 161 இலட்சமாகவும் இருந்தது.

5. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி அளிக்கும் உதவி.—தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியானது கூட்டுறவுத் துறையிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கும், குறிப்பாகத்தொழில் துறையில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கும் நிதியுதவி வழங்கி வருகிறது.

மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி வழங்கிய நடைமுறை மூலதனம் பற்றிய விவரங்களை அட்ட வணை 1-ல் காணலாம்.



கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை களுக்கும் இவ்வங்கி வழங்கிய குறித்த காலக் கடன்கள், அவைகள் திருப்பிச் செலுத்திய தொகை இன்னும் நிலுவையாகவுள்ள தொகை ஆகியவை பற்றி விவரங்கள் இணைப்பு II-ல் கொடுக்கப் பட்டுள்ளன.

இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் (எல்.ஐ.சி.).—இந்திய ஆயுள் ஈட்டுறுதி அமைப்பு தேசியமயமாக்கப்பட்ட பிறகு, 1956 ஆம் ஆண்டு ஆயுள் ஈட்டுறுதிச் சட்டத்தின் கீழ், 1956 ஆம் ஆண்டில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் சட்டரீதியிலான ஒரு தனி நிறுவனமாக அமைக்கப்பட்டது. ஆயுள் ஈட்டுறுதிப் பணிகளை நிறைவேற்றுவதே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்க மாகும். நாட்டின் தொழில் வளர்ச்சியில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்தின் பணி, குறிப்பிடத்தக்கதாகும். மக்கள் பெரும் பான்மையோரின், நீண்டகாலச் சேமிப்புகளை ஒருங்கு திரட்டு வதோடு, கவனமாகவும் திட்டமிட்ட முறையிலும் முதலீடு செய்வதன் மூலம் இந்த நிதி வாயில்களைச் சிக்கனமாகப் பயன் படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்நிறுவனம் உதவி புரிகிறது. 1980 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டில், தென் மாநிலங்களில் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் ''பிரிமியமாக'' வசூலித்த வகையில் கிடைத்த வருவாய் விவரம் (மாநில வாரியாக) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாநிலம். (1) | தொகை. (2) (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| தமிழ்நாடு .. .. .. .. .. | 72,31,15,187 |
| கர்நாடகம் .. .. .. .. .. | 58,71,40,662 |
| கேரளம் .. .. .. .. .. | 32,19,95,276 |
| ஆந்திரப் பிரதேசம் .. .. .. .. | 59,47,90,472 |

இந்நிறுவனம் 1979–80 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள தொழில்களில் செய்த முதலீட்டு விவரம் கீழே தரப்பட் டுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (அ) மொத்த முதலீடு .. .. .. | 317.18 |
| (ஆ) நிகர முதலீடு .. .. .. | 154,86 |

## இணைப்பு I.

### தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, சென்னை

### நடை முறை மூலதனம்—மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நிதியுதவி அளித்தல்.

| மத்திய கூட்டுறவு வங்கியின் பெயர். | நூற்பாலைகளின் பெயர். | 1980 கடன் வரம்பு. | 31—12—1980 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| கும்பகோணம் .. .. .. | தஞ்சாவூர் .. .. .. | 55.00 | இல்லை. |
| திருநெல்வேலி .. .. .. | தென்னிந்தியா .. .. | 100.00 | இல்லை. |
| | திருச்செந்தூர் .. .. .. | 75.00 | 32.35 |
| மதுரை .. .. .. .. | மதுரை .. .. .. | 65.00 | இல்லை. |
| தஞ்சாவூர் .. .. .. .. | தஞ்சாவூர் .. .. .. | இல்லை. | இல்லை. |
| தென்னார்க்காடு .. .. .. | தென்னார்க்காடு .. .. | 25.00 | இல்லை. |
| கோயம்புத்தூர் .. .. .. | கோயம்புத்தூர் .. .. | .. | .. |
| இராமநாதபுரம் .. .. .. | திருவில்லிபுத்தூர். .. .. | 65.00 | இல்லை. |



| | | | |
|---|---|---|---|
| சேலம் .. .. .. .. | சேலம் .. .. .. .. | 50.00 | இல்லை. |
| காஞ்சிபுரம் .. .. .. | காஞ்சிபுரம் காமாட்சி அம்மன். .. .. .. | 65.00 | 12.48 |
| வேலூர் .. .. .. .. | வடஆர்க்காடு .. .. | 75.00 | இல்லை. |
| கன்னியாகுமரி .. .. .. | கன்னியாகுமரி .. .. .. | 60.00 | 10.00 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. | திருச்சிராப்பள்ளி .. .. | 65.00 | இல்லை. |
| | **சர்க்கரை ஆலைகளின் பெயர்.** | | |
| வேலூர் .. .. .. .. | ஆம்பூர் .. .. .. | 330.00 | இல்லை. |
| வேலூர் .. .. .. .. | திருப்பத்தூர் .. .. .. | 200.00 | இல்லை. |
| வேலூர் .. .. .. .. | வேலூர் .. .. .. .. | 190.00 | இல்லை. |
| சேலம் .. .. .. .. | சேலம் .. .. .. .. | 100.00 | இல்லை. |
| தருமபுரி .. .. .. .. | தருமபுரி .. .. .. | 185.00 | இல்லை. |
| கோயம்புத்தூர் .. .. .. | அமராவதி .. .. .. | 245.00 | 1.58 |
| காஞ்சிபுரம் .. .. .. | மதுராந்தகம் .. .. .. | 275.00 | இல்லை. |
| தென் ஆர்க்காடு .. .. .. | கள்ளக்குறிச்சி .. .. .. | 285.00 | 2.98 |
| மதுரை .. .. .. .. | தேசியக் கூட்டுறவு சர்க்கரை ஆலை. | 220.00 | இல்லை. |

## இணைப்பு II.

### தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, சென்னை.

### செய்முறை சங்கங்களுக்கு குறித்தகாலக் கடன்கள்.

| தொடர் எண்ணும் கூட்டுறவு நூற்பாலைகளின் பெயர். (1) | 1-1-1980 அன்றுள்ள படி நிலுவைத் தொகை. (2) | வழங்கப் பட்ட தொகை. (3) | திருப்பி செலுத்தப் பட்ட தொகை. (4) | 31-12-1980 அன்றுள்ள படி நிலுவைத் தொகை. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| 1 கன்னியாகுமரி .. .. | 5.00 | .. | 2.00 | 3.00 |
| 2 மதுரை .. .. .. | 15.00 | .. | 7.00 | 8.00 |
| 3 திருச்சிராப்பள்ளி .. .. | இல்லை. | 5.50 | 0.55 | 4.95 |
| 4 கோயம்புத்தூர் .. .. | 5.00 | .. | 2.00 | 3.00 |
| 5 தஞ்சாவூர் .. .. .. | 18.00 | .. | 6.00 | 12.00 |
| 6 வட ஆர்க்காடு .. .. | 12.00 | .. | 6.00 | 6.00 |
| 7 தென் ஆர்க்காடு .. .. | 10.50 | .. | 10.50 | இல்லை. |
| 8 காஞ்சீபுரம் .. .. .. | 9.36 | .. | 2.25 | 7.11 |
| 9 தென் இந்தியா .. .. | இல்லை. | .. | இல்லை. | இல்லை. |
| 10 சேலம் .. .. .. | 25.50 | .. | 13.50 | 12.50 |
| 11 திருச்செந்தூர் .. .. | 3.90 | .. | 1.90 | 2.00 |
| 12 திருவில்லிபுத்தூர் .. .. | .. | .. | இல்லை. | இல்லை. |
| கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் பெயர். | | | | |
| 1 திருப்பத்தூர் .. .. .. | 68.00 | .. | 15.00 | 53.00 |
| 2 வேலூர் .. .. .. | 31.00 | .. | 11.01 | 19.99 |
| 3 அமராவதி .. .. .. | 30.00 | .. | .. | 30.00 |
| 4 மதுராந்தகம் .. .. .. | 123.00 | .. | 32.00 | 91.00 |
| 5 ஆம்பூர் .. .. .. | இல்லை. | 23.00 | 23.00 | இல்லை. |



## தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்)

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971 ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கே முழுவதும் சொந்தமாக வரை யறுக்கப்பட்டதொரு பொது நிறுவனமாக (ரூபாய் ஆறு கோடி ஒப்பிய மூலதனத்துடன்) தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறுவதற்கும், விரிவடைவதற்கும், இதுவரை இம்மாநிலத்தில் பின் தங்கியுள்ள பகுதிகளை விரைந்து தொழில் மயமாக்குவதற்குமான முக்கியக் குறிக்கோள்களுக்காக அமைக்கப் பட்டதாகும். இந்நிறுவனம் 1972 ஆம் ஆண்டு சனவரித் திங் களில் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒருங் கமைந்த முன்னேற்றத் திட்டத்துடன் தனது பணிகளைத் தொடங்கியது. அதில் இருந்து '' சிப்காட் '' நிறுவனம் கடந்த ஏழு ஆண்டுகளாக நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறவும், விரிவடையவும் ஆன பணிகளைச் சிறந்த முறையில் செய்து வரு கிறது. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரை இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின் கீழ் மொத்தம் ரூபாய் 6,136.65 இலட்சம் உதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளதுடன், இதன்மூலம் 46,000 பேருக்குமேல் மொத்த நேரடி வேலை வாய்ப்பை நல்கியுள்ளது. இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமாகக் கருதக்கூடியது, ஊக்குவிக்கப்பட்ட முத லீட்டில் பெரும்பகுதி இம்மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளிலேயே பயன்படுத்தப்பட்டது என்பதாகும். இதுவரையில் அளிக்கப் பட்ட மொத்த உதவித் தொகையில் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் ரூபாய் 5,328 இலட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் இம்மாநிலத்தின் பின்தங்கிய ஒன்பது மாவட்டங்களில் ஏதாவது ஒன்றிலோ, மற்றவற்றிலோ ரூபாய் 270 கோடிக்கு மேலாக முதலீடு செய்வதை ஊக்குவிக்கும்.

2. சிப்காட்டின் முக்கிய நோக்கம், நடுத்தர பெரிய தொழில் களுக்குத் திட்டமிடுதலும், முன்னேறச் செய்வதும்; விரிவாக்கு தலும் ஆகும். இந்நிறுவனத்தின் வளர்ச்சிப் பணிகள் பின்வரு மாறு :—

(அ) புதிய தொழில் முனைவோர்கள் பயனடையும் வகை யில் ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

(ஆ) இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலுள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நியாய விலை யிலும், சுலப தவணை முறையில் செலுத்தும் வகையிலும் மேம்படுத்தப்பட்ட நிலங்களை வழங்குவது.

(இ) இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி வழங்கும் திட்டத்தின் கீழ் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பது.

(ஈ) தொழில்களுக்கான ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல்படுத்த தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு துணை யுதவிப் பணிகள் செய்தல்.

3. சிப்காட் செயல்படுத்திவரும் பல்வேறு உதவித் திட்டங் களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(அ) ஊக்க சலுகை முனைப்புத் திட்டம்.—தொழில் தொடங்கும் ஆய்வுக்கு உதவித் தொகை ஆதாயமளிக்கும் தொழில் திட்டங் களைக் கண்டறிவதற்கான வாய்ப்புக் கூறுகள் பற்றிய ஆய்வு களை, சிப்காட் தொழில் முனைவோர்களுக்குச் சலுகை விலையில் அளிக்கிறது.

1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரையில் 36 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இவற்றில் 27 அறிக்கைகள் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டன. 1980–81 இல் (டிசம்பர் 1980 வரை) ஆண்டுகளில்தான் முன் முதலீட்டு ஆய்வு கள் தொடங்கப்பட்டன. மேற்கண்ட ஆய்வுக்காக 1981–82 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 2.50 இலட்சம் வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வட்டியில்லா விற்பனை வரிக்கடன்.—ஊக்கச் சலுகை தீவிரத் திட்டத்தின் முக்கிய அங்கமாய் வட்டியில்லா விற்பனை வரிக்கடனை மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம்மாநிலத்தின் பின்தங்கிய 9 மாவட்டங்கள் ஏதாவது ஒன்றிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர் தொழில் இணையத்திலும், மற்றும் குன்னத்தூர் வட்டாரத்திலும் (ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள் தொகை உள்ள நகரங் கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, நகர்ப்பகுதி தவிர) தொடங்க இருக்கும் நடுத்தர அல்லது பெரிய தொழில் நிறுவனங் களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்படும். இத்திட் டம் இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதி திட்டத் தின் கீழ் தற்போது செயல்படும் தொழில் நிறுவனம் கணிசமான அளவுக்கு தொழிலை விரிவுபடுத்தும் போதோ, வேறு பிரிவுகளாக பெருக்கும் போதோ, இச்சலுகை கிடைக்கும். அத்தொழிற் சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்துகொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவுக்கோ விரிவுபடுத்தப்படும் அல்லது பல பிரிவுகளாகப் பெருக்கப்படும் திட்டத்தில் நிலையான இருப்புகளில் 25 சத, வீதத்துக்கோ அல்லது ரூபாய் 15 இலட்சத்துக்கோ நடுத்தர, பெரிய தொழில்களுக்கும், சிறிய தொழிலிலிருந்து நடுத்தர தொழி



லாக விரிவுபடுத்தும்போது ரூபாய் 7.50 இலட்சத்துக்கோ (எந்தத்
தொகை குறைவோ அந்தத் தொகைக்கு மேற்படாமல்) விற்
பனை வரிக் கடன் தொகை உதவி அளிக்கப்படுகிறது. கடன்
தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகள் முடிந்தப்
பிறகு 3 ஆண்டுத் தவணைகளில் சம தொகைகளாக வட்டி
இன்றி இந்தக் கடன் தொகைகளை திருப்பியடைக்க வேண்டும்.

புதிய தொழில் இணையங்களை ஏதேனும் பின்தங்கிய
மாவட்டங்களில் அமைத்திடவும், மற்றும் மறைமலைநகர், செங்
கல்பட்டு மாவட்டத்தில் உள்ள குன்னத்தூர் இணையத்தில் நிறு
வப்படும் புதிய தொழில்கள் இரண்டாம் பகுதித் திட்டத்தின்
கீழ் வரும். இத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட உள்ள புதிய
தொழிற்கூடங்களுக்கு அவை உற்பத்திப் பணிகளை மேற்கொள்
ளும் முதல் ஆறு ஆண்டு காலத்திற்கு ஆண்டு தோறும் வட்டியில்லா
விற்பனை வரிக்கடன் முந்திய ஆண்டில் செலுத்திய விற்பனை
வரித் தொகைக்கு சமமானதாகவும் நிலையான இருப்புகளில்
8 சதவீத அளவுக்கோ அல்லது ரூபாய் 8 இலட்சத்திற்கோ எந்த
தொகை குறைவோ அந்தத் தொகைக்கு அதிகப்படாமல் அளிக்கப்
படும். இந்தக் கடன் கால் ஆண்டுக்கு ஒருமுறை என்ற அடிப்
படையில் வழங்கப்படும். கடன் வழங்கப்பட்ட 9 ஆண்டுகளுக்கு
பிறகு ஆறு சம ஆண்டுத் தவணைகளில் வட்டி எதுவுமின்றி
திருப்பி செலுத்தப்பட வேண்டும்.

வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் ஊக்கச்
சலுகைத் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து
1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரை 97
தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபாய் 961.21 இலட்சத்
துக்கு ஒப்புதல் அளித்து அதில் ரூபாய் 856.53 இலட்சம் வழங்கப்
பட்டுள்ளது.

கடந்த எட்டு ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை
யும் வழங்கப்பட்ட தொகையும்—

ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.

| ஆண்டு. | முதல் பிரிவு. | இரண்டாம் பிரிவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972–73 .. .. | 79·19 | .. | 79·19 |
| 1973–74 .. .. | 57·72 | .. | 57·72 |
| 1974–75 .. .. | 73·63 | .. | 73·63 |
| 1975–76 .. .. | 2·10 | 0 72 | 2·82 |
| 1976–77 ... .. | 49·13 | 29·72 | 78 85 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1977–78 .. .. | 52.60 | 58.88 | 111.48 |
| 1978–79 .. .. | 59.19 | 94.00 | 153.19 |
| 1979–80 .. .. | 105.52 | 140.26 | 245.78 |
| 1980–81 (டிசம்பர் வரை) | 60.07 | 98.48 | 158.55 |
| மொத்தம் .. | 539.15 | 422.06 | 961.21 |

வழங்கப்பட்ட தொகை.

| ஆண்டு. | முதல் பிரிவு. | இரண்டாம் பிரிவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972–73 .. .. | 12.19 | .. | 12.19 |
| 1973–74 .. .. | 31.56 | .. | 31.56 |
| 1974–75 .. .. | 91.48 | .. | 91.48 |
| 1975–76 .. .. | 57.60 | .. | 57.60 |
| 1976–77 .. .. | 48.32 | 30.26 | 78.58 |
| 1977–78 .. .. | 35.19 | 56.04 | 91.23 |
| 1978–79 .. .. | 56.80 | 96.24 | 153.04 |
| 1979–80 .. .. | 47.26 | 137.74 | 185.00 |
| 1980–81 (டிசம்பர் வரை) | 55.41 | 100.44 | 155.85 |
| மொத்தம் .. | 435.81 | 420.72 | 856.53 |

மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி ஆண்டு வரிசையாக:

| ஆண்டு. | தொகை (இலட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1972–73 .. .. | 23.18 |
| 1973–74 .. .. | 40.00 |
| 1974–75 .. .. | 74.66 |
| 1975–76 .. .. | 75.00 |
| 1976–77 .. .. | 75.00 |
| 1977–78 .. .. | 100.00 |
| 1978–79 .. .. | 150.00 |
| 1979–80 .. .. | 180.00 |
| 1980–81 (டிசம்பர் வரை) | 150.00 |
| மொத்தம் | 867.84 |



1981-82ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் வழங்குவதற்கான குறியீடு முறையே ரூபாய் 250 இலட்சமும் ரூபாய் 175 இலட்சமுமாகும்.

(இ) நிலையான இருப்புகள் மீது உதவித் தொகை.—மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு 1972 பிப்ரவரியில் சிப்காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இம் மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 33 பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் எந்த ஒரு தொழிற் பிரிவு அதன் நிலையான முதலீட்டில் (நிலம், கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்) 15 சதவீதத்தை நேரடி மானியமாக அல்லது மானியமாகப் பெற தகுதியுள்ளதாகும். தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து முன்னேற்றம் காணாத முன்பு கூறப்பட்ட பகுதிகளுக்குக் கருவிகள், தளவாடங்கள் மாற்றப்பட்ட போதிலும், அந்தத் தொழில் பிரிவுகள் கூட 15 சதவீத உதவித் தொகை பெறத் தகுதியுடையனதாகும். ஒவ்வொரு தொழிற் பிரிவு பெறத் தக்க மானியத்தின் உச்ச வரம்பு ரூபாய் 15 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாக மானியத்தின் 85 சதவீதத் தொகையும், உற்பத்தி துவங்கிய பின்பு மீதித் தொகையும் வழங்கப்படும்.

இந்நிறுவனம் துவக்கத்திலிருந்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரையில் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 460.45 இலட்சம் 1,776 சிறு தொழில் நிறுவனங்களுக்கும் ரூபாய் 1,741.12 இலட்சம் 272 நடுத்தர பெரிய தொழில் நிறுவனங்களுக்கும் உதவித் தொகையாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் ரூபாய் 283·67 இலட்சம் வழங்கப்பட்டது. ரூபாய் 255.66 இலட்சம் ஈட்டுத் தொகையாகத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. இவைகளின் ஆண்டு குறியீடு முறையே ரூபாய் 250 இலட்சம் மற்றும் ரூபாய் 230 இலட்சமும் ஆகும். 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெற்ற ஈட்டுத் தொகை பற்றிய விவரங்கள் இணைப்பு 1-இல் கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு 1981–82-இல் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெற்ற ஈட்டுத் தொகை ஆகியவற்றின் தனி இலக்குகள் ரூபாய் 250 இலட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முந்தைய ஆண்டு 1980–81 ஆம் ஆண்டைப் போலவே சிப்காட்டின் தனி குறியீடு ரூபாய் 200 இலட்சமாக இருக்கும்.

1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி மொத்தம் ரூபாய் 217.43 இலட்சம் ஈட்டுத் தொகை மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளது.

(ஈ) நேரடி நிதி உதவி—(1) தவணைக் கடன்.— கடந்த எட்டு ஆண்டில் சிப்காட் ஒப்புதல் அளித்த தவணைக் கடன் மற்றும் வழங்கிய தவணைக் கடன் உதவி கீழ்க்கண்ட அட்டவணைகளில் காணலாம்:—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நிகர செல்லுபடியாகத் தக்கது. | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1972–73 | 1,08.50 | .. | 1,08.50 | 26.11 |
| 1973–74 | 1,97.89 | 7.55 | 1,90.34 | 33.90 |
| 1974–75 | 1,91.28 | 7.99 | 1,83.59 | 1,17.61 |
| 1975–76 | 27.08 | 7.25 | 19.83 | 1,62.87 |
| 1976–77 | 1,40.75 | 47.25 | 93.50 | 82.15 |
| 1977–78 | 3,40.55 | 69.48 | 2,71.07 | 1,23.82 |
| 1978–79 | 2,33.96 | 10.00 | 2,23.96 | 1,41.85 |
| 1979–80 | 5,80.50 | 12.74 | 5,67.76 | 2,96.61 |
| 1980–81 (டிசம்பர் வரை). | 17,07.10 | 10.50 | 16,96.60 | 4,99.84 |
| மொத்தம் .. | 35,27.61 | 1,72.76 | 33,54.85 | 14,84.76 |

1975–76 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், 1976–77 ஆம் ஆண்டு முதல் அளிக்கப்பட்ட நிகர ஒப்புதல் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது என மேலே உள்ள அட்டவணையிலிருந்து வெளிப்படையாக தெரிய வருகிறது. ஒப்பளிப்பு மற்றும் வழங்குதல் ஆகியவற்றின் 1981–82 ஆம் ஆண்டிற்கான குறியீடு முறையே ரூபாய் 20,00 இலட்சம் மற்றும் ரூபாய் 10,00 இலட்சம் என திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதியுதவி திட்டத்தின் கீழ் சிப்காட்டின் வரையறையான ரூபாய் 10,60 இலட்சத்தின் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி ரூபாய் 9,76.00 இலட்சத்தை எட்டிவிட்டது.

நீண்ட கால நிலுவைத் தொகையைத் திரும்பப் பெறுதல் என்ற நிலை 1980–81 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்த 63.51 சதவீதத்தை விட படிப்படியாக அதிகரித்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி 67.73 சதவீதமாக உயர்ந்துள்ளது. சிப்காட் நிர்வாக குழுவின் துணைக் குழு மாதாந்திர நிலுவை பார்வை கட்டங்களில் நிலுவைகளை பரிசிலனை செய்து நடவடிக்கை எடுத்ததாலும், மற்றும் தொழில்



நிறுவனங்களின் ஒத்துழைப்பினாலும் கணிசமான முன்னேற்றம் அடைய முடிந்தது. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி நிலுவைத் தொகை வசூல் ரூபாய் 1,56.83 இலட்சம் என்பது மொத்த நிலுவைத் தொகை ரூபாய் 9,29.27 இலட்சத்தில் 16.66 சதவீதம் ஆகும்.

(உ) உத்திரவாதமளித்தல்/நேரடி சந்தா.—பொறுப்புகளுக்கு உத்தரவாதம் அளித்ததின் விளைவாக அல்லது நேரடி சந்தா வாயிலாக, கடந்த எட்டு ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட உத்தரவாத வசதிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டவை. எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டவை. | பொது மக்களுக்கு வழங்கப் பட்டவை. | நேரடி சந்தாவுக்கு கோரிக்கைக் பங்குகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972–73 | 23.20 | .. | .. | .. |
| 1973–74 | 24.30 | .. | 26.70 | .. |
| 1974–75 | 5.00 | .. | 2.50 | 0.55 |
| 1975–76 | 16.50 | .. | 3.00 | 1.29 |
| 1976–77 | 11.00 | 18.50 | 2.00 | 2.00 |
| 1977–78 | 16.00 | 13.30 | 1.50 | 1.13 |
| 1978–79 | 5.00 | .. | 5.00 | 0.37 |
| 1979–80 | 6.20 | 2.50 | 13.00 | 1.53 |
| 1980–81 (டிசம்பர் வரை). | 25.50 | .. | 13.20 | 9.79 |
| மொத்தம் .. | 1,32.70 | 34.30 | 66.90 | 16.66 |

1981–82 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் குறியீடு ரூபாய் 40 இலட்சமாகும்.

(3) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டம்.—ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டத்தின் கீழ் தங்களது முதல், நடுத்தர தொழிலை நிறுவும் தொழில் நுட்ப தொழில் அனுபவ தொழில் முனைவோர்களுக்கு இந்திய தொழில் வளர்ச்சிகளின் முதல், நடுத்தரத்தொழில் திட்டத்திற்கு வங்கியானது, திட்டச் செலவில் 10 சதவீதம் வரையில் நிதியுதவி அளிக்கிறது. சிப்காட் நிறுவனம் இந்திய தொழில் வளர்ச்சி

வங்கியின் ஏஜெண்ட் என்ற முறையில் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்று ரூபாய் 20·50 இலட்சம் அளவுள்ள தொகையை ஆறு தொழில் நிறுவனங்களுக்கு ஏற்கெனவே அனுமதி அளித்துள்ளது.

வருகின்ற 1981–82 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு தொகை ரூபாய் 60.00 இலட்சமாகவும், வழங்கும் தொகை ரூபாய் 50.00 இலட்சமாகவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ஆம் நாள் முதல் தவணைக் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிறுவனங்களில் ஆரம்ப மூலதன நிதியுதவி பெற தகுதியுள்ள நிறுவனங்களிடமிருந்து ஆய்வுத் தொகை ஏதும் இனி பெற வேண்டியது இல்லை என்று சிப்காட் நிர்வாகக் குழு தீர்மானித்துள்ளது.

இச்சலுகை பொறியியல் வல்லுனர்களுக்கும் மற்றும் தொழில் திறமை வாய்ந்தவர்களுக்கும் பெரும் உதவியாக இருப்பதுடன் தங்களின் முதல் நடுத்தரத் தொழில் தொடங்கவும் முடியும். இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்தலிலும், வழங்குதலிலும் அடைந்த முன்னேற்றம் கீழ்க்கண்ட அட்டவணையின் மூலம் அறியலாம்.—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்ட தொகை. | வழங்கப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1977–78 .. | 4.00 | .. |
| 1978–79 .. | 9.15 | 4.00 |
| 1979–80 .. | 12.90 | 21.47 |
| 1980–81 (டிசம்பர் வரை). | 20.50 | 8.39 |
| மொத்தம் .. | 46.55 | 33.86 |

(4) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கு அளிக்கப்படும் சலுகைகள்.—தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கு 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க சிப்காட் நிறுவனம் முடிவு செய்துள்ளது :—

(அ) மாநிலத்தில் எந்த இடத்தில் தொழில் ஆரம்பித்தாலும் தொழில் முனைவோர் தொழிற்சாலை



ஆரம்பிக்க ஆகும் மொத்த செலவில் 15 சதவிதத்தை தங்களது மூலதனமாக கொண்டு வந்தால் போதுமானதாகும். (இதுவே முன்பு பின்தங்கிய பகுதிகளில் 17.5 சதவீதமாகவும் முன்னேறிய இடங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது.)

(ஆ) உத்திரவாதமளித்தல் நேரடி சந்தா ஆகிய நிதி உதவிகளையும் மேற்படி தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு முடிந்த அளவு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) பின் தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்காக வழங்கப்படும் கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 8 சதவீதம் வட்டியும் ஏனைய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு 11 சதவீத வட்டியும் வசூலிக்கப்படும். இவ்வட்டிச் சலுகை ஆண்டொன்றுக்கு சுமார் $1\frac{1}{2}$ சதவீதமாகும்.

(ஈ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பை சேர்ந்த தொழில் முனைவோர்கள் தங்கள் தொழில் பற்றிய முன் முதலிட்ட ஆய்வு அறிக்கை பெற 25 சதவிதம் மட்டுமே முன் பணமாக செலுத்தினால் போதுமானது. இதுவே மற்ற தொழில் முனைவோர்களுக்கு 50 சதவீதமாகும்.

| வளர்ச்சி மையங்கள். | 1980ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதி வரை முன்னேற்றம். | |
|---|---|---|
| | மேம்படுத்தப் பட்ட பரப்பு. | மூலதனச் செலவு. |
| (1) | (2) | (3) |
| | ஏக்கரில். | (ரூபாய் இலட்சத்தில்) |
| (1) | (2) | (3) |
| 1 இராணிப்பேட்டை .. | 729.78 | 114.00 (20.00)(வீ) |
| 2 ஓசூர் .. .. .. | 1,071.97 | 117.50 |
| 3 தூத்துக்குடி.. .. .. | | |
| 4 புதுக்கோட்டை மாவட்டம் | ... | .. |
| 5 இராமநாதபுரம் மாவட்டம்,, | ... | 8.65 |

| (1) | மேம் படுத்தப் பட்ட பரப்பு. (2) | ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படும் மூலதனச் செலவு மொத்தம் (3) | நிகரம் (4) |
|---|---|---|---|
| | ஏக்கரில். | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. இராணிப்பேட்டை .. | 275.54 | 100.00 | 59.00 |
| 2. ஒசூர் .. .. | 695.88 | 150.00 | 99.00 |
| 3. தூத்துக்குடி .. | 1,355.78 | 250.00 | 200.00 |
| 4. இராமநாதபுரம் மாவட்டம். | 443.71 | 145.00 | 210.00 |
| 5. புதுக்கோட்டை மாவட்டம். .. | 363.70 | 100.00 | 50.00 |
| 6. கடலூர் .. .. | 517.00 | 125.00 | 75.00 |
| 7. திருப்போரூர் மருந்து பொருள் இணையம். | 155.80 | 25.00 | .. |
| 8. மதுரை மற்றும் புதிய இணையங்கள். | 1,034.32 | 125.00 | 98.00 |

குறிப்பு—(வி) வீட்டு வசதி.

(1) இராணிப்பேட்டை.—அரசு 729.78 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி அதை சிப்காட் நிறுவனத்திற்கு கொடுத்து ஒதுக்கப்படுவதற்காக இருந்த நிலப்பகுதி 551.23 ஏக்கர் ஆகும். அதில் 85 மனைகள் இருந்தன. அதில் 477.458 ஏக்கர் பரப்பளவு கொண்ட 67 மனைகள், 52 தொழிற் முனைவர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்டதில் 32 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத்தியை துவங்கி விட்டன. மிஞ்சிய 11 தொழில் நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

(2) ஒசூர்.—1,153 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் அரசினரால் கைப்பற்றப்பட்டு சிப்காட்டுக்குக் கொடுக்கப் பட்டது. 1,010 ஏக்கரில் அமைந்துள்ள 151 மனைகள் ஒதுக்கீடு செய்வதற்காக கிடைத்துள்ளன. அதில் 796 ஏக்கர் பரப்புள்ள நிலம் 82 தொழில் முனைவோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 22 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத்தியை துவங்கி விட்டன. எஞ்சிய 21 தொழில் நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.



உட்புறச் சாலைகள் மற்றும் இணைப்பு சாலைகள் எல்லாம் முடிவடைந்துவிட்டதால் தொழில் முனைவோர் தங்கள் தொழில் தொடங்க எந்த மனைப் பிரிவை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்புள்ளது. தற்போது சுமார் 32 ஏக்கர் பரப்புள்ள மனையை கோரி வந்துள்ள 11 ஆரம்ப விண்ணப்பங்கள் சிப்காட்டின் பார்வையில் உள்ளது. இங்கு இன்னும் மேம்படுத்தப்பட்டு விற்பனைக்கு தயாராக உள்ள நிலம் 266 ஏக்கர் பரப்பாகும். இந்நிலையை வைத்து பார்க்கும்போது, மீதம் உள்ள மனைப் பிரிவுகளை விற்பதில் எந்த தடையும் இருக்காது அவைகள் மிக குறுகிய காலத்தில் விற்பனை செய்து விடலாம்.

புதிய தொழில் இணையங்கள்:

மானாமதுரை மற்றும் புதுக்கோட்டை:

இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரையிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் நத்தம்பண்ணை கிராமத்திலும் புதிய தொழில் இணையங்கள் துவங்க அரசு ஏற்கனவே அனுமதியளித்துள்ளது, ஏனைய தொழில் இணையங்களுக்கான நிலம் கையகப்படுத்தும் பணி அரசின் அனுமதியுடன் துவங்கப்பட்டு மேல் நடவடிக்கைகள் எடுக்க அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இன்னும் சுமார் மூன்று மாத காலத்திற்குள் புதுக்கோட்டையைப் பொறுத்தவரை, நிலங்கள் கையகப் படுத்தப்பட்டு 'சிப்காட்' நிறுவனத்துடன் ஒப்படைக்கப்பட்டு விடும். புறம்போக்கு நிலம் சுமார் 400 ஏக்கர் ஏற்கனவே சிப்காட்டினால் எடுத்துக் கொள்ளப்பட்டு, மேம்படுத்தும் பணி நடந்து கொண்டிருக்கிறது. மானாமதுரை தொழில் இணையத்தில் ஒரு மனைப்பிரிவும் ஒதுக்கப்பட்டு விட்டது.

தூத்துக்குடி:

சிப்காட்டின் தலைவர், மற்றும் உயர் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டும், நேரிடையாகப் பார்வையிடப்பட்டும் தொழில் மையத்திற்கான இடம் தூத்துக்குடியில் தெரிவு செய்யப்பட்டுவிட்டது. அங்கு நிலம் கையகப்படுத்தும் பணி அரசினால் துவக்கப்பட்டு விட்டது.

கடலூர்:

இரசாயனத் தொழில்களுக்கென்று தனியே ஒரு தொழில் மையம் அமைக்கும் சிப்காட்டின் திட்டத்திற்கு கடலூருக் கருகில் அமைக்க அரசின் அனுமதி பெறப்பட்டுவிட்டது. இங்கு கிடைக்கும் மிகுதியான தண்ணீர் வசதியும், கழிவு

நீரகற்றும் வசதியும் மிகவும் அருமையாக அமையப் பெற்றிருப்பதால் கடலூர் தொழில் இணையம் விரைவில் பிரபலமடைவது உறுதி.

**ஏனைய புதிய தொழில் இணையங்கள்.**

கீழ்க்கண்ட இடங்களில் புதிய தொழில் இணையங்களை துவங்குவதற்கான திட்டங்கள் சிப்காட்டின் பார்வையில் உள்ளது:—

(1) மதுரை மாவட்டம்.
(2) திருப்போரூர் அருகில் (மருந்து தயாரிப்பு நிறுவனங்களுக்கு மட்டும்).
(3) கும்மிடிப்பூண்டியருகில்.

**மாநில அரசின் நிதியுதவி :**

1980-81 ஆம் ஆண்டிற்கு (டிசம்பர் 1980 வரையில்) மாநில அரசு ரூபாய் 50.00 இலட்சம் சமபங்கு மூலதனமாகவும், ரூ. 250 இலட்சம் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் திட்டத்திற்காகவும் ஒதுக்கியுள்ளது. 1981-82-ல் மாநில அரசு சிப்காட்டின் பல்வேறு திட்டங்களுக்கென்று ரூ. 4 கோடி வரை நிதி ஒதுக்கியுள்ளது. இதில் பங்கு மூலதனம் ரூ. 1 கோடியும் உள்ளடங்கும்.

**தொழில் இணையங்களில் எல்லா சமூக வசதிகளையும் அமைத்து தருவதில் சிப்காட்டின் புதிய அணுகு முறை :**

தண்ணீர் வசதி, போக்குவரத்திற்கான சாலைகள் மற்றும் வீட்டுவசதி, சிற்றுண்டிச் சாலை, மனமகிழ்மன்றம், தொழிலாளருக்கான தொழிற்பயிற்சி நிலையங்கள், அங்காடிகள், பள்ளிகள் போன்ற சமூக வசதிகள் அமைக்கப்பட இருக்கின்றது.

**பணியின் முடிவுகள் :**

1979-80 ஆம் நிதியாண்டில் எல்லா செலவினங்களும் தேய்மானங்களும் போக நிகர லாபம் ரூபாய் 32.15 இலட்சம்.

**இணைப்பு இரண்டில் :**

திட்டவாரியான நிதியுதவிகள் பற்றிய விபரங்கள்.

(1) 1980-81 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும், வழங்குதலில் கண்ட முன்னேற்றம்.

(2) 1981-82 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல் பற்றிய திட்ட குறிப்பீடுகள்.



**வேலை வாய்ப்பு :**

1980 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு பெற்ற 6,800 பேர்களையும் சேர்த்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி முடிய சுமார் 46,000 பேர்கள் சிப்காட்டின் நிதியுதவி பெற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு 1981-82-ல் மேலும் 11,500 பேர்களுக்கு பல்வேறு திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும். இதுவரை ஏற்படுத்திய வேலைவாய்ப்புகளும், இனி ஏற்படுத்த இருக்கும் வேலைவாய்ப்புகளும் ஆண்டுவாரியாக.—

| ஆண்டு. | வேலை வாய்ப்பின் எண்ணிக்கை. |
|---|---|
| 1979-80 .. .. .. .. | 6,800 |
| 1980-81 (டிசம்பர் 1980வரை) .. | 6,800 |
| 1981-82 .. .. .. .. | 11,500 |

## இணைப்பு 1.

### மத்திய மூலதன உதவித் தொகைத் திட்டம்.

அ. ஒப்புதல் (நிகரம்).

| ஆண்டு. | பெரிய மற்றும் நடுத்தர. | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1978 மார்ச் 31 வரையில் .. .. | 154 | 975.89 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 .. | 46 | 284.04 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 .. | 50 | 317.00 |
| ஏப்ரல் 1980 முதல் டிசம்பர் 1980 .. | 22 | 164.19 |
| மொத்த தொகை டிசம்பர் 31 வரை (1980 ஆம் வருடம்). | 272 | 1,741.12 |

| ஆண்டு. | சிறு தொழில் நிறுவனங்கள். | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| (1) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1978 மார்ச் 31 வரை .. .. | 748 | 179.47 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 .. | 182 | 62.85 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 .. | 406 | 78.86 |
| ஏப்ரல் 1980 முதல் டிசம்பர் 1980 .. | 440 | 139.27 |
| மொத்த எண்ணிக்கை டிசம்பர் 31 முடிய (1980 ஆம் வருடம்). | 1,776 | 460.45 |

| ஆண்டு. | மொத்தம். | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| (1) | (6) | (7) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1978 மார்ச் 31 வரை .. .. | 902 | 1,155.36 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 .. | 228 | 346.89 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 .. | 456 | 395.86 |
| ஏப்ரல் 1980 முதல் டிசம்பர் 1980 .. | 462 | 303.46 |
| மொத்த எண்ணிக்கை டிசம்பர் 31 முடிய (1980 ஆம் வருடம்). | 2,048 | 2,201.57 |



### ஆ. வழங்குதல்.

| ஆண்டு. | நடுத்தர மற்றும் பெரிய. | சிறு தொழில் நிறுவனங்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1978 மார்ச்சு 31 வரை | 618.43 | 151.62 | 770·05 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979. | 178.27 | 30.09 | 208·36 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980. | 232.26 | 41.78 | 274.04 |
| ஏப்ரல் 1980 முதல் டிசம்பர் 1980. | 235.65 | 48.02 | 283.67 |
| | 1,264.61 | 271.51 | 1,536.12 |

### இ. மத்திய அரசிடம் திரும்பப் பெற்றது.

| ஆண்டு. | சிப்காட். | ஏணையவை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1978 மார்ச் 31 வரை .. .. | 501.83 | 613.59 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 .. | 161.50 | 229.63 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 .. | 125.54 | 165.57 |
| ஏப்ரல் 1980 முதல் டிசம்பர் 1980 .. | 185.52** | 255.66* |
| | 974.39 | 1,264.45 |

* ஆண்டு இறுதி குறியீடு ரூபாய் 250.00 இலட்சம்.

**ஆண்டு இறுதி குறியீடு ரூபாய் 200.00 இலட்சம்,

## இணைப்பு-2.

### 1980-81 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் மற்றும் வழங்குதல் பற்றிய விவரங்கள் ; 1981-82 ஆம் ஆண்டிற்கான திட்டங்களின் குறியீடுகள்.

| (1) | 1980-81 முன்னேற்ற விபரம். (2) | 1980-81 செலவு மதிப்பீடு. (3) | 1981-82 செலவு மதிப்பீடு. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. தவணைக்கடன்— | | | |
| ஒப்புதல் .. .. | 1,707·10 | 1,200·00 | 2,000·00 |
| வழங்குதல் .. .. | 499·85 | 700·00 | 1,000·00 |
| 2. உத்திரவாதமளித்தல்/நேரடி சந்தா— | | | |
| ஒப்புதல் .. .. | 25·50 | 25·00 | 40·00 |
| 3. வட்டியில்லா விற்பனை வரிக்கடன்— | | | |
| ஒப்புதல் .. .. | 158 55 | 250·00 | 250·00 |
| வழங்குதல் .. | 155·85 | 250·00 | 175·00 |
| 4. மத்திய உதவி (சிப்காட்) தனியாக— | | | |
| ஒப்புதல் .. .. | 134·19 | 200·00 | 250·00 |
| வழங்குதல் .. | 191·22 | 200·00 | 250 00 |
| திரும்பப் பெறுவது. | 185·52 | 200·00 | 250,00 |
| 5. ஆரம்ப மூலதனத் திட்டம்— | | | |
| ஒப்புதல் .. .. | 20·50 | 50·00 | 60·00 |
| வழங்குதல் . ... | 8·39 | 40·00 | 50'00 |



## செய்தித் தாள் காகித ஆலைத் திட்டம்.

கரும்புச்சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு நாளொன்றுக்கு 250 டன் செய்தித்தாளும் 50 டன் எழுதுதாளும் உற்பத்தி செய்வதற்காக அனுமதி பெற்ற 50 கோடி ரூபாய் மூலதனத்தோடு தமிழ்நாட்டில் காகித ஆலை ஒன்றை தொடங்க 1979ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்16ம்நாளில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அரசு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது. இத் திட்டத்திற்குரூபாய் 153கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டது. இத் தொழில் தொடங்குவதற்காக 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3ஆம் நாளன்று மத்திய அரசு முன் உரிமம் வழங்கியுள்ளது. இத்திட்டம் கட்டுப்படியாக இயங்குவதை முன்னிட்டு திருத்திய திட்ட அறிக்கையின்படி ஆண்டுக்கு 50,000 டன் செய்தித்தாள் மற்றும் 40,000 டன் எழுதும் மற்றும் அச்சிடும் தாள் உற்பத்தி செய்யக்கூடிய ஒருங்கிணைந்த ஆலையை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவு ரூ. 190 கோடியாகும்.

2. இத்திட்டத்தை எங்கு நிறுவலாம் என ஆராய்ந்ததில் நிலம், தண்ணீர், மின்சாரம், மூலப்பொருட்கள், ரயில் வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளைக் கருத்தில் கொண்டு, திருச்சி மாவட்டத்தில் புகலூரிற்கு அருகில் நிறுவ முடிவு செய்துள்ளது. இத்திட்டம் பின்தங்கிய பகுதியில் அமைய இருப்பதால் இத்திட்டத்திற்கு பின்தங்கிய பகுதியில் கிடைக்கும் சலுகைகள் பெற இயலும்.

3. உலக வங்கி மற்றும் இந்திய நிதி நிறுவனங்களுடன் நிதி உடன்படிக்கைகள் ஏப்ரல் 1981 ஆம் ஆண்டிற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கண்ட உடன்படிக்கை முடிந்தவுடன் இத்திட்டத்தை விரைவாக செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[1971 ஏப்ரல் 15

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

1. நோக்கங்கள்:

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ஆலங்குளத்தில் ஆண்டுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட சிமெண்ட் ஆலையையும், அரக்கோணத்தில் ஆண்டுக்கு 50,000 டன் உற்பத்தித் திறன் கொண்ட உருக்காலையையும் நடத்தும் நோக்கத்துடன் 1965 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டில் இந்திய அரசு கூட்டுத்துறைக் கொள்கை ஒன்றை வகுத்தது. அரசு வகுத்த வழிமுறைக் கொள்கைகளைச் செயல்படுத்துவதற்காக, டிட்கோ, தமிழ்நாட்டில் கூட்டுத் துறையின் கீழும் தொழில்களை மேம்படுத்தக் கருதியது. தொழிற்சாலைகளுக்கு, மூலதனப் பங்கில் பின்வருமாறு நிதியுதவி பெறப்படுகிறது. டிட்கோ 26 சதவீதம் தனியார் தொழில் முனைவர்களால் 25 சதவீதம் பொதுமக்களிடமிருந்து எஞ்சிய 49 சதவீதம் பெறப் படுகிறது. ரூ. 100 இலட்சத்திற்கு அதிகமான மூலதனத்துடன் கூடிய தொழிற்சாலைகளுக்கு மட்டும் டிட்கோ இதுவரை ஊக்குவித்துள்ளது. ரூ. 50 இலட்சமும் அதற்கு மேலும் மூலதனத்துடன் கூடிய தொழிற்சாலைகளுக்கும் டிட்கோ ஊக்கமளிக்காலமென அரசு அண்மையில் முடிவெடுத்துள்ளது. ஆனால் அத்தகைய தொழிற்சாலைகளில் டிட்கோவின் மூலதனப் பங்கு 15 சதவீதமென வரையறுக்கப்பட்டுள்ளது.

2. நிதி :

தமிழக அரசு, மூலதனப் பங்காகவும் கடனாகவும் டிட்கோவிற்கு நிதியுதவி அளிக்கிறது. இதை தவிர, உத்திரவாதமளிக்கப்பட்ட கடனீட்டுறுதிப் பத்திரங்கள் வெளியிடவும் அரசு உத்திரவாதமளித்துள்ளது. டிட்கோ பொது மக்களிடமிருந்து வைப்பீடுகளையும் எற்றுக்கொள்கிறது. 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி அன்றுள்ளபடி டிட்கோவின் அங்கீகாரமளிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25 கோடி. இது 1980-81-ல் ரூ. 30 கோடியாக உயர்த்தப்பட்டது. 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள் அன்றுள்ளபடி திரட்டப்பட்ட நிதி 1980–81 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டிற்கிணங்கவும் 1981–82



1981 ஏப்ரல் 15]

வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கிணங்கவும் திரட்டக் கருதியுள்ள நிதி குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| விவரங்கள். | 31–3–1980 அன்று வரை திரட்டப் பட்டவை. | 1980–81 திருத்த மதிப்பீட்டிற்கிணங்க திரட்டக் கருதப் பட்டுள்ளவை. | 1981–82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கிணங்க திரட்ட கருதப் பட்டவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் கோடியில்.) | | |
| அரசிடமிருந்து மூலதனப்பங்கு. | 24·73 | 3·50 | 5·00 |
| அரசிடமிருந்து கடன் | 4·32 | 0·75 | 0·90 |
| பிணையமளிக்கப்பட்ட கடனீட்டுறுதிப் பத்திரங்கள். | 10·60 | 1·65 | 1·10 |
| குறித்த கால வைப்பீடுகள் | 3·70 | .. | .. |
| | 43·35 | 5·90 | 7·00 |

1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை பல்வேறு பொது, கூட்டுத் துறைத் தொழிற்சாலைகளில் டிட்கோ செய்துள்ள முதலீடு, 1980–81 திருத்த மதிப்பீட்டிற்கிணங்கவும் 1981–82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கிணங்கவும் செய்யக் கருதியுள்ள முதலீடுகள் குறித்து விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| விவரங்கள். | இணைப்புக் கடன் உட்பட 31–3–1980 வரை டிட்கோ செய்துள்ள முதலீடுகள். | 1980–81 திருத்த மதிப்பீட்டிற்கிணங்க டிட்கோ செய்யக் கருதியுள்ள முதலீடுகள். | 1981–82 ஆம் ஆண்டிற்கிணங்க டிட்கோ செய்யக் கருதியுள்ள முதலீடுகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் கோடியில்.) | | |
| பொதுத்துறைத் திட்டங்கள். | 24·89 | 1·73 | 4·49 |
| கூட்டுத்துறைத் திட்டங்கள். | 18·50 | 4·19 | 3·15 |
| உதவி பெறும் திட்டங்கள். | 0·60 | .. | .. |
| | 43·99 | 5·83 | 7 64 |

**3. திட்டங்கள் ;**

டிட்கோ தற்போது பொது/கூட்டுத் துறையில் மொத்தம் ரூ. 496 கோடி திட்டச் செலவில் 58 தொழிற் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பொதுத் துறையில் 3 தொழிற்சாலைகளும், கூட்டுத் துறையில் 14 தொழிற்சாலைகளும் மொத்தம் சுமார் ரூ. 171 கோடி திட்டச் செலவில், ஏற்கெனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. பொதுத் துறையில் இரண்டு தொழிற்சாலைகளும் கூட்டுத் துறையில் 12 தொழிற்சாலைகளும் மொத்தம் ரூ. 111 கோடி திட்டச் செலவுடன் பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பொதுத்துறையில் 6 தொழிற்சாலைகளும் கூட்டுத்துறையில் 21 தொழிற்சாலைகளும் மொத்தம் ரூ. 214 கோடி திட்டச் செலவில் நிறைவேற்றப்படுவது குறித்து பரிசிலிக்கப்பட்டு வருகிறது. மேற்சொன்ன தொழிற்சாலைகளில், டிட்கோவிற்கு முழுவதும் சொந்தமான துணை நிறுவனம், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) சுமார் ரூ. 80 கோடி திட்டச் செலவில் நிறைவேற்றிவரும் 6 திட்டங்களும் இதில் அடங்கும். டிட்கோவால் நிறைவேற்றப்பட்டுவரும் தொழிற்சாலைகள் குறித்த சுருக்க விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

அ. உற்பத்தியிலுள்ள தொழிற் பிரிவுகள்.

**1. தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம்:**

இத்தொழிற் பிரிவு. 1972 ஜுலை திங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. இத்தொழிற் பிரிவில் இரஷ்ய சாதனங்கள் உள்ளன. 25 டன் ஆர்க் உலையும், தொடர் வார்ப்பட சாதனம் முதலியனவும் உள்ளன. இந்தத் தொழிற் பிரிவின் திறன் ஆண்டுக்கு 36,000 டன்களாகும். 1976-77 இல் இத்தொழிற் பிரிவு 28,948 டன் உற்பத்தி செய்துள்ளது. இதுவே இத் தொழிற் பிரிவு எய்திய உயர் உற்பத்தியாகும். 1979-80 இல் இதன் உற்பத்தி 22,733 டன்களாக இருந்தது. 1980-81 இல் இத்தொழிற்சாலை 27,500 டன் எஃகுப் பாளங்கள் மற்றும் வார்ப்புகளை உற்பத்தி செய்யுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1980—81 இல் உற்பத்தி குறைந்ததற்கு மின் வெட்டே காரணமாகும். 1981—82 இல் இத் தொழிற் பிரிவு, 30,000 டன் உற்பத்தி செய்யுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1979—80 இல் இத் தொழிற்சாலைக்கு ரூ. 41 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை ஏற்பட்ட மொத்த இழப்பு ரூ. 4·56 கோடியாகும். இத் தொழிற் பிரிவிற்



கான முதலீடு பெருமளவில் செய்யப்பட்டதும், பல ஆண்டுகளாக் குறைந்த அளவு விலைக்கு பொருள்களை விற்று குறைந்த அளவு வருவாய் கிட்டியதும் இழப்பு ஏற்பட்டதற்கான காரணங்களாகும். இந்நாட்டிலுள்ள ஒருங்கிணைந்த பெரிய உருக்குத் தொழிற்சாலைகளால் விற்கப்படும் பொருள்களின் விலைகளுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவாக இருந்தது. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து டிட்கோ தனது உற்பத்திப் பொருளை அரசுத் துறைகளுக்கு, உற்பத்திச் செலவு, நியாயமான வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் ஆதாயம் தரத்தக்க விலையில் விற்க அரசு அனுமதித்துள்ளது. 1980—81 திருத்த மதிப்பீட்டிற்கிணங்க இத்தொழிற்சாலைக்கு ரூ. 20 இலட்சம் ஆதாயம் கிட்டுமெனவும், 1981—82 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கிணங்க ரூ. 10 இலட்சம் ஆதாயம் கிடைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**2. சதர்ன் பெட்ரோகெமிகல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம்:**

தமிழ்நாட்டில், அடிப்படை உரங்களுக்கு ஏற்பட்டுள்ள தேவையை நிறைவு செய்வதற்காக தூத்துக்குடியில் சதர்ன் பெட்ரோகெமிகல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் (ஸ்பிக்) அமைக்கப்பட்டது. இதன் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 500,000 டன் யூரியா, 74,000 டன் டி.ஏ.பி. ஆகும். இத் தொழிற் பிரிவிற்கான திட்டச் செலவு ரூ. 105·00 கோடியாகும். பங்கு மூலதனத் தொகையாகவும், கடனாகவும் 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி அன்றுள்ளபடி டிட்கோ செய்துள்ள முதலீடு ரூ. 7·25 கோடியாகும். இத்தொழிற் பிரிவு 1975 ஜுனில் தொடங்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டிற்குள் 1,917 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. இதன் திறன் நாளுக்கு நாள் மேம்பாடு அடைந்து வருகிறது. இத்தொழிற்சாலை, 80-லிருந்து 90 சதவீதம் வரை உற்பத்தி இலக்கை எய்தியுள்ளது. சுமார் 4 ஆண்டுக்காலம் இழப்பில் செயல் பட்ட பின்னர், இத் தொழிற்சாலை 1979—80-ல் ரூ. 7·80 கோடி ஆதாயம் ஈட்டி ஒரு சாதனையை நிகழ்த்தியுள்ளது 1979—80-ல் இத்தொழிற்சாலையின் விற்று முதல் ரூ. 124·64 கோடியாகும். இதுவே, உயரளவாகும். 1978—79 ஆம் ஆண்டு இறுதிவரை ஏற்பட்டிருந்த இழப்பு ரூ. 44·34 கோடி. வரும் ஆண்டுகளில் இது அறவே இல்லாமல் போகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத் தொழிற் பிரிவு இரண்டாவது டி. ஏ. பி./என். பி. கே. தொழிற் பிரிவுகளை நிறுவக் கருதியுள்ளது.

**3. தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிகல்ஸ் நிறுவனம் :**

தமிழ் நாட்டிலுள்ள தோல் பதனிடு தொழில்களுக்குத் தேவைப்படக்கூடிய குரோம் இரசாயனப் பொருட்களைத் தயாரிப்பதற்காக, தொழிற்துறையில் பின்தங்கிய பகுதியான

இராணிப்பேட்டையில், கூட்டுத் துறையின் கீழ், தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிகல்ஸ் நிறுவனம் (டிசிசி) நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம், 1975 அக்டோபரில் உற்பத்தியைத் தொடங்கியது. தமிழ்நாட்டின் தேவையின் பெரும்பகுதியை இது நிறைவு செய்து வந்துள்ளது. இதன் நிறுவுத் திறன் ஆண்டுக்கு 3,300 டன் பேசிக் குரோம்டேனிங் பவுடர் (பி. சி. டி.), 4,315 டன் சோடியம் டைகுரோமேட் ஆகும். சென்ற ஆண்டின் உற்பத்தி 2,615 டன் பி.சி.டி. பவுடரும், 3,956 டன் பிற இரசாயனப் பொருள்களும் ஆகும்.

இந்த கூட்டுத்துறை நிறுவனம் நிறுவப்படுவதற்கு முன்பு இம்மாநிலத்தில் உள்ள தோல் தொழில்கள் குரோமியம் இரசாயனப் பொருள்களுக்காக பிற மாநிலங்களை எதிர்நோக்கி இருக்க வேண்டியிருந்தது. இந்நிறுவனத்தில் டிட்கோவின் மூலதனப் பங்கு ரூ. 10·40 இலட்சமாகும். 1979—80-ல் இந் நிறுவனம் ரூ. 2·87 கோடி விற்று முதல் செய்து சாதனை நிகழ்த்தியுள்ளது. 1979—80-ல் இத்தொழிற் பிரிவு ரூ. 50 இலட்சம் நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது. இதே ஆண்டில் 10 சதவித ஆதாயப் பங்கு அறிவித்தது. தோல் தொழிலில் சரிவு ஏற்பட்டுள்ளதன் காரணமாக, இத்தொழிற் பிரிவு கடும் பிரச்சினையைத் தற்போது எதிர் நோக்கியுள்ளது. இத் தொழிற் பிரிவு தனது தனித்தியங்கவல்ல திறனை மேம்படுத்துவதற்கான தோல் பதனிடு பிற இரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்யவும் திட்டமிட்டுள்ளது. இத்தொழில் பிரிவில் 590 பேர் பணியாற்றுகின்றனர்.

4. பாண்டியன் கெமிகல்ஸ் நிறுவனம் :

தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவைப்படக்கூடிய முக்கிய இரசாயனப் பொருள்களில் ஒன்றான பொட்டாசியம் குளோரேட் உற்பத்தி செய்வதற்காக, 1972 நவம்பரில், கூட்டுத் துறையில், மேலூர் வட்டத்தின பின்தங்கிய பகுதியில் பாண்டியன் கெமிகல்ஸ் நிறுவனம் தொடங்கப்பட்டது. அப்போது, இம்மாநிலத்தில் பொட்டாசியம் குளோரேட்டிற்கு இருந்த தேவையின் அளவு சுமார் 7,200 டன்களாகும். இந்நிறுவனம், 1975 சூலையில் உற்பத்தியைத் தொடங்கி, கூடுதலாக வெளி நிதியுதவி ஏதுமில்லாது தன் சொந்த நிதிவாயில்களைக் கொண்டே இது அதன் தொடக்க உற்பத்தித்திறனை 1,825டன்னிலிருந்து 3,630 டன்களாக உயர்த்தியது. தமிழ்நாடு குளோரேட் நிறுவனம் என்ற இந்நிறுவனத்திற்கு முழுவதும் சொந்தமான புதிய கிளை நிறுவனம் ஒன்றின் மூலம் சுமார் 3,000 டன் கூடுதல் திறனைப் பெறும் திட்டம் ஒன்றை இந்நிறுவனம் நிறைவேற்றி வருகிறது. இந்த புதிய தொழிற் பிரிவை அமைக்கக் கருதியுள்ள இடம், இராமநாதபுரம் மாவட்டம், புலியூரில் உள்ளது. இந்தக் கூடுதல்



திறன், 1985-க்கு முன்னதாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த புதிய தொழிற் பிரிவு தொடங்கப்பட்ட பின்னர் பொட்டாசியம் குளோரேட்டைப் பொறுத்தவரையில் இம்மாநிலம் தன்னிறைவு பெற்றுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாண்டியன் கெமிகல்ஸ் நிறுவனத்தில் டிட்கோவின் முதலீடு ரூ. 6·24 இலட்சமாகும். இந்நிறுவனத்திடமிருந்து, டிட்கோ, ரூ. 6·24 இலட்சம் மதிப்புள்ள ஆதாயப் பங்கையும் பெறுகிறது. இந்நிறுவனத்தில் 150 பேர் பணியாற்றுகிறார்கள். தமிழ்நாடு குளோரைட் தொழிற் பிரிவின் முதல் கட்டப் பணி முடிக்கப்பட்டவுடன், 255 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

5. தமிழ்நாடு தாதா பார்மசூட்டிகல்ஸ் நிறுவனம் :

மருந்துப் பொருள்கள் தயாரிப்பதற்காக, இத்தொழிற் பிரிவு 1973-ல் நிறுவப்பட்டது. இத் தொழிற் பிரிவு செங்கற்பட்டு மாவட்டம், பல்லாவரத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலையின் விரிவாக்கப் பணி உட்பட இதன் செலவு ரூ. 183·53 இலட்சமாகும். டிட்கோவின் முதலீடு ரூ. 23·40 இலட்சமாகும். கடந்த மூன்றாண்டுகளில் இந்நிறுவனம் நல்ல ஆதாயம் ஈட்டியுள்ளது. 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி அன்றுள்ளபடி இதன் திரண்ட சேமிப்பு ரூ. 26·48 இலட்சமாகும். இந்நிறுவனம், தனது நிதிவாயில்களையே விரிவாக்கத் திட்டத்திற்குப் பெரிதும் நம்பியுள்ளது. இந்நிறுவனத்தில் தற்போது 350 பேர் பணியாற்றுகின்றனர்.

6. சதர்ன் போராக்ஸ் நிறுவனம் :

கண்ணாடி, மட்பாண்டம், துணி சலவைத் தொழில்களின் தேவையை நிறைவு செய்வதற்காக, செங்கற்பட்டு மாவட்டம், தாட்சூர் கிராமத்தில் ஆண்டுக்கு 15,000 டன் உற்பத்தித் திறனுடன் போராக்ஸ் தொழிற் பிரிவு நிறுவப்பட்டது. இதன் மூலதனச் செலவு ரூ. 140·00 இலட்சமாகும். இடைக்காலக் கடன் உட்பட டிட்கோவின் முதலீடு 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை, ரூ. 50·18 இலட்சமாகும். 1976 சனவரியில் உற்பத்தியைத் தொடங்கிய இத் தொழிற் பிரிவு, அதுவரை போராக்ஸ் ஏகபோக உற்பத்தி நிறுவனம் ஒன்றுடன் போட்டியிட வேண்டியிருந்தது. 1980 ஆம் ஆண்டு சூன் மாதம் 30 ஆம் தேதி வரை இந்நிறுவனத்திற்கு ரூ. 92 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. இத் தொழிற் திட்டத்தின் தனித்தியங்கவல்ல திறனை மேம்படுத்துவதற்காக நாள் ஒன்றுக்கு 2 டன் போரிக் அமிலம் உற்பத்தி செய்யும் தொழிற் பிரிவு ஒன்றை நிறுவியுள்ளது. இத் தொழிற் பிரிவு, 1980 பிப்ரவரியில் தொடங்கப்பட்டது. இந் நிறுவனத்தில் 90 பேர் பணியாற்றுகின்றனர்.

7. வடைாசன் நிறுவனம்:

ரூ. 51 இலட்சம் செலவில் ஆண்டுக்கு 10,000 தொலைக் காட்சிப் பெட்டிகள் தயாரிக்கும் நிறுவத் திறனுடன் இந்நிறுவனம் தொடங்கப்பட்டது. இத் தொழிற்சாலை 1975 சூனில் உற்பத்தியைத் தொடங்கியது. பெருகிவரும் தேவையை நிறைவு செய்வதறகாக, இதன் திறன் ஆண்டுக்கு 20,000 தொலைக் காட்சிப் பெட்டிகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந் நிறுவனத் தில், டிட்கோவின் முதலீடு 31—3—1980 வரை இடைக்காலக் கடன் உட்பட ரூ. 13·50 இலட்சமாகும். இத் தொழிற் பிரிவு 1979 இறுதிக்குள் 20,000 தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கும் திறனை எய்தியுள்ளது, 31—12—1979 வரை இந்நிறுவனத்தின் விற்று முதல் ரூ. 617.40 இலட்சமாகும். இத் தொழிற் சாலையில் 400 பேர் பணியாற்றுகின்றனர். இந் நிறுவனம் ஆதாயத்தில் செயல்படுகிறது. 31–12–1979 வரையிலான ஆண்டிற்கு ரூ. 25.71 இலட்சம் நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்நிறுவனம் 12 சதவீத ஆதாயப் பங்கு அறிவித்துள்ளது. சுமார் 19 இலட்சம் திரண்ட சேமிப்பு வைத்துள்ளது.

8. ஏசியா டொபாக்கோ நிறுவனம்:

இத் தொழிற் பிரிவு, ஆண்டுக்கு 4,500 மில்லியன் சிகரெட்டுகள் தயாரிக்கும் திறனுடன், தொழில் துறையில் பின்தங்கிய பகுதியான ஓசூரில் நிறுவப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைக்கான மூலதனச் செலவு ரூ. 178 இலட்சமாகும். இதில், டிட்கோவின் பங்கு ரூ. 30·80 இலட்சமாகும். 31—3—1980 அன்றுவரை டிட்கோ, இத் தொழிற் பிரிவில், இடைக்காலக் கடன் உட்பட ரூ. 32·60 இலட்சம் முதலீடு செய்துள்ளது. இத் தொழிற்பிரிவு குறைந்த விலை சிகரெட்டான 'ட்யூக்' உற்பத்தி செய்கிறது. மேலும், இத் தொழிற் பிரிவு பிற நிறுவனங்களின் தயாரிப்புப் பணியை மேற்கொள்வதுடன் பெருமளவில் சிகரெட் உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் சிகரெட்டுகளை விற்பனை செய்யும் பணியையும் மேற்கொண்டுள்ளது. புகையிலையைப் பதப்படுத்துவதற்காகத் தொடக்கத் தயாரிப்புப் பிரிவு ஒன்றைத் தன் சொந்தத்திலேயே இத் தொழிற் பிரிவு நிறுவி வருகிறது. இப்பணி 1981–82-ல் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற் பிரிவு 1976 சூனில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. 30—9—1980 வரை இதற்கு ஏற்பட்டுள்ள மொத்த இழப்பு ரூ. 25·26 இலட்சமாகும், நல்ல பிரபலமடைந்த சிகரெட் உற்பத்தியாளர்களுடன் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டதும், அதிகரித்த ஆயத்தீர்வை விதிக்கப்பட்டதுமே இழப்பிற்கான காரணமாகும். இதில் 245 பேர் பணியாற்றுகின்றனர்.



9. தமிழ்நாடு ஆல்கலின் பாட்டரிஸ் நிறுவனம்.

பாதுகாப்பு, பிற நுகர் பொருள் துறைகளுக்குத் தேவைப்படக்கூடிய நிக்கல் காட்மியம் பாட்டரிகளின் (பல்வேறு வகை தேவைகளை நிறைவு செய்வதற்காக, இந் நிறுவனம், அம்பத்தூர் தொழிற் பேட்டையில் நிறுவப்பட்டது. இதன் தற்போதைய நிறுவு திறன் ஆண்டுக்கு 50 இலட்சம் ஆம்பியர் மணிகளாகும். இத்திட்டத்திற்கான செலவு ரூ. 89.49 இலட்சம் ஆகும். இதில், டிட்கோ ரூ. 15 இலட்சம் இடைக்காலக் கடன் உட்பட ரூ. 25 இலட்சம் முதலீடு செய்துள்ளது. இத் தொழிற் பிரிவு 1976 சனவரியில் உற்பத்தியைத் தொடங்கியது. உள்நாட்டுத் தொழில்நுட்ப உத்தி போதுமானதாய் இல்லாத காரணத்தால் பாதுகாப்புத் துறையிடமிருந்து பெற்ற தேவை ஆணைகளுக்கு ஏற்ப பொருள்களை அனுப்ப இயலவில்லை. இதனால் இருப்பு தேங்கிக் கிடந்தது. இதனால் 31—3—1980 வரை இத் தொழிற் பிரிவிற்கு ரூ. 43 இலட்சம் இழப்பு ஏற்பட்டது. இத் தொழிற் சாலைக்குப் புத்துயிர் அளித்திடும் நோக்குடன், பிரபலமடைந்த அமெரிக்க நிறுவனத்திடமிருந்து தொழில்நுட்ப உத்தி பெறப்பட்டுள்ளது. புத்துயிர் அளிக்கும் திட்டம் செயல்படுத்தத் தொடங்கப்பட்டுள்ளது. இப்பணி 1981 ஏப்ரலுக்குள் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதன் பயனாக, இத் தொழிற் பிரிவு ஆதாயத்தில் செயல்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இதன் செயல் விளைவுகள் கணிசமான அளவிற்கு மேம்பாட்டையும். இதில் 90 பேர் பணியாற்றுகின்றனர்.

10. கிரேட் சிட்ராலர் பில்டிங் யார்டு மண்டபம் லிமிடெட்.

மண்டபத்திலுள்ள உலர் தோணித் துறையைப் பயன்படுத்தும் நோக்கத்துடன், கடலில் செல்லும் படகுகளை பழுதுபார்ப்பதற்கும் நடுத்தர அளவு உருக்கு மீன்பிடி இழு படகுகளைக் கட்டுவதற்கும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பின்தங்கிய பகுதி ஒன்றில் கூட்டுத் துறையில் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க தமிழக அரசு கருதியது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 100 இலட்சமாகும். இந்த கூட்டுத் துறை நிறுவனம் 1973 டிசம்பர் 14 ஆம் நாள் அமைக்கப்பட்டது. 16 மீன்பிடி படகுகளைக் கட்டுவதற்கு இந்திய அரசிடமிருந்து முன் உரிமக் கடிதம் 6—3—1974 அன்று பெறப்பட்டது. இத்திட்டத்தின் முதல் கட்டப் பணியாக கடலில் செல்லும் படகுகளை, கப்பல்களைப் பழுது பார்க்கும் பணியும், இரண்டாவது கட்டப்பணியாக மீன்பிடி உருக்கு இழு படகுகளைக் கட்டும் பணியும் மேற்கொள்ளப்படும். முதல் கட்டப்பணி அதாவது பழுதுபார்க்கும் பணி 1976 சனவரியில் தொடங்கப்பட்டது. அங்காடி நிலவரம் சரியில்லாத காரணத்தால் மீன்பிடி இழு படகுகள் கட்டும் பணி

இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. 31—3—1979 வரை இந்நிறுவனத்திற்கு மொத்தம் ரூ. 15 இலட்சம் வரை இழப்பு ஏற்பட்ட போதிலும், 1979–80இல் இந்நிறுவனம் ரூ. 15·12 இலட்சம் வருவாய் ஈட்டி, ரூ. 5.85 இலட்சம் ஆதாயம் பெற்றுள்ளது. இதில் 150 பேர் பணியாற்றுகிறார்கள்.

11. மாருதி கிரிஸ்டல் சால்ங் நிறுவனம்.

இது கூட்டுத்துறைத் திட்டமாகும். செங்கற்பட்டு மாவட்டம் திருப்போரூரில் பக்கிங்ஹாம் கால்வாயின் கரைகளில் சுமார் 3,600 ஏக்கர் தரிசு நிலத்தில் உப்பு தயாரிப்பதற்காக 1973 ஆகஸ்டில் நிறுவப்பட்டது. ஆண்டுக்கு சுமார் 1·2 இலட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் இந்தத் தொழில் பிரிவு வடிவமைக்கப்பட்டுள்ளது. திட்டச் செலவு ரூ. 65 இலட்சமாகும். டிட்கோவின் முதலீடு 31—3—1980 வரை இடைக்கால கடன் உட்பட ரூ. 11.58 இலட்சமாகும். பக்கிங்ஹாம் கால்வாயில் கடல் நீர் வரத்து போதுமான அளவில் இல்லாததாலும் 1979 ஆம் ஆண்டு கோடைகாலத்தில் எதிர்பாராத வகையில் மழை பெய்ததன் காரணமாகவும் இந்நிறுவனம் கடும் பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளது. இதுவரை எய்திய உற்பத்தி சாதனை ஆண்டுக்கு சுமார் 30,000 டன் ஆகும். 30—9—1979 அன்று முடிய இந்நிறுவனத்திற்கு ஏற்பட்ட மொத்த இழப்பு ரூ. 21.60 இலட்சமாகும். இந்நிறுவனத்தில் 200 பேர் பணியாற்றுகின்றனர்.

12. அரக்கோணம் கோஸ்டிங்ஸ் அண்டு ப்போர்ஜிங்ஸ் லிமிடெட்.

கனரக வார்ப்புகளின் தேவைகளை நிறைவு செய்வதற்காக இந்நிறுவனம் 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத் தொழிற்சாலைக்கு தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனம், உருக்கு உலோகத்தை வழங்குகிறது. இதன் திறன் ஆண்டுக்கு 1,000 டன்களாகும். உற்பத்தி 1977 ஏப்ரலில் தொடங்கப்பட்டது. இதன் மூலதனச் செலவு ரூ. 75 இலட்சமாகும். டிட்கோவின் முதலீடு 31—3—1980 வரை, ரூ. 17.50 இலட்சமாகும். 31—3—1980 முடிய உள்ள ஆண்டில் இத் தொழிற்சாலை 735 டன் உற்பத்தி செய்துள்ளது. இதே ஆண்டில் ரூ. 85.08 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது. 31—3—1980 வரை, இத் தொழிற்சாலை ரூ. 3 இலட்சம் ஆதாயம் ஈட்டியுள்ளது. இதில் 55 பேர் பணியாற்றுகின்றனர்.



13. தமிழ்நாடு கெமிகல் பிராடெக்ட்ஸ் லிமிடெட்

துணி ஆலைத் தொழில்களுக்குத் தேவைப்படக்கூடிய அடிப்படை இரசாயனப் பொருள்களை அதாவது சோடியம் ஹைட்ரோசல்பைட் தயாரிப்பதற்காக, இராமநாதபுரம் மாவட்டத்தின் பின்தங்கிய பகுதியாகிய காரைக்குடிக்கு அருகில் கழனிவாசல் என்ற கிராமத்தில் இத் தொழிற் பிரிவு அமைக்கப்பட்டது. இத் தொழிற் பிரிவின் உற்பத்தித்திறன் ஆண்டுக்கு 3,300 டன் சோடியம் ஹைட்ரோ சல்பைடும், 4,500 டன் திரவ சல்பர்டை ஆக்ஸைடும் ஆகும். இத்தொழிற் பிரிவிற்கான செலவு ரூ. 756 இலட்சமாகும். டிட்கோ 31—3—1980 வரை இடைக்கால கடன் ரூ. 67 இலட்சம் உட்பட ரூ. 118.30 இலட்சம் முதலீடு செய்துள்ளது. 1979–80இல் இத் தொழிற்சாலை 1,563 டன் சோடியம் ஹைட்ரோ சல்பைடும், 234 டன் திரவ சல்பர்டை ஆக்ஸைடும் உற்பத்தி செய்துள்ளது. 1979 செப்டம்பர் வரை இத் தொழிற்சாலைக்கு மொத்தம் ரூ. 165.31 இலட்ச இழப்பு ஏற்பட்டுள்ளது. மின் வெட்டில் இத் தொழிற் பிரிவு இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளது. இதன் விற்பனை அண்மையில் அதிகரித்துள்ளது. இத் தொழிற்சாலை ஆதாயம் ஈட்டுமென எதிர் பார்க்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் 250 பேர் பணியாற்றுகின்றனர்.

14. இண்டர் காண்டினென்டல் லெதர்ஸ் லிமிடெட்.

ஏற்றுமதி செய்வதற்காகப் பதப்படுதப்பட்ட தோல்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை மேலும் மேலும் அமைக்க வேண்டுமென்கிற அரசின் கொள்கைக்கிணங்க, முழுவதும் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட இத்தொழிற் பிரிவை டிட்கோ நிறுவியுள்ளது. இத் தொழிற் பிரிவு இராணிப்பேட்டையில் நிறுவப்பட்டுள்ளது. ஆண்டுக்கு சுமார் 9 இலட்சம் தோலைப் பதப்படுத்துவதற்காக இப்பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலை 1979 ஜூனில் உற்பத்தியைத் தொடங்கியது. இந்நிறுவனத்தில் தற்போது சுமார் 75 பேர் பணியாற்றுகின்றனர். இதன் திட்டச் செலவு ரூ. 120 இலட்சமாகும். டிட்கோவின் முதலீடு 31—3—1980 வரை ரூ. 10.40 இலட்சமாகும். 31—3—1980 முடிய முதலாவது ஆண்டில் இத் தொழிற்சாலைக்கு ரூ. 14.47 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையின் உற்பத்தி நாளுக்கு நாள் மேம்பாடு அடைந்து வந்த போதிலும், இத் தொழிற் பிரிவு உற்பத்தித் திறனில் 40 சதவீதத்திற்கு மட்டுமே செயல் பட்டு வருகிறது. உற்பத்தியைப் பெருக்க இந்நிறுவனம் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இது பலனளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக நிறுவனத்தின் இயக்குனர் குழு ஒன்று ருமேனியாவிற்குச் சென்று 15,000 தோல்களை ஏற்றுமதி

செய்வதற்கான ஆணையைப் பெற்றுவந்துள்ளது. மேற்கொண்டும் ஏற்றுமதி ஆணைகளைப் பெற பல்கேரியா, அமெரிக்கா, கனடா, கொரியா, நாடுகளிலுள்ள வணிகர்களிடமும் கேட்டுள்ளது. இவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடந்தேறி வருகின்றன. அவர்களிடமிருந்து தேவை ஆணைகள் கூடிய விரைவில் கிடைக்கும்.

15. சதர் ஹைட்ரோ கார்பன் லிமிடெட்.

அசிடிக் அமிலமும், அசிடிக் அன்ஹைட்டிரேட்டும் தயாரிப்பதற்காக புதுக்கோட்டை மாவட்டத்தின் பின்தங்கிய பகுதி மண்டையூரில் இத் தொழிற் பிரிவு நிறுவப்பட்டது. இதன் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 1,000 டன் அசிடிக் அமிலமும், 1,000 டன் அசிடிக் அன்ஹைட்டிரேட்டுமாகும். இது, 1980 மார்ச்சில் தொடங்கப்பட்டது. இத் தொழிற் பிரிவின் திட்டச் செலவு, முதல் கட்டப் பணிக்கு ரூ. 220 இலட்சமாகும். டிட்கோ இதில் 31—3—1980 முடிய, இடைக்கால கடன் உட்பட ரூ. 85.60 முதலீடு செய்துள்ளது. அசிடிக் அமிலம், அசிடிக் அன்ஹைட்ரேட் உற்பத்தியை மேம்படுத்திய பின்னர், அடுத்த கட்டப் பணியாக உற்பத்தியின் ஊடே கிடைக்கும் உப உற்பத்திப் பொருள்களை அதிக அளவில் பெருவதற்கான திட்டங்களைச் செயல் படுத்தும். இத் தொழிற் பிரிவில் 550 பேர் பணியாற்றுகின்றனர்.

நிறைவேற்றப்பட்டுவரும் தொழிற்சாலைகள்.

1. அசிட்டிலின் அண்டு இன்டஸ்ட்ரியல் கேஸ் சிலிண்டர்ஸ் லிமிடெட்.

ஆண்டுக்கு 25,000 அசிட்டிலின் கேஸ் சிலிண்டர்கள் தயாரிப்பதற்கான இத் திட்டம், டிட்கோவால் மேற்கொள்ளப்பட்டது. இத் தொழிற்சாலையின் திட்டச் செலவு ரூ. 61.30 இலட்சமாகும். டிட்கோவின் பங்கு ரூ. 6.50 இலட்சமாகும். 31—3—1980 வரை ரூ. 6.15 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. இத் தொழிற் பிரிவு நன்கு பிரபலமடைந்த அமெரிக்க நிறுவனம் ஒன்றுடன் தொழில் நுட்ப உத்தி ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இத் தொழிற் பிரிவு நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளது. அம்பத்தூர் தொழிற்பேட்டையில் நிறுவப்பட்டுள்ள இத் தொழிற் பிரிவு,1981-ம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 50 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.



2. சதர்ன் ஆக்ரிப்யூரேன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.

கரும்பு சக்கையிலிருந்து, சுத்திகரிப்பு ஆலைகளிலும், ரெசின் தயாரிப்தற்கு, கரைப்பானாகப் பயன்படும் பர்ப்யூரல் ஆண்டுக்கு 3,000 டன் உற்பத்தி செய்வதற்கான திட்டமாகும். இத் தொழிற்பிரிவில் இந் நாட்டில் நிறுவப்படக்கூடிய முதல் நிறுவனமாகும். இத் தொழிற் பிரிவு தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரத்திற்கு அருகில் முண்டியம்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக செலவு ரூ. 732 இலட்சமாகும். டிட்கோவின் பங்கு ரூ. 42.90 இலட்சமாகும். இத் தொகையை (ரூ. 42·90 இலட்சம்) டிட்கோ ஏற்கனவே கொடுத்துள்ளது. இத் தொழிற்சாலையில் 1981 ஆண்டில் வணிக அளவில் உற்பத்தி தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற் பிரிவு 150 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

3. தமிழ்நாடு ப்ளோரின் அண்டு அலைடு கெமிகல்ஸ் லிமிடெட்.

அலுமினியம் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படக் கூடிய முக்கியமான இரசாயனப் பொருட்களின் ஒன்றான அலுமினியம் ப்ளோரைடு, ஆண்டுக்கு 6,000 டன் உற்பத்தி செய்வதற்காக இத் தொழிற் பிரிவு, கூட்டுத் துறையில், 1972 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. நாட்டின் தேவை சுமார் 9,000 டன்களாகும். இதில் உள்நாட்டு 'உற்பத்தி (மகாராஷ்டிரம், குஜராத்) 3,000 டன்களே ஆகும். இத் தொழிற் பிரிவு ஆண்டுக்கு சுமார் ரூ. 2.5 கோடி அளவிற்கு அன்னியச் செலாவணி மிச்சம் ஏற்பட உதவும் இந் நிறுவனம், நல்ல தொழில் நுட்ப உத்தியை சுவிட்சர்லாந்திலுள்ள நிறுவனம் ஒன்றிடம் பெற்றுள்ளது. இதன் திட்டச் செலவு ரூ. 15 கோடியாகும். இதற்கு டிட்கோ அளிக்க ஒப்புக் கொண்ட தொகை ரூ. 125 இலட்சமாகும். இத் தொழிற் பிரிவு சுமார் 265 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற் பிரிவு, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியான இராமநாதபுரம் மாவட்டம் சிவகெங்கை வட்டம், மணலூர் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ளது. இத்தொழிற் பிரிவு, 1982—83-ல் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட்.

இந்நாட்டில் ரோலர் பேரிங்குகளின் தேவையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிறைவு செய்வதற்காக, ரோலர் பேரிங்குகளை இத் தொழிற் பிரிவு உற்பத்தி செய்யும். இதன் உரிமம் பெற்ற உற்பத்தித்திறன் ஆண்டுக்கு 5 மில்லியன் பேரிங்குகளாகும். இதன் திட்டச் செலவு ரூ. 16.35 கோடியாகும்.

டிட்கோவின் மூலதனப் பங்கு ரூ. 1.30 கோடியாகும். இத் தொழிற் பிரிவு, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியான தருமபுரி மாவட்டம் ஹோசூருக்கு அருகில் பாகலூர் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ளது. இத் தொழிற் பிரிவு 653 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும். இத் தொழிற்சாலை, 1981–82-ல் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

5. ஏசியன் கார்பன்ஸ் லிமிடெட்.

அலுமினியம் தொழிலில் பயன்படுத்தக்கூடிய காத்தோடு பிளாக்குகள், ஆண்டுக்கு 10,400 டன் தயாரிப்பதற்கான தொழிற்சாலையாகும். திட்டச் செலவு ரூ. 800 இலட்சமாகும். டிட்கோவின் மூலதனப் பங்கு ரூ. 80 இலட்சமாகும். இத் தொழிற் பிரிவு சுமார் 300 பேருக்கு வேலை வாய்ப்பளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற்சாலை பல்வேறு வகை கார்பன் பொருள்களைத் தயாரிப்பதற்கு வழிகோலும் சக தொழில் முனைவர்கள் மாற்றம் செய்யப்பட்டதால், இத் தொழிற்சாலையை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தொழிற் பிரிவு 1981–82–ல் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

6. வானவில் டைஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட்,

ஆணி செய்முறைப்படுத்தும் தொழில்களுக்கு குறிப்பாக கைத்தறித் தொழில்களுக்குத் தேவைப்படக்கூடிய சாயப் பொருள்களை (அதாவது நேப்தால், சாயம் போகா வண்ணங்கள். இத் தொழிற் பிரிவு உற்பத்தி செய்யும் முதல் கட்டப் பணியில் ஆண்டுக்கு 450 டன் நேப்தால், சாயப் பொருள் தயாரிக்கும். பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் தொழிற் பிரிவு கடலூருக் அருகில், குடிகாடு கிராமத்தில் நிறுவப்பட்டுள்ளது. இத் தொழிற் பிரிவின் முதல் கட்டப் பணி 1981–82 இல் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. திட்டச் செலவு ரூ. 400 இலட்சமாகும். டிட்கோ, ரூ. 41 இலட்சம் கொடுக்க வேண்டும். இத் தொழிற் பிரிவு சுமார் 400 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

7. கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட்.

இத் தொழிற் பிரிவு தொடக்கத்தில், பொதுத் துறையின்கீழ் மேற் கொள்ளக் கருதப்பட்டு, பின்னர், கூட்டுத் துறையில் மேற் கொள்ள ஒப்புக் கொள்ளப்பட்டது. வேளாண் பணியில் எஞ்சக் கூடிய வைக்கோல் போன்ற பொருள்களைப் பயன்



படுத்தி அச்சு, எழுது காகிதங்கள் தயாரிப்பதற்காக இத் தொழிற் பிரிவு நிறுவப்பட்டது. இத் தொழிற் பிரிவு தென் ஆர்க்காடு மாவட்டம், வடக்குத்து கிராமத்தில் நிறுவப்பட்டுள்ளது திட்டச் செலவு ரூ. 487 இலட்சமாகும். இத் தொழிற் பிரிவின் உரிமம் பெற்ற உற்பத்தித் திறன் 9,900 டன் அச்சு, எழுது காகிதங்கள் ஆகும். இத் தொழிற் பிரிவு 1981–82–ல் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற்சாலை சுமார் 300 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

8. தூத்துக்குடி அல்கலி கெமிகல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் லிமிடெட்.

கண்ணாடி, காகித, பிற தொழில்களுக்குத் தேவைப்படக்கூடிய சோடாதூள் 66,000 டன்னும், அமோனியம் குளோரைடு 66,000 டன்னும் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையாகும். அமோனியம் குளோரைடு ஓர் உரம். இத் தொழிற் பிரிவு திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடியில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவைப்படக்கூடிய மூலப் பொருள் உப்பு தூத்துக்குடிக்கு அருகில் பெருமளவில் கிடைக்கிறது. அமோனியா ஸ்பிக்கிலிருந்து கிடைக்கிறது. இதன் தொடக்க திட்டச் செலவு ரூ. 39.75 இலட்சமாக இருந்து, செலவு அதிகமான காரணத்தினால் இதன் திட்டச் செலவு தற்போது ரூ. 50 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது. டிட்கோவின் மூலதனப்பங்கு ரூ. 575 இலட்சமாகும். இத் தொழிற் பிரிவு 1981–82 இல் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 500 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும். இத் தொழிற்சாலை நிறைவேற்றப்பட்ட பிறகு இம் மாநிலத்திற்கு புதிய உரம் கிடைப்பதோடு மட்டுமல்லாது குஜராத், உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து இதுவரை பெற்றுவந்த சோடாதூள் இரசாயனப் பொருட்கள் நம் மாநிலத்திலேயே கிடைக்கும்.

9. மெட்ராஸ் ஷூ பாப்ரிக்ஸ் லிமிடெட்.

இத் தொழிற் பிரிவு, தொழிற்துறையில் பின் தங்கிய பகுதியான வட ஆற்காடு மாவட்டம் வாலாஜாபேட்டையில் நிறுவப்பட்டுள்ளது. இது அமெரிக்க நிறுவனம் ஒன்றிடமிருந்து தொழில் நுட்ப உடனுழைப்பைப் பெற்றுள்ளது. இது முழுவதும் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற் பிரிவாகும். இதன் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 6 இலட்சம் ஜோடி காலணிகளாகும். இதன் திட்டச் செலவு ரூ. 145 இலட்சமாகும். டிட்கோவின் மூலதனப் பங்கு ரூ. 10,40 இலட்சமாகும். இத் தொழிற் பிரிவு 1982 ஆம் ஆண்டின

தொடக்கத்தில் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது சுமார் 300 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

10. ஷிப் ஸ்டீஸ் (இந்தியா) லிமிடெட்.

பழைய கப்பல்களைக் பிரிப்பதற்காக இத் தொழிற் பிரிவு நிறுவப்பட்டது. இவ்வாறு பிரிக்கப்படும் கழிப்பிரும்பு, மீள் உருள்வழுத்தம் செய்யப்படுவதற்கும், ஆர்க் உலைகளுக்கும் பயன்படும். இதன் திறன் ஆண்டுக்கு 4 கப்பல்களைப் பிரிப்பதாகும். தொடக்கத்தில் இதன் திறன் ஆண்டுக்கு 2 கப்பல் களாகும். இதனால் கிடைக்கக்கூடிய கழிப்பிரும்பின் அளவு ஆண்டுக்கு 8,500 டன்களாகும். திட்டச் செலவு ரூ. 50 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. டிட்கோவின் பங்கு ரூ. 5 இலட்சமாக இருக்கும். இத் தொழிற்சாலை, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியான இராமநாதபுரம் மாவட்டம், வாலி நோக்கத்தில் அமைக்கப்படும். இத் தொழிற் பிரிவு சுமார் 650 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

11. மல்லாடி டிரக்ஸ் அண்டு பார்மசூடிகல்ஸ் லிமிடெட்.

ஆஸ்த்துமா நோய்க்குப் பயன்படுத்தக்கூடிய அடிப்படை மருந்துப் பொருளான எஃபிட்ரின் ஹைட்ரோ குளோரைடு ஆண்டுக்கு 33 டன் தயாரிப்பதற்காக, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியான வடாற்காடு மாவட்டம் இராணிப் பேட்டையிலுள்ள 'சிப்காட்' தொழில் இணையத்தில் இத் தொழிற் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது, திட்டச் செலவு ரூ 134 இலட்சமாகும். டிட்கோவின் பங்கு ரூ. 12 இலட்சமாகும். இத் தொழிற் பிரிவு சுமார் 100 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

12. ஆட்டோமேடிவ் கேஸ்டிங்ஸ் லிமிடெட்.

ஆட்டோமோபைல் தொழில்களுக்குத் தேவைப்படக்கூடிய தரமான உருக்கு வார்ப்புகளைத் தயாரிப்பதற்கான இத் தொழிற்சாலை, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியான ஹோசூரில் நிறுவப்பட்டுள்ளது. இத் தொழிற் பிரிவின் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 6,000 டன்களாகும். பழுப்பு உருக்கு வார்ப்புகளைத் தயாரிப்பதற்காக நவீன இயந்திர சாதனங்களை ரூ. 700 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நிறுவக் கருதப்பட்டுள்ளது. டிட்கோவின் மூலதனப் பங்கு ரூ. 60 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத் தொழிற் பிரிவு 400 பேருக்கு வேலை வாய்ப்பளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.



இது நிறைவேற்றப்படுவதற்காக எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் பரிசீலனையிலுள்ள தொழிற்சாலைகள்.

பொதுத்துறைத் தொழிற்சாலைகள்.

1. மக்னீசியம் உலோகத் திட்டம்.

விமானம் கட்டுமான அலுமினியம், விண்வெளி ஆராய்ச்சி, வானிலை ஆராய்ச்சி ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படும் மக்னீசியம் உலோகத்தை ஆண்டுக்கு 600 டன் தயாரிப்பதற்கான தொழிற்சாலையாகும். உப்புத் தொழிலில் கிடைக்கக்கூடிய உப பொருளான உப்பளக் கழிவை அடிப்படையாகக் கொண்டு மக்னீசியம் உலோகம் தயாரிக்கும் தொழில் நுட்ப உத்தி உள்நாட்டு உத்தியாகும். இதனை காரைக்குடியிலுள்ள, மத்திய மின் இரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டதாகும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டவுடன், கணிசமான அளவிற்கு அந்நியச் செலவாணியை ஈட்டித் தரும். இதன் மூலதனச் செலவு ரூ. 450 இலட்சம் ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. டிட்கோவின் முதலீடு ரூ. 150 இலட்சமாக இருக்கும். இத் தொழிற்பிரிவை தொழில் துறையில் பின்தங்கிய பகுதியான இராமநாதபுரம் மாவட்டம், மரியூரில் நிறுவும் செயற்குறிப்பு உள்ளது. இத் தொழிற் பிரிவைத் தொடங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் (அதாவது தொழில் நுட்ப உத்தியைப் பெறுதல், தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து மூலப் பொருள்களை பெறுதல் தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து சலுகை வீதத்தில் தொடர்ந்து மின் சக்தி வழங்க ஏற்பாடு செய்தல்) எடுக்கப்பட்டு வருகின்றன தற்போதுள்ள நிலையில், இத் தொழிற்பிரிவு 1983–84ல் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 200 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

2. வெடி மருந்து திட்டம்.

தொழிற்சாலை வெடி மருந்துகளுக்கான தேவை பெருகியுள்ளதன் காரணமாக, நைட்ரோ கிளைசரின் அடிப்படையில் சிவில் வெடி மருந்துகள் தொழிற்சாலை ஒன்றை மேற்கொள்ளுமாறு மத்திய அரசு, டிட்கோவிற்கு அறிவுரை வழங்கியுள்ளது. இதற்கான முன் உரிமக் கடிதம் 1979 டிசம்பரில் பெறப்பட்டது. சுரங்கம் வெட்டுதல், கிணறு தோண்டுதல், கிராம வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றிற்குத் தேவைப்படக்கூடிய சிறிய அளவு சிவில் வெடி மருந்துகளை 10,000 டன் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையாகும். திட்டம்

செலவு ரூ. 20 கோடியாகும். சாத்தியக்கூறு ஆய்வு அங்காடி ஆய்வு ஆகியவை முடிக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்பிரிவை அமைப்பதற்கு காட்பாடிக்கு அருகில் ஓர் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான முக்கிய மூலப் பொருள்களான நைட்ரிக் அமிலமும், அமோனியம் நைட்ரேட்டும் நமது நாட்டிலேயே கிடைக்கின்றன. இத்தொழிற் பிரிவு 1983–84ல் தொடங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. முன்னூறு பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

3. ஸ்டீல் ரோலிங் மில் திட்டம்.

அரக்கோணத்திலுள்ள தமிழ்நாடு உருக்கு ஆலையில், எஃகு உருக்கும் பகுதிக்கு அருகிலேயே உருக்கு உருள்வழுத்த ஆலையை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இந்த ஆலையில் உற்பத்தித் திறன் 24,000 டன் மீள் உருள்வழுத்தம் செய்யப்பட்ட பொருள்களாகும். சிறிய அளவு விட்டமுள்ள கம்பிகளை (அதாவது 6 மி.மி. சாதாரண கம்பி, 8 மி.மி. சி.டி.டி. கம்பிகள் முதலியன) உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய கம்பிகளை, இம்மாநிலத்திலுள்ள ஆலைகள் உற்பத்தி செய்ய விரும்புவதில்லை. செலவு ரூ. 400 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலை 1982 முதல் பாதியில் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நூறு பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

4. தமிழ்நாடு ஸ்டீல்ஸ்—விரிவுபடுத்துதல்.

தமிழ்நாடு உருக்கு ஆலையில் உள்ள உலையில் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 36,000 டன்களாகும். ஆனால், கான்காஸ்ட் இயந்திரத்தின் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 1,00,000 டன்களாகும். அரசுத் துறைகளுக்குத் தேவைப்படக்கூடிய எஃகின் அளவு தமிழ்நாடு உருக்காலையிலுள்ள உலையின் உற்பத்தித் திறனைக் காட்டிலும் அதிகமாகியுள்ளது. எனவே, மேலும், ஒரு உலையை நிறுவக் கருதப்பட்டுள்ளது. கான்காஸ்ட் இயந்திரத்தின் கூடுதல் திறனை பயன்படுத்திக் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டத்திற்கான செலவு ரூ. 500 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பணி 1983–84 ல் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 100 பேருக்கு வேலை வாய்ப்பளிக்க இயலும்.

கூட்டுத்துறைத் தொழிற்சாலைகள்.

5. இரசாயன சாதனங்கள் திட்டம்.

இரசாயன, பிற சாதனங்களை வடிவமைத்து சேர்க்கும் பணிகளை மேற்கொள்ள தொழிற்பிரிவு ஒன்றை அமைப்பதற்கான செயற் குறிப்பை டிட்கோ பரிசீலித்து வருகிறது. இத் தொழிற் பிரிவு, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியான ஹோசூரில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இதன் மூலதனச் செலவு ரூ. 100 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. டிட்கோவின் முதலீடு சுமார் பத்து இலட்சமாக இருக்கும். இத் தொழிற் பிரிவு 400 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்





6. ஃபேட்டி அமிலத் திட்டம்.

சோப்பு, அழகு சாதனங்கள், இளக்குகள் முதலிய முக்கிய தொழில்களுக்குத் தேவைப்படக்கூடிய ஃபேட்டி அமிலத்திற்குள்ள பெருமளவு தேவையைக் கருத்தில் கொண்டு ஃபேட்டி அமிலத் திட்டத்தை டிட்கோ பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளது. இதன் நிறுவு திறன் ஆண்டுக்கு 12,000 டன்களாகும். சாத்தியக் கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு ரூ. 600 இலட்சம் செலவாகுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. டிட்கோவின் முதலீடு, மூலதனப் பங்கில் ரூ. 60 இலட்சமாக இருக்கும். இத் தொழிற்பிரிவு சுமார் 150 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

7. ப்ளைவீல் ரிங் கியர் திட்டம்.

ரிங்கியர் தயாரிப்பதற்கான இத் தொழிற்சாலை, இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில், ஆண்டுக்கு 90,000 ரிங் கியர்கள் தயாரிக்கும் திறனுடன் நிறுவப்படும். இந்த தானியங்கி வண்டிகளுக்குத் தேவைப்படும் உதிரி சாதனம், தற்போது தனியார் துறையில் பெருமளவில் ஒரே ஒரு நிறுவனம்தான் உற்பத்தி செய்கிறது. எனவே, இந்த சாதனத்தைத் தற்போது தனியார் துறை பாகமாகும். கூடுதல் இத் தொழிற்பிரிவு அமைக்கப்படுவதால், நல்ல வரவேற்பு இருக்கும். இத்திட்டத்திற்கு ரூ. 52 இலட்சம் முதலீடு தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. டிட்கோவின் பங்கு ரூ. 4 இலட்சமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற்பிரிவு சுமார் 50 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

8. டெக்ஸ்டைல் பிராஸஸிங் திட்டம்:

தமிழ்நாட்டிலுள்ள கைத்தறித் துறையின் கீழ் உள்ள ஆலைகள் மற்றும் துணி ஆலைகள் உட்பட பல்வேறு துணி ஆலைகளின் தேவையை நிறைவு செய்வதற்காக நவீன துணி செய்முறைத் தொழிற் பிரிவு ஒன்றை நிறுவத் திட்டமிடப்

பட்டுள்ளது. இதன் உற்பத்தித்திறன் ஆண்டுக்கு 330 இலட்சம் மீட்டர்களாகும், இதற்கான மூலதனச் செலவு ரூ. 300 இலட்சமாகும். சுமார் 400 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் டிட்கோவின் பங்கு ரூ. 30 இலட்சமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

பரிசீலனையிலுள்ள பிற கூட்டுத்துறை திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | திட்டச் செலவு. | வேலை வாய்ப்புத் திறன் (நபர்கள்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 ரிப்ராக்டரீஸ் திட்டம் .. | 3,000 | 1,500 |
| 2 ஏ.பி.எஸ். ரெசின்ஸ் திட்டம். | 500 | 130 |
| 3 மூக்குக் கண்ணாடி சாதனங்கள் தயாரிப்புத் திட்டம். | 200 | 300 |
| 4 கைக்கடிகாரத் திட்டம் .. | 2,000 | 2,500 |
| 5 வினைல் அசிடேட் அண்டு பாலிவினைல் அசிடேட் திட்டம் .. .. | 1,600 | 570 |
| 6 2-இதையல் எக்ஸ்நேல் திட்டம் | 1,800 | 500 |
| 7 ஆட்டுத்தோல் திட்டம் .. | 120 | 300 |
| 8 பெண்டா எரித்ரடோல் திட்டம் .. | 1,200 | 400 |
| 9 அசிடோன் திட்டம் .. | 180 | 100 |
| 10 பைன் மெசர்ஸ் இன்ஸ்ட்ருமென்ஸ் திட்டம் .. | 300 | 100 |
| 11 பெயிண்ட் திட்டம் .. | 60 | 100 |
| 12 பைபர் கிளாஸ் திட்டம் .. | 1,000 | 400 |



| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | திட்டச் செலவு. | வேலை வாய்ப்புத் திறன் (நபர்கள்). |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| (1) | (2) | (3) |
| 13 பிஸ்கட் திட்டம் .. .. | 150 | 100 |
| 14 வைட்டமின் ஏ திட்டம் .. | 600 | 100 |
| 15 அச்சு இயந்திரங்கள் திட்டம் | 100 | 150 |
| 16 பிளாஸ்டிக் வார்ப்புத் திட்டம். | 200 | 150 |
| 17 செமி சிந்தடிக் டென்சிலைன் திட்டம் .. .. | 120 | 250 |

நடைமுறை விளைவுகள்:

31—3—1980 முடிய டிட்கோவிற்கு மொத்தம் ரூ. 631·94 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. 31—3—1980 முடிய இந்த இழப்புகள் குறித்த விவரமும் (தொழிற்சாலை வாரியாக) அதற்கான காரணங்கள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அ. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை.

31—3—1976 முடிய இந்த ஆலை டிட்கோவின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது. 1—4—1976-லிருந்து இத்தொழிற் பிரிவு தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கு (டிட்கோவிற்கு முழுவதும் சொந்தமான துணை நிறுவனம்) மாற்றப்பட்டது. நீர், நிலக்கரி, மின்சக்தி ஆகியவை பற்றாக்குறை ஏற்பட்டதே ரூ. 169·39 இலட்சம் இழப்பு ஏற்பட முக்கிய காரணமாகும்.

ஆ. தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம்.

இத் தொழிற்சாலை 1973—74 ரூ. 12·34 இலட்சம் ஆதாயம் ஈட்டித் தந்தபோதிலும், உருக்குத் தொழிலில் ஏற்பட்ட திடீர் சரிவு காரணமாக, 31—3—1980 முடிய இந்த ஆலைக்கு மொத்தம் ரூ. 455·55 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. பெருமளவு மூலதனச் செலவு, பெருமளவு மின்

கட்டணம் கிடங்கு விலையில் அதாவது உற்பத்திச் செலவு வெளிச்சந்தை விலை ஆகியவற்றைக் காட்டிலும் மிகக் குறைந்த விலையில் அரசுத் துறைகளுக்கு/நிறுவனங்களுக்கு கம்பிகளை வழங்கியது ஆகியவையே தொடர்ந்து இழப்பு ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களாகும். உற்பத்திச் செலவு, நியாயமான ஆதாய அடிப்படையில் விலைகளை நிர்ணயிக்கும்படி ஆலைக்கு அரசு 1979 டிசம்பரில் ஆணை பிறப்பித்துள்ளது. 1980–81 திருத்த மதிப்பீட்டிற்கிணங்க இந்த ஆலை ரூ. 19·97 இலட்சம் ஆதாயம் ஈட்டுமெனவும் 1981–82 வரவு-செலவுத் திட்டத்திற்கிணங்க ரூ. 19·91 இலட்சம் ஆதாயம் ஈட்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### இ. வளர்ச்சிப் பணி.

பல்வேறு கூட்டுத்துறை, பொதுத் துறைத் தொழிற்சாலைகளின் மூலதனப் பங்கில் கடன் தொகைகளை முதலீடு செய்ததே 31—3—1980 வரை மொத்தம் ரூ. 7 இலட்சம் இழப்பு ஏற்பட முக்கிய காரணமாகும். மேலும், டிட்கோ மேற்கொண்ட தொழிற்பிரிவுகளின் வளர்ச்சிக் காலம் நீண்டதாக அமைந்ததும் இதற்குக் காரணமாகும். 1980–81 திருத்த மதிப்பீட்டிற்கிணங்க ரூ. 2·46 இலட்சம் நிகர ஆதாயம் எதிர்பார்க்கப்படுகிறது.

ரூ. 274·81 கோடி மூலதனச் செலவில் பொதுத்துறை கூட்டுத்துறையில் 30 தொழிற்சாலைகளை நிறுவ டிட்கோ, வழி கோலியது. இம்மாநிலத்திலுள்ள இயற்கை வளங்களை பயன்படுத்தும் நோக்கத்துடனும் சிறுதொழில்கள் குடிசைத் தொழில்களுக்கு மிகவும் தேவையான மூலப் பொருள்களை வழங்கவும், மாநிலத்தில் வேலைவாய்ப்பு அளவை மேம்படுத்த தொழில் வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடனும் ரூ. 221·32 கோடி கூடுதல் மூலதனச் செலவில் பொது, கூட்டுத்துறையின்கீழ் 28 தொழிற்சாலைகளை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது. விற்பனை வரி வசூல் வாயிலாக மாநிலக் கருவூலத்திற்கு பெருமளவு தொகை இதனால் கிடைக்கும். இவை தவிர ஆயத்தீர்வை, வருமான வரி முதலியவை வாயிலாக தேசியக் கருவூலத்திற்கும் டிட்கோ தொகையளிக்கிறது. சில பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதையும் ஓரளவிற்கு குறைத்துள்ளது.

தொழிற்சாலைவாரியான விவரங்கள் இணைப்பு I, II-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 1980–81 திருத்த மதிப்பீடு 1981–82 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றிற்கிணங்க நிதிவாயில்களும் அவற்றின் பயன்பாடுகளும் இணைப்பு III-இல் கொடுக்கப்பட்டுள்ளன.



### வேலைவாய்ப்புத் திறன்.

சுமார் 9,675 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பிற்கு டிட்கோ வழி செய்துள்ளது. விவரம் வருமாறு:—

| விவரங்கள். (1) | நபர்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 31—3—1980 முடிய உற்பத்தித் தொடங்கிய தொழிற்சாலைகள் .. .. .. | 9,475 |
| 1980–81-இல் உற்பத்தித் தொடங்குமென எதிர்பார்க்கப்படும் தொழிற்சாலைகள் .. | 200 |
| மொத்தம் .. | 9,675 |

நிறைவேற்றப்பட்டுவரும் தொழிற்சாலைகள், பரிசீலனையிலுள்ளவை ஆகியவற்றின் மூலம் 14,400 பேருக்கு கூடுதல் வேலை வாய்ப்பளிக்க டிட்கோ திட்டமிட்டுள்ளது.

### வருங்காலத் திட்டங்கள்.

பொது, கூட்டுத்துறையில் தொழில்களை அமைப்பதில் கணிசமான அளவிற்கு அனுபவம் பெற்ற பின்னர், தமிழக அரசிடமிருந்தும் நிதி நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவி பெற்று தமிழக தொழில் வளத்தைப் பெருக்கும் வகையில் பெரிய தொழிற்சாலைகளை தற்போது டிட்கோவால் நிறுவ இயலும். புதிய தொழிற்சாலைகளை சிக்கனமாகவும், வெற்றிகரமாகவும் தொடங்க தொழில் முனைவர்களுக்கு ஆலோசனை, தொழில் நுட்ப உத்திகளை வழங்குவதன் மூலம் "டிட்கோ" தனது பணிகளை பலதிறப்பட்டதாக்கவும் கருதி வருகிறது. இதனால் மாநிலத்தைத் தொழில் மயமாக்கும் தனது பணியை செவ்விய வகையில் செய்து வருகிறது.

## இணைப்பு I.

டிட்கோவின் பொதுத்துறைத் திட்டங்கள் குறித்த விவரங்களைக் காட்டும் அட்டவணை.

| தொடர் எண், தொழிற்சாலையின் பெயர் அமைந்துள்ள இடம் (முடிவு செய்யப்பட்டு இருந்தால்) உற்பத்தி தொடங்கப்பட்டிருப்பின் உற்பத்தித் தொடங்கிய நாள். | உற்பத்திப்பொருள்களின் பெயர்களும் ஆண்டு உற்பத்தித் திறன்முடிவு செய்யப்பட்டிருப்பின் ஆண்டு உற்பத்தித் திறனும். |
|---|---|
| (1) | (2) |
| **உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள்—** | |
| 1 தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம் (1972 ஜூலையில் உற்பத்தி தொடங்கியது). | உருக்குப் பாளங்கள் ஆண்டுக்கு 36,000 டன். |
| 2 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், சிமெண்ட் ஆலை, ஆலங்குளம் (1970 ஜூனில், உற்பத்தி தொடங்கியது). | சிமெண்ட் ஆண்டுக்கு 4 இலட்சம் டன். |
| 3 தமிழ்நாடு சிமெட்ஸ் நிறுவனம் சிமெண்ட் ஆலை, அரியலூர் (1979 ஆகஸ்டில் உற்பத்தி தொடங்கியது). | சிமெண்ட் ஆண்டுக்கு 5 இலட்சம் டன். |
| **நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற்சாலைகள்—** | |
| 1 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை நவீனப்படுத்துதல். | நவீனப்படுத்துதல். |
| 2 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறு | கல்நார் சிமெண்ட் தகடு |



| 1980-81 திருத்த மதிப்பீடு 1981-82 வரவு-செலவுத் திட்டமதிப்பீட்டிற்கிணங்க திட்டச் செலவு. இணைப்புக் (ரூபாய்இலட்சத்தில்). | 31—3—80 வரை டிட்கோவின் முதலீடு (ரூபாய் லட்சத்தில்). | கடன் உட்பட டிட்கோவின் மூலதன முதலீடு (ரூ. லட்சத்தில்). 1980—81 திருத்த மதிப்பீடு. | 1981—82 வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு. | வேலைவாய்ப்புத் திறன் (நபர்களின் எண்ணிக்... |
|---|---|---|---|---|
| | (4) | (5) | (6) | (1) |
| 712·41 | 909·13 | 10·47 | 42·20 | 624 |
| 686·00 | 686·00 | ... | — | 15·19 |
| 2,888·95 | 324·81 | .. | .. | 811 |
| 301·00 | 22·16 | 64·84 | .. | |
| 212·00 | 32·33 | 29·67 | ... | 240 |
| 4,800·38 | 2,474·43 | 1,04·98 | 42·20 | 3,202 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| நிறைவேற்றப்படவுள்ள பரிசீலனையிலுள்ள தொழிற்பிரிவுகள்— | | | | | | |
| 1 ம்க்னீசியம் உலோகத் திட்டம் மரியூர், இராமநாதபுரம் மாவட்டம். | மக்னீசியம் உலோகம் ஆண்டுக்கு 600 டன். | 450·00 | 4·07 | 5·00 | 45·00 | 200 |
| 2 தொழிற்சாலை வெடிமருந்துகள் திட்டம் பன்மடங்காக்கி சேமக்காப்புவனம், காட்பாடிக்கு அருகே. | தொழிற்சாலை வெடி மருநதுகள் ஆண்டுக்கு 15,000 டன். | 2,000·00 | 0·49 | 50·00 | 200·00 | 300 |
| 3 ஸ்டீல் ரோலிங் மில் திட்டம், அரக்கோணம். | மின் உருள் வழுத்தம் செய்யப்பட்ட உருக்குப் பொருள்கள் ஆண்டுக்கு 24,000 டன் | 400·00 | .. | 10·00 | 90·00 | 10 |
| 4 தமிழ்நாடு ஸ்டீல் விரிவாக்கப்பணி (கூடுதல் உலையும், கண்காஷ்டு தொழிற்பிரிவையும் ஏற்படுத்துதல்). | ஸ்டீல் உலோகக்கட்டைகள் ஆண்டுக்கு 50,000 டன். | 500 | .. | .. | 10·00 | 100 |
| 5 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், பாளையம் சிமென்ட் ஆலை. | சிமெண்ட் ஆண்டுக்கு 4 இலட்சம் டன். | 3,200·00 | .. | .. | 50·00 | 900 |
| 6 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், கல்நார் குழாய்கள், சிமெட்டித் தகடுகள் திட்டம். அரியலூர். | கல்நார் குழாய்கள் ஆண்டுக்கு 36,000 டன், கல்நார் தகடுகள் ஆண்டுக்கு 36,000 டன். | 600·00 | ... | ... | 10·00 | 450 |
| | | ,050·36 | 2,478·99 | 169·98 | 447·20 | 5,252 |

குறிப்பு.—மேற்சொன்ன தொழிற்சாலைகளின் திட்டம் கொடுக்கப்பட்டுள்ளது.

ʼலவு, வேலைவாய்ப்புத்திறன் குறித்த சுருக்க விவரம் கீழே

| விவரங்கள். | தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்.) | வேலைவாய்ப்புத் திறன். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. உற்பத்தியுள்ள தொழிற் சாலைகள் .. .. | 3 | 4,287·36 | 2,962 |
| 2. நிறைவேற்றப்பட்டுவரும் தொழிற்சாலைகள் .. | 2 | 513·00 | 240 |
| 3. மேற்கொள்ளப்படவிருக்கும்/பரிசீலனையிலுள்ள தொழிற் பிரிவுகள். | 6 | 7,250·00 | 2,050 |
| | 11 | 12,050·36 | 5,252 |

ரூ. 18·49 இலட்சம் திட்டச் செலவினையும், 1959 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கக் கூடியவையுமான 4 தொழிற்சாலைகள் (அட்டவணையில் போடப்பட்டவை) பின் தங்கிய பகுதியில் உள்ளன.

## இணைப்பு 2.

டிட்கோவின் கூட்டுறவுத் துறை தொழிற்சாலைகள் குறித்த விவரங்களைக் காட்டும் அட்டவணை.

| (1) | (2) | | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|---|
| உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள். | | ஆண்டுக்கு டன். | ரூபாய் இலட்சத்தில். | ரூபாய் இலட்சத்தில். | ரூபாய் இலட்சத்தில். | ரூபாய் இலட்சத்தில். | | |
| 1 சதர்ன் பெட்ரோகெமிகல் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம், தூத்துக்குடி திருநெல்வேலி மாவட்டம் (1975 ஜுனில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | அம்மோனியா .. | 1,100 | 10,508·00 | 610·50 | 725·00 | .. | 25·00 | 1917 |
| | யூரியா .. | 1,600 | | | | | | |
| | டிரபி/என்பிகே .. | 600 | | | | | | |
| | | நாளுக்கு டன். | | | | | | |
| | கந்தக அமிலம் .. | 470 | | | | | | |
| | பாஸ்பரிக் அமிலம் | 165 | | | | | | |
| 2 தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல் லிமிடெட், இராணிப்பேட்டை, வடஆர்க்காடு மாவட்டம்—*(1975 அக்டோபரில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | பி.சி.டி. பவுடர் | 3,300 | 192·00 | 10·40 | 10·40 | .. | .. | |
| | சோடியம் டை குரோமேட் | 4,315 | | | | | | |
| | சோடியம் சல்பெட் | 3,400 | | | | | | |
| 3 பாண்டியன் கெமிகல்ஸ் நிறுவனம், நரசிங்கம்பட்டி கிராமம், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம் (1975 ஜுலையில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | பொட்டாசியம் குளோரைட். .. | 3,630 | 91·95 | 6·24 | 6·24 | .. | .. | 150 |
| 4 தமிழ்நாடு தாதாபார்மசூடிகல்ஸ் லிமிடெட் பல்லாவரம், செங்கற்பட்டு மாவட்டம் (ஏற்கனவே செயல் பட்டுவரும் நிறுவனம்) 24—3—1973-ல் எடுத்துக் கொள்ளப்பட்டது). | மருந்துகளும் மருந்துப் பொருள்களும். | | 183·53 | 23·40 | 23·40 | .. | .. | 350 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டுக்கு டன். | 140.00 | 12.18 | 50.18 | 1.00 | .. | 90 |
| 5 சுதர்ன போராக்ஸ் லிமிடெட், தாட்சூர் கிராமம், பொன்னேரி வட்டம், செங்கற்பட்டு மாவட்டம் (1976 சனவரியில் உற்பத்தி தொடங்கப்பட்டது.) | போராக்ஸ். 15,000 போரிக் அமிலம். 300 | 75.00 | 10.00 | 13.53 | 3.00 | .. | 400 |
| 6 டைனாவிசன் லிமிடெட், அடையாறு, சென்னை (1975 ஜூனில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | தொலைக் காட்சிப் பெட்டிகள். ஆண்டுக்கு 20,000. | 178.00 | 30.80 | 32.60 | 5.00 | .. | 245 |
| 7 ஏசியா டொபாக்கோ கம்பெனி லிமிடெட், மூக்கண்டபள்ளி கிராமம், ஹோசூருக்கு அருகில், தருமபுரி மாவட்டம் *(1976 ஜூனில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | சிகரெட்டுகள் ஆண்டுக்கு 4,500 மில்லியன். | 89.49 | 16.00 | 25.00 | 11.00 | .. | 90 |
| 8 தமிழ்நாடு அல்கலின் பாட்டரீஸ் லிமிடெட், தொழிற்பேட்டை, அம்பத்தூர். (1976 சனவரியில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | நிக்கல். காட்மியம் பாட்டரிகள் (பல்வேறு வகை, ஆண்டுக்கு 50 லட்சம் ஆம்பியர் மணிகள். | 100.00 | 14.00 | 2.93 | .. | .. | 150 |
| 9 கிரேட் சீ டிராவலர் பில்டிங் யார்டு மண்டபம் லிமிடெட் *(பழுது பார்க்கும் முதல் கட்டப் பணி 1976 சனவரியில் தொடங்கப்பட்டது). | மீன்பிடி இழு படகுகள் ஆண்டுக்கு 16 படகுகள் | 65.00 | 6.50 | 11.58 | .. | .. | 200 |
| 10 மார்தி கிரிஸ்டல் சால்ட் கம்பெனி லிமிடெட், திருப்போரூர், செங்கற்பட்டு மாவட்டம் (1976 சனவரியில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | தொழிற்சாலை உப்புகள் ஆண்டுக்கு 1,20,000 டன். | 75.00 | 17.50 | 17.50 | .. | .. | 55 |
| 11 அரக்கோணம் கேஸ்டிங்ஸ் அண்டு போர்ஜிங்ஸ் லிமிடெட், அரக்கோணம், வட ஆற்காடு மாவட்டம் (1977 ஏப்ரலில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | கனாக வார்ப்புகள் ஆண்டுக்கு 1,000 டன். | 756.00 | 51.30 | 18.30 | .. | .. | 250 |

உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள்—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 12 தமிழ்நாடு கெமிகல் பிராடெக்ஸ் லிமிடெட், கழனிவாசல் கிராமம், காரைக்குடி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் (1977 டிசம்பரில் உற்பத்தி தொடக்கம்). | சோடியம் ஹைட்ரோ சல்பேட் ஆண்டுக்கு 3,300 டன். | 756.00 | 51.00 | 118.30 | .. | .. | 25[illegible] |
| 13 இன்டர்கான்டினென்டல் லெதர்ஸ் லிமிடெட் சிப்காட் தொழிற்பேட்டை, இராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம்* (1979 ஜுனில் உற்பத்தி தொடங்கப்பட்டது.) | நேர்த்தியான தோல்கள் ஆண்டுக்கு 9 இலட்சம். | 120.00 | 10.40 | 10.40 | .. | .. | 300 |
| 14 சதர்ன் ஹைட்ரோ கார்பன்ஸ் லிமிடெட், கொளத்தூர் கிராமம், புதுக்கோட்டை* மாவட்டம் (1980 மார்ச்சில் உற்பத்தி தொடங்கப்பட்டது.) | அசிடிக் அன் ஹைட்ரைடு ஆண்டுக்கு 1,000 டன். அசிடிக் அமிலம் ஆண்டுக்கு (1000) டன். | 220.00 | 15.60 | 85.60 | .. | .. | 550 |
| **நிறைவேற்றப்பட்டுவரும் தொழிற்சாலைகள் :** | | | | | | | |
| 1 அசிடிலின் அண்டு இண்டஸ்ட்ரியல் கேஸ் சிலிண்டர்ஸ் லிமிடெட், தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை. | அசிடிலின் சிலிண்டர்கள் ஆண்டுக்கு 25,000. | 61.30 | 6.50 | 6.15 | 1[illegible].85 | .. | 50 |
| 2 சதர்ன் அச்ரிப்ரேன் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட், முண்டியம்பாக்கம், தென் ஆற்காடு மாவட்டம். | பர்ப்யூரல் ஆண்டுக்கு 3,000 டன். | 732.00 | 42.90 | 42.90 | [illegible]0.[illegible]0 | 15.00 | 1[illegible]0 |
| 3 தமிழ்நாடு ப்ளோரின் அண்டு அலைடு கெமிகல்ஸ் லிமிடெட், மணலூர் கிராமம், சிவகங்கை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம். | அலுமினியம் ப்ளோரைடு ஆண்டுக்கு 6,000 டன். | 1480.00 | 125.00 | 79.89 | 45.11 | .. | 265 |
| 4 ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட், பகலூர் கிராமம், ஹோசூருக்கு அருகில் தருமபுரி மாவட்டம். | பல்வகை பேரிங்குகள் ஆண்டுக்கு 50 இலட்சம் பேரிங்குகள். | 1635.00 | 130.00 | 43.84 | 51.16 | 35.00 | 653 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 5. ஏசியா கார்பன் லிமிடெட், சிப்காட் தொழிற் இணையம், ஹோசூர், தருமபுரி மாவட்டம். | கார்பன் பிளாக்குகள் ஆண்டுக்கு 10,400 டன். | 800.00 | 80·00 | 12·64 | 20·00 | 40·00 | 300 |
| 6. வானவில் டைஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட், குடிகாடிகிராமம், கடலூர், தென் ஆற்காடு மாவட்டம். | நேப்தால், சாயம் போகா வண்ணங்கள் ஆண்டுக்கு 450 டன். | 400·00 | 41·00 | 30·52 | 10·49 | .. | 400 |
| 7. கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட், வடகுத்து கிராமம், தென் ஆற்காடு மாவட்டம். | அச்சு, எழுது காகிதங்கள். பிற காகிதங்கள் ஆண்டுக்கு 9,900 டன்கள். | 487·00 | 43·00 | 19.87 | 23·13 | .. | 300 |
| 8. தூத்துக்குடி அல்கலி கெமிகல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் லிமிடெட், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம். | சோடாத்தூள் ஆண்டுக்கு 66,000 டன், அமோனியம் குளோரைடு ஆண்டுக்கு 66,000 டன். | 3,975·00 | 575·00 | 419·65 | 155.35 | .. | 500 |
| 9. மெட்ராஸ் ஷூ பாப்ரிக்ஸ் லிமிடெட், வாலாஜா பேட்டை, வட ஆற்காடு மாவட்டம். | காலணிகள் ஆண்டுக்கு 6 இலட்சம் ஜோடிகள். | 145·00 | 10·40 | 0·20 | 9·54 | .. | 300 |
| 10. ஷிப் ஸ்டீல்ஸ் (இந்தியா) லிமிடெட், வாலினோக்கம், இராமநாதபுரம் மாவட்டம். | பழைய கப்பல்களைப் பிரித்தல் ஆண்டுக்கு 4. | 50·00 | 5·00 | 0·46 | 1·00 | 3·54 | 650 |
| 11. மல்லடி டிரக்ஸ் அண்டு பார்மசூடிகல்ஸ் லிமிடெட் சிப்காட் தொழிற் இணையம் இராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம். | எப்பிட்ரின் ஹைட்ரோ குளோரைடு ஆண்டுக்கு 33 டன். | 134·00 | 12·00 | 0·68 | 8.32 | 3·00 | 100 |
| 12. ஆட்டோமோடிவ் கேஸ்டிங்ஸ் லிமிடெட், ஹோசூர்* | ஆட்டோமோடிவ் வார்ப்புகள் ஆண்டுக்கு 6,000 டன்கள் | 70·00 | 60·30 | .. | 1·00 | 59·00 | 0·40 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. இரசாயன சாதனங்கள் திட்டம். | இரசாயன சாதனங்களை அமைத்தல் (விற்று முதல் ஆண்டுக்கு ரூ. 500 இலட்சம்). | 100.00 | 10.00 | .. | 5.00 | 5.00 | 400 |
| 2. ப்பேட்டி அமிலத் திட்டம் | ப்பேட்டி அமிலம் ஆண்டுக்கு 12,000 டன். | 600.00 | 60.00 | 0.14 | 2.00 | 20.00 | 150 |
| 3. ப்ளை வீல் ரிங் கியர் திட்டம். | ஆண்டுக்கு 50,000. | 52.00 | 4.00 | .. | 1.00 | 3.00 | 50 |
| 4. துணி செய்முறைப்படுத்தும் திட்டம். | துணி செய்முறைப் படுத்துதல் ஆண்டுக்கு 330 இலட்சம் மீட்டர். | 300.00 | 30.00 | .. | 1.00 | 6.00 | 400 |
| 5. ரிப்ராக்டரிஸ் திட்டம், சேலம் மாவட்டம். | பேசிக் பிரிக்குகள்—எரிந்த மாக்னசைட்—ஆண்டுக்கு 80,000 டன். | 3,000.00 | 300.00 | 4.00 | 5.00 | 30.00 | 1,500 |
| 6. ஏ. பி. எஸ். ரெசின்ஸ் திட்டம். | ஏ. பி. எஸ். ரெசின்—ஆண்டுக்கு 2,000 டன். | 500.00 | 50.00 | 1.17 | .. | 5.00 | 130 |
| 7. மூக்குக் கண்ணாடி சாதனங்கள் திட்டம். | மூக்குக் கண்ணாடி சாதனங்கள் ஆண்டுக்கு 5 இலட்சம். | 200.00 | 20.00 | 0.31 | 1.00 | 5.00 | 300 |
| 8. கைக்கடிகாரத் திட்டம் .. | கைக் கடிகாரங்கள்—ஆண்டுக்கு 2 மில்லியன். | 2,000.00 | 150.00 | 0.56 | 5.00 | 20.00 | 2,500 |
| 9. வினைல் அசிடேட் திட்டம், பால்வினை அசிடேட் திட்டம். | வினைல் அசிடேட், பாலி வினைல் அசிடேட், பாலி வினைல் ஆல்கஹால் ஆண்டுக்கு 10,000 டன். | 1,600.00 | 160.00 | 0.73 | .. | 25.00 | 570 |
| 10. 2-இதைல் ஹெக்சோனால் திட்டம். | 2-இதைல் ஹெக்சோனால் ஆண்டுக்கு 10,000 டன். | 1,800.00 | 180.00 | 0.23 | .. | 25.00 | 500 |
| 11. ஆட்டுத் தோல் திட்டம் | நேர்த்தியான தோல்—ஆண்டுக்கு 12 இலட்சம் தோல்கள். | 120.00 | 12.00 | 0.11 | .. | 5.00 | 380 |

(iii) நிறைவேற்றப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும்/பரிசிலனையில் உள்ள தொழிற்சாலைகள் :—

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 12. பெண்டா எரித்ரோடோல் திட்டம். | பெண்டா எரித்ரோடோல் ஆண்டுக்கு 3,000 டன். | 1,200·00 | 120·00 | 0·08 | 10·00 | 30·00 | 400 |
| 13. அசிடோன் திட்டம் .. | அசிடோன் ஆண்டுக்கு 1,000 டன். | 180·00 | 12·00 | 0 09 | .. | 4·00 | 100 |
| 14. பைன் மெசர்ஸ் இன்ஸ்ட்ருமெண்ட் திட்டம். | பல்வேறு வகை அளவைக் கருவிகள் 75,000. | 300·00 | 26·00 | 2·21 | 1·00 | 5·00 | 190 |
| 15. பெயிண்ட் திட்டம் .. | வர்ணம் ஆண்டுக்கு 4 இலட்சம் டன். | 60·00 | 6·00 | .. | .. | 6·00 | 100 |
| 16. பைபர் கிளாஸ் திட்டம் | பைபர் கண்ணாடி ஆண்டுக்கு 2,000. | 1,000·00 | 100·00 | 0·05 | .. | 6·00 | 100 |
| 17. பிஸ்கட் திட்டம் .. | பிஸ்கட்டுகள் ஆண்டுக்கு 1,500 டன். | 150·00 | 16·00 | .. | 10·00 | 6·00 | 100 |
| 18. வைட்டமின்-ஏ-திட்டம், | வைட்டமின் "ஏ" ஆண்டுக்கு 100 மில்லியன் யூனிட். | 600·00 | 60·00 | 0·01 | .. | 5·00 | 100 |
| 19. அச்சு இயந்திரத் திட்டம் | அச்சு இயந்திரம் ஆண்டுக்கு 50. | 100·00 | 10 00 | .. | .. | 1·00 | 150 |
| 20. பிளாஸ்டிக் மோல்டு திட்டம். | பிளாஸ்டிக் வார்ப்புகள் ஆண்டுக்கு 260. | 200·00 | 20·00 | 0 01 | .. | 1·00 | 150 |
| 21. செமி சிந்தடிக் பென்சிலேன் திட்டம். | செமி சிந்தடிக் பென்சிலேன் ஆண்டுக்கு 30 டன். | 120·00 | 12·00 | .. | .. | 6 00 | 250 |
| 22. பிற திட்டங்கள் (5-வது பத்தியிலுள்ள புள்ளி விவரம் தமிழ்நாடு ரப்பர் லிமிடெட், தமிழ்நாடு இன்டர்னேசனல் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் முதலியவை தொடர்பானது புள்ளி விவரம் உள்ளிட்டது). | | .. | .. | 51·13 | .. | 15·00 | .. |
| மொத்தம் .. | | 37,575·27 | 3,323·62 | 1,850·28 | 409·95 | 414·54 | 18,055 |

நிறைவேற்றப்படுவதற்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

| | | |
|---|---|---|
| பரிசிலனையிலுள்ள தொழிற்சாலை சம்பந்தப்பட்ட | ரூ. | 100·00 |
| ஒட்டுமொத்தமான குறைப்பு | ரூ. | 314·54 |

குறிப்பு :—மேற்சொன்ன திட்டங்களின் திட்டச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| விவரங்கள். | தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள் .. .. | 14 |
| நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற்சாலைகள் .. | 12 |
| நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படவிருக்கும்/ பரிசீலனையில் உள்ள தொழிற்சாலைகள் .. | 21 |
| | 47 |

2. ரூ. 6,601·95 இலட்சம் திட்டச் செலவிலானதும், சாலைகள் (அட்டவணையில் குறியிடப்பட்டுள்ள) பின்தங்கிய



நிறைவேற்றப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் பரிசீலனையிலுள்ள தொழிற்சாலை சம்பந்தப்பட்ட ஒட்டு மொத்தமான குறைப்பு.

| | |
|---|---|
| | 414·54 |
| | 100·00 |
| | 314·54 |

வேலை வாய்ப்புத் திறன் ஆகியவை குறித்த சுருக்க விவரங்கள்

| திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்). | வேலைவாய்ப்புத் திறன். |
|---|---|
| (3) | (4) |
| 12,793·97 | 5,337 |
| 10,599·30 | 4,068 |
| 14,182·00 | 8,650 |
| 37,575·27 | 18,055 |

4,903 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கத்தக்கதுமான 14 தொழிற் பகுதிகளில் உள்ளன.

## இணைப்பு '3'

1980-81 திருத்த மதிப்பீடு, 1981-82 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றிற்கிணங்க நிதி வாயில்களையும் நிதி பயன்பாடுகளையும் காட்டும் அட்டவணை :—

| விவரங்கள். | 1980-81 திருத்த மதிப்பீடு. | 1981-82 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| (1) | (2) | (3) |
| நிதி வாயில்கள்— | | |
| தொடக்க இருப்பு .. | (+)75.71 | (+)61.03 |
| அரசிடமிருந்து மூலதனப் பங்கு | 350.00 | 500.00 |
| அரசிடமிருந்து கடன் | 75.00 | 90.00 |
| பிணைய கடனீட்டுறுதிப் பத்திரங்கள் | 165.00 | 110.00 |
| டான்செம் திருப்பிக் கொடுத்த கடன். | 125.00 | 54.81 |
| துறையின் நிதி/நடைமுறை மூலதனம் குறைதல். | 138.11 | 27.52 |
| | 928.82 | 843.36 |
| நிதி பயன்பாடு— | | |
| தமிழ்நாடு ஸ்டீல்ஸ்-நிலை சொத்துக்களில் சேர்க்கை. | 10.47 | 42.20 |
| தமிழ்நாடு ஸ்டீல்ஸ்-விரிவாக்கம் | .. | 10.00 |
| அரக்கோணத்தில் மீள் உருள் வழுத்த ஆலை. | 10.00 | 90.00 |
| டான்செமிற்குத் தொகை கொடுத்தல். | 94.51 | 60.00 |



| விவரங்கள். | 1980-81 திருத்த மதிப்பீடு. | 1981-82 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) |
| பிற பொதுத் துறைத் தொழிற்சாலைகளுக்குத் தொகை கொடுத்தது. .. | 55.00 | 245.00 |
| பதிவு அலுவலகம்-நிலை சொத்திற்கு சேர்க்கை. .. | 2.62 | 1.87 |
| கூட்டுத் துறைத் தொழிற்சாலைகளுக்குத் தொகை கொடுத்தல். .. | 409.95 | 314.54 |
| | 582.55 | 763.61 |
| அரசுக்குக் கடன் திருப்பிச் செலுத்துதல். .. | 5.26 | 5.26 |
| வழி-வகை முன் பணங்களை அரசுக்குத் திருப்பிச் செலுத்துதல். .. | 100.00 | .. |
| குறித்த கால வைப்பில் (நிகர) குறைவு. ... | 90.00 | 70.00 |
| தள்ளி வைக்கப்பட்ட அந்நிய கடனைத் திருப்பிச் செலுத்துதல். .. | 4.05 | 0.99 |
| பிணைய கடனீட்டுறுதிப் பத்திரத்தை திருப்பிச் செலுத்துதல். .. | 75.00 | .. |
| சென்ற ஆண்டுக்கான வட்டியை அரசுக்கு செலுத்துதல் .. | 10.93 | 2.58 |
| இறுதி இருப்பு | (+)61.03 | (+) 0.92 |
| | 928.82 | 843.36 |

## தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம்.

1. பொது—

1.1. தமிழ்நாடு சிமிண்டு நிறுவனமானது தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு முழுதும் சொந்தமான ஒரு துணை நிறுவனமாக 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டது.

1.2. அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமாக பத்துக்கோடி ரூபாய்களுடன் துவங்கப்பட்ட இந்நிறுவனத்தின் பங்கு மூல தனம் 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பதினோரு கோடிக்கு உயர்த்தப்பட்டது. மேலும் 1980 ஆம் ஆண்டு ஜனவரியில் பன்னிரண்டரைக் கோடிக்கு அதிகரிக்கப்பட்டது. இந்தப் பங்கு மூலதனத்தில் ரூ.11.81 கோடிகள் இது வரையில் மூல தனமாக செலுத்தப்பட்டு விட்டன.

1.3. தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் தன்னுடைய வாணி பத்தை 1-4-1976 முதல் செயல்படுத்தத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் சிமிண்டைத் தயாரித்தல், அதனை விற்பனை செய்தல் மற்றும் சுண்ணாம்பு, சுண்ணாம்புக் கல், கிளிங்கர், சிமிண்டு ஆஸ்பெஸ்டாஸ் மற்றும் அது சம்மந்தப்பட்ட சிமிண்டு தயாரிப்பதற்குத் தேவையான வேறு வகைப் பொருட்களில் ஈடுபட்டு வருதலுமாகும். இந் நிறுவனம் நிறைவேற்றி வரும் கொள்கைகள் பின்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளன.

2. தற்போது கீழ்க்கண்ட இரு சிமிண்டு ஆலைகள் தமிழ் நாடு சிமிண்டு நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.

2.1. (அ) ஆலங்குளம் சிமிண்டு ஆலை.

(ஆ) அரிய ஏர் சிமிண்டு ஆலை இவற்றோடு, தற்போது தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் தூத்துக்குடி, சென்னை துறை முகங்களில் இறக்குமதி செய்யப்பட்ட சிமிண்டை கையாண்டு வருகிறது.

2.2. பின்வரும் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வரு கின்றன.

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு ஓடு உற்பத்தித் திட்டம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்தில் உள்ள சிமிண்டு ஆலை மேம்பாட்டுத் திட்டமும் மற்றும் நவீனப் படுத்தும் திட்டமும் ஆகும்.

2.3. மேலே கூறப்பட்ட திட்டங்களைத் தவிர, தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் பின்வரும் திட்டங்களையும் மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.

1. மதுரை மாவட்டத்திலுள்ள பாளையத்தில் பெரிய சிமிண்டு ஆலைத் திட்டம்.

2. ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் மற்று ஷீட் திட்டம்.

3. ஆலங்குளம் சிமிண்டு தொழிற்சாலை.

3.1 ஆலங்குளம் சிமிண்டு தொழிற்சாலையானது 1964 ஆம் ஆண்டின்போது அப்போதைய தமிழ் நாட்டு அரசாங்கத்தின் தொழிற்துறையால் ஆதியில் தொடங்கப்பட்டது. இந்த ஆலையானது 1970 ஆம் ஆண்டில் வாணிப உற்பத்தியில் ஈடுபட்டது. இந்த ஆலை ஆண்டொன்றுக்கு நான்கு இலட்சம் டன் சிமிண்டு உற்பத்தித் திறனுடையது. தமிழ் நாடு சிமிண்டு நிறுவனமானது இந்த ஆலையை டிட்கோவிடமிருந்து 1-4-1976 அன்று ரூ. 666 இலட்சம் நிகரக் கணக்கு மதிப்புக்கு எடுத்துக் கொண்டது. இப்போது ஆலங்குளம் ஆலை தனது 11 ஆண்டு பணியை நிறைவு செய்துள்ளது.

3.2 நடைமுறையில் செயற்படுத்தப்படுவதிலிருந்து பல் வேறுபட்ட காரணங்களின் நிமித்தம், ஆலங்குளம் சிமிண்டு ஆலை திட்டமிட்டபடி தன் உற்பத்தித் திறனை எய்த முடியவில்லை. இதன் விளைவாக ஆரம்ப இரண்டாண்டுகளில் ஈட்டிய சொற்ப லாபத்தை தவிர இத் தொழிற்சாலை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகிறது. இவ்வாலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு. | ஆண்டின்போது உற்பத்தி. | ஆண்டின்போது விற்பனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (எண்ணிக்கை மெட்ரிக் டன்னில்.) | |
| 1970-71 .. .. | 89,621 | 80,837 |
| 1971-72 .. .. | 3,06,093 | 3,08,068 |
| 1972-73 .. .. | 2,93,525 | 2,98,581 |

| ஆண்டு. | ஆண்டின்போது உற்பத்தி. | ஆண்டின்போது விற்பனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (எண்ணிக்கை மெட்ரிக் டன்னில்.) | |
| 1973-74 .. .. | 2,80,382 | 2,78,980 |
| 1974-75 .. .. | 2,00,070 | 2,02,264 |
| 1975-76 .. .. | 2,62,729 | 2,58,052 |
| 1976-77 .. .. | 3,38,445 | 3,33,294 |
| 1977-78 .. .. | 3,09,105 | 3,01,067 |
| 1978-79 .. .. | 3,19,277 | 3,20,379 |
| 1979-80 .. .. | 2,74,000 | 2,77,655 |

3.3 நாடு தழுவிய நிலக்கரிப் பற்றாக்குறை, மின்சாரத்தின் மீதான உயர்ந்த பட்சத் தேவையிலான தடை, உயர் மின் சக்தி நுகர்பவர்கள் மீது கொண்டுவரப்பட்ட மின்வெட்டு, ரெயில்வே வண்டிகளின் பற்றாக்குறை ஆகியவைகளே இந்தப் பிரிவுகளின் குறைந்த அளவு உற்பத்திக்கு பெரும் தடங்க களாக இருக்கின்றன. மேற்கண்ட தடங்கல்களை சமாளித்து உற்பத்தியைப் பெருக்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

3.4 நடப்பு ஆண்டின் போது (1980-81) ஆலங்குளம் சிமிண்டு ஆலையானது 3,15,000 மெட்ரிக் டன் சிமிண்டு உற்பத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பு ஆண்டின் உற்பத்தியா னது 40,600 மெட்ரிக் டன் கூடுதலாக இருக்கும். நடப்பு ஆண்டின் முதல் காலாண்டின் போது (ஏப்ரல் 1980 முதல் ஜூன் 1980 வரை) ஏற்பட்ட நிலக்கரிப் பற்றாக்குறை இல்லாதிருந்திருக்குமானால் சிமிண்ட் உற்பத்தியானது இன்னும் அதிகமாக இருந்திருக்கக்கூடும்.

1981-82 ஆம் ஆண்டின் போது இந்த ஆலை 3,60,000 மெட்ரிக் டன்களுக்குக் குறையாமல் உற்பத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இது ஆலையின் உற்பத்தித் திறனில் 90 . சதவீதமாகும்.



3·5. இந்த அலையானது பின் தங்கிய பகுதியில் 1,514 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு அளித்திருப்பதுடன் மேலும் கச்சாப் பொருள்கள், உற்பத்தி செய்யப்பட்ட சரக்கு கள் முதலியவற்றை ஏற்றிச் செல்வதற்கான பணிகள் வாயிலாக நிறைய பேர்களுக்கு சார்பு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

## 4. அரியலூர் சிமெண்ட் ஆலை.

4·1. அரியலூர் சிமிண்டு தொழிற்சாலையானது "உலர் முறை தயாரிப்பு" அடிப்படையில் ரூ. 2,876 இலட்ச ரூபாய் திட்டச் செலவில் டிட்கோவால் ஆரம்பத்தில் துவக்கப்பெற்ற தாகும். அது ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் உற்பத்தித் திறனுடன் ஏற்படுத்தப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு நிதி ஆதாரமாக டிட்கோவிலிருந்து பங்கு மூலதனமாக ரூ. 575 இலட்சமும் மற்றும் அனைத்து இந்திய நிதி நிறுவனங்களிட மிருந்து நிதியுதவியாக ரூ. 1:800 இலட்சமும் மற்றும் ஐந்து வணிக வங்கியிடமிருந்து ரூ. 501 இலட்சமும் பெற்று துவக்கப் பட்டதாகும். தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் .தொடங்கப்பட்டதன் விளைவாக அரியலூர் சிமிண்டு ஆலைத் திட்டமானது அந் நிறுவனத்தால் செயற்படுத்தப்பட்டது. திட்டப் பணிகள் அரிய லூரில் 1977 ஆம் ஆண்டு ஜனவரியில் தொடங்கப்பட்டது. சிமிண்டு உற்பத்தியானது 1—8—1979-ல் தொடங்கப்பட்டது. இந்த 5 இலட்சம் உற்பத்தித்திறன் அளவு சிமிண்டு ஆலையில் திட்டப் பணிகள் கால்கோள் செய்யப்பட்ட 30 மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு உற்பத்தியை துவங்கியது சாதனைக்குரிய தொன் றாகும்.

4·2. 1979-80 ஆம் ஆண்டு அதாவது 1—8—1979 முதல் 31—3—1980 வரை, இந்தப் பிரிவானது 1·16 இலட்சம் டன் சிமிண்டு உற்பத்தி செய்துள்ளது. இந்த ஆலை செயல் படத் தொடங்கிய முதலாண்டின்போது ஆரம்ப கட்ட இடர்பாடுகளான நிலக்கரிப் பற்றாக் குறை, மின்சக்தியைப் பயன்படுத்துவதிலான தடைகள், நிலக்கரியைக் கொண்டு வருவதற்கும் மற்றும் சிமின் டைக் கொண்டு செல்வதற்குமான இரயில்வே வண்டிகளின் பற்றாக் குறைகள் முதலியவற்றுடன் இயந்திறங்களின் கோளாறு களையும் சமாளிக்க வேண்டியதாயிற்று. அந்த இயந்திரங்களின் உள்ள கோளாறுகள் ஏறத்தாழ சரி செய்யப்பட்டு விட்டன. ஆலைக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை தவிர்ப்பதற்கு தொடர் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

4.3. நடப்பு ஆண்டான 1980–81-ம் '' அரியலூர் சிமிண்ட் ஆலை'', யானது 2,74.050 மெட்ரிக் டன் சிமிண்டை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 1981–82-ல் 4,50,000 மெட்ரிக் டன் சிமிண்டை உற்பத்தி செய்யத் திட்டம் இட்டுள்ளது. இது ஆலை உற்பத்தித் திறன் அளவில் 90 சதவிதமாகும்.

4.4. இந்தப் பிரிவானது 825 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு அளித்துள்ளது. மேலும் கச்சாப் பொருள்களையும் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளையும் கொண்டு செல்வதற்கான பணிகள் மூலம் பெருமளவிற்கு சார்பு வேலை வாய்ப்பும் அளித்துள்ளது.

5. இறக்குமதி செய்யப்பட்ட சிமிண்டை கையாளுதல்.

5.1. இந்திய அரசாங்கமானது, இறக்குமதி செய்யப்பட்ட சிமிண்டை சென்னை, தூத்துக்குடி, பாண்டிச்சேரி ஆகிய ஊர்களிலுள்ள துறைமுகங்களில் கையாள்வதற்கான தமிழ் நாடு சிமிண்டு நிறுவனத்தை ஏஜென்டுகளாக நியமனம் செய்துள்ளது. 31—3—1980-ல் முடிய உள்ள ஆண்டில் தமிழ் நாடு சிமிண்டு நிறுவனமானது சென்னைத் துறைமுகத்தில் 2,50,387 மெட்ரிக் சிமிண்டையும் தூத்துக்குடித் துறைமுகத்தில் 99,578 மெட்ரிக் டன் சிமிண்டையும் கையாள்வு செய்துள்ளது. தமிழ் நாடு சிமிண்டு நிறுவனமானது இதன் தொடர்பாக அனைவருடைய தேவைகளையும் திருப்திகரமான வகையில் கையாண்டு வருகிறது. இத்தகைய திறமை மிக்க வகையில் கையாளும் முறையினைக் கருத்தில் கொண்டு இந்திய அரசாங்கமானது சென்னை, தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களைப் பொறுத்தவரை 30—6—1981 வரை மேலுமொறு ஆண்டுக்கு கையாள்வு ஒப்பந்தத்தை புதுப்பித்துள்ளது.

5.2. நடப்பு ஆண்டின் போது (1980–81) தமிழ்நாடு சிமிண்டு நிறுவனமானது ஏறத்தாழ 5 இலட்சம் டன் இறக்குமதி செய்யப்பட்ட சிமிண்டை இரு துறைமுகங்களிலும் கையாளவு செய்ய முடியும் என்று எதிர்பார்க்கிறது.

6. ஆஸ்பெட்டாஸ் சிமிண்டு ஓடு ஆலை

6.1. தமிழ்நாடு சிமிண்டு நிறுவனமானது. ஆஸ்பெட்டாஸ் சிமிண்டு ஓடுகள் விநியோகத்தின் பற்றாக்குறையைக் கருத்திற் கொண்டு, அனைத்து இந்திய நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன், ஆண்டொன்றுக்கு 36,000 டன் ஆஸ்பெட்டாஸ் ஓடுகள் உற்பத்தி செய்வதற்கு ஆஸ்பெட்டாஸ் சிமிண்டு ஆலை திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதன் திருத்தியமைக்கப்பட்டு திட்டச் செலவு ரூ. 212 இலட்சம் என மதிப்பிடு செய்யப்பட்டு உள்ளது. ஆலங்குளத்தில் தற்போது இயங்கி வரும் சிமிண்டு ஆலைப் பகுதிக்குள்ளேயே இந்த ஆலை அமைக்கப்பட்டு வருகிறது.





6.2. இந்தத்திட்டம், 1981 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் பூர்த்தியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 1981ம் ஆண்டு ஜுன் மாதம் இதன் வாணிப உற்பத்தியும் தொடங்கக் கூடும். இந்தத்திட்டம் முடிவடையும் தருவாயில் பெருமளவிலான வேலை வாய்ப்பு அளிப்பதுடன் பின் தங்கிய இப்பகுதியில் ஏறத்தாழ 243 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்புக்கும் வழி செய்யும்.

7. ஆளக்குளம் சிமிண்டு ஆலையின் மேம்பாட்டுத் திட்டமும் நவீனப்படுத்தும் திட்டமும்

7.1 மின்சார தூசிப்படிவுத் தடுப்பு இயந்திரம் மற்றும் வேறு சமப்படுத்தும் கருவிகளைப் பொருத்தும் பணிகளாவது ரூ. 301 இலட்சம் செலவில் இனிதே நடைபெற்று வருகிறது. 1981-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இத்திட்டம் பூர்த்தி ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் ஆலங்குளம் சிமிண்டு ஆலைப் பகுதியின் காற்று அசுத்தத்தைக்குறைப்பதுடன், சிமிண்டு உற்பத்தியின் அளவினை அதிகரிப்பதற்கும் உதவும். இந்தத் திட்டம் நிறைவு பெறுகின்ற காலத்தில் ஆலங்குளம் சிமிண்டு ஆலையானது வருடத்திற்கு 4·5 இலட்சம் டன் சிமிண்டு உற்பத்தித் திறனை எய்தும்.

8. பாளையம் சிமிண்டு திட்டம்.

8.1. மதுரை மாவட்டம் பாளையம் பகுதியில் ஆண்டு 1க்கு 4 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு சிமிண்டு ஆலையை நிறுவ இசைவுக் கடிதம் கோரி தமிழ் நாடு சிமிண்டு நிறுவனம் மைய அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளது. மைய அரசு இசைவு கடிதம் அளிப்பதற்கு உட்பட்டு இத்திட்டப் பணிகளை 1981–82-ல் தொடக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் திட்டச் செலவு ரூ. 32 கோடி அளவுக்கு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்டம் செயல்படுத்தப்படும் போது 1,000 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு கிட்டுவதுடன் மற்றும் கணிசமான அளவு சார்பு வேலை வாய்ப்பும் கிட்டும்.

9. ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் திட்டம்.

9.1. ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்களுக்கான எதிர்பார்ப்புத் தேவையைக் கருத்திற் கொண்டு ஆண்டொன்றுக்கு 36,000 டன் உற்பத்தித் திறனுள்ள ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் திட்டம் ஒன்று அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு திட்டச் செலவு ரூ. 600 இலட்சம் வரை செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மைய அரசு இத்திட்டத்திற்கு இசைவு கடிதம் வழங்குவதற்கு உட்பட்டு 1981–82-ல் திட்டப் பணிகளைத் தொடங்கி, 30 மாத காலத்

திற்குள் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்டம் செயல்படுத்தப்படும் போது 300 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் நிறைய பேர்களுக்கு சார்பு வேலை வாய்ப்பும் கிட்டும்.

வேலை வாய்ப்பு

1978-79, 1979-80, 1980-81 ஆகிய ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு பற்றிய விபரம் மற்றும் 1981-82ம் ஆண்டு அளிக்கக்கூடிய வேலை வாய்ப்பு பற்றிய இலக்கு விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1978-79 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை .. .. .. | 272 |
| 1979-80 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை .. .. | 254 |
| 1980-81 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை .. .. .. | 164 |
| 1981-82-ல் நிர்ணயிக்கப்பட்ட வேலை வாய்ப்பு இலக்கு .. .. .. .. .. | 548 |

மேற்கண்ட 548க்கு ஆலைவாரியாக விபரம்

| | |
|---|---|
| (1) ஆலங்குளம் சிமிண்டு ஆலை .. .. | 86 |
| (2) அரியலூர் சிமிண்டு ஆலை .. .. .. | 164 |
| (3) ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு ஓடு திட்டம், ஆலங்குளம் .. .. .. .. | 233 |
| (4) பாளையம் சிமிண்டு திட்டம் .. .. | 50* |
| (5) ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய் திட்டம் .. | 15** |
| | 548 |

*மைய அரசு இத்திட்டத்திற்கு இசைவு கடிதம் அளிப்பதற்கு உட்பட்டு, 1981-82-ல் திட்டப் பணிகள் துவங்கும் என்ற அனுமானத்தில் 1981-82-ல் வேலை வாய்ப்பு எண்ணிக்கை 50 என குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்த ஆலையில் மொத்த தேவை வாய்ப்பு எண்ணிக்கை 1,000).

**இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் வேலை வாய்ப்பு எண்ணிக்கை மொத்தம் 300. அதில் 1981-82-ல் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய எண்ணிக்கை 15 என குறிப்பிடப்பட்டுள்ளது.



தமிழ்நாடு பீங்கான் நிறுவனம்.

தொழில்துறை மற்றும் டான்சியின் கீழ் செயல்பட்டு வந்த இயந்திரச் செங்கல் தொழிற்சாலை மற்றும் இதர மட்பாண்ட நிலையங்களை ஒருங்கிணைத்து இயக்கவும் செயல் திறனில் முன்னேற்றம் காணவும் மாநிலத்தில் மட்பாண்டத் தொழிலை விரிவுபடுத்தவும் தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் நாளில் நிறுவப்பட்டது. ரூபாய் 200 இலட்சம் அதிகார மூலதனத்துடன் 1974 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் நாள் முதல் இந்நிறுவனம் இயங்கத் தொடங்கியது. இப்போதைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 129.79 இலட்சமாகும்.

இந்நிறுவனம் சென்னை, திருமழிசை, விருத்தாச்சலம், ஓமலூர் முதலிய இடங்களில் அமைந்துள்ள ஏழு தொழிலகங்களை தனது கட்டுப்பாட்டின்கீழ் இயக்கி வருகின்றது. விருத்தாச்சலத்திலுள்ள பீங்கான் தொழிலகம் நாள் ஒன்றுக்கு மூன்று டன்கள் வீதம் உணவக பீங்கான் பொருள்கள் மற்றும் துப்புரவு சாமான்களை உற்பத்தி செய்கிறது. விருத்தாசலத்திலுள்ள கற்குழாய் தொழிலகம் தரணிபாளையம், பண்ருட்டி முதலிய இடங்களில் கிடைக்கும் களிமண்ணை பயன்படுத்தி மாதம் ஒன்றுக்கு 500 டன்கள் வீதம் 4 அங்குலம் முதல் 15 அங்குலம் வரை விட்டமுள்ள உப்பு மெருகிட்ட கற்குழாய்களை உற்பத்தி செய்கிறது. 18 அங்குல விட்டமுள்ள உப்பு மெருகிட்ட கற்குழாய்களை உற்பத்தி நடப்பு, ஆண்டில் துவங்கப்பட்டுள்ளது. வங்காளம், பீகார் நிலக்கரி சுரங்கங்களில் கிடைக்கும் உயர்தர நிலகரியே முக்கிய எரி பொருளாகும். தொழிற்பேட்டையும், சுரங்கச் சூளை வசதி கொண்ட பணி வசதி நிலையமும் மட்பாண்ட சிறு தொழில் அதிபர்களுக்குத் தொழிற்கூடம், வடிவமைப்பு, மெருகு, சூளை வசதி, மற்றும் தொழில் நுட்ப ஆலோசனை முதலியவற்றை வழங்குகிறது. சுமார் 50 தொழிலதிபர்கள் இவ்வுதவியைப் பெறுகின்றனர். விருத்தாச்சலத்திலும் மற்றும் பெரம்பலூரிலும், உள்ள மட்பாண்ட கலை நிலையங்கள் சுமார் 25 நபர்களுக்கு மட்பாண்ட கலை பொருள்கள் செய்வதில் தொழில் நுட்பப் பயிற்சியளித்து மட்பாண்ட கலை பொருள்களை உற்பத்தி செய்கிறது. கிராமப்புற வாலிபர்களுக்காக ஓமலூரில் ஏற்படுத்தப்பட்ட பீங்கான் தொழில் மையம் ஜாடிகள் செய்வதில் சிறப்பு பெற்றிருக்கிறது.

மாதம் ஒன்றுக்கு 18 இலட்சம் செங்கற்களை உற்பத்தி செய்யும் திறனுடைய இயந்திர செங்கற் தொழிற்சாலை தொழில் நுட்ப சிக்கல்களாலும், பெரிய அளவில் பழுதடைந்துள்ள பழைய

இயந்திரங்களாலும் சுமார் 4 இலட்சம் செங்கற்களைத்தான் உற்பத்தி செய்கிறது. இத்தொழிற்சாலையின் எதிர் கால அமைப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

சாதாரண மக்களும் வாங்கும் வண்ணம் விலை குறைவான துப்புரவு சாமான்களையும் மற்றும் கற்குழாய்களையும் சிறந்த முறையில் உற்பத்தி செய்ய உள்நாட்டு தொழில் நுட்ப அறிவே போதுமானதாகும். மேலும் பலவித பணிகளை வழங்குவதன் மூலம் வளர்ச்சி நிலையங்கள் சிறு தொழிலதிபர்களின் மூல தனத்தைக் குறைத்து அதிக அளவில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தக் கூடும். மட்பாண்ட கலை நிலையங்களும், ஓமலூர் பீங்கான் மையமும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புத் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

1980–81 ஆம் ஆண்டில் நிறுவனம் ரூபாய் 135 இலட்சம் பெறுமான உற்பத்தி செய்தது. வங்காளம், பீகார் நிலக்கரி சுரங்கங்களிலிருந்து நிலக்கரி தடங்களில்லாமல் கிடைத்தால் உற்பத்தி ரூபாய் 150 இலட்சத்தை அடைந்திருக்கும். பலவித காரணங்களால் நிறுவனத்தின் செயல்திறன் ரூபாய் 28 இலட்சம் இழப்பில் முடியும். தொழிலக மேம்பாட்டுத் திட்டங்கள் முடிவுற்றால் எதிர்காலத்தில் இழப்பின் அளவு கணிசமாக குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கெனவே தொடங்கப்பட்ட கிராமப்புற மட்பாண்ட தொழில்களின் ஆய்வு முடியும் தருவாயிலுள்ளது. அதன் குறிப்புகளை பரிசீலித்த பிறகு கிராமப்புற மட்பாண்ட தேவைகள் மதிப்பிடப்பட்டு அவர்களுக்கு நவீன கருவிகள் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்காக தகுந்த பணி வசதி நிலையங்கள் அமைக்கப்பெற்று அவர்களின் ஊதியத் திறன் உயர்த்தப்படும்.

நிறுவனம் 1981--82 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மேம்பாட்டு பணித் திட்டங்களை செய்து முடிக்க திட்டமிட்டுள்ளது :—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | விருத்தாசலம் கற்குழாய் தொழிலகத்திலுள்ள இரண்டு பழுதுபட்ட சூளைகளைப் புதுப்பித்தல் .. .. .. .. .. | 4.00 |
| 2 | திருமழிசை இயந்திர செங்கற் தொழிற்சாலையை மேம்படுத்துதல் .. .. .. .. | 5.00 |
| | மொத்தம் .. | 9.00 |



1981–82இல் ரூபாய் 165 இலட்சத்துக்கு உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் இழப்பு கணிசமாக குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிறுவனத்தின் எதிர்கால செயல்நிலை மின்சாரம், நிலக்கரி ஆகியவை தடையில்லாமலும் போதுமானதாகவும் கிடைப்பதைச் சார்ந்துள்ளது.

1981 ஏப்ரல் 15]

கனிவள நிறுவனங்கள்

1. தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்)

தமிழ்நாடு கனிம நிறுவனம் தமிழகத்திலுள்ள தொழிற் சார்ந்த கனிவளத்தை வணிக ரீதியில் நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் கரும்பாறைகளை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்யவும் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரூபாய் 100 இலட்சம் ஒப்பிய பங்கு மூலதனத்துடன் நிறுவப்பட்டது.

2. டாமின் நிறுவனம் 1980–81-ஆம் ஆண்டில் (ஜனவரி 1981 வரை) உற்பத்தி மற்றும் விற்பனை செய்த பல்வேறு கனிமங்களின் விவரம் வருமாறு :—

| | உற்பத்தி. | | விற்பனை. | |
|---|---|---|---|---|
| | அளவு. | மதிப்பு. | அளவு. | மதிப்பு. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| கருப்புக்கல் .. .. | 1,669 கன மீட்டர். | 30.43 | 665 கன மீட்டர். | 28.15 |
| சாம்பல் கல் .. | 850 கன மீட்டர். | 12.20 | 368 கன மீட்டர். | 10.07 |
| பெருங்கனிகள் .. | 14,184 டன்கள். | 5.98 | 10,448 டன்கள். | 6.97 |

3. மூன்றாவது ஆண்டு நடைபோடும் இந்நிறுவனம் பிப்ரவரி 1981 வரை ரூபாய் 64 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யும். இதில் 90 சதவிகிதம் அந்நியச் செலாவணியாகக் கிடைக்கும். நடப்பாண்டில் ரூபாய் 87 இலட்சம் மதிப்புள்ள, கனிம பொருட்களை விற்பனை செய்யுமெனவும் மேலும் வரிகள் மற்றும் கடந்த ஆண்டு நட்டம் சரிக் கட்டியது போக ரூபாய் 10 இலட்சம் இலாபமாகக் கிடைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தான் மேற்கொண்ட திட்டங்களால் இந்நிறுவனம் சுமார் 900 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது



1981 ஏப்ரல் 15]

4. இராமநாதபுரத்தில் வேடகங்கைக்கருகில் கிடைக்கும் கிராபைட்டை (graphitte) உடயோகப்படுத்தி தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் கிருஷ்ணகிரியில் கரும்பாறைகளை அறுத்து மெருகிடும் தொழிற்சாலை ஒன்றை துவக்கவும் டாமின் நறுவனம் உத்தேசித்துள்ளது.

2. தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம்.
(டான்மாக்.)

1979-ஆம் ஆண்டு சனவரித் திங்கள், சேலம் மாவட்டம், ஓசூர் வட்டம், தாத்தையங்கார்ப்பட்டி கிராமத்தில் புல எண். 153-இல் உள்ள சுரங்கங்களிலிருந்து மாக்னசைட் கனிப்பொருளை வெட்டி எடுக்க தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட் என்ற புதிய நிறுவனம் அரசால் தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் சுரங்கங்களை அரசின் சார்பில் '' ரெய்சிங் காண்ட்ராக்டர் '' என்ற முறையில் பிப்ரவரி 1979-லிருந்து சுரங்க வேலைகளை நன்கு செய்து வருகிறது. இந்நிறுவனத்தின் ஒப்புதல் பெற்ற பங்கு மூலதனத் தொகை ரூபாய் 200 இலட்சங்களாகும். இதுவரை அரசு இந்நிறுவனத்திற்கு பங்கு மூலதனத் தொகையாக ரூபாய் 50 இலட்சம் அளித்துள்ளது. இந்நிறுவனத்தில் 2,400 பேர் வேலை செய்கின்றனர்.

2. 1979-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ஆம் நாள் முதல் 1980-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் நாள் வரையிலான இந்நிறுவனத்தின் செயல்திறன் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| கச்சா மாக்னசைட் உற்பத்தி | .. | 1.14 இலட்சம் டன். |
| கச்சா மாக்னசைட் விற்பனை | .. | 1.20 இலட்சம் டன். |
| விற்பனை .. .. .. | .. | ரூபாய் 320 இலட்சம். |
| கையாளப்பட்ட கழிவுகள் .. | .. | 17.50 இலட்சம் டன். |
| வரிகள் செலுத்துமுன் இலாபம் | .. | ரூபாய் 35.34 இலட்சம் |
| வரிகள் செலுத்தியபின் இலாபம் | .. | ரூபாய் 28.52 இலட்சம் |

தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே 6 சதவிகிதம் ஊதிய பங்காக (divident) ஆக அறிவித்து ரூபாய் 1.50 இலட்சம் அரசுக்குச் செலுத்தியுள்ளது.

3. டான்மாக், கச்சா மாக்னசைட்டை சுத்தப்படுத்தி டெட்பர்ன்ட் மாக்னசைட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை (Benifica-Cum Factoary) ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளது. இவ்வாறு சுத்தி செய்த மாக்னசைட்டிற்கு அதிக விலை கிடைக்கும்.

### 3. தமிழ்நாடு மாக்னசைட் பிராடக்ட்ஸ் லிமிடெட்.

1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பிரைவேட், லிமிடெட்டிற்கு முன்பு சொந்தமான ஆலையை இயக்க தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட்டும், சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட்டும் இணைந்து தமிழ்நாடு மாக்னசைட் பிராடக்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் கூட்டுத் துறையில் துவங்கப்பட்டுள்ளது. இது கால்சைன்ட் மற்றும் சுட்ட மாக்னசைட் உற்பத்தி செய்கிறது.

### தமிழ்நாடு உப்பு நிறுவனம்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 22 ஆம் நாள் ரூபாய் 50.00 இலட்சம் மூலதனத்துடன் நிறுவப்பட்டு 1975 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22 ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் உப்பு தயாரித்தலும், மற்றும் உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்களைத் தயாரிப்பதும் ஆகும்.

### மாரியூர்-வாலிநோக்கம் உப்புத் திட்டம்.

வேறு எந்தத் தொழிலும் ஆரம்பிக்க முடியாததும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதுமான இராமநாதபுரம் மாவட்டத்தில் 5,617.66 ஏக்கராக்கள் மொத்தப் பரப்பளவும் கொண்ட மரியூர்-வாலிநோக்கம் உப்புத் திட்டத்தை இந்நிறுவனம் முதலில் மேற்கொண்டது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 145 இலட்சமாகும். இந்த மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 50.00 இலட்சம். தமிழ்நாடு அரசின் நிலையான பங்கு மூலதனத்தையும் ரூபாய் 15.00 இலட்சம் மத்திய அரசின் உதவித் தொகையையும் (central capital subsidy) மீதியுள்ள தொகை தமிழக அரசு நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து பெறும் கடன் தொகைகளையும் கொண்டதாகும். தமிழ்நாடு அரசு இதுவரை இந்த நிறுவனத்தின் பங்கு மூலதனத்தில் ரூபாய் 50.00 இலட்சம் முதலீடு செய்துள்ளது. மேலும், ரூபாய் 18.00 இலட்சம் நீண்டகாலத் தவணைக் கடனாகவும் வழங்கியுள்ளது. தொழில் முதலீட்டு நிறுவனத்திடமிருந்து (ரூபாய் 30.00 இலட்சம் கடன் உதவித் தொகையில்) ரூபாய் 29.60 இலட்சமும் கனரா வங்கியிடமிருந்து (ரூபாய் 10 இலட்சம், கடன் உதவித் தொகையிலிருந்து) ரூபாய் 9.56 இலட்சம் மத்திய அரசின் உதவித் தொகையின் மூலமாக ரூபாய் 7.42 இலட்சம், உதவித் தொகையும் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை பெற்றுள்ளது. இந்நிறுவனம் இத்திட்டத்திற்காக டிசம்பர் 1980 வரை ரூபாய் 122.00 இலட்சம் செலவு செய்துள்ளது.

இத்திட்டத்தின் உப்பு உற்பத்தி 1976 ஆம் ஆண்டு முதல் தொடங்கியது. இதுவரையில் அடைந்த உப்பு உற்பத்தியின் விவரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:—

| | டன்கள். |
|---|---|
| 1976 .. .. .. .. .. | 550 |
| 1977 .. .. .. .. .. | 3,400 |
| 1978 .. .. .. .. .. | 6,500 |
| 1979 .. .. .. .. .. | 22,600 |
| 1980 .. .. .. .. .. | 29,047 |

நடப்பாண்டில் (1981) தரமானதும் நல்ல விலையில் விற்கக் கூடியதுமான உப்பினை தயாரிப்பதுதான் இத்திட்டத்தின் முயற்சியாகும். நடப்பாண்டில் 65,000 டன்கள் உப்பு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 30,000 டன்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான உயர்ந்தரக உப்பாயிருக்கும். மேலும், நடப்பாண்டில், பொடியாக்கப்பட்ட உப்பை தயாரிப்பதற்கான வசதிகளை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. குழாய் ஏற்றத்தின் கொள்ளளவு நிமிடத்திற்கு 30,000 கேலன்களாக உயர்த்தப்படும். நிமிடத்திற்கு 20,000 கேலன்கள் சக்தியுள்ள விசை ஏற்றங்கள் உயர் அழுத்த மின்சார மூலமாக இயக்கப்படும். (H.T. Supply) இத்திட்டத்தின் மூலமாக 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், மற்றும் 1,000 நபர்களுக்கு பருவகால வேலைவாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டபின் 200 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் 1,500 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

### மரவக்காடு-வடக்காடு உப்புத் திட்டம்.

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மரவக்காடு வடக்காடு கிராமங்களில் 5,400 ஏக்கராக்கள் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்ய அரசு ஆணை பிறப்பித்தது. இத்திட்டப் பகுதியில் தல எல்லை வேறுபாடு குறிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதில் 4,092.33 ஏக்கர் பரப்பளவு உப்பு உற்பத்திக்கு உகந்தது என தீர்மானிக்கப்பட்டு அதன் அடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின்படி மதிப்பீடு மொத்தம் ரூபாய் 120 இலட்சங்களாகும். இந்த மதிப்பீடு ரூபாய் 48 இலட்சம் தமிழ்நாடு அரசின் நிலையான பங்கு மூலதனத்தையும் மற்றும் ரூபாய் 60 இலட்சம் நிதி நிறுவனங்கள் வழங்கும் கடன் உதவித் தொகையையும் மீதித் தொகை நிறுவனத்தின் சொந்த நிதியையும் கொண்டதாகும். இத்திட்டத்திற்காக டிசம்பர் 1980 வரை ரூபாய் 4.93 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

வேதாரண்யம் சதுப்பு நிலப்பகுதியில் இயற்கை சமநிலை (ecology) பாதிக்கப்படாத அளவில் எவ்வளவு பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்ய முடியும் என்பதைக் கண்டறியும் பொருட்டு பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கத்திற்கு இந் நிறுவனம் ரூபாய் 1.48 இலட்சம் வழங்கியுள்ளது. பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கம் மார்ச் 1980 ஆம் ஆண்டில் ஆராய்ச்சியினை துவக்கியுள்ளது. அச்சங்கம் இரண்டு ஆண்டுகளில் இது சம்பந்தமான விரிவான அறிக்கையினை அளிக்கும்.



நடப்பாண்டில் ரூ. 15·48 இலட்சம் செலவில் சுற்று அணைக்கரை உள்கரை கட்டுமான பணிகள், சாலைகள், உப்பளங்கள் ஆகிய பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அலுவலக கட்டிடம், பணியாளர்கள் இளைப்பாறும் கொட்டகைகளும் கட்டப்பட உள்ளது. தவிர, ரூபாய் ஒரு இலட்சம் செலவில் விசை ஏற்றங்கள் போன்றவைகளும் வாங்கப்பட உள்ளது. 1982ஆம் ஆண்டில் இத்திட்டம் உப்பு உற்பத்தியைத் துவங்கும். இத்திட்டத்தின் மூலமாக தற்போது 10 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், மற்றும் 300–400 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டபின் 100 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், 1,000 நபர்களுக்கு பருவ கால வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

### மற்ற திட்டங்கள்.

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கழுவேலி சதுப்பு நிலப் பகுதியான கண்டாடு கிராமத்திலுள்ள 1,588 ஏக்கர் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்வதற்கான புலனாய்வை நிறுவனம் மேற்கொண்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வட செம்மஞ்சேரி பகுதியில் உள்ள 540 ஏக்கர் நிலப்பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்வதற்கான புலனாய்வையும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இந்நிறுவனம் தூத்துக்குடி பகுதியில் சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்யவும் திட்டமிட்டுள்ளது.

1981 ஆம் ஆண்டில் நிறுவனம் தயாரிக்கவுள்ள 300 டன்கள் அளவிலான 'பிட்டர்ன்ஸ்' எனப்படும் உப்பை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அமைக்கவுள்ள 'மெக்னீசியம் மெட்டல் திட்டத்திற்கு' வேண்டியளவு கொடுக்கும்.

இந்நிறுவனத்தின்கீழ் உள்ள திட்டங்கள் இன்னும் செயல்படுத்தப்படும் நிலையில் உள்ளதால், 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை ரூ. 46·24 இலட்சம் இழப்பு அடைந்துள்ளது. நிறுவனம் 1981 ஆம் வருடத்திலிருந்து வட்டி தேய்மானம் முதலியவற்றைக் கணக்கிடாமல் இலாபம் அடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனமான ரூ. 50 இலட்சத்தை ரூ. 200 இலட்சத்திற்கு உயர்த்தப்படவுள்ளது.

## கொள்கை விளக்கக் குறிப்பு 1981–82.

### சர்க்கரைத் தொழில்.

**1. முன்னுரை :**

*1·1. கடந்த ஆண்டுகளில் சர்க்கரைத் தொழில் ஓர் உயர் நிலையை அடைந்தபோதிலும், சர்க்கரை உபயோகத்தின் அளவு அபரிமிதமாக உயர்ந்துள்ளதால், சர்க்கரை உற்பத்தியில் மேலும் விரைவானதொரு முன்னேற்றத்தை அடையவேண்டி உள்ளது. அகில இந்திய சர்க்கரை உற்பத்தியின் அளவு ஐந்தாண்டு திட்ட ஆரம்ப காலத்தில் 11·34 இலட்சம் டன்களாக இருந்தது. இது 1955–56-ல் 18·90 இலட்சம் டன்களாக அதிகரித்து அடுத்த பத்தாண்டுகளில் (1965–66) இரண்டு மடங்காக உயர்ந்து 35·32 இலட்சம் டன்கள் என்ற நிலையை அடைந்தது. அடுத்த பத்தாண்டுகளுக்கும் சற்று அதிகமானதொரு கால கட்டத்தில் (1977–78) சர்க்கரை உற்பத்தி 1965–66 ஆம் ஆண்டைக் காட்டிலும் சுமார் 83 சதவீதம் அதிகரித்து 64·57 இலட்சம் டன்கள் என்ற ஒரு சாதனை நிலையை எட்டியது. இருப்பினும் பிற்பட்ட ஆண்டுகளில் சர்க்கரை உற்பத்தி குறைந்து சென்ற அரைவைப் பருவத்தில் (1979–30) அது 38·91 இலட்சம் டன்கள் என்ற நிலையை அடைந்தது. இது கடந்த பத்தாண்டுகளிலேயே மிகவும் குறைந்ததோர் உற்பத்தி அளவாகும்.*

*1.2. கடந்த காலங்களில் தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் சர்க்கரை உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்க உதவியதுடன் தற்போது நமது நாட்டு உற்பத்தியில் 8·5 சதவீதம் தமிழ்நாட்டின் பங்காக உள்ளது. 1950–51-ல் மொத்தம் தமிழ்நாட்டில் நான்கு சர்க்கரை ஆலைகள் இயங்கின, 1960–61 ஆம் ஆண்டில் அவற்றின் எண்ணிக்கை எட்டாக உயர்ந்தது. அடுத்த பத்தாண்டுகளில் மொத்தம் 12 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும் தனியார் துறையிலும் இயங்கின, அதன் பிறகு மேலும் அதிக ஆலைகள் தொடங்கியதாலும்: ஏற்கனவே இருந்த ஒரு சில ஆலைகளின் அரைவைத் திறன் விரிவாக்கம் செய்யப்பட்டதாலும் சர்க்கரை உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்தது. இவ்வாய்வுக்குரிய காலத்தில் மொத்தம் 21 சர்க்கரை ஆலைகள் இம்மாநிலத்தில் இயங்குகின்றன. அவற்றில் 8 தனியார் துறையிலும், 10 கூட்டுறவுத் துறையிலும், 2 பொதுத்துறையிலும், எஞ்சிய ஒன்று மத்திய அரசின் நிர்வாகத்திலும் உள்ளன. இந்த ஆய்வில் முக்கியமாக 1979–80 ஆம் சர்க்கரை ஆண்டில் (அக்டோபர் 1979 முதல் செப்டம்பர் 1980 முடிய) சர்க்கரைத் தொழிலின் சாதனைகளை முந்தைய ஆண்டின் (1978–79) சாதனைகளுடன் ஒப்பிட்டு விளக்குவதுடன் 1980–81 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் குறித்த சிறு குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.*

**2. சர்க்கரைத் துறை இயக்கம் :**

*2.1. பொதுவாக சர்க்கரைத் தொழிலின் முறையான வளர்ச்சிக்கு போதுமான கவனத்தைச் செலுத்தும் பொருட்டும் குறிப்பாக கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியினை கவனித்து வரும் பொருட்டும் தமிழ்நாடு அரசு 1969 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சர்க்கரைத்துறை இயக்கத்தை அமைத்தது. இவ்வியக்கம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு ஒரு மேற்பார்வை அங்கமாக இருப்பதால், ஒருங்கிணைந்த செயல்பாட்டுக்கும் வழி கோலுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தமட்டில், கூட்டுறவுப் பதிவாளரின் அனைத்து அதிகாரங்களும் சர்க்கரைத் துறை இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளன.*

*2.2. தமிழ் நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறனளவு மற்றும் நிறுவிய உற்பத்தித் திறனளவு ஆகிய விவரங்களை இணைப்பு 1-ல் காணலாம்.*

**3. தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளின் செயல்முறை :**

*தமிழ்நாடு சர்க்கரைத் தொழிலுக்கு புதியதாக இருந்தாலும் அது சிரான வளர்ச்சியை அடைந்திருக்கிறது. தமிழ்நாட்டு சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் போற்றத்தக்க நிலையை அடைவதற்கு, சர்க்கரைக் கட்டுமானமும், அதனை மேலும், உயர்த்த ஆலைகள் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளுமே காரணங்களாகும். கரும்பு உற்பத்தியாளர்களுக்கும் சர்க்கரை ஆலைகளுக்கும் இடையே நல்லுறவு கரும்பிற்குரிய விலையை குறித்த காலத்தில் பட்டுவாடா செய்தல் மற்றும் ஆலைகள் வழங்கும் பல்வேறு ஊக்குவிப்புகளுமே கரும்பு உற்பத்தியாளர்கள் கரும்பு உற்பத்தியை அதிகரித்து ஆலைகளுக்கு கரும்பினை தடங்கலின்றி வழங்க வழிவகுத்தன.*

**4. சாதனைகள் :**

தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தி மற்றும் சர்க்கரை ஆலைகள் பயன்படுத்திய கரும்பின் அளவு முதலிய விவரங்களை கீழ்க் கண்ட அட்டவணையில் காணலாம்.

| ஆண்டுகள். | கரும்பு பயிரிடப்பட்ட பரப்பளவு (ஆயிரம் ஹெக்டேரில்). | உற்பத்தி செய்யப்பட்ட கரும்பின் அளவு (ஆயிரம் டன்களில்). | ஆலைகளில் பயன்படுத்தப்பட்ட கரும்பின் அளவு (ஆயிரம் டன்களில்). | மொத்த உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட கரும்பின் அளவு (சதவீதத்தில்). | ஹெக்டேருக்கு சராசரி விளைச்சல் (டன்களில்). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1975–76 .. | 128 | 11,936 | 1,969 | 17 | 93·25 |
| 1976–77 .. | 155 | 14,245 | 3,791 | 27 | 92·21 |
| 1977–78 .. | 167 | 17,238 | 5,466 | 32 | 103·22 |
| 1978–79 .. | 154 | 15,431 | 5,768 | 37 | 100·20 |
| 1979–80 .. | 165 | 16,955 | 4,078 | 24 | 102·75 |
| 1980–81*.. | 170 | 18,300 | 4,485 | 25 | 107·65 |
| 1981–82** | 172 | 18,900 | .. | ... | 109·88 |

1979–80 மற்றும் 1980–81 ஆகிய ஆண்டுகளில் வெல்ல உற்பத்தியாளர்கள் கரும்பிற்கு சர்க்கரை ஆலைகளுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையைக் காட்டிலும் அதிக விலை கொடுத்ததால், சர்க்கரை ஆலைகளில் உபயோகிக்கப்பட்ட கரும்பின் அளவு சிறிது குறைந்தது.

**5. செயல் முடிவுகள் :**

5·1. 1977–78 முதல் 1979–80 முடிய உள்ள மூன்று ஆண்டுகளில் சர்க்கரை ஆலைகளின் செயல் திறன் குறித்த விவரங்களை இணைப்பு 2-ல் காணலாம். 1979–80 ஆம் ஆண்டு அரைவை செய்த கரும்பின் அளவு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு மற்றும் 1980–81 ஆம் ஆண்டில் அரைவைக்கு எதிர் பார்க்கப்படும் கரும்பின் அளவு மற்றும் சர்க்கரை உற்பத்தி அளவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

* முடிவான மதிப்பீடு.
** திட்டம்.



| துறைகள். | 1979–80 ஆம் ஆண்டு அரைவை செய்யப்பட்ட கரும்பின் அளவு. | 1980–81 ஆம் ஆண்டில அரைவைக்கு எதிர்பார்க்கப் படும் கரும்பின் அளவு. |
|---|---|---|
| | (இலட்சம் | டன்களில்.) |
| (1) | (2) | (3) |
| கூட்டுறவுத்துறை .. .. | 14·81 | 17·75 |
| தனியார்துறை * .. .. | 23·15 | 23·90 |
| பொதுத்துறை .. .. | 2·82 | 3·20 |
| மொத்தம் .. .. | 40·78 | 44·85 |

| | 1979–80 ஆம் ஆண்டு உற்பத்தி செய்த சர்க்கரை அளவு | 1980–81-ல் எதிர் பார்க்கப்படும் சர்க்கரை உற்பத்தி அளவு. |
|---|---|---|
| | (இலட்சம் | டன்களில்.) |
| (1) | (2) | (3) |
| கூட்டுறவுத்துறை .. .. | 1·39 | 1·59 |
| தனியார்துறை * .. .. | 2·01 | 2·03 |
| பொதுத்துறை .. .. | 0·27 | 0·30 |
| மொத்தம் .. .. | 3·67 | 3·92 |

* மேலே கொடுக்கப்பட்ட விவரங்களில் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சர்க்கரை ஆலையின் விவரங்களும் அடங்கியுள்ளன.

5.2. தமிழ்நாடு அரசு 1980–81 ஆம் ஆண்டிற்கு கரும்பிற்கு அதிகவிலை அறிவித்துள்ளதால், இவ்வாண்டு ஆலைகளில் அரைவைக்கு அதிக அளவு கரும்பு கிடைக்குமென எதிர்பார்க்கப் படுகிறது. இதனால் சென்ற ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருக்கும்.

[1981 ஏப்ரல் 15

## 6. சர்க்கரைத் தொழிலின் பொது நிலை.

6.1. தமிழ்நாட்டில், கரும்பின் மகசூல் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. உற்பத்தியாகும் கரும்பில் மூன்றில் ஒரு பங்குக்குச் சற்று கூடுதலாக சர்க்கரை உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தமிழ் நாட்டில் நல்ல சாலை வசதிகளும், பாசன வசதிகளும் இருப்பதால் தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி அதிகமாக உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் அரைவை செய்யப்பட்ட கரும்பின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| தொடர் எண்ணும் சர்க்கரை ஆண்டும். | அரவை செய்யப் பட்ட கரும்பு. | சர்க்கரை உற்பத்தி. | சர்க்கரை கட்டு மானம். | உற்பத்தித் திறனை பயன் படுத்தியது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (இலட்சம் டன்களில்). | | (சதவீதத்தில்.) | |
| 1. 1975–76 | 19·69 | 1·80 | 9·14 | 39 |
| 2. 1976–77 | 37·91 | 3·22 | 8·48 | 65 |
| 3. 1977–78 | 54·66 | 4·68 | 8.57 | 79 |
| 4. 1978–79 | 57·68 | 4·92 | 8·52 | 84 |
| 5. 1979–80 | 40·78 | 3·67 | 9·00 | 59 |
| 6. 1980–81* | 44·85 | 3·92 | 8·73 | (அரைவை பருவத்தின் இறுதியில்தான் நிலவரம் தெரியும்). |

* மதிப்பீடு.

6.2. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் சாதனைக்கு அவைகளின் அரைவைத் திறனை உயர்ந்த அளவுக்குப் பயன்படுத்தியதே குறிப்பிடத்தக்க அம்சமாகும். இருப்பினும் எதிர்பாராத வறட்சியின் காரணமாக அரைவைத் திறனை முழு அளவு பயன்படுத்த இயலாமல் போயிற்று, மேலும் கரும்பிற்கு ஆதாய மற்றொரு விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்ததால், விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த கரும்பை வெல்ல உற்பத்திக்கு உபயோகப்படுத்தியதால், ஆலைகள் தங்களது முழு அளவிற்கு அரைவைத் திறனை பயன்படுத்த இயலவில்லை. ஆனால், மத்திய அரசு கரும்பிற்கு நிர்ணயித்த குறைந்த அளவு விலையை விட கூடுதலானதொரு விலையை தமிழ்நாடு அரசு அறிவித்ததால்,



1981 ஏப்ரல் 15]

1980–81 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு அதிக அளவு கரும்பு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் செயல் திறன்பற்றிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் | ஆண்டு. | அரைவை செய்யப் பட் கரும்பு. | உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை. | சர்க்கரை கட்டு மானம் | உபயோகப் படுத்தப் பட்ட அரைவைத் திறன். |
|---|---|---|---|---|---|
| | | (இலட்சம் டன்களில்.) | | (சதவீதத்தில்.) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | 1975–76 | 7·35 | 0·69 | 9·43 | 44 |
| 2. | 1976–77 | 14·86 | 1·33 | 8·95 | 71 |
| 3. | 1977–78 | 23·35 | 2·09 | 8·94 | 89 |
| 4. | 1978–79 | 24·27 | 2·13 | 8·78 | 90 |
| 5. | 1979–80 | 14·81 | 1·39 | 9·40 | 55 |

6.3. 1980-81 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் நமது மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் செயல்திறனில் நல்ல முன்னேற்றம் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1980-81ல் அகில இந்திய அளவில் சர்க்கரை உற்பத்தி சுமார் 52 இலட்சம் டன்களாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதில் தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் மொத்தம் சுமார் 3.92 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது சென்ற 1979-80 ஆம் ஆண்டு உற்பத்தியை விட 7 சதவீதம் அதிகமாகும்.

## 7. கரும்பு விலை.

7.1. 1979-80 ஆம் ஆண்டிற்கு 8.5 அல்லது அதற்குக் குறைவான சதவிகித சர்க்கரைச் சத்துடைய கரும்பின் குறைந்த அளவு விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 12·50 என மத்திய அரசு நிர்ணயம் செய்தது. 8.5 சதவிகித சர்க்கரைச் சத்துக்கு அதிகமாகக் கிடைக்கும் 0.1 சதவீதம் ஒவ்வொன்றுக்கும் குவிண்டால் ஒன்றுக்கு 14·7059 பைசா அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது. 1980-81 ஆம் ஆண்டிற்கு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான சதவிகித சர்க்கரைச் சத்துடைய கரும்பிற்கான குறைந்த அளவு விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 13.00 எனவும், சர்க்கரைச் சத்து 8.5 சதவிகிதத்திற்கும் மேற்படும்பொழுது ஒவ்வொரு 0.1 சதவிகிதத்திற்கு 15.2941 பைசா வீதம் அதிகம் கொடுக்கப்படவேண்டும்

எனவும் மத்திய அரசு நிர்ணயம் செய்தது. ஆனால், உரம் மற்றும் இதர விவசாய இடுபொருட்களின் விலை ஏற்றத்தால், கரும்பு உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதால், கரும்பிற்கு மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்த அளவு விலை ஆதாயமற்றதோர் விலையாகும் என கரும்பு உற்பத்தியாளர்கள் முறையீடு செய்தார்கள். கரும்பிற்கு நியாயமானதொரு விலை கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையில் கரும்பு உற்பத்தியாளர் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், கரும்பிற்கு அதிக விலை கொடுக்கக் கோரி மாநில அரசு சர்க்கரை ஆலைகளை கேட்டுக் கொண்டுள்ளது. இதன் பயனாக, 1980-81 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான சர்க்கரைச் சத்துடைய கரும்பிற்கான குறைந்த அளவு விலை டன் ஒன்றுக்கு ரூ. 175 எனவும் சர்க்கரைச் சத்து 8.5 சதவீதத்திற்கு மேற்படும்பொழுது ஒவ்வொரு 0.1 சதவீதத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு 15·2941 பைசாவிற்குப் பதிலாக 20·5892 பைசா எனவும் தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் வழங்கும். கரும்பிற்கு மத்திய அரசு நிர்ணயம் செய்த விலைகளும், மாநில அரசின் அறிவுரைப்படி சர்க்கரை ஆலைகள் கரும்பிற்கு கொடுக்கும் விலைகளும் இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

7·2. கரும்பு பயிரிடப்படும் பரப்பளவை நிலைப்படுத்துவதாலும் ஒவ்வொரு சர்க்கரை ஆலைகளுக்கும் வரையறுக்கப்பட்ட கரும்புப் பகுதிகளில் கரும்பு பயிரிடுதலை முழுமையடையச் செய்வதாலுமே ஆலைகளுக்கு எவ்வித ஏற்றத்தாழ்வில்லாமல் சீரான கரும்பு விநியோகத்தை உறுதிப்படுத்த இயலும். தற்பொழுது நடைமுறையில் உள்ளதுபோல் ஆலைகளின் அரைவைப் பருவம் தொடங்கும்பொழுது கரும்பு விலையை அறிவிக்காமல் கரும்பு நடும் பருவத்திற்கு முன்னதாகவே கரும்பு விலையை அறிவித்தலின் மூலமே இது சாத்தியமாகும். இதனால் தற்பொழுது சர்க்கரை உற்பத்தியில் ஏற்பட்டுவரும் ஏற்றத்தாழ்வு நீக்கப்படுவது மட்டுமல்லாமல், சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்கவும் முடியும். அதிக சர்க்கரை உற்பத்தி நியாயமானதொரு விலையில் சர்க்கரை கிடைக்க வழிகோலும்.

8. சர்க்கரை விலை.

8.1. பொதுமக்களால் அதிக அளவில் உபயோகிக்கப்படும் சர்க்கரை பொதுவாகவே தட்டுப்பாட்டில் உள்ளது. எனவே மத்திய அரசு சர்க்கரை விற்பனை, விலை மற்றும் விநியோகத்தின் மீது பகுதிக் கட்டுப்பாட்டை அமுலுக்குக் கொண்டுவந்தது. இதன் படி மொத்த உற்பத்தியில் 65 சதவீத சர்க்கரையை லெவி சர்க்கரையாக மத்திய அரசு எடுத்துக்கொள்ளும். எஞ்சிய 35 சதவீத சர்க்கரை உற்பத்தி மட்டும் இந்த சர்க்கரைகளாக வெளிச் சந்தையில் விற்க அனுமதிக்கப்படும். மத்திய அரசு எடுக்கும் லெவி சர்க்கரைக்குரிய விலையை மத்திய





அரசே நிர்ணயம் செய்கிறது. இப்பகுதிக் கட்டுப்பாடு முறை 15—8—1978 முடிய அமலில் இருந்தது. 1977-78 ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் அதிகரித்து நாட்டின் மொத்தத் தேவையைக் காட்டிலும் கூடுதலாக இருந்தது. எனவே, மத்திய அரசு சர்க்கரையின் மீதான விலை, விற்பனை மற்றும் விநியோகக் கட்டுப்பாட்டை 16—8—1978 முதல் நீக்கியது. இதன் காரணமாக சர்க்கரைக் கட்டுப்பாட்டை தளர்த்தியபோது இருந்த ஏராளமான சர்க்கரையை மிகவும் குறைந்த விலைக்கு விற்க வேண்டியதாயிற்று. மேலும், வெல்லம் மற்றும் இதர இனிப்புப் பொருள்களின் விலைகளும் மிகவும் குறைந்ததால் தங்களின் கையிருப்பிலுள்ள சர்க்கரையை விற்பனை செய்ததில் ஆலைகளுக்கு பெருத்த நட்டம் ஏற்பட்டது. கரும்பு பயிரிடப்படும் நிலப்பரப்பளவும் இதனால் மிகவும் குறைந்தது. மேலும், வட மாநிலங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் வறட்சி காரணமாக நாட்டின் சர்க்கரை உற்பத்தி எதிர்பார்த்த அளவுக்கு மாறாக மிகவும் குறைந்தது. இந்நிலையை மத்திய அரசு ஆராய்ந்து, 17—12—1979 முதல் சர்க்கரை மீது மீண்டும் பகுதிக் கட்டுப்பாடு முறையை அமுலுக்குக் கொண்டுவந்தது. தமிழ்நாட்டுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட லெவி சர்க்கரையின் விலை மிகவும் குறைவாக இருந்ததால், இம்மாநிலத்தில் இத் தொழில் மிகவும் நலிவுற்றது. மற்ற மாநிலங்களை ஒப்பிடும் பொழுது, தமிழ் நாடு, அதிக உற்பத்திச் செலவு உடைய பகுதியாகும். அவ்விதமிருப்பினும் இம்மாநிலத்திற்கு மத்திய அரசு மிகவும் குறைந்த லெவி சர்க்கரை விலையையே நிர்ணயித்துள்ளது. 1978-79 மற்றும் 1979-80 ஆகிய ஆண்டுகளுக்கு லெவி சர்க்கரைக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலை மிகவும் குறைவாகவே இருந்ததால், தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள், பிற மாநில சர்க்கரை ஆலைகளைப் போன்று, லெவி சர்க்கரை விலையை திருத்தி அமைக்கக் கோரி நீதி மன்றங்களில் முறையீடு செய்துள்ளன.

8.2. அதிக அளவு சர்க்கரை உற்பத்தி செய்யும் பருவத்தில் முடையிருப்பு வைத்துக்கொள்ள மத்திய அரசு ஏற்பாடு செய்வது நல்லது. இதனால் அதிக சர்க்கரை உற்பத்தியாகும் காலங்களில், சர்க்கரையின் விலையை நியாயமானதோர் அளவில் நிலைப்படுத்த இயலும். அதேபோன்று சர்க்கரை உற்பத்தியில் குறைவு ஏற்பட்ட பருவங்களில் முடையிருப்பிலிருந்து சர்க்கரையை விநியோகம் செய்வதால், சர்க்கரை விலையை நிலைப்படுத்துவதுடன் நுகர்வோருக்கு சர்க்கரையை ஒரு சீரான விலையில் விற்கவும் வழி கோலுகிறது. மேலும் இதனால் சர்க்கரை ஏற்றுமதியிலும் மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் ஒரு சீரான நிலையை ஏற்படுத்தவும் இயலும்.

9. கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டம்.

9.1. சர்க்கரைத்துறை இயக்குநர், கரும்பு ஆணையாளர் என்ற முறையில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு பயிரிடப்படும் பகுதிகளை நிர்ணயிப்பதுடன், சர்க்கரை ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்தும் பணிகளையும் கவனித்து வருகின்றார். இதற்காக பொறியியல் பணியாளர்கள் இவ்வியக்கத்தின் கீழ் பணிபுரிந்து வருகின்றனர். கரும்புச் சாலை அபிவிருத்திக்கான செலவு சர்க்கரை ஆலைகள் செலுத்தும் கரும்பு செஸ் நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. கரும்பை வெட்டியபின் தடங்கலின்றி உடனுக்குடன் ஆலைகளுக்கு எடுத்துச்செல்ல நல்ல பராமரிக்கப்பட்ட சாலைகள் அவசியமாதலால் அதிகம் கரும்பு விளையும் பகுதிகளுக்கும் சர்க்கரை ஆலைகளுக்குமிடையே புதிய சாலைகளை அமைக்க அரசு ஆர்வம் காட்டி வருகிறது. சாலைகள் அமைப்பதற்குத் தேவையான பொருள்களின் விலை ஏற்றத்தால் ஒவ்வொரு ஆண்டும் கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டத்திற்குச் செலவிடப்படும் தொகை அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

9.2. கடந்த ஆண்டுகளில் இத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| 1978-79 .. .. .. .. | 109·92 |
| 1979-80 .. .. .. .. | 150·00 |
| 1980-81 .. .. .. ... | 180.00 (திட்ட ஒதுக்கீடு). |

10. சர்க்கரைக் கழிவுப் பாகு.

1979-80 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட கழிவுப்பாகின் மொத்த அளவு 1·74 இலட்சம் டன்களாகும். வடிப்பகங்களின் தேவைகளையும் இதர எம். எல். 4 உரிமம் பெற்றவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்தபின், இப்பருவத்தின் இறுதியில் மொத்தம் 7,000 டன்கள் இருப்பில் இருந்தது. 1980-81 ஆம் சர்க்கரை ஆண்டில் தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் மொத்தம் 1·85 இலட்சம் டன்கள் கழிவுப் பாகினை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.





11. சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம்.

கான்பூரிலுள்ள தேசிய சர்க்கரை நிறுவனத்தைப் போன்றதொரு சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் 1979 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சர்க்கரை ஆலைகளிலுள்ள பணியாளர்களுக்கு தகுந்த பயிற்சி இந்த நிறுவனத்தின் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. இந் நிறுவனம் சர்க்கரை ஆலைகளின் கீழக்கண்ட தேவைகளை பூர்த்தி செய்ய செயல்பட்டு வருகிறது.

(1) போதனை மற்றும் பயிற்சி.

(2) ஆலோசனை மற்றும் விஸ்தரிப்புப் பணிகள்.

(3) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள்.

12. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம்.

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பை நிர்ணயித்தல்) சட்டத்தின்கீழ், சர்க்கரை ஆலை நிலங்கள் வைத்துக்கொள்வதில் அளிக்கப்பட்ட விதி விலக்கு, விலக்கிக் கொள்ளப்பட்டதன் விளைவாக திருஆருரான் சர்க்கரை ஆலையிடமிருந்த 3,421·14 ஏக்கர் சொந்த நிலமும், 3,096·64 ஏக்கர் குத்தகை நிலமும் உபரி நிலங்களாக ஆயின. இந்த உபரி நிலங்களைப் பராமரிக்க, தமிழ்நாடு அரசு 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தை நிறுவியது. முக்கியமாக கரும்பு பயிரிடுவதே இதனுடைய நோக்கமாகும். இந் நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் இரண்டு கோடி ஆகும்; இதில் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்ட பங்கு மூலதனமாகும். தமிழ்நாடு அரசு ரூ. 27·50 இலட்சத்திற்கு பங்கு முதலீடு செய்துள்ளது. மேலும் ரூ. 2·5 இலட்சம் கடனாகவும் ரூ. 15 இலட்சம் வழிமுறை முன்பணமாகவும் அளிக்கப்பட்டுள்ளது. இந் நிறுவனத்திற்குத் தேவையான நடைமுறை மூலதனம் பாரத வங்கிக் கிளையிலிருந்து பெறப்பட்டுள்ளது.

இங்கு விளையும் நெல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிகக் கழகத்திற்கும் மற்றும் வியாபாரிகளுக்கும் விற்கப்படுகிறது. சட்ட ரீதியான கட்டமைப்பாட்டின்கீழ் இங்கு பயிரிடப்படும் கரும்பு முழுவதும் வடபாதி மங்கலத்தில் உள்ள திருஆருரான் சர்க்கரை ஆலைக்கு அளிக்கப்படுகிறது.

13. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம்.

சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையில் நிறுவப்படுவதற்காக அரசு 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தை நிறுவியது. அதன்படி தஞ்சாவூர் அருகிலுள்ள குருங்குளம் கிராமத்தில் இந்நிறுவனத்தின் முதல் சர்க்கரை

ஆலை நிறுவப்பட்டு, 1976-77 ஆம் ஆண்டு முதல் இந்த ஆலை அரைவையை தொடங்கியது. இதன் இரண்டாவது ஆலை திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் அருகிலுள்ள எறையூர் கிராமத்தில் நிறுவப்பட்டு 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அரைவை தொடங்கப்பட்டது. சர்க்கரை நிறுவனத்திற்கும் சர்க்கரை இயக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கும் பொருட்டு, சர்க்கரைத் துறை இயக்குநர் தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தில் பதவி வழி நிர்வாக இயக்குநராக அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

**14. புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவுதல்:**

14.1. பொதுத் துறையிலேயே புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட வேண்டும் என்ற கொள்கையினை மாற்றி, புதிய ஆலைகள் கூட்டுறவுத் துறையில் நிறுவப்பட வேண்டுமென 1977-ல் அரசு முடிவு செய்தது. அதன்படி, தென் ஆற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், பெரிய செவலை கிராமத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று நிறுவப்பட்டது. இந்த ஆலையின் நிர்மாணப்பணி தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இப் புதிய ஆலையின் அரவை 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள் அன்று துவங்கப்பட்டது.

14.2. செங்கற்பட்டு மாவட்டம், திருத்தணி வட்டத்தில், நாள் ஒன்றுக்கு 1,250 டன் கரும்பு அரைக்கும் திறனுள்ள ஒரு சர்க்கரை ஆலை அமைக்க உரிமம் வழங்கக் கோரி மத்திய அரசுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மாயவரம் வட்டத்தில் நாளொன்றுக்கு 1,250 டன் கரும்பு அரைக்கும் திறன் கொண்ட ஒரு சர்க்கரை ஆலை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் சிறிய சர்க்கரை ஆலைகள் அமைப்பது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இச் சிறிய சர்க்கரை ஆலைகள் பொருளாதார அடிப்படையில் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தால், ஒன்று அல்லது இரண்டு சிறிய சர்க்கரை ஆலைகள் பரிசோதனை முறையில் நிறுவப்படும். இவைகளின் செயல்திறன் பொருளாதார அளவில் இலாபகரமாய் இருப்பின் மேலும் சில சிறிய சர்க்கரை ஆலைகள் நிறுவப்படலாம்.

**15. காகித தொழிற்சாலை.**

சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் உபரி கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 10 முதல் 12 டன் காகிதம் உற்பத்தி செய்யும் சிறிய அளவிலான தொழிற்சாலை ஒன்று மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கென்று ரூபாய் 30 இலட்சம் பங்கு மூலதனமாக அரசு செலவிட்டுள்ளது. இக் காகித ஆலையை நிறுவும்



பொறுப்பு தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கான விரிவானதோர் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இச் சிறிய காகித ஆலையின் செயல்திறன் இலாபகரமாக இருப்பின் ஒவ்வொரு சர்க்கரை ஆலைப் பகுதிகளிலும் இதுபோன்ற காகித ஆலை அமைப்பது பரிசீலிக்கப்படும்.

**தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தின் ஏனைய திட்டங்கள்.—**

**தொழிற்கூடம்.**

சர்க்கரை ஆலைகளில் உள்ள கரும்பு பிழியும் உருளைகளின் மேற்பரப்பிலுள்ள உருக்குப் பகுதியினை புதுப்பிக்கவும், சர்க்கரை ஆலை இயந்திரங்களுக்குத் தேவைப்படும் சிறிய உப பொருட்களைத் தயார் செய்வதற்காகவும் ஒரு தொழிற்கூடம் அமைப்பது இந் நிறுவனத்தின் பரிசிலனையில் உள்ளது.

**17. சர்க்கரைத்தொழிலில் வேலை வாய்ப்பு நிலவரம்.**

17.1. சர்க்கரைத்தொழில் சுமார் 18,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கின்றது. இத் தொழிலை சார்ந்துள்ள இதர தொழில்களான விவசாயம், போக்குவரத்து மற்றும் உள்ள தொழில்களின் மூலமாக பல இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது.

17.2. வடிப்பகங்கள் போன்ற உப தொழில்களும், பிஸ்கட், மிட்டாய், உணவுப் பொருள்கள், குளிர் பானங்கள், ஈஸ்ட் தயாரித்தல் போன்ற சிறு தொழில்களும் சர்க்கரைத் தொழிலைச் சார்ந்துள்ளதாலும் அட்டை மற்றும் காகிதம் போன்ற தொழில்களுக்கு இத் தொழில் ஊக்கமளிப்பதாலும், இத் தொழில்களின் மூலமாகவும் பெருமளவிற்கு வேலைவாய்ப்புக்கள் அடையப் பெற்றுள்ளன.

இணைப்பு—1.

தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறனளவு மற்றும் நிறுவிய உற்பத்தித் திறனளவு ஆகியவற்றின் விவரங்கள் :—

| தொடர் எண்ணும், சர்க்கரை ஆலையின் பெயரும். | நாளது நாள் வரையிலான உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறன். | நாளது நாள் வரையிலான நிறுவிய உற்பத்தித் திறன். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (நாளொன்றுக்கு டன்களில்.) | |
| **கூட்டுறவுத் துறை.** | | |
| 1 ஆம்பூர் .. .. | 2,200 | 2,200 |
| 2 மதுராந்தகம் .. .. | 1,750 | 1,750 |
| 3 அமராவதி .. .. | 2,000 | 2,000 |
| 4 சேலம் .. .. | 2,500 | 2,500 |
| 5 கள்ளக்குறிச்சி .. | 2,000 | 2,000 |
| 6 நேஷனல் .. .. | 1,500 | 1,500 |
| 7 தர்மபுரி .. .. | 1,250 | 1,250 |
| 8 வேலூர் .. .. | 1,250 | 1,250 |
| 9 திருப்பத்தூர் .. .. | 1,250 | 1,250 |
| 10 உளுந்தூர்ப்பேட்டை .. | 1,250 | 1,250 |
| மொத்தம் .. | 16,950 | 16,950 |
| **தனியார் துறை.** | | |
| 11 இ.ஐ.டி. பாரி .. | 4,000 | 4,000 |
| 12 காவேரி* .. .. | 1,000 | 1,250 |
| 13 டெக்கான் .. .. | 2,000 | 1,850 |
| 14 சவுத் இந்தியா .. | 1,500 | 2,700 |
| 15 சக்தி .. .. .. | 4,000 | 4,000 |
| 16 அருணா .. .. | 4,000 | 4,000 |
| 17 மதுரா .. .. | 1,100 | 600 |
| 18 கோத்தாரி .. .. | 4,000 | 1,500 |
| 19 திரு ஆரூரான் .. | 2,000 | 2,000 |
| 20 பாலார் .. .. | 400 | (வேலை செய்யவில்லை.) |
| மொத்தம் .. | 24,000 | 21,900 |

* இந்த ஆலை பிப்ரவரி 1979 முதல் மத்திய அரசின் பொறுப்பில் உள்ளது.



| (1) | (2) | (3) |
|---|---|---|
| **பொதுத் துறை.** | | |
| 21 தருசாவூர் .. .. | 1,250 | 1,250 |
| 22 பெரம்பலூர் .. .. | 1,250 | 1,250 |
| மொத்தம் .. | 2,500 | 2,500 |
| **சுருக்கம்.** | | |
| கூட்டுறவுத் துறை .. | 16,950 | 16,950 |
| தனியார் துறை .. .. | 24,000 | 21,900 |
| பொதுத் துறை .. .. | 2,500 | 2,500 |
| மொத்தம் .. | 43,450 | 41,350 |

## இணைப்பு 2.

தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் அரைவை செய்த கரும்பின் அளவு, சர்க்கரை உற்பத்தி மற்றும் சர்க்கரை கட்டுமானம் குறித்த விவரங்கள்.

| தொடர் எண்ணும், சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1977–78. அரைவை செய்த கரும்பின் அளவு. | 1977–78. உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை. (டன்களில்). | 1977–78. சர்க்கரை கட்டுமானம். (சத வீதத்தில்.) | 1978–79. அரைவை செய்த கரும்பின் அளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. கூட்டுறவுத் துறை. | | | | |
| 1. ஆம்பூர் .. .. .. | 2,84,217 | 26,108 | 9·19 | 3,17,236 |
| 2. மதுராந்தகம் .. .. | 2,80,308 | 25,060 | 8 94 | 2,69,332 |
| 3. அமராவதி .. .. .. | 3,10,385 | 26,843 | 8·65 | 2,36,147 |
| 4. சேலம் .. .. .. | 3,62,273 | 32,503 | 8·97 | 4,60,959 |
| 5. கள்ளக்குறிச்சி .. .. | 2,57,854 | 20,765 | 8·05 | 2,65,532 |
| 6. நேஷனல் .. .. .. | 2,17,234 | 19,533 | 8·99 | 2,39,274 |
| 7. தர்மபுரி .. .. .. | 2,30,087 | 22,239 | 9 67 | 2,75,731 |
| 8. வேலூர் .. .. | 2,05,454 | 17,055 | 8·30 | 1,85,698 |
| 9. திருப்பத்தூர் .. .. | 1,87,298 | 18,741 | 10·01 | 1,77,491 |
| மொத்தம் .. | 23,35,110 | 2,08,847 | 8·94 | 24,27,400 |



### இணைப்பு 2—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1978–79. உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை. (டன்களில்.) | 1978–79. சர்க்கரை கட்டுமானம். (சதவீதத்தில்.) | 1979–80. அரவை செய்த கரும்பின் அளவு. | 1979–80. உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை. (டன்களில்.) | 1979–80. சர்க்கரை கட்டு மானம். (சதவீதத் தில்.) |
|---|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) | (10) |
| I. கூட்டுறவுத் துறை· | | | | | |
| 1. ஆம்பூர் .. .. .. | 29,426 | 9·28 | 1,19,194 | 12,344 | 10·36 |
| 2. மதுராந்தகம் .. .. | 23,583 | 8·76 | 1,48,968 | 13,897 | 9·33 |
| 3. அமராவதி .. .. .. | 20,391 | 8·63 | 70,080 | 5,654 | 8·07 |
| 4. சேலம் .. .. .. | 38,878 | 8·43 | 3,67,956 | 32,608 | 8·36 |
| 5. கள்ளக்குறிச்சி .. .. | 20,455 | 7·70 | 1,51,294 | 13,700 | 9·05 |
| 6. நேஷனல் .. .. .. | 20,298 | 8·48 | 1,84,780 | 17,232 | 9·33 |
| 7. தர்மபுரி .. .. .. | 26,457 | 9·60 | 1,93,309 | 19,590 | 10·15 |
| 8. வேலூர் .. .. .. | 15,953 | 8·61 | 1,33,967 | 12,524 | 9·35 |
| 9. திருப்பத்தூர் .. .. | 17,667 | 9·95 | 1,11,304 | 11,674 | 10·49 |
| மொத்தம் .. | 2,13,108 | 8·78 | 14,80,852 | 1,39,223 | 9·40 |

இணைப்பு 2—[illegible]

தமிழ்நாடு [illegible] ரை ஆலைகள் அரைவை செய்த கரும்பின் அளவு, சர்க்கரை உற்பத்தி மற்றும் சர்க்கரை கட்டுமானம் குறித்த விவரங்கள்.

| தொடர் எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1977–78. அரைவை செய்த கரும்பின் அளவு. | 1977–78. உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை. (டன்களில்.) | 1977–78. சர்க்கரை கட்டுமானம். (சதவீதத்தில்.) | 1978–79. அரைவை செய்த கரும்பின் அளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **II. தனியார் துறை.** | | | | |
| 10. இ.ஐ.டி. பாரி .. .. | 5,68,999 | 36,949 | 6·49 | 4,42,783 |
| 11. காவேரி * .. | 1,47,186 | 12,864 | 8·74 | 1,69,183 |
| 12. டெக்கான் .. .. | 3,60,526 | 30,323 | 8·41 | 3,92,802 |
| 13. சவுத் இந்தியா .. .. | 3,18,517 | 27,600 | 8·67 | 2,76,540 |
| 14. அருணா .. .. .. | 4,34,549 | 35,962 | 8·28 | 3,25,380 |
| 15. சக்தி .. .. .. | 3,66,487 | 33,883 | 9·24 | 8,01,653 |
| 16. மதுரா .. .. .. | 83,282 | 7,360 | 8·84 | 1,07,818 |
| 17. கோத்தாரி .. .. .. | 2,67,382 | 22,664 | 8·48 | 2,34,507 |
| 18. திருஆரூரான் .. .. | 2,23,742 | 19,621 | 8·77 | 2,19,084 |
| மொத்தம் .. | 27,70,670 | 2,27,226 | 8·20 | 29,69,756 |
| **III. பொதுத் துறை.** | | | | |
| 19. தஞ்சாவூர் .. .. | 2,18,674 | 19,410 | 8·88 | 1,83,349 |
| 20. பெரம்பலூர் .. .. | 1,41,383 | 13,000 | 9·20 | 1,87,497 |
| மொத்தம் .. | 3,60,057 | 32,410 | 9·00 | 3,70,846 |
| தமிழ்நாடு பெரு மொத்தம் .. | 54,65,837 | 4,68,483 | 8·57 | 57,67,996 |

* இந்த ஆலை 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் மத்திய அரசின் பொறுப்பில் உள்ளது.



இணைப்பு 2—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1978–79. உற்பத்தி செய்ய பட்ட சர்க்கரை. (டன்களில்.) | 1978–79. சர்க்கரை கட்டுமானம். (சதவீதத்தில்) | 1979–80. அரவை செய்த கரும்பின் அளவு, | 1979–80. உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை. (டன்களில்) | 1979–80. சர்க்கரை கட்டு மானம். (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) | (10) |
| **II. தனியார் துறை** | | | | | |
| 10. இ.ஐ.டி. பாரி .. .. | 34,621 | 7·82 | 3,91,971 | 31,731 | 8·10 |
| 11. காவேரி * .. .. | 12,696 | 7·50 | 1,72,386 | 13,539 | 7·85 |
| 12. டெக்கான் .. .. | 32,509 | 8·28 | 2,45,498 | 21,220 | 8·64 |
| 13. சவுத் இந்தியா .. .. | 21,962 | 7·94 | 1,94,431 | 16,659 | 8·55 |
| 14. அருணா .. .. .. | 29,275 | 9·00 | 2,73,373 | 25,824 | 9·45 |
| 15. சக்தி .. .. .. | 66,528 | 8·30 | 5,90,589 | 52,451 | 8·88 |
| 16. மதுரா .. .. .. | 8,457 | 7·84 | 1,03,321 | 8,154 | 7·89 |
| 17. கோத்தாரி .. .. .. | 19,695 | 8·40 | 2,10,726 | 18,830 | 8·94 |
| 18. திருஆரூரான் .. .. | 18,972 | 8·66 | 1,33,180 | 12,870 | 9·66 |
| மொத்தம் .. | 2,44,715 | 8·24 | 23,15,475 | 2,01,278 | 8·69 |
| **III. பொதுத் துறை** | | | | | |
| 19. தஞ்சாவூர் .. .. | 16,794 | 9·16 | 1,27,511 | 11,813 | 9·26 |
| 20. பெரம்பலூர் .. .. | 16,923 | 9·03 | 1,54,337 | 14,744 | 9·55 |
| மொத்தம் .. | 33,717 | 9·ʋ9 | 2,81,848 | 26,557 | 9·42 |
| தமிழ்நாடு பெரு மொத்தம் .. | 4,91,540 | 8·52 | 40,78,175 | 3,67,058 | 9·00 |

## இணைப்பு 3

தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் 1975–76 முதல் 1980–81வரையில் கரும்பு விலை குறித்த அறிக்கை.

(டன் ஒன்றுக்கு விலை —ரூபாயில்.)

| தொடர் எண்ணும் சர்க்கரை ஆலையின் பெயரும். | 1975–76 மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த அளவு கரும்பு விலை. | 1975–76 மத்திய அரசு நிர்ணயித்த சட்ட பூர்வ இறுதி விலை. | 1975–76 ஆலைகள் கொடுத்த விலை. | 1976–77 மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த அளவு கரும்பு விலை. | 1976–77 மத்திய அரசு நிர்ணயித்த சட்ட பூர்வ இறுதி விலை. | 1976–77 ஆலைகள் கொடுத்த விலை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 ஆம்பூர் .. | 99.00 | 105.43 | 114.00 | 102.00 | 107.71 | 117.00 |
| 2 மதுராந்தகம் .. | 99.00 | 106.16 | 114.00 | 100.00 | 103.70 | 115.00 |
| 3 அமராவதி .. | 85.00 | 94.25 | 100.00 | 90.00 | 94.80 | 110.00 |
| 4 சேலம் .. | 93.00 | 101.32 | 108.00 | 95.00 | 101.69 | 110.00 |
| 5 கள்ளக்குறிச்சி .. | 92.00 | 100.60 | 107.00 | 94.00 | 100.23 | 109.00 |
| 6 நேஷனல் .. | 92.00 | 106.90 | 107.00 | 101.00 | 107.12 | 116.00 |
| 7 தர்மபுரி .. | 104.00 | 112.81 | 119.00 | 100.00 | 106.33 | 119.00 |
| 8 வேலூர் .. | .. | .. | .. | 85.00 | 89.30 | 117.00 |
| 9 திருப்பத்தூர் .. | .. | .. | .. | 85.00 | 89.40 | 117.00 |
| 10 உளுந்தூர்ப்பேட்டை | .. | .. | .. | .. | .. | .. |

## இணைப்பு 3

தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் 1975-76 முதல் 1980-81 வரையில் கரும்பு விலை குறித்த அறிக்கை.

(டன் ஒன்றுக்கு விலை—ரூபாயில்)

| தொடர் எண்ணும் சர்க்கரை ஆலையின் பெயரும். | 1975-76 மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த அளவு கரும்பு விலை. | 1975-76 மத்திய அரசு நிர்ணயித்த சட்ட பூர்வ இறுதி விலை. | 1975-76 ஆலைகள் கொடுத்த விலை. | 1976–77 மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த அளவு கரும்பு விலை | 1976–77 மத்திய அரசு நிர்ணயித்த சட்ட பூர்வ இறுதி விலை. | 1976–77 ஆலைகள் கொடுத்த விலை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| தனியார் துறை : | | | | | | |
| 11 இ.ஐ.டி. பாரி .. | 88.00 | 94.41 | 103.00 | 85.00 | 90.57 | 100.00 |
| 12 டெக்கான் .. | 92.00 | 94.92 | 107.00 | 94.00 | 99.43 | 110.00 |
| 13 சவுத் இந்தியா | 90.00 | 101.62 | 101.62 | 93.00 | 99.13 | 100.00 |
| 14 அருணா .. | 94.00 | 103.66 | 110.00 | 95.00 | 100.30 | 113.00 |
| 15 சக்தி .. .. | 92.00 | 99.73 | 107.00 | 96.00 | 101.84 | 111.00 |
| 16 மதுரா .. .. | 85.00 | 86.63 | 100.00 | 89.00 | 94.15 | 100.00 |
| 17 கோத்தாரி .. | 94.00 | 103·98 | 105.00 | 99.00 | 103.70 | 105.00 |
| 18 திருஆருரான் .. | 87.00 | 97.81 | 97.81 | 94.00 | 98.67 | 100.00 |
| 19 பாலார்.. .. | 85.00 | .. | .. | .. | .. | .. |
| பொதுத் துறை : | | | | | | |
| 20 அறிஞர் அண்ணா | .. | .. | .. | 94.00 | 99.93 | 110.00 |
| 21 ஜவஹர்லால் நேரு | .. | .. | .. | .. | .. | .. |
| மத்திய அரசின் பொறுப்பு : | | | | | | |
| 22 காவேரி ** .. | 85.00 | 88.37 | 100.00 | 91.00 | 95.95 | 105.00 |

* இந்த ஆலை 1978-79-ம் ஆண்டு பருவத்திற்கு ரூ. 113-00 கரும்பு விலையாக கொடுத்தது.

** இந்த ஆலை பிப்ரவரி 1979 முதல் மத்திய அரசின் பொறுப்பிலுள்ளது.

## இணைப்பு-3

**தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் 1975-76 முதல் 1980-81 வரையில் கரும்பு விலை குறித்த அறிக்கை.**

| | 1977–78 | | | 1978–79 | | |
|---|---|---|---|---|---|---|
| | மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த அளவு கரும்பு விலை. | மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த அளவு இறுதி விலை. | ஆலைகள் கொடுத்த விலை. | மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த அளவு கரும்பு விலை. | மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ இறுதி விலை. | ஆலைகள் கொடுத்த விலை. |
| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| கூட்டுறவுத் துறை : | | | | | | |
| 1 ஆம்பூர் .. .. | 100.00 | 100.00 | 127.00 | 115.30 | 115.30 | 115.30 |
| 2 மதுராந்தகம் .. | 99.00 | 100.10 | 115.00 | 112.90 | 112.90 | 112.90 |
| 3 அமராவதி .. | 85.00 | 86.00 | 125.00 | 103.50 | 103.50 | 103.50 |
| 4 சேலம் .. | 92.00 | 94.44 | 125.00 | 110.60 | 110.60 | 110.60 |
| 5 கள்ளக்குறிச்சி .. | 92.00 | 92.00 | 114.00 | 100.00 | 100.00 | 100.00 |
| 6 நேஷனல் .. | 87.00 | 87.62 | 116.00 | 114.10 | 114.10 | 114.10 |
| 7 தர்மபுரி .. | 99.00 | 103.62 | 120.00 | 120.00 | 120.00 | 120.00 |
| 8 வேலூர் .. | 85.00 | 92.40 | 127.50 | 108.20 | 108.20 | 108.20 |
| 9 திருப்பத்தூர் .. | 91.00 | 99.36 | 127.50 | 122.40 | 122.40 | 122.40 |
| 10 உளுந்தூர்ப்பேட்டை | .. | .. | .. | .. | .. | — |
| தனியார் துறை : | | | | | | |
| 11 இ.ஐ.டி. பாரி .. | 85.00 | 85.49 | 100.00 | 100.00 | 100.00 | 100.00 |
| 12 டெக்கான் .. | 90.00 | 92.05 | 115.00 | 103.50 | 103.50 | 103.50 |
| 13 சவுத் இந்தியா .. | 89.00 | 91.72 | 100.00 | 103.50 | 103.50 | 103.50 |

| | 1977–78. | | | 1978–79. | | |
|---|---|---|---|---|---|---|
| | மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த அளவு கரும்பு விலை. | மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ இறுதி விலை. | ஆலைகள் கொடுத்த விலை. | மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ குறைந்த அளவு கரும்பு விலை. | மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ இறுதி விலை. | ஆலைகள் கொடுத்த விலை. |
| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 14 அருணா .. | 87.00 | 90.17 | 100.00 | 103.50 | 103.5 | 103.50 |
| 15 சக்தி .. .. | 85.00 | 91.02 | 115.00 | 112.90 | 112.90 | 112.90 |
| 16 மதுரா .. .. | 85.00 | 87.84 | 100.00 | 107.10 | 107.10 | 107.10 |
| 17 கோத்தாரி .. | 90.00 | 96.69 | 106.00 | 102.40 | 102.40 | 102.40 |
| 18 திருஆரூரான்* .. | 92.00 | 98.58 | 100.00 | 104.70 | 104.70 | 104.70 |
| 19 பாலார் .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| பொதுத் துறை : | | | | | | |
| 20 அறிஞர் அண்ணா | 89.00 | 96.13 | 115.00 | 105.90 | 105.90 | 105.90 |
| 21 ஜவஹர்லால் நேரு | 85.00 | 87.79 | 115.00 | 118.80 | 118·80 | 118.80 |
| மத்திய அரசின் பொறுப்பு : | | | | | | |
| 22 காவேரி ** .. | 85.00 | 85.06 | 105.00 | 107.10 | 107.10 | 107.10 |

* இந்த ஆலை 1978–79-ம் பருவத்திற்கு ரூ. 113·00 கரும்பு விலையாக கொடுத்தது.

** இந்த ஆலை பிப்ரவரி 1979 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் பொறுப்பிலுள்ளது.

| | 1979–80. | | | 1980–81. | |
|---|---|---|---|---|---|
| | மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த அளவு கரும்பு விலை. | மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ இறுதி விலை. | ஆலைகள் கொடுத்த விலை. | மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ குறைந்த அளவு கரும்பு விலை. | மாநில அரசு பரிந்துரைத்த விலை. |
| (1) | (14) | (15) | (16) | (17) | (18) |
| கூட்டுறவுத் துறை. | | | | | |
| 1 ஆம்பூர்.. .. | 139.70 | மத்திய அரசின் இறுதி விலை நிர்ணயம் செய்வது பரிசீலனையில் உள்ளது. | 149.70 | 159.10 | 214.10 |
| 2 மதுராந்தகம் .. | 135.30 | டிட்டோ | 145.30 | 146.80 | 197.60 |
| 3 அமராவதி .. | 127.90 | டிட்டோ | 137.90 | 130.00 | 175.00 |
| 4 சேலம் .. | 130.90 | டிட்டோ | 140.90 | 140.70 | 189.40 |
| 5 கள்ளக்குறிச்சி | 125.00 | டிட்டோ | 135.00 | 140.70 | 189.40 |
| 6 நேஷனல் .. | 130.90 | டிட்டோ | 140.90 | 143.80 | 193.50 |
| 7 தர்மபுரி .. | 150.00 | டிட்டோ | 160.00 | 157.50 | 212.10 |
| 8 வேலூர் .. | 129.40 | டிட்டோ | 139.40 | 146.80 | 197.60 |
| 9 திருப்பத்தூர் .. | 150.00 | டிட்டோ | 160.00 | 160.00 | 216.20 |
| 10 உளுந்தூர்பேட்டை | .. | டிட்டோ | .. | 139.20 | .. |
| தனியார் துறை : | | | | | |
| 11 இ.ஐ.டி. பாரி .. | 125.00 | டிட்டோ | 135.00 | 136.10 | 183.20 |
| 12 டெக்கான் .. | 129.40 | டிட்டோ | 139.40 | 134.60 | 181.20 |
| 13 சவுத் இந்தியா .. | 125.00 | டிட்டோ | 135.00 | 131.50 | 177.10 |
| 14 அருணா .. | 138.20 | டிட்டோ | 148.20 | 148.40 | 199.70 |
| 15 சக்தி .. .. | 132.40 | டிட்டோ | 142.40 | 140.70 | 189.40 |
| 16 மதுரா .. .. | 125.00 | டிட்டோ | 135.00 | 130.00 | 175.00 |
| 17 கோத்தாரி .. | 132.40 | டிட்டோ | 142.40 | 142.20 | 191.50 |
| 18 திருஆரூரான் .. | 135.30 | டிட்டோ | 145.30 | 151.40 | 203.80 |
| 19 பாலார்.. .. | .. | டிட்டோ | .. | .. | .. |
| பொதுத்துறை : | | | | | |
| 20 அறிஞர் அண்ணா | 135.40 | டிட்டோ | 145.30 | 145.30 | 195.60 |
| 21 ஜவஹர்லால் நேரு | 133.80 | டிட்டோ | 143.80 | 148.10 | 199.70 |
| மத்திய அரசின் பொறுப்பு : | | | | | |
| 22 காவேரி ** .. | 127.90 | டிட்டோ | 137.90 | 137.60 | 185.30 |

** இந்த ஆலை பிப்ரவரி 1979 முதல் மத்திய அரசின் பொறுப்பிலுள்ளது.

இணைப்பு

நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்.

நலிவுற்ற தொழில் நிறுவனங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் இயங்குவதற்கு உதவும் வகையில் அரசு 1969-ம் ஆண்டு தமிழ் நாடு நிவாரண உதவி பெறுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் விதிகளின்கீழ் அந்நிறுவனங்களுக்கு உதவிகளை அளித்து வருகிறது.

மீண்டும் தனித்தியங்கும் அளவிற்கு புத்துயிர் பெறுவதற்கான திட்டங்களை வைத்துள்ள நலிவுற்ற தொழில் நிறுவனங்களை அவற்றிற்கு கடன் கொடுத்தவர்கள் அவைகளை கலைப்பதற்கான (Liquidation) நடவடிக்கைகள் எடுப்பதைத் தவிர்க்கும் பொருட்டு அரசு 1969-ம் ஆண்டு தமிழ்நாடு நிவாரண உதவி பெறுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் கீழ் தகுந்த பாதுகாப்பு அளிக்கிறது. இத்தகைய பாதுகாப்பை தற்போது பின்வரும் நிறுவனங்கள் அனுபவித்து வருகின்றன :—

(1) ஓமேகா கேபிள்ஸ் லிமிடெட், சென்னை.

(2) லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட், தொடம்பட்டி, தருமபுரி.

(3) இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை.

(4) சதர்ன் ஸ்விட்சியர் லிமிடெட், சென்னை.

(5) காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், புதுக் கோட்டை.

(6) சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், இராமநாத புரம்.

(7) மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை.

(8) சவுத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற் சாலை, சேலம்.

(9) பிரிமியர் பர்டிலைசர்ஸ் லிமிடெட், சென்னை.

(10) தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட். ஓசூர்.



அரசு பின்வரும் நிறுவனங்களுக்கு அவற்றின் நடைமுறை லதனத்திற்காக வங்கிகள் வழங்கிய கடன்களுக்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது:—

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மதுரை ஸ்பின்னிங் மில்ஸ், கோயம்புத்தூர். | 30.00 |
| 2. | ஜனார்த்தனா மில்ஸ் லிமிடெட், கோயம் புத்தூர். | 38.00 |
| 3. | மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை. | 55.00 |
| 4. | லோட்டஸ் மில்ஸ் லிமிடெட், கோயம் புத்தூர். | 75.00 |
| 5. | காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை. | 132.71 |
| 6. | இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை. | 47.00 |
| 7. | சவுத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற்சாலை, சேலம். | 14.35 |

நலிவுற்ற தொழிற் பிரிவுகள் விற்பனை வரி பாக்கிகளையும். பயன் படுத்திய மின்சாரத்திற்கான கட்டணங்களையும் சுலபத் தவணைகளில் கட்டவும் அரசு அனுமதி வழங்குகிறது. இத் தொழிற் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருள்களை மத்திய அரசு மாநில அரசு நிறுவனங்கள் முதலியவற்றிற்கு விற்பனை செய்ய அரசு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவி செய்கின்றது.

டிராக் தொழிற்சாலை:

இந்த நிறுவனம் தமிழ்நாடு நிவாரண உதவி பெறுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டம் 1969-ன் கீழ் மே திங்கள் 1980 வரை பாதுகாப்பு பெற்று வந்தது. இந்த நிறுவனம் 12-1-1980 முதல் மூடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தை புனரமைப்பதற்கான முயற்சி பரிசீலனையில் உள்ளது.

சவுத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற்சாலை சேலம்:

கண்ணாடி குவளைகள், கூஜாக்கள் மற்றும் விளக்குகள் உற்பத்தி செய்து வந்த இந்நிறுவனம் 10-12-1976 முதல் நிதி இடர்பாடுகள் காரணமாக மூடப்பட்டது. இதனால் 500 தொழி

லாளர்கள் வேலை இழந்தனர். இந்நிறுவனத்தை மறுபடியும் திறப்பதற்காக இதை ஒரு நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக 14—10—1977 முதல் அளிக்கப்பட்டு 13—10—1981 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்கு தொழில் மூலதனத்திற்காக இந்தியன் வங்கி வழங்கியுள்ள ரூ. 14,35 இலட்சங்களுக்கு மாநிலஅரசு உத்திரவாதம் அளித்துள்ளது. அரசு இந்நிறுவனத்தின் நெறியாளர் குழுவை மாற்றி அமைத்து அதில் தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட்டின் முன்னாள் நிர்வாக இயக்குநர் திரு. பி. எஸ். மேனன், மற்றும் தொழில்துறை இணை செயலாளரையும் பிரதிநிதிகளாக நியமித்துள்ளது. அரசு எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக 26—10—1980 முதல் இந்நிறுவனம் திறக்கப்பட்டு, முதல் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. 400 தொழிலாளர்கள் வேலையில் மீண்டும் அமர்த்தப்பட்டுள்ளனர்,

திருவாளர்கள் இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட்

திருவாளர்கள் இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட் நிறுவனம் கம்பெனி சட்டம் 1956 விதிகளின்படி 1963-ம் ஆண்டு ஜூலை திங்கள் 15-ம் நாள் முதல் பொது நிறுவனமாக நிர்மாணிக்கப்பட்டது. 1966—67-ம் ஆண்டில் நிறுவனம் தனது வணிக உற்பத்தியை தொடங்கியது. 13-9-74 வரை தொடர்ந்து செயல்பட்டு வந்தது. நிறுவனம் செயல்பட முடியாமல் ஏற்பட்ட பல சிரமங்களினால் 7—12—1977 வரை மூடப்பட்டிருந்தது. தமிழக அரசு தமிழ்நாடு மின்சார வாரியம், வேறுபல நிதி நிறுவனங்கள், இந்திய தொழில் புனரமைப்பு கழகம் (Industrial Reconstruction Corporation of India Ltd.) ஆகிய நிறுவனங்களின் நல்ல ஒத்துழைப்புடன் திருவாளர்கள் பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தின் நிர்வாக உதவியுடனும் இந்நிறுவனம் 8—12—1977 முதல் மீண்டும் செயல்படத் துவங்கியது. மேலும் இந்நிறுவனம் தமிழ்நாடு நிவாண உதவிபெறுகிற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் கீழ் 21—9—1973 முதல் 12 மாதங்கள் வரை நலிவுற்ற தொழில் நிறுவனமாக அரசால் அறிவிக்கப்பட்டது. நலிவுற்ற தொழில் நிறுவனமாக அறிவிக்கப்பட்ட காலவரம்பு அப்போதைக்கப்போது இவ்வரசால் நீட்டிக்கப்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் நலிவுற்ற நிறுவனமாக தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

திருவாளர்கள் சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட்

திருவாளர்கள் சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட் என்ற நிறுவனம் 1965 முதல் இங்கிலாந்து நாட்டின் பிரஸ் எலக்டிரிக்கல்ஸ் என்ஜினியரிங் கம்பெனி லிமிடெட் (Mess s Brush Electrical Engineering Company Ltd. UK) என்ற நிறுவனத்தின் ஒத்துழைப்பில் அம்பத்தூரில் உள்ள தொழிற்பேட்டையில் உயர் அழுத்த



அழுத்த குறைந்த அழுத்தமுள்ள ஸ்விட்ச்கியர்களைத் தயாரித்து வருகிற இந்நிறுவனம் அதிக நட்டத்தில் இயங்கி வந்ததால் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா இந்நிறுவனத்திற்கு நடைமுதல் தேவைக்கு அளித்து வந்துள்ள நிதி உதவியை நிறுத்திக்கொண்டது இந்நிறுவனம் 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் தேதி முதல் மூடப்பட்டிருந்தது. இந்நிறுவனத்தை 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் தேதி முதல் ஓர் ஆண்டுக்கு ஒரு நலிவுற்ற நிறுவனமாக அறிவிக்கப்பட்டது. இதன் கால வரம்பை 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் தேதி வரை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள், நடத்தி பாரத் ஹெவி எலக்டிரிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனம் (BHEL) அளித்த தொழில் நுட்ப பொருளாதார வாய்ப்புகள் அறிக்கையினை ஆதாரமாகக் கொண்டு பம்பாய் பாரத் ஸ்டேட் வங்கியின், வணிக வங்கிப் பிரிவு 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நிறுவனத்தை புனரமைக்கப்பட வேண்டிய நிதி நிலையை அரசுக்கு சமர்ப்பித்தது, இதனை 1980 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் நிறுவனத்தின் பெரும் கடன்காரர்களின் பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது. அதுஅரசின் பரிசிலனையில் உள்ளது.

தற்போது தொழிற்சாலையில் பணியாற்றுவோர் எண்ணிக்கை 500 ஆகும். இதுதவிர மேலும் 500 நபர்கள் துணை ஒப்பந்தக்காரர்கள் மூலமாக மறைமுகமாக வேலை வாய்ப்பினை பெற்றிருக்கிறார்கள்.

1978—79 ஆம் ஆண்டில் நிறுவனம் 5½ மாதங்கள்தான் இயங்கியது. ஆனால் 1979—80-ல் முழு ஆண்டும் தொழிற்சாலை நடைபெற்றது. 1979-80-ம் ஆண்டில் உற்பத்தி செய்த பொருள்களின் விற்பனை ரூ. 281.56 இலட்சம், ஆனால் 1978—79 ஆம் ஆண்டில் பொருள்களின் விற்பனை ரூ. 56.89 இலட்சம் ஆகும். 1979—80-ல் ரூ. 1.89 இலட்சம் மட்டும் லாபம் ஈட்டியுள்ளது. இது தொழிற்சாலைக்கு இதுவரை ஏற்பட்ட மொத்த நட்டமான ரூ. 217.85 இலட்சத்திற்கு சரி செய்து கொள்ளப்பட்டது. இந்நிறுவனம் வரும் ஆண்டில் தனது செயல் நிலை மேம்பாடு அடையும் என்று நம்புகிறது.

## தமிழ்நாட்டில் மைய அரசின் திட்டங்கள்.

தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிற மைய அரசுத் துறைத் திட்டங்கள் பற்றிய விவரங்களையும் வருங்காலத்தில் விரிவுபடுத்துவதற்காகத் தயாரித்துள்ள திட்டங்கள் குறித்து விவரங்களையும் தொடர்ந்து காணலாம்.

(1) உறுக்கலைத் திட்டம், சேலம்.—சேலம் உருக்காலை மைய அரசு நிறுவனமான இந்திய உருக்காலை நிறுவனத்தின் ஒரு பிரிவாகும். ரூ. 126.81 கோடி மதிப்பீட்டுச் செலவிலான முதல் கட்டத் திட்டத்தை செயற்படுத்த மத்திய அரசு 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஒப்புதல் வழங்கியது. வெளியேயிருந்து இரும்புப் பட்டைகளை வாங்கி ஆண்டு ஒன்றுக்கு 32,000 டன் துருப்பிடிக்காத உருக்குத் தகடுகளை இது உற்பத்தி செய்யும். சேலம் உருக்காலைத் திட்டத்தின் முதல் கட்டம் 1981 ஆம் அண்டு செப்டம்பரில் உற்பத்தியைத் தொடங்சுத் திட்ட மிடப்பட்டுள்ளது.

முதல் கட்டத்திற்குத் தேவைப்படும் கருவிகளில் பெரும் பாலானவை திட்டம் உள்ள இடத்திலேயே பெறப்பட்டுள்ளன. உருக்கு உற்பத்திக்கு முக்கியமான இயந்திரம் இந்த ஆண்டில் நிறுவப்பட்டது. ஏற்கனவே சுமார் 30 சதவீதம் எந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1980–81 ஆம் நிதி ஆண்டின் இறுதியில் எந்திரங்களில் பாதி நிறுவப்பட்டுவிடும்.

11,000 டன் கட்டுமானப் பொருள் அடங்கிய முதல் கட்டத்திற்கான கட்டுமானப் பணி முழுவதும் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு நிறுவனமான சதர்ன் ஸ்டரக்சுரல்ஸ் நிறுவனம் கட்டுமானப் பணியைத் திட்டமிட்டபடி முடிக்க குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றியுள்ளது.

எந்திரங்களை நிறுவும் பணியில் 90 சதவீதம் முடிவடைந் துள்ளது. எஞ்சிய பணி 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிவடைந்துவிடும்.

உருக்காலை நிர்வாகம் கேட்டுக் கொண்டபடி, நாளொன் றுக்கு நான்கு மில்லியன் காலன் நீர்கொண்டுசெல்லும் திறனுடன் பூலாம்பட்டியில் நீரேற்று நிலையங்களை நிறுவுவது உட்பட உருக்காலைக்கும், தலைப்பணிக்கும் காவிரி ஆற்றிலிருந்து 28 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய் அமைக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியத்தால் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ளது. சோதனை முறையில் நீர் கொண்டு செல்வது விரைவில் தொடங்கப்படும்.



உருக்காலைத் திட்டத்திற்குத் தேவைப்படும் 13 மெகாவாட் மின்சக்தியை வழங்க, சேலத்தில் உள்ள மின்தொகுப்பு நிலையத்திலிருந்து 110 கிலோவோல்டு இரட்டை மின்னோட்டக் கம்பிக்கு (இதனை தமிழ்நாடு மின்வாரியம் அமைத்து வருகிறது) 1981 பிப்ரவரிக்குள் மின்சக்தி வழங்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு அரசும் சேலம் உருக்காலை நிறுவனமும் கூட்டாகச் சேர்ந்து உருக்காலையையும் 7 ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையையும் இணைக்கும் 11.5 கிலோ மீட்டர் நீளமுள்ள நான்கு வழிச்சாலை அமைக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது; அதில் ஏற்கெனவே போக்கு வரத்து நடைபெற்று வருகிறது.

750 குடியிருப்புகள் பொதுவசதிகள் ஆகியவற்றுடன் உருக்காலைக்குப் பக்கத்தில் நவீன நகரியம் ஒன்று ஏற்படுத்துவது நிறைவேறி வருகிறது. குடியிருப்பு கட்டும் பணி இந்த ஆண்டில் தொடங்கியது. குடிநீர் வசதிகளும், கழிவு நீரகற்று வசதி களும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. தேவையான வசதிகளுடனே 150 குடியிருப்பு பிரிவுகள், 1981 செப்டம்பருக்குள் தயாராகி விடும்.

ஏறத்தாழ 4,000 தொழிலாளர்கள் தற்போது உருக்காலைப் பகுதியில் பணிபுரிந்து வருகின்றனர். உருக்காலையின் முதல் கட்ட நிலையில் இயக்கம் பராமரிப்பு நிர்வாகம் தொடர்பாக சுமார் 1,200 பேர் நியமிக்கப்படுவர். நிர்வாகப் பணியளார் அல்லாத சுமார் 1,000 பேர் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

இத்திட்டத்திற்காக இதுவரை ரூ. 100 கோடி ஏற்கனவே செலவிடப்பட்டுள்ளது. 1981 மார்ச்சு இறுதிக்குள் இத்திட்டம் குறித்து ரூ. 115 கோடி செலவிடப்படும் இதற்கு மூலதனச் செலவாக ரூ. 151 கோடி தற்போது செலவிடப்படும் இத் திட்டப்பணிக்கு தேவையான நிதி உதவியை 1981–82-ல் வழங்க மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

1981–82 ஆம் ஆண்டின் திட்டம்.—எந்திரங்களில் பெரும்பகுதி 1981 ஜூலைக்குள் நிறுவப்பட்டுவிடும். அதேபோன்று இன்றியமையாத வசதிகள் அனைத்தும் அந்நாளுக்குள் செய்து முடிக்கப்படும். எந்திரங்களைச் சோதனை முறையில் இயக்குவது 1981 ஜூன் முதல் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. சேலம் உருக்காலையிலிருந்து துருப்பிடிக்காத உருக்குத் தகடுகளின் முதல் தொகுதி திட்டமிட்டபடி 1981 செப்டம்பருக் குள் அங்காடியில் விற்பனைக்கு கிடைக்கும்.

## பழுப்பு நிலக்கரி நிறுவனம், நெய்வேலி.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 14-11-1956-ல் தொடங்கப்பெற்றது. இது திறந்த பழுப்பு நிலக்கரி சுரங்க பிரிவு, அனல் மின் உற்பத்திப் பிரிவு, உரத் தொழிற்சாலை மற்றும் சுட்ட அச்சுக்கரித் தொழில் கொண்ட ஒருங்கிணைந்த தொழிற்சாலைகள் பலவற்றைக்கொண்ட தொழில் தொகுதி ஆகும். பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் கிடைக்கும் வெண்மை நிற களிமண்ணைச் சுத்தப்படுத்த களிமண் சுத்திகரிப்பு தொழிற்சாலை ஒன்றும் உள்ளது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கத்தின் உற்பத்தித் திறனை ஆண்டு ஒன்றுக்கு 3.5 மில்லியன் டன்னிலிருந்து 6.5 மில்லியன் டன்னாக உயர்த்த பணிகள் நடந்து வருகின்றன. இப்பணிகள் இன்னும் இரண்டு அல்லது மூன்றாண்டுகளில் முடிந்துவிடும். 1980-81-ல் இதன் சாதனை, 1981-82 ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியவை கீழே விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளோம்:

### நாப்பாண்டின் செயல்திறன், உற்பத்தி மதிப்பு,

| | பொருள். | 1980 ஆம் ஆண்டு கணக்குகள் அளவு. | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1 | பழுப்பு நிலக்கரி எல்.டி. | 42 84 | 40,54.59 |
| 2 | மின்சக்தி (பழுப்பு நிலக்கரி மூலமாக) | 2,137.322 | 47,02.30 |
| | என்ணெய் | 501.229 | 31,81.20 |
| 3 | யூரியா டன் கணக்கில் (மெ யூ) | 1,28,803 | 32,62.58 |
| 4 | லிகோ (டன் கணக்கில்) | 54,727 | ...61 76 |
| 5 | தூய்மைப்படுத்தப்பட்ட களிமண் (டன் கணக்கில்) | 1,480 | 5.25 |
| 6 | பி.வி. களிமண் (டன் கணக்கில்) | 243 | 1.06 |
| | | | 15468.74 |



### அடுத்த ஆண்டு (ஏ) உற்பத்தித் திட்டம் 1981 ஆம் ஆண்டு திட்டம்.

| | பொருள் | அளவு | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பழுப்பு நிலக்கரி எல்.டி. | | |
| 2 | மின்சக்தி (பழுப்பு நிலக்கரி மூலமாக) | 55 30 | 5253.50 |
| | (என்ணெய் மூலமாக (மெ.யூ) | 2693.00 | 5769.14 |
| 3 | யூரியா (டன் கணக்கில்) | 147.00 | 1098.05 |
| 4 | லிகோ (டன் கணக்கில்) | ,31,500 | 3330.90 |
| 5 | தூய்மைப்படுத்தப்பட்ட களிமண் (டன் கணக்கில்) | 89,150 | 441.29 |
| | | 2475 | 9.16 |
| | பி.வி. களிமண் (டன் கணக்கில்) | 475 | 2.14 |
| | மொத்தம் .. | | 15904·18 |

### விரிவாக்கத் திட்டம்.

பின்வரும் புதிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

(அ) ஆண்டொன்றுக்கு 4.7 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கக்கூடிய இரண்டாவது சுரங்கம்.

(ஆ) 630 மெகாவாட் உற்பத்தித் திறன்கொண்ட இரண்டாவது அனல் மின் நிலையத்திட்டம் இத்திட்டங்களுக்கான பெரிய தளவாடங்களை வாங்கும் பணி நடைபெறுகின்றது.

அப்பகுதியில் வாழும் கிராம மக்கள் கிளர்ச்சி செய்ததால், தொடக்கப்பணியை நிறுத்தி வைக்குமாறு உள்ளூர் வருவாய் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் இரண்டாவது சுரங்கப் பகுதியின் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நிலப்பகுதிகளை கையகப்படுத்துவதில் ஏற்படும் காலதாமதத்தால் குறித்த காலத்தில் பணியை முடிப்பதும் காலத் தாழ்வையும் கையகப் படுத்தப்பட்ட நிலங்களிலிருந்து குடிசை வாசிகளையும், கிராமத் தவர்களையும் வெளியேற்றுவதில் ஏற்பட்ட இடர்பாடு காரணமாக இரண்டாவது அனல்மின் நிலையத்திற்கான இடத்தைத் தயாரிப்பதற்கான தொடக்கப் பணியில் காலத்தாழ்வு

ஏற்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் உதவியுடனும்
வருவாய்த்துறையின் உதவியுடனும், தமிழக அரசின் உதவியுடனும்
கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் பெரும்பகுதி, காலிசெய்து
பெறப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் தொடக்கப்பணிகள் நடந்து
வருகின்றன. ஆனால், விசைப்பலகைத் தளத்திலும் குளிர
வைக்கும் பகுதியிலுள்ள குடிசைகள் இன்னும் அகற்றப்படவில்லை
இச்சிக்கல்களின் காரணமாக உரிய காலத்தில் பணி முடியாத
நிலை ஏற்பட்டுள்ளது.

## எண்ணெய் தூய்மைபடுத்தும் ஆலை, சென்னை.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை 1965 ஆம் ஆண்டில்
தொடங்கப் பெற்று 1969-ம் ஆண்டில் உற்பத்தியை
தொடங்கியது. இவ்வாலை தொடங்கிய நாள் முதற்கொண்டு
இம்மாநிலத்திற்குத் தேவைப்படும் பெட்ரோலியம் பொருள்கள்
அனைத்தும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. மோட்டார்
ஸ்பிரிட், மண்ணெண்ணெய், உயர்வேக டீசல், குறைந்த எடை
யுள்ள டீசல் எண்ணெய் தார், எரி அடுப்பு எண்ணெய், லூபே
எண்ணெய், சமையலுக்குப் பயன்படும் வாயு, நாப்தா போன்ற
பெட்ரோலியப் பொருள்களும் இங்கு உற்பத்தி செய்யப்
படுகின்றன.

இவ்வாலையின் நிறுவுதிறன் மேற்சொன்ன 2.5 மில்லியன்
டன்களாக இருந்தது. உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குத்
தடையாக இருந்த செயல் முறைகள் நீக்கப்பட்டு சமநிலைப்
படுத்தும் கருவிகள் ஆகியவற்றை நிறுவியதன் மூலம் இவ்
உற்பத்தித் திறன் 2.8 மில்லியன் டன்களாக உயர்த்தப்
பட்டுள்ளது. இவ்வாலையின் உற்பத்தித் திறனை இருமடங்காக,
அதாவது ஆண்டொன்றிற்கு 5.6 மில்லியன் டன்களாக
வுயர்த்துவதற்கு திட்டமிட்டுள்ளது மேலும் ஆண்டொன்றிற்கு
20,000 டன்கள் வீதம் பாரபன் மெழுகு உற்பத்தி செய்யும்
தொழிற்சாலையை நிறுவவும் திட்டமிட்டுள்ளது. 1982 ஆம்
ஆண்டின் இறுதிக்குள் பாரபின் மெழுகுத் தயாரிப்புத் தொழிற்
சாலையை நிறுவும் பணியும் 1984 ஆம் ஆண்டின் இறுதிப்
பகுதிக்குள் எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையை விரிவாக்கும்
பணியும் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை இங்கு இயங்குவதால்
இம்மாநிலத்திற்கு அதிக வருவாய் கிடைக்கிறது. கடந்த 11
ஆண்டுகளில் இவ்வாலையில் தயாரிக்கப்பட்ட பெட்ரோலியப்
பொருள்கள் விற்பனை மீதான, விற்பனை வரித்தொகை
வழியாக இம்மாநிலத்திற்கு ரூ. 149 கோடி வருவாய் கிட்டி
யுள்ளது. தற்போதுள்ள விலை வீதத்தில், இக்கணக்கின்படி
ஆண்டொன்றுக்கு ரூ. 28 கோடி வருவாய் கிட்டுமென



மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இம் மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளுக்கும், ஏனைய நுகர்வோருக்கும், பெட்ரோலியம் பொருட்கள் தொடர்ந்தும், ஒரே சீராகவும் வழங்குவதற்கு வழி வகை செய்கிறது; இதனால் இம்மாநிலப் பொருளாதாரப் புழக்கம் சீரான நிலையில் இருந்து வருகின்றது.

தமிழ்நாட்டில் எண்ணெய் தூய்மைபடுத்தும் ஆலை நிறுவப்பட்டதனால் பெருமளவில் பல்வேறு துணைத் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு உதவியாக இது அமைந்துள்ளது. மேலும். இதனை அடுத்துள்ள பகுதிகளில் இயங்கும் இரசாயன உரத் தொழிற்சாலை, பெட்ரோலிய இரசாயனப் பொருள்கள் உற்பத்தி தொழிற்சாலை போன்றவற்றின் மூலப் பொருள்களை வழங்கும் நிறுவனமாகவும் இந்த ஆலை விளங்குகிறது. எண்ணெய் தூய்மைப்படுத்தும் இந்த ஆலையின் உற்பத்திப் பொருள்களைக் கொண்டு பல்வேறு பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இதனை அடுத்துள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நிறுவப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் சென்னை உரத் தொழிற்சாலை நிறுவனம், லூபே எண்ணெயை வீதாச்சார அடிப்படையில் கலக்குதல், பீப்பாய்கள் தயாரித்தல் போன்ற தொழில்களை மேற்கொண்டுள்ள இந்திய எண்ணெய்க் கழகம், மின் அழுத்தமாற்றி எண்ணெய் தயாரிக்கும் மெட்ராஸ் பெட்ரோலியம் லிமிடெட் போன்ற நிறுவனங்கள் குறிப்பிடத் தக்கவையாகும்.

## இரயில் பெட்டித் தொழிற்சாலை.

பெரம்பூரிலுள்ள இரயில் பெட்டி தொழிற்சாலை 1955 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதன் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கும் முழுமையாக முடிக்கப்பட்ட 750 இரயில் பெட்டிகளாகும். தொழிற்சாலை தொடங்கியதிலிருந்து 1981 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31 ஆம் நாள் வரை 14,509 வண்டிகூடுகளும், 12,539 பெட்டிகளும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன.

## நடப்பாண்டு உற்பத்தித் திட்டம் (1980-81)

நடப்பாண்டில் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரைப்பட்ட காலத்தில் 714 இரயில் பெட்டிகளைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றுள் ஏழு பெட்டிகள், குளுமை வசதிகளுடன் கூடிய முதல் வகுப்புப் பெட்டிகள்: குளுமை வசதிகளுடன் கூடிய இருக்கைகள் கொண்ட 20 பெட்டிகள்; குளுமை வசதிகள் செய்யப்பட்ட படுக்கை வசதிகளுடைய 28 பெட்டிகள்; ஐந்து விசைப் பெட்டிகள், எஞ்சியுள்ள பெட்டிகள் வாலாயமான பெட்டிகள், ஈ. எம். யூ பெட்டிகள் ஆகும். நடப்பாண்டில் 714 உள்நாட்டுப்பயணிகளுக்குப் பயன்படக் கூடிய பெட்டிகள் தயாரிக்கப்பட்டன. இவற்றின் மதிப்பு ரூ. 46.34 கோடியாகும்.

[1981 ஏப்ரல் 15

## அடுத்த ஆண்டில் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ள இரயில் பெட்டிகள். (1981–82)

அடுத்த ஆண்டில், இந்திய இரயில்பெட்டித் தொழிற்சாலையில் 720 இரயில் பெட்டிகள் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றுள் குளுமை வசதியுடன் கூடிய பெட்டிகள் அதிக எண்ணிக்கையிலும் 16 பெட்டிகள் கல்கத்தா பெருநகரத் திட்டத்திற்காகவும், எஞ்சியுள்ள பெட்டிகள் உள்நாட்டில் பயணிகளுக்கு உதவும் சாதாரணப் பெட்டிகளும் ஆகும். இரயில் பெட்டித் தொழிற்சாலை தற்போது, கல்கத்தா பெருநகர் திட்டத்திற்குத் தேவையான இரயில் பெட்டிகளின் வடிவமைப்பு; தயாரிப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. இது மிகவும் கடினமான பணியாகும். டைனமிக் பிரேக், எலக்ட்ரானிக் கார் கண்ட்ரோல் போன்ற மிகவும் முன்னேற்றமான சாதனங்கள் இவ்வண்டிகளில் பொருத்தப்பட்டுள்ளன. 1981–82 ஆம் ஆண்டுக் காலத்தில் நைஜீரியாவிற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்டு தடுப்புப் பொறி அமைக்கப்பட்ட 32 இரயில் பெட்டிகள் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் உற்பத்தி செய்யப்படவிருக்கும், இரயில் பெட்டிகளின் மதிப்பு ரூ. 51.48 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது.

### ஏற்றுமதியில் செயல்திறன்

இரயில் பெட்டித் தொழிற்சாலை 1967-ல் 2 மீட்டர் கேஜ் இரயில் பெட்டிகளை தாய்லாந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்து அது தனது ஏற்றுமதி வியாபாரத்தைத் துவக்கியது. தரமான 359 இரயில் பெட்டிகளும், 266 முழுமையாக முடிக்கப்பட்ட இரயில் பெட்டிகளும் பர்மா, தாய்வான், தாய்லாந்து, ஸாம்பினா தன்சானியா, பிலிப்பைன்ஸ், உகந்தா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் இந்நிறுவனம் அனைத்துலக புகழை பெற்றுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் 32 பிரேக்வான் நைஜீரியா நாட்டிற்கு அனுப்புவதற்காக தயார் செய்யதிட்டமிட்டுள்ளது. இந்நிறுவனம் ரூ. 22.28 கோடி மதிப்புள்ள ஏற்றுமதிக்கான ஆணைகளை ஏற்கனவே செயல்படுத்தியுள்ளது. மேலும் 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 2.94 கோடிக்கான ஆணைகளை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

### வருங்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ள விரிவாக்கம்.

இரயில் பெட்டி நிறுவனம், பெட்டிகள் கட்டும்திறனைஅடுத்து வரும் ஆண்டுகளில் மேலும் உயர்த்தக் கருதவில்லை. ஆயினும் உள்நாட்டுப் பயணிகள் பயணம் செய்யும் பெட்டி உற்பத்தித் திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு 750 பெட்டிகள் என்ற



1981 ஏப்ரல் 15]

வரையறைக்குள் குளிர் வசதி கொண்ட பெட்டிகள் பலவற்றை மேலும் உற்பத்தி செய்வதற்கான வசதிகளே ரூ. 2.28 கோடி செலவில் செய்து கொடுக்கத் திட்டமிட்டுள்ளது.

1981–82 ஆம் ஆண்டின் 'பணிகள் திட்டத்தில்' இந்திய இரயில் போக்குவரத்திற்குத் தேவையான குளுமை வசதிகளுடன் கூடிய இரயில் பெட்டிகள், மோட்டார் இரயில் பெட்டிகள், தயாரிக்கத் தேவைப்படும் கனரகப் பெட்டிகளைத் தயாரிப்பதற்கென ரூ. 48.00 கோடி செலவில் தனிப் பிரிவை நிறுவத் திட்டமிட்டுள்ளது.

இரயில் பெட்டி நிறுவனம் பெட்டிகள் தயாரிக்கத் தேவைப்படும் ஹெலிகல் சுருள் கம்பிகள் தயாரிக்கும் நவீன சுருள் கம்பிகள் பணிக்கலம் ஒன்றை நிறுவியுள்ளது. மண்டல இரயில்வேக்களின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு ஹெலிகல் சுருள் கம்பி உற்பத்தித் திறனை 25 சதவீதம் ரூ. 22.73 இலட்சம் செலவில் உயர்த்த விரிவாக்கத் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

### இந்திய மருந்து—மருந்துப் பொருள்கள் தயாரிப்பு நிறுவனம் :—

சென்னையிலுள்ள இந்தியன் மருந்து—மருந்துப் பொருள் தயாரிப்பு நிறுவனம் 1965 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தொடங்கப்பட்டது. ரூ. 496 இலட்சம் மூலதன முதலீட்டுடன் தொடங்கப்பட்ட இத்தொழிற்சாலையில் 1,156 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். தற்போது இத் தொழிற்சாலையிலுள்ள மூன்று முக்கியப் பிரிவுகள் வருமாறு :—

1 அறுவை சிகிச்சை கருவிகள் தயாரித்தல்.—தொழிற்சாலையில் கையினால் தயாரிக்கப்படும் அறுவைச் சிகிச்சை கருவிகளின் திறனைப் பயன்படுத்தி நடப்பு நிதியாண்டில் ரூ. 75 இலட்சம் மதிப்புள்ள கருவிகளைத் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் ரூ. 70 இலட்சம் மதிப்புள்ள கருவிகள் தயாரிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1981–82-ஆம் ஆண்டில் ரூ. 145 இலட்சம் மதிப்புள்ள கருவிகள்தயாரிக்க திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

(2) பொது பொறியியல் பிரிவு.—1979–80 ஆம் ஆண்டில் ரூ. 67.3 இலட்சம் மதிப்புள்ள கருவிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் ரூ. 95 இலட்சம் மதிப்புள்ள கருவிகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்க ஜனவரி வரை ரூ. 6[illegible] இலட்சம் மதிப்புள்ள கருவிகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு ரூ. 79 இலட்சம் மதிப்புள்ள கருவிகள் தயாரிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் ரூ. 25 இலட்சம் மதிப்புள்ள கருவிகள் தயாரிக்கப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்க ரூ. 16 இலட்சம் மதிப்புள்ள கருவிகள் தயாரிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1981 ஏப்ரல் 15

(3) மருந்து தயாரிப்பு தொழிற் பிரிவு.—ரூ. 92.42 இலட்சம் மூலதனத்துடன், சென்னையில், மருந்துத் தயாரிப்புத் தொழிற் பிரிவு ஒன்றைத் தொடங்க 1977 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஒப்புதலளிக்கப்பட்டது. இத்தொழிற் பிரிவில் மாத்திரைகள், உறை மாத்திரைகள், உள்ளுக்குச் சாப்பிடும் மருந்துகள், பொடி, ஊசி மருந்துடைய குப்பிகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலை கட்டி முடிக்கப்படுவதற்கு மூலதனச் செலவு ரூ. 105 இலட்சம் ஆகலாமென்று மதிப்பிடப்படுகிறது. ரூ. 500 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் பெரும்பான்மையான உற்பத்திப் பொருள்கள் தமிழ்நாடு அரசின் மருத்துவமனைகளின் தேவைகளை நிறைவு செய்யப் பயன்படுத்தப்படும்.

## பாரத கனரக மின்கருவித் தொழிற்சாலை

திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரத கனரக மின்கருவிக் தொழிற்சாலையில், உயர் அழுத்த கொதிகலன் தொழிற்சாலை, உருக்குக் குழாய் தொழிற்சாலை, இராணிப்பேட்டையில் அமைக்கப்பட்டு வரும் தொழிற்சாலை ஆகியவை அடங்கும். கொதி கலன்கள், கொதிகல நிலையத் துணைக் கருவிகள், வால்வுகள் இவற்றிற்கு வடிவமைப்பு, உற்பத்தி ஆகியவை குறித்து செக்கோசுலேவேகியா தொழில் நுட்ப வல்லுநர்களின் ஆலோசனை பெற்று 1963 ஆம் ஆண்டில் உயர் அழுத்த கொதிகலன் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. 'பெல்' நிறுவனம் தற்போது 210 எம். டபிள்யூ/500 எம். டபிள்யூ கொதிகலன்களைத் தயாரிக்கிறது. உயர் அழுத்த கொதிகலன் தொழிற்சாலையின் மொத்த முதலீடு ரூ. 62 கோடியாகும். இந்நிறுவனத்தில் 12,000-க்கும் அதிகமான தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். திருச்சியிலுள்ள 'பெல்' நிறுவனம் தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்தே, துணைப் பொருள் உற்பத்தித் திட்டத்தை வகுத்து வந்துள்ளது. இந்நிறுவனங்கள் இரண்டும் சேர்ந்து 11,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு அளித்து வருகிறது இந்நிறுவனம், ஆண்டுக்கு 4,000 எம். டபிள்யூ. அளவுக்கு உற்பத்தித் திறனை அதிகரித்து வருகிறது.

2. சுமார் ரூ. 30 கோடி முதலீட்டுடன் திருச்சியில் கொதிகலன் பாகங்கள் உற்பத்திக்கான கூடுதல் வசதிகள் நிறுவுவதன் மூலமும், விசிறிகள், எலக்ரோட்ரோஸ்டாடிக் பிரசிபிடேயர்கள் போன்ற துணைக் கருவிகளைத் தயாரிப்பதற்கு புதிய தொழிற்சாலை ஒன்று நிறுவுவதன் மூலமும் இந்நிறுவனம் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையில் ரூ. 22 கோடி முதலீட்டுடன் அமைக்கப்படும் இத்தொழிற்சாலையில் மொத்தம் 4,000 தொழிலாளர்கள் பணிப் புரிவர்.



3[1981 ஏப்ரல் 15

3. ரூபாய் 58.2 கோடி மூலதனச் செலவில் திருச்சியில் அமைக்கப்பட்ட பெல் நிறுவனத்தின் உருக்குக் குழாய் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு கொதிகலனுக்கேற்ற 40,000 டன உருக்கு குழாய்களை உற்பத்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்டதாகும். இத்தொழிற்சாலை பின் உற்பத்தித் திறனால் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 60 கோடி மதிப்புள்ள அயல்நாட்டுச் செலவானியை நமக்கு மிச்சமாகும்.

## இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட்

ஆண்டொன்றிற்கு 8,000 டெலிபிரிண்டர்ஸ் தயாரிக்கும் திறன் கொண்ட இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட், நிறுவனம் 1960 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அமைக்கப்பட்டது. தற்போது நம் நாட்டில், பலவகையான டெலிபிரிண்டர்களையும் அதனைச் சார்ந்த கருவிகளையும் உற்பத்தி செய்யும் நிறுவனம் இது ஒன்றேயாகும். 1980–81 ஆம் ஆண்டில், இந்நிறுவனம் 8,000 டெலிபிரிண்டர்களையும், ரூ. 75 இலட்சம் மதிப்புள்ள உதவிப் பாகங்களையும் உற்பத்தி செய்யும் இலக்குடன் செயல்பட்டு, 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலேயே இலக்கை இது மிஞ்சிவிட்டது. இவற்றின் விவரம் வருமாறு:—

| | 30–11–1980 வரை விதாச்சார இலக்கு. | 30–11–1980 வரையிலான கணக்குகள். |
|---|---|---|
| 1. டெலிபிரிண்டர்கள் எண்ணிக்கை. | 5,832 | 5,597 |
| 2. உதிரிப் பாகங்கள் (ரூபாய் இலட்சத்தில்.) | 53.32 | 72.42 |

ஓசூரிலுள்ள 'சிப்காட்' தொழில் தொகுதியில் மின் அணு டெலிபிரிண்டர்கள் தயாரிப்பதற்கான இந்நிறுவனத்தின் செயற் குறிப்புக்கு மத்திய அரசு ஏற்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கான மூலதன முதலீடு ரூ. 500 இலட்சம் ஆகும். இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்நிறுவனம் செய்து வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலம், மின்சாரம், சாலை, வீட்டு வசதிகளையும் மற்ற வசதிகளையும் தமிழக அரசு வழங்கும். பல் திறப்படுத்தும் திட்டத்தின் கீழ் முக்கியமான மின் தட்டச்சுப் பொறி, மின் அனு டெலிபிரின்டர்ஸ், கம்ப்யூட்டர் பெரிபெரல்ஸ், கணக்குப் பொறி போன்ற சாதனங்கள் உற்பத்தி செய்யப்படும்.

## இந்துஸ்தான் நிழற்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம்.

இந்துஸ்தான் நிழற்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் 1960 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. நிழற்படம் தொடர்பான பொருள்கள், திரைப்படத் தொழிலுக்கான கச்சாப் படச்சுருள், தேசிய சுகாதாரப் பணிகளுக்கான மருத்துவ X-கதிர் படச் சுருள், நிழற்படமெடுப்பதைத் தொழிலாகக் கொண்டிருப்போர், பொழுது போக்காகக் கொண்டவர் ஆகியோருக்கு நிழற்படச் சம்பந்தப்பட்ட பொருள்கள் ஆகியவற்றில் தன்னிறைவை அடைவதே இதன் நோக்கமாகும். இந்நிறுவனத்தின் தொடக்க மூலதன முதலீடு ரூ. 6.32 கோடியாகும். இது பின்னர் 1975 ஆம் ஆண்டில் ரூ. 16.32 கோடியாக உயர்த்தப்பட்டது. நிறுவனத்தின் பங்குத் தொகைகள் முழுவதும் மைய அரசால் வழங்கப்படுகிறது. இந்நிறுவனம் 1967 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் நிறுவு திறன் 6.15 மில்லியன் சதுர மீட்டர் அளவுக்குப் பலவகை நிழற்படச் சுருள்களைத் தயாரிப்பதாகும். உதகமண்டலத்திலும் அம்பததூரிலுமாக இரண்டு தயாரிப்புப் பிரிவுகள் தற்போது இந்நிறுவனத்தில் உள்ளன.

2. அம்பத்தூர் தொழிற் பிரிவில் 118 பேரும், நாடு முழுவதிலும் விற்பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள 316 பேர்களுமாக இந்நிறுவனத்தில் 3,000 பேர் பணி புரிகின்றனர். இப்பிரிவு 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 47 கோடி மதிப்புள்ள 10.154 மில்லியன் சதுர மீட்டர் அளவுள்ள நிழற்படச் சுருளைத் தயாரித்தது. இதனால் ரூ. 267 இலட்சம் ஆதாயம் கிட்டியுள்ளது. 1980–81, 1981–82 ஆம் ஆண்டுகளில் 11.00, 12.683 மில்லியன் சதுர மீட்டர் அளவு நிழற்படச் சுருள்களை முறையே ரூ. 65 கோடி, ரூ. 83.5 கோடி மதிப்பளவுக்குத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1979–80 ஆம் ஆண்டு வரையில் ஏற்றுமதி செய்யப்பட்ட நிழற்படச் சுருளின் மொத்த மதிப்பு ரூ. 200 இலட்சமாகும்.

## உரத் தொழிற்சாலை, சென்னை.

தொழிற்சாலை அமைப்பு ஒப்பந்தத்தின் கீழ் 1966 ஆம் ஆண்டில் சென்னை உரத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. இத் தொழிற்சாலை 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் வணிக உற்பத்தியைத் தொடங்கியது.

2. 1971 ஆம் ஆண்டில் தொடங்கியதிலிருந்து இத் தொழிற்சாலையின் உற்பத்தி சீராக உயர்ந்து வந்துள்ளது. தன் கொள் திறனில் மிக உயர்ந்த சதவீதத்தை இத்தொழிற்சாலை நிலைப்படுத்தியுள்ளது. திறனின் சதவீதப் பயன்பாடு வருமாறு :—





| | 1980–81. | |
|---|---|---|
| | ஏப்ரல்— டிசம்பர். | ஜனவரி. மார்ச்சு. |
| | (சதவீதத்தில்.) | |
| அமோனியா .. .. | 89 | 66 |
| மொத்த யூரியா .. .. | 95 | 67 |
| என்.பி.கே. காம்ப்ளக்ஸ் .. | 101 | 96 |

3. தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளா, மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியாகிய புதுச்சேரி ஆகியவை இத்தொழிற்சாலையின் முதன்மையான விற்பனை உட்பாகங்களாகும். மேலும், இத்தொழிற்சாலை மராட்டியம், மத்திய பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலும் தனது பொருள்களை விற்பனை செய்கிறது. இத்தொழிற்சாலையின் பொருள்கள் விஜய் என்ற பெயரில் விற்கப்படுகின்றன. சென்னை உர உற்பத்தித் தொழிற்சாலையில் 1980 ஆம் ஆண்டு இறுதியில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,146 ஆகும்.

4. பெரிதும் புகழ் வாய்ந்த அனைத்து நாட்டு நிறுவனங்களின் கடும் போட்டிக்கு இடையில் ஸ்ரீலங்கா அரசின் உரத் தயாரிப்புக் கழகத்துடன் இத்தொழிற்சாலை ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. தொழிற்சாலையை நடத்திப் பேணி வருவதற்கும், இயந்திரங்களை வணிக உற்பத்தியில் பயன்படுத்துவதற்கும், ஸ்ரீலங்கா தொழிற்சாலைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்குமாறும் சென்னை உரத் தொழிற்சாலையை நாடியுள்ளது. இந்த ஒப்பந்தம் மூன்றாண்டுக் காலத்திற்கு உரியதாகும். சென்னை உரத் தொழிற்சாலை தொழில் நுட்பப் பணியாளர்கள் 32 பேரை முகவையில் அங்கு அனுப்பியுள்ளது. இதற்குரிய நிர்வாக ஒப்பந்தம் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 11 ஆம் நாளன்று செய்யப்பட்டது. ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 3.5 கோடியாகும்.

## படைக்கலன் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி-16.

திருச்சிராப்பள்ளியில் உள்ள இப்படைக்கலன் தொழிற்சாலை 1966 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3 ஆம் நாள் தொடங்கப்பட்டது. 10 மணி நேர இரு முறை மாற்றுப் பணிகளில் 5,000 சிறு படைக் கலன்களை திங்கள் ஒன்றுக்கு உற்பத்தி செய்வது இதன் நிறுவு திறனாகும். இந்நிறுவனத்தில் ரூ. 8.58 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையில் தற்போது 2,707 அதிகாரிகளும், பணியாளர்களும், தொழிலாளர்களும் பணியாற்றுகின்றனர். 1980 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாளில் முடிவடையும் ஆண்டின் திட்ட இலக்கை முழுமையாக 100 சதவீதமாக இத்தொழிற்சாலை ஆரம்பித்துள்ளது. இதன் உற்பத்தியின் மொத்த மதிப்பு ரூ. 2.88 கோடியாகும். ஆட்படைக்கல ஊர்திகள் தயாரிக்கும் புதிய பிரிவை அமைப்பதற்கான செயற் குறிப்பு தயாரிக்கப்பட்டு மத்தியஅரசின்பரிசிலனையிலுள்ளது.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

வியாழக்கிழமை ,1981 ஏப்ரல் 16

சித்திரை 4, துன்மதி திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.''

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்களைச் செய்ய வேண்டும்.

1, வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

கோட்டூர் ஒன்றியம் தோட்டம் புது வாய்க்கால்
கிராமத்திற்கு மின் வசதி

* வினா எண். 755 திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோட்டூர் ஒன்றியத்தில், தோட்டம் புதுவாய்க்கால் கிராமத்திற்கு மின் விளக்கு போடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது போடப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) புதுவாய்க்கால் குடியிருப்பிற்கு மின் விளக்கு வேண்டுமென்று கோரி விண்ணப்பம் ஏதும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திலிருந்து வரவில்லை.

[1981 ஏப்ரல் 16

ஈரோடு பெருந்துறை வட்டங்களில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கும் திட்டம்

* வினா எண் 756 திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு ஊரக தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 'ஈரோடு' பெருந்துறை வட்டங்களில் புதிதாக கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைப்பது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) ஈரோட்டிலுள்ள தமிழ்நாடு பால் விற்பனை இணையத்தின் பதப்படுத்தும் நிலையத்தின் கொள்திறன் தினசரி 70,000 லிட்டர் மட்டுமே, ஈரோடு, பெருந்துறை, பவானி, கோபி வட்டங்களில் உற்பத்தியாகும் பால் தினசரி சராசரி 75,000 லிட்டராகும். பால் உற்பத்தி பால் பதப்படுத்தும் நிலையத்தின் கொள்திறனை விட அதிகமாக இருப்பதால் புதிய சங்கம் துவக்கும் கோரிக்கைகளை ஈரோடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் தற்போது ஏற்பதில்லை.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேட்டிருந்த போது பால் பவுடர் தொழிற்சாலை ஆரம்பித்தவுடன் புதிதாக அனுமதிப்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள்: இப்போது பால்பவுடர் தொழிற்சாலை வேலை செய்த பின்னும் அதற்குத் தடை இருக்கிற காரணத்தால் ஏற்கெனவே சொல்கிறபோது இடைத்தரகர்கள் பாலை வாங்கிக் கொள்ளையடிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது, ஆகவே அரசு அதைப் பரிசீலித்து மாற்று ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, ஈரோடு "கோபி வட்டாரங்களில் தற்போது கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் துவக்கப்படவில்லேயே தவிர இன்னும் இரண்டு மாதங்களில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல் சித்தோடு பகுதியிலே பால் பொடி தயாரிக்கும் தொழிற்சாலை வருகிற நேரத்திலே அதன் கொள்திறன் 1½ லட்சம் லிட்டராக இருக்கும். அருகிலே இருக்கிற சங்கரான்டம்பாளையம் சத்திய மங்கலம் ஆகிய இரண்டு ஊர்களிலும் 50 ஆயிரம் லிட்டர் பதனப்படுத்துகிற திறனுடைய நிலைமையும் வருகிற போது, ஆக மொத்தம் இரண்டும் சேர்த்து 2 லட்சம் லிட்டர் பால் பதனப்படுத்துகிற நிலைமை இரண்டு மாதங்களிலே ஈரோடு, பெருந்துறை ஆகிய வட்டாரங்களில் அப்போது ஏறத்தாழ 400 பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் துவங்க அரசு முடிவு செய்திருக்கிறது. அந்த 400 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் வருகிற போது 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் அதன் காரணமாக ஈரோடு, பெருந்துறை ஆகிய பகுதிகளிலே பலன் பெறுவார்கள்.



1981 ஏப்ரல் 16]

கொல்லிமலையில் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 757—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கொல்லிமலையில் சார்-பதிவாளர் அலுவலகம் ஒன்று அமைப்பது பற்றி அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, கொல்லிமலையிலே உள்ள பழங்குடி மக்கள் வாழுகின்ற பகுதிகள் 7 பஞ்சாயத்துக்கள் நாமக்கல் வட்டத்திலும் 7 பஞ்சாயத்துக்கள் ராசிபுரத்திலும் சேருகின்றன. அங்கே சார்பதிவாளர் அலுவலகம் சேந்தமங்கலத்திலும் நாமகிரிபேட்டையிலும் தான் இயங்குகின்றன. கொல்லிமலை வாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக தமிழக அரசு பல முயற்சிகளைச் செய்து வருகிறது. ஆகவே இனிமேலாவது அங்கே சார்பதிவாளர் அலுவலகத்தைத் திறக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, தற்போது கொல்லிமலை பகுதி வாழ் மக்களுக்கு சேந்தமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பணிகள் செய்யப்படுகின்றன. ஆனால் கொல்லிமலையில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட வேண்டுமென்று இதுவரைக்கும் அந்தப் பகுதி மக்களிடமிருந்து வராத காரணத்தினால் எந்தக் கருத்துருவும் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை வைத்துக் கொண்டு பரிசீலனை செய்து விரைவிலே துவக்குவதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 758, 759 மற்றும் 760 அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெறுகின்றன.

குன்னூர் இரயில்வே கேட் அருகில் பாலம் கட்டும் பணி.

* வினா எண் 714— திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குன்னூர் நுழைவாயிலான இரயில்வே கேட் சமீபத்தில் முழுமையாக போக்குவரத்து தடை செய்து பாலம் கட்டுவது எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

(ஆ) அதன் மதிப்பீட்டுத்தொகை எவ்வளவு?

(இ) எப்போது அந்த வேலை முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: (அ) 1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம்.

(ஆ) ரூ 5.00 இலட்சம்

(இ) இப்பணியை விரைவில் முடிப்பதற்கு எல்லாவித நடவடிக்கைகளும் போர்க் கால அடிப்படையில் எடுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே அந்தப் பாலத்தை ஒட்டி ஒரு பஸ் ஸ்டான்டு இருக்கிறது. அங்கே போக்குவரத்து நெருக்கடி அதிகமாக இருப்பதால் அதைப் புதுப்பித்து தரவேண்டும், அதே நேரத்தில் சமீபத்தில் அமைச்சர் அவர்கள் அந்த இடத்தை பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். அந்த பஸ் ஸ்டான்டு பாலத்தை புதுப்பிப்பதற்கு அரசு ஏதாவது திட்டம் வைத்துள்ளதா? அப்படி இருந்தால் அந்தத் திட்டத் தொகை எவ்வளவு? அது எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பாலத்தைப் பற்றியது. அந்தப் பாலம் 5 லட்சம் ரூபாயில் கட்டப்பட்டு வருகிறது அது உடனடியாக முடிக்கப்படும் நிலையில் இருக்கின்றது. பக்கத்திலே இருக்கிற பஸ் ஸ்டாண்டு புதுப்பிப்பதற்கு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. பழைய பஸ் ஸ்டான்டை புதுப்பிப்பதற்கு ஒரு கோடி ரூபாய்க்கு தேவையான திட்டமாக இருக்கின்றது. ஆனால் புதிதாக பஸ் ஸ்டான்டு நிறுவுவதற்கு ஏறத்தாழ 25 இலட்சம் ரூபாய்கள் தான் மதிப்பீடாகும். சமீபத்தில் ஊட்டி சென்ற நேரத்தில் இவைகளை எல்லாம் பார்வையிட்டு வந்திருக்கிறேன். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, இந்தக் குன்னூர் பாலம் தொடங்கி ஒரு வருடம் ஆகியும், இப்போது பாதி வேலைதான் முடிந்திருக்கின்றது. அது எப்போது முடிவடையும். இன்னும் ஒரிரு மாதங்களில் மழைக்காலம் வரப்போகின்றது. அதற்குள் இந்த வேலை முடிவடையுமா என்பதை அறிய விரும்புகிறேன்,





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட 2 நாட்களுக்கு முன் என்னுடன் வந்திருந்தார்கள். அந்தப் பால வேலை நடைபெற்று வருகின்றது. கண்டிப்பாக சீக்கிரத்தில் முடிக்கப்படும்.

வேலூர் பேருந்து நிலையத்தினை விரிவு படுத்துதல்.

* வினா எண் 715—திரு என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேலூர் பேருந்து நிலையத்தை விரிவு படுத்தும் வேலை எப்போது துவங்கும்? திட்ட மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: திட்டம் வேலூர் நகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சியினுடைய பெருக்கம் அளவுக்கு மீறி போகின்றது. நாள்தோறும் திருவிழாக் கூட்டம் போல மக்களுக்கு இடைஞ்சலாக இருக்கின்றது. எனவே உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அமைச்சர் ஆவன செய்வாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அந்தத் திட்டம்தான் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ப. சுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த பஸ் நிலையத்தில் நிறைய ஆட்கள் பல ஊர்களில் இருந்து வந்து போகின்ற நிலைமை இருக்கிறது. இது இந்த நகரத்தின் மையமாக இருக்கிற காரணத்தினால், அங்கே கழிப்பிடம் கூட இல்லாமல் மக்கள் ரோட்டிலே உட்காரக் கூடிய நிலை இருப்பதாலும், அதை உடனடியாக நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, 36 இலட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அது பரிசீலனையில் இருந்து வருகிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரமாக உள்ள வேலூரில் அந்தத் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் பரிசீலனையில் உள்ளது என்று சொல்லாமல், விரைவிலே நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிசீலனை பண்ணாமல் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும். அரசாங்கம் என்றால் பரிசீலனை செய்துதான் நடவடிக்கை எடுக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து நிலையங்களைக் கட்டுவதற்காக ஆகக்கூடிய செலவுகள் பூராவையும் அந்த நகராட்சிகள் ஏற்றுக் கொள்வதற்குப் பணம் இல்லை என்று சொன்னால், அரசாங்கம் கடனாகவாவது, அல்லது மானியமாகவாவது கொடுக்குமா? பல இடங்களில், மாவட்டத் தலைநகரங்களில் பஸ் ஸ்டாண்டு சரியாக இல்லாமல் இருக்கிற காரணத்தினால், அதனால் ஏற்படுகின்ற அசௌகரியங்களை முன்னிட்டு, இந்த ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப குழந்தைவேலு : தலைவரவர்களே, வளர்ந்து வருகின்ற ஜனத்தொகைக்குத் தக்கவாறு பஸ் நிலையங்களை எல்லாம் விரிவுபடுத்த வேண்டும் என்று நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலே பணிகள் நடைபெற்று வருகின்றன. அதிலும் குறிப்பாக எந்தெந்த நகராட்சிகளில் பணம் இல்லாமல் இருக்கின்றதோ அவைகளுக்கும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக கடன் வழங்கியாவது அவைகளைச் செய்ய முடியுமா என்பதற்காகத்தான் இந்தத் திட்டங்களை எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நகராட்சிகளாக இருந்தாலும் பேரூராட்சிகளாக இருந்தாலும் அவைகளுக்கும் கூட இதை விரிவுபடுத்துகின்ற வகையிலேதான் திட்டங்களை உருவாக்கி இருக்கிறோம்.

**இராமநாதபுரம் மாவட்ட அனைத்து ஒன்றியங்களையும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளுதல்.**

* வினா எண் 717—திரு. க.பாரமலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தர்மபுரி மாவட்டத்தைப் போன்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களையும் தன்னிறைவு திட்ட ஒன்றியங்களாக அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தர்மபுரி மாவட்டத்தில் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களை முதல் கட்டத்திலும் எட்டு ஒன்றியங்களை இரண்டாம் கட்டத்திலும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளன. அதே போன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களை முதல கட்டத்திலும், பதிமூன்று ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாம் கட்டத்திலும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளன. மற்ற ஒன்றியங்களும் அடுத்து வரும் ஆண்டுகளில் சேர்க்கப்படும்.



திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக கிழக்கு இராமநாதபுரம் என்பது எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லாத ஒரு பகுதியாகும். அந்தப் பகுதி வெறும் விவசாயத்தையே அதிலும் வானம் பார்த்து விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய ஒரு பகுதியாகும். ஆகவே கிழக்கு இராமநாதபுரத்தின் அத்தனை ஒன்றியங்களையும் உடனடியாக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்வதாக அறிவிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே மூலக்கேள்வி தர்மபுரி மாவட்டத்தைப்போல இராமநாதபுரம் மாவட்டத்தையும் முழுவதுமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கை பற்றியதுதான். ஆனால் ஏற்கெனவே தர்மபுரி மாவட்டத்தில் 16 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அவைகளில் இதுவரையில் 5 ஊராட்சி ஒன்றியங்கள் தன்னிறைவு அடைந்திருக்கின்றன. 8 ஊராட்சி ஒன்றியங்கள் இந்த ஆண்டிலே எடுத்துக்கொண்டிருக்கிறோம் ஆகவே இன்னும் 3 ஊராட்சி ஒன்றியங்கள் பாக்கி இருக்கின்றன. அதேபோல் இராமநாதபுரம் மாவட்டத்தில் 32 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன அதிலே 5 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 13 ஊராட்சி ஒன்றியங்கள் இந்த ஆண்டு எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 14 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்பட வேண்டும். ஆனால் எந்த எந்த இடங்களில் உள்ள ஒன்றியங்கள் வறட்சிப் பகுதியாக இருக்கின்றதோ அதற்கு முதலிடம் கொடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் எடுத்துக்கொள்ளப்பட்ட பல பஞ்சாயத்துக்களிலே எந்த வேலைகளும் செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எதை எந்த எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றிய கேள்விதான் இது. அங்கே செய்யப்படுகின்ற பணிகளைப் பற்றியெல்லாம் கேள்விகள் கேட்க வேண்டாம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நமது மாநிலத்தில் 150 ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. ஆனால் சென்ற ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்ட 69 ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்கெனவே அவை காலம் கடந்து எடுத்துக்கொள்ளப்பட்டதன் காரணத்தால் இன்னும் வேலைகள் பாக்கி இருக்கின்றன. என்னுடைய ஊராட்சி ஒன்றியத்திலே கூட அந்த நிலைமை இருக்

கின்றது. மேலும் கடந்த 20 நாட்களாக அப்படியே வேலையை விட்டுவிட்டுச் சென்று விட்டார்கள். ஆகவே மேற்கொண்டு அந்த வேலையைத் தொடர்ந்து நடத்தி துரிதப்படுத்திக் கொடுப்பதற்கு என்ன ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, எடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்ட வேலைகள் 31-3-81-க்குள் முடிக்கவேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் ஒருசில இடங்களில் குறிப்பாக நீலகிரி போன்ற இடங்களில் இதுபோன்ற வேலைகள் தேங்கி இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் மீண்டும் காலக்கெடு கொடுத்து வேலைகளை முடிப்பதற்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே எங்கெங்கு தேக்கநிலை ஏற்பட்டிருந்தாலும் அவைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பாம்பாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் திட்டம்

* வினா எண் 761- திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டம் ஆலங்காயம் நெடுஞ்சாலையில் வவ்வால்-தோப்பு என்கிற புதூருக்கு போகும் சாலையின் குறுக்கே போகும் பாம்பாற்றின் மீது புதியதாகப் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதை விரைவில் கட்டி முடிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. சுந்தரம்: தலைவரவர்களே, நீண்ட நெடுங்காலமாக இந்தப் பாலம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஜவ்வாது மலையின் அடிவாரத்திலே உள்ள பகுதிகளிலே வாழ்கின்ற விவசாயிகள் மழைக் காலங்களிலே ஆற்றிலே வெள்ளம் வந்துவிடுவதன் காரணத்தால் தங்களுடைய விளை பொருட்களைக்கூட நகரங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாமல் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. ஆகவே அரசு மீண்டும் பரிசீலனை செய்து உடனடியாக அந்தப் பாலத்தினைக் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய இடத்திலே பாலம் கட்ட வேண்டுமென்றால் ஏறத்தாழ ரூ. 5 இலட்சம் செலவாகும். அது 3 கிலோமீட்டர்தான நீளமுள்ள ஒரு சாலை ஆகவே, நிதிநிலை சரியான உடன் அவைகள் எல்லாம் கவனிக்கப்படும்.

### கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

*வினா எண். 762 திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக் கிடங்குக்கு குளிர்பதன வசதி செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு காலமாக அது செய்யப்படாமலிருக்கிறது?

(இ) அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்

(ஆ) மற்றும் (இ) இச்சவக் கிடங்கை குளிர்பதன வசதி செய்ய ரூ. 2.05 லட்சம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான துவக்கப் பணிகளைத் தலைமைப் பொறியாளர் செய்து கொண்டு வருகிறார்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தச் சவக்கிடங்கில் குளிர் பதன ஏற்பாடு செய்வதற்காக எவ்வளவு பணம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கை இப்பொழுது அமைச்சர் அறிவித்துள்ளார். 3 ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் காரியம் செய்யப்படாமலிருக்கிறது. மனிதன் இறந்து போனதற்குப் பிறகு, அந்தச் சடலத்தைக் கொண்டு போய் ஓரிடத்தில் வைத்தால், அங்கு குளிர் பதன வசதி செய்யவில்லையென்றால், எவ்வளவு மோசமான நிலைமை ஏற்படும். சுகாதாரத்திற்குக் கெடுதல் ஏற்படும்? படிக்கின்ற மாணவர்கள் அந்த இடத்திற்குப் போய், எப்படி சவத்தைக் கையாளுவார்கள் என்பது அமைச்சருக்கு நன்கு தெரிந்த விஷயம். இவ்வளவு நீண்ட காலம் இப்படி ஊறப்போட்டு வைக்கக் காரணம் என்ன? எவ்வளவு டைமுக்குள்ளே அதை வைத்து முடிக்க முடியும் என்பதை அமைச்சர் சொல்ல முடியுமா?

[1981 ஏப்ரல் 16

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, தாமதத்திற்கு இந்த அரசு காரணம் அல்ல. ஜி. ஓ. எம். எஸ். நெம்பர் 1016, 27-4-1974ல் ரூ. 1,60,000 அதற்கு ஒதுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், அப்பொழுது ஏர் கன்டிஷனாக இருக்கக்கூடிய மார்ச்சுரி பிளாக்குக்காக ஒதுக்கவில்லை. சாதாரண மார்ச்சுரி பிளாக்குக்காக ஒதுக்கினார்கள். இந்த அரசாங்கம் வந்தபிறகுதான் அதை ஏர் கன்டிஷன்ட் மார்ச்சுரி பிளாக்காக வைக்க வேண்டுமென்று ரூ. 2.05 இலட்சம் ஒதுக்கியிருக்கிறோம். அதற்கான விவரங்கள் எல்லாம் என்னிடம் இருக்கின்றன. இன்னும் 6 மாதத்திலே கட்டி முடித்து, ஏர் கன்டிஷன்ட் மார்ச்சுரி இயங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த அரசாங்கம் காலதாமதத்திற்குப் பொறுப்பல்ல என்று சொன்னார். முன்பிருந்த அரசாங்கத்தின் தொடர்ச்சியாகத்தான் அரசாங்கத்தைப் பார்க்க முடியுமே தவிர, கட்சிகள் மாறலாம். ஆனால், அரசாங்க இயந்திரமும் அதிலே இருக்கக்கூடிய அதிகாரிகளும் முறையாகச் செயல்படும் நிலைக்கு எந்தக்கட்சி அரசாங்கம் வந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் அரசின் தன்மை. அது இல்லையென்றால் அரசாங்கம் இல்லையென்று அர்த்தம். ஏற்கனவே 3 வருடம் தாமதப்படுத்திவிட்டு, இன்னும் 6 மாதம்டைம் வேண்டுமென்று அமைச்சர் கேட்கிறார். ஒருமாதத்திற்குள்ளே கட்டி முடிக்க முடியாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 6 மாதங்களுக்குள்ளே வேலை நடந்தால் திருப்திப்படுங்கள். கேள்வி நேரத்தில் எப்படி கன்டிஷன் போட முடியும்? மாண்புமிகு உறுப்பினர் 3 வருடங்கள் பொறுத்தாயிற்று. 6 மாதங்கள் பொறுத்துக் கொள்ளக்கூடாதா?

திரு. கு. ரமணி: ஒரு ஏ. சி. மெஷின் பொருத்த 6 மாதங்கள் வேண்டுமா? நீங்கள் ஸ்பீக்கராக இருந்து இதைச் சொல்வதாலே எங்களுக்குப் பிரச்னை ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு அவையில், அமைச்சர் ஒரு உறுதி அளித்திருக்கிறார். உங்களுக்குக் கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று பொருள்.

திரு. கு. ரமணி: இது சாதாரணமாக ரோடு போடுகிற விஷயம் அல்ல. இறந்துபோன மனித சடலங்களை வைக்க வேண்டிய இடம், குளிர் பதன வசதியில்லாமலிருந்தால் எப்படி?

திரு. ரா. உமாநாத்: தலைவர் அமைச்சர் இருக்கையில் உட்கார்ந்து சொன்னால் எங்களுக்குப் பிரச்னை இல்லை, நாங்கள் மீண்டும் கேட்போம். தலைவர் இருக்கையில் உட்கார்ந்து இதைச் சொல்வதால்தான் பிரச்னை.



1981 எப்ரல் 16]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 மாதம் என்பதே அதை ஒரு லிமிட்டுக்காகச் சொல்லியிருக்கிறேன். அதற்கு முன்பாகவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களுடைய எண்ணத்தினுடைய அடிப்படையிலே வெகு விரைவில், அதை முடிக்க நான் முயற்சி எடுத்துக்கொள்வேன்.

### சேலம் அரிசிப்பாளையத்தில் பதுக்கி வைக்கப் பெற்றிருந்த மருந்துப் பொருட்கள்.

*வினா எண். 763 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் அரிசிப்பாளையத்தில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த ரூ. 1 இலட்சம் பெறுமான மருந்துப் பொருள்கள் அண்மையில் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில் மேற்படி பதுக்கல்காரர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) சுமார் ரூ 4,200 மதிப்புள்ள மருந்துப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

(ஆ) சேலம் மாவட்டம் பள்ளப்பட்டி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 9.20]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் பள்ளப்பட்டி காவல் நிலையத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடர்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். மருந்துகள் பதுக்கி வைக்கப்படுவதால், அரிய மருந்துகள் கிடைக்காமல் போய் பல உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. ஆக்வே, இப்படிப்பட்ட மருந்துகளைப் பதுக்கி வைப்பவர்கள் டாக்டர்களாக இருந்தால் அவர்கள் பட்டத்தை வாபஸ் வாங்கவும், மருந்து வியாபாரிகளாக இருந்தால் அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும், லைசென்சுகளை ரத்து செய்யவும், அப்படிப்பட்ட தேசத் துரோகிகளை நாடுகடத்தவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் இரண்டு பேர் திரு. மோகன், திரு. தியாகராசன்

இதில் ஈடுபட்டு இருந்தனர். அவர்கள் இருவரிடையேயும் ஏற்பட்ட சண்டையின் விளைவாக திரு. மோகன் என்பவர் திரு. தியாகராசன் என்பவர் மீது குற்றச்சாட்டுக் கூறியதன் அடிப் படையில், டி. எம். ஒ. அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, இரண்டு பேர் மீதும் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். எப்படிப்பட்டவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும் என்பதை நான் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல அரிய மருந்துகள் பதுக்கப்படுவதால், பல உயிர் இழப்புகள் ஏற்படுவதோடுமட்டுமல்லாமல், மருந்துகள் தேங்கி விடுவதால், எக்ஸ்பயரி ஆகிவிடுகின்றன. இப்படி எக்ஸ்பயரி ஆகிவிடுகிற மருந்துகளும் விற்பனைக்கு வருகின்ற காரணத் தால். அடிக்கடி டாக்டர்கள் வீட்டிற்கு—கோர்ட்டுக்குச் செல்வது போல்—ஓயாமல் செல்லவேண்டியிருக்கிறது ஆகவே, இப்படிப் பட்ட எக்ஸ்பயரி ஆன மருந்துகளை கடைகளிலோ அல்லது டாக்டர்களோ கொடுக்காமல் இருப்பதற்கு அல்லது தடை செய் வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றா லும், எஸ்பயரி ஆகிவிட்ட மருந்துகளை மக்களுக்கு விநியோகிக் கப்படாமல் இருப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் டிரக் டைரக்டரேட் மூலமாக எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, சேலம் அரிசிப் பாளையத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு லட்சம் பெருமான மருந்துப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அதில் சுமார் 4200 ரூபாய் மதிப்புள்ள மருந்துப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த மருந்துகள் எங்கெங்கேயிருந்து கொண்டு வரப்பட்டன என்பது கண்டறியப்பட்டுள்ளதா? அப்படி செய்த அரசு அலுவலாளர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது? இதுவரையிலும் அது பற்றிய முழு விவரத்தையும் அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இவைகள் திரு, தியாகராசன் என்பவர் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டன. ட்ரக்ஸ், காட்டன் ரோல்ஸ், பேன்டேஜ் கிளாத் ஆகியவை திரு. தியாகராஜன் வீட்டில்இருந்து கைப்பற்றப்பட்டன. அதன் மேல் இருந்த லேபில்கள் மூலமாக மருத்துவமனையில் இருந்து அவைகள் கைப்பற்றப்பட்டன என்று தெரியவந்தது. ஏறத்தாழ 6 மாதங்களாக படிப்படியாகஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக அந்த மருந்துகள் எடுத்துச்



செல்லப்பட்டு, அவருடைய வீட்டில் அது சேகரித்து வைக்கப்பட்டு இருந்து இருக்கிறது. அவர் வீட்டில் இருந்த எல்லாவற்றையும் கைப்பற்றி இருக்கிறோம். அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற மருந்துகள் களவாடப்படுவது சேலத்தில் மட்டுமல்லாமல் சென்னை போன்ற இடங்களில் உள்ள பெரிய மருந்துவமனைகளி லும் களவு செய்யப்படுகின்றன என்கிற செய்தி வந்திருக்கிறது. பெரிய மருத்துவமனைகளில் குறைந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செக்யூரிட்டி போர்ஸ் இருப்பதால் தான் இத்தகைய நிலைமைகள் உள்ளன என்று சொல்லப்படுகிறது. எனவே, மருத்துவமனை களில் மருந்துகள் களவாடுவதைத் தடுப்பதற்காக இது போன்ற பெரிய மருத்துவமனைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகப் படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, பல்லாண்டுகாலமாக இப்படி மருந்துகள் மருத்துவமனையில் இருந்து களவாடப்பட்டுக்கொண்டும், அவ்வப்போது அவைகள் கண்டுபிடிக்கப்பட்டும் வருகின்றன. அவற்றை இப்போது படிப் படியாகக் கண்டுபிடித்துக்கொண்டு வருகிறோம். இப்போதுகூட இப்படி களவாடப்பட்டவைகளைக் கண்டுபிடிக்கக் காரணம் அந்த இலாகா அலுவலர்களைக் கூப்பிட்டுச் சொல்லியிருக்கிறோம் கடுமையான முறையில் இப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும், ஒவ்வொரு டிப்பார்ட்மென்டிலும் சரியான முறையில் கண்காணிப்பு இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறோம். டீன் கான்பரன்ஸ், டி. எம். ஒ கான்பரன்ஸ் ஆகியவைகள் நடக்கின்றபோது நேரடியாக இது குறித்து அறிவுறுத் தப்பட்டு, யாரும் மருந்துகள் திருடிக்கொண்டு போக முடியாத அளவிற்குக் கடுமையான முறையில் கண்காணிப்பு நடவடிக்கை இருக்கவேண்டும் என்றும், அதற்காக சில செக்யூரிட்டி மெஷர்ஸ்ஸும் எடுத்து இருக்கிறோம். அவைகள் என்ன என்பதை இங்கே தெரிவிப்பது உகந்தது அல்ல என்பதையும் கூறிக்கொள் கிறேன்.

'நித்ய கல்யாணி' மூலிகை ஏற்றுமதி.

*வினா எண். 764—திரு. வேடசந்தூர் வி. பி பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் இருந்து ''நித்ய கல்யாணி'' மூலிகை ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அந்த ஏற்றுமதி தனியார்களால்செய்யப்படு கிறதா? அரசு மூலமே செய்யப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) தனியார்களால் செய்யப்படுகிறது. அரசு மூலம்செய்யப் படவில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த 'நித்யகல்யாணி' என்ற மூலிகை புற்றுநோயைத் தீர்க்கும் மருந்து என்று கருதப்படுவதால் வெளிநாடுகளில் நிறைய கிராக்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதை விவசாயிகள் பயிரிடுகிறார்கள். அவர்களிடமிருந்து தனியார்கள் குறைந்த விலைக்கு வாங்குவதால் விவசாயிகளுக்கு இதிலே உற்சாகம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, தமிழக சர்க்கார் ஒரு மூலிகை வாரியம் அமைத்து, அந்த வாரியத்தின மூலம் இந்த மூலிகையை வாங்கவும், வாரியமே பெருமளவில் பயிர் செய்யவும் அவைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இது நல்ல சிறந்த யோசனை. அரசாங்கம் இந்த யோசனையை ஏற்றுக் கொண்டு, மூலிகை வாரியத்தின் எல்லைக்குள் இதைக் கொண்டுவர முடியுமா என்பதை பரிசிலிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த நித்தியகல்யாணி என்ற மூலிகை பல்வேறு நோய்களைத் தீர்க்கக்கூடிய மருந்துகளின் மூலப்பொருள் என்ற முறையிலே அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே இதைப் பயிரிடும் விவசாயிகள் கடந்த காலத்தில் அதிகவிலை கிடைத்ததால் ஏராளமாகப் பயிர் செய்தார்கள். ஆனால் அடுத்த ஆண்டில் வாங்க ஆள் இல்லாமல், அவைகளைக் குப்பையிலே போடும் நிலைமை வந்துவிட்டது. ஆகையால் இந்த மூலிகைகளை வாங்கிப் பயன்படுத்தும் வகையில் ஏதாவது செய்ய முடியுமா? அமைச்சரவர்கள் சொன்னதைப் போல மூலிகைப் பண்ணை மூலம் இந்த மூலிகைகளை வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, வேர்களிலிருந்து கிடைக்கும் 'வின் பிளாஸ்டின்' எப்படி புற்று நோய்க்குப் பயன்படுத்துவது என்ற ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் ஆராய்ச்சி நிலையிலேதான் இருக்கிறது. சில நேரங்களில் ஆராய்ச்சியாளர்கள் ரொம்ப அக்கரைகாட்டுவார்கள், சில நேரங்களில் அந்த அக்கரை குறைந்துவிடும். The root of the Plant was sold at Rs.10 per kilogram 10 years ago. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல இப்போது அதன் விலை மிகவும் குறைந்திருக்கிறது ; கிலோவுக்கு ஒரு ரூபாய்தான் கிடைப்பதாகத் தெரிகிறது. அதோடு திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த மூலிகைகள் நிறைய பயிரிடப்படுகிறது. அது மட்டுமல்ல. சௌத் ஆப்பிரிக்காவின் ஓர்ல்டு காம்படிஷன் இருப்பதால் விலை குறைந்திருக்கிறது. நாமே இதற்கு ஏதாவது செய்யலாமா என்று பார்த்தால் நம்மிடம் ஆராய்ச்சி வசதி இல்லை. முடியுமானால் முயற்சி செய்து பார்க்கலாம்.



திரு. க. இரா. சின்னராசு : தலைவரவர்களே, இந்த நித்திய கல்யாணி மூலிகைக்கு இந்தப் பெயர் எப்படி வந்தது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆராய்ச்சி நேரம் அல்ல; கேள்வி நேரம்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, இந்த நித்தியகல்யாணி மட்டுமல்ல ; தமிழ்நாட்டில் இருக்கிற இன்னும் எத்தனையோ மூலிகைச் செடிகள் சித்த வைத்தியம் மூலம் பல நோய்களைத் தீர்த்து இருக்கிறது மட்டுமல்லாமல் அலோபதி மருந்துகளைவிட சிறந்தமுறையில் வேலை செய்கின்ற சித்த வைத்திய முறை மருந்துகள் இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆகவே, உலகம் முழுவதும் நம்முடைய சித்த வைத்தியமாகிய தமிழ் மருத்துவம் பரவ நித்தியகல்யாணி போன்ற மூலிகைகளை அரசு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் ஒரு முக்கியமான விஷயத்தை கவனத்தில் கொள்ளவில்லை. இந்த சித்த வைத்தியத்தில் மூலிகைகளின் 'அல்கோலாயிட் எக்ஸ்ட்ராக்டை' எடுத்துத்தான் பயன்படுத்துகிறார்கள், அந்த எக்ஸ்ட்ராக்ட் எடுக்கும்முறை நம்நாட்டில் இல்லை ; மேல்நாட்டில் இருக்கிறது ; அங்கேதான் அநேகமாக "மாடர்ன் மெடிசன்ஸ்" தயாரிக்கிறார்கள். மூலிகைகளின் எக்ஸ்ட்ராட்களைஎடுத்து'மாடர்ன்மெடிசினை'ப்போலதயாரித்து, அதனுடைய திறனை வெளிப்படுத்தினால் தான் உலகம் ஏற்றுக் கொள்ளும். அப்படிப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சி இந்தியாவில் இல்லை; வெளிநாட்டில்தான் இருக்கிறது. ஆகவே, அவர்கள் இங்கே இருந்து எடுத்துச்செல்கிற மூலிகைகளிலிருந்து 'அல்கோலாயிட் எக்ஸ்ட்ராக்டை' எடுத்து மருந்து தயாரித்து, அது நம்முடைய நாட்டுக்கு வருகிறது. மூலிகைப் பண்ணையில் இத்தகைய மூலிகைகளை ஏராளமாக வளர்க்க வேண்டுமென்று இருந்தாலும் மார்க்கெட் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது, என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

## Persons selected as Assistant Surgeons

* Q. No. 765 THIRU S. RAJARAMAN : Will the Hon. the Minister for Health be pleaeed to state :

(a) Whether a large number of Assistant Surgeons selected by the Tamil Nadu Public Service Commission, have not joined service in recent years; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :— (அ) ஆம்.

| | 1975 | 1978 |
|---|---|---|
| (ஆ) பட்ட மேற்படிப்பு மேற்கொண்டதாலும் மற்றும் பல காரணங்களாலும். | 2 | 34 |
| பணிவேட்பாளர்களிடம் இருந்து தகவல் கிடைக்கப் பெறாததினாலும். | 51 | 234 |

[முற்பகல் 9.30.]

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே நம்முடைய தமிழ்நாடு அரசினுடைய தேர்வு ஆணைக்குழு மருத்துவர் பணிக்காக தேர்வு நடத்தினார்கள். எத்தனை பேர்கள் தேர்வில் கலந்துக் கொண்டார்கள் ? எத்தனை பேர்கள் அதில் தேர்வு அடைந்தார்கள் ? எத்தனை பேர்கள் வேலையில் சேர்ந்திருக்கிறார்கள் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை பேர்களை அழைத்திருந்தார்கள் தேர்வுக்கு என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஏனென்றால் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் தேர்வு ஆணைக்குழுவினரிடத்தில் தான் அந்த விவரங்கள் இருக்கும். அவர்கள் தான் தேர்வை நடத்தினார்கள். எத்தனை இடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும், ஆகையினால் எத்தனை பேர்கள் தேவை என்று தான் அரசாங்கம் அவர்களிடத்தில் சொல்லி, அதன்மீது தேர்வு நடத்துவார்கள். அதன்படி 1400 பேர்கள் தேர்ந்து எடுக்க வேண்டும் என்று நாம் அவர்களைக் கேட்டிருந்தோம். அந்த வேலைகள் தற்போதுதான் முடிவடைந்திருப்பதால், அது சம்பந்தமான லிஸ்ட்டை இனிமேல்தான் நமக்கு அனுப்புவார்கள். அதற்குப் பிறகுதான் எங்கே காலி இடங்கள் இருக்கிறதோ, எங்கே அவசரமாக தேவையோ அதைப் பார்த்து, அந்த இடங்களைப் பூர்த்தி செய்யும் பணி தொடங்கப்படும்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் தேர்வு ஆணைக்குழுவினால் தேர்வு பெற்று மருத்துவப் பணிக்கு வரும் மருத்துவர்கள், கிராமங்களில் சென்று பணிபுரிய மறுக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ? அப்படி பணி செய்ய மறுப்பவர்களுக்கு தேர்வை திரும்பப் பெறப்படும் என்று கட்டாய ஆணையை அரசு பிறப்பிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வின்சென்ட் அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய அந்த யோசனை மிகவும் சரியான, ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு கருத்துத்தான், அந்த அடிப்படையிலே யாராவது மருத்துவர்கள் கிராமங்களில் சேர மறுத்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மூலக் கேள்விக்கு பதில் கூறும்போது, தேர்வு பெற்றவர்களில் 234 பேர்கள் வந்து சேரவில்லை என்று கடைசியாக சொன்னார்கள். ஏற்கெனவே பல இடங்களில் காலி ஸ்தானங்கள் இருக்கிறதே, அவைகள் இவர்கள் வந்து சேராததின் காரணமாக அப்படியே காலியாகவே நிற்கிறதே, அதற்கு உடனடியாக தேர்வு ஒன்றை பழையபடி நடத்தி, அந்த இடங்களை பூர்த்தி செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலி ஸ்தானங்கள் என்று இப்போது 23 இடங்கள் பிரமோஷன் மூலமாக ஏற்பட்டிருக்கிறது. 484 இடங்களில் புதிதாக போஸ்டுகளை கிரியேட் செய்திருக்கிறோம். மற்றும் சஸ்பென்ஷன், ரெசிக்னேஷன், லாங் லீவ், ஆப்சென்ட் பிரம் டியூட்டி, டெபுடேஷன் போன்றவைகள் மூலம் 630 இடங்கள் இருக்கின்றன. ஆக மொத்தம் 1137 இடங்கள். அதில் 5 சதவீதம் லீவ் ரிசர்வ் என்ற வகையில் 57 இடங்கள் வருகின்றன. 15 சதவீதம் பஃப்வர் ஸ்டாக்—அதாவது ஜாஸ்தியாக 181 பேர்கள் தேவை. ஆக உடனடியாக போடப்பட வேண்டியவை 1375 இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப்படிப்பில் பட்டம் பெற்றவர்களை தேர்வு ஆணைக்குழு தேர்ந்தெடுப்பதாக சொல்கிறார்கள். மருத்துவக் கல்லூரியில் தேர்ந்தெடுக்கப்படும் அந்தத் தகுதி அடிப்படையிலே தான், தேர்வு ஆணைக்குழுவும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஏதாவது கோரிக்கை இருக்கிறதா ? அடுத்து தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் பணியில் வந்து சேராமல் இருப்பதால், பல பகுதிகளிலும் உள்ள மக்கள் பாதிக்கப்படுகிறார்களே, அதனால் மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்று வந்தவுடன், அவர்களுக்கு தற்காலிகமாக வேலை கொடுத்து விட்டு, பிறகு தேர்வு ஆணைக்குழுவின் மூலம் தேர்வு நடத்தி தேர்ந்தெடுத்தால் என்ன ? அப்படி ஒரு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டம் பெற்றவுடனே தற்காலிகமாக அவர்களை வேலையில் அமர்த்திவிட்டால், பின்னால் தேர்வு ஆணைக்குழு அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், அவர்களுக்கு பெரிய ஏமாற்றம் ஏற்படும். அதை தவிர்க்க வேண்டும் என்றுதான் நாம் இந்த முடிவிற்கு; அவர்களை பெர்மனென்ட்டாகவே எடுத்துக் கொள்ள தேர்வு ஆணைக்குழுவின் மூலம் தேர்வு நடத்தலாம் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவப் படிப்புக்கு ஒரு மாணவனுக்கு குறைந்தது $1\frac{1}{4}$ லட்சம் அரசு பொதுப்பணத்திலிருந்து செலவழிக்கிறது என்று தெரிகிறது. தேர்வு செய்யப்படுபவர்கள் இம்மாதிரி பணியில் வந்து சேர மறுப்பதால், குறைந்த பட்சம் 5 ஆண்டுகளுக்கு அரசு பணியில் அவர்கள் இருக்க வேண்டும் என்று மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளும்போதே ஒப்பந்தம் செய்துக் கொண்டால் என்ன ? அந்த வகையில் முயற்சி செய்ய அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனைதான் என்றாலும், ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட்டுகள் இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. அப்படி ஒரு பிரச்னையும் இருக்கிறது, தவிர, ஒட்டு மொத்தமாக நிறைய டாக்டர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் கூட, வேலை வாய்ப்பை தருகிற நேரத்திலே அவர்கள் அதை வேண்டாம் என்று மறுத்துவிடுகிறார்கள். எனவே, மொத்தத்தில் வேலை வாய்ப்பு ஜாஸ்தியாக மருத்துவர்களுக்கு இல்லை என்று சொல்லக் கூடிய அந்தக் குரல், இப்போது உண்மையற்ற நிலைமையில் இருக்கிறது.

திரு .க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விடை அளிக்கின்ற முறையில் உண்மையாக இருக்கிற முழு விவரத்தையும் தரவில்லை. சுமார் 3,500 பேர்கள் அப்படி பட்டம் பெற்றவர்கள் வேலையில்லாமல் இருப்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? தேர்வு செய்யப்பட்டவர்கள் பணியிடத்துக்குப் போகவில்லை என்றால் அரசாங்கத்திலே பதிவுசெய்திருக்கிற முன் உரிமைப் பட்டியலின்படி யார் அதற்குத் தொடர்புடையவர்களாக, அதற்கு அடுத்த வரிசையிலே வருகின்றவர்களுக்கு, தொடர்ந்து வேலை வழங்குவதற்கு, அரசாங்கம் ஏன் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை? அந்த முயற்சி அடியோடு நின்று போய் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? இதனால் 1,000 பேர்களுக்கு மேல் வேலையில்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?





மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, பேராசிரியர் அவர்கள் முழு உண்மையையும் சொல்லவில்லை என்று சொன்னார்கள். எந்த அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கிறார்களோ அந்த அளவிற்குத்தான் சொல்ல முடியும். எல்லா விவரத்தையும் நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஓரளவு மானியக் கோரிக்கையில் சொல்லியிருக்கிறோம். தற்காலிகமாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று முடிவு எடுத்திருக்கிறோம்.

பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சர்வீஸ் கமிஷன் ஒரு பட்டியலை அனுப்புகிறார்கள். தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் பட்டியலை அனுப்புகிறார்கள். அந்தப் பட்டியலில் இருக்கிற சில இடங்கள் காலியாக இருக்கிறது, சிலர் சேரவில்லை என்றால், இன்னும் சிலபேரை எடுத்துக்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம். எந்த இடத்திலே காலியிருந்தாலும், சர்வீஸ் கமிஷன் தேர்ந்தெடுத்து அனுப்பியவர்கள் சேரவில்லையென்று சொன்னால் அதற்குப் பிறகு அவர்களுக்கு வாய்ப்பே கிடையாது. அந்த பழைய முறை அப்படியேதான் இருக்கிறது. அதிலே எந்தவிதமான மாறுதலும் இல்லை. ஒரே ஒரு மாறுதல் செய்து இருக்கிறோம். தற்காலிகமாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நிறுத்தி வைத்திருக்கிறோம். அதற்குப் பதிலாக நிரந்தரமாக நாம் சர்வீஸ் கமிஷன் மூலமாக எடுத்துக்கொள்கிறோம்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்கிறபோது தற்காலிகமாக எடுத்துக்கொள்வதை நிறுத்தி வைத்து இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால்தான் வேலையில்லாத படித்துப் பட்டம் பெற்ற டாக்டர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அதனால் அரசாங்கத்தில் இடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது ஒரு பெரிய குறையாகக் கூட இருக்கிறது. இது மூன்று ஆண்டுகளாகத் தொடர்கின்ற காரணத்தினால் அரசு தன்னுடைய முறையை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, தற்காலிகமாக எடுத்துக்கொள்ள வேண்டாமென்ற முடிவு 3 மாதங்களுக்கு முன்புதான் எடுக்கப்பட்டது. அதற்கு மாறாக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக வரக்கூடிய எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்தி இருக்கிறோம்.

### கோவையிலிருந்து நெல்லை பாபநாசத்திற்கு விரைவுப் பேருந்துப் பணி.

* வினா எண். 766— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா:

[1981 ஏப்ரல் 16

அ) கோயம்புத்தூரிலிருந்து திருநெல்வேலி வழியாக பாபநாசத்திற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

ஆ) அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

இ) அரசு சீக்கிரம் பஸ் விட ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அ) இல்லை.

ஆ) ஆம்.

இ) இத்தடத்தின் நீளம் விரைவுப் பேருந்து இயக்கத்திற்கான சராசரி ஓட்டத்திற்குக் குறைவானது. இத்தடத்தில் பேருந்தை இயக்குவதில் நட்டமே ஏற்படும். ஆகையால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இந்த இடத்தில் பேருந்தை இயக்கவில்லை.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரனம் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த கோவை — திருநெல்வேலி பேருந்தைப் பாபநாசத்திற்கு விடும் திட்டத்தை அரசு ஏற்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஏற்கனவே கோரிக்கை கொடுக்கும்போது அடுத்த தடவை மானியத்திலே வருகிறபோது கொடுப்பதாக சம்பந்தப்பட்ட மானேஜிங் டைரக்டர் அவர்கள் சொன்னார்கள். புதிய பஸ் தடங்கள் விடுகிறபோது பாபநாசத்திற்கு பஸ் விடுவதற்கு அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, கோவையிலிருந்து பாபநாசத்திற்கு உள்ள தூரம் 432 கி.மீ. எனவே விரைவுப் பேருந்தை அதற்கு மட்டும் தனியாக, கோவையில் இருந்து பாபநாசம் வரை இயக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. குறைந்த பட்சம் 500 கி. மீ. ஆவது இருக்கவேண்டும். இல்லையென்றால் இலாபத்தில் ஓட்டுவதற்கு வாய்ப்பில்லை. உறுப்பினர் அவர்கள் கருத்தையும் ஏற்றுக் கொண்டு பாபநாசத்தைத் தொட்டுசெல்லக் கூடிய பேருந்தை இயக்க முடியுமா என்பதை ஆராய்ச்சி செய்வோம்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரனம் :** தலைவர் அவர்களே ஒரு கிளாரிபிகேஷன் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு உங்கள் மூலமாகச் கொண்டு வர விரும்புகிறேன். கோவையிலிருந்து திருநெல்வேலிக்கு பஸ் வந்து நிற்கிறது. அதற்கு பிறகு ஒரு 50 கி. மீ. தூரத்தில்தான் பாபநாசம் இருக்கிறது. குறைந்த தூரம் என்று யாரோ அமைச்சருக்குத் தவறாகத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். திருநெல்வேலிக்குப் பிறகுதான் பாபநாசம் இருக்



1981 ஏப்ரல் 16]

கிறது. திருநெல்வேலி பஸ்ஸை பாபநாசத்திற்கு நீட்டிக்க அரசாங்கம் முன்வருமா? நாகர்கோவில் பஸ் திருநெல்வேலி வந்து போகிறது. அதிலும் தனியாக பாபநாசத்திற்கு சீட் ஒதுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, கோவையிலிருந்து திருநெல்வேலிக்கு இடையே உள்ள தூரம் 380 கி. மீ. ஒரு பேருந்து அங்கே வந்துவிட்டு மீண்டும் கோவைக்கு வந்துவிடுகிறது ஒரே நாளில். பாபநாசம் போவது என்றால் 432கி.மீ. தூரமாகிறது. அங்கே போய்விட்டு ஒரே நாளில் திரும்ப கோவை வர முடியாது. ஆனால், பாபநாசத்தை தொட்டுச் செல்கின்ற பேருந்தை இயக்க முடியும் என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஒருபேருந்து கோவையிலிருந்து திருநெல்வேலி சென்றுவர 600 கிலோமீட்டருக்கு மேலே ஆகிறது. அதை பாபநாசத்திற்கு நீட்டினால் ஒரு நாளில் வந்து செல்ல முடியாது என்ற காரணத்தால் தான் அதை சொன்னேன். ஆனால் பாபநாசத்தைத் தொட்டுச் செல்லும் அளவிற்கு நாம் பேருந்துகளை இயக்க முடியும் என்பதை இப்போது சொல்லியிருக்கிறேன்.

[முற்பகல் 9.40]

**திரு. ப. நெடுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் ஒரு அழகிய சுற்றுலா ஸ்தலம். அதற்கு அருகிலேயே அகஸ்தியர் அருவி, பாபநாசம் அணை போன்ற சுற்றுலா பயணிகள் வந்து போகக்கூடிய இடங்கள் இருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்திலேயே இது சிறந்த ஒரு சுற்றுலா ஸ்தலம். மற்ற மாவட்டங்களிலிருந்து வரக் கூடிய பேருந்துகள் இதுவரையில் வந்து செல்லுமானால், சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதாலே, இதனை அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியிலிருந்து பாபநாசம் 52 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. இதற்கு அரை மணி நேரத்திற்கு ஒரு பேருந்து,— மற்ற போக்குவரத்து கழக பேருந்து— விடப்படுகிறது. அந்த அடிப்படையிலே திருநெல்வேலியிலிருந்து போவதற்கு அதிகமான வாய்ப்பு இருக்கிற காரணத்தால் திருநெல்வேலி வரை விரைவு பேருந்தை நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். எனவே பாபநாசத்தைத் தொட வேண்டுமென்றுச் சொன்னால் அதற்காக நடவடிக்கை எடுப்பதாக நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

### சென்னை—கொல்லம் இருப்புப்பாதை

*வினா எண். 767 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை— கொல்லம் (via) மதுரை மீட்டர்கேஜ் இரயில் பாதையை பிராட்கேஜாக மாற்றி அமைக்க மாநில அரசு மத்திய அரசிற்கு பரிந்துரை செய்துள்ளதா?

(ஆ) கரூர்—தூத்துக்குடி அகல இரயில் பாதை திட்டம் எந்நிலையில் உள்ளது என்பது மாநில அரசிற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி (அ) இல்லை.

(ஆ) மத்திய அரசின் பரிசிலனையில் உள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் பிராட் கேஜ், அகலப்பாதை அமைத்து நல்லமுறையிலே பிரயாணம் செய்வதற்கு மத்திய அரசு வசதி செய்து வருகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில், உரங்கள் என்று சொன்னால், மற்ற மாநிலங்களிலிருந்து அவை இங்கு வரும் பொழுது அரக்கோணத்திலே இறக்கப்பட்டு அங்கு இருக்கும் பொழுது களவாடப்படுகின்றது. இவைகளை போக்குவதற்கு அகலப் பாதையாக மாற்றியமைக்க, அந்த வேலையை விரைவிலே எடுத்துக் கொள்வதற்கு மாநில அரசு மத்திய அரசுக்கு வலியுறுத்தமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர். அவர்களே. இது பற்றி மத்திய அரசுக்கு ஏற்கனவே எழுதி இருக்கிறோம். அந்த அடிப்படையிலே மீண்டும வலியுறுத்த அரசு தயாராக இருக்கிறது, தயக்கம் காட்டாது.

திரு மி. வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடம், மாநில அரசு எத்தனை புதிய திட்டங்களுக்கு பரிந்துரை செய்துள்ளது. இதில் எத்தனை திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நாகர் கோவிலை மதுரை டிவிஷனோடு சேர்க்க வேண்டும் என்றும். திருவனந்தபுரம் டிவிஷனோடு சேர்க்க வேண்டுமென்றும் தொழிலாளர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் இதை தவிர்ப்பதற்கு சகல வசதிகளும் அமைந்திருக்கிற நாகர்கோவிலிலேயே புதிய டிவிஷன் ஒன்றை அமைக்க மத்திய அரசை, மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1979ஆம் ஆண்டு நாம் ஆறு திட்டங்களுக்கு மத்திய அரசை கேட்டோம். அதிலே ஒரு சிலதையும், அவர்களாக இரண்டு திட்டங்களை எடுத்துக் கொண்டு, ஏறத்தாழ நான்கு திட்டங்களை நிறைவேற்றுவதாக ஒப்புதல் அளித்திருக்கிறார்கள்



இங்கே டிவிஷன் அமைப்பதை பற்றி பிரச்சினை இருப்பதாகச் சொன்னார்கள். ஏறத்தாழ மூன்று மாதத்திற்கு முன்பே மத்திய அரசை அணுகி, மத்திய அமைச்சர் அவர்களைப் பார்த்து அதை மதுரையோடு சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை நாம் வைத்திருக்கிறோம். எனவே அந்த அடிப்படையிலே அது வெறுவிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை விரிவாக விவாதிக்கின்ற சூழ்நிலை இப்போது இல்லை.

திரு. ஏ. சாகுல் ஹமீது: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை—கொல்லம் எக்ஸ்பிரஸ் வண்டியின் வேகத்தை கூட்டு வதற்கு மாநில அரசு ஒரு தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசை வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, வேகத்தைக் கூட்டுவதற்கு நாம் வேகமாக நடவடிக்கை எடுப் போம்.

## கொடைக்கானல்—சென்னையிடையே சொகுசு பேருந்துப்பணி

*வினா எண்.768 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா:

(அ) கொடைக்கானல்—சென்னை (வழி) கொடைரோடு நெடுந்தூர சொகுசு பஸ் விடும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

(ஆ) ஆம் என்றால் எப்போது அமுல் நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, கொடைக்கானலுக்கு வெளிநாட்டுக்காரர்கள் அதிகமாக வருகிறார்கள். மலைக்குச் செல்வதற்கு மிகுந்த சிரமம் இருக்கிறது ஆகவே, இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு ஒரு 35 பேர்கள் உட்காரக்கூடிய ஒரு சொகுசு பஸ் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுப்பார்களாக என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சொகுசு வண்டிகளிலே இப்போது இருப்பதே 35 இடங்கள் தான். ஆகவே, இன்னும் சிறிய வண்டியாக மாற்றினால் தான் மலைப் பகுதிகளில் இயக்க முடியும் அப்படி சிறிய வண்டியாக

மாற்றும் பொழுது 14 முதல் 20 நபர்கள் வரை அமரக்கூடிய சிறிய வண்டியாக இருக்கும். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் சென்னையிலிருந்து கொடைக்கானல் வரை நாம் சொகுசு பேருந்தை இயக்குவதற்கு வாய்ப்பில்லை.

அதற்குக் காரணம், அந்த மலைப்பகுதி மிகவும் குறுகலான பகுதியாக இருக்கிறது. அதற்காக இங்கேயிருந்து குறைந்த நபர்களை ஏற்றிக் கொண்டு செல்வது என்பது அவ்வளவு நல்லதல்ல. எனவே, அந்தப் பகுதிக்கு மட்டும் இந்த விரைவுப் பேருந்து எங்கே போய் நிற்கிறதோ அந்தயிடத்திலேயிருந்து கொடைக்கானலுக்குப் புதிய பேருந்துகளை, கூடுதல் பேருந்துகளை விடுவதற்கு வேண்டுமானால் நடவடிக்கையெடுக்கலாம்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொடைக்கானல் மலையடிவாரத்தில் இருக்கின்ற வத்தலக்குண்டு என்ற இடத்திலிருந்து சொகுசுப் பேருந்துகளை விட்டால் அங்கிருந்து கொடைக்கானலுக்குப் போவதற்கு வசதியாக இருக்கும். எனவே வத்தலக்குண்டுவிற்குச் சென்னையிலிருந்து பஸ் விடமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த யோசனை சிறந்த யோசனையாக இருக்கிறது அந்த அடிவாரத்திற்கு அருகிலே இருக்கின்ற நகரத்திலிருந்து சொகுசுப் பேருந்தை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கே. உச்சி: பேரவைத் தலைவரவர்களே, கொடைக்கானல் உல்லாசப் பயணிகளைக் கவருகின்ற பகுதி என்று சொல்லப்படுகிறது. கொடைக்கானலை போன்று நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகையும் உல்லாசப் பயணிகள் அதிகமாக வருகின்ற இடமாக இருக்கிறது. எனவே. கோவையிலிருந்து உதகைக்கு உல்லாசப் பஸ் விடுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலிருந்து உதகைக்கு நிறையப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதை உல்லாசப் பயணப் பேருந்து என்று நினைத்துக்கொண்டு அதில் போகலாம். உல்லாசப் பேருந்து என்று எங்கேயும் விடப்படவில்லை.



பேரவைத் தலைவர்
திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: சொன்னார்கள்,
அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கிருந்து
கொடைக்கானலுக்கு பஸ் விட வேண்டுமென்றால் முதலிய
அதிகப்பேர் ஏற மாட்டார்கள் என்று. திண்டுக்கல் பஸ்,
இடங்களிலிருந்து செல்ல வேண்டுமென்றாலும் முதல் நின்றாலும்
இரண்டாவது பஸ், மூன்றாவது பஸ் என்று காத்திருக்கின்ற
இடமிருப்பது இல்லை. எம். எல். ஏ.க்கள் பெரிய
நிலைமை இருக்கிறது. தனியார் பஸ், பி. ஆர். சி. கொடைக்கானலுக்கு
பஸ்கள் மலையிலே சென்று வருகின்றன. சொன்னாலும்கூட,
விடுவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்று வரையிலுமாவது
கொடை ரோடு வழியாக வத்தலக்குண்டு செய்வார்களா?
சொகுசு பஸ் விடுவதற்கான ஏற்பாட்டைச்

பேரவைத் தலைவர்
மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: சொல்லும்பொழுது, இங்கேயிருந்து
அவர்களே, நான் ஏற்கனவே சொல்லவில்லை. சொகுசுப்
யாரும் ஏறமாட்டார்கள் என்று இருக்கும்; அப்பொழு தான்
பேருந்து என்பது சிறிய பேருந்தாக இருக்கும். அப்பாப்
மலையின் மேலே இயக்குவதற்கு வசதியாக வரையில்தான்
பட்ட சிறிய பேருந்துகளிலே 20 சீட்டுகள் போவது
இருக்கும். அதை வைத்துக்கொண்டு இங்கேயிருந்து இருக்கின்ற,
என்பது முறையாக இருக்காது என்பதால் பக்கத்தில் அங்கே
அடிவாரத்திலே இருக்கின்ற ஒரு நகரத்திற்கு இயக்கி, ஏற்கனவே
யிருந்து வேறு பேருந்தை இயக்கலாம் என்று நான்
சொன்னேன்.

## குளத்தூர் தொகுதியில் குழந்தைகள் காப்பகம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 769. திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதியிலிருந்து குழந்தைகள் காப்பகம் அமைப்பது சம்பந்தமாக மாவட்ட சமூக நல அலுவலரிடமிருந்து திட்டம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த கிராமங்களில் காப்பகங்கள் அமைக்கப்படும்?

(இ) பேராம்பூர் கிராமம் சேர்த்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ. இல்லை.

மற்றும் (இ)

(ஆ) கேள்விக் இடமில்லை.

திரு. த. மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே,
குழந்தைகள் காப்பகத்திற்கு எவ்வளவு தொகை அனுமதிக்கப்
படுகிறது? வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ள மக்களுடைய
குழந்தைகளுக்குப் போதுமான சத்துணவு கொடுக்க வேண்டி
யதற்காக ஒதுக்கப்படும் தொகை அதிகரிக்கப்படுமா? என்னுடைய
தொகுதியில் விவசாயத்தைத் தவிர வேறு தொழில் கிடையாது.
இப்பொழுது மாதம் மும்மாரி பொழிவதில்லை. ஆகவே,
விவசாயம் செய்யக்கூட முடியாமல் போய்விடுகிறது. ஆகவே,
குளத்தூர் தொகுதியில் உள்ள பெரும்பகுதி மக்கள் வறுமைக்
கோட்டிற்கும் கீழே வாடுகிறார்கள். அவர்களுடைய குழந்தைகள்
சரியான வகையில் சத்துணவு இன்றி, கூம்பிப்போய், மெலிந்து
போய் உள்ளதால் அங்கே குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு,
மாவட்ட சமூக நல அலுவலருக்கு ஆலோசனை வழங்குமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உதவித்தொகை அளிப்பதைக் கூட்ட வேண்டுமென்று கூறினார்கள். சத்துணவு போதாத நிலையில் இருக்கிறது, ஆகவே உதவித்தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறினார்கள். அது பரிசீலிக்கப்படும்.

### கால்நடை பராமரிப்புத்துறை மூலம் ஒருங்கிணைந்த ஆவின இனப்

### பெருக்கத் திட்டம்.

* வினா எண் 770—திரு. எம். கே. ராஜ்மாணிக்கம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கால்நடை பராமரிப்புத் துறையில் ஒருங்கிணைந்த ஆவின இனப்பெருக்கத் திட்டம் எந்த ஆண்டு முதல் செயல்படுகிறது?

(ஆ) எங்கே செயல்படுகிறது?

(இ) இத் திட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கால்நடைகள், காளைகள், பசுக்கள் எத்தனை? (ஆண்டு வாரியாக)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இத்திட்டம் கால்நடைப் பராமரிப்புத் துறையில் செயல்படவில்லை.

(ஆ) மற்றும்(இ) எழவில்லை.



### ஆம்பூர் கால்நடை மருத்துவமனைக்கு சொந்த கட்டிடம் கட்டும் திட்டம்.

*வினா எண் 771—திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டம் ஆம்பூர் நகரில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு சொந்த கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[முற்பகல் 9.50]

திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூரில் கால்நடை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டிடம் வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை இருந்து வருகிறது. அதை இந்த நடப்பு ஆண்டிலேயே அரசு நிறைவேற்ற முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூரில் கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்காக தகுந்த இடம் இல்லாமையால் 1954ஆம் ஆண்டிலிருந்தே வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. தகுதியான இடம் கிடைக்காததால் நிரந்தரக் கட்டிடம் கட்ட திட்டம் தீட்டப்படவில்லை. தீவிர முயற்சிக்குப் பின், ஆம்பூர் நகராட்சி ஆணையாளர் 0.25 ஏக்கர் நிலத்தை—நகராட்சிப் புறம்போக்கு நிலம் சர்வே எண் 448/2— ஒதுக்கி, அதற்காக தீர்மானம் நிறைவேற்றி உள்ளார். ஆனால் மீண்டும் நகராட்சி ஆணையாளர் மேற்படி நிலத்தை ஆம்பூர் ரோட்டரி கிளப்பிற்கு ஒதுக்கி தீர்மானம் இயற்றி இருப்பதாக ஆம்பூர் கால்நடை மருந்தக உதவி மருத்துவர் கூறியுள்ளார். அதன் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு தொடர்பு கொண்டு மேற்படி நிலத்தை இத்துறைக்கு ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்படி நிலத்தை ஏற்கனவே தீர்மானம் இயற்றியவாறு இத்துறைக்குக் கொடுக்கவேண்டும் என்று ஆம்பூர் நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தியுள்ளார். எனவே, நிலம் கால்நடை பராமரிப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்ட பின்புதான் ஆம்பூர் கால்நடை மருந்தகத்திற்குக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது ஆம்பூர் நகராட்சி ஆணையாளர் அந்த நிலத்தை அரசு கால்நடை மருந்தகத்திற்குக் கொடுப்பதற்காக தீர்மானம் நிறைவேற்றி

உள்ளார்கள். ஆகவே, அரசு அங்கே உடனடியாக கட்டிடம் கட்டுவதற்கு நடப்பு ஆண்டிலேயே நடவடிக்கை எடுத்துக் கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் கூறும்போது ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். நகராட்சி ஆணையாளர் மேற்படி நிலத்தை ஆம்பூர் ரோட்டரி கிளப்பிற்கு ஒதுக்கி தீர்மானம் இயற்றி இருப்பதாக ஆம்பூர் கால்நடை மருந்தக உதவி மருத்துவர் கூறியுள்ளார். அதன்பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு தொடர்பு கொண்டு மேற்படி நிலத்தை இத்துறைக்கு ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்படி நிலத்தை ஏற்கனவே தீர்மானம் இயற்றியவாறு இத்துறைக்குக் கொடுக்கவேண்டும் என்று ஆம்பூர் நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தியுள்ளார். நிலம் கொடுக்கப்பட்டதும், கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்,

### அ. உறுப்பினர் திரு. ராஜசேகரன் கைது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை நகரப் போலீஸ் கமிஷனர் அவர்களிடமிருந்து இன்று காலை 9.30 மணிக்கு வந்துள்ள கீழ்க்கண்ட செய்தியை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:

I have the honour to inform you that Thiru V. Rajasekharan M. L. A. representing Dr. Radhakrishnan Nagar Constituency was arrested at about 08-45 hours today (16-4-81) along with the members of Sivaji Ganesan Rasigar Manram in X Station, Crime No. 245/81 under Section 143 I. P. C. read with Section 41 of the City Police Act on Kamaraj Salai near the Labour Statue for coming in a procession to resort to a fast in violation of the regulatory orders in force in the City. He has been taken to the Office of the Commissioner of Police.

## 3. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு என். எஸ். வி. சித்தன் : இந்தப் பிரச்னை சம்பந்தமாகத்தான் நான் ஒழுங்குப்பிரச்னை எழுப்புவதாக இருந்தேன், இது சம்பந்தமாக நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூட கொடுத்து இருக்கிறேன்.

** ** **

*மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



Hon. Thiru S. RAMACHANDRAN: This is no point of order. He is making fresh points. If he makes fresh points, he takes the time of the House or something.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கப் பெற்றது எந்த நிலையில் இருக்கிறது என்று கேட்கலாமே தவிர, அந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் எந்தப் பொருள் குறித்து என்று சொல்வது சரியல்ல.

திரு. என். எஸ் வி. சித்தன் : ** ** இன்றைக்குத் தமிழகம் முழுவதும் சிவாஜி கணேசன் ரசிகர் மன்ற உறுப்பினர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள். அந்த உண்ணாவிரதம் இருப்பதற்கு தமிழகம் முழுவதும் அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் சென்னையிலே மட்டும் அந்த உண்ணாவிரதத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டு, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜசேகரன் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைத் தாங்கள் இப்போது அறிவித்தீர்கள். இன்றைக்கு என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் பெறாவிட்டாலும் நாளைக்காவது அதை எடுத்துக்கொள்வீர்களா என்று அறியவிரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் ஒரு முக்கியமான பிரச்னை குறித்து தங்களிடத்தில் நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன், தமிழ் நாட்டில் இருக்கிற தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் ஏறத்தாழ 1,500 பேர் ஒரு போராட்டத்தில் ஈடுபட்டு அதிலே 1,300 பேர் சிறையில் இருக்கிறார்கள். அவர்களில் 500-க்கும் மேற்பட்டவர்களுக்கு கண் வலி ஏற்பட்டு-மெட்ராஸ் ஐ நோய் ஏற்பட்டு—மருத்துவ வசதி மற்றும் வேறு வசதிகள் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். சிறையில் இருக்கிற இடவசதிக்கு அதிகமான அளவிற்கு அவர்களுடைய எண்ணிக்கை இருப்பதால் தேவையான வசதிகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆகவே, அவர்களுடைய பிரச்னையை இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் மூலம் எழுப்பி, அமைச்சர் அவர்களின் விளக்கத்தைப் பெறுவதற்காக அதைத் தந்து இருக்கிறேன். அந்தத் தீர்மானம் எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிந்து கொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி 54-வது விதியின் கீழ் 4-4-1981 அன்று அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு தொடர் நிகழ்ச்சியாக இருக்கிறது. இருந்தாலும் ஒரே பொருள் பற்றி ஒருமுறைக்கு மேல் அனுமதிப்பது நம்முடைய சட்டப் பேரவையின் மரபு அல்ல.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அன்றையதினம் சிறைச்சாலைக்குள்ளே ஆசிரியர்கள் இருக்கிற நிலைமைதான் இருந்தது; அவர்களுக்கு கண்வலி ஏற்படும் நிலை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைக்கும் சிறைச்சாலையில் ஆசிரியர்கள் இருந்தார்கள்; கண்வலி பின்னால் வந்திருக்கலாம்.

தகவல் கோரல்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவரவர்களே, திரு. சித்தன் அவர்கள் பேசும் போது **வெளியே உண்ணாவிரதம் இருந்தார்கள் என்று சொன்னார்கள். **என்று பேசியதை நீங்கள் சபைக் குறிப்பில் ஏற்றக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் அதைத்தான் முதலிலே எழுந்து சொன்னேன். அவர்கள் ஒரு பிரச்சனையை உருவாக்கி விட்டார்கள். ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதை அவர்கள் அவையில் சொல்ல தாங்கள் அனுமதித்தால், அப்போது அவர்கள் பேசியிருந்தால் சரியாக இருக்கும். இப்போது அப்படி இல்லை. வெளியிலே கருத்துக்களைப் பேசுகின்ற உரிமையைத் தடைசெய்கின்ற சட்டம் இல்லை; பேச்சுரிமை இன்னும் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. ஆகவே, வெளியிலே என்ன சொன்னார்கள் அல்லது சொல்லவில்லை என்பதை இங்கே பேசுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** ** என்ற வார்த்தைகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தர விடுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இப்படி எல்லாம நீக்கிவிட்டால் சட்டசபையில் நாங்கள் சரியாகப் பணியாற்றவில்லை என்று எங்கள் கட்சிக்காரர்கள் எங்களை சந்தேகப் படுவார்கள். ஆகவே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிவாஜி கணேசன் ரசிகர் மன்றம், இராஜசேகரன் கைது என்பதோடு இருக்கட்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், மற்ற வார்த்தைகள் அவைக் குறிப்பில் இடம் பெறாது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே. வடலூர் சிராமிக் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து 6 மாதம் ஆகிவிட்டது, இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதை நீங்கள் இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக ஒப்புக்கொண்டீர்கள். ஆனால் இன்றைக்கு எடுக்கப் போவதில்லை என்று உங்களிடமிருந்து அறிந்து கொண்டேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அதை எடுக்கவில்லை என்றால் அங்கே 'சீரியஸ் லா அன்ட் ஆர்டர் சிச்சுவேஷன்' வரும். ஆகவே இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால் நிலைமை மோசமாகும் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எடுத்துக்கொண்டால் லா அன்ட் ஆர்டர் வராது, எடுக்கவில்லை என்றால் லா அன்ட் ஆர்டர் வரும் என்று சொல்வது முறையல்ல. லா அன்ட் ஆர்டர் சிச்சுவேஷன் வந்தால் சர்க்கார் அதைத் தாங்கித் தான் ஆக வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நான் சொல்கிறபோது ஏதோ சர்க்காரை மிரட்டுவது என்றல்ல. நான் மிரட்டினால் அவர்கள் மிரளமாட்டார்கள்; அவர்கள் மிரட்டினால் நானும் மிரளமாட்டேன். நான் சீரியஸ் சிச்சுவேஷன் இருக்கிறது என்று சொல்கிறேன். தீர்மானம் கொடுத்து 6 மாதம் ஆகிறது. ஒர்க்கர்ஸ் எல்லாம் அதற்கு என்ன பதில் வரும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் எடுத்துக் கொள்ளவில்லை என்றால் That itself creates another frustration.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழிலாளர் பிரச்சனையைத் தீர்க்க, சுமுகமான ஒரு நிலைமை ஏற்பட இரண்டு சாராரும் பாடுபட வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : சீப் மினிஸ்டர் ஒரு ப்ரொப்போசல் கொடுத்தும் கூட, அதை அந்த மானேஜ்மெண்ட் ஏற்றுக் கொள்ளாமல் தகராறு செய்கிறது. சீப் மினிஸ்டர் கொடுத்த சஜெஷனை அவர்கள் ரிஜெக்ட் பண்ணுகிறார்கள். ரிஜெக்ட் பண்ணுவதால் ஏற்படுகிற விவகாரம் பாக்டரியில் எண்டர் பண்ண.......

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு தரப்பிலே ஓரிரு நாட்களிலே பதில் சொல்ல இயலும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதுவரை பொறுக்கலாமே.

திரு. ரா. உமாநாத்: ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் தயவுசெய்து நான் சொல்வதைக் கேட்கவேண்டும். ஒரு கருத்தைச் சாதாரணமாக எடுத்துச் சொன்னால் பிரச்சினை எழாது. ஒரு உள்நோக்கம் கற்பிக்கின்ற வகையிலே பேசும்போது யாரும் உணர்ச்சிவசப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படும்; இப்போது இந்த அவையிலே நடந்த சம்பவங்கள் உள்ளபடியே எனக்கு சங்கடத்தைத் தருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இவையெல்லாம் அவைக்குறிப்பிலே ஏறுவது நல்லதல்ல. ஆகவே இப்போது நடந்தது பூராவையும் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கிவிடுகிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று காலையில் அலுவல் ஆய்வுக்குழுவிலே எல்லா கட்சித் தலைவர்களும் இருக்கும்போது இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்ட போது தாங்களும் அறிவித்தீர்கள், இன்றைக்கு கேள்வி நேரத்தை வைத்துக் கொள்ளலாமா வேண்டாமா என்ற பிரச்சினை வரும்போது கூட நாங்களும் சொன்னோம், இந்தப் பிரச்சினையை இன்றைக்கு எடுத்துக் கொள்ளவேண்டி இருப்பதால்—கேள்வி நேரத்தை வைத்துக் கொள்ளுங்கள்—ஆனால் மாலையிலே இதற்கான விவாதத்தை வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னோம். தாங்களும் ஒப்புக் கொண்டீர்கள். அதற்கான நோட்டீஸ் கொடுக்கப்படும் என்று. 6 மாத காலமாக இருக்கக்கூடிய இந்தப் பிரச்சினைக்கு முதலமைச்சரவர்கள் தலையிட்டு தீர்வு கண்ட பிறகு அதையும் அந்த நிர்வாகம் ஏற்றுக்கொள்ள மறுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் நீங்கள் சொல்கிறீர்கள் கன்சிலியேஷன் என்று. நாங்கள் பேசுவதற்கு அனுமதியுங்கள். அதேபோன்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் அரசு தரப்பிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்ற விளக்கத்தைத் தரட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதிலே எனக்கு எந்த விதமான ஆட்சேபனையும் கிடையாது. இதை இந்தச் சபைக்குத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் 6 மாதங்களாக பொறுத்து வந்திருக்கிறீர்கள். இரண்டொரு நாட்களில் பதில் தருவதாக அரசு தரப்பிலே சொல்லப்பட்டது. ஆகவே அவர்களிடமிருந்து பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் சொன்னேன்.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, நாங்கள் என்ன சொல்ல விரும்புகிறோம் என்பதை தெரிவிப்பதற்கு வாய்ப்புக் கொடுங்கள், அதேபோன்று அரசு தரப்பிலே என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை அவர்கள் சொல்லட்டும். அது தான் நியாயம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ** (கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவைகளையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவு இடுகிறேன். அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் தயவு செய்து அமர வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையைப் பற்றி இருசாரார்களும் சொல்லிய பேச்சுக் குறிப்புகளை அத்தனையையும்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



தாங்கள் அவைக்குறிப்பிலிருந்து எடுத்துவிட ஆணையிட்டிருக்கிறீர்கள். கடைசியிலே மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் பேசியது வரையிலும் எடுத்துவிட்டு, நாளை மறுநாள்,—நாளைக்கு விடுமுறை என்ற காரணத்தால்—18 ஆம் தேதியன்று இந்தப் பிரச்னையை கட்டாயம் எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான பதில்களை அதற்குள் தயாரித்துக்கொண்டு வரலாம். என்ன விவரங்கள் தெரிந்ததோ அவைகளை அவையிலே சொல்கிற அளவுக்கு அவை முன் வைக்கலாம். ஆகவே தாங்கள் நாளை மறுநாள் அந்தப் பிரச்னையை எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் போதுமான அவகாசம் கொடுத்தும், இன்றைக்கு எங்களுக்கு அதைப்பற்றி பேசுவதற்குக்கூட விடாமல், அரசாங்கம் அந்தப் பிரச்னையைப் பற்றி சிக்கல் இருக்கிறது என்று எடுத்துக் கொள்ள மறுப்பதால், எங்களுடைய ஆட்சேபனையை தெரிவிக்கும் வண்ணமும், இந்தப் பிரச்னையில் அரசு உடனடியாக தலையிட்டு அந்தத் தொழிலாளர்களின் பிரச்னையை தீர்க்க வேண்டும் என்று வற்புறுத்துவதற்காகவும், அரசாங்கத்தினுடைய இந்த நிலையை ஆட்சேபிப்பதற்காகவும் என்னுடைய கட்சி அவையைவிட்டு வெளிநடப்புச் செய்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)*

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 மாதகாலமாக பட்டினிகிடக்கும் அந்தத் தொழிலாளர்களை பாதுகாப்பதற்காக முதல் அமைச்சர் அவர்கள் கூறிய யோசனையை கூட அமுல் செய்ய நடவடிக்கை எடுக்க மறுப்பதன் காரணமாகவும் இந்தப் பிரச்னையை அவையிலே எடுத்து விவாதித்து, இன்றைக்கே முடிவு எடுத்து தீர்வுகாண வேண்டியதன் அவசியம் இருக்கிற காரணத்தாலேயும், அதற்கு இன்றைக்கு மறுப்பதன் காரணத்தினாலேயும், கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்களுடைய உணர்வை, அங்கே போராடிக் கொண்டிருக்கும், பட்டினி கிடக்கும் தொழிலாளர்களுக்கு தெரிவிக்கக் கூடிய முறையிலே, அரசாங்கத்தினுடைய இந்தப் போக்கை எதிர்த்து எங்களுடைய ஆட்சேபனையை, கண்டிப்பை தெரிவிக்கக்கூடிய முறையிலே நாங்களும் இந்த அவையைவிட்டு வெளிநடப்புச் செய்கிறோம்.

*(கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)*

## 2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### ஆ. ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளாதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு அறிவிப்பு. இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக இருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்த திருவாளர்கள் உமநாத், ரகுமான்கான் ஆகியவர்கள் இருக்கையில் இல்லாததால், அது இன்றைக்கு இல்லை. அடுத்து கவன ஈர்ப்புகள்.

## 4 கவன ஈர்ப்புகள்.

### அ. வேலூர் நகராட்சியில் கழிவுநீர் குடிநீருடன் கலத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என். ஏ. பூங்காவனம், தி. கா. நல்லப்பன் ஆகியோர் ஒரே பொருள் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் அதை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

*திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "வேலூர் நகராட்சியின் வடக்குப் பகுதியில் குடி தண்ணீரோடு கழிவு நீர் கலந்து விடுவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

வட ஆற்காடு மாவட்டம். வேலூர் நகராட்சியில் வட பகுதியில் உள்ள மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் சத்துவாச்சாரி-தமிழ்நாடு குடிநீர் வடிகால் திட்டத்தின் கீழ்த் தரப்படுகிறது. பாலாற்றிலிருந்து எடுக்கப்படும் தண்ணீரில் பெரும்பகுதி, வேலூர் நகராட்சியின் உயர்நிலை நீர்த்தேக்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து நகருக்கு பகிர்மானக் குழாய்கள் மூலமாக பகிர்ந்தளிக்கப்படுகிறது.

2. தலைமைப் பணியிடத்தில் நீர் சுத்திகரிக்கப்படுகிறது (Chlorinisation) நகரின் பல பகுதிகளுக்கும் செலுத்தப்படும் தண்ணீரில் தேவையான குளோரின் (2பி.பி.எம்.) அளவு நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. இடையில் கழிவுநீர் கலக்க ஏதுவில்லை. இன்றுவரை பொதுமக்களிடமிருந்து இது தொடர்பான எவ்வித முறையீடும் இல்லை.







3. தவிர, மூன்று மாதத்திற்கொருமுறை நீர் பகுப்பாய்வாளர் (Water Analyst), கிண்டி அவர்களால் நீர் மாதிரி பரிசோதனை (Water Sample Examination) பகுப்பாய்வு செய்து தண்ணீர் "பாதுகாக்கப்பட்ட குடிநீராக திருப்திகரமாக உள்ளது" என சான்று தந்துள்ளார். இம்மாதிரி பகுப்பாய்வு கடைசியாக 22—12—80 அன்று செய்யப்பட்டது. அதிலும் குடிநீரில் கெடுதல் ஏதுமில்லை என அறியப்படுகிறது.

4. மேலும், மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வட ஆற்காடு வட்டம், அவர்கள் 9—4—81 அன்று வேலூர் குடிநீர் தலைமைப் பணியிடம் முதலியவைகளை ஆய்வு செய்து கழிவு நீர் ஏதும் குடிநீருடன் கலக்கவில்லை எனக் கூறியுள்ளார்.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரத்தை இரண்டு பகுதிகளாக பிரித்து தண்ணீர் விடுகிறார்கள். 40 ஆண்டுகள் காலமாக எந்தவித குறையும் இல்லாமல் ஒரு வித சுவையோடு இருந்த குடிதண்ணீர், இப்போது வடக்குப் பகுதியில், கடந்த 5 மாத காலமாக கிணற்று நீரை விட மோசமான சுவையில் அதனுடைய பழைய சுவை மாறி கெட்டுப்போயிருக்கிறது. அதனுடைய உண்மை நிலையை அமைச்சர் அறிவாரா? அதைப்போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் கெட்டுப் போய்விடவில்லை என்றும் மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வட ஆற்காடு வட்டம் அவர்கள் 9—4—1981 அன்று வேலூர் குடிதண்ணீர் தலைமை பணியிடங்களை முறையாக ஆய்வு செய்து கழிவு நீர் எதுவும் குடிதண்ணீருடன் கலக்கவில்லை என்றும் கூறியிருக்கிறார்கள்.

[முற்பகல் 10.10]

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் தண்ணீர் வடபகுதி, தென்பகுதி என இரு பகுதிகளாக பிரித்து வழங்கப்படுகிறது, ஏற்கனவே எங்கேயிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டதோ அங்கேயிருந்து இப்போதும் தண்ணீர் எடுக்கப்பட்டு தெற்குப் பகுதிக்கு வழங்கப்படுகிறது. ஆனால் சத்துவாச்சேரிக்கு அருகிலே உள்ள கிணற்றிலேயிருந்து எடுக்கிற தண்ணீரை வடக்கு பகுதிக்குத் தருகிறார்கள். உண்மை என்னவென்று சொன்னால் வேலூர் நகர முழுவதுமிருந்து வருகிற கழிவுநீர் பாலாற்றிலே கலக்கிறது. அதற்குக் கீழே இந்த தண்ணீர் எடுக்கப்படுகிற அந்த ஊற்றுகள் இருப்பதன் விளைவாக இந்தத் தண்ணீர் முழுமையும் கெட்டுவிட்டது, என்பதுதான். அதை அரசு ஆராய்ந்து மேலும் விசாரித்து அந்த நீர் இந்த நீரோடு கலக்காமல் இருக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இடையிலே கழிவு நீர் கலக்க ஏது இல்லை. இன்றுவரை பொது மக்களிடம் இருந்து இது சம்பந்தமாக எந்தவிதமான முறையீடும் வரவில்லை என்ற தகவல் எனக்குத் தரப்பட்டிருக்கிறது.

ஆ. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நெசவாளர் சங்கங்களில் இருந்து

துணிகள் கொள்முதல் செய்யாதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் இரா. தாமரைக் கனி எம். சின்னசாமி ஆகியோர் ஒரே பொருள் பற்றிகவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் அதை மாண்புமிகு கைத்தறி கதர் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. இரா. தாமரைக்கனி; தலைவர் அவர்களே, "கோ-ஆப் டெக்ஸ நிறுவனம், நெசவாளர் சங்கங்களில் இருந்து துணிகள் கொள்முதல் செய்யாததால் துணிகள் தேங்கி நெசவாளர் சங்கங்கள் இயங்காமலிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி கதர் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தமிழகத்திலுள்ள 1,151 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தலைமைச் சங்கமாக விளங்குகிறது. அச் சங்கங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களான நூல் மற்றும் இரசாயனப் பொருட்களை நியாயமான விலையில் அவற்றுக்குக் கிடைக்கச் செய்வதுடன் அச் சங்கங்களில் உற்பத்தியாகும் துணி ரகங்களில் 50% வரை கொள்முதல் செய்து அதன் 444 கிளை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து வருகிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் கைத்தறி துணிகளுக்கு கோ-ஆப் டெக்ஸ் நிதி நிலையைப் பொருத்து பெரும்பாலும் அவ்வப்போது பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. விற்பனை கூடங்களுக்கான மாதாந்திர தேவைப் பட்டியலை சேகரித்து கொள்முதல் செய்யும் பிராந்தியங்களுக்கு கோ-ஆப் டெக்ஸ் அனுப்புகிறது. உற்பத்தி செய்யும் சங்கங்களில் திறனைப் பொறுத்து தேவைப்பட்டியல்களின் படி பிராந்திய நிர்வாகியால் பரவலாக எல்லா சங்கங்களிடமிருந்தும் கைத்தறி துணிகள் கொள்முதல் செய்யப்படுகிறது. சரக்குகள் அனுப்பப்பட்டதற்கான பட்டியல்கள் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து



கோ-ஆப்டெக்சுக்கு கிடைக்கப்பட்டவுடன் கோ-ஆப்டெக்ஸ் ஒப்புதல் பட்டியல்கள் தயாரித்து, சங்கத்தினால் அனுப்பப்பட்ட சரக்கு பட்டியல்களுடன் இணைத்து அதன் அடிப்படையில் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.

கோ-ஆப்டெக்சினால் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து மார்ச் 1980 முதல் பிப்ரவரி 1981 வரை மாவட்ட வாரியாகக் கொள்முதல் செய்யப்பட்ட விவரம் மற்றும் பணம் பட்டுவாடா செய்யப்பட்ட விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| வரிசை எண். | மாவட்டம். | மொத்தம் | |
|---|---|---|---|
| | | கொள்முதல் | பட்டுவாடா செய்யப்பட்ட தொகை. |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | கோயம்புத்தூர் | 738 | 612 |
| 2 | செங்கல்பட்டு | 297 | 250 |
| 3 | தர்மபுரி | 13 | 12 |
| 4 | கன்னியாகுமரி | 98 | 87 |
| 5 | சென்னை | 27 | 26 |
| 6 | மதுரை | 306 | 227 |
| 7 | வட ஆற்காடு | 222 | 204 |
| 8 | பாண்டிச்சேரி | 1 | .. |
| 9 | இராமநாதபுரம் | 644 | 605 |
| 10 | சேலம் | 625 | 579 |
| 11 | தென் ஆற்காடு | 154 | 67 |
| 12 | தஞ்சாவூர் | 81 | 75 |
| 13 | திருச்சி | 249 | 214 |
| 14 | திருநெல்வேலி | 81 | 67 |
| | | 3,536 | 3,075 |

தவிர, 1981 மார்ச் மாதத்தில் மட்டும் ரூ. 349 இலட்சம் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் பணம் பட்டுவாடா செய்துள்ளது. நாளது தேதியில் கோ-ஆப்டெக்சினால் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய தொகை ரூ. 374 இலட்சங்களேயாகும். ஒரு வருட காலத்தில் ரூ. 3536 இலட்சம் மதிப்புள்ள கைத்தறி துணிகள் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல்

செய்யப்பட்டிருப்பதை நோக்குகையில் ரூ. 374 இலட்ச நிலுவைத் தொகை சாதாரணமாக ஏற்படக்கூடிய நிலையே என்பது புலனாகும்.

பொதுவாக கோ-ஆப்டெக்ஸ், ஆண்டு முழுமையும், கைத்தறி துணிகளை பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்து வருகிறது. ஆனால் கைத்தறி துணிகளின் விற்பனை என்பது தீபாவளி, பொங்கல் போன்ற விழாக்காலங்களில்தான் அதிகம் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த தீபாவளி பண்டிகையின்போதும் (அக்டோபர்-நவம்பர் '80) பொங்கல் விழாவின் போதும் (ஜனவரி '81) 20% சிறப்பு தள்ளுபடி அரசு வழங்கிய காலத்தில் பிரதம சங்கங்களும், கோ-ஆப்டெக்சும் கீழ்க்கண்ட அளவில் கைத்தறி துணிகளை விற்பனை செய்தன:

| | பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள். | கோ-ஆப்டெக்ஸ் |
|---|---|---|
| | (ரூ. கோடியில்) | |
| தீபாவளி '80 | 8.79 | 20.40 |
| பொங்கல் '81 | 6.72 | 6.16 |

பொங்கலுக்குப் பின் சாதாரணமாக கைத்தறி துணி விற்பனையில் மந்த நிலை ஏற்படுவது வழக்கம்.

கைத்தறி துணிகளின் சரக்கு இருப்பு தற்பொழுது கோ-ஆப்டெக்சிலும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் முறையே ரூ. 24 கோடி மற்றும் ரூ. 14 கோடி ஆக உள்ளது. தமிழ்நாட்டிலுள்ள எல்லா பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் ஆண்டு உற்பத்தி சுமார் ரூ. 56 கோடி மதிப்புள்ளதாகும். தற்பொழுது பிரதம சங்கங்களில் தேங்கியுள்ள சரக்குகளின் மதிப்பு சுமார் மூன்று மாத உற்பத்தி அளவே ஆகும். எனினும், கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை கொடுக்கும் நோக்கத்துடன் நிவாரணம் அளிக்கும் வகையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மேலும் பிரதம சங்கங்களிலிருந்து சுமார் ரூ. 200 லட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்துள்ளது.

தற்பொழுது நடைபெற்று வரும் 27-வது அகில இந்திய கைத்தறி இருவார விழாவையொட்டி சென்னையிலும், மாவட்டங்களின் முக்கிய நகரங்களிலும் கைத்தறி கண்காட்சிகள் நடைபெற்று வருகின்றன. இதில் கலந்துகொள்ளுகின்ற எல்லா நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், கைத்தறித் துணிகளின் விற்பனையில் அரசு அளித்துள்ள 10 சதவிகிதம் தள்ளுபடி மானியச் சலுகையை பயன்படுத்தி கோ-ஆப்டெக்சும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், அவற்றின் சரக்கு இருப்பை கணிசமான அளவிற்கு விற்று தீர்க்கும் என எதிர்பார்க்கிறது.



திரு இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள சங்கத் தலைவர்கள் கோ-ஆப்டெக்ஸ் ஆர்டர் இல்லாமல் தனியார்களிடம் ஒப்பந்தம் செய்து தேவையில்லாத ரகங்களை தங்கள் சொந்த ஆதாயம் வேண்டி உற்பத்தி செய்து முடக்கி வைப்பதுடன் தங்களது தனிப்பட்ட வருமானத்தைப் பெருக்குவதுடன் துணி தேக்கம் என்கின்ற கோஷத்தை எழுப்பி அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துகிறார்கள். இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? கோ-ஆப்டெக்ஸில் உள்ள சில உயர் மட்ட அதிகாரிகள் சொசைட்டி தலைவரிடம் ரகசிய ஒப்பந்தம் செய்து தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்து சொசைட்டி இயங்க முடியாமல் செய்கின்றனரே, இதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தை மேற்கொண்டு, அப்படி ஏதாவது தவறு நடக்குமேயானால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். திரு ராமசெல்வம் என்ற அதிகாரி ஒருவர் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டிய துணியை இப்படி தவறான வழிகளில் பயன்படுத்தியதற்காக அவர்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எந்த அதிகாரியாக இருந்தாலும், யாராக இருந்தாலும் அரசு கொள்கைக்கு விரோதமாக இருப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு தாமரைக்கனி: தலைவரவர்களே, அரசு கைத்தறித் துணித் தேக்கத்தைப் போக்குவதற்கு பள்ளி மாணவர்கள் அரசு ஊழியர்கள் ஆகியவர்களுக்கு சீருடை கட்டாயமாக உடுத்த வேண்டுமென்று அரசு ஆணையிடுமா? அதுமட்டும் அல்லாது, கைத்தறித் துணித் தேக்கத்தைப் போக்க, போர்க்காலவசூல் நடவடிக்கை போல எடுத்து, நடிகைகளையும், நடிகர்களையும் உபயோகித்து துணி விற்பனையை அதிகரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவர் அவர்களே, கைத்தறித் துணித் தேக்கத்தைப் போக்குவதற்காக பலவகையான நடவடிக்கைகளை எடுத்து தேக்கமில்லாத சூழ்நிலை உருவாகி வருகின்றது. அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தேக்கத்தைப் போக்குவதற்கு நடிகர், நடிகைகளைப் பயன்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். நடிக, நடிகையர் நிற்பதன் காரணமாக, அவர்களுக்கு இருக்கிற கவர்ச்சி காரணமாக அதிகமான துணிகள் விற்குமென்று சொல்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற கவர்ச்சியை விட கைத்தறித் துணிகளுக்கு கவர்ச்சி அதிகமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கைத்தறிக் கண்காட்சிக்கு சென்று பார்த்தால் தெரியும். மக்கள் வெள்ளம் போல் கூடி அதற்கு ஆதரவாக வாங்கிச் செல்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[9981 ஏப்ரல் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (குறுக்கீடு) ஒரு கட்சிக்கு ஒருவர்தான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது கேள்வி கேட்கலாம் என்று அலுவல் ஆய்வுக்குழுவிலே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

5. வரவு செலவுத் திட்டம், 1981–82
வாக்கெடுப்பு— (தொடர்ச்சி)

அ. கோரிக்கை எண். 24 தொழில்கள் (தொடர்ச்சி

ஆ. கோரிக்கைகள் 49. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1981-82 ம் ஆண்டு மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண்கள் 24, 49ன் மீது விவாதம் தொடரும்.

திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத்தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டிற்கான தொழில் துறையினுடைய மானியத்தின் மீது காங்கிரஸ பேரியக்கத்தின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை மாமன்றத்தின் முன்னாலே வைப்பதற்கு விரும்புகிறேன்.

அரசு அளித்திருக்கிற 'தொழில் கொள்கையும் திட்டங்களும்' என்ற 1981–82 ஆம் ஆண்டிற்கான விவர அறிக்கையிலே மதுரை மாவட்டத்திலே பாளையம் பகுதியிலே ஏறத்தாழ 32 கோடி ரூபாய் செலவிலே சிமென்ட் தொழிற்சாலை ஒன்றை துவங்குவதற்கான அறிவிப்பு இருப்பதைப் பார்த்து நான் இந்த அரசை பாராட்டுகிறேன். ஆனால் தொடர்ந்து இதை நிறுவுவதற்கு மத்திய அரசிடம் நாம் அனுமதி கேட்டிருக்கிறோம். 'லெட்டர் ஆப் இன்டென்ட்'; அது கிடைத்து விடுமேயானால், இந்த ஆண்டிற்குள்ளே நாங்கள் அந்த வேலையை துவங்குவோம் என்ற செய்தியும் வந்திருக்கிறது. நான் நம்முடைய அரசை கேட்டுக் கொள்வேன். மத்திய அரசுக்கு எழுதி விட்டோம், அத்தோடு நம்முடைய கடமை நிறைவேறி விட்டதாக கருதாமல் எப்படியும் முயன்று, முனைந்து இந்த அனுமதியை பெறுவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த விவர அறிக்கையிலே 'சிறுதொழில்கள் பொறுத்தவரையில் 'பெர்மனென்ட் ரெஜிஸ்ட்ரேஷன்' என்று சொல்லப்படுகிற நிரந்தரமான பதிவு என்பது 1978–ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே 18,789 நிறுவனங்கள் என்று இருந்த எண்ணிக்கை 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 34 ஆயிரம் என்று உயர்ந்திருக்கிறது என்பதைக்காண முடிகிறது. நிரந்தரமான பதிவு என்பது கூடியிருந்தாலும் கூட இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற பல்வேறு சிறு தொழில்கள் முழுமையாக இயங்கிக் கொண்டிருக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே வேதனையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



1981 ஏப்ரல் 16] (திரு. என். எஸ். வி. சித்தன்)

இந்த விவர அறிக்கையிலே இன்னொன்றையும் என்னால் பார்க்கமுடிகிறது. புதிதாக சிறுதொழில்கள் துவங்குவதற்கு பல்வேறு இன்னல்கள் இருக்கின்றன. லைசன்ஸ் வாங்குவதிலேயிருந்து, இடம் கிடைப்பதிலிருந்து, மின்சாரம் வாங்குவது பணம் கடன் வாங்குவதிலேயிருந்து, ஒவ்வொரு துறையாக தொழில் துவங்குபவர்கள் பந்தாடப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது.

இந்த அறிக்கையிலே புதிய தொழில்கள் துவங்குவதற்கு 'பாக்டரி ஆக்ட்டை' பொறுத்த வரையிலும், ஈ. எஸ். ஐ. பொறுத்த வரையிலும், புராவிடென்ட் பண்ட்டை பொறுத்த வரையிலும் இருக்கிற விதிகளை இன்னும் கொஞ்சம் எளிமையாக்குவதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதை என்னாலே காண முடிகிறது நான் கேட்டுக் கொள்வேன் இந்த பரிசீலனை விரைவிலே முடிந்து, புதிதாக தொழில் துவங்குபவர்கள் அடைகிற சிக்கல்களை குறைத்து, அதன்மூலமாக அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(திரு. வி. வி. சுவாமிநாதன்)—தலைமை

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்று முதல் ஆண்டிலே, 1977–ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் கிராமப்புற சிறுதொழில்கள் மேம்பாட்டை அடிப்படையாக கொண்டே இந்த அரசினுடைய தொழில் கொள்கை அமையும் என்று பெருமையோடு கூறினார்கள். தற்போது இந்த அரசு பொறுப்பேற்று நான்கு ஆண்டுகள் கழிந்திருக்கின்றன. தமிழகத்திலுள்ள விவசாயிகள் வருடத்தில் ஆறு மாதங்கள் வேலையின்றி வாடுகிறார்கள். அவர்களுடைய வாட்டத்தை ஓரளவு போக்குவதற்கு முயற்சிகளை, வேளாண்மையை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் எத்தனை என்பதை அமைச்சர் அவர்கள் பதிலிலே சொல்வார்களேயானால் நான் பெரிதும் மகிழ்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த தொழில் கொள்கையும் திட்டங்கள், அரசினுடைய 1981-82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையிலே இரண்டாம் பக்கத்திலே நான் பார்க்கிறேன். சிறு தொழில், குடிசைத் தொழில், மிகச் சிறிய தொழில், வீட்டுத் தொழில் ஆகியவற்றை பரவலாக வளர்ச்சியடையச் செய்வதே நமது மாநில அரசுத் தொழிற் கொள்கையின் முக்கிய நோக்கமாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றையதினம் உண்மையான நிலைமை என்னவென்றால், கிராமங்களிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற தொழில்கள் ஒரு நாளைக்கு மூன்று மணி நேரம் கூட இயங்க முடியாத நிலையில் இருக்கின்றன. மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. அந்த தொழிற்சாலைகளுக்கு கொடுக்கப்படுகின்ற மின்சாரம் விவசாயிகளுக்கான மின்சார இணைப்போடு இருக்கின்ற காரணத்தினாலே—நான் இன்னமும் தெளிவாகச் சொல்கிறேன். என்னுடைய திருமங்கலம் தொகுதியில், கிராமப்புற பகுதிகளில் சிறு தொழில்களுக்கு ஒரு நாளைக்கு மூன்று மணி மின்சாரம்தான் தொடர்ந்து கிடைக்கிறது. அடுத்த மூன்று மணி நேரம்

எப்போது வரும் என்று சொல்ல முடியாத சூழ்நிலை இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே கிராமங்களில் தொழில் துவங்குபவர்களுக்கு வாய்ப்பாக, அதிக அளவு மின் சாரத்தை கொடுப்பதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. அந்த விவர அறிக்கையிலே மூன்றாம் பக்கத்திலே தீப்பெட்டித் தொழில், தேயிலைத் தொழில், தென்னை நார்த் தொழில் போன்ற துறைகளை மேம்படுத்த அதிக வாய்ப்புள்ளதால் அவற்றிற்கு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதில், தொழில் வணிகத் துறை கவனம் செலுத்தும் என்கின்ற அறிவிப்பை நான் பார்க்கிறேன். இதிலே உண்மையான நிலை என்னவென்றால் ஒரு தீபபெட்டி தொழிற்சாலை துவங்கவேண்டுமென்றால், லைசன்ஸ் வாங்குவதற்காக அல்லது அரசாங்க இலாக்காக்களிடம் போய் வரவேண்டுமென்றால், முதலாவது ஊராட்சி ஒன்றியம் அல்லது நகராட்சி, அதற்கு பின்னால் டி. எச். ஒ. ஆபீசுக்கு போகவேண்டியிருக்கிறது. டி. ஆர். ஓ அனுமதி பெற வேண்டியிருக்கிறது. எஸ். பி. அனுமதி பெறவேண்டியிருக்கிறது.

[முற்பகல் 10.20]

இப்போது பல்வேறு சிக்கல்கள் இருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் முன்னர் ஒரு முறை பேசும்போது புதிய சர்க்கரை ஆலைகள் இனி அரசுத் துறையிலே அல்லது கூட்டுறவுத் துறை மூலமாகவோ ஆரம்பிக்கப்படும் என்று கூறியதாக எனக்கு நினைவு. டைரக்டர் ஆப் ஷுகர்ஸ் அவர்கள் திரு. லட்சுமிதரன் அவர்கள் சில நாட்களுக்கு முன்பு சிறிய சர்க்கரை ஆலைகள் அரசுத் துறையில் அல்லது கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த அறிவிப்புகள் அறிவிப்புகளாகவே இருக்கின்றனவா அல்லது அதற்கான தீவிரத்திட்டங்கள் உருவாக்கப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். ஆகவே சிறிய சர்க்கரை ஆலைகளைத் துவக்கக்கூடிய முயற்சிகளில் இந்த அரசு எவ்வளவு தூரத்திற்கு முன்னேறியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சில மாதங்களுக்கு முன்னால் தமிழகத்தில் இருக்கக்கூடிய தொழில் அதிபர்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் துணையோடு சென்னையில் ஒரு கூட்டம் நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு பேசினார்கள்: அந்தக் கூட்டம் டாஜ் கோரமண்டல் ஹோட்டலில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு முதல் அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, கிராம பொருளாதார மேம்பாட்டுக்குத் துணையாக தொழில்கள் தொடங்குவதற்கு தொழில் முனைவர்கள் (என்டர்ப்ருனர்ஸ்) தக்க திட்ட அறிக்கைகளுடன் (ப்ராஜெக்ட் ரிப்போர்ட்ஸ்) அணுகுவார்களேயானால் தொழில் தொடங்கு



வதற்கு எல்லாவித வசதிகளும் ஒரே குடையின் கீழ் தரப்படும் என்று சொன்னார்கள். அதாவது, நிலம், லைசன்ஸ். தண்ணீர் மின்சாரம் போன்றவை அளிக்கப்படும் என்று சொன்னார்கள். வேறு வேறு அலுவலகங்களுக்குச் செல்லாமல் எல்லாவித வசதிகளும், ஒரு தொழில் தொடங்குவதற்கு வேண்டிய அனைத்து வசதிகளும் ஒரே குடையின்கீழ் அளிக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படி ஒரே குடையின்கீழ் துவக்கப்பட்ட தொழில்கள் எத்தனை? என்னென்ன மாதிரியான தொழில்கள் அவ்விதம் நடத்தப்படுகின்றன? ஒரே குடையின்கீழ் மழைக்கு அல்லது வெயிலுக்கு ஒதுங்கி சுகம் பெற்றவர்கள் அல்லது வாய்ப்பு பெற்றவர்கள் எவ்வளவு பேர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்களை எடுத்துக் கொண்டால், தற்போதுள்ள சூழ்நிலையில் ஆண்டு முழுவதும் அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை, நூல் விலை உயர்வு, கைத்தறித் துணித் தேக்கம் போன்ற காரணங்களால் அவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு இல்லாத ஒரு நிலைதான் இன்று இருக்கிறது. அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கைகளில் ஒரு கொள்கையாகும். நெசவாளர்கள் அதிகமாக வாழ்கிற பகுதிகள் மதுரை, சேலம் போன்ற பகுதிகளாகும். ஆகவே மதுரை, சேலம் போன்றயிடங்களில் தொழில்பேட்டைகளை உருவாக்கி அதன் மூலம் இன்றைய தினம் வாடுகிற கைத்தறி நெசவாளர்களுக்கு தக்க வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சிக்கான பொது நிதி நிறுவனம் டி. ஐ. ஐ. ஸி. யாகும். இதன் நிர்வாகக் குழுத் தலைவர் இன்னும் நியமனம் செய்யப்படவில்லை என்று நான் கேள்விப்படுகிறேன். அதேபோல் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் இடங்கள் சில இன்னும் நிரப்பப்படாமல் இருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். எவ்வளவு நாட்களுக்கு இப்படிப்பட்ட ஒரு வலு வாய்ந்த நிறுவனம் நிர்வாகக் குழு தலைவர் இல்லாமல் செயல்படப் போகிறது என்று தெரியவில்லை. தமிழகத்தில் அந்தத் தலைவர் பதவிக்கு தகுதியான ஆள் இல்லையென்று அரசாங்கம் கருதுகிறதா அல்லது அது பற்றி விரைவில் அறிவிக்கப்படுமா என்பது பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல வேளை ஒரு திறமையான எம். டி; அதற்கு கிடைத்திருக்கிறார்கள். ஆகவே சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நான் அரசைக் கேட்டுக்கொள்வது அந்தத் தலைவர் பதவியில் ஒருவரை நியமனம் செய்யவேண்டும். அதோடு காலியாக இருக்கிற நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பதவிகளும் நிரப்பப்பட வேண்டும். இதற்கு முன்னால் இருந்த சேர்மன் மீது கழிந்த ஆண்டு சட்டமன்றப் பேரவை மேலவையில் புகார்கள் கூறப்பட்டன. அப்போது அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கவில்லை. மத்திய புலனாய்வுத் துறை மூலம் விசாரணை

வரும் என்று தெரிந்தவுடன் தற்போது வழக்குத் தொடரப்பட்டிருப்பதாக அறிகிறேன். எனக்கு கிடைத்துள்ள தகவல் சரி என்று கருதுகிறேன். ஆகவே தும்பைவிட்டு வாலைப் பிடிக்காமல் விழிப்போடு இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொது நிதி நிறுவனங்களிலிருந்து புதிய தொழில்கள் தொடங்குவதற்குக் கடன் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படும் கடன்கள் முழுமையாக என்ன காரியத்திற்காக வழங்கப்பட்டதோ அந்தக் காரியத்திற்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை கண்காணிப்பதில் முனைப்பாக இருக்க வேண்டும். பாலோ அப் ஆக்ஷன் இருக்க வேண்டும். பொது நிறுவனங்களிடம் கடன் பெற்று தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டதற்குப் பின்னால் வழங்கப்பட்ட கடனையும் அதற்கான வட்டியையும் திரும்பப் பெறுவதில் விழிப்போடு இருக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது) எதிர்பாராதவிதமாக ஏதாவது தொழில்களில் சிக்கல்கள் ஏற்படாமல் இந்த நிறுவனங்கள் உதவவேண்டும். இன்றைய தினம் ஒருசில தொழில்கள் இந்த நூற்றாண்டில் இல்லாத அளவிற்கு கடுமையானதொரு கால கட்டத்தை நோக்கியிருக்கின்றன. அந்தத் தொழில்களுக்கு மேலும் உதவி செய்து உப தொழில்கள் ஆரம்பிக்க உதவி செய்யவேண்டும். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், சைக்கிள் டயர், ரிக்ஷா டயர் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவிலேயே ஒரு மோசமான சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறது. அவைகளைப் பொறுத்தவரையில் உப தொழில்கள் தொடங்குவதற்கு கடன் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது தொழில் துறைக்கு உட்பட்ட நிறுவனம்தான் டான்ஸி. இதை தமிழ்நாடு அரசின் வெள்ளை யானை, என்று சொன்னால் பொருந்தும். இந்த நிறுவனத்தின் நோக்கம் மக்களுக்குத் தரமான உறுதியான பொருள்களை வழங்கவேண்டும் என்பதுதான் தனியார் நிறுவனங்கள் விற்கின்ற பொருள்களின் விலையோடு இந்த டான்ஸியில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விலைகளை நான் ஒப்பிட்டுப் பார்ப்போமானால்—பீரோ, கட்டில், நாற்காலி இவற்றின் விலைகள் கட்டாயம் அதிகமாகத்தான் இருக்கின்றன. நானே வாங்கி இருக்கிறேன். அதற்குக் காரணம் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஓவர் ஹெட் சார்ஜஸ் அதிகமாக இருக்கிறது. மற்ற தனியார் நிறுவனங்களோடு போட்டி போடக்கூடிய அளவில் டான்ஸி நிறுவனம் பொருட்களை தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் வறட்சி நிலவுவதால் துளைக் கிணறுகள் தோண்டுவதற்கு குடிநீர் வடிகால் வாரியம், 'ரிக்'களை, அண்டை மாநிலங்களிலிருந்து அதிக வாடகை கொடுத்து வாங்குகிறார்கள். முன்பு ஒரு முறை டான்ஸியே 'ரிக்ஸ்' செய்ய அரசாங்கத்திடம் அனுமதி கேட்டபோது அனுமதி மறுக்கப்பட்



டதாகவும் பின்னர் காலம் கடந்து அனுமதி வழங்கப்பட்டதாகவும் செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தி உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன். முன்பே அனுமதி வழங்கப்பட்டிருந்தால் இன்றையதினம் அது நமக்கு உதவியாக இருந்திருக்கும்.

'ஸிட்கோ' புதிய தொழில்கள் தொடங்க சிறுசிறு ஷெட்கள் கட்டி வாடகைக்கு விடப்படுகின்றன. இந்த ஷெட்கள் சிறியவைகளாக இருப்பதால் யாரும் தொழில்கள் தொடங்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. உதாரணத்திற்கு சொல்லவேண்டுமென்றால் எங்கள் திருமங்கலத்தில் சிறுசிறு ஷெட்கள்தான் கட்டியிருக்கிறார்கள். அவை நிரப்பப்படாமல் இருக்கின்றன. ஆகவே எதிர்காலத்தில் ஷெட்கள் போடும்போது கலந்து பேசி, ஆலோசனை செய்து, தேவையான இடத்தில் தேவைக்குத் தக்கபடி கட்ட ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்தியாவிலேயே கடலோரப் பகுதிகள் தமிழகத்திலும் கேரளாவிலும்தான் அதிகமாக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது.

இருந்தபோதிலும் தமிழ்நாடு இரசாயனப் பொருள்கள் உற்பத்தியில் பின்தங்கிய நிலையில்தான் உள்ளது. புதிதாக இரசாயனத் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு முறையான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தூத்துக்குடியில் கடல்படு இரசாயனப் பொருட்கள் ஆய்வு நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த ஆய்வு நிலையம் எவ்வளவு இரசாயனப் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு ஆலோசனைகள் வழங்கியுள்ளது எத்தனை தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, என்னென்ன பொருள்கள் உற்பத்தியாகின்றன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று கருதுகிறேன்.

இது கம்ப்யூட்டர் யுகம். எலக்ட்ரானிக் சாதனங்கள் தொழில் வளர்ச்சியில் இன்று முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் எலக்ட்ரானிக் தொழிற்சாலைகள் போதுமான அளவிற்கு தொடங்கப்படவில்லை என்பதோடு இருக்கின்ற மற்ற தொழிற்சாலைகள் எதிர்பார்த்த அளவில் விரிவாக்கம் செய்யப்படவில்லை. தமிழ்நாட்டில் என்ன இல்லை? முன்பு சொன்னார்கள், தட்டினால் தங்கம், வெட்டினால் வெள்ளி, இடித்தால் இரும்பு என்றெல்லாம் சொல்லப்பட்டன. ஆனால் இன்று தமிழ்நாட்டில் எதிர்பார்த்த அளவிற்கு தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை. அதற்குக் காரணம் அரசாங்கத்தின் அணுகுமுறையேயாகும். அரசாங்கத்தின் அக்கறை குறைவினால் நமது மாநிலத்தில் தொடங்கப்படவேண்டிய தொழில்கள் அண்டை மாநிலங்களுக்கு சென்றுவிட்டன. நான் ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். கேரள முதலமைச்சர் திரு. நாயனார் அவர்கள் சில நாட்களுக்கு முன்னர் சென்னை வந்திருந்தபோது தமிழநாட்டில் இருக்கக்கூடிய தொழில் அதிபர்களை அழைத்து கேரளாவிற்கு

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1981 ஏப்ரல் 16

வாருங்கள்: உங்களுக்கு மின்சாரம் கொடுக்கிறோம், போதிய வசதிகள் செய்து தருகிறோம் என்று சொன்னார்கள். அப்போது அவர்களிடம் ஒரு தொழில் அதிபர் கேட்டதாகச் சொன்னார்கள். மின்சாரம் எந்தளவிற்கு நீங்கள் கொடுப்பீர்கள் என்று கேட்டதற்கு 'ஸ்கை ஈஸ் தி லிமிட்' என்று அவர்கள் சொன்னார்களாம். உங்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் மின்சாரம் கொடுக்க நாங்கள் தயாராகயிருக்கிறோம் என்று கேரள முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆந்திர மாநிலத்தின் டைரக்டர் ஆப் இன்டஸ்ட்ரீஸ் சென்னைக்கு வந்து இங்குள்ள தொழில் அதிபர்களை அழைத்து எங்கள் மாநிலத்திற்கு வாருங்கள் என்று அழைத்திருக்கிறார்கள். நாம் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். நமது தொழில் துறை அமைச்சர் அவர்கள் வெளி மாநிலங்களுக்குப் போய் அங்குள்ள தொழில் அதிபர்களை எங்கள் மாநிலத்திற்கு வாருங்கள், இங்கே தொழில்கள் துவங்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்வதற்கு நாங்கள் தயார் என்று சொல்கின்ற காலம் வருமா என்று எண்ணிப்பார்க்கவேண்டும். அதுமட்டுமல்ல பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த போது சென்னை துறைமுகத்தை உலக வங்கியின் உதவியுடன் விரிவாக்கம் செய்யும் பிரச்சினை எழுந்தது. முன்பு ஹைகோர்ட் பீச் என்று சொல்வார்களே அதிலிருந்து வார் மெமோரியல் வரை உள்ள கடற்கரைப் பகுதிகளை துறைமுகத்திற்கு அளிக்க வேண்டிய ஒரு நிலை வந்தது. அப்போது சிலர் அதை ஆட்சேபித்தார்கள். அப்போது பெருந்தலைவர் அவர்கள் கேட்டார்கள். நீங்கள் தொழில்கள் பெருக விரும்புகிறீர்களா அல்லது அழகு பார்க்க விரும்புகிறீர்களா என்று.

[முற்பகல் 10.30]

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் அப்படி ஒரு தொலை நோக்கத்தோடு துறைமுக விஸ்தரிப்பை ஏற்படுத்தினார்கள். அம்மா திரியான தொலை தூர நோக்கோடு நம்முடைய அரசு பணியாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைச்சர் அவர்கள் இளைஞர் துடிப்பானவராக இருக்கிறார், வருங்காலத்திலே தமிழகத்திலே அதிகமான தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த தொழில்கள் சம்பந்தமாக மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். வேலை வாய்ப்பு அதிகரிக்கவும் உற்பத்தி பெருகவும் வேண்டுமென்ற நோக்கத்தோடு தொழில்கள் அமையப்பெற வேண்டும் என்பதுதான் முக்கியமான அம்சமாகும். 1927-இல் நேருஜி அவர்கள், மனிதருள் மாணிக்கம் என்றும் ஆசியாவின் ஜோதி என்றும்



1981 ஏப்ரல் 16] [திரு. ரா. கிருஷ்ணன்]

பாராட்டப்பட்ட அவர்கள் பேசியதை நான் இங்கே குறிப்பிடுவது அவசியம் என்று நினைக்கிறேன். 'I must frankly confess that I am a socialist and a republican and am no believer in kings and princes or in the order which produces the modern kings of industry who have greater power over the lives and fortunes of men than even the king of old. India will have to go the socialist way too if she seeks to end her proverty and inequality." என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆக இன்றைக்கு இருக்கக்கூடிய பெரிய தொழில் அதிபர்கள் குறிப்பாக மிகப் பெரிய தொழிலதிபர்கள் இதற்கு முன்பாகச் சொல்வார்கள் 72 குடும்பங்கள் என்று சொல்வார்கள், சமீப காலம் வரை 20 குடும்பங்கள் இப்போது 5 குடும்பங்களாகச் சுருங்கிவிட்டிருக்கிறது. அந்த அளவுக்கு இந்தியாவினுடைய தொழில்கள் குறிப்பிட்ட சில நபர்களிடத்திலே சிக்கியிருக்க வேண்டிய ஒரு நிலைமை நேரு சொன்னதற்கு நேர்மாறாக இருக்கிறது என்பதைத்தான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன், ரூர்கேலா, பிலாய் போன்ற இடங்களில் பெரிய தொழிற்சாலைகள் உருவாகியிருக்கலாம் ஆனால், அதே நேரத்திலே சாயத் தொழிற்சாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். அதனால் சாதாரண மக்களுக்கு என்ன பயன் என்பதைப் பார்க்க வேண்டும். ரோகிணி பறக்கவிடப்பட்டிருக்கலாம்.—அதனால் ஏழை மக்களுக்கு என்ன பலன் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு உண்ண உணவும் உடுத்த உடையும் இல்லாமல் வாழ்க்கை நடத்தமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவர்களுடைய வேலைவாய்ப்புகள் பெருகவும் வாழ்க்கைத்தரம் உயரவும் தேவையான உடனடியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஆனால் இன்றைக்கு ஒரு மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும் இருக்கிற அதிகாரம் குறுகிக் குறுகி இன்னும் சொல்லப்போனால் அதிகாரமே இல்லை என்று சொல்லக் கூடிய அளவுக்கு இருக்கிறது. மத்திய அரசாங்கம் இன்டஸ்ட்ரியலைசேஷன் ரெகுலேஷன்ஸ் ஆக்ட் என்பதன்கீழ் கிட்டத்தட்ட 92 சதவீத தொழிற்சாலைகள் மத்திய அரசின் பொறுப்பிலே இருக்கின்றன. மத்திய அரசாங்கம் நினைத்தால் ஒரு மாநிலத்திலே தொழிலை ஏற்படுத்த முடியும் என்ற நிலைமை தான் தொடர்ச்சியாக இருந்துகொண்டிருக்கிறது. ஒரு முனிசிபாலிட்டிக்கு எந்த அதிகாரம் இருக்கிறதோ அந்த அளவுக்குக்கூட மாநிலத்திற்கு அதிகாரங்கள் இல்லை என்பது வேதனைக்குரியதாக இருக்கிறது.

விற்பனை வரியைப் பொறுத்தவரையில் சமீபத்திலே மத்திய அரசின் நிதியமைச்சர் பேசிய நேரத்திலே விற்பனை வரியை எடுத்து விட்டு சென்ட்ரல் எக்சைஸ் போடவேண்டுமென்று சொல்கிறார். மாநில அரசாங்கத்திற்கு இருக்கிற ஒரே ஒரு ஊற்று விற்பனை வரி என்பது. அதையும் எடுத்துவிட்டு மத்திய அரசாங்கத்திற்கு அதைக் கொண்டுபோக வேண்டுமென்ற நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. மாநிலத்தைப் பொறுத்தவரையில் இருக்கின்ற அதிகாரங்களையும் எடுத்துவிட்டு மத்திய அரசு பெரும் முதலாளிகளுக்குச் சாதகமாகப் போகக்கூடிய

நிலைமை இருக்கிறது. தொழில் துறையிலே பொறுத்தவரையிலே சமூக நல நோக்கத்தோடு உருவாக்கப்படுவது அது. இன்றைக்குப் பல்வேறு பொதுத் துறை நிறுவனங்கள் லாப நோக்கத்தோடுதான் இயங்குகின்றன. அதிலே குறைபாடுகள் இருக்கலாம். அந்தக் குறைபாடுகளை அதிகமாக விளம்பரப்படுத்தி பொதுத் துறையையே முடமாக்குவதை நாம் பார்க்கிறோம். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் ஏராளமாக இருக்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திலேயும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கி பொறுப் பேற்க வேண்டும். ஒரு மாநிலத்திலே எந்தவிதமான தொழில்கள் தொடங்கப்பட வேண்டுமென்றாலும் அந்த தேசிய மயமாக்கப் பட்ட வங்கிதான் அதற்குப் பொறுப்பு ஏற்கும் பண வசதி செய்ய வேண்டும் என்ற நிலைமையை உருவாக்கவேண்டியது அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு தொழில்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு யார் யார் அதை அதிகமாக உருவாக்குகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். உதிரி பாகங்களைத் தயார் செய்யும் தொழிற்சாலை களைப் பொறுத்தவரையில் பெரிய ஆலை முதலாளிகளே சிறு தொழிலதிபர் என்று பினாமி பெயரால் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதையும் கவனிக்கவேண்டும். உண்மை யாகவே சிறுதொழில்களை ஏற்பாடு செய்பவர்களுக்கு மார்க் கெட்டிங் ஃபெசிலிட்டி குறைவாக இருக்கிறது. லைசென்ஸ் வாங்குவது போன்ற காரியங்களில் பல சிக்கல்கள் இருக்கின்றன, எனவே உண்மையிலேயே சிறு தொழில்களுக்கு ஏற்பாடு செய்யக் கூடியவர்களுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டியது மிக மிக அவசியம்.

உரத் தொழிற்சாலைகளைத் தனியாருக்குக் கொடுக்க வேண்டாம் என்பது ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவு. ஆனால் இன்றைக்குச் சிலயிடங்களில் தனியார் அப்படிப்பட்ட உரத் தொழிற்சாலையை ஏற்பாடு செய்து கொண்டிருப்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

பொது நிறுவனங்கள் அல்லது தனியார் நிறுவனங்களுக்கு வங்கிகள் கடன் கொடுக்கின்றன. அரசாங்கமும் கடன் கொடுக் கிறது. இப்படி அரசாங்கமோ அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளோ கொடுக்கின்ற கடன் மிக மிக அதிகம். ஷேர் கேப் பிடல் அல்லது தனியார் போடுகின்ற மூலதனம் குறைவாக இருக்கிறது. இருந்தாலும் பொறுப்பு தனிப்பட்டவர்களிடத்தில் தான் இருக்கிறது. இப்படிப்பட்ட முறை தொடர்ச்சியாக நீடிப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மின்சாரத்தைப் பொறுத்தவரையில், மனிதனுடைய உடம்பிலே இரத்தம் என்பது எவ்வளவு முக்கியமாக இருக்கிறதோ அதுபோன்று ஒரு நாட்டினுடைய மின்சாரத் தேவையும் இருக் கிறது ஆனால் சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகளாகியும்கூட இந்த நாட்டிற்குப் போதுமான அளவிற்கு மின்சாரம் இல்லை



பெரிய பெரிய தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் ஜெனரேட்டர் வைத்துக் கொள்கிறார்கள் ஆனால் சிறு தொழில் களைச் செய்யக் கூடியவர்கள் ஜெனரேட்டர்களை வைத்துக் கொள்ளமுடியாது. இப்பொழுது இருக்கின்ற எண்ணெய் விலையில் அவைகளை வைத்துக் கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் அவர்களுக்குக் கிடையாது. எனவே மின்சாரக் கட்டுப் பாட்டின் காரணமாக அதிகமாகப் பாதிக்கப்படுவது சிறுதொழில் கள்தான். ஆகவே சிறு தொழில்களுக்கு விசேஷமான முறையில் மின்சாரம் வழங்கவேண்டியது மிக மிக அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலக்கரியைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்திலேயேகூட விவாதிக்கப்பட்டது. அனல் மின் நிலையத்திற்குக்கூட போது மான நிலக்கரி அனுப்பப்படாத நிலையில் இருப்பதாகக் கூறப் பட்டது. நிலக்கரியை அனுப்புவதற்கான இரயில்வே வேகன்கள் கிடைப்பதில்லை என்ற நிலை இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இன்றைக்குக் கரும்புச் சக்கையின் மூலமாகக் காகிதம் தயாரிக்கின்ற திட்டம் இங்கே வகுக்கப்படுகிறது. ஏற்கனவே 190 கோடி ரூபாய் மூலதனம் போட்டு, தனிப்பட்ட நபர் இங்கே விவாதிக்கப்பட்ட பேமஸ் விஸ்வநாதன் அவர்களே; சேர்மனாக இருக்கப் போகிறார் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இப்பொழுது சர்க்கரை ஆலை களுக்குக் கரும்புச் சக்கை எரிபொருளாகப் பயன்படுத்தப்படு கிறது. இந்தக் கரும்புச் சக்கையைக் கொண்டு காகிதம் தயார் செய்யும் ஆலையை உருவாக்கப் போவதாக இங்கே கூறப்படு கிறது. கரும்புச் சக்கையைப் பயன்படுத்தும் நேரத்தில் 4 சர்க்கரை ஆலைகளுக்கு எரிபொருள் கிடைக்காமல் பாதிப்பு ஏற்படலாம். 30,000 டன் நிலக்கரி அந்த அடிப்படையில் இங்கே வரவழைக்கப்பட இருக்கிறது? அனல் மின்சாரத்திற்குக் கூட ஏற்கனவே ஒத்துக்கொண்ட அடிப்படையில் கிடைக்காத சூழ் நிலையில் இந்தக் காகித ஆலைக்கு அல்லது சர்க்கரை ஆலைக்குத் தேவைப்படும் நிலக்கரியை எப்படி, எங்கேயிருந்து நாம் இங்கே வரவழைக்க முடியும் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

காகித ஆலையைப் பொறுத்தவரையில் 190 கோடி ரூபாய் மூலதனம் என்றால் கன்சல்டண்ட்-க்கு 2 சதவீதம். எங்கே டென்டர் விடப்பட்டது? யாரிடம் கன்சல்ட் செய்யப்பட்டது? ப்ராஜக்ட் ரிப்போர்ட் கொடுத்தார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

காகித ஆலைக்குப் பொறுப்பேற்றிருக்கும் சேர்மன் வடலூரில் செராமிக்ஸின் அதிபராக இருக்கிறார். 51 சதவிதம் ஏற்கனவே அரசாங்கம் மூலதனம் போட்டிருக்கிறது. ஆனால் தனிப்பட்ட நபர் அதற்குப் பொறுப்பாளியாக இருக்கும் நிலைமை ஏற்படு கிறது. ஏராளமாக இலாபம் வந்தாலும், இப்பொழுது ஆறு மாத காலமாக அங்கே மூடிக் கிடக்கின்ற துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முதலமைச்சர் கூறிய ஆலோசனையையும்

ஏற்க முடியாத சூழ்நிலையில் அது மூடிக்கிடக்கின்ற நிலைமையினால் தேசத்தின் பொருளாதாரத்திற்குச் சீர்குலைவும், தொழிலாளர்களுக்குப் பாதிப்பும் ஏற்பட்டிருக்கின்ற நிலையைக் கவனிக்க வேண்டும்.

கன்னியாகுமரிமாவட்டத்தில் இரப்பர் ஏராளமாகக் கிடைக்கிறது. இரும்புக் கம்பிபோன்ற பொருட்கள்தான் வேண்டும் மற்றப்படிதண்ணீர் வளம் போன்ற எல்லா வசதிகளும் அங்கே இருக்கின்றன. கார்ப்பரேஷனால் விடப்படும் பஸ்களுக்கு ஏராளமான டயர் தேவைப்படுகிறது. எனவே, மூலப் பொருள் நிறைய இருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழிற்சாலையை ஆரம்பிப்பது மிகமிக அவசியம் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[முற்பகல் 10.40]

அதோடு கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏராளமான முந்திரி ஆலைகள் உள்ளன. 175 முந்திரி ஆலைகளுக்கு மேலுள்ளன. கச்சா முந்தரி இறக்குமதி செயாததன் காரணமாக, இன்றைக்குக் கிட்டத்தட்ட 25,000 தொழிலாளர்கள் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்குக் கச்சா முந்திரி இறக்குமதி செய்து, தகுந்த வேலை வாய்ப்புக்கு ஏற்பாடு செய்யவேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை, பொறுப்பு, என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு ஏராளமான சப் ஸ்டான்டர்ட் மருந்துகள் தனியார் கம்பெனிகள் மூலமாக அரசாங்க மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்படுகின்றன. அதனால், நல்ல தரமான மருந்துகளைத் தயார் செய்ய அரசாங்கமே சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அவசியம்.

சிமென்ட் ஆலைகளைப் பொறுத்தவரை, நெல்லை மாவட்டத்தில் காடங்குளம். மதுரையில் பாளையம்பகுதியில் ஆலைகள் ஆரம்பிக்கவேண்டியது மிகவும் அவசியம். தற்போது சிமென்ட் தட்டுப்பாடு மிகவும் கடுமையாக இருக்கிறது. இந்த மாநிலத்திற்குப் தேவையான சிமென்ட் வேண்டுமென்றாலும், மத்திய அரசாங்கத்தை எதிர்பார்த்துத்தான், அதனுடைய கோட்டாவை நம்பித்தான் இருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, நான் குறிப்பிட்ட பகுதிகளில் சிமென்ட் ஆலைக்கு உடனடியாக ஏற்பாடு செய்து, அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீப் பெட்டித் தொழிலை எடுத்துக் கொண்டால், சாத்தூர், கோவில்பட்டி போன்ற பகுதிகளில், மூலப் பொருளான குளோரைட் போன்றவைகள் கிடைக்காமல், ஏராளமான தீப் பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு மூலப் பொருள்களுக்கு வேண்டிய ஏற்பாடு செய்து வேலை வாய்ப்புகளை அளிக்க வேண்டியது அவசியம்.



இன்றைக்கு லைசன்ஸ் இல்லாமல் ஏராளமான விசைத்தறிகள் இயங்குகின்றன. கைத்தறியைப் பற்றி அக்கறையோடு பேசுகிறோம். பரிவோடு பேசுகிறோம். ஏற்கனவே, கைத்தறிக்கும் விசைத்தறிக்கும் எந்த, எந்த ரகம் என்று ஒதுக்கப்பட்டு இருந்தும் இன்றைக்கு விசைத்தறியில் தயாரிக்கப்படுகிற துணிகளுக்கெல்லாம் கைத்தறி என்று லேபிள் ஒட்டி, மோசடி செய்யப்படுகிறது. ஆகவே கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட துணி ரகங்களை, விசைத்தறியில் நெய்யாமல் கண்காணித்து, கைத்தறியைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

போக்குவரத்து மிக மிக அவசியம். இன்றைக்கு அகல ரெயில் பாதை, நவீன முறையிலே இருக்க வேண்டியது மிகமிக அவசியம் தமிழகத்தில் இருக்கக்கூடிய பெருவாரியான பகுதிகளில், அந்த பிராட்கேஜ் இல்லாமலிருப்பது பெரிய குறைபாடாக இருக்கிறது. ஆகவே, தமிழக அரசாங்கம், ஏற்கனவே மத்திய அரசாங்கம் ஒத்துக்கொண்ட அடிப்படையில், அகல ரெயில் பாதையை ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம், என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரி ஸ்டீல் தொழிற்சாலை சிக் யூனிட்டாக, அதை டிட்கோ எடுத்து நடத்துகிறது. ஆரம்பத்தில் 20 டன், 30டன் தான் உற்பத்தியாகியது. இப்பொழுது 100 டன் உற்பத்தியாகிறது. அது நல்ல உற்பத்தி. பழைய மெஷின்களை மாற்றி, புதிய மெஷின்களைப் போட்டு, இன்னும் அதிக அளவில் உற்பத்தி செய்யவேண்டும். (மணிஅடிக்கப் பெற்றது)

திரு. ரே. உச்சி. பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1981-82-ஆம் ஆண்டு தொழில் மானியக் கோரிக்கையை ஆதரித்து, நான் என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். ஒரு மாவட்டத்தில் தொழில் அதிகமாகவும், ஒரு மாவட்டத்தில் தொழில் குறைந்தும் இருக்கக் கூடாது. அதே நேரத்தில், வேலை வாய்ப்பு, பரவலாக ஒரே மாதிரி இருக்க வேண்டுமென்ற அரசின் கொள்கையை நான் வரவேற்கிறேன். இந்த நிலையில் நீலகிரி மாவட்டத்தினுடைய சிலபல தொழில் சம்பந்தப்பட்டவைகளைப்பற்றி இங்கே எடுத்துக்கூறலாம் என்று இருக்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் பெரிய தொழிற்சாலைகள் என்று, ஊட்டியிலே உள்ள இந்துஸ்தான் ஃபோட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலையையும், குன்னூரிலே உள்ள, வெடி மருந்து தொழிற்சாலையியும் தவிர, மற்றும் 12 தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்த 12 தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் எந்த அளவு முழுமையாகத் தொழில் நடக்கிறது என்பதை நாம் உறுதியிட்டுச் சொல்ல முடியாது. காரணம், தேயிலை உற்பத்தியைப் பொருத்துத்தான் அந்தத் தேயிலைத் தொழிற்சாலைகள் நடக்கின்றன. ஆகவே, அவைகளைத் தொழிற்சாலைகள் என்பதைவிட, ஒரு அக்ரோ இன்டஸ்ட்ரிஸ் என்று சொல்லலாம். இந்த நிலையில், நீலகிரியில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட சாலிட்ஸ்பரி தொழிற்சாலை உட்பட 12 தொழிற்

சாலைகள் உள்ளன. தேயிலை மழையை நம்பி வளரும் பயிர் சில நேரத்தில் தேயிலை அதிகமாக உற்பத்தியாகும். அந்த நேரத்தில் பதப்படுத்தப்பட்ட தேயிலையாக அதை மாற்றும்போது. பச்சை தேயிலை 4 கிலோ போட்டால், பதப்படுத்தப்பட்ட தேயிலை 1 கிலோதான் கிடைக்கிறது.

அந்தப் பச்சை தேயிலை ஒரு கிலோ $1\frac{1}{2}$ ரூபாயில் இருந்து 2 ரூபாயில் வரையில் விற்கின்றது. ஆனால் பதப்படுத்தப்பட்ட தேயிலை ஒரு கிலோ 8 ரூபாயில் இருந்து 12 ரூபாய் அளவுக்கு இப்போது விற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த விலை விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலையாக இல்லை. அதே நேரத்தில் நுகர்வோருக்கும் குறைந்த விலையில் கிடைக்கவில்லை. அங்கே 12 ரூபாய் விலை கொடுத்து வாங்கி, நுகர்வோருக்கு 30, 35 ரூபாய் அளவுக்கு விற்கப்படுகிறது. இடைத் தரகர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். அதை அரசு கட்டுப் படுத்தி, விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நுகர்வோருக்குக் கிடைக்கும் அளவுக்கு அரசு வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1980 வரை, மத்திய அரசு இந்த தேயிலைத் தோட்டங்களுக்குத் தேவையான உரங்களுக்கு மானிய விலையில் கொடுத்துவந்தது. ஆனால் இப்போது கொடுப்பதில்லை. அதனால் தேயிலையை அதிக அளவில் உற்பத்தி செய்ய முடியவில்லை. எனவே இந்தத் தேயிலையை அதிக அளவில் உற்பத்தி செய்ய, ஆரங்களை மலிவு விலையில் வழங்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பச்சிலையைப் பதப்படுத்தத் தேவையான நிலக்கரி வடமாநிலங்களில் இருந்துதான் வரவேண்டும். அவைகள் ரோடு மூலமாக வரவேண்டிய சூழ்நிலை இருக்கின்றன. எனவே அவைகள் ரோடு மூலமாக இல்லாமல், வேகன் மூலமாக வருவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பதப்படுத்தப்பட்ட தேயிலைக்கு மத்திய அரசு 1·20 ரூபாய் எக்சைஸ் டூட்டியாக வசூலிக்கின்றது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு விவசாயிகளுக்கு அந்த எக்சைஸ் டூட்டியில் இருந்து வரிவிலக்கு அளிக்கவேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், சில நேரங்களில் கடுமையான மழை பெய்தால், தேயிலையைப் பதப்படுத்துகின்ற சூழ்நிலை இல்லை காரணம் கரன்ட் கட்டுப்பாடு இருக்கின்றது. ஆகவே சிறு தேயிலைத் தொழில்களுக்கு கரன்ட் கட்டுப்பாட்டில் இருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்



கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் அதிக மின்சாரம் உற்பத்தி செய்தும் கூட, அந்த மாவட்டத்தில் உள்ள ஒரு சில தொழிலுக்குத் தடை இருப்பதை நாம் நீக்கியாக வேண்டும்.

அடுத்து இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலையில் 100 கோடி அளவுக்குக் கலர் பிலிம் தயாரிக்கின்ற நிலை இருக்கின்றது. அதை நீலகிரி மாவட்டத்தில் உள்ள அந்த தொழிற்சாலையிலேயே ஆரம்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நீலகிரி மாவட்டத்தில் உருளைக் கிழங்கு அதிகமாக விளைகின்றது. அதற்குப் போதுமான கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுக்கப்படவில்லை. அந்த உருளைக் கிழங்கில் இருந்து ஓட்கா போன்ற போதை தரும் மதுவகைகளைத் தயாரிக்க வேண்டும். மேலும் இங்கே நிறைய பார்லி விளைகின்றது. அந்த பார்லியில் இருந்து 'பீர்' உற்பத்தி செய்யவேண்டும். 1948 ஆம் ஆண்டு வரையில் இங்கே பீர் தயார் செய்யப்பட்டது. எனவே உருளைக்கிழங்கில் இருந்து 'ஓட்கா'வும், பார்லியில் இருந்து 'பீரும்' தயாரிக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கூடலூரில் 12-வது கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலை ஆரம்பிக்கயிருப்பதாகத் தெரிகிறது. அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் கூடலூரைச் சேர்ந்த பந்தலூரில் ஒரு பிளைவுட் தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு எல்லா ஏற்பாடுகளையும் செய்துள்ளது. அதை உடனடியாக ஆரம்பிக்க அரசு முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கூடலூரில் ஏராளமான மூங்கில் மரங்கள் இருக்கின்றன. அந்த மூங்கில்களைக் கொண்டு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கூடலூர் பகுதியில் ஏராளமான சந்தன மரங்கள் கிடைக்கின்றன. அந்த சந்தன மரங்களை சில விஷமிகள் கடத்தி கேரளாவுக்குக் கொண்டு செல்லுகின்றனர். அப்படிப்பட்ட செயல்களைத் தடுக்கவும், அந்த சந்தன மரங்களை உபயோகப்படுத்தவும் அந்தப் பகுதியில் சந்தன எண்ணைத் தொழிற்சாலை ஒன்றும், சந்தன சோப்பு செய்யும் தொழிற்சாலை ஒன்றும் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

உதகையில் ஒரு உருளைக்கிழங்கு வற்றல் தொழிற்சாலை ஆரம்பிக்க இருப்பதற்காக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் தொழிற்சாலையை பெரிய அளவில் ஏற்படுத்துவதோடு, அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் வற்றலுக்கு அதிக மார்க்கெட் கிடைக்க அதிகாரிகள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம் பெரும் அளவில் ஒரு விவசாய மாவட்டம். அங்கே விவசாயிகளால் பயன்படுத்தப்படும் விவசாயக் கருவிகளான முள், மண் வெட்டி, கடப்பாறை போன்றவைகள் வடக்கேயுள்ள பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே இருந்து அதிகமாகத் தருவிக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்குத் தேயையான அந்தக் கருவிகள் நியாயமான விலையில், குறைந்த விலையில் கிடைக்கவில்லை. ஆகவே, அந்த விவசாயிகளுக்குத் தேவையான அந்தப் பொருள்களைத் தயாரித்து, நியாயமான முறையில் வழங்குவதற்காக, அங்கே ஒரு தொழில் கூட்டுறவுத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கூடலூர் பகுதியில் இஞ்சி ஏராளமாக விளைகிறது. அந்த இஞ்சி உள்ளூரிலேயே கூட கிடைக்காத அளவிற்கு வெளி இடங்களுக்கு அதிக அளவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அந்த இஞ்சி மூலமாக ஜிஞ்சர் பீர் என்ற பொருளைத் தயாரித்தால் அரசுக்கு ஏராளமான நிதி ஆதாரம் கிடைக்கும். அந்தப் பகுதி மக்களுக்கும் அதன் காரணமாக வேலை வாய்ப்பு கிடைக்கும். அங்கேயுள்ள ஏராளமான இலங்கையிலிருந்து திரும்பிய மக்களுக்கும் வேலை கிடைக்கும். ஆகவே, அரசு அங்கே இஞ்சி மூலம் ஜிஞ்சர் பீர் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டு, நீலகிரி மாவட்டத்தையும் தொழில் மையம் கொண்ட மாவட்டமாக அமைக்க வேண்டும் என்று கேட்டு உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்,

*திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தொழில் கொள்கையும், திட்டங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். கடந்த 1980–81 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட பட்ஜெட் உரையில் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கான திட்டங்களை பல்வேறு முனைகளில் போட்டு இருப்பதாகக் குறிப்பிட்டு இருந்தார்கள். சென்ற ஆண்டில் போடப்பட்ட திட்டங்கள் இந்த ஆண்டு எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், சென்ற பட்ஜெட் உரையில் தமிழகம் முழுவதும் 36 பஞ்சாலைகள் ஆரம்பிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். 36 பஞ்சாலைகள் ஆரம்பிப்பதன் மூலம் 19,000 தொழிலாளர்களுக்கு வேலை' வாய்ப்புக் கிடைக்கும் என்றும் சொல்லப்பட்டு இருந்தது. ஆனால் இதுவரையிலும் அந்த 36 பஞ்சாலைகளில் ஒன்றைக் கூட ஆரம்பித்தற்கான அடிச்சுவடுகூட தெரியவில்லை.



19,000 தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கவில்லை. ஆகவே, முன்பு பட்ஜெட்டிலே சொல்லப்பட்டு இருக்கிற மாவட்டந்தோறும் ஆரம்பிக்க இருந்த அந்த 36 பஞ்சாலைகளை எங்கே ஆரம்பிக்க இருக்கிறோம் என்பதை அரசு தெரிவிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டாகிலும் அவற்றை நிறுவ அரசு முன் வருமா என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கத்தின் கொள்கை தொழில் வளம் அதிகமாக்க வேண்டும், பெருக்கவேண்டும் என்கிற அடிப்படையில் முயற்சிகள் எடுக்கும் வகையில் மத்திய அரசாங்கத்தின் அனுமதி கேட்டு தமிழக அரசு கிட்டத்தட்ட 89 தொழிற்சாலைகள் துவங்க மனு செய்து இருக்கிறது என்றும் கடந்த பட்ஜெட் உரையில் சொல்லப்பட்டிருந்தது.

நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம், 80 தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் ஆரம்பிக்க மத்திய அரசிடம் மனு போட்டிருப்பதாக கடந்த பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரையில் அந்த 80 தொழிற்சாலைகளில் எத்தனை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது; அல்லது ஆரம்பிக்க மத்திய சர்க்கார் அனுமதி வழங்கியிருக்கிறது என்ற விவரத்தை இந்த அறிக்கையில் சொல்லவில்லை. ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் இது காங்கிரஸ் கட்சி ஆளாத மாநிலமாக இருக்கின்ற காரணத்தால் தமிழ்நாட்டை தொழில் வளத்திலிருந்து பின்னுக்குத் தள்ள வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் காரியங்கள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில், 1967 ஆம் ஆண்டுக்கு முன்னால் காங்கிரஸ் கட்சி ஆண்டு கொண்டிருந்ததால் இங்கே பல்வேறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் 1967-க்குப் பின்னால் காங்கிரஸ் கட்சி அல்லாத மாற்று சர்க்கார் இங்கே இருக்கின்ற காரணத்தால் புதிய தொழில்களுக்கு மத்திய சர்க்கார் அனுமதிக்காத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. இதை இந்த சட்டமன்றத்தில் இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் கண்டித்தாக வேண்டும்.

தொழில்கள் தொடங்க மனுக்கள் போட்டு, 2, 3, 5 ஆண்டுகள் ஆனாலும்கூட அனுமதி கொடுக்காமல் காலம் தள்ளிப்போவது ஒருபுறம் இருக்கிறது. மறுபக்கம் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி இல்லை என்று ஆளும்கட்சியைக் குறை சொல்கிறார்கள். ஆகவே, மனுக்கள் போட்டால் அனுமதி கொடுக்காத நிலையில் மத்திய சர்க்காரின் போக்கை தமிழக சர்க்கார் கண்டிக்கவேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் இங்கே பல பெரிய, பெரிய தொழிற்சாலைகள் இதற்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டன இப்போது அதற்கு மாறுபட்ட நிலைமை இருந்துகொண்டிருக்

கிறது. கோவை மாவட்டத்தில் நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலின்போது அங்கே இரயில்பெட்டித் தொழிற்சாலை நிறுவுவதற்கு முடியாமல் அண்ணா தி. மு. க.வும், அந்தத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பார்வதி கிருஷ்ணனும் தடுத்துவிட்டார்கள். ஆகவே. நீங்கள் எங்களுக்கு வாக்களித்தால் இரயில் பெட்டித் தொழிற்சாலையை ஆரம்பிப்போம் என்று சொல்லி, வாக்கு கேட்டார்கள். நாங்கள் அந்த பாராளுமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்தபோது நீங்கள் அந்தத் தொழிற்சாலையை அமைக்க அனுமதி கொடுக்கவில்லை என்று வாதத்திற்கு வைத்துக் கொண்டாலும்கூட இப்போது நீங்கள் பாராளுமன்றத்தில் மிருக பலத்தைப் பெற்றிருக்கிறீர்கள்; இந்த நேரத்தில் கோவை மாவட்டத்தில் இரயில் பெட்டித் தொழிற்சாலையை ஆரம்பிக்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் தொழில்கள் தொடங்க அனுமதி வழங்காமல் இருப்பதற்குக் காரணம் மாற்று சர்க்கார் இங்கே இருக்கிறது; ஆகவே, தமிழகத்தை தொழில் வளர்ச்சியில் பின்னுக்குத் தள்ள வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது என்ற கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்தில் என்னுடைய அவினாசி தொகுதியில் வண்டிப்பாளையம் கிராமத்தில் இரயில் பெட்டித் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காக ஏற்கெனவே மத்திய சர்க்காரிலிருந்து வந்து பார்த்துச் சென்றார்கள். அங்கே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட இது சம்பந்தமாக விவாதிக்கப்பட்டு, தமிழக சர்க்காருக்கு அவர்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரோடு வாதாட வேண்டுமென்று தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, கோவை மாவட்டத்தில் பெரிய தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அங்கே இந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையை ஆரம்பிக்க மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தொழில் வளர்ச்சி பெருக வேண்டுமானால் மின்சாரம் ஒரு இன்றியமையாத தேவையாக இருக்கிறது; போக்குவரத்தும் ஒரு இன்றியமையாத தேவையாக இருக்கிறது, இங்கே இந்த இரண்டுமே இன்றைக்கு பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தால் தொழில் வளர்ச்சிக்கு அவை ஒரு தடைக் கல்லாக இருக்கின்றன. அது மட்டுமல்ல. மத்திய சர்க்கார் தேவையான நிலக்கரியையும் நமக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். நிலக்கரி கொடுத்தாலும்கூட அதை எடுத்துவர 'வாகன்' இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆக, மின்சாரப் பற்றாக்குறை, ரா மெட்டீரியல்ஸ் பற்றாக்குறை, போக்குவரத்தில் தன்னிறைவு இல்லாத சூழ்நிலை போன்ற காரணங்களால் இன்றைக்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.





அதே நேரத்தில் வடமாநிலங்களை எடுத்துக்கொண்டால் அங்கே எல்லா இரயில் பாதைகளுமே 'ப்ராட்கேஜ்' ஆக இருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் மீட்டர்கேஜ் பாதைதான், குறுகிய இரயில் பாதை தான் இருக்கிறது. அதனால் உற்பத்திச் செய்யக்கூடிய பொருள்களாக இருந்தாலும் மற்ற மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய பொருள்களாக இருந்தாலும், அல்லது இங்கே எடுத்து வரக்கூடிய பொருள்களாக இருந்தாலும் போதிய அளவில் பாதை வசதிகளில் தொடர்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, உடனடியாக தமிழ்நாட்டில் இருக்கிற இரயில்பாதையை அகலப் பாதையாக ப்ராட்கேஜாக மாற்றியமைக்க மத்திய அரசு முன்வரவேண்டும். அதைப்பற்றி பாராளுமன்றத்தில் மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சித் தலைவர் கே. டி. கோசல்ராம் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆகவே. தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை எடுப்பதோடு இரயில் பாதையை அகலப்பாதையாக மாற்றவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

மேலும் 36 பஞ்சாலைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று இங்கே கடந்த ஆண்டு பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருந்தாலும் இந்த பட்ஜெட்டிலே சொல்லப்படவில்லை. இருந்தாலும் கடந்த பட்ஜெட்டிலே சுட்டிக் காட்டி, உறுதி சொல்லியிருப்பதை மீண்டும் வற்புறுத்தி. மாவட்டத்திற்கு ஒரு கூட்டுறவு பஞ்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதை வற்புறுத்தி, என்னுடைய அவினாசி தொகுதியில் தொழிற்சாலைகள் இல்லை; தொழில் வளர்ச்சி இல்லை என்ற குறை இருக்கின்ற காரணத்தால், அங்குள்ள மக்கள் விவசாயத்தை நம்பி இருக்கின்ற காரணத்தால் அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.00]

கைத்தறியைப் பொறுத்தமட்டிலும் இன்றையதினம் கைத்தறித் துணிகள் தேங்கி இருக்கக்கூடிய ஒரு பயங்கரமான சூழ்நிலை தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே மாநில அரசே நூலைக் கொடுத்து உற்பத்தி ஆகக்கூடிய துணிகள் முழுவதையும் அரசாங்கமே எடுத்துக்கொண்டு கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும்.

அடுத்து தீப்பெட்டித் தொழிலைப் பொறுத்தவரையில கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்று சொல்லப்பட்டிருக்கின்றது. தீப்பெட்டித் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு தமிழக சர்க்கார் வேகமாக அதிகமான உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால தற்போது தீப்பெட்டித் தொழில் தமிழகத்தில் நலிந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு அபாயகரமான சூழ்நிலையை நாம் பார்க்க முடிகிறது. மத்திய அரசு விம்கோ போன்ற பெரிய நிறுவனங்களுக்கு லைசென்ஸ் கொடுத்து இருப்பதன் காரணத்

தால் சிறிய தொழிற்சாலைகளை நடத்த முடியாமல் தீப்பெட்டித் தொழிலே நசிந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே அந்தத் தொழிலைப் பாதுகாக்கக்கூடிய முறையிலே அந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்கக் கூடிய முறையிலே தமிழக சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும். பீடித் தொழிலைப் பொறுத்தமட்டில் தமிழகத்தில் 4 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை பாலக்காடு போன்ற வெளி மாநிலங் களிலிருந்துதான் வாங்கவேண்டி இருக்கின்றது. தொழில் நடத்து கின்றவர்கள் ஒருபுறமும், தொழிலாளர்கள் வேறு இடத்திலேயும் இருக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. இந்த நிலையைப் போக்க கேரள மாநிலத்திலே அரசாங்கமே பீடித் தொழிற்சாலைகளை ஏற்று நடத்துகிறார்கள். அதுபோன்று தொழிலாளர்களைப் பாதுகாக்கக்கூடிய முறையிலே அரசாங்கமே கூட்டுறவுத்துறை மூலம் பீடித் தொழிற்சாலைகளை தொடங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து தமிழகம் விவசாயப் பகுதியாக இருப்பதால் அக்ரோ பேஸ்ட் இன்டஸ்ட்ரீஸ் ஏற்படுத்தித் தர வேண்டும். விவசாயப்பொருட்கள் அதிகமாக விளைகின்ற காரணத் தால் இங்கே அக்ரோ பேஸ்ட் தொழில்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஈரோடு பகுதியில் மஞ்சள் அதிகமாக விளைக்கின்ற காரணத்தால், சாயத்தொழிற்சாலைகள் அதிகமாக ஏற்படுத்து வதற்குரிய வாய்ப்பு இருப்பதன் காரணத்தால் சாயத் தொழிற் சாலை அமைப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே இன்றையதினம் இந்த தொழில் மானியக் கோரிக்கை யிலே எங்கள் கட்சியின் கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னாலே வைக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு கொடுத்ததற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். இங்கே நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொள்கை அறிக்கையில் சில முக்கியமான விஷயங்களைச் சொல்லி இருக்கிறார்கள். ஒரு மாநிலத்திலே எந்த அளவுக்கு மத்திய அரசு திட்டங்களைத் தீட்டி முதலீடு செய்கிறதோ அதைப் பொறுத்துத் தான் ஒவ்வொரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சியும் அமைகிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் சட்டத்தின் அமைப்புப் படி மிகப் பெரிய தொழில்களை ஆரம்பிப்பதற்கான அதிகாரமும் அதற்கான நிதிவசதியும் மத்திய அரசுக்குத்தான் இருக்கின்றதே தவிர மாநில அரசுகளுக்கு இல்லை. அந்த வகையிலே ஒவ்வொரு மாநிலத்திலும் மத்திய அரசு ஆரம்பிக்கக்கூடிய தொழில்களைப்



பொறுத்துத்தான் அந்த மாநிலத்திலே பல்வேறு உபதொழில் களைத் தொடங்குவதற்கான வழியும், வாய்ப்பும் இருக்கின்றது என்பதை நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்.

1955-லிருந்து இந்த மாநிலத்திலே என்ன என்ன தொழில் களை ஆரம்பித்திருக்கின்றது மத்திய அரசு என்பதைப் பற்றிய குறிப்பும் அவர்களுடைய அறிக்கையிலே சொல்லப்பட்டிருக் கின்றது. பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை 1955-லே வந்தது நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் நிலக்கரி வெட்டி எடுக்கின்ற தொழில் 1956-லே தொடங்கப்பட்டது. மெட்ராஸ் ரீஃபைனரிஸ் 1965 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்திய மருந்துவப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனம் 1965-ல் வந்தது, பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் திருச்சியிலே 1963-லே வந்தது. ஹிந்துஸ்தான் டெலிபிரின்டர்ஸ் 1960-லே வந்தது. ஹிந்துஸ்தான் ஃபோட்டோ ஃபிலிம் தொழிற் சாலை ஊட்டியிலே 1960லே ஏற்படுத்தப்பட்டது. சென்னையிலே உர தொழிற்சாலை 1966 லே வந்தது. அடைக் கலம் தொழிற்சாலை திருச்சியிலே 1966லே வந்தது. அதற்குப் பின்னாலே 11 வருஷங்கள் ஆகி, 1977லேதான் சேலம் உருக்காலை திட்டம் வந்தது. ஆக 11 வருஷங்களாக, 1966க்குப் பின்னாலே எந்த பெரிய தொழிற்சாலையும், இந்த மாநிலத்திலே அமைக்க மத்திய அரசு முயற்சி செய்யவில்லை. 1977க்குப் பின்னாலேயும் எந்த பெரிய தொழிற்சாலையும், நமது தமிழகத்திற்கு வந்த தாகத் தெரியவில்லை.

எச். எம். டி. யூனிட் ஒன்றை தமிழகத்திலே ஆரம்பிக்க வேண்டும் என்றும், பாலியஸ்டர் இழைநூல் உற்பத்தி தொழிற் சாலையை தமிழகத்திலே ஆரம்பிக்க வேண்டும் என்றும் நமது மாநில அரசு அனுமதி கேட்டபோது, மத்திய அரசு அனுமதி கொடுக்க மறுத்துவிட்டிருக்கிறது. ஆகவே, பெரிய தொழிற் சாலை எதுவும் இங்கே வரவில்லை. பெரிய தொழிற்சாலைகள் புதிதாக வந்தால் அதை ஒட்டி பல்வேறு உப தொழிற்சாலைகள் தோன்றுவதற்கும், அதை ஒட்டி வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிவதற்கும் நம்முடைய மாநிலத்தின் பொருளாதாரம் மேலும் வளர்வதற்கும் வசதி வாய்ப்புகள் ஏற்படும். ஆனால் அதற்கான முயற்சிகள் இல்லையே. பல ஆண்டுகாலமாக, 1966லேயிருந்து தமிழகத்திற்கு தொழிற்சாலையே வரவில்லை என்பதை, அதற்கான அனுமதியை மத்திய அரசு கொடுக்கவில்லை என்பதை, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் இங்கே அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் இன்னும் அதிகமாக மத்திய அரசை வற்புறுத்தி, மேலும் பல தொழிற்சாலைகளை வாங்குவதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

[திரு ப. நெடுமாறன்] [1981 ஏப்ரல் 16

அப்படி அனுமதி பெற்றால் மாநில அரசின் தொழில் வளம் பெருகும். வருமானம் அதிகரிக்கும். தொழில்வளம் எப்படி அதிகமாகும் என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கூட என்னால் காட்ட முடியும். சென்னையிலே எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை ஏற்படுத்தினார்கள். அதையொட்டி பல தொழிற்சாலைகள் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய வளம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்ல அந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மூலமாக மாநில அரசிற்கு விற்பனை வரியாக வருஷத்திற்கு 28 கோடி ரூபாய் வருமானமும் வருகிறது. ஆகவே இதுபோன்ற பல தொழிற்சாலைகள் வந்தால், மாநில அரசின் வருவாயும் அதிகரிக்கும், இந்த மாநிலத்தில் இருக்கக் கூடிய வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும் என்பதிலே சந்தேகம் இல்லை. ஆகவே, அதற்கான முயற்சிகளை நம்முடைய மாநில அரசு எடுத்துக் கொண்டு, மேலும் பல பெரிய தொழிற்சாலைகளை தமிழகத்திற்கு கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டும். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் அதற்குரிய முயற்சிகளை எடுத்துக் கொள்வார் என்றும் நம்புகிறேன்.

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபோது, தொழில் அமைச்சராக திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இருந்தார். அப்போதுதான் 1955லிருந்து 1966 வரை பல பெரும் தொழில்கள் தமிழகத்தில் கொண்டு வரப்பட்டன. நம்முடைய தற்போதைய தொழில் அமைச்சர் நல்ல துடிப்புள்ள ஒரு இளைஞர். அவர் இன்னொரு வெங்கட்ராமனாக மாறி மத்திய அரசிடம் போராடி நிறைய தொழில்களை தமிழகத்திற்குக் கொண்டு வரவேண்டும். அங்கே இப்போது தமிழகத்தைச் சேர்ந்த அதே வெங்கட்ராமன் அவர்கள் மத்திய நிதியமைச்சராக இருக்கிறார்கள். அவர்கள் மூலம் தொடர்பு கொண்டு முயற்சிகள் செய்து, பல பெரும் தொழிற்சாலைகளை தமிழகத்திற்குக் கொண்டு வர நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டும். முன்வருவார்கள் என்றும் நினைக்கிறேன்.

கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்யும் தொழிற்சாலை ஒன்று சுமார் 190 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி போன்ற மற்ற நிதி உதவி நிறுவனங்களின் உதவியுடன் இங்கே ஆரம்பிக்கப் போவதாக அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். நம்முடைய தமிழகத்தில் எலக்ட்ரானிக் தொழில்களுக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அதை இந்த அரசு உணர்ந்து எலக்ட்ரானிக் இண்டஸ்டிரியல் காம்ப்ளெக்ஸ் ஒன்றினை அமைக்க இருப்பதை வரவேற்கிறேன். அது உடனடியாகத் தொடங்கப்படவேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரியல் யூனிட் ஒன்றை மதுரையிலே அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக விடுக்க விரும்புகிறேன். ஏனென்றால்



1981 ஏப்ரல் 16] [திரு ப. நெடுமாறன்]

மதுரையிலே வேறு பெரிய தொழிற்சாலைகள் எதுவும் இல்லாததினால் அங்கே தொழில்வளம் பெருக வாய்ப்பு இல்லை. மதுரை ஒரு கலாச்சார மற்றும் எஜுகேஷன் சென்டராகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகையினால் இந்தக் கட்டத்திலே ஒரு எலக்ட்ரானிக் சென்டர் வருமேயானால், அதன் மூலம் அந்தப் பகுதியிலே தொழில் வளமும் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்மைவிட சிறிய மாநிலமான ஒரிஸ்ஸாவிலே 150 கோடி ரூபாய் செலவில் முதலீட்டில் ஒரு அலுமினியம் தொழிற்சாலையைத் தொடங்கியிருக்கிறார்கள். நம்மைவிட சிறிய மாநிலம், அவர்கள் அதைத் தொடங்குவதற்கு துணிச்சலோடு அந்த முயற்சியில் ஈடுபட்டாகிவிட்டது. மதுரை மாவட்டத்தில் உள்ள பழனியில் ஏராளமான பாக்ஸைட் கிடைப்பதாகத் தெரிகிறது. அதைப் பயன்படுத்தி பழனிப் பகுதியில் ஒரு அலுமினியம் பாக்டரி தொடங்குவதற்கு நமது அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

எச். எம். டி. வாச் யூனிட் ஒன்றை கொடைக்கானல் அல்லது உதகையில் தொடங்குவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்கு மத்திய அரசு அனுமதி மறுத்தால் நீங்கள் இடைவிடாமல் அதற்காகப் போராடி அதைப் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏராளமான படித்த என்ஜினியர்கள், இளைஞர்கள் இன்றைக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு கிடைக்கும். கொடைக்கானல் அல்லது உதகையில் அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டால். அதோடு அது அதற்கேற்ற வெப்பதட்ப சூழ்நிலை உள்ள இடம். எனவே அதை மனதில்கொண்டு அதை வற்புறுத்திப் பெறுவதில் நமது தொழில்துறை அமைச்சர் அவர்கள் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் நிறைய வன வளம் இருக்கிறது. இந்த வன வளத்தை தொழில் ரீதியாக நாம் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. வனவளத்தைக் கொண்டு பல தொழில்களை நமது தமிழ்நாட்டில் துவங்குவதற்கான வழிவகைகள் இருக்கின்றன. ரயான் பல்ப் உற்பத்தி செய்தல், பாலிஸ்டர் நூல் உற்பத்தி செய்தல் போன்ற தொழிற்சாலைகளை நம் வனவளத்தைப் பயன்படுத்தி ஆரம்பிக்கலாம். அதற்கான முயற்சிகளை நம் அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தமிழ்நாட்டில் சிறிய ஸ்கூட்டர்கள், அரை ஹார்ஸ்பவர் சக்தி உள்ள ஸ்கூட்டர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இங்கு இருக்கின்றன. ஆனால் பஜாஜ் போன்று $1\frac{1}{2}$ ஹார்ஸ்பவர் சக்தி உள்ள ஸ்கூட்டர்கள் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்று கூட தமிழ்நாட்டில் இல்லை. அதை தமிழ்நாட்டில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை நம் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை அருகில் உள்ள கப்பலூர் தொழிற்பேட்டையில் மூன்று ஏக்கர் ப்ளாட்கள் யார் அணுகினாலும் கூட அவர்களுக்கு அது வழங்கப்படுவது இல்லை. அதற்கான ரூபாய் கொடுப்பதற்கு முன் வந்தாலும்கூட உங்களுக்கு மூன்று ஏக்கர் அதிகம் என்று அங்கிருக்கக்கூடிய அதிகாரிகள் சொல்வதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. அந்தப் பகுதியில் தொழில்கள் ஆரம்பிக்க முன்வருபவர்களை ஊக்கப்படுத்தி அந்தப் பகுதியில் தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்துதர முன்வர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாகத் தமிழகத்தில் தொழில்கள் ஆரம்பிப்பதில் ஒரு தயக்கம் இருக்கிறது. அந்தத் தயக்கத்திற்கு என்ன அடிப்படை என்பதை ஆராய்ந்து தொழில்கள் ஆரம்பிப்பதற்கு வருபவர்கள் மத்தியில் இருக்கக்கூடிய அந்தச் சோர்வினை, தயக்கத்தைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். அண்டை மாநிலமான கர்நாடகா மாநிலத்தில் ஒரு கோடி ரூபாய் மூலதனம் போட்டு யாராவது தொழில் ஆரம்பிப்பதற்கு முன்வருவார்களேயானால் அதை அமைச்சர் மட்டத்திலிருந்து அதிகாரிகள் மட்டம் வரை உடனடியாக உட்கார்ந்து அதைப்பற்றி விவாதித்து மூன்று நாட்களுக்குள்ளே பீஸிபிலிட்டி ரிப்போர்ட் கொடுக்கவேண்டுமென்று அங்கே ஒரு முறை இருக்கிறது. அதேபோல் தமிழகத்திலும் தொழில் ஆரம்பிக்க வருகிறவர்களை வீண் சிரமத்திற்கு உட்படுத்தாமல் அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு உட்கார்ந்து பேசி உடனடியாக தொழில்களை ஆரம்பிப்பதற்கு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும் சிப்காட், சிட்கோ, டிட்கோ போன்ற பல்வேறு அமைப்புகளிலிருந்து நிதி உதவி செய்கிற முறையில் இருக்கக்கூடிய அனாவசியமான கால தாமதங்களை தவிர்த்து உடனுக்குடன் அந்த நிதி உதவிகள் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நம்முடைய இன்டஸ்ட்ரிஸ் டிப்பார்ட்மென்ட் பொறுத்த வரையில் தொழில் ஆரம்பிப்பதுபற்றிய கோரிக்கைகள் அரசுக்கு வருமானால் அந்த 5 நாட்களுக்குள்ளே ப்ராஸெஸ் செய்து முடிக்கக்கூடிய ஒரு முறை இருக்கவேண்டும். அப்போதுதான் நிறைய தொழில்கள் வர முடியும். அதன்மூலம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கான வழிவகைகளும் ஏற்படும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில்



சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் தமிழ்நாட்டில் பல தொழில் அதிபர்கள் நம்முடைய அரசாங்கத்தை ஏமாற்றுகிற முயற்சியில் ஈடுபட்டிருப்பதையும் அரசாங்கம் விழிப்போடிருந்து கண்காணிக்கவேண்டும். தமிழ்நாடு கெமிக்கல்ஸ் ப்ராடக்ட்ஸ் லிமிடெட் என்பதுபற்றிய ஒரு குறிப்பு அமைச்சர் அவர்கள் வழங்கிய இந்தப் புத்தகத்தில் இருக்கிறது.

தமிழ்நாடு கெமிக்கல்ஸ் பிராடக்ட்ஸ்லே ஏறத்தாழ அரசாங்கத்தின் முதலீடு பல லட்சத்திற்கு மேல் இருக்கிறது. அதிலே நஷ்டம் 165 லட்சம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதை நடத்தியவர் யார் என்ற விவரங்களுக்குள் நான் இன்றைக்குப் போக விரும்பவில்லை. ஆனால் அவரைப் பற்றி 'இன்டெர்னல் ஆடிட் ரிப்போர்ட்டில்' என்ன சொல்லியிருக்கிறது என்றால் The speci l audit of the accounts of the comp ny conducted by the internal auditors disclosed an illeg l diversion of Rs. 40.78 l khs by the associ te through fictitious credits/debits in the accounts for moneys purported to have been brought i by him and his family members towards shar c pital" ஏறத்தாழ 40 லட்சம் ரூபாய் மோசடி செய்திருக்கிறார். அவர் மீது அரசாங்கம் தொடுத்த வழக்கு $2\frac{1}{2}$ ஆண்டுகள் நடைபெற்று பின்னால் எந்தக் காரணமும் இல்லாமல், அந்த வழக்கு வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது. அதை ஆடிட்டர் ஜெனரல் ஆட்சேபித்து இருக்கிறார். "The circumstances/grounds on which the cases were with n w were not available with the Comp ny" என ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கம்பெனிக்குத் தெரியாமல் என்ன சூழ்நிலையில் இந்த வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்டன என்பது தெரியவில்லை. இப்படிப்பட்ட போலி தொழிலதிபர்களுக்கு எவ்வளவு பெரிய அரசியல் தலைவர்களின் பின்னணி இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து இந்த அரசாங்கம், மக்கள் பணத்தை, பொதுப் பணத்தை திரும்பப் பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கவேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே தமிழகத்தின் தொழில் வளர்ச்சி பெறுவதற்கு மத்திய அரசாங்கம் தடைக்கல்லாக இருந்து கொண்டிருக்கிறது, என்று எடுத்துக் கூறினார்கள். தொழில் வளர்ச்சிப் பெறுவதற்கு போக்குவரத்து வசதியும், மின்சார வசதியும் அத்தியாவசியத் தேவைகள் என்று எடுத்துக் கூறினார்கள். மத்திய அரசாங்கம் தமிழகத்திற்கு ஓரவஞ்சனையான செயலில் ஈடுபட்டிருக்கிறது என்பதை எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள்

குறிப்பிட்டார்கள். 1967 க்குப் பின்னால் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் தொடங்கப்படாமல் இருக்கின்றன என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மாற்றுக் கட்சி அரசாங்கம் வந்ததற்குப் பின்னால் இந்த நாட்டில், தமிழகத்தில் புதிய தொழில்களை தொடங்குவதற்கு மத்திய அரசு, மத்தியில் ஆண்டு கொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சி முன்வரவில்லை என்று அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

அந்த வகையில் நாம் எடுத்துக் கொண்டால் இங்கே பக்கத்தில் இருக்கிற ஆந்திர மாநிலம் பின் தங்கிய மாநிலமாக இருந்தாலும் கூட அங்கே இப்பொழுது ஆண்டு கொண்டிருக்கிற அரசாங்கம் காங்கிரஸ் அரசாங்கமாக இருக்கின்ற காரணத்தினால், மத்தியில் ஆண்டு கொண்டிருக்கிற காங்கிரஸ் அரசாங்கம் தமிழகத்திற்கு எந்தத் திட்டங்களையும், புதிய திட்டங்களையும் அளிக்காமல், ஆனால் இந்திராகாந்தி அவர்கள் அந்த மாநிலத்திலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார் என்கின்ற காரணத்தால் அந்த காங்கிரஸ் கட்சிக்கு, மாநிலம் அதரவு அளித்து வருகின்றது என்ற ஒரே காரணத்திற்காக தமிழகத்திற்கு வரவேண்டிய ரெயில் காரேஜ் உற்பத்தித் தொழிற்சாலையை திருப்பதியில் அமைத்திருக்கிறார்கள்.

அதுமட்டும் அல்ல ஒரு சூப்பர் தர்மல் ஸ்டேஷன் அங்கே ஆந்திராவில் அமைத்து விட்டு மீண்டும் ஒரு பவர் ஸ்டேஷன் அமைப்பதற்கு இருக்கிறோம் என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

இரயில் போக்குவரத்து வசதிக்கு தமிழ்நாட்டிற்கு இந்த ஆண்டு பட்ஜெட்டிலே கூட மத்திய அரசாங்கம் எந்தவிதமான புதிய திட்டங்களையும் அறிவிக்காமல், தமிழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் போராடி, கரூர்—திண்டுக்கல்—தூத்துக்குடி பிராட்கேஜ் சாலையைப் பெறுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், ஆந்திராவில் திருப்பதியில் இருந்து குண்டூர் வரை ஒரு பிராட்கேஜ் பாதையை அமைப்பதற்கும், அதைப் போலவே திருப்பதி வரை அமைப்பதற்கும் மேடக்கில் ஒரு புதிய இரயில் பாதையை அமைப்பதற்கும் மத்திய அரசாங்கம் ஆந்திராவுக்கு உதவி இருக்கிறது என்று சொன்னால் மத்திய அரசாங்கம் தமிழகத்திற்கு ஓரவஞ்சனை செய்யும் செயலில் ஈடுபட்டிருக்கிறது என்று பொருள்.

எனவே இங்கே இருக்கின்ற காங்கிரஸ் நண்பர்கள் மத்திய அரசாங்கத்திலே, தமிழகத்தின் உரிமைக் குரலை எடுத்துக் கூறி தமிழகத்திற்கு, தொழில் துவங்குவதற்கு, போக்குவரத்து வசதி, மின் உற்பத்தி ஆகியவற்றை அதிகப்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்தோடு போராட வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.



(முற்பகல் 11-20)

அதேபோல தமிழகத்திலே புதிய தொழில்கள் துவங்குவதில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு முழு முயற்சி எடுத்துக் கொண்டிருந்தாலும், அதற்கு மத்திய அரசின் தடையினாலே முயற்சிகள் வெற்றியடையவில்லை. அதற்கு முன்னாலே திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் மத்திய அரசோடு போராடி, அவர்களுடைய வருத்தத்தை வளர்த்துக் கொண்டு, அதன் காரணமாகத் தமிழகத்திற்கு வரவேண்டிய நல்ல காரியங்கள், நல்ல திட்டங்கள் கூட அவர்கள் நிறைவேற்றாமல் விட்டு விட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தில் புதிய திட்டங்களை துவங்குவதற்கு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெசவுத் தொழிலிலே கூட்டுறவு நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள் உத்தரவிட்டிருக்கின்ற இந்த அரசை நான் பாராட்டி, அதே நேரத்தில் தஞ்சை மாவட்டத்திலே தொழில்கள் அதிகம் வளர்ச்சியில்லாமல், பின்தங்கிய மாவட்டமாக இருக்கின்றது. மனல் மேட்டிலே ஒரே ஒரு கூட்டுறவு நூற்பாலை தான் இருந்து கொண்டு இருக்கிறது. அந்தக் கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்துகிற நேரத்திலே கிழக்குத் தஞ்சையிலே வேதாரண்யம் அல்லது திருத்துறைப்பூண்டியிலோ அந்த நூற்பாலையின் ஒரு பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு, வி. வி. சுவாமிநாதன்) :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. அ. செங்கோட்டையன்.

**திரு. எம். எஸ். மாணிக்கம் :** தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். அதேபோல தஞ்சை மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக இருந்த, இன்றைக்கு கல்வித் துறை செயலாளராக இருக்கிற மரியாதைக்குரிய இராமதாஸ் அவர்கள் காலத்திலே வேதாரண்யம் உப்பு உற்பத்தி திட்டம் என்று அங்கே நிறைவேற்றி, ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. ஆய்விலே இருந்து நிறைவேற்றப்படாமல் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் கிடப்பிலே போடப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வந்த பிறகு அந்த உப்பு உற்பத்தி திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எடுத்துக் கொண்டார்கள், எனவே அந்த ஆராய்ச்சிப் பிரிவுகளை விரைவில் அறிவித்து, அங்கே வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தியைப் தொடங்குவதோடு, அது சம்பந்தப்பட்ட இரசாயன தொழிற்சாலைகளையும் ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால் 60 ஆயிரம் ஏக்கர் உப்பள நிலங்கள் கொண்ட பகுதியாகும் அது (மணியடிக்கப்பட்டது)

**திரு கு அ. செங்கோட்டையன் :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1981—82-ஆம் ஆண்டிற்கான தொழிற் கொள்கை மானியத்தின் மீது ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியைப் பொறுத்தவரையில் கிராமங்களிலே சிறு தொழில்கள் பெருக வேண்டுமென்று அடிப்படையில் கிராமங்களிலே தீப்பெட்டி தொழிற்சாலைகள்,

சென்னை நாற்றில் கயிறுகள் திரிக்கின்ற தொழிற்சாலைகள் இன்றையதினம் பல்வேறு கிராமங்களில் உருவாகிக் கொண்டிருக்கின்றது. மத்தியிலே இருக்கின்ற அரசாங்கம், பாலியஸ்டர் நூலிழை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அனுமதி கேட்டபொழுது அனுமதி வழங்கப்படவில்லை என்பதை மாற்று முகாமிலே இருக்கிற நண்பர்கள் பல்வேறு கோணங்களில் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு சித்தன் அவர்கள் சொல்கிற பொழுது நெசவாளிகளுக்கு கஷ்டங்கள் இருக்கின்றன; நெசவாளர்கள் குறிப்பிட்ட காலங்களில் தான் நூல்கள் கிடைக்கின்றன என்று சொன்னார்கள். புரட்சித்தலைவர் அவர்களுடைய அரசு பாலியஸ்டர் நூல் உருவாக்குகிற தொழிற்சாலை உருவாக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு அனுமதி கேட்டபோது, மத்திய அரசு அனுமதி மறுத்திருக்கிறது என்பதை அவர்கள் மத்திய அரசிடம் எடுத்துச் சொல்வார்கள் என்று கருதுகிறேன்.

அதேபோல பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வேளாண்மைதுறையை அங்கே கொண்டிருக்கிறார்கள். பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், அதை தொழில்களில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று ஒரு வேண்டுகோளை நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாவட்டம் முழுவதையும் அறிவிக்கவில்லை என்றாலும் இரண்டு தாலுக்காக்களையாவது தொழிலில் பின்தங்கிய தாலுக்காக்களாக அறிவிக்க வேண்டுமென்று நம்முடைய அமைச்சர் பெருமக்களை கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் மாவட்டத்தை பொறுத்தவரையில், கோவை மாவட்டத்தை இரண்டாக பிரித்தபோது, கோவை மாவட்டத்தில் தான் தொழில்கள் அதிகமாக இருக்கிறதே தவிர பெரியார் மாவட்டத்திலே தொழில்கள் ஒன்றும் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை நன்றாக அறியக் கூடும். ஆகவே அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் அங்கே விவசாயிகள் தாங்கள் அதிகமாக விளைவிக்கின்ற நிலையில் இருக்கின்ற காரணத்தினால் பயனுள்ள வகையிலே ஒரு சாயத் தொழிற்சாலையையும் அந்த மாவட்டத்திலே உருவாக்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே தனியார் நிறுவனம் என்பதில் சக்தி சர்க்கரை ஆலை என்ற ஒரு ஆலை இருக்கிறது. அவர்கள் விவசாயிகளிடத்திலே அக்ரிமெண்ட் போடுகிற போது ஒன் சைட் அக்ரிமெனட்டாக போடுகின்ற நிலைமை இருக்கிறது. விவசாயிகள் தாங்கள் தங்களுடைய கரும்பை வெட்டுவதற்காக 12, 13 மாதம் காத்துக் கிடந்து வெட்டுகிற கொடுமையான நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. எனவே அங்கே கூட்டுறவுத் துறையிலே ஒரு சர்க்கரை ஆலையை உருவாக்க அமைச்சர் அவர்கள் முனைப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே மூலப் பொருள் அதிகமாகக் கிடைப்பதால் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டுமென்ற வேண்டுகோளையும் சத்தியமங்கலம் பகுதியிலே சந்தனம் அதிகமாக கிடைக்கிறது என்பதாலும் அது பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கிறது என்ற காரணத்தினாலும் அங்கே சந்தனத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருக்கவேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமங்களிலே இருக்கின்றவர்கள் நல்ல முறையிலே உழைப்பைக் கொடுக்கிற விவசாயிகளாக இருக்கிறார்கள் அவர்கள் தங்களுடைய தொழிலைச் செய்வதற்காக 6 மாதகாலம் ஆகிறது, அந்த 6 மாத காலம் முடிந்த பிறகு அவர்கள் வேலையில்லாமல் இருக்கின்ற நேரத்தைப் பயன்படுத்திக் கொள்கின்ற முறையிலே சிறு சிறு தொழில்களை ஏற்படுத்துகின்ற முறையிலே அந்தப் பகுதியில் சிறு தொழில்களை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு 100 கோடி ரூபாய் செலவில் கரூரில் பேப்பர் மில்லை அமைத்து அதன் மூலமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தொழில்களை உருவாக்கி வருகின்ற சூழ்நிலையில் பாலிஸ்டர் இழைநூல் தொழிலை இங்கே உருவாக்க வேண்டுமென்றால், வட மாநிலங்களிலிருந்துதான் பாலிஸ்டர் நூலைப் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் பாலிஸ்டர் நூல் இழை தொழிற்சாலையை இங்கே உருவாக்கிடக் கூடிய முறையிலே உறுதுணையாக இருந்து இங்கே உள்ள நெசவாளர்களின் வாழ்க்கை தரம் உயர இருக்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து வாய்ப்பளித்ததற்கு நன்றிகூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரிப் : கனம் மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் சபைமுன் வைத்திருக்கின்ற தொழில் துறை குறிப்புகள்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் பெரியதொழிற்சாலைகள், நடுத்தர தொழிற்சாலைகள் காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ், ஹவுஸ்ஹோல்டு இண்டஸ்ட்ரீஸ் இவைகளை ஏற்படுத்தப் போகிறோம், ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். சொல்லியிருந்தால் மட்டும் போதாது. இப்போது இந்த 1,2 வருஷ காலத்திலே அவர்கள் ஆட்சியில் இவ்வளவு தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன, சுமால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ், மீடியம் ஸகேல் இன்டஸ்ட்ரீஸ், காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ், ஹவுஸ்ஹோல்டு இன்டஸ்ட்ரீஸ் இவற்றின் வாயிலாக எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறது, இதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது, எவ்வளவு நிதி திரும்ப அவர்களிடமிருந்து பெறப் பட்டிருக்கிறது என்பது போன்ற புள்ளிவிவரங்களை எல்லாம்

கொடுத்திருந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதிரியான குறிப்புகளை குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னாலே அங்கத்தினர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் அவற்றை நன்றாகப் படித்து உணர்ந்து கருத்துக்களைச் சொல்லமுடியும். ஆனால் குறிப்புகள் முதல் நாள் இரவோ அல்லது ஒரு நாள் முன்போ தான் எங்களுக்குக் கிடைக்கிறது, அதன் காரணமாக முழுமையாக அவற்றைப் படித்துவிட்டு நல்ல கருத்துக்களைச் சொல்லமுடியாத நிலைமை இருக்கிறது. இனிமேலாவது இந்தப் பழக்கத்தை விட்டு முக்கியமான குறிப்புகளை ஒரு வாரத்திற்கு முன்னாலே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.30)

It is my submission that there has been no large scale improvement in Industrial expansion in small-scale and medium-scale industries.

இருக்கின்ற தொழில்கள் மட்டும் நன்றாக நடக்கின்றனவா என்றுவாதிப்பது சரியாக இருக்காது. காரணம், வருடாவருடம் பல்லாயிரக்கணக்கான அளவில் பட்டம் பெற்றவர்களை நாம் வெளியிலே அனுப்புகிறோம். அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு வேண்டாமா? அரசாங்க வேலைக்காக மட்டும் அவர்கள் காத்திருந்தால் அது அவர்களின் வாழ்க்கைக்குப் பயன்படாது என்பது நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். வேறு வகைகளிலே அவர்களுக்கு வேலைகிடைப்பதற்கான சௌகரியங்களைச் செய்து கொடுக்கவேண்டும். பல பிஸ்னஸ்கள் ஏற்பட்டால் அவர்களுக்குப் பயன்படும். பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால் அதன் மூலம் உற்பத்தி பெருகும்: அதன் மூலம் டிஸ்டிரிப்யூஷன்ஸ் வரும்: அதன் முலமாக எல்லாவகையான நல்ல காரியங்களும் ஏற்படும்; அதன் முலமாக நிறைய வேலை வாய்ப்புகள் ஏற்படும். அதில் குறைந்த பட்சம் அவர்கள் அக்கறை காட்டுகிறார்கள் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்மிடம் ஒரு பழமொழி இருக்கிறது. அதாவது "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்பது அந்தப் பழமொழி. நீங்கள் திரைக்கடல்தான் ஓடுவதில்லை என்றால் உள்ளேகூடப் போகாமல் இருக்கிறீர்கள். இரண்டு வாரங்களுக்கு முன்னால் நான் பம்பாயில் இருந்தபொழுது, அங்கே நான் அறிந்தேன். ஆறு பெரிய இன்டஸ்ட்ரிஸ்களை பம்பாயில் ஆரம்பிப்பதற்காக 1,000 கோடி ரூபாய் தேவை என்றும், அதற்காக அங்கேயுள்ள முதல் மந்திரி அவர்கள்Oil countries க்குச் சென்று, அவர்களிடம் பேசி, ஒப்பந்தத்தைப் பெற்று, அவர்களை Partnership basis ஆகக் கொண்டு வந்து, பெரிய தொழிற்சாலைகளை நிறுவ ஆரம்பித்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு நான் சந்தோஷப்பட்டேன். அதைப்பற்றி விவரமாக அறிந்து கொள்வதற்காகக்கூட நான் முயன்றேன், அந்தக் கருத்துக்களை இங்கே சொல்லலாம் என்று, ரொம்ப பைனல் ஸ்டேஜில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன்.



அம்மாதிரி தொழிற்சாலைகள் இங்கே வருவதற்கு நீங்கள் என்ன அக்கறை எடுத்துக்கொண்டீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். சில நண்பர்கள் பேசினார்கள். மாற்றுக் கட்சி நண்பர்களும், உங்கள் கட்சி நண்பர்களும் பேசினார்கள். சென்ட்ரல் கவர்ன்மென்ட் தொழிற்சாலைகளை இங்கே கொண்டு வரவில்லை, காங்கிரஸ் கட்சி இங்கே ஆட்சியில் இல்லாத காரணத்தால்தான் அவ்வாறு வரவில்லை என்று சொன்னார்கள். அப்ளிகேஷன் போட்டுவிட்டோம், சென்ட்ரல் கவர்ன்மெண்டிலிருந்து வரவில்லை என்று சொன்னால் எப்படி முடியும்? பைனான்ஸ் மினிஸ்டர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள், அப்ளிகேஷன் போட்டுவிட்டால் மட்டும் போதாது; தொடர்ந்து அதில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, என்னென்ன தகவல்கள் இருக்கின்றன, என்னென்ன விஷயங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் ஆபீஸர்கள் அடிக்கடி சென்று அதை முடித்துக் கொண்டு வந்தால்தான் வெற்றியாகுமே தவிர, அப்ளிகேஷன் போட்டுவிட்டோம், வரவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தால் அது வெற்றியாகாது என்பது என்னுடைய அபிப்பிராயம். எனவே, தயவு செய்து, என்னென்ன பெரிய ஸ்கீம்களுக்கு அப்ளிகேஷன்கள் போட்டிருக்கிறீர்களோ அவைகளைப்பற்றித் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்காக மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் லிஸ்டைக் கேட்டேன். அந்த லிஸ்ட் நேற்றிரவு எட்டு மணி அளவில்தான் எனக்குக் கிடைத்தது. அதை ஒப்பன் செய்யக் கூட டைம் இல்லை. என்னென்ன ஒத்தாசைகளைச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்வதற்கு நான் காத்திருக்கிறேன். இதைப்பற்றி நான் முதன்முதலிலேயே இந்தச் சபையிலே சொல்லியிருக்கிறேன். அதையே திரும்பவும் நான் வலியுறுத்திச் சொல்கிறேன்.

பாம்பே, குஜராத் ஆகிய இரு மாகாணங்களிலும், "Chemical Industries and Pharmaceutical industries மிகவும் உன்னதமான நிலையில் முற்போக்கான நிலையில் வந்து கொண்டிருக்கின்றன. அதனுடன் நமமுடைய ஸ்டேட்டில் உள்ள டெவலப்மெண்டைப் பார்த்தால் மிகமிகக் குறைவாக, ஒரு பர்சென்ட், இரண்டு பர்செ்ன்ட் என்ற அளவிற்கு மிகவும் குறைவாக இருக்கிறது. ஏன் அங்கே மட்டும் இவ்வளவு பரவலாக வந்து கொண்டிருக்கிறது விரைவாக வந்திருக்கிறது. இங்கே ஏன் வரவில்லை என்பதையெல்லாம் ஆராய வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

15 வருடங்களுக்கு முன் டாக்டர் சர். இலட்சுமணசாமி முதலியார் தலைமையில், இம்மாதிரி தொழிற்சாலைகள் வர வேண்டுமென்பதைப்பற்றி யோசிப்பதற்காக, ஆராய்வதற்காக ஒரு கமிட்டி போட்டார்கள். எனக்கு அது நன்றாக ஞாபகம் இருக்கிறது. அந்த ரிப்போர்ட்டை வாசித்துப் பார்த்து, இப்பொழுது இருக்கின்ற நிலையில் என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளை அவசியம் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரிப்] [1981 ஏப்ரல் 16

பஞ்சாப் மாநிலத்தில் சிறுதொழில்கள் எவ்வளவு பெரும்பான்மையாக வந்திருக்கின்றன என்பதை அமைச்சரவர்களும், மற்றவர்களும் போய்ப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுபற்றி ஆராய்வதற்காக நீங்கள் ஒரு கமிட்டியைக்கூடப் போடலாம். நீங்கள் வந்து ஒரு வருஷமாகிவிட்டது.

Indu trial Development Committee for Small-scale and Large-scale In.ustries.'

என்று போட்டு நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற தொழிலதிபர்களைக் கலந்து ஆலோசனை கேட்பது மட்டுமல்லாமல், பிற மாநிலங்களில் வெற்றிகரமாகத் தொழில்களை நடத்திக்கொண்டு வருகின்ற தொழிலதிபர்களையும் ஆலோசனை கேளுங்கள்.

'Many sub-Committees can be constituted to see that more indus-tries a e crea ed here. But you have not done so. I do not know why the Gove nment should feel so and what are the difficulties in constituting such Committees.

பல தடவைகள் முதன் மந்திரி அவர்களோடும், தொழில் அமைச்சர் அவர்களோடும் நான் பிரைவேட்டாகப் பேசியிருக்கிறேன். அந்தச் சமயங்களில் நான் சொல்லியிருக்கிறேன். அப்படிக் கமிட்டி போடுவதால் ஏதாவது பயன் இல்லையென்று நம்புகிறார்களா அல்லது கமிட்டி போடுவதில் ஏதாவது சிரமம் இருக்கிறது என்று நம்புகிறார்களா, அரசாங்கம் மட்டுமே அவைகளைச் செய்ய வேண்டுமென்றால் 'டிலே' தான் இருக்கும். இதற்கு முன் அந்தக் கமிட்டி இருந்தது. நல்ல யோசனைகளையெல்லாம் அவர்கள் சொன்னார்கள். சென்ட்ரல் கவர்ன்மென்ட்டிலுள்ள பெரிய ஆபீசர்களை எடுத்துக் கொள்ளுங்கள், பெரிய தொழில் அதிபர்களை எடுத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது பம்பாய்தான் உலகத்திலேயே பெரிய கன்ஜஸ்டட் நகரமாக இருக்கிறது. என்ன வழிகளைப் பின்பற்றினால் அந்த கன்ஜஷனை அகற்றலாம், எங்கெங்கே நிலம் சுரம்பாக இருக்கிறது என்று யோசிக்க ஒரு பெரிய கமிட்டி போட்டு, ஜே. ஆர். டி. டாட்டா அவர்களைத் தலைவராக அறிவித்திருக்கிறார்கள். அதே மாதிரி இங்கும் கமிட்டி போட்டால், இன்னும் பல தொழில்களைத் தொடங்க முடியும்.

Thanks for the Hon. Ministers efforts that there is Industrial peace in this State. I want more industries to come thousands of small- cale industries and thousands of cottage in ust ies to co e. There are tremendous potential; but we are not utilising this potential. I regret very much for the same.



1981 ஏப்ரல் 16] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்]

தொழிற்சாலை துவங்குவதற்கு பவர் முக்கியம் என்பது எல்லோருக்கும் தெரியும். நம்முடைய ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் டோட்டல் அலக்கேஷனில் மூன்றில் ஒரு பங்கு பவருக்கு மட்டும் நாம் செலவழிக்க இருப்பதாகக் குறிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

One-thi'd should not be the capacity Whatever cap'city, you crea'e, that capaciiy must be able to give out at least three fourth of the capacity.

இப்பொழுது மின்சார அமைச்சர் 2,300 மெகாவாட் கப்பாசிட்டி இருக்கிறது என்று சொன்னார். ஆனால் 40% தானே நமக்குக் கிடைக்கிறது. அந்த 40%, 45% கிடைப்பதை வைத்துக் கொண்டு நாம் பல முக்கியமான வேலைகளுக்கெல்லாம் உபயோகப்படுத்துகிறோம். மீதி 55%, 60%, கிடைக்காததன் காரணம் என்ன அது கிடைக்க என்ன, என்ன முயற்சிகளை நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள். அது கிடைக்க, அக்கறையோடு என்ன, என்ன முயற்சிகள் எடுக்க வேண்டுமோ, அதை எடுத்தால்தான் பலன் ஏற்படும். ஏனென்றால், இப்பொழுது 100% பணம் செலவாகிறது, ஆனால், கிடைப்பது 40%, 45% தான். ஆகவே, முழு கப்பாசிட்டியில் இயங்கினால், பெரிய இம்ப்ருவ்மென்ட் வரும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

For Tamil Nadu, the Central Government is giving 15 per cent sub'idy for the ind stries situated in the backward areas, irrespective of the fact whether they are small, bigger, la ge scale industries. But the Tamil Nad Government has come out with a scheme to give some more subsidy only for small scale ind st ies. But this should be expanded like the Central Government. It should be given to small scale, medium scale and all indu tries irrespective of whatever their stages, I would request the Hon. Minister to kindly consider this.

மகாராஷ்டிரா, குஜராத்தில் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் இருக்கக்கூடிய இடங்களிலும், முக்கியமாக பாக்வார்ட் இடங்களிலே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கும் பவர் கட் இல்லையென்று, நான் நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து அறிகிறேன். அதே மாதிரி, இங்கும் சலுகை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். Particularly for the small-scale industries, it should be given. Because they are struggling very hard They have come and and seen many times and expressed their concern over this situation. If their production is stopped—there is no other go except to stop production—you will know what will be their consequences. I would request the Hon. Minister for Industries to relax the power cut for small-scale industries. He was good enough to relax it but it has not been done in full.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்] [1981 ஏப்ரல் 16

(முற்பகல் 11.40)

கெமிக்கல் இன்டஸ்டிரிக்கு உபயோகப்படுத்தப்படும் ரா-மெட்டிரியல்ஸ்க்கு நாம் 8% சேல்ஸ் டாக்ஸ் போடுகிறோம். இதே ரா-மெட்டிரியல்ஸ்களுக்குப் பிற மாநிலங்களில் 4% தான் போடுகிறார்கள். அதன் காரணமாக நம்முடைய இதே பிரச்னை பிற மாநிலங்களுக்கு சம்பிரதாயமாக நாம் கொண்டு செல்வதில் மிகவும் சிரமம் இருக்கின்றது. எனவே இந்த 8% சேல்ஸ்டாக்சை 4% ஆக ஆக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

There are lot of difficulties for the entrepreneurs to start industries. There are promotional and procedural difficulties and they are enormous.

ஒரு இன்டஸ்டிரி ஆரம்பிக்கவேண்டும் என்றால் நிறைய அப்ளிகேஷன் போட்டு பில்லப் பண்ணவேண்டியிருக்கின்றது. அதற்கே குறைந்தது 20,000 லிருந்து 30,000 வரை செல வாகிறது.

This should be made as easy as possible.

அதுமட்டுமல்ல, 10 லட்சம் ரூபாய் கடன் கொடுக்க வேண்டும் என்றால், சேர்மன், மேனேஜிங் டைரக்டர், மற்ற டைரக்டர்கள் அவர்களுடைய சொத்து, சுதந்திரம் வீடு, வாசல் எல்லாவற்றையும் அடகு வைக்கும் அளவுக்கு இருக்கின்றது.

This is a very outmoded system. If they are satisfied that there is scope for such industry, and if you are saitsfied that you can get back with interest the capital, why do you want the Chairman, Managing Director and other Director to give guarantee and include all their properties and other things. I do not think that this system has been followed by highly developed industrial countries. This position should be stopped. Generally, I only want that our state should be second to none in industrial development We have prepared a scheme that there should be one industry created every day. But we find that there is not even one Industry for 3 or 4 months. I do not deny that there is no business activity and I do not deny that there is no industrial development. I only wish thousand of industries should come up in our State because there is good scope for them. Thereby we solve unemployment problem among the unemployed educated youths. If their problem is not solved, you can just imagine what will be their position in the entire State or in this country.

Thank you, Sir.

(மாண்புமிகு பேரவை தலைவர்-தலைமை)



1981 ஏப்ரல் 16]

*டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்களாலே அவையின் முன் வைக்கப் பட்டுள்ள தொழில் கொள்கைகள், திட்டங்கள் இவைகளைக் குறித்தும், மானியக் கோரிக்கை குறித்தும், திராவிட முன் னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான தொழிலாக பெரும் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கக் கூடியதாகவும் வளத்தை தரக்கூடியதாகவும் அமைந் துள்ள வேளாண்மைத் தொழிலுக்கு அடுத்தபடியாக, பெரிய தொழில் பல்வேறு பகுதிகளில் உருவாக்கப் படவேண்டும் என்ற கொள்கை நம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். வேளாண்மைத் தொழில், தமிழகத்திலேயும் சரி, இந்தியத் திருநாட்டிலேயும் சரி, மிக முக்கியமான பெரும் பான்மை மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்ற தொழில் என்றாலும் கூட, என்னதான் அதற்கு ஊக்கமும் உற்சாகமும், உரமும், சலுகைகளும் வழங்கினாலும் அதனுடைய வளர்ச்சி ஒரு கட்டத்தோடு நின்றுவிடக்கூடியது என்பதும், அதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட தொகை மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதாலும் பல்வேறு தொழில்களை, சிறு தொழில்களானாலும் நடுத்தர தொழில்களானாலும், பெரும் தொழில்களானாலும், இவைகளை வளர்ப்பதன் மூலமும், விரி வாக்குவதன் மூலமும், புதிதாக உருவாக்குவதன் மூலமும், தொடர்ந்து வேலைவாய்ப்புகளை மக்களுக்கு அளிக்கவும், வேலை யில்லா திண்டாட்டத்தைப் போக்கவும் இயலும் என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மக்கள் தொகையின் பெருக்கம் என்ற அடிப்படையில் பார்க்கிறபோது அது விகிதாச்சார வகையிலே பெரும் அளவு குறைந்து இருக்கிறது. எண்ணிக்கை அளவிலே மக்கள் தொகை கடந்த காலத்தைவிட இப்போது அதிகமாகி இருக்கிறது என்றாலும் கூட விகிதாச்சார வகையிலே மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற போது குறைந்த கணக்கைத்தான் விழுக்காடு நிலையில் காட்டிக்கொண்டு இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கும் மக்கள் தொகை கணக்கை எடுத்துக்கொண்டால் அது மேலும் மேலும் அதிக மாகிக்கொண்டு வருகிறது என்பதை அரசின் சார்பில் கொடுக் கப்பட்ட வரைவுகளிலேயே குறிப்பிட்டு இருப்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நாட்டில் உள்ள வேலை இல்லாதோர் தொகை என்ற புள்ளி விவரத்தைப் பார்க்கிறபோது நாட்டினுடைய சராசரி 8.5% இருக்கிறது. தமிழ் நாட்டின் சராசரி 16.1% இருக்கிறது. இந்தக் கணக்கினை அரசு தந்துள்ள குறிப்புகளிலேயே நம்மால் காண முடிகிறது. எனவே வேலை இல்லாமல் இருக்கின்றவர்கள் தொகை என்ற புள்ளிவிவரப்படி நமது மாநிலம் இந்தியாவிலேயே இரண்டாவது மாநிலமாக அமைந்து இருக்கிறது என்பது பெருமைக்குரியது அல்ல. இரண்டாவது என்பது பரிசுப் பெறு கின்ற நேரத்திலே, முதல் பரிசு, இரண்டாவது பரிசு, மூன்றாவது பரிசு என்று இந்த மூன்று பரிசுகளும் பாராட்டத்தக்கது என்றாலும் கூட, வேலை இல்லாதோர் தொகையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் நிலைமையில் மற்ற மாநிலங் களோடு ஒப்பிடும்போது, நம்முடைய மாநிலம் இரண்டாவது மாநிலமாக இருக்கிறது என்பதை நாம் வேதனையோடு தான் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

6-வது திட்ட வரைவு ஒன்றை நம்முடைய மாநில திட்டக் குழு தயாரித்து வெளியிட்டு இருக்கிறது. அதிலே கூட 'High proportion of people in Tamil Nadu are below the poverty line.' என்பதை மிகத் தெளிவாக ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். இங்கே ஆளும் கட்சியின் சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப் பினர்கள் பலர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலே தொழில் துறை மிகவும் பின் தங்கிவிட்டது என்றும், பல தொழிற்சாலைகள் ஆங்காங்கு அமைக்க வழி இருக்கின்றது என்று அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டு கூட, அவைகளைத் தொடர்ந்து நிறைவேற்றுகின்ற அக்கறை கழக ஆட்சிக்கு இல்லாமல் இருந்தது என்றும், இன்றைக்கும் பேசினார்கள், நேற்றையதினமும் சிலர் பேசியபோது அத்தகைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அரசின் சார்பில் வெளியிடப் பட்டு இருக்கின்ற தொழில் கொள்கைளும், திட்டங்களும் என்ற புத்தகத்திலே கூட திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் தொழில் துறையில் காட்டப்பட்டுள்ள அக்கறை எத்தகையது என்று கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971 ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கே முழுவதும் சொந்தமாக வரையறுக்கப்பட்டதொரு பொது நிறுவனமாக (ரூபாய் ஆறு கோடி ஒப்பிய மூலதனத்துடன்) தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறுவதற்கும் விரிவடைவதற்கும், இதுவரை இம்மாநிலத்தில் பின்தங்கியுள்ள பகுதிகளை விரைந்து தொழில் மயமாக்குவதற்கான முக்கிய குறிக்கோள்களுக்காக [illegible] 1971 ஆம் ஆண்டு



சனவரித் திங்களில் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒருங்கமைந்த முன்னேற்றத் திட்டத்துடன் தனது பணி களைத் தொடங்கியது. அதில் இருந்து 'சிப்காட்' நிறுவனம் கடந்த ஏழு ஆண்டுகளாக நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறவும் விரிவடையவும் ஆன பணிகளைச் சிறந்த முறையில் செய்து வருகிறது. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரை இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ. 6,136.65 இலட்சம் உதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ள துடன், இதன் மூலம் 46,000 பேருக்கு மேல் மொத்த நேரடி வேலைவாய்ப்பை நல்கியுள்ளது. இந்நிறுவனத்தின் நடவடிக்கை களில் மிகவும் முக்கியமாகக் கருதக்கூடியது, ஊக்குவிக்கப்பட்ட முதலீட்டில் பெரும்பகுதி இம்மாநிலத்தில் பின்தங்கிய பகுதி களிலேயே பயன்படுத்தப்பட்டது என்பதாகும்.

(முற்பகல் 11.50)

இதுவரையில் அளிக்கப்பட்ட மொத்த உதவித் தொகை பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் 53 கோடி ரூபாய் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று இந்த அரசின் சார்பிலே தரப்பட்டுள்ள குறிப்பிலே எவ்வளவு நல்ல நோக்கத்தோடு இந்த சிப்காட் நிறுவனம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1971 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது என்றும் அதனால் ஏறத்தாழ 46,000 பேர்களுக்கு மேல் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் எடுத்துக்காட்டியிருப்பதை நான் இந்த அவையின் முன் வைப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அதைப்போல மற்றொரு நிறுவனம் 'தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்; 'சிட்கோ' என்று அழைக்கப்படும் இந்த நிறுவனம் 1970 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் நிறுவப்பட்டு பின்னால் 1971 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 21 ஆம் நாள் ஒருபொது நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் மூலக் குறிக்கோள் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியினைக் குறிப்பாக சின்னஞ்சிறு தொழில் துறைகளில் பரவலான, விரைவான வளர்ச்சியும், முன்னேற்றத்தையும் ஊக்குவிக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாகும் என்று அரசின் குறிப்பிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

தொடர்ந்து சிட்கோ நிறுவனம் தொடங்கப்பட்ட 1971 ஆம் ஆண்டு முதல் 1979-80 ஆம் ஆண்டுவரை சுமார் 514 தொழிற் கூடங்களை தவணைமுறைத் திட்டத்தின்கீழ் அம்பத்தூர், இராணிப்பேட்டை, ஒசூர், நாமக்கல் முதலான இடங்களில் கட்டி வழங்கியுள்ளது. 1979-80 ஆம் ஆண்டு 58 தொழிற்கூடங்கள் அம்பத்தூர், இராணிப்பேட்டை, புதுக்கோட்டை முதலான இடங் களில் கட்டப்பட்டு வழங்கப்பட்டது என்று இந்த அரசின்

தொடர்பு பணிகளையும் இணைத்து இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே கழக ஆட்சிக் காலத்தில் தொழில் வளர்ச்சியில் காட்டப்பட்ட அக்கறை குறைந்திருந்தது என்று சாட்டப்படுகின்ற குற்றச்சாட்டு அர்த்தமற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தொடர் நடவடிக்கையாக, இந்த ஆட்சி காலத்தில், கழக ஆட்சிக் காலத்திலும் அதற்கு முன்பு இருந்த ஆட்சிக் காலத்திலும் தொழில்துறை முன்னேற்றத்தில் காட்டப்பட்ட ஆர்வம் காட்டப்படவில்லை என்ற குறைபாட்டை நான் தெரிவிப்பது இந்த அரசை குறைசொல்ல வேண்டுமென்ற நோக்கத்தில் அல்ல, தொழில்கள் மேலும் பெருகிட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

எந்த அளவுக்கு நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற தொழில்கள் இழப்புகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்கின்ற புள்ளிவிவரங்கள் "Comptrolle and Auditor-Generai of India" அவர்களால் ஆய்வு செய்யப்பட்ட அறிக்கை இந்த அவையில் 23.1.1981-ல் வைக்கப்பட்டது. அந்த ஆடிட் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. Tamilnadu Sugarcane Farm Corporation அதாவது தமிழ்நாடு கரும்பு பண்ணை கார்ப்பரேஷன் 1974-75 ஆம் ஆண்டில் அதாவது கழக ஆட்சியின்போது தொடங்கப்பட்டது. 222.1974 முதல் 30.6.1975-க்குள் 6.12 இலட்சம் ரூபாய் இலாபத்திலே அந்த பண்ணை நடைபெற்றது. ஆனால் கம்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இந்தியா அவர்களின் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் 1976-77-ல் 10.58 இலட்சம் ரூபாய் நஷ்டமும், 1977-78 ல் 28.06 இலட்சம் ரூபாய் நஷ்டமும், 1978-79-ல் 5.84 இலட்சம் ரூபாய் நஷ்டமும் என்ற அளவுக்குதான் இந்த சுகர்கேன் பார்ம் கார்ப்பரேஷன் நடைபெற்றிருக்கிறது என்பது இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் இது மட்டுமல், இன்னும் பல இழப்புகளை இந்த அறிக்கை சுட்டிக்காட்டி இருக்கிறது. இந்த அறிக்கையில் 154-ம் பக்கத்தில் தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் டெவலெப்மென்ட் கார்ப்பரேஷன் 1978-79 ஆம் ஆண்டுக் கணக்கின்படி 46.86 இலட்சம் ரூபாய் நஷ்டம், தமிழ்நாடு ஸ்மால் இன்டஸ்டிரிஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் 1978-79 ஆம் ஆண்டு கணக்கின்படி 37.66 இலட்சம் ரூபாய் நஷ்டம். தமிழ்நாடு ஹான்டிகிராப்ட் டெவலெப்மென்ட் கார்ப்பரேஷன் 1976-77 ஆம் ஆண்டு கணக்கின்படி 25.12 இலட்சம் ரூபாய் நஷ்டம். தமிழ்நாடு சிராமிக் லிமிடெட் 1978-79 ஆம் ஆண்டு கணக்கின்படி 30.53 இலட்சம் ரூபாய் நஷ்டம். தமிழ்நாடு சுகர்கேன்



பார்ம் கார்ப்பரேஷன் 1979-80 ஆம் ஆண்டு கணக்கின்படி 5.84 இலட்சம் ரூபாய் நஷ்டம். தமிழ்நாடு சால்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் 1978-79 ஆம் ஆண்டு கணக்கின்படி 10.30 இலட்சம் ரூபாய் நஷ்டம்.

தமிழ்நாடு சுகர் கார்ப்பரேஷன் லிமிடெட் - 1978 ஆம் ஆண்டு கணக்கின்படி 66.18 இலட்சம் ரூபாய் நஷ்டம், தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் 1978-79 ஆம் ஆண்டு கணக்கின்படி 6.02 இலட்சம் ரூபாய் நஷ்டம். சதர்ன் பிரிக் ஒர்க்ஸ் லிமிடெட் - 1978-79 ஆம் ஆண்டு கணக்கின்படி 9.42 இலட்சம் ரூபாய் நஷ்டம் தமிழ்நாடு சிமின்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் - 1978-79 ஆம் ஆண்டு கணக்கின்படி 28.37 இலட்சம் ரூபாய் நஷ்டம். பெரம்பலூர் சுகர் மில்ஸ் லிமிடெட் - 1978 ஆம் ஆண்டு கணக்கின்படி 63.28 இலட்சம் ரூபாய் நஷ்டம், தமிழ்நாடு மொபட்ஸ் லிமிடெட் 1978-79 ஆம் ஆண்டு கணக்கின்படி 38.83 இலட்சம் ரூபாய் நஷ்டம். இப்படி நஷ்டத்திலே இயங்குகின்ற அளவுக்கு இந்தத் தொழிற்சாலைகள் நடத்தப்பட்டு வருவது நிர்வாகத்தினுடைய திறமையின்மையைக் காட்டும் என்பதை நான் இந்த அவையில் அவைகள் திருத்தப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து 6-வது ஐந்தாண்டுத் திட்ட வரைவு அறிக்கை. மாநில திட்டக் குழுவினால் அளிக்கப்பட்ட இந்த அறிக்கையில் ஒரு கருத்து கூறப்பட்டிருக்கின்றது. அந்தக் கருத்தோடு ஒத்துச் செல்லுகின்ற இணைந்து வாதிடுகின்ற நிலை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு என்பதை நான் இங்கே எடுத்துக் காட்டுகிறேன். மொத்த இந்தியாவுக்கும் மைய உதவி 1979-ல் 15,668 கோடி ரூபாயாக இருக்க, அதில் தமிழ்நாட்டிற்கு மாத்திரம் கிடைத்திருப்பது 616 கோடி ரூபாய்தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அது மாத்திரமல்ல. தமிழ்நாட்டினுடைய மக்கள் தொகை கணக்கை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் கூட 8 சதவீதம் நமக்குக் கொடுப்பதற்குப் பதிலாக 4 சதவீதம்தான் கொடுத்து இருக்கின்றது என்பதும் மாநிலத் திட்டக் குழுவின் அறிக்கையிலே கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றது. நியாயமாக இன்னும் அதிகமாகக் கொடுத்திருக்கவேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன். அந்தக் கருத்தை நான் ஒத்துக்கொள்கிறேன். தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக மத்திய அரசோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானாலும் சரி அல்லது இன்றைக்கு இருக்கின்ற ஆட்சியானாலும் சரி வற்புறுத்தி பெறவேண்டியதற்கான வாதங்களை எடுத்து வைத்து நாம் இங்கே தருவித்துக் கொள்ள வேண்டும் பல திட்டங்களை என்று சொல்கின்ற நேரத்திலே கழக ஆட்சிக் கால திலே அதற்காக வாதாடிய அளவுக்கு இந்த ஆட்சிக் காலத்திலே அதற்காக வாதாடப்படவில்லை என்பதுதான் எனக்கு இருக்கக் கூடிய குறையாகும்.

அவர்கள் நமக்கு எதையும் அளிக்கவில்லை என்று குற்றஞ் சாட்டுகிற அதேநேரத்தில் அவர்களாக முன்வந்து அளித்த ஒரு திட்டம் பற்றி இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பலரால் எடுத்துக் காட்டப்பட்டது. பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். இரயில் பெட்டிகளைத் தயாரிக்கின்ற தொழிற்சாலைத் திட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்ள அந்த திட்டத்தை மத்திய அரசு தமிழ் மாநிலத்திற்கு வழங்க முன் வந்தபோது அதைப் பயன்படுத்திக் கொள்ளாத குற்றம் யாருடையது என்பதை தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். 400 கோடி ரூபாய் திட்டத்தின்படி ஆயிரம் ஏக்கர் மொத்த இடம் தேவை என்றும் அதிலே தொழிற்சாலை அமைப்பதற்கு 200 ஏக்கர் போதுமானது என்றும் தொழிற்சாலைக்கு தொடர்புடைய பல கட்டிடங்களைக் கட்டவும் வேறுபல வசதிகளுக்கும் மீதம் உள்ள இடம் தேவைப்படும் என்றும் அதற்கான முயற்சிகளில் தமிழக அரசு ஈடுபட வேண்டும் என்றும் இந்த அரசை மத்திய அரசு கேட்ட நேரத்தில் மாநில அரசு அது பற்றி கேளாக் காது படைத்த அரசாக இருந்துவிட்ட காரணத்தால் நமக்குக் கிடைத்திருக்க வேண்டிய 400 கோடி ரூபாய் இரயில் பெட்டித் தொழிற்சாலைத் திட்டம் கிடைக்காமல் போய்விட்டது. ஒன்றல்ல, இரண்டல்ல, பத்தாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு பெரும் திட்டம் அது. அந்தத் தொழிற்சாலையிலே 10,000 பேருக்கு வேலைவாய்ப்பும் அந்தத் தொழிற்சாலைக்கு தேவைப்படும் உபகரணங்களான துணைப்பொருட்களைத் தயாரிக்கின்ற தொழில்களிலே 5,000 பேருக்கு மேல் வேலைவாய்ப்பும் கிடைக்கக்கூடிய அந்த மிகப் பெரிய திட்டத்தை, 400 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே உள்ள திட்டத்தை உரிய நேரத்திலே நம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவில்லை என்பதும் அந்தத் திட்டம் திருப்பதிக்கு அதாவது ஆந்திர மாநிலத்திற்கு சென்று விட்ட பிறகு ஏன் அந்தத் திட்டத்தை இங்கே கொண்டு வரப் போராடக்கூடாது என்று சில உறுப்பினர்கள் கேட்பதும் எனக்கு விந்தையாக தோன்றுகிறது.

[நண்பகல் 12—00]

நாம் அந்த திட்டத்தை அவர்கள் வழங்கிய போது ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அதற்கான வசதி வாய்ப்புகளை மத்திய அரசுக்கு செய்துக் கொடுக்க நாம் தயாராக இல்லை. இப்போது அந்தத் திட்டம் பறிபோய்விட்டது. ஆந்திர மாநிலத்திற்கு சென்று விட்டது. ஆந்திர மாநிலத்திற்கு சென்று விட்ட பிறகு, அந்தத் திட்டம் தமிழகத்திற்கு வேண்டும் என்று எப்படி கேட்பது? எந்த முகத்தை வைத்துக் கொண்டு கேட்பது என்று எனக்கே புரியவில்லை. அந்தக் குற்றச்சாட்டை கூறியவர்கள் தான் விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வேன். அது மாத்திரம் அல்ல, அசோக்



லேலண்ட் எக்ஸ்பென்ஷன் என்ற அளவிலே ஒரு பெரிய தொழில் திட்டத்தை சொல்லி, சில சலுகைகளை தரவேண்டுமென்று வைத்துக் கேட்ட நேரத்திலே, அந்த சலுகைகளை அளிக்க இயலாது. என்று ஒரே பிடிவாதமாக அளிக்க மறுத்துவிட்ட காரணத்தால் இன்றைக்கு அந்த தொழிற்சாலை ராஜஸ்தானத்திலும், மராட்டிய மாநிலத்திலும் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகிற திட்டமாக அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும், அவர்கள் கேட்ட சலுகைகளை அந்த இரு மாநிலங்களும் தருகிற அளவிற்கு முன் வந்த காரணத்தால், அசோக் லேலண்ட் எக்ஸ்பேன்ஷன் திட்டம் இங்கே இடம் பெறாமல் வேறு மாநிலத்திற்கு சென்று விட்டது என்பதையும் ஒரு குறைபாடாகத்தான் கருத வேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

கழக ஆட்சிக் காலத்திலே, மத்திய அரசோடு வாதாடி போராடி திட்டங்களைப் பெறவில்லை என்று ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது கூறினார். திராவிட முன்னேற்றக் கழக அரசு, மத்திய அரசோடு, விரோதத்தை வளர்த்துக் கொண்ட காரணத்தால் பல திட்டங்கள் நமக்கு கிடைக்கவில்லை என்று இங்கே கூறினார்கள். அவர்களாவது நட்பை வளர்த்துக் கொள்ளட்டும். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி விரோதத்தை வளர்த்துக்கொள்ளவில்லை. எந்த நேரத்திலேயும் உறவுக்குக் கைகொடுப்போம். உரிமைக்கு குரல் கொடுப்போம் என்ற அந்த அடிப்படையிலே தான் மத்திய அரசோடு தன்னுடைய வாதங்களை எடுத்து வைத்திருக்கிறது.

சேலத்திலே இரும்புத் தொழிற்சாலை திட்டம் தேவை என்பதற்காகவும்; நெய்வேலி திட்டத்திற்காகவும் தூத்துக்குடி துறைமுக திட்டத்திற்காகவும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டிருந்த காலத்திலே எழுச்சி நாள் கொண்டாடினோம். ஆளும் கட்சியாக இருந்தாலும் கூட, தமிழ்நாடு முழுவதும் எழுச்சி நாள் கொண்டாடப்பட்டு, அத்தகைய திட்டங்கள் தமிழகத்திற்கு மேலும் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலியுறுத்தப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு ஆளான நான், டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுவிலே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய வரைவை மற்ற மாநிலங்களின் முதல்வர்கள் எல்லாம் வரவேற்று ஏற்றுக் கொண்ட நேரத்திலே சேலம் திட்டம் அதிலே இடம் பெறவில்லை என்ற காரணத்தால், அந்த 4-வது ஐந்தாண்டுத் திட்ட வரைவினை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று புறக்கணித்த அந்தச் செய்தி அப்பொழுதெல்லாம் பத்திரிகைகளில் பரபரப்பாக வெளி வந்ததையும். அதற்குப் பிறகு, ஒரிரு மாதங்களுக்குள், அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார்

அவர்கள், சேலம் திட்டத்திற்கான ஒப்புதலை வழங்க, அந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவை அந்தப் பகுதியிலே நடத்துவதற்காக அவர்கள் வந்தபோது தலைவர் அவர்களே, நாங்களும் நானும் அவர்களை வரவேற்று, அந்த விழாவை நடத்தியதும். எங்கள் அப்போது சேலத்து மாங்கனி—முக்கனியை வெள்ளியால் செய்து—தங்கமுலாம் பூசிய அந்த முக்கனியை, இந்திய பிரதமர் அவர்களுக்கும், எனக்கும், மற்ற அமைச்சர் பெருமக்களுக்கும், வழங்கிய அந்த நிகழ்ச்சியை நானும் நீங்களும் மறந்து விட முடியாது, இன்று ஆளும் கட்சியில் உள்ள சில பேர் மறந்திருந்தாலும் கூட.

எனவே அந்த அளவுக்கு தமிழ்நாடு அரசு போராடி அந்த சேலம் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பெற்றோம். அதற்கு பிறகும் அதிலே பல சங்கடங்கள் இன்னல்கள் ஏற்பட்டன. அது இங்கே நடைமுறைக்கு வரக்கூடாது என்பதற்காக பல இன்னல்கள் ஏற்பட்டன. அவைகளையும் தவிர்த்து மத்திய அரசோடு வாதாடி, அந்தத் திட்டம் உருவாவதற்கான சூழ்நிலையை அன்றைக்கு நாம் மேற்கொண்டோம். இருந்தாலும் கூட இன்றைக்கு அந்தப் பெரிய திட்டம் பெரிய அளவிற்கு சுருக்கப்பட்டு, இங்கே அது ஒரு சேலம் ஸ்டீல் ரோலிங் கம்பெனி என்ற அளவிற்கு ஆக்கிவிட்டோமோ என்று ஐயத்தக்க அளவிற்கு அது கவனிப்பாரற்ற நிலைமையிலே இருந்து வருகிறது என்பதை மெத்த வேதனையோடு, நான் இந்த மாமன்றத்தில் மத்திய அரசிற்கு, இந்த அரசின் சார்பாக எடுத்துக் காட்டுகிற அந்தப் பணியிலே என்னையும் இணைத்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜனதா ஆட்சிக் காலத்திலே மத்திய அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. பிஜு பட்நாயக் அவர்கள் தொழில் அமைச்சர் பொறுப்பிலே இருந்த நேரத்திலே துர்க்காபூர் ஆலைக்கு பல முக்கியமான திட்டங்களை அனுமதித்து விட்டார்கள்.

அதுபோலவே நான் கர்நாடகத்தில் குதிரைமுக்கு என்ற இடத்திலும் ஆந்திராவில் விசாகையிலும் இரும்புத் தொழிற்சாலைகள் இன்றைக்கு ஏற்பட்டு அவை நடைமுறைக்கு வருகிற இந்தக் காலகட்டத்தில் நாம் அரும்பாடுபட்டு, பலநேரங்களில் போராடி எழுச்சி நாள் கொண்டாடி என்.டி.ஸி. கூட்டத்திலும் தமிழ்நாடு சார்பில் வலுவான வாதங்களை எடுத்து வைத்து நான்காவது ஐந்தாண்டு திட்டத்தைக் கூட நாங்கள் புறக்கணிக்கிறோம் என்று கூறி அவ்வளவு பெரிய போராட்டத்திற்குப் பிறகு கிடைத்த சேலம் இரும்புத் தொழிற் சாலைத் திட்டம் இன்றைக்கு வெறும் ஒரு ஸ்டீல் ரோலிங் கம்பெனி என்ற அளவிற்கு ஆகிவிடுமோ என்று அச்சப்படத்தக்க அளவிற்கு கூனிக் குறுகிப்போய்க் கொண்டிருக்கிறது. இன்றைக்குள்ள ஆட்சியாளர்களின் மெத்தனத்தால் அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறதோ என்று நான் அஞ்சுகிறேன். எனவே ஆட்சியாளர்கள் உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு நாம்



கோரிய அந்த இரும்புத் தொழிற்சாலைத் திட்டம் உருவாவதற்கான ஏற்பாடுகளைச்செய்ய வேண்டும் என்பதை நான் வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

13,000 தொழிலாளர்களைக் கொண்ட பி.அன்ட்.சி. மில் இன்று மூடப்பட்டிருக்கிறது. இது தொழில் துறை மானியம் என்றாலும் கூட தொழிலும் தொழிலாளர்களும் இணைந்தே இருக்கிறார்கள். தொழிலாளர்கள் இல்லாமல் தொழில் இல்லை. தொழில்களை நம்பி தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். எனவே இந்தியாவிலேயே மிகப் பெரிய, ஏன் ஆசியாவிலேயே மிகப் பெரிய, முதல முதல் ஒரு பெரிய, மகத்தான யூனியனைப் பெற்றதொரு நிறுவனம் பி.அன்ட்.ஸி. மில் நிறுவனம். தமிழகத்தினுடைய மிகப் பெரிய தியாகிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் தொடர்ந்து அந்த பி.அன்ட்.ஸி மில் தொழிலாளர்களுடைய இயக்கத்தில் பாடுபட்டு வந்திருக்கிறார்கள். இன்னமும் அந்த ஆலை திறக்கப்படாத ஒரு நிலைமை. இதில் இந்த அரசு எடுத்துக்கொண்டுள்ள அக்கறை என்ன, ஆர்வம் என்ன என்று பார்க்கிற நேரத்தில் இந்த அரசு சார்பில் இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது எதிர்கட்சி வரிசையில் இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள், எல்லாக் கட்சிகளையும் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் துணைத்தலைவர் அவர்கள் ஆகியோர் எடுத்துக் கொண்ட ஆர்வம். அங்குள்ள மத்திய அமைச்சர்களைச் சந்தித்து பலமுறை பேசி அவர்கள் எடுத்த அந்த நடவடிக்கைகளுக்கு இந்த அரசு எந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டது? எந்த அமைச்சர்கள் டெல்லியில் யார்யாரை எவ்வளவு முறை சந்தித்தார்கள்? பி.அன்ட்.சி. ஆலை திறக்கப்படவேண்டும், 13,000 தொழிலாளர்கள் வேதனை தீர்க்கப்படவேண்டும் என்பதற்கு இந்த அரசு எடுத்துக்கொண்ட அக்கறை என்ன என்பதையெல்லாம் யோசித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், எனவே 13,000 தொழிலாளர்கள் சார்பாக உரிய நேரத்தில் உற்ற குரலை இந்தஅரசு கொடுத்திடவில்லை என்பதற்காக என்னுடைய குற்றச்சாட்டை இந்த அரசின் மீது சுமத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். பெரிய தொழில் திட்டங்கள் எதுவும் நிதி நிலை அறிக்கையிலும் சரி அல்லது நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் தந்துள்ள இந்தக் கொள்கை குறிப்புகளிலும் சரி இல்லை என்பதை நான் வருத்தத்தோடு இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக வரவு-செலவுத் திட்டத்தில், நிதிநிலை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிற பல்வேறு தொழில் துறை திட்டங்கள், வேலைவாய்ப்புக்கான திட்டங்கள், ஆயிரம், பத்தாயிரம் லட்சம் என்று பல தொழில்களைத் தொடங்கப் போகிறோம் என்றெல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டங்கள் ''பாலோஅப் ஆக்ஷன்'' என்று சொல்வார்களே அந்த தொடர் நடவடிக்கைகளின் பேரில் நிறைவேற்றப்படுகின்றனவா என்றால் இல்லை என்ற பதில் தான் நமக்கு கிடைக்கிறது.

கடந்த 1977-ம் ஆண்டு முதல் நிதி நிலை அறிக்கையிலும் சரி அல்லது தொழிலமைச்சரின் அறிக்கையிலும் சரி எவ்வளவோ தொழில் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அவைகள் எதுவும் நிறைவேற்றப்படுகிற அளவிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பெரிய தொழில் திட்டம் என்ற பெயரால் நம்முடைய நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் இங்கே படித்த அறிக்கையில் வட ஆற்காடு மாவட்டத்தில் வெடிமருந்து தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட இருக்கிறது என்பதாகும். ஆனால் அந்த வெடிமருந்து தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்றால் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற கொள்கைக் குறிப்பேட்டை எடுத்துப் பார்த்தால் 83-84ம் ஆண்டுதான் அது அங்கே தொடங்கப்படும். அதற்கிடையில் அதற்கான ஆய்வு வேலைகள் நடைபெறும் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1983-84ல் தொடங்கப்பட இருக்கிற வெடிமருந்து தொழிற்சாலைக்கு, வட ஆற்காடு காட்பாடி அருகில் தொடங்கப்பட இருக்கிற வெடிமருந்து தொழிற்சாலைக்கு முக்கியத்துவம் அளித்து பட்ஜெட் உரையில் அதைப்பற்றி கருத்து வெளியிட்ட நிதி அமைச்சர் அவர்கள் 200 கோடி ரூபாய் அளவிலே நிறைவேற இருக்கிற நியூஸ் பிரின்ட் உற்பத்தி தொழிற்சாலை பற்றிய குறிப்பு எதையும் வெளியிடவில்லை.

[பிற்பகல் 12-10]

200 கோடி ரூபாய் அளவிலே, கிட்டத்தட்ட, நிறைவேறயிருக்கின்ற நியூஸ் பிரின்ட் உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலை பற்றிய எந்தக் குறிப்பையும் நிதி நிலை அறிக்கையிலே தராதது வியப்படையக்கூடிய ஒன்றாகும். எதிர்க்கட்சித் துணை தலைவர் பேராசிரியர் அவர்கள் கூட நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகிறபோது குறிப்பிட்டார்கள் - இவ்வளவு பெரிய திட்டத்தை நிதியமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரையிலே அறிவிக்காமல் மறைத்து விட்ட மர்மம்தான் என்ன என்று கேட்டார்கள். இங்கே கூட அந்தத் திட்டத்தைப் பற்றிப் பல நண்பர்களும் வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். இருபது கோடி ரூபாய் திட்டத்தை இவ்வளவு அவசரமாக அறிவித்து விட்டு, ஆனால் அது 1983–84ம் ஆண்டிலேதான் தொடங்கப்படும் என்ற நிலையில் இப்போது முன் கூட்டியே அறிவிப்பதிலே இருந்த ஆர்வம், கிட்டதட்ட 200 கோடி ரூபாய் அளவிலே உள்ள இந்த நியூஸ் பிரின்ட் தொழிற்சாலை பற்றிய அறிவிப்பை நிதியமைச்சர் செய்யாததற்கு என்ன காரணம்? அதைப் பற்றிப் பெரிய விளம்பரங்கள் கூட வராததற்கு என்ன காரணம் என்பதெல்லாம் புரியாத புதிராக இருக்கிறது.



நான் இந்தத் திட்டத்தைப் பற்றிக் கூட நிதிநிலை அறிக்கையிலே தேடிப்பார்த்து கிடைக்காமல் உங்களால் தரப்பட்ட பெரிய பெரிய புத்தகங்களிலே தேடிப்பார்த்த போது அதிலேதான் இதற்கு 27½ கோடி ரூபாய் ஒதுக்கி, இந்தக் காகித தொழிற்சாலை நியூஸ்பிரின்ட் தொழிற்சாலை, வெறும் காகித தொழிற்சாலை அல்ல, நியூஸ்பிரின்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. எனவே தான் நியூஸ்பிரின்ட் காகித தொழிற்சாலைக்கு 1979ம் ஆண்டு அன்றைக்கு செலவாகும் என்று அறிவிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை 153 கோடி ரூபாய்—153 கோடி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

1980ல் தமிழ்நாடு நியூஸ்பிரின்ட் அண்டு பேப்பர்ஸ் லிமிடெட் சேர்மன் அளித்துள்ள ஒரு அறிக்கையில், அந்த அறிக்கைப் புத்தகத்தில் 160 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த வேறுபாடுகளை வரிசைப்படுத்திப் பார்க்க வேண்டும். 1979லே 153 கோடி என்று அறிவிப்பு. 1980ல் தமிழ்நாடு நியூஸ்பிரின்ட் அன்ட் பேப்பர்ஸ் லிமிடெட், சேர்மன் 160 கோடி ரூபாய் அளவிற்கு வருகிறது என்று அறிவித்து, இதோ என் கையிலிருக்கிற 6வது ஐந்தாண்டுத் திட்டம் என்று இந்த அரசால் தரப்பட்ட இந்தப் புத்தகத்தில் மாநில திட்டக்குழு அளித்துள்ள இந்தப் புத்தகத்தில் 180 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டு இந்தப் புத்தகம் வெளிவந்து சில மாதங்களுக்குள்ளாக இந்த மானியக் கோரிக்கையிலே அமைச்சர் அறிக்கையிலே 105ம் பக்கத்திலே 180 கோடி என்று அறிவித்து இன்றைக்கு இதிலே ஒரு திருத்தம் போடப்பட்டு அமைச்சர் முன்னுரையிலே 190 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்.

1979லே 153 கோடி, 1980ல் சேர்மன் அறிக்கையிலே 160 கோடி, இங்கே தரப்பட்டிருக்கிற மாநில திட்டக் குழுவின் 6வது திட்ட அறிக்கையிலே 180 கோடி, தொழில் துறை அளித்துள்ள குறிப்பில் 190 கோடி என்று அறிவித்திருக்கிறார்கள். ஆக, ஓராண்டுக்குள் அல்லது, ஒரு சில மாதங்களுக்குள் சுமார் 40 கோடி ரூபாய் அளவிற்கு வித்தியாசம் ஏற்படுகிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

சேர்மன் ரிப்போர்ட்டில், நியூஸ்பிரின்ட் தொழிற்சாலை இருக்கிறதே அதன் சேர்மன் அளித்துள்ள இந்த ரிப்போர்ட்டில் சொல்கிறார், மாநில அரசு 22 கோடி ரூபாய்தான் தரும். 22 கோடிக்கு மேல் தராது; 22 கோடி ரூபாய் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறதென்று சொல்கிறார்கள். சேர்மனே 22 கோடிதான் எதிர்பார்க்கிறார். ஆனால் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 27½ கோடி.

இந்த காகித ஆலைத் திட்டம் 50,000 டன் நியூஸ் பிரின்ட் 40,000 டன் எழுதுகிற தாள், மற்ற தாள்கள் இவைகளை உற்பத்தி செய்யும் என்று அமைச்சர்களுடைய அறிக்கையிலே தெளிவாகத் தரப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தத் தொழிற்சாலை சேர்மேனாக நியமிக்கப்பட்டிருக்கின்றவருடைய அறிக்கை என்ன சொல்கிறது? டைரக்டர்ஸ் ரிப்போர்ட்லே அவர் சொல்கிறார், 83,000 டன் நியூஸ்பிரின்ட், 17,000 டன் எழுது தாள் மற்ற தாள்கள் என்று, கவர்ன்மென்ட் ஆப் இந்தியா லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுத்திருக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

The Government of India, Ministry of Industry issued a ltter of intent No.L.I/183 (79), dated July 3, 1979 to the Company for ma ufacture of 83,000 tons of newsprint and 17,000 tons of writing and printing paper out of bagasse. The Company is taking steps to obtain extension of the validity of the letter of intent என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 83 ஆயிரம் டன் நியூஸ்பிரிண்ட் உற்பத்தி செய்வதாக சொல்லிவிட்டு, இப்பொழுது 50 ஆயிரம் டன் நியூஸ்பிரிண்ட் உற்பத்தியாகும் என்று அறிக்கைகளிலே தரப்பட்டிருக்கின்றது. எனக்குள்ள சந்தேகம் எல்லாம் இந்த தொழிற்சாலை, இந்த நியூஸ் பிரிண்டை தயாரிக்க முடியுமா? நியூஸ்பிரிண்ட் தயாரிக்க முடியுமென்று ஒரு முக்கியமான பணியை முன் வைத்துதான் மத்திய அரசு கூட இதற்கான லெட்டர் ஆப் இன்டென்ட் தந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். இதற்கு மேலான விவரங்கள் மத்திய அரசுக்கே கூட தெரிவிக்கப்படவில்லை என்று நான் கருதுகிறேன். ஆனால் இந்த தொழிற்சாலை நியூஸ் பிரிண்ட் தயாரிக்கக்கூடிய அளவிற்கு தன்னுடைய வழிமுறைகளை வகுத்துக் கொண்டு பணியினை முடுக்கி விட்டிருக்கிறதா என்றால், இல்லை. இந்தத் தொழிற்சாலைக்கு சேர்மென்னாக யாரை நியமித்து இருக்கிறீர்கள்? இந்தக் கேள்வியை சொல்வதற்கு முன்பு ஒரு பழைய விஷயத்தை ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். 1975–76 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் மீது வாக்கெடுப்பு நடைபெற்றபொழுது, நம்முடைய இன்றைய கல்வி அமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகம் அவர்கள், இந்த வரிசையிலே எதிர் கட்சி வரிசையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக அமர்ந்து ஒரு பிரச்சினையை எழுப்பினார்.

"தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்பிக் தொழிற்சாலையை தான் சொல்ல வேண்டும். அங்கே 84 கோடி ரூபாய் அளவில் தொழிற்சாலையை ஆரம்பிகின்றீர்கள். அடுத்து கடலூரில் 120 கோடி அளவில் ஆரம்பிக்க உரிமம் வழங்கியிருக்கிறார்கள், கடலூரில் ஆரம்பிக்கவில்லை: உங்களுக்கு தெரியும், என்றாலும் அவர்கள் சொன்னதை சொல்கிறேன். "ஏறத்தாழ 220 கோடி அளவில் ஒரு மிகப் பெரிய தொழில் சாம்ராஜ்யத்தை ஒரு தனி மனிதர் நடத்தக்கூடிய நிலையில் இன்றையதினம் இந்த அரசு' செய்திருக்கிறது. அவர்கள் எந்த தகுதியின் அடிப்படையில்



அவைகளை ஆரம்பிக்கத் தயாராக வந்தார்கள்? அதிலே குறிப்பாக திரு. சிதம்பரம் செட்டியார் என்னும் நபர் எந்த அடிப்படையில் தலைசிறந்து நிற்கின்றார்? என்ற விளக்கத்தை தொழில் அமைச்சர் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று திரு. அரங்கநாயகம், இன்றைய கல்வி அமைச்சர் அவர்கள், அன்றைக்கு எதிர்கட்சியிலேயிருந்து கேட்ட பொழுது, அன்றைய தொழில் அமைச்சர் மாதவன் அவர்கள் அளித்த பதில், "அண்ணா அவர்களுடைய கொள்கை தொழில் துறையில் பின்பற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். 'ஸ்பிக்' எப்படி உருவானது என்று கேட்டார்கள். அண்ணா அவர்கள் இருந்த பொழுது சவுத் இந்தியா கார்ப்பரேஷன் என்ற தனி நிறுவனம் அண்ணா அவர்களை சந்தித்து கூட்டுத்துறையில் ஒரு நிறுவனத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று ஒரு மனு கொடுத்தார்கள். அண்ணா அவர்கள் 6.12.1968-ல் அவர்களோடு சேர்ந்து கூட்டு முறையிலே ஆரம்பிக்க வேண்டுமென்று உ தரவு போட்டார்கள் என்று அன்றைய தொழில் அமைச்சர் மாதவன் அவர்கள் இன்றைய கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்களுக்கு, அன்றைக்கு 1975–76 ஆம் ஆண்டில் மானியக் கோரிக்கை மீது பதில் அளித்து இருக்கின்றார்.

இது ஒரு ஜாயின்ட் செக்டார், ஜாயின்ட் செக்டார் என்பது 51 சதவீதம் அரசாங்கத்தினுடைய முதலீடும், மிச்சம் உள்ளது தனியார்களுடைய முதலீடுகளும் ஷேர்களும் என்ற அளவிற்கு உள்ளது ஜாயின்ட் செக்டார், கூட்டுத் துறை என்பது ஆகும். ஆனால் இது கூட்டுத் துறை அல்ல. நீங்கள் இன்றைக்கு தொடங்குகின்ற இந்த காகிதத் தொழிற்சாலை; நியூஸ்பிரிண்ட் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை கூட்டுத்துறை அல்ல; நீங்களே பல இடங்களில் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இது அரசு தொழிற்சாலை என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இந்த அரசு தொழிற்சாலைக்கு நீங்கள் யாரை சேர்மென்னாக, தலைவராக நியமித்திருக்கிறீர்கள் என்பதுதான் உள்ளபடியே ஆழ்ந்து நோக்கத்தக்க ஒன்றாகும். இதிலே டைரக்டர்களாக சி.வி.ஆர். பணிக்கர், ஐ.ஏ.எஸ்., திரவியம், ஐ.ஏ.எஸ், வெங்கடேசன், ஐ.ஏ.எஸ்., கீதாகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ், விஸ்வநாதன், மானேஜிங் டைரக்டர், சேஷசாயி பேப்பர் & கோ லிமிடெட் என்று ஐந்து பேரை போட்டுவிட்டு, சேஷசாயி பேப்பர் லிமிடெட் கன்சல்டிங் கம்பெனி என்கிற காரணத்தினால், காரணம் காட்டப்பட்டு திரு. விஸ்வநாதன் அவர்களை இந்த நியூஸ்பிரிண்ட் தொழிற்சாலைக்கு தலைவராக நியமித்து இருக்கிறீர்கள். இது சரிதானா என்று நான் உங்களை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கன்சல்டன்ட் என்று இருக்கின்றவரை ஒரு டைரக்டராக கூட இப்படிப்பட்ட தொழிற்சாலையில் நியமிப்பது இல்லை. அது ஒரு மரபு. டைரக்டராக கூட நியமிக்கக் கூடாது என்ற நிலை இருக்கும் பொழுது, கன்சல்ட்டன்டாக இருக்கிற ஒருவரை இந்த தொழிற்சாலையினுடைய த வராக நியமித்து இருப்பது முறைகேடு

அல்லவா ? யாருக்கு மேல் இவர் இருக்கிறார்? பணிக்கர் என்ற உயர்தர அதிகாரிக்கு மேல்; திரவியம் என்ற இரண்டாவது செயலாளருக்கு மேல்; வெங்கடேசன் என்கிற முன்னாள் நிதித்துறை செயலாளருக்கு மேல்; கீதாகிருஷ்ணன் என்கிற முன்னாள் தொழில்துறை செயலாளருக்கு மேல்; இவர்களுக்கு எல்லாம் மேலாக இந்த விஸ்வநாதன் என்ற தனி மனிதர் இன்றைக்கு கன்சல்ட்டன்ட் என்கிற பெயரால் நியமிக்கப்பட்டிருக்கிறார். நான் எழுப்புகின்ற வாதம் எல்லாம், கன்சல்டன்ட் என்று இருக்கின்ற காரணத்தினாலே அவர் இந்த சேர்மென்னாக பொறுப்பேற்றிருக்கக் கூடாது, நியமிக்கப்பட்டிருக்கக் கூடாது, என்பது தான் என்னுடைய வாதம் ஆகும்.

[பிற்பகல் 12-20]

ஆனால் இவர்கள் தந்துள்ள எந்த அறிக்கையிலாவது இப்படிப்பட்ட ஒரு பெரிய 200 கோடி ரூபாய் திட்டத்தை—190 கோடிக்கும் 200 கோடித் திட்டத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லை—அடுத்த மாத அறிக்கையிலே அது 200 கோடி ஆகலாம், அதற்குப் பிறகு 300 கோடியாகக்கூட ஆகலாம்; ஆனால் நான் கேட்பது எல்லாம் இவ்வளவுப் பெரிய மாபெரும் திட்டத்திற்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறவர் என்ன என்ன வழிமுறைகளின்படி நியூஸ்பிரிண்ட் தயாரிப்பதற்கு தன்னுடைய முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறார் என்று எங்கேயாவது குறிப்பிட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. ஒருவேளை நான் இந்த வினாவை எழுப்பிய பிறகு அதை இங்கே குறிப்பிடக் கூடும். மெக்ஸிகோ நாடு வரையிலே சென்று மெக்ஸிகோ நாட்டிலே கரும்பு சக்கையிலிருந்து, அதாவது Bagasse என்று சொல்லப்படுகிற கரும்பு சக்கையிலிருந்து நியூஸ்பிரிண்ட் காகிதம் தயாரிக்கும் திட்டத்திற்கு கொலாபரேஷன் மூலம் ஒரு ஒப்பந்தம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே கியூஸி புராசஸ் என்ற ஒரு புராசஸ் இருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். அந்த கியூஸி புராசஸை வைத்து உலகத்திலே வேறு எந்த முனையிலாவது, வேறு எந்த இடத்திலாவது நியூஸ்பிரிண்ட் என்கின்ற அச்சுத் தாள் தயாரிக்கப்படுகிறதா என்றால் இல்லை என்றுதான் நமக்குப் பதில் வந்து கொண்டிருக்கிறது. இதே மெக்ஸிகோ கம்பெனி, இதே கியூஸி புராசஸைக் கொண்டு, கரும்புச் சக்கையிலிருந்து அச்சடிக்கின்ற பத்திரிகை தாள் உற்பத்தி செய்யும் யுக்தியை — டெக்னாலஜியை — மெக்ஷிகோவிற்குப் பக்கத்திலே உள்ள பெரு என்ற நாட்டிலே பயன்படுத்தினார்கள். அங்கே ஒரு நியூஸ் பிரிண்ட் தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். நிலைமை என்ன ? அது செயல்படவே இல்லை என்றுதான் புருப் ஆகியிருக்கிறது. ஆகவே கியூஸி என்ற அந்த புராசஸ், மெக்ஸிகோ நாட்டிலிருந்து அளிக்கப்படுகிற அந்த புராசஸ் லாயக்கற்றது, கவைக்குதவாதது, நியூஸ் பிரின்ட் தயாரிக்கிற அளவுக்கு அது சக்தியற்றது, எனவேதான் பக்கத்திலே உள்ள பெரு நாட்டிலே அது பயன்படவில்லை, அது உபயோக கரமாக இல்லை என்று இவ்வளவும் தெரிந்தபிறகும் அவர்களோடு கொலாபரேஷன் வைத்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது. அந்த கியூஸி



புராசஸைப் பற்றி கூறுகிற அந்த நிறுவனம் இருக்கிறதே அது உலகத்திலே செல்வாக்கு உள்ள நிறுவனமா என்றால் இல்லை. அது ஒரு தனியார் நிறுவனம், இன்னும் சொல்லப்போனால் பெரிய பெரிய லிமிடெட் கம்பெனிகூட அல்ல. புரப்ரைட்டரி கன்சர்ன் என்று சொல்வார்களே, அப்படி புரப்ரைட்டரி கன்சர்ன்தான். கியூஸி புராசஸ் என்பது, நான் விசாரித்த வரையில், கரும்பு சக்கையிலிருந்து கியூஸி புராசஸை பயன்படுத்தி வேறு எந்தக் காகிதமும் தயாரிக்கலாமே தவிர நியூஸ்பிரிண்ட் என்ற அச்சுத் தாளை தயாரிக்கவே முடியாது என்று நான் கேள்விப்படுகிறேன். அது நடக்கமுடியாத காரியம். Not Feasible என்று நான் கேள்விப்படுகிறேன். இதைக்குறித்து அதிகாரிகள் கூட மறுப்புக் கருத்துக்கள் தெரிவித்ததாகவும் கேள்விப்படுகிறேன். இன்றைய தொழில் துறைச் செயலாளருக்கு முன்பு இருந்த, 3 தொழில் துறை செயலாளர்களும் இது கவைக்குதவாத திட்டம் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அது உண்மையா அல்லவா என்பதை அமைச்சர்தான் எனக்குச் சொல்லவேண்டும். முன்னாள் நிதித்துறை செயலாளர் அப்படி ஒரு மறுப்புக் கருத்துத் தெரிவித்திருக்கிறார் என்றுகூட செய்திகள். அது உண்மையா அல்லவா என்பதை அமைச்சர்தான் எனக்குச் சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு இதற்கு முன்பு இருந்த அதிகாரிகள் எல்லாம் கூட, இது பீஸிபிள் அல்ல என்ற கருத்தை, மூன்று செயலாளர்கள் நிதித்துறை செயலாளர் உள்பட தெரிவித்திருந்தும் கூட இப்போது இண்டஸ்ட்ரீஸ் செகரட்டரியையே நிறுவனத்தினுடைய எக்ஸிகியூடிவ் டைரக்டராகவும் ஆக்கி விஸ்வநாதன் அவர்களை தலைவராகக் கொண்டு 200 கோடி ரூபாய் திட்டத்தைச் செயல்படுத்துவதினுடைய நோக்கம் என்ன? நான் கேள்விப்படுகிறேன். அது உண்மையாக இருக்கக்கூடாது. வெளிநாட்டுச் செலவாணியில் இந்த 200 கோடி ரூபாயில் 10 சதவீதக் கமிஷன் இருக்கிறது என்றும் அதிலே யார் யார் ஈடுபடக்கூடும் என்றும் பயங்கரமான செய்திகள் கேள்விப்படுகிற காரணத்தினால் இதைத் தொடங்குவதற்குமுன்பு நான் உங்களை எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஊழல்களுக்கு இடம் தந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான். நான் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்தத் திட்டத்தைப் பற்றி பீஸிபிள் என்று புருப் செய்யப்படாத டெக்னாலஜியை நீங்கள் தேர்ந்தெடுத்ததேன்? இது ஒன்று. அந்த கியூஸி புராசஸ் வேறு எங்காவது வெற்றிகரமாகப் பயன்படுகிறதா? இரண்டு. நம்முடைய அதிகாரிகள் முக்கியமான 3 இண்டஸ்ரீஸ் செகரட்டரிகள் இது நாட் பீஸிபிள் என்று எதிர்ப்பு தெரிவித்தது உண்டா இல்லையா? உண்டு என்றால் அந்தக் குறிப்புகளை அவையிலே வைத்து மற்றவர்கள் பார்க்க உதவுவார்களா? கன்சல்டன்ட்டான விஸ்வநாதன் அவர்கள் சேர்மனாக இருப்பது முறைதானா ? எனவே இந்தக் கேள்விகள் எழுகின்ற பல்வேறு ஊழல்களுக்குக் காரணமாக அமைந்துவிடுமோ என்ற அச்சத்தாலே நீங்கள் ஈடுபடுவது முறையற்றது. முறையாக நீங்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். ஜாயின் செக்டார்

அல்ல இது; அரசுத் துறை என்று சொல்லிவிட்டு, கன்சல்டன்டை ஒரு சேர்மனாகப் போட்டு, இந்தக் காரியத்தை நடத்துவது தகாது என்பதை எடுத்துக் கூறி, இந்த அளவோடு என்னுடைய கருத்துக்களை நிறுத்திக் கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழில்துறை மானியக் கோரிக்கையின்மீது நேற்றும், இன்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர் தங்களுடைய மேலான கருத்துக்களை நல்கியிருக்கிறார்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர் தொழில்துறை கொள்கைக் குறிப்பின்மீது பல்வேறு கருத்துக்கள் அடங்கிய வெட்டுத் தீர்மானங்களையும் நல்கியிருக்கிறார்கள். அதன் மீது என் பொறுப்பிலேயிருக்கின்ற சிறு தொழில்களைப் பற்றிய விவரங்களை உங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வர விழைகின்றேன். அடுத்து மற்ற விவரங்களை என்னையடுத்து பதிலுரை சொல்லவிருக்கின்ற மாண்புமிகு தொழிலமைச்சரவர்கள் நல்குவார்கள்.

தமிழக அரசினுடைய தொழில் கொள்கை இன்றைக்குக் கிராமப் பகுதிகளில் மண்டிக்கிடக்கின்ற மனித சக்திகளையும், மூலப்பொருட்களையும் ஒன்றாக இணைத்து, குறைந்த முதலீட்டில் அதிக அளவிற்கு, குறுகிய காலத்தில் வேலைவாய்ப்பை உருவாக்கி, தொழில் வளத்தைப் பெருக்க வேண்டுமென்பது பல குறிக்கோள் களில் முதன்மையான குறிக்கோள் ஆகும்.

அதே நேரத்தில் தமிழ்நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்கு வதோடு, அதேநேரத்தில் பெருக்குகின்ற அந்தத் தொழில் வளத்தின் பயன்கள் சமூக நீதியின் அடிப்படையில் அமைந்து, மக்களுக்கும், பின் தங்கிய மக்களுக்கும், வறுமைக்கோட்டிற்கும் கீழே இருக்கின்ற மக்களுக்கும், வளர்ந்து வருகின்ற தொழில் முன்னேற்றத்தினுடைய பயன்களெல்லாம் அவர்களை எட்ட வேண்டுமென்பது தமிழக அரசினுடைய ஆழ்ந்த நம்பிக்கையாகும். Industrial growth and social Justice சமூக நீதியோடு கூடிய தொழில் வளர்ச்சிதான் தமிழக அரசினுடைய கேந்திரமான உணர்வாக இன்றைக்கு ஆக்கிக்கொண்டு, கடந்த மூன்றாண்டுக் காலமாக, நாங்கள் பொறுப்பேற்ற பிறகு, அந்த விழுமிய இலட்சியம் நிறைவேறுவதற்காக எல்லா வழிகளிலும் முயன்று வருகிறோம். குறிப்பாக நான் குறிப்பிட்ட அந்த இலட்சி யங்களை நிறைவேற்றுவதற்காக இன்றையதினம் பல்வேறு அமைப்புக்களை உருவாக்கி—இந்த அரசு பொறுப்பேற்ற பிறகும் உருவாக்கி, ஏற்கனவேயிருந்த அமைப்புக்களையும் செம்மைப் படுத்தியும், முறைப்படுத்தியும், அந்த சாதனங்களின் வாயிலாக இன்றையதினம் சமுதாயத்தில் ஒரு தொழிற்புரட்சியை உருவாக்க வேண்டுமென்பதற்காக மிகுந்த முனைப்போடு இந்த அரசு பணிபுரிந்து கொண்டு வருகிறது.



குறிப்பாகத் தொழில் வணிகத்துறை இயக்குநரகம், மாவட்டத் தொழில் மையம்- தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ), தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) என்று இப்படிப்பட்ட நிறுவனங்களும், சிப்காட் போன்ற நிறுவனங்களும், இப்படிப் பல நிறுவனங்களைக் கருவிகளாக வைத்துக்கொண்டு தொழில் வளத்தைப் பெருக்கு வதற்காகக் கடந்த மூன்றாண்டுக் காலமாக மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுடைய அரசு முயன்றுகொண்டு வருகிறது. அந்த வகையில் ஒரு கணிசமான அளவிற்கு மன நிறைவு கொள்ளுகின்ற வகையில் இன்றையதினம் தொழில் வாய்ப்புக்களை வேலை வாய்ப்புக்களை விரிவாக்குவதிலும், அதேநேரத்தில் தொழில் வளத்தைப் பெருக்குவதிலேயும் கணிசமான அளவிற்குத் தமிழக அரசு வெற்றி பெற்றிருக்கிறது என்பதனை இந்த நேரத்தில் பணிவன்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12.30]

மாண்புமிகு சித்தன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலேகூட குறிப்பிட்டார்கள், கடந்த 3 ஆண்டுக் காலத்தில் சிறுதொழில் என்ற வகையில் தொழில் வணிகத் துறையிடம் பதிவு செய்த தொழில்களின் எண்ணிக்கையை அவர்கள் குறிப்பிட்டார்கள். 1978-வது ஆண்டு 18,789 சிறுதொழில்கள் சான்றிதழ் பெற்ற சிறு தொழில்களாக இருந்த நிலை மாறி, 1981-வது ஆண்டு பிப்ரவரி முடிய 35,000 தொழில்கள் பதிவு செய்யப்பட்டிருக் கின்றன என்ற விவரத்தை அவர்களும் சொன்னார்கள். ஆக, 3 ஆண்டுக் காலத்தில், 18,700 என்றிருந்த நிலை மாறி, 35,000 என்ற அளவுக்கு இரண்டு மடங்கு பதிவுபெற்ற சிறுதொழில்கள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. அதன் வழியாக சிறு தொழில்கள் வளர்ந்து வருகின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இவைகள் வாயிலாக, வேலை வாய்ப்புகள், குறிப்பாக, தனியாரிடத்திலே இருக்கும் சிறுதொழில்கள் வாயிலாக—என்னிடத்திலே இருக்கிற குறிப்புப்படி—4,25,009 பேருக்கு இன்றையதினம் வேலை வாய்ப்பு நல்கப்படுகிறது. அதனைப் போலவே, இன்றைக்குத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், பிற அமைப்புகள், Tamilnadu Khadi and Village Industries, Industrial Co-operative match industries, Sericulture என இப்படி பலவகைகளிலும், பல அமைப்புகளுடைய வாயிலாகவும், கடந்த 3 ஆண்டுக் காலத்தில் ஏறத்தாழ 5,25,000 பேருக்கு வேலை வாய்ப்பை அந்த நிறுவனங்கள் நல்கிருயிக் கின்றன. ஆக, தனியார்கள் இன்றைக்குச் சிறுதொழில்களை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய வாயிலாக, 4,25,000 பேருக்கு, ஏற்கனவே நான் சொன்னது போல், Tamil Nadu Khadi and Village Industries, Industrial Co-operative match Industries, Sericulture இவற்றின் வாயிலாக, 3 ஆண்டுகளில் 5,25,000 பேருக்கும் ஆக, இன்றையதினம் 9,50,000 பேருக்குத் தமிழ் நாட்டிலே, 3 ஆண்டுகளிலே வேலை வாய்ப்பு உருவாக்கித் தரப் பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, 3 ஆண்டுகளில் தொழில் வளர்ச்சியில் தொடர் நடவடிக்கைகள் பல முனைகளில் மிகத் தீவிரமாக எடுக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதனை இந்த நேரத்தில் சொல்வது எனது கடமை என்று கருதுகிறேன். தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற அமைப்பின் வாயிலாக, Industrial Co-ope ative society என்ற வகையில், அது ஒரு மகத்தான திருப்பத்தை இன்றையதினம் தமிழகத்தில் உருவாக்கியிருக்கிறது. 1977-வது ஆண்டு, இந்த ஆட்சி பொறுப்பிற்கு வருகிற நேரத்தில், தமிழ்நாட்டில் 300 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்தான் இருந்தன. ஆனால், இன்றைக்கு, 3 ஆண்டுகளுக்குப் பிறகு, கிராமப் புறத்தில் பட்டுத் தொழில் போன்ற தொழில்களை உருவாக்க வேண்டும், தீப்பெட்டி போன்ற தொழில்களை உருவாக்க வேண்டும், நார் போன்ற தொழில்களை உருவாக்க வேண்டும், தேயிலை போன்ற தொழில்களை உருவாக்க வேண்டுமென்ற வகையில், அப்படிப்பட்ட அந்தத் தொழில்களில் தொழில் கூட்டுறவுச் சங்கம் என்ற படைக்கலனைப் பயன்படுத்தி, கடந்த 3 ஆண்டுகளில் 400 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழக அரசால் உருவாக்கப் பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், 1977 வரையில் 300 சங்கங்கள் மட்டுமே இருந்தன, ஆனால், 1981-வது ஆண்டு, இன்றைக்கு ஏறத்தாழ 702 சங்கங்களாகி யுள்ளன. ஆக, 3 ஆண்டுகளில், 402 தொழில் கூட்டுறவுச் சங்கங்களைத் தமிழக அரசு உருவாக்கி இருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். அந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் 20 வகையான தொழில்களைச் சேர்ந்த நண்பர்களைக் கொண்டு வந்து இணைத்து, அவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டியிருக்கிறோம் என்பதையும் இந்த நே த்தில் சொல்லிக்கொள்கிறேன். குறிப்பாக, தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. உச்சிகௌடா பேச்சினூடே குறிப்பிட்டதைப் போல சிறப்பாகச் செயல்படுகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் இன்றைக்கு தேயிலைக் கூட்டுறவுச் சங்கங்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. கடந்த டிசம்பர் மாதம் கூட, கூடலூர் பகுதியிலே இருக்கிற சாலிஸ்பரி பகுதியில் ஒரு தேயிலைக் கூட்டுறவுச்சங்கத்தை உருவாக்கி, 12-வது சங்கமாக விரிவாக்கப்பட்டது. இதுவரையிலும் 12 தேயிலை கூட்டுறவுச் சங்கங்கள் இந்தத் துறையிலே இருந்து கொண்டிருக் கின்றன. நம்முடைய நாட்டிலே விளையக்கூடிய தேயிலைதான் அன்னியச் செலவாணியை ஈட்டித் தருகின்ற பொருளாகும். இன்றைக்குத் தமிழ்நாட்டிலே விளைகின்ற தேயிலைதான், நீலகிரி மாவட்டத்தில் விளைகின்ற தேயிலைதான்' வால்பாரை காடுகளில் விளைகின்ற தேயிலைதான், ஆனைமலையிலே விளைகின்ற தேயிலைதான், ராணுவத்திலே இருக்கின்ற நண்பர்கள் விரும்பிச் சாப்பிடப்படுகின்ற நிலை இருக்கின்றது. அவர்கள் வாங்கக்கூடிய நிலை இருக்கின்றது என்பதைத் தெரிவித்து, இந்தத் தேயிலை தலைசிறந்த தேயிலையாக



இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தேயிலையை நல்லவகையிலே விருத்தி செய்வதற்காக தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக எல்லா முயற்சிகளையும் ஏற்படுத்தி வருகிறது, புரட்சித் தலைவர் அரசு என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக 10,000 தேயிலைத் தொழிலாளர்கள் அங்கே வேலை செய்கின்றார்கள். 20 ஆயிரம் ஏக்கர் நிலத்தை நம்பிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த 12—வது கூட்டுறவுச் சங்கத்தில் இதுவரையில் பெரிய முதலாளிகள், பெரிய வசதி படைத்தவர்கள், இந்தத் தொழிலாளர்களைச் சுரண்டிக் கொண்டு வந்தவர்கள்—இந்தத் தேயிலைத் தொழிலாளர்களை இணைத்ததன் வாயிலாக, ஏறத்தாழ 40 ஆயிரம் பேர்களுக்குக் கட்டுக்கோப்பான பாதுகாப்பு கிடைக்கின்ற வகையில் சுரண்டலற்ற உணர்வு ஏற்படுகின்ற வகையில் நிலைமை அங்கே உருவாகி இருக்கின்றது. அதுமட்டுமல்ல சிறு தேயிலை உற்பத்தியாளர்களுக்கு சேவை செய்ய இன்கோசர்வ் என்ற ஒரு மையக் கூட்டுறவு இணையத்தை வைத்து அந்தக் கூட்டுறவு இணையத்தின் வாயிலாக அவர்கள் உற்பத்தி செய்கின்ற தேயிலை போன்றவைகளை எல்லாம் கொச்சி போன்ற பகுதி களுக்கும், இந்திய துணைக்கண்டத்தின் பிற பகுதிகளுக்கும் இன்றையதினம் அனுப்புவதற்கு இந்தக் கூட்டுறவு சங்கம் பயன் படுகிறது என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

மேலும் நெசவாளர்களுக்கு,அதே கூடலூர் பகுதியில் 30 லட்சம் ரூபாயில் பிளைவுட் குச்சிகள் கிடைக்கின்ற காரணத்தால் பிளைவுட் தொழிற்சாலை உருவாக்கி, அந்தத் தேயிலைத் தொழிலுக்குத் தேவையான அட்டைகளையும், பெட்டிகளையும், பேக்கேஜ் மெட்டீரியல் என்று சொல்லத்தக்கவைகளையும் உருவாக்க 30 லட்சம் ரூபாயில் அந்த தொழிற்சாலை நிறுவப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல தீப்பெட்டித் தொழிற்சாலை. மாண்புமிகு உறுப்பினர் நல்லப்பன் அவர்களும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் பழனியப்பன் அவர்களும் இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் விழுப்புரம், திண்டிவனம், பெருந்துறை போன்ற பகுதிகளில் உருவாக்கப்படவேண்டும் என்று வெட்டுத் தீர்மானத்திலே சொல்லி இருக்கிறார்கள். இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை, 1977 வரையில், நாங்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் வரையிலும், 14 கூட்டுறவுச் சங்கங்கள்தான் இருந்தன. அதுவும் வாடிக்கையாக உள்ள சிவகாசி, விருதுநகர், கோவில் பட்டி போன்று டிரடிஷனலாக உள்ள பகுதிகளில்தான் இருந்தன. நாங்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னர், 1977 லிருந்து 1981 வரையிலும், 85 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாகி இருக்கின்றன என்பதனை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) லாபகரமாகத்தான் இயங்கிக் கொண்டுள்ளன. லாபகரமாக மட்டுமல்ல, இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் அளவுக்கு இருக்கின்றது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் தயவு செய்து அமரவேண்டும். இன்னும் ஒரு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். தயவு செய்து குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, 1977 வரையில் இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் டிரடிஷனல் ஏரியாவிலே மட்டும் இருந்தன. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் பொறுப்பேற்ற பிறகு, தர்மபுரி போன்ற பின்தங்கிய பகுதியிலும், பெரியார் மாவட்டம் போன்ற பகுதியிலேயும், பெரியகுளம், திருமங்கலம் போன்ற பின்தங்கிய பகுதிகளிலே எல்லாம் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் விரிவுபடுத்தப்படுகின்ற முயற்சி கடந்த 3 வருடங்களாக இயங்கி வருகின்றன என்பதனை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12.40]

சேலம் மாவட்டத்தில் இன்றையதினம் மரவள்ளிக்கிழங்கை ஏராளமாக விவசாயிகள் பயிர் செய்கின்றனர். அதைக்கொண்டு, மாவு தயாரிக்கவும், ஜவ்வரிசி தயாரிக்கவும் சேலம் பகுதியில் பல்வேறு இடங்களில் தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஏறத்தாழ 400 ஜவ்வரிசித் தொழிற்சாலைகள் சேலத்தை ஒட்டிய பகுதிகளில் இருக்கின்றன. 800 தொழிற்சாலைகள் பெயரளவில் இருக்கிறது என்று சொன்னாலும், 400 தொழிற்சாலைகள் தான் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. அந்த 400 தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் மாவு அல்லது ஜவ்வரிசி வாங்கி விற்பனை செய்பவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் 4—5 பேர்கள் தான் இருக்கின்றனர். அந்த 400 தொழிற்சாலைகளும் அதை நம்பி பயிரிடுகிற பல்லாயிரக்கணக்கான விவசாயிகளும் அவர்களை நம்பியே வாழவேண்டியிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்கு உதவவும், அந்த விவசாயிகளுக்கு உதவவும், ஏற்ற வகையில் சேலம் மாவட்டத்தில் விரைவில் ஒரு தொழிலாளர் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தி, விவசாயிகளையும், தொழிற்சாலை அதிபர்களையும் அந்த இடைத்தரகர்கள் பிடியிலிருந்து விடுவிக்க அரசு முடிவு எடுத்து இருக்கிறது. விரைவில் அது செயல்படுத்தப்படும் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் அவர்கள் பேசுகையில் பெருந்துறை பகுதியில் நார் தொழில் நல்ல முறையில் இருக்கிறது என்றும், அங்கே நார் தொழில் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வெளிநாடுகளுக்கு, குறிப்பாக தூரக்கிழக்கு நாடுகளுக்கு அனுப்பலாம் என்றும், அங்கே அவைகளுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது என்றும் தெரிவித்துக் கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் கவனப்படுத்த விரும்புகிறேன். 1981-82-ஆம் ஆண்டில் 25 லட்சம் ரூபாய் சர்க்கார் மூலதனத்தில் 22 நார் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கவும், அதன் மூலம் 6000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டமும் அரசின் ஆய்வில் இருக்கிறது. விரைவில் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே 20 கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு 22 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க இருப்பதையும் சேர்த்தால் 42 நார் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



எலெக்ட்ரானிக் தொழில் பற்றி பல விவரங்களை எடுத்துச் சொன்னார்கள் எலெக்ட்ரானிக் தொழில் வளர்க்கப்பட வேண்டும். அதற்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று திரு. நெடுமாறன் சொன்னார்கள். இந்த யுகம் எலெக்ட்ரானிக் யுகம். ஆகவே, நாமும் அதில் போட்டி போடுகின்ற முறையில் விழிப்பாக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். கருநாடக மாநிலத்தில் எலெக்ட்ரானிக் தொழில் வளர்ந்து இருப்பதை விட, தமிழகத்தில் குறைவாக இருப்பதற்குக் காரணம், அந்த கருநாடக மாநிலத்தில் எலெக்ட்ரானிக் சம்பந்தப்பட்ட பல பெரிய தொழிற்சாலைகள், மத்திய அரசின் ப்ராஜெக்ட்டுகள், நிரம்பியிருக்கின்றன. பாரத் எலெக்ட்ரானிக்ஸ் போன்ற பெரும் பெரும் மூலதனத் தொழிற்சாலைகள் அங்கே இருப்பதால் அதை ஒட்டியிருக்கும்—அன்சிலரி—தொழில்கள் ஏராளமாக வளர்ந்து விட்டன. அதன் காரணமாகத்தான் பெங்களூரில் அத்தகைய தொழில்கள் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. தமிழ் நாட்டில் மத்திய அரசின் உதவியோடு அல்லது மத்திய அரசால் நிறுவப்பட்டுள்ள எலெக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலைகள் ஏற்படுத்தாத காரணத்தால், அதை ஒட்டியுள்ள அன்சிலரி தொழில்களும் வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. ஆனால் தமிழ் நாட்டின் தனிச்சிறப்பு என்னவென்றால், இங்கே அத்தகைய எலெக்ட்ரானிக் நிபுணர்கள் மூலம் அடையாறு பகுதியில் விக்ரம் இன்ஸ்டியூட் என்ற பெயரில் ஒரு தனி எலெக்ட்ரானிக் தொழிற்பேட்டை ஏற்படுத்தி, அதிலே 40—50 சிறு தொழில் அதிபர்கள் எலெக்ட்ரானிக் பொருள்களைத் தயாரித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

1970-71-ல் 10 லட்ச ரூபாய் மட்டுமே மூலதனம் போட்டு எலெக்ட்ரானிக் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் கடந்த 3 ஆண்டுகளில் நல்ல வகையில் அந்தத் தொழில் முன்னேற்றம் கண்டு இருக்கிறது. 1978-ம் ஆண்டு வரையில் 5000 டி.வி. செய்யப்பட்டு வந்தது. ஆனால் அதற்குப் பிறகு இந்த 3 ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சியை எண்ணிப் பார்த்தால் 35,000 தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தற்போது கூட்டுத்துறையில் உள்ள தொழில் நிலையங்களும் சேர்த்து 45,000 தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கிற அளவிற்கு நிலைமைகள்

வளர்ந்து இருக்கின்றன. அடுத்த ஆண்டு 17 பலபுதிய தொழிற்சாலைகளை முழு அளவில் செயல்படுத்த இன்றைக்கு ஆக்க வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆக, 45,000 தொலைக் காட்சிப் பெட்டிகளை அந்த எலக்ட்ரானிக் எஸ்டேட் மூலம் உற்பத்திச் செய்ய தமிழக அரசு முயற்சி செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சிட்கோ நிறுவனத்தைப்பற்றிச் சொல்லும்போது சிறு தொழில் பேட்டைகள் அமைக்கும் விவரம் பற்றியும், சிறு தொழில் பேட்டைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் பற்றியும் வேறு பல விவரங்கள் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக 1958-ம் ஆண்டுதான் மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தொழில் அமைச்சராக இருந்தபோதுதான் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களால் முதல் முதலாக தமிழ்நாட்டில் தொடங்கிவைக்கப்பட்டது கிண்டி தொழில்பேட்டை. அதன் பிறகு 1980 ஆம் ஆண்டுவரையில் இன்றைக்கு பல இடங்களில் தொழில் பேட்டைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும் கூட 1970 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டு காலத்தில் தொழில் பேட்டைகள் எந்த அளவுக்கு நிறுவப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால் 622 தொழில் கூடங்கள்தான் கடந்த 10 ஆண்டுகளில் உருவாகியிருக்கின்றன. இதிலே கடந்த 3 ஆண்டுகளில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தொழில் கூடங்களை அதிக அளவில் அமைக்கவேண்டுமென்று முனைந்து செயல்பட்டதால் சென்ற ஆண்டில் 350 தொழில் கூடங்களும் இந்த ஆண்டில் 250 தொழில் கூடங்களும் ஆக இந்த இரண்டாண்டுகளில் மட்டும் 600-க்கு மேற்பட்ட தொழில் கூடங்களை தமிழக அரசு கட்டி முடித்திருக்கிறது. இரண்டு தொழிற்கூடங்களே இருந்ததற்குப் பதிலாக மாண்புமிகு புரட்சித் தலைவர் வந்தபிறகு வில்லிவாக்கம், கொடுங்கையூர், ஓசூர், மறைமலைநகர் உட்பட பல்வேறு இடங்களில் 600-க்கு மேற்பட்ட தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக கோவை மாவட்டத்தில் தாராபுரத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பு எஸ்டேட் ஒன்று, அடையாறில் எலக்ட்ரானிக் எஸ்டேட் இருக்கிறதே, அதைப்போல அமைக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவில் உருவாகி வருகிறது.

அதைப்போல திருப்பூரில் பனியன் பெருமளவில் உற்பத்தியாகி, அந்தத் தொழில் வளர்ந்துவரும் ஒரு பெரும் தொழிலாக இருக்கிறது. என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். இந்த பனியன் தொழிலுக்கு என்றே, எக்ஸ்க்ளுசிவ்லி ஃபார் பனியன்



இன்டஸ்ட்ரி, 50 இலட்சம் ரூபாய் செலவில் உருவாகி வருகிறது. அதைப்போல கோவையில் ஒரு எலக்ட்ரானிக் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசின் முனைந்த முயற்சியினால் இவைகள் எல்லாம் உருவாகி வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனியப்பன், திண்டிவனம் சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கமணி, மற்றும் திரு. சித்தன் ஆகியோர்கள் தொழில் பேட்டைகள் அமைக்கவேண்டிய அவசியம் பற்றி வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். எங்கெங்கே, தொழில் பேட்டைகள் அமைக்க வாய்ப்பு இருக்கிறது, எங்கெங்கே தொழில் தொடங்க தொழில் அதிபர்கள் முன்வருகிறார்கள் என்ற விவரங்களை எல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், ஆராய்ந்து பார்த்து ஆங்காங்கே தொழில் கூடங்களை அரசு உருவாக்கித் தரும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, 'ரா மெட்டீரியல்ஸ்' பற்றிப் பல மாண்புமிகு அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். 1978 ஆம் ஆண்டு சிட்கோ மூலம் 8·15 இலட்சம் ரூபாய் அளவுக்குத்தான் தொழில்களுக்குத் தேவைப்படுகிற ரா மெட்டீரியல்ஸ் வழங்கப்பட்டது. இரும்பு, எக்கு, கோக், சுட்ட கரி, மெழுகு, பொட்டாசியம் குளோரைடு போன்ற மூலப்பொருட்கள் 1978 ஆம் ஆண்டில் 8 கோடி ரூபாய்க்கும், 1979 ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாய்க்கும், 1980 ஆம் ஆண்டில் 17 கோடி ரூபாய்க்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு, 1981-82 ஆம் ஆண்டில் 32 கோடி ரூபாய்க்கு சிறு தொழில்களுக்கு மூலப்பொருட்கள் வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

அதைப்போல வேறுபல விவரங்கள், சிறு தொழில்களுக்கு இரும்பு மற்றும் எக்குப் பொருட்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு இருக்கிறது. தேவையான அளவுக்கு கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இதற்குக் காரணம் இப்படிப்பட்ட மூலப் பொருட்கள் எல்லாம் நமக்கு வடபுலத்திலே இருந்து வரவேண்டும். இரும்பு வடபுலத்திலே இருந்து வரவேண்டும்; எக்கு வடபுலத்திலே இருந்து வரவேண்டும். இவைகளை உற்பத்திச் செய்கின்ற அங்கிருக்கிற ஆலைகள் சரியாக செயல்பட்டால்தான் உரிய காலத்தில், உரிய அளவுக்கு, உரிய முறையில் செயல்பட்டால்தான் நமக்குத் தேவையான அளவுக்கு கிடைத்து, இங்கே இருக்கிற சிறு தொழில்களுக்கு அதை கொடுக்கமுடியும்.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1981 ஏப்ரல் 16

[பிற்பகல் 12.50]

தமிழ்நாட்டிற்கு ஒரு இலட்சம் டன் தேவைப்படுகிறது. இங்குள்ள தொழிற்சாலைகள் எல்லாம் முழுமையாக இயங்குவதற்கு நமக்கு ஒரு இலட்சம் டன் இரும்பு இருந்தால்தான் முடியும். அப்போதுதான் தமிழ்நாட்டில் சிறுதொழில்கள் இயங்க முடியும். கடந்த நான்காண்டுகளில் டெல்லியிலிருந்து நமக்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்ற விவரத்தைத் தெரிவிக்கின்றபோது இது கவலை தரக்கூடிய நிலைமையைத்தான் நமக்கு ஏற்படுத்துகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1978–79-லே 12 ஆயிரம் டன். 1979–80-லே 23 ஆயிரம் டன் 1980–81-லே 30 ஆயிரம் டன். இந்த வகையிலேதான் அவர்கள் ஒதுக்கீடு செய்தார்கள். இப்படி இந்தப் பொருளை மட்டுமல்ல இன்னும் மற்ற பொருட்களையும் நமக்கு போதிய அளவிலே ஒதுக்கித் தரவில்லை. அதுமட்டுமல்ல. ஒதுக்கித் தருகின்ற பொருள்களுக்கு இரயில்பெட்டி கிடைப்பதிலே உள்ள சுணக்கம் காரணத்தால் அவைகளும் நமக்கு சரியாக வந்து சேராத நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. இப்படிப்பட்ட நெருக்கடி நிலைமையினைத் தவிர்க்கின்ற வகையிலே இன்றைக்கு சிட்கோ மூலமாக சிறு தொழில் அதிபர்களுக்கு உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதுபோலவே மற்ற மூலப்பொருட்களையும் சிட்கோ முடிந்த அளவுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கின்றது. அடுத்து ஒரு கருத்தை மட்டும் சொல்லி என்னுடைய உணர்வுகளை முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

அடுத்து குறிப்பாக புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் தான் பட்டு வளர்ப்புத்துறை அதாவது செரிகல்சர் என்ற தொழில் சிறப்பான இடத்தைப் பெற்று இருக்கின்றது. கிராமப்புறங்களில் தொழிலைப் பெருக்குவதன் மூலம் ஒரு ஏக்கரில் இதைப் பயிர் செய்தால் அதனால் 5 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது. ஆகவே கடந்த இரண்டு ஆண்டுகளாக அதற்காக ஒரு தனி இயக்குநரையே நியமித்து பட்டு வளர்ப்பிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஒரு மகத்தான திருப்பத்தையே உருவாக்கி இருக்கின்றது. மேலும் 6–வது ஐந்தாண்டுத் திட்டத்திலே மத்திய அரசு இந்த பட்டு வளர்ப்பை அகில இந்திய ரீதியிலே அபிவிருத்தி செய்து அகில உலக சந்தையிலே நம்முடைய பெயர் வருகின்ற அளவுக்கு நிலைமையை உருவாக்கவேண்டும் என்று முயற்சி செய்து வருகின்றது. அந்த வகையிலே தமிழ்நாடு அரசுக்கும் தேவையான உதவிகளைச் செய்து வருகின்றது. தமிழக அரசு கூட 6–வது ஐந்தாண்டுத்திட்டத்திலே கணிசமான தொகையை இதற்காக ஒதுக்கி அந்தத் தொழிலை வளர்ப்பதற்கான முயற்சிகளிலே இறங்கி இருக்கிறோம். ஆண்டு இறுதியில் உலகத்தினுடைய மொத்த கச்சாப் பட்டின் தேவை 48,600 டன்னாக இருக்கும் என ஐக்கிய நாட்டு உணவு, விவசாய நிறுவனம் கணக்கிட்டிருக்கின்றது. இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே 6-வது ஐந்தாண்டுத்



1981 ஏப்ரல் 16] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

திட்டத்திலே கச்சாப்பட்டின் உலகத் தேவை 60,750 டன்களாகவிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்தியாவில் இன்றையதினம் உற்பத்தி ஆகின்ற கச்சாப்பட்டு 3500 டன்தான். ஆனால் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 9,000 டன்னாக இருக்கும். நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரையில் இதிலே மிகுந்த அளவுக்கு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக தமிழகத்தில் இன்றையதினம் 300 மெட்ரிக் டன் தான் உற்பத்தி ஆகிக்கொண்டிருக்கின்றது. ஆனால் கச்சாப்பட்டு உற்பத்தியை 6–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1300 மெட்ரிக் டன் என்ற அளவுக்கு உயர்த்துவதற்கு தமிழ்நாடு அரசு திட்டமிட்டிருக்கின்றது.

6-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் தமிழ்நாட்டிற்குத் தேவைப்படும் கச்சாப்பட்டின் தேவை அனைத்தையுமே தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்கின்ற அளவுக்கு நாம் இன்றைய தினம் முயற்சிகளைச் செய்து அந்தத் துறையிலே தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லி இருக்கிறார்கள். எல்லாப் பிரச்சினைகளுக்கும் விளக்கம் சொல்ல முடியவில்லை. இருப்பினும் உங்களுடைய மேலான கருத்துக்களை எல்லாம் மனதிலே கொண்டு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவைகளை எடுப்பேன் என்று சொல்லி இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

**திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, தீப்பெட்டித் தொழிற்சாலை பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இப்போது தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு ஒரு பயங்கரமான அபாயம் வந்திருக்கின்றது. முன்பெல்லாம் இந்தியாவிலே தயாரிக்கப்படுகின்ற தீப்பெட்டிகளில் 40 சதவீதம் தயாரிப்பதற்குத்தான் விம்கோ போன்ற நிறுவனங்களுக்கு லைசன்சு கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது 75 சதவீதம் தீப்பெட்டித் தயாரிப்பதற்கு விம்கோ நிறுவனத்திற்கு லைசன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அதனால் தீப்பெட்டித் தொழிலைச் செய்கின்ற சிறு தொழிற்சாலைகள் எல்லாம் அடிப்பட்டுப் போகின்ற நிலைமை ஏற்படுகின்றது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் எதுவும் சொல்லவில்லை, இப்போது பேசியபோதும் சொல்லவில்லை. ஆகவே இப்போதாவது அதுகுறித்து ஏதாவது சொல்கிறாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த விவரத்தில் நான் நினைவு அறிந்த வரையில் மாறுபடுகிறேன் என்றுதான் கருதுகிறேன். இருந்தாலும் தகவல்கள் தெரிந்து தொடர் நடவடிக்கை எடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினமும், நேற்றையதினமும் மாமன்றத்தின் சட்டமன்ற உறுப்பினர்களில், மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் தலைவர் உட்பட, அதேபோல மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட, 15 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எடுத்து வைத்திருக்கிறார்கள்.

அதைப்போல வெட்டுத் தீர்மானங்களைப் பொருத்தவரையில், 82 வெட்டுத் தீர்மானங்களை, தொழில்துறையில் பல்வேறு நிலைமைகளைக் குறித்து விவாதிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கொடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் சித்தன் அவர்கள் அந்த 82 வெட்டுத் தீர்மானங்களிலே 12 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்ததிலே முதல் இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் 2 நாட்களாக எடுத்து வைத்த பொதுவான கருத்துக்களுக்கெல்லாம் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்கள், எனக்கு முன்னாலே சில புள்ளி விவரங்களை எடுத்து வைத்து பதில் கூறியிருக்கிறார்கள்.

தொழில்துறையினுடைய மானியக் கோரிக்கையில் சென்ற ஆண்டு நடந்த விவாதங்களையும், இந்த ஆண்டு நடந்த விவாதங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, சென்ற ஆண்டு சொல்லப் பட்டதைப் போன்ற கடுமையான விமர்சனங்கள் இந்த ஆண்டிலே இல்லை என்பதில் இருந்து, கடுமையான குற்றச்சாட்டுகள் இந்த ஆண்டிலே இல்லை என்பதில் இருந்து, இங்கே தமிழகத்தில் தொழில் வளர்ச்சி வேகமாக வளர்ந்து வருகிறது என்பதை பேசிய, உரையாற்றிய, மாண்புமிகு உறுபபினர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். எடுத்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய அவர்கள் எல்லாம் சுட்டிக் காட்டியதைப் போல, கிராமப்புறங்களிலேயும், அதைப்போல தமிழகம் முழுவதிலேயும் பரவலான வேலை வாய்ப்பு உண்டாக்க வேண்டும் என்பதுதான், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய விருப்பமாகும். இந்த அரசினுடைய எண்ணமும் ஆகும். தமிழகத்தினுடைய பொருளாதார நிலையில், தமிழகத்தின் பொருளாதார அமைப்பு முறையில், தொழில் துறையினுடைய பங்கு 12.70 சதவீதத்திலிருந்து 26.89 சதவீதமாக தொழில்துறையில் பொருளாதார ரீதியில் உயர்ந்திருக்கிறது. இந்தியா முழுவதும் இருக்கிற தொழிற்சாலைகளில் தமிழகத்தினுடைய பங்கு 10.54 சதவீதமாக இருக்கிறது. அதைப்போல் பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் மூலமாக மொத்த பொருளாதார வளர்ச்சியில் தமிழகத்தினுடைய பங்கு 10 சதவீதமாக இருக்கிறது.



அது மட்டும் அல்ல. தொழில் வளர்ச்சியை கணக்கு எடுக்கிறபோது, உற்பத்தியினுடைய அளவிற்கு, தொழிற்சாலைகளுடைய எண்ணிக்கையை அவற்றின் அடிப்படையிலேதான் தொழில் பெருக்கத்தை கணக்கு எடுக்கிறோம். 1976–77 ஆம் ஆண்டிலே பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 850 ஆக இருந்தது, 1979–80ல் 9,139 ஆக உயர்ந்திருக்கிறது. அதைப் போலவே தொழிலாளர்களுடைய எண்ணிக்கையும் 1977–ல் 5.3 லட்சமாக இருந்தது, 1979-ல் 5.73 இலட்சமாக உயர்ந்து, 1980–81-ல் ஏறத்தாழ 7 லடசமாக உயர்ந்திருக்கிறது.

[பிற்பகல் 1.00]

இப்படி தமிழகத்தைப் பொறுத்தவரையில், கடந்த மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் தமிழகம் தொழில் வளர்ச்சியில் பின்தங்கி விடவில்லை என்பதையும், தமிழகத்தில் தொழில் வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட்டுவிடவில்லை என்பதற்காகத்தான் நான் ஏற்கனவே சொன்ன புள்ளிவிவரங்களை சுட்டிக்காட்டினேன். இங்கே பரவலாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன குற்றச் சாட்டுக்களுக்கெல்லாம் நான் பதில் சொன்னதற்குப் பின்னால் இந்த அரசு திட்டங்கள் சிலவற்றை அறிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய கருத்துக்களைச் சொல்கிறபோது பல்வேறு விதமான திட்டங்கள் அறிவிப்பு நிலையில்தான் இருக்கின்றன என்றும் 1977–க்குப் பின்னால் ஏதாவது தொழில்களை இங்கே துவக்கியிருக்கிறீர்களா என்றெல்லாம் கேட்டார்கள். காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் உட்பட கேட்டார்கள். 1977-க்குப் பின்னால் துவங்கப்பட்ட பெரிய, நடுத்தர தொழில்கள் ஏதாவது இருக்கிறதா என்று இங்கே பேசுகிறபோது கேட்டார்கள். 1977–க்குப் பின்னால் பொதுத் துறையிலும், கூட்டுத்துறையிலும், அதேபோல் கூட்டுறவுத் துறையிலும் ஏற்பட்டிருக்கிற தொழிற்சாலைகளை நான் வரிசைப் படுத்திச் சொல்லமுடியும். அரியலூரில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், அதேபோல் ஆலங்குளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் ஷீட் ப்ராஜெக்ட், அரக்கோணத்தில் அரக்கோணம் காஸ்டிங்க்ஸ் அன்ட் போர்சிஜிங்க்ஸ் லிமிடெட், — 1977–க்கு முன்னால் சர்க்கரை ஆலைகளுக்கு உரிமங்கள் பெற்றிருந்தாலும் 1977–க்குப் பின்னால் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை குருங்குளம், ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, இறையூர் என்று அதேபோல் கூட்டுத்துறையில் 1977–க்குப் பின்னால் டிட்கோமூலம் ஏறக்குறைய 16 தொழில்கள் துவங்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுத் துறையில் உளுந்தூர் பேட்டையில் நாள் ஒன்றுக்கு 1,750 டன் சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடிய சர்க்கரை ஆலையும் அதே போல் பல்வேறு பஞ்சாலைகள், திருநெல்வேலி பேட்டையில்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1981 ஏப்ரல் 16

இருக்கிற பஞ்சாலை உட்பட பல்வேறு பஞ்சாலை விரிவாக்கம் எல்லாம் இருக்கின்றன. ஆக, தொழிற்சாலைகள், 1977-க்குப் பின்னால் தமிழகத்தில் நிறைய பெருகியிருக்கின்றன என்பதற்காகத்தான் நான் இதை எடுத்துச் சொல்கிறேன். .. .. ..

1977க்குப் பின்னால்,

Tamil Nadu Cements Ariyalur Works.
Asbestos Cement Sheet Project, Alangulam.
Arakonam Castings & Forgings, Ltd., Arakonam.
Tamil Nadu Chemical Products, Karaikudi.
Inter Continental Leathers, Ltd., Ranipet.
Southern Hydro Carbons, Ltd., Kolathur.
Acetylene & Industrial Gas Cylinders, Ltd., Ambattur.
Southern Agrifurane Industries, Ltd., Mundiambakkam.
Tamil Nadu Fluorine & Allied Chemicals., Ltd., Manalur.
Asian Bearings, Ltd., Bagalur.
Asia Carbon, Ltd., Hosur.
Vanavil Dyes & Chemicals, Ltd., Cuddalore.
GangaPpa Paper Mills, Ltd., Nadakuttu.
Tuticorin Alkali Chemicals & Fertilizers, Ltd., Tuticorin.

என்று பல தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் துவங்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல. இன்று உற்பத்தி துவங்கும் பணியில் அந்த நிலையில் இருக்கிற தொழிற்சாலைகளும் உள்ளன. ஆக, தமிழ்நாட்டில் நிரம்ப தொழிற்சாலைகள் 1977-க்குப் பின்னால் நடுத்தர, பெரிய தொழிற்சாலைகள் துவக்கப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அதே போல் மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்களும், அதேபோல் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டியதைப் போல் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது என்பது ஏதோ மாநில அரசுக்கு மட்டும் இருக்கிற கடமை அல்ல. அல்லது நாட்டிலே தொழில் வளர்ச்சியை உண்டாக்கவேண்டும் என்பது ஒரு மாநில அரசுக்கு மட்டும் உட்பட்ட கடமை அல்ல. மத்திய அரசும் அதிலே முழுமையான பங்கை எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்கள்



1981 ஏப்ரல் 16] [திரு எஸ். திருநாவுக்கரசு]

1967க்குப் பின்னால் தொழில் முதலீட்டுக்கு, மத்திய அரசு ஒதுக்கிய பணம், அந்தப் பணத்தின் அளவு கொஞ்சம்கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்திருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் பல்வேறு நேரங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறோம். நமது எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல் இப்போது மாநிலத்தின் மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தாலும் சரி அல்லது வறுமைக்கோட்டிற்குக் கீழே வாடுகின்ற மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்த்தாலும் சரி, எந்த அடிப்படையில் பார்த்தாலும் சரி தொழிற்சாலைகளை துவங்குவதற்கான சிதோஷ்ணத்தை எடுத்துக் கொண்டு, அடிப்படை வசதிகளை எடுத்துக் கொண்டு பார்த்தாலும் சரி, தமிழகத்தில் மத்திய அரசினுடைய முதலீட்டுப் பங்கு 8% இருக்கவேண்டியது 4% ஆக குறைந்திருக்கிறது. இது மிகுந்த வேதனைக்குரியது, வருத்தத்திற்குரியது

இதற்கு நீங்கள் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் எந்த திட்டத்தை மத்திய அரசிடம் கொண்டு போனீர்கள் என்று கேட்டார்கள். நாங்கள் எவ்வளவோ எழுதுகிறோம். அதற்குப் பின்னால் என்ன தொடர் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும், தொழில் அமைச்சராகிய நானும், தொழில் துறையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பல்வேறு நேரத்தில் மத்திய அமைச்சர்களைச் சந்திக்கின்ற நேரத்தில் இந்தக்குறைபாட்டைச் சொல்லியிருக்கிறோம். மத்திய அமைச்சர் அவர்களிடம் தொழில் அமைச்சர்கள் மாநாட்டிலே இந்தக் குறைபாட்டை எடுத்துச் சொல்லி, தமிழகத்தில் மத்திய அரசின் முதலீட்டின் பங்கு 4% ஆக குறைந்து இருக்கிறது மத்திய அரசினுடைய தொழில் மூலதனப் பங்கு இன்னும் அதிகரிக்கப்படவேண்டும் என்று—தமிழ்நாட்டின் வேண்டுகோளாக அல்ல, தமிழ்நாட்டிற்கு நியாயமான பங்கு வந்து சேரவில்லை என்ற மனக்குறையை நீங்கள் உணரவேண்டும் என்று அந்தத் தொழில் அமைச்சர்கள் மாநாட்டிலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம் அது மட்டுமல்ல, இங்கே மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சுட்டிக்காட்டியது போல 1967-க்கு முன்னாலே, என்னென்ன தொழிற்சாலைகள், மத்திய அரசு, நிறுவனங்கள், மத்திய அரசு தமிழ்நாட்டிலே துவங்கினார்கள் என்ற விவரங்களை ஆண்டுவாரியாக சொன்னார்கள். 1967-க்குப்பின்னால் சேலம் இரும்பாலைத் திட்டத்தைத் தவிர மற்ற பெரிய தொழில்களுக்கான அல்லது மத்திய அரசின் தொழிற்சாலைகளுக்கான திட்டங்கள் எதுவும் இங்கே ஆரம்பிக்கப்படவில்லை. அது மிகுந்த மன வருத்தத்திற்குரியது.

1977-க்குப் பின்னால் இன்னும் நிலைமை என்னவென்றால், இந்த 3 ஆண்டுகளில் பி.எச்.இ.எல். நிறுவனத்தினுடைய விரிவாக்கத்தின் பகுதியை இராணிப்பேட்டையில் 30 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்த ஒத்துக்கொண்டார்கள். இதைத் தவிர வேறு எந்த மத்திய தொழில்களும், அல்லது மத்திய

[திரு எஸ். திருநாவுக்கரசு] [1981 ஏப்ரல் 16]

அரசால் நடத்தப்படுகின்ற நிறுவனங்களும் இங்கே தமிழகத்தில் துவங்கப்படவில்லை என்பது மிகுந்த வேதனைக்குரியது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறோம். வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

THIRU K.S.G. HAJA SHAREEF: The Hon. Minister has levelled a serious charge against the Central Government. About the Central Government starting the industries, the Finance Minister has already given his statement. Does the Hon. Minister consider that it is misleading statement or a wrong statement why the Central Government Industries are not coming here?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய நிதி அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் மீது சட்டமன்றத்தினுடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களும், அவருடைய கட்சியைச் சார்ந்தவர்களும் எந்த அளவிற்கு மரியாதை வைத்திருக்கிறார்களோ அதற்குக் கிஞ்சித்தும் குறையாத அளவிற்கு நாங்களும் அவர்களிடம் மரியாதை வைத்திருக்கிறோம். என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய தொழிலமைச்சராக திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இருந்த காலத்தில் தமிழகம் மிகவும் முன்னேறியிருக்கிறது என்பதை பல்வேறு விதமான தொழிற்சாலைகள் அந்தக் காலகட்டத்தில் அவர்களாலே இங்கே உருவாக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நன்றியோடு எண்ணிப் பார்க்கிறேன். மத்திய நிதி அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இப்போது கூட மிகுந்த ஆர்வத்தோடு இருக்கிறார்கள். நான் போய் சந்தித்த பலநேரங்களிலும் சரி, இங்கே வந்து பத்திரிகையாளர்களிடம் பேசுகிறபோதும் சரி, எப்படி உங்களிடத்தில் சொல்லியிருக்கிறார்களோ, அதைப் போல வெளியிலும் தமிழகத்திற்கு உரிய பங்கு, புதிய தொழிற்சாலைகள் அதிகமாக வரவேண்டுமென்று மிகுந்த அக்கறையோடு இருக்கின்றார்கள். மத்திய அரசு நிறுவனங்கள் தமிழகத்திலே அதிகமாக வரவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது நமக்குப் புரிகிறது. எதுவுமே நடைபெறவில்லை. அதுவும் புரிகிறது. ஆனால் என்ன காரணம் என்றுதான் தெரியவில்லை. அவர்கள் ஆர்வத்தோடு இருக்கின்றார்கள் உதவுவதற்குத் தயாராக இருக்கின்றார்கள்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப்: தலைவர் அவர்களே, நீங்கள் தான் அதற்குக் காரணம்; 1977-ல் இருந்து எத்தனை தொழிற்சாலைகளை உங்கள் ஆட்சியில் துவங்கினீர்கள், பெய்ட் அப் காபிடல் என்ன? உற்பத்தி திறன் என்ன? எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு? இவைகளையெல்லாம் நீங்கள் சொன்னால் நன்றாக இருக்கும்.



1981 ஏப்ரல் 16]

[பிற்பகல் 1.10]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மத்திய தொழில்கள் இங்கே எந்தெந்த தொழில்கள் 67-க்கு பின்னாலே துவங்கப்பட்டன. எந்த தொழில்களுக்கு அனுமதி 77-க்கு பின்னாலே கொடுக்கப்பட்டது என்பதை நான் இங்கே சொன்னேன், அது இன்னும் அதிகமாக சொல்லிக் கொண்டிருப்பதற்கு எதுவும் துவக்கப்படவில்லை. துவங்கப்பட்ட ஒன்றிரண்டைச் சொன்னேன். ஆனால் நாம் கேட்டு அனுமதி தராமல், இங்கு வரவேண்டிய சூழ்நிலையில் இங்கு வராமல்போன தொழிற்சாலைகள் அதிகம்; அதை வேண்டுமானால் மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு வரிசையாக படிக்கிறேன். இங்கே சட்டமன்றத்திலேகூட நான் சில கேள்விகளுக்கு பதில் சொல்கிற நேரத்தில் கூட சொல்லியிருக்கிறேன். நாம் பெங்களூரில் இருக்கிற எச். எம். டி. நிறுவனத்தினுடைய விரிவாக்கத்தை ஒசூரில் அமைக்க வேண்டுமென்று அவர்களே கேட்டிருக்கிறார்கள். அதை நாம் வலியுறுத்தி அது ஒசூரில் வரவேண்டுமென்று கேட்டோம்; அது மறுக்கப்பட்டுவந்தது. அதை இந்த மன்றத்திலே சொன்னேன்.

அதைப்போலவே இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ், ஊட்டியிலே இருக்கிறதனுடைய விரிவாக்கம் இங்கே தமிழகத்தில் வேண்டும். கலர் பிலிம்ஸ் தயாரிக்கின்ற தொழிற்சாலை இங்கே வேண்டுமென்று சொன்னோம். அது மத்திய அரசினுடைய நிறுவனம். அதற்கும் இன்னும் முடிவு தெரியவில்லை. பல்வேறு மத்திய தொழில்கள் இங்கே வரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல கூட்டுத் துறையிலே, டிட்கோவிலிருந்து பாலியஸ்டர் இழை நூல் தயாரிக்கும் தொழிற்சாலை; இது போன்று நாம் அனுப்பியிருக்கிற தொழிற்சாலைக்கான உரிமங்கள் கூட அங்கேயிருந்து வரவில்லை. ஆனால் கடந்த ஒரு ஆண்டு காலமாக தேங்கியிருந்த, நாம் அனுப்பியிருந்த, விண்ணப்பங்கள் பல வெகு விரைவாக பரிசீலிக்கப்பட்டு இப்போது உடனுக்குடன் அனுப்பப்படுகின்றன என்பதை ஒப்புக் கொள்கிறேன். அங்கேயிருந்து அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சாதனையாக எத்தனை வருகின்றன? அல்லது உரிமங்கள் எத்தனை கொடுக்கப்பட்டிருக்கின்றன? எத்தனை மறுக்கப்பட்டிருக்கின்றன என்பது தான் இப்போதைய பிரச்சினையாக இருக்கிறது. ஆனால் இப்போது தீவிரமாக பரிசீலிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள். அதற்கு நம்முடைய மத்திய அரசை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே இங்கே மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் பேசுகின்றபோது இங்கே ஒன்றைச் சொன்னார்கள். இன்னும் சில நிறுவனங்களுக்கு நீங்கள் ஆலோசனை குழுக்கள் எல்லாம் போடவில்லை; போர்டு ஆப் டைரக்டர்ஸ் போடவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். அதைப்போல காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்கள் பேசுகின்ற போது மாநில அளவிலே ஒரு குழு போடுகிறேன் என்று சொன்னீர்கள்,

அதை போடவில்லை என்று எல்லாம் சொன்னார்கள். மத்திய அளவிலே நான் சொல்வதற்காக அவர்கள் வருத்தப்பட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். மத்திய அளவிலே தொழில் துறைக்கு இன்னும் கேபினெட் அமைச்சர் போடவில்லை. (குறுக்கீடு)

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, நீங்கள் ஏன் போடவில்லை என்றால் அதற்கு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஒரு சாதாரணமான உண்மை தான். அதில் ஒன்றும் தப்பில்லை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: எனவே கேபினெட் அளவிலே அமைச்சர் போடவில்லை என்று அதை காரணமாக சொல்லி, தொழில் வளர்ச்சியிலே மத்திய அரசு கவனமில்லாமல் இருக்கிறது என்று நான் சொல்ல மாட்டேன். இருக்கிற மாண்புமிகு ஸ்டேட் அமைச்சர் சரானா அவர்கள் சிறப்பாக பணியாற்றுகிறார்கள். அவரே தொடர்ந்து பணியாற்றட்டும் என்று கூட விட்டிருக்கலாம். தமிழகத்தைப் பொறுத்தவரை அவர்கள் மிக சாதகமாக இருக்கின்றார். இங்கே வந்து பேசுகிற பொழுதும் சரி, அங்கே போய் பார்க்கிற நேரங்களிலும் சரி தமிழகத்தில் புதிதாக தொழில்கள் வரவேண்டும் என்பதிலே, உரிமங்கள் கொடுக்க வேண்டும் என்பதிலே அவர்கள் மிக ஆவலோடும், அக்கறையோடும் இருக்கிறார்கள். அதற்காகவும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆவலோடு இருக்கிறார் என்று தான் சொன்னேன். அது நடைமுறைப் படுத்தப்பட வேண்டும், என்பது தான் என்னுடைய ஆவல் என்பதையும் இங்கே நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே போர்ட் ஆப் டைரக்டர்ஸ் ஆக இருந்தாலும் சரி, தொழிற் துறைக்கு ஒரு குழு, திரு. வெங்கட்டராமன் அவர்கள் காலத்திலே இருந்ததை போல ஒரு ஆலோசனைக் குழு போட வேண்டும் என்ற எண்ணத்திலே இந்த அரசு இருக்கிறது. வெகு விரைவிலே மாநில அளவில் ஒரு ஆலோசனைக் குழுவும்; இண்டஸ்ட்ரியலிஸ்ட்ஸ் அடங்கிய ஒரு குழுவும்; அதைப் போல பல நிறுவனங்களுக்கு, தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன், சிப்காட் நிறுவனத்திற்கும் போர்ட் ஆப் டைரக்டர்ஸ், நான் அபிஷியல்ஸ் வெகு விரைவிலே நிச்சயமாக போடப்படுவார்கள். அப்படி அவர்கள் போடப்படாத காரணத்தாலே வேலைகள் ஏதாவது தடைப்பட்டிருந்ததா அல்லது கடன் வழங்குவதில் தாமதம் இருந்ததா என்று கேட்டால் மாண்புமிகு சித்தன் அவர்களே பேசுகிறபோது நல்ல நிர்வாக இயக்குநர்களை எல்லாம் நீங்கள் போட்டிருக்கிறீர்கள்; இவர்கள் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலும் இங்கே தமிழ்நாடு தொழில் முதலீடு கழகத்தைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு மட்டும் 37 கோடி ரூபாய்க்கு கடன் கொடுத்து இருக்கிறார்கள்.



அதைப்போல சிப்காட் கடந்த ஆண்டு மட்டும் 20 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இந்த நிறுவனத்தைப் பொறுத்தவரையில் சிப்காட்டைப் பொறுத்த வரையில் மாநில அரசு கொடுக்கிற மானியத்தை, சப்ஸிடியை பெற்று பின்தங்கிய மாவட்டங்களிலே தொழில் ஏற்படுகிறபோது அந்த சப்ஸிடியைப் பெற்றுக் கொடுக்கிற அந்தப் பணியை சிப்காட் நிறுவனம் செய்துகொண்டிருக்கிறது. அதிலே இந்தியாவிலேயே தமிழகம்தான் இங்கே உள்ள சிப்காட் நிறுவனம் தான் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதிலிருந்து பின்தங்கிய பகுதிகளிலே வெகுவேகமாகவும் பரவலாகவும் தொழில் வளர்ச்சி ஏற்படுகிறது என்பதற்கு அது அடையாளம் என்பதை நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள், எடுத்துக் கொள்வார்கள்.

கடந்த 77 ஆம் ஆண்டிற்குப் பின்னாலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கடன்கள், 1977 ஆம் ஆண்டிற்கு முன்னாலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கடன்கள் இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப்பார்த்தால் ஏறக்குறைய 2½ மடங்குக்கு மேலே அதிகமான அளவிலே கடன்கள் தனியார்களுக்கு தொழில் துவங்குகிறவர்களுக்கு சிப்காட்டாக இருந்தாலும் சரி, டி.ஐ.ஐ.சி. யாக இருந்தாலும் சரி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவுக்கு மிகுந்த சிறப்போடு அந்த அமைப்புகள் நிறுவனங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களும் மற்றவர்களும் தமிழகத்தினுடைய தொழில் அமைச்சர் மற்ற இடங்களுக்கு எல்லாம் போகவில்லை, ஆனால் மற்ற இடங்களில் இருக்கிற தொழில் அமைச்சர்களும் அல்லது முதலமைச்சர்களும் தமிழ்நாட்டிற்கு வந்து கேட்டுக்கொள்கிறார்கள், இங்கே வந்து தொழிலதிபர்களுக்கு அழைப்புக் கொடுக்கிறார்கள். இங்கே வந்து தொழில் துவங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். அங்கேயெல்லாம் இல்லாத காரணத்தினாலே தான் அவர்கள் எல்லாம் இங்கே வருகிறார்கள். இங்கே தொழில் துவக்குகிறவர்கள், இன்டஸ்ட்ரியலிஸ்ட்ஸ் அதிகமாக சென்னையிலே இருக்கிறார்கள் என்ற காரணத்தினாலே கேரளத்திலிருந்து மற்ற மாநிலங்களிலிருந்து இங்கே வருகிறார்கள், அழைப்புக் கொடுக்கிறார்கள். நான் உங்களுக்குச் சொல்வேன், நாங்கள் போய் அழைப்புக் கொடுக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். நாங்கள் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறோம். டெல்லிக்குப் போய் இருந்தபோது சில தொழிலதிபர்களை வரவழைத்து அங்கே அவர்களோடு பேசினோம். அதைப்போல் பெங்களூர் போயிருந்தபோது பேசினோம். பேசிக்கொண்டிருக்கிறோம். தமிழகத்திலே இருக்கிற தொழிலதிபர்களை வேறு மாநிலங்களுக்கு விட்டுவிடாமல் இங்கே தொழில்களைத் துவங்கச் செய்தாலே அதுவே தமிழகத்திலே பெரிய தொழிற் வளர்ச்சியை உண்டாக்குவதாக இருக்கும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் எல்லோருக்கும் டாடாவாக இருந்தாலும் சரி, பிர்லாவா இருந்தாலும்சரி எல்லோருக்கும் கன்சன்ட் இருக்கிறது, எல்லோரு

தமிழகத்திலே தொழில் துவங்கியிருக்கிறார்கள். இந்தியா முழுமையும் எடுத்துக்கொண்டால் இருக்கிற பெரிய தொழிலதிபர்கள் எல்லாம் தமிழகத்திலே ஏதாவது ஒரு தொழிற்சாலையை வைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்டவர்கள் எல்லாம் எங்களிடத்திலே அரசை அணுகுகிறபோது நாங்கள் அவர்களுடைய விரிவாக்கத்தையாவது அல்லது புதிய தொழிலையாவது தமிழகத்திலே துவங்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்களிடத்திலே சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்துக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் பேசுகின்றபோது இங்கே சில குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொன்னார்கள். அதிலே சில குற்றச்சாட்டுகள் சென்ற ஆண்டு இந்த மன்றத்திலே கடுமையான விமர்சனங்களுக்கு உட்படுத்தப் பட்டு இந்த மன்றத்திலேயே நான் பதில் சொன்ன குற்றச்சாட்டுகள் தான் என்பதை முதலிலே நான் நினைவூட்ட கடமைப்பட்டிருக் கிறேன். அசோக்லேலண்ட் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் தமிழ்நாட்டில் தொழில் துவங்க இருந்தார்கள். ஆனால் கடுமையான இன்சன்டிவ்ஸ் கேட்டார்கள் அதிகமான அளவிலே சலுகைகள் கேட்டார்கள், இந்த அரசு கொஞ்சம் விட்டுக்கொடுக்கிற மனப்பான்மையோடு இல்லாத காரணத்தால் வேறு மாநிலத்திற்குப் போனார்கள் என்று சொன்னார்கள். 12 ஆயிரமாக இருந்த அவர்களுடைய சேஸிஸ் உற்பத்தி செய்யும் கெப்பாசிட்டியை 44 ஆயிரமாக மத்திய அரசு உயர்த்தி அனுமதி அளிக்கிறது. அசோக்லேலண்ட் நிறுவனத்தினுடைய நிர்வாக இயக்குநர் அவர்களே பெங்களூரிலும் சொல்லியிருக்கிறார்கள். சென்னையிலும் சொல்லியிருக்கிறார்கள். பல இடங்களிலும் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகையிலே வந்திருக்கிறது. நாங்கள் ஏன் தமிழகத்திலேயிருந்து வேறு மாநிலத்திற்குப் போயிருக் கிறோம் என்றால் வியாபார ரீதியாக போய் இருக்கிறோமே தவிர தமிழக அரசு எங்களுக்கு உதவவில்லை என்பதாலே நாங்கள் போக வில்லை என்று பல இடங்களிலே சொல்லியிருக்கிறார். பத்திரிகையிலே வந்திருக்கிறது. சென்னையிலே உற்பத்தி செய்து இங்கிருந்து அவர்கள் ராஜஸ்தானுக்கு கொண்டு போகமுடியாது என்ற அடிப்படையில் வியாபார ரீதியிலே அவர்களுடைய விரிவாக்கத்திற்கான அனுமதியைப் பெற்று, வேறு மாநிலத்திலே தொழிற்சாலையை துவக்கியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே ஓசூரிலே 100 கோடி ரூபாய் அளவிலே தங்களுடைய விரிவாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அந்த நிகழ்ச்சியிலே சென்ற ஆண்டு கலந்துக் கொண்டார்கள்....—

டாக்டர் மு. கருணாநிதி: அமைச்சருடைய பதிலிலிருந்து அசோக்லேலண்ட் சார்பாக கோரிக்கையே வைக்கப்படவில்லை என்று தெரிகிறது, தமிழ்நாட்டிலே அந்த வியாபாரத்தை



நடத்தத் தேவையில்லை, வேறு மாநிலத்திற்குத்தான் செல்ல விரும்பினார்கள் என்று அவர்கள் சொல்வதிலிருந்து அவர்கள் கோரிக்கை வைக்கவில்லை என்று தெரிகிறது. அது உண்மைதானா

[பிற்பகல் 1·20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே ஏற்கனவே இருக்கின்ற உற்பத்தி, தமிழகத்திலே கொடுப்பதைப்போல—தமிழகத்திலே மட்டும் அவர்கள் சப்ளை செய்து கொண்டிருக்கவில்லை சேஸிஸைப் பொறுத்தவரையில். இந்திய நாடு முழுவதும் அவர்கள் கொடுக்கிறார்கள். எனவே, இந்திய நாட்டிலே வட பகுதியிலே அவர்களுடைய விரிவாக்கத்திற்கான அனுமதியை மத்திய அரசு வைத்தபொழுது, இந்திய நாட்டினுடைய வட பகுதியிலே அவர்கள் தொழிலைத் துவங்க விரும்புகிறார்கள்; அதனால்தான் அந்தத் தொழிற்சாலையை அங்கே துவக்கி னார்கள் என்று சொன்னேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் அமைச்ச ரிடத்தில் தெரிந்துக்கொள்ள விரும்புவது, அசோக் லேலண்ட் எக்ஸ்பென்ஷன் இங்கே செய்ய வேண்டுமென்று தமிழக அரசை நாடியது உண்டா இல்லையா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, அசோக்லேலண்ட் எக்ஸ்பென்ஷன் செய்யவேண்டுமென்று கேட்டு, அதனுடைய அடிப்படையில்தான் ஓசூரில் இடம் கொடுக்கப் பட்டு, 100 கோடி ரூபாய் முதலீட்டிலே அங்கே எக்ஸ்பென் ஷனும் நடைபெற்றிருக்கிறது. இன்னும் ஏன் அதிகம் செய்ய வில்லை என்றால், அவர்கள் வியாபார ரீதியாக, தொழில் நுட்ப ரீதியாக, அவர்களுக்கு இலாபம் வருகிறது என்ற அடிப் படையில் வடநாட்டிற்குப் போயிருக்கிறார்கள். வட மாநிலங் களுக்குச் சென்றிருக்கிறார்கள் என்று நான் சொன்னேன்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்கிறபொழுது வியாபார ரீதியாக வேறு மாநிலங்களுக்குப் போனார்கள் என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறார் கள். வியாபார ரீதிக்கு உட்பட்ட ஒன்றுதான் இன்சென்டிவ்ஸ் பெறுவது என்பதை அமைச்சர் ஏற்றுக்கொள்கிறாரா? அல்லது இன்சென்டிவ்ஸ் பெறுவது வேறு, வியாபார ரீதி வேறு என்று கருதுகிறாரா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வியாபார ரீதியாக என்பதை அமைச்சர் வலியுறுத்துகிறார் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் சொன்னார்கள். நான் வலியுறுத்தவில்லை, அசோக் லேலண்ட் நிறுவனத்தினுடைய எம்.டி.யே சொல்லியிருக்கிறார். பத்திரிகைகளிலேயும் பல நேரங்களிலே வந்திருக்கிறது. அவரே, திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கிறார்; நாங்கள் போனது இந்த அரசின்மீது குறை கூறியோ அல்லது அரசு ஒத்துழைக்காத காரணத்தாலோ நாங்கள் போகவில்லை....

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சரவர்க குறிப்பிட்ட ஹோசூர் என்பது அதனுடைய செகன்ட் ஸ்டேஜ் ஃபர்ஸ்ட் ஸ்டேஜ் எக்ஸ்பேன்ஷனுக்குத் தமிழக அரசோ அவர்கள் தொடர்பு கொண்டு சில சலுகைகளைக் கேட்டு கொண்டது உண்டா இல்லையா? அதைத் தமிழக அரசு மறுத் விட்டதாக முதலமைச்சரவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள் அது உண்மையா அல்லவா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, நான் அதைத்தான் மீண்டும் சொல்கிறேன் ஏற்கனவே, அவர்கள் மட்டுமல்ல, அசோக்லேலண்ட் நிறுவன மட்டுமல்ல, பல தொழில் அதிபர்கள் தொழில்களைத் துவங் வதற்காக நாடி வருகிறபொழுது அல்லது இன்சென்டிவ்ஸ் என்ற பிரச்னை வருகிறபொழுது, மாநிலத் தொழிலமைச்சர்கள் மாநாட்டிலேயே நான் பேசினேன், இதைத்தான் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்கள் கூட இதற்கு முன்னாலே பட்ஜெட்டிலே பேசும்பொழுது இங்கே சொன்னார்கள். சி மாநிலங்களில் அவர்களுடைய வசதி வாய்ப்புக்கேற்ப அவர்கள் சில உதவிகளை, சலுகைகளைச் செய்கிறார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில் நாங்கள் சில வரம்புகளை, சில சீலிங்ஸ் வைத்திருக்கிறோம். புதிதாக Inte est f e: sales tax loan தான் இப்பொழுது மற்ற மாநிலங்களிலே கொடுக்கப்படுகிற இன்சென்டிவ்ஸைப் பொறுத்தவரையில் அதிகமாகத் தருகிற ஒரேயொரு பிரச்னை. அதைப் பொறுத்தவரையில் 48 இலட்சம் ரூபாய் என்பதைப் புதிய நிறுவனம் துவக்குவதற்கு உச்சவரம் பாகவும், விரிவாக்கம் என்றால் 15 இலட்சம் ரூபாயாகவும் வைத்திருக்கிறோம். வேறு மாநிலங்களில் ஒரு கோடி, இரண்டு கோடி, மூன்று கோடி என்று வருவதாகச் சொல்கிறார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில் பரவலாகத் தொழில் வளர்ச்சி வர வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். எனவே, அந்த உச்ச அளவை ஓரளவிற்கு இருக்கின்ற அந்த அளவை அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அதைப்பற்றி நான் பின்னாலே சொல்கிறபொழுது சொல்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: நான் தங்களிடமிருந்து ஒரு சுருக்க மான பதிலை எதிர்பார்க்கிறேன். தாங்கள் பதிலை வளர்த்தி எனக்கு வர வேண்டிய விடையை மறைக்கிறீர்கள். நான் அமைச்சரிடத்தில் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம் அவர்கள் கேட்ட ஃபர்ஸ்ட் ஸ்டேஜ் எக்ஸ்பேன்ஷனுக்கு, அந்தத் திட்டத் திற்கு அவர்கள் கோரிய சலுகைகளைத் தர நீங்கள் ஒப்புக் கொள்ளவில்லை. அதனால் அவர்களால் எந்தவிதமான எக்ஸ் பேன்ஷனும் செய்ய முடியவில்லை. இது சரியா அல்லவா?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் சில கோரிக்கைகளைக் கேட்டார் கள். ஆனால் அவர்கள் போனதற்கு அதுவல்ல காரணம். இங்கிருந்து போனதற்கு, அவர்களுடைய தொழிற்சாலைகளின் உடைய விரிவாக்கம் தமிழகத்திலே வருவதற்கு அவர்கள் கேட்ட இன்சென்டிவ்ஸ் இங்கே கிடைக்கவில்லை என்ற காரணத்தால் அவர்கள் கோபம் கொண்டோ அல்லது தமிழக அரசின் மீது வருத்தப்பட்டோ அவர்கள் வேறு மாநிலங்களுக்குப் போக வில்லை.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப்: தலைவரவர்களே, ஒரு உச்ச வரம்பு வைக்கப்பட்டிருக்கிறது என்று மந்திரியவர்கள் சொன் னார்கள். நீங்கள் எவ்வளவு லோன் கொடுத்தாலும் கூட IDBI refinancing செய்து விடுகிறார்களே, எனவே, உங்களுக்கு அதில் என்ன கஷ்டம்? ஏன் இந்த உச்சவரம்பு வைக்கிறீர்கள்? இப் பொழுது அந்த அசோக்லேலண்ட் தொழிற்சாலை இங்கே வந் திருந்தால் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்குமே; குறைந்தது 100 கோடி ரூபாய்க்கு மேலே வருஷாவருஷம் உங்களுக்கு லாபம் அதிலே வந்திருக்குமே.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, நான், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர் களுக்கும் இதே பதிலைத்தான் சொல்கிறேன். இன்சென்டிவ்ஸ் நாங்கள் தரவில்லை என்பதற்காக அவர்கள் போகவில்லை அல்லது அவர்கள் கேட்ட அளவிற்குக் கிடைக்கவில்லை என்பதால் அவர்கள் போகவில்லை. கேட்பது எவ்வளவு வேண்டுமானாலும் கேட்கலாம்; ஆனால் கொடுப்பது ஒரு வரம்புக்கு உட்பட்டுத்தான் கொடுக்க முடியும். அப்படிக் கேட்டதைக் கொடுக்காததனாலே போனார்களா என்பதுதான் பிரச்னை. கேட்பதை, எவ்வளவு வேண்டுமானாலும் கேட்கலாம். ஆனால் அப்படி கேட்டதைக் கொடுக்கவில்லையென்ற காரணத் தாலே, போனார்களா என்றால் நிச்சயமாக இல்லை. அந்த விரிவாக்கத்தை வேறு மாநிலத்திலே செய்வது வியாபார ரீதியாக, பொருளாதார ரீதியாக அவர்களுக்கு இலாபமாக இருக்கிறது என்ற அந்த அடிப்படையிலேதான் வேறு மாநிலங்களுக்கு அவர்கள் போயிருக்கிறார்கள். அதைத்தான் சென்ற ஆண்டும் சொன்னோம்; அதைத்தான் இந்த ஆண்டும் சொல்கிறோம். நான் இன்னொன்றைக் கூடச் சொல்வேன். அதே அசோக் லேலண்ட் நிறுவனம், கூட்டுத் துறையிலே, வார்ப்படங்கள் தயாரிக்கிற இன்னொரு....

திரு. துரைமுருகன்: சென்ற ஆண்டு முதலமைச்சர் பதில் அளிக்கும்போது, அந்தச் சலுகை கொடுக்கமாட்டேன் என்று சொன்னதால்தான் அவர்கள் வேறு மாநிலத்திற்குப் போனார்கள் என்று சொன்னார்களே, இப்பொழுது அமைச்சர் சொல்வது அதற்கு முரணாக இருக்கிறதே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சரே சொல்லியாயிற்று என்றுதானே மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் சொல்கிறார், அதற்குப் பிறகு திருப்பி, திருப்பி ஏன் எழுந்து கேட்கவேண்டும். அடுத்ததற்குப் போகலாம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, என்னை மன்னிக்க வேண்டும். அடுத்ததற்குப் போவதற்கு முன்னாலே, அதனுடைய தொடர்பாக, அதே நேரத்திலே இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அப்படி அவர்கள் கோபம் கொண்டு இங்கிருந்து போயிருந்தால், நம்முடைய புதுக்கோட்டையிலே, டிட்கோ நிறுவனத்தோடு சேர்ந்து, ஜாயின்ட் செக்டாரிலே வார்ப்படங்கள் தயாரிக்கிற இன்னொரு தொழிற்சாலையிலே......

டாக்டர் மு. கருணாநிதி: மன்னித்துக் கொள்ள வேண்டுகிறேன், அடிக்கடி குறுக்கிடுவதற்காக. அவர்கள் கோபம் கொண்டு போனார்கள் என்று யாரும் சொல்லவில்லை. எந்த ஒரு தொழில் அதிபரும் ஏதோ ஒரு முயற்சியில் ஈடுபட்டு, அதற்காக, அந்த நாட்டின் மீதே கோபித்துக் கொண்டு, அல்லது அந்த மாநிலத்தின் மீதே கோபித்துக் கொண்டு, அங்கே இருக்கிற தொழில்களையெல்லாம் துடைத்து எடுத்துக் கொண்டு போய் விடமாட்டார்கள். வேறு தொழில்களிலே அவர்கள் தொடர்பு கொள்வார்கள். ஆனால், ஒரு பெரிய தொழிற்சாலை, ஒரு எக்ஸ்டென்ஷன், இங்கே ஏற்பட்டு, பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பை நாம் இழந்துவிட்டோம். அதற்கு அவர்கள் கேட்ட சலுகையை இந்த அரசு தரவில்லை என்பதுதான் காரணம். அதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: அந்தக் குற்றச்சாட்டுக்குத்தான் ஆதாரம் இல்லை. அடிப்படை இல்லையென்று சென்ற ஆண்டும் மறுத்தோம், இந்த ஆண்டும் மறுக்கிறோம். அப்படி அவர்கள் வேறு மாநிலத்திலே இன்சென்டிவ்ஸ் அதிகம் கிடைக்கிறது என்ற காரணத்தாலே வேறு மாநிலத்திற்கு அவர்கள் போவது உண்மையாக இருக்குமானால், டிட்கோ நிறுவனத்தோடு கூட்டுத் துறையிலே இருக்கிற அந்த நிறுவனத்தையும் வேறு மாநிலத்திலேயிருக்கிற அந்த அரசோடு தொடர்புகொண்டு, அந்த மாநிலத்திலே கொடுக்கிற அதிகமான இன்சென்டிவ்ஸ் பெற்றுக்கொண்டு அங்கே துவங்கலாம். ஆனால் இங்கேயே துவங்குகிறார்கள் என்பதிலிருந்து இந்த அரசு கொடுக்கிற அந்த இன்சென்டிவ்ஸ் பொறுத்தவரை அதிலே, அவர்களுக்குக் கருத்து வேறுபாடில்லை. ஆனால், சேசிஸ் பொறுத்தவரையிலும் அவர்களுடைய விரிவாக்கத்தை, வேறு பகுதியில் வைத்தார்களே அதற்குக் காரணம், நான் சொன்னது, திருப்பி, திருப்பிச் சொல்வது, நான் சொல்வது அல்ல, அந்த நிறுவனத்தினுடைய இயக்குநர், எம்.டி.யே சொன்னது, அதன் தலைவரே சொன்னது, பொருளாதார ரீதியாக, வியாபார ரீதியாக, வட மாநிலத்தை, வேறுமாநிலத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதுதான்.



அதைப் போல் மத்திய அரசு ரூ. 400 கோடி அளவிலே ஆயிரம் ஏக்கா நிலப்பரப்பில் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பு தரக்கூடிய அந்த ரெயில் பெட்டித் தொழிற்சாலையைத் தமிழகத்திற்கு, எடுத்துக் கொள்ளுங்கள், எடுத்துக் கொள்ளுங்கள், என்று தந்து கொண்டிருந்தார்கள், நீங்கள் வேண்டாம், வேண்டாம் என்று சொன்னீர்கள், அவர்கள் திருப்பி, திருப்பதிக்குப் போய் விட்டார்கள் என்று இதே குற்றச்சாட்டைச் சென்ற ஆண்டும் சொன்னார்கள்; ஆனால் கலைஞர் அவர்கள் கொஞ்சம் மெருகோடு இந்த ஆண்டும் அதையே சொன்னார்கள். நான் திருப்பியும் அதற்குச் சென்ற ஆண்டு சொன்ன பதிலைத்தான் இந்த ஆண்டும் சொல்கிறேன். இடம் கேட்கிறார்கள். மத்திய அரசு தொழில் துவங்க வேண்டுமென்றால்; இந்தத் தொழிற்சாலை வருகிறது, அதற்கு இத்தனை ஏக்கர் இடம் வேண்டுமென்று சொல்கிறார்கள். எல்லா மாநிலங்களும் எழுதுகிறோம், வரிந்து கட்டிக்கொண்டு எழுதுகிறோம் இங்கே வாருங்கள், இங்கே வாருங்கள், இங்கே துவங்குங்கள்: விரிவாக்கமா, இங்கே வாருங்கள் என்று தேடுகிறோம். இடத்தைத் தேர்வு செய்து, இங்கிருந்து ஆயிரம் ஏக்கர் இடம் தருகிறோம், நீங்கள் என்னவெல்லாம் கேட்கிறீர்களோ, அவ்வளவும் தருகிறோம் என்று எழுதுகிறோம். ஆனால் முடிவு செய்ய வேண்டியது மத்திய அரசு; முடிவு செய்கிறார்கள், திருப்பதிக்கு, ஆந்திராவுக்கு. அதற்கு என்ன காரணம்? கலைஞர் அவர்கள்தான் கேட்க வேண்டும். நான் அதைத்தான் இங்கே சொன்னேன். அது ஏன் போனது என்று நாம் கேட்கிறோம். திருப்பியும் கேட்டோம். இங்கே கேட்டார்கள், போனதற்குப் பின்னாலே எழுதுகிறீர்களே, வருத்தப்படுகிறீர்களே என்று கேட்டார்கள். போனதற்குப் பின்னாலேயும் எழுதினோம். அப்படி அறிவிப்பு வந்ததற்குப் பின்னாலே எழுதினோம். போனதற்குப் பின்னாலே என்றால் துவக்கி வைத்தது இப்பொழுதுதான். ஜனாதிபதி வந்து துவக்கி வைத்தார்கள். ஆனால், அந்த நிலைமைக்கு முன்னாலே நாம் மீண்டும், மீண்டும் எழுதினோம். நீங்கள் ரீ-கன்சிடர் பண்ணுங்கள்......

டாக்டர் மு. கருணாநிதி: நீங்களும் முதலமைச்சர் அவர்களும் பலமுறை விளக்கியும்கூட அதிலே நாங்கள் இன்னும் உங்களுடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிற சூழ்நிலையில் இருக்கிறோம். ஒருவேளை அது எங்களுடைய தவறாகக்கூட இருக்கலாம். நீங்கள் சொல்வது சரியாக இருந்து நாங்கள் அதைத் தெரிந்துகொள்ளாமலேகூட இருக்கலாம். மத்திய சர்க்காருக்கு நீங்கள் கடிதம் எழுதி, அந்தத் தொழிற்சாலை இங்கே வரவேண்டுமென்பதற்காக வற்புறுத்திய தொடர்பானவைகள் எல்லாம் எங்களுக்குத் தெரியாத காரணத்தாலே கூட அப்படிச் சொல்லலாம். எனவே, அனைவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய அளவுக்கு, என்ன, என்ன [illegible] தொடர்பு கொண்டீர்கள்? என்ன, என்ன பதில் வந்தது என்பவைகளை ஒரு அறிக்கையாக, இந்த அவையிலே வைப்பீர்களானால் நாங்களே

கூட தெரிந்துகொள்ள கடமைப் பட்டிருக்கிறோம். நாங்கள் எங்களுடைய கருத்தில் பிடிவாதமாக இருக்க விரும்பவில்லை. அப்படிப்பட்ட ஒரு கருத்து—நாங்கள் அந்தக் கருத்திலிருந்து எங்களை விடுவித்துக்கொள்வதற்குக் கூட அது உதவிகரமாக இருக்கும். எந்த, எந்த நேரத்திலே, எப்படி, எப்படி கடிதம் எழுதினீர்கள்? மத்திய சர்க்கார் என்ன பதில் எழுதியது என்ற தொகுப்பை நீங்கள் இந்த அவைக்குத் தருவீர்களானால் அது இரு சாராருக்கும் பயன் உள்ளதாக இருக்கும். அந்தப் பிரச்னை அதோடு முடியும்.

[பிற்பகல் 1.30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் தவறு செய்துவிட்டார்கள் என்பதைப் போல நான் சொல்லவில்லை. அவர்கள் அந்த அளவுக்குப் போய் சொல்ல வேண்டியதில்லை. நான் சொல்வது அவர்கள் ஒரு லைனிலே இருந்து சொல்லுகிறார்கள். அவர்கள் ஏன் சொல்லுகிறார்கள் என்பது அவர்களுக்கே கூட தெரியலாம். அவர்களுக்குக் கூட நிச்சயமாகத் தெரியும். நான் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களைக் கேட்டுக் கொள்வது. இப்படி நம்மை நாமே குற்றம் சொல்வதைவிட, அவர்கள் இப்படி நாம் ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கொடுத்தும், மத்திய அரசு தமிழகத்தைத் தேர்ந்தெடுக்காமல் வேறு மாநிலத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்களே அதை நான் கண்டிக்கிறேன். மத்திய அரசு இனிமேல் துவங்குகிற தொழில்களையாவது தமிழகத்திலே துவங்கவேண்டும் என்பதைப்போல அவர்களுடைய பேச்சு இருந்திருக்குமானால், அது தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள், என்னுடைய எண்ணம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மத்திய சர்க்கார் என்ன பதில் கொடுத்தார்கள், நீங்கள் என்ன எழுதியிருக்கிறீர்கள் என்று சொன்னால் அதற்குத் தக்கவாறு முடிவெடுக்கலாம். அதற்கு நீங்கள் பதில் சொல்லவில்லையே, தயவு செய்து அதற்குப் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, திருப்பதிக்குப் போனது போனதுதான் கால்கோள் விழாவெல்லாம் நடந்துவிட்டது. மாண்புமிகு ஜனாதிபதி அவர்களும், ரயில்வே அமைச்சரும் வந்து விழா நடத்தி விட்டார்கள். இனிமேல் சித்தனே போய் கேட்டாலும் இங்கே கொண்டு வர முடியாது. (குறுக்கீடு) அதற்குத்தான் மாண்புமிகு



சித்தன் போன்றவர்கள் உதவி செய்யவேண்டும். இனிமேல் வர இருக்கின்ற தொழிற்சாலைகளாவது அல்லது மத்திய தொழில்களாவது இங்கே வரவேண்டும். நாம் இடம் தேர்ந்தெடுத்து அனுப்புகிறோம் நான் ஒன்றிரண்டு உதாரணங்களைக் கூட சொன்னேன். எச். எம். டி.-யைப் பற்றிச் சொன்னேன், இந்துஸ்தான் போட்டோ பிலிம்சைப் பற்றிச் சொன்னேன். நாம் கேட்டுக்கொண்டிருப்பதைப் பற்றி இந்த மன்றத்திலே சொல்லலாம் இது ஒன்றும் ரகசியம் இல்லை. அவையெல்லாம் அங்கே இருக்கின்றன. நீங்கள் அங்கே போகிறபோது, இங்கே சொல்வதை விட, அங்கே சொல்லி, சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடத்திலே சொல்லி, பிரதமரிடத்திலே சொல்லி, மத்தியத் தொழில்கள் எல்லாம், விரிவாக்கமோ அல்லது புதியத் தொழிற்சாலைகள் வருகிறபோது தமிழகத்திலே துவங்குவதற்கு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுடைய உதவி வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தமிழ்நாடு வளம் பெற, தொழில் துறை பெருக எந்த அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் இந்த ஆட்சியோடு ஒத்துழைக்கவேண்டுமோ, மத்திய சர்க்காரோடு வாதாட வேண்டுமோ அதற்குத் தயாராக இருக்கிறது. அதையும் நான் என்னுடைய உரையிலே கூட குறிப்பிட்டேன். மத்திய சர்க்காரோடு வாதாடி, போராடி தமிழ்நாட்டுக்குத் தேவையான வளங்களைப் பெற கழகம் உங்களோடு துணை நிற்கும் என்று நான் பேசும்போது குறிப்பிட்டு இருக்கிறேன். நீங்கள் சொல்லுவதற்கு முன்பே அதைச் சொல்லி இருக்கிறேன். நான் கேட்பதெல்லாம், அந்த ரயில் பெட்டித் தொழிற்சாலைக்கு மத்திய சர்க்காரோடு நீங்கள் எப்படி வாதாடினீர்கள், எந்தெந்த தேதியில் நேரத்திலே கடிதங்கள் எழுதினீர்கள், எந்தெந்த எழுதினீர்கள் அதற்கு என்ன பதில் வந்தது என்பதை எல்லாம், அந்தத் தொகுப்பை இந்த அவைக்கு வைத்தால் மத்திய சர்க்காருக்கு எதிராக வாதாடுவதற்கு இன்னும் எங்களுக்கு வலு கிடைக்கும் என்பதற்காகத்தான் கேட்கிறேன். உதவுவீர்களா ?

THIRU K.S.G HAJA SHAREEF : Sir. You will kindly remember that on the very first occasion, when I began to speak in this house, I have given full support to the Government. I said although I am a Opposition Leader, I will not oppose anything and everything I will certainly appreciate what the Government does. Whatever the Government wants, we will certainly co-operate with them and see that our State becomes the first and foremost I continue to state this and I will assure the Hon. Minister and other colleagues that what all lies in our power, we will certainly co-operate with them to see that this State becomes one of the most powerful State in our country. Kindly tell us what are all your difficulties. Let them not put the blame on somebody, if they are not prompt in taking action and seizing of the opportunity.

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்கும் நான் தமிழக மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே முதன் முதலிலே வாதத்தைத் துவக்கிய மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். நாம் மத்திய அரசை இப்படித் தொழில்கள் வேண்டும் என்று கேட்கின்றபோது மாநிலத்திலே இருக்கிற எல்லா கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் அதற்கு ஆதரவு தெரிவித்து, கையெழுத்துப்போட்டு எழுதி அனுப்பினால், என்ன என்று கேட்டார்கள். இப்போது எதிர் கட்சித் தலைவர் அவர்களும், அதேபோல காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் சொன்னதை அத்தோடு இணைத்து, இங்கே இருக்கின்ற நாம் எல்லாம் சட்டமன்றத்திலே ஆதரவு தருகிறோம் என்ற எண்ணத்தோடு சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போடுகிறோம் என்பதோடு நிற்காமல், அங்கே உள்ள நாடாளுமன்றத்திலே உள்ளவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அதைப்போலவே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், அங்கே ஏதாவது மத்திய தொழில் துவங்கப்படப் போகிறது என்று தெரிந்த உடனே அல்லது இங்கே இருந்து எதை எதை எல்லாம் அனுப்பி இருக்கிறோமோ அதை சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே, ஒன்றாகச் சேர்ந்து, புதிதாக வரவிருக்கிற தொழில் தமிழகத்திலேதான் வரவேண்டும் என்று அந்த அமைச்சரிடத்திலே வலியுறுத்தி, வற்புறுத்துவதற்கு உதவி செய்வார்களானால் நான் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

*டாக்டர் மு. கருணாநிதி : நான் மாண்புமிகு அமைச்சருக்கு ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். ரயில்வேயிலே கூட மதுரை மண்டலத்தோடு நெல்லை–குமரி பாதையை இணைக்கவேண்டும் என்று போராட்டம் நடைபெற்றது. பல கட்சித் தலைவர்கள் அதில் ஈடுபட்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிலே ஈடுபட்டு மகஜர் தந்தார்கள். ஆனால் ஆட்சியாளர்கள் அதிலே உறுதியாகவும், வலிவாகவும் இல்லாத காரணத்தால்தான் அது நம்மை விட்டுப் போய் விட்டது. நாங்கள் எல்லாம் ஒத்துழைத்தாலும் கூட, ஆட்சியாளர்கள் உறுதுணையாக இருந்து அவர்களோடு வாதாடினால்தான் வெற்றி கிடைக்கும். அதனால் நான் கேட்டேன், ஏற்கனவே இந்த ரயில் பெட்டித் தொழிற்சாலை குறித்து நாம் எழுதிய கடிதப் போக்குவரத்து என்ன என்று தெரிவிக்கப்படுமா என்று. அதற்கு பதில் சொல்லாமலேயே மாண்புமிகு திருநாவுக்கரசு, திரு நமூவல் அரசராக ஆகிவிடுவது நல்லதல்ல.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல, மாநில அரசின் சார்பாக அந்த ரயில் பெட்டித் தொழிற்சாலை சம்பந்தமாக என்னென்ன வகையில் கடிதங்களை நானும், முதலமைச்சர் அவர்களும் மத்திய அரசுக்கு எழுதினோம் என்பதை அவர்கள் பார்க்க விரும்பினால் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன். அதிலே ஒன்றும் சங்கடம் இல்லை. ரகசியம் இல்லை. இங்கிருந்து எழுதிய கடிதங்களின் காப்பி இருக்கின்றன. அதைக் காண்பிக்கத் தயக்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகம் முயற்சி எடுக்காததால்தான் திருப்பதிக்கு அது போய் சேர்ந்து விட்டது என்று சொல்வது சரியல்ல. அதைப்போல ஆரம்பிக்கப்பட இருக்கிற மத்திய தொழிற்சாலைகள் குறித்து திட்டம் தீட்டுகிறபோது இங்கே இடம் பார்த்துச்சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். நாமும் தமிழகத்தில் அதற்கான வாய்ப்பு எங்கேயிருக்கிறது என்பதைப் பார்த்து சொல்கிறோம். ஆனால் முடிவு எடுக்கவேண்டியது மத்திய அரசு. அப்படி அவர்கள் முடிவு எடுக்கிறபோது தமிழகத்தின் பக்கம் கருணை காட்டவேண்டும் என்றுதான் நாம் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே சொல்லிவிட்டார்கள். நேரம் ஆகிவிட்டது. மீண்டும் நான்கு மணிக்கு நாம் வரவேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, அரசின் சார்பாக சில அறிவிப்புகளை, இனி வர இருக்கும் நாட்களில் என்ன செய்ய இருக்கிறோம் என்பதை, ஓரிரண்டு சொல்லக்கடமைப்பட்டு இருக்கிறேன். ஏற்கனவே இங்கே சொன்னது போல், 190 கோடி ரூபாய் அளவில் திருச்சி மாவட்டத்தில் புகளூரில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிறோம். 20 கோடி ரூபாய் செலவிலே வடாற்காடு மாவட்டத்தில் செடிமருந்து தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிறோம். 4 கோடி ரூபாய் செலவில் ஸ்டீல் ரோலிங் மில் அரக்கோணத்தில் ஏற்படுத்த இருக்கிறோம். திருத்தணியில் சர்க்கரை ஆலை அமைக்க இருக்கிறோம். திரு. சித்தன் அவர்கள் பேசுகிறபோது என்று நினைக்கிறேன்—சிறிய சர்க்கரை ஆலைகள் அமைப்பதாக அறிவிப்பு செய்தீர்களே, அது என்ன நிலைமையில் இருக்கிறது என்று கேட்டார்கள். தஞ்சை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், மதுரை மாவட்டம் ஆகிய இடங்களில் இப்படிப்பட்ட சிறிய சர்க்கரை ஆலையை ஏற்படுத்த—ஏறத்தாழ 450–500 டன் கபாசிட்டி கொண்ட சர்க்கரை ஆலை ஏற்படுத்த - அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல், 6 கோடி ரூபாய் அளவில் அஸ்பெஸ்டாஸ்
அழுத்தக் குழாய் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்
கிறோம். அடுத்து, 1½ கோடி ரூபாய் அளவில் கருப்புக் கல்லை
கட்டிங் பாலிஷிங் செய்வதற்காக ஒரு யூனிட் அமைக்க திட்டமிட்டு
இருக்கிறோம். அதைப்போல் மூன்று கோடி ரூபாய் அளவில்
டெட்பர்ன்-மெக்னசைட் என்று சொல்லக்கூடிய வெப்பம்
தாக்கும் கருவிகளைத் தயாரிக்க தொழிற்சாலை தொடங்க இருக்
கிறோம் மரவக்காட்டில் உப்பு உற்பத்திக்காக 120 இலட்சம்
செலவில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல்,
சிவகெங்கையில் கிராபைட் கனிமத்தைத் தோண்டி எடுத்து
அவற்றை வியாபார ரீதியாக பயன்படுத்துவதற்காக முதல்
கட்டமாக இப்போது 58 இலட்சம் ஒதுக்க திட்டமிடப்
பட்டுள்ளது. இப்படி பல்வேறு விதமான பணிகள் இப்போது
வருகின்ற ஆண்டில் நடைபெற இருக்கின்றன.

இங்கே தமிழகத்தில் தொழில் வளர்ச்சி அல்லது தனியார்
களுக்கு நம் உதவிகள் செய்யவேண்டும் என்பதைப் பொறுத்த
வரையில் நாம் ஏற்கனவே கொடுத்துக்கொண்டு இருக்கிற சில
வசதிகள் இன்னும் கொஞ்சம் அதிகரிக்கவேண்டும் என்பது இங்கே
மாமன்றத்திலே உள்ள அத்தனை உறுப்பினர்களின்
எண்ணமாகும். பட்ஜெட்டிலே கூட சொல்கிறபோது, எல்லோரும்
இப்படி விரும்புவதால், அதற்கான அறிவிப்புகள் பின்னர்
சொல்லப்படும் என்று சொன்னார்கள். நான் ஏற்கனவே
சொன்னதைப்போல், இன்டரஸ்ட் ப்ரீ சேல்ஸ் டாக்ஸ் பொறுத்த
வரையிலும் புது தொழிற்சாலைகள் நிறுவப்படும்போது அளிக்கப்
படுகின்ற உச்சவரம்பு நாற்பத்தெட்டு இலட்சம் என்று இருப்பதை
இன்னும் அதிகரிக்க அரசு முடிவு செய்துள்ளது. அதைப்போல்,
எக்ஸ்டென்ஷன் செய்கின்றபோது பதினைந்து இலட்சம் என்பதை
இன்னும் கொஞ்சம் அதிகரிப்பதற்கு அரசு முடிவு செய்து
இருக்கிறது. அது மட்டுமல்லாமல், சிப்காட்டைப் பொறுத்த
வரையில் ஏற்கனவே தொழில் பேட்டைகள் அல்லது
இன்டஸ்டிரியல் காம்ப்லக்ஸ் எல்லாம் ஒசூர், ராணிப்பேட்டையில்
நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

[பிற்பகல் 1-40].

அதைப்போன்று மானாமதுரையிலும், புதுக்கோட்டையிலும்
இப்படி எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒன்று என்ற
அளவில் 'இன்டஸ்ட்ரியல் காம்பிளக்ஸ்' அமைக்கப்பட சிப்காட்
நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இன்னும் 'கெமிக்கல்ஸ்
காம்பிளக்ஸ்' உருவாக்க வாய்ப்பு இருக்கின்றது என்று இங்கே
சொன்னார்கள். அதை ஒட்டித்தான் கடலூரில் இரசாயன
தொழிலுக்கு என்றே தனியாக ஒரு 'காம்பிளக்ஸ்' நிறுவ இருக்
கிறோம். அதைப்போல் மருந்து தொழில்களுக்கு என்று
தனியாக ஒரு காம்பிளக்ஸ் சிப்காட் மூலம் நிறுவ இருக்கிறோம்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இதுவரையில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின்
தலைமை நிலையம்தான் கடன் வழங்கி வந்தது. மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்புக்கு வந்த பிறகுதான்
25,000 ரூபாய் வரையில் அதனுடைய 'பிராஞ்ச்'களில்
வழங்கலாம் என்று ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி இப்போது
25,000 வரையில் தொழில்களுக்கும், 50,000 ரூபாய் வரையில்
ட்ரான்ஸ்போர்ட்டுக்கு வழங்கலாம் என்று இருக்கிறது. இந்த
உச்சவரம்பை ஒரு இலட்சம் என்ற அளவுக்கு அதிகரித்துக்
கொடுக்கலாமா என்பதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல பெரியார் மாவட்டத்தில் ஒரு பிராஞ்சும்,
செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு பிராஞ்சும் தமிழ்நாடு தொழில்
முதலீட்டுக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன் இப்படி பல்வேறுவகைகளில் தமிழ்நாடு
தொழில் முதலீட்டுக் கழகம், சிப்காட், டிட்கோ போன்ற
நிறுவனங்கள் தொழில் வளர்ச்சியில் தீவிர கவனம் செலுத்தி
வருகின்றன.

இறுதியாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர்
அவர்கள் பேசும்போது காகிதத் தொழிற்சாலைப் பற்றி
கடுமையாக விமர்சித்தார்கள். இங்கே பேசிய சட்டமன்ற
உறுப்பினர்களில், டாக்டர் கலைஞரைத் தவிர, யாரும் தொழில்
துறையைப் பொறுத்தவரையில் குற்றச்சாட்டைச் சொல்ல
வில்லை. கலைஞர் அவர்கள் கூறிய குற்றச்சாட்டுக்களில் முதல்
குற்றச்சாட்டு அதாவது மதிப்பீடு கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து
கொண்டே போகிறது; 150 கோடி ரூபாயிலிருந்து 190 கோடி
ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது என்பதாகும். பிராஜெக்ட்
ரிப்போர்ட்டை வைத்து; 150 கோடி ரூபாயில் முடியும் என்று
முதலில் முடிவு செய்தார்கள். அதற்குப் பின்னால் விலைவாசி
ஏற்றம், மற்ற பல்வேறு கருத்துக்களைக் கொண்டு 19 கோடி
ரூபாய் அளவுக்கு வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது
கூடலாம், அல்லது குறையலாம். இது ஒரு எஸ்டிமேட் தான்.
இதில் கடுமையான குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை,
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, தனியார் ஒருவரை தலைவராகப்
போட்டிருக்கிறீர்களே என்று கேட்டார்கள். நான் இதிலே
ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே தொடங்கப்பட
இருக்கிற 'நியூஸ் பிரின்ட் மில்ஸ்' பொறுத்தவரையில் அது
நிச்சயமாக தனியார் துறையிலோ அல்லது கூட்டுறவுத்துறையிலோ
ஆரம்பிக்கிற தொழில் அல்ல; பொதுத் துறையில்
ஆரம்பிக்கப்பட இருக்கிற தொழில். அதில் விஸ்வநாதனை
தலைவராகப் போடலாமா என்று கேட்டார்கள். அப்படி
யாராவது டெக்னிகல் கன்சல்டன்ட் என்ற முறையில் போடப்
பட்டிருக்கிறார்களா, முன் உதாரணம் இருக்கிறதா என்று
கேட்டார்கள்.

[திரு எஸ். திருநாவுக்கரசு] [1981 ஏப்ரல் 16

நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மெட்ராஸ் ஃபெர்டிலைசர்ஸ் நிறுவனத்தில்—அது மத்திய அரசு நிறுவனம்— திரு. மகாலிங்கம் அவர்கள் தலைவராக இருந்திருக்கிறார்கள். பாண்டிச்சேரி முன்னாள் கவர்னர் திரு. செடிலால் அவர்கள் மத்திய அரசு நிறுவனமான மாடர்ன் பாக்கரிஸ் நிறுவனத்தில் தலைவராக இருந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலும் சில நிறுவனங்களில் தனியார் சிலர் தலைவர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இது ஒன்றும் புதியது அல்ல திரு. டாண்டன் என்பவர் பஞ்சாப் நேஷனல் பாங்க் செயர்மெனாக இருந்திருக்கிறார். இப்படி பல்வேறு நிறுவனங்களில் போட்டி ருக்கிறார்கள், இங்கே விஸ்வநாதன் என்பவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார். சேஷசாயி மில்ஸில் நியூஸ் பிரின்ட் பேப்பர் உற்பத்திச் செய்ய திட்டமிட்டிருந்தார்கள். அது தனியார் துறைக்கு போகக்கூடாது என்ற அளவில் அவர்களுக்கு இருக்கிற தொழில் நுட்ப ரீதியான அறிவைப் பெற்று, பொதுத் துறையில் ஆரம்பிக்கப்படும் இந்தத் தொழிலில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முறையில் திரு. விஸ்வநாதன் அவர்கள் 'கன்சல்ட்டண்ட் அண்ட் ஒன் ஆஃப் தி டைரக்டர்ஸ் ஆக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏறத்தாழ 30 கோடி ரூபாய்க்குள்ளேதான் நம்முடைய பணம் இதிலே இருக்கிறது. மீதத்தை ஐ. டி. பி. ஐ-யும் உலக வங்கியும் போடுகின்றன. பின்னர் இதற்கு தலைவரை நியமிக்கின்ற போது 4 டைரக்டர்களில் மானேஜிங் டைரக்டராக வரக்கூடியவர் அரசாங்க அதிகாரியாகத்தான் இருப்பார், ஐ. டி. பி. ஐ-யும் உலக வங்கியும் ஒப்புக்கொண்டால்தான் விஸ்வநாதன் தலைவராக இருக்க முடியும். இல்லாவிட்டால் ஐ. டி, பி. ஐ-யும் உலக வங்கியும் யாரை தலைவராக நியமிக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்தான் தலைவராக வரமுடியும்.

இதுதான் இருக்கின்ற நிலைமை. தற்காலிகமாக அந்த அமைப்பை உருவாக்குவதற்காக நாம் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளில் அவரைத் தலைவராக வைத்திருக்கிறோம். இதிலே ஒன்றும் ரகசியம் இல்லை. இதிலே ஒன்றும் ஊழலோ தவறோ இல்லை. லெட்டர் ஆஃப் இன்டன்ட் 83 ஆயிரம் டன் என்றும் அந்த நியூஸ் பிரிண்டைப் பொறுத்தவரையில் 50 ஆயிரம் டன்தான் இங்குள்ள கெப்பாசிட்டி என்றும் போடப்பட்டி ருப்பதாக சொன்னார்கள். அதிலே ஒன்றும் குற்றச்சாட்டு இல்லை. வாங்குகின்றபோது அதிகமாக வாங்குகிறோம், அவ்வளவுதான். ஆனால் ப்ரொடக்‌ஷன் கெப்பாசிட்டி என்று சொல்கின்றபோது எவ்வளவு முடியுமோ அதைத்தான் செய்கிறோம். ஆகவே லெட்டர் ஆஃப் இன்டன்ட் குறைவா வாங்கி ப்ரொடக்‌ஷன் அதிகமாகச் செய்ய முடியாது. ஆகவே தான் லெட்டர் ஆப் இன்டன்ட் அதிகமாக வாங்கி இருக்கிறோம். முடிந்தால் புரொடக்‌ஷனை இன்க்ரீஸ் பண்ணுவதற்கும் எக்ஸ்பாண்ட் பண்ணுவதற்கும் முயற்சி செய்கிறோம்.



1981 ஏப்ரல் 16] [திரு எஸ். திருநாவுக்கரசு]

அடுத்து இன்னொன்றை இங்கே சொன்னார்கள். நான் இந்த பழமொழியை இங்கே சொல்வதற்காக தயவுசெய்து கோபித்துக்கொள்ளக் கூடாது. அருண்டவர்கள் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று கூடச் சொல்வார்கள். அதே போன்று எதை எடுத்தாலும் ஊழல் என்று சொல்கிறார்களோ என்னவோ தெரியாது. 200 கோடிக்குத் திட்டம், அதிலே 10 சதவீதம் ஊழல் என்றும், அதாவது வெளிநாட்டிலே பணம் வாங்கப்போவதாகவும சொன்னார்கள். இதிலே யாரோ பெரும் புள்ளிகள் எல்லாம் தலையிடுகிறார்கள் என்றும் சொன்னார்கள். அதற்கெல்லாம் எந்தவிதமான ஆதாரமும் இல்லை. மேலும் இவையெல்லாம் ரகசியமாகச் செய்யப் படுகிற பிரச்சினைகளும் அல்ல. உலக வங்கி இதைக் கவனித்துக் கொண்டிருக்கின்றது. மத்திய அரசின் நிறுவனமான ஐ.டி.பி.ஐ. இருக்கின்றது. அதனுடைய ஆலோசகர்களும் அதிகாரிகளும் இருக்கிறார்கள். வெளிநாட்டிலே இருந்து இயந்திரம் வாங்கினாலோ அல்லது டெக்னிக்கல் நாலெட்ஜாக இருந்தாலோ மத்திய அரசினுடைய அனுமதியோடுதான் அவை நிச்சயமாக நடைபெற இருக்கின்றது. எனவே மத்திய அரசும் தவறு செய்யும் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் நிச்சயமாகச் சொல்ல மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். எனவே இதிலே எல்லாம் ஏதோ ஊழல் நடந்துவிடப் போகிறது என்று சொல்லி . . . . .

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் இங்கே எடுத்துச் சொன்ன குறைபாடுகள் மத்திய அரசினுடைய கவனத்திற்கும் வரவேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன். ஏன் என்றால் நீங்கள் அங்கே பெறுகின்ற க்யூ. சி. ப்ராசஸ் பற்றிச் சோதித்தபோது அது எந்த நாட்டிலேயும் வெற்றி கரமாக அமைந்த ப்ராசஸ் என்று நிரூபிக்கப்படாத அதாவது "ப்ரூவ்" செய்யப்படாத ஒரு ப்ராசஸாகும் அதுமட்டுமல்ல. மெக்ஸிகோவுக்கு பக்கத்திலே இருக்கக்கூடிய பெருநாட்டிலேயே அந்தப் ப்ராசஸ் பரிசோதனை செய்யப்பட்டு அது பயன்பட வில்லை என்று செய்தி வந்திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். எனவே எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் மாநில அரசு ஆனாலும் சரி, மத்திய அரசு ஆனாலும் சரி அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வருவதற்காகத்தான் இதைச் சொன்னேனே தவிர வேறல்ல.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டுவரப்பட்டுள்ளது. மத்திய திட்டக்குழு இதைப் பற்றி நன்கு ஆராய்ந்தது அதிலே உள்ள டெக்னாலஜியைப் பொறுத்தவரையிலும் அவர்களே விரிவாக ஆராய்ந்த பிறகுதான் இதை 6—வது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக் கொள்வதற்கு ஒப்புக்கொண்டார்கள். அதோடு மட்டுமல்ல. இதற்காக உலக வங்கி நிதி தருவதாகவும் பேச்சு வார்த்தை நடந்து

கொண்டிருக்கின்றது. ஆகவே அவர்கள் இதைப் பார்த்து இந்த டெக்னாலஜி பிசிபிள் என்கிற அடிப்படையிலேதான் இதை மேற்கொண்டு பரிசிலனை செய்திருக்கிறார்கள். நம்முடைய 6–வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயும் அதற்காக சேர்த்து நிதி ஒதுக்கமும் செய்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டெக்னாலஜியைப் பற்றியோ மற்றவர்களைப் பற்றியோ சொல்லத் தேவையில்லை. மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் அதாவது முதலீட்டைப் பொறுத்தவரையில் அவர்கள் சொன்ன விளக்கம் ஆக்சுவல் ரிப்போர்ட் தயார் செய்கின்றபோது அதைப் போல் வருவது உண்டு என்பதுதான். அதனால் அவர்கள் சந்தேகப்படவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று. இருட்டாக இருப்பதால்தான் அங்கு என்ன இருக்கின்றது என்று தெரியாத காரணத்தால்தான் கேட்டேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: சாரி. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அருண்டவன் என்று குறிப்பிட்டதாகச் சொன்னார். அப்படி அருண்டவன் என்று நான் சொல்ல மாட்டேன். நான் அப்படிச் சொல்லவும் இல்லை. அவர்கள் மீது நான் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறேன். ஆகவேதான் அந்தப் பழமொழியைக் கூட கொஞ்சம் மாற்றி அருண்டவர்கள் கண்ணுக்கு இருண்டது எல்லாம் பேய் என்று சொன்னேன். மரியாதையாகத்தான் சொன்னேன். 200 கோடியிலே 10 சதவீதம் என்றால் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஒரு பெரிய குறை இருக்கின்றது என்றால் அது பத்திரிகையிலே எப்படி வரும்? வெளிநாட்டிலே போய் 20 கோடி ரூபாயிலே இந்த அரசு ஏதோ தவறான வகையிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. வாங்க இருக்கின்றது என்பது போன்ற ஒரு பிரமையை உண்டாக்குவதற்காகத் தான் நீங்கள் சொன்னீர்கள். அப்படி குற்றச்சாட்டு சொன்ன காரணத்தால் தான் நான் சொன்னேன். ஆகவே அதிலே அப்படிப்பட்ட எந்த நிலைமையும் இல்லை. நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமும் இல்லை. தவறுகள் நடப்பதற்கான எந்தவிதமான வாய்ப்போ, சந்தர்ப்பமோ கூட நிச்சயமாக இல்லை. ஏனென்றால் உலக வங்கியின் நிறுவனத்திலே இருந்து அவர்களுடைய ஆலோசகர்களை எல்லாம் இதிலே போட்டிருக்கிறார்கள். இயக்குநர்களை போட்டிருக்கிறார்கள். இதற்காகத்தான் நான் அதை சுட்டிக்காட்டினேன். அதுமட்டுமல்ல, 20 கோடி ரூபாய்க்கு வரப்போகின்ற வெடி மருந்து தொழிற்சாலையைப் பற்றி அவசரம் அவசரமாகச் சொன்னார்கள். இவ்வளவு பெரிய 109 கோடி ரூபாய்க்கான திட்டம் பற்றி ஏன் நீங்கள் பட்ஜெட்டில் சொல்லவில்லை என்று



சொன்னார்கள். இதிலே ஏதோ இருக்கின்றது. அதனால்தான் மறைத்திருக்கிறீர்கள் என்று கூட அவர்கள் சொன்னார்கள், இந்தத் திட்டம் பற்றி ஏற்கெனவே சென்ற ஆண்டு பட்ஜெட்டிலேயே சொல்லப்பட்டிருக்கின்றது, இந்தத் திட்டம் வரப்போகிறது என்று அறிவித்திருக்கிறோம்' ஆகவே ஒவ்வொரு வருடமும் அதைச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டிய கட்டாயமில்லை. அதை மறைக்க வேண்டிய அவசியமும் இல்லை. அதிலே ஒன்றும் இரகசியமும் இல்லை. சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே வெளிப்படையாக சொல்லப்பட்டிருக்கின்றது.

[பிற்பகல் 1.50]

சென்ற ஆண்டு சொன்ன அதே திட்டத்தை இந்த ஆண்டும் சொல்ல வேண்டியதில்லை என்ற அந்த காரணத்தினாலேதான் சொல்லாமல் விட்டிருக்கிறோம். அதிலே ஒன்றும் இரகசியம் இல்லை. இதற்கு முன்னாலே இருந்த செயலாளர்கள் எல்லாம் மறுப்பு தெரிவித்திருக்கிறார்களா என்று கேட்டார்கள்? எனக்குத் தெரிந்த வரையில் நிச்சயமாக அப்படி இல்லை. கூட்டம் போட்டு விவாதிக்கிறபோது ஒவ்வொருவரும் அவர்களுடைய கருத்துக்களை சொல்வதிலோ, கருத்துக்களை பரிமாறிக் கொள் வதிலோ பின் வாங்கவில்லை. இறுதி முடிவு எடுக்கிறபோதும் அதிகாரிகள்தான் எடுப்பார்கள். அதிகாரிகள் என்றால் தமிழ்நாடு அரசினுடைய அதிகாரிகள் மட்டும் அல்ல. நான் ஏற்கனவே சுட்டிக் காட்டியதுபோல ஐ.டி.பி. உலக வங்கி போன்ற நிறுவனங்களில் இருக்கிற அத்தனைபேரும் சேர்ந்துதான் முடிவு எடுப்பார்கள்.

உலக வங்கியினுடைய டீம் கூட இங்கே இரண்டு மூன்று தடவை வந்து சென்றனர். இப்போது கூட தமிழகத்தினுடைய தொழில்துறை செயலாளர் வெளிநாட்டுக்குப் போயிருக்கிறார்கள். அமெரிக்காவிற்கெல்லாம் போயிருக்கிறார்கள். உலக வங்கியோடு இது சம்பந்தமாக விவாதம் நடத்துவதற்காக இப்படி பல்வேறு கட்டத்திலேயும் மத்திய திட்டக் குழுவிலேயும், கடுமையாக விமர்சிக்கப்பட்டு வர இருக்கிற ஒரு நல்ல பிராஜக்ட், எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அதை வரவேற்க வேண்டும். அதற்கு மாறாக ஏதாவது சொல்லி, அது இங்கே வராமல் போய்விடக்கூடாது என்பதினால்தான் . . (குறுக்கீடு)

டாக்டர் மு. கருணாநிதி: பத்திரிகைகளில் தவறாக வரக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நல்ல பிராஜக்ட் வர வேண்டும் என்பதை வரவேற்க வேண்டும் என்று சொன்னார்கள். வருகிற பிராஜக்ட் நல்ல பிராஜக்டாக வரவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கவலையும் அதுதான். எனவே இப்படி எல்லாம் நாம் ஒருவருக்கொருவர் வாதாடி, இதனால் ஏற்படுகிற சந்தேகத்தினாலே, உலக வங்கி தரவேண்டிய பணத்தை தராமல் போய், ஐ.டி.பி. தரவேண்டிய பணத்தை தராமல் போய், இப்படி அந்த திட்டம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற நோக்கத்தோடு தான் சொன்னேன். நீங்கள் அதை வரவேற்க வேண்டும் என்று அதற்காகத்தான் சொன்னேன். தென்னாட்டிலேயே பெரிய தொழிற்சாலையாக வர இருக்கிறது அந்த தொழிற்சாலை, மாஸ்டர்-பீஸ் என்று சொல்வார்களே, அதுபோல இந்த அரசினுடைய பெரிய திட்டத்தை நீங்கள் வரவேற்றிருக்க வேண்டும். அப்படி வரவேற்றிருந்தால் அது இன்னும் உதவி செய்வதாக இருந்திருக்கும். ஐ.டி.பி-க்கும், உலக வங்கிக்கும், அவர்களை நீங்கள், தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை அதிகரிப்பதற்காக அழைப்பதாக இருக்கும் என்ற அந்த நோக்கத்தில்தான் நான் அதை எடுத்துச் சொன்னேன்.

இறுதியாக இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல விதமான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல பேர் பேசுகிறபோது எங்களுடைய தொகுதியிலே இந்த தொழிற்சாலை வேண்டும். அந்தத் தொழிற்சாலை வேண்டும் என்று கோரிக்கைகளையும் வைத்திருக்கிறார்கள். அதிலே எந்தெந்த தொகுதியிலே என்னென்ன தொழிற்சாலைகள் வரமுடியுமோ, அந்தந்த தொழிற்சாலைகளை எல்லாம் ஏற்படுத்துவதற்கு, அரசினுடைய நிதி நிலையை ஆராய்ந்து, அல்லது அரசு எடுக்கும் முடிவுகளைப் பார்த்து, ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, மத்திய அரசுக்கு இந்த மன்றத்தின் மூலம் ஒன்றிரண்டு காரியங்களை வேண்டுகோளாக விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு போடுகிற கேப்பிடல் இன்வெஸ்ட்மெண்டைப் பொறுத்தவரைக்கும் 4 சதவீதமாக இருக்கிறது. அதை உயர்த்த வேண்டும். இரண்டாவதாக, மாநிலங்களுக்கு, பின் தங்கிய பகுதிகளில் தொழில் ஆரம்பிக்கிறபோது கொடுக்கிற சப்சிடீஸ் எதிர் காலத்தில் நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு அதை தற்காலிகமாக நீட்டித்திருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் என்று மட்டுமல்ல, இந்திய நாடு முழுமைக்கும் முழுமையான தொழில் வளர்ச்சி அடைய வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்தக் காரணத்தினாலே சப்சிடீஸ்கிமை தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டும் அல்லாமல் மத்திய அரசினுடைய பொது நிறுவனங்கள் இன்னும் அதிகமாக தமிழகத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தோடு மட்டுமல்லாமல் இன்றைய தினம் இந்த அளவுக்காவது உதவி கொண்டிருக்கிற மத்திய அரசுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் அவர்களுடைய உதவி



அதிகமாக வேண்டும் என்பதுதான் நம்முடைய ஆவல். நம்முடைய கோரிக்கை என்பதை எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொல்வதிலே எதற்காவது நான் பதில் சொல்லாமல் விட்டிருந்தால், அவைகள் எல்லாம் குறிப்பேட்டில் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடைய கவனத்திற்கு வரும் என்பதை எடுத்துச் சொல்லி, இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு என்.எஸ்.வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். தற்போது இன்டஸ்ட்ரீஸ் ஃப்ரீ லோன் என்பது பெரிய தொழிற்சாலைகளுக்கும், நடுத்தர தொழிற்சாலைகளுக்கும் மட்டுமே வழங்கப்படுகிறது. இன்டஸ்ட்ரீஸ் ஃபிரீ லோன் என்றால் சேல்ஸ் டாக்ஸிலிருந்து வரி விலக்கு. அதை நலிவுற்ற சிறிய தொழிற்சாலைகளுக்கு நிதி ஆதாரம் பெறுகிற அளவிலே 5 ஆண்டு அல்லது 10 ஆண்டுகளுக்கு முன்னாலே தொடங்கப்பட்ட சிறு தொழில்களுக்கு, அந்த சேல்ஸ்டாக்ஸ் மீதான வட்டியில்லாக் கடன் கொடுக்க அரசு முன் வருமா? அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று தெரிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவுற்ற தொழில்களுக்கு தனியாக ஒரு அமைப்பின் மூலம், இந்த அரசு அந்தந்த தொழில்களை பரிசீலனையில் எடுத்துக் கொண்டு, வேண்டிய வகைகளில் உதவி செய்து கொண்டிருக்கிறது, இண்டஸ்ரியல் பிரிவில் ஏற்கனவே லோன் வாங்கித்தான் அவர்கள் தொழில் நடத்திக் கொண்டிருப்பார்கள்.

### கோரிக்கை எண் 24—தொழில்கள்.

திருவாளர்கள் பெ.சு. திருவேங்கடம், டி. மணி, எம். ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. சி. பழனிமுத்து அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 24-தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,15,55,00-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரியத்தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண்.49—தொழிற் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் ப. சுந்தரம், எஸ். இராசாராமன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 49–தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 38,60,73,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்ற மாலை 4.30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல்1.56 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

* * * * *

பிற்பகல் 4-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு.பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 6. அறிக்கை அளித்தல்.

### தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை பேரவைக்கு அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. க. மீனாட்சிசுந்தரம் எம். எல். சி. அவர்களை பொதுச் செயலாளராகக் கொண்ட தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் தன் 10 அம்சக் கோரிக்கைகளையும், சிறப்புக் கோரிக்கை ஒன்றையும் அரசின் முன் வைத்து அவைகளை அரசு ஏற்றுக்கொள்ள வற்புறுத்தி 30-3-81–லிருந்து மறியல் போராட்டம் நடத்தி வருகிறது. இக்கிளர்ச்சி குறித்து இப்பேரவையில் 4-4-81–ல் ஓர் கவன ஈர்ப்புத் தீர்மானத்தற்கும் மேலவையில் 31–3–81–ல் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கும் பதிலளிக்கும் வகையில் பேசியுள்ளேன். அப்போது தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தைத் தவிர பல்வேறு ஆசிரியர் சங்கங்களும் பல்வேறு கோரிக்கைகளை அரசுக்குக் கொடுத்துள்ளன என்றும் எல்லா கோரிக்கைகளையும் அரசு தீவிரமாக ஆராய்ந்து நிதி நிலைமைக்கு ஏற்ப முடிவு செய்ய வேண்டியுள்ளது என்றும்



கூறினேன். மேலும் ஆசிரியர் நலத்துக்காக பல திட்டங்களை அண்மை காலத்தில் நிறைவேற்றியுள்ள இந்த அரசு, நியாயமான கோரிக்கைகளை ஏற்று ஆணை வழங்கும் என்று ஆசிரியர்கள் நம்பலாம் என்றும், எனவே இத்தகைய போராட்டங்களை கைவிட வேண்டும் என்றும், கேட்டுக் கொண்டேன். ஆனால் ஆசிரியர் மன்றம் தொடர்ந்து போராட்டம் நடத்தி 1,300–க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கைதாகியுள்ளனர். இது வருந்தத்தக்கது.

கடந்த மூன்று நாட்களாக திரு. மீனாட்சி சுந்தரத்துடனும் அச்சங்கத்தின் மற்ற சில நடவடிக்கைக் குழு பிரதிநிதிகளுடனும் இக்கோரிக்கைகளைக் குறித்து கலந்து பேசினேன். இக்கோரிக்கைகளில் அகவிலைப்படி வழங்குதல், ஒரு நபர் குழு அறிக்கையை வெளியிடுதல், ஓய்வு பெறும் அனைவருக்கும் ரூ. 10,000 வழங்குதல், நிறுத்தப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு ஊக்க உயர்வை மீண்டும் வழங்குதல், மலிவு விலையில் உணவுப் பொருள்களை வழங்குதல், நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி வழங்குதல், போன்ற கோரிக்கைகள் ஆசிரியர்கட்கு மட்டும் அல்லாது எல்லா ஊழியர்களுக்கும் உள்ள பொதுக் கோரிக்கைகள் ஆகும். ஏற்கனவே ஒரு தவணை அகவிலைப்படி 1–12–1980 முதல் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. ஒரு நபர் குழுவின் பரிந்துரையை ஏற்று சில சலுகைகளையும் அரசு வழங்கியுள்ளது. அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படும் இச் சலுகைகள் எல்லா ஆசிரியர்களிக்கும் பொருந்தும். அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி வழங்கப்பட்டுள்ள பகுதிகள் சிலவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கட்கு இப்படிகள் வழங்கப்படாமல் விடுபட்டிருப்பின் அரசாணைப்படி வழங்க ஆவன செய்யப் படும்.

அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களையும் 1–6–81 முதல் அரசு ஊழியர்களாக அரசு அறிவித்து அவ்வாறே ஆணையிட்டுள்ளது. நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர் ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை பின்னர் பரிசீலிக்கப்படும். பொதுவாக தற்போதுள்ளபடி ஆசிரியர்கள் ஒன்றியத்துக்குள்ளாகவே மாற்றம் செய்யப்படுவர். தேவைப் பட்டால் மாவட்ட அளவிலோ அல்லது மாநில அளவிலோ மாற்றப்படலாம்.

தமிழ்நாடு மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தி வரும் திட்டப்படி பயிற்சி பெற்று இடைநிலை ஆசிரியர் தகுதி பெற வேண்டிய இளநிலை ஆசிரியர்கள் ஏறத்தாழ 75,000 பேர் உள்ளனர் என்றும், தற்போதுள்ள ஆணையின்படி ஆண்டொன்றுக்கு 5,000 இளநிலை ஆசிரியர்கள் தான் இடைநிலை ஆசிரியர்களாக ஆவதற்கு இயலும் என்றும், இதனை அதிகப்படுத்தி எல்லா ஆசிரியர்களும் இடைநிலை ஆசிரியர்களாக குறுகிய காலத்தில் ஆவதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டு

மென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது. வரும் ஆண்டில் (அதாவது 1981-82-ல்) 5000 இளநிலை ஆசிரியர்களுக்குப் பதிலாக 10,000 இளநிலை ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து அவர்கள் இடைநிலை ஆசிரியர்களாக ஆக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே அறிவித்துள்ளபடி ஆசிரியர் நல நிதியிலிருந்து ஆரம்ப பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு வரை இலவசமாகக் கல்வி அளிக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விரைவில் ஆணை வெளியிடப்படும். வரும் ஆண்டில் 250 பகுதி நேர கைத்தொழில் பயிற்சி ஆசிரியர்கள் பதவிகளை முழு நேரப் பதவிகளாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது அடுத்த ஆண்டு மீதமுள்ள பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்களையும் முழு நேரப் பதவிகளாக மாற்றுவது பற்றி அரசு பரிசீலிக்கும். 3 ஆண்டுகள் பணிபுரிந்த எஸ்.எஸ்.எல்.சி. தகுதி பெற்ற முழுநேரத் தொழிலாசிரியர்களை இடைநிலை ஆசிரியர் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு விகிதாசாரப்படி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசிலிக்கும்.

மேலும் நடுநிலைப் பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர் கட்கும் பணிப்படி வழங்கல், ஒரே இனத்தில் தொடர்ந்து 20 ஆண்டுகள் பணிபுரிபவர்களுக்கு சிறப்பு நிலை ஊதியம் வழங்கல் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முழுநேரத் தொழிலாசிரியர்களுக்கும் வழங்கப்படும் ஊதியத்தையே நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் அதே தகுதி உள்ள முழுநேரத் தொழிலாசிரியர்களுக்கும் வழங்கல் ஆகிய கோரிக்கைகளை அரசு ஆய்ந்து முடிவெடுக்கும்.

ஆசிரியர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிப்பது குறித்து சில விதிமுறைகளை அரசு அண்மையில் வெளியிட்டிருக்கிறது. இவ் விதிமுறைகள் ஆசிரியர் உரிமைகளை பறிக்கும் வகையில் அமைக்கப்படவில்லை இவ்விதிமுறைகளின் அடிப்படையில் தொடக்கப் பள்ளிஆசிரியர்மன்றத்தின் அங்கீகாரம்பற்றி அம்மன்ற அலுவலர்களுடன் கலந்து பேச எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

இந்த அறிக்கையைத் தொடர்ந்து தமிழ்நாடு தொடக்க பள்ளி ஆசிரியர் மன்றம் தன் கிளர்ச்சியை கைவிட்டு ஆசிரியர்கள் பள்ளிக்குத் திரும்பி அமைதியான சூழ்நிலையில் பணிசெய்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு ஆ. வெள்ளைச்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏர்கூலர் இங்கே வாயில்படியிலே மட்டும் வைக்கப் பட்டிருக்கிறது, நாங்கள் என்ன பாவம் செய்தோம், எங்களுக்கு வைக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : அவர்கள் எல்லாம் அங்கு வந்து வந்து காற்று வாங்கிக்கொண்டு போகலாம்.

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் : எனக்குக் கூட வைக்கவில்லை.



(இ) கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்

மாண்புமிகு திரு. எஸ். என். ராசேந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,88,79,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக நெசவாளர்களுக்கு குறைந்த விலையில் நூல் கிடைக்கவும் நியாயமான கூலி கிடைக்கவும் தக்க நடவடிக்கை எடுக்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,88,79,000—இல் ரூ. 100 குறைக்கவேண்டும்''

திரு எம். ஆறுமுகம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் அவினாசி வட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை ஒன்று அவசியம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,88,79,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

(ஈ) மானியக் கோரிக்கை எண் 27 கதர் தொழில்

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 27—கதர் தொழில் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,65,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'

திரு. த. வேணுகோபால் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தேவையான கதர் ஆடைகள் செய்யாமல் வேலை வாய்ப்பு இழக்கும் நிலைமை ஏற்பட்டிருப்பதை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 27—கதர் தொழில் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,65,32,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்.'

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமிய நூற்பு நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் "சிட்டங்களுக்கு" கூடுதல் கூலி கொடுக்கவேண்டும் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 27— கதர் தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,65,32,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

(உ) கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள் கட்டிடங்கள்

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள் கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,83, 15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

[மாலை 4-40]

திரு. த. வேணுகோபால் :— தலைவரவர்களே, சு. வாளவட்டி உயர்நிலைப் பள்ளி பல வருடங்களாக நடைமுறையில் பள்ளி இயங்கியும் புதிய கட்டிடம் கட்ட வகை இல்லாமல் இருப்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள் கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ, 2,83, 15,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஊ) கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும். கருவிகளும் தளவாடமும்

மாண்புமிகு திரு. எஸ் என். இராசேந்திரன் :—தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். "38—பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,59,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'

திரு. பெ. சு. திருவேங்கடம் :—தலைவரவர்களே, பொதுப் பணித்துறையில் துளைபோடும் கருவிகள், மண் எடுக்கும் இயந்திரங்கள் ஏரிகளை ஆழப்படுத்தும் இயந்திரங்களை அதிக அளவில் வாங்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,59,35,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



பொதுப் பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு

(எ) கோரிக்கை எண். 51—

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன். தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 51—பொதுப் பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 33,36,32,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புகள் * அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்ற கருத்துக்களைக் கேட்டு அதன் பின் என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன்.

திரு. து. புருஷோத்தமன் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறி மானியக் கோரிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். "நெய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை" என்று நம்முடைய முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் நெய்யும் தொழலானது எந்த அளவிற்குப் பரிதாபகரமான நிலையில் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்படி கேட்டுக்கொள்வேன்.

தற்பொழுது கைத்தறித் தொழில் மிகமிக மோசமான நிலையில் மந்தமான நிலையில் இருப்பதற்குக் காரணம் பல்லாண்டுக் காலமாக இருக்கின்ற நூல் தட்டுப்பாடு மிகவும் முக்கியமான காரணம் என்பதை நாமெல்லாம் ஒத்துக்கொள்கின்ற ஒன்றாக இருக்கிறது. விஷம் ஏறுவதைப்போன்று இன்றையதினம் நாளுக்கு நாள் நூல் விலை ஏறிக்கொண்டு வருகிறது. நூல் உற்பத்தி பெரும்பாலும் தனியார் கையிலே இருப்பதாலேதான் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சென்ற ஆண்டு கூட நம்முடைய முதலமைச்சரவர்கள் ஒன்றை அறுவித்தார்கள். இப்படித் தனியார் நூலின் விலையை ஏற்றிக்கொண்டு வருகிறார்கள் என்பது தெரிந்திருந்தும் கூட, கடந்த ஆண்டு 11 நூற்பாலைகள் தனியார் நடத்துவதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். அதனால்தான் இந்த ஆண்டு பிடிக்க முடியாத அளவிற்கு விலை ஏறியிருக்கிறது.

217 முதல் 236 வரையிலும் 237 முதல் 246 வரையிலும் 247 முதல் 250 முதல் வரையிலும் 250 முதல் 303 பக்கங்களில் பக்கத்தில் இணைப்புகள் I, II, III, IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

அண்மையில் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பிறகு, நூற்பாலை முதலாளிகள் அதற்குப் பல்வேறு காரியங்களைச் செய்தார்கள் என்பதால் மாநாடு முடிந்தபிறகு நூல் விலை ஏற்றப்பட்டதோடு மட்டுமல்லாமல், மதுரையிலும் மதுரையைச் சுற்றிலும் உள்ள பகுதிகளில் நூல் கிடைக்காத காரணத்தாலும் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

மூன்று மாதங்களுக்கு முன் நூல் விலை எப்படி இருந்தது. இப்பொழுது அது எந்த அளவிற்கு ஏறியிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 40 ஆம் நம்பர் நூல் ஒரு கட்டு 3 மாதங்களுக்கு முன்பு 102 ரூபாய் விற்றது. ஆனால் இன்றையதினம் மட்டமான ரகம் 126 ரூபாய் தரம் உள்ள ரகம் 140 ரூபாய். அதைப்போல, 60 ஆம் நம்பர் நூல் மூன்று மாதங்களுக்கு முன்பு 150 ரூபாய்க்கு விற்றது. ஆனால் இன்று மட்டமான ரகம் 176 ரூபாய் என்றும் தரம் உள்ள ரகம் 190 ரூபாய் என்றும் இருக்கிறது. நூலை வாங்கி உற்பத்தி செய்யும் நிலை இல்லாத அளவிற்கு விலை ஏறியிருக்கிறது. அதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, இந்த நூற்பாலைகளைக் கூட்டுத் துறையிலாவது அல்லது பொதுத் துறையிலாவது அல்லது கூட்டுறவுத் துறையிலாவது அமைக்க வேண்டும். அப்பொழுதுதான் நம்முடைய அரசால் விலைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வளவு சிரமங்களுக்கிடையே அவர்களால் உற்பத்தி செய்யப்படும் துணிகள் ஏறக்குறைய 50 கோடி ரூபாய் அளவிற்குக் கைத்தறித் துணிகள் தேங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்குக் காரணம் மக்கள் விரும்புகின்ற ரகங்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். நான் பல கோவாப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் விசாரித்தேன். ஒரு குறிப்பிட்ட இடத்தில் தயாரிக்கின்ற துணி, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திலே தயாரிக்கப்படும் துணிகளின் தரம் குறைந்ததாகவும், மக்கள் விரும்புகின்ற ரகமாக இல்லாததனாலும் தேங்கியிருக்கிறது. கோஆப்டெக்ஸ் அதிகாரி கூட அந்தப் பகுதியிலேயிருக்கிற துணிகளை வாங்க மறுத்திருக்கிறார். என்றாலும் அங்கே இருக்கிற ஒரு சில முக்கியமானவர்களின் தலையீட்டின் காரணமாக, அதை வாங்கி இருக்கிறார்கள். அங்கே வாங்கிய துணிகள் மட்டும் பல கோடி ரூபாய்க்கு விற்கப்படாமலிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



இங்கேயே கூட, காலையில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். கோஆப்டெக்ஸ் நிறுவனம், கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகிற துணிகளை வாங்க மறுக்கிற காரணத்தாலே, வேலையில்லாத நிலைமை இருக்கிறது என்று கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அப்படி வாங்காத காரணத்தாலே ஏறத்தாழ ரூ. 50 கோடிக்கு துணிகள் தேக்கம் அடைந்திருக்கின்றன, ஆகவே மேலும் வாங்கக் கூடாது என்ற நிலையும், ஏற்கனவே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வாங்கப்பட்ட துணிகளுக்கு இதுவரையிலும் பணம் கொடுக்கவில்லையென்ற நிலைமையும் இருக்கிற காரணத்தாலே, இன்றையதினம் பதட்ட நிலைமை பல்வேறு இடங்களிலே இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றையதினம் கைத்தறி துணிகளுக்கு ரிபேட் கொடுக்கிறார்கள். ஆனால், கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் விற்கப்படும் துணிகளுக்கும் அதனையொட்டிய விற்பனை நிலையங்களில் விற்கப்படும் துணிகளுக்கும், மட்டும்தான் ரிபேட் கொடுக்கப்படுகிறது. கூட்டுறவு உற்பத்தி சங்கங்கள் விற்பனை நிலையங்கள் வைத்திருக்கின்றன. அங்கேயெல்லாம் ரிபேட் கொடுப்பதில்லை. கண்காட்சியில் அதே சங்கங்கள் விற்பனை நிலையம் வைத்திருந்தால் ரிபேட் கொடுக்கப்படுகிறது: ஆனால் வெளியில் கொக்கப்படுவதில்லை. ரிபேட் கொடுப்பது மத்திய சர்க்கார். மாநில சர்க்காரும் மானியம் கொடுக்கிறது. அப்படி இருக்கும்போது, கைத்தறி துணியை எங்கு உற்பத்தி செய்து விற்பனை செய்தாலும் ரிபேட் கொடுக்கிற நிலைமை உருவாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்பொழுது அப்படி எல்லோருக்குமே கைத்தறி ரிபேட் கொடுக்கப்பட்டது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பொழுது, அந்தக் கைத்தறி தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு, அச்சு, தறி போன்ற அந்தக் கருவிகள் இனாமாகக் கொடுக்கப்பட்டு, அந்தக் கைத்தறி தொழில் ஊக்குவிக்கப்பட்டது என்பதை மறந்து விடக் கூடாது. அந்தக் கைத்தறி துணிகளை விளம்பரம் செய்வதற்கு விளம்பரப் பணம்கூட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மானியமாகக் கொடுக்கப்பட்டது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப் போலவே, கைத்தறி துணியிலே மக்களாலே அதிகமாக விரும்பப்படுவது பாலிஸ்டர் ரக துணி என்று சொன்னார்கள் நம்முடைய அமைச்சர் அவர்களே, பாலியஸ்டர் துணிக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது என்று சொன்னார். ஆனால், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, பாலியஸ்டர் துணி பற்றியோ, அதனுடைய அபிவிருத்திக்கான திட்டங்கள் பற்றியோ எதுவும் குறிப்பிடாதது வருந்தத்தக்க விஷயமாகும். ஆகவே, மக்கள் விரும்புகின்ற அந்த பாலியஸ்டர் துணியை மக்களுக்கு கேவமாக

விளம்பரப்படுத்துவதன் மூலம், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு தரமுடியும் என்ற காரணத்தால், ஏன் அதை விட்டு விட்டார்கள் என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே, பாலியஸ்டர் துணியைப்பற்றி, அதன் அபிவிருத்தியைப் பற்றி, அதன் முன்னேற்றத்துக்கான திட்டங்களைப் பற்றி அறிவிக்காதது ஏன் என்று மீண்டும் கேட்க விரும்புகிறேன். மககள் விரும்புகிற துணியை விளம்பரப் படுத்தாததாலேதான் தற்போதுள்ள தேக்க நிலை ஏற்பட்டுள்ளது என்று சொல்ல விரும்புகிறேன்.

சாய, இரசாயனப் பொருள்கள் தரப்படுவதாகச் சொல்லப் படுகிறது. பொதுவாக, கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாக, கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான் சாயம், இரசாயனப் பொருள்களைக் கொடுக்கிறார்கள். தனிப்பட்டவர்களுக்குக் கொடுப்பதில்லை. ஆகவே, கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாகத் தனிப்பட்டவர்களுக்கும் சாயம், இரசாயனப் பொருள்களைக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமெனறு கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒரு கேள்வி கேட்கும்போது, 7 சாயத் தொழிற்சாலைகளை இங்கே எற்படுத்த இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 30,000 பேர்கள் இத் தொழிலில் ஈடுபட்டுள்ள சைதாப்பேட்டையிலே ஒரு சாயத் தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்று கேட்டேன். நம்முடைய கைத்தறி துறை அமைச்சர் மூலமாக, தொழில் அமைச்சருக்குத் தெரிவித்து, ஒரு சாயத் தொழிற்சாலையை சைதாப்பேட்டையிலே துவக்க வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது கைத்தறி கண்காட்சி நடக்கிறது. அங்கே முன்பெல்லாம் தனியார்கள் ஸ்டால்கள் வைக்க அனுமதிக்கப் பட்டார்கள். சிறந்த லுங்கி தயாரிப்பாளர்களான சங்கு மார்க், மௌலானா, கிப்ஸ் போன்ற தனியார் கம்பெனிகள், அங்கே அலங்கார வளைவுகளை வைத்து, மக்களைக் கவர்கிற வகையிலே, மக்கள் கைத்தறி துணிமீது மோகம் கொள்கிற அளவுக்குச் சிறப்பாக அரங்குகளை ஏற்படுத்தி விற்பனை செய்து வந்தார்கள் ஆனால், இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே, இப்பொழுது, அப்படிப்பட்ட ஸ்டால்களை அமைக்க ஏன் அனுமதி தரவில்லையென்று நான் கேட்க விரும்புகிறேன். அவர்களை அனுமதித்ததன்மூலம் கைத்தறி தொழிலுக்குத்தான் அவர்கள் விளம்பரம் தேடித் தருகிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



[மாலை 4.50]

அடுத்து கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்வது குறித்து நான் சென்ற கூட்டத் தொடரிலேயே அதைக் குறைத்துக் கொள்ளும்படி சொன்னேன். கூட்டுறவுத் துறை மூலமாக ஏற்றுமதி செய்வதால் பல கோடி ரூபாய்கள் நஷ்டம் ஏற்படுகிறது. தரமான துணிகள் அனுப்டப்படவில்லை. துணிகள் குறித்த நேரத்தில் அனுப்பப்படவில்லை. அதனால் நஷ்டம் ஏற்படுகிறது. கோ-ஆப்டெக்ஸ் லாபகரமாக நடைபெறவேண்டும் என்றால் அந்த ஏற்றுமதியைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னேன். இப்போது பெருவாரியாக குறைத்திருக்கிறார்கள்.

அடுத்து நம்முடைய அமைச்சர் போனமாதம் சிங்கப்பூர் சென்றிருந்தார்கள். அங்கே ஒரு கைத்தறி விற்பனை நிலையத்தைத் திறந்துவைத்திருக்கிறார்கள். குறிப்பாக அனகாபுத்தூரைச் சேர்ந்த ஒருவர் ஏற்கனவே அந்த இடத்திலே அந்த விற்பனை நிலையத்தை வைத்திருந்தார்கள். அவர்களுக்கு அதில் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டதால் அதை அரசின் தலையிலே தள்ள வேண்டும் என்ற காரணத்தால் அந்த ஊரின் பெயரைத் தாங்கி இருக்கின்ற ஒருவர் அதில் ஈடுப்பாடு கொண்ட காரணத்தால், ஏராளமான பணத்தைக் கொடுத்து அந்த விற்பனை நிலையத்தை ஆரம்பித்திருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அதில் இன்னும் ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. என்னவென்றால், சிங்கப்பூர் அரசு அந்த விற்பனை நிலையத்துக்கு இன்னும் அனுமதி கொடுக்கவில்லை என்று அறிகிறேன். உண்மை என்ன என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் இதை விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். நாட்டில் மற்ற தொழிலாளர்களை விட மிக மோசமான நிலையில், கூனி குறுகி, குழியிலே இருந்து பணியாற்றி, நாள் பூராவும் வேலை செய்தும் கூட மாதத்திற்கு 200, 250 ரூபாய்கள் ஊதியம் பெற முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி, அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கல்வி வசதி செய்து தரவேண்டும் என்று பல ஆண்டுகளாகச் சொல்லியும் இதுவரையில் இந்த அரசு அதை நிறைவேற்றவில்லை என்பதை வேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்பகிறேன். வயதான காலத்திலே டி.பி. நோயினால் பாதிக்கப்படுவது இந்த அரசுக்குத் தெரியவேண்டும் என்பதற்சாக அதைச் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே போல, நெசவாளர்கள் குறைகளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கைத்தறிக் கண்காட்சியைத் துவக்கி வைக்கும்போது ஒன்றைச் சொன்னார்கள். ''மானத்தைக்காக்க துணி வேண்டும், அதை வாங்கி உடுத்தித்தான் ஆகவேண்டும். ஆனால் மானத்தை காக்கும் துணிகளை நெய்து தரும் நெசவாளி

[திரு து. புருஷோத்தமன்] [1981 ஏப்ரல் 16

களின் மானம் காக்கப்படுகிறதா? என்ற கேள்வியை எழுப்பிப்
பார்த்தால் நாம் நமது கடமையைச் செய்தவர்களாக
இருப்போம்'' என்று சொன்னார். மற்றொன்றையும் சொன்னார்.
கைத்தறித் துணி தேங்கி கிடக்கிறது என்றால் எத்தனை லட்சம்
நெசவாளர்கள் குடும்பத்தில் வேதனையும் துன்பமும் தேங்கி
இருக்கிறது என்பதையும் உணரவேண்டும். இது மாற்றப்பட்டாக
வேண்டும் என்றும் சொன்னார். பத்து தடவைப் படித்துப்
பார்த்தால்தான் நம்மால் இதை புரிந்து கொள்ள முடியும்.

சில நாட்களுக்கு முன்னாலே சத்திரப்பட்டிலே ஒரு விரும்பத்
தகாத நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அங்கே எந்த அளவுக்கு
நெசவாளிகள் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள், இறந்திருக்
கிறார்கள், என்று எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கலவரத்
துக்கு மூல காரணம், அங்கே உள்ள கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம்
அங்கிருக்கின்ற பல கூட்டுறவு சங்கங்களில் நெய்யப்பட்ட துணி
களை கொள்முதல் செய்யவில்லை. அதனால் வேலையில்லை
அதன் காரணமாக போராட்டம், உண்ணாவிரதம் போன்றவைகள்
நடந்தன: அங்கே இருக்கின்ற பெண்களை, நெசவாளத் தொழி
லாளர்களை அடித்து, துன்புறுத்தி அவர்கள் மீது பல வழக்கு
களைப் போட்டிருக்கிறார்கள், என்பதை நாம் எண்ணிப் பார்க்க
வேண்டும். சத்திரப்பட்டிலே மட்டும் 30 லட்சம் ரூபாய்க்கு
துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. ஏற்கனவே கோ—ஆப்டெக்ஸ்
நிறுவனம் வாங்கிய துணிகளுக்கு ஏறத்தாழ 30 லட்சம் ரூபாய்கள்
பணம் கொடுக்க வேண்டும். போராட்டம் நடத்தியவர்களை
அடித்து நொறுக்கி, எப்போதும் போல தன்னுடைய கைங்கரி
யத்தை இந்த அரசு செய்திருக்கிறது என்பதை வேதனையோடு
தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நெசவுத் தொழிலாளர்
களுக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி, பிள்ளைகளுக்குக் கல்வி
வசதி போன்றவைகளை செய்து தரவேண்டும். அமைச்சர்
அவர்கள் பதில் சொல்லும்போது இதை சொல்லவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்தத் துறை மிக வேகமாக வளரவேண்டும்
என்பதற்காக பெருந்தன்மையோடு நமது ஆட்சியாளர்கள் குழு
ஒன்றை, அட்வைசரி கமிட்டி ஒன்றைப் போட்டார்கள். இது
வரை அந்தக் குழு ஏதாவது ஆலோசனை கூறி இருக்கிறதா
என்று பார்த்தால், ஒன்றும் இல்லை. அதையும் நிச்சயமாக
இல்லை என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
கைத்தறித் துணிகளின் மேம்பாட்டிற்காக, விற்பனையைப்
பெருக்குவதற்காக, ஏற்றுமதி சீராக செய்வதற்காக, மற்றவர்
களின் எண்ணங்களை அறிந்து ஆலோசனைக் கூறுவதற்காகத்
தான், இந்தக் குழு, அதனுடைய தலைவர். ஆனால் இந்த
ஆலோசனையைக் கூறவேண்டியவர் அந்த கோ—ஆப்டெக்ஸ்
தலைமை அலுவலகத்திலே உட்கார்ந்து கொண்டு அதைக் கட்சி
அலுவலகமாக மாற்றி, அங்கே இருக்கின்ற டெலிபோனை
கட்சிப் பணிகளுக்காக உபயோகப்படுத்திக்கொண்டு இருக்கிறார்.



[1981 ஏப்ரல் 16]

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற
நேரத்தில் அந்த கோவாப்டெக்ஸ் சேர்மன் கட்சிப்பணிக்காக
டெலிபோன் உபயோகித்தார்கள் என்று குறிப்பிட்டார்கள்.
எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு அந்தக் குற்றச்சாட்டு
சொல்கிறார் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டெலிபோன்
உபயோகித்தார் என்று சொல்வதற்கு எப்படி ஆதாரம் காட்ட
முடியும்.

திரு. து. புருஷோத்தமன்: அது மட்டுமல்ல அவர் கோவாப்
டெக்ஸ் காரை தினமும் பயன்படுத்திக்கொள்கிறார். கோவாப்
டெக்ஸ் மூலம் பெட்ரோல் போட்டுக்கொள்கிறார். ஒரு டிரை
வரை நியமித்துக்கொண்டு இருக்கிறார். நாள்தோறும் டூர்
செல்வதாகச் சொல்லிக்கொண்டு டி. ஏ. வாங்கிக்கொள்கிறார்.
இப்படிப்பட்ட காரியங்களைத்தான் அவர்கள் செய்கிறார்களே
தவிர, அந்தத் துறையின் முன்னேற்றத்திற்காக அவர் எதையும்
செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு சங்கங்கள் நாட்டிலே ஏராளமாக இருக்கின்றன.
இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் இன்றைக்கு தேர்தல் நடத்தப்
பெறவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்தச் சங்கங்
களில் ஈடுபட்டு, அதன் காரணமாக பல கூட்டுறவுச் சங்கங்கள்
மூடப்பட்டு இருக்கின்றன. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால்,
வடாற்காடு மாவட்டத்தில் உள்ள குருராஜபேட்டையில் 8
சங்கங்கள் இருந்தன. அந்த 8 சங்கங்கள் பல ஆண்டுகாலமாக
நல்ல முறையில் இயங்கிவந்தன. அதில் ஆளும் கட்சிக்காரர்கள்
தலையிட்டதன் விளைவாக அத்தனை சங்கங்களும் மூடப்பட்டன.
நெசவாளர்களிடையே இதனால் ஒரு பதட்டநிலை ஏற்பட்டு
இருக்கிறது. அவர்கள் பேரில் எல்லாம் பல வழக்குகள்
தொடரப்பட்டு, இன்றையதினம் உயர்நீதி மன்றத்தில் வழக்கு
நடைபெறுகிறது. அந்த வழக்குகளை கவனிக்க ஒரு தனி
அதிகாரி—ஹேண்ட்லூம் ஆபீசர் கோர்ட்—நியமிக்கப்பட்டு
இருக்கிறார். இவைகள் எல்லாம் தேவைதானா என்பதைக்
கேட்கவிரும்புகிறேன். இப்படிப்பட்ட முறையில் அந்தத் துறை
உங்களால் நல்ல முறையில் இயங்கச் செய்ய முடியாவிட்டாலும்,
ஏற்கனவே நடந்து வந்தவைகளை சீராக இயங்கச் செய்யாத
நிலைமையும் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

கைத்தறி கண்காட்சி பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.
ஸ்டால்களை ஏலம் விட்டார்கள். ஏலம் விட்டதில் தனக்கு
வேண்டியவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று சொல்லியும்
கொடுக்காததன் காரணமாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்
அங்கேயுள்ள பைனான்ஸ் மேனேஜரை—நிதி நிர்வாகியை—மிகக்
கேவலமாக தொலைபேசியில் பேசியிருக்கிறார்கள். அவர் நம்முடைய

[திரு து. புருஷோத்தமன்] [1981 ஏப்ரல் 16

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடத்தில் கூட முறையிட்டு இருக்கிறார்கள். அந்த அளவிற்கு தனக்கு வேண்டியவர்களுக்கு சொல்லி கொடுக்கவில்லை என்பதற்காக வாய்க்கு வரக்கூடாத வார்த்தைகளை எல்லாம் சொல்லித் திட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை அந்தக் கைத்தறித் துறையில் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த 3 ஆண்டுகாலத்தில் அந்தக் கைத்தறித் துறையில் எந்தவிதமான வளர்ச்சியும் இல்லை. ஆளும் கட்சிக்காரர்கள் தலையிட்டால் அந்தக் கைத்தறித் துறை வளர, வாழப்போவது இல்லை என்பதை மட்டும் சூசகமாகத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

*திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை, கைத்தறி, கதர்—கிராமத் தொழில்கள் ஆகிய மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்கின்ற ஒரு வாய்ப்பினை அளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையிலே பலப்பல கட்டிடங்களை கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். நான் ஏற்கனவே சட்டமன்றத்திலே வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டதைப்போல, சிமெண்ட்டை பயன்படுத்தி செங்கல் வடிவத்தில் செய்யப்படுகின்ற கற்களை வைத்துக்கொண்டு கட்டிடங்களைக் கட்ட வேண்டுமா என்பதை அந்த அமைச்சகம் சிந்திக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். சிமெண்ட் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தாலே பல கட்டிடத் தொழிலாளர்கள் வேலை இழந்து கொண்டு இருக்கும் நிலையில், மண் செங்கல்லைப் பயன்படுத்தி கட்டுகின்ற இடத்தில் இந்த சிமெண்டால் செய்யப்படுகின்ற பிளாக்குகளைக் கொண்டு கட்டிடம் கட்டுவது தேவைதானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

மதுரை திருமலை நாயக்கர் மகாலை சற்று இடித்து அதை சீர் செய்யலாமா என்று பார்க்கிற நேரத்தில் அந்தக் கட்டிடத்தின் தன்மை வலுவாக இருக்கிறது என்பதை நாம் அறிந்தோம். அதிலே பயன்படுத்தியது சுண்ணாம்பு, பதனீர். அதை வைத்து அது கட்டப்பட்டது என்பது தான் வரலாறு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாலை 5.00]

எனவே, இப்படிப்பட்ட சுண்ணாம்பு போன்றவைகளை அதிகமாகப் பயன்படுத்தி, கிடைத்தற்கரிய சிமின்டை மிச்சப்படுத்தும் முயற்சியிலே அமைச்சகம் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடற்கரையை அழகுப்படுத்துவது பற்றிய குறிப்பு இங்கே இருக்கிறது. வரவேற்கக்கூடிய குறிப்பு; நல்ல முயற்சி. அதைப் போல் கடல் அரிப்பைத் தடுப்பதற்கான திட்டத்தைச் சொல்லி



981 ஏப்ரல் 16] [திரு. குமரி அனந்தன்]

பிருக்கிறார்கள். எனது தொகுதியாகிய திருவொற்றியூரிலே இருக்கிறவர்களும் சரி, இன்னும் கடலோரங்களிலே வாழுகின்ற மீனவர்களும் சரி, ஒவ்வொரு தடவையும் கடல் கொந்தளிப்பு ஏற்படும்போது எல்லாம் அவர்கள் வாழ்க்கையிலும் கொந்தளிப்பு ஏற்படுவதைப் பார்க்கிறோம். கவலைக்கிடமான வாழ்க்கையில் இருக்கிற அவர்களை கடல் அரிப்பிலிருந்து விடுவிக்க, கடலரிப்புத் திட்டத்தை இன்னும் அதிகப் பொருள் செலவில் நிறைவேற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடற்கரை ஓரங்களில் பலமாடி கட்டிடங்களை கட்டவேண்டியது அவசியமா என்று பார்க்க வேண்டும். கடல் காற்று மற்ற மக்களுக்கு போய்ச் சேராத அளவுக்கு சில செல்வந்தர்கள் பலமான, உயரமான சுவர்களை எழுப்பி, 10 மாடி, 8 மாடி கட்டிடங்களைக் கட்டுவதை தள்ளிவைப்பது நல்ல முடிவு அல்லவா என்பதை சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இந்த கடற்கரைகளை பராமரிப்பதிலே கூட உரிய கவனம் செலுத்தப்படவேண்டும். கடற்கரைகளில் பெரிய, பெரிய தலைவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் இருக்கிற இடத்தில் தனி கவனம் செலுத்த வேண்டுகிறேன். அது இந்த அமைச்சருடைய பார்வைக்கு வரவில்லை என்றாலும், அந்தத் தலைவர்களின் நினைவுச் சின்னங்கள் பல நேரங்களில் ஒளி இழந்து காட்சி தருகின்றன. அதேமாதிரி தியாகச்சுடர்' அரும்பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் நினைவுச் சின்னத்தில் போதுமான விளக்கு வசதி இல்லை என்பதை நான் கண்டிருக்கிறேன். பொதுப்பணித் துறை அந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தலைவருக்கு அமைக்கப்பட்ட நினைவுச் சின்னத்தை பராமரிப்பதில் போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி இன்று பெரும்பாலான மக்களுக்கு வாழ்வு அளிக்கின்ற ஒரு தொழில். விவசாயத்திற்கு அடுத்து பெருமளவில் மக்கள் செய்யும் தொழில் இந்த நெய்யும் தொழிலே. தன்னுடைய வாழ்க்கையில் இருக்கிற துன்பத்தை நீக்கி நெசவாளர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது இந்தத் தொழில்; அந்த மக்கள் தேங்கிக் கிடக்கின்ற துணியை வாங்கிக்கொள்ள மாட்டார்களா என்று ஏங்கிக்கிடக்கிறார்கள். அந்தத் தேக்கத்தினால் பல்வேறு கஷ்டங்களை அவர்கள் அனுபவிக்கிறார்கள். முன்னரே இங்கே சுட்டிக்காட்டப்பட்டதைப்போல சத்திரப்பட்டியிலே 8 சங்கங்களைச் சேர்ந்த 4000-க்கு மேற்பட்ட நெசவாளர்கள் 35 இலட்சத்திற்கு மேற்பட்ட துணியை மேலே அனுப்பி, மேலே அனுப்பிய துணிக்கு முழுவதும் பணம் வராமல், ஒரு பகுதி மட்டும் வந்து பாக்கி வராத காரணத்தால், இப்போது 35 இலட்சம் ரூபாய்க்கான துணி தேங்கிக் கிடக்கின்ற காரணத்தால் ஏங்கிக் கிடந்த மக்களின் மனக்குமுறல்தான் ஒரு பெரிய போராட்டமாக வெடித்தது அங்கே. இன்றுவரையிலும் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. அவர்களுடைய துயரைத் துடைத்திட இந்த அரசு காடிப்போடு

முன்வர வேண்டும். ஏனென்றால், கைத்தறித் தொழிலை நல்லமுறையில் வளர்க்க வேண்டுமென்ற திட்டம் இருப்பதால் சொல்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசும்போது உள்ளத்தில் இருக்கிற எண்ணத்தை வெளியிட்டார்கள். ஆனால், அந்தப் பொருட்காட்சியில் 20% அளிக்கும் தள்ளுபடி 'கோவாப்டெக்ஸ்' என்கின்ற மத்திய நிறுவனத்திற்கு மட்டுமே கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. பிரைமரி சொசைட்டிகளுக்கு, ஆரம்ப சங்கங்களுக்கு இந்த சலுகை இருந்தால் அங்கேயும் விற்பனை பெருகி, துணியின் தேக்கம் குறையும். ஒவ்வொரு சங்கத்திலும் 7,000, 5,000, 6,000 அளவு வாடகைக்கு அரங்கம் எடுத்தோர் அதைக் கட்ட முடியாமல் திணறுகிறார்கள். காரணம், அவர்களுக்கு இந்த சலுகை இல்லை என்பதை நான் நேரிலே பார்த்தேன். ஆகவே, இதை எல்லோருக்கும் கிடைக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை இந்த அமைச்சகம் சிந்திக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு நூற்பாலை பற்றி பேசப்பட்டிருக்கிறது. கூட்டுறவு நூற்பாலைகளிலே ஏன் இழப்பு ஏற்படுகிறது என்பதை பார்க்க வேண்டும். அதேநேரத்தில் ஒரு பத்திரிகைக் குறிப்பைப் பார்த்தேன். ஒரு தனியார் நூற்பாலை (ஸ்பின்னிங் மில்ஸ்) 2 கோடி ரூபாய் ஊதியம் ஈட்டி இருக்கிறது என்ற தகவலை பத்திரிகையில் பார்த்தேன். 2 கோடி ரூபாய் ஒரு தனியார் நூற்பாலை ஊதியம் ஈட்டியிருக்கும்போது கூட்டுறவுத் துறையில் இருக்கிற நூற்பாலைகளில் ஏன் இழப்பு ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நாசரேத் பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது. அதனுடைய பங்குதாரர்கள் அத்தனை பேர்களும் வெளிநாட்டிலிருந்து, இலங்கை, பர்மா, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். அவர்கள் தங்களுடைய சிறிய முதலைப் போட்டு பங்குதாரர்களாகி இருக்கிறார்கள். அங்கே 1,500 பேர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. மேலும் அந்த ஆலையின் கதிர் திறனைக் கூட்டினால் இன்னும் நூற்றுக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதால் நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பொருட்காட்சி நடத்துவதற்கு ஆண்டுதோறும் தற்காலிகமாக அரங்குகளை நிறுவி, இலட்சக்கணக்கான ரூபாயை செலவிடுவதற்குப் பதிலாக நிரந்தரமாக ஒரு பொருட்காட்சி அரங்கம் ஏற்படுத்தும் முயற்சி இருந்தால் நல்லது என்று கருதுகிறேன். ஏனென்றால், இந்த ஆண்டு மட்டும் 10 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு அதற்கு செலவிடப்பட்டிருக்கிறது.



அடுத்ததாக, கதரைப் பொருத்த மட்டில் காந்தி மகானுடைய கைராட்டையின் விளைவாக இன்றைக்கு நாடெங்கும் கதர்த் தொழில் பெருகியிருப்பதைப் பார்க்கிறோம்.

கதர் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுடைய வாழ்விலே முன்னேற்றம் காண்பதற்காகத் துடித்துக்கொண்டிருக்கின்ற நிலையிலே அவர்களுக்கு சில குறைபாடுகள் இருக்கின்றன. அவர்களுக்கு சில வசதிக் குறைவுகள் இருக்கின்றன. அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு பலப்பல அங்காடிகளை ஆங்காங்கே திறந்தாலும் கூட சில அங்காடிகளிலே ஒரே ஒருவர் தான் விற்பனையாளராக நியமிக்கப் படுகிறார். அப்படி ஒரே ஒருவர் விற்பனையாளராக நியமிக்கப்படுவதால், அவர் வெளியே போகிற நேரத்தில் பூட்டி விட்டுத்தான் போகிறார். அப்படி கடையை பூட்டிக்கொண்டு போகிற காரணத்தாலே அந்த நேரமாகப் பார்த்து சிலர் வரக் கூடும் அல்லவா? வணிகத்திற்கு என்றும், துணியை வாங்குவதற்கு என்றும். அவர்கள் ஏமாற்றத்தோடு திரும்பிப் போக வேண்டிய நிலை இருக்கின்றது. அல்லது வேறு துணியை எடுக்கின்ற நிலை இருக்கின்றது.

கதர் துணியிலே ஆர்வம் காட்டுவது என்பது நாம் ஊட்டி விட வேண்டிய ஒன்றாக இந்த நாட்டிலே இருப்பது கண்டு நாமெல்லாம் வேதனைப்படுவதற்குரிய ஒன்றாகவே இதைக் கருத வேண்டி இருக்கின்றது. ஆனாலும் அப்படிப்பட்ட முயற்சிகளிலே ஈடுபட்டிருப்பவர்கள் கூட கதரைத்தான் அணிவது என்று எங்களைப்போன்று இருப்பவர்களும் கூட சில நேரத்திலே வாங்குகிறோம், வாங்காமலும் முடியாது என்ற நிலையிலே வாங்காமல் இருக்கப்போவதில்லை என்ற நிலையிலே வாங்கினாலும் கூட விரைவிலே அது கிழிந்து போகின்றது என்று சொல்கின்ற ஒரு குறைபாடு அதற்கு உண்டு. கிழிந்து போவதற்குக் காரணம் கதர் நூலால் அல்ல. கிழிந்து போவதற்குக் காரணம் நீண்ட நெடுநாட்களுக்கு முன்னாலே கூட தயாரித்த துணிகளை கதர் அங்காடிகளிலே அப்படியே வைத்திருப்பதுதான். 6 மாதத்திற்கு ஒரு தடவை அல்லது ஒரு வருடத்திற்கு ஒரு தடவை விலை கூடிய உடனேயே அந்தப் பழைய துணிகளுக்கும் அதே விலை என்று நிர்ணயித்துக்கூட விற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பழைய துணிகளின் விலையினைக் கூட்டாமல் இந்தத் துணி இந்த அங்காடியிலே விற்கப்படவில்லை என்று சொன்னால் அதற்குப் பழைய துணி என்று பெயரிட்டு பல இடங்களிலே அவை விற்பனைக்கு வந்துவிடவேண்டும். அவற்றின் விற்பனை முடிந்து விட வேண்டும். சில குறுகிய காலத்திற்குள்ளாகவே, எப்படி மருந்துகளுக்கு எக்ஸ்பையரி டேட் போட்டுவிடுகிறார்களோ அதாவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேலே அந்த மருந்து விற்பனைக்குரியதல்ல என்று சொல்லிவிடுகிறார்களோ அதைப் போல் இந்தக் துணிகளையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு

மேலே மற்ற துணிகளுக்குச் சமமாக விற்பதற்குரிய தகுதியை இழந்து விடுகின்றது என்ற நிலையினைக் கொண்டு வருவோமே யானால் இந்தப் பழைய துணிகள் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றபோது அதை வாங்குகின்றவர்கள் குறைந்த விலைக்குத்தானே வாங்கினோம், எனவே கிழிந்துவிட்டது என்று அமைதிப்படுவோர்களே தவிர இல்லை என்றால் கதருக்கே மொத்தத்தில் கெட்டபெயர் வந்துவிடுமோ என்ற கவலையின் காரணத்தாலேதான், நான் இங்கே இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே மிக முக்கியமாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதற்காகத்தான் மற்றவைகளை எல்லாம் அப்படியே தொட்டுவிட்டு ஓடிக்கொண்டிருக்கிறேன். மிக முக்கியமான வேலைவாய்ப்பினைத் தருகின்ற ஒரு தொழில் இந்த மாண்பு மிகு அமைச்சரவர்களிடத்திலே இருக்கின்றது. பெரிய வேலை வாய்ப்பினைத் தருகின்ற பொருள் என்று பனைப்பொருளைத் தான் சொல்கிறேன். ஏன் என்றால் இந்தியாவிலே இருக்கின்ற பனைகளிலே மொத்தம் 6 கோடி பனைகளிலே தமிழ்நாட்டிலே மட்டும் 4 கோடி பனைகள் இருக்கின்றன. இந்த நான்கு கோடி பனைமரங்களிலும் இன்று நாம் பயன்படுத்துகின்ற பனை மரங்கள், அதாவது பனைப் பணியாளர்கள் நமக்கு கிடைக்காத காரணத்தாலே நாம் பயன்படுத்துவது வெறும் 60 இலட்சம்தான். இந்தியாவிலே இருக்கின்ற 6 கோடி பனை மரங்களில் 4 கோடி தமிழ்நாட்டிலே இருக்கின்றன என்றால் இந்த 4 கோடி பனைமரங்களிலும் நாம் பயன்படுத்துவது 60 இலட்சம்தான். இதிலே ஏறத்தாழ 1 கோடி பனைமரங்களைப் பொறுத்த வரையில் நாம் சென்று இட்டேற முடியாத அளவுக்கு காடுகளிலேயும் மலை மேடுகளிலேயும் இருக்கின்றன என்ற வகையிலே அவைகளைத் தள்ளிவிட்டாலும் கூட மீதம் இருக்கின்ற 3 கோடி பனைமரங்களையும் நாம் பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையில் இருப்பதை எண்ணிப்பார்த்தால் நிச்சயமாகப் பயன்படுத்த முடியும். அவற்றைப் பயன்படுத்துவதற்குரிய வழிவகையினைத்தான் நாம் காணவேண்டும். பனை ஏறுகின்ற தொழில் அதாவது, பனைப் பொருட்களை எடுக்கின்ற வல்லுநர்களாக வேண்டும் என்று சொல்லுகின்ற முயற்சி, வர வர குறைந்துகொண்டிருந்தாலும் கூட அதற்கு உயிர் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான், அந்தத் தொழில் வளரவேண்டும் என்பதற்காகத்தான் சில நல்ல முயற்சிகள் அண்மையிலே எடுக்கப்பட்டிருக்கின்றன. அண்மையிலே தர்மபுரி மாவட்டத்திற்கு நான் சுற்றுப்பயணம் சென்றிருந்த போது மத்தூரிலே இருக்கின்ற பனை ஏறும் பயிற்சி முகாமுக்குச் சென்று பார்த்தேன். ஏறத்தாழ 100 தொழிலாளர்கள் அந்தப் பயிற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தான் என்பது இல்லாமல் எல்லா சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் இதிலே ஈடுபட்டிருப்பது கண்டு மிகுந்த மகிழ்ச்சியாக



இருந்தது. மெத்த உள்ள நிறைவாக இருந்தது. 90 ரூபாய் போல அவர்களுக்கு ஊதியமாகக் கொடுக்கப்படுகின்றது. அவர்கள் காலையிலும், மாலையிலும் அந்தப் பனை ஏறுகின்ற பயிற்சினைப் பெறுகிறார்கள். ஒரு 100 பேருக்கு மட்டும்தான் நாம் அந்தப் பயிற்சியைக் கொடுக்க முடியுமா என்று நாம் சிந்திக்க வேண்டும். ஏன் என்றால் நாம் இன்னும் பயன்படுத்தாமல் இருக்கின்ற பனை மரங்களை அதாவது போக முடியாத இடங்கள் தவிர மற்ற இடங்களிலே இருக்கின்ற ஏறத்தாழ 2 கோடியே 40 இலட்சம் பனைமரங்கள் பயன்படுத்தினால் நிச்சயமாக நிறைய பேர்கள் பயிற்சிக்கு வருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இரண்டாவதாக இதிலே மிக முக்கியமான ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்னாலே பம்பாயிலே இருக்கின்ற காதி கமிஷன் பனை ஏறுவதற்கென்று எளிய முறையிலே ஒரு இயந்திரத்தை யாராவது கண்டுபிடிப்பார்களேயானால் ஒரு இலட்சம் ரூபாய் பரிசு அளிப்பதாக அறிவித்தது. பனை ஏறுவதற்கு உடலை வைத்து ஊர்ந்து ஊர்ந்து செல்வதற்கு பதிலாக உயரத்திலே கொண்டு போகின்ற உந்து சக்தியினைத் தருகின்ற ஒரு இயந்திரத்தை யாராவது கண்டுபிடிப்பார்களேயானால் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசாகக் கொடுக்கிறோம் என்று காதி கமிஷன் அறிவித்தது.

[மாலை 5-10]

அறிவித்து பல ஆண்டுகள் ஆகிவிட்டது. யாரும் இதிலே முயலவில்லை, முன்வரவில்லை. எனவே அந்த அறிவிப்பு இப்பொழுது செல்லுபடி ஆகுமா என்று கூட தெரியாத நிலைமை இருக்கிறது. எனவே நான் உங்களிடம் கேட்டுக் கொள்வதெல்லாம் 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் வகையில் உதவும் இந்த பனைமரங்களை எல்லாம் பயன்படுத்திக்கொண்டால், 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கலாம். 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பது என்பது சாதாரணமான காரியம் அல்ல. தமிழகத்தில் 10 இலட்சம் பேர்கள் வேலை வாய்ப்பு பெறுகிறார்கள் என்றால் நீங்கள் மிகப் பெரிய புரட்சியை செய்தவர்களாக கருதப் படுவீர்கள். அப்படி ஒரு இயந்திரத்தை பனைமரத்தின் மீது சுலபமாக ஏறும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தால், யார் வேண்டுமானாலும் இந்தத் தொழிலுக்கு வருவார்கள்.

நம்முடைய தமிழ்நாட்டில் எத்தனையோ தொழில்நுட்ப வல்லுநர்கள் எல்லாம் இருக்கிறார்கள். மிகப் பெரிய திறமை சாலிகள் எல்லாம் இருக்கிறார்கள். நீங்கள் அறிவியுங்கள். அப்படி ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்து தெரிவிப்பவர்களுக்கு 2 லட்சம் ரூபாய் அல்லது 2 லட்சம் ரூபாய் தருகிறோம் என்று

[திரு. குமரி அனந்தன்] [1981 ஏப்ரல் 16

அறிவியுங்கள். தமிழ்நாட்டிலுள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள் தங்கள் திறமையைப் பயன்படுத்தி முன்வருவார்கள். வெற்றியும் பெறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஏனென்றால் ஒரு மனிதன் கொண்டு வருகிற பதனீர் 70 லிட்டர் என்று வைத்துக்கொண்டால் அதிலிருந்து 10 கிலோவுக்கு மேல் கருப்புக்கட்டி கிடைக்கும். இன்றைய மார்க்கெட்டிலே அதனுடைய விலை கிலோவிற்கு 3 ரூபாய் 60 பைசா ஆக 36 ரூபாய் அளவில் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு ஒரு தனி மனிதனுக்கு ஊதியம் கிடைக்கும். 36 ரூபாய் ஒரு தனி மனிதனுக்கு ஒரு நாளைக்கு ஊதியம் கிடைக்க வாய்ப்பு இருக்குமேயானால், இது இவ்வளவு பெரிய திட்டம் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அரசாங்கத்தினுடைய சிந்தனையிலே நீண்டகாலமாக ஒன்று நின்று ஆடிக்கொண்டிருக்கிறது. ஆடிக்கொண்டிருக்கும் அந்த சிந்தனையை நிலை நிறுத்துவதற்காகத்தான் சொல்கிறேன் 100 பனை மரங்கள் கொண்ட ஒரு பகுதியை அங்கே இருக்கிற ஒரு பனைத்தொழிலாளிக்கு கொடுத்து விடவேண்டும். அதிலே இருக்கும் பொருள்களை வைத்துக் கொண்டு அவன் தொழிலை நடத்த வேண்டும் என்ற ஒரு திட்டத்தை அண்மையிலே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மார்த்தாண்டத்திலே பேசும்போது சொன்னார்கள், அப்படி ஒரு சிந்தனை இருக்கிறது என்று. அதை விரைவாக அமுலுக்குக் கொண்டு வாருங்கள் என்று கேட்கிறேன் பனைமரங்கள் ஒன்றும் நாட்டில் இல்லாமல் இல்லை. 4 கோடி பனைமரங்கள் இருந்து கொண்டிருக்கின்றன அப்படி ஒரு வசதி வாய்ப்பு இருக்கும் போது அதை நாம் நிச்சயமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இதைப்பற்றி சொல்கிறபோது சொன்னார்கள். பனைமரப் பொருள்களிலிருந்து வெள்ளை நிறம் கொண்ட சர்க்கரையை எடுக்கலாம். அந்த சர்க்கரையை எடுப்பதன் மூலம். இந்த நாட்டிலே ஒரு பனைத் தொழிலாளியின் வருமானம் அதிகமாகும் என்று சொன்னார்கள். அந்தப் பனை பொருள்களைத் தயாரிக்கும் இடங்களுக்குப் போய் பார்த்தேன். பனைமரத்திலிருந்து எடுக்கப்படும் அந்த வெள்ளைச் சர்க்கரை மிக நன்றாக இருக்கிறது. அது நன்றாக இருப்பது மாத்திரம் அல்ல, அந்த வெள்ளை சர்க்கரை உடல் சூட்டையும் தணிக்கும் ஒரு மருந்து பொருளாகவும் பயன்படுகிறது. இந்தப் பனை ஏறும் தொழில் மிகக் கடினமாக இருக்கிற காரணத்தால், அதிலிருந்து கிடைக்கும் பனைபொருள்களை நாம் எந்த அளவிற்கு அதிகமாக பயன்படுத்த முடியுமோ, அந்த அளவிற்குப் பயன்படுத்த வேண்டும்.



1981 ஏப்ரல் 16] [திரு. குமரி அனந்தன்]

சென்ற ஆண்டு இந்தப் பனைபொருள்கள் 43 லட்சம் ரூபாய்க்கு ஏற்றுமதி செய்தது போக, இந்த ஆண்டு 23 லட்சம் லட்சம் ரூபாய்க்குத்தான் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். கைத்திறன்கள் அதிகமாக அதிகமாக, ஏற்றுமதியும் அதிகரிப்பதற்கு பதிலாக குறைவதற்கு காரணம் என்ன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தப் பனை ஏறும் தொழிலாளிக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டது என்று சொன்னால், அரசு நஷ்ட ஈடாக பணம் தருகிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய அது சுலபமானதாக இல்லை. அந்தத் தொகையை பெறுவது மிகக் கடினமாக இருக்கிறது. ஆகவே, அதை தவிர்த்து, பனை ஏறும் தொழிலாளிக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால்' அந்த நஷ்ட ஈடு என்று சொல்லப்படுகிற இழப்பீட்டை உடனடியாக அவர்களுக்கு தரும் வகையில், அமைச்சர் அவர்கள் தயவுசெய்து முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு ஆபத்தான சூழ்நிலையும் இந்த பனைஏறும் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் யாரும் கோபித்துக் கொள்ள கூடாது. அதுதான் கள்ளுக்கடைகளை திறக்கும் ஆபத்து. அவ்வாறு கள்ளுக்கடைகளை திறப்பதன் மூலம் கருப்புக் கட்டியின் விலை அதிகமாகும் என்று கூட சிலர் சொல்கிறார்கள். ஆனால் அது தவறான சிந்தனை. ஏன் அது தவறான சிந்தனை என்று சொன்னால், 32,000 பெண்கள், பனைமரத்திலிருந்து இறக்கப்படும் அந்தப் பதநீரை காய்ச்சி கருப்புக்கட்டி செய்கிற தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் அந்த பதநீர் முழுவதும் கள்ளாக மாற்றப்படுமேயானால் அந்த வேலையில் ஈடுபட்டிருக்கும் தாய்குலம் வேலையை இழப்பார்கள். அவர்களுக்கு வேறு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். அது மாத்திரம் அல்ல, இருக்கிற வேலையும் போய், வீட்டிலே இருப்பவர்கள் கள்குடித்து வருகிற காரணத்தாலே, வேதனையும்தான் அந்த பெண்களுக்கு மிஞ்சும் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

பனைமரத்திலிருந்து கள் இறக்கினால், அவனுக்கு அதனால் அதிக ஊதியம் கிடைக்குமே என்று சொல்லக்கூடும். ஆனால் அதிலேயும் தான் கலப்படம் நடக்கிறது என்பதை நாம் பார்க்கிறோமே இன்றைக்கு மைசூரில் கள் என்ற பெயரில், வெள்ளை பூசணியை எடுத்து வந்து தண்ணீரிலே ஊறவைத்து, அது நுரையோடு பொங்கி வரும்போது, அதில் 2 லிட்டர் கள்ளையும் கொட்டி, ஈஸ்ட் மாத்திரை ஒன்றை போட்டு விட்டால், கள்ளாக மாறிவிடுகிறது என்று கூட சொல்கிறார்கள். ஆகவே இன்றைக்கு பனைமரங்களிலிருந்து பதநீரை இறக்குகிற தொழிலை விட, கள்ளை இறக்கிக் கொண்டு வந்து அதை

விற்பனை செய்தால், அதிக விலையில் விற்பனை செய்து, அதிக தொகை கிடைக்கும் என்று கற்பனை செய்து கொண்டிருப்பார் களேயானால். அந்தக் கற்பனை தவறான கற்பனையாக போய் விடும்.

அந்த கற்பனை பொய்த்து போய் விடும், எனவே கள் இறக்குவதால் இந்தப் பனைப் பொருள்களில் இருந்து வருகிற ஊதியம் குறைந்துவிட வழி இருக்கிறது. எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வது 'என்னவெனில், இவ்வளவு கடினமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிற இந்தத் தொழிலை, எந்தெந்த வகையில் முன்னேற்றலாம் என்பதை சிந்திக்கவேண்டும். வெளிநாடுகளுக்கு கூட ஏற்றுமதி செய்கிற முயற்சி இப்போது இருந்து கொண்டிருப்பது குறித்து பாராட்டுகிறேன். நுங்கை எடுத்து டின்களில் போட்டு canned நுங்காக வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான முயற்சியில் ''ஈடுபட்டிருக்கிறீர்கள். மகிழ்ச்சி. அதேபோல் பதநீரை கொஞ்சம் சூடு செய்து கூழ் பதனிராக வெளிநாடுகளுக்கு: அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விற்பனை செய்வதில் அரசு ஈடுபட்டிருக்கிறது கண்டு நன்றி. இப்படிப் பட்ட முயற்சிகளில் மேலும் மேலும் ஈடுபட்டு அதே நேரத்தில் நான் ஏற்கனவே கூறியபடி, இயந்திரம் ஒன்றை கண்டு பிடிப்பதற்கு ஊக்கம் கொடுத்து, பத்து லட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்து கிராமப்புறங்களில் இருந்து கொண்டிருக்கிற பனைமரத்தால் வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொருளாதார நிபுணர் திரு. ஜே. ஸி. குமரப்பா அவர்கள் சொல்லியிருக்கிற ஒரு கருத்தை சொல்லிவிட்டு எனது உரையை நிறைவு செய்ய விருக்கிறேன். விவசாயிகள் பயன் படுத்தாத இடங்களில்தான் பனை மரங்கள் இருக்கின்றன. வேளாண்மைக்குப் பயன்படுத்தாத சாதாரண இடங்களில்தான் பனை மரங்கள் நின்று கொண்டிருக்கின்றன. அந்தப் பனைமரங்களிலிருந்து எடுக்கிற இனிப்புப் பொருளை சர்க்கரையாக பயன் படுத்துவதற்குப் பதிலாக வயல்வெளிகளாக இருக்கிற இடங்களை கரும்புத் தோட்டங்களாக மாற்றுவது தேசத்திற்கு செய்கிற பாவம் என்று சொன்னார்கள்.

ஆகவே வேளாண்மைக்குப் பயன்படுத்த வேண்டியஇடத்தில் கரும்பு பயிர் செய்வது கரும்பு போடுவதற்காகப் பயன்படுத்துவது என்பது ஒரு பாவச்செயல் என்று சொல்லக்கூடிய நிலைமையில் பயன்படாத இடங்களில் நிற்கிற பனைமரங்கள் நாம் பயன் படுத்தினால் இது தேவைபடாது என்ற கருத்தை திரு. ஜே. குமரப்பா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் மனதில் கொண்டு இந்தத் தொழிலுக்கு ஊக்கம் கொடுத்து கைத்தறி கதர், பனைப்பொருள்களுக்கு



ஊக்கம் கொடுத்து தேங்கியிருக்கும் தொழில்இல்லாத தன்மையை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவற்றைத் துடைப்பதற்கு நல்லதொரு வழி காணவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொண்டு என் உரையை நான் நிறைவு செய்கிறேன். வணக்கம்.

## 2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### (இ) உறுப்பினர் திரு. வி. இராஜசேகரன் விடுதலை செய்யப் பெற்றது.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை நகர போலீஸ் கமிஷனரிடமிருந்து இன்று மாலை 5-00 மணிக்கு கீழ்கண்ட செய்தி வரப்பெற்றது என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''Thiru V. Rajasegaran, M.L.A. referred to in my earlier letter cited has been realsed at 16-50 hours to day 16-4-1981 pending further invesitgation in the case referred to''

## 5. வரவு செலவுத் திட்டம் 1981-82வாக்கெடுப்பு-தொடர்ச்சி

திரு. ப. வெங்கட சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற மானியக் கோரிக்கைமீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு முதலில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக இருக்கும் நிலையில் உள்ள இந்த நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் கிட்டத்தட்ட 14 இலட்சம் தொழிலாளர்கள் இந்தத் தொழிலில் இன்றைய தினம் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த 14 லட்சம் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்கக் கூடிய இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்கிறேன். குறிப்பாக நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கவும் அவர்களுக்கு நிரந்தரமான வருமானம் கொடுப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். 67% கைத்தறிகளை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த முயற்சியை நான் வரவேற்கிறேன்: அதே நேரத்தில் உற்பத்தியாகிற சரக்குகளை நியாயமான முறையில் விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்கும்படி நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அரசாங்கத்திலிருந்து பங்குத் தொகை அதிகமான அளவிற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வழிவகை செய்ய வேண்டும்.

மேலும் எட்டு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் 5 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்யப்படுகிற சரக்குகள் தேங்கிக் கிடக்காமல் அவற்றை விற்பனை செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டினையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 5.20]

கைத்தறி தொழிலைப் பொறுத்தவரை தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை இந்த அரசு கொள்கையிலே கூறியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதிலே குறிப்பாக வடிவமைப்பு நிலையம் போன்றவற்றை அமைத்து அதன் மூலமாக மக்களுடைய விருப்பு, வெறுப்புகளை ஆராய்ந்து உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் விற்பனை ஆவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதேபோல வடிவமைப்பு நிலையத்தை காஞ்சிபுரத்திலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கைத்தறி தொழில்களுக்குத் தேவையான பருத்தி போன்ற நூல்களை 20-ம் நம்பர் முதல் 40-ம் நம்பர் வரையில் குறைந்த விலையில் கிடைப்பதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகளை வரவேற்கிறேன். அதே நேரத்தில் இதுபோன்ற ஒரு நிலையை 60-ம் நம்பர் 80-ம் நம்பர் நூல்களும் கிடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல்கள் அனைத்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்ல முறையில் குறைந்த விலையில் கிடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல்கள் வெளி மார்க்கெட்டிலே விற்பதற்கான ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதை மாற்றி அதிலே உற்பத்தியாகிற எல்லா நூல்களையும் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய கச்சா பட்டு, சரிகை போன்ற கொள்முதல் குழுவை நமது அரசு அமைத்திருக்கிறது. இக்குழு நெசவாளிகளுக்கு பலனளிக்கும் வகையில் பல காலமாக சரியாக செயல்படமுடியாத சூழ்நிலை இருப்பதாக நெசவாளர்கள் கருதுகிறார்கள். அந்த குறைபாட்டை எந்த முறையில் மாற்றியமைத்தால் நெசவாளிகளுக்கு பயன்படும் என்பதை இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இதற்கு முன்பு எல்லாம் இரசாயன பொருள்கள் கோ ஆப்டெக்ஸ் மூலம் நெசவாளிகளுக்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு இருந்தது. ஆனால் தற்போது அந்த முறை நடைமுறையில் இல்லை. அதன் காரணமாக வெளி மார்க்கெட்டில் சாயப் பொருள்களை வாங்குவதன் காரணமாக அந்த உற்பத்தியாளர்களுடைய சரக்குகளின் விலை அதிகமாகக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த சூழ்நிலையை மாற்றி நியாயமான விலையில் சாயப் பொருள்கள் கிடைப்பதற்கு ஏற்பாட்டை இந்த அரசு கோ ஆப்டெக்ஸ் மூலமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செங்கல்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரத்தில் தான் அதிகமான கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அந்த பகுதியிலே இதற்கான ஒரு இரசாயன தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து இந்த அரசு நல்ல பல திட்டங்களை நெசவாளர்களுக்கு செய்திருக்கிறது. அதிலும் குறிப்பாக சேமிப்பு, மற்றும் பாதுகாப்பு திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்தியிருக்கிறது. ஆனாலும் அந்த திட்டத்தினுடைய விதிகளிலே ஒருசில குறைபாடுகள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக திட்ட விதி 23-ன் கீழ் அரசு வழங்கும் தொகையை ஒரு உறுப்பினர் சங்கத்திலிருந்து விலக்கப்பட்டாலும், 5 ஆண்டுகளுக்குள் அவரே விலகிக்கொண்டாலும் முழுவதுமாக வட்டியுடன் பிடித்தம் செய்யப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் ஒரு உறுப்பினர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டு விலகினால் திட்டத்தொகை வாபஸ் செய்யும் முறை விதியிலே வரையறுக்கப்படவில்லை. இதற்கான மாற்றங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிக்கன சேமிப்பு திட்டம் என்று ஆரம்பிக்கப்பட்ட அந்த திட்டம் பின்னால் குருப் இன்ஷூரன்ஸ் திட்டத்திலே சேர்க்கப்பட்ட போது ஏற்கனவே 55 வயதாகிவிட்டவர்கள் அந்த திட்டத்தின் பயன் பெற முடியாமல் சூழ்நிலை இருக்கிறது. அதனால் அந்த உறுப்பினர்கள் செலுத்தி வந்த தொகைகளை முழுவதுமாக வாபஸ் வழங்கப்படவில்லை என்பதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன், இதை கவனமாக ஆராய்ந்து, இருக்கிற குறைபாடுகளை அரசு நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த குருப் இன்ஷூரன்ஸ திட்டத்தின் கீழ் தற்போது 500 ரூபாயிலிருந்து மூவாயிரம் ரூபாயாக ஒரு உறுப்பினர் இறந்து விட்டால் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார்கள். இந்த மூவாயிரம் என்று உயர்த்திருப்பதை வரவேற்கிற அதே நேரத்தில், இது போதுமானதாக இல்லை. குறைந்த பட்சம் 5,000 ரூபாய் வழங்க வேண்டுமென்று நீண்ட நெடு நாட்களாக கோரி வருகிறார்கள். இந்த கோரிக்கைகளை ஏற்று அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இந்த துறை சிறப்பாக இயங்க சில கருத்துக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரலாமென்று கருதுகிறேன். காஞ்சிபுரம், திருச்சி போன்ற பகுதிகளிலே உதவி இயக்குநர்கள். மூன்று மாவட்டங்கள், நான்கு மாவட்டங்கள் என்று பார்க்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. காஞ்சிபுரம் உதவி இயக்குநர் கிட்டத்தட்ட 210 கூட்டுறவுச் சங்கங்களுக்கு, மூன்று மாவட்டங்களில் கண்காணிக்க வேண்டியவராக இருக்கிறார். இது நடைமுறையில் சாத்திய மில்லாது இருக்கிறது. எனவே காஞ்சிபுரம் உதவி இயக்குநர், திருச்சி உதவி இயக்குநர் ஆகியவர்களை இரண்டு மூன்றாக பிரித்து அந்த நிர்வாகம் நல்லமுறையிலே செயல்பட இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கூட்டுறவுத் துறையிலே ரீஜினல் ஜாயிண்ட் டைரக்டர் (Regional Joint Director) என்று இருப்பதைப் போல் ஒருவரை போட்டு, Regional Director Office என்று ஒவ்வொரு பகுதியாக பிரித்து, இந்த ரீஜினல் டைரக்டர்கள் இந்த கூட்டுறவு கைத்தறித் துறையை கண்காணிப்பதற்கு ஏற்பாடுகளை நம்முடைய அமைச்சர் அவர்கள் செய்து கொடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு இருப்பதைப்போல் மாவட்டங்கள் தோறும் நெசவாளர் கூட்டுறவு வங்கிகளை அமைத்து அதன் மூலமாக நெசவாளர்களுக்கு முறையாக கூடுதல் நிதியுதவி கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். நெசவாளர்கள் வீட்டு வசதி திட்டத்தை நம்முடைய அரசு சிறப்பாக செய்து வருகிறது, அதிலே ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படு கிறது. ஆரம்பத்திலே அந்த மானியத் தொகையை வழங்கு வதற்கும், முடிந்தால் அந்தத் தொகையை 2 ஆயிரமாக உயர்த்தவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன் நெசவாளர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு உதவுவது போல்,அவர்களுடைய வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கும் ஏதேனும் ஒரு திட்டத்தை வரைந்து அந்த நெசவாளர்கள் பயனடைய வழிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் கோஆப்டெக்ஸ் எக்ஸிபிஷன் பற்றிக் கூறினார்கள். அந்தக் கடைகளை ஏலத்திலே விடுவதில்லை ஒவ்வொரு கடைக்கும் எவ்வளவு ரூபாய் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பார்த்து நிர்ணயம் செய்கிறார்கள். ஆகவே அவர்கள் கூறியது போல் ஏலத்தில் விடப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். காஞ்சிபுரம் அதிகமாக நெசவாளர்கள் வாழும் பகுதியாக இருப்பதால், அங்கே ஒரு வடிவமைப்பு



நிலையம் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பவர்லூம்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் இருக் கின்ற, பவர்லூம்களை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ அதன்மூலமாக நெசவாளர்கள் வாழ்வு வளம்பெற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். தியாகராசன்: மரியாதைக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பொதுப்பணித்துறை கட்டட கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலே மிகச் சிறப்பாக நாட்டை அழகுபடுத்துவதிலும் கட்டடங்களைக் கட்டுவதிலும் பொதுப்பணித் துறை தான் சிறந்தது என்பதை நாடறியும் இந்தப்பொதுப்பணித் துறையைப்பற்றி மரியாதைக்குரிய ராஜாஜி அவர்கள் 1957 ஆம் ஆண்டிலே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர்கள் சொல்கிறபோது ஒரு மாநில அரசுக்கு நேரடியாக விரோதிகள் என்று இருப்பவை ஒன்று. பொதுப்பணித் துறை இரண்டு கம்யூனிஸ்ட்டுகள் என்று சொன்னார்கள். இந்தப் பொதுப்பணித் துறை கட்டடப் பிரிவிலே ஒரு நல்ல பெயர் எடுக்கவேண்டுமென்றால் அது நடக்க முடியாத ஒன்று என்பது பொதுப்பணித் துறையில் தான். திரு. குமரி அனந்தன் எடுத்துக் கூறியதைப்போல நீண்டகாலத்திற்கு முன்னாலே சுண்ணாம்பிலே கட்டப்பட்ட கட்டடங்களை பாறை கொண்டு இடித்தாலும் அந்தக் கட்டடங்கள் அசைவதில்லை. அப்போதிருந்த பெரியவர்கள் சிறாக செய்தார்கள். 100 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே கட்டப்பட்ட அணைகள் கட்டடங்கள் எல்லாம் இன்னும் சிறப்பாக இருக்கின்றன. சுதந்திரம் அடைந்த பிறகு நாட்டிலே கட்டப்பட்ட கட்டடங்கள் அணைகள் அத்தனையும் எடுத்துக்கொண்டால் உதாரணத்திற்கு புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியை சொல்ல வேண்டு மானால் அந்தக் கட்டடம் 7 ஆண்டுகளுக்கு முன்னாலே தான் கட்டப்பட்டது, இப்பொது இடிந்து விழுந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணமே பொதுப்பணித் துறைதான். பொதுப்பணித் துறையாலே தான் மாநில அரசுக்கே பொருளாதார நட்டம் ஏற்படுகிறது. வீராணம் திட்டத்தினால் தமிழகத்திற்கு பல கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டது, காரணம் பொதுப்பணித் துறை எஸ்டிமேட் போடுகிறவர்கள் தவறு தான். அந்தத் திட்டம் சரியாக இல்லை என்று சொன்னாலும் அந்தப் பொறுப்பும் பொதுப்பணித் துறைக்குத்தான் வருகிறது. அதைத்தான் இராஜாஜி அவர்கள் திட்டவட்டமாகச் சொன்னார்கள்.

(மாலை 5.30)

பாம்பன் பாலத்தை எடுத்துக்கொண்டால், அந்த வேலை தனியாரிடம் விட்டுச் செய்யப்படுவதால் அது சரியான முறையில் கட்டி முடிக்கப்படவில்லை. பல லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்திலே இருப்பதாக நான் அறிகிறேன்.

கட்டிடப்பிரிவில் தனியாரிடம் விடப்படும் எத்தனையோ வேலைகளைப் பொறுத்தவரையில் எந்தவொரு வேலையும் குறிப்பிட்ட காலத்தில், திட்டமிட்டபடி, குறிப்பிட்ட செலவிலே முடிக்கப்படுவதில்லை. அதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், தனியார் ஏதோ ஆதாயத்தைக் கருதி, சிமெண்டையும் மற்றும் விலையுயர்ந்த பொருட்களான கம்பிகள் ஆகியவற்றை மிச்சப்படுத்துவதைக் கருத்தில்கொண்டு வேலைகளைச் செய்தால் தரமான கட்டிடங்களை நல்லமுறையில் கட்டுவது கிடையாது. அதிகாரிகளைக் கையில் வைத்துக்கொண்டு, கட்டிடப்பணிகளைச் சீரும் சிறப்புமாகச் செய்வதில்லை. அதில் கவனம் செலுத்துவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். விருத்தாசலம் பகுதியிலே பி.டபிள்யூ.டி. கட்டிடம் ஒன்று கட்டப்பட்டது, அந்தக் கட்டிடம் கட்டப்பட்டு குறைந்தது 35 ஆண்டுகள்தான் இருக்கும். ஆனால் அந்தக் கட்டிடத்தைப் பார்த்தால் சாதாரணமாக 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம் போல இருக்கும். ஆனால் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட விருத்தாசலம் பகுதியில் உள்ள மாமாத்தூர் அணை 22,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த அணையை பார்த்தால் புத்தம் புதிதாக கட்டப்பட்டது போல் இருக்கும். 100 ஆண்டுக்காலமாக அது சீரும் சிறப்புமாக இருக்கிறது.

இப்பொழுது இருந்த அரசாங்கத்திலும், முன்பிருந்த அரசாங்கத்திலும் பல வாரியங்கள் போடப்பட்டிருக்கின்றன. அதைப்போல பொதுப்பணித் துறை கட்டிடப் பிரிவுக்காகத் தனியாக வாரியம் ஒன்றை அமைத்து, அதன்மூலம் கட்டிடத்தை கட்டினால் தாமான கட்டிடமாக, உயர்வான கட்டிடமாக இருக்கும். பல ஆண்டுக்காலம் நீடித்து இருக்கக் கூடிய வாய்ப்பும் இருக்கும். அப்படி ஏதாவது கஷ்டங்கள், பாதகங்கள் ஏற்பட்டாலும் அரசு உத்தரவாதம் அளிக்க முடியும்; அதைப் பாதுகாக்கும் பொறியாளர்கள் அதற்கு உத்தரவாதம் அளிக்க முடியும். எனவே, தனியாரிடத்தில் ஏலம் விடுவதன் முலமோ அல்லது டெண்டர் கொடுப்பதன் முலமோ கட்டுவதைவிட அரசே வாரியங்களை ஏற்படுத்தி அதன் முலம் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் உங்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

விருத்தாசலத்திலே சாதாரணமாக எந்தவொரு அரசுத்தரப்பு வேலைகளும் நடப்பதில்லை, அதற்குக் காரணம் என்னவென்று சொல்கிறேன். இங்கே பேசிய அருமை நண்பர்கள், கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும் ஆளுங்கட்சியைச் சார்ந்த நண்பர்களும் மத்திய சர்க்காரைப் பல்வேறாகக் குறைகூறி செய்யவில்லை என்று அடிக்கடி பேசுவதை நாம் கேட்கிறோம், பார்க்கிறோம். எந்தந்த அளவிற்குப் பேச



வேண்டுமோ அந்தந்த அளவிற்குப் பேசுகிறார்கள். இங்கே உறுப்பினர் என்ற முறையில் எனக்குப் பேசுவவற்கு உரிமை இருப்பதைப்போன்று, பாராளுமன்றத்திலே இருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்கும், இங்கே ஆளுங்கட்சியாக இருக்கின்ற கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் அங்கே பேசுவதற்கு உரிமை உண்டு. ஆனால் இவர்கள் கூறும்படியான இந்த மாநிலம் புறக்கணிக்கப்பட்டது என்று சொல்ல வேண்டுமானாலும், அல்லது வேண்டிய உரிமைகள் கொடுக்கப்படவில்லை என்று கருதினாலும் அதற்காகக் குரல் எழுப்ப வேண்டிய இடம் பாராளுமன்றம் ஆகும். ஆனால் அருமை கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் எப்பொழுது பார்த்தாலும் மத்திய சர்க்காரைப் பற்றி இங்கே பேசுகிறார்கள், எந்த இடத்திலே பேச வேண்டுமோ அந்த இடத்திலே பேசினால் அதை நான் வரவேற்பேன். தமிழக அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நிதிகள் மற்றவைகள் எல்லாமே புறக்கணிக்கப்படுகிறது, புறக்கணிக்கப்படுகிறது என்று இங்கே பேசுகிறார்கள்.

ஆனால் அதே நேரத்திலே ஒன்றைச் சொல்கிறேன்; இந்த அரசுக்குச் சொல்கிறேன். என்னுடைய பகுதியிலே அல்லது எதிர்க்கட்சி எம். எல். ஏ. பகுதிகள் எவ்வளவு தூரம் புறக்கணிக்கப்படுகிறது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அமைச்சர்கள் அந்தத் தொகுதிக்கு வருவதில்லை; அதிகாரிகள் வருவதில்லை. அந்தப் பகுதியிலே அரசால் நடத்தப்படும் எல்லா விதமான வேலையும் தடைப்பட்டு நிற்கிறது; நடப்பதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டிடங்கள் என்று எடுத்துக்கொண்டால், விருத்தாசலம் பகுதியிலே தென்னார்க்காடு மாவட்டம் முழுவதைப்பற்றியும் நான் சொல்லவில்லை, விருத்தாசலம் பகுதியிலே முன்சீப் கோர்ட் தனியார் கட்டிடத்தில் நடக்கிறது; மாணவர் விடுதிகள் தனியார் கட்டிடத்திலே வாடகைக்கு நடந்து கொண்டிருக்கிறது; அதைப்போலவே அங்கேயிருக்கிற பள்ளிகள் வாடகைக் கட்டிடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன; நடுநிலைப்பள்ளிகள் மரத்தடியில் நடந்து கொண்டிருக்கின்றது. இதெல்லாம் அரசுக்குத் தெரியுமா? இவ்வாறு நடப்பது அந்தத் தொகுதி புறக்கணிக்கப்படுகிறது என்பதற்கு அர்த்தம் இல்லையா? நீங்கள் மத்திய சர்க்காரை குறை சொல்கிறீர்களே எங்கள் தொகுதி எவ்வளவு தூரம் புறக்கணிக்கப்படுகிறது என்பதை எடுத்துச் சொல்வதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன்.

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சொல்கிறார்கள், மத்திய அரசுக்குக் காங்கிரஸ்காரர்கள் சொல்வதுதானே, அங்கேயிருப்பவர்கள் சொல்வதுதானே, என்று. நான் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குச் சொல்வதெல்லாம், நீங்களும் உங்கள் அரசுக்கு எடுத்துச் சொல்லுங்கள், எதிர்க்கட்சி எம். எல். ஏ-க்களுக்கு அல்லது எதிர்க்கட்சிக்காரர்கள் தொகுதிகளுக்குக் குறை இன்றி

நிறைவு செய்ய வேண்டுமென்று, ஆளுங்கட்சி நண்பர்களையும், மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு தடவையும் எதற்கும் இந்த அரசைக் கண்டித்துக் கேட்க வேண்டிய * * * கம்யூனிஸ்டுகள், எந்த நேரத்திலும் எதை எடுத்துக் கொண்டாலும், மத்திய அரசு, மத்திய அரசு என்று இங்கே பேசுவது, .. ... ..

திரு. சோ. அழகர்சாமி: பாயிண்ட் ஆஃப் ஆர்டர், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது காங்கிரஸ் சாதனையை, முழுவதும் வரிசையாக சொல்லலாம். காங்கிரஸ எவ்வளவு பெரிய சாதனை செய்திருக்கிறது? விலைகள் எவ்வளவு குறைவாக இருக்கின்றன? மக்களுக்கு எவ்வளவு நன்மை கிட்டி இருக்கிறது? கம்யூனிஸ்ட் கட்சி பாராளுமன்றத்திலே பேசவேண்டுமென்று சொல்லட்டும். அங்கும் பேசுகிறோம். பாராளுமன்றம் பிற மாநிலங்களை மட்டும் ஆளக்கூடிய மன்றம் அல்ல. ஆகவே, பாராளுமன்றத்தின் ஆட்சியின்கீழ் உள்ள, அல்லது, மத்திய சர்க்காருடைய ஆட்சியின் கீழ் உள்ள எல்லா மக்களும் எவ்வளவு பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள்! அதற்குக் காரணம் என்ன தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய உதவியும், கிடைக்கவில்லை, நிலக்கரி கொடுக்க வேண்டியதைக் கொடுப்பது கிடையாது, மின்சாரத் திட்டம் கொடுப்பது கிடையாது. அது மட்டுமல்ல, மற்ற கட்சிகள் ஆளக்கூடிய கேரளா, திரிபுரா, மேற்கு வங்காளம், தமிழ்நாடு போன்ற மாநிலங்களை மத்திய அரசு எப்படி நடத்துகிறது என்பதை பற்றியெல்லாம் சட்டமன்றத்திலே இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்கள் இங்குதான் பேசவேண்டும், மத்திய அரசு எப்படி இருக்கிறது? மாநிலத்தினுடைய உரிமைகளிலே அது தலையிடுவது மட்டுமல்ல, மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை வழங்காமல் இருப்பதைக் கண்டித்து நாங்கள் பேச வேண்டிய இடம் சட்டமன்றம் தான். ஆகவே, சட்ட மன்றத்திலே இருப்பவர்கள் சட்ட மன்றத்திலே பேசுகிறோம். பாராளுமன்றத்திலே இருப்பவர்கள் பாராளுமன்றத்திலும் பேசுவார்கள். நாங்கள் அங்கு பேச முடியாது. ஆகவே இங்குதான் பேசவேண்டும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு** என்று சொன்னதை அவர் வாபஸ் வாங்க வேண்டும்,

திரு. ஆர். தியாகராசன்: அவர் பேசுவதற்கு நான் பதில் சொல்ல வேண்டும் வங்காளத்திலே.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படி எல்லாம் பேசக்கூடாது. * * * என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

திரு ஆர். தியாகராசன்: வங்காளத்திலே உணவு தானியத்திலே தன்னிறைவு பெற்றிருக்கிறார்கள். அல்லது கேரளத்திலே..

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுடைய நேரம் முடிந்து விட்டது. கைத்தறி, கதரைப்பற்றி பேசுவதாக இருந்தால் இன்னமும் 2 நிமிடங்கள் தருகிறேன். இல்லையென்றால் உட்காருங்கள்.

[மாலை 5.40]

திரு. ஆர். தியாகராசன்: அவர்கள் அந்த அணைகளைக் கட்டும்போது கீழே உள்ள ஆயக்கட்டுதாரர்களுக்கு, விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாதவண்ணம் கட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது)

துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் அந்த அணையைக் கட்டவேண்டும் என்று இந்த அரசுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, இங்கே என்னுடைய பகுதியிலே சிறு சிறு ஓடைகள், ஏரிகள், போன்றவைகள் இருக்கின்றன. அதில் எந்தவிதமான கல்வெர்ட்களும் கட்டப்படவில்லை.

இங்கே கைத்தறியைப் பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு கைத்தறித் துணிக்கு தள்ளுபடி என்ற வகையிலே கோ–ஆப்டெக்சுக்கு தள்ளுபடி கொடுக்கிறார்கள். அதே நேரத்தில் கதர் துணிகளுக்கு வருடம் பூராவும் ஒரு குறிப்பிட்ட தள்ளுபடி செய்தால் இந்தக் கதரை உற்பத்தி செய்கின்றவர்களும், வாங்குபவர்களும் நல்லதொரு வாய்ப்பினைப் பெறுவார்கள் என்பதை சொல்லிக் கொள்கிறேன். நமது மதிப்பிற்குரிய குமரி அனந்தன் அவர்கள் சொன்னதைப் போல இந்த கதர் துணிக்கு வருடாவருடம் ஒரு குறிப்பிட்ட காலங்களில் தள்ளுபடி கொடுப்பதை விட, வருடம் பூராவும் கொடுத்தால் அந்த கதர்த்துணியை நெய்யக்கூடியவர்கள், முக்கியமாக கிராமவாசிகள், கிராமத்திலே இருக்கக்கூடிய நெசவாளக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தான் அதிகமாக இந்த கதர்த் துணியை உற்பத்தி செய்கின்றார்கள். அவர்களுடைய நலனிலே அக்கறை கொண்டு, அந்தக் கதராடைக்கு அரசு மானியமாக கொடுத்து, தள்ளுபடியையும் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விருத்தாசலத்திலே உள்ள மருத்துவமனையில் போகும் வழியிலேயே கக்கூசைக் கட்டியிருக்கிறார்கள். அதனாலே அந்த மருத்துவமனையின் உள்ளே போகவே முடியாத நிலை இருக்கின்றது. இனிமேல் கட்டுகின்ற கட்டடங்களில் லெட்ரீன் தனியாக இருக்கும்படி கட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பேக்வேர்டு கிளாஸ் ஆஸ்டல் ஒன்று வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே இருந்த ஆஸ்டல் சத்திரத்திலே இருந்தது. அந்த சத்திரமும் இடிந்து விழுந்து விட்டது. மேலும் மாணவர்களுக்கும் விடுதி இல்லை. கல்லூரிக்கும் விடுதி இல்லை. நடுநிலை பள்ளிகளுக்குக் கட்டடம் இல்லை. பெரும்பாலான பள்ளிகள் மரத்தடியிலே நடக்கின்றன என்பது அரசுக்கும் தெரியும் என்று நினைக்கின்றேன். சில பள்ளிகள் வாடகைக் கட்டடங்களில் நடக்கின்றன. எனவே அந்தப் பகுதியில் நடுநிலைப் பள்ளிகளுக்கு, கட்டடம் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாணவர்களுக்குத் தங்கும் விடுதி கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த வருடத் திட்டத்திலே அந்தப் பகுதியிலே எந்த விதமான கட்டடமும் கட்டப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். கடந்த 2, 3 ஆண்டுகளாகவே அங்கே கட்டிட வேலைகள் நடக்கவில்லை, அங்கே பல கட்டடங்கள் தேவைப்பட்டாலும், கூட, அரசு எந்தவிதமான கட்டடமும் கட்டவில்லை. இனி வரும் ஆண்டுகளிலாவது அந்தக் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்க பெற்றது)

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் அவர்களே, கைத்தறித் துறை மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

இன்றைக்கு வேளாண்மைக்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழில் தமிழகம் பூராவும் பல லட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய வாழ்வில் பின்னிப் பிணைந்து இருக்கிறது என்பதையும், தமிழக அரசு அதற்காகப் பல்வேறு வகைகளில் அந்தத் தொழிலுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிப்பதற்காக வசதிகளைச் செய்து கொண்டு வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக தனியார் ஆதிக்கத்தில் கைத்தறித் தொழில் போகக்கூடாது என்பதற்காக கூட்டுறவு முறையில் அந்தத் தொழில் வளரவேண்டும் என்பதற்காக இந்த அரசு பல்வேறு வகைகளில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக்கொடுத்து, அதன் மூலம் தமிழகத்தில் $5\frac{1}{2}$ லட்சம் நெசவுத்தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களில் $2\frac{3}{4}$ லட்சம் பேர்



அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் நிலைமையில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அவர்களுக்குத் தனியாக வீட்டு வசதிசெய்து தருகின்ற முறையில் 6—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 5,000 வீடுகளைக் கட்டவும், திட்டமிடப்பட்டுள்ளதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அவர்களுக்கு 1,000 ரூ. அதற்கு நிதி உதவியாக கொடுக்க இருப்பதாகவும் சொல்லப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற காலகட்டத்தில் அந்த ஆயிரம் ரூபாய் என்பது போதாது. ஆகவே, அதை இன்னும் ஒரு 1,000 உயர்த்தி, 2,000 ரூ. என்று கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அவர்களுக்கு தவணை முறையிலோ அல்லது வாடகை மூலமாகவோ வசிக்க வீடு கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர் சேமிப்புத் திட்டம் என்ற திட்டத்தின் அடிப்படையில் ஒரு திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. அதிலே ரூ. 3,000 வரை அவர்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் அது போதாது. ஆகவே அதை ரூ.5,000 என்கிற அளவிற்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுககொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் துணிகள் தேங்கிக்கிடப்பதால் கோவாப்டெக்ஸ் மூலமாக 50 சதவீதம் துணிகளை கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. இப்படி துணிகள் தேங்கிக்கிடப்பதால் பல்வேறு சங்கங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமலும், பண பட்டுவாடா செய்யப்படாமலும் இருக்கின்றது. ஆகவே, தேங்கிக் கிடக்கும் காலங்களில் பூரா துணியையும் கொள்முதல் செய்ய கோவாப்டெக்ஸுக்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் அவர்களுக்குப் பண உதவியும் செய்து அங்கேயுள்ள நெசவாளர்களுக்கு பண பட்டுவாடா செய்வதற்கும் அவைகள் நல்ல முறையில் இயங்குவதற்கும் வழிவகை செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல ஆலை அதிபர்கள் விசைத்தறிகளை வைத்துக்கொண்டு விசைத்தறி மூலம் தயாரித்த துணிகளுக்கு கைத்தறி லேபிள் போட்டு விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் கைத்தறி மார்க்கெட் குறைந்து போகிறது. அரசு இது குறித்து தீவிர நடவடிக்கை எடுத்து இந்தப் போக்கை தடுத்து நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், முடிந்தால், கைத்தறித் துறையில் எப்படி கூட்டுறவு மூலம் சங்கங்கள் அமைத்து அந்த நெசவுத் தொழிலைச் செய்வதற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறதோ அதைப்போல் இந்த விசைத்தறிகளையும் கூட்டுறவு மூலம் கொண்டுவருவதற்கும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

துணிகளில் புதிய ரகம் உற்பத்திச் செய்வதற்கும், பல்வேறு டிசைன்களை அமைப்பதற்கும் வடிவமைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருப்பதால், புதிய புதிய டிசைன்களை உருவாக்கி, பலரையும் கவரும் வண்ணம் உள்ள டிசைன்களைப் போட்டு, வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு ஏற்ற முறையில் அந்த வடிவமைப்பு நிலையங்கள் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவாப்டெக்ஸ் இன்டர்நேஷனல் என்கிற நிறுவனத்தின் மூலம் மேல்நாடுகளுக்கு துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேல்நாடுகளில் இருப்பவர்கள் எல்லாம் நம்முடைய கைத்தறித் துணிகளை வாங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, தரமான துணிகளை தயாரிக்கவும், அவைகள் கவர்ச்சிகரமான வகையில் இருப்பதற்கும் நல்ல ரகங்களையும், கலர்களையும் போட்டு ஏற்றுமதி செய்ய இந்த அரசாங்கம் முயற்சி எடுத்தால் அந்நிய நாட்டுச் செலவாணி நம்முடைய அரசுக்கு அதிக அளவில் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஹாங்காங் நாட்டில் நூல் தரமாக இருக்கிறதா, துணிகள் நல்ல தரம் வாய்ந்தவையாக இருக்கின்றனவா என்பதை நிர்ணயிப்பதற்காக ஒரு சோதனை நிலையம் வைத்து, அதன் மூலம் சோதித்து அதனை அனுப்புகின்றார்கள். ஆகவே, அத்தகைய நவீன முறை மெஷின்களை நம்முடைய நாட்டிலும் கொண்டுவந்து அதன் மூலம் துணிகளைப் பரிசோதித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 5.50]

அடுத்து இந்த கைத்தறி ஏற்றுமதித் திட்டம் ஒன்று இருக்கிறது. அதை இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே கொண்டுவந்திருக்கிறார்கள். கொண்டுவந்தால் மட்டும் போதாது. நல்ல முறையில் ஆலோசனைகள் சொல்ல, நெசவுத் தொழிலில் நல்ல அனுபவம் பெற்றவர்களை அதிகாரப்பற்றற்றவர்களாக நியமித்து, அவர்களைக் கொண்டு குழுக்கள் அமைத்து செயல்படுத்தினால் அவர்களுடைய மேலான ஆலோசனைகளைப் பெற்று, இப்போது கைத்தறி ஏற்றுமதியில் ஏற்படுகிற நஷ்டத்தை சரிகட்டி, இலாபம் ஈட்டி, நல்ல முறையில் செயல்பட முடியும். ஆகவே, அரசு உடனடியாக இதிலே தலையிட்டு, கூட்டுறவு அமைப்பிலே கொண்டு வந்திருக்கிற ஏற்றுமதி வளர்ச்சி திட்டத்தில் அதிகாரப்பற்றற்றவர்களை, அனுபவமிக்கவர்களைக் கொண்ட குழுவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நவீன சாயத் தொழிற்சாலை பல இடங்களில் செயல்படாமல் இருக்கிறது. என்னுடைய தொகுதியான கரூரில் ஒரு நவீன சாயத் தொழிற்சாலை இருக்கிறது. ஏற்றுமதி திட்டத்திற்கு என்று ஏற்படுத்தப்பட்டது அந்த சாயச்சாலை. அங்கே



சாயம் போடுவதில்லை. தனியாரிடம், வெளியாரிடம் தான் சாயம் போடுகிறார்கள். அதனால் அங்கே வேலை இல்லை. ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து, அங்கேயே சாயம் போடுவதற்கும் நல்லமுறையில் வேலை நடைபெறுவதற்கும் ஏற்ற முறையில் நல்ல அதிகாரிகளை அங்கே நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய ஆலைத் தொழிலாளர்களுக்கு இ. எஸ். ஐ. மருத்துவ வசதி இருப்பதைப்போல கூட்டுறவு நெசவாளர்களுக்கும் இ. எஸ். ஐ. மருத்துவ வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். புதிதாக ஆரம்பிக்கிற சங்கங்கள் 'இன்டஸ்டிரியல் டைப், ஆக இல்லாமல் பிரைமரி சொசைட்டியாக ஆரம்பிக்க வேண்டும். காரணம் இன்றைக்கு இன்டஸ்டிரியல் டைப்பாக இருக்கிற பல சங்கங்கள் நஷ்டத்தில் ஓடுகின்றன, ஆனால் பிரைமரி சொசைட்டிகள் நல்ல இலாபம் ஈட்டுகின்றன. ஆகவே, இனிமேல் புதிதாக அமைக்கப்படுகின்ற சங்கங்களை பிரைமரி சொசைட்டிகளாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கதர், கைத்தறி மற்றும் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இன்றைக்கு நம்முடைய நாட்டில் கைத்தறித் தொழில் வளர்ச்சியில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு கோடிக்கணக்கில் மதிப்புள்ள துணிகள் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் இந்தியா பூராவிலும் தேங்கிக்கிடக்கின்றன. அந்த அடிப்படையில் இன்றைக்கு நாடு பூராவும் கைத்தறி நெசவாளர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்கு நூல் விலை ஏறியிருக்கிறது ; ஆனால் அதனுடைய மூலப்பொருளான பருத்தி விலை குறைவாக இருக்கிறது. இது ஆலை முதலாளிகளும் வர்த்தக சூதாடிகளும் செய்கின்ற ஒரு நடைமுறையினால்தான். இதைத் தவிர்ப்பதற்காகத்தான் கூட்டுறவு நூற்பாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டார்கள்.

அதைப்போன்று நான் சொல்வதெல்லாம், இன்றைக்கு நாம் கைத்தறி துணிக்கு ரிபேட் கொடுக்கிறோம். அந்த முறை சிறப்பாக செயல்படுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை. இன்றைக்கு கிராமப்புறங்களில் இருக்கிற கூட்டுறவு சொசைட்டிகளுக்கு இந்த ரிபேட் பணம் ஒழுங்காக கிடைக்கவில்லை என்ற ஒரு பெரும்

குறை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்த கூட்டுறவு சொசைட்டிகளுக்கு அரசாங்கமே நூலை விநியோகம் செய்து, அங்கே வேலை செய்கின்ற நெசவாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்து, அந்தக் கூலியைக் கொடுத்து, அவர்கள் நெய்கின்ற துணியை அரசாங்கமே வாங்கி, கோவாப்டெக்ஸ் மூலம் விற்பனை செய்தால், அப்படி தனி விற்பனை செய்யும்போது அரசாங்கம் ரிபேட் கொடுத்து, விலையைக் குறைத்துக் கொடுக்கலாம். இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டைச் செய்தால் இந்தத் தொழில் சிறப்பாக நடைபெறும் எனபதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் 5 இலட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சரியான கூலி கிடைக்காமல், சரியான வேலையும் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு 5 இலட்சம் கைத்தறித் தொழிலாளர்களின் வாழ்க்கை சின்னாபின்னமாக்கப் பட்டிருக்கிறது. அதைப் போக்க பல்வேறு திட்டங்களைத் தீட்டினாலும், இன்றைக்கு கூட அமைச்சரவர்கள் இந்த துணியின் தேக்கத்தைப் போக்க கிழ்த்திசை நாடுகளுக்குச் சென்று பல கோடி ரூபாய்க்கான ஏற்றுமதி வாய்ப்புகளைப் பெற்று வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்து நான் பாராட்டுகிறேன். அதை நல்லமுறையிலே பயன்படுத்தி, வாழ்க்கையின் அடித்தளத்திலே கிடந்து வாடிக் கொண்டிருக்கின்ற இந்தத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நல்ல பல திட்டங்களைத் திட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் சென்ற திட்டத்தில் சிக்கன சேமிப்புக்கு என்று தொழிலாளர்கள் கூலியிலிருந்து 6 பைசா, சங்கம் 2 பைசா, அரசு நான்கு பைசா என்ற வீதத்தில் கொடுத்து அந்த நிதியைத் திரட்டியிருக்கிறார்கள்.

ஆனால் இன்றைக்கு அந்தத் திட்டம் க்ரூப் இன்சூரன்ஸ் திட்டமாக மாற்றப்பட்டிருக்கின்றதா ? அன்றைக்கு போடப்பட்ட பணங்கள் தொழிலாளருக்கும் கிடைக்கவில்லை, அப்படிக் கிடைக்காத நிலையிலே க்ரூப் இன்சூரன்ஸ் திட்டமாகக் கூட மாற்றிக்கொடுக்காமல் வங்கிகளிலே தேங்கிக் கிடக்கின்றன. அந்தப் பணம் உடனடியாக அந்தத் தொழிலாளர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். இல்லை என்றால் க்ரூப் இன்சூரன்ஸ் திட்டத்திலே சேர்த்துக் கொள்வதற்காகவாவது ஏற்பாடு செய்யவேண்டும்.

சென்ற நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் கைத்தறித் தொழிலாளர்களுக்கு ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்படுகின்றன என்பது பற்றி இந்த நிதிநிலை



அறிக்கையிலே ஒன்றுமே சொல்லப்படவில்லை. அடுத்து க்ரூப் இன்சூரன்ஸ் திட்டத்திற்கு 55 வயது என்று வயது வரம்பு நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் எல்லாம்கூட இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் அந்த வயது வரம்பை 65 ஆக உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உதவித்தொகை 3,000 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அரசுத் துறையிலே இருக்கின்ற ஊழியர்களுக்கெல்லாம் 10,000 என்று அறிவித்திருக்கிறார்கள். கைத்தறி தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற மக்கள் மிகவும் அடித்தளத்திலே இருக்கின்ற காரணத்தால் இந்தத் தொழில் காரணமாக அவர்களுக்கு க்ஷயரோகம் போன்ற வியாதிகள் வருகின்ற காரணத்தால் இவர்களுக்குக் குறைந்தபட்சம் 5,000 ரூபாயாவது உதவித் தொகை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து இந்தத் தொழிலாளர்கள் எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே இவர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். சென்ற ஆண்டு மாவட்டந்தோறும் ஒரு கூட்டுறவு நூற்பாலையை ஏற்படுத்துவோம் என்று சொன்னார்கள். அதன்படி இந்த ஆண்டு எத்தனை மாவட்டங்களில் கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றிய குறிப்புகள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை.

அடுத்து கோவை மாவட்டத்திலே அதிகமான நூற்பாலைகள் இருந்தாலும்கூட மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற அவிநாசியில் ஒரு கூட்டுறவு நூற்பாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்து வ. உ. சி., பாரதியார் ஆகியோர் பிறந்த பகுதிகளான ஒட்டப்பிடாரம், எட்டையாபுரம் போன்ற இடங்களில் எந்தவிதமான தொழில் வளர்ச்சியும் கிடையாது. ஆகவே பாஞ்சாலங்குறிச்சியில் ஒரு நூற்பாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கைத்தறி போன்று விசைத்தறியும் இன்றைக்குத் தமிழகத்தில் அதிகமாக இருக்கின்றது. அந்தத் தொழிலில் பணிபுரியும் தொழிலாளர்கள் எல்லோரும் ஆலையிலே பணிபுரியும் தொழிலாளர்களைப் போன்றுதான் பணியாற்றுகிறார்கள். ஆனாலும் அவர்களுக்கு எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் கிடையாது. அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சம்பள நிர்ணயமும் கிடையாது. ஆகவே அந்தத் தொழிலாளர்களுக்கு இன்சூரன்ஸ், ஈ. எஸ். ஐ. போன்ற வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அந்த வகையில் அவர்களுக்கு குறைந்த பட்ச பாதுகாப்புக்களையாவது செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைககு பனைப்பொருட்களை எடுத்துக் கொண்டால் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டது போன்று தமிழகத்தில் பனைப்பொருட் கள் அதிகம். ஆனால் இன்றைக்கு நம்முடைய தமிழக அரசு பனைப்பாதுகாப்பு என்ற பெயரால் பல்வேறு சட்டங்களைப் போட்டுக்கொண்டிருந்தாலும் கூட இந்தப் பனைகளை தற்போது குறைந்த விலைக்கு வெட்டிக்கொண்டு போகின்ற நிலைமை இருக்கின்றது. பனையிலிருந்து கிடைக்கின்ற மூலப்பொருட்களை வைத்து எந்தவிதமான பெரிய தொழில்களையும் தமிழகத்தில் செய்ய வாய்ப்பு இல்லாத காரணத்தால் மூலப்பொருட்களை இன்றைக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பனைப்பொருட்கள் கோடிக்கணக்கான ரூபாய் அன்னியச் செலாவணியை ஈட்டிக்கொண்டிருக்கின்றது. அவற்றைத் தனியார்கள் தான் ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பனைப்பொருட்களை அரசாங்கமே ஏற்றுமதி செய்கின்ற வகையில் ஏற்பாடு செய்தால் பனைப்பொருட்களை உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு நியாயமான கூலி கிடைக்கும்.

அடுத்து தமிழகத்தில் பல அறிஞர்களின் நினைவாலயங்கள் வைத்து இருக்கிறோம். பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, காமராஜர் போன்றவர்களுக்கு எல்லாம் நினைவாலயங் கள் வைதிருக்கிறோம். அந்த நினைவாலயங்கள் எல்லாம் நிரந்தரமாக இருக்கின்றன. ஆனால் அவற்றிலே பணிபுரிகின்ற பொதுப்பணித்துறை ஊழியர்கள் எல்லாம் நிரந்தரமற்றவர்கள் ஆக இருக்கிறார்கள். ஆகவே இந்த நினைவாலயங்கள் எல்லாம் சிறப்பாக செயல்படவேண்டும் என்றால் அங்கே பணிபுரிகின்ற தொழிலாளர்களை நிரந்தரமாக்கவேண்டும்.

அடுத்து இங்கே பேசிய காங்கிரஸ் கட்சியின் நண்பர் அவர்கள் ஒரு உண்மையை ஒத்துக்கொண்டார்கள். அதாவது 30 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட கட்டிடங்களும், 50 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட கட்டிடங்களும் தான் சிறப்பாக இருந்தன, ஆனால் எங்கள் ஆட்சிக்காலத்திலே பொதுப்பணித்துறை சீரழிந்தது, அப்படிப்பட்ட கட்டிடங்களைக் கட்டியவர்கள் நாங்கள் தான் என்பதை ஒத்துக்கொண்டார்கள்.

[மாலை 6.(0]

எப்படி எல்லாம் லஞ்சம் வாங்கவேண்டும், ஊழல் செய்ய வேண்டும் என்பதற்கு நாங்கள் தான் காட்டிக் கொடுத்தோம் என்ற உண்மையை அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். அதற்காக நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்கு இந்திரா காந்தி அம்மையாரைப்பற்றி பேசுகிறபோது அவர்கள்



சொன்னார்கள். நாங்கள் இன்றைக்கு இந்திரா காந்தியினுடைய கொள்கையைத்தான் எதிர்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத் தினுடைய வாழ்க்கைத் தரமாக இருந்தாலும் சரி. மத்திய சர்க்காருடைய கொள்கையை பாதிக்கிற காரணத்தினாலேதான் நாங்கள் கொள்கையை விமர்சனம் செய்கிறோம், என்று.

ஆனால் ஒன்றை மட்டும் இங்கே நினைவு கூற கடமைப்பட்டி ருக்கிறேன். அன்றைக்கு திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களை பெரும் தலைவர்கள் எல்லாம் சேர்ந்துக் கொண்டு, உறுப்பினர் சீட்டுகூட இல்லை என்று தூக்கி எறிந்த காலத்திலே இந்திரா காந்தி அம்மையாரை பாராளுமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் காத்து நின்ற கரங்கள். . (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: கைத்தறி மானியத்தைப் பற்றி பேசாமல் பாராளுமன்றத்தைப் பற்றி பேசிக் கொண்டி ருக்கிறீர்களே, நான் வேறு உறுப்பினரை அழைத்துவிடுவேன். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. மு. அப்பாத்துரை: ஆகவே அன்றைக்கு ஆதரித்தவர்கள் நாங்கள் தான். கொள்கைக்காக ஆதரித்தோம். இன்று கொள்கைக்காக எதிர்க்கிறோம் என்று சுட்டிக்காட்டி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. சு. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கை எண்கள் 26, 27, 37, 38, 51 ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல விழைகின்றேன்.

மானிடப் பிறவிகள் உயிர் வாழ்வதற்காக விவசாயிகள்எப்படி உணவை உற்பத்தி செய்து கொடுக்கிறார்களோ, அதேபோல மானிலப் பிறவிகளின் மானம் காப்பதற்காக ஆடைகள் தயாரித்து கொடுக்கும் அந்த நெசவாளிகள் கூனிக் குறுகி நிற்கிறார்கள். அந்த ஏழை நெசவாளிகளைப் பற்றி நாம் சிந்திக்கின்ற நேரத்தில் நம்முடைய புரட்சித்தலைவர் அவர்கள், அவர்கள் பால் அக்கறைக் கொண்டு வருடம் தோறும் கைத்தறித் துணிகளில் தேக்கம் ஏற்படுகிற நிலையைக் கருதி, அவற்றைப் போக்கும் முகமாக, வெளிநாடுகளிலே கூட டெப்போக்களை திறந்து விற்பனையை அதிகரிக்க ஏற்பாடு செய்திருப்பதை நான் மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் வெளிநாடுகளிலிருந்து வருகிற ஆர்டர்களை நம்முடைய கோவாப்டெக்ஸ் நிறுவனம் வாங்கி, நெசவாளச் சங்கங்களுக்குக் கொடுத்து அதிகமாக உற்பத்தியைச் செய்து, அதன்மூலம் அந்நியச் செலாவணியையும் பெருக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுக் கேட்டுக் கொள்ள

விரும்புகிறேன். மேலும் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, நெசவாளிகளுக்காக நல்ல பல காரியங்களைச் செய்திருக்கிறது. அதற்கு நாம் மனதார பாராட்டுதல்களைத் தர வேண்டும். சொந்தமாக தறி இல்லாத நெசவாளிகளுக்கு, நெசவுக் கூடம் அமைக்க நிதி உதவியை அரசு செய்கிறது. அதைப்போலவே அவர்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை வாங்கவும் நிதி உதவி அளிக்கிறது. மேலும் தரத்தை உயர்த்துவதற்காக வடிவமைப்பு நிலையங்களை மாவட்டந்தோறும் அமைக்க ஏற்பாடு செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். மேலும் சிக்கனப் பாதுகாப்புத் திட்டம் ஒன்று ஏற்படுத்தி, சுமார் அதில் 66,000 நெசவாளிகள் பங்கு கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மேலும் முந்தைய அரசினால் நிறைவேற்றப்பட்டிருந்த வீடு கட்டும் திட்டம் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களால் இன்றையதினம் நிறைவேற்றி வைக்கப்பட்டு, அது அமுலுக்கு கொண்டு வரப்பட்டிருந்த போதிலும்; ஒரு நெசவாளிக்கு ஒரு தறியை அந்த வீட்டிலே போடுவதற்கான அளவிற்கு அந்தத் தொகை போதவில்லை என்ற குறையை உங்களிடத்திலே சொல்லி, அதற்காக 10,000 ரூபாய் கடனாகக் கொடுத்து, அதிலே 2,500 ரூபாயை மானியமாக கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே அந்த நெசவாளிகளின் சார்பாக நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் நெசவாளச் சங்கங்களில் உறுப்பினராக சேர, அரசு நிதி உதவி அளிப்பதை வரவேற்று பாராட்டுகிறே . 120 லட்சம் ரூபாய் செலவில் 30 தொழில் நெசவாளக் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்க அரசு ஏற்பாடு செய்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

நெசவாளர் சங்கங்களில் தேங்கியிருக்கிற துணிகளை அல்லது ஆண்டுதோறும் உற்பத்தியாகிற துணிகளை கோவாப்டெக்ஸ் நிறுவனம் வாங்கி விற்பனை செய்துகொண்டிருக்கிற நிலை இருந்துக்கொண்டிருக்கிறது. கோவாப்டெக்ஸ் நிறுவனத்தார் அந்த நெசவாளர் சங்கங்களுக்கு ஒருவாரத்திற்குள்ளாக அல்லது 15 நாட்களுக்குள்ளாக பணத்தைக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் நடக்கிற எக்ஸிபிஷனில் சில்லறைவிற்பனைக்கு தமிழக அரசு 10சதவீதம் தள்ளுபடி கொடுக்கிறது. ஆனால் மத்திய அரசு 10சதவீதம் தள்ளுபடி கொடுக்க மறுத்திருக்கிறது. அதை நம் மாநில அரசு, புரட்சித் தலைவர் அரசு அந்த 10சதவீதத்தையும் சேர்த்து 20% மாக தள்ளுபடி கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதோடு சில்லறை விற்பனைக்குத் கொடுக்கிற அந்த 10சதவீதத்தை மொத்த விற்பனைக்கும் கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் நலிந்த சங்கங்களுக்கு அவை மீண்டும் செயல்பட 25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்



தக்கது. அதேபோல் கிராமங்களில், குறிப்பாக என் தொகுதியில் நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். விவசாயிகளும் இருக்கிறார்கள். காலையில் எழுகிற நெசவாளி பாவு செய்கிற நேரத்தில் விவசாயி மாட்டுவண்டி ஓட்டிச் செல்வதால் அப்பகுதியில் அந்த விவசாயிகளுக்கும் நெசவாளர்களுக்கும் இடையே தகராறுகள் வந்துகொண்டே இருக்கின்றன. சுமார் நான்கு ஆண்டுகளாக இந்தத்தகராறு அங்கே நடந்துகொண்டிருக்கிறது. அதைத் தீர்ப்பதற்கு நம்முடைய அரசு, புரட்சித் தலைவர் அரசு சிரத்தை எடுத்து நெசவாளர் பாவு செய்வதற்கு தனியாக இடம் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று பணிவன்புடன் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித்துறையில் என் தொகுதியில் இரண்டரை வட்சம் ரூபாய் செலவில் ஒரு மருத்துவமனை கட்டயிருப்பதாக கொள்கைக்குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக சுகாதார அமைச்சர் அவர்களையும் நமது புரட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கதர்தொழில், பொதுப்பணிகள் சட்டங்கள். பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சில கருத்துக்களை கூற நான் முன் வந்திருக்கிறேன். அந்த கருத்துக்களை கூறுவதற்கு முன்னால் தங்கள் மூலம் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், சென்ற ஆண்டு இந்த மானியத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு முன்பாக கொடுக்கப்பட்ட பாலிஸி நோட்டில் சட்ட ரீதியான பாதுகாப்பு கைத்தறித் தொழிலாளர்களுக்கு கொடுப்பதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது. ஏற்கனவே பழைய சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் கூட கைத்தறித் தொழிலாளர்களுக்கு வேண்டிய பாதுகாப்பிற்கான சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று அனைத்துக் கட்சிகளாலும் வலியுறுத்தப்பட்டது. அதோடு, வெளியில கூட கைத்தறித் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் சட்டம் வேண்டுமென்று தொடர்ந்து இயக்கம் நடத்தி 1,0000க்கு மேற்பட்ட கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சிறை சென்ற பிறகு அரசாங்கம் அதற்கான ஒரு பாதுகாப்புச் சட்டத்தை கொண்டுவந்து அது பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. அந்தப் பொறுக்குக் குழு எல்லா மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் செய்து அநேகமாக அது இறுதிநிலைக்கு வருகிற நேரத்தில் அம்மையார் அவர்கள் ரொம்ப தாராள புத்தியோடு 1980 பிப்ரவரியில் அரசாங்கத்தை கலைத்துவிட்டார்கள். சட்டம் இறுதிப்படுத்தப்படுகிற நேரத்தில் எங்கோ இருக்கிற கோபத்தை எங்கேயோ வைத்துப் பேசி சட்டமன்றம் கலைக்கப்பட்டு அப்படி கலைக்கப்பட்டதன் அடிப்படையில் அந்தச் சட்டம் அப்படியே நின்றுபோய் விட்டது.

[மாலை 6.10]

அதற்கு பிறகு சென்ற மானிய கோரிக்கை கூட்டத்தில் ஒரு பாரா சொல்லப்பட்டிருந்தது. சீக்கிரமாக அந்த சட்டம் கொண்டு வரப்படும் என்ற முறையிலே சொல்லப்பட்டிருந்தது. அதே தான் இன்றும், இந்த மானியத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இதே நிலை அடுத்த மானியக் கோரிக்கையிலும் வருமோ என்று சந்தேகிக்க வேண்டிய ஒரு நிலை ஏற்படுவதை மந்திரி அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே சொல்லப்படும் பொழுது கூட, திருத்த சட்டமுன் வடிவினை மீண்டும் சட்டமன்ற பேரவையில் கொண்டு வருவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்று இருக்கிறது. இதிலே என்ன பரிசீலனை இருக்கிறது என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை, ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு, பொறுக்கு குழுவிற்கு அனுப்பப்பட்டு, பொறுக்கு குழுவும் எல்லா இடங்களுக்கும் போய் வந்ததற்கு பிறகு அதனுடைய அடிப்படையிலே உடனடியாகக்கொண்டு வராமல் ஓராண்டு ஆகியும்கூட இன்னமும் இந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலே வரும் என்பது இதில் இல்லை என்று சொல்லும் பொழுது, கைத்தறி நெசவாளர்கள் எல்லாம், இந்த சட்டமன்ற கூட்டத்தொடரிலே வருமா, இல்லையா என்றிருக்கிறார்கள். 6—4—81 அன்று இதை கொண்டு வர வேண்டுமென்று நாங்கள் தர்ணா நடத்துவதோடு நின்றோம்; இந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலே கொண்டு வருதாக அறிவிக்காவிட்டால், மீண்டும் பழைய நிலையிலே நாங்கள் ஜெயிலுக்குப் போக வேண்டுமா? அதற்கு பிறகு தான் இது சட்டமாக வருமா என்று அவர்கள் கேட்கிறார்கள். அவர்கள் கேட்பது மாத்திரமல்ல, கைத்தறி அமைச்சர் அவர்கள் இந்த சட்டமன்ற தொடரிலேயே கொண்டு வருவதற்கு பரிசீலிக்கப் படுவது மாத்திரமல்ல, வரும் என்ற உத்தரவாதத்தை கொடுக்கா விட்டால், தயவுசெய்து கொஞ்சம் ஜெயில்களை எல்லாம் வெள்ளையடித்தாவது வைத்திருங்கள். நாங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கூட சிறை சென்று தான் இந்த சட்டத்தை கொண்டு வரவேண்டுமென்று சொன்னால், அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்ற முறையிலே தோழமைகட்சி நண்பர்களை நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மந்திரி அவர்கள் கடைசியில் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த கைத்தறி தொழிலை பாதுகாப்பதற்கு பல திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் சில திட்டங்களை நான் வரவேற்கிற நேரத்திலே, இந்த கைத்தறியை பாதுகாப்பதற்கு நூலினுடைய விலையை குறைத்து கொடுப்பதன் மூலமாக, அந்தத் தொழிலை பாதுகாக்க முடியும் என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே நம்முடைய கூட்டுறவுத் துறையிலே இருக்கிற 12 மில்களும், அதனுடைய துணை மில்களும் போதிய அளவிற்கு நூல் சப்ளை செய்ய முடியாத நிலை இருப்பதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கும்



என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில் தான் மேற்கொண்டு ஒரு நான்கு பிரிவுகள் ஆரம்பிப்பதாக அரசாங்கத்தின் குறிப்பிலே வந்திருக்கிறது, அந்த குறிப்பிலும் கூட திருநெல்வேலி மாவட்டத்திலே, பேட்டையில் இருக்கிற மில்லின் ஒரு பிரிவை எட்டையபுரத்தில் ஆரம்பிப்பது என்று கொள்கை ரீதியாக ஒத்துக் கொள்ளப்பட்டிருந்தது. சென்ற மானியக்கோரிக்கை மீதுபேசுகிற போது கேட்டபோது அதைப் பற்றிபரிசீலிக்கலாம் என்று சொல்லப் பட்டது. ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு நன்றி கூறிக்கொள் கிறேன். இதில் என்ன விஷயம் என்றால் எட்டையபுரத்தில் ஆரம்பிக்கப்படும் என்று இந்த பாலிசி நோட்டில் இல்லை. ஆரம்பிப்பது என்று இருக்கிறதே தவிர எட்டையபுரம் என்ற பெயர் இல்லை. அதைவிட வேடிக்கை என்னவென்றால் ஏற்கனவே ஒரு கேள்வி வந்தது. தேசியக் கவி பாரதியாருடைய பெயரை சூட்ட வேண்டுமென்று கேட்டபோது அதை பரிசீலிப்போம் என்று கூட அரசாங்கம் சொல்லாத நிலை இருக்கிறது. அது சரியில்லை. கூட்டுறவு நூற்பாலையின் ஒரு பகுதியாக சீக்கிரம் எட்டையபுரத்தில் ஆரம்பிப்பதோடு, பாரதியாரின் பெயரை சூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் இந்த நான்கு மில்கள் போதாது. நூல் அதிகமாக சப்ளை செய்ய முடியாத நிலையின் காரணமாக மத்திய சர்க்காரின் தயவிற்குபோய் நிற்கிறோம். நம் கையேதான் நமக்கு உதவி அவர்களுக்கு நூல் என்றைக்கு விலை போகவில்லையோ, அன்று தருவார்கள். நூல் என்று கிராக்கியோ அன்று தரமாட்டார்கள் என்பதை யதார்த்தத்திலே பார்க்கிறோம். ஆகவே கைத்தறித் துணிக்கு சப்ளை செய்ய வேண்டிய நூல்கள் எவ்வளவோ அத்தனைக்கும் உற்பத்தி செய்கின்ற பொறுப்பை நம்முடைய கூட்டுறவுத் துறை அபிவிருத்தி செய்வதன் மூலமாக நீங்கள் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே ரிபேட் மூலமாக தேக்கத்தை குறைக்க முயற்சிக்கிறோம். மத்திய சர்க்காரிடம் கேட்டால் சிலநேரங்களில் கொடுக்கிறார்கள்; 30 நாளைக்கு மேல் கொடுக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். இவை எல்லாம் சரியில்லை என்று மீண்டும் வற்புறுத்தி அதிக அளவிற்கு அதிகநாட்களுக்கு ரிபேட் கிடைக்கிற முறையிலே நாம் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சட்டப்பாதுகாப்பு வராத நிலை என்னவென்று சொன்னால், மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களுக்கு மாத்திரமல்ல, லேபர் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வர கடமைப் பட்டிருக்கிறேன். 12(3) செட்டில்மென்ட் மூலம் இவர்களுக்கு சம்பள நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது; சங்கடங்கள் இல்லை. இங்கே ஏற்கனவே ஒரு கவன ஈர்ப்பு தீர்மானம் வந்தது.

**மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூடுமானவரையில் இந்த தொடர் கூட்டத் திற்குள்ளேயே அந்த சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எதிர்பார்க்கிறேன் என்று சொல்வது கூடாது கட்டாயம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சங்கரன்கோவிலிலே அவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமென்று பேசப்பட்டு, சரியாக வராத நிலையில் கோட்டாட்சித் தலைவர் மூலம், டெபுடி லேபர் கமிஷனர் மூலம் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டு ஹைகோர்ட்டுக்கு போய் 5 ஆண்டுகளுக்கு பிறகு பழையபடி ஒரு ஒப்பந்தம். அந்த 12(3) ஒப்பந்தத்தை அமல் நடத்தச் செய்வதற்கு ஓராண்டுக் காலம் போராட வேண்டியிருந்தது. அமைச்சர் அவர்கள் சொன்னபோது கலெக்டர் அவர்களைக் கூப்பிட்டுப் பேசியிருக்கிறார். அநேகமாக 2 தினங்களில் முடிந்துவிடும் என்று சொன்னார்கள். ஆனால் 2 தினங்களிலே என்ன நடந்தது தெரியுமா? அதற்குப் பிறகு கைத்தறி மாஸ்டர்வீவர்களும் விசைத்தறி மாஸ்டர் வீவர்களும் சேர்ந்து ஊரிலே கலவரத்தை ஏற்படுத்தி தற்காப்புக்காக இவர்கள் போராடி பல தீவைப்புகள் பல கலவரங்கள், 144, மறியல்கள் இவையெல்லாம் நடந்து 200க்கு மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் சிறையிலே அடைக்கப்பட்டார்கள். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை போலீஸார் தேடிக்கொண்டிருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 12-3 ஒப்பந்தம் புனிதத் தன்மை உடையது என்று சொல்வார்கள். ஆனால் அந்த புனிதத் தன்மையை மீறுவது கைத்தறித் தொழிலாளர்கள் அல்ல, மாஸ்டர் வீவர்கள்தான் மீறுகிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான அறிகுறியே இல்லை. அரசாங்கம் அதை கவனிக்கவேண்டும்.

அடுத்து தேக்கம், 35 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது. பல இடங்களிலே தேக்கம் இருந்து கொண்டிருக்கிறது. அந்த தேக்கத்தைப் போக்குவதற்காக மத்திய அரசு நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையிலே இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 30 நாட்கள் அல்ல, 55 நாட்கள் கூட காணாது, பெஸ்டிவல் வரக்கூடிய எல்லா நாட்களிலும் ரிப்போட்டை தரவேண்டும் அது மட்டுமல்ல. அந்த 20 பைசாவை 25, 30, 35 என்று அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

சத்திரப்புட்டியிலே அரசாங்க உத்திரவுப்படி சில துணிகளை உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் கைத்தறி துறையே அதை வாங்குவதற்கு மறுக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். பிறகு மறியல் செய்ய வேண்டிய நிலைமை, ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்படுகிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாது தேக்கத்தை போக்க வேண்டும். கூட்டுறவுத் துறையிலே வேலை செய்கின்ற பர்மா, சிலோன்



போன்ற இடங்களிலே இருந்து வந்தவர்களுக்கு கொடுக்கக்கூடிய சம்பளங்கள் வேலைக்குரிய நியாயமான சம்பளமாக இல்லை. அவர்களுக்கு வேலைக்குரிய நியாயமான சம்பளத்தைக் கொடுப்பதற்கு உத்திரவிட வேண்டும்.

விசைத்தறிகளை குறிப்பிட்ட நிலையில் நிறுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கமும் ஒப்புக்கொண்டிருக்கிறது, மாநில அரசும் ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால் உண்மை நிலையென்ன கைத்தறியோடு அவை போட்டி போடுவதைத் தடுப்பதற்காக விசைத்தறிகளை ஒரு நிலையிலே நிறுத்த வேண்டுமென்று மத்திய சர்க்கார் ஒப்புக் கொண்டாலும் கூட நிலைமை அப்படி யில்லை. இன்றைக்கு அரசாங்கத்தின் கணக்குப்படியே பார்த்தாலும் 28 ஆயிரம் லைசென்ஸ் பெற்ற விசைத்தறிகள் இருக்கின்றன, லைசென்ஸ் பெறாதவை 57 ஆயிரத்திற்கும் அதிகமாக இருக்கின்றன என்று உங்கள் குறிப்பிலேயே இருக்கிறது. லைசென்ஸ் வாங்காதவர்கள் இரண்டு மடங்குக்கு மேலாக இருக்கிறார்கள். குறிப்பிட்ட ரகங்களைத் தவிர மற்ற ரகங்களைப் போடுகிறார்கள், அப்படிப் போட்டதற்குப் பிறகு கைத்தறி சீல் வைத்து விற்கிறார்கள். இப்படியிருந்தால் எப்படி அவர்களோடு கைத்தறி போட்டியிட முடியும்? ஆகவே விசைத்தறிகள் இருப்பதை ஒழுங்குபடுத்துவதற்கு மாநில சர்க்காரைக் கேட்டால் மத்திய சர்க்காருடைய உத்திரவு தெளிவாக இல்லை என்று சொல்கிறது, மாநில அரசு தெளிவாக உத்திரவு பெற்று அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்ற பாலிசி நோட்டிலேயும் இருக்கிறது, இந்த பாலிசி நோட்டிலேயும் இருக்கிறது. மத்திய சர்க்கார் இதுபற்றி திட்டவட்டமாகச் சொல்லவில்லை. அதற்கு இந்த அரசும் திட்டவட்டமாக கியாரண்டி கொடுக்கிறதா என்றால் இல்லை. கைத்தறி தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டுமென்றால் இதிலே போடுகிற உத்திரவை கறாராக அமல்நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கதர் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு உத்திரவாதம் கொடுக்கப்படவேண்டும், அவர்களுக்கு போனஸ் கொடுக்கப்பட வேண்டும். திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னதைப் போல் பனைத்தொழில் நசிந்துகொண்டே இருக்கிறது. அவர்கள் கஷ்டப்பட்டு பனை ஏறி இறங்கி உற்பத்தி செய்கிற பொருளுக்கு நியாயமான விலை கிடைக்க உத்திரவாதம் இல்லை, சில சமயங்களில் கிடைத்தாலும் பல நேரங்களிலே கிடைக்கவில்லை, அவர்களுடைய தொழிலைப் பாதுகாக்கக் கூடிய முறையிலே அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய முறையிலே பனையிலிருந்து யாராவது கீழே விழுந்து விட்டால் நட்ட ஈடு கொடுப்பதாக அரசு சொல்லியிருக்கிறது. ஆனால் அதற்கு சர்டிபிகேட் வேண்டுமென்று சொல்கிறார்கள். உயரமான இடத்திலிருந்து விழுந்தால்தான் கிடைக்கும் அதற்கு டாக்டர் சர்டிபிகேட் வேண்டுமென்று சொல்கிறார்கள். டாக்டரிடம் போய்க்கேட்டால் எவ்வளவு உயரத்திலிருந்து

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1981 ஏப்ரல் 16

விழுந்தான் என்பது எனக்கு என்ன தெரியும், உயரத்திலிருந்து விழுந்தாரா கீழேயிருந்து விழுந்தாரா என்பது எனக்கு எப்படித் தெரியும் என்றுசொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. கொடுக்க கூடியதோ கம்மிதான். அதை வாங்குவதற்குக் கூட அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதை வாங்குவதற்குள் அவர்கள் படுகின்ற கஷ்டம் மிகவும் அதிகம்.

[மாலை 6-20]

பி. டபிள்யூ. டி. கட்டிட வேலைகளைக் குறிப்பிட்ட காலத்தில் முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கட்டிடத் தொழிலாளர்களுக்குக் கூட்டுறவு சொசைட்டிகளை ரிஜிஸ்தர் செய்தால் காண்ட்ராக்ட் லேபர் சொசைட்டிக்கு முதலிடம் கொடுத்து காலாகாலத்தில் வேலைகளை முடிக்கின்ற நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும்.

பி. டபிள்யூ. டி. யில் பணிபுரியும் ஊழியர்களுக்குத் தேவையானவற்றைச் செய்ய வேண்டும். உதாரணமாக அணைக்கட்டு பகுதிகளில் போதிய இயந்திரங்களை வாங்கி வைக்க வேண்டும். மணிமுத்தாறு அணையில் கீழே போகின்ற அதிகமான தண்ணீரின் காரணமாகப் பயிர்கள் பாதிக்கப்பட்டு விடுகின்றன. அதிக ஹார்ஸ் பவர் கொண்ட மிஷின்கள் இல்லாததால் தண்ணீரை இறைக்க முடியாமல் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் பயிர் வீணானது. எனவே, இம்மாதிரி இயந்திரங்களைத் தேவையான இடங்களில் வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டிடங்களைப் பற்றிய விஷயத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திலிருந்து பணம் அலாட்மெண்ட் செய்யப்பட்டும் பல கட்டிட வேலைகள் காலாகாலத்தில் நடப்பதில்லை. காலாகாலத்தில் ஏலம் விட்டோ அல்லது காண்ட்ராக்டுக்கு விட்டோ இருக்கின்ற பல வேலைகள் முடிக்கப்படவில்லை. அம்பை அரசுப் பெண்கள் பள்ளியில் காம்பவுண்ட் கட்டப்படுவதற்குப் பரிசீலிக்கப்பட்டு எஸ்டிமேட் போடப்பட்டு விட்டது. ஆனால் அந்த வேலை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

அம்பை ஆஸ்பத்திரியை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டும் வேலைகள் செய்யப்படவில்லை.

மணிமுத்தாற்றில் இருக்கின்ற மருத்துவ மனை வேலை காலதாமதம் ஆகிறது. பணம் சேங்ஷன் ஆகியும் வேலை நடக்கவில்லை.



1981 ஏப்ரல் 16] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

சிவகிரி வட்டாரத்தில் வட்டார அலுவலகம் கட்ட டெண்டர் விட்டாகிவிட்டது; ஆனால் இன்றும் வேலை நடக்கவில்லை.

அம்பை காவலர் குடியிருப்புக்காக 30 வீடுகள் கட்ட ஏலம் விட்டாகிவிட்டது; இன்னும் வேலை நடக்கவில்லை. அதையும் காலாகாலத்தில் முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் இவ்வளவு நேரம் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு சட்ட பேரவைத் துணைத் தலைவரவர்களே, கைத்தறித் துறை மானியத்தின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

''செய்யும் தொழில்களில் சீர்தூக்கிப் பார்த்தால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை'' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வள்ளுவப் பெருந்தகை சொல்லிவிட்டார்கள். இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த கைத்தறித் தொழிலுக்குத் தனி அமைச்சரை நியமனம் செய்து, கைத்தறி நெசவாளப் பெருங்குடி மக்களுக்கான திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுடைய அரசு உருவாக்கியிருக்கிறது.

இம்மாநிலத்தில் உள்ள 5·56 இலட்சம் கைத்தறிகளில் 2.55 இலட்சம் கைத்தறிகள்-அதாவது இதில் 46 சதவீதம், 1,115 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்கி வருகின்றன. கைத்தறி நெசவுத் தொழிலைப் பொறுத்த மட்டிலும் இந்த அரசு 46 சதவீதம் கூட்டுறவுத் துறையின் கீழ் இருக்கும் கைத்தறி தொழிலாளர்களை 85-ஆம் ஆண்டுக்குள் 67 சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பது மிகச் சிறப்பான திட்டமாகும்.

கைத்தறித் தொழிலை நாம் பாதுகாக்க வேண்டுமென்றால் முக்கியமாக மூன்று முறைகளிலே பாதுகாப்பு அளித்தாக வேண்டும்: (1) தரமான நெசவை நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்; (2) நல்ல வடிவமைப்பை நாம் ஏற்படுத்த வேண்டும்; (3) நல்ல சாயமாக இருக்கின்ற வகையிலே நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படி மூன்று துறைகளிலே கைத்தறித் துறையை நாம் காப்பாற்றினால்தான் இந்தத் துறையை நாம் காப்பாற்ற முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த முறையிலே இந்த அரசு வடிவமைப்பு நிலையங்களை ஏற்படுத்துவதற்காக பல இலட்சம் ரூபாய்களைச் செலவு செய்து மாவட்டந்தோறும் வடிவமைப்பு நிலையங்களை ஏற்படுத்த உள்ளது வரவேற்கத் தக்க திட்டமாகும். அதைப் போல ஒவ்வொரு மாவட்டத்திலேயும் முக்கியமான இடங்களில் சாயத் தொழிற்சாலையை ஏற்படுத்த இந்த அரசு முன் வந்திருப்பது வரவேற்கத்தக்க ஒரு திட்டம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறித் துறையைப் பொறுத்தமட்டிலும் தனியார் முதலாளிகள் நம்முடைய கூட்டுறவுக் கைத்தறிச் சங்கங்களை நசுக்குகின்ற முறையிலே பல திட்டங்களைத் திட்டிக்கொண்டு வருகிறார்கள். வேடன் கையிலே சிக்கிய புள்ளிமானாகக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தமட்டிலும் நாம் அவர்களுக்கு தேவையான நிதியுதவியைச் செய்து, அவர்களுக்குக் காலத்திலே நூல் வழங்குதல் தேக்கமின்றி துணிகளை நாம் எடுத்துக்கொள்வது போன்ற பணிகளை நாம் சரிவரச் செய்யவில்லை என்றால், அந்த நேரத்தைப் பார்த்துக்கொண்டு தனியார் முதலாளிகள் நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களை நசுக்குவதற்கான பணிகளை மேற்கொள்வார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் பாதுகாப்புச் சட்டம் நம்முடைய கைத்தறி நெசவாளர்களுக்கு அவசியம் கொண்டுவரப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு சிறப்பான முறையிலே கைத்தறி நெசவாளர் களுக்கு வீடு கட்டிக் கொடுக்கத் திட்டத்தை தீட்டியிருப்பதையும் ஆயிரம் ரூபாய் மானியம் அளிக்க முன் வந்திருப்பதையும் நான் இந்த நேரத்திலே வரவேற்கின்றேன்.

பட்டுத் துணிகளுக்கு ஜப்பான் போன்ற நாடுகளில் மிக அதிக அளவிலே கிராக்கியிருக்கிறது. இங்கே நம்முடைய கிராமப்புறங்களில் இருக்கிற விவசாயிகள் பட்டுச் செடி வளர்த்து அதன் மூலமாக பட்டு வளர்த்து, அந்தப் பட்டை நம்முடைய கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுத்து. பட்டுத் துணிகளை நெய்து, அதனை ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் நெசவாளர்களுக்கு மட்டுமல்லாமல், விவசாயி களுக்கும் நாம் நன்மை செய்தவர்களாவோம். பியூர் சில்க் என்ற அந்த பட்டுத் துணிகளில் நல்ல டிசைன்கள் போட்டுக்கொடுத்தால் அதை ஏற்றுக் கொள்கிற அளவுக்கு அங்கே நல்ல கிராக்கி இருக்கிறது என்பதிலே சந்தேகம் இல்லை. அதை விரிவுபடுத்த நம்முடைய அரசு முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



அதே போல் பாலியஸ்டர் துணியைப் பொருத்த வரை யிலும், நம்முடைய கைத்தறி நெசவாளர்கள் மிகநல்லமுறையிலே பாலியஸ்டர் துணிகளைத் தயாரிக்கிறார்கள். அதை பிராசஸ் செய்வதற்காக மீண்டும் பம்பாய் போன்ற நகரங்களுக்கு அனுப்பி அதற்குப்பிறகு தமிழகத்திற்கு வரவழைத்து, விற்பனைசெய்கின்ற நிலையை மாற்றி இங்கேயே பிராசஸ் செய்ய மில்லை ஏற்படுத்த இருப்பது வரவேற்கத்தக்க திட்டம் என்று தெரிவித்துக் கொள் கிறேன். அதே போல் பாலியஸ்டர் துணியைத் தயாரிக்கத் தேவைப்படும் அந்த பாலியஸ்டர் நூல் பம்பாய் போன்ற நகரங் களிலுள்ள ஆலைகளில்தான் தயாரிக்கப்படுகிறது. அந்த நூல் சரிவரக் கிடைக்காத காரணத்தால், நம்முடைய அரசு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக, ரூ. 32 கோடியில் பாலியஸ்டர் நூல் தயாரிக்க ஒரு திட்டம் தீட்டி மத்திய அரசுக்கு அனுப்பிய நேரத்தில், மத்திய அரசு அதற்கு அனுமதி மறுத்திருக்கிறது. இது கண்டிக்கத்தக்க ஒன்று. மாற்றாந் தாய்மனப்பான்மையைக் கொண்ட செயலாகும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நம்முடைய அரசு மீண்டும் மத்திய அரசிடம் வற்புறுத்தி பாலியஸ்டர் நூல் தயாரிக்கின்ற அந்த மில்லைப் பெற்றுத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களை, மாற்றுத் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் அடிமட்டத்திலேயிருக்கிற நெசவாளர்களுக்கு இந்த அரசு உதவுகின்ற வகையில் ரூ. 132 இலட்சம் செலவில் 30 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தத் திட்டம் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அது உள்ளபடியே. உழைக்கின்ற, கீழ் நிலையிலேயிருக்கிற நெசவாளர்களுக்கு புது வாழ்வு அளிக்கின்ற திட்டமாகும். அவர்கள் பங்குத் தொகைக் கூட செலுத்த வேண்டிய அவசிய மில்லாமல். எல்லாப் பொறுப்பையும் அரசே ஏற்றுக்கொண்டு ஏறத்தாழ ஒரு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற் கும் ரூ. 3½ இலட்சம் செலவு செய்து, அந்த நெசவாளர்களுக்கு நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்த முன்னேற்றத் திட்டமாக இப் பொழுது நம்முடைய அரசு செயல்படுத்திக் கொண்டிருப்பது, இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழகத்திலேதானிருக்கும் என்று நான் உறுதியாக சொல்லிக்கொள்வேன்.

அதே போல், இங்கிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற துணிகளுக்கு ஜனதா ஆட்சி மத்தியில் இருக்கும் போது, 20% மானியம் அளித்து வந்தது. இப்பொழுது இந்திரா காங்கிரஸ் அரசாங்கம் ஆட்சி பொறுப்பு ஏற்றபின்னர் 20% மானியத்தை நிறுத்தி விட்டது. அதன் காரண மாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் துணிகள் வெகுவாகக் குறைந்துவிட்டன. அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால் 4 மாத காலம், அவர்களுடைய கொள்கை என்ன, திட்டம் என்ன என்று அவர்கள் சொல்லத் தவறியதன் காரணமாக. வட நாட்டிலே இருக்கிற வியாபாரிகள் கைத்தறி துணிகளை அதிகமாகவாங்காமல் இருந்ததன் காரணமாக தமிழகத்திலே அனைத்திந்திய அண்ணா

[திரு. ஆர். ரங்கசாமி] [1981 ப்ரல 16

தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டதற்குப் பின்னர் 4 மாத காலம், தமிழகக் கைத்தறி நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை வந்தது. நமமுடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால், இப்பொழுது நம்முடைய அமைச்சர் போன்றவர்கள் வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கெல்லாம் சென்று அங்கே நம்முடைய விற்பனை நிலையத்தைத் தொடங்கி, நல்ல முறையிலே கைத்தறிக்கு ஊட்டம் அளித்ததன் காரணமாக, இப்பொழுது ஏற்றுமதி பெருகியிருக்கிறது.

[மாலை 6.30]

மத்திய அரசால் நிறுத்தப்பட்ட இந்த 20% மானியத்தை நம்முடைய தமிழக அரசே வழங்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தயாரிக்கப்படுகின்ற துணிகளை பம்பாயிலே இருக்கின்ற ஒரு முதலாளிதான் ஏற்றுமதி செய்யவேண்டும் என்ற நிலைமையை மாற்றி, நம்முடைய தமிழகத்தின் தலைநகரிலேயே இருந்து வெளிநாடுகளுக்கு அந்தத் துணிகளை ஏற்றுமதி செய்ய அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல பம்பாயிலே கைத்தறித் துணிகளில் இருந்து ரெடிமேட் ஆடைகளைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற முறை இருந்து வருகின்றது. தமிழகத்திலே தயாராகின்ற இந்த கைத்தறித் துணிகளை பம்பாயிலே ஏறத்தாழ ஒரு பெரிய ஊர் அளவுக்கு அங்கே இருப்பவர்கள் ரெடிமேட் ஆடைகளைத் தயாரித்து, அங்கே இருப்பவர்கள் பலனடைகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட அந்தத் துணிகளை தமிழகத்திலே ரெமேட் ஆடைகளாகத் தைத்து வெளிநாடுகளுக்கு அனுப்ப முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 46% கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையின் கீழ் இருந்தாலும் இன்னும் 54% கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையின் கீழ் வராமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த அரசு சில பாதுகாப்புகளைக் கொடுத்தும், அவர்களுக்கு சில திட்டங்களை அறிவித்தும் அவர்களை இந்த கூட்டுறவுத் துறையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) நம்முடைய அரசு கைத்தறித்தொழில் நெசவுக் கூடங்களை எல்லா இடங்களிலும் நிறுவி வருகின்றது. என்னுடைய தொகுதியில் ஏறத்தாழ 10 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியின் முக்கியப் பகுதியான சத்தியமங்கலத்திலே கைத்தறி நெசவுத் தொழிலுக்கு கூட்டுறவுச் சங்கம் நிறுவவேண்டும் என்று அரசைக் கேட்டு, இந்தக் கைத்தறி மானியத்தை ஆதரித்து மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன் நன்றி, வணக்கம்.



1981 ஏப்ரல் 16]

திரு செ. செம்மலை: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய கைத்தறி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் என்னையும் பேச அனுமதித்த தங்களுக்கு நன்றியை சொல்லி, ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன்.

கைத்தறித் துறையைப் பொறுத்தவரையில் கைத்தறித் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற நெசவாளர்கள், தாங்கள் பயன்படுத்துகின்ற நூலிலே உள்ள சிக்கலை பிரிக்கத் தெரிந்திருக்கிறார்களே தவிர, தங்களுடைய வாழ்க்கையிலே ஏற்படுகின்ற சிக்கலை நீக்கத் தெரியாதவர்களாக இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது உள்ளபடியே நிலைமை மிகவும் மோசமாக இருப்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆனால் இந்த நிலையை அகற்ற இதற்கு முன்னாலே இருந்த எந்த அரசுகளும் எந்தவிதமான முயற்சியையும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன். ஆனால், புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் இந்தத் துறைக்கு என்று தனி அமைச்சரை நியமித்து பல்வேறு திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றுகின்ற ஒரு நிலையை உருவாக்கி இருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

இன்றைக்கு நீர்ப்பாசனத் துறை அமைச்சராக பொறுப்பேற்று இருக்கிற அமைச்சர் அவர்கள் முதன் முதலாக கைத்தறிக்கு ஒரு முழு உருவம் கொடுத்தார்கள். அதற்குப் பின்னாலே பல்வேறு திட்டங்களைத் தீட்டி அவை நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இன்றையதினம் கைத்தறித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த கொள்கை விளக்கக் குறிப்புகளில் நல்லபல திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். குறிப்பாக கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பு அளிக்கும் வகையில் திருத்தச் சட்ட முன்வடிவு விரைவாக வரும் என்று சொல்லப்பட்டிருக்கிற செய்தி உள்ளபடியே நெசவாளர்களுக்கு நிரந்தரமான ஒரு பரிகாரமாக அமையும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இன்றைக்கு 5.56 இலட்சம் தறிகள் இருப்பதாக இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. 13.34 இலட்சம் நெசவாளர்கள் இதில் ஈடுபட்டு, வேலைவாய்ப்பு பெற்று இருக்கிறார்கள் என்கிற குறிப்பும் இங்கே கொடுக்கப்பட்டு இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் நெசவுத் தொழில் ஒரு துணைத் தொழிலாக இல்லாமல், ஒரு முக்கிய தொழிலாகவே இருந்து வரும் நிலைமை இருப்பதால், அந்தத் தொழிலை நம்பி 30 இலட்சம் பேர் வாழ்ந்து கொண்டு

இருக்கிறார்கள் என்ற குறிப்பும் இங்கே கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கைத்தறித் துறையைப் பொறுத்தவரையில் கூட்டுறவுச் சங்கங்கள் அடிப்படையில் 2.55 இலட்சம் தறிகள் இயங்கி வருவதாகச் சொல்லப்படுகிறது. இந்தத் துறையின் மூலம் உற்பத்தியாகும் துணிகள் சுமார் 52 கோடி ரூபாய் அளவில் இருந்த போதிலும், அப்படி உற்பத்தி செய்யப்பட்ட துணிகளில் 29 கோடி அளவிற்குத்தான் கோவாப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யும் நிலைமை இருக்கிறது. அப்படி கொள்முதல் செய்யும் நிறுவனம் ஏற்றுமதி செய்கிற நிலைமையைப் பார்க்கிறபோது ஆண்டுக்கு 1 கோடி ரூபாய் அளவிற்குத்தான் இருக்கிறது. நாட்டில் உள்ள ஒட்டுமொத்தமான ஏற்றுமதியைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது, இந்தக் கோவாப்டெக்ஸ் மூலமாகச் செய்யப்படுகின்ற ஏற்றுமதி மிகவும் குறைவாக இருக்கிறது. தனியார் ஏற்றுமதியாளர்கள் லாபகரமாக ஏற்றுமதி செய்கிறபோது, இந்த நிறுவனம் இப்படிக் குறைவாகச் செய்வது வியப்புக்குரியதாக இருக்கிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் 4 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதியை அதிகப்படுத்துகிறோம் என்று சொல்லியிருப்பது கூட ஏற்றுக்கொள்ளத்தக் தாக இல்லை. அந்த ஏற்றுமதியை இன்னும் அதிக அளவில் செய்வதற்கு அந்தத் துறை முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கோவாப்டெக்சில் இன்றைக்கு ஒரு தனி அதிகாரியும், அதற்கு ஒரு ஆலோசனைக் குழுவும் போடப்பட்டிருக்கிறது. எனவே அந்தத் துறையில் அவர்கள் கவனம் செலுத்தி, ஏற்றுமதியை பெருக்கவேண்டும். ஏற்றுமதியை பெருக்குவதன்மூலம் நெசவாளர்களிடையே தேங்கியுள்ள துணிகளை விற்கவும், மேலும் ஏற்படுகின்ற தேக்கநிலையைத் தவிர்க்கவும், உற்பத்தியைப் பெருக்கும் சூழ்நிலையை உருவாக்கவும் வழிமுறைகளை அந்த நிறுவனம் ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்றுமதியைப் பொறுத்தவரையில், மார்க்கெட்டிங் எக்ஸ்பெர்ட்ஸ் ஆலோசனை பெற்று ஏற்றுமதிக்கு வழிவகை காண வேண்டும். ஏற்றுமதிக்குத் தகுதியான துணிகளை உற்பத்தி செய்கிற அளவிற்கு சங்கங்கள் ஊக்குவிக்கப்படவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். மற்ற பொருள்கள் ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் அரசாங்கம் இன்செண்டிவ் கொடுத்து வருகிறது. அதைப்போல கூட்டுறவுத் துறையின் மூலம் செய்யப்படுகின்ற இந்தத் துணி ஏற்றுமதிக்கும் அதிகமான ஸ்பஷல் இன்செண்டிவ் தர வேண்டும் என்று தான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

விற்பனையைப் பொறுத்தவரையில், உள்நாட்டில் தள்ளுபடி கொடுத்துத்தான் இந்தத் துணி விற்கும் நிலைமை உருவாகியிருக்கிறது. அரசாங்கத்தின் கொள்கை கைத்தறித் துணிக்கு தள்ளுபடி இல்லாமல் கைத்தறித் துணி தேக்கம் இல்லாமல் விற்பனை ஆக வேண்டும் என்று இருந்தாலும், இன்றைக்கு



தள்ளுபடி தருகின்ற போக்கு நீடித்து வருகிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில் 30 நாட்களுக்குத்தான் அந்தத் தள்ளுபடியை அனுமதிக்கிறார்கள். தமிழகத்தைப்பொறுத்தவரையில், மற்ற மாநிலங்களை விட அதிகமான கைத்தறி நெசவாளர்களைக் கொண்டு இருப்பதாலும், கைத்தறித் துணி உற்பத்தியில் அதிக அளவில் ஈடுபட்டு இருப்பதாலும், —, குறிப்பாக கர்நாடகம், ஆந்திரம், கேரளாவைவிட அதிகமாக இருப்பதாலும் – அனைத்து மாநிலங்களுக்கும் ஒட்டுமொத்தமாக 30 நாள் என்று சொல்வதைப்போல் சொல்லாமல், தமிழகத்திற்கு என்று தனியாக 60 நாள் அல்லது 50 நாள் தள்ளுபடி கொடுக்க முன்வரவேண்டும் என்கிற நிலைமையை அரசு உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவாப்டெக்ஸ் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு ப்ரைமரி சொசைடியில் இருந்து கொள்முதல் செய்கிறபோது குறைந்த லாபத்திற்குத்தான் கொள்முதல் செய்கிற நிலைமை இருக்கிறது. குறிப்பாக 9 சதவீதம் தான் தருகிறார்கள். சில நேரங்களில் 5 சதவீதம் தான் தருகிறார்கள். இதனால் சில நேரங்களில் உற்பத்தி செலவுக்குக் கீழ கூட கொள்முதல் இருக்கிறது. ஆனால் கோவாப்டெக்ஸ் நிறுவனம் 30 சதவீதம் அதிக லாபம் வைத்து விற்று வருகிறது. இந்தக் கூட்டுறவு சங்கம் அமைத்ததன் நோக்கம், கோவாப்டெக்ஸ் அமைத்ததன் நோக்கம் இடைத்தரகர்களை ஒழித்து நெசவாளர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதாகும். ஆகவே, ப்ரைமரி கோவாப்டெக்ஸ் சொஸைட்டியிடம் இருந்து கொள்முதல் செய்கிறபோது 9 சதவீதம் என்பதை 10 சதவீதம் என்றாவது உயர்த்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 6.40]

அதைப்போல கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்திச் செய்கிற நூலை இலாபம் கருதி வெளிமார்க்கெட்டில் விற்கும் சூழ்நிலை இருக்கிறது. இதனால் கூட்டுறவுச் சங்கங்கள் வெளியிலே அதிக விலைகொடுத்து நூலை வாங்கி, நெசவாளர்களுக்கு குறைந்த கூலி கொடுக்கப்படுகிறது. இந்தக் குறையைப் போக்க, கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூலை கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான அளவுக்கு கொடுத்துவிட்டு, மீதியைத் தான் வெளி மார்க்கெட்டில் விற்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி வாரியத்தின் மூலம் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் நிலை கூறப்பட்டிருக்கிறது. வீடுகள் கட்டித்தருவதைப் பொறுத்தமட்டில் அந்த சங்கங்கள் நிலத்தை வாங்கினால்தான் வீடு கட்டி

[ 981 ஏப்ரல் 16

[திரு. செ. செம்மலை]

இப்போது இருக்கிறது. இந்த கொடுக்க முடியும் என்ற நிலை முறையைப் போக்கி, அரிசன நலத் துறையில் எப்படி நிலத்தை ஆர்ஜிதம் செய்து, வீடு கட்டிக் கொடுக்கிறார்களோ அதைப் போல கூட்டுறவுச் சங்கங்கள் நிலம் வாங்க கடன் வழங்கி, நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இப்போது அவர்களுக்கு வீடுகள் கட்ட கொடுக்கின்ற கடன்தொகை அதிகப்படுத்தப்பட வேண்டும்; மானியத்தையும் அதிகப்படுத்த வேண்டும். காரணம் சாதாரண வீடு கட்டுவதை விட அவர்கள் தறி போடுவதற்கு அதிகப்படியான இடத்தில் வீடு கட்டுகின்ற நிலை இருக்கிறது. எனவே அவர்களுக்கு கடனையும் மானியத்தையும் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல நெசவாளர்கள் மத்தியிலே அதிகமான பேர்களுக்கு காச நோய் வருகிறது என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட நெசவாளர்கள் அதிகமாக இருக்கிற பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளில் தனியாக காசநோய் பிரிவை ஏற்படுத்த வேண்டும். ஆஸ்பத்திரி இல்லாத இடங்களில் நடமாடும் மருத்துவமனைகளை ஏற்படுத்தி காசநோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நெசவாளர்கள் 24 மணி நேரத்தில் கிட்டத்தட்ட 18, 20 மணி நேரம் உழைக்கின்றார்கள். அவர்களுக்கு வேறு பொழுது போக்கு வசதி இல்லாத நிலையில் அந்த நெசவாளர்கள் இருக்கிற பகுதிகளில் வாசிப்புச் சாலை வசதி, விளையாட்டு வசதிகள், வாரம் ஒரு தடவை அல்லது 10 நாட்களுக்கு ஒரு தடவை இலவச சினிமா காட்டுகின்ற வசதி போன்றவைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

*திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, கைத்தறி, கதர், பொதுப்பணித்துறை கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலிலே நான் கூற விரும்புவது, இப்போது நாம் கைத்தறி மானியக் கோரிக்கையிலே பேசிக்கொண்டிருக்கிறோம். இந்த மானியக் கோரிக்கையில் பேசும்போது பேரவைத் தலைவர், துணைத் தலைவர், அமைச்சர் பெருமக்கள் எல்லோரும் கைத்தறி ஆடைகளை அணிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 16] [திரு. த. வேணுகோபால்]

அதோடு, கைத்தறித் துணித் தேக்கத்தைப் போக்க விசேஷ காலங்களில், பொங்கல், தீபாவளி, ரம்சான் போன்ற பண்டிகைக் காலங்களில் சிறப்புத் தள்ளுபடி செய்வதை தவிர்த்து, எல்லா காலங்களிலும் சிறப்புத் தள்ளுபடி 50 பைசா கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, திருவண்ணாமலையில் இருந்த மாவட்ட கதர் அலுவலகத்தை விழுப்புரத்திற்கு மாற்றிவிட்டார்கள். திருவண்ணாமலையில் அந்த மாவட்ட கதர் அலுவலகம் இருந்த போது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் செய்யப்படும் சிறு தொழில் வளர்ச்சி, அந்த அலுவலகத்தை மாற்றியதால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, மீண்டும் திருவண்ணாமலையில் அந்த அலுவலகத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அதோடு, பொதுப்பணித் துறை கட்டிடங்கள் என்ற முறையில் பொதுப்பணித் துறை பெருமளவில் பணம் செலவிடுகின்ற துறை, எனவே பொதுப்பணித் துறையிலே மேற்கொள்ளப்படும் வேலைகளை நியமன முறையில் வழங்கக்கூடாது, முறையாக டெண்டர் கோரப்பட்டு, ஒப்பந்த முறையில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையின் மூலம் பல இடங்களில் கட்டிடங்களைக் கட்டுவதற்கு டைப் டிசைன் என்ற முறையில் கட்டிடங்களைக் கட்டுகின்றனர், அப்படிச் செய்யாமல், எல்லா இடங்களிலும் ஒரே முறையைக் கையாளாமல், 'சாயில்' அடிப்படையில் எப்படிப்பட்ட இடம் என்பதைக் கருத்தில் கொண்டு, டிசைனை மாற்றி கட்டிடங்களைக் கட்ட எற்பாடு செய்ய வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

அடுத்து, தமிழகத்தில் பல மாவட்டங்களில் கட்டிடங்கள் கட்டி இருந்தாலும் என்னுடைய வடாற்காடு மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் போதுமான கட்டிட வசதி இல்லாத காரணத்தால் மாணவர்கள் மரத்தடியில் உட்கார்ந்து படிக்கிற சூழ்நிலை இருக்கிறது. அதைப்போல பல இடங்களில் இருக்கிறது.

சான்றாக எனது தொகுதியில் உள்ள சு. வாள்பட்டி, நாராயணகுப்பம், மேலும் வட ஆற்காடு மாவட்டம், சேத்துறை, புதுப்பாளையம் போன்ற பல கிராமங்களில் இருக்கக் கூடிய உயர்நிலைப்பள்ளிகளில் உள்ள மாணவர்கள் எல்லோரும் மரத்தடியிலே படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அவற்றிற்கெல்லாம் நிரந்தரமான கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து, பொதுமக்களின் நன்கொடை மூலம் ஆர்வத்தோடு தொடங்கப்பட்ட பல பள்ளிக்கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படாமல் இருக்கின்றது, எனவே இம்மாதிரி பொது மக்கள் நன்கொடையால்

[திரு த. வேணுகோபால்]

கட்டப்பட்டு வரும், நிதிப்பற்றாக்குறையால் கட்டி முடிக்கப் படாமல் இருக்கின்ற கட்டிடங்களை எல்லாம் கணக்கிட்டு அவை களை அரசாங்கம் கட்டித்தர முன்வர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்து அரசுக்குச் சொந்தமான கட்டிடங்கள் அனைத்துக்கும், பழுதுபார்த்தல், மராமத்து போன்றவை களுக்கு பொதுப்பணித்துறைதான் பல ஆண்டுகளானா லும் பழுது பார்க்கவேண்டும் என்ற முறையை அரசு மாற்ற வேண்டும். பொதுப்பணித்துறைக்கு தேவைப்படும் இயந்திரங்கள் கருவிகள் அதிக அளவில் இருக்கவேண்டும். இயந்திரப் பற்றாக்குறையைப் போக்க வேண்டும். மேலும் எத்தனைக் கால அளவிலும் இதுபோன்ற கட்டிடங்களின் பணியை பொதுப் பணித்துறைதான் செய்யவேண்டும் என்ற ஒரு முறையை அரசு கையாண்டு கொண்டிருப்பதை மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து கிராமங்களிலே வெள்ளையர்கள் காலத்திலே கட்டப்பட்டுள்ள கிராமச் சாவடிகள், மாட்டுப் பட்டிகள் ஆகியவற்றின் கட்டிடங்கள் எல்லாம் இடிந்து கிடக்கின்ற நிலை இருக்கின்றது, அவற்றை எல்லாம் பழுதுபார்ப்பதற்கான எந்தவிதமான நடவடிக்கை பற்றியும் அறிக்கையிலே இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்,

அடுத்து மருத்துவமனைகள் ஆங்காங்கே பல இடங்களில் கட்டுவதாக இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது, என்னுடைய தொகுதியில் மருத்துவமனைகளும், ஆரம்ப சுகா தார நிலையங்களும் இருக்கின்றன. ஆரம்பச் சுகாதார நிலையம் என்னுடைய தொகுதியில் என்னுடைய ஊரிலேயே இருக்கின்றது. ஆனால் மருத்துவ அதிகாரிகள் அங்கே தங்கிக் குடியிருப்பதற்குரிய குடியிருப்புக்கள் இல்லை. அதேபோன்று தானிப்பாடி கிராமத் தில் அரசினர் மருத்துவமனை ஒன்று இருக்கின்றது. அந்த மருத்துவமனைக்குப் பாதுகாப்பான சுற்றுச்சுவர் இல்லை. அங்குள்ளவர்கள் அதனால் பாதுகாப்பற்ற நிலையில் பல சங்கடத்திற்கு ஆளாகின்றார்கள். அங்கே தங்கி மருத்துவ சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்குக் கூட பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே அந்தமருத்துவமனைக்கு நல்லதொரு பாதுகாப்பான சுற்றுச்சுவர் கட்டித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பொதுப்பணித்துறையால் கட்டப்பட்ட பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் போன்றவற்றிற்கு அவற்றின் மதிப் பீட்டின் அடிப்படையில் சில சதவீதம் என்ற அளவுக்குத்தான் பணம் ஒதுக்கி அவை பழுது பார்க்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. அவற்றிற்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தில் தான் பழுதுபார்க்கவேண்டும் என்ற நிலைமை இருப்பதன் காரணத்தால் நீண்ட நெடுநாட்களுக்கு முன்னாலே கட்டப்பட்ட



[திரு த. வேணுகோபால்]

கட்டிடங்களைப் போதிய அளவுக்கு பழுதுபார்க்க முடியாது. கட்டிடத்தைப் பழுதுபார்த்தால் கூரையைப் பழுது பார்க்க முடியாது. கூரையைப் பழுது பார்த்தால் கட்டிடத்தைப் பழுது பார்க்க முடியாது. அந்த அளவுக்குத்தான் பழுது பார்க்க முடியும். ஆகவே அந்த நிலைமையை மாற்றவேண்டும் என்றால் அரசு அதிகமான அளவில் நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்து வட ஆற்காடு மாவட்டத்திலே வேலூரிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டுவதற்கு தொகை ஒதுக்கப் பட்டுள்ளது. அதை நான் வரவேற்கிறேன், ஆனால் தற்போ துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டிடம் கோட்டைக் குள்ளே இருக்கின்றது. ஆகவே அந்த கோட்டைக்குள்ளேயே அந்த கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வட ஆற்காடு மாவட்டத்திலே ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கியுள்ளீர்கள். தண்டராம்பட்டுத் தொகுதியிலே தண்டராம்பட்டிலேயும் திருவண்ணாமலைத் தொகுதியிலே வேட்டவலத்திலேயும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் கட்ட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருவண்ணாமலையில் ஒரு காசநோய் மருத்துவ மனை இருக்கின்றது. அங்கே படுக்கை வசதிகள் மிகவும் குறை வாக இருக்கின்றன. ஆகவே அங்கே படுக்கை அறைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கட்டித்தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

(மாலை 6.50)

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். நீங்கள் கேட்பதை எல்லாம் அந்தந்த துறை அமைச்சர்களிடம் தனியாக கேட்டுக் கொள்ளுங்கள். இப்பொழுது வேண்டாம்.

திரு. த. வேணுகோபால். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையில் பல இலாகாவைச் சேர்ந்த கட்டடங்களை கட்டியிருக்கிறார்கள். கட்டப்பட்டும் வருகிறது. உதாரணமாக உயர்நிலை பள்ளிக் கூட கட்டிடங் களை அவ்வாறு கட்டி வருகிறார்கள். அவ்வாறு கட்டப்பட்ட கட்டிடங்கள் சரியான முறையில் இல்லை. மழைக் காலங்களில் தண்ணீர் உள்ளே வந்துவிடுகிறது. அந்த வகையில் கட்டிடங்கள் சரியாக கட்டப்பெறுவது இல்லை என்று நான் இந்த நேரத்திலே கூறிக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு துணைத் தலைவருக்குள் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி, பொதுப்பணித்துறை போன்ற மானியங்களை வரவேற்று ஒரு சில கருத்துக்களை தெரிவிக்க எனக்கு வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் உங்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் பேசும்போது, கைத்தறிக் கண்காட்சியில் ஸ்டால் வைப்பதற்கு தனியார் யாரையும் அனுமதிக்கவில்லை என்று தனியாருக்கு வக்காலத்து வாங்கி பேசினார்கள். கண்காட்சி கோ–ஆப்டெக்ஸ் கூட்டுறவு இயக்க கண்காட்சி என்பதை மறந்துவிட்டாரா? ஆளும் கட்சியினர் கடுமையாக தொலை பேசியில் பேசினார்கள் என்று எலலாம் எடுத்துச் சொன்னார்கள். அவைகள் எல்லாம் ஆதாரமற்ற பொய்யான தகவல்களாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: உண்மைக்குப் புறம்பான என்று சொல்லுங்கள்.

திரு. ஏ. சி. சண்முகம். துணைத் தலைவர் அவர்களே, ஆதாரமற்ற உண்மைக்குப் புறம்பான தகவல்களைத்தான் தந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது போன்ற சம்பவங்கள் நடந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஏதாவது குறை சொல்லவேண்டும் என்ற கருத்தில் இதை அவர்கள் எடுத்துச் சொன்னதாகத்தான் நான் நினைக்கிறேன். அப்படியே வைத்துக் கொண்டாலும், ஆளும் கட்சியினர் சொல்லித்தான் அங்கே ஸ்டால் தரவில்லை, எனவேதான் இவர் தொலை பேசியில் கடுமையாகப் பேசினார் என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தவிதமான அரசியல் தலையீடுகளும் நிர்வாகத்தில் இல்லாமல், எந்தவிதமான லஞ்ச லாவண்யமும் இல்லாமல் ஒரு நல்ல அரசாக செயல்படு கிறது என்பதுதான் விளங்குகிறது, என்று எங்களுக்கு சான்று வழங்கிய எதிர்கட்சி உறுப்பினருக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

திரு ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே**

— — — — — — —

திரு க. அன்பழகன். துணைத் தலைவர் அவர்களே, * *

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன். பேரவை துணைத் தலைவர் அவர்களே,

* * * *

திரு க. அன்பழகன். பேரவை துணைத் தலைவர் அவர்களே,
* * * *

* மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவை ஒன்றும் அவைக்குறிப்பில் இடம் பெறவேண்டிய அவசியம் இல்லை. கோரம் இருக்கிறது. திரு. ஏ. சி. சண்முகம் தொடர்ந்து பேசுவா

திரு. ஏ. சி. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, ஆக மறைமுகமாக புனித அரசு என்று திரு. புருஷோத்தமன் அவர்களே குறிப்பிட்டதற்காக நான் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் கைத்தறிக் கண்காட்சி யில தனியாாகளுக்கு சங்குமார்க், கிப்ஸ் லுங்கி போன்ற நிறுவனங்களுக்கு ஸ்டால்கள் கொடுக்கவில்லை என்று வருத்தத் தோடு குறிப்பிட்டிருகிறார்கள். கூட்டுறவுத் துறையில் தேங்கி யிருக்கும் கைத்தறித் துணிகள் 30 கோடிக்கு மேல் தேக்கம் இருக்கிறது என்ற காரணத்தால், 20 சதவீதம் தள்ளுபடி கொடுத்து அதை விற்பனை செய்யக் கூடிய நிலைமை கண்காட்சிகளில் ஏற்பட்டிருக்கிறது, அப்படி அந்தத் துணிகளை கண்காட்சிகளில் வைத்து தள்ளுபடியில் விற்பனை செய்துகொண்டிருக்கிற சூழ்நிலையில் கிப்ஸ், சங்கு மார்க் லுங்கிகள் போன்ற நிறுவனங்களுக்கு ஏன் ஸ்டால்கள் கொடுக்கப்படவில்லை என்று வக்காலத்து வாங்கிப் பேசுவது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. அதே நேரத்தில் தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள், கண்காட்சியினை திறந்து வைத்து பேசிய பேச்சுக்களை கிண்டல் செய்து பேசியிருக் கிறார்கள். கைத்தறித் துணி உற்பத்தியாளர்களின் உணர்வை பிரதிபலிக்கக்கூடிய பேச்சைத்தான் அங்கே பேசினார்களே தவிர வேறு எந்தக் கருத்தும் அல்ல. அவர்களுக் புரியவில்லை என்று சொன்னால் திரு. புருஷோத்தமனுக்கு பொதுவாகவே புரியாததுதான். எனவே புரட்சித் தலைவர் அவர்கள் பேச்சை கிண்டல் செய்ததாக நான் கருதவில்லை. அந்தப் பேச்சு நெசவாளர் பெருமக்களுக்கு எதிராக பேசப்பட்ட பேச்சு, அதை நெசவாளர்களின் உணர்வுகளை எதிர்த்து பேசிய பேச்சாகத்தான் நான் கருதுகிறேன் என்று இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக இந்திய நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் கைத்தறித் துணிகளில் 50 சதவீதம் தமிழ்நாட்டிலிருந்து உற்பத்தியாகும் கைத்தறித்துணிகள்தான். அப்படி இந்திய நாடு ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியாக 302 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்றால் அதில் 151 கோடி ரூபாய் அன்னியச் செலாவணியாகக் கிடைப்பது தமிழகத்தின் கைத்தறித் துணிகள்மூலம்தான் என்று சொல்லும்போது நமக்கு அது பெருமையாக இருக்கிறது.

[திரு ஏ.சி. சண்முகம்]

விவசாயத்திற்கு அடுத்தபடியாக தமிழக மக்கள் நம்பிக் கொண்டிருப்பது கைத்தறியைத்தான். நாகரிக மாற்றத்தால் ——கைத்தறித் துணியை மக்கள் கேவலமாக நினைக்கக்கூடிய, அதை ஒதுக்கக்கூடிய காலம் தமிழ்நாட்டில் இருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறித் துணிகளைத் தன் தோள்களில் ஏந்திக் கொண்டு வீதிவீதியாக சென்ற காட்சி தமிழகத்தில் உண்டு. அந்த நிலைமை இன்று தமிழ்நாட்டில் இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் வாரிசாக. அவர்கள் சென்ற அடிச்சுவட்டில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. கைத்தறிப் பிரிவு இன்று ஒரு உன்னதமான நிலையை அடைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று கைத்தறித் துணிகள் மக்கள் பெருமளவில் விரும்புகிற வகையில் உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கான அனைத்து வசதிகளையும், அனைத்து பாதுகாப்பையும் நம் அரசு செய்துகொண்டிருக்கிறது •

தமிழகத்தின் முதுகெலும்பாக உள்ள நெசவாளர்கள் பிரச்னை பற்றி பேசும்போது அவர்கள் கோரிக்கைகளை எடுத்துச் சொல்ல, சமுதாயத்தில் அவர்களை ஒரு முக்கியமான நிலைமைக்குக் கொண்டுவர, ஆசிரியர்களுக்காக தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையில் ஆசிரியர்கள் பிரதிநிதிகள் இருப்பதுபோல், அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுத்திருப்பதுபோல், கூட்டுறவுச் சங்கங்கள் வழியாக நெசவாளர்களுக்கும் தமிழக சட்டமன்ற மேலவையில் ஒரு உறுப்பினர் பதவி தரப்படவேண்டு மென்று புரட்சித் தலைவர் அவர்கள் அரசை, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். பல மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இதைச் செயல் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தீபாவளி, பொங்கல் நேரங்களில் 30 சதவீதம் கைத்தறிக்கு தள்ளுபடி கொடுத்து தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை யெல்லாம் விற்பனை செய்து காட்டியிருக்கிறார்கள். இப்போது நடைபெறும் கண்காட்சியில் 20 சதவீதம் தள்ளுபடி கொடுத்து வருகிறார்கள். திரு. புருஷோத்தமன் அவர்களும் மேட்டுப்பாளையம் உறுப்பினர் அவர்களும் சொன்னார்கள்; 30 சதவீதம் தள்ளுபடி கொடுக்காததுபற்றி. 30 சதவீதம் தள்ளுபடி கொடுக்காததற்கு முக்கிய காரணம் மைய அரசு கடைசியில் கொடுக்க வேண்டிய அந்த 10 சதவீதத்தை கொடுக்க மறுப்பதால்தான் தமிழக அரசு 20 சதவீதம் தள்ளுபடி கண் காட்சியில் கொடுத்துக்கொண்டிருக்கிற ஒரு நிலைமை இருக்கிறது. 30 சதவீதம் தள்ளுபடி இப்போது கொடுத்திருந்தால் தேங்கிக் கிடக்கிற 30 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை விற்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கும். அப்ப



மத்திய அரசு கொடுக்காதது வருந்தத்தக்க, கண்டிக்கத்தக்கது. இன்றையதினம் 30 லட்சம் மக்கள் வாழ்வதற்கு வழி செய்து கொண்டிருக்கிறது இந்தத் துறை. இந்திய அரசால் நியமிக்கப் பட்ட சிவராமன் குழு கூட கைத்தறி நெசவாளர்களுக்கு நிரந்தர மான வேலையும் நிரந்தரமான வருமானமும் கிடைக்கவேண்டு மென்று சொன்னால் நெசவாளர்களை 60 சதவீதமாவது கூட்டுறவுத்துறையில் கொண்டுவந்தால்தான் அப்படி அதற்கு வகை செய்யமுடியும் என்று சொல்லியிருக்கிறார்கள், ஆறாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்திற்குள்ளாக கூட்டுறவுத் துறையில் 67 சதவீதம் கைத்தறிகளைக் கொண்டுவர அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருப்பதற்காக நான் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக புதிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கவும் இருக்கிற சங்கங்களில் அதிகமான உறுப்பினர்களைச் சேர்க்கவும் அனைத்து வசதிகளும் ஏற்படுத்தித் தர பல சாதனைகளைப் புரிந்து கொண்டிருக்கிறது நம் அரசு. உதாரணத்திற்காக என் தொகுதி பற்றிக்குறிப்பிட விரும்புகிறேன். ஆரணி பட்டுக்கு பேர் போன இடம். அந்தப் பகுதியில் புரட்சித் தலைவர் அரசு ஏற்படுவதற்கு முன்னர் இரண்டு பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் தான் இயங்கி வந்தது. புரட்சித் தலைவர் அரசு வந்த பிறகு இருபது கூட்டுறவுச் சங்கங்களாக உயர்ந்தியிருக்கிறது. மேலும் ஆறு பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் திறப்பதற்கு தமிழக அரசு வழிவகை செய்து கொண்டிருக்கிறது. இதற்காக அந்தத் தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியை இந்த நேரத்தில் காணிக்கையாக்கிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[இரவு 7.00]

குறிப்பாக 1,150 பிரதம சங்கங்கள் மூலமாக 2.50 இலட்சம் கைத்தறியைக் கூட்டுறவுத் துறையிலே கொண்டு வந்திருக்கிற அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிக்கிறேன். காஞ்சிபுரம் சரகம் பெரிய சரகமாக இருக்கிறது. அதிலே மூன்று மாவட்டங்கள் செங்கலபட்டு, சென்னை, வடஆற்காடு ஆகிய மூன்று மாவட்டங் கள் அதனுடைய நிர்வாகத்தின் கீழே கொண்டுவரப்பட்டிருக் கிறது இதனுடைய நிர்வாகத்திற்கு ஒரு உதவி இயக்குநர் அவர்கள் இருக்கிறார்கள், அந்த உதவி இயக்குநரை தொடர்பு கொள் வதற்கும் அன்றாடம் இருக்கிற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சிக்கல்கள் ஏற்படுவதால். இங்கே முன்பு பரிசிலனையில் உள்ள வட ஆற்காடு மாவட்டத்திற்கு, 100| கூட்டுறவு சங்கங்கள் உள்ள அந்த வட ஆற்காடு மாவட்டத்திற்கு தனியாக உதவி இயக்குநர் அலுவலகம் ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும கேட்டுக் கொள்கிறேன். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமை சங்கமாக தன்னிகரில்லா தங்கமாக திகழ்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: போதும், முடித்து விடுங்கள், மணி ஏழு ஆகி விட்டது.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட, நாம் உட்கார்ந்திருக்கின்ற இந்தச் சட்டப் பேரவைக் கட்டடம் புதிதாக கட்டித்தர வேண்டும், புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அறிவித்ததைப்போல அந்தக் கட்டடத்தை கட்டுவதற்கு துவக்க வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாய்ப்பளித்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பேரவையில் கொண்டு வரப்பட்டிருக்கிற கைத்தறி, கதர், ஒரு வகையிலே குடிசைத் தொழில், கட்டிடம் கட்டுகிற பணிகளை மேற்கொள்கிற பொதுப்பணித்துறை ஆகியவற்றிற்கான மானியங்கள் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற வாய்ப்பினை பெற்றிருப்பதற்கு நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றிருக்கிற இந்தத் துறைகளிலே கைத்தறி நாளும் நாளும் மெலிந்துபோய் நோய்வாய்ப்பட்டிருக்கிறது. கதர் மக்களுடையகவனத்தை இழந்து கொண்டே வருகிறது. கட்டடப் பணி என்பதுஒரு தனி இலாக்காவாக ஆகியும் கொள்கையோடு வாதிக்கப்பட வேண்டிய ஒன்றாக இல்லாமல் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிற குழப்பத்தினுடைய சின்னமாக இந்தக் கட்டடப்பணி, பொதுப்பணி என்பது அமைந்து இருக்கிறது. வாதத்தில் ஈடுபட்டு பேசிய பல நண்பர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மருத்துவமனை, பள்ளிக்கூடம், இவை எல்லாம் தேவை என்று பல்வேறு விளக்கத்தை எடுத்துச் சொல்வதற்கு காரணம் பொறியியல் துறையோ, அரசாங்கத்தினுடைய நெடுஞ்சாலைத் துறையோ அல்லது அரசாங்கத்தினுடைய பொதுப் பணித் துறையோ, கொள்கை அடிப்படையற்ற துறையாக இருக்கக்கூடிய ஒரு துறையாக, தனியாக பிரிக்கப்படுகின்ற நேரத்தில் பொதுப்பணித்துறை என்று பிரிக்கப்பட்ட காரணத்தால் தான் இந்த குழப்பங்கள் ஏற்பட்டு இங்கே வாதத்திலே கூட எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் பல வேறு விவாதத்திலே எடுத்துச் சொல்லப்பட வேண்டிய கருத்துக்களை இங்கே பேசக் கூடிய நிலைமைகள் ஏற்பட்டன.

பொதுவாக தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கிற எம். ஜி. ஆர். அவர்களுக்கு, ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அடிக்கடி நன்றி தெரிவித்தார்கள். அதுவும் அவர் இங்கு இருக்கமுடியாத நேரத்திலே அவருக்கு நன்றி தெரிவித்ததும் நல்லதுதான் அவரைப்பற்றிய நினைவு நமக்கு வருவதற்கு



ஆனால் அவர் நிர்வாகத்திலே இலாக்காக்களைப் பிரித்திருக்கிற முறையினால் ஏற்பட்டிருக்கிற குழப்பம் தீர்வதற்கு நீண்ட நாள் ஆகும். அப்படி குழப்பம் ஏற்பட்டதன் விளைவுதான் இந்தப் பொதுப் பணித்துறை என்ற பெயராலே தரப்பட்ட அறிக்கை. நீங்கள் பார்த்தால் கூடத் தெரியும். ஒவ்வொரு இலாக்காவிற்குமாக கட்டுகிற கட்டிடங்கள் பட்டியல் முழுவதும் இருக்கிற காரணத்தால் உறுப்பினர்கள் அதைப் படித்துப் பார்க்கின்ற பொழுது இதிலே கலந்து கொண்டு தமது தேவைகளை வலியுறுத்திக் கேட்கலாமென்று கருதுகிறார்கள்.

ஆனால் பொதுவாக நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பொதுப்பணித்துறை ஓரளவிறகு தமிழ்நாட்டிலே முறையாக இயங்குகிற ஒரு துறைதான், —காண்ட்ராக்ட் விட வேண்டிய நேரத்திலே, நாமினேஷன் கொடுக்கிற ஒரு மாபெரும் தவறு தவிர மற்ற வகையிலே எல்லாம் இந்த பொதுப் பணித்துறை இலாக்காவிலே உள்ளவர்கள் ஏதோ ஒரு செல்வாக்குக்கு ஆட்பட்டு விட வேண்டிய நிலைமைக்கு ஆளாகிற காரணத்தால், வேறு வழியில்லாமல் காண்ட்ராக்ட் முறையையே கைவிட்டு விட்டனர், ஒப்பந்தக்காரர்கள் என்பதற்கு மாறாக அரசாங்கமே இனி எல்லாவற்றையும் நேரடியாக ஆட்களைக் கொண்டு, அரசு ஊழியர்களைக் கொண்டு எல்லாப் பணிகளையும் செய்யப் போகிறது என்று கூறியதற்கு மாறாகவும், இனி இந்த நாட்டிலே உழைப்பவர்கள் ஆட்சி வரப்போகிறது பாருங்கள், கட்டிய கட்டிடங்களை இனி கொத்தனார் தான் திறந்து வைப்பாரே தவிர அமைச்சர்கள் திறந்து வைக்க மாட்டார்கள் என்று சொன்னதற்கு மாறாகவும், இன்றையதினம் பொதுப்பணித்துறையின் நியாயமான கடமையை செய்ய முடியாத அளவிற்கு நாமினேஷன் முறை அதை பாதித்து இருக்கிறது என்பதை முதலிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

இரண்டாவது பொதுப்பணித்துறையினுடைய கடமையே, அரசாங்கக் கட்டடங்கள் அனைத்தையும் பாதுகாக்கிற கடமையையும் சேர்த்து செய்ய வேண்டிய நிலைமை இருப்பதால் பழைய கட்டடங்கள், என்றைக்கோ கட்டப்பட்ட கட்டடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அன்றைக்கு 30 லட்சம் ரூபாய் அளவிலே கட்டி முடித்து இருக்கலாம். இன்றைக்கு அதை கட்டுவதாக இருந்தால் 3 கோடியிலே கூட கட்ட முடியாது. 30 லட்சம் கட்டடத்தினுடைய மதிப்பு நாளடைவில் குறைகிற காரணத்தால் இன்று 7 லட்சம் ஆகிவிடுகிறது. அந்த 7 லட்சம் கட்டடத்திற்கு பழுதுபார்க்கிற பணிக்கு எவ்வளவு ரூபாய் செலவழிப்பது என்பதிலே விகிதாச்சாரம் வைத்திருக்கிறோம். 700 ரூபாய் அல்லது 7 ஆயிரம் ரூபாய் அளவிற்கு அந்த 7 லட்சம் ரூபாய் கட்டடத்திற்குச் சுண்ணாம்பு அடிக்கவோ, அல்லது பழுதுபார்க்கவோ செலவிட்டால் கூட அந்தக் கடமையை பொதுப்பணித்துறை செம்மையாகச் செய்ய முடியவில்லை. பொதுப்பணித்துறை ஏற்கெனவே உள்ள கட்டடங்களை, பழுதுபட்ட கட்டடங்கள்

[திரு. க. அன்பழகன்] [1981 ஏப்ரல் 16

இடிந்து போகாமல் அழிந்து போகாமல், நம்முடைய
நாட்டிலே உள்ள பஞ்சச் சூழ்நிலை காரணமாக, பொருளாதார
பற்றாக்குறை காரணமாக இருக்கின்ற கட்டடங்களை
காப்பாற்றியாக வேண்டும். தலைநகரை மாற்ற வேண்டுமானால்
அந்தக் கட்டடங்கள் இடியட்டும் என்று இருக்கலாமே தவிர
தலைநகர் மாறாது என்பதால் இருக்கின்ற கட்டடங்களை
காப்பாற்றுகிற முறையிலே நம்முடைய அரசு போதுமான
அளவு நிதி ஒதுக்காத காரணத்தால் பல கடமைகளைச்
செம்மையாகச் செய்ய முடியவில்லை என்பதை நான்
குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். 50, 60 ஆண்டுகளுக்கு
முன்னாலே கட்டப்பட்ட பல மருத்துவமனைக் கட்டடங்கள்
மிக வருந்தத்தக்க நிலையிலே இருக்கின்றன. பழுதுபார்க்க
போதுமான நிதி இல்லை. அதைத் தனியாக கவனிக்க
போதுமான நிதி ஒதுக்கப்படாத காரணத்தால் பழைய
கட்டடங்கள் இடிந்து விடுகின்றன என்ற நிலைமை
இருக்கின்றபோது வேறு ஏதோ 2 கட்டடங்களைக் கட்டி ஏதோ
ஓரளவிற்கு மருத்துவ மனைப் பணிகளைச் செய்கிறோம். அதைப்
போல தாலுக்கா ஆபீஸ் கட்டடங்கள் பல அந்த நிலைமையில்
இருப்பதை தனி முறையிலே பொதுப்பணித்துறையிலே உள்ள
சிறப்பான சில பொறியாளர்களைக் கொண்ட குழுவை
அமைத்து ஒவ்வொரு மாவட்டத்திலே உள்ள கட்டடங்களிலே
எந்த எந்தக் கட்டடங்கள் உடனடியாக கவனிக்கப்பட வேண்டும்
என்பதை பொதுப் பணித்துறை கவனத்தில் கொண்டால்
தவிர அந்தத் துறையினுடைய பணி செம்மையுறா என்பதை
நான் தெரிவிக்க விரும்புகிறேன். பழுதுபார்ப்பது அல்லது
கட்டடத்திற்கு சுண்ணாம்பு அடிப்பது அல்லது அதற்கு வர்ணம்
பூசுவது ஆகிய கடமைகளைச் செய்வதற்குக் கூட
ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி அளவை உயர்த்தினால் பொதுப்பணித்
துறை கட்டிடங்கள் குற்றங்குறை இல்லாமல் பாதுகாக்கப்படும்
என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் ஒன்று.
பொதுப்பணித்துறை மற்ற துறைகளை விட கிழடுதட்டிப்
போய் விட்டது என்ற ஒரு எண்ணம் இருக்கிறது. அமைச்சர்
அவரைச் சொல்வதாக எண்ணக்கூடாது. அமைச்சர்
இளைஞர், நான் கூறுவது இந்த துறை பற்றி- ஏனென்றால்
இந்தத் துறையிலே பணியாற்றுகிற ஏறத்தாழ அஸிஸ்டெண்ட்
எஞ்சினியராக வேலை பார்ப்பவர்கள் 10, 12 ஆண்டுகள்
துணைப் பொறியாளராக, உதவி எஞ்சினியராக பணியாற்ற
வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்கள் எக்ஸிக்யூடிவ்
எஞ்சினியராக ஆக முடியவில்லை. அதே நேரத்திலே இந்த
தாய் வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு மணமகனுடைய
வீட்டிற்கு சென்ற ஒரு வீட்டு மகள், மருமகள் என்ற
முறையிலே அதிகச் செல்வாக்கைப் பெறுவதைப்போல் இங்கே
இருக்கின்ற எஞ்சினியர் வீட்டு வசதித் துறையிலோ, அல்லது
கழிவுநீர் குடிநீர் துறையிலோ அல்லது வேறு துறையிலோ
பணியாற்றச் செல்வார்களானால், இங்கே 12 ஆண்டுக் காலம்
பணியாற்றியும் கூட பதவி உயர்வு பெறாதவர்கள் அங்கே 5, 6
ஆண்டுக்கால அளவில் பதவி உயர்வு பெறக்கூடிய நிலைமை



1981 ஏப்ரல் 16] [திரு. க. அன்பழகன்]

இருக்கிறது. நான் அதை விரிவாகச் சொல்ல நேரம்
இல்லாவிட்டாலும் கூட அவர்கள் சொன்ன கருத்தை எடுத்துக்
காட்ட விரும்புகிறேன். அந்தத் துறையிலே உள்ள
அஸிஸ்டெண்ட் எஞ்சினியராக இருப்பவருடைய நிலையும்
அதே பணியிலே இன்னொரு துறையிலே இருப்பவருடைய
நிலையும், பொதுப் பணித்துறையிலே பணியாற்றுகிறவர்களுக்கும்
வேறு துறையிலே பணியாற்றுகிறவர்களுக்கும் இடையே உள்ள
நிலைமை எப்படி இருக்கிறது என்றால் பொதுப்பணித்
துறையிலே உள்ள ஒரு உதவி செயற் பொறியாளர் தன்னுடைய
பெண்ணை வடிகால் வாரியத்திலுள்ள ஒரு உதவி செயற்
பொறியாளருக்கு மணமுடிக்கிறார் என்றால் அதிலே
வேடிக்கை ஒன்றும் இல்லை. அங்கே 30 வயதிலே அவன்
பெறுகிற பதவி இங்கே 45, 48 வயதிலே பெறுகிறார்.
ஆனால் நல்லவேளை அவர் பி. டபிள்யு. டி. யிலே இருக்கிற
காரணத்தினாலே அவர் பெண்ணையாவது அவர் திருமணம்
செய்து கொள்ளத் தயாராக இருக்கிறார். அந்த அளவிற்கு ஒரு
செல்வாக்கு இருப்பதற்கு பாராட்டத்தான் வேண்டும்.
அண்ட்யூ டிலே இன் கெட்டிங் புரமோஷன் இந்த துறை
முறையாக இயங்குவதை தானாகவே கெடுத்து விடும்.
அப்படிக் கெடுத்து விடுகிற காரணத்தால் இந்தத் துறையில்
பல குறைபாடுகள் ஏற்படுமானால் அந்தக் குறைபாடுகளுக்குக்
காரணம் அரசாங்கம் தான். அதேபோல் தமிழ்நாட்டிலே
பொதுப்பணித்துறையிலே பணியாற்றுகிற உதவிப்
பொறியாளர் ஏறத்தாழ ரூ. 600 சம்பளம் பெறுகிறார் என்றால்
கேரளமாநிலத்தில் 750 சம்பளம், கர்நாடகத்தில் 700 ரூபாய்
சம்பளம் ஆந்திராவிலே 750 ரூபாய் சம்பளம், இங்கே 600
ரூபாய் தான்.

[இரவு 7.10]

ஒரே படிப்பு, ஒரே தகுதி, ஒரே திறமை
தான்; வேண்டுமானால் இன்னும் சொல்லப்போனால் மற்ற
மாநிலங்களில் வேலை செய்பவர்களை விட நம்முடைய
பொறியாளர்களிடத்திலே சற்று அதிகமான திறமை
இருக்கும். ஏனென்றால் நீண்ட நாட்களாக வளர்ச்சி
பெற்ற பொறியியல் கல்வித் துறையில் பயிற்சி
பெற்று வருபவர்கள் அவர்கள். அந்த ஊதியத்தை
மாற்றுவதைப் பொறுத்த வரையிலே கூட, மாண்புமிகு
நிதியமைச்சரவர்கள் வரவு—செலவுத் திட்ட அறிக்கையிலே
சொல்வார்கள் என எதிர்பார்த்தேன். ஒன்மேன் கமிஷன்
ரிப்போர்ட் வந்திருக்கிறது; 100—க்கும் மேற்பட்ட பதவிகளுக்கு
ஊதியம் உயர்த்தப்பட்டிருக்கிறது; பல்வேறு தரத்தினருக்கும்
ஊதியம் உயரும் என்ற கருத்தை மட்டுமே தெரிவித்தார்கள்.
நான் கூட அன்றைய தினத்திலேயிருந்து அவரையே கூட கேட்டுப்
பார்த்தேன். அந்தப் பட்டியலைத் தாருங்கள் பார்க்கிறேன்
என்று. அவருக்கும் ஓய்வு கிடைக்கவில்லை, எனக்கும் திரும்பத்

திரும்ப கேட்பதற்கான பொறுமை இல்லை. அந்தப் பட்டியல் வராத காரணத்தினால்—வந்தால் கூட இந்தக் குறை அப்படியே இருக்குமோ என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. ஆகவே, பல்வேறு துறைகளிலேயும் உள்ள குறைகள் போக்கப்பட அரசு அக்கறை காட்டவில்லை. அதிலேயும் இந்தப் பொறியாளர்களை பொறுத்தவரையில் அஸிஸ்டெண்ட் எஞ்சினியர் என்ற நிலையிலே உள்ளவர்களும், எக்சிக்கியூட்டிவ் எஞ்சினியர் என்ற நிலையிலே உள்ளவர்களும் நீண்ட நாட்களாக அதேயிடத்திலே, அதே பதவியிலே இருக்க நேரிடுவதால் பொதுப்பணித் துறையில் இவர்களின் வேலையும் திறமையும் வளர்வதற்கு இடையூறு ஏற்படுகிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இன்னொன்று, இதிலே சில உயர்ந்த பொறுப்புகளிலே உள்ள சிலர் பதவியிலேயிருந்து விலகி வெளியே செல்லுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது யாரால் ஏற்பட்ட சூழ்நிலை? யார் யாருக்கிடையே என்னென்ன பேச்சு வார்த்தைகள் நடந்தன என்பதைப்பற்றி நான் சொல்வது என்பது அவ்வளவு பொருத்தமல்ல. நான் அதைச் சொன்னால் கூட இதுஉண்மைக்கு மாறானது என்று தெரிந்தவரைப்போல கூட ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லக்கூடும். ஆகவே நான் அந்த அளவிற்குச் செல்லவில்லை. மாறாக பொறியாளராக நீண்ட நாட்கள் அனுபவம் பெற்றவர்கள் நீடித்து பணியாற்ற முடியாத நிலையில் வேதனையோடு வெளியிலே செல்லுகின்ற நிலைமை இருக்கிறது.

தலைமைப் பொறியாளர் பதவிகள் சில நிறைவு செய்யப் படாமல் இருக்கின்றன. அதற்கடுத்த பல பதவிகள் நிறைவு செய்யப்படாமல் இருக்கின்றன. அவ்வாறு அந்தப் பதவிகள் நிறைவு செய்யப்படாததன் காரணமாக இன்றையதினம், தஞ்சை காவிரி மேம்பாட்டுத் திட்ட நீர்ப்பாசன வேலைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இன்னும் பல்வேறு பணிகளில் குறைபாடுகள் ஏற்பட்டு, இதன் மொத்த விளைவாக இந்தத் துறையில் பணிகளுக்குப் பல்வேறுவிதமான குறைகள் தொடர்ந்து ஏற்படக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்தக் குறைபாடுகளுக்கு இடம் தராமல், பொதுப்பணித்துறை கூட, ஒரு அரசாங்க இயந்திரத்தை நிர்வகிக்கிற துறைதான் என்பதால் அந்த இயந்திரத்தை நல்ல முறையில் நிர்வகிக்க, மற்றவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து, முறைப்படுத்தி அந்தந்தத் துறைகளிலே எவ்வளவு பேர்கள் பணியாற்றுவதற்கு இப்பொழுது தேவைப்படுகிறார்களோ அவர்களை அந்தந்தப் பதவிகளிலே நியமிப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கதர்த் துணி உற்பத்தியைப்பற்றியும், கதரோடு சேர்ந்த கிராம குடிசைத் தொழிலாக இருக்கின்ற பனைத் தொழில் போன்ற தொழில் துறைகளைப் பற்றியும் எடுத்து



சொல்லப்பட்டது. இந்த அரசு, அந்தத் துறையை நிர்வகிப்பதன் மூலம் எப்படிப்பட்ட நோக்கத்திலே செயல்பட வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன். எவ்வளவு அதிகமான அளவிற்கு ஏழை மக்கள் உழைக்கக்கூடிய வாய்ப்பு, பாடுபடக்கூடிய வாய்ப்பு ஆகியவற்றை உருவாக்கித் தர முடியுமோ அந்த வாய்ப்புகளை அரசு உருவாக்க வேண்டும். பனையேறுகின்ற தொழிலானாலும் சரி, கதர் நூற்கின்ற அந்தக் கடமையாக இருந்தாலும் சரி, பாய் முடைகின்ற கடமையாக இருந்தாலும் சரி, பனையோலையிலே கூடை முடைதலைச் செய்கின்ற வேலையாக இருந்தாலும் சரி, அழகான, பொருட்களைத் தயாரிக்கின்ற வேலையாக இருந்தாலும் சரி, தேன் சேகரிக்கும் தொழிலானாலும் சரி, கதரோடு தொடர்பு கொண்ட இத்தனைக் காரியங்களிலும் பொதுமக்களில் ஏழைகளுக்கு ஒரு நாளைக்கு 4 மணி நேரம் அல்லது 8 மணி நேரம் வேலை அல்லது ஓய்வு நேர வேலை, அதன்மூலம் குறைந்தது 25, காசு 50 காசு ஊதியமானாலும் அதைப் பெற தங்கள் ஓய்வு நேரத்தை செலவிடவும், அந்த வகையில் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ளவும், ஊக்கமளித்திட வேண்டும். இத்தகைய தொழில்கள் தமிழ்நாட்டில் ஏராளமான கிராமங்களில் உள்ளன. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் 4 கோடி பனை மரங்களிலே 3 கோடி பனை மரங்கள் பயன்படும் என்ற கணக்கைக் கூடச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் நாட்டின் வளத்தை மக்களினுடைய உழைப்போடு கலந்து மக்களின் வருமானமாக மாற்ற வேண்டும். அந்த வகையில் அதற்காக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் இதை ஒரு கொள்கையாகப் பரப்ப வேண்டும். நிர்வாகத்தின் மூலம் மட்டுமே காரியங்கள் நடைபெறாது. உத்தரவால் மட்டும் நாடு உருப்படாது. இன்னும் சொல்லப்போனால் போடப்படும் ஆணைகள் போட்ட இடத்திலே இருக்கும் அல்லது போன இடத்திலே இருக்கும். எனவே நாட்டு மக்களிடத்திலே இப்படிப்பட்ட தொழில்களைப் பற்றிய விளக்கக் கருத்துக்களை எடுத்து வைத்து அவர்களுக்கு ஊக்கத்தை உண்டாக்க வேண்டும். காந்தியடிகளின் இயக்கம் வெற்றி பெற்றதற்குக் காரணம், காந்தியடிகளும் அவரைப் பின்பற்றியவர்களும் அந்த இயக்கத்தைப் பற்றி நாட்டு மக்களிடத்திலே சென்று பிரச்சாரம் செய்தார்கள்.

அதேபோல் சுய மரியாதை இயக்கம் மக்களிடத்திலே பரவுவதற்கு தந்தை பெரியார் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டபொழுது, வீட்டுக்கு வீடு, திண்ணைக்குத் திண்ணை அந்தக் கருத்துக்கள் அதை விரும்புகிறவர்களாலே மற்றவர்களிடத்திலே எடுத்துச் சொல்லப்பட்டு பரப்பப்பட்டன. கைத்தறிக்கு மிகப்பெரிய கலங்கக்கூடிய நிலைமை ஏற்பட்ட பொழுது, கைத்தறி நெசவாளர்கள் எல்லாம் கண்ணீர்

விடுகின்ற நிலைமை ஏற்பட்டபொழுது, அண்ணா அவர்கள் கையாண்ட முறையிலும், பிரச்சாரத்தின் மூலமாகத் தான் கைத்தறிக்கு ஆதரவைத் திரட்டினார். எனவே, அரசாங்கத்திலே ஆட்சிப்பொறுப்பிலே உள்ளவர்களை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட தொழிலைப் பற்றி ஒரு மதிப்புணர்ச்சி மக்களுக்கு இருக்காது. அந்த மதிப்புணர்ச்சி ஏற்பட வேண்டுமென்றால் மக்களுடைய நிலைமைகளையும் அவர்களுடைய இன்றியமையாத தேவைகளையும் நிறைவு செய்ய இத் தொழில்கள் பயன்படும் என்பதை அவர்கள் உணரக் கூடிய நிலைமையை நாம் மக்களிடத்திலே ஏற்படுத்த வேண்டும். அதற்குப் பெரிய பிரச்சாரம் தேவை. அந்தப் பிரச்சாரம் என்று சொன்னவுடன் அதற்கு ரூ. கோடி ஒதுக்க வேண்டுமோ என்று கவலைப் படாதீர்கள். இத்தொழில்களில் ஈடுபடுத்த நம்முடைய பங்கு எந்த வகையிலே செலுத்தப்பட முடியுமோ அப்படி செலுத்தப்பட வேண்டும். ஆனால், 'இனிஷியேட்டிவ்' இல்லாத பொழுது, ஆர்வத்தை தோற்றுவிக்காத பொழுது, அதனுடைய அருமை, பெருமைகளை எடுத்துச் சொல்லாதபொழுது எந்த ஒரு திட்டமும் பயன் தராது. அந்த முறையில், கதர் திட்டத்தையும் அதைப்போல் குடிசையிலே நடத்தப்படுகிற தொழில்களுக்கு ஊக்கம் தருகிற வழியையும் அறிந்து அரசு நிறைவேற்ற வேண்டும். அதற்கு அரசு காட்டுகிற ஊக்கம் போதுமானதல்ல என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

மற்றொன்று, கதர் தொழிலில் கதரை உற்பத்தி செய்வதில் சில இடங்களிலே சில குறைகள் இருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். மில்லிலே தயாரிக்கிற நூலைக் கூட, சற்று மோட்டா நூலாகத் தயாரித்து, அதை கதர் உற்பத்தியிலே கலந்து விடுவதாக நான் கேள்விப்படுகிறேன். இதற்கெல்லாம் யாரையாவது சுட்டிக்காட்டி குற்றம் சாட்டி எனக்கு ஆக வேண்டிய பலன் ஒன்றும் இல்லை. குற்றம் செய்கிறவர் எங்கேயும் இருக்கிற காரணத்தால் அதற்காக நான் யாரையும் தனியாகக் குறிப்பிடுவது அவசியம் அல்ல. ஆனால், மில்லிலே தயாரிக்கிற நூல் கதர் துணியிலே கலக்குமானால் அப்படி நடைபெறுகிற காரியங்கள் அடியோடு தடுக்கப்பட வேண்டும். அதற்கு இடம் தரக் கூடாது. கைத்தறிக்கு மில்லிலே தயாரிக்கிற நூல் தான் மூலதனம். கையால் நூற்பதை கைத்தறியிலே நாம் மேற்கொள்வதில்லை. ஆகவே, மில்லிலே தயாரிக்கிற நூலைக் கொண்டு ஏராளமான ஆடை தயாரிக்க கைத்தறியை நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் கதர் அப்படியல்ல. நூலும் கையாலே நூற்கப்பட வேண்டும். அப்படி நூற்பதும் கூட, சமுதாயத்து அடித்தட்டு மக்களுக்கு வாழ்வளிப்பதற்காகத்தான். எனவே, அதிலே இந்த அரசு எச்சரிக்கையாக இருந்திட வேண்டும். அந்தக் கதர் நூற்பிலே ஈடுபட்டவர்களுக்கும் நெசவிலே ஈடுபட்டவர்



களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் பல இடங்களிலே சரியாகக் கொடுக்கவில்லையென்று சொல்கிறார்கள். ஏழைக்குத்தான் எப்பொழுதும் ஏமாற்றம் அதிகமாக இருக்கும். பணக்காரனுக்கு ஏமாற்றம் என்பது இன்கம் டாக்ஸ் இலாக்காவினாலே தான் வரும். ஆகவே ஏழைக்கு வருகிற அந்த ஏமாற்றம் அன்றாடம் பெறுகிற கூலியைப் பார்க்கிறபொழுது அவர்கள் நொந்து போகிறார்கள். எனவே, கதர் துறையாக இருந்தாலும், இது போன்ற வேறு துறையாக இருந்தாலும், அதிலே அவர்களுக்குக் கிடைக்கிற கூலி குறைவு என்ற காரணத்தால் அந்தக் கூலியை முழு அளவுக்கு நியாயமாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புகிறேன், கைத்தறியைப் பொறுத்த வரையில் அதற்காக நீங்கள் தந்திருக்கிற அறிக்கையைப் படித்து பார்க்கிறபொழுது நிறைவு அளிப்பதாக இருக்கின்றது என்பதிலே எனக்கொன்றும் மாறுபாடு இல்லை. ஆனால் காரியத்திலே கைத்தறி நெசவாளர்களுடைய நிலைமை என்ன? இந்த இலாக்காவிலே கைத்தறி நெசவாளர்களை முன்னேற்றுவதற்காகத்தான் கோ ஆப்டெக்ஸ், பிரைமரி ஹாண்ட்லூம் சொஸைடீஸ், இவையெல்லாம் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. உங்களுடைய அரசாங்கத்தினுடைய அறிக்கையிலே மொத்தம் எவ்வளவு கைத்தறிகள் இருக்கின்றன என்ற விவரமெல்லாம் இருக்கிறது. ஏறத்தாழ 5½ இலட்சம் கைத்தறிகள் இருக்கின்றன, 13½ இலட்சம் நெசவாளர்கள் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். 30 இலட்சம் பேர்கள் அவர்களை நம்பி வாழ்கிறார்கள். அவர்களைச் சுற்றி அவர்களது சுற்றுச்சார்பிலே வாழ்கிறவர்களையெல்லாம் கணக்கிட்டால் ஏறத்தாழ 50 இலட்சம் பேர்கள். ஆகவே கைத்தறி அடிப்படையிலே வாழ்கிற மக்களுடைய எண்ணிக்கை 10 பேருக்கு ஒருவர். ஏறத்தாழ நம்முடைய தமிழ் நாட்டிலே 10 பேரிலே ஒருவர். 100 பேருக்கு 5 பேர் அரசாங்கத்தை நம்பி வாழ்கிறார்கள்—பத்து பேருக்கு ஒருவர் கைத்தறியை நம்பி வாழ்கிறார்கள். 10 பேருக்கு 7 பேர் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். 10 பேருக்கு இரண்டு பேர் வாணிபம், மற்ற, மற்ற பல்வேறு துறைகளிலே, பல்வேறு தொழில்களை நம்பி வாழ்கிறார்கள். அப்படி ஒரு நிலைமை இருக்கிற பொழுது 10 பேருக்கு ஒருவர் கைத்தறியை நம்பி இருந்துதான் சமுதாயத்தினுடைய மொத்த வாழ்வு நடைபெறுகிற பொழுது, அந்தக் கைத்தறி நெசவாளருடைய வாழ்க்கைத் தரத்திலே முன்னேற்றம் ஏற்படுகிறதா? 1975-வது ஆண்டு அவர்கள் பெற்ற கூலியை விட இன்றைய தினம் வரையில் அவர்கள் பெறக்கூடிய கூலி உயர்ந்திருக்கிறதா? எந்த இடத்திலாவது உயர்ந்திருக்கிறது என்று நீங்கள் அறுதியிட்டுச் சொல்ல முடியுமா? 1975-வது ஆண்டு வாங்கிய கூலி, 1976-லே வாங்கிய கூலியைத்தான் 1981-வது ஆண்டிலே கூலியாக வாங்கிக் கொண்டு கைத்தறி நெசவாளர்கள் இன்றைக்கு

வாழ்கிறார்கள். ஆனால், நாட்டிலே எந்தத் துறையிலாவது 1976-வது ஆண்டு பெற்ற அந்தக் கூலியை, அந்த ஊதியத்தை இந்த ஆண்டு பெறக்கூடிய நிலைமை இருக்கிறதா? அரசாங்கத்திலே ஏவலராகப் பணியாற்றுகிற ஊழியராக இருந்தாலும் சரி, பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தாலும் சரி, எம். எல். ஏ.—யாக மருத்துவராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், 1975-1976—லே இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், 1975-1976—லே பெற்றதை விட 1½ மடங்கு, 2 மடங்கு ஊதியம் பெற்றுத்தான் இன்றைக்கு வாழ்கிறார்கள்.

[இரவு 7-20]

அந்த இரண்டு மடங்கு ஊதியம் கூட அவர்களைக் காப்பாற்றவில்லை என்று வாதாடுவதற்கு இடம் இருக்கிறது. விலைவாசி ஏற்றத்தாலே சூழ்நிலையிலே ஏற்பட்ட மாற்றத்தாலும் இது போதவில்லை என்று வாதாடுகிறார்கள். ஆனால் கைத்தறி நெசவாளர்களுக்கு 1975 ஆம் ஆண்டு எப்படிப்பட்ட ஊதியம் கிடைத்ததோ, அந்த ஊதியம் இன்று வரையில் எந்த மாற்றத்தையாவது பெற்றிருக்கிறதா என்று எண்ணிப் பாருங்கள். இன்னும் சொல்லப்போனால் 1975 ஆம் ஆண்டு 26 நெ. நூல் கட்டு ஒன்று ரூ. 55. ஆனால் இன்றைக்கு அதே 26 நெ. நூல் 1981—லே 110 ரூபாய்க்கு விற்கின்றது. அதை நெசவு செய்கின்ற தொழிலாளர்களுடைய கூலி மட்டும் 1975—லே என்ன கூலியோ அதே கூலிதான். பிறகு ஏன் சத்திரப்பட்டி, சங்கரன்கோவில் ரகளை ஏற்படாது? நாமே போனால் கூட அங்கே தாக்குவார்கள். ஏனென்றால் சத்திரப் பட்டியிலே வாழ்கிற மக்களோ, சங்கரன்கோவிலில் வாழும் நெசவாளர்களோ, ராஜபாளையத்திலே வாழ்கிற மக்களோ அல்லது கரூர் வட்டாரத்திலே வாழ்கிற நெசவாளர்களோ அல்லது பரமக்குடியிலே வாழ்கின்ற மக்களோ, எவ்வளவு நாட்கள் பட்டினியோடு போராடுவார்கள். வேலை கிடைக்கவில்லை தொழில் கிடைக்கவில்லை, வாரத்திலே 2 நாட்கள் வேலை இல்லை, மாதத்திலே 10 நாளைக்கு வேலை இல்லை, கூலி இல்லை, அதோடு அரைப் பட்டினியோடு குடும்பத்தை நடத்துகின்ற கைத்தறி நெசவாளர்கள் எவ்வளவு நாள் பொறுமையோடு இருப்பார்கள். 1976—லேயே கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்க வேண்டும் என்று குழு நியமிக்கப்பட்டு அது 1977 ஆம் ஆண்டிலே அறிக்கை தந்து விட்டது. நமது அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் தொழிலாளர்களிடத்திலே மிகுந்த ஆர்வம் உடையவர். எனக்கு நன்றாகத் தெரியும். தனித்தனியாகப் போனால் அவருக்கு ஆர்வம் அதிகம், சேர்ந்து போனால் அவருக்குக் கோபம் வரும். ஆகவே அப்படிப்பட்ட ஆர்வம் உடைய அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாகவே அதற்கான சட்டத்தை நிறைவேற்றிவிடுகிறேன் என்று.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, குறைந்த பட்ச ஊதியம் கொடுக்க, குழு ஒன்று விரைவிலே அமைக்கப்படும்.



திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, மினிமம் வேஜஸ் ஆக்டுக்காக குழு நியமிக்கப்படும் என்கிறார், குழு நியமிக்கிற அளவுக்கு அக்கறை இருக்கும்போது இப்போது இருக்கின்ற கூலியை அங்கங்கே உயர்த்தி அதற்காக சங்கரன் கோவிலில் நடைபெற்ற போராட்டத்தில், அவர்கள் 7 ஆண்டுக் காலமாக பெற்று வருகிற கூலி வாழ முடியாத அளவுக்கு அவர்களை எல்லாம் நெருக்கடிக்கு ஆளாக்கிய காரணத்தால், அவர்கள் எல்லாச் சங்கத்தாரும் ஒன்று சேர்ந்து, அ.தி.மு.க. சங்கத்து நிர்வாகிகளும் ஒன்று சேர்ந்து ஒரு நியாயமான கோரிக்கையை வைத்து உண்ணாவிரதம் இருந்து போராட்டம் நடத்தி, அப்படி நடத்திய பிறகும் ஆளுங்கட்சியிலே ஒரு சாரார் அவர்களுக்கு எதிர்ப்பானதனுடைய விளைவாக ஒரு போராட்டம் ஏற்பட்டுள்ளது. ஒரு வன்முறை அளவுக்கு—ஒரு சாரார்—ஒரு சாரார் என்று சொல்லுகிறேன்—அமைச்சர் அவர்களுக்குத்தெரிவதைவிட என்னிடத்திலே ஆதாரம் இருக்கின்றது. ஆகவே ஒரு சாரார். ஆளுங்கட்சியிலேயே 3 குழுக்கள் உள்ளதால்—அதிலே ஒரு சாரார், அதற்கு மேல் நான் போகவில்லை. அது கைத்தறியைவிட மோசமான நிலைமை. ஆகவே அப்படிப்பட்ட நிலைமை காரணமாக ஒரு சாரார் அந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு முற்பட்டதனுடைய விளைவு, காவல் துறையினுடைய மாவட்டத் தலைவர்—எஸ்.பி. அல்லது துணைக் கண்காணிப்பாளர்—டி.எஸ்.பி., அதேபோல கலெக்டர் இவர்கள் எல்லாம் சேர்ந்து ஏற்கனவே தரப்பட்ட கூலியிலே 15சதவிகிதம் உயர்த்தித் தரவேண்டும் என்று அவர்கள் சமாதானமாகப் பேசி அந்த 15% உயர்த்துவதற்கே கட்டாயம் ஒப்புக் கொள்ளுங்கள், போராட்டம் இல்லாமல் தொடர்ந்து அந்தத் தொழில் நடைபெறவேண்டும் என்றும், அவர்களுடைய வேலை வாய்ப்பு கெடக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டதற்குப் பின்னர் அந்த 15% உயர்வை ஒப்புக்கொள்ளாமல், மாஸ்டர் வீவர் என்று சொல்லப்படுகிறவர்களோ அல்லது வேறு விதமாக எப்படியோ தறிகளை வைத்துக்கொண்டு நெசவாளர்களிடத்தில் வேலை வாங்குகிறவர்களோ அவர்களை அடித்து நொறுக்குவதற்காக; ஆட்களைச் சேர்த்துக்கொண்டு அடித்து நொறுக்கி, ஏறத்தாழ 10 லட்சத்தில் இருந்து 20 லட்ச ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு இந்த அரசாங்கம் தருகிற பாதுகாப்பு இப்படிப்பட்டதுதானா? நான் அரசாங்கம் என்று சொல்கிறபோது, அது தனிப்பட்ட அண்ணா தி.மு.க. கட்சியிலே உள்ள எந்த ஒரு தோழனையும் விட இந்த அரசாங்கம் வலிமை மிக்கது என்றுதான் நான் நம்புகிறேன். அதையே நான் நம்பாத நிலைமைக்கு என்னை ஆளாக்காதீர்கள். திராவிட முன்னேற்றக்கழகத்திலே இருக்கிற யாரையும் விட, தி.மு.க. அரசு இருக்குமானால் அது வலிமையுடையது என்பது என்னுடைய நம்பிக்கை. அதைப்போல இன்றைக்கு இருக்கிற அரசு திட்டமிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அல்லது காவல்துறை அதிகாரி மூலமாக ஒருத் ஒப்பந்தம் ஏற்படுகிறபோது அந்த ஒப்பந்தத்தை காப்பாற்றுகிற அளவிற்கு அரசு ஆதரவு தரமுடியவில்லை என்றால் உங்களுக்கு கைத்தறி நெசவாளர்களின் கண்ணீர் தெரியவில்லை என்றுதான்

பொருள். ஒரு வேளை கண்ணீரை அடிக்கடிப் பார்க்கிற காரணத்தால் எது கண்ணீர், எது தண்ணீர் என்று தெரியவில்லை என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கலாம். கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னையில் ஒரு தனி அக்கறை காட்டவேண்டாமா? தமிழ் நாட்டினுடைய தனிப்பட்ட பண்பாட்டு அடிப்படையிலே பெருமைக்குரிய தொழிலாக உள்ள இந்தத் தொழிலைச் செய்து வாழ்கிறவர்களின் குடும்பங்கள் இதையே நம்பி வாழ்கின்றன. இதை விட்டு விட்டு இன்னொரு தொழிலைச் செய்கிற வாய்ப்பை நம்மாலே தர முடியுமானால் நல்லதுதான். ஏற்கனவே நம்முடைய அமைச்சர்களிலே ஒருவர் கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் எல்லாம் இனி கவலைப்படத் தேவையில்லை, எங்கள் ஆட்சி வந்து விட்டது, வீட்டிற்கு ஒருவருக்கு, கைத்தறி நெசவாளர் குடும்பங்களிலே உள்ள ஒருவருக்கு அரசாங்கம் வேலை கொடுக்கும் என்று சொன்னார்கள். அவர் சொல்லியதனால், நாங்கள் திரும்பத் திரும்ப ஒரு முறைக்கு மூன்று முறை அதையே கேட்டுப்பார்த்தோம். வீட்டுக்கு ஒருவருக்கு என்ன வேலை கிடைத்தது என்றால், நெசவுக்கு நூல் கிடைக்கவில்லை என்று அரசாங்கத்திற்குச் சொல்கிற வேலை இருக்கிறதே அந்த வேலைதான். தயவு செய்து அதற்கு மாற்றம் இருந்தால் சொல்லுங்கள். யாருக்காவது உங்களாலே வேலை கொடுக்க முடிந்ததா? தமிழ் நாட்டில் நெசவாளர் வாழ்கிற 1000 கிராமங்கள் இருக்குமானால் அந்தக் கிராமத்திலுள்ள கைத்தறி நெசவாளர் வீட்டுப் பிள்ளைக்கு ஒருவருக்காவது இந்த அரசாங்கம் வேலை கொடுத்து இருக்கிறதா? தரமுடியாததை எதற்கு அரசாங்கம் சொல்ல வேண்டும்? அப்படி ஒரு நல்ல எண்ணம் ஏற்பட்டதற்காக அரசாங்கத்தைக் குறைக் கூறவில்லை. நல்ல நோக்கத்தோடு அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யவேண்டும் என்றுதான் சொல்லியிருப்பார்கள். ஆனால் அனுபவம் என்பது ஒரு 5 ஆண்டுக்காலம் ஆனபின்புதான் ஏற்படுகிறது. அதற்குள் ஆட்சி கலைந்து விடுகிறது. ஆகவே, கைத்தறி நெசவாளர்களுக்கு வேறு வேலை கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். அவர்களுக்கு வேறு வேலை கொடுக்க வேண்டும் என்று நாம் எண்ணினாலும், அதற்குரிய முறையில் அவர்கள் ஒவ்வொருவரும் விண்ணப்பம் போடவேண்டும், அந்த வேலைக்கும் விகிதாச்சார அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்படவேண்டும். பின்னர் ஏற்கனவே வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்தவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். இப்படி பல நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்ற காரணத்தால், கைத்தறி நெசவாளர்களுக்கு வேறு வேலை அளிக்க இயலாத நிலையில் அரசாங்கம் அவர்களுடைய கூலி உயர்வுக்காவது வழி செய்து இருக்கவேண்டாமா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர்களின் வேலை எப்போது தொடங்குகிறது என்று சொன்னால், தினந்தோறும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை என்று இல்லாமல், விடியற்காலை 5 மணி



முதல் இரவு 8 மணி வரை இருக்கிறது. அது மட்டுமல்லாமல் அங்கே ஒருவர் மட்டும் வேலை செய்தால் போதாது. மனைவி ஒத்துழைக்கவேண்டும். 10-12 வயதில் பிள்ளைகள் இருந்தால் அவர்களும் கூடவே வேலை செய்யவேண்டும். வீட்டில் மற்ற பெரியவர்கள் இருந்தால் அவர்களும் ஒத்துழைக்கவேண்டும். இப்படி ஒரு குடும்பத்தில் உள்ள 2—3 பேர் கூடவே வேலை செய்தால்தான் ஒரு நாள் கூலி ஒரு நெசவாளிக்குக் கிடைக்கும். அப்படி கிடைக்கின்ற ஊதியத்தை வைத்துக்கொண்டு அவன் மாதம் முழுவதும் வாழமுடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடுத்து அவர்களுக்கு மாதம் பூராவும், ஆண்டு பூராவும் நூல் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கவேண்டும் என்கிற அடிப்படையில்தான் கூட்டுறவு நூற்பாலைகள் ஏற்படுத்தப்பட்டன. அங்கே ஒரு 500-600 பேருக்கு வேலை கிடைக்கும் என்கிற காரணத்திற்காக மட்டும் அவைகள் ஆரம்பிக்கப்படவில்லை. கூட்டுறவுத் துறை மூலம் நூல்கள் தயாரிக்கப்படுமானால், அங்கே தயாரிக்கப்படுகின்ற அத்தனை நூலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு முறைப்படி தந்து, அவர்கள் மாதம் முழுவதும் வேலை பெறுகின்ற வகையில், ஆண்டு முழுவதும் வேலை செய்கின்ற முறையில் பயன்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. ஆனால் அப்படி கூட்டுறவு ஸ்பின்னிங் மில்கள் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட நூல் முழுவதும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தரப்படுகிறதா என்றால், தரப்படவில்லை. கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டும்தான் அந்த நூல் தரப்படும் என்று நம்மாலே சொல்லமுடியவில்லை. செல்வாக்குப் பெற்றவர்கள் அதிலே பங்கு பெறும் நிலைமை இல்லையா? அப்படிக் வைக்கின்ற காரணத்தால் வேறு நோக்கம் ஏற்படவில்லையா? தனிப்பட்டவர்கள் கூட்டுறவுத் துறையில் நூலை விலைக்கு வாங்கிக்கொண்டு, 100 கட்டு, 200 கட்டு என்று வாங்கிக்கொண்டு விட்டு, பின்னர் கைத்தறி நெசவாளர்கள் கண்ணீரும் கம்பலையுமாக வருகின்ற நேரத்தில் 10—20 ரூபாய் அதிகவிலைக்கு விற்கும் நிலைமை இல்லையா? ஆகவே, கூட்டுறவு நூற்பாலைகள் வைக்கப்பட்டதன் நோக்கம் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

அதைப்போலவே, தனிப்பட்ட முறையில் ஆலை வைத்துள்ளவர்களிடத்தில் இருந்தும் அவர்கள் உற்பத்தி செய்கிற நூலில் 25% அல்லது 30% கூட்டுறவுச் சங்கங்களுக்கு தரவேண்டும் என்ற கட்டுப்பாடு விதித்து இருக்கிறோமா? அவர்களிடமிருந்து ஏதோ ஒரு வகையிலே நூலைப் பெற்றுத் தருகிறோம். தற்போது ஜனதா ரகங்களை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு வழிகளை மத்திய சர்க்கார் ஏற்படுத்தி உதவி செய்வதாகக் கூறியிருப்பதால், கொஞ்சம் மோட்டா ரக நூல் 20 கவுண்ட் 40 கவுண்ட் கிடைக்க வழி இருக்கிறது. அதையும் முழு அளவில் கிடைப்பதற்கான வழிவகைகளை அரசு செய்து தராத காரணத்தால் அதுவும் வெற்றிபெறவில்லை, குறைந்தவிலையில் நூல்

கிடைத்தால், அந்தத் துணி விலையும் குறைவாக இருக்கும். அந்த நூலும் கிடைக்காத காரணத்தால் அந்த சொசைடிகள் அந்த ரகத் துணிகளை தயாரிக்க இயலாமல் இருக்கின்றன, தற்போது நூற்பாலைகளின் உரிமையாளர்கள் அந்த ஜனதா ரகம் தயாரிக்க நூல் கொடுக்க ஒப்புக்கொண்டு இருப்பதால், ஏறத்தாழ 40 கவுண்ட் என்ற அளவிற்கு அவர்கள் தர முன்வந்து ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்த ரகத் துணி மிகப்பெரிய அளவிற்கு உற்பத்தி செய்யப்படுமானால் நல்ல மார்க்கெட் கிடைக்கும். ஆகவே, ஜனதா ரகங்கள் உற்பத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசாங்க ஒத்துழைப்பும் இருப்பதால் அதை முழு அளவிற்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று கேட்டு, அதை நிறைவேற்றும் வழிவகையை அரசாங்கம் பரிசிலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் தகராறு ஏற்படுகிறபோது, தொழிலாளர்களுக்கும் அவர்களை வைத்து வேலை வாங்குபவர்களுக்கும் இடையே தகராறு ஏற்படுகிறபோது, நெசவாளர்கட்கு அமைப்புமுறை பாதுகாப்பாக இல்லை.

[இரவு 7-30]

அவர்கட்குப் பாதுகாப்புத் தரவேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. இந்த பாதுகாப்பு தந்தால், அதற்கு கைத்தறித் துறையிலே இருக்கின்ற சிறு சிறு முதலாளிகள் நாளை எங்களுக்கும் அவர்களுக்கும் நல்ல உறவு இருக்காது என்று சொல்கிறார்கள். அதிலே கூட ஓரளவு விவாதத்துக்கு இடம் இருக்கலாம். ஆனால் குறைந்தபட்ச கூலி நிர்ணயத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்றால் அதற்கும் போராட்டம் ஏற்படும். போராடும் வழிமுறை என்பதற்குப் பதிலாக சமாதான முறையில் பாதுகாப்பு இருந்தால்தான் கைத்தறி நெசவாளர்கள் பிரச்னை கண்ணீர் புகையிலே போய் முடியாது. இப்படிப்பட்ட நிலை இருந்தால் இந்த ஆட்சியில் அல்ல, எந்த ஆட்சி இருந்தாலும் எல்லா இடங்களிலும் போராட்டம் வரும். இந்த நிலைமை இருக்கும்போது அடிக்கடி அமைச்சர்கள் பரிசீலனை செய்து பரிகாரம் காண இயலாத காரணத்தால் இன்னும் சற்று வேகமாக வளரும். இப்படிப்பட்ட நேரத்தில் அவர்களுக்கு இருக்கிற பிரச்னையைத் தீர்த்து வைக்க அரசாங்கத்தில் மற்ற தொழிலாளர்களுக்கு லேபர் கமிஷனர் எப்படி செயல்படுகிறாரோ அப்படி கைத்தறித் துறையிலும் செயல்படவேண்டும். கலெக்டர், டி.எஸ்.பி. அல்லது எஸ்.பி.—இவர்கள் போய் பிரச்னையைக் கவனிப்பதற்குப் பதிலாக லேபர் கமிஷனர் போன்றவர்களே அவர்கள் பிரச்னையைத் தீர்த்துவைக்கின்ற ஏற்பாடு இருக்கவேண்டும்.

நெசவாளர்கள் கூலி வாங்கிக்கொண்டுதான் வேலை செய்கிறார்கள். அவர்களிடம் வேலை வாங்குவோர் சிறு சிறு முதலாளிகள் என்றாலும் சட்டத்திற்கு அவர்கள் முதலாளிகள்



தான். 20 பேர்களுக்கு குறைவாக ஒரு இடத்தில் வேலை செய்தால் அவர்களுடைய பிரச்சனையை எழுப்ப முடியாமல் இருக்கலாம்; அந்த முதலாளிகள் கோரிக்கையைக் கேட்காமல் இருக்கலாம். ஆனால் 100 பேர், 200 பேர் சேர்ந்து, தொழிலாளர்கள் சேர்ந்து சங்கம் வைக்கும்போது அந்த உரிமையை நாம் மறுக்கக்கூடாது. அது அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு. இன்னொரு பக்கம் சுமைதூக்கும் தொழிலாளர்கள் சங்கத்தை நாம் ஆதரிக்கவில்லையா? அவர்கள் தனிப்பட்டவர்களிடம் வேலை செய்யலாம் போர்ட்டர்களா வேலை செய்யலாம். அப்படிப்பட்டவர்களுடைய சங்கத்தை ஏற்றுக்கொள்ளும்போது இந்த நெசவுத் தொழில் செய்கின்றவர்களுடைய சங்கத்தினை ஏற்பது அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்பதால் அரசாங்கம் அதைப் பரிவோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்களுடைய கஷ்டத்தைப் போக்க, அவர்களுக்கு வீடு கட்ட 1,000 ரூபாய் மானியமும் 6,500 ரூபாய் கடனும் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். 6,500 ரூபாய் கடனாகவும், 1,000 ரூபாய் மானியமாகவும் கொடுத்து உதவி செய்து இதுவரையில் அவர்கள் எத்தனை வீடுகள் கட்டியிருக்கிறார்கள்? கடந்த ஆண்டு இந்தத் திட்டத்தை அறிவித்தீர்கள். இதுவரையில் எங்காவது வீடு கட்டியிருந்தால் சொல்லுங்கள். இன்னும் சொல்லப்போனால் கடனைவாங்குகிறவர் எப்படிப் பெறுவது என்பதே இன்னும் பரிசிலனையில் இருக்கிறது.

அது மட்டுமல்ல. 10 ஆண்டுக்கு முன்னால் 6,000 ரூபாயில் வீடு கட்டலாம். இன்றைக்குக் கட்ட முடியாது. கழக ஆட்சிக் காலத்தில் சென்னையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டினோம். கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 1975-ல் 4,000 ரூபாயில் வீடு கட்டிக்கொடுத்தோம். அதுபற்றி அமைச்சர் வீரப்பன் இது மனிதன் வாழக்கூடிய வீடா? என்னைப் போன்றவர்கள் நுழைய முடியுமா என்று பேசினார். அவர் அப்படிப் பேசியதன் நோக்கம் அவை சிறிய வீடுகள் என்பது. இப்போது எப்படிப்பட்ட வீடுகள் கட்டுகிறார்கள் என்றால் கோட்டையில் வந்து பாருங்கள் என்கிறார்கள்.

6,500 ரூபாய் கடன் தருகிறோம் 1,000 ரூபாய் மானியம் தருகிறோம்; ஆக 7,500 ரூபாய் தருகிறோம் என்று சொன்னால் நெசவாளர்களால் எப்படி அந்தப் பணத்தில் வீடு கட்ட முடியும்? ஏற்கனவே கடனாளியாக இருந்தால்தான் கைத்தறி நெசவாளர் என்று சொல்வார்கள். ஆக, ஏற்கனவே கடனாளியாக இருக்கின்ற நெசவாளியால் இந்தப் பணத்தில் எப்படி வீடு கட்ட முடியும்? அவர்களுக்கு வீடு கட்ட நிலமாவது இனாமாகத் தரவேண்டும். இந்தப் பணத்தில்தான் நிலத்தையும் வாங்க வேண்டுமென்றால் நிச்சயமாக முடியாது. நிலத்தை வாங்கிக் கொடுக்காவிட்டாலும் 20 பேர், 50 பேர்களுக்குச் சேர்ந்து ஒரே இடத்தில் வீடு கட்டும் திட்டமாவது இருக்க வேண்டும்.

கூட்டுறவு சங்கம் அமைத்து அதன் மூலம் ஒரே இடத்தில் 50 வீடு, 60 வீடு என்று கட்டினால் ஓரளவுக்கு செலவு குறையக்கூடும். அப்படி இல்லாமல் இந்த 7,500 ரூபாய் மட்டும் கொடுக்கப் பட்டால் வீடு கட்டுவார்கள், எப்படிக் கட்டுவார்கள் என்றால் முன்பக்கம் சுவர் இருக்கும், பின்பக்கம் சுவர் இருக்காது. இந்தப் பணத்திற்கு அப்படித்தான் கட்ட முடியும்.

இந்த நிலையில் அவர்களுடைய வீடும் கட்டி முடியாது; வாங்கிய பணத்தையும் திருப்பிக் கட்ட முடியாது. இந்த சர்க்காரே இருந்தால் பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்று அவர்கள் நினைக்கலாம். அமைச்சர் இராகவானந்தம் அவர்களைக் கேட்டால்கூடச் சொல்வார். கடனைத் தருகிறோம் வாங்கிவிட்டு போங்கள். திருப்பிக்கட்ட முடியவில்லை என்றால் சொல்லுங்கள் அப்புறம் பார்க்கலாம் என்று, அமைச்சர் அவர்கள் வெளியிலே இருந்தால் அப்படித்தான் செய்திருப்பார்கள். இப்போது என்ன சொல்வார்கள் என்று தெரியாது. ஆகவே, இப்போது இருக்கிற சூழ்நிலையில் இந்தப் பணத்தை நம்பி வீடு கட்ட முடியாது. 10,000 ரூபாய் அளவுக்காவது இருந்தால்தான் வீடு கட்ட முடியும். அதோடு கூட்டுறவுத் துறையில் 50, 60 பேர்களுக்கு சேர்த்து வீடு கட்டும் திட்டமும் இருக்க வேண்டும்,

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கைத்தறித் தொழில் நசித்துப்போகிற நேரத்தில் காப்பாற்ற வந்த ஒன்றுதான், வரப்பிரசாதம் என்று கூடச் சொல்லலாம், இந்த ரிபேட், தள்ளுபடித்தொகை.

இந்த ரிபேட் தொகையைப் பொறுத்தவரையில் மத்திய அரசிடம் கைத்தறி நெசவாளர்களின் வறுமை நிலைமையை எடுத்துச்சொல்லி வற்புறுத்தினால் அந்த ரிபேட் தொகையினை மத்திய அரசினர் ஏற்றுக்கொள்வார்கள். ரிபேட் தொகையைப் பொறுத்தவரையில் மாநில அரசு பத்து பைசாவையும் மத்திய அரசு பத்து பைசாவையும் ஏற்றுக்கொள்வதற்கு ஒப்புக்கொண்டு அந்த ரிபேட் தொகையையும் ஆண்டில் ஒரு மாத காலத்திற்குத் தான் தரப்படும் என்பதும் அதற்கு மேலே போனால் ரிபேட் தொகை தரப்படமாட்டாது என்று சொல்வதும் அதேபோன்று யாராவது தனிப்பட்டவர்கள் கைத்தறி துணியினை மொத்தமாக வாங்குவார்களேயானால் அவர்களுக்கு 50 ரூபாய்க்கு மேற்பட்ட தள்ளுபடியை ஒப்புக்கொள்வதில்லை என்று கூறுவதும் பத்து சதவீதத்திற்கு மேலே தள்ளுபடியை அந்த பில் தொகையிலே ஒப்புக்கொள்வதில்லை என்பதும், மொத்தமாகக் கைத்தறி துணிக்கு மக்களிடத்திலே எப்படி ஒரு செல்வாக்கை உண்டாக்க விரும்புகிறோமோ அதற்கு இடையூறாகத்தான் இருக்கும். எனவே இந்த ரிபேட் தொகையைப் பொறுத்தமட்டில் மாநில அரசு தருகின்ற அளவுக்கு மத்திய அரசும் தரவேண்டும் என்பதற்காக நீங்கள் மத்திய அரசினிடத்திலே கைத்தறி நெசவாளர்கள் எப்படிப்பட்ட வறுமையிலே இன்றையதினம் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். துணி எவ்வளவு தேங்கி இருக்கின்றது என்பதை எல்லாம் எடுத்துச் சொல்லவேண்டும் பரமக்குடியிலே துணி தேங்கி இருக்கின்றது என்றால் அங்கு



கோ-ஆப்டெக்ஸ் ஓரளவு வாங்கிவிட்டது என்றாலும் இன்னும் எவ்வளவு தேங்கி இருக்கின்றது என்ற விவரத்தைச் சொல்லாவிட்டால் கைத்தறி நெசவாளர்கள் படுகின்ற துன்பத்தின் அளவு தெரியாது. மற்றொன்றை சொல்ல விரும்புகிறேன். ரிபேட் கொடுப்பது என்பதைப் பொறுத்தவரையிலே மாநில அரசு மொத்தம் கோ-ஆப்டெக்ஸ்-க்குக் கொடுப்பது 75 இலட்சம் மற்ற பிரைமரி சொசைட்டிகளுக்கெல்லாம் சேர்த்து ஏறத்தாழ 200 இலட்சம் அல்லது 175 இலட்சம் என்ற இந்தத் தொகையை எந்த சொசைட்டியாக இருந்தாலும் அந்த சொசைட்டிதான் அரசு அவர்களுக்குத் தரக்கூடிய மொத்த தொகைக்கு மேற்பட்ட தொகையை அந்த சொசைட்டிகள் தள்ளுபடி செய்து கொடுத்தால் அதை அவர்களே, ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒருமுறை இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். ஏறத்தாழ 575 இலட்சம் என்று கருதுகிறேன். இந்த 575 இலட்சம் ரூபாய் மொத்த தள்ளுபடி ஆகும் என்ற குறிப்பு இருக்கின்றபோது அரசாங்கம் 250 இலட்சம் தான் இசைந்திருக்கின்றது என்ற குறிப்பும் இருக்கின்றது. அப்படியானால் மீதித் தொகை கூட்டுறவு சொசைட்டியினர்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைமை இருக்குமேயானால் எப்படி அவர்கள் ஊக்குவிக்கப் படுவார்கள். உள்ளபடியே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் எனக்கு தெரிந்த வரையில், முழுத் தள்ளுபடித் தொகையையுமே மாநில அரசும் அல்லது மத்திய அரசு உதவி இருக்குமேயானால் அவர்களிடமிருந்து அதனைப் பெற்றும் அரசே பொறுப்பு ஏற்றுக்கொண்டது. அப்படி ஏற்றுக் கொண்டு அந்த தள்ளுபடித் தொகையை கோ-ஆப்டெக்ஸுக்கும் மற்ற பிரைமரி சொசைட்டிகளுக்கும் அரசு தந்தது. ஆனால் தற்போது அப்படி முழு அளவுக்கு தரப்படமாட்டாது என்றும் ஓரளவுக்குத்தான் தருவோம் என்றும் சொல்லி மீதித் தொகையை அந்த கோ-ஆப்டெக்ஸும் பிரைமரி சொசைட்டிகளும்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றால் அந்தத் தொழிலே காட்டப் படவேண்டிய ஊக்கம் காட்டப்படமாட்டாது. அதேபோல் இன்னொன்று. அந்த கோ-ஆப்-டெக்ஸ் துணிகளை எங்கே இருந்து கொள்முதல் செய்யப்படுகிறதோ அவர்களுக்கு உரிய பணம் அதற்கான தொகை போய்ச் சேர 2 மாத காலம் ஆகிவிடுகிறது.

தலைமை கூட்டுறவு சொசைட்டிக்கு கூட்டுறவு சொசைட்டி தருகின்ற துணி என்ற காரணத்தால் ஒருவருக்கொருவர் நல்ல உறவோடு கூட தருகின்ற நிலைமை இருக்கலாம். ஆனால் காலத்தில் விலைக்குரியதொகை போய்ச் சேராவிட்டால் பிரைமரி சொசைட்டிகள் நல்லமுறையில் இயங்காது. கோ-ஆப்டெக்ஸிலே ஏறத்தாழ பத்து கோடி ரூபாய் அளவுக்கு மூலதனம் இருக்கின்றது. அதிலே 5 இலட்சம் ரூபாய் வரை உற்பத்தி ஆகின்ற துணிகள் அவ்வளவையும் பிரைமரி சொசைட்டியிலே இருந்து வாங்கிவிட வேண்டும் என்று ஏற்கெனவே அரசு ஒரு ஆணை பிறப்பித்திருப்பதாக என்னுடைய நினைவு. ஆனால் அந்த 5 இலட்சம் ரூபாய் வரை துணி உற்பத்தி செய்யும் பல சொசைட்டிகளிலே துணி வாங்கப்படவில்லை. இன்னும்

சொல்லப்போனால் கோ—ஆப்டெக்ஸ் எந்த சொசைட்டியிலே வாங்குவது என்பதிலே ஏலம் போட்டுக்கொண்டிருக்கின்றது. அவர்களுக்கு வேண்டிய சொசைட்டியாக இருந்தால் வாங்குகிறார்கள். இல்லை என்றால் வாங்குவது இல்லை.

இன்னும் சொல்லப்போனால் தொழிலாளர்கள் தாங்களாகவே சேர்ந்து அமைத்துக் கொண்டிருக்கின்ற கூட்டுறவு பிரைமரி சொசைட்டியாக இல்லாமல் கைத்தறி தொழிலில் சங்கம் என்ற முறையிலே ஒரு அமைப்பு பல இடங்களிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த சங்கங்களிலே இருந்து வாங்குவதிலேயும் அல்லது மற்ற சங்கங்களிலே இருந்து வாங்குவதிலேயும் கோ—ஆப்டெக்ஸைப் பொறுத்தமட்டில் யாரிடத்திலே வாங்குவது என்பதிலே ஒரு பார்ட்டிசான் ஆட்டிட்யூட் அதாவது ஒரு பாரபட்ச உணர்வோடு நடந்து வருவதாக நான் கேள்விப்படுகிறேன். அது உண்மை இல்லை என்றால் மகிழ்ச்சி அடைவேன். அப்படிப் பாரபட்சமாக நடப்பதற்கு எது காரணம் என்றால் பல இடங்களிலே பல பிரைமரி சொசைட்டிகளிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களையே நாமினேட் செய்திருக்கிறீர்கள். அது கூட செய்யவில்லை என்றால் நாங்கள் எப்படி ஆட்சி நடத்துவது என்று நீங்கள் கேட்கலாம், அதிலே நியாயம் இருக்கின்றது, ஏனென்றால் இதையெல்லாம் நிறைவேற்றத் தானே நாம் ஆட்சிக்கே வந்தோம். ஆகவே அப்படி அந்த அடிப்படையிலே நாமினேஷன் செய்ததினுடைய விளைவு தகுதியற்றவர்கள் பலபேர் நாமினேஷன் மூலம் சொசைட்டி நிருவாகிகளாக இடம்பெற்றுவிடுகிறார்கள். தேர்தல் என்று சொன்னால் 100-க்கு 90 பேர் அல்லது 80 பேர் தகுதியுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 100-க்கு பத்து பேர் அல்லது 20 பேர் பொறுப்பற்றவர்கள் வரக்கூடும். ஆனால் நாமினேஷன் செய்கின்றபோது அவர்களுடைய முகத்தைப் பார்த்து நாமினேஷன் செய்கின்ற காரணத்தால் அவர்களுடைய ஜாதகம், அவர்களுடைய முந்திய வரலாறு, அவர்களுடைய நடவடிக்கை ஆகியவை உங்களுக்குத் தெரியாது. கட்சிக்கு வேண்டுமானால் அவர்கள் உண்மையாக இருக்கலாம். ஆனால் பொதுமக்கள் அவர்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், அப்படி பல இடங்களிலே, பத்து சங்கங்கள் என்றால் அவற்றிலே 7 சங்கங்களிலே இன்றையதினம் ஆளும் கட்சியினரையே நாமினேஷன் நியமனம் செய்திருக்கிறீர்கள். இந்தமுறை கோ—ஆப்டெக்ஸின் உச்சபீடம் வரையிலே செல்கின்றது. எனவே அங்கே ஒரு தொடர்பு வருகின்றது. ஆளும் கட்சியினரிடையே உள்ள உறவு என்பது அங்கே வருகின்றது. அந்த உறவு இருப்பதிலே கூட எனக்கு வருத்தம் இல்லை.

(இரவு 7-40)

அந்த உறவு சில சொசைட்டிகளிலேதான் துணிகளை வாங்குவது மற்ற சொசைட்டிகளிலே வாங்குவது இல்லை என்கிற நிலைமையை ஏற்படுத்துவதால், பல இடங்களிலே கைத்தறி நெசவாளிகள், கட்சிச் சார்பற்றவர்கள், பலதொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். எனவே நான் இந்த கைத்தறி



துறையைப் பொறுத்தவரைக்கும் பல கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன் என்றாலும், அதிக நேரம் இல்லை என்ற காரணத்தால் வலியுறுத்தி ஒன்றிரண்டை மட்டுமே சொல்ல விரும்புகிறேன். கைத்தறியைக் காப்பாற்ற வேண்டுமானால், முதலிலே அந்தத் துறையிலே கண்ணியமான ஒரு முறையைத் தயவுசெய்து உருவாக்குங்கள், அது ஏழைகளுடைய துறை, பாட்டாளிகளுடைய துறை, நொந்துபோனவர்களுடைய துறை. வாழ முடியாதவர்களுடைய துறை. இன்னும் இரண்டு தலைமுறை கழிந்து அந்தக் குடும்பங்கள் நெசவாளர் குடும்பமாக இருக்குமா என்று சந்தேகப்படக்கூடிய நிலைமைக்கு ஆளான ஒரு துறை.

எனவே, விவசாயிகளைவிட, வேறு தொழிலாளர்களைவிட அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலைமைக்கு ஆளாகியிருக்கக் கூடிய, கைத்தறி நெசவாளிகளுக்கு வாழ்வு கொடுக்க வேண்டுமானால் அவர்களைக் காப்பாற்ற வேண்டுமானால், அவர்களுடைய பிரைமரி சொசைட்டிகளில் அவர்களுக்குள்ளே தேர்தல் முறைகளைக் கொண்டுவாருங்கள். பஞ்சாயத்துக்களில் தேர்தல் நடத்தவில்லை என்றால் அந்த அரசியல் என்று கருதிக் கொள்ளலாம். ஆனால் இந்த சொசைட்டிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நம்பிக்கையுள்ளவர்கள் அந்த சொசைட்டிகளின் நிருவாகத்தில் பங்கு வகிப்பதற்கு பிரைமரி சொசைட்டியாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இருந்த முறையில், தேர்தல் முறையை ஏற்படுத்துங்கள். ஏனென்றால் நாமினேஷன் முறை மூலமாகச் செய்வதில் சிலபேர் தங்களுடைய தனி செல்வாக்கை வளர்த்துகொள்ள, தவறான முறையிலே தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முயலுகிறார்கள். அதற்கு இடம் தர வேண்டாம். இன்னும் சொல்லப்போனால், கைத்தறி நெசவாளிகள் நம்பிக்கையற்றுப் போயிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது நம்பிக்கையை ஏற்படுத்துங்கள். வாழ முடியும் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு ஏற்படுத்துங்கள். கைத்தறிக்கு ஆதரவாகச் செயல்படுவோம் என்னும் உறுதியை மேற்கொண்டு செயல்படுத்திக் காட்டுங்கள். அவர்களைக் காப்பாற்றாவிட்டால் கைத்தறித் துறை என்று ஒன்று இருந்தும் பயன் இல்லை என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கதர், பொதுப்பணித் துறை சம்பந்தமாக கொண்டுவரப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மீது 13 சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களது கருத்துக்களை வெட்டுத் தீர்மானங்கள் வழியாகவும், மற்றும் அவர்களுடைய கருத்துக்களை வாதிப்பதன் மூலமாகவும் இங்கே பல கருத்துக்களை கூறியிருக்கிறார்கள். அதிலே அதிகபட்ச வேலை எனக்கு இல்லாத ஒரு சூழ்நிலையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துக்காட்டி பேசியிருக்கிறார்கள்.

[திரு. எஸ். என். இராசேந்திரன்] [1981 ஏப்ரல் 16

இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சில கருத்துக்களை வேகமாகவும், நெசவாளிகளுக்கு இந்த அரசு சரியான முறையிலே வழி வகைகளை செய்து கொடுக்கவில்லை என்பது போலவும் குறைபாடுகளாக எடுத்துச் சொன்னார்கள் அவருக்கு முன்பாக முதன்முதல் பேசிய மாண்புமிகு புருஷோத்தமன் அவர்கள் கூறியபோது, தனிப்பட்ட முறையிலே கைத்தறி கண்காட்சியிலே ஏற்பட்டிருக்கிறதாக சில குறைபாடுகளை அவர்கள் கூறினார்கள். ஆனால் அவர்கள் கூறியபடி எந்த ஒரு குறைபாடும் கைத்தறி கண்காட்சியிலே இல்லை. ஆகவே, தனிப்பட்ட நபர்களுக்காக எந்த ஒரு ஸ்டாலும் கொடுக்கப்படவில்லை. அத்தோடு ரிபேட்டைப் பற்றி அவர்கள் கூறினார்கள். கண்காட்சியிலே இருப்பவர்களுக்கு, சர்க்கார் மூலமாக 10 சதவீதம் கொடுக்கப்படுகிறது. சங்கங்களின் சார்பாக அவர்களுடைய தரத்திற்கு ஏற்ப அவர்களுக்கு 10 சதவீதம் முதல் 15 சதவீதம் வரை கொடுக்கப்பட்டு, மொத்தத்தில் 20, 25 விழுக்காடுகள் கொடுக்க கூடிய சூழ்நிலையில் கொடுக்கப்படுகிற காரணத்தால், பொதுமக்களிடத்திலே அதிகமான செல்வாக்கைப் பெற்றிருக்கிறது.

கடந்த ஆண்டு கைத்தறிக் கண்காட்சியிலே விற்பனை செய்வதை விட இந்த ஆண்டில் இதுவரையில் விற்பனை ஆனது அதைப்போல இரட்டிப்பு மடங்கு இருக்கிறது. அதற்கான வரவேற்பும் நல்லமுறையில் இருக்கிறது. நமது கோ–ஆப்டெக்ஸ் ஆலோசனைக் குழுவைப்பற்றி தவறான ஒரு கருத்தை உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் கூறினார்கள். ஆலோசனை குழு என்பது கோ–ஆப்டெக்ஸுக்கும், பிரதம சங்கங்களுக்கும் எப்படி இயங்க வேண்டும் என்ற முறையிலே அந்தந்த சங்கங்களுக்கு நேரிடையாக சென்று, ஆலோசனைக் குழுவைச் சேர்ந்தவர்கள் அங்குள்ள நிலைமைகளை நேரிடையாகவே கண்டு, பார்த்து, அவர்களுடைய குறைகளை அவ்வப்போதே தீர்த்து வருகிற காரணத்தாலேதான், தற்சமயம் யாதொரு குறைபாடும் இல்லாத அளவுக்கு 1,152 பிரதம சங்கங்கள் தமிழகத்தில் இருந்தும், அவைகள் நல்ல முறையில் இயங்கி வரக்கூடிய சூழ்நிலையில், ஆலோசனைக் குழு ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறது.

அதன் தலைவராக இருப்பவரே நெசவாளக் குடும்பத்தில் பிறந்தவராகவும், நெசவைப்பற்றி நல்ல முறையிலே அறிந்தவராகவும் இருக்கிற காரணத்தினாலே, அவர் நெசவாளிகளிடையே நேரிலே சென்று அறிந்து வரக்கூடிய நல்வாய்ப்பைப் பெற்றிருக்கிற, ஒரு ஆலோசனைக் குழுவை மிகவும் குறைவாக பேசியிருக்கிறார்கள்.

அவர்கள் குறைவாகப் பேசக்கூடிய அளவில் அந்த ஆலோசனைக் குழு இயங்கவில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1981 ஏப்ரல் 16] [திரு. எஸ். என். இராசேந்திரன்]

மற்றும் சிங்கப்பூரில் திறந்திருக்கும் கடையைப் பற்றி ஒரு தவறான எண்ணத்தை திரு. புருஷோத்தமன் அவர்கள் முழுவதும் தெரியாமல் அவையில் பேசினார்கள். சிங்கப்பூரில் திறந்திருக்கிற கடைக்கு சிங்கப்பூர் அரசு அனுமதி அளித்துள்ளது. அதன் அடிப்படையில்தான் இந்திய அரசும் அனுமதி அளித்துள்ளது. ரிசர்வ வங்கியும் அன்னியச் செலாவணிக்கு அனுமதித்துள்ளது. இதன் அடிப்படையில்தான் சிங்கப்பூரில் மகலின் ரோடில் சென்ட்ரல் பில்டிங்கில் இரண்டு அறைகள் கொண்ட ஷோ ரூம் இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. அதிலே ரெஜிஸ்தர் செய்யவேண்டியதில் சட்ட ஆலோசனைப் படி ரெஜிஸ்டர் செய்யவேண்டியதில் இரண்டு மூன்று நாட்கள் காலதாமதம் ஏற்பட்டிருப்பதால், நாங்கள் குறிப்பிட்ட தேதிக்குள் சென்னைக்கு திரும்ப வேண்டிய காரணத்தால் அதை அலுவலகமாக திறந்து விட்டு வந்திருக்கிறோமே தவிர அதிகாரப்பூர்வமாகத்தான் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கைத்தறித் துணிகளைப் பொறுத்தவரையில் ஐந்து இலட்சம் தறிகளில் இரண்டரை லட்சம் தறிகள் பிரதமசங்கங்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பிரதம சங்கங்களில் கொண்டு வந்திருக்கிற தறிகளையும் தனியாரிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற தறிகளையும் இரண்டையும் இணைத்து தமிழகத்தில் குழப்பம் இருப்பதாகச் சொன்னார்கள். சத்திரப்பட்டியில் நடந்திருப்பதற்கும் சங்கரன் கோவிலில் நடந்திருப்பதற்கும் மிகவும் வித்தியாசம் இருக்கிறது. சத்திரப்பட்டியில் பிரதம சங்கங்கள் துணிகளை கோவாப்டெக்ஸ் கொள்முதல் செய்யவில்லை என்றும் செய்யப்பட்ட கொள்முதலுக்கு பணம் கொடுக்கப்படவில்லை என்றும் அங்கே போராட்டம் நடத்தியிருக்கிறார்களே தவிர, கூலி உயர்வுக்காக அங்கே அவர்கள் போராடவில்லை. சங்கரன்கோவிலில் நடக்கிற போராட்டம் பிரதம சங்கங்களில் கொண்டுவரப்படாத தனியாரிடம் வேலை பார்க்கிற நெசவாளர்கள் அங்கே கூலி உயர்வுக்காக போனஸ்க்காகவும் போராடுகிறார்கள். ஆகவே சத்திரப்பட்டியைப் பொறுத்தவரையில் அங்கேயுள்ள நிலைமையை அறிந்து நெசவாளர்கள் பிரச்னையில், 35 இலட்சம் ரூபாய் அளவிற்கு கொள்முதல் செய்யப்பட்டு ஏறக்குறைய 34 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு பிரச்னைகள் தீர்க்கப்பட்டு விட்டன. இப்போதுள்ள பிரச்னை, கைது செய்தவர்களை விடுதலை செய்வது என்பதுதான் இப்போது அது ஒன்றுதான் இருக்கிற பிரச்னை. மற்றபடி நெசவாளர்கள் பிரச்னையை கனிவோடு இன்று இந்த அரசு பரிவோடு தீர்த்துக் கொடுத்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றபடி நெசவாளர்களுக்கு கூலி உயர்வு பொறுத்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எந்தளவிற்குக் கொடுத்தார்களோ அதே கூலியைத்தான் நெசவாளர்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். ஆனால் நூல் விலை உயர்ந்துக்கொண்டே

போகிறது, வாழ்க்கைத்தரம் உயர்ந்து கொண்டேயிருக்கிறது என்ற பொருள்பட மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறினார்கள். அப்படி ஒரு நிலை இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிரதம சங்கங்களில் நெய்துவருகிற நெசவாளர்களுக்குக் கிடைக்கிற கூலியைப் பார்த்துத்தான் அந்த அளவிற்கு எங்களுக்கு வேண்டும் என்று தனியாரிடத்தில் வேலை பார்க்கிற நெசவாளர்கள் போராட்டங்களைச் செய்து வருகிறார்கள். அதன் விளைவாகத்தான் அறைகூவல் விடுக்கிறோம், தனியாரிடம் வேலை பார்க்கும் நெசவாளர்கள் பிரதம சங்கங்களுக்கு வாருங்கள் என்று அப்படி வந்தால் இப்போது பிரதம சங்கங்களில் உள்ளவர்களுக்குக் கொடுப்பதுபோல் கூலி கிடைக்கும். அரசாங்கச் சலுகைகள் அவ்வளவும் கிடைக்கும் என்று சொல்கிறோம். பிரதம சங்கங்களை இலக்கு 47 யை 67 அளவிற்கு கொண்டுவரவேண்டும் என்ற நல்ல நோக்கம்தான் அரசுக்கு.

கூலியைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டபோது ஈரோட்டிலும், மதுரையிலும் நெசவாளர்களுக்கு கிடைத்துவந்த கூலி 1976-ல் ரூ. 7 மட்டும் கிடைத்தது. இப்போது ரூ. 14 தினசரி சராசரியாக அவர்களுக்கு கிடைத்து வருகிறது, சேலத்தில் ரூ. 6·25 கிடைத்து வந்தது நெசவாளர்களுக்கு, இப்போது ரூ. 8·25 கிடைத்துவருகிறது. எந்த ரகத்துணிகளை தயார் செய்கிறார்களோ அதற்கேற்ப கூலி உயர்வு கிடைக்கப்பெறுகிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது அதிகபட்ச கூலி கிடைப்பதால்தான் இப்போது மாஸ்டர் வீவர்களிடம் வேலை பார்ப்பவர்கள் அதிகக் கூலி கேட்டும் போனஸ் கேட்டும் வருகிறார்கள்.

[இரவு 7.50]

பிரதம சங்கங்களிலே இதுவரை எந்தவித கூலி உயர்வு பிரச்சினைகளோ போனஸ் பிரச்சினைகளோ இருந்ததில்லை என்பதை மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன், மேலும் நெசவாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிரச்சாரங்கள் தேவை என்று அவர்கள் கூறினார்கள். அரசு எடுக்கின்ற நடவடிக்கைகள் ஒவ்வொன்றுமே இருக்கின்ற 30 இலட்சம் குடும்பங்களுக்கு, இதை நம்பி வாழ்கின்ற அவர்களுக்கு உடனடியாக தெரியக்கூடிய அளவிற்கு சூழ்நிலைகள், உற்சாகம் பெறக்கூடிய சூழ்நிலைகள் இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்ற உறுப்பினர்கள் எல்லாம் கைத்தறியைப் பொறுத்தவரையில் அரசு கொண்டு வந்திருக்கிற கொள்கையைப் பற்றி வரவேற்றிருக்கிறார்கள். ஆகவே புதுமையாக எதுவும் அறிவிக்க வேண்டும், அவர்களுக்கு உற்சாகப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள், அவர்கள் செய்கின்ற



தொழிலுக்கு அதிகபட்ச உற்சாகத்தை கொடுப்போமேயானால் இன்னமும் தரமான துணிகளைக் கொண்டு வரக்கூடிய சூழ்நிலைகள் இருக்குமென்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே எங்களது அரசின் நோக்கமே நெசவாளிகளுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்புத் தருவது, மக்களுக்கு வேண்டிய ஆடைகள் முதலிய தேவையானதை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று எண்ணத்தின் அடிப்படையிலே நெசவாளிகளுக்கு பல சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு நிலையத்தைப் பற்றி மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் கூறினார்கள். நஷ்டத்திலே நடைபெறுகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் எங்களது கணக்குப்படி இதுவரை அது இலாபத்திலே தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. முன்னால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்து கொண்டும் வருகிறது. 1977-லிருந்து அது இலாபகரமாக நடந்து வருகிறது. ஆகவே இன்னமும் அது ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்கிற சூழ்நிலையில் இருக்கிற காரணத்தால் அதை விஸ்தரிக்கக்கூடிய ஒரு எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் சரியான முறையிலே கொள்முதல் செய்யவில்லை; கொள்முதல் செய்த பணத்தை கொடுக்கவில்லை என்று ஒரு சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதனால் தான் மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். இதுவரையில் 3,536 இலட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்திருக்கிறது; கோ-அப்டெக்ஸ் பிரதம சங்கங்களில் கொள்முதல் செய்திருக்கிறது; பிரதம சங்கங்களுக்கு இதுவரை கொடுக்கப்பட்ட பணம் 3,075 இலட்சம் ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையிலே பார்த்தால் மாதத்திற்கு மூன்று கோடியே 49 இலட்சம் ரூபாய் பட்டுவாடா செய்துகொண்டு வருகிறது. ஆகவே எந்தவிதமான குறைபாடும் இல்லாத அளவிற்கு பிரதம சங்கங்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது என்பது இதன் வாயிலாக தெரியவரும் என்று கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற விடையில் ஒவ்வொரு இடத்திலும் கொள்முதல் செய்ததற்கும், அவர்களுக்கு தொகை போய் சேர்ந்ததற்கும் இடையிலே 'ஆவ்ரேஜாக' எவ்வளவு நாட்கள் ஆகியிருக்கிறது; 15 நாட்களிலே போய் இருக்குமா ஒரு மாதத்தில் போய் இருக்குமா மொத்தமாக வருடக் கடைசியிலே கணக்கு பார்க்கிற பொழுது 100-க்கு 95 சதவீதம் பணம் போயிருக்கும், ஆனால் இடையில் ஏற்பட்ட தாமதம் என்பது எவ்வளவு 15 நாட்களிலே, 20 நாட்களிலே பணம் போகக்கூடிய நிலைமை பொதுவாக அனைத்து 'ட்ரான்சக்ஷன்'களிலும், இருந்திருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் பார்த்து சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பிரதம சங்கங்களில் கொள்முதல் செய்கிற துணிகளை பெற்றுக் கொண்டு, அவை எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கு அனுப்பப்பட்டு, மீண்டும் பிரதம சங்கங்களிலிருந்து பில்கள் வந்து போவதற்கு ஏறக்குறைய 20, 25 நாட்கள் அளவிற்கு சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. அந்த முறையிலே தான் 'செட்டில்' செய்யப்பட்டு வருகிறது.

ரிபேட் சம்பந்தமாக உறுப்பினர்கள் கூறினார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், மற்ற உறுப்பினர்களும சொல்கிற நேரததிலே, ஏதோ மாநில அரசு தவறு செய்வதைப் போல சொன்னார்கள். இத்தனையும் மத்திய சர்க்காரிடம் இருந்து வருகிறது. நாம் மத்திய அமைச்சரிடததிலே மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்திருக்கிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் தொடர்ந்து மத்திய. சர்க்காருக்கு வலியுறுத்த வேண்டிய முறையிலே வலியுறுத்திக் காட்டியிருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து நாங்களும் இதைக் குறிப்பிட்டு மத்திய அமைச்சர் தமிழகத்திற்கு விஜயம் செய்தபோது கூட நேரடியாக விளக்கமாக சுட்டிக்காட்டினோம். 500 ரூபாய் சில்க்கிற்கு என்றும் ஆயிரம் ரூபாய் சாதாரண துணிகளுக்கு என்றும் இருப்பதை மாற்றியமைத்தால்தான் தேக்கம் போக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. காரணம் இப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாடு விதித்த காரணத்தினால் பேங்க் பாஸ் கிடைக்காததால் வெளி மாநிலங்களுக்கு கதர் துணி வாங்கிச் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதுவுமல்லாமல் விசேஷ தள்ளுபடி காலங்களில் 500, 1,000 என்று நிர்ணயம் செய்த காரணத்தால் கைத்தறி துணி எடுக்கிறவர்கள் ஒரு பட்டு சேலை எடுத்தாலே 500 ரூபாய்க்குப் போய் விடுகிறது, அதற்கு மேலே வாங்குகிற பணத்திற்கு அந்தப் பலன் கிடைக்காத சூழ்நிலை வந்துவிடுகிறது. மத்திய அமைச்சரிடத்திலே விளக்கமாகக் கூறியும் மற்றும் அதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி பல கடிதங்களை எழுதி வற்புறுத்தி வருகிறோம். அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலை வருமானால் தேக்கம் இல்லாத நிலையும் மற்றும் பொதுமக்கள் பலன் அடையக் கூடிய சூழ்நிலையும் இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றும் கூட்டுறவு நூல் பற்றி இங்கே கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். நெசவாளர்களுக்குத் தொடர்ந்து நூல் கிடைக்காத நிலையின் காரணத்தால் கடந்த ஆண்டு மாவட்டம் ஒன்றுக்கு ஒரு நூற்பாலை உருவாக்கிச் கொடுப்பதாக அரசு சொன்னதே அது என்ன ஆயிற்று என்று இங்கே கேட்டார்கள். வளர்ந்துவரும் தேவையை மனதில் கொண்டு நெசவாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தற்சமயம் 3 நூற்பாலைகள் தர்மபுரி, புதுக்கோட்டை, மதுரை ஆகிய மாவட்டங்களிலே



நிறுவுவதற்கான உத்தரவை இந்த அரசு பிறப்பித்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் நெல்லை பேட்டையிலே நூற்பாலையின் விரிவாக்கத்தை எட்டயபுரத்திலே நிறுவி அதிலே கிடைக்கிறதை இன்னமும் நெசவாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான நிலையை உருவாக்கிக் கொடுப்பதற்கான சூழ்நிலையில் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. வெளியே கிடைக்கிற விலையை விட பிரைமரி சங்கங்களில் இருக்கின்ற நெசவாளர்களுக்கு 10 சதவீதம் குறைவாகவே கிடைக்கக்கூடிய சூழ்நிலையும் நிரந்தரமாக நிலையான விலையிலே கிடைக்கக்கூடிய சூழ்நிலையும் இந்த அரசு ஏற்பாடு செய்துவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு இன்னமும் ஒன்று. புதிதாக ஜனதா உற்பத்திக்காகவும் மோட்டா ரக உற்பத்திகாகவும் இதுவரை நாங்கள் தனியார்களிடத்திலே பெற்றுவந்ததை மாற்றியமைத்து கதர் இல்லாத பஞ்சுகளை நூலாக உற்பத்தி செய்யக்கூடிய நூற்பாலைகளை ஒப்பன் எண்ட் ஸ்பின்னிங் முறையில் சித்ரா என்ற பஞ்சாலை ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து திட்ட அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. சித்ரா நிறுவனமும் இப்படி ஒப்பன் எண்ட் பஞ்சிலே கதிரில்லாத நூலை மோட்டா ரக நூலை உற்பத்தி செய்கிற முறையிலே அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதையும் நான் கூறிக்கொள்கிறேன்.

சேமிப்பு, மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பலன் பெற்றுவரும் நெசவாளர் எண்ணிக்கை 66,500. மாண்புமிகு உறுப்பினர்கள் 3 ஆயிரத்தை அது காணாது ஆகவே கூட்டித் தரவேண்டுமென்று கூறினார்கள். 3 ஆயிரம் கொடுக்க முன்வந்த அரசை முதலிலே பாராட்டிவிட்டு அவர்கள் சொல்லி இருப்பார்களானால் கொஞ்சம் மன மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும். இதுவரை வெறும் 500 ரூபாயை நம்பியிருந்த நெசவாளர்கள் குடும்பத்திற்கு தாராள மனதோடு 3 ஆயிரம் கொடுக்க முன் வந்திருக்கிறது இந்த அரசு. அதுவும் இப்போது உற்பத்தியில் ஈடுபட்டு வரும் நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. வளர்ந்துவரும் சூழ்நிலையையும் மாற்றத்தையும் கருதி 5 ஆயிரம் கொடுக்கலாமா என்றுகூட இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது என்பதையும் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டுவசதித் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் பேசினார்கள். வளர்ந்துவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 5 ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கான அறிவிப்பை நாங்கள் செய்தோம். எத்தனை வீடுகளை இதுவரை கட்டியிருக்கிறீர்கள் என்று எங்களைப் பார்த்துக் கேட்டார்கள். 5 ஆயிரத்திலே இதுவரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் 732 கட்டுமானத்தில் இருப்பவை 1,200 சொச்சம். இன்னும்

3 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கொடுத்த வாக்குறுதியை நிச்சயம் நெசவாளர்களுக்கு நாங்கள் செய்து கொடுப்போம். போன ஆண்டு 5 ஆயிரம் கொடுப்பதாக இருந்ததை 6 ஆயிரமாக உயர்த்தினோம். இது காணாது என்று மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் கூறியிருக்கிறார்கள், மற்ற உறுப்பினர்களும் கூறியிருக்கிறார்கள்.

(இரவு 8.00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் சொல்லவே இல்லை; ஆனால் நான் சொன்னதாகச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். (சிரிப்பு.)

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் கூடக் 6,000 ரூபாயிலே எப்படி வீடு கட்டமுடியும் என்று கேட்டார்கள். ஆகவே, இந்தத் தொகையை ஏற்கனவே நாங்கள் அறிவித்திருக்கிறோம். 8,000 ரூபாய் வீடு கட்டுவதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. இதில் மானியம் 1,000 ரூபாய் கொடுப்பதாக இருந்தது; அந்த 1,000 ரூபாயை 1,200 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதற்கு இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டு வருகிறது என்பதையும் நான் கூறிக்கொள்கிறேன். ஆகவே, நெசவாளர்களுக்கென்று பல திட்டங்களையும், நல்ல சூழ்நிலைகளையும் உருவாக்கிக் கொண்டு வருகிறது என்பதையும் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெசவாளர்களை உற்சாகப்படுத்தும் ஒரு திட்டத்தையும் சொல்ல விரும்புகிறேன். ஒரே ரகத் துணிகளை உற்பத்தி செய்வதால்தான் தேக்கம் வருகின்ற காரணத்தினாலே ஒரு பது-இன்சென்டிவ் என்று சொல்வார்களே அதை அறிவித்தால் நிச்சயமாக நெசவாளர்களிடத்திலே ஒரு புது மலர்ச்சி ஏற்பட்டு புது ரகத் துணிகளை உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தருவார்கள் என்பதை மனதிலே கொண்டு இந்த அறிவிப்பைச் செய்ய விரும்புகிறேன்.

நெசவாளக்கள் நுகர்வோரின் மாறிவரும் ரசனைக்கேற்பவும், விருப்பத்திற்கேற்பவும் புதுப்புது டிசைன்களைக் கைத்தறியிலே உற்பத்தி செய்ய வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு புது டிசைன்களை உற்பத்தி செய்தால்தான் கைத்தறியில் நல்ல எதிர்காலம் இருக்கும். அதைக் கருத்திற் கொண்டு திறமைமிக்க நெசவாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பொதுமக்கள் மனத்தைக் கவரும் வகையிலே இதுவரை இல்லாத புதிய டிசைன்களையோ அல்லது கைத்தறியில் இதுவரையில் செய்யப்படாத புது ரகத் துணிகளையோ உருவாக்கும் கூட்டுறவு இயக்கத்தைச் சார்ந்த



நெசவாளர்களுக்கு மாநில அரசு தகுந்த சன்மானம் வழங்க உத்தேசித்துள்ளது. இவ்வகையில் வருடம் ஒன்றுக்குச் சுமார் ஐந்து இலட்சம் அளவிலே சன்மானங்கள் வழங்கப்படும் என்பதை நான் நெசவாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அளவிலே நெசவாளர்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் அளிக்கின்ற தருணத்திலே நெசவாளர்கள் வாழ்விலே மறுமலர்ச்சியும், நல்ல சூழ்நிலையும் உருவாகி வருகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

கதர்த் துறையைப் பற்றி இங்கே பேசியவர்கள் கதர்த் துணியைப் பற்றிக் கூறினார்கள். அதிலே இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டு, ஒவ்வொரு வருஷத்திற்கும் மேலாக, அதிகபட்ச முறையிலே இது விற்பனை ஆகிக்கொண்டிருக்கிறது; உற்பத்தியிலும் அதிகம் ஆகிக்கொண்டிருக்கிறது. தமிழக மக்கள் வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கதர்த் துணி உற்பத்தியைப் பொறுத்தமட்டிலே தமிழக மக்கள் மிகவும் வரவேற்பு கொடுக்கும் சூழ்நிலை இருக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர்களும் வரவேற்றிருக்கிறார்கள்.

கிராமக் கைத்தொழிலைப் பற்றிப் பேசிய நேரத்தில் பனை மரத்தைப் பற்றி மட்டும் அதிக பட்ச உறுப்பினர்கள் பேசினார்கள் பனைமரத்தை மட்டுமல்ல; கிராமங்களிலே புதுப்புது வேலைகளைக் கொடுத்து அங்குள்ள வேலைவாய்ப்புக்களைக் கொடுத்து அவர்கள் உற்பத்தியைப் பெருக்குகின்ற சூழ்நிலைகளை இந்தக் கதர் வாரியத்தின் வழியாகச் செய்து வருகிறது. இந்த வாரியத்தின் செயல்களை மற்ற மாநிலங்கள் பின்பற்ற வேண்டுமென்று மத்திய சர்க்காரே கேட்டுக்கொள்ளக்கூடிய அளவிற்கு இந்த வாரியம் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

பனை மரத்தைப்பற்றிக் கூறினார்கள். அவர்கள் கூறிய கூற்றுக்கள் அத்தனையுமே இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கென ஆராய்ச்சிகள் எல்லாம் செய்யப்பட்டு வருகிறது. சீனி தயாரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். சீனி தயாரிப்பதற்கு 12 மாத காலமும் பனைமரத்திலிருந்து பதனீர் கிடைத்தால்தான் அதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். ஆகவே, 12 மாத காலமும் பனைமரத்திலிருந்து பதனீர் கிடைக்கக் கூடிய சூழ்நிலையில், தென்னைமரத்தையும், பனைமரத்தையும், கிராஸ் செய்வதற்கான ஆராய்ச்சியும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

பனையேறுவதற்கு அரசு உற்சாகப்படுத்தும் வாயிலாக யாராவது புதுக்கண்டுபிடிப்பு செய்தால் பரிசு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். எந்தப் பரிசைக் கொடுத்தாலும் பனையேறுபவர்கள், பட்டனைத் தட்டினால் விஞ்ஞான ரீதியாக உயரே சென்று பதனீர் எடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தாலும் கூட, இன்றைக்குள்ள சூழ்நிலையில் இருக்கின்ற பனையேறுபவர்கள் பனையைச் கட்டி அணைத்து அணைத்து உயரே சென்று பதனீர் எடுக்கத்தான் விரும்புகிறார்களே தவிர பட்டனைத் தட்டினால் உயரேசென்று எடுக்கக்கூடிய சூழ்நிலையை விரும்பவில்லை என்பதை நாங்கள் நடைமுறையிலே பார்த்திருக்கிறோம். ஆகவே, ஏணி வைத்து ஏறி பதனீர் எடுக்கலாம் என்றாலும்கூட, மற்றச் சூழ்நிலைகளை மாற்றியமைத்தாலும் கூட அவர்கள் விரும்பவில்லை. ஆகவே, வயதானவர்கள் குறைந்து வருகின்ற காரணத்தினாலும், இளைஞர்கள் ஏற மறுக்கின்ற காரணத்தினாலேயும், இதை மாற்றியமைத்து வளர்ந்திருக்கின்ற பனை மரத்தைக் கட்டை மரமாக ஆக்கினால், நின்றயிடத்திலேயிருந்தே பதனீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலை கிடைக்குமா என்று ஆராய்ச்சி செய்யக்கூடிய சூழ்நிலையையும் தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது; ட்வார்பிங் என்ற முறையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது.

ஏறத்தாழ அறுபது இலட்சம் ஜனங்கள் பனைமரத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்று கூறினார்கள். அதிலே கிடைக்கின்ற பலன்கள் அத்தனையுமே தமிழக மக்களுக்குக் கிடைப்பதைப் போல பிற மாநிலங்களுக்கும், வெளி நாடுகளிலேயும் மிகவும் வரவேற்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் கூறினார்கள். பனைமரத்தின் தலையிலிருந்து அடிவரை அத்தனையும் பயன்படுத்தக்கூடியதாக, இருக்கின்ற நல்லதொரு பொருள் பனைமரம். அதைக் கருத்தில் கொண்டு, அதைப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலையில் பல, திட்டங்களையும் இந்த அரசு வகுத்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மலைவாழ் மக்களை முன்னேற்றும் திட்டத்திலே இந்த அரசு மும்முரமாக இருந்து, அதற்கான உதவிகளை எல்லாம் செய்து வருகிறது.

சுய வேலை வாய்ப்பு பயிற்சித் திட்டமும் அதன் அடிப்படையிலே பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய திட்டமும் இருந்து வருகிறது. 3820 நெசவாளர்களுக்கு



அவர்கள் சுயமாகச் சம்பாதிக்கக்கூடிய ஒரு பயிற்சியும் கொடுக்கக்கூடிய அளவிலே கதர் வாரியம் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறது—அதற்கு உதவி செய்து கொண்டிருக்கிறது.

நூற்கும்போதும், நெய்யும் போதும் நூல் அறுந்து போவதைத் தவிர்க்கவும் உற்பத்தி செய்யும் நூலின தரத்தையும் உறுதியையும் அதிகரிக்கவும் 75 பஞ்சுடைக்கும் கருவிகளையும் 4 பஞ்சு சுத்தப்படுத்தும் கருவிகளையும் வாரியம் நிறுவ அரசு ரூ. 4 இலட்சம் மானியமாக வழங்க ஒப்புக்கொண்டிருக்கிறது. இம்மாநிலத்தின் கதர் உற்பத்தியை நவீனமாக்கும் முயற்சியாக கல்கத்தாவிலே உள்ள தேசியப் பஞ்சாலை நிறுவனத்திடம் 85 பட்டை போடும் கருவிகளையும் இரண்டு பஞ்சிலுள்ள தூசு நீக்கி, பஞ்சு உடைக்கும் கருவிகளையும் வாங்குவதற்கான நடவடிக்கை முடிவடைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே. கதரிலே நல்ல ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தக்கூடிய திட்டங்களையும் இந்த அரசு வகுத்து வருகிறது.

பொதுப் பணித் துறையைப் பொறுத்த மட்டில் அது மந்தமாக இருந்து வருகிறது. ஒரு சூழ்நிலையை மாற்றியமைத்து வருகிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள்கூட வயதாகிவிட்ட பொது'' பணித் துறை என்று சொன்னார்கள். 100 ஆண்டு காலமாகப் பின்பற்றி வருகிற சட்டதிட்டங்களையும், ரூல்ஸ்களையும் மாற்றியமைத்து, அதற்கு இளமை ஊட்டக்கூடிய நல்ல சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தி வருகிறது. அந்த மந்தப் போக்கை மாற்றியமைத்து. விறுவிறுப்பான முடிவுகளை எடுப்பதற்காகவும், டெண்டர் விட்டு காலத்தைப் போக்காமல், தனியார்களிடத்திலே கொடுத்து காலத்தைப் போக்காமல், பட்டதாரி இளைஞர்களுக்கு, பொறியாளர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுத்து, அவர்களை உற்சாகப்படுத்தக்கூடிய அளவுக்கு, பொதுப் பணித் துறையே நேரடியாக கட்டுமானங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையையும் இன்னும் பல திட்டங்களையும் உருவாக்கத்தான் வயோதிகத் தன்மையைக் குறைத்து சுறுசுறுப்பு கொடுக்கக்கூடிய அளவிலே நடவடிக்கை எடுக்கிற காரணத்தாலே தான், பொதுப் பணித் துறையை நம்பி பல துறைகளைச் சேர்ந்தவர்கள் வேலைகளை ஒப்படைக்கக்கூடிய அளவிலே பொதுப் பணித் துறை மூலம் கட்டிடங்களுக்கு முந்தைய ஆண்டை விட அதிக லட்சப் பணம் ஒதுக்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

பொதுப் பணித் துறையின் மீதிருந்த அவநம்பிக்கையின்மை மாற்றி நம்பிக்கை ஏற்படக்கூடிய சூழ்நிலையிலே இன்று பொதுப் பணித் துறை இயங்கிக் கொண்டு வருகிறது என்பதையும் அதன் அடிப்படையிலே பல இடங்களிலே வேலைகள் எடுக்கப் பட்டுள்ளன.

இதுவரை சிறைச்சாலைகளிலே இருப்பவர்களை மனிதர்களாகக்கூட கருதாத சூழ்நிலை இருந்தது. அதை மாற்றி அமைத்து, அவர்களும் மனிதர்கள்தான், அவர்களுக்கும் நல்ல வசதி, வாய்ப்புகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் மதுரை, திருச்சி, சேலம், வேலூர், சென்னை போன்ற பகுதிகளில் உள்ள ஜெயில்களுக்கு புதுக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான சூழ்நிலையுள்ளது. அதே போல், 254 படுக்கைகளைக் கொண்டு சிறு நோய்ப் பிரிவுக் கட்டிடம் சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையிலும், 300 படுக்கை வசதிகள் கொண்ட புறநகர் மருத்துவ மனை சென்னை பெரம்பூரிலும் கட்டப்பட இருக்கிறது. அதைப் போன்று தலைமை மருத்துவ மனைகளுக்குக் கூடுதல் படுக்கைகள் கொண்ட கட்டிடங்கள்கட்ட, தர்மபுரியில் 150 படுக்கைகள் கொண்ட விரிவாக்கமும், திண்டுக்கல்லில் 33 படுக்கைகள் கொண்ட விரிவாக்கமும், இராமநாதபுரத்தில் 43 படுக்கைகள் கொண்ட விரிவாக்கமும் திருப்பூரில் 191 படுக்கைகள் கொண்ட விரிவாக்கமும், கட்டுவதற்குப் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கல்வித் துறை, சமூக நலத் துறை, இப்படி பல துறைகள் நம்பி, பல கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது.

பொதுப் பணித் துறையைப் பொறுத்தமட்டில், சென்னையை அலங்கரிக்கவும், மற்றும் பல கட்டிடங்களைப் பராமரிக்கவும், அலாட்மெண்ட் நார்ம்ஸ் சரியில்லையென்று நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடத்திற்கு நார்ம்ஸ் ஃபிக்ஸ் செய்தால் ரூ. 100 தான் வருகிறது. அது வெள்ளை அடிக்கக் கூட காணவில்லையென்று தெரிகிறது. ஆகவே, பிளிந்த் ஏரியா என்ற முறையில் அதை மாற்றியமைத்து, அந்த அளவிலே பணம் இப்பொழுது அதிகமாகக் கொடுக்கிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. கட்டிடம் கட்டினால் மட்டும் காணாது, பராமரிக்க வேண்டுமென்ற முறையிலே, நல்லெண்ணத்தின் அடிப்படையிலே, சதவீதம் ஒதுக்கப்படுவது, அதற்குப் பணம் அலாட் செய்வது, பிளிந்த் ஏரியா அடிப்படையில் ஒதுக்கப்பட வேண்டுமென்றும் அந்தச் சூழ்நிலையையும் இந்த அரசு உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. ஆகவே, இனிமேல், பொதுப் பணித்துறை சம்பந்தப்பட்ட கட்டிடங்கள் நல்லமுறையிலே பராமரிக்கப்படும் என்பதையும் நான் கூறிக் கொண்டு, கைத்தறி, கதர், பொதுப் பணித்துறைகள் சம்பந்தப்பட்ட வரையில் நல்ல திட்டங்களை அரசு உருவாக்கி வருகிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை அழுத்தம் செய்யாமல் வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும், மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.



[இரவு 8.10]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, கதர் பற்றி நல்ல பல விரிவான திட்டங்களைச் சொன்னார்கள். அதிலே பெண்களுக்கு, கிராமப்புறங்களிலேயும், நகர்ப்புறங்களிலேயும் வேலை இல்லாமல் இருக்கக்கூடிய பெண்களுக்கு—ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சியின்போது அம்பர் சாக்கா பயிற்சி நிலையங்கள் வைத்து வேலை வாய்ப்பு கொடுத்ததைப் போல—இப்போதும் அம்பர் சர்க்கா பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கும், கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல ஜனதா துணியை இன்றைக்கு கிராம மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள், அதை அதிகமாகத் தயாரித்து வினியோகம் செய்ய ஏதாவது வழிவகைகளை இந்த அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்பர் சர்க்கா கிராமப்புறங்களில் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற வகையில் முன்பு இருந்ததைவிட, 130 பட்ச அதிக பட்சம் நூற்பு நிலையங்கள் ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதில் இந்த அரசு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பி.டபிள்யூ.டி.யை பொறுத்தவரையில், அதை இளமைப் படுத்துகிறேன் என்று சொன்னார்கள். அந்தத் துறையின் மேற்பார்வையில் இருக்கக்கூடிய பல அணைக்கட்டுகளில் 20,25 ஆழத்திலே.........

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 'இர்ரிகேஷன்' டிமாண்ட் முடிந்து எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1963 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சமசக்கர நிதி என்கிற திட்டத்தின் அடிப்படையிலே கூலி 6 பைசா, சங்கம் 2 பைசா, சர்க்கார் 4 பைசா, ஆக 12 பைசா பேர்ட்டு கொடுக்கப்பட்டது. அந்த சமசக்கர நிதி கைவிடப்பட்டபிறகு, இப்போது திரும்பக் கொடுக்கும்போது 6 பிளஸ் 2 ஆக 8 பைசாதான் கொடுக்கப்படுகிறது. சர்க்காரில் இருந்து கொடுக்கப்பட்ட 4 பைசா கொடுக்கப்படவில்லை. அதைக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மத்திய வங்கியோடு இது குறித்து அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. விரைவிலே இதற்கான முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று வந்தார்கள். அங்கே விளைகின்ற செம்பனையினை இங்கே உற்பத்தி செய்வோம் என்று சிங்கப்பூர் சென்று இருக்கின்ற ஆந்திர முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். அதேபோல தமிழகத்திலும் இந்த செம்பனையை உற்பத்தி செய்து தமிழக மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 26.

திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திரு. எம். ஆறுமுகம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 26 கைத்தறியும், நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,88,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 27.

திருவாளர்கள் த. வேணுகோபால், மு. அப்பாதுரை ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 27 கதர் தொழில் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,65,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.



மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 37.

திரு. த. வேணுகோபால் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 37 பொதுப்பணிகள்-கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,93,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 38.

திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.

"மானியக் கோரிக்கை எண். 38 பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,59,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 51.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 51 பொதுப்பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 33,36,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

''மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

7. அரசினர் தீர்மானம்

பேரவை அலுவலில் மாற்றம்.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :—

''பேரவை உறுப்பினர்களின் விருப்பத்திற்கேற்ப 18.4.1981-சனிக்கிழமையன்று பேரவைக் கூட்டம் இல்லாமல், 18.4.1981-சனிக்கிழமையன்றும், 20.4.1981-திங்கட்கிழமை அன்றும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கை எண். 20-வேளாண்மை, மானியக் கோரிக்கை எண். 48-வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ஆகியவை 20.4.1981-திங்கட்கிழமையன்று எடுத்துக் கொள்ளப்பெற்று, அன்றே விவாதம் முடிவுற்று, வாக்கெடுப்பும் நடத்தப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 18.4.1981-சனிக்கிழமை பேரவைக் கூட்டம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே சனிக்கிழமையன்று எடுத்துக்கொள்ளப்பெறும் என்று அளிக்கப்பெற்றிருந்த வினாப்பட்டியல் வேறு ஒரு நாள் அன்று எடுத்துக்கொள்ளப்பெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று திங்கட்கிழமை (20.4.1981) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8.17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

256. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் 2 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) பகுதி செயலுக்கு வரும் நாளாக 18.3.1981 ஆம் தேதியை நிர்ணயிப்பது குறித்து கல்வித் துறையின் 17.3.1981 ஆம் தேதியிடப் பெற்ற 47 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (குடியரசுத் தலைவர் சட்டம் 19/1976) 54 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

139. கோரிக்கை எண். 26—கைத்தறி மற்றும் பஞ்சாலை ஆகியவற்றின் கொள்கையும், திட்டங்களும் பற்றிய குறிப்பு, 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

140. கோரிக்கை எண். 27—தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தின் கொள்கையும். திட்டங்களும் பற்றிய குறிப்பு, 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

141. கோரிக்கை எண்கள் 37, 38, மற்றும் 51-பொதுப் பணித் துறை கட்டிடங்கள், பொதுப் பணிகள், பணியாளர்கள் மற்றும் கருவிகள்-இயந்திரத் தளவாடங்கள், பொதுப் பணிகள்-கட்டிடங்கள் மீதான மூலதனக் கணக்கு ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

142. 1980-81 ஆம் ஆண்டு பொதுப் பணித் துறை (கட்டிடங்கள்) யின் பணிகள் பற்றிய ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

143. 1981-82-ஆம் ஆண்டு கைத்தறி துணி நூல் துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I.

[129 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் 26.

கைத்தறி மற்றும் பஞ்சாலை.

கொள்கையும் திட்டங்களும்.

1981–82.

1. முன்னுரை:

1. கைத்தறித் தொழில், பழங்காலந் தொட்டு இருந்து வரும் கிராமத் தொழிலாகும். வேளாண்மைக்கு அடுத்தபடியாக வேலை வாய்ப்பினை வழங்குவதில் இத்துறை முன்னணியில் உள்ளது. இத்தொழிலானது பொது மக்களின் துணித் தேவைகளை நிறைவு செய்வதில் பெரும் பங்கு வகிக்கின்றது. இது தவிர, கைத்தறித் துணி ஏற்றுமதி அதிகரிப்பதன் மூலம் அயல்நாட்டுச் செலாவணியை ஈட்டித் தரும் தொழில்களில் இதுவும் ஒன்றாகும்.

2. தமிழ் நாட்டில் 5.56 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இது சுமார் 13.34 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பினையும், வசதியையும் அளிப்பதுடன் இத்தொழிலைச் சார்ந்துள்ள 30 லட்சம் பேருக்கு வாழ வழி வகையும் அளிக்கின்றது. நமது மாநிலத்தில் 1980 ஆம் ஆண்டில் சுமார் 600 மில்லியன்

மீட்டர் கைத்தறித் துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1985 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் 700 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணி உற்பத்தி செய்ய வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட இலக்கை எட்டும் வகையில், கைத்தறித் துணியின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, தொழில் நுட்ப மாறுபாடுகளுடன், நல்ல திறமையான முறையினைப் பயன்படுத்தி, உற்பத்தியின் இலக்கை எய்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**II. கைத்தறித் தொழில் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம்:**

நம் மாநிலத்தின் கைத்தறித் தொழில் வளர்ச்சித் திட்டங்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை அளிப்பதோடு நிரந்தர வருவாயையும் அவர்களுக்கு உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் அரசு செயல்பட்டு வருகிறது. இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பின்வரும் அம்சங்களைக்கொண்டு கூட்டுறவுப் பிரிவின் கீழ் இரண்டு அடுக்கு முறையில் நெசவாளர் இயக்கம் இயங்கி வருகின்றது. கைத்தறி நெசவாளர்களைத் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினராகக் கொண்டு, மேற்படி சங்கங்கள் அனைத்தும் தலைமைச் சங்கத்தில் உறுப்பினராகி இணைந்து செயலாற்றி வருகின்றன.

1. கூட்டுறவு அமைப்பின்கீழ் நெசவாளர்களை அதிக அளவில் கொண்டுவர புதிய கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதும், ஏற்கனவே இயங்கி வரும் சங்கங்களில் நெசவாளர்களை அங்கத்தினராக்குதலும்.

2. சொந்தத் தறியில்லாத நெசவாளர்களுக்குப் பொது நெசவுக் கூடம் அமைப்பதற்கும், நலிந்த சங்கங்களை வலுப்படுத்தவும் நிதியுதவிகள் அளிக்கப்படுகின்றன.

3. மாநிலத்திலுள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தலைமைச் சங்கத்தின் வட்டியில்லா பங்கு மூலதனத்தை அதிகப்படுத்தி அவற்றுக்கு விற்பனை வசதியைச் செய்து கொடுத்தல்.

4. கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை குறைந்த நியாயமான விலையில் அளித்தலும், தேவையான நிதியுதவிகளைச் செய்து கொடுத்தலும்.

5. மக்களின் மாறிவரும் ஆர்வ விருப்பங்களுக்கு ஏற்றபடி தொழில் நுட்ப முறையினை உயர்த்தவும் வடிவமைப்பு நிலையங்களை அமைப்பதன் வழியாகக் கைத்தறிப் பொருள்களின் தரத்தை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

6. தறிகள் நிறுவப்படுவதற்கு முன்பும் தறிகள் நிறுவப்பட்ட பின்பும் தேவைப்படும் வசதிகளை அளித்தல்.





7. கைத்தறித் துணியின் ஏற்றுமதியை அதிகப்படுத்துதல்.

8. கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்வுக்கென கூட்டுறவு நெசவாளர் "சிக்கன—பாதுகாப்புத் திட்டம்", மற்றும் "நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்" போன்ற நலத் திட்டங்களை செயல் படுத்துதல்.

**1. அதிக அளவிலான கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பில் கொண்டு வருதல்:**

கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கான முன்னேற்றத் திட்டங்கள் யாவும் நெசவாளர்களை இடைத்தரகர்கள் சுரண்டாத ஒரு தன்மையினைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்கிற முறையில் கூட்டுறவு அமைப்பு மிளிர வேண்டுமென்ற அவசியத்தை வலியுறுத்தியுள்ளன. நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவருதல் சிறப்புக்கு வழிகோலும் என்ற உண்மையை கடந்த இருபதாண்டுகளின் அனுபவம் நமக்கு உணர்த்தியது மேற்கண்ட கொள்கையில் முழு நம்பிக்கை வைத்து ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் (1984-85) 67 சதவீத கைத்தறிகளை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில் 2.55 இலட்சம் கைத்தறிகள் (46 சதவிதம்) 31-2-1980 வரையில் 1115 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. 1980-81ல் 25,500 கைத்தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அரசு பங்கு மூலதனக் கடன் வசதியினை தாராளமாக்கப்பட்ட அமைப்பின்படி கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாக பதிவு செய்வதற்கு ஒவ்வொரு பருத்தி நெசவாளருக்கும், பட்டு நெசவாளருக்கும், பாலியெஸ்டர் நெய்யும் நெசவாளர்களுக்கும் முறையே ரூ. 180, ரூ. 225, ரூ. 450-ஐ நிதியுதவி அளிக்கப்படுகின்றது. கைத்தறி நெசவாளர்கள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்வதற்குப் பங்கு மூலதனக் கடனாக அளிக்க ரூ. 35.75 இலட்சம் பங்குத் தொகைக் கடன் அளிக்கப்பட்டு வருகிறது. ரூ. 120.00 இலட்சம் செலவில் 30 தொழில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. 1981-82-ல் புதிய தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கவும், எட்டு தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 5 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவைகள் ஆரம்பிப்பதினால் 25,300 தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்படும். 1981-82ல் நெசவாளர்களுக்குப் பங்கு மூலதனக் கடனாக வழங்க ரூ. 43.20 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1981-82-ல் "தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்" அமைக்க திட்டத்தில் ரூ. 32.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க 1981-82ஆம் ஆண்டு திட்டத்தில் ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. ஏற்கனவேயுள்ள நெசவாளர்

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தை உயர்த்
தவும்; நலிந்த மற்றும் செயலிழந்த கைத்தறி நெசவாளர்
தொடக்கக் கூட்டுறவு சங்கங்களை மீண்டும் செயல்படச் செய்ய
வும் தொடக்க நிதியுதவி (Margin money Assistance) அளிக்கக்
கருதப்பட்டுள்ளது. இதற்காக 1980–81ஆம் ஆண்டிற்கு ரூ 40.00
இலட்சம செலவிடப்பட்டுள்ளது. 1981–82ஆம் ஆண்டிற்கு
''நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அரசின் பங்கு'' குறித்த
திட்டத்திற்காக ரூ. 25.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
கைத்தறித் துறையில் 1979-80ஆம் ஆண்டில் 93மில்லியன் மீட்டர்
துணி உற்பத்தி செய்யப்பட்டது. 1980-81–ல் 100 மில்லியன்
மீட்டர் அளவிற்கு உற்பத்தியை உயர்த்தப்பட்டுள்ளது. 1981–82
ஆம் ஆண்டின் உற்பத்தி இலக்கு 110 மில்லியன் மீட்டர் அளவு
என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சலுகை விகிதத்தில்
நிதியுதவி:

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வங்கி வட்டி
வீதத்தை விட 2½ சதவிகிதம் குறைந்த வட்டி வீதத்தில் அளிக்
கும் ரிசர்வ் வங்கியில் சலுகை வீத நிதியுதவித் திட்டம் 1981–82
ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுகிறது. 1980–81ஆம் ஆண்டில்
தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தலைமைச்
சங்கமாகிய கோ–ஆப்டெக்ஸ்க்கும் இந்திய ரிசர்வ் வங்கி, அனுமதி
துள்ள மொத்தக் கடன் வரையறைகள் இணைப்பில் கொடுக்கப்
பட்டுள்ளன. நிதியுதவும் வங்கிகள் ரிசர்வ் வங்கி அனுமதித்துள்ள
மொத்தக் கடன் வரையறைகள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்
ளன. நிதியுதவும், வங்கிகள் ரிசர்வ் வங்கியின் 6½ சதவீத வட்டி
வீதத்தில் நிதியினை தொழில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்
கும், தலைமைச் சங்கத்திற்கும் அளிப்பதற்கு ஏதுவாக இருக்கும்
பொருட்டு வட்டி உதவித் தொகைக்காக மாவட்ட கூட்டுறவு
மத்திய வங்கிகளுக்கு 3 சதவீதமும், மாநில கூட்டுறவுச் வங்கிக்கு
1 சதவீதமும் வழக்கம் போல வழங்கப்படும். இந்த நோக்கத்
திற்காக ரூ. 75.61 இலட்சம் 1980-81ல் செலவு செய்யப்பட்
டுள்ளது. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கூட்டுறவு மத்திய
வங்கிகளால் வழங்கப்பட்ட நடைமுறை மூலதனக்கடன்வசூலிக்கப்
படாததன் விளைவாக ஏற்படும் நட்டத்தில் 90% வரைஅரசாலும்
மீதமுள்ள தொகை சம்பந்தப்பட்ட மத்திய வங்கிகளாலும்
ஈடுசெய்யப்படுகிறது. 1980-81–ல் ரூ. 5.15 இலட்சம் செலவிடப்
பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் 1981-82ஆம் ஆண்டிலும்
தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

3. கைத்தறித் தொழில் நுட்பத்தின் தரத்தை உயர்த்துவதற்கான
திட்டம்:

நுகர்வோரின் மாறிவரும் ரசனைகளுக்கேற்பவும், விருப்பத்திற்
கேற்பவும், உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் வளர்ந்து வரும்
தேவைகளை ஈடு செய்யவும் கைத்தறி நெசவுத் தொழிலில் புதிய
தொழில் உத்திகளைக் கையாள வேண்டும். இதைக் கருத்தில்



கொண்டு கைத்தறி நெசவாளர் சங்கங்கள் தறிகளை புதுப்பிக்கவும்
நவீனப்படுத்தவும் அல்லது புதிய நவீன கைத்தறிகளை வாங்க
வும் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென்று
1980-81–ல் ரூ. 21.00 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது இந்நல்
மூன்றில் ஒரு பங்கு உதவித்தொகையாக இருக்கும். கைத்தறியில்
புதிய தயாரிப்புகளையும், புதிய வடிவமைப்புகளையும் உருவாக்
கும் திட்டத்தின்படி கோ-ஆப்டெக்ஸ் வடிவமைப்பு பணி நிலையங்
களை ஏற்படுத்தி வருகிறது. மதுரை மற்றும் திருச்சியில் இரண்டு
நிலையங்கள் முறையே 1977–78, 1979-80–ல் ஆரம்பிக்கப்பட்டுள்
ளன. மேலும், 1980–81-ல் இரண்டு வடிவமைப்பு நிலையங்களைச்
சேலம் மற்றும் கோவை ஆகிய இடங்களில் ரூ. 7.00 இலட்சம்
மொத்தச் செலவில் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது 1981-
82ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் மேலும் ஒரு வடிவமைப்பு
நிலையம் ரூ. 3.50 இலட்சம் செலவில் உருவாக்கப்பட உள்ளது.

4. கைத்தறித் தொழிலுக்கான இரு பொருள்கள் வழங்குதல்:

(அ) பருத்தி நூல்:

12 கூட்டுறவு நூற்பாலைகள் 3.14 இலட்சம் கதிர்த் திறன்
கொண்டு நம் மாநிலத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ், மாதம்
ஒன்றுக்கு 7,500 பேல்களைக்கொண்ட பல வகையான எண்களைக்
கொண்ட பருத்தி நூல்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள
நெசவாளர் சங்கங்களுக்கு உற்பத்தி செய்து வருகின்றன. 12
கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் உற்பத்திச் செய்யப்படும் சிட்ட
நூல்களை கோ–ஆப்டெக்ஸ் கட்டுப்பாட்டில் உள்ள 21 நூல்
விற்பனை செய்யும் நிலையங்கள் கொள்முதல் செய்து மாநிலம்
முழுவதும் உள்ள 1,115 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ்
வரும் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்குகின்றது. எனினும்,
கூட்டுறவுத் துறையில் இல்லாத நெசவாளர்களுக்கு சில சமயங்
களில் பருத்தி நூல் கிடைப்பதில் சிரமங்கள் உள்ளன. மோட்டா
ரக நூல் நெய்வதற்குத் தேவையான பருத்தி கிடைக்காததால்
அந்நூல் விலை ஏறியது. இதனால் தமிழக அரசு, இந்த பிரச்
சனைக்கு தீர்வுகாணும் பொருட்டு இதனை இந்திய அரசின்
நாட்டத்திற்குக் கொண்டு சென்றது. இதன் விளைவாக, இந்திய
அரசு இந்திய பருத்தி ஆலைகள் இணையத்திற்கு 20 முதல்40ஆம்
எண் வரையிலுள்ள நூல்களை 1981ஆம் ஆண்டு ஜனவரி
மூன்றாம் வாரத்தில் வெளி மார்க்கெட்டில் நிலவிய நூல்
விலையை விட 10% அளவிற்குக் குறைந்த விலையில் வழங்க
ஆலோசனை கூறியது. அதாவது ஆலையின் விலையில் 7.5%
அளவிற்கு மேற்படி காலத்திற்கு குறைக்க வேண்டும். மேலும்,
மாநில அரசு தென்இந்திய ஆலைகள் சங்கப் பிரதிநிதிகளுடன்
விவாதித்ததினால், இச்சங்கம் 5,000 பேல் 40–என் நூற் சிட்டங்
களை குறைந்த விலையில் கைத்தறி நெசவாளர்களுக்கு
விநியோகம் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது. இரண்டு பொது
வான நூல் நிலையங்களை மதுரை மற்றும் சேலம் ஆகிய

இடங்களில், கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தமிழ்நாடு துணி ஆலைக்கழகம் ஆகியவற்றின் உபரியாக உள்ள நூல்களை கூட்டுறவுத் துறைக்கு வெளியில் உள்ள நெசவாளர்களுக்கு தொடர்ந்து விற்பனை செய்ய திறக்கப்பட்டுள்ளன.

(ஆ) பட்டு மற்றும் சரிகை:

நமது மாநிலத்தில் தற்சமயம் 58 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 14,000 தறிகளுடன் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களுக்கு ஒரு மாதத்திற்கு 15,000 கிலோ கோராப் பட்டும், 5,000 மார்க்குகள் சரிகையும் தேவைப்படுகிறது. மத்திய கச்சாப் பட்டு மற்றும் சரிகை கொள்முதல் குழு ஒன்று 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அமைக்கப்பட்டது. இதற்கு கோ-ஆப்டெக்சின் தனி அலுவலரை தலைவராகக் கொண்டு பட்டுச் சங்கங்களின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்ட இக் குழு தொடர்ந்து நல்ல தரமான பட்டினை நியாயமான விலையில் கொள்முதல் செய்து வருகிறது. காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை லிமிடெட்டில் உற்பத்தியாகும் சரிகை அனைத்தையும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்கு மேல் தேவைப்படும் சரிகையை சூரத் சரிகை வியாபாரிகள் சங்கத்தின் மூலம் மத்திய கொள்முதல் குழுவால் வாங்கப் படுகிறது.

(இ) செயற்கைப் பட்டு இழை

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒவ்வொரு மாதமும் 30 டன் விஸ்கோஸ் செயற்கைப்பட்டினை கோ-ஆப்டெக்ஸ் மூலம் விநியோகம் செய்ய தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்துடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதைத் தவிர தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்திடமிருந்து மரக்கூழைப் பெற்று ரயான் நூலை நூற்றுவரும் பிற மாநிலத்தவரிடமிருந்து வருடத்திற்கு 420 டன் விஸ்கோஸ் செயற்கைப்பட்டு இழையைக் கொள்முதல் செய்து தனியார் துறை நெசவாளர்களுக்கு விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

(ஈ) சாயப் பொருள்கள் மற்றும் இரசாயனப் பொருள்கள்:

தனியார் துறையில் இருக்கும் கைத்தறி நெசவாளர்கள் தங்களுக்குத் தேவையான சாயப் பொருள்கள் மற்றும் இரசாயன பொருள்களை வெளிச் சந்தையில் இருந்து பெற்று வருகின்றனர். சொந்தமாக சாயச்சாலைகள் வைத்திருக்கும் ஒரு சில நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தங்களுக்குத் தேவையான சாயம் மற்றும் இரசாயனப் பொருள்களை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடம் இருந்தும்/அவர்களின் முகவர்களிடம் இருந்தும் பெற்று வருகின்றனர். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் சாயம் மற்றும் இரசாயனப் பொருள்களைக் கொள்முதல் செய்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவையைப் பூர்த்திசெய்து வருகிறது.



சாயம் மற்றும் இரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், கூட்டுத் துறையில் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கடலூரில் "வானவில் சாய இரசாயன பொருள்கள் நிறுவனம்', ஒன்றை நிறுவியுள்ளது. இந்நிறுவனத்திற்கு 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் பங்கு மூலதனத்தினை கோ-ஆப்டெக்ஸ் செலுத்த உள்ளது. இந்நிறுவனம் ஆரம்பித்தவுடன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சாயம் மற்றும் இராசாயனப் பொருள்கள் கோ-ஆப்டெக்ஸ் மூலம் கிடைக்கும்.

5. கைத்தறி வளர்ச்சி திட்டங்களுக்கு உதவி அளித்தல்:

மத்திய அரசு நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசு, நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களைக் காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், மதுரை ஆகிய இடங்களிலும், கரூர், குறிஞ்சிப்பாடி ஆகிய இரு இடங்களில் இரண்டு ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களையும் அமைத்துள்ளது. இத்திட்டத்தில் இதுவரை மொத்தம் 13,000 தறிகள் 31-12-1980 வரை சேர்க்கப்பட்டுள்ளன. பொதுவாக இரண்டு ஆண்டுக்குள் தறிகள் 22,000 அளவிற்கு அதிகரித்துள்ளன. மேலும் இத்திட்டத்தினால் தொடர்ச்சியான வேலை வாய்ப்பும், நியாயமான கூலியும் ஆண்டு முழுவதும் கிடைக்கின்றன. மேற்படி எல்லாத் திட்டங்களும் ஆரம்பத்தில் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் பிரிவுகளாக இருந்தன. பிறகு இவை விற்பனைக்காக கூட்டுறவு நிறுவனங்களாக மாற்றி கோ-ஆப்டெக்ஸ் உடன் இணைக்கப்பட்டுள்ளன.

6. கைத்தறித்தொழிலுக்கு விற்பனை வசதி உதவி:

கோ-ஆப்டெக்ஸ் என்றழைக்கப்படும் தலைமைச் சங்கமான கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அதனுடன் இணைந்த தொடக்க நிலை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் 50% அளவிற்கு விற்பனை வசதியைச் செய்து கொடுக்கிறது.

(அ) கைத்தறித் துணியின் மீதான தள்ளுபடி:

கைத்தறித் துணியின் விற்பனையைப் பெருக்குவதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கையில் நுகர்வோருக்கு கைத்தறித் துணியில் தள்ளுபடி சலுகை அளிப்பதும் ஒன்றாகும். கடந்த சில ஆண்டுகளாக 30 நாட்களுக்கு 20% விசேடத் தள்ளுபடியை மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் ஏற்றுக் கொள்வது என்ற அடிப்படையில் வழங்கி வருகிறது. இதுதவிர கைத்தறித் துணி விற்பனைக்கு மாநில அரசு 25-லிருந்து 30 நாட்களுக்குள் 10% தள்ளுபடி அளிக்கிறது. இவ்வாறு தள்ளுபடி செய்வதின் மூலம் 1980-81ஆம் ஆண்டில் மொத்தம் ரூ 439 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1981-82ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு உத்தேசமாக ரூ. 250.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1981-82ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ 524.00 இலட்சம் செலவு அதிகரிக்கும்.

1980–81–ல் தள்ளுபடித் திட்டம் அறிவிக்கும் பொழுது மத்திய அரசு ஒரு நிபந்தனையை விதித்தது. அதாவது தள்ளுபடி தொகையில் மத்திய அரசின் பங்கு ரூ. 50/- அல்லது தனி நபரின் வியாபாரத்தில் 10% இது எது குறைவோ அது மட்டும்தான் தர இயலும் என்பதாகும். இந்த வரையறையினால் அதிகமான தள்ளுபடி அனுமதிக்க முடியாமையினால் கைத்தறித் துணியின் விற்பனை மிகவும் பாதிக்கப்படுகிறது. மேலும், இந்த வரையறை யினால் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் சரக்குகளை வங்கி மூலம் வெளி மாநிலங்களுக்கு அனுப்ப இயல வில்லை. மத்திய அரசை சிறப்புத் தள்ளுபடி மீதான இந்த வரை யரைகளை நீக்கும்படியும் மேலும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வங்கி மூலம் அனுப்பும் துணிகளுக்கு தள்ளுபடி வழங்க அனுமதிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) நெசவாளர் கூட்டுறவுத் தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தை பெருக்குதல்:

தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வசதியைச் செய்து கொடுக்க இயலும் வகையில் தலைமைச் சங்கத்தின் கடன் பெறும் அளவை உயர்த்தும் பொருட்டு 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 1 85 கோடி அரசு பங்கு மூலதனம் செலுத்தி யுள்ளது. மேலும் 1981-82ஆம் ஆண்டில் ரூ. 100.00 இலட்சம் அளவிற்கு கோ-ஆப்டெக்ஸின் பங்கு மூலதனம் மத்திய அரசும் மாநில அரசும் சமமாக செலுத்த உத்தேசித்துள்ளது.

(இ) சிறந்த ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்க 1980–81ம் ஆண்டில் ரூ. 0.08 இலட்சம் செலவிடப்பட் டது. மேலும் 1981–82ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கு இதே அளவு நிதியொதுக்கம் செய்யப்பட்டது. 1981–82ஆம் ஆண்டி லும் சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசுகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7 பட்டு மற்றும் செயற்கைப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளித்தல்:

பட்டு நெசவாளர்கள் புதிய கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க பங்கு மூலதனம், நவீன உபகரணங்கள், மேசை நாற்காலிகள், ஆகியவற்றை வாங்குவதற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. 1980–81ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 1.50 இலட்சம் செல விடப்பட்டுள்ளது. பட்டுத் துணிகளின் தேவை அதிகரித்து வருவ தால் 1981–80ஆம் ஆண்டிலும் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்க உள்ளன. திருத்திய மத்திய அரசின் நிதி யுதவித் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நெசவாளர் ஒரு வருக்கு ரூ. 100/–ல் இருந்து ரூ. 225/–ஆக பங்கு மூலதனக் கடன் தொகை வீதத்தில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 3.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



8. நலத்திட்டங்கள்:

(அ) சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்:

கூட்டுறவு அமைப்பின் கீழ் செயலாற்றிவரும் கைத்தறி நெச வாளர்கள் நலனை முன்னிட்டு தமிழ்நாட்டில் ''கூட்டுறவு கைத் தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்'' என்ற பெயரில் ஒரு திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் நெசவாளர் ஆயுள் தொகுப்பு ஈட்டுறுதி திட்டத்துடன் இணைக் கப்பட்டுள்ளது. இத்திட்டததில் இதுவரை 66,500 கைத்தறி நெசவாளர்கள் சேர்ந்துள்ளனர். இத்திட்டத்தில் இதுவரை சேர்ந்துள்ள ஒவ்வொரு நெசவாளரும் தான் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் 6 பைசா சந்தாத் தொகையாகக் கொடுக் கின்றனர். அந்த ஒரு ரூபாய்க்கு அரசு 3 பைசா கொடுத்து அந்த மொத்தச் சேமிப்பு ஒரு தனி நிதிக் கணக்காக வைக்கப்படுகின் றது. இதற்கு 7% வட்டி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள நெசவாளர் ஒருவர் இறந்துவிட்டால் அவரது நியமனதாரர் அவருடைய சேமிப்புக் கணக்கில் உள்ள தொகைக்கு சமமான தொகையோ அல்லது குறைந்த பட்சம் ரூ. 500/–ஐ ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெறுகிறார். 1980 மார்ச் ஒன்றிலிருந்து இத்தொகையை ரூ. 3,000/–த்திற்கு உயர்த்த ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது. இத் திட்டத்திற்கு 1980–81ஆம் ஆண்டில் ரூ. 37.79 இலட்சம் செலவிடப்பட்டுள் ளது. 1981–82ஆம் ஆண்டிற்கும் இத்திட்டத்திற்கு ரூ. 30,00 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்:

1962ஆம் ஆண்டிற்குப் பிறகு நிறுத்தப்பட்ட நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு 1979–80ஆம் ஆண்டிலிருந்து புதிதாக மாற்றி அமைக்கப்பட்ட. புதிய நெச வாளர்கள் வீட்டு வசதித் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்படி, ஒரு வீட்டின் மொத்த மதிப்பு ரூ. 8,000க்கு மேல் போகக்கூடாது. அதில் ரூ. 1,000 மாநில அரசு உதவித் தொகையாக அளிக்கிறது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச் சிக் கழகம் ஒவ்வொரு வீட்டின் மதிப்பில் 70 சதவீதத்திற்கு மேற்படாமல் கடன் வழங்குகிறது. இதன்படி ஒரு வீட்டின் மதிப்பு ரூ. 5,600 ஆகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5,000 வீடுகள் கட்ட கருதப்பட்டுள்ளது. இதில் 2,000 வீடுகள் கட்ட ஏற்கனவே திட்டமிடப்பட்டு அவை செயல்பட்டு வருகிறது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் இது வரை ரூ. 59.79 இலட்சம் கடனுதவி அளித்துள்ளது. மேலும் ரூ. 49.73 இலட்சம் மற்றுமொரு கடன் வாங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. 1981–82ஆம் ஆண்டில் 1,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும். இதன் மூலம் ஒவ்வொரு வீட்டிற்கும் அரசு ரூ. 1,000 உதவித் தொகை அளிக்கிறது. மேலும் ஒவ்வொரு வீட்டிற்கும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் அதனுடைய விதிமுறைப்படியான கடனையும் வழங்குகிறது.

கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்:

கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டிற்காகவும் வளர்ச்சிக்காகவும், இரு பொருள்கள், மூலப்பொருள்கள் ஆகியவற்றை வழங்குவதற்காகவும், கைத்தறித் தொழிலின் சீரான வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வதற்காகவும், தமிழ்நாடு அரசு பல நிறுவனங்களை அமைத்துள்ளது. இவற்றின் செயல்முறைகளும் திட்டங்களும் பின்வருமாறு;—

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்);

''கோ-ஆப்டெக்ஸ்'' என்று எல்லோராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், தலைமைச் சங்கமாகும். இத்துடன் இம்மாநிலத்திலுள்ள நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்துள்ளன. 1980-81ம் ஆண்டில் இத்தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தில் ரூ. 1.85 கோடியை அரசு கூடுதல் முதலீடு செய்துள்ளது. இதனால் விற்பனையைப் பெருக்கவும் ஏதுவாகின்றது. 31-3-1981ஆம் நாள் நிலவரப்படி கோ-ஆப்டெக்ஸின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10.64 கோடியாகும். இதில் ரூ. 9.77 கோடி தமிழ்நாடு அரசின் பங்கு மூலதனமாகும். கோ-ஆப்டெக்ஸின் முக்கிய நோக்கம், மூலப்பொருட்களான நூல், பட்டு, சரிகை சாயம் மற்றும் இரசாயனப் பொருள்களை வாங்கி அவற்றை தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதும், மேலும் அவை உற்பத்தி செய்யும் கைத்தறித் துணிகளுக்கு விற்பனை வசதியை பெருக்குவதும் ஆகும். 1980-81ல் ரிசர்வ் வங்கி சலுகை வட்டி விகிதத்தில் கோ-ஆப்டெக்ஸிற்கு ரூ. 15.00 கோடி ரொக்க கடன் வழங்கியுள்ளது. இதற்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

பன்னிரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் நூலினை கோ-ஆப்டெக்ஸ் தன்னுடைய 21 நூல் விற்பனை நிலையங்கள் மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்குகின்றன. தமிழகத்தில் 264 விற்பனை நிலையங்களையும் வெளி மாநிலங்களில் 180 விற்பனை நிலையங்களையும் கோ-ஆப்டெக்ஸ் நடத்தி வருகின்றது.

கோ-ஆப்டெக்ஸ், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 50 சதவீதம் உற்பத்தியினைக் கொள்முதல் செய்து வருகின்றது. அரசின் கொள்கையின்படி ரூ. 5 இலட்சத்திற்குள் ஆண்டு விற்பனை உள்ள சிறிய கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் உற்பத்தி முழுவதையும் கொள்முதல் செய்யும்படியும், ரூ. 5 இலட்சத்திற்கு மேல் ஆண்டு விற்பனை உள்ள மற்ற சங்கங்களின் உற்பத்தியில் 50 சதவீதம் கொள்முதல் செய்யும் படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுதுள்ள கொள்முதல் நிலையே தொடர்ந்து நீடிக்க வேண்டுமானால் இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு ரூ. 50 கோடி அளவிற்குக் கைத்தறித் துணியினை அதிகப்படியாக கொள்முதல் செய்ய வகை செய்து கொடுக்கப்படவேண்டும்.



(அ) புதிய விற்பனை நிலையங்களைத் தொடங்குதலும், ஏற்கனவே உள்ளவற்றை நவீனப்படுத்துதலும்:

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 150 இலட்சம் செலவில் சுமார் 400 புதிய விற்பனை நிலையங்களைத் தொடங்கவும், தற்பொழுது இயங்கிவரும் 300 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. மாநில அரசு, புதுடில்லி தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடம் இருந்து ரூ. 56.25 இலட்சம் நிதியுதவி பெற்று, கோ-ஆப்டெக்ஸ் மேலும் 88 புதிய விற்பனை நிலையங்களைத் தொடங்கவும் தற்பொழுது இயங்கி வரும் 57 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துவதற்கும் மொத்தம் ரூ. 75.00 இலட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டம் 30-6-1981க்குள் முடிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. 1981-82ஆம் ஆண்டில் மாநில அரசிடமிருந்து ரூ.37·50 இலட்சம் நிதியுதவி பெற்று 70 புதிய விற்பனை நிலையங்களை தொடங்கவும் 50 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தவும் கோ-ஆப்டெக்ஸ் கருதியுள்ளது.

(ஆ) மாதிரி வடிவமைப்பு பணி நிலையங்களை ஏற்படுத்தல்:

மக்களின் தற்போதைய விருப்பங்களுக்கேற்ப கைத்தறியில் உற்பத்தியாகும் துணிகளில் புதிய வடிவமைப்புகளைப் போடவும் உற்பத்தி முறையைச் சீர்படுத்தவும் கோ-ஆப்டெக்ஸ் மாநில அரசிடமிருந்து நிதியுதவி பெற்று மதுரையிலும், திருச்சியிலும் ஒவ்வொன்றும் ரூ. 3.50 இலட்சம் செலவில் மாதிரி வடிவமைப்பு பணி நிலையங்கள் இரண்டினைத் தொடங்கியுள்ளது. 1980-81ம் ஆண்டில் ரூ. 7.00 இலட்சம் செலவில் சேலத்திலும், கோயம்புத்தூரிலும் மாதிரி வடிவமைப்பு பணி நிலையங்கள் இரண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஒரு நிலையம் 1981-82ஆம் ஆண்டில் ரூ. 3.50 இலட்சம் செலவில் திருநெல்வேலியில் அமைக்கப்படும்.

(இ) ஜனதா துணி உற்பத்தி:

தமிழ்நாட்டில் சுமார் 10,000 கைத்தறிகள் ஜனதா ரக வேஷ்டிகள், புடவைகள், லுங்கிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன. மக்கள் அதிகமாக விரும்பும் புதிய ரகங்களை ஜனதா ரகங்களில் அறிமுகப்படுத்தவும், மற்றும் மூலப்பொருட்களின் விலையேற்றம், ஊதிய உயர்வு இவற்றின் காரணமாக ஜனதா ரகங்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்தவும் மத்திய அரசுக்கு செயற் குறிப்புகள் அனுப்பப்பட்டன. மத்திய அரசின் ஒப்புதல் பெறும் வரையில், பொருளாதார வகையில் நட்டத்தைத் தராத ரகங்கள் மட்டும் ஜனதா ரகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. 1979-80ஆம் ஆண்டில் 11 மில்லியன் மீட்டர் ஜனதா துணி உற்பத்தி செய்யவேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 980-81ஆம் ஆண்டில் 15 மில்லியன் மீட்டர் ஜனதா ரகத் துணி உற்பத்திச் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 1981-82-ம் ஆண்டிற்கு 20 மில்லியன் மீட்டர் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஊ) ஏற்றுமதி

''கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல்'' என்ற பெயரில் ஒரு ஏற்றுமதி பிரிவை கோ-ஆப்டெக்ஸ் அமைத்து, படிப்படியாக ஏற்றுமதி மூலம் விற்பனையை அதிகரித்து வருகின்றது. ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் 31-12-1980 வரை ரூ. 2.27 கோடி அளவிற்கு விற்பனை அதிகரித்துள்ளது. சிங்கப்பூரில் விற்பனை நிலையம் ஒன்று 3-3-81-ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அடுத்து 2 ஆண்டுகளில் கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 4.00 கோடிக்குக் கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) கடன் விற்பனைத் திட்டம்:

அரசுப் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக கடனில் கைத்தறி துணி விற்பனை செய்யும் திட்டத்தை அரசு கொண்டுவந்துள்ளது. இக்கடன் விற்பனைத் திட்டத்திற்கு நல்ல ஆதரவு இருப்பதுடன் இவ்வாண்டில் கடனில் விற்பனை செய்யப்பட்ட கைத்தறி துணிகளின் அளவு ரூ. 13.26 கோடிக்கு உயர்ந்துவிட்டது.

2. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்:

கூட்டுறவு அமைப்பின் கீழ்வராத கைத்தறி, விசைத்தறி துணைத் தொழில்களுக்கு, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து கடன் உதவி அளித்து வருகின்றது. ஆண்டொன்றுக்கு இக்கழகம் ரூ. 2.63 கோடி அளவிற்கு கடனுதவி அளித்து வருகின்றது.

3. கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்:

மத்திய அரசின் நிதியுதவியுடன் இம்மாநிலத்தில் நான்கு கைத்தறி வளர்ச்சி முனைப்பு திட்டங்களையும், இரண்டு ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களையும் அரசு நிறுவியுள்ளது. சிவராமன் குழுவின் பரிந்துரையின் பேரில், இத் திட்டங்கள் தொடங்கப்பட்டன. நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கவும், நூல் வழங்கல், தறியில் போடுவதற்கு முன்பும், தறியிலிருந்து துணியை எடுத்த பிறகும் தேவையான வசதிகளை அளித்தல் கடன் உதவி செய்தல் ஒரே அமைப்பின் கீழ் விற்பனை வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற எல்லா வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ. 300/- வருவாய் ஈட்டவும் இத்திட்டங்கள் வகை செய்கின்றன.

31-12-1980 வரையில் மேற்கண்ட திட்டங்களில் 13,000 கைத்தறிகள் பயன்படுத்தப்பட்டன. அடுத்து இரண்டு ஆண்டுகளில் 22,000 கைத்தறிகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். இத் திட்டங்கள் தங்களின் எல்லைக்குள் இருக்கும் சில நலிந்த செயலிழந்த நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள தறிகளை மேற்கொண்டு வேலை வாய்ப்பினை அளிக்கிறது.



பின்வரும் இடங்களில் கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் துணை நிலையங்களைத் தொடங்கி உள்ளன:

| திட்டத்தின் பெயர். | துணை நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. கைத்தறி வளர்ச்சி முனைப்புத் திட்டம், காஞ்சிபுரம். | 1. அனகாபுத்தூர்<br>2. பொதட்டூர்பேட்டை<br>3. திருமால்புரம்<br>4. பனப்பாக்கம்<br>5. அம்மையார்குப்பம் |
| 2. கைத்தறி வளர்ச்சி முனைப்புத் திட்டம், ஈரோடு. | 1. சென்னிமலை<br>2. திருச்செங்கோடு<br>3. பவானி<br>4. திருப்பூர்<br>5. வெள்ளோடு<br>6. கவுண்டபாடி<br>7. ஒண்டிப்புதூர் |
| 3. கைத்தறி வளர்ச்சி முனைப்புத் திட்டம், சேலம். | 1. பாப்பாரப்பட்டி<br>2. புதுசத்திரம்<br>3. தொளசம்பட்டி<br>4. வேலகவுண்டம்பட்டி<br>5. அரசலூர்<br>6. சிங்கோலந்தபுரம் |
| 4. கைத்தறி வளர்ச்சி முனைப்புத் திட்டம், மதுரை. | 1. நாகர்கோவில்<br>2. கடையநல்லூர் |
| 5. ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், குறிஞ்சிப்பாடி. | 1. புவனகிரி<br>2. நடுவீரப்பட்டி<br>3. அன்னியூர்<br>4. திட்டக்குடி<br>5. சிறுபாக்கம்<br>6. அகரம் |

கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் கோ-ஆப்டெக்ஸ் மூலம் தங்களுடைய விற்பனையைப் பெருக்கிக் கொள்கின்றன. சலுகை அடிப்படையில் நிதியுதவி பெறும் பொருட்டு இந்த கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் கூட்டுறவுத் திட்டங்களாக இப்போது செயல்படுகின்றன.

4. கூட்டுறவு நூற்பாலைகள்:

(அ) செயல்முறைகளும், திட்டங்களும்:

தமிழகத்தில் உள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகள் 20-ம் எண் முதல் 120-ம் எண் வரை பல்வேறு ரக நூல்களை உற்பத்தி செய்து வருகின்றன. 9 நூற்பாலைகள் ரூ. 12.00 கோடி செலவில் விரிவாக்கத் திட்டத்தை எடுத்துக் கொண்டு பணிகளை முடித்துள்ளன. விரிவுபடுத்தப்பட்ட பிரிவுகள் உற்பத்தியைத் தொடங்கி விட்டன. தற்போதுள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகள் 3.14 இலட்சம் கதிர்கள் திறன் உடையதாக உள்ளன.

1980-81-ஆம் ஆண்டில் சேலம் கூட்டுறவு நூற்பாலையில் 12,000 கதிர்களைக் கொண்ட 'பி' பிரிவினை கூடுதலாக நிறுவ உத்தேசிக்கப்பட்டு இப்பணி நடந்து வருகிறது. 1981-82 ஆம் ஆண்டில் வட ஆற்காடு கூட்டுறவு நூற்பாலையில் 12,000 கதிர்களைக் கொண்டு கூடுதலாக ஒரு பிரிவை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி பேட்டையிலுள்ள தென்னிந்திய நூற்பாலை இம்மாவட்டத்தில் தொழிலில் பின்தங்கிய பகுதியில் செயற்கை நூலிழை தயாரிப்பதற்காக 12,000 கதிர்களுடன் 'சி' பிரிவை நிறுவக் கருதியுள்ளது. தமிழகத்தில் மேலும் மூன்று கூட்டுறவு நூற்பாலைகளை தொழிலின் பின் தங்கிய இடங்களில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் ஒன்று பருத்தி உற்பத்தியாளர்களுக்கு மதுரையில் உள்ள தேனியிலும் இப்போது நூற்பாலைகளே இல்லாத புதுக்கோட்டை மற்றும் தருமபுரி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் அமைக்கப்படும். மேற்படி ஆலைகள் ஒவ்வொன்றும் 25,000 கதிர்கள் திறன் கொண்டதாகவும், ரூ. 1,800 லட்சம் மொத்த திட்டச் செலவிலும் ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் நிறுவப்படும்.

(ஆ) சேலத்தில் கைத்தறிக்குப் பாவுக்கஞ்சி போடும் இயந்திரம்:

உற்பத்தியை பல்திறப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக அரசிடமிருந்து ரூ. 21.00 இலட்சம் நிதியுதவி பெற்று சேலம் கூட்டுறவு நூற்பாலையில் பாவு கஞ்சிபோடும் எந்திரம் நிறுவப்பட்டுள்ளது. இந்த எந்திரத்தின் மூலம் கைத்தறிகளுக்கு தேவையான பதனிடப்பட்ட பாவுகள் வழங்கப்படுகிறது.

(இ) நவீன சாயச்சாலைகள் :

ரூபாய் 90 இலட்சம் மொத்தத் திட்ட செலவில் அரசின் நிதியுதவியுடன் சேலம், திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத்தூர், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, மதுரை ஆகிய இடங்களில் நவீன சாயச்சாலைகள் நிறுவும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி சாயச்சாலை ஈரோடு, தமிழ்நாடு கூட்டுறவுத் துணி பதனிடும் ஆலையின் பிரிவுகளாகத் தற்பொழுது அமைக்கப்பட்ட போதிலும் இறுதியில் இவற்றை அந்தந்த மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மாற்றக் கருதப்படுகிறது. இதனால், கூட்டுறவு நூற்பாலைகள், உற்பத்தியை பல்திறப்



படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தாங்களாகவே சாயமிடப்பட்ட நூலை வழங்க இயலும். இதனைக் கருத்தில் கொண்டு சேலம், வேலூர், ஸ்ரீவில்லிபுத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு நூற்பாலைக் கட்டிடத்திலேயே நவீன சாயச்சாலைகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன. இதர சாயச்சாலைகள் விரைவில் முடிக்கப்பட்டு செயல்படத் தொடங்கும்.

5. தமிழ்நாடு சரிகை நிறுவனம், காஞ்சிபுரம் :

காஞ்சிபுரம் தமிழ்நாடு சரிகை நிறுவனம் தற்போது மாதமொன்றுக்கு சுமார் 500 மார்க்குகள் தங்க சரிகையை உற்பத்தி செய்கிறது. உற்பத்தி செய்த இச்சரிகையினை கோ-ஆப்டெக்ஸ் மூலம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது. மாதம் ஒன்றுக்கு 1,080 மார்க்குகள் தங்க சரிகையை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் தமிழ்நாடு சரிகை நிறுவனம் மூன்றாவது முறை மாற்றுப் பணியை ஆரம்பிக்க வேண்டி 1981-82-ஆம் ஆண்டில் ரூ. 4.00 இலட்சம் நிதியுதவி அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு கூட்டுறவு துணி பதனிடும் ஆலை, ஈரோடு :

ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணி பதனிடும் ஆலை வெளுப்பாக்குதல், சாயமிடல், பளபளப்பாக்குதல், துணிகளில் அச்சிடுதல், சிட்ட நூல் சாயமிடல் ஆகிய வசதிகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. பலதரப்பட்ட முறைகளின் உற்பத்தித் திறனை சமமாகப் பயன்படுத்தி ஒரு மாதத்திற்கு 10 இலட்சம் மீட்டர் அளவிற்கு உற்பத்தியைப் பெருக்கவும், தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடம் இருந்து ரூ. 22.50 இலட்சம் நிதியுதவி பெற்று இந்த ஆலை விரிவாக்கத் திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளது. துணிகளில் அச்சிடும் பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையின் மாத செயல் திறன் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | வெளுப்பாக்குதல் .. .. | ஒரு மாதத்திற்கு 5 இலட்சம் மீட்டர்கள். |
| 2. | சாயமிடல் .. .. | ஒரு மாதத்திற்கு 3 இலட்சம் மீட்டர்கள். |
| 3. | துணிகளைப் பளபளப்பாக்குதல். .. | ஒரு மாதத்திற்கு 4 இலட்சம் மீட்டர்கள். |
| 4. | துணிகளில் அச்சிடுதல் .. | ஒரு மாதத்திற்கு 1 இலட்சம் மீட்டர். |
| 5. | சிட்ட நூல் சாயமிடல் .. | ஒரு மாதத்திற்கு 250 பேல்கள். |

பல இடங்களிலுள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் பாலியெஸ்டர் இழை சேர்ந்த துணிகள், சட்டை துணிகள், சூட்டிங் துணி வகைகள், புடவைகள் போன்றவற்றை உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டன. அவை சந்தையில் நல்ல விலைக்கு ஏராளமாக விற்பனையாகின்றன. கைத்தறிகளில் உற்பத்தியாகும் பாலியெஸ்டர் துணிகளைச் செய்முறைப்படுத்துவதற்கு இப்பொழுது பம்பாய்க்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இதனால் போக்குவரத்துச் செலவும் இதர செலவுகளும் அதிகமாகியுள்ளன. எனவே, மத்திய அரசிடமிருந்து ரூ. 31.00 இலட்சம் நிதியுதவி பெற்று இந்த ஆலையில் பாலியெஸ்டர் இழை சேர்ந்த துணிகளைச் செய்முறைப்படுத்தும் பிரிவு ஒன்றை அமைத்து வருகிறது.

7. தமிழ்நாடு துணி நூல் நிறுவனம் :

புதுக்கோட்டையில் 25,200 நூற்பு கதிர்கள் திறனுள்ள காவேரி நூற்பு நெசவு ஆலையையும், 13,260 நூற்பு கதிர்கள் திறனுள்ள சோமசுந்தரம் சூப்பர் நூற்பு ஆலையையும், தமிழ்நாடு துணி நூல் நிறுவனம் எடுத்துக் கொண்டு அவற்றை நடத்தி வருகிறது. மேற்கண்ட ஆலைகளுக்கு தமிழ்நாடு அரசு ரூ. 87.71 இலட்சம் நிதியுதவிக்கு உத்தரவாதம் அளித்துள்ளது.

தமிழ்நாடு துணி நூல் நிறுவனத்தின் பஞ்சு கொள்முதல் பிரிவு 12 நூற்பாலைகளுக்குத் தேவைப்படும் பஞ்சினையும், இரண்டு தமிழ்நாடு துணி நூல் நிறுவனத்தின் ஆலைகளுக்கும் தேவைப்படும் பஞ்சினையும், வாங்க தற்போது ஏற்பாடு செய்து வருகிறது. இந்நிறுவனம், ரூ. 8.25 இலட்சம் செலவில் பருத்தி நூல் பரிசோதனை செய்யும் சோதனைக் கூடத்தைக் கோயம்புத்தூரில் அமைத்துள்ளது. கூட்டுறவு நூற்பாலைகள் தயாரிக்கும் நூலின் தரத்தினைப் பரிசோதித்து, தரத்தினை பராமரித்து வருகின்றது. தமிழ்நாட்டில் கைத்தறித் துறையில் பின்னடைந்துள்ள இடங்களில் விசைத்தறித் தொகுதிகளை அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அருப்புக்கோட்டை, பெரியார் மாவட்டத்திலுள்ள சிவகிரி, திருச்சி மாவட்டத்திலுள்ள ஜெயங்கொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் உள்ள விசைத்தறித் தொகுதிகள் விரைவில் செயல்படத் தொடங்கும். இவை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 15.00 கோடி மதிப்புள்ள பல வகையான நவீன ரகத் துணிகளை உற்பத்தி செய்து படிப்படியாக முன்னேறி இயந்திர ஆலைகளின் உற்பத்தியுடன் போட்டியிடும் நிலைக்கு உயரும்.

4. மூடப்பட்ட துணி ஆலைகளை மீண்டும் திறத்தல் :

பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் மூடப்பட்டிருந்த 10 ஆலைகளுக்கு (6,365 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்) வணிக வங்கிகளின் பெயருக்கு அரசு உத்தரவாதம் அளித்ததன்



காரணமாக, இவ்வாலைகள் 1976, 1977–ல் மீண்டும் திறக்கப்பட்டு செயல்படத் தொடங்கின. இவ்வகையில் 10 ஆலைகள் திறக்கப்படுவதற்கு அரசு ரூ. 304.33 இலட்சத்திற்கு உத்தரவாதம் அளித்துள்ளது. தமிழ்நாடு, 1969 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (தனிவிதித் துறைகள்) சட்டத்தின்கீழ் தமிழக அரசு ஏழு ஆலைகளை நிவாரண நிறுவனங்களாக அறிவித்துள்ளது. அனைத்து ஆலைகளும் அரசு உத்தரவாதத்தினைப் பயன்படுத்திக் கொண்டு மீண்டும் திறந்து உற்பத்தியைப் பெருக்கி கடந்த மூன்று ஆண்டுகளாக உற்பத்தித் திறனையும் ஆதாயத்தினையும் அதிகரித்துள்ளது. மேற்படி ஆலைகள் நல்ல நிலையில் இயங்கி வருவதால் அரசு இனிமேல் உத்தரவாதம் அளிக்க வேண்டியதில்லையென முடிவு செய்தது. பிரகாஷ் ஆலை, இரவீந்திரா ஆலை, சக்தி டெக்ஸ்டைல்ஸ், கோயம்புத்தூர் கமலா ஆலை ஆகியவற்றிற்கு அரசு அளித்த உத்தரவாதத்தினை நிறுத்திவிட்டது. ஜனார்த்தனா ஆலை, கோயம்புத்தூர் மது நூற்பு நெசவு ஆலை, லோடஸ் ஆலை ஆகியவற்றிற்கு அரசு அளித்துள்ள உத்தரவாதத்தினை நிறுத்திவிடுவது பற்றி அரசு சம்பந்தப்பட்ட வங்கிகளுடன் கலந்தாலோசித்து வருகின்றது.

மேற்படி ஆலைகளைத் தவிர, சென்னை, பின்னி லிமிடெட்டுக்கும் மதுரை ஸ்ரீ மீனாட்சி மில்ஸ் லிமிடெட்டுக்கும் அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. பெரும் வெள்ளம், மழை காரணமாக 1976 ஆம் ஆண்டில் பின்னி ஆலை மூடப்பட்டபோது, ஸ்டேட் வங்கி அரசு உத்தரவாதத்தின் பேரில் ரூ. 1 கோடி கடனுதவி அளித்தது. மத்திய அரசும், மாநில அரசும் மூன்று ஆண்டு காலங்களுக்கு 50:50 என்ற அடிப்படையில் மேற்படித் தொகைக்கு வட்டி அளிக்க ஒப்புக் கொண்டன. இவ்வாலையினை புதுப்பிக்க இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ரூ. 3.00 கோடி அளவிற்கு கடனுதவி அளித்தது. இக்கடனுக்கும் மத்திய அரசும் மாநில அரசும் 50:50 என்ற அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு வட்டியினை செலுத்த ஒப்புக்கொண்டன. இவ்வாறு இருந்தும், இவ்வாலை நிதி நெருக்கடி காரணமாக 1981–ம் ஆண்டு சனவரித் திங்களில் மூடப்பட்டது. இந்த ஆலை மீண்டும் ஏப்ரல் 81–ல் திறக்கப்பட இருக்கிறது. இந்தியத் தொழில் நிதிக் கழகம், மதுரை ஸ்ரீ மீனாட்சி ஆலைக்கு ரூ. 55 இலட்சம் வழங்கியது. இத்தொகைக்கு அரசு உத்தரவாதம் அளித்தது. மேற்படி ஆலை தன்னுடைய சொத்துக்களை முறையாக மேற்படி வங்கியிடம் அடைமானம் வைத்து எழுதிக் கொடுத்த பின்னர் அரசு ஏற்கெனவே அளித்திருக்கும் உத்திரவாதத்தினை நிறுத்திவிடும்.

5 தனியார் துறையில் துணி தயாரிக்கும் ஆலைகள் புதிதாக அமைத்தல், ஏற்கெனவே உள்ள ஆலைகளை விரிவுபடுத்துதல்.

புதிய நூற்பாலைகளை நிறுவுவதற்கு உரிமம் வழங்குவது ரத்து செய்யப்பட்டதன் விளைவாக, துணி நூல் ஆணையாளர் புதிய நூற்பாலைகள் நிறுவவும் ஏற்கனவேயுள்ள நூற்பாலைகளை விரிவுபடுத்தவும் சம்பந்தப்பட்ட மாநில அரசின் பரிந்துரையின் பேரில் அனுமதி வழங்குகிறார். இந்திய அரசு உரிமம் வழங்கும்

கொள்கையை ரத்து செய்துவிட்டதன் காரணமாக நமது மாநிலத்தில் புதிய நூற்பாலைகள் நிறுவவும், ஏற்கனவே உள்ள நூற்பாலைகளை விரிவுபடுத்தவும் அதிக தொழிலதிபர்கள் முன் வந்துள்ளனர். பின் தங்கிய பகுதிகளில் புதிய நூற்பாலைகள் நிறுவ ஊக்கமளிப்பது மாநில அரசின் கொள்கையாகும். 1980-ம் ஆண்டில் மொத்தம் 114 விண்ணப்பங்களில், ஆலைகளை விரிவு படுத்துவதற்காக 28 விண்ணப்பங்களும், புதிதாக ஆலைகள் நிறுவ 86 விண்ணப்பங்களும், கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் அலுவலகத்திலிருந்து துணி நூல் ஆணையருக்கு பரிந்துரைத்து அனுப்பப்பட்டன. ஒரு சில விண்ணப்பங்கள் பம்பாய் துணி நூல் ஆணையருக்கு நேரிடையாகவே வந்தன. 1980 ஆம் ஆண்டில் துணி நூல் ஆணையாளர் தமிழ்நாட்டில் தற்போதுள்ள 49 ஆலைகளை விரிவுபடுத்தவும் 181 புதிய ஆலைகளை ஏற்படுத்தவும் அனுமதி வழங்கியுள்ளார். புதிதாக ஏற்படுத்தக்கருதியுள்ள நூற்பாலைகளினாலும் விரிவுபடுத்தக் கருதிய ஆலைகளினாலும் சுமார் 90,000 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

சட்ட ரீதியான பாதுகாப்பு :

கைத்தறித் தொழிலாளர்களின் பணி நிலைகளை முறைப்படுத்த ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கைத்தறி தொழிலாளர்கள் (பணி நிலைகளும், பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன் வடிவு'' 28-4-1979 அன்று சட்ட மன்றப் பேரவையில் கொண்டு வரப் பட்டது. இச் சட்ட முன்வடிவினை கூட்டு ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்காக சட்ட மன்றப் பேரவை அனுப்பிவைத்தது. இக் குழு அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் சுற்றுப் பயணம் செய்து, சாட்சியங்களைப் பதிவு செய்தது. மேற்கண்ட சட்ட முன்வடிவும் காலாவதியாகிவிட்டது. மேற்படி குழு தெரிவித்த வல்வேறு ஆலோசனைகளையும், மத்திய அரசு இச்சட்ட முன் வடிவு குறித்து கூறியுள்ள கருத்துக்களையும் கருதுதல் கொண்டு திருத்தச் சட்ட முன்வடிவினை மீண்டும் சட்டமன்றப் பேரவையில் கொண்டு வருவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

7. முடிவுரை :

நமது மாநிலத்தில் பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி அவற்றின் மூலம் தேவையான இடு பொருட்களை சீராக வழங்குதல், முறையான உற்பத்தியைத் திட்டமிட்டு செயல்படுத்தல், பொருட்களின் தரத்தை உயர்த்தல், தொழில் நுட்ப முறையை உயர்த்தி உற்பத்தியில் முன்னேற்றம் காணுதல் பதனிடும் வசதிகளை செய்து கொடுத்தல் விற்பனை வசதியினைப் பெருக்குதல் முதலியவற்றை மேற்கொண்டதன் பயனாக கைத்தறி தொழில் மக்களுக்குத் தேவையான துணிகளை தொடர்ந்து வழங்குவதோடு கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும்.



கைத்தறி துணி நூல் துறையின் கீழ் இயங்கும் பிரிவுகளின் வளர்ச்சி.

| | 1977–78 | 1978–79 | 1979–80 | 1980–81 (9 மாதங்கள்) (31.12-80 வரை |
|---|---|---|---|---|
| (1) தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்: | | | | |
| 1. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | 946 | 993 | 1,052 | 1,115 |
| 2. தறிகளின் எண்ணிக்கை (லட்சத்தில்) | 2.07 | 2.19 | 2.40 | 2.55 |
| 3. ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி (ரூ. லட்சத்தில்) | 4,214.55 | 4,485.50 | 5,200.00 | 5,242.00 |
| 4. விற்பனை (ரூ. லட்சத்தில்) | 4,428.12 | 5,342.51 | 6,000.00 | 5,585.22 |
| 5. பயன்படுத்தப்பட்ட நடைமுறை மூலதனம் (ரூ. லட்சத்தில்) | 1,486.71 | 1,696.71 | 1695.00 | 2,072.06 |
| (2) கோ ஆப்டெக்ஸ்: | | | | |
| 1. கொள்முதல் (ரூ. லட்சத்தில்) | 1831.00 | 2,751.00 | 2900.00 | 2940.85 |
| 2. விற்பனை (ரூ. லட்சத்தில்) | 2301.00 | 3,480.00 | 3500.00 | 3330.79 |
| 3. பயன்படுத்தப்பட்டுள்ள நடைமுறை மூலதனம் (ரூ. லட்சத்தில்) | 750.00 | 900.00 | 1200.00 | 1500.00 |
| (3) கூட்டுறவு நூற்பாலைகள்: | | | | |
| 1. கதிர்களின் எண்ணிக்கை (லட்சத்தில்) | 2.37 | 2.62 | 3.14 | 3.14 |
| 2. போட்ட முதலீடு (ரூ. லட்சத்தில்) | 1714.95 | 2023.80 | 2063.27 | 2250.00 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 3. உற்பத்தி (ரூ. லட்சத்தில்) | 2778.23 | 3337.17 | 3370.69 | 4007.89 |
| 4. விற்பனை (ரூ. லட்சத்தில்) | 2728.14 | 3423.56 | 3284.26 | 3995.61 |
| 5. பயன்படுத்தப்பட்டுள்ள நடைமுறை மூலதனம் (ரூ. லட்சத்தில்) | 775.00 | 925.00 | 935.00 | 1000.00 |
| 6. கூட்டுறவு நூற்பாலைகளின் ஆதாயம் | (—) 114.00 | (+) 200.91 | (+)479.05 | (+)449.26 |
| 7. வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை | 8160 | 8794 | 9646 | 9800 |
| (4) தமிழ்நாடு கூட்டுறவுத் தோல் பதனிடும் ஆலை லிமிடெட். | | | | |
| தோல்களை (வெறுத்தல், சாயமிடல் (லட்சம் மீட்டரில்) | 17.15 | 28.27 | 35.00 | 40.00 |
| (5) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம். | | | | |
| 1. அனுமதிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | 1429 | 1742 | 2253 | 2500 |
| 2. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை (ரூ. லட்சத்தில்) | 93.37 | 119.30 | 205.97 | 262.00 |
| (6) தமிழ்நாடு காகித நிறுவனம் காகிதபுரம் : | | | | |
| 1. காகித உற்பத்தி (மெட்ரிக் டன்களில்) | 1411 | 1640 | 2540 | 4000 |
| 2. விற்பனை மதிப்பு (ரூ. லட்சத்தில்) | 6.58 | 9.79 | 20.39 | 39.20 |



## இணைப்பு II.

[129 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க.]

மானியக் கோரிக்கை எண்.

### தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

### கொள்கையும் திட்டங்களும்.

கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காக 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. கிராமப் புறங்களில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு பெருமளவில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதற்காக பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பது உட்பட கதர் கிராமத் தொழில் உற்பத்தி வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து அவற்றை செயல்படுத்துவது இந்த வாரியத்தின் முக்கியமான பணியாகும்.

2. 1960-61 ஆம் ஆண்டில் ரூ. 110.53 இலட்சமாக இருந்த கதர் உற்பத்தி 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 519.49 இலட்சமாகவும் கதர் விற்பனை மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் ரூ. 102.12 இலட்சத்திலிருந்து ரூ. 615.24 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. அவ்வாறே 1960-61 ஆம் ஆண்டு ரூ. 277.81 இலட்சமாக இருந்த கிராமப் பொருட்களின் உற்பத்தி 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 3273.39 இலட்சமாகவும் விற்பனை ரூ. 304.74 இலட்சத்திலிருந்து ரூ. 3546.28 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. புதிய அலகுகள் தொடங்குவதன் மூலமும், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொழில் புரியும் கைவினைஞர்களுக்கு அதிக நிதி உதவியினை அளிப்பதாலும் கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி 1980-81 ஆம் ஆண்டில் முறையே ரூ. 650 இலட்சமாகவும், ரூ. 3709 இலட்சமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டில் விற்பனை முறையே ரூ. 700 இலட்சமாகவும் ரூ. 3901 இலட்சமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் கதர் உற்பத்தியும், விற்பனையும் முறையே ரூ. 730 இலட்சமாகவும், ரூ. 780 இலட்சமாகவும் இருக்கும். கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தியும், விற்பனையும் முறையே ரூ. 4125.70 இலட்சமாகவும். ரூ. 4502.70 இலட்சமாகவும் இருக்கும்.

3. கதர் கிராமத் தொழில்கள் கிராமப்புறங்களில் அதிக வேலைவாய்ப்பினை குறைந்த மூலதனத்தில் உருவாக்கக் கூடியவை என அரசு கண்டறிந்து, எனவே தனது பண்டகப் பொருட்கள் வாங்கும் கொள்கையை மாற்றி அமைத்து அதன் மூலம் அரசுத் துறைகள். உள்ளாட்சி மன்றங்கள், நிறுவனங்கள், சட்டப்படி அமைந்த வாரியங்களுக்கு தேவையான பண்டகப் பொருட்களை கதர் கிராமத் தொழில் வாரியத்திலிருந்தோ

அல்லது அதனிடமிருந்து நிதியுதவி பெற்ற நிறுவனத்திடமிருந்துதான் கொள்முதல் செய்ய வேண்டுமென ஆணையிட்டதை யொட்டி வாரியத்தின் கீழ் இயங்கும் அலகுகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் கணிசமான அளவு உற்பத்தியும், விற்பனையும் பெருகியுள்ளது. இதனால் கடந்த 3 ஆண்டுகளில் வாரியம் 69,606 பேர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தந்துள்ளது. 31-12-80 வரைக்கான காலத்தில் 4,08,932 பேர்கள் வாரியத்தின் கீழ் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். 1980-81 ஆம் ஆண்டில் மேலும் 35,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டு 33,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆறாவது திட்ட காலத்தின் முடிவில் கதர் வாரியத்தில் கீழ் 5 இலட்சம் நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றிருப்பார்கள்.

கதர்:

4. அலகுகள் மூலமும் கூட்டுறவு சங்கங்களின் மூலமும், கதர் உற்பத்தி செய்யப்படுகிறது. கைராட்டை நூல், அம்பர் நூல் ஆகியவற்றை வாரியத்தின் 80 உற்பத்தி நிலையங்கள் மூலம் நூற்போர்களிடமிருந்து அடக்க விலையில் கொள்முதல் செய்யப்படுகிறது. வாரியம் தற்போது 353 கிராமிய நூற்பு நிலையங்களை நடத்தி வருகிறது. ஒவ்வொரு நிலையத்திலும் 32 கைவினைஞர்கள், பெரும்பாலும் பெண்களே, உலோகத்திலான இராட்டைகளை இயக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவ்வித இராட்டையில் நூற்கும் நூற்பாளர் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு ரூ. 4.50 லிருந்து ரூ 5.00 வரை ஊதியம் பெறுகின்றனர். கதர் திட்டத்தின் கீழ் அதிக அளவில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித்தர கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவிடம், கிராமிய நூற்பு கூடங்கள் அமைக்கத் தேவையான இராட்டைகள் வாங்க நிதியுதவி கோரப்பட்டதையொட்டி, கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு 1980-81 ஆம் ஆண்டில் 6 கதிர் கொண்ட 130 செட் உலோக இராட்டைகளை உற்பத்தி செய்யவும் மேலும் 39 உலோக இராட்டைகளை தனது உற்பத்தியிலிருந்து அளிக்கவும் ஒப்புக் கொண்டுள்ளது. 12 கதிர் உலோக இராட்டைகள் அதிக வருவாயைத் தருவதினால் 1981-82 ஆம் ஆண்டு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அளிக்க இருக்கும் 6 கதிர் கொண்ட 100 செட் இராட்டைகளுக்குப் பதிலாக 50 செட் 12 கதிர் இராட்டைகளை அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. வாரியத்தின் கீழ் உற்பத்தியாகும் நூலையும், நூற்போர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நூலையும். வாரியத்தின் கீழ் இயங்கும் 80 உற்பத்தி நிலையங்களின் வழியாக நெசவாளர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒரு நெசவாளரின் தின வருமானம் ரூ. 15 ஆக இருக்கும் இவர்களுக்கு அச்சு, விழுதுகளை கடனாகவும், மானியமாகவும் அளிக்க இதுகாறும் அரசு ரூ. 3 இலட்சம் அனுமதித்துள்ளது. 31-12-1980 முடிவுற்ற காலத்தில் ரூ 331.56 இலட்சம் மதிப்புள்ள பருத்தி ரக கதர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.



5. வாரியம் பட்டு நூலை கொள்முதல் செய்து, தனது 15 பட்டு உபகிளைகள் மூலமாக கதர்ப் பட்டினை உற்பத்தி செய்கிறது. 1979-80ம் ஆண்டில் கதர் பட்டு உற்பத்தி ரூ.109.78 இலட்சமாகும். 1980—81ம் ஆண்டு உற்பத்திக் குறியீடு ரூ.170 இலட்சமாகும். 31-12-80 முடிய ரூ. 134.29 இலட்சம் மதிப்புள்ள பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

6. கதர் நூலின் தரத்தை உயர்த்துவதன் மூலம் கதரின் தரம் உயரவும் வடிவமைப்புகள் தயாரிக்கவும், பவானிசாகரில் ஒரு ஆராய்ச்சிக்கூடம் நிறுவிட அரசு 1980—81-ல் ரூ. 2.64 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

7. கதர் துணி வகைகள் வாரியத்தின் இரண்டு சாய சலவை அச்சுக் கூடங்களில், முறைப்படுத்தப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் இவ்வாரியம் ரூ. 15.60 இலட்சம் மதிப்புள்ள ஆயத்த ஆடைகளைத் தயாரித்து. 1979-80 ஆம் ஆண்டில் பண்டிகை காலங்களில் ரூ. 89 இலட்சம் மதிப்புள்ள அச்சிட்ட மற்றும் சாயமிடப்பட்ட கதர் துணிகள் விற்பனை செய்யப்பட்டன. 31-12-80 முடிவுற்ற காலத்தில் ரூ. 166.40 இலட்சம் மதிப்புள்ள துணிகளை சாயமிடவும் அச்சிடப்படவும் பட்டன. ரூ. 2150 இலட்சம் மதிப்புள்ள ஆயத்த ஆடைகள் தயாரிக்கப்பட்டன.

8. பருத்தி ரக கதர் துணி விற்பனையில் 10 விழுக்காடு கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு ஆண்டு முழுமைக்கும் தள்ளுபடியாக அளிக்கிறது. இது தவிர பண்டிகைக் காலங்களில் அனைத்து ரக கதர் விற்பனையில் மேலும் 10 விழுக்காடு தள்ளுபடி அளிக்கிறது. 1977 ஆம் ஆண்டு முதல் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, திரு. காமராஜ் ஆகியவர்களின் பிறந்த நாள் விழாக் காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் 15 நாட்களுக்கு சிறப்புத் தள்ளுபடியாக 10 விழுக்காடும், மேற்கொண்டு விழாக்கால விற்பனைக் காலங்களில் 60 நாட்களுக்கு 5 விழுக்காடு தள்ளுபடியும் தமிழ்நாடு அரசு அனுமதியளித்துள்ளது.

9. 1979-80-ம் ஆண்டில் 155 விற்பனை நிலையங்களின் மூலமாக ரூ. 615.24 இலட்சம் மதிப்புள்ள கதர் விற்பனை செய்யப்பட்டது. 31-12-1980 வரை ரூ. 623.08 இலட்சம் மதிப்புள்ள கதர் துணி விற்பனை செய்யப்பட்டுள்ளது. நூற்போர், நெய்வோர், சாயமிடுவோர், வெளுப்போர், தைப்போர், நூல் நூற்போர் போன்ற பணிகளில் அரை இலட்சம் பேர்களுக்கு கதர் திட்டத்தின் மூலம் பகுதி நேரம், முழு நேரம் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

## கிராமத் தொழில்கள்.

10. எதுவும் முறையாக பயன்படுத்தப்பட்டால் வீணாவதில்லை என்ற நடைமுறைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு கிராமத் தொழில் திட்டங்கள் அமையப்பெற்றுள்ளன. கிராமப்புறங்களில் கிடைக்கும் மூலப்பொருட்கள் வீணாவதைத் தடுத்து அவற்றை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம் நாட்டின் நலனை மேம்படுத்தவும் கிராமப் புறத்திலுள்ள கைவினைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவும் ஏதுவாக கிராமத் தொழில்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

11. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு வரம்பிற்குட்பட்ட 25 கிராமத் தொழில்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பின்வரும் 14 கிராமத் தொழில்களை தனது அலகுகள் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனி நபர் கைவினைஞர்களுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலமும் செயலாற்றி வருகிறது.

1. பனைத் தொழில்.
2. செக்கு எண்ணெய்.
3. கைக்குத்தலரிசி மற்றும் தானியங்களையும் பருப்பு வகைகளையும் செய்முறைப்படுத்துதல்.
4. தோல் தொழில்.
5. மட்பாண்டம் (செங்கற்கள், ஓடுகள்)
6. சுண்ணாம்புக்கல் மற்றும் சுண்ணாம்புச் சூளை (காளவாய்).
7. தேனி வளர்த்தல்.
8. தச்சு, கருமார் தொழில்.
9. பழங்களைப் பதப்படுத்துதலும், பாதுகாத்தலும்.
10. கையால் செய்யப்பட்ட காகிதம்.
11. வெல்லம் மாற்றும் கந்தகாரி சர்க்கரை.
12. சமையலுக்கு பயன்படாத எண்ணெய், சோப்பு.
13. நார்த்தொழில்.
14. பிரம்பு, மூங்கில்.

12. தமிழ்நாடு அரசு ஒப்புதலளித்துள்ள பின்வரும் தொழில்களையும் இவ்வாரியம் செயல்படுத்துகிறது.

1. ஊதுபத்தி.
2. சிகைக்காய்த் தூள்.
3. பற்பொடி.
4. நீலகிரித் தைலம்.



13. 31-12-1980-ல் 163 துறைப் பிரிவுகளும், 3308 பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு தொழிற்சங்கங்களும் இருந்தன. அவற்றுள் 1225 தொழிற் கூட்டுறவுசங்கங்கள் இயங்கிவருகின்றன. அவைகளின் மூலம் 1979-80ஆம் ஆண்டில் ரூ. 3.273.39 லட்சம் மதிப்புள்ள கிராமப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன அதே ஆண்டில் விற்பனையின் மதிப்பு ரூ.3546.28 லட்சங்களாகும் 31-12-1980-ல் முடிவுற்ற காலத்தில் கிராமத் தொழிற் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ. 2760 லட்சம், ரூ. 2915 லட்சமும் ஆகும். கிராமத் தொழில்களில் 3,77,200 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

## பனைத்தொழில்.

14, தமிழ்நாட்டில் 4 கோடிக்கு மேலாக பனைமரங்கள் உள்ளன. அவற்றுள் 2 கோடி பனைமரங்கள் பயன்படுத்தத் தகுந்தவையாக உள்ளன. இவற்றில் 60 லட்சம் மரங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. அனைத்துப் பனை செல்வத்தையும் பயன்படுத்தும் பேரவாவுடன் இவ்வாரியம் ஒரு திட்டத்தைத் தயாரித்தது. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் கருத்துப்படி இத்திட்டத்தை சேலம். இராமநாதபுரம் மாவட்டங்களில் செயலாய்வுத் திட்டமாக நடத்தப்படுகிறது. இத்திட்டம் வெற்றி பெறுமேயானால்' கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் உதவியுடன் இதர மாவட்டங்களிலும் இத்திட்டம் விரிவாக்கப்படும்.

பனைமரத்திலிருந்து "நுங்கு, பதநீர் கிடைக்கிறது. பனைமரத்தின் ஒவ்வொரு பகுதியும், பல்வேறு வகையில் பயன்படுகிறது குறிப்பாக பிரசுகள், பனை ஓலைப்பொருட்கள் தயாரிக்க இயலுகிறது. இவ்வாறு பனைமரங்கள் வளம் நிறைய தருவதால் அரசு இதனை மாநில மரமாக அங்கீகரித்துள்ளது. பனைச் செல்வத்தினை பெரிதும் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அதன் வளமை முதலியவற்றை கணக்கிடு செய்யும் பணியை புள்ளிவிவரத் துறையிடம் ஒப்படைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

15. பனஞ்சீனிலிருந்து தயாரிக்கப்படும் "பாம்டா "பாம்கோலா" பானங்கள், வணிக அளவில் தங்களுக்கென ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. இவ்வூக்கத்தினால் 5 அலகுகளை வாரியம் நிறுவியுள்ளது. விரைவில் ஒரு அலகினை டெல்லியில் நிறுவிட உள்ளது.

16. "நுங்கு" ஒரு இயற்கைப் பொருள். இதனை நெடு நாளைக்குப் பாதுகாக்க இயலும். அவ்வாறு பாதுகாப்பதன் மூலம் வணிக ரீதியில் இதற்கு ஒரு நிலையான இடத்தைப் பெற்றிடலாம். தக்க பாதுகாக்கும் முறையை ஆராய அரசு ரூ. 0.30 இலட்சம் நிதியுதவியளித்துள்ளது. இவ்வாராய்ச்சியினை கோவை "தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம்" மேற்கொண்டுள்ளது.

17. பனைமரம் ஏறுதல் இடையூறு நிறைந்த ஒரு தொழில் எனவே இளைஞர்கள் இத்தொழிலில் ஈடுபட முன்வருவதில்லை பனை மரம் ஏறுவதில் பாதுகாப்பளிக்கவும் புதியவர்களை இத்தொழிலில் ஈடுபடுத்த ஏதுவாக இருக்கும் பொருட்டு பனைமரத்தின் உயரத்தைக் குறைப்பதற்கான ஆராய்ச்சியை மேற்கொள்ள "தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகம்" முன்வந்துள்ளது. பனைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கும் ஏற்படும் துயரத்தைத் துடைப்பதற்கு அரசு கணிசமான நிதி உதவி அளித்து வருகிறது.

18. பனை ஓலையிலிருந்து, தயாரிக்கப்படும் அழகிய தொப்பிகளுக்கும் கூடைகளுக்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வளர்ந்து வருகின்ற தேவைக்கேற்ப அவைகளின் உற்பத்தியை பெருக்குமுகத்தான் அத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக சிவகெங்கையில் ஒரு பயிற்சி நிலையத்தை இவ்வாரியம் அமைத்துள்ளது.

கிராம எண்ணெய்த் தொழில்:

19. வளர்ந்து வருகின்ற நாட்டு செக்கு எண்ணெய் நுகர்வோரின் தேவைக்கேற்ப ஆறாவது திட்ட காலத்தில் மேலும் 10,000 மின்விசைச் செக்குகளை விநியோகிக்கும் திட்டத்தை வாரியம் தயாரித்து உள்ளது. இதன் மூலம் அதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தர இயலும். இதுவரை 2,278 விசைச்செக்குகள் வழங்கப்பட்டுள்ளன. கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் தேவைக்கு ஏற்ப மின்விசைச் செக்குகளை விநியோகம் செய்ய இயலாததினால் தமிழ்நாடு அரசு நிறுவனமான "டான்சி" யிடம் மின்விசைச் செக்குகள் தயாரிக்கும் பணியினை இவ்வாரியம் ஒப்படைத்துள்ளது. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அளிக்கும் நிதியுதவி, விசைச் செக்குகள் வாங்கி நிறுவுவதற்கு போதுமானதாக இல்லை. எனவே வட்டாரங்களில் விநியோகிக்கப்படும் ஒவ்வொரு செக்குக்கும் ரூ 1,500 மானியமாக அளிக்க அரசு ஒப்புக் கொண்டுள்ளது. 1980—81 ஆண்டில் இவ்வாரியம் 400 விசைச்செக்குகள் தயாரிக்க உள்ளது.

20. மின் விசைச் செக்குகள் இடர்பாடின்றி இயங்கக்கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கென அரசு ரூ. 0.30 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. இவ்வாராய்ச்சியை "டான்சி" நிறுவனமும், பொறிஞர் அண்ணா பல்கலைக்கழகத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சோப்பு:

21. உன்னா எண்ணெயிலிருந்து சலவை, குளியல், சோப்புகளை வாரியம் தயாரித்து வருகிறது. உன்னா எண்ணெய் வித்துக்கள் ஏராளமாக தமிழ்நாட்டில் கிடைக்கின்றன. இலுப்பை, புங்கன் போன்ற உன்னா எண்ணெ வித்துக்களை



கிராமப்புறங்களில் சேகரிப்பதன் மூலம் கிராமத்திலுள்ளவர்களுக்கு ஓரளவு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திடவும் இவ்வாரியம் 20 வித்துக்கள் சேகரிக்கும் நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் மூதாட்டிகளும் பள்ளி செல்லும் சிறார்களும் கூட பயன் பெறுவர். வித்துக்கள் சேகரிப்பதை அதிகரிக்கவும், மேற்கொண்டு 19 அலகுகள் துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1979 80-ல் சோப்பின் உற்பத்தி ரூ. 108 இலட்சமாக இருந்ததை 1980-81-ல் ரூ. 130 இலட்சமாக உயர்த்த வகை செய்யப்பட்டுள்ளது.

22. உன்னா எண்ணை மற்றும் சோப்பினையும் ஆராயவும், பல்வித நறுமணத்தில் சோப்புகளை தயாரிக்க ஏதுவாக இருக்க ரசாயன சோதனைக்கூடம் நிறுவ அரசு ரூ. 0.35 லட்சம் அளித்துள்ளது.

23. "பாலி வஸ்திரா" துணி தயாரிக்க 9 கூடங்கள் நிறுவிட கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு ரூ. 19.79 இலட்சம் 1980—81-ல் அளித்துள்ளது. இதற்கு மேற்கொண்டு ரூ. 12.50 இலட்சம் ரூபாய் வங்கி நிதி உதவி பெற்றிடவும் வகை செய்யப்பட்டுள்ளது.

சிறப்புத் திட்டங்கள்:

24. பின்வரும் திட்டங்களை செயல்படுத்த அரசு நிதி உதவி அளித்துள்ளது.

(1) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்:

இம்மாநிலத்திலுள்ள பழங்குடியினர்களின் நிலைமையினை உயர்த்துவதற்கும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரவும், பயிற்சியளிக்கவும், கருவிகள் வழங்கவும் ரூ. 9.22 இலட்சம் இதுகாறும் அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 725 பேர்கள் வேலை வாய்ப்பு பெற்றனர். 1981-82-ம் ஆண்டில் ரூ. 5.56 இலட்சம் நிதி ஒதுக்கி அதன் மூலம் தேனீ பெட்டிகள், கருமார்த் தொழிலுக்கு வேண்டிய கருவிகள், பிரம்பு, மூங்கில், பாய் நெய்வதில் பயிற்சி அளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

(2) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைவாழ் மக்களுக்கு தேனிப் பெட்டிகள், தைலம் காச்சும் கருவிகள் வழங்கவும். எண்ணெய், ரொட்டி தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தவும், எண்ணெய் தயாரித்து விற்பனை செய்யும் அலகு ஏற்படுத்தவும் கருமார்த் தொழிலில் பயிற்சி அளிக்கவும், அரசு இதுகாறும் ரூ. 14.35 இலட்சம் அளித்துள்ளது. இத்திட்டத்தை மேலும் தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்த 1981—82-ல் ரூ. 180 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(3) வறட்சிப்பாங்கான பகுதித் திட்டம்:

தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் வறட்சிப் பாங்கான பகுதித் திட்டத்தை மேம்படுத்த 1979-80 ஆம் ஆண்டு முதல் ரூ. 35.01 இலட்சம் மானியமாக அரசு அளித்துள்ளது. மேற்கொண்டு ரூ. 9.05 இலட்சம், 1980-81 ஆம் ஆண்டிற்கு அளித்துள்ளது.

1981—82 ஆண்டிற்கான திட்டங்கள்

25. 1981-82 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை அரசின் உதவியால் வாரியம் செயலாற்றும்.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| 1. | கிராமிய நூற்பு நிலையங்களுக்கு வேண்டிய பஞ்சினை சுத்தம் செய்து பட்டை போடும் கருவிகள் வாங்க. | 5.00 |
| 2. | கதர் நெய்வோர்கள் வீடு கட்டிக்கொள்ள. | 5.00 |
| 3. | கொங்கம் பாளையத்தில் குரோம்தோல் பதனிடும் தொழிலை விரிவாக்கம் செய்ய. | 21.12 |
| | மொத்தம் .. | 3 .12 |

26. வாரியத்தின் நிதி நிலை:

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அரசின் வரவு-செலவு திட்ட அமைப்பினை பின்பற்றி முறையே கதர் நிதி, கிராமத் தொழில் நிதி என இரண்டு தலைப்பு கணக்குகளின் கீழ் தனது வரவு—செலவு திட்டங்களை தயாரிக்கிறது.

27. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனது நிதி உதவி கொள்கையின்படி, பலவித திட்டங்களை அமுலாக்கி நடத்த நிதி உதவி அளிக்கிறது. வணிக முறை அல்லாத இனங்களில் வரவுக்கும் செலவுக்கும் இடையே ஏற்படுகிற வித்தியாச தொகையினை தமிழக அரசு ஈடு செய்து உதவுகிறது.

28. 1980-81 ஆம் ஆண்டின் முடிவாக ஒப்புக்கொள்ளப் பட்ட திட்டங்களுக்காக கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு கீழ்க்கண்ட நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.



| | | மானியம். | கடன். |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | கதர் .. .. .. | 3.88 | 120.01 |
| 2. | கிராமத் தொழில்கள் .. .. | 78.73 | 318.18 |
| 3. | வங்கியின் நிதியுதவி .. .. | .. | 277.28 |
| | மொத்தம் .. | 82.61 | 715.47 |

29. கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் நிதியுதவி யைத் தவிர, தமிழ்நாடு அரசால் வாரியத்திற்கு ஒப்படைக் கப்படும் சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு அர சிடமிருந்து நிதியுதவி இவ்வாரியத்திற்கு கிடைக்கிறது. தமிழ் நாடு அரசால் ஒதுக்கப்பட்ட நிதி உதவிகளின் விவரம் வருமாறு:

1. நிகர செலவின மானியம்:

தமிழ்நாடு அரசிடமிருந்து கிடைக்கும் மானியம்.

| | | 1980—81. | 1981-82. |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| (i) | கதர் நிதி .. .. | 33.57 | 35.21 |
| (ii) | கிராமத் தொழில் நிதி .. | 43.20 | 45.03 |
| (iii) | தணிக்கைக் கட்டணம் .. | 12.50 | 12.50 |
| (iv) | கதர் விற்பனையில் தள்ளுபடி | 50.00 | 55.00 |
| (v) | மற்ற சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த .. .. | 10.77 | 17.58 |
| | | 150.04 | 165.32 |

2. தமிழ்நாடு அரசிடமிருந்து கிடைக்கும் கடன்—

| | | | |
|---|---|---|---|
| (i) | சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த .. | 1.93 | 22.02 |
| | மொத்தம் .. | 151.97 | 187.34 |

## கோரிக்கை எண். 27 கதர் 1981-82.

### 321 கிராமக் கைத்தொழில்களும் சிறு தொழில்களும்.

| | ரூபாய்களில் |
|---|---|
| **I நட்டத்தில் சேராதவை:** | |
| AA. கதர் வளர்ச்சிக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்-09. உதவி மானியங்கள். | 35,21,000 |
| AB. தனிக்கைக் கட்டணங்கள்—செலுத்த, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துக்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள். | 12,50.000 |
| AD. கிராமத் தொழில் நிதிக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள். | 45,03,000 |
| AF. பதநீர் இறக்குவோர் துயர் தணிப்பு—மறுவாழ்வுக்காக, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள். | 50,000 |
| **II. மாநிலத்திட்டம்:** | |
| JC. கதர் துணி விற்பனை மீது தள்ளுபடி—09. உதவி மானியங்கள். | 55,00,000 |
| JF. கதர் வளர்ச்சிக்கான புதிய திட்டங்கள்—09. உதவி மானியங்கள். | 10,62.000 |
| AM. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்— | |
| JA. பழங்குடி மக்களுக்கு தேனி வளர்க்கும் பெட்டிகள் வழங்கல்—01. சம்பளங்கள்—09. உதவி மானியங்கள். | 5,56,000 |
| **III. மத்திய அரசு பொறுப்பேற்றவை:** | |
| SB. நீலகிரி மாவட்டத்தில் தேனி வளர்ப்பு மேம்பாட்டுக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துக்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள். | 75,000 |
| SC. நீலகிரி மாவட்டத்தில் தைலங்கள் வடிக்கவும் தைலங்கள் வடிக்கும் இயந்திரங்களை வழங்கவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துக்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள். | 15,000 |
| மொத்தம் .. .. | 1,65,32,000 |



## இணைப்பு III.

[129ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### 1981—82 ஆம் ஆண்டில் பொதுப்பணித்துறைக் கட்டிடங்கள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையின் கொள்கை சம்பந்தமான குறிப்பு.

#### மானியக் கோரிக்கை எண் 37.

#### பொதுப்பணித்துறை கட்டிடங்கள்.

இக்கோரிக்கை ரூபாய் ஒரு லட்சம் வரையுள்ள மூலப் பணிகள், பொதுப்பணித்துறையின் கீழுள்ள கட்டிடங்களின் பராமரிப்பு மாற்றுப்பணிகள் மற்றும் பழுதுபார்க்கும் செலவினங்கள் அனைத்தையும் கொண்டதாகும். பொதுப்பணித் துறையிலுள்ள கட்டிடங்களுக்கான சொத்து வரி கட்டுதல் ஆகியவையும் இக்கோரிக்கையில் அடங்கும். 1981-82 ஆம் ஆண்டிற்கான இக்கோரிக்கையின் மொத்த மூலதனம் ரூ.283..5 இலட்சங்கள் ஆகும்.

#### 2. மானியக் கோரிக்கை எண். 38,

#### பொதுப்பணிகள்—பணியாளர்கள் மற்றும் கருவிகள்—இயந்திரத் தளவாடங்கள்.

பொதுப்பணித்துறையின் பணியாளர் அமைப்புக்கு உண்டான செலவினங்கள் இக்கோரிக்கையில் அடங்கும். இதற்கென ஒதுக்கப் பட்டத் தொகை ரூ,1.159.35 இலட்சங்கள் ஆகும்.

#### 3. மானியக்கோரிக்கை எண் 51.

#### பொதுப்பணிகள் கட்டிடங்கள் மீதான மூலதனக் கணக்கு

ஒரு லட்சம் மதிப்பீட்டிற்குமேல் உள்ள புதிய வேலைகளின் செலவினங்களும், இதுபோன்ற ஒவ்வொன்றும் இவ்வரையறுக்குட் பட்டதாகவும், ஆனால் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்பீடு திட்டத்தின் பகுதிகளில் அடங்கும் வேலைகளின் செலவினங்களும் இக்கோரிக்கையில் இடம் பெறுகின்றன. இதன் கீழ் ரூ.3,336.32 இலட்சம் மானியமாக கோரப்படுகின்றது.

4. மாநில அரசின் நிலவளர்ச்சி உட்பட்ட பல்வேறு துறைகளின் தேவைகளுக்கேற்ப திட்டம் தீட்டி வடிவமைத்து கட்டிடங்கள் கட்டுவது, பொதுப்பணித்துறை கட்டிடப் பிரிவின் பொறுப்பாகும். மாநில அரசின் கட்டிடங்களை பராமரிக்கும் பணிகளையும் இத்துறை கவனிக்கின்றது,

5. இவைகளுக்கு மேலாக கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள் மற்றும் மக்களுக்கு புயல் வெள்ளத்திலிருந்து உடனடி நிவாரணம கொடுப்பதற்காக தற்காப்பு இல்லங்கள் கட்டும் பணிகள் ஆகியவையும் இக்கட்டிட பிரிவை சார்ந்ததாகும்.

6. மேலும், உள்ளாட்சித்துறைகள், அரசு சார்ந்த ஏனைய நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகம் ஆகியவற்றிற்கான கட்டிடப் பணிகள் முகமை முறையில் சென்டேஜ் சார்ஜ் வசூலித்துக் கொண்டு, பொதுப்பணித்துறை கட்டிடப் பிரிவினரால் நிறைவேற்றப்படுகின்றன.

7. அவையில் வைக்கப்பட்ட திறனாய்வுக்குறிப்பில் 1980-81-ம் ஆண்டு இத்துறையினரால், முடிக்கப்பட்டப் பணிகள், நடைபெற்று கொண்டிருக்கும் பணிகள், மேலும் ஒப்புதல் வழங்கப்பட்டு, மேற்கொள்ளவிருக்கும் பணிகள் முதலியன விவரமாகக் காணலாம். 1980-81-ம் ஆண்டு அல்லது முன்னர் துவக்கப்பட்டு, 1980—81-ல் முடிக்கப்பட்ட பணிகளின் மதிப்பீடு ரூ. 701.34 இலட்சங்கள். மேலும் ரூ. 2,434,83 இலட்சங்கள் மதிப்புடைய பணிகள் இந்த ஆண்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒப்புதல் ஆணைகள் அளிக்கப்பட்ட ரூ 1882 10 இலட்சங்கள் மதிப்பிட்ட பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன. அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ள சிறுவெளியீடு 1981-82-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ஒப்புதலுக்குப் பின் தொடங்கப்படவிருக்கும் பணிகள் பற்றிய விவரங்களையும் கொடுக்கின்றது.

8. சென்னை பெருநகர் பகுதியில் உள்ள காலியிடங்களில் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பன்மாடிக்கட்டிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட வட்ட தலைமையகங்களிலும் இது போன்ற அலுவலகக் கட்டிடங்கள் கட்டி ஏற்கனவே உள்ள தனி நபர் வாடகை கட்டிடங்களை சொந்தக் கட்டிடங்களில் வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு இடங்களில் குடியிருப்பு வசதிகள், சுற்றுலா மாளிகைகள், ஆய்வு மாளிகைகள் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலகக் கட்டிடங்களுக்கு கழிவறை வசதிகள் செய்துதர திட்டமிடப்பட்டு பல்வேறு நிலைகளில் செயல்படுத்த இருக்கிறது. இப்பணிகளுக்காகத் திட்டக் குழுவால் ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ளது.

9. இதுவரையில் பராமரிப்பதற்கான வரையரை கட்டிடங்களின் மூலதனத்தின் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை அடிப்படையாக கொண்டிருந்தது. பழமையான கட்டிடங்களின் மூலதன அடக்க விலை குறைவானதால், கட்டிடங்களைப் பராமரிப்பதற்காக அனுமதிக்கப்படும் சதவீதம் மிக சொற்பமாகிறது. ஆதலால் பல கட்டிடங்களை குறைந்த அளவு தேவைகளுக்குக் கூட பராமரிக்க முடிவதில்லை. பழமையான மற்றும் புதிய எல்லாக் கட்டிடங்களையும் பயனுள்ளதாக பராமரிப்பதற்காக புதிய வரையரைகள் தற்போது பரிசீலனையில் உள்ளன. இந்த வரையறை ஒவ்வொரு கட்டிடப் பரப்பளவை அடிப்படையாகக் கொண்டதாக அமையும். கட்டிடங்களின் வயது, வகை ஆகியவைகளின்படி ஒவ்வொரு யூனிட் கட்டிடத்தின் பரப்பளவிற்கு தகுந்தபடி



மாறுபட்ட மதிப்பீடு இப்புதிய முறையின்கீழ் வகுக்கப்படும். பராமரிப்புப் பணிகள் சில கொள்கைகள் அடிப்படையில் நிறைவேற்றப்படும். இது சம்பந்தமான நிறுவன அமைப்பு மற்றும் செயல்முறை குழுவின் அறிக்கை அரசின் பரிசிலனையில் உள்ளது.

10. பொதுப்பணித்துறையின் வேலைகள் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமோ அல்லது நிறுவனங்களிடமோ ஒப்ப அறிவிப்பு மூலம் ஒப்படைக்கப்படுகிறது. தற்போது, இவ்வித ஒப்ப அறிவிப்புகளுக்கு வரும் வரவேற்பு திருப்திகரமாக இல்லை. ஒப்பந்தக்காரர்களிடையே ஒரு சுமுகமான போட்டி மனப்பான்மையை உருவாக்குதல், பட்டப் பொறியாளர்கள் மற்றும் பட்டய பொறியாளர்களை கட்டுமான பணிகளில் ஈடுபடுத்த ஊக்கமளித்தல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு வேலையில்லா பட்ட/பட்டய பொறியாளர்களை உறுப்பினராகக் கொண்ட கட்டுமான கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச்சங்கங்களுக்குச் சில சலுகைகளும் மற்றும் பிணை வைப்புத்தொகை, பாதுகாப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

11. மேலும் ஒரு முன்னோடித் திட்டமாக பாளையங்கோட்டை இந்திய மருத்துவ முறைக் கல்லூரியில் தங்கிப் பயிலும் மாணவிகளுக்கென தங்கும் விடுதி கட்டிடத்தை பொதுப்பணித்துறையே நேரடியாக மேற்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

12; சென்னை அடையாற்றில் கிரின்வேஸ் சாலையில் உள்ள அரசிற்கு சொந்தமான காலியிடங்களில் அமைச்சர்களின் குடியிருப்பிற்காக பத்து மாளிகைகள் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

13. சென்னை மெரினா கடற்கரையை அபிவிருத்தி செய்யவும் மேலும் அழகு படுத்தவும் கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கொள்ளவிருக்கிறது:—

(1) கட்டுமரங்களையும் படகுகளையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தவும். மீன் பிடிக்கும் வலைகளை சேர்த்து வைக்கும் பொருட்டு இல்லங்கள் கட்டுதலும்;

(2) பலவகைப்பட்ட மரங்களையும், பூஞ்செடிகளையும் நடுதல்;

(3) ரேணி அரங்கத்திலிருந்து வெளியே வர சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல்;

(4) சிற்றுண்டி விடுதி அமைத்தல்;

(5) கல்வி மற்றும் செய்தி படக்காட்சிகளும் மற்றும் கேலிச் சித்திரங்களும் கொண்ட படக்காட்சிகள் காண்பிப்பதற்கு திறந்த வெளி அரங்கம் கட்டுதல்;

(6) உடற்பயிற்சிக் கூடங்கள் ஏற்படுத்துதல்.

இந்த வேலைகளுக்காக ரூ. 25.86 இலட்சம் மதிப்பீட்டிற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

14. வளர்ந்துவரும் தற்கால சூழ்நிலை தேவைக்கேற்ப இத்துறையின் விதி தொகுப்பு நூலை மாற்றி அமைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக ஒரு தனி அலுவலர் நியமிக்கப் பட்டுள்ளார்.

15. உலக வங்கியின் உதவியுடன், தமிழ்நாடு ஒருமைப் படுத்தப்பட்ட உணவு அளிப்பு திட்டத்தின்கீழ் பல்வேறு சமூக நிலையங்கள் கட்டுதல், புதிய தாதிகள் பள்ளி அமைத்தல், மற்றும் கிராம சுகாதார பயிற்சிப் பள்ளி கட்டுதல் ஆகியவை அடங்கும். இத்திட்டத்தின்கீழ் 51 கிராம சுகாதார பயிற்சி நிலையங்கள் அலுவலர் குடியிருப்பு அமைத்தல், மூன்று செவிலியர் நிலையங்களை விரிவுபடுத்துதல், மற்றும் ஆறு புதிய செவிலியர் நிலையங்களை அமைத்தல் போன்ற பணிகளை பொதுப்பணித்துறை மேற்கொண்டு ரூபாய் 243 இலட்சம் ஒதுக்கப்பட்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

16. தற்போது 'பி' பிரிவு பள்ளிகள் என்று அழைக்கப்படும் முன்னாள் மாவட்டக் கழகப் பள்ளிகள் சரிவர பராமரிக்கப்படாத காரணத்தால், அவைகளை உபயோகத்திற்கு உகந்ததாக்கும் பொருட்டு பழுது பார்த்தல், செறிகள் செய்தல், கூடுதல் கட்டிடங்களை அமைத்துக் கொடுத்தல் போன்ற பணிகள், பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

17. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் 23 அரசு ஆரம்பப் பள்ளிகளுக்கு கூடுதலாக பள்ளியறைகள் கட்டும் பணி பொதுப்பணித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

18. ஒருங்கிணைந்த நகர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உதகமண்டலத்திற்கு விற்பனைக் கூடம் மற்றும் தினச்சந்தை கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 69·12 இலட்சத்திற்கான திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது. இதுபோன்ற திட்டங்கள் கரூர், புதுக்கோட்டை, தர்மபுரி ஆகிய இடங்களிலும் ரூ. 118 இலட்சத்திற்கு திட்டம் தீட்டி கூடிய விரைவில் செயல்படுத்தப் படவிருக்கிறது.

இணைப்பு IV.

[129 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

பொதுப்பணித்துறை (கட்டிடப்பிரிவு)

1980—81-ஆம் ஆண்டின் பணிகள் பற்றிய ஆய்வுரை தோற்றுவாய்.

மாநில அரசின் நில வளர்ச்சி உட்பட பல்வேறு துறைகளின் தேவைகளுக்கு ஏற்ப திட்டம் தீட்டி வடிவமைத்து, கட்டிடங்கள் கட்டுவது கட்டிடப் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். மேலும், இத்துறையானது அரசு பங்கு பெற்ற நிறுவனங்கள், உள்ளாட்சி



மற்றும் அரசு சார்பு நிறுவனங்களான தொழிலாளர் மாநில ஈட்டுறுதி, ஒழுங்கு முறை விற்பனைக்கூடம், நூல்நிலையங்கள் ஆகியவற்றின் தேவைக்கேற்ப கட்டிடப் பணிகளை முகமை முறையில் செயல்படுத்தி வருகின்றது. மாநில அரசின் கட்டிடங்களைப் பேணி வருதலும் கட்டிடப் பிரிவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இவைகளுக்கு மேலாக, கடல் அரிப்புத் தடுப்புப் பணி, புயலினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட அரசு கட்டிடங்களை வெள்ள நிவாரணப்பணியின்கீழ் பழுது பார்ப்பதும் மேலும் மக்களுக்கு புயல் வெள்ளத்திலிருந்து உடனடி நிவாரணம் கொடுப்பதற்காக தற்காப்பு இல்லங்கள் கட்டும்பணி இக்கட்டிடப் பிரிவைச் சார்ந்ததாகும்.

2. 37-வது மானியக் கோரிக்கை

இக்கோரிக்கை ரூபாய் ஒரு லட்சம் வரையுள்ள கட்டிட வேலைகள் (மூலப்பணிகள்) அனைத்தையும் கொண்டதாகும். இதில் மத்திய உதவி பெறும் திட்டங்களுக்கும் அவ்வுதவியைக் கணக்கில் கொண்டு அவற்றிற்கு ஆகும் செலவுத் தொகையை மூலதனக் கணக்கில் இருந்து வருவாய்க் கணக்கிற்கு எடுத்து எழுதப்படுகின்றன. பொதுப்பணித்துறையின் பொறுப்பிலுள்ள கட்டிடங்களைப் பராமரிப்புக்கான செலவும், அவற்றிற்குரிய சொத்து வரி செலுத்துதலும், இம்மானியக் கோரிக்கையில் அடங்கும். இத்தலைப்பின் கீழ், புதிய கட்டிட வேலைகளுக்காக 1980—81 ஆம் ஆண்டிற்கு ரூ. 184.02 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

3. 37—வது மானியக் கோரிக்கை

இக்கோரிக்கையின் கீழ் ''259 பொதுப்பணித்துறை—டி. பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள்'' என்ற தலைப்பில் 1980—81 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.39.00 இலட்சமாகும் மேலும் ''283. குடியிருப்பு—சி. அரசுக் குடியிருப்புக் கட்டிடங்களை பேணுதல் சிறப்புச் செப்பனிடுதல்'' என்ற தலைப்பில் 1980—81 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ. 65.69 இலட்சமாகும். மேலும் பல்வேறு துறைகளில் குடியிருப்பில்லாத கட்டிடங்களை பராமரிப்பதற்கான பணிகளை கட்டுப்படுத்தும் அதிகாரத்துடன் இத்துறை விளங்குகிறபடியால் இதற்கென இக்கோரிக்கையில் ரூ.186.46 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. மானியக்கோரிக்கை 51

இக்கோரிக்கை ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பணிகள் அனைத்தும் கொண்டதாகும். இதற்காக திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள முதற்பொருள் செலவினத்தொகை 1980—81-ல் ரூபாய் 1,357.03 இலட்சங்களாகும். இக்கோரிக்கையின்கீழ்

பல்வேறு துறைகளுக்கு 1980—81 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீடு விவரங்கள் வருமாறு:

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| மருத்துவம் | 584.48 |
| பொதுப்பணித்துறைப் பணிகள் | 309.34 |
| கல்வி | 263 24 |
| குடியிருப்பு | 158.36 |
| குடும்பநலம் | 22.07 |
| வேளாண்மை | 15.76 |
| சமூக பாதுகாப்பு நலம் | 2.56 |
| மக்கள் நல்வாழ்வு | 1.50 |
| கால்நடை பராமரிப்பு | 0.21 |
| செய்தி மற்றும் விளம்பரம் | 0.01 |
| | 1,357.03 |

பாகம் I.

I. மருத்துவம்.

(ரூபாய் இலட்சத்தில்)

அ) கீழ்க்கண்ட பணிகள் இவ்வாண்டு (1980 81ல்) முடிவடைந்துள்ளன:

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சென்னை எழும்பூர் அரசினர் தாய் சேய் நல மற்றும் பிரசவ மருத்துவமனையில் குளிர் சாதன வசதியும் கட்டிடங்களும் கட்டுதல் | 2.70 |
| 2. | சீரங்கம் அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட மகப்பேறு அரங்கம் கட்டுதல். | 7.00 |
| 3. | கீழ்பாக்கம் மனநோய் மருத்துவமனை நிலையத்தில் ஒரு ரொட்டி தயாரிக்கும் பகுதி கட்டுதல் | 1.00 |
| 4. | தஞ்சை அரசினர் இராசமிராசுதார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பகுதி கட்டுதல் | 3.00 |
| 5. | கீழ்க்கண்ட அரசு மருந்தகங்களில் மருத்துவ அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல்<br>1. ஜம்னா மருதூர், வட ஆற்காடு மாவட்டம்<br>2. செங்காட்டுபட்டி, திருச்சி மாவட்டம்<br>3. கருமாந்தறை, சேலம் மாவட்டம் | 1.80 |



| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 6. | தஞ்சை இராசமிராசுதார் மருத்துவமனையில் தாமஸ் கூடத்தை பழுதுபார்த்தலும் எலும்பு முறிவு சிகிச்சை பகுதியும் கட்டுதல் | 3.00 |
| 7. | சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தடுப்பு மருந்து நிறுவன பகுதியில் முதல்மாடிக்கட்டுதல் | 5.70 |
| 8. | நாகூர் அரசு மருத்துவ மனையில் கட்டிடங்கள் கட்டுதல் | 5.25 |
| 9. | இராமநாதபுரம் மாவட்டம் கானாடுகாத்தான் தாய் சேய் மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை கூடம் கட்டுதல் | 1.30 |
| 10 | சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கைமுறிவுசிகிச்சை பகுதியில் முதல்மாடி கட்டுதல் | 1.83 |
| 11. | சென்னை பொது மருத்துவமனையில் உள்ள சம இணைப்பு கட்டிடத்தில் உயர்மின் அழுத்த வசதி செய்தல் | 3.76 |
| 12. | சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் பயணி படுக்கை மின்தூக்கி அமைத்தல் | 3.75 |
| 13. | சென்னை பொது மருத்துவ மனையில் உள்ள மூளை ஆய்வுக் கருவிக்கு குளிர் சாதன வசதி செய்தல் | 4.05<br>(குளிர் சாதனத் திற்கா ) |
| 14. | சென்னை எழும்பூர் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையின் பிணவறைக்கு கடுங்குளிர் பதன வசதி செய்தல் | 1.60 |
| 15. | சென்னை குழந்தைகள் மற்றும் பெண்கள் மருத்துவமனையில் 27.2 கிலோவாட் / 34 கே.வி.ஏ. மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் | 1.089 |
| 16 | மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனையில் அரசின் தலைமை மின் ஆய்வாளர் குறிப்பிட்ட குறைகளை நிவர்த்தி செய்யும் பணிகள் | 1.36 |

(ரூபாய் இலட்சத்தில்)

(இ) கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன:

1. ஈரோடு அரசு மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட காசநோய் பகுதி கட்டிடம் கட்டுதல் .. .. 1.25
2. பாளையங்கோட்டை அரசு இந்திய முறை மருத்துவ கல்லூரியில் உடற்கூறு பகுதி கட்டிடம் கட்டுதல் 3.40
3. புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவ மனையில் நீராவி சலவைக்கூடம் கட்டுதல் .. .. .. 3.90
4. கோவை மருத்துவ கல்லூரியில் கூடுதல் 28 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல் 5.40
5. சென்னை, அரசு ஸ்டேன்லி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிலையத்தின் மேல் நான்கு மாடிகள் கட்டுதல் .. 68.80
6. கோவை மருத்துவ கல்லூரி மருத்துவமனை புதிய புறநோயாளி பகுதி கட்டிடத்தில் முதல் மாடிக் கட்டிடம் கட்டுதல் .. .. .. 8.00
7. கீழ்க்கண்ட நான்கு அரசு மருந்தகங்களில் ஆறு படுக்கைகள் பிரிவு, பிரசவ மற்றும் சமையல் கூட வசதிகள் கொண்ட கட்டிடங்கள் கட்டுதல் .. .. 4.00
    1. பள்ளிகொண்டா (வடஆற்காடு மாவட்டம்.)
    2. மாத்தூர் (தர்மபுரி மாவட்டம்).
    3. தோகைமலை (திருச்சி மாவட்டம்)
    4. இராதாபுரம் (திருநெல்வேலி மாவட்டம்).
8. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புறநோயாளி புதிய மகப்பேறு பகுதியில் சாய்வு தளங்கள் கட்டுதல் .. .. .. 2.25
9. சென்னை ஸ்டேன்லி மருத்துவ கல்லூரியில் எலும்பு முறிவு சிகிச்சைப் பகுதி கட்டுதல் .. .. .. 3.44



(ரூபாய் இலட்சத்தில்)

10. காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள காரப்பேட்டை புற்றுநோய் மருத்துவமனையில் அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல் .. 28.57
11. சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் .. .. .. 3.35
12. செங்கல்பட்டு மருத்துவ கல்லூரிக்கு சுற்றுச் சுவர் கட்டுதல் .. .. 1.71
13. சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனைக்கு வடிகால் மற்றும் கழிவுநீர் அகற்ற வசதிகள் செய்து கொடுத்தல் .. .. 6.35
14. இராமநாதபுரம், சிதம்பரம், தர்மபுரி மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் பார்மஸி பகுதியும் 15 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவப் பிரிவும் கட்டுதல் .. .. 8.55
15. சென்னை எழும்பூர் குழந்தைகள் நலவியல் மருத்துவ நிலையத்தில் நீராவி சலவைக்கான இயந்திரங்கள் பொருத்துதல் 5.50
16. பாளயங்கோட்டை இந்தியமுறை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இடைக்கால பட்டதாரிகளுக்கான குடியிருப்புகள் கட்டுதல் 4.00
17. சென்னை பொது மருத்துவமனையில் அவசர அறுவை சிகிச்சை அரங்கம் கட்டுதல் .. .. .. .. 6.35
18. குளச்சல் அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட பகுதியும் அறுவை அரங்கமும் சமையல் கூடமும் கட்டுதல் .. .. .. 2.50
19. மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் பல் மற்றும் எலும்பு முறிவு சிகிச்சைப் பகுதி கட்டிடங்கள் கட்டுதல் .. .. 16.20

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 20. சென்னை ஸ்டேன்லி மருத்துவமனையில் கோபால்டு தெரபி பகுதி அமைக்க கட்டிடங்கள் கட்டுதல் | 4.80 |
| 21. பாளையங்கோட்டை அரசு இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் பெண்கள் பட்டதாரிகளுக்கான விடுதி கட்டுதல் | 7.75 |
| 22. பாளையங்கோட்டை அரசு இந்தியமுறை மருத்துவக் கல்லூரியில் ஆண்கள் பட்டதாரிகளுக்கான விடுதி கட்டுதல் | 23.80 |
| 23. சென்னை அறிஞர் அண்ணா இந்தியமுறை மருத்துவ மனையில் எக்ஸ்-கதிர்கள் இருட்டு அறைக்கு தனி ஏற்பாடுகளும், மற்றும் உடற்கூறு, மற்றும் பயோ. இரசாயன மருத்துவ ஆய்வக கட்டிடங்கள் கட்டுதல் | 3.60 |
| 24. சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனையை நவீனப்படுத்தும் பொருட்டு பார்மஸி பகுதிக்கான கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல் | 22.95 |
| 25. சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனை பழைய சமையல் கூடத்தில் எரிவாய்வு தளவாட நவீன சமையல் கூட அடுப்பு கட்டிடங்கள் கட்டுதல் | 1.00 |
| 26. சென்னை கீழ்ப்பாக்க மருத்துவக் கல்லூரியில் நீரிழிவு நோயாளிகளை கவனித்து சிகிச்சை செய்ய தனிக் கட்டிடம் கட்டுதல் | 8.00 |
| 27. மதுரை அரசு எர்ஸ்க்கின் மருத்துவ மனைக்கு குடிதண்ணீர் வசதி அமைத்தல் | 2.85 |
| 28. கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூரில் அரசு மருந்தகம் கட்டுதல் .. .. .. .. | 1.00 |
| 29. கும்பகோணம் பொது மருத்துவ மனையில் சில பகுதிகளுக்கு சிறப்பு பழுதுகள் செய்தல் | 1.088 |
| 30. கும்பகோணம் பொது மருத்துவ மனையில் 50 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல் .. | 4.367 |
| 31. நாகர்கோவில் தலைமை மருத்துவ மனையில் மகப்பேறு மருத்துவ பிரிவு கட்டுதல் .. | 8.65 |
| 32. நாகர்கோவில் தலைமை மருத்துவ மனையில் 10 படுக்கைகள் வசதி கொண்ட அவசர சிகிச்சை பகுதி கட்டிடமும் அதன் மேல் புறநோயாளி பகுதி கட்டிடமும் கட்டுதல் .. | 6.00 |



| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 33. செங்கல்பட்டு மாவட்டம் ஊத்துக்கோட்டையில் அரசு மருந்தகம் கட்டுதல் .. | 2.00 |
| 34. தஞ்சாவூர் மாவட்டம் மங்கநல்லூரில் அரசு மருந்தகம் கட்டுதல் .. .. .. | 2.00 |
| 35. அரக்கோணம் திருப்பத்தூர் பொது மருத்துவ மனைகளில் 10 படுக்கைகள் கொண்ட காசநோய் பிரிவு கட்டிடங்கள் கட்டுதல் .. | 2.00 |
| 36. சென்னை, பொது மருத்துவமனையில் தற்போதுள்ள நரம்பியல் பகுதியை மாற்றியமைத்தலும், சீரமைத்தலும் .. .. | 3.62 |
| 37. மருத்துவக் கல்வியில் திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் மருத்துவ கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல் .. .. .. .. | 32.20 |
| 38. வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் புறநோயாளி பகுதி கட்டிடம் கட்டுதல் .. | 2.00 |
| 39 சோளிங்கர் அரசு பொது மருத்துவமனையில் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல் .. .. | 4.35 |
| 40. சீரங்கம் பொது மருத்துவமனையை சீரமைத்தல் .. .. .. .. .. | 2.98 |
| 41. சித்தமல்லி அரசு மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல் .. | 1.00 |
| 42. ஒரத்தநாடு அரசு மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல் .. | 1.50 |
| 43. கீவளூர் அரசு மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட பகுதியும், பிரசவ மற்றும் அறுவை அரங்கமும் கட்டுதல் .. | 1.56 |
| 44. மேட்டுப் பாளையம் அரசு மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல். | 2.50 |
| 45. உடுமலைப்பேட்டை அரசு மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட கண் பகுதியும், அறுவை அரங்கமும் மற்றும் கூடுதல் கட்டிடங்களும் கட்டுதல் .. .. .. .. | 5.50 |
| 46 பள்ளிப்பாளையத்தில் 32 படுக்கைகள்கொண்ட புதிய மருத்துவமனை கட்டுதல் .. .. | 8.50 |

(ரூபாய் இலட்சத்தில்.

| | | |
|---|---|---|
| 47. | குமாரபாளையம் அரசு மருத்துவமனையில், எக்ஸ்-கதிர் பகுதியும் ஆய்வகமும் கட்டுதல் .. | 1.45 |
| 48. | சோழவந்தான் அரசு மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல் .. | 2.00 |
| 49. | திருமங்கலம் அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல் .. | 1.00 |
| 50. | வேலூர் அரசுமருத்துவமனையில் புறநோயாளி பிரிவு கட்டுதல் .. .. .. .. | 2.00 |
| 51. | திண்டுக்கல் தலைமை மருத்துவமனையில் புற நோயாளி பிரிவு கட்டுதல் .. .. .. | 4.00 |
| 52. | ஒட்டன் சத்திரத்தில் 15 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை கட்டுதல் .. .. | 3.20 |
| 53. | வத்தலகுண்டு அரசு மருத்துவமனையில் 24 கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல் .. .. .. | 2.58 |
| 54. | அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல் .. | 2.20 |
| 55. | மனல்மேல்குடி அரசு மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல் .. | 1.50 |
| 56. | இளையான்குடி அரசு மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல் .. | 1.60 |
| 57. | மானாமதுரையில் 24 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை கட்டுதல் .. .. | 8.30 |
| 58. | இராமநாதபுரம் தலைமை மருத்துவ மனையில் 6 படுக்கைகள் வசதி கொண்ட தீவிர இருதய கவனிப்பு பகுதி கட்டுதல் .. .. .. | 2.50 |
| 59. | இராமேசுவரம் அரசு மருத்துவமனையில் அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல் .. .. | 6.40 |
| 60. | விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல் .. .. | 8.50 |
| 61. | சேரன்மாதேவி அரசு மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல் .. | 1.50 |



(ரூபாய் இலட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| 62. | மணிமுத்தாறில் ஒரு புதிய அரசு மருந்தகம் கட்டுதல் .. .. .. .. | 1.40 |
| 63. | கீழ்க்கண்ட தலைமைமாவட்ட மற்றும் வட்ட மருத்துவ மனைகளில் 10 படுக்கைகள் வசதி கொண்ட விபத்திற்கான அவசர சிகிச்சைப் பகுதி கட்டுதல்:— | |
| | 1. திண்டுக்கல் .. .. .. .. | 4.07 |
| | 2. பழனி .. .. .. .. .. | 4.07 |
| | 3. பெரியகுளம் .. .. .. .. | 4.07 |
| | 4. இராசபாளையம் .. .. .. | 4.07 |
| | 5. இராமநாதபுரம் .. .. .. | 4.07 |
| | 6. சிவகங்கை .. .. .. .. | 4.07 |
| | 7. தூத்துக்குடி .. .. .. .. | 4.07 |
| | 8. தென்காசி .. .. .. .. | 4.07 |
| | 9. கோவில்பட்டி .. .. .. .. | 4.07 |
| 64. | மதுரை அரசு எர்த்ஸ்க்கின் மருத்துவமனையில் 30 படுக்கைகள் வசதி கொண்ட விபத்திற்கான அவசர சிகிச்சைப் பகுதி கட்டுதல் .. .. | 7.77 |
| 65. | பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் 30 படுக்கைகள் வசதி கொண்ட விபத்திற்கான அவசர சிகிச்சைப் பகுதி கட்டுதல் .. | 7.77 |
| 66. | கோவை மருத்துவக் கல்லூரியில் விளையாட்டு தளம் அமைத்தல் .. .. .. .. | 2.00 |
| 67. | சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனையில் பார்மஸி அறை, விலங்குகள் அறை மற்றும் சமையற் கூடம் கட்டுதல். | 10.05 |
| 68. | சென்னை ஓட்டேரி அரசினர் காச நோய் மருத்துவ மனையின் பிணவறைக்கு கடுங் குளிர்ப் பதன வசதி செய்தல் .. .. | 1.08 |
| 69. | சென்னை அரசினர் கஸ்தூரிபா காந்தி மருத்துவமனையில் ஒரு துணை மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் .. .. .. | 2.25 |
| 70. | காரப்பேட்டை அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவ மனையில் 125. கே. வி. ஏ. துணை மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் .. .. .. | 3.73 |

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 71. சென்னை எழும்பூர் குழந்தை மருத்துவ நிலையத்தில் 75 கிலோ வாட் துணை மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் .. .. .. | 2.70 |
| 72. சென்னை கலைஞர் கருணாநிதி நகர்ப் புற மருத்துவ மனையிலுள்ள பிணவறைக்கு கடுங் குளிர் பதன வசதியும் செய்தல் .. .. | 1.44 |
| 73. சென்னை கிண்டி கிங் நிலையத்தில் பாரா பிலாக்டிங் வாக்சின் பகுதியில் குளிர் சாதன வசதி செய்தல் .. .. .. .. | 2.42 |
| 74. சென்னை பொது மருத்துவ மனையில் உள்ள ''ஆளுநர் மாளிகை'' மின் தூக்கியை புதுப்பித்தல் .. .. .. .. .. .. | 2.55 |
| 75. சென்னை எழும்பூர் அரசினர் மகப்பேறு நிலையம் மற்றும் பெண்கள்--குழந்தைகள் மருத்துவ மனையில் பயணி மின் தூக்கி அமைத்தல் .. | 2.45 |
| 76. பாளையங்கோட்டையிலுள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ஒரு மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் .. .. | 3,20 |
| 77. கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் உயர் மின்னழுத்த வசதி செய்தல் .. .. | 2.77 |
| 78. நாகப்பட்டினம் மாவட்ட தலைமை மருத்துவ மனையில் துணை மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் .. .. .. | 2.42 |
| 79. திருச்சி மாவட்ட தலைமை மருத்துவமனையில் துணை மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் .. | 3.74 |
| 80. நாகர்கோவில் மாவட்ட தலைமை மருத்துவ மனையில் ஒரு துணை மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் .. .. .. .. | 1.00 |
| 81. கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 100 படுக்கைகள் கொண்ட வார்டில் சில முன்னேற்றங்கள் செய்தல் .. .. .. | 2.50 |

(உ) கீழ்க்கண்ட பணிகள் இவ்வாண்டு (1980–81-ல்) துவங்கப் படவுள்ளன:—

| | |
|---|---|
| 1. சேலம் மாவட்டம் பச்சைமலையில் அரசு மருந்தகமும் அலுவலர் குடியிருப்பும் கட்டுதல். | 1.60 |



| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 2. கன்னியாகுமரி மாவட்டம் வீரபுளி ஒதுக்குப்புற காட்டில் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுதல் .. .. .. .. | 1,00 |
| 3. தூத்துக்குடி அரசு தலைமை மருத்துவ மனையில் 260 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல் .. .. .. | 42.00 |
| 4. புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவ மனையில் நவீன சமையலறை கட்டுதல் .. | 2.53 |
| 5. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி பெண்கள் விடுதியில் முதல் மற்றும் இரண்டாவது மாடி வெளியிடத்தில் கூடுதல் அறைகள் கட்டுதல் .. .. .. .. | 2.10 |
| 6. தஞ்சை மருத்துவக் கல்லூரியில் நோய் ஆராய்ச்சி மற்றும் நுண் உயிரியல் துறையினை விரிவுபடுத்த குளிர் சாதன அறைமீது முதல் மாடிக் கட்டிடம் கட்டுதல் .. .. | 5.36 |
| 7. மதுரை மருத்துவ்க் கல்லூரியில் வெள்ளிவிழா திரையரங்கு கட்டிடம் கட்டுதல் .. .. | 27.00 |
| 8. அரும்பாக்கம் அறிஞர் அண்ணா இந்தியமுறை அரசு மருத்துவமனை சுற்று அமைப்புக்குள் உள்ள கேப்டன் ஸ்ரீநிவாசமூர்த்தி இந்திய முறை ஆராய்ச்சி நிலையத்தின் மூன்றாவது மாடியில் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல் .. | 2.80 |
| 9. சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பகுதி கட்டுதல் .. .. | 2.90 |
| 10. சென்னையிலும் கோவையிலும் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மின் உற்பத்தி சாதனம் அமைத்தல்:— .. | 9.91 |
| 1. ஸ்டேன்லி மருத்துவ மனை .. .. | 3.65 |
| 2. பெண்கள்-குழந்தைகள் மருத்துவமனை எழும்பூர். .. .. .. | 3.35 |
| 3. கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை .. .. .. .. | 2.6 |
| 11. சென்னை ராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் மின் உற்பத்தி சாதனம் அமைத்தல். | 2.35 |

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| 12. கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பிணவறைக்கு கடுங் குளிர்ப்பதன வசதி செய்தல் .. .. .. .. | 2.05 |
| . சென்னை பொது மருத்துவமனையிலுள்ள மூளை ஆய்வு கருவிக்கு துணை மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் .. .. | 1.42 |
| 14. சென்னை ஸ்டேன்லி மருத்துவமனையில் கைமுறிவு பகுதியின் முதல் மாடியிலுள்ள பிளாஸ்டிக் அறுவை அரங்கிற்கு குளிர் சாதன வசதி செய்தல் .. .. .. | 4.80 |
| 15. ஈரோடு, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள அறுவை அரங்குகளுக்கு குளிர் சாதன வசதி செய்தல் .. .. | 19.34 |
| (ஈரோடு 7.6 இலட்சம், சேலம் 8 இலட்சம், வேலூர் 3.74 இலட்சம்.) | |
| 16. சென்னை கிண்டி கிங் நிலையத்தில் 250 கே. வி. ஏ. மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் .. .. .. .. | 6.78 |
| 17. சென்னை ஒட்டேரி அரசினர் காச நோய் மருத்துவமனையில் உள்ள புதிய கட்டடத்திற்கு மின் தூக்கி அமைத்தல் .. .. | 1.90 |

II. ஆரம்ப சுகாதார நிலையமும் குடும்பநல நிலையமும்.

(அ) 1980-81-ல் கீழ்க்கண்ட பணிகள் முடிக்கப்பட்டன:—

| | |
|---|---|
| 1. மாணிக்கம்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையமும் குடியிருப்புகளும் கட்டுதல் .. | 3.85 |
| 2. எலச்சிபாளையத்தில் குடும்பநல நிலையமும் குடியிருப்புகளும் கட்டுதல் .. .. .. | 2.38 |
| 3. காரைப்பட்டியில் குடும்பநல நிலையமும் குடியிருப்புகளும் கட்டுதல் .. .. .. | 1.40 |
| 4. மெய்ஞானபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச் சுவர் கட்டுதல் .. .. | 1.00 |



(ரூபாய் இலட்சத்தில்)

(இ) கீழ்க்கண்ட பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன:—

| | |
|---|---|
| 1. கனியூரில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல் .. .. .. .. | 1.50 |
| 2. புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட ஸ்டெரிலைசேஷன் வார்டு மற்றும் அறுவை சிகிச்சை வார்டு அமைத்தல் .. .. | 1.70 |
| 3. கீழ்க் கண்ட இடங்களில் குடும்பநல நிலையமும் குடியிருப்புகளும் கட்டுதல்:— | |
| (1) மேல்சித்தாபூர் .. .. .. | 2.38 |
| (2) மன்னவனூர் .. .. .. | 3.10 |
| (3) அண்டகுளம் .. .. .. | 2.38 |
| (4) திருக்கரன்குடி .. .. .. | 2.38 |
| (5) ஆலத்தம்பாடி .. .. .. | 2.38 |
| (6) துவரங்குறிச்சி .. .. .. | 2.38 |
| (7) கூத்தநல்லூர் .. .. .. | 2.38 |
| (8) செம்மிபாளையம் .. .. .. | 2.38 |
| (9) கருவல்பாடிபுதூர் .. .. .. | 2.38 |
| (10) சின்னாளபட்டி .. .. .. | 1.40 |
| 4. கூத்தநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல் .. .. .. .. .. | 3.85 |
| 5. நிலக்கோட்டையில் ஆரம்ப சுகாதார நிலையமும் குடியிருப்பும் கட்டுதல் .. | 6.80 |
| 6. நெடுங்குலாவில் ஆரம்ப சுகாதார நிலையமும் குடியிருப்புகளும் கட்டுதல் .. | 5.19 |
| 7. கீழ்க்கண்ட இடங்களில் ஆரம்ப சுகாதார நிலைய மருந்தகமும், குடியிருப்புகளும், சுற்றுச் சுவரும் கட்டுதல்:— | |
| (1) காரை .. .. .. .. | 7.74 |
| (2) லப்பைகுடிக்காடு .. .. .. | 7.74 |
| (3) கிருஷ்ணராஜபுரம் .. .. .. | 7.74 |

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (4) இனாம்குளத்தூர் .. : .. | 7.74 |
| (5) குழிமணி .. .. .. | 7.74 |
| (6) அண்டகுளம் .. .. .. | 7.74 |
| (7) மலையூர் .. .. .. | 7.74 |
| (8) ஏரயமங்கலம் .. .. .. | 7.74 |
| (9) கேத்தி .. .. .. .. | 7.74 |
| (10) பாப்பிரெட்டிபட்டி .. .. .. | 7.74 |
| (11) பாளையம்புதூர் .. .. .. | 7.74 |
| (12) மாராந்தகில்லி .. .. .. | 7.74 |
| (13) கோளார்பட்டி .. .. .. | 7.74 |
| (14) நம்பியூர் .. .. .. | 7.74 |
| (15) நீடாமங்கலம் .. .. .. | 7.74 |
| (16) மங்களம்பேட்டை .. .. .. | 7.74 |
| (17) திரு உத்திரகோசமங்கை .. .. | 7.74 |
| (18) கேளம்பாக்கம் .. .. .. | 7.74 |

8. கீழ்க்கண்ட இடங்களில் ஆரம்ப சுகாதார நிலைய குடியிருப்புகளும் சுற்றுச் சுவரும் கட்டுதல்—

| | |
|---|---|
| (1) திருப்புக்குழி .. .. .. | 4.45 |
| (2) மைலம் .. .. | 4.45 |
| (3) கடயபட்டி .. .. .. | 4.45 |
| (4) தலைவாசல் .. .. .. | 4.45 |
| (5) பென்னகரம் .. .. .. | 4.45 |

9. கீழ்க்கண்ட இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச் சுவர் கட்டுதல்—

| | |
|---|---|
| (1) இளவனூர் .. .. .. | 1.00 |
| (2) நச்சாந்துபட்டி .. .. .. | 1.00 |
| (3) உப்பிலிபுரம் .. .. .. | 1.00 |
| (4) சென்னிமலை .. .. .. | 1.00 |



(ரூபாய் இலட்சத்தில்.)

10. கீழ்க்கண்ட இடங்களில் குடும்பநல நிலையமும் குடியிருப்புகளும் கட்டுதல்:—

| | |
|---|---|
| (1) கிருஷ்ணராயபுரம் .. .. .. | 2.93 |
| (2) பாலூர்சத்திரம் .. .. .. | 2.93 |
| (3) பில்லாநல்லூர் .. .. .. | 2.93 |
| (4) செல்லம்பட்டி .. .. .. | 2.93 |

| | |
|---|---|
| 11. கணியம்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலிகளுக்கான கூடுதல் கட்டடம் கட்டுதல் | 1.90 |
| 12. இனாம் குளத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர்களுக்கான கூடுதல் கட்டடம் கட்டுதல் .. .. .. .. | 1.90 |

(உ) கீழ்க்கண்ட பணிகள் துவங்கப்படவிருக்கிறது:

1. கீழ்க்கண்ட இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையமும், குடியிருப்பு மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்—

| | |
|---|---|
| (1) துவரங்குறிச்சி .. .. .. | 7.74 |
| (2) டி. பாலூர் .. .. .. .. | 7.74 |
| (3) முத்தூர் .. .. .. .. | 7.74 |
| (4) பூலவப்பட்டி .. .. .. .. | 7.74 |
| (5) நெல்குப்பை .. .. .. .. | 7.74 |
| (6) கடலாடி .. .. .. .. | 7.74 |
| (7) ஜமீன்குளம்கண்டம் .. .. .. | 7.74 |
| (8) சமயநல்லூர் .. .. .. | 7.74 |
| (9) தோடப்பநாயக்கனூர் .. .. .. | 7.74 |
| (10) மேலூர் .. .. .. .. | 7.74 |
| (11) மதுவீரம்பட்டி .. .. .. | 7,74 |
| (12) நல்லூர் .. .. .. | 7.74 |
| (13) ஒலக்கூர் .. .. .. .. | 7.74 |
| (14) கரியான்குறிச்சி .. .. .. | 7.74 |
| (15) கரிவலம்வந்தநல்லூர் .. .. .. | 7.74 |
| (16) பில்லாநல்லூர் .. .. .. | 7.74 |
| (17) பீரகுப்பம் .. .. .. .. | 7.74 |

[1981 ஏப்ரல் 16

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 2. செல்லம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையமும் குடியிருப்புகளும் கட்டுதல் .. .. | 3.85 |
| 3. உறையூரில் குடும்பநல நிலையமும் குடியிருப்புகளும் கட்டுதல் .. .. .. | 2.93 |
| 4. கீழ்க்கண்ட இடங்களில் ஆரம்ப சுகாதார நிலைய மருந்தகம், குடியிருப்புகள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்— | |
| (1) மேல்சித்தாமூர் .. .. .. | 7.74 |
| (2) கன்னன்குடி .. .. .. | 7.74 |
| 5. உப்பிலிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல் .. | 1.00 |

III. சமுகநலமும் பாதுகாப்பும்.

(அ) கீழ்க்கண்ட பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன:—

| | |
|---|---|
| 1. தர்மபுரியில் செவிடர்களுக்கான பள்ளி கட்டுதல் .. .. .. .. | 1.32 |
| 2. சென்னை ஸ்ரீசாதனா அரசு மகளிர் காப்பகத்தில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல் .. | 1.20 |

(இ) கீழ்க்கண்ட பணி துவங்கப்பட உள்ளது:—

| | |
|---|---|
| சேலம், அரசு வரவேற்பு இல்லத்தை மேம்பாடு செய்யவும் ஓய்வு அறை கட்டுதலும் .. .. | 1.30 |

IV. சமுக நலத்துறை

(உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம்.)

(அ) 1980-81ல் கீழ்க்கண்ட பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன:-

| | |
|---|---|
| 1. கிராமப்புற சுகாதார பயிற்சி நிலையமும் அலுவலர் குடியிருப்பும், சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் கட்டுதல் | 2.83 |
| 2. சேலம் மாவட்டம் வினைதீர்த்தபுரத்தில் கிராமப்புற சுகாதார பயிற்சி நிலையமும், அலுவலர் குடியிருப்பும் கட்டுதல். | 2.83 |



1981 ஏப்ரல் 16]

இ. கீழ்க்கண்ட பணிகள் துவங்கப்பட உள்ளன:—
கிராமப்புற சுகாதாரப் பயிற்சி நிலையமும், அலுவலர் குடியிருப்பும் கீழ்க்கண்ட இடங்களில் கட்டுதல்:—

1. சின்னாளப்பட்டி, மதுரை மாவட்டம்.
2. கன்னிவாடி, மதுரை மாவட்டம்.
3. கொசவப்பட்டி, மதுரை மாவட்டம்.
4. தேவதானப்பட்டி, மதுரை மாவட்டம்.
5. கருங்காலக்குடி, மதுரை மாவட்டம்.
6. வீரபாண்டி, மதுரை மாவட்டம்.
7. சிக்கநூரானி, மதுரை மாவட்டம்,
8. டி. கல்லுப்பட்டி; மதுரை மாவட்டம்.
9. ஏழுமலை, மதுரை மாவட்டம்.
10. பாம்பம்பட்டி, மதுரை மாவட்டம்.
11. சமயநல்லூர், மதுரை மாவட்டம்.
12. விருவீடு, மதுரை மாவட்டம்.
13. திருப்புக்குழி, செங்கற்பட்டு மாவட்டம்.
14. மதுரமங்கலம், செங்கற்பட்டு மாவட்டம்.
15. பரந்தூர், செங்கற்பட்டு மாவட்டம்.
16. வள்ளியூர். செங்கற்பட்டு மாவட்டம்.
17. போரூர், செங்கற்பட்டு மாவட்டம்.
18. எழிச்சூர், செங்கற்பட்டு மாவட்டம்.
19. சூனாம்பேட்டை, செங்கற்பட்டு மாவட்டம்.
20. பூனிமாங்காடு, செங்கற்பட்டு மாவட்டம்.
21. பவுஞ்சூர், செங்கற்பட்டு மாவட்டம்.
22. பெருங்காட்டூர், வட ஆற்காடு மாவட்டம்.
23. சுணியம்பாடி, வட ஆற்காடு மாவட்டம்.
24. தச்சூர், வட ஆற்காடு மாவட்டம்.
25. லாலாபேட்டை, வட ஆற்காடு மாவட்டம.
26. புதுபாடி, வட ஆற்காடு மாவட்டம்.
27. பொன்னை, வட ஆற்காடு மாவட்டம்,

28. இனாம்கொளத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

29. புதூர் உத்தமனூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

30. டி. புதூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

31. இனுங்கூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

32. மேட்டுப்பாளையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

33. நாவல்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

34. கரியப்பட்டி, சேலம் மாவட்டம்.

35. தாரமங்கலம், சேலம் மாவட்டம்.

36. மக்டனால்டு சத்திரம், சேலம் மாவட்டம்.

37. நாமகிரிபேட்டை, சேலம் மாவட்டம்.

38. புதுசத்திரம், தென் ஆற்காடு மாவட்டம்.

39. வடலூர், தென் ஆற்காடு யாவட்டம்.

40. மங்களம்பேட்டை, தென் ஆற்காடு மாவட்டம்.

41. தண்டராம்பட்டு, தஞ்சாவூர் மாவட்டம்.

42. சிறுவாவிடுதி, தஞ்சாவூர் மாவட்டம்,

43. அழகியநாயகிபுரம், தஞ்சாவூர் மாவட்டம்.

44. செண்பகராமன்புதூர், கன்னியாகுமரி மாவட்டம்.

45. ராஜக்காமங்கலம், கன்னியாகுமரி மாவட்டம்.

46. முட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.

47. திருஉத்திரகோசமங்கை, இராமநாதபுரம் மாவட்டம்.

48. உச்சிபுளி, இராமநாதபுரம் மாவட்டம்.

49. சாலைகிராமம், இராமநாதபுரம் மாவட்டம்.

50. செவிலியர்களுக்கான பள்ளிகள் விரிவாக்குதல், சேலம் மாவட்டம்.

51. செவிலியர்களுக்கான பள்ளிகள் விரிவாக்குதல், திருச்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

52. செவிலியர்களுக்கான பள்ளிகள் விரிவாக்குதல், திண்டுக்கல், மதுரை மாவட்டம்.

53. செவிலியர்களுக்கான புதிய பள்ளி கட்டுதல், காஞ்சிபுரம், செங்கற்பட்டு மாவட்டம்.



54. செவிலியர்களுக்கான புதிய பள்ளி கட்டுதல், கடலூர், தென் ஆற்காடு மாவட்டம்.

55. செவிலியர்களுக்கான புதிய பள்ளி கட்டுதல், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

56. செவிலியர்களுக்கான புதிய பள்ளி கட்டுதல், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம்.

57. செவிலியர்களுக்கான புதிய பள்ளி கட்டுதல், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

58. செவிலியர்களுக்கான புதிய பள்ளி கட்டுதல், வேலூர், வட ஆற்காடு மாவட்டம்.

குறிப்பு.—தமிழ்நாட்டில் 51 இடங்களில் கிராமப்புற சுகாதார நிலையங்களும், அலுவலர் குடியிருப்புகளும், தமிழ் நாடு ஒருங்கிணைந்த சததுணவுத் திட்டத்தின்கிழ் உலக வங்கி உதவியுடன் கட்டுவதற்கு அரசு ரூபாய் 144.33 இலட்சங்களுக்கு அனுமதி வழங்கி உள்ளது.

| | | |
|---|---|---|
| கிராமப்புற சுகாதார நிலையம் | .. | 1.68 இலட்சம். |
| அலுவலர் குடியிருப்பு | .. | 0.95 இலட்சம். |

மேற்கண்ட 51 இடங்களில், இரண்டு இடங்களில் வேலை ஆரம்பித்து நடக்கிறது. மீதமுள்ள இடங்களில், ஒப்பந்தங்கள் கோரப்படுதல், ஒப்பந்தங்கள் பரிசீலனை செய்தல், ஒப்பந்தக்காரர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துதல் ஆகியவை நடைபெறுகின்றன.

செவிலியர்களுக்கான பள்ளிகளை மூன்று இடங்களில் விரிவாக்கவும், ஆறு இடங்களில் புதிய பள்ளிகளைத் துவக்குவதற்கும், கட்டிடங்களைக் கட்ட அரசு அனுமதி வழங்கி உள்ளது.

| | | |
|---|---|---|
| பள்ளிக்கூடம் விரிவாக்குதல் | .. | 8.28 இலட்சம். |
| புதிய பள்ளிக்கூடங்கள் | .. | 12.44 இலட்சம். |

மேற்கண்ட ஒன்பது இடங்களிலும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

## V. ஆரம்பக் கல்வி.

அ. கீழ்க்கண்ட பணிகள் 1980—81-ல் முடிக்கப்பட்டுள்ளன:

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | எரவிபுதூர் கோடை அரசு ஆரம்பப்பள்ளியில் கட்டிடம் கட்டுதல், | 0 95 |
| 2. | மலைக்கோடு அரசு எஸ். வி. நடுநிலைப்பள்ளியில் கட்டிடம் கட்டுதல். | 1.45 |
| 3. | புதுக்கோட்டை மேல்நிலை ஆரம்பப்பள்ளியில் கட்டிடம் கட்டுதல். | 0.40 |

இ. கீழ்க்கண்ட வேலைகள் நடந்துக் கொண்டுள்ளன:

கீழ்க்கண்ட ஆரம்பப் பள்ளிகளில் கட்டிடம் கட்டுதல்:—

| | | |
|---|---|---|
| 1. | அரசு ஆரம்பப்பள்ளி, காட்டுப்புத்தூர் .. | 0,95 |
| 2. | அரசு நடுநிலைப்பள்ளி, ஆண்டூர்கோடு .. | 0.90 |
| 3. | அரசு ஆரம்பப்பள்ளி, வாழைத்தோட்டம் .. | 0.95 |
| 4. | அரசு ஆரம்பப்பள்ளி, கோட்டையாடி .. | 0.45 |
| 5. | அரசு நடுநிலைப்பள்ளி, திருநந்திக்கரை .. | 0.60 |
| 6. | அரசு ஆரம்பப்பள்ளி, வாத்தியார்கோணம் .. | 0.94 |
| 7. | அரசு ஆரம்பப்பள்ளி, பார்வதிபுரம். .. | 0.85 |
| 8. | அரசு பெண்கள் நடுநிலைப்பள்ளி, குழித்துறை | 0.80 |
| 9. | அரசு நடுநிலைப்பள்ளி, மேல்கோடு ... | 0.82 |
| 10. | அரசு ஆரம்பப்பள்ளி, முக்காடு .. .. | 0,78 |

## VI. பள்ளிக் கல்வி.

அ. கீழ்க்காணும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1. | 10+2+3 கல்வி முறையின்கீழ் முதல் நிலை, இரண்டாம் நிலையில் ஒரு வகுப்பறையும், ஒரு ஆய்வுக்கூடமும் பல்வேறு இடங்களில் கட்டுதல் (105 பள்ளிகளில்). | 348.60 |
| 2. | அரசினர் (வாரியம்), உயர்நிலைப்பள்ளி கட்டுதல், இரும்பேடு, வட ஆற்காடு மாவட்டம். | 4.28 |
| 3. | அரசினர் மேல் நிலைப்பள்ளி (பெண்கள்), விழுப்புரம், கட்டிடங்கள் கட்டுதல். | 0.257 |



| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 4. | பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் மிதி வண்டி நிறுத்துமிடமும், சிற்றுண்டி அறையும் கட்டுதல். | 1.00 |
| 5. | அரசினர் உயர்நிலைப்பள்ளி (பெண்கள்), பென்னாடம், கட்டிடங்கள் கட்டுதல். | 0.47 |
| 6. | அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருத்தணி கட்டிடங்கள் கட்டுதல். | 6.75 |
| 7. | பேரியூர் அரசு உயர்நிலைப்பள்ளிக்கான கட்டிடங்கள் கட்டுதல். | 1.15 |
| 8. | திருப்பத்தூர்—ஆறுமுகம் பிள்ளை அரசினர் (ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்காக கட்டிடங்கள் கட்டுதல். | 1.20 |

இ. கீழ்க்காணும் வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | சிறுகாம்பூர் அரசினர் (வாரியம்) உயர்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக்கூடம் கட்டுதல். | 0.47 |
| 2. | பூலம்பாக்கம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு கூரைக் கட்டிடம் கட்டுதல். | 0.59 |
| 3. | உராந்திரயன்குடிக்காடு அரசினர் உயர்நிலைப் பள்ளிக்காக கட்டிடங்கள் கட்டுதல். | 0.87 |
| 4. | கொத்தமங்கலம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு நான்கு வகுப்பறைக் கொண்ட கட்டிடம் கட்டுதல். | 0.49 |
| 5. | கொத்தமங்கலம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு இரண்டு வகுப்பறை கொண்ட கட்டிடம் கட்டுதல். | 0.485 |
| 6. | சூலூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடங்கள் கட்டுதல். | 0.76 |
| 7. | சின்னக்குப்பம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கான கட்டிடங்கள் கட்டுதல். | 0.995 |
| 8. | வடமதுரை அரசினர் (வாரியம்) மேல்நிலைப் பள்ளிக்கு கூரைக் கட்டிடம் கட்டுதல். | 0.65 |
| 9. | ஏருச்சகுளம் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கான கட்டிடங்கள் கட்டுதல். | 0.98 |
| 10. | ஆட்டயம்பட்டி அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கான கட்டிடங்கள் கட்டுதல். | 0.63 |

[1981 ஏப்ரல் 16

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 11. சிங்காரப்பேட்டை (சேலம் மாவட்டம்) அரசினர் (வாரியம்) மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக் கூடம் கட்டுதல். | 0.507 |
| 12. கும்பகோணம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடங்கள் திரும்பக் கட்டுதல். | 0.99 |
| 13. 10+2+3 முறையின்கீழ் ஒரு வகுப்பறையும் ஆய்வுக்கூடமும் இரண்டாம் கட்ட மற்றும் மூன்றாம் கட்ட நிலைகள் பல்வேறு இடங்களில் கட்டுதல் (90 பள்ளிகள்). | 1,95.40 |
| 14. பள்ளிகொண்டா அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடங்கள் கட்டுதல். | 1.98 |
| 15. மங்கலபுரம் (சேலம் மாவட்டம்) அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக்கூடம் கட்டுதல். | 0.50 |
| 16. கேதனார் (பொள்ளாச்சி வட்டம்) அரசு உயர் நிலைப் பள்ளிக்கு ஆய்வுக்கூடம் கட்டுதல். | 0.55 |
| 17. தலைவாசல் (சேலம் மாவட்டம்) அரசினர் உயர் நிலைப் பள்ளிக்கு விஞ்ஞானக்கூடம் கட்டுதல். | 0.70 |
| 18. திருவந்தாலூர் (மதுரை மாவட்டம்) அரசினர் உயர்நிலைப் பள்ளிக்காக ஆய்வுக்கூடம் கட்டுதல். | 0.46 |
| 19. கோடம்பாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு விஞ்ஞானக்கூடம் கட்டுதல். | 0.605 |
| 20. சென்னை பள்ளிக் கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் அரசு தேர்வு இயக்குநருக்கான அலுவலக கட்டிடம் கட்டுதல். | 7.00 |
| 21. மாவடிபாடி (மதுரை மாவட்டம்) அரசு உயர் நிலைப் பள்ளிக்கான புதுக்கட்டிடம் கட்டுதல். | 2.05 |
| 22. வல்லன் குமாரவிளை அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் புதுக்கட்டிடம் கட்டுதல். | 3.00 |
| 23. சின்னதாராபுரம் (திருச்சி மாவட்டம்) அரசு உயர்நிலைப் பள்ளிக்கு விஞ்ஞானக்கூடம் கட்டுதல். | 0.50 |
| 24. திருமுல்லைவாசலில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்டுதல். | 9.8 |



1981 ஏப்ரல் 16]

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 25. சைனிக் பள்ளி, அமராவதி நகரில் அறிவியல் கட்டிடம் கட்டுதல். | 7.75 |
| 26. தமிழ்நாடு பெற்றோர் — ஆசிரியர் கழகத்திற்கு பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலக வளைவில் கட்டிடம் கட்டுதல். | 2.5 |
| 27. அரசு (ஆண்கள்) உயர்நிலைப் பள்ளி சிதையன் கோட்டையில் கட்டிடம் கட்டுதல். | 178. |

உ. கீழ்க்கண்ட பணிகள் துவக்கப்பட உள்ளன:

| | |
|---|---|
| 1. அரசு உயர்நிலைப் பள்ளி, ஓவேலியில் புதிய கட்டிடங்கள் கட்டுதல். | 2.86 |
| 2. மேகலை சின்னம்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில் புதிய கட்டிடம் கட்டுதல். | 2.24 |
| 3. எடப்பாடி அரசு உயர்நிலைப் பள்ளியில் புதிய கட்டிடம் கட்டுதல். | 4.20 |
| 4. மதிய உணவுத் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் ஐந்து மத்திய சமையல் கூடங்கள் கட்டுதல்.— | |
| (1) அருப்புக்கோட்டை .. .. .. .. | 1.575 |
| (2) கரியாப்பட்டி .. .. .. .. | 1.575 |
| (3) திருச்சுழி .. .. .. .. | 1.575 |
| (4) நரிக்குடி .. .. .. .. | 1.575 |
| (5) சிவகங்கை .. .. .. .. | 1.575 |
| 5. கீழ்க்கண்ட அரசு உயர்நிலைப் பள்ளிகளில் புதிய கட்டிடம் கட்டுதல்.— | |
| (1) அரசு உயர்நிலைப்பள்ளி, திருவல்லறை .. | 3.40 |
| (2) அரசு உயர்நிலைப்பள்ளி, துறையூர் .. | 2.20 |
| (3) அரசு உயர்நிலைப்பள்ளி, மூடிஸ் .. | 3.20 |
| (4) அரசு உயர்நிலைப்பள்ளி, பெரியாயி பாளையம். | 1.75 |
| (5) அரசு உயர்நிலைப்பள்ளி, மின்னல் .. | 2.06 |
| (6) அரசு உயர்நிலைப்பள்ளி, கிருஷ்ணகிரி .. | 1.60 |

[1981 ஏப்ரல் 16

## VI. பள்ளிக் கல்வித்—தொடர்ச்சி

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| (7) அரசு உயர்நிலைப்பள்ளி, திருமேல்வாடி. | 4.40 |
| (8) அரசு உயர்நிலைப்பள்ளி, சங்கரன்கோவில் | 4.05 |
| (9) அரசு உயர்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு | 2.64 |
| 6 அமராவதி நகரிலுள்ள சைனிக் பள்ளியில் தண்ணீர் வசதி செய்து கொடுத்தல். | 7.5 |
| 7 அரசு உயர்நிலைப் பள்ளி சேலத்தில் புதிய கட்டிடம் கட்டுதல். | 2.5 |

## VII கல்லூரிக் கல்வி

கீழ்க்காணும் வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.—

| | |
|---|---|
| 1 அருள்மிகு சுப்ரமணிய சுவாமி கலைக் கல்லூரி, திருத்தணிக்கு சுற்று சுவர் கட்டுதல். | 0.90 |
| 2 சட்டக் கல்லூரி, சென்னைக்கு சுற்று சுவர் கட்டுதல். | 0.552 |
| 3 மன்னார் குடியிலுள்ள எம். ஆர். அரசினர் கலைக் கல்லூரியில் பழைய கட்டிடத்தைப் புதுப்பித்தல். | 0.65 |
| 4 ராணி மேரிக் கல்லூரி, புதுவிடுதி—குடிநீர் விநியோக தொடர்பு கொடுத்தல். | 0.315 |
| 5 அரசினர் கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி—சுற்றுச்சுவர் கட்டுதல். | 0.85 |
| 6 ராஜா சரபோஜி கல்லூரி. தஞ்சாவூர் இளநிலை பட்டக் கல்விக்கான வசதிகளை அதிகரித்தல்.— | |
| (1) விஞ்ஞானக் கூடம் கட்டுதல்.. .. | 2.50 |
| (2) போதனைக் கூடங்கள் .. .. .. | 1.73 |
| (3) விலங்கு இல்லம். .. .. .. | 0.33 |
| 7 என். எஸ். சிவலிங்கம் செட்டியார் கலைக் கல்லூரி பூலாங்குறிச்சி—விடுதிகள் கட்டுதல். | 4.75 |
| 8 அரசினர் கலைக்கல்லூரி, அரியலூர்—விடுதிக் கட்டிடங்கள் கட்டுதல். | 3.53 |



1981 ஏப்ரல் 11]

## VIII. அருங்காட்சியகம்

(ரூபாய் இலட்சத்தில்)

(அ) கீழ்க்கண்ட வேலைகள் நடந்து வருகின்றன:—

| | |
|---|---|
| 1 அருங்காட்சியக அரங்கத்தில் ஒளிவசதி செய்தல் | 0.75 |
| 2 சென்னை அருங்காட்சியக வளைவில் சிற்றுண்டி சாலை கட்டுதல். | 1.36 |
| 3 சென்னை அருங்காட்சியக வளைவில் குழந்தைகள் அருங்காட்சியகம் அமைத்தல். | 29.00 |

(இ) கீழ்க்கண்ட பணிதுவகக்கப்பட உள்ளது:—

| | |
|---|---|
| சென்னை அருங்காட்சியகத்தில் சன்னல்களுக்கு இரும்புக் கம்பிகள் போடுதல். | 1.45 |

## IX. காவல் துறை.

(அ) கீழ்க்கண்ட வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன:—

| | |
|---|---|
| 1. சென்னை வியாசார்பாடியில் 1 ஆய்வாளர், 1 உதவி ஆய்வாளர் 1 துணை உதவி ஆய்வாளர், 4 தலைமைக் காவலர் மற்றும் 8 காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல். | 6.40 |
| 2. சென்னை எழும்பூரில் 20 குதிரை காவல் படையைச் சேர்ந்தவர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல். | 5.80 |
| 3. தண்டையார்ப்பேட்டையில் இரண்டு துணை உதவி ஆய்வாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல். | 1.35 |
| 4. மீனம்பாக்கத் காவல் நிலையத்தைச் சேர்ந்த 1 துணை ஆய்வாளர், 2 தலைமைக் காவலர் மற்றும் 10 காவலர்களுக்கு பரங்கிமலையில் குடியிருப்புகள் கட்டுதல். | 4.40 |
| 5. செங்கல்பட்டு மாவட்டம் திருநின்றவூரில் 1 தலைமை காவலர் மற்றும் 6 காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல். | 2.40 |
| 6. செங்கல்பட்டு மாவட்டம், மிஞ்சூர் கிராமத்தில் 1 துணை ஆய்வாளர், 1 தலைமைக்காவலர் மற்றும் 17 காவலர்களுக்கான குடிருப்புகள் கட்டுதல். | 6.40 |

## IX. காவல் துறை—தொடர்ச்சி

(ரூபாய் இலட்சத்தில்.)

7. செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரியில் 1 ஆய்வாளர், 1 துணை ஆய்வாளர், 3 தலைமைக் காவலர் மற்றும் 24 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல். 10.40

8. செங்கல்பட்டு மாவட்டம், மணலியில் 2 துணை ஆய்வாளர், 5 தலைமைக் காவலர் மற்றும் 40 காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல். 18.00

9. செங்கற்பட்டு மாவட்டம், சாலவாக்கம் கிராமத்தில 1 துணை ஆய்வாளர் மற்றும் 9 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல். 3.60

10. செங்கல்பட்டு மாவட்டம், சத்யமூர்த்தி நகர ஆவடியில் 13 காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல். 5.80

11. தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூரில் ரிசர்வ் காவல்துறையை சேர்ந்த 8 தலைமைக் காவலர் மற்றும் 62 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.. 23.00

12. தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் மஞ்சகுப்பத்தில் 8 தலைமைக் காவலர் மற்றும் 108 காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல். 38.00

13. சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், பரமாத்தி கிராமத்தில் 1 துணை ஆய்வாளர், 2 தலைமைக் காவலர் மற்றும் 20 காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல். 8.40

14. மதுரை ரிசர்வ் குடியிருப்புகளுல் 3 ரிசர்வ் துணை ஆய்வாளர், 4 உதவி துணை ரிசர்வ் ஆய்வாளர் மற்றும் 171 முதல்நிலை மற்றும் 5இரண்டாம் நிலை காவலர்களுக்கு குடியிருப்புகள்கட்டுதல், 4.90



காவல்துறை—தொடர்ச்சி

(ரூபாய் இலட்த்தில்.)

15. மதுரை மாவட்டம், நாகமலை புதுக்கோட்டையில் 1 துணை ஆய்வாளர், 1 தலைமைக் காவலர் மற்றும் 18 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் 4.80

16. புதுக்கோட்டை ரிசர்வ் குடியிருப்புகளில், 1 துணை ஆய்வாளர், 1 தலைமைக் காவலர் மற்றும் 20 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் .. .. 7.00

17. புதுக்கோட்டை மாவட்டம் மணல் மேடு குடியில் 1 துணை ஆய்வாளர், 1 தலைமைக் காவலர் மற்றும் 11 காவலர்களுககு குடியிருப்புகள் கட்டுதல் .. 4.70

18. புதுக்கோட்டை மாவட்டம் மிமிசால் கிராமத்தில் 1 துணை ஆய்வாளர், 2 தலைமைக் காவலர் மற்றும் 11 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் .. 4.70

19. புதுக்கோட்டை மாவட்டம் கே. புதுப்பட்டி கிராமத்தில் 1 துணை ஆய்வாளர் மற்றும் 6 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் .. 2.50

20. தஞ்சாவூர் மாவட்டம், மாயூரத்தில் இருப்புப்பாதை காவல்துறையை சார்ந்த 1 துணை ஆய்வாளர், 2 தலைமைக் காவலர் மற்றும் 28 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் .. .. 10.60

21. தஞ்சை மாவட்டம் ஆணைக்காரன் சத்திரம் கிராமத்தில் 1 துணை ஆய்வாளர் 1 உதவி துணை ஆய்வாளர் மற்றும் 7 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் 3.55

22. தஞ்சை மாவட்டம் பாலையூர் கிராமத்தில் 1 துணை ஆய்வாளர், 2 தலைமைக் காவலர் மற்றும் 13 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் .. 5.50

23. திருநெல்வேலி மாவட்டம் கடயம் கிராமத்தில் 1 துணை ஆய்வாளருக்கான குடியிருப்பு கட்டுதல் .. 0.55

24. வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தம் நகரில் நகர காவல் நிலையம், வெளிப்புற காவல் நிலையம் மற்றும் வட்ட அலுவலக கட்டிடம் கட்டுதல் .. 2.91

IX. காவல் துறை—தொடர்ச்சி

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| 7. செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரியில் 1 ஆய்வாளர், 1 துணை ஆய்வாளர், 3 தலைமைக் காவலர் மற்றும் 24 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல். | 10.40 |
| 8. செங்கல்பட்டு மாவட்டம், மணலியில் 2 துணை ஆய்வாளர், 5 தலைமைக் காவலர் மற்றும் 40 காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல். | 18.00 |
| 9. செங்கற்பட்டு மாவட்டம், சாலவாக்கம் கிராமத்தில 1 துணை ஆய்வாளர் மற்றும் 9 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல். | 3.60 |
| 10. செங்கல்பட்டு மாவட்டம், சத்யமூர்த்தி நகர ஆவடியில் 13 காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல். | 5.80 |
| 11. தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூரில் ரிசர்வ் காவல்துறையை சேர்ந்த 8 தலைமைக் காவலர் மற்றும் 62 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல். . | 23.00 |
| 12. தென் ஆற்காடு மாவட்டம், கடலூரர் மஞ்சகுப்பத்தில் 8 தலைமைக் காவலர் மற்றும் 108 காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல். | 38.00 |
| 13. சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், பரமாத்தி கிராமத்தில் 1 துணை ஆய்வாளர், 2 தலைமைக் காவலர் மற்றும் 20 காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல். | 8.40 |
| 14. மதுரை ரிசர்வ் குடியிருப்புகளுல் 3 ரிசர்வ் துணை ஆய்வாளர், 4 உதவி துணை ரிசர்வ் ஆய்வாளர் மற்றும் 171 முதல்நிலை மற்றும் 5இரண்டாம் நிலை காவலர்களுக்கு குடியிருப்புகள்கட்டுதல், | 4.90 |



காவல்துறை—தொடர்ச்சி

(ரூபாய் இலட்த்தில்.)

| | |
|---|---|
| 15. மதுரை மாவட்டம், நாகமலை புதுக்கோட்டையில் 1 துணை ஆய்வாளர், 1 தலைமைக் காவலர் மற்றும் 18 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் | 4.80 |
| 16. புதுக்கோட்டை ரிசர்வ் குடியிருப்புகளில், 1 துணை ஆய்வாளர், 1 தலைமைக் காவலர் மற்றும் 20 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் .. .. | 7.00 |
| 17. புதுக்கோட்டை மாவட்டம் மனல் மேடு குடியில் 1 துணை ஆய்வாளர், 1 தலைமைக் காவலர் மற்றும் 11 காவலர்களுககு குடியிருப்புகள் கட்டுதல் .. | 4.70 |
| 18. புதுக்கோட்டை மாவட்டம் மிமிசால் கிராமத்தில் 1 துணை ஆய்வாளர், 2 தலைமைக் காவலர் மற்றும் 11 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் .. | 4.70 |
| 19. புதுக்கோட்டை மாவட்டம் கே. புதுப்பட்டி கிராமத்தில் 1 துணை ஆய்வாளர் மற்றும் 6 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் .. | 2.50 |
| 20. தஞ்சாவூர் மாவட்டம், மாயூரத்தில் இருப்புப்பாதை காவல்துறையை சார்ந்த 1 துணை ஆய்வாளர், 2 தலைமைக் காவலர் மற்றும் 28 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் .. .. | 10.60 |
| 21. தஞ்சை மாவட்டம் ஆனைக்காரன் சத்திரம் கிராமத்தில் 1 துணை ஆய்வாளர் 1 உதவி துணை ஆய்வாளர் மற்றும் 7 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் | 3.55 |
| 22. தஞ்சை மாவட்டம் பாலையூர் கிராமத்தில் 1 துணை ஆய்வாளர், 2 தலைமைக் காவலர் மற்றும் 13 காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் .. | 5.50 |
| 23. திருநெல்வேலி மாவட்டம் கடயம் கிராமத்தில் 1 துணை ஆய்வாளருக்கான குடியிருப்பு கட்டுதல் .. | 0.55 |
| 24. வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தம் நகரில் நகர காவல் நிலையம், வெளிப்புற காவல் நிலையம் மற்றும் வட்ட அலுவலக கட்டிடம் கட்டுதல் .. | 2.91 |

காவல்துறை—தொடர்ச்சி

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| 25. சென்னை குற்றவியல் ஆய்வகத்திலுள்ள 40டன் குளிர்சாதன இயந்திரத்திற்கு ஒரு 20 டன் துணை குளிர் இயந்திரம் அமைத்தல் .. .. | 1.40 |
| 26. தஞ்சை மாவட்டம் மனல்மேடு கிராமத்தில் 1 துணை ஆய்வாளர் 1 உதவி துணை ஆய்வாளர் மற்றும் 11 காவலர்களுக்கு குடியிருப்பு கட்டுதல். | 4.50 |
| 27. திருநெல்வேலி மாவட்டம் சாத்தான் குளம் கிராமத்தில் 1 ஆய்வாளர், 1 துணை ஆய்வாளர், 3 முதல் நிலை மற்றும் 11 இரண்டாம் நிலை காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல் .. | 5.70 |
| 28. திருநெல்வேலி மாவட்டம் திருவைகுண்டத்தில் 1 ஆய்வாளர், 1 தலைமைக் காவலர் மற்றும் 14 காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல் .. | 5.50 |
| 29. திருநெல்வேலி மாவட்டம் திருவேங்கடத்தில் 1 துணை ஆய்வாளர், 1 தலைமைக் காவலர் மற்றும் 11 காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல் .. | 4.80 |

(இ) கீழ்க்கண்ட பணிகள் துவங்கப்பட உள்ளன:

| | |
|---|---|
| 1. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் 1 ஆய்வாளர், 1 துணை ஆய்வாளர் மற்றும் 3 தலைமைக் காவலர், 30 காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல் .. .. .. | 12.00 |
| 2. சென்னை மயிலாப்பூரில் மாநிலங்களுக்கான கம்பியில்லா ஒலிபரப்பும் நிலையக் கட்டிடம் (இந்திய அரசிற்காக) கட்டுதல் .. .. .. | 1.85 |
| 3. நாகர்கோவிலில் மாவட்ட காவல்துறை அலுவலக கட்டிட எல்லைக்குள் கிடங்கு மற்றும் பதிவறைக்கான கட்டிடம் கட்டுதல் .. .. .. | 3.00 |
| 4. சென்னை தலைமை காவல்துறை அதிகாரியின் வானொலி அலுவலகத்தில் தமிழ் நாடு குற்றவியல் புலனாய்வு விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கு உயர்மின் அழுத்த வசதி கொடுத்தல் வகைக்கு ஒதுக்கீடு .. | 3.90 |



X பொதுப்பணித்துறை.

(அ) கீழ்க்கண்ட பணிகள் 1980–81-ல் முடிவடைந்துள்ளது :

(ரூபாய் இலட்சத்தில்).

| | |
|---|---|
| 1. சென்னை சேப்பாக்கத்தில் தலைமை பொறியாளர் (நிலநீர்) அவர்களின் அலுவலகக்கட்டிடம் கட்டுதல் .. | 4.60 |
| 2. வேலூரில் வட ஆற்காடு வட்ட மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகக் கட்டிடம் கட்டுதல் .. .. .. | 2.75 |
| 3. மதுரையில் வைகாசி இல்லத்திற்கு கூடுதல் அறை கட்டுதல் மதுரையில் கூடுதலாக சுற்றுலா மாளிகை கட்டுதல் .. | 1.50 |
| 4. கண்ணகி சிலையருகிலுள்ள பொதுக் கழிப்பிடம் கட்டிடத்தை புதுப்பித்தல் (ஆண் பெண் உபயோகிக்கும்) | 0.69 |
| 5. சென்னை, சைதாப்பேட்டை டாடண்டர் நகர் அரசு குடியிருப்புகளில் 396 கூடுதல் மின்விசிறிகள் பொருத்துதல் .. | 1.85 |

(இ) கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன:—

| | |
|---|---|
| 1. கன்னியாகுமரி அரசாங்க விருந்தினர் மாளிகைக்கு கூடுதலாக தங்கும் அறைகள் கட்டுதல் .. .. .. | 6.00 |
| 2. எல்லா மாவட்டத் தலைநகர்களில் ஓட்டுநர்கள் தங்குவதற்கு ஓய்வு அறைகள் கட்டுதல் .. .. .. | 3.25 |
| 3. மூன்று இடங்களில் பொதுக் கழிப்பிடக் கட்டிடம் கட்டுதல் (அயோத்தியா குப்பம், லாயட்ஸ் சாலை, காவல் துறை தலைவர் அலுவலகம்) .. | 5.40 |
| 4. சென்னையில் மாநில விருந்தினர் மாளிகையில் (செம்பியன் இல்லம்) கூடுதல் அறைகள் கட்டுதல் .. | 16.75 |
| 5. சென்னை மெரினா கடற்கரையில் மனைற்பகுதியில் கூடுதல் மின்விளக்குகள் அமைத்தல் .. .. .. | 2.20 |

(ரூபாய் இலட்சத்தில்.)

பொதுப்பணித்துறை—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 6. அண்ணா நினைவகம் அருகில் 2 குடிநீர் தொட்டியை சீரமைத்தல் மற்றும் காவல்துறை தலைவர் அலுவலகம் எதிரில் உள்ள குடிநீர் தொட்டியை சீரமைத்தல் .. .. | 0.67 |
| 7. மாநிலக் கல்லூரி எதிரில் மற்றும் அயோத்தியா குப்பம் எதிரில் குடிநீர் தொட்டிக்கான கட்டிடம் கட்டுதல் .. | 1.27 |

(உ) கீழ்க்கண்ட பணிகள் துவங்கப்பட உள்ளன :—

| | |
|---|---|
| 1. பெரியார் மாவட்ட ஆட்சியாளர் அலுவலக கட்டிடம் ஈரோட்டில் கட்டுதல். | 327.05 |
| 2. நாகர்கோவில் ராமவர்மபுரத்தில் ஆய்வு மாளிகை கட்டுதல். | 4.00 |
| 3. சென்னையில் அரசு அலுவலர்கள் தங்கும் விடுதி கட்டுதல். | 19.00 |
| 4. ஈரோட்டில் ஆய்வு மாளிகை கட்டுதல் .. | 4.00 |
| 5. ஊர்தி ஓட்டுநர்களுக்கு 10 இடங்களில் ஆய்வு மாளிகை வளைவுக்குள் ஒய்வு அறை கட்டுதல். | 2.50 |
| 6. பத்து ஆய்வு மாளிகையில் பாதுகாப்பாளருக்கும், சமையல் செய்பவருக்கும் குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல். | 2.50 |
| 7. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல். | 17.82 |
| 8. கடலூரில் தென் ஆற்காடு வட்ட மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகக் கட்டிடம் அமைத்தல். | 4·60 |
| 9. மதுரையில் பொதுப்பணித்துறையின் மின்சார உபகோட்ட அலுவலகம், பண்டகம் மற்றும் 8 பிரிவு அலுவலகம் அமைத்தல். | 2.00 |



(ரூபாய் இலட்சத்தில்.)

பொதுப்பணித்துறை—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 10. தென்புறத்தில் உள்ள பொதுப்பணித் துறையின் முதல் மாடிக் கட்டிடத்தையும், சேப்பாக்கத்தில் உள்ள புதுக்கட்டிடத்தின் இரண்டாவது மாடியையும் இணைக்கும் பாதை கட்டுதல். | 0.27 |
| 11. தென் ஆற்காடு மாவட்டம், விருத்தாசலம் உபகோட்டத்திற்கு அலுவலகக் கட்டிடம் கட்டுதல். | 0.45 |
| 12. எண்ணூர் மணல் தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்களை செப்பனிடுதல். | 0.95 |
| 13. பத்து அமைச்சர்களுக்கு கிரீன்வேஸ் சாலையில் குடியிருப்பு மாளிகை கட்டுதல். | 38.00 |

இதர நிர்வாகத்துறைகள் மற்றும் மத்திய அலுவலகக் கட்டிடங்கள் 1980–81-ல் நடைபெறும் வேலைகள் :—

| | |
|---|---|
| 1. சென்னை எழிலகத்தில் நான்கடுக்கு இணைப்புக் கட்டிடம் கட்டுதல். | 37.50 |
| 2. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான விடுதியில் உள்ள அனைத்து அறைகளுக்கும் இணைந்த குளியல் அறை மற்றும் ஏற்கனவே உள்ள பொது குளியலறையை மாற்றி அறையுடன் இணைந்த குளியலறையாக மாற்றுதல். | 6.00 |

கடல் அரிப்பு தடுப்புப் பணிகள்.

(அ) கீழ்க்கண்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன :—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் கருங்கல்பாறையினால் வேயும் சுவர் எழுப்புதல் :—

| | |
|---|---|
| 1. பொன்னி வாய்க்கால் .. .. .. | 5.42 |
| 2. இணையம் (விரிவு) .. .. .. | 2.54 |
| 3. முட்டந்துறை .. .. .. | 6.05 |
| 4. சாடியப்பட்டினம் .. .. .. | 9.36 |

பொதுப்பணித்துறை—தொடர்ச்சி.

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 5. | பள்ளம்துறை .. .. .. | 3.55 |
| 6. | காந்திமண்டபம் நீச்சல் குளத்திற்கிடையில். | 9.20 |
| 7. | சின்னவிளைத்துறை .. .. .. | 13.30 |
| 8. | பெரியவிளைத்துறை .. .. | 9.10 |
| 9. | பெரியகாடு .. .. .. | 21.70 |
| 10. | நீருடி .. .. .. | 16.50 |
| 11. | ராமன்துறை .. .. .. | 15.70 |
| 12. | வணியக்குடி .. .. .. | 24.50 |
| 13. | பொழிக்கரை .. .. .. | 16.75 |
| 14. | கோவளம் .. .. .. | 21.50 |
| 15. | மேலமனக்குடி .. .. .. | 13.00 |
| 16. | புத்தன்துறை .. .. .. | 15.35 |
| 17. | கேசவபுத்தன்துறை .. .. | 14.80 |
| 18. | எண்ணூர் மற்றும் ராயபுரத்தில் கருங்கல் பாறையினால் வேயும் சுவர் எழுப்புதல். | 30.80 |
| 19. | கன்னியாகுமரி மாவட்டம் முத்தம் துறையில் கருங்கல் கடல் அரிப்பு தடுப்பு சுவர் அடைத்தல். | 14.50 |
| 20. | ஆய்வும், மாதிரி பள்ளியும் வட சென்னை முதல் சாந்தோம் வரை நடத்துதல். | 0.50 |

(இ) கீழ்க்கண்ட பணிகள் துவக்கப்படவிருக்கிறது :

| | | |
|---|---|---|
| 1. | பூம்புகாரில் கருங்கல் பாறையினால் வேயும் சுவர் எழுப்புதல். | 1.00 |

வெள்ளநிவாரணப்பணி

1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கட்டிடங்களின் நிவாரண வேலைகளுக்காக அரசு அனுமதி வழங்கிய ரூபாய் 50.40 இலட்சம் மதிப்புள்ள வேலைகள்யாவும் கடந்த ஆண்டு முடிவுற்றது.

பொதுப்பணித்துறை—தொடர்ச்சி

2. மேலும் அரசு அனுமதி வழங்கிய ரூ. 50 இலட்சம் மதிப்பு உள்ள வேலைகள் 1979—80 ஆம் ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரசு கட்டிடங்களை பழுது பார்க்க நடைபெற்று வருகின்றன. அவை நடப்பு ஆண்டில் முடிவுறும்.



வெள்ள நிவாரணப்பணி (1977-ல் ஏற்பட்ட வெள்ளம்).

1977-ல் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நிதிவசதி இல்லாததால் பழுதுபார்க்கும் பணி செய்ய முடியாத பள்ளிக் கட்டிடங்களை சரி பார்க்கும் வேலைக்காக அரசு ரூபாய் 19.75 இலட்சம் அனுமதி வழங்கியது. இதற்கான வேலைகள் இவ்வாண்டு துவங்கப்படும்.

புயல் மற்றும் வெள்ள தற்காப்பு இல்லங்கள் கட்டுதல்.

1978 ஆம் ஆண்டு அரசு 32 இடங்களில் புயல் மற்றும் வெள்ள தற்காப்பு கட்டிடம் கட்டுவதற்கு, அரசு ஒப்புதல் அளித்தது. ஆறு இடங்களில் 1978-ல் வேலை முடிக்கப்பட்டது. மேலும் 9 இடங்களில் வேலை 1979-ல் முடிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் கட்டிடப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன :—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | நெமிலி .. .. .. | 2.50 |
| 2. | கோவளம் .. .. .. | 2.50 |
| 3. | வடக்குப் பொய்யூர் .. .. .. | 2.50 |
| 4. | கலம நல்லூர் .. .. .. | 2.50 |
| 5. | கிருஷ்ணாஜீப் பட்டினம் .. .. | 2.50 |
| 6. | வெள்ளப்பள்ளம் .. .. .. | 2.50 |
| 7. | மனமேல்குடி .. .. .. | 2.50 |
| 8. | உச்சிப்புளி .. .. .. | 2.50 |
| 9. | தேவிப்பட்டினம் .. .. .. | 2.50 |

கீழ்க்கண்ட இடங்களில் வேலைகள் முன்னேற்றத்திலுள்ளன :—

| | | |
|---|---|---|
| 1. | ஏரிப்புரக்கரை .. .. .. | 2.50 |
| 2. | முத்துக்கிடா .. .. .. | 2.50 |
| 3. | கோட்டைப்பட்டினம் .. .. | 2.50 |

பொதுப்பணித்துறை—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 4. | தொண்டி .. .. .. | 2.50 |
| 5. | உப்பூர் .. .. .. | 2.50 |
| 6. | கட்டுமாவடி .. .. .. | 2.50 |
| 7. | திருவொற்றியூர் .. .. .. | 2.50 |

ஆத்தங்கரையில் கட்டிடப்பணி இவ்வாண்டு துவக்கப்படும். மேலும் 50 இடங்களில் புயல் மற்றும் வெள்ள தற்காப்பு கட்டிடங்களை ஒவ்வொன்றும் 3 இலட்சம் ரூபாய் செலவில் ஐரோப்பிய பொருளாதாரக் குழு அளித்த உதவியுடன் கட்ட அரசு ஒப்புதல் அளித்தது. இதில் வடப்பட்டினம் என்னும் ஊரில் கட்டிடப் பணி இவ்வாண்டு முடிவுற்றது. மேலும் 47 இடங்களில் வேலை முன்னேற்றத்தில் உள்ளது. மீதமுள்ள, பன்னல், ராஜாமடம் என்னும் இரண்டு இடங்களிலும் வேலை இவ்வாண்டு எடுத்துக் கொள்ளப்படும்.

## XI. நித்தடுப்பு மற்றும் கட்டுப்பாடு.

கீழ்க்கண்ட பணி 1980-81-ல் முடிவுற்றன :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| எண்ணூர் தீயணைப்பு நிலையத்துக்காக நிலையான வீடு கட்டுதல். | 1.94 |

## XII. வருவாய்த் துறை.

(அ) கீழ்க்கண்ட வேலைகள் நடப்பு ஆண்டில் முடிவு பெற்றுள்ளது :—

| | |
|---|---|
| 1. நாகர்கோவிலில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளருக்கான இரண்டுமாடி கட்டிடம் கட்டுதல் .. .. .. | 16.33 |
| 2. விருத்தாசலத்தில் கோட்ட ஆட்சியாளர் அலுவலகக் கட்டிடம் கட்டுதல் .. | 3.85 |
| 3. பெரியகுளத்தில் துணை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகக் கட்டிடம் கட்டுதல். | 3.95 |

( ) கீழ்க்கண்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன :—

| | |
|---|---|
| 1. இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கையில் கோட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல் .. .. .. .. | 5.35 |
| 2. நீலகிரி மாவட்டம் கூடலூரில் கோட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல் .. | 6.80 |
| 3. திருநெல்வேலியில் கோட்டாட்சியாளர் அலுவலகம் கட்டுதல் .. .. | 5.35 |
| 4. இராமநாதபுரம். அருப்புக்கோட்டையில் கோட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல். | 5.3 |



| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 5. தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல் .. | 5.87 |
| 6. இராமநாதபுரம் மாவட்டம், காரைக்குடியில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல் .. .. .. | 5.31 |
| 7. இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகரில் வட்ட ஆட்சியாளர் அலுவலகம் கட்டுதல் .. .. .. .. | 5.31 |
| 8. தர்மபுரி மாவட்டம், பாலக்கோட்டில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல் .. | 5.31 |

(உ) கீழ்க்கண்ட பணிகள் துவங்கப்பட உள்ளன :—

| | |
|---|---|
| 1. வேலூரில் வட ஆற்காடு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் கட்டுதல் .. | 5.00 |
| 2. திருச்சிராப்பள்ளியில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் கட்டுதல் .. | 5.00 |
| 3. பட்டுக்கோட்டையில் கோட்ட ஆட்சியர் அலுவலகமும், வட்ட ஆட்சியர் அலுவலகமும் கட்டுதல் (இரண்டு மாடி). .. | 11.30 |
| 4. செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தில் கோட்டாட்சியாளர் அலுவலகம் கட்டுதல் .. .. .. .. | |
| 5. தஞ்சாவூரில் கோட்டாட்சியாளர் அலுவலகம் கட்டுதல் .. .. .. | |
| 6. சேலம் மாவட்டம் சங்கரியில் கோட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல் .. | [illegible] |
| 7. மதுரை மாவட்டம் நத்தத்தில் வட்ட ஆட்சியாளர் அலுவலகம் கட்டுதல் .. | |
| 8. இராமநாதபுரம் மாவட்டம் இராசபாளையத்தில் வட்ட ஆட்சியாளர் அலுவலகம் கட்டுதல் .. .. | |
| 9. நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் வட்ட ஆட்சியாளர் அலுவலகம் கட்டுதல் .. | 1.40 |
| 10. எழும்பூர்-நுங்கம்பாக்கம் வட்ட ஆட்சியாளர் அலுவலகம் கட்டுதல் .. | |

## XIII. நீதித் துறை.

(அ) 1980-81-ல் நடைபெற்றுவரும் கட்டிடப் பணிகள் :—

(ரூபாய் இலட்சத்தில்.)

1. சேலம் மாவட்ட நீதிமன்ற சுற்றுக்குள் பொதுமக்கள் தங்க கொட்டகையும் மிதிவண்டி நிலையமும் கட்டுதல் .. 0.81
2. விழுப்புரம் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்தில் ஆவண அறையும் பொருள் வைப்பு அறையும் கட்டுதல்.. 0.64
3. எழும்பூர் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் பறிமுதல் செய்யப்பட்ட ஊர்திகள் வைப்பு அறைகள் கட்டுதல். 0.33
4. திருநெல்வேலி தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் ஆவண அறைக்கு மேம்பாடுகள் செய்தல் .. .. 0.30
5. தஞ்சாவூர் உட்கோட்ட குற்றவியல் நீதிமன்ற கட்டிடத்திற்கு அவசர பழுது பார்க்கும் சிறப்பு பணிகள் செய்தல் .. 0.21
6. சென்னை கூடுதல் நகர நீதிமன்ற கட்டிடத்தையொட்டி 4 வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கும் 2 கூடுதல் குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு தடுப்புகள் அமைத்துக் கொடுத்தல் .. 0.22
7. சென்னை கூடுதல் நகர நீதிமன்ற கட்டிடத்தில் மின்வசதி அமைத்தல் .. 0.68

(இ) கீழ்க்கண்ட பணிகள் துவங்கப்பட உள்ளன :—

1. காஞ்சிபுரத்தில் சார்பு நீதிமன்றத்தில் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல்—
   (அ) சார்பு நீதிமன்ற கட்டிடங்கள் 14.00
   (ஆ) உதவி நீதிபதிகளுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் .. .. .. 1.76 16.94
   (இ) 2 முன்சீப்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் .. 1.18

   16.94



(ரூபாய் இலட்சத்தில்.)

2. தூத்துக்குடியில் குற்றவியல் நீதிமன்றம் இணைந்த நீதிமன்ற கட்டிடங்கள் கட்டுதல் .. .. .. 13.50
3. திருவைகுண்டத்தின் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் சட்ட ஆலோசகர்களுக்கான அறைக் கட்டுதல் .. .. 1.67
4. புதுக்கோட்டையில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்தின் ஓட்டு கூரையை கற்காரை கூரையாக மாற்றும் பணி .. .. .. .. 0.95

## XIV. சிறைச்சாலைத் துறை.

(அ) கீழ்க்கண்ட வேலைகள் நடப்பு ஆண்டில் செயல் வடிவில் உள்ளது :—

சென்னை மத்திய சிறைசாலையில் கழிவு அறைகள் கட்டுதல் .. .. 3.80

(இ) கீழ்க்கண்ட பணிகள் துவங்கப்பட உள்ளன :—

(1) கீழ்க்கண்ட இடங்களில் கூடுதல் சிறைச்சாலை மற்றும் கூடுதல் சுகாதார வசதி செய்து தருதல்—

1. மத்திய சிறைச்சாலை, பாளையங்கோட்டை 47.00
2. மத்திய சிறைச்சாலை, மதுரை 60.50
3. மத்திய சிறைச்சாலை, திருச்சி 60.00
4. மத்திய சிறைச்சாலை, சேலம் 16.00
5. மத்திய சிறைச்சாலை, சென்னை 28.50
6. மத்திய சிறைச்சாலை வேலூர் 31.00
7. துணை சிறைச்சாலை, வேலூர் 5.70
8. துணை சிறைச்சாலை, கடலூர் 5.25
9. துணை சிறைச்சாலை, செங்கற்பட்டு 4.82

(2) கீழ்க்கண்ட இடங்களில் குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்—

1. மத்திய சிறைச்சாலை, சென்னை 14.218
2. மத்திய சிறைச்சாலை, வேலூர் 8.089
3. மத்திய சிறைச்சாலை, மதுரை 11.500

(3) கொக்கிரகுளத்திலுள்ள சிறப்பு துணைச் சிறைச்சாலை, பணியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் 2.00

## XV. மீன் வளர்ப்புத் துறை

அ. கீழ்க்கண்ட வேலைகள் இவ்வாண்டில் 1980-81 முடிவு பெற்றன:—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. குருஞ்சடையில் அலுவலகம் குடியிருப்புகள் சிறப்புப் பழுதுபார்த்தல் | 0.526 |
| 2. பவானிசாகரில் மேல்நிலைத் தொட்டி மற்றும் இதர உபகரணங்கள் அமைத்தல் | 0.45 |
| 3. குளச்சலில் மத்தியப்பணி கட்டிடத்தை பழுது பார்த்தல் | 0.185 |
| 4. உதகமண்டலத்தில் வில்சன் மீன் பண்ணையை மேம்படுத்துதல் | 3.00 |
| 5. ஆளியார் நகரில் ஐந்து கூடுதல் மீன் வளர்ப்புத் தொட்டி கட்டுதல் | 0.40 |
| 6. மீன்காட்சியாக-மீன் வளர்ப்பு உதகையில் அமைத்தல் | 1.1 |
| 7. சென்னை மெரினா மீன்காட்சியகம் பழுது பார்த்தல். | 0.35 |
| 8. மதுரை மாவட்டம் பாலார்—பொரண்டலார் மீன்பிடி பண்ணை அமைத்தல். | 2.65 |
| 9. அகில இந்திய கூட்டுறவு ஆராய்ச்சி மீன்பிடி பண்ணை அமைத்தல் அடையாறு, சென்னை. | 0.35 |
| 10, இருபது மீன் வளர்ப்பு தொட்டிகள். மஞ்சளார் அணையில் கட்டுதல் | 3.10 |

(ஆ) கீழ்க்கண்ட வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன:—

| | |
|---|---|
| 1. கடலூரில் மேல்நிலைத் தொட்டி கட்டுதல் | 0.62 |
| 2 மீன்பிடி பண்ணை கோவளத்தில் அமைத்தல் | 4.24 |
| 3. தஞ்சாவூர் மாவட்டம் அகரைப் பேட்டையில் 6 பரிசோதனைக்கூடம், 3 நர்சரிப் பண்ணை அமைத்தலும் 2 மீன் வளர்ப்புப் பண்ணையும் கிணறுகள் நீரேற்றும் நிலையத்தோடு அமைத்தல் முதலியன. | 4.00 |
| 4. மேட்டூர் அணையில் குடுவையில் குஞ்சு பொறித்தல் அமைத்தல் | 1.95 |



| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 5. பவானிசாகரில் குடிநீர் விநியோகம் செய்து கொடுத்தல் | 3.00 |
| 6. மேட்டூர் அணையில் மீன் குளம் எண். 5 பழுது பார்த்தல் | 0.57 |
| 7. மீன் காட்சியாக மற்றும் அருங்காட்சியகம் உதகையில் அமைத்தல் | 1.78 |
| 5. உதகையில் உள்ள வில்சன் மீன் பண்ணையில் மண்கரை சிமி குளங்களை ஏரியில் கலத்தல் | 0.50 |

கீழ்க்கண்ட இடங்களில் மீன் இடை மேடை கட்டிக் கொடுத்தல்:—

| | |
|---|---|
| 9, இராமேஸ்வரம் | 0.45 |
| 10. பழவேற்காடு | 0.40 |
| 11. கோட்டைப்பட்டினம் | 0.40 |
| 12. தூத்துக்குடியில் சங்குக் கிடங்கு அமைத்தல் | 2.66 |
| 13. லாலாப்பேட்டையில் நீர் அமைப்புகளுக்கு தண்ணீர் வசதி கொடுத்தல் | 0.40 |
| 14. தூத்துக்குடியில் டப்பாவில் மீன் அடைக்கும் தொழிற்சாலையை பழுதுபார்த்தல் | 0.40 |
| 15. எண்ணூரில் அலுவலர் குடியிருப்பில் சிறப்புப் பழுதுபார்த்தல் | 0.15 |
| 16. கன்னியாகுமரியில் மீன் ஆற்றும் முற்றத்தில் உள்ள கட்டிடத்தை பழுதுபார்த்தல் | 0.645 |
| 17. கன்னியாகுமரி மாவட்டத்தில் புத்தன் துறையில் வழிதெரி விளக்குகள் அமைத்தல் | 0.273 |
| 18. மேல் அணையில் கூடுதல் 10 வளர்ப்பு சிரார் அமைத்தல் | 3.00 |
| 19 மணிமுத்தாறில் 10 கூடுதல் வளர்ப்பு சிரார் தொட்டி, 1 குழாய் ஏற்றம் கொட்டகை அமைத்தல் | 3.00 |
| 20. பிளவுக் கல்லில் 5 மீன் வளர்ப்பு சிரார் அமைத்தல் | 0.71 |
| 21. இள்ளையில் மீன் வளர்ப்பு கழிமுக பண்ணை அமைத்தல் | 13.075 |
| 22. திருக்காட்டுப்பள்ளியில் மீன்பிடி பண்ணை அமைத்தல் | 4.00 |

## XVI. வனத்துறை

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1980-81-ல் நடைபெற்றுவரும் கட்டிட பணிகள்—தஞ்சாவூர் மாவட்டம் கோடிக்கரையில் வனத் துறை தங்கும் விடுதிக்கு மேம்பாட்டு வேலைகள் | 0.18 |

## XVII. சின்கோனாத்துறை.

| | |
|---|---|
| 1980-81-ல் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய வேலைகள்—ஆனைமலையில் டயஸ்கோரியா வளர்ப்பும், டயஸ்ஜெனின் தொழிற்கூடம் கட்டும் திட்டத்தின்கீழ் அலுவலர் குடியிருப்பும் தொழிற்கூடமும் கட்டுதல் | 11.88 |

## XVIII. வேளாண்மை.

(அ) கீழ்வரும் பணிகளில் 1980-81ல் முடிக்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| 1. திருநெல்வேலி மாவட்டம், கிள்ளிக்குளத்தில் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் | 1.91 |
| 2. இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கையில் கிடங்கு கட்டுதல் | 3.00 |
| 3. திருச்சி மாவட்டம் இறுங்களூரில் இரட்டை விதைக் கிடங்கு கட்டுதல் | 2.00 |
| 4. புதுக்கோட்டை மாவட்டம், குடுமியா மலையில் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் | 7.20 |
| 5. புதுக்கோட்டை மாவட்டம், குடுமியா மலையில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1 இணை இயக்குநருக்கும் மற்றும் 4 மாவட்ட வேளாண்மை அலுவலர்களுக்கு குடியிருப்பு கட்டுதல் | 2.51 |
| 6. திருநெல்வேலி மாவட்டம் கிள்ளிகுளம் விதை பக்குவப்படுத்தும் நிலையத்தில் குடியிருப்பு கட்டுதல் | 1.78 |
| 7. திருச்சி மாவட்டம் நெய்குப்பை புதூர் அரசு விதைப் பண்ணையில் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் | 1.08 |
| 8. திருச்சி மாவட்டம், அரியலூரில் மூடிய கொட்டகை கட்டுதல் | 1.00 |



| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 9. வடஆற்காடு மாவட்டம் போரூர் விதை பக்குவப்படுத்தும் நிலையத்தில் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் | 1.7 |
| 10. காஞ்சிபுரத்தில் மண் பரிசோதனை நிலையம் கட்டுதல் | 1.94 |
| 11. செங்கல்பட்டு மாவட்டம் புட்லூரில் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் | 1.08 |
| 12. கன்னியாகுமரி மாவட்டம் திருப்பதிசாரம் அரசு விதைப் பண்ணையில் விதை சேமிப்பு நிலையம் கட்டுதல் | 1.0 |
| 13. விருத்தாசலத்தின் மூடிய கொட்டகை கட்டுதல் | 1.00 |
| 14 நவ்லாக் தென்னை விதைப் பண்ணையில் கிடங்கு கட்டுதல் | 1.00 |
| 15. நாகர்கோவில் மூடிய கொட்டகை கட்டுதல் | 1.00 |
| 16. சோழவந்தான் விதை பக்குவப்படுத்தும் நிலையத்தில் விதைக் கிடங்கு கட்டுதல். | 3.00 |

(இ) கீழ்வரும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன:—

| | |
|---|---|
| 1. வைகை அணையில் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் | 1.08 |
| 2. நீலகிரி மாவட்டம் கூடலூரில் நெல், மரவள்ளி மற்றும் வாசனைப் பொருள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கட்டிடங் கட்டுதல் | 9.35 |
| 3. நீலகிரி மாவட்டம் கூனூரில் காய்கறி விதை உற்பத்தி திட்டத்தின் கீழ் கட்டிடங்கள் கட்டுதல் | 4.94 |
| 4. நீலகிரி மாவட்டம் கடலூரில் இஞ்சி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கட்டிடங்கள் கட்டுதல். | 6.00 |
| 5. திருவாரூர் விதை பக்குவப்படுத்தும் நிலையத்தில் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் | 2.10 |
| 6. மதுரை மாவட்டம் தேனியில் பணிக் கொட்டகை கட்டுதல். | 1.00 |

(ரூபாய் இலட்சத்தில்)

7. தஞ்சாவூர் மாவட்டம் ரெத்தனூர் அரசு விதைப் பண்ணையில் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் — 1.08

8. புதுக்கோட்டை மாவட்டம் குடுமியாமலை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் — 2.25

9. தென் ஆற்காடு மாவட்டம் காக்குப்பம் தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணையில் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் — 1.80

10. தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடியில் பணிக் கொட்டகை கட்டுதல் — 1.00

11. புதுக்கோட்டை மாவட்டம் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் வேளாண்மை பள்ளி தங்கும் விடுதி கட்டிடமும், நுண்சத்து கரவை கட்டிடமும் கட்டுதல் — 2.68

(உ) கீழ்வரும் பணிகள் துவங்கப்பட வேண்டும்:—

1. வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் பணிக் கொட்டகை கட்டுதல் — 1.00

2. தென் ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி விதை பக்குவப்படுத்தும் நிலையத்தில் அலுவலர் குடியிருப்பு கட்டுதல். — 2.10

3. விழுப்புரத்தில் பணிக் கொட்டகை கட்டுதல் — 1.00

4. கோயம்புத்தூரில் விதைச்சான்றிதழ் இயக்குனருக்கான குடியிருப்பு கட்டுதல் — 1.66

5. செங்கல்பட்டு மாவட்டம் திரூர் நெல் பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை கூடம் கட்டுதல் — 3.88

6. திண்டிவனம் எண்ணெய்வித்து பரிசோதனை நிலையத்தில் பரிசோதனைக் கூடம் கட்டுதல் — 1.87

7. தேனிஷ்பேட்டை தென்னங்கன்று வளர்ப்பு பண்ணையில் அலுவலர் குடியிருப்பு கட்டுதல் — 2.30



(ரூபாய் இலட்சத்தில்)

8. அக்மார்க் தரப்பிரிவு பரிசோதனை நிலையம் கீழ்க்கண்ட இடங்களில் கட்டுதல்:—

(1) திருப்பூர் — 1.00

(2) கரூர் — 1.00

(3) திருநெல்வேலி — 1.00

(4) விருதுநகர் — 1.00

(5) சேலம் — 1.00

(6) மதுரை — 1.00

9. புதுக்கோட்டை மாவட்டம் குடுமியாமலை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் அலுவலர் குடியிருப்பு கட்டுதல். — 5.50

10. ஏர்க்காடு, அரசு பழத்தோட்டத்தில் அலுவலர் குடியிருப்பும் சேமிப்பு அறையும் கட்டுதல். — 2.50

## XIX கால்நடை பராமரிப்பு.

(அ) கீழ்க்கண்ட பணிகள் 1980-81-ம் ஆண்டில் முடிக்கப்பட்டது:—

1. இராணிப்பேட்டையில் பெரிய விலங்குகளுக்கான குளிர்சாதனம் பொருந்திய கொட்டகை கட்டுதல். — 1.12

2. இராணிப்பேட்டையில் இன்சினிரேட்டர் கூடம் கட்டுதல் — 0.50

3. மதுரை தல்லாகுளம் கால்நடை மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் சுத்திகரிப்பு கூடம் கட்டுதல். — 10.2

4. சேலத்தில் கால்நடை மருத்துவமனை அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் மருந்தகம் கட்டுதல். — 1.20

5. வேலூரில் கால்நடை மருத்துவமனை அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் மருந்தகம் கட்டுதல். — 1.20

6. சாந்திநல்லா ஆடுவிருத்தி பண்ணையில் ஆராய்ச்சி கூட கட்டுதல். — 5.50

(ரூபாய் இலட்சத்தில்)

(இ) கீழ்கண்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது:—

| | |
|---|---|
| 1. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பால் தொழில் நுட்ப கூடம் மற்றும் திரையரங்கம் கட்டுதல் | 29.00 |
| 2. ஈச்சங்கோட்டையில் அன்னியமான கால் நடை வளர்ப்புப் பண்ணை கட்டுதல் | 20.50 |

(உ) கீழ்க்கண்ட வேலைகள் விரைவில் துவக்கப்பட இருக்கிறது:—

| | |
|---|---|
| 1. இராணிப்பேட்டையில் கால்நடை நோய் தடுப்பு நிலையத்தில் பலப்படுத்த ப்ருசிலி திட்ட விஸ்தரிப்பு கூடம் கட்டுதல் | 2.50 |
| 2. காஞ்சிபுரத்தில் கால்நடை மருத்துவ மனைக்கு அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் பரிசோதனை கூடம் கட்டுதல். | 1.20 |
| 3. பாளையங்கோட்டையில் கால்நடை மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் பரிசோதனைக் கூடம் கட்டுதல் | 1.20 |
| 4. திருச்சியில் கால்நடை மருத்துவ மனைக்கு அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் பரிசோதனைக் கூடம் கட்டுதல் | 1.90 |
| 5. புதுக்கோட்டை மாவட்ட கால்நடை வளர்ப்பு பண்ணை ஆடு உற்பத்தி கூடம் கட்டுதல் | 3.00 |
| 6. புதுக்கோட்டை மாவட்ட கால்நடை வளர்ப்பு ஆடு உற்பத்தி கூடத்தில் கிணறு தோண்டுதல் | 0.75 |
| 7. புதுக்கோட்டை மாவட்ட கால்நடை வளர்ப்பு ஆடு உற்பத்தி கூடத்தில் முள் வேலி அமைத்தல் | 1.10 |
| 8. சாத்தூரில் செம்மறியாட்டுப் பண்ணையைப் பலப்படுத்துதல் | 3.35 |
| 9. புதுக்கோட்டை மாவட்ட கால்நடை வளர்ப்பு பண்ணையில் குட்டியின உற்பத்தி திட்டத்தின்கீழ் கட்டிடம் கட்டுதல் | 7.72 |
| 10. உதகமண்டலத்தில் கால்நடை வளர்ப்பு பண்ணையில் குட்டியின உற்பத்தி திட்டத்தின்கீழ் கட்டிடம் கட்டுதல். | 7.72 |



(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| 11. ராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்புச் ஆராய்ச்சி கூட அலுவலர் குடியிருப்பு கட்டுதல் | 5.00 |
| 12. மருந்துகள் கோட்டம் அமைத்தல் | 9.76 |

## XX. கருவூலகம் மற்றும் கணக்கு துறை.

கீழ்க்கண்ட பணிகள் துவக்கப்பட இருக்கிறது—

| | |
|---|---|
| 1. துணை கருவூலக கட்டிடம் நத்தத்தில் கட்டுதல் | 1.46 |
| 2. துணைக் கருவூலக கட்டிடம் பென்னகரத்தில் கட்டுதல் | 1.00 |
| 3. துணைக்கருவூலகக் கட்டிடம் பட்டுக் கோட்டையில் கட்டுதல் | 1.30 |
| 4. துணைக் கருவூலகக் கட்டிடம் காஞ்சிபுரத்தில் கட்டுதல். | 1.60 |

## XXI. எழுது பொருள் மற்றும் அச்சகத்துறை

(அ) கீழ்க்கண்ட பணி முடிக்கப் பெற்றுள்ளது.—

| | |
|---|---|
| விருதாச்சலத்தில் உள்ள பகுதி அச்சகத்திற்கு கட்டிடம் கட்டுதல். | 17.95 |

(இ) கீழ்க்கண்ட பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன—

| | |
|---|---|
| 1. தண்டையார்பேட்டையில் அரசு அச்சக அலுவலகங்களின் காலனிக்கு தடுப்புச் சுவர் கட்டுதல். | 2.5 |
| 2. தண்டையார்பேட்டை அரசாங்க அச்சகத் துறை தொழிலாளர் குடியிருப்பில் கிணறு வெட்டுதலும், தண்ணீர் வழங்குதலும் | 1.07 |

## XXII. வணிக வரித்துறை.

கீழ்க்கண்ட பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன—

| | |
|---|---|
| 1. வணிகவரி அலுவலக பல மாடிக் கட்டிடம் அமைத்தல் நுங்கம்பாக்கம், சென்னை. | 94.00 |

[198] ஏப்ரல் 16

(ரூபாய் இலட்சத்தில்)

2. வணிகவரி அலுவலகம்—சிறுண்டி பகுதியில் அமைத்தல் திருநெல்வேலி. 0.85

3. (அ) வணிகவரி அலுவலக கட்டிடம் மதுரையில் அமைத்தல் 61.00

(ஆ) வணிகவரி அலுவலகக் கட்டிடத்திற்கு சுற்றுச் சுவர் எழுப்புதல். 0.80

## (அ) XXIII. போக்குவரத்துத் துறை (ஊர்தி பராமரிப்பு குழு)

கீழ்க்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டது—

1. தருமபுரியில் ஊர்திப் பணிமனை கட்டும் பணி 6.04

2. தஞ்சாவூரில் அரசு ஊர்தி பணிமனைக்கான புதிய கட்டிடங்கள் கட்டும் பணி. 3.60

(இ) கீழ்குறித்த பணிகள் விரைவில் செயல் ஆக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்—

1. தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த தானியங்கி வாகனங்கள் பராமரிக்க பாரமரிப்பு நிலையம் கட்டும் பணி, கமலாப்பூர் 4.75

2. வேலூரில் அரசு ஊர்திப்பணி கட்டும் பணி 20,00

3. சேலத்தில் அரசு ஊர்திப் பணிமனை சுற்றில் முற்றத்திற்கு தார்போடும் வேலை மற்றும் மழை நீர் வடிகால் கட்டும்பணி 0.75

4. புதுக்கோட்டையில் அரசு ஊர்திப் பணிமனை கட்டும் வேலை. 5,25

5. மத்திய பணிமனை சென்னையில் உணவருந்தும் மற்றும் பாதுகாப்பு துறை கட்டும் வேலை 0.91

6. உதகமண்டலத்தில் அரசு ஊர்திப் பணிமனை கட்டும் வேலை. 6.0

## XXIV. பதிவுத்துறை

(அ) கீழ்க்கண்ட பணி நடைபெற்று வருகின்றது—

புதுக்கோட்டையில் மாவட்ட பதிவாளர் அலுவலகம் கட்டுதல் 4.13

(இ) கீழ்க்கண்ட பணி துவங்கப்படவிருக்கிறது—

சத்திய மங்கலத்தில் சார்பதிவாளர் அலுவலகம் கட்டுதல் 0.75



## XXV. தொழிலாளர் நலத்துறை

(ரூபாய் இலட்சத்தில்)

(அ) கீழ்க்காணும் பணி முடிவுப் பெற்றது.

திருமூர்த்தி நகரில் மண்டல சேமநிதி அலுவலக பணியாளர் தங்க குடியிருப்புகள் கட்டுதல் 23.53

(இ) கீழ்காணும் பணி முன்னேற்றத்தில் உள்ளது—

சென்னை தேனாம்பேட்டை மருத்துவ இயக்குநர் அலுவலக வளைவுக்குள் தொழிற் சங்க தலைவர்கள் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகளுக்காக ஓய்வுக் கூடம் கட்டுதல். 6.85

(உ) கீழ்க்கண்ட பணிகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய நிலையில் உள்ளன—

1. மாமல்லபுரத்தில் தொழிலாளர் தங்குவதற்காக விடுமுறை இல்லம் ஒன்று அமைத்தல். 7.23

2. குற்றாலத்தில் தொழிலாளர்கள் தங்குவதற்காக விடுமுறை இல்லம் ஒன்று அமைத்தல். 11.25

## பாகம் 2.

## வைப்புத் தொகை வேலைகள்.

### I தொழிலாளர் மாநில ஈட்டுறுதி

(அ) கீழ்க்கண்ட பணிகள் 1980-81 ல் முடிவுற்றன:

1. தாம்பரத்தில் ஐந்து மருத்துவர் கொண்ட தொழிலாலர் நல மாநில ஈட்டுறுதி மருத்துவமனை மற்றும் அலுவலர்கள் குடியிருப்புகள் கட்டுதல். 9.34

2. மதுரை தல்லாகுளம் தொழிலாளர் மாநில ஈட்டுறுதி மருத்துவ மனைக்கு உட்பட்ட பகுதியில் மைய மருந்து கிடங்குகள், வட்டார மருத்துவ அதிகாரிகளுக்கான கட்டிடம் கட்டுதல். 7.56

3. சென்னை அயன்புரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் 160 கே. வி. ஏ மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் 4.32

(இ) கீழ்க்கண்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன—

(ரூ. இலட்சத்தில்)

1. துடியலூரில் ஐந்து மருத்துவ அதிகாரி கொண்ட தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனையையும் அலுவலகம் குடியிருப்பும் கட்டுதல். 7.98

2. சென்னை கலைஞர் கருணாநிதி நகரிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனையில் 160 கே. வி. ஏ. மின் உற்பத்தி சாதனம் அமைத்தல். 4.66

II. வேளாண்மைத் துறை

(அ) 1980-81 ல்கீழ்க்கண்ட வேலைகள் முடிவுற்றன

1. ஆனைமலையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டிடங்கள் கட்டுதல். 6.00

2. புஞ்சை புளியம்பட்டியில் ஒழுக்குமுறை விற்பனைக் கூடம் கட்டிடங்கள் கட்டுதல் 5.00

3. கடம்பூரில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடக் கட்டடம் கட்டுதல். 3.00

4. திருவைகுண்டத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடக் கட்டிடம் கட்டுதல். 3.00

5. சிவகங்கையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுதல். 4.60

6. பல்லடத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுதல். 1.15

7. நீலகிரி மாவட்டம், கேத்தியில் இந்திய—ஜெர்மனி நீலகிரி அபிவிருத்தி திட்டத்திற்காக கிடங்கு கட்டுதல். 1.00

8. நீலகிரி மாவட்டம், இத்தலாரில் இந்திய—ஜெர்மனி நீலகிரி அபிவிருத்தி திட்டத்திற்காக கிடங்கு கட்டுதல். 1.00

(இ) 1980-81ல் கீழ்க்கண்ட வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன:—

1. உடுமலைப் பேட்டையில் ஒழுட்குமுறை விற்பனைக் கூடம் கட்டுதல். 10.00

2. கோயம்புத்தூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங் கட்டுதல். 38.50

3. திருப்பூரில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்டுதல். 23.30





(ரூ. இலட்சத்தில்.)

4. ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், பொள்ளாச்சியில் கட்டுதல் .. .. .. 15.50

5. ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அந்தியூரில் கட்டுதல். 15.50

6. கோவில்பட்டியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுதல். 2.31

7. கமுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுதல். 4.60

8. குலசேகரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடவடிக்கை கட்டிடம் கட்டுதல். 3.73

9. திங்கள் சந்தையில் நடவடிக்கை கட்டிடம் கட்டுதல். 3.30

10. சிங்கம்புனரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் நடவடிக்கை கட்டிடம் கட்டுதல். 4.95

11. சாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடவடிக்கை கட்டிடம் கட்டுதல். 2.75

12. பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடவடிக்கை கட்டிடம் கட்டுதல். 4.95

13. இராஜபாளையம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஏல விற்பனைக் கூடம் கட்டுதல். 2.75

14. விருதுநகர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஏல விற்பனைக்கூடம் கட்டுதல். 2.75

15. அருப்புக்கோட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஏல விற்பனைக் கூடம் கட்டுதல். 2.75

16. கன்னியாக்குமரிவிளையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடவடிக்கை கட்டிடம் கட்டுதல். 4.35

17. கிருஷ்ணகிரியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தானியக்கிடங்கு கட்டுகில். 2.25

18. கீழ்க்கண்ட இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுதல்—

(1) பொள்ளாட்சி .. .. .. 1.65

(2) புஞ்சைபுளியம்பட்டி .. .. 1.65

(3) ஆனைமலை .. .. .. 1.65

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 19. | சங்குவார் சத்திரம் .. .. .. | 2.11 |
| 20. | ஊத்துக்கோட்டை .. .. .. | 2.25 |
| 21. | திருவள்ளூர் .. .. .. | 3.25 |
| 22. | வடாற்காடு மாவட்டம் சேத்துப்பட்டில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்டிடங்கள் கட்டுதல். | 11.54 |
| 23. | செய்யார் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுதல். | 3.70 |
| 24. | திருப்பத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கிடங்கு கட்டுதல். | 3.10 |
| 25. | வந்தவாசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கிடங்குகள் கட்டுதல். | 3.70 |
| 26. | வேலூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுதல். | 4.88 |
| 27. | திருவண்ணாமலையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுதல். | 6.04 |
| 28. | புதுப்பாளையம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுதல். | 5.40 |
| 29. | செங்கம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்டுதல். | 7 20 |
| 30. | ஆற்காடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுதல். | 4.04 |
| 31. | பாலூர் சத்திரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்டுதல். | 4.90 |

(உ) கீழ்க்கண்ட பணிகள் விரைவில் துவங்கப்படவிருக்கிறது:—

| | | |
|---|---|---|
| 1. | கருமாந்துறையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், நடவடிக்கை கட்டிடம் அலுவலக கட்டிடம் கட்டுதல். | 4.00 |
| 2. | கம்பம்பட்டியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், நடவடிக்கை கட்டிடம், அலுவலக கட்டிடம் கட்டுதல். | 4.00 |
| 3. | தஞ்சாவூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கட்டிடம் கட்டுதல். | 13.35 |



(ரூ. இலட்சத்தில்)

| | |
|---|---|
| மேலும் மாநில வேளாண்மை விற்பனைக் கூடங்களின் இயக்குநர் தமிழ் நாட்டிலுள்ள 75 இடங்களில் கிடங்குகள் (ரூ. 4 இலட்சம்/கிடங்கு) கட்டுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அதன்படி வரைபடமும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு இவ்வேலைகள் உலக வங்கி உதவியின்படி செயல்படுகிறது. | 300.00 |

## III. மாநகராட்சி மற்றும் நகராட்சி பணிகள்.

(அ) கீழ்க்கண்ட பணிகள் முடிவடைந்துள்ளன: —

| | | |
|---|---|---|
| 1. | திருநெல்வேலி நகராட்சியில் கடைகள் கட்டுமான பணி. | 5.00 |
| 2. | கும்பகோணம் காந்தி பார்க்கில் கடைகள் கட்டுமான பணி. | 4.50 |
| 3. | திருவொற்றியூர் நகராட்சி அலுவலகத்திற்கு முன் 3 கடைகளும் அலுவலகமும் கட்டுதல். | 0.905 |
| 4. | ஈரோட்டில் தற்போதுள்ள நூற்றாண்டு மண்டபத்தில் மூன்றாவது மாடிக் கட்டிடம் கட்டுதல். | 4.26 |
| 5. | மதுரையில் காய்கறி அங்காடி (கிழக்குப் பகுதி) கட்டுதல். | 2.00 |
| 6. | மதுரையில் காய்கறி அங்காடி (மேற்குப் பகுதி). | 2.00 |

(இ) கீழ்க்கண்ட பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. | திண்டுக்கல் நகராட்சியில் பேருந்து நிலையம் (முதற் கட்டம்) கட்டுதல். | 17.93 |
| 2. | திருவண்ணாமலை நகராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல். | 13.705 |
| 3. | நாமக்கல் நகராட்சியில் பேருந்து நிலையம் (முதல்பகுதி) கட்டுதல். | 14.40 |
| 4. | திருவொற்றியூர் நகராட்சி மருந்தகம் முன் 11 கடைகள் கட்டுதல். | 2.53 |

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 5. | திருவொற்றியூர் நகராட்சியில் பொது அங்காடி கட்டுதல். | 11.72 |
| 6. | திருவொற்றியூர் நகராட்சியில் கடைகள் கட்டுதல். | 10.88 |
| 7. | தாம்பரம் நகராட்சி பேருந்து நிலையம் புதுப்பித்தல். | 6.50 |
| 8. | தாம்பரம் நகராட்சி ஜீவா பூங்காவில் கடைகள் கட்டுதல். | 9.64 |

(உ) கீழ்க்கண்ட பணிகள் விரைவில் துவக்கப்படும்:—

| | | |
|---|---|---|
| 1. | திண்டுக்கல் பேருந்து நிலையம் (இரண்டாம் கட்டம்) கட்டுதல். | 21.00 |
| 2. | ஈரோட்டில் பேருந்து நிலையம் (இரண்டாம் கட்டம்) கட்டுதல். | 27.85 |
| 3. | ஈரோட்டில் பழ அங்காடி கட்டுதல். | 20.20 |

IV. ஒருங்கிணைந்த நகர் மேம்பாட்டு திட்ட வேலைகள்.

(அ) கீழ்க்கண்ட பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. | மதுரையில் நூதன வர்த்தக கட்டிடங்கள் கட்டுதல். | 40.00 |
| 2. | கோயம்புத்தூர் டாக்டர் நஞ்சப்பா சாலையில் நூதன வர்த்தக கட்டிடங்கள் கட்டுதல். | 20.00 |
| 3. | கோயம்புத்தூர் அவினாசி சாலையில் நூதன வர்த்தக கட்டிடங்கள் கட்டுதல். | 20.00 |

(இ) கீழ்க்கண்ட பணி விரைவில் துவக்கப்படவிருக்கிறது:—

| | |
|---|---|
| உதகையில் ஆறு இடங்களில் விற்பனைக் கூடங்கள் கட்டுதல். | 67.00 |



பாகம் 3.

பொதுப்பணித்துறை.

1981-82ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டங்கள்.

திட்டச்செயல்கள்.

தொடரச் செலவினம்
(ரூ. இலட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| 1. | பூண்டியிலுள்ள நீரியல் மற்றும் நீரியக்க நிலையத்தில் பணியாற்றும் பொறியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல். | 1.50 |
| 2 | குன்னூர் உபகோட்டத்தில் பணியாற்றும் உதவி/இளநிலை பொறியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல். | 1.00 |
| 3. | குன்னூர் உபகோட்டத்தில் பணியாற்றும் உதவி-நிர்வாகப் பொறியாளருக்கு குடியிருப்பு இல்லம் கட்டுதல். | 1.55 |
| 4. | நீலகிரி மாவட்டம் கூடலூர் உபகோட்டத்தில் பணியாற்றும் உதவி/இளநிலை பொறியாளருக்கு குடியிருப்பு இல்லம் கட்டுதல். | 0.40 |
| 5. | சிதம்பரம் மற்றும் சிவகங்கை கோட்டங்களில் பணியாற்றும் இரு கோட்டப் பொறியாளர்களுக்கு குடியிருப்பு இல்லம் கட்டுதல். | 1.20 |
| 6. | தாராபுரம், திருவாடானை, தேவகோட்டை மற்றும் செய்யாறு உபகோட்டங்களில் பணியாற்றும் உதவி நிர்வாகப் பொறியாளர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல். | 2.40 |
| 7. | 15 இடங்களில் நிர்வாகப் பொறியாளர்/உதவி/இளநிலைப் பொறியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல். | 5.28 |
| 8. | பொதுப்பணித்துறை அலுவலகங்கள் உள்ள 40 இடங்களில் கழிவிருப்பு அறைகள் கட்டுதல். | 4.00 |

திட்ட இனத்தில் சேரா செயல்.

| | | |
|---|---|---|
| 9 | பொதுப்பணித்துறை கட்டிடப் பிரிவில் மின் சாரப் பகுதியைவிரிவாக்கும் நோக்கில் ஒரு கோட்டம் மற்றும் உப கோட்டங்கள் தோற்றுவித்தல் | 5.48 |

122194